Issued—21-12-1960]

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

# OFFICIAL REPORT

## MONDAY, 5TH SEPTEMBER 1960

### VOLUME XXXVI—No. 1

CONTENTS


| | PAGES. |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. | 1-26 |
| II Announcements— | |
| (1) Panel of Chairmen .. .. .. .. .. .. | 27 |
| (2) The Madras Buildings (Lease and Rent Control) Bill, 1960 (L.A. Bill No. 20 of 1959) .. .. .. .. .. | 33 |
| (3) Association of Legislative Council Members with the Committee on Public Accounts .. .. .. .. | 33 |
| (4) Business of the House .. .. .. .. .. .. | 66 |
| III Privilege matter regarding certain observations of the High Court of Madras about the Leader of the House in a writ petition .. .. .. .. .. .. .. .. | 27–29 |
| IV Motion disapproving the policy of the Ministry in the appointment of Government Pleader. .. .. .. .. .. | 29–30 |
| V Adjournment motion to discuss the irregularities pointed out by the High Court in the appointment of Government Pleader. | 30–32 |
| VI Government Bill—The Madras Appropriation (No. 3) Bill, 1960 (L.A. Bill No. 33 of 1960) .. .. .. .. .. .. | 33 |
| VII Government Motion—Official Language Policy .. .. .. | 34-66, 67-109 |
| VIII Papers laid on the table of the House .. .. .. .. | 109-111 |



©
GOVERNMENT OF MADRAS
1960



*Legislative Assembly Department*
*Madras.*

61353

D
V211,31 N60
N61·36;1

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## NINTH SESSION OF THE SECOND LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*5th to 10th September* 1960.

**Volume XXXVI (Nos 1 to 6).**

TABLE OF CONTENTS.

*Monday, 5th September* 1960.


| | PAGES |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. | 1–23 |
| II Announcements— | |
| (1) Panel of Chairmen .. .. .. .. .. .. | 27 |
| (2) The Madras Buildings (Lease and Rent Control) Bill, 1960 (L.A. Bill No. 20 of 1959) .. .. .. | 33 |
| (3) Association of Legislative Council Members with the Committee on Public Accounts .. .. .. | 33 |
| (4) Business of the House .. .. .. .. .. | 66 |
| III Privilege matter regarding certain observations of the High Court of Madras about the Leader of the House in a writ petition .. .. .. .. .. .. .. .. .. | 27–29 |
| IV Motion disapproving the policy of the Ministry in the appointment of Government Pleader .. .. .. .. .. | 29–30 |
| V Adjournment motion to discuss the irregularities pointed out by the High Court in the appointment of Government Pleader. | 30–32 |
| VI Government Bill—The Madras Appropriation (No. 3) Bill, 1960 (L.A. Bill No. 33 of 1960) .. .. .. .. .. | 33 |
| VII Government Motion—Official Language Policy .. .. .. | 34–66<br>67–109 |
| VIII Papers laid on the table of the House .. .. .. .. | 109–111 |


*Tuesday, 6th September* 1960.


| | |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. | 119–151 |
| II Point of Order *re* demonstration within the House .. .. | 151–152 |
| III Announcements *re*— | |
| (1) Bills passed by the Council .. .. .. .. .. | 152–153 |
| (2) Sittings of the House .. .. .. .. .. | 199 |

PAGES

IV Information *re* Sri Lazar's Privilege Matter .. .. .. .. 153

V Government Bills—

(1) The Madras Chit Funds Bill, 1960 (L.A. Bill No. 5 of 1960) .. .. .. .. .. .. .. 153

(2) The Madras Appropriation (No. 3) Bill, 1960 (L.A. Bill No. 33 of 1960) .. .. .. .. .. .. 153–156

VI Government Motion—Draft Outline of the Third Five-Year Plan .. .. .. .. .. .. .. .. .. 156–198

*Wednesday, 7th September* 1960.

I Felicitations to Hon. Speaker .. .. .. .. .. 249–250

II Point of Information *re* Privilege of the House .. .. .. 250

III Questions and Answers .. .. .. .. .. .. 251–279
398–408

IV Announcements—

(1) Service of Notice on the Hon. Speaker by the High Court of Madras .. .. .. .. .. .. .. 280

(2) Bills passed by the Council .. .. .. .. .. 291

V Privilege Matters—

(1) Notice issued by the Court to the Hon. Speaker .. 280–281

(2) Petition for issue of writ of mandamus to the Hon. Speaker .. .. .. .. .. .. .. 282–291

(3) Election of members to the Committee on Estimates .. 292

VI Adjournment motion *re* certain writ petition filed in the High Court .. .. .. .. .. .. .. .. 292

VII Calling attention to irregularities pointed out by the Madras High Court in the appointment of the Government Pleader. 292–302

VIII Government Motion—

(1) Change of Non-Official Day into Official Day .. .. 302

(2) Association of Council Members with the Committee on Estimates of the Assembly .. .. .. .. .. 302

(3) Draft outline of the Third Five-Year Plan—*cont.* .. 302–396

IX Papers laid on the table of the House .. .. .. .. 397

*Thursday, 8th September* 1960.

I Questions and Answers .. .. .. .. .. .. 409–430

II Privilege Matter .. .. .. .. .. .. .. 491–497

III Adjournment Motions—

(1) Failure of the Police to intervene against certain violent activities in Nellikuppam .. .. .. .. 431–432

(2) Failure of the Government in not taking action on the death due to drowning of some Tamilians who went to Ceylon .. .. .. .. .. .. .. 432

IV Announcements—

(1) Bills passed by the Council .. .. .. .. .. 432

(2) Election to the Madras Land Improvement Board .. 432–433

V Government Motion—Draft outline of the Third Five-Year Plan—*cont.* .. .. .. .. .. .. .. 433–490

VI Papers laid on the table of the House .. .. .. .. 490





PAGES

*Friday, 9th September* 1960.

I Questions and Answers .. .. .. .. .. .. 499–523

II Privilege Matters .. .. .. .. .. .. .. 588–595

III Government Bills—

(1) The Madras Public Premises (Eviction of Unauthorised Occupants) Bill, 1960 (L.A. Bill No. 24 of 1960) .. 526–536
536–555

(2) The Madras State Housing Board Bill, 1960 (L.A. Bill No. 31 of 1960) .. .. .. .. .. .. 556–573

(3) The Madras General Sales Tax (Amendment) Bill, 1960 (L.A. Bill No. 25 of 1960) .. .. .. . 574–587

IV Announcements—

(1) Business of the House .. .. .. .. .. 536

(2) The Madras General Sales Tax (Amendment) Bill, 1960. 573–574

V Papers laid on the table of the House .. .. .. .. 587

*Saturday, 10th September* 1960.

I Questions and Answers .. .. .. .. .. .. 595–644

II Adjournment Motion *re* the closure of Pudukkottai Textiles, Namanasamudram .. .. .. .. .. .. 644–675

III Announcements—

(1) Election to the Board of Industries .. .. .. 645–646

(2) Association of Legislative Council Members with the Committee on Estimates .. .. .. .. 646

IV Calling attention to a matter of urgent public importance under rule 41 *re* refusal to grant educational concessions to Scheduled Class pupils in Suchindram English High School .. .. 646–647

V Government Bill—The Madras Cinemas (Regulation) Amendment Bill, 1960 (L.A. Bill No. 32 of 1960) .. .. .. 647–667

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Monday, 5th September 1960**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS

*Tannery farm for Arundathipalayam.*

* 416 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

1960-ம் ஆண்டு மார்ச் மாதம் 22-ம் தேதியில் நட்சத்திரக் குறியிட்ட கேள்வி எண் 499-க்கு அளித்த பதிலையொட்டி போளூர் தாலூகா அருந்ததிபாளையத்தில் மாதிரி தோல் பதனிடும் பண்ணை ஆரம்பிப்பது எந்த நிலையில் உள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The site for the location of the Model Village Tannery at Arunthathipalayam in Chetpet Block, North Arcot district, has been selected and the estimates for the construction of buildings have been approved. The construction work will be taken up shortly.

SRI S. M. ANNAMALAI : இது தனியார் துறையில் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறதா அல்லது கூட்டுறவு இயக்கத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதா ? போளூர் தாலூகாவில் அருந்ததிபாளையத்தில் இந்தப் பண்ணையை ஆரம்பிக்க சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது சர்க்காரால்தான் நடத்தப்படுகிறது.

SRI M. P. SARATHI : ஸார், ஆரம்பக் கேள்விகளுக்கும் தமிழில் பதில் அளிக்குமாறு பல முறை கேட்டுக் கொண்டோம். இதைச் சர்க்கார் கவனித்து தமிழில் பதில் அளிக்க முற்படுவார்களா ?

MR. SPEAKER : இதற்கு விதிகளை மாற்றவேண்டும். விதிகளில் தமிழிலும் பேசலாம், ஆங்கிலத்திலும் பேசலாம் என்றிருக்கிறது. மந்திரிகள் தமிழிலேயே பதில் அளிக்கவேண்டுமென்றால் நீங்கள் விதிகளை மாற்ற நோட்டீஸ் கொடுக்கவேண்டும். அடிக்கடி இந்த மாதிரி கேட்பதில் பிரயோஜனம் இல்லை.

SRI A. A. RASHEED : May I know, Sir, whether the tannery will be a tannery with a farm or just a tannery?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : This will be a model village tannery centre.

[5th September 1960

*Ex-gratia payments to Gazetted Officers*

* 417 Q.—SRI S. M. ANNAMALAI (on behalf of Sri V. K. KOTHANDARAMAN) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether there is any scheme for granting ex-gratia payments to Gazetted Officers whose deaths occur during their service: and

(b) if so, the names of such officers who were granted such amounts since 1957?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) A statement[a] is placed on the table of the House.

SRI S. M. ANNAMALAI : இந்தப் பணம் 18 பேர்களுக்குத் தரப் பட்டதாகச் சொல்லப்படுகிறது. அந்தத் தொகை எவ்வளவு என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not have the figures with me.

*Fertilizer*

* 418 Q.—P. G. SRI MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1960–61-ஆம் வருஷத்துக்கு மத்திய சர்க்காரிடம் நம் மாகாண சர்க்கார் கோரிய இரசாயன உரத்தின் அளவு எவ்வளவு ?

(ஆ) கிடைத்த அளவு எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) A statement[b] is placed on the table of the House.

SRI P. G. MANICKAM : ஸார், மேஜை மீது வைக்கப்பட்டிருக்கும் குறிப்பில் அம்மோனியம் சல்பேட்டானது 1,45,000 டன் அளவு கேட்டதற்கு 10,000 டன்தான் கொடுத்திருக்கிறார்கள். மற்றவைகளும் மிகக் குறைவாகவே கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் அதிக அளவு கொடுக்க வேண்டுமென்று மீண்டும் நமது சர்க்கார் இந்திய சர்க்காரை வற்புறுத்துவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 1960–61-ம் ஆண்டுக்கு எவ்வளவு கேட்டிருக்கிறோம் என்று அதில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது 10,000 டன் வந்திருக்கிறது. கேட்ட அளவு கொடுப்பது சாத்தியமில்லாவிட்டாலும் எவ்வளவு தூரம் சாத்தியமோ அவ்வளவு தூரம் வெளிநாடுகளிலிருந்துகூட தருவித்துக் கொடுப்பார்கள்.

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்த அம்மோனியம் சல்பேட்டானது கேட்ட அளவைவிட மிகவும் குறைவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிக் குறைவான அளவு கொடுக்கப்படுவதும் சரியானபடி காலா காலத்தில் பயிரிடுவதற்கு உரிய காலத்தில் கொடுக்கப்படுவதில்லை. அதே போல் " பாக்கேஜ் ஸ்கீமுக்கும் " உரிய காலத்தில் கொடுக்கப்படுவதில்லை. இதை அதிக அளவில் காலா காலத்தில் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முன்பே விடையளித்தேன். கேட்டது ஒரு வருஷம் பூராவுக்கும். 1960–61-க்கு கேட்டதில் ஓரளவு வந்திருக்கிறது. கேட்ட அளவுக்கு வராவிட்டாலும் கூடியவரை எவ்வளவு முடியுமோ அவ்வளவு வாங்க முயற்சி செய்கிறோம். " பாக்கேஜ் ஸ்கீம் "-க்கு குறைவு ஒன்றுமில்லை. வேண்டிய அளவுக்கு உரம் தஞ்சை ஜில்லாவில் கொடுக்கப்படுறகிது.

a Printed as Appendix I on page 112 infra.
b Printed as Appendix II on page 113 infra.



5th September 1960]

SRI M. D. THIAGARAJA PILLAI : தஞ்சை ஜில்லாவில் உரங்களின் விலை நிர்ணயிக்கப்படாததனால் அவை மற்ற கிராம சொஸைடிகளுக்கு அனுப்பப்படாமல் இருக்கின்றன. அதன் விலையைச் சீக்கிரமாக நிர்ணயம் செய்து மற்ற சொஸைடிகளுக்கு அனுப்ப ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறு புகார் ஒன்றும் வரவில்லை.

SRI J. MATHA GOWDER : ஸார், இந்த உரம் கேட்ட அளவுக்குக் கொடுக்கப்பட மாட்டாது என்றாலும் கூட இந்த மாநிலத்தின் சுய தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்காவது கிடைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதெல்லாம் உத்தேசமாகத்தான் சொல்ல முடியும். எவ்வளவு கிடைக்குமென்று நிச்சயமாகச் சொல்ல முடியாது.

SRI A. GOVINDASAMY : அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது, " கேட்ட அளவு கிடைக்குமென்று சொல்ல முடியாது " என்று அவரே பதில் சொல்லும்போது சொல்கின்றார். அப்படியானால் கேட்ட அளவு கிடைக்கக்கூடாது என்பது அமைச்சர் அவர்களுடைய நோக்கமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் குழப்பம் என்னவென்று தெரியவில்லை. என் மனதில் ஒன்றும் குழப்பம் இல்லை.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that the co-operative societies in North Arcot district have not yet been supplied with fertilizers for distribution, and if so, may I know the reason for it?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : We are distributing these fertilizers only through the co-operative societies and whatever quantity is allotted to the North Arcot district, the co-operative societies in that district alone would distribute it.

SRI N. R. THIAGARAJAN : இந்த அமோனியம் சல்பேட் இந்தியாவில் எவ்வளவு உற்பத்தியாகிறது ? வெளி நாடுகளிலிருந்து எவ்வளவு இறக்குமதி செய்யப்படுகிறது ? எந்த அடிப்படையில் ஒவ்வொரு மாகாணத்திற்கும் பிரித்துக் கொடுக்கிறார்கள் ? நம்முடைய மாநிலத்திற்குச் சரியான அளவு கொடுக்கப்படவில்லையென்றால் அதற்குக் காரணம் என்ன ?

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் நான்கு கேள்விகளை ஒரே சமயத்தில் கேட்டுவிட்டார்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எவ்வளவு உற்பத்தியாகிறது, எவ்வளவு இறக்குமதியாகிறது என்ற புள்ளி விவரங்கள் என்னிடம் இல்லை. ஆனால், எல்லா ராஜ்யங்களும் சேர்ந்து 39 கோடி ரூபாய்க்கு இந்த உரம் கேட்கிறார்கள். எவ்வளவு தூரம் அந்நிய நாட்டுச் செலாவணி கிடைக்கிறதோ அந்த அளவுக்கு இறக்குமதி செய்யப்பட்டு எல்லா ராஜ்யங்களுக்கும் பகிர்ந்து கொடுக்கப்படுகிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, in the recent Agricultural Ministers' Conference held at New Delhi it seems that the Union Minister said that he would have to export sugar to earn more foreign exchange in order to get more fertilizers. Is it with a view to augmenting the supply to the Tamil Nad?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir. The Union Minister proposes to export about five lakhs tons of sugar and he has settled with the Finance Ministry that all the foreign exchange earned through the export of agricultural commodities must be exclusively reserved for the import of fertilizers from other countries. The Union Minister pointed out that during the last year oil-cakes were exported to the extent of 14 crores of rupees, but subsequently that amount was not allotted for the import of fertilizers but that the Finance Ministry had now agreed to let the entire amount for the import of chemical fertilizers.

SRI P. G. MANICKAM : ஸார், இவ்வாறு வருஷந்தோறும் நமக்கு ஒதுக்கப்படும் அளவு மிகக் குறைவாக இருப்பதால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது இரசாயன உரத் தொழிற்சாலை ஒன்றை இங்கு ஏற்படுத்த நமது சென்னை சர்க்கார் இந்திய சர்க்காரை வற்புறுத்துவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் புதிய உரத் தொழிற்சாலை நிறுவப்படும். ஆனால் நம்முடைய தேவை முழுவதுக்கும் அந்தத் தொழிற்சாலையிலிருந்து எதிர்பார்க்க முடியாது.

SRI A. VEDARATHNAM : ஸார், கனம் அமைச்சர் அவர்கள் அளித்த பதிலிலிருந்து இங்குள்ள பிண்ணாக்கை ஏற்றுமதி செய்து அதற்குப் பதிலாக "பர்டிலைசரை" இறக்குமதி செய்வதாகச் சொன்னார். பிண்ணாக்கே நல்ல உரம். கால் நடைகளுக்கும் அது பயன்படுகிறது. அதை வெளிநாடுகளுக்கு அனுப்புவதனால் இங்கு கால்நடைகளுக்குத் தீனி குறைந்த விலையில் கிடைக்க முடியாது. ஆகவே, இதன் ஏற்றுமதியைத் தடுக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பிண்ணாக்கு பூராவையும் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவில்லை. ஓரளவு ஏற்றுமதி செய்வதன் மூலம் நமக்கு அந்நியநாட்டுச் செலாவணி 14 கோடி ரூபாய் கிடைக்கிறது. அந்தப் 14 கோடி ரூபாயும் இரசாயன உரங்களை இறக்குமதி செய்யப் பயன்படுத்தப்படுகிறது.

*Madras Pay Commission's recommendations*

* 419 Q.—SRI N. K. PALANISAMI :
SRI A. A. RASHEED :
SRI N. R. THIAGARAJAN : } Will the Hon. the Minister for Finance be pleased to state whether any financial assistance has been promised by the Centre to implement the recommendations of the Madras Pay Commission?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

(Sri N. K. Palanisami rose.)

MR. SPEAKER : What is the hon. Member going to ask when the Hon. Minister says 'no' to the question originally put?



SRI N. K. PALANISAMI : ஏற்கனவே ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்ட 12 ரூபாயை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நான்-கெஜடெட் ஆபீஸர்களுக்குக் கொடுக்கப்பட்ட 5 ரூபாயில் பாதியை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல் இந்தத் தொகையிலும் பாதியை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்காக இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது அதைப் பற்றி மத்திய சர்க்காருக்கு எழுதியிருக்கிறோம். இன்னும் அவர்கள் முடிவு செய்யவில்லை.

SRI N. R. THIAGARAJAN : இப்படி மத்திய சர்க்காரிலிருந்து ஒருவிதமான உதவியும் இல்லாதபோது இப்போது கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய சம்பள உயர்வினால் ஏற்பட்டிருக்கக் கூடிய ஏழு கோடி ரூபாய் அதிகச் செலவை எப்படி சரிகட்டப் போகிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கேள்வி நேரத்தில் இதைப் பற்றி எவ்வாறு சொல்ல முடியும் என்று தெரியவில்லை. இருந்தாலும் இப்போது மத்திய சர்க்காருக்கு, இதற்கான நிதி உதவியைச் சென்னை சர்க்காருக்கு அளிக்கவேண்டுமென்று எழுதியிருக்கிறோம். இன்னும் பதில் வரவில்லை.

SRI A. A. RASHEED : Sir, has the Government approached the Union Government for the entire amount as a grant or as a loan and grant?

THE HON. SRI C. SUBRAMANIAM : We have asked for assistance. I cannot disclose whether it would be in the form of grant or loan

SRI M. P. SUBRAMANIAM : டில்லி அரசாங்கம் இரண்டாவது சம்பளக் கமிஷன் நியமித்தபோது, "மத்திய அரசாங்க சிப்பந்திகளுடைய பிரச்னையைக் கவனிக்கும் நேரத்தில் சென்னை மாநில அரசாங்க சிப்பந்திகளுடைய நிலைமையையும் கவனித்துத்தான் அவர்களுக்குப் பரிகாரம் கொடுக்கவேண்டும்" என்று நம்முடைய அரசாங்கம் சொல்லியிருப்பதும், அப்படி உயர்த்தினால் நமக்கு உதவி செய்ய வேண்டுமென்று "ரெப்ரஸென்டேஷன்" செய்திருப்பதும் உண்மை அல்லவா ? அப்படியானால், அவர்கள் உதவி செய்யக் கடமைப்பட்டவர்கள் அல்லவா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைப்பற்றி எழுதியிருக்கிறோம் என்று சொன்னேன். இன்னும் முடிவான பதில் வரவில்லை.

*Transport employees*

* 420 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the scales of pay of drivers, conductors, checking inspectors of the transferred persons in the Kanyakumari district Transport Branch and those of the rest of the Madras Transport Department;

(b) the number of the transferred Transport Department staff in Kanyakumari district, who are pensionable staff;

(c) whether the non-pensionable staff in Kanyakumari Branch have been paid bonus previously as against the pensionable staff; and

(d) if so, whether that practice is being followed now; if not why?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) A statement[a] is placed on the table of the House.

(b) Three hundred and ninety-five (395) (approximately) (exact information on the actual number of pensionable staff transferred from the former Travancore-Cochin State is not available and the matter is under correspondence with the Director of Transport, Kerala State).

(c) The non-pensionable staff in the Kanyakumari Branch were paid bonus by the former Travancore-Cochin State Government sharing the net profits of the department when such net profit exceeded 7½ per cent of the Capital Outlay. They were paid bonus up to 1955-56. After re-organization of States in 1956, the Government of Kerala revised their scheme under which both the pensionable and non-pensionable staff of their Transport Department were entitled to bonus.

(d) No, Sir. The orders of Government of Kerala passed after 1st November 1956, revising the scheme of bonus, were not binding on this Government. The Government of Kerala, who were addressed for clarification, also stated that the transferred employees were not eligible for the bonus, as bonus could not be paid to persons who were not in service in the State on the date of payment.

SRI T. S. RAMASWAMI: May I know whether the Hon. Minister is aware of the fact that the non-pensionable staff were previously enjoying bonus as against the pensionable staff who were getting the benefit of pension. May I know whether the Hon. Minister would be pleased to help the non-pensionable staff to get the bonus?

THE HON. SRI R. VENKATARAMAN: The hon. Member cannot expect me to be familiar with all the service conditions If, however, he wants any specific matter to be considered, he will have to apply to the Director of Transport first and then the matter has to come before the Government.

*Separate panchayat for Pazhavoor*

* 421 Q.—SRI A. A. RASHEED: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the residents of Pazhavoor village, Tirunelveli district, have asked for a separate panchayat for the village; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) Yes, Sir.

a Printed as Appendix III on page 114-115 infra.



(b) As the panchayats to be formed after bifurcation cannot function as viable economic units, and as Pazhavoor Panchayat was reconstituted only in July 1957 the question of bifurcation of the panchayat has not been pursued.

*Hand-made paper*

* 422 Q.— SRI M. P. SARATHI: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

1960-ல் இந்த ராஜ்யத்தில் “ **Hand-made paper unit** ”-களின் உற்பத்தி அளவு எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: A statement[a] is placed on the table of the House.

SRI M. P. SARATHI: கையினால் செய்யப்பட்ட காகிதத்தின் விலை மதிப்புதான் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. உற்பத்திக்கான செலவு குறிப்பிடப்படவில்லை. உற்பத்திக்கான செலவு விவரமும், அந்த யூனிட்டுகள் எந்த எந்த இடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரமும் சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தனியாகக் கேள்வி போட்டால் கனம் அங்கத்தினர் கேட்ட விவரங்களெல்லாம் கொடுக்கலாம்.

SRI A. VEDARATHNAM: அரசாங்க யூனிட்டுகள் மூலம் உற்பத்தியான காகிதத்தைப் பற்றிய விவரம் தான் மேஜை மீது வைக்கப்பட்டிருக்கிறது. இதைப்போன்று தனியார் துறைகளிலும் கையினால் செய்யும் காகிதங்கள் நிறைய உற்பத்தியாகின்றன அல்லவா ? அதனுடைய விவரமும் தயவு செய்து அமைச்சர் அவர்கள் அறிவிக்க முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அந்தப் புள்ளி விவரம் கிடைப்பது அவ்வளவு சுலபம் அல்ல. இருந்தாலும், கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போட்டால், நான் பார்த்து பதிலளிக்கிறேன்.

SRI C. NATARAJAN: தலைவர் அவர்களே, கையினால் காகிதத்தை தயாரிப்பதற்கும் மில் மூலமாகத் தயாரிப்பதற்கும் உற்பத்திச் செலவில் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது ? கையினால் உற்பத்தி செய்யும்போது எவ்வளவு அதிகம் செலவாகிறது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: விலை அதிகமாக இருந்தாலும் காகிதம் நல்ல காகிதம்; நீண்ட காலம் இருக்கும் காகிதம் ஆனால், எவ்வளவு அதிகச் செலவு ஆகிறது என்ற விவரம் என்னிடம் இல்லை.

SRI A. GOVINDASAMI: கையினால் செய்யப்பட்ட கடுதாசியின் மீது எழுதும்போது “ நிப் ” காகிதத்தைக் கிழிக்கும் நிலைமையும், காகிதம் நிப்பைக் கெடுத்துவிடும் நிலைமையும் ஏற்படுகிறது. அதைத் தவிர்ப்பதற்கு உயர்ந்த ரகக் காகிதம் உற்பத்தி செய்ய அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கையினால் செய்யப்படுவது அல்ல அதற்குக் காரணம்; காகிதத்தின் தரத்தைப் பொறுத்தது அது. மில்லில் உற்பத்தியாகும் காகிதமானாலும், தரம் குறைவாக இருந்தால் அதிலும் இந்தக் கோளாறெல்லாம் ஏற்படும்.

a Printed as Appendix IV on page 116 infra.

*Second Five-Year Plan works for Madurai district*

* 423 *Q.*—Sri **N. R. THIAGARAJAN** : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்கள் பற்றி மதுரை ஜில்லாவுக்கென வெளியான புத்தகத்தில் உள்ளபடி மதுரை ஜில்லாவில் வேலைகள் நடைபெற்றுள்ளதா ?

(ஆ) பெரும்பாலான வேலைகள் நடைபெறாததின் காரணம் என்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) & (*b*) The Madurai District Plan prepared by the Collector of Madurai at the time of formulation of the Second Five-Year Plan represents the requirements of the district as envisaged by the Local Planning Committees and the District Planning Board. It includes schemes estimated to cost Rs. 39·39 crores. These schemes are to be implemented in the current and the subsequent Plans. Schemes costing about Rs. 20 crores are under implementation in the district during the current Plan period.

**Sri N. R. THIAGARAJAN** : 38 கோடி ரூபாய் அளவுக்குமேல் திட்டங்கள் தயாரித்திருந்தாலும், 20 கோடி ரூபாய் செலவழிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. மதுரை ஜில்லாவில் நான் நான்கு ஆண்டுகளாகச் சுற்றிப் பார்த்து வந்திருக்கிறேன். அப்பொழுது என்ன திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று திட்டமிடப்பட்டதோ, அதில் ஒன்று கூட நடந்ததாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே, நிறைவேற்றப்படாத அந்தத் திட்டங்களை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது நிறைவேற்றுவதற்குச் சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்படுமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : மதுரை ஜில்லாவில் என்ன என்ன தேவைகள் இருக்கின்றன என்பதை மனதில் வைத்துக்கொண்டு, அந்தத் தேவைகள் ஓரளவு பூர்த்தி அடைவதற்கு எந்த எந்தத் திட்டங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சிபார்சு செய்து, சுமார் 40 கோடி ரூபாய் அளவுக்குத் திட்டங்கள் தயார் செய்யப்பட்டன. ஆனால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாகும்போது, அதிலே இருக்கும் நிதி வசதியை அடிப்படையாக வைத்துக்கொண்டு எந்த எந்தத் திட்டங்களை நிறைவேற்றமுடியும் என்று பார்த்து 20 கோடி ரூபாய் அளவுக்கு நிறைவேற்றப்படுகிறது. ஸ்டேட் லெவல் ஸ்கீமுக்கு 18·67 கோடி ரூபாயும், டிஸ்ட்ரிக்ட் லெவல் ஸ்கீமுக்கு 1·51 கோடி ரூபாயும், வில்லேஜ் லெவல் அண்டு பஞ்சாயத்து லெவல் ஸ்கீமுக்கு 12·77 கோடி ரூபாயும், முனிசிபாலிடிகளிலே 6·44 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 39·39 கோடி ரூபாய் அளவுக்குச் சிபார்சு செய்யப்பட்டது. ஆனால் பூராவும் எடுத்துக்கொள்ள முடியாததனால், முன்னே நான் சொன்னபடி, 20 கோடி ரூபாய் அளவுக்கு எடுத்து முடிவு அடைய இருக்கின்றன.

*Small-scale Industries*

* 424 *Q.*—Sri **A. VEDARATHNAM** : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அமெரிக்க அபிவிருத்திக் கடன் நிதி ஸ்தாபனம் இந்தியாவிற்கு அளிக்கும் சிறு தொழில் ஸ்தாபன உதவியிலிருந்து நம் மாநிலத்திற்கு எந்தெந்த தொழிலுக்கு, எவ்வளவு, எப்போது கிடைக்கும் ?

(ஆ) இந்த உதவித் தொகையை அரசாங்கம் எப்படி எந்த அடிப்படையில் விநியோகம் செய்ய உத்தேசம் ?



The Hon. Sri R. VENKATARAMAN : Credit to the extent of 10 million dollars has been made available by the Development Loan Fund to the National Small Industries Corporation, Limited, New Delhi, which is a company started by the Government of India. The Corporation has decided to utilize the credit for the operation of the scheme, for the supply of machines under the Hire-purchase Scheme and under the Bank Guarantee Scheme for the development of small-scale industries. No Statewise and industrywise allocation has been made out of the credit of 10 million dollars.

**Sri A. VEDARATHNAM** : அமெரிக்கா உதவியிலிருந்து நம்முடைய மாநிலத்திற்கு ஏதாவது உதவி கிடைத்திருக்கிறதா ? அப்படியானால், அந்த உதவியை எந்த எந்தத் தொழிலில் ஈடுபடுத்த அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : இதில் அனுஷ்டிக்கின்ற முறை என்னவென்றால், என்ன என்ன சிறு தொழில்களுக்கு நமக்கு வெளிநாட்டிலிருந்து இயந்திரங்கள் வேண்டுமென்று முதலில் கணக்குப் போட்டு, அந்த இயந்திரங்களை வாங்குவதற்கு நாம் அந்தக் கார்ப்பரேஷனிடத்திலே அனுப்பி வாங்கவேண்டும். அந்த விதமாக நாம் இதுவரையிலும் நாஷனல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷனிலிருந்து 1959–60-வது வருஷத்திற்கு மாத்திரம் 10,04,563 ரூபாய் அளவுக்குச் சிறு இயந்திரங்களை வாங்கியிருக்கிறோம். இந்த வருஷத்திற்குத் திட்டங்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன.

*Tele-communication Engineering*

* 425 *Q.*—Sri K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the degree course in Tele-communication Engineering in the College of Engineering, Guindy, has been abolished from the year 1960–61;

(*b*) if so, the reasons therefor and the steps taken to re-employ the staff thrown out of employment;

(*c*) if not, the number of students taking up this course for the past three years and the number and status of staff employed in this department; and

(*d*) whether there was a proposal to introduce Tele-communication as a subject for post-graduate study; and if so, the details of the proposal and the reason for not giving effect to it till now?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) No, Sir. The Tele-communication Course has been ordered to be suspended, temporarily, during 1960–61.

(*b*) Sufficient number of students has not opted for this course. It is proposed to retain the existing surplus staff for the present and to utilize their services in the other branches where there may be vacancies.

(*c*) Does not arise.

(*d*) No, Sir.

[5th September 1960

*Letters from M.L.As.*

*426 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா —

(அ) சர்க்காருக்கு எம்.எல்.ஏ.-க்கள் அனுப்புகிற கடிதங்களுக்கு பதில் வருவதில்லை என்று சா. மொ. அண்ணாமலை எம்.எல்.ஏ.-யின் கடித எண் S. M. A./15 Vol. III/59 1960-ம் ஆண்டு மே மாதம் 9உ-ல் சர்க்காருக்கு கிடைத்ததா ?

(ஆ) அப்படியானால், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) Instructions have been issued to all Heads of Departments that letters from Members of the Legislature should be acknowledged immediately, final replies being sent in due course.

The requests contained in the letter, dated the 9th May 1960 are being examined by the Departments of the Secretariat concerned. In a few cases, replies have already been sent to the member by the departments concerned.

SRI S. M. ANNAMALAI : இந்தக் கடிதம் வந்த பிறகுதான் இப்பொழுது ஒவ்வொரு கடிதத்திற்கும் பதில் வருகிறது. இன்னும் பல கடிதங்களுக்குப் பதிலே வரவில்லை. இரண்டு, மூன்று ஆண்டுக் காலமாக பலவித "ரிமைண்டர்கள்" அனுப்பியும்கூட இவ்வளவு காலதாமதம் செய்வதற்குக் காரணம் என்ன என்று சர்க்கார் கண்டு பிடித்தார்களா ? கண்டுபிடித்து, அப்படிச் செய்த உத்தியோகஸ்தர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தக் கடிதத்தில் என்ன தகவல் கேட்கப்பட்டிருந்தது என்பதைப் பொறுத்திருக்கிறது. உடனடியாகத் தகவல் கொடுக்கக்கூடியதாக இருந்தால் கொடுத்திருக்க முடியும். அந்தக் கடிதத்தைப் பார்க்காமல் நான் இந்தக் குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ள முடியாத நிலைமையில் இருக்கிறேன்.

SRI S. M. ANNAMALAI : "சட்ட மன்ற உறுப்பினர்கள் இனிமேல் எழுதும் கடிதங்களுக்கு நேரடியாகப் பதில் தரக்கூடாது" என்று சர்க்கார் இப்பொழுது தற்காலிகமாக உத்தரவு பிறப்பித்துள்ளார்களா ? அப்படியானால் அதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் படித்ததை இன்னொரு தடவை படிக்கிறேன்:

"Instructions have been issued to all Heads of Departments that letters from Members of the Legislature should be acknowledged immediately, final replies being sent in due course."

SRI N. R. THIAGARAJAN : இந்த சுற்றறிக்கை ஜில்லாக் காரியாலயங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா ? ஜில்லா கலெக்டர் ஆபீஸ் போன்ற ஜில்லா லெவலில் இருக்கக்கூடிய காரியாலயங்களிலிருந்து 100-க்கு 99 கடிதங்களுக்கு பதில் வருவதே இல்லை. ஆகவே, ஜில்லாக் காரியாலயங்களையும் இந்த உத்தரவில் சேர்த்துக்கொள்ளுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதிலே இப்பொழுது இருக்கிறது இலாகா தலைவர்களைப் பற்றிதான். கலெக்டர்களுக்கு இந்த உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறதா என்பது எனக்குத் தெரியவில்லை.

SRI A. GOVINDASAMY : கனம் அண்ணாமலை அவர்கள் எழுதிய கடிதங்களைப் பார்த்துத் தான் சொல்ல வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஸ்ரீ அண்ணாமலை அவர்கள், ஏற்கனவே என்னென்ன



5th September 1960]

கடிதங்கள் எழுதப்பட்டிருக்கின்றன, பதில் வராத கடிதங்கள் எவை என்பதை அச்சிட்டு இந்த மன்றத்தில் வழங்கினார்களே ? கனம் அமைச்சர் அவர்கள் அதைப் படித்தார்களா ? இல்லையென்றால் அதைப் படித்துப்பார்த்து தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அம்மாதிரி அச்சிட்டுக் கொடுத்ததை நான் பார்க்கவில்லை. ஆதலால் மற்ற கேள்விகள் எழவில்லை.

*Lignite at Wallajah taluk*

*427 *Q.*—SRI N. MARUDACHALAM (on behalf of SRI V. K. KOTHANDARAMAN) : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு ஜில்லா, வாலாஜா தாலூகாவில் கண்டெடுக்கப்பட்ட நிலக்கரி மேற்படி ஜில்லா கலெக்டர் அவர்களால் சர்க்காரின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளதா ?

(ஆ) பரிசீலனை செய்யப்பட்டதா ?

(இ) அதன் விவரமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*), (*b*) & (*c*) The information is being collected and will be placed in the library of the House.

*Common tool room shops*

*428 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிராமப் பொது வசதிப் பட்டறைகள் ஏற்படுத்துவது பற்றி அரசாங்கத்தால் பரிசீலனை நடத்தப்பட்டு வருகிறதா ?

(ஆ) அப்படியாயின் இத்திட்டம் எப்போதிருந்து அமுலுக்கு கொண்டு வரப்படும் ?

(இ) எந்தெந்த இடங்களிலே இப்பட்டறைகள் ஏற்படுத்தப்படும். ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) & (*c*) It is proposed to establish two Service-*cum*-Common Facility Workshops during 1960–61, one at Kurumbapatti in the Nilakottai Block, Madurai district and the other at Bhavani in the Bhavani Block, Coimbatore district.

SRI P. G. MANICKAM : தேசிய விஸ்தரிப்புத் திட்டப் பகுதிகளில் இவ்வாறு பொதுப் பட்டறைகள் ஏற்படுத்தப்படுமா ? கூடுமானவரையிலும் ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் ஒரு பொதுப் பட்டறையை ஏற்படுத்துவதற்கு சர்க்கார் முயற்சி செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இம்மாதிரி அதிகமாக தொழில் பட்டறைகள் பல இடங்களில் ஏற்படுத்துவதாக உத்தேசம்.

[5th September 1960

*Regional language in the High Court*

*429 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government of India have recently advised the Government not to introduce Regional Language in the High Court: and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) No, Sir.

(b) Does not arise.

SRI A. A. RASHEED: Sir, is the Hon. Minister aware that the Union Minister for Law has made a statement to this effect and if so, whether the attention of the Government has been drawn to that statement?

THE HON. SRI C. SUBRAMANIAM: The hon. Member assumes that the State Government are proposing to introduce regional language in the High Court and we have received contrary advice from the Government of India. The whole question is not based on facts.

*Gazetted posts*

*430 *Q.*— SRI M. P. SARATHI: கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) வட்டார அபிவிருத்தி, தேசிய அபிவிருத்தி, சமுதாய வளர்ச்சி திட்டங்களின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள உயர்பதவிகள் (கெஜட்பதிவுள்ளவை), எத்தனை ?

(ஆ) இந்தப் பதவிகளுக்கு ஆட்கள் சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்களா ? அல்லது வேறு விதமாக நியமிக்கப்படுகிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) The present strength of Gazetted Officers is 23.

(b) Appointments to all the posts except the Chief Organizer, Village Youth Leadership, have been made by transfer from any other class or service. The Chief Organizer, Village Youth Leadership, has been appointed on contract basis.

*Unexecuted Schemes of the Second Five-Year Plan*

*431 *Q.*—SRI N. R. THIAGARAJAN: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு வேலை நடவாது விடப்பட்ட திட்டங்களை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து கொள்ளப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: The schemes which were included in the Second Plan but subsequently dropped will also be considered for inclusion in the Third Plan depending on the merits of each scheme.



5th September 1960]

*Kandaparichan drainage canal*

*432 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவிலுள்ள கந்தப்பறிச்சான் ஆற்று வடிகால் வெட்டும் வேலை எப்போது துவக்கப்பட்டது ?

(ஆ) இப்போது அந்த வேலை நின்றிருக்கிறதா ?

(இ) அப்படியானால், என்ன காரணம் ?

(ஈ) உடனே அந்த வேலையைத் துரிதமாக முடிக்க அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது ?

(உ) அந்த வேலை எப்போது பூர்த்தியாகும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) The work was started on 5th February 1959.

(b) The work has been held up temporarily.

(c) Land acquisition proceedings in respect of the lands required for the execution of the new drainage course were in progress.

(d) The Revenue Divisional Officer, Mannargudi, has been asked to hand over the lands required by the Public Works Department immediately.

(e) About six months hence.

SRI A. VEDARATHNAM: 35 ஆண்டு காலமாக "பெண்டிங்காக" இருந்த வடிகால் வேலை துவக்கப்பட்டு இடையிலே அது நிறுத்தப்படக்கூடிய நிலைமை ஏற்படுவதற்குக் காரணம் என்ன ? நிலம் கொடுப்பவர்கள் தடை செய்த காரணத்திற்காக அந்த வடிகாலை வேறு மார்க்கமாக மாற்றி அமைக்கவேண்டிய நெருக்கடி அரசாங்கத்திற்கு ஏற்பட்டதா ? அதைத் தவிர்க்க அரசாங்கம் ஏதேனும் முயற்சி செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நிலம் "அக்வையர்" செய்யப்படாததால் தாமதம் ஏற்பட்டது. இப்பொழுது நிலம் "அக்வையர்" செய்யப்பட்டு உடனடியாக அந்த நிலம் "பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டினிடம்" ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு 6 மாதத்திற்குள்ளாக இந்த வேலை முடிக்கப்படும்.

*Salaries of teachers*

*433 *Q.*—SRI K. R. VISWANATHAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the reasons for not disbursing the salaries of teachers of the Kattagaram Aided Elementary School in Udaiyarpalayam taluk;

(b) the period for which the teachers have not been paid; and

(c) the person responsible for the default and the action taken on him?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) The recognition of the school was withdrawn from 1st July 1959 for serious irregularities committed by the Management. The recognition was subsequently restored in April 1960. As the teachers had not

[5th September 1960

applied for Teachers' Service Registers in time and as the delay on the part of the teachers had to be condoned, the grant for the period from March 1959 to April 1960 has not been disbursed.

(*b*) From March 1959 to April 1960.

(*c*) The previous manager of the school. The question of taking action against him is under consideration.

**Sri K. R. VISWANATHAN** : இந்தப் பள்ளி அங்கீகாரம் ரத்தாவதற்கு முன், அதில் வேலை செய்த ஆசிரியர்களுக்கு அந்தக் காலவரைக்கு சம்பளம் கொடுக்கப்படவில்லை. இதிலே இருக்கிற புகார் என்னவென்றால் கல்வி அதிகாரிகள் அனுவசியமாக அந்த ஆசிரியர்களிடம் பகைமை கொண்டு அவர்களுக்கு சம்பளம் கொடுக்காமல் காலம் தாழ்த்திக்கொண்டு வருகிறார்கள். 1-3-1959 முதல் 1960-ம் ஆண்டு ஏப்ரல் வரை சம்பளம் கொடுக்கப்படாமல் இருப்பதாகத் தெரிய வருகிறது. உடனடியாக சம்பளம் கொடுப்பதற்கு முக்கியமாக ஜில்லா கல்வி அதிகாரிக்கு உத்தரவு பிறப்பிக்கப்படுமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : The arrears of Government grant due to the Management of the Kattagaram Aided Elementary School for the period from March 1959 to April 1960 have not yet been paid as the teachers have not applied for Teachers' Service Registers in time and as the question of giving condonation for the delay in applying for Teachers' Service Registers was under correspondence and the condonation has since been given. The District Educational Officer will now take necessary action for the payment of grant to the teachers if they are otherwise eligible.

*Drinking water wells*

*434 *Q.*—**Sri S. M. ANNAMALAI** : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம், போளூர் தலுகா, படைவீடு, மதுரா, துரிஞ்சாபுரம், நம்மியந்தல் கிராமங்களில் குடி தண்ணீர் கிணறுகள் வெட்டும் விஷயம் எந்த நிலையில் உள்ளது ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : The information is being collected and will be placed on the table of the House as soon as possible.

**Sri S. M. ANNAMALAI** : படைவீடு, மதுரா, துரிஞ்சாபுரம் கிராமத்தில் 52 அடி கிணறு வெட்டுவதைப்பற்றி ஏறத்தாழ 1½ ஆண்டு காலமாக கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறேன். முதல் கேள்விக்கு பதில் சொன்னபொழுது ரூ. 5,000-க்கு திட்டம் போடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். மறுபடியும் அதைப்பற்றி இரண்டாவது தடவை கேள்வி கேட்டபொழுது ரூ. 4,400-க்கு திட்டம் போடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். மறுபடியும் மூன்றாவது தடவை கேள்வி கேட்டபொழுது ரூ. 3,400-க்கு திட்டம் போட்டிருப்பதாக பி.டி.ஓ விடமிருந்து தகவல் வந்திருக்கிறது. ஒவ்வொரு கேள்வி போடப்படும்பொழுதும் திட்டம் குறைந்து கொண்டே போகப்படுமா ? இந்தக் கிணறை வெட்டுவதற்கு சர்க்கார் முன்வரமாட்டார்களா ? ஏன் இவ்வளவு காலதாமதமாகிறது ? ஏன் திட்டத்தின் மதிப்பு குறைக்கப்படுகிறது ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : இப்பொழுது இருக்கிற தகவலிலிருந்து சொல்லுகிறேன். பெரிய பெரிய கட்டிடத்திற்குக்கூட எஸ்டிமேட் மாறுவது உண்டு. இப்பொழுது இது "டெக்னிகல் சாங்ஷ



5th September 1960]

னுக்காக" "பெண்டிங்காக" இருக்கிறது. நம்மியந்தலில் ஏற்கனவே இரண்டு கிணறுகள் இருக்கின்றன. இன்னொரு கிணறு வெட்டுவதற்கு எஸ்டிமேட் தயாராகி இருக்கிறது. டெக்னிகல் சாங்ஷன் கிடைத்ததும் அந்த வேலையும் எடுததுக்கொள்ளப்படும்.

*Minor irrigation schemes*

*435 *Q.*—**Sri P. G. MANICKAM** : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கோயம்புத்தூர் ஜில்லா, பவானி தாலூகாவிலே, 1958–1959-ம் வருடங்களிலே பரிசீலனை ((investigation)) செய்யப்பட்ட சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களிலே எந்தெந்த திட்டங்கள் 1960-ம் வருடத்தில் செய்து முடிக்கப்படும்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : Five schemes have been investigated but none of them is expected to be executed and completed in 1960.

**Sri P. G. MANICKAM** : பவானி தாலூகாவிலே ஏறக்குறைய 7 திட்டங்கள் சர்க்காராலே பரிசீலனை செய்யப்பட்டு எஸ்டிமேட் போடப்பட்டிருக்கிறது. சுமார் ரூ. 7,78,800 சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக தொகை தேவை என்றும், சுமார் 2,000 ஏக்கர்களுக்கு பாயும் என்றும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டங்களிலே 1960–61-ல் ஏதாவது நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : முதலில் கேட்கப்பட்ட கேள்வி 1958–59-ம் வருடங்களிலே பரிசீலனை செய்யப்பட்ட திட்டங்களிலே எந்தெந்த திட்டம் 1960-ம் வருடத்தில் செய்து முடிக்கப்படும் என்பது. அதற்குத் தான் பதில் அளித்தேன் ஐந்து திட்டங்கள் என்று. ஆனால் இந்த ஐந்து திட்டங்களும் 1960-க்குள்ளேயே முடியும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை. மற்ற விவரங்கள் என்னிடம் இல்லை.

**Sri P. G. MANICKAM** : இந்த ஐந்து திட்டங்கள் எவை எவையென்று அறிவிக்க முடியுமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : நான்கு திட்டங்கள் எவை என்று நான் சொல்லக்கூடும்.

(i) Harnessing-Kavandapady-Pallam drain in S. No. 894 of Salangapalayam of Bhavani taluk.

(ii) Harnessing the Kavandapady-Pallam drain in S. No. 341 of Salangapalayam village of Bhavani taluk.

(iii) Harnessing the drainage course in S. No. 696 of Periapuliyur village of Bhavani taluk.

(iv) Harnessing the Thayirpalayam drain in S. No. 524 of Periapuliyur village of Bhavani taluk.

மற்றபடி இப்பொழுது பரிசீலனை செய்யப்படுவதெல்லாம் குட்டைகளை சரிப்படுத்துவதுதான்.

[5th September 1960

*Construction of houses in the City*

* 436 *Q.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of houses estimated to be constructed in the Second Five-Year Plan in the Madras City by the City Improvement Trust and Corporation of Madras; and

(*b*) the number of houses actually constructed till now?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) The information is being collected and will be placed on the table of the House in due course.

Sri A. A. RASHEED : Is it a fact that compared to estimated number of houses, the number of houses actually constructed is very low? If so, may I know the reason?

The Hon. Sri R. VENKATARAMAN : The hon. Member's original question refers to the number of houses actually constructed till now. We generally make an estimate every quarter. So it is very difficult to get information with regard to the position as on date of the question. However, the position is this. The proposal by the City Improvement Trust is to build 818 houses. Five hundred and sixteen houses have been completed. Eighty-four houses are under various stages of construction. That is the position as regards City Improvement Trust. So far as Corporation of Madras is concerned, 209 houses were estimated to be constructed Actually 113 houses have been constructed. Ninety houses are under various stages of construction.

Sri A. A RASHEED : May I know whether any inducement is given to the private parties for construction of houses in the City?

The Hon. Sri R. VENKATARAMAN : If the private party is an industrialist, we give subsidy of 25 per cent for putting up industrial houses; but for others we give loan assistance.

Sri K. VINAYAKAM : May I know whether Government have any *modus operandi* to find out whether houses constructed by City Improvement Trust and Corporation of Madras are allotted to really deserving houseless persons who are capable of repaying the loan? May I know what is the position obtaining as far as houses constructed in Shenoynagar by Corporation Authorities are concerned? May I know whether they have been allotted to really deserving persons?

Mr. SPEAKER :That is a separate question.

The Hon. Sri R. VENKATARAMAN : City Improvement Trust is a statutory body. Similarly Corporation of Madras is a local authority. We naturally trust these institutions to give houses properly to the deserving cases and to see that houses are retained by them. If the Government go on supervising and



5th September 1960]

intervening at every stage then there will be no devolution of authority, no delegation of powers and everything will have to be done by Government themselves.

*Ministers' tour*

* 437 *Q.*—Sri M. P. SARATHI : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கிழ்க்கண்ட கேள்விக்கு பதில் அளிப்பாரா ?

இந்த ராஜ்ய அமைச்சர்கள் அரசாங்கப் பணியின் காரணமாக சுற்றுப்பயணம் செய்யும்போது கட்சி அலுவல்களையும் சேர்த்து கவனிக்கிறார்களா ? அதற்காக பயணப்படி வாங்குகிறார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : Yes. Some of the Ministers attend to party work also while on tour without detriment to their official work. Travelling allowance is drawn by Ministers when they go on tour for official purposes. If party work is combined with official tours, no travelling allowance is claimed for the journey and halt involved in such party work. When the purpose of the tour is purely for party work, no travelling allowance is drawn.

Sri S. M. ANNAMALAI : ஸார், இப்படி அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செய்து பிரயாணப் படி வாங்கும்போது, சாப்பாடுதான் இனாமாகக் கிடைக்கிறதே, அப்படியிருக்கும்போது, சாப்பாட்டுப் பணம் ஏன் அவர்கள் வாங்கிக் கொள்ளவேண்டும் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இது சாப்பாட்டுப் பணம் இல்லை. சாப்பாட்டுக்காகக் கொடுக்கிறார்கள் என்று நினைக்க வேண்டாம்.

Sri A. GOVINDASAMY : சட்டசபை நடக்கும்பொழுது, அமைச்சரவர்கள் இப்படி சுற்றுப் பிரயாணம் போகும்போது, சட்ட சபைக் காரியங்கள் சரிவர நடைபெற, இந்தக் காரியங்களைக் கவனிப்பார்களா, அல்லது சுற்றுப்பிரயாணத்தைக் கவனிப்பார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : மந்திரிகள் பார்த்து எது முக்கியம் என்று தீர்மானிப்பார்கள் ; சட்ட சபைக் காரியங்கள் தடையில்லாமல் நடைபெறுவதற்கும் பார்த்துக்கொள்வார்கள் ; அதைக் கவனிக்க சபாநாயகராகிய தாங்களும் இருக்கிறீர்கள். எங்களுக்குத் தெரிந்த வரையில், மந்திரிகள் சுற்றுப் பிரயாணத்தினால், இங்கே எந்தக் காரியமும் தடையில்லாமல் நடக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

Sri A. GOVINDASAMY : ஸார், இன்றையதினம், முக்கியமான மொழிப் பிரச்சினை விவாதிக்க இருக்கும்போது, முதல் அமைச்சர் அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்துக் கொண்டிருக்கிறார்களே, அது சரியா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : மொழிப்பிரச்னை பற்றி யார் பேசப்போகிறார்களோ, அந்த அமைச்சர் இங்கே இருக்கிறார்கள். நான் பேசப்போவதால், நான் இருக்கிறேன். முதல் அமைச்சர் பேசப் போவதில்லை. ஆகவே, ஒன்றும் தவறில்லை.

Sri P. U. SHUNMUGAM : சுற்றுப் பிரயாணம் போகும்போது, அமைச்சரவர்கள் பொதுக் கூட்டங்களில் கலந்துக் கொள்வதாகச் சொன்னார்கள்.

Mr. SPEAKER : பொதுக் கூட்டம் இல்லை.

Sri P. U. SHUNMUGAM : கட்சிக் காரியங்களும் செய்வதாகச் சொன்னார்கள். கடைசியில் பொதுக் கூட்டங்களில் கூட கலந்துக்கொண்டு,

[5th September 1960

மற்ற அரசியல் கட்சிகளைத் தாக்குவது முறையா ? பொதுக் கூட்டங்களில் கலந்துக் கொண்டு மற்ற கட்சிகளை தாக்குவதற்குப் பிரயாணப் படி வாங்குவதாக இருப்பதால், அப்படிச் செய்வது முறையா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது சர்க்கார் சில கொள்கைகளை நிறைவேற்ற முயற்சிக்கிறது. அப்படி கொள்கைகளை நிறைவேற்ற, பொது மக்கள் ஆதரவு வேண்டியிருக்கிறது. அப்பொழுதுதான் அவற்றை நிறைவேற்ற முடியும். அப்படி சர்க்கார் கொள்கைகளுக்கு எதிராகப் பிரசாரம் நடந்தால், எங்கள் கொள்கைகளை எடுத்து மக்களுக்குச் சொல்லி, எதிரி வாதங்களுக்குப் பதில் சொல்ல வேண்டியது மந்திரிகளின் பொறுப்பு. அப்படிச் செய்யாவிட்டால், சர்க்கார் பொறுப்புகளைச் சரிவர நிறைவேற்றியதாகாது.

SRI A. MARIAPPAN : இப்பொழுது எஸ்டிமேட் கமிட்டி போன்ற கமிட்டிகளில் சுற்றுப் பிரயாணம் செய்யும்போது, அங்கத்தினர்கள் கட்சிக் கூட்டங்களுக்கும் போகிறார்களே, அந்த சமயத்தில் படி வாங்குகிறார்களே, அது சரியா ?

MR. SPEAKER : The question is out of order.

SRI C. NATARAJAN : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் சர்க்கார் படியில் போய், வெளியில் மற்றக் காரியங்களில் கலந்துக்கொள்ள வில்லை என்று சொன்னார்கள். இப்பொழுது, முதல் அமைச்சர் அவர்கள் காலையில் பொதுக்காரியத்தில் ஈடுபட்டு, பிறகு காங்கிரஸ் கட்சிக் கூட்டமும், ரகசியமாக ஊழியர்கள் கூட்டமும் கூட்டிப் பேசுகிறார்களே, அது சரியா ?

MR. SPEAKER : போகவில்லை என்று சொல்ல வில்லையே.

THE HON. SRI C. SUBRAMANIAM : I will again read for the benefit of the hon. Member. If party work is combined with official tours, no travelling allowance is claimed for the journey and halt involved in such party work.

*Electric pump-sets*

*438—SRI N. R. THIAGARAJAN : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் மதுரை ஜில்லாவில் 1,725 மின்சார பம்பு செட்டுகள் "ஹையர் பர்ச்சேஸ்" திட்டத்தில் கொடுப்பதாக திட்டமிட்டபடி கொடுக்கப்பட்டதா ?

(ஆ) இவை எந்தெந்த பிளாக்கில் எத்தனை கொடுக்கப்பட்டன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) The information is being collected and will be placed on the table of the House.

*Assignment of lands to the poor*

*439 Q.—SRI. S. M. ANNAMALAI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காட்டு இலாகாவுக்குச் சொந்தமான நிலங்கள் காடுகளுக்குத் தகுதியற்றதென்று நிலமில்லா ஏழைகளுக்கு மாவட்டங்கள் வாரியாக எவ்வளவு நிலம் பட்டா செய்யப்பட்டது ?

(ஆ) வட ஆற்காடு மாவட்டத்தில் போளூர் தாலூகாவில் எவ்வளவு நிலம் பட்டா செய்யப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) There are no lands under forests, which are not fit to be maintained as forests. In the past two years, an extent of 20 acres only in Suryamalai



5th September 1960]

Reserved Forest in Tiruchengode taluk, Salem district, was disreserved as a special case for assignment to some persons.

(b) No lands belonging to the Forest Department were granted on patta in Polur taluk.

SRI S. M. ANNAMALAI : ஸார், உண்மையிலேயே சில இடங்களில் வேண்டுமென்றே, காட்டு வளர்ச்சிக்கு என்று காட்டு இலாகாவினர் நிலங்களை எடுத்துக் கொண்டு, நிலமில்லாதவர்களுக்குக் கொடுக்க மறுக்கிறார்கள். உண்மையிலேயே, எந்தெந்த இடங்களில், அப்படி நிலங்கள் இருக்கின்றனவோ, அவற்றை நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுப்பதால் உணவு உற்பத்தி அதிகரிக்கும் என்பதை பரிசீலனை செய்யக்கூடாதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த ராஜ்யத்தில் காட்டுச் செல்வம் மிகக் குறைவு. ஆகவே, வனம் வளர்க்கத் தகுதியான நிலங்கள் பயன் படுத்தப் படுகிறது. வன வளர்ச்சிக்குப் பயன்படாதிருந்தால், மற்றபடி சாதாரண விவசாயத்திற்குக் கொடுக்கிறோம்.

SRI T. IRUSAPPAN : ஏற்கெனவே இருந்த காடுகளில் விவசாயம் செய்துக் கொண்டிருந்தவர்களை போகச் சொல்லியும், இன்னும் சர்வே செய்யும் இடத்தில், விவசாயம் செய்துக் கொண்டிருந்தவர்களை அப்புறப்படுத்தி அந்த நிலங்களையும் காட்டில் சேர்த்திருக்கிறார்கள். அதனால், விவசாயிகள் அவதியுறுகிறார்கள். அதைத் தடுக்க சர்க்கார் என்ன ஏற்பாடு செய்யப்போகிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விவசாயம் செய்யக் கூடிய நிலங்களைக் காட்டுக்கென்று எடுக்க வில்லை. சிலர் அக்கிரமமாக ஆக்ரமித்திருக்கலாம், அம்மாதிரி நிலங்கள் காட்டு வளர்ச்சிக்குப் பயன் பட்டால், அது வன வளர்ச்சிக்கு எடுக்கப் படுகிறது.

SRI J. MATHA GOWDER : காட்டு வளர்ச்சிக்கு, மரம் செடி நட லாயக்கற்ற பூமி, லாயக்குள்ள பூமி என்று சர்வே செய்யும் அளவில் காட்டு இலாகாவினர் நடவடிக்கை எடுக்கிறார்கள். அதைப் பரிசீலிக்க சர்க்காரிலே ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டி நியமித்து அங்கங்கே உள்ள நிலங்களை காட்டு வளர்ச்சிக்கு என்று சர்வே செய்ய, ஏற்பாடு செய்ய முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : : அங்கத்தினரவர்களுடைய யோசனையை ஏற்றுக்கொள்ள கொஞ்சம் கூட இடமில்லை.

SRI P. G. MANICKAM : கோயம்புத்தூர் தாலவாடியிலுள்ள நிலங்கள் சாகுபடிக்கு லாயக்குள்ளவைகளாக இருக்கும் காரணத்தினால் அதை காட்டிலாகாவிலிருந்து, சாகுபடிக்குக் கொடுக்க, அந்த மலைப்பிரதேசத்தை, சாகுபடிக்கு லாயக்குள்ளதா என்று சர்க்கார் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அந்தத் தகவல் என்னிடம் ஒன்றும் இல்லை.

SRI K. R. VISWANATHAN : தலைவர் அவர்களே, உடையார் பாளையம் ஜமீன் சூரியமணல் காடுகளில் 50 ஆண்டுகளுக்கு மேல் விவசாயக் குடிமக்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் சூரியமணல் காட்டை அடமானத்திற்கு கேட்கிறார்கள். அவர்கள் வசிக்கும் வீடுகள் முதலியவற்றை அவர்களுக்கே கேட்கிறார்கள். அம்மாதிரி உத்தரவுபோட்டு, ஏழைக் குடியானவர்கள் வசித்து விவசாயம் செய்ய உத்தரவு போட சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அங்கத்தினர் தனிக் கேள்வி போட்டால் விடையளிக்கிறேன்.

[5th September 1960

### *Cattle-sheds*

* 440 *Q.*—Sri P. G. MANICKAM : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தேசிய விஸ்தரிப்புத் திட்டப் பகுதிகளிலே எத்தனை மாட்டுக் கொட்டகைகள் கட்ட எத்தனை ரூபாய்கள் கடனாகவும், மான்யமாகவும் கொடுக்கப்பட்டிருக்கின்றன ?

(ஆ) 1960–61-ம் நடப்பு வருடத்திலே எத்தனை மாட்டுக் கொட்டகைகள் கட்டப்படும் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) A sum of Rs. 2,18,400 has been sanctioned for distribution as loan. Twenty-five per cent of the cost of the shed subject to a maximum of Rs. 50 in each case will be sanctioned as subsidy after actual completion of the sheds.

(*b*) 1,536 sheds.

### *Political meetings*

* 441 *Q.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state the reason for promulgating new conditions for conducting political meetings in the Madras City?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The hon. Member is obviously referring to the recent decision of the Commissioner of Police to permit only one political party to hold a meeting on any particular day in each police division and to restrict the number of loudspeakers that could be used at such meetings. The orders were issued under the first part of section 41 of the Madras City Police Act, 1888 (Madras Act III of 1888) with a view to ensure that meetings organized by political parties are held in a peaceful and orderly manner without causing breach of the peace or inconvenience to the general public, and to facilitate the maintenance of law and order.

Sri A. A. RASHEED : Sir, is the Hon. Minister aware that in spite of these conditions, meetings are still held in residential areas and they disturb the peace of the place?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that no political party has attempted to hold the meeting contrary to the order that has been issued by the Commissioner of Police to which I have just now referred.

Sri K. VINAYAKAM : Sir, may I know what is the experience gained so far by the said kind of regulation in holding meetings in one place in one Division? Is it not a fact that it resulted in great confusion and fiasco being created by the rival political parties in the meetings held in the Division?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I would like to tell the hon. Member that confusion is not caused on account of the regulations but confusion has been avoided on account of these regulations. These regulations have been accepted as salutary by all the political parties concerned.



5th September 1960]

### *District Development Council*

*442 Q.—Sri S. M. ANNAMALAI : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் கூட்டங்களுக்கு பத்திரிகை நிருபர்களை அனுமதிக்கும் விஷயமாக சர்க்கார் முடிவுக்கு வந்து விட்டார்களா ?

(ஆ) அப்படியானால், அதன் விவரமென்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Sri S. M. ANNAMALAI : முன்பு இப்படிப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கும்போது இது பரிசீலனையில் இருக்கிறது என்று சர்க்கார் பதில் அளித்திருக்கிறார்கள். அந்தப் பரிசீலனை செய்வதற்கு இவ்வளவு கால தாமதம் ஆவதற்கு காரணம் என்ன ? அதில் என்ன கஷ்டங்கள் இருக்கின்றன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : ஒவ்வொன்றுக்கும் விதிகள் செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. இந்த டெவலப்மெண்ட் கவுன்சில் விஷயமாகவும் விதிகள் செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதற்கு வேண்டிய ட்ராப்ட் ரூல்ஸ் தயாராகி அவைகள் எல்லாம் பரிசீலனையில் இருந்து வருகிறது. கூடிய சீக்கிரம் அது வெளியிடப்படும்.

Sri C. NATARAJAN : சில மாவட்டங்களில் சர்க்காருடைய அனுமதி இல்லாமல் அங்கங்கு நடைபெறுகிற கூட்டங்களுக்கு பத்திரிகை நிருபர்களை வைத்துக்கொண்டு அவைகளை நடத்துகிறார்கள். அதைத் தடை செய்வதற்கு அவர்கள் வராமல் நிறுத்துவதற்கு அரசாங்கம் தடை செய்ய முன் வருமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அது அங்கங்கே இருக்கிறவர்களுடைய இஷ்டத்தைப் பொறுத்து இருக்கிறது. அனுமதிக்க வேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றி அங்குள்ளவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும். அவர்களை அனுமதிப்பதில் பெரிய ஆட்சேபணை இருப்பதாகத் தெரியவில்லை.

### *Leasing of devasthanam lands to agriculturists*

*443 Q.—Sri P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1959, 1960-ல் சேலம் டிவிஷன் இந்துமத அற நிலையப் பாதுகாப்பு போர்டுக்குச் சேர்ந்த கோவிலுக்கும், தேவஸ்தானங்களுக்கும் சொந்தமான எத்தனை ஏக்கரா நிலங்கள் ஏலத்தில் விடப்பட்டு விவசாயிகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : 637·07 acres of dry lands and 45·62 acres of wet lands.

### *Community Development Schemes in North Arcot district*

*444 Q.—Sri S. M. ANNAMALAI : கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1955-ம் வருஷம் பிப்ரவரி மீ 28உய 640 நெ. சர்க்கார் உத்திரவுப்படி 1959-60-ம் ஆண்டில் வடாற்காடு மாவட்டம், போளூர், கலசபாக்க சமுதாய நலத் திட்டங்களில் அனுமதிக்கப்பட்ட வேலைகள் எத்தனை?

[5th September 1960

(ஆ) ஒவ்வொரு வேலைக்கும் முதலில் அனுமதிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) அவைகள் குறைக்கப்பட்டனவா ?

(ஈ) அப்படியானால், அதற்கான காரணங்கள் யாவை ?

**The Hon. Sri C. SUBRAMANIAM**: (*a*) Under G.O. Ms. No. 640, dated 28th February 1955, fourteen works in Kalasapakkam Block and twenty-one works in Polur Block in North Arcot district were taken up for execution during 1959–60.

(*b*) A statement [a] containing the particulars such as name of the work, amount sanctioned, etc., is placed on the table of the House.

(*c*) In none of these cases has the sanctioned amount been reduced subsequently.

(*d*) Does not arise.

**Sri S. M. ANNAMALAI**: நான் கேட்டிருக்கக்கூடிய கேள்வி ஜி. ஓ. 640-ன்படி தேசீய அபிவிருத்தி வேலைகளுக்கு முதலில் **Block Development Officer** அனுமதி தந்து, அதன் பிறகு டெக்னிகல் சாங்க்ஷன் வாங்கலாம் என்று இருக்கிறது. அந்த ஜி. ஓ.-ப்படி சாதாரணமாக ஒவ்வொரு பி.டி.ஓ.-வும் ஏறத்தாழ இரண்டு ஆயிரம் ரூபாய்க்கு சாங்க்ஷன் செய்தால் ஆயிரம் அல்லது ஐந்நூறு ரூபாய்க்குத் தான் டெக்னிகல் சாங்க்ஷன் தரப்படுகிறது. அதனால் ஊராட்சி மன்றங்களில் அதிகப்படியான வேலை எடுத்து நடத்துவதற்கு முடியாமல் இருக்கிறார்கள். அப்படி இல்லாமல் **B.D.O.** சாங்க்ஷன் செய்த தொகையில் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்குக்கு குறையாமல் டெக்னிகல் சாங்க்ஷன் வாங்கிக்கொள்ளலாம் என்ற அளவில் சர்க்கார் உத்தரவு போடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM**: இப்பொழுது இருக்கக் கூடிய விதிகளின்படி எப்படி எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற முறைப்படி அவர்கள் எடுத்துக்கொள்கிறார்கள். மற்றப்படி வேறு விஷயங்களைப்பற்றிய தகவல் என்னிடம் இல்லை. கனம் அங்கத்தினர் சொல்லக் கூடியவைகளை எழுதி அனுப்பினால் அதைப்பற்றி பரிசீலனை செய்யப்படும்.

### *Groundnut cultivation*

***445 Q.—Sri P. G. MANICKAM** : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாகாணத்தில் 1959-60-ல் எத்தனை ஏக்கராக்களிலே வேர்க்கடலை பயிரிடப்பட்டது ?

(ஆ) வெளிநாடுகளுக்கு கடலெண்ணெ ஏற்றுமதி செய்வதற்காக எத்தனை பேர்களுக்கு லைசென்ஸ்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன ?

(இ) எத்தனை டன் கடலெண்ணெ ஏற்றுமதி செய்யப்பட்டது ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : (*a*) The cultivated area under groundnut crop in this State as per the final forecast report for the year 1959–60 was 18,56,100 acres.

(*b*) 120.

(*c*) 11,149 tons (from April 1959 to February 1960).

**Sri P. G. MANICKAM** : எவ்வளவு ரூபாய் மதிப்புள்ள கடலெண்ணெ ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது ? இவை எந்த எந்த நாடுகளுககு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது ?

---

[a] Printed as Appendix V on page 117 infra.



5th September 1960]

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : ஏற்றுமதி செய்யப் பட்ட நாடுகள், பர்மா, நெதர்லண்ட்ஸ், வெஸ்ட் ஜெர்மனி, இடாலி யுனைடெட் கிங்டம், பெல்ஜியம், பெடரேடட் மலேயா, சிங்கப்பூர். ஏற்றுமதி செய்யப்பட்ட எண்ணெயின் மதிப்பு 1,56,72,159 ரூபாய்.

**Sri P. G. MANICKAM** : கடலெண்ணெ ஏற்றுமதி செய்வதற்கு லைசென்சு பெற்றவர்களில் எத்தனை பேர்கள் வெளியூர்வாசிகள் ?

**The Hon Sri M. BHAKTAVATSALAM** : நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி சென்னையிலிருந்துதான் ஏற்றுமதி செய்யப்படவேண்டும். லைசென்சு யார் யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதும் அவர் களில் யார் இந்த ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள் என்ற விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை.

**Sri P. G. MANICKAM** : இப்படி வெளி நாடுகளுக்கு மணிலா எண்ணெ ஏற்றுமதி செய்யப்படுவதால் அதனால் இங்குள்ள ஏழைகள் வெகுவாக பாதிக்கப்படுகிறார்கள் என்பது அரசாங்கத்திற்கு தெரியுமா ? அப்படியானால் அது நியாயம் என்று உணருகிறார்களா ? அப்படியானால் அதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM**: வெளிநாட்டு வியாபாரத்தை அடியோடு தடை செய்ய வேண்டுமென்ற உத்தேசம் இல்லை. விலைவாசிகளை உத்தேசித்து அதை பரிசீலனை செய்து எந்த அளவில் வெளிநாட்டு ஏற்றுமதி அனுமதிக்கப்படுமோ அந்த அளவில் அனுமதிக்கப்பட்டு வருகிறது. நமக்கு வெளிநாட்டு ஏற்றுமதி முக்கியமானது.

**Sri A. GOVINDASAMY**: மணிலா உற்பத்தியைப்பெருக்க, அதனுடைய உற்பத்தி பெருகுவதற்கு மார்க்கெட்டிங் கமிட்டி மூலமாக பொறுக்கு விதைகளை வழங்குவதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத் திருக்கிறதா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இதைப்பற்றி தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

### *Construction of Roads in North Arcot district*

*** 446 Q.—Sri S. M. ANNAMALAI** : கனம் முதலமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் கலசப்பாக்கம் சமுதாயநலத் திட்டத்தைச் சேர்ந்த கிடாம்பாளையம், வேளானந்தல், மட்டவெட்டு, குப்பம் கிராமங் களுக்கு ரோடுகள் போடுவதைக் குறித்து பொது மக்களிடமிருந்து மகசர் கள் வந்தனவா ?

(ஆ) அப்படியானால், அவைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

**Sri S. M. ANNAMALAI** : இந்த இரண்டு கிராமங்களுக்கு மகஜர் அனுப்பி அவைகளுக்கு ரசீதும் வந்திருக்கிறது. அப்படி வந்த ரசீதுகளில் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக் கிறது. அப்படி இருக்கும்போது கனம் அமைச்சர் அவர்கள் மகஜர் வர வில்லை என்று சொல்லுகிறார்கள். இன்னும் சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். மகஜர் கொடுத்து ரொம்ப நாட்க ளாகிறது. இந்த நான்கு கிராமங்களுக்கும் ரோடு வசதியே கிடையாது. அதற்குக் காரணம் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டுமானால் நிலத்தை

[5th September 1960

விட மாட்டேன் என்று சொல்லுகிறார்கள். அதனால் அங்குள்ள நிலத்தை சட்ட பூர்வமாக ஆர்ஜிதம் செய்து ரோடு போடுவதற்கு சர்க்கார் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : என்னிடம் இப்பொழுது இருக்கக்கூடிய தகவல் கீழ்க்கண்டவாறு இருக்கிறது :—

" No representation or mahajar petition in the matter has been received by the Government. The Collector of North Arcot has stated that no mahajar from the villagers of Kidampalayam, Velanandal, Mattavettu and Kuppam villages in Kalasapakkam Block were received in regard to the formation of roads except a petition that was received in February 1960, from the President, Kidampalayam Panchayat for the formation of a road leading to Kidampalayam under ' Relief Programme '."

I do not find any petition sent to the Government or to the Collector. It does not depend on petitions alone . . .

**Mr. SPEAKER** : I have to make a request to the hon. Members not to place me in an embarassing situation and to decide who is telling the truth—the Hon. Minister or the hon. Member. The hon. Members should not put supplementary questions for which they know the answers. If they have any information they should give it to the Speaker.

இம்மாதிரி உப கேள்விகள் கேட்கக் கூடாது. கனம் அமைச்சர் சொல்வதை ஒப்புக்கொள்வதாக இருந்தால் ஒப்புக்கொள்ளலாம்இ, ல்லா விட்டால் ஒப்புக்கொள்ளாமல் இருக்கலாம். அதற்கு நான் என்ன செய்வது. இப்படிப்பட்ட உப கேள்வி கேட்டால் என்னால் ஒன்றும் செய்ய முடியாது. கேள்விக்கு பதில் சொல்ல வேண்டியவர் கனம் அமைச்சர். அவர் சொல்வதில் நம்பிக்கை இல்லை என்று கனம் அங்கத்தினருக்குத் தோன்றினால் கனம் அமைச்சர் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரலாம். ஆகவே அதுதான் வழியே தவிர இம்மாதிரியான கேள்விகளைக் கேட்பது என்பது சரியல்ல. இம்மாதிரி கேட்டு என்னை சங்கடமான நிலைமையில் வைப்பது சரியல்ல என்பதை மட்டும் சொல்லிக் கொள்ளுகிறேன்.

**Sri S. M. ANNAMALAI** : ஸாரி. . . . . . . ஸார், ஸார்.

**Mr. SPEAKER** :: ஸார், ஸார் என்று கூப்பிட்டு என்ன செய்வது ? நான் ரூலிங் கொடுத்து விட்டேன். அதற்குப் பிறகு நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் !

## *Cinema Theatres*

***447 Q.—Sri P. G. MANICKAM** : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாகாணத்திலே எத்தனை சினிமா தியேட்டர்கள் இருக்கின்றன ?

(ஆ) டூரிங் சினிமாக் கொட்டகைகள் எத்தனை இருக்கின்றன ?

(இ) 1959–60-ல் சினிமா ஆட்டங்கள் மூலம் சர்க்காருக்குக் கிடைத்த வரித்தொகை எவ்வளவு ?

(ஈ) வரித் தொகையிலிருந்து சென்னை கார்ப்பரேஷனுக்கும், முனிசிபாலிட்டிகளுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?



5th September 1960]

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : (a), (b) & (c) : Rs. 1,81,00,373 (this figure includes Show Tax and the tax collected under the Madras Entertainments Tax Act, 1939, on the admission to race courses. Separate particulars regarding the amount of tax collected through cinemas alone are not available.)

(d) The total amount apportioned to—

| | RS. |
|---|---|
| The Corporation of Madras ... ... ... | 36,26,270 |
| Municipalities ... ... ... ... | 69,65,570 |
| Panchayat Boards ... ... ... ... | 45,25,930 |
| District Boards ... ... ... ... ... | 2,08,573 |
| Townships ... ... ... ... ... | 29,010 |
| Cantonment ... ... ... ... ... | 52,919 |
| Total .. | 1,54,08,272 |

**Sri P. G. MANICKAM** : சார், சினிமாக் கொட்டைகளின் மூலம் கிடைக்கிற வரித் தொகை கார்ப்பரேஷனுக்கும், முனிசிபாலிட்டிக்கும், பஞ்சாயத்துக்கும் பிரித்துக் கொடுக்கப்படுகின்றனவா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM**: இந்தவரி அவ்வளவும் நகர சபைக்கும், முனிசிபாலிட்டிக்கும், பஞ்சாயத்து போர்டுகளுக்கும், ஜில்லா போர்டுகளுக்கும், டெவெலப்மெண்ட் கவுன்சிலுக்கும் கொடுக்கப்படுகிறது. அவ்வாறு கொடுக்கப்படுகிற மொத்தத் தொகை ஒருகோடியே ஐம்பத்தி நாலு லட்சத்து, எண்ணாயிரத்து இருநூற்று எழுபத்திரண்டு ரூபாய்.

**Sri P. G. MANICKAM** : சர்க்கார், தற்போது ஜில்லா போர்டுகளுக்கு கொடுக்கப்பட்டு வரும் இந்தத் தொகை போலவே பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுப்பதற்கு விதிகள் திருத்தி அமைக்கப்படுமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : அதற்குத் தனிக்கேள்வி வேண்டும்.

**Sri K. ANBAZHAGAN** : இந்த வரிகளில் இருந்து நகரசபைகளுக்குக் கிடைக்கிற பங்கு அதிகமானதாக இல்லை என்பதற்காக இந்தத் தொகையை அதிகரிப்பதற்கு முதல் இரண்டு வகுப்பு டிக்கெட் சார்ஜை உயர்த்த அனுமதிக்கவேண்டும் என்று நகரசபை கேட்டிருக்கிறதா ? அதுபற்றி அரசாங்கத்தின் முடிவு என்ன ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : அதைப்பற்றி தனிக் கேள்வி போடவேண்டும்.

**Sri A. A. RASHEED** : What is the percentage of proceeds that is appropriated towards the collection charges?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : It is 10 per cent, Sir.

**Sri P. S. K. LAKSHMIPATHI RAJ** : தனது நடிப்பின் மூலம் ஏராளமான பணத்தை வரியாகச் சர்க்காருக்கு அளித்திருக்கிற தியாகராஜ பாகவதரின் குடும்பத்திற்கு இப்போது அரசாங்கம் ஏதாவது உதவி அளிக்க முன் வருமா ?

**Mr. SPEAKER** : தனிக் கேள்வி போட வேண்டும்.

*Tenpallipattu Panchayat election*

*448 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், போளூர் தாலுகா, தென் பள்ளிப்பட்டு கிராம பஞ்சாயத்து போர்டு தேர்தல் நடத்தாமல் நிறுத்தி வைத்ததற்குக் காரணம் என்ன ?

(ஆ) எப்பொழுது தேர்தல் நடைபெறும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The election to the Thenpallipattu Panchayat in the North Arcot district scheduled to be held on 5th October 1958 was not held because of an interim injunction granted by the High Court of Madras in the Writ Petition filed by Sri Kutti and five others. Subsequently the High Court quashed the notification of the Regional Inspector reconstituting the panchayat.

(*b*) The elections will be held before the end of this month after observing the prescribed statutory formalities.

*Welfare Extension Projects*

*449 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் சென்னை ராஜ்யத்திலே எத்தனை க்ஷேமநல விஸ்தரிப்புத் திட்டங்கள் (Welfare Extension Projects) நடைபெற்று வருகின்றன?

(ஆ) இந்திட்டம் மூலமாக பொதுஜனங்களுக்கு என்னென்ன உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Forty-six Welfare Extension Projects.

(*b*) Creches and Balwadies are run for children. General Medical Aid and Maternity Services are provided. Literacy Campaigns are conducted. Folk songs, bhajans, kirthans, etc., are organized. Training in Ambar Charka and other handicrafts is given to women.

*Harijan members in Village Panchayats*

*450 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதில் அளிப்பாரா—

கோயம்புத்தூர் ஜில்லா, ஈரோடு தாலூக்காவிலிருக்கும் கிராமப் பஞ்சாயத்து போர்டுகளுக்கு—

(1) எத்தனை ஹரிஜன அங்கத்தினர்,

(2) இதர வகுப்பு அங்கத்தினர்,

ஹரிஜன ரிசர்வேஷன் பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (1) Total number of Harijan members in all the panchayats in the Erode taluk of the Coimbatore district—100.

(2) Total number of other caste members in all the panchayats in the Erode taluk of the Coimbatore district—975.

MR. SPEAKER : Questions are over.





[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—ANNOUNCEMENTS.

### (1) PANEL OF CHAIRMEN.

MR. SPEAKER : Under rule 14 (1) of the Madras Legislative Assembly Rules, I hereby nominate the following Members to be the Panel of Chairmen :—

(1) Sri S. Ranganatha Mudaliar.

(2) Srimathi P. K. R. Lakshmikantham.

(3) Sri S. M. Annamalai.

(4) Sri K. Ramachandran.

(5) Sri A. Vedarathnam.

(6) Sri K. Sattanatha Karayalar.

## III. —PRIVILEGE MATTER *re.* CERTAIN OBSERVATION OF THE HIGH COURT OF MADRAS ABOUT THE LEADER OF THE HOUSE, IN A WRIT PETITION.

*Privilege Matter, Motion under rule 55 (1) and Adjournment motion.*

MR. SPEAKER : I have received three notices, (1) Privilege matter, (2) Motion under rule 55 (1) of the Assembly Rules and (3) Motion for the adjournment of the House to discuss a particular matter.

Now, I have to decide the priority with reference to the consideration of these matters. I shall first take up the Privilege matter, because it affects the dignity of the House. Next, I shall take up the Motion under rule 55 (1) expressing disapproval of the policy of the Government as the very existence of the Government depends on that Motion and if it fails, I shall take up the Adjournment Motion. The Privilege matter is given notice of by hon. Member Sri S. Lazar. I now call upon the hon. Member to raise the matter.

SRI S. LAZAR : Mr. Speaker, in the course of the order pronounced on 26th August 1960 in Writ Petition No. 796 of 1960 on the file of the High Court of Judicature at Madras, strong observations have been made affecting the conduct, character, prestige and privilege of a Member and Leader of this House, and powers which essentially belong to the Legislature have been assumed by the High Court thereby affecting the powers and privileges of this House.

In our Constitution, there is a differentiation of functions between the Executive, Legislature and Judiciary and no organ can constitutionally assume the powers that essentially belong to another organ. The powers of control and the privileges, as between these three organs *inter se*, have been laid down under the various Articles of the Constitution.

It is conceded in the course of the Order that the corrective against the dispensation of Governmental patronage, if any, must be by those ni administrative or operational control; and therefore,

[Sri S. Lazar] [5th September 1960

Sir, under our parliamentary system of Government, it is this House which controls the actions of the Ministers by means of the various parliamentary methods of control. As rightly observed towards the end of the order, the jurisdiction of the Courts is not the role of a sentinel on the *qui vive* to guard against the vagaries of the State Executive. If I may add, Sir, the role of the sentinel can be played only by the Legislature as amongst the three organs of Government.

There are several passages in the order wherein the Court has tried to assume operational control over the Executive and played the role of a sentinel. These being within the competence of the Legislature, the powers and privileges of this House have been infringed.

SRI M. P. SUBRAMANIAM : Sir, on a point of order . . .

MR. SPEAKER : Let the hon. Member conclude his speech.

SRI M. P. SUBRAMANIAM : Sir, I rise on a point of order. The hon. Member is discussing . . .

MR. SPEAKER : I rule the point out of order. The hon. Member has to state his case. Let the hon. Member continue his speech.

SRI S. LAZAR : Sir, the Judiciary organ has been empowered with certain privileges under Article 211, the Legislature under Article 194 and the Executive under Article 163 (3) of the Constitution. This House has been jealously guarding the privileges of the Judiciary under Article 211 of the Constitution. The Legislature and the Executive have every right to expect the Judiciary not to encroach upon their privileges.

The High Court has passed stringent remarks against Sri C. Subramaniam for not filing an affidavit against the spirit of Article 163 (3) of the Constitution and his Oath of Secrecy. It finds all the relevant issues in favour of the Government but passes a series of strictures against the Leader of this House and the Government. Instead of restricting its consideration and findings to the legality of the appointment of the Government Pleader, the Court, in its early portion of the order, has gone into the motive and purpose supposed to have constituted the background for the order of appointment. The Court has thus usurped the powers and privileges of this House.

For smooth functioning of democracy, there must be mutual respect and regard for the respective privileges of the three organs of Government.

I therefore submit that in the order referred to above, there has been a breach of privilege of this House and the Leader of this House and that it is a fit case for being referred to the Committee of Privileges.



5th September 1960]

MR. SPEAKER : Before giving a ruling on such matters, I have been following the procedure of consulting the Leaders of Parties and the Leader of the House and getting their views. I shall follow the same procedure in this instance also. I shall get the views of the Leaders of Parties and the Leader of the House on the issue raised by the hon. Member Sri Lazar and thereafter give my ruling. I would like to know when it will be possible for the Leaders of Parties to express their views.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, this is a rather interesting and complicated question. Personally, I have not studied the various aspects of the question. Therefore, I suggest that we may take up this issue either tomorrow or the day after tomorrow. Perhaps, we may fix the date in the meeting of the Business Advisory Committee which you have been pleased to call to-day.

MR. SPEAKER : All right. I think that is the desire of the House also.

SRI M. KALYANASUNDARAM : Yes, Sir.

MR. SPEAKER : Then, I shall announce later when the matter will be taken up, i.e., whether tomorrow or the day after tomorrow. 10-30 a.m.

IV—MOTION DISAPPROVING THE POLICY OF THE MINISTRY IN THE APPOINTMENT OF GOVERNMENT PLEADER.

MR. SPEAKER : I have received, under rule 55 (1) (*b*) of the Assembly Rules, notice of a motion from the hon. Member, Sri P. S. Chinnadurai. The motion reads as follows :—

" This House disapproves the policy adopted by the Ministry in the matter of recent appointment of a Government Pleader in the High Court."

The hon. Member Sri T. S. Ramaswami, has also given notice of a similar motion.

Rule 55 (1) reads as follows :—

" A motion expressing want of confidence in the Ministry or a motion disapproving the policy of the Ministry in a particular respect may be made with the consent of the Speaker and subject to the following restrictions, namely :—

(*a*) leave to make the motion must be asked for after questions and before the further business set down in the list of business for the day is entered upon. . ."

This has been done.

" (*b*) the member asking for leave must, before the commencement of the sitting of the day, leave with the Secretary a written notice of the motion which he proposes to make."

This has been done.

[Mr. Speaker] [5th September 1960

" (2) If the Speaker is of opinion that the motion is in order, he shall read the motion to the House and shall request those members who are in favour of leave being granted to rise in their places and if not less than twenty-one members rise accordingly, the Speaker shall intimate that leave is granted and that the motion will be taken on such day, not being more than ten days from the day on which leave is asked for, as he may appoint. If less than twenty-one members rise, the Speaker shall inform the member that he has not the leave of the House."

Therefore, now I shall read the motion once again and those hon. Members who support it should stand—

" This House disapproves the policy of the Ministry in the recent appointment of Government Pleader."

Four hon. Members rose in support of the motion.

MR. SPEAKER: As only four hon. Members stood in favour of the motion, the House does not give leave to move the motion.

## V.—ADJOURNMENT MOTION TO DISCUSS THE IRREGULARITIES POINTED OUT BY THE HIGH COURT IN THE APPOINTMENT OF GOVERNMENT PLEADER.

MR. SPEAKER: I have also received notice of an adjournment motion from the hon. Member, Sri M. Kalyanasundaram. It reads as follows :—

" That the proceedings of the House be adjourned for discussing the following matter of urgent public importance, viz.—

' the irregularities pointed out by the Madras High Court regarding the appointment of the present incumbent in the post of Government Pleader '."

The House already refused leave for the hon. Member, Sri P. S. Chinnadurai, to move, under rule 55 (1) (*b*), a motion relating to the same subject. Anyhow, before giving my decision on this adjournment motion, I should like to hear what the hon. Member, Sri Kalyanasundaram, has got to say in respect of this matter. He should make a brief speech.

SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது சர்க்கார் வக்கீல் நியமித்ததைப்பற்றி உயர்நீதி மன்றம் தீர்ப்பு கூறியபோது பல குறைபாடுகள் கூறியிருக்கிறது. உயர்நீதி மன்ற நீதிபதிகளின் கருத்துக்களையோ அல்லது தீர்ப்பையோ சரியா இல்லையா என்பதைப் பற்றி நான் பேச விரும்பவில்லை. நீதிபதிகளின் கருத்துக்கு ரொம்ப மதிப்பு கொடுக்கக் கூடியவன் நான். அவர்களுடைய தீர்ப்பில் பல விஷயங்களில் கவனம் செலுத்தி சந்தேகக் கண்ணோடு, மந்திரி சபையையும், குறிப்பாக ஒரு மந்திரி தவறு செய்வதைப்பற்றியும் இதில் கண்டிருக்கிறது. இம்மாதிரி தவறுகளைக் கண்காணிக்கும் பொறுப்பு இந்த சபைக்கு மிகவும் அவசியம் உண்டு. நான் ஹைகோர்ட் தீர்ப்பைப்பற்றி கவலைப்படவில்லை. ஆனால் அதில் குறிப்பிட்டிருக்கிற விஷயங்களின் முழு விவரங்களைப்பற்றியும் தெரிந்து கொள்ள இந்த சபைக்கு உரிமை உண்டு. இதில் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் என்னவென்றால் அட்வகேட் பெட்டிஷனரினுடைய கோரிக்கை நிராகரிக்கப்பட்டபோதிலும், அதில் கூறப்பட்டிருக்கிற



5th September 1960] [Sri M. Kalyanasundaram]

குற்றச்சாட்டுகளை ஒப்புக் கொண்டுவிட்டார்கள். மேலும் அந்தக் கேஸ் சம்பந்தப்பட்ட செலவு அவர்கள் கொடுக்கவேண்டுமென்று அந்த தீர்ப்பில் இல்லை. அப்படி கேட்காததற்குக் காரணம் என்ன சொன்னார்கள் என்றால், இது பொது மக்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து அம்பலப் படுத்தக்கூடிய ஒரு விஷயம் ஆனதினால் கோர்ட் செலவு பெட்டிஷனர்களால் சர்க்காருக்குக் கொடுக்க வேண்டியதில்லை என்று தீர்ப்பில் கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் நீதிபதிகள் அந்தத் தீர்ப்பில் கூறப்பட்டிருக்கிற முழு விவரங்களையும் இந்தச் சபைமுன் வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதுவும் அமைச்சரவையின், குறிப்பாக ஒரு அமைச்சரின் திரிகரணசுத்தியைப்பற்றி சந்தேகிக்கக்கூடிய வகையில் குறிப்பிட்டிருக்கிறது. ஆகையால் இந்த விஷயம் பூராவையும் விவாதிக்கவேண்டிய அவசியம் இந்தச் சபைககு ஏற்பட்டிருக்கிறது. ஆகையால்தான் இந்த ஒத்திவைப்புப் பிரேரேபணையைக் கொண்டு வந்திருக்கிறேன். இந்த சபையில் இதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, இது ரொம்ப முக்கியமான விஷயம் என்பதைப்பற்றி நானும் உணர்ந்திருக்கிறேன். இந்தப் பிரச்னையை கனம் அங்கத்தினர்கள் எழுப்பியதற்கு அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இதை ஒரு " அட்ஜோர்ன்மென்ட் மோஷனாக " கொண்டுவந்து விவாதிக்க வேண்டுமா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. இதைப்பற்றிய முழு விவரம் தெரிவிக்க வேண்டுமென்று 41-வது பிரிவின் கீழ் நோட்டீஸ் கொடுத்தால், அப்போது இந்தச் சபை எல்லா விஷயங்களும் தெரிந்து கொள்ள முடியும். சற்று முன்புதான் கனம் ஸ்ரீ லாசர் அவர்கள் இது சம்பந்தமாக ஒரு உரிமைப் பிரச்னை எழுப்பியிருக்கிறார்கள். அவர்களுடைய நோக்கம் என்னவென்றால் எல்லா விஷயங்களையும் தெரிந்து கொண்டு, அதற்குப் பிற்பாடுதான் தீர்ப்பு கூறவேண்டும் என்பது. தீர்ப்பு சரியானதாகவும் இருக்கலாம், தவறானதாகவும் இருக்கலாம். ஆனால் எல்லாவற்றையும் தெரிந்துகொண்டு பிறகு தீர்ப்பு கூறுவதற்கு ஒரு மதிப்பு இருக்கிறது. விஷயங்களைத் தெரிந்து கொள்ளாமல் ஊகித்துச் சொல்வதில் அதற்கு ஒரு மதிப்பு இருக்கிறது. அரசியலமைப்புச் சட்டத்தில் 163-வது ஷரத்தில் 3-வது பிரிவில்—

' The question whether any, and if so, what advice was tendered by Ministers to the Governor shall not be inquired into in any Court.'

என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த சர்க்கார் பிளீடர் நியமனம் எந்த காரணத்தினால், நோக்கத்தினால் செய்யப்பட்டது என்பது நீதிமன்ற விசாரணைக்கு ஒரு **Point at issue** ஆக இருக்க முடியுமா, இல்லையா என்பதே ஒரு சிக்கலான விஷயம். இம்மாதிரி விசாரணையில் இந்த விஷயத்தைக் குறிப்பிட்டிருந்தது **relevant point** ஆக எடுத்துக் கொள்வதற்கில்லை. இதைத்தான் நம்முடைய சட்ட ஆலோசகரும் தெரிவித்தார்கள்.

அப்படி விசாரணைக்கு புறம்பாக இருக்கக்கூடிய ஒரு விஷயத்தைப் பொறுத்து, நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கக்கூடிய ரகசியமான பல விஷயங்களை நாங்கள் வைத்துக்கொண்டிருப்போம் என்பது நாங்கள் கொடுத்திருக்கக்கூடிய வாக்குறுதி. அதோடு 163 (3) கீழ் நாங்கள் என்ன சிபார்சு செய்தோம். எந்த சிபார்சின் அடிப்படையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்பதெல்லாம் அந்த அவசியமில்லாதபோது நாங்களாகவே கொண்டுபோய் இதையெல்லாம் கொடுக்கலாமா என்பது ஒரு விஷயம். ஆகவே இந்த விஷயங்களை அங்கு சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று நாங்கள் கருதினோம். அதையே சட்ட ஆலோசகர்களும் சொன்னார்கள். இதுபோன்ற விஷயங்கள் வரும்போது இதில் ஒன்றையும் ஒளித்து வைக்கக்கூடாது என்று கருதி ஒரு சமயம் நீதிபதி கேட்டால் எல்லா விதமான ரிக்கார்ட்களையும் அவரிடம் கொடுக்க அட்வகேட் ஜெனரலிடம் சொல்லி எல்லா பைல்களையும அவர்களிடம் ஒப்புவித்து, இவைகளை நீங்கள் கையில் வைத்துக்கொண்டிருங்கள், இவைகளை கோர்ட் பார்வையிட

வேண்டுமென்று கேட்டால் அதை மறுக்கக்கூடாது, அப்படிச் “ ப்ரிவிலேஜ் ” க்ளெயிம் செய்ய உரிமையிருந்தாலும் அப்படிச் செய்ய வேண்டாம் என்று சொல்லி எல்லாரிக்கார்ட்களையும் அட்வகேட் ஜெனரலிடம் கொடுத்திருந்தோம். ஆனால் அவைகள் கேட்கப்படவில்லை. முழு விவரங்களையும் கேட்கவேண்டிய அவசியமில்லை, அப்படி அவசியம் இல்லாமல் இருந்தாலும் ஜட்ஜ் இவைகளை பரிசீலனை செய்யப் போகிறோம், இவை வேண்டும் என்று கேட்டால், ஒரு உரிமைப் பிரச்னை போல் பாவிக்காது கொடுத்து விடுங்கள் என்ற அடிப்படையில் அட்வகேட் ஜெனரலிடம் கொடுத்து வைத்திருந்தோம். அதுவும் கேட்கப்படவில்லை. இந்த ஜட்ஜ்மெண்ட், எல்லா விஷயங்களையும் தெரிந்து அந்த அடிப்படையில் சொன்னதாக நான் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறேன். ஜட்ஜ்மெண்ட் காப்பி இப்பொழுது, என்னிடம் வந்திருக்கிறது. அதைப் பரிசீலனை செய்து, இதன் நுணுக்கங்கள் என்ன, இதன் மேல் என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பதையெல்லாம் ஆற அமர்ந்து படித்துப் பார்த்து, சட்ட ஆலோசகர்களையும் கலந்து அவர்கள் ஆலோசனைகளையும் கேட்டு எந்தவித நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால் ஒன்று மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நீதிமன்றம் ஒருபுறமிருக்க, இதுமாதிரி ஒரு தீர்ப்பு வெளிவந்த பிற்பாடு, இதில் இருக்கக்கூடிய முக்கிய விஷயங்களைத் தெரிந்துகொள்ள இந்த சட்ட சபைக்கு உரிமை இருக்கிறது என்ற காரணத்தினால் இதுபற்றி ஒரு விளக்கம் கொடுக்க வேண்டுமென்று நினைக்கிறோம். அப்படி கொடுக்கும்போது நாங்களும் வரம்புக்கு மீறி போய்விடக் கூடாது என்பதால் ஜட்ஜ்மெண்டைப் படித்துப் பார்த்து மற்ற சட்ட நுணுக்கங்களையும் படித்துப் பார்த்து எந்த அளவிற்கு இந்த சட்டசபை முன் விஷயங்களை வைக்க வேண்டுமென்று நாங்கள் முடிவு செய்யவேண்டியிருக்கிறது. நேற்றைக்கு முந்திய நாள் என் கைக்கு வந்தது அந்தத் தீர்ப்பு. நான் படிக்கிறது மட்டுமல்ல, ஒரு நகல் இருப்பதால், மற்றவர்களும் அதைப் படித்துப் பார்த்து அவர்கள் ஆலோசனையும் கேட்க வேண்டியிருக்கிறது. ஆகவேதான் சிறிது தாமதம் ஏற்படுகிறது, இங்கு விளக்கம் கொடுப்பதற்கு. 41-விதி பிரகாரம் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய நோட்டீஸுக்கு, நாளையோ அல்லது அதற்கு மறுநாளோ, நான் இங்கிருந்து வெளி நாடுகளுக்கு புறப்படுவதற்கு முன் அந்த விளக்கத்தைக் கொடுக்க வேண்டும் என்பது சர்க்கார் கருத்து. அதை அவர்கள் ஒப்புக்கொண்டால் இந்த “ அட்ஜோர்ன்மெண்ட் மோஷன் ” அவசியமில்லை என்பது என் கருத்து. விளக்கம் கொடுத்த பிற்பாடு பின் முடிவு செய்ய வேண்டியது இந்த சபையின் பொறுப்பாக இருக்கும். ஆகவே அதுவரையில் இந்த ஒத்திவைப்புப் பிரேரணை அவசியமில்லை என்பதே என் கருத்து. 41-விதி பிரகாரம் கொடுக்கப்பட்ட நோட்டீஸுக்கு எந்த நாள் விளக்கம் கொடுக்க முடியும் என்று பார்த்து சொல்கிறேன். ஆகவே, இதை வற்புறுத்தவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : I hope the hon. Member Sri M. Kalyanasundaram is not pressing his motion.

SRI M. KALYANASUNDARAM : 41-வது பிரிவின்படி நான் கொடுத்திருக்கக்கூடிய நோட்டீஸின்மீது அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை சமர்ப்பிப்பார்களானால் விவாதத்திற்கு சந்தர்ப்பம் இராது. அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இந்த சபையின் அபிப்பிராயத்தை அதன் பிறகு தெரிவித்தால் நல்லதென்று. இந்த சபையின் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க எப்படி சந்தர்ப்பம் கொடுக்கப் போகிறார் என்று தெரிந்தால் இந்தப் பிரேரணைபற்றி ஒரு முடிவிற்கு வர சுலபமாயிருக்கும்.

THE HON. SRI C. SUBRAMANIAM : எப்படி என்பதுபற்றி பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியில் விவாதித்து எந்த சமயத்தில், எந்த ரூபத்தில் எடுத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்யலாம். எனக்கு ஆட்சேபணையில்லை.

SRI M. KALYANASUNDARAM : அப்படியானால் நான் இந்தப் பிரேரபணையை வற்புறுத்தவில்லை.



## II—ANNOUNCEMENTS—*cont.*

(2) THE MADRAS BUILDINGS (LEASE AND RENT CONTROL) BILL, 1960 (L.A. BILL NO. 20 OF 1959).

MR. SPEAKER : I have to announce to the House that the Madras Buildings (Lease and Rent Control) Bill, 1960 (L.A. Bill No. 20 of 1959) has been passed by the Legislative Council without any amendment.

(3) ASSOCIATION OF LEGISLATIVE COUNCIL MEMBERS WITH THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS.

MR. SPEAKER : I have to announce that the following five members of the Legislative Council have been nominated to associate with the Committee on Public Accounts of the Legislative Assembly for the year 1960-61 :—

Sri K. Balasubramania Ayyar.

Sri Abdul Hameed Khan.

Vidwan Sri T. Muthukannappan.

Sri B. K. Nallaswami.

Sri Mohamad Raza Khan.

## VI—GOVERNMENT BILL.

THE MADRAS APPROPRIATION (NO. 3) BILL, 1960 (L.A. BILL NO. 33 OF 1960).

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

" That the Madras Appropriation (No. 3) Bill, 1960 (L.A Bill No. 33 of 1960) be taken into consideration."

MR. SPEAKER : Motion moved—

" That the Madras Appropriation (No. 3) Bill, 1960 (L.A. Bill No. 33 of 1960) be taken into consideration."

SRI V. K. RAMASWAMY MUDALIAR : Some of the hon. Members would like to express their views on this Bill. So it may be taken up tomorrow. Language policy may be discussed now.

MR. SPEAKER : Has the Leader of the House any objection?

THE HON. SRI C. SUBRAMANIAM : I have no objection.

MR. SPEAKER : We will take it up tomorrow or on such day as the Business Advisory Committee decides when it should be taken up.

[5th September 1960

## VII. GOVERNMENT MOTION.

### OFFICIAL LANGUAGE POLICY.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I move—

"That the policy of the Madras Government on the Official Language be taken into consideration."

சபாநாயகர் அவர்களே, இந்த மொழிப் பிரச்னையைப்பற்றி இங்கு விவாதிக்க வேண்டிய அவசியமிருக்கிறது என்பதுபற்றி நான் வலியுறுத்தவேண்டிய அவசியமில்லை. நாளைய தினம் நாம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி விவாதிக்கப் போகிறோம். இப்பொழுது இருக்கக்கூடிய இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமாக இருந்தாலும் சரி, அல்லது நாம் ஏற்றுக்கொள்ள இருக்கும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டமாக இருந்தாலும் சரி நாட்டில் நல்லதொரு சூழ்நிலை இல்லாதிருக்குமானால் இந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றுவது மிகவும் கஷ்டமாக இருக்கும். கஷ்டமாக இருப்பது மட்டுமல்ல. பல தடைகளும் அவ்வப்போது தோன்றிக் கொண்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே, நல்லதொரு சூழ்நிலை ஏற்படுத்த வேண்டியது இந்த சபையின் கடமை, என்பதை நாம் என்றைக்கும் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதற்கு ஒரு வழி காட்டக்கூடிய முறையிலே சென்ற காலங்களில் நாம் பணியாற்றியிருக்கிறோம் என்பதுபற்றி ஓரளவு பெருமைப்பட்டுக்கொள்ளவும் முடியும் என்று நான் இந்த சபையின் சார்பாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மொழி வெகு சுலபமாக மக்களின் உணர்ச்சியை தட்டி எழுப்பிவிட முடியும் என்பதற்கு சான்றாக பல நிகழ்ச்சிகள் நம் நாட்டில் நடந்திருக்கின்றன. மக்களை ஒன்றுபடுத்தக்கூடிய சக்தியை மொழி பெற்றிருக்கிறது; அதே சமயத்தில் மொழி காரணமாக பல்வேறு குழப்பமான நிலைமைகள், மக்களை பிரிவுபடுத்தக்கூடிய கட்டங்கள் ஏற்பட முடியும் என்பது நம் எல்லோருக்கும் நன்கு தெரிந்த விஷயம். அதன் காரணத்தினால்தான் இன்று நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்துவதற்குள்ள அவசியம் ஏற்பட்டிருக்கக் கூடிய இந்தக் காலத்தில் இந்த மொழிப் பிரச்னைக்கு நாம் ஒரு வழி காண வேண்டியது மிகவும் அவசியம் என்பதைத்தான் மறுமுறையும் நான் இந்த சபை முன் சமர்ப்பிக்க விரும்புகிறேன். இந்த மொழிப் பிரச்னையைப் பொறுத்த வரையில் நாம் ஏதோ புதிதாக எடுத்து விவாதிக்க கூடிய விஷயமல்ல. இதற்கு முன்பே விவாதித்து சில முடிவுகளையும் நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அந்தப் பிரச்னை வந்த காலத்திலெல்லாம், அது ஏதோ காங்கிரஸ் கட்சியின் தனிப் பிரச்னை என்ற அடிப்படையில் அணுகாமல் இந்த சபையிலுள்ள எல்லா எதிர்கட்சித் தலைவர்களையும், கட்சிப் பிரதிநிதிகளையும் கூட்டி வைத்து இதை பரிசீலனை செய்து ஏகோபித்த ஒரு அடிப்படையில்தான் முடிவுகள் அவ்வப்போது எடுத்து அந்த முடிவுகளின் அடிப்படையில் சர்க்கார் நடவடிக்கைகள் எடுத்து வந்திருக்கிறார்கள். ஏகோபித்த முடிவு என்று நான் சொல்லும்போது, இதை எல்லோரும் அவரவர்கள் அபிப்பிராயத்திற்கு ஏற்ற பிரகாரம் முடிவு செய்யப்பட்டு, எல்லோருடைய அபிப்பிராயத்திற்கும் ஏற்றபடி முடிவு செய்யப்பட்டது என்று நான் சொல்வதற்கு தயாராயில்லை. ஒவ்வொருவருக்கும் பல்வேறுபட்ட கருத்துக்கள் மொழிப் பிரச்னைபற்றி இருக்கின்றன.

ஒவ்வொருவரும் தங்களுடைய கருத்துதான் சரி என்று சொல்லிக்கொண்டேயிருப்போமானால், ஏகோபித்த கருத்துக்கு வருவது என்பது முடியாத காரியம். ஆகையினால் எல்லோரும் சேர்ந்து ஏகோபித்த ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று சொல்லும்போது—ஒருவருக்கொருவர் நாட்டினுடைய நன்மைக்காக கொஞ்சம் விட்டுக்கொடுத்து அதன் மூலமாக ஏகோபித்த ஒரு முடிவை எடுக்கவேண்டும் என்று நாம் நினைக்கும்போது—ஒவ்வொருவரும் தங்களுடைய கருத்தையே



5th September 1960] [Sri C. Subramaniam]

வலியுறுத்திக் கொண்டிருப்பார்களேயானால் ஏகோபித்த முடிவுக்கு வருவது கொஞ்சம் சிரமமாக இருக்கும். ஆகவே எந்த கருத்தை ஏற்றுக்கொள்ளலாம் என்று முடிவு செய்கின்ற பொழுது, பொதுவான ஒரு கருத்தைத்தான் ஒத்துக்கொள்ள வேண்டுமே தவிர, ஒவ்வொருவரும் தங்களுடைய கருத்துத்தான் சரி, இதிலே எல்லாம் அடங்கிவிட்டது என்று சொல்வதை நாம் எப்போதும் ஏற்றுக்கொள்ளவில்லை. நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஏகோபித்த ஒரு முடிவு எடுப்போமேயானால் அதை நாம் மற்றவர்களுக்கு சொல்லும்போது அவர்களும் அதை ஒப்புக்கொள்ளக் கூடிய முறையில் இருக்கும் என்கின்ற முறையில்தான் இந்த விவாதம் இந்த சட்டசபையில் நடந்து ஒரு முடிவுக்கு வந்து அந்த சிபாரிசை பார்லிமெண்ட் கமிட்டிக்கும் பார்லிமெண்ட் அங்கத்தினர்களுக்கும் தெரிவித்தோம்.

ஆகவே இப்போது நாம் மொழிப் பிரச்னையைப்பற்றி விவாதிக்கும்போது நாம் எடுத்துக்கொண்ட முடிவுகள் என்ன என்பதைப்பற்றி, ஞாபகப்படுத்திக்கொள்வதற்காக அவைகளை சுருக்கமாக விவரிக்க விரும்புகிறேன். இந்த மொழிப் பிரச்னை முதன் முதலாக லாங்க்வேஜ் கமிஷன் நியமிக்கப்பட்டபொழுது நம்முடைய கவனத்திற்கு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. லாங்க்வேஜ் கமிஷன் முன்னால் நாம் எந்த முறையில் அவர்களுக்கு நம்முடைய கருத்துக்களை தெரிவிக்க வேண்டும் என்பதைப்பற்றி ஆலோசித்தபொழுது, தனித்தனியாக அவரவர் கருத்துக்களை தெரிவிப்பதைவிட எல்லோரும் சேர்ந்து ஏகோபித்த ஒரு கருத்தை தெரிவித்தால் அது நல்ல சக்தியுள்ளதாகவும், நல்ல பலனுள்ளதாகவும் இருக்கும் என்ற அடிப்படையில் எல்லாக் கட்சி அங்கத்தினர்களையும் கூப்பிட்டு வைத்து இதைப்பற்றி பரிசீலனை செய்து அதன் பிற்பாடு, ஒரு யதாஸ்தை—மெமோராண்டத்திற்கு சரியான தமிழ் என்னவென்று தெரியவில்லை, அறிக்கை என்று வேண்டுமானால் சொல்லலாம். (ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம்: மெமோராண்டம் என்றே சொல்லலாம்)—ஒரு மெமோராண்டத்தை லாங்க்வேஜ் கமிஷனுக்கு சமர்ப்பித்தோம். அதில் ஒரு துரதிருஷ்டம் என்னவென்றால் லாங்க்வேஜ் கமிஷன் நாம் கொடுத்த பல்வேறு சிபாரிசுகளையும் ஒப்புக்கொள்ளவில்லை. ஒப்புக் கொள்ளாதது மட்டுமல்ல, நம்முடைய சிபாரிசுகளுக்கு முரண்பாடான பல சிபாரிசுகளையும் அவர்கள் செய்தார்கள். இதன் காரணமாக இன்னொரு குழப்பமான நிலைமையும் ஏற்பட ஏதுவாக இருந்தது. அந்த குழப்பமான நிலைமையை தவிர்ப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று ஆலோசனை செய்துகொண்டிருந்த பொழுதுதான் இந்த லாங்க்வேஜ் கமிஷன் செய்த சிபாரிசுகளை பரிசீலனை செய்வதற்கு என்று பார்லிமெண்ட் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டது. இந்த பார்லிமெண்ட் கமிட்டி நியமிக்கப்பட்ட பின்னால் மறுபடியும் எல்லாக் கட்சித் தலைவர்களையும், எல்லா பிரதிநிதிகளையும் அழைத்து இதைப்பற்றி பரிசீலனை செய்தோம். மறுபடியும் ஒவ்வொன்றாக பரிசீலனை செய்து ஏகோபித்த ஒரு கருத்தை தெரிவிக்கக் கூடிய முறையில் இருந்தால்தான், லாங்க்வேஜ் கமிஷன் செய்திருக்கக்கூடிய சிபாரிசுகளையும் மீறி நமது புதிய முடிவுகள் ஏற்றுக் கொள்ளப்படும்படியான பலன் ஏற்படும் என்கின்ற முறையில் நாம் இரண்டாவது தடவை யோசனைகளை அல்லது கருத்துக்களை தெரிவிக்க வேண்டியிருந்தது. அப்போதும் நம்மிடையில் பலருக்கு உறுதியான கருத்துக்கள் இருந்தபோதிலும்கூட, நம்முடைய நாட்டினுடைய நன்மையைக் கருதி, ஒவ்வொருவரும் தங்களுக்கு என்றிருந்த கருத்துக்களை எல்லாம் ஒதுக்கிவைத்துவிட்டு ஏகோபித்து சில கருத்துக்களை தெரிவித்து அதன் பேரில் நடவடிக்கை எடுக்கலாம் என்றும் அதன் அடிப்படையில் அந்த முடிவுகளை பார்லிமெண்ட் கமிட்டிக்கு சமர்ப்பிக்கலாம் என்றும் ஏற்பாடு செய்தோம். அதையும் கனம் அங்கத்தினர்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். நல்ல வேளையாக பார்லிமெண்ட் கமிட்டி இந்தச் சிக்கல்களை எல்லாம் நன்றாக உணர்ந்து நாம் கொடுத்த மெமோராண்டங்களை நன்றாக பரிசீலனை செய்தது. அது மட்டுமல்ல, அதிலுள்ள அங்கத்தினர்கள்கூட சொன்னார்கள், சென்னை சர்க்கார் என்ன கருத்து தெரிவித்திருக்கிறது என்பதை எடுத்துவைத்துக்

கொண்டுதான் மற்ற எல்லா விஷயங்களையும்பற்றி ஆலோசித்தார்கள் என்று. அந்த விதத்தில்தான் பல முடிவுகள் எடுக்கப்பட்டிருப்பதையும் நாம் பார்க்கின்றோம். பார்லிமெண்ட் கமிட்டியில் நம்முடைய பலத்தை காப்பாற்றக்கூடிய வகையில் நம்முடைய அங்கத்தினர்கள் பலரும் நல்ல பணியாற்றியிருக்கிறார்கள். டாக்டர் ராமசாமி முதலியார் அவர்கள், இன்னும் இரண்டு மூன்று தென்னிந்திய அங்கத்தினர்கள் எல்லோரும் நம்முடைய கருத்துக்களுக்கு ஆதரவு கொடுத்து அதை ஒப்புக்கொள்வதற்காக அந்தக் கமிட்டியில் அரும்பாடு பட்டிருக்கிறார்கள். இவ்விதம் தென் இந்தியாவிலிருந்து அங்கத்தினர்களாயிருந்தவர்கள் அத்தனை பேருக்கும் முதன் முதலாக நாம் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம். (திரு. எம். கல்யாணசுந்தரம்: வடக்கேயுள்ள அங்கத்தினர்கள் சிலரும் நமக்கு ஆதரவு தந்திருக்கிறார்கள்) ஆம். திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் ஞாபகப்படுத்தியது போல் வடக்கேயுள்ள அங்கத்தினர்களுக்குத்தான் நாம் முதலில் நன்றி செலுத்த வேண்டும். வடக்கேயுள்ள அங்கத்தினர்கள் பலரும் நம்முடைய கருத்துக்களை வலியுறுத்தி, அதற்காக பாடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் முதலில் நன்றியை செலுத்திக்கொண்டு பின்னால் நம்முடைய பகுதியிலிருந்து பணியாற்றிய அங்கத்தினர்களுக்கும் நமது நன்றியை செலுத்திக்கொள்ள விரும்புகிறேன். அதிலும் முக்கியமாக நமது அங்கத்தினர்கள் எல்லோரும் எந்த விதமான குறிப்பும் இல்லாமல் பார்லிமெண்ட் கமிட்டி ஒப்புக்கொண்ட சிபாரிசுகளில் கையெழுத்துப் போடக்கூடிய நிலைமை ஏற்பட்டது என்பதை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். வேறு சிலர் எதிர்க் குறிப்புக்கள் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இந்தியை ஆதரிக்கக்கூடியவர்கள். இந்த சிபாரிசுகள் எல்லாம் மிகவும் மோசமானவை, இந்தி மொழிக்கு இந்த சிபாரிசுகள் எல்லாம் ஆதரவு தரக்கூடியவை அல்ல என்றெல்லாம் எதிர்க் குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது ஒருபுறமிருக்க, நமது கோரிக்கையை பார்லிமெண்ட் கமிட்டியும் ஒப்புக்கொண்டது என்பதையும் பார்க்கின்றோம். இதற்கு பிற்பாடு இந்தப் பிரச்னை பார்லிமெண்ட் முன்பு விவாதத்திற்கு வந்தது. அப்படி விவாதத்திற்கு வந்தபொழுது பார்லிமெண்ட் கமிட்டி சிபாரிசு செய்தது மட்டுமல்ல அதற்கு மேல் ஒரு படி சென்று நமது பிரதம மந்திரி அவர்கள் இந்தி பேசாத மக்களுடைய அவநம்பிக்கையை போக்குகின்ற முறையில், சந்தேகங்களை போக்குகின்ற முறையில் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய முறையில் பல உறுதி மொழிகளை தந்திருக்கிறார்கள். பார்லிமெண்ட் பேச்சு மட்டுமல்ல, மற்ற இடங்களிலும் அவர்கள் பேசியிருக்கக்கூடியதும் இதை பலப்படுத்தக்கூடியதாக இருக்கிறது என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய பல்வேறு உறுதி மொழிகளையும் நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். ஏதோ ஒரு கருத்தை மட்டும் எடுத்து வைத்துக்கொண்டு பார்க்காமல், பொதுவாக அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய உறுதிமொழிகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு அதன் பேரில்தான் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கின்ற காரணத்தினால்தான் நான் இதை வலியுறுத்த விரும்புகிறேன்.

அதற்கடுத்தபடியாக, இவை எல்லாவற்றையும் பரிசீலனை செய்த பிற்பாடு, நம்முடைய ஜனாதிபதி அவர்கள் அரசியல் அமைப்பு விதி 344-ன் கீழ் ஒரு உத்தரவை பிறப்பித்திருக்கிறார்கள். அந்த உத்தரவில் இருக்கக்கூடிய வாசகம் சிலருக்கு சந்தேகம் கொடுக்கக்கூடிய ரீதியில் இருந்தது என்று இன்றைக்கு விளங்குகின்றது. இதிலே ஏதோ பிரதம மந்திரி அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளை மீறி, இவைகள் எல்லாம் அமுலுக்கு வராத முறையில் இந்த 344-வது விதியின்கீழ் உத்தரவு போடப்பட்டிருக்கின்றதோ என்று பலருக்கு சந்தேகம்.

**(Deputy Speaker in the Chair.)**

11-00 a.m. அதன் காரணமாகத்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் "இது மாதிரி கொடுத்த வாக்குறுதிகளை மீறி ஜனாதிபதியினுடைய உத்தரவு அமைந்திருக்கிறது" என்று ஒரு கிளர்ச்சி செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டது. பிரதம மந்திரி அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர் ஒருவருக்கு எழுதிய கடித மூலமாகவும், அதற்குப் பிற்பாடு "ப்ரஸ் கான்பரன்சிலும்" அவர்கள் நிலைமையைத் தெளிவாக்கி இருக்





கின்றார்கள். ஆகவே, இன்றைக்கு பிரதம மந்திரியவர்கள் கொடுத்த உறுதி மொழிக்குப் பிறகு, ஏதோ புறக்கணிக்கப்படுகிறது, அல்லது புறக்கணிக்கப்படுவதற்கு முயற்சிகள் நடக்கின்றன என்று சொல்வதைப்பற்றி நாம் கவலை கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. நமக்கு இன்றைக்கு உறுதி மொழி அளிக்கப்பட்டால் அதன் பிரகாரம் இன்றைக்கு நாம் என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்பதுதான் நம்முடைய நோக்கமாக இருக்க வேண்டும். அதற்காக, நாம் என்னென்ன முறையிலே பணியாற்ற வேண்டும், என்னென்ன சிபாரிசுகளைச் செய்ய வேண்டும் என்பதைப்பற்றி நாம் முடிவு செய்து அந்த முடிவுப்படி நாம் இன்றைக்கு நடவடிக்கை எடுக்கும்படி சர்க்காரைக் கோருவதுதான் நாம் செய்யக்கூடிய கடமை என்பது என்னுடைய கருத்து. "இப்போது நாம் சிபாரிசு செய்தது என்ன? அவர்கள் ஏற்றுக்கொண்டிருப்பது என்ன? ஏற்றுக்கொள்ளாவிட்டால் மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்?" என்பதைப்பற்றி யெல்லாம் நாம் ஆராயக் கடமைப்பட்டிருக்கிறோம்.

முதன் முதலாக நாம் ஏற்றுக்கொண்ட முடிவு, முதல் மெமோராண்டமாக இருந்தாலும் சரி, இரண்டாவது மெமோரண்டமாக இருந்தாலும் சரி, 1965-க்குப் பிறகு "கான்ஸ்டிட்யூஷன்" பிரகாரம், 343-வது விதிப் பிரகாரம் "**The Official language of the Union shall be Hindi in Devanagari Script.**" பதினைந்து வருஷத்திற்குள் அது அமுலுக்கு வராது. பதினைந்து வருஷத்திற்குப் பிறகு அந்த 343-வது விதி அமுலுக்கு வரவேண்டுமென்ற முறையிலே சட்டம் அமைந்திருக்கிறது. ஆனால், நாம் விரும்பியது, 1965 வரை என்று ஒரு இடைக்காலம் இருந்தால் போதாது, அதற்குப் பிற்பாடு ஆங்கிலத்தை ஒதுக்கி வைத்து விட்டு இந்தி நிர்வாக மொழியாகுமானால் அதன் மூலம் இந்தி பேசாத மக்களுக்குப் பெரும் தீமை விளையும் என்கின்ற காரணத்தினாலே, 1965-க்குப் பிற்பாடு என்ன நிலைமை ஏற்பட வேண்டுமென்பதைப்பற்றி நாம் முக்கியமாகப் பரிசீலனை செய்தோம். அதற்குப் பிற்பாடு நாம் எடுத்த முடிவு 1965-க்குப் பிற்பாடும் தொடர்ந்து ஆங்கிலம் நமக்கு நிர்வாக மொழியாக இருந்துவர வேண்டுமென்பதுதான். அப்படி நாம் சொல்லும்போது, இன்றைக்கு எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டால், இரட்டை மொழிக் கொள்கையை வகுத்து அந்த முறையிலே தீர்வு காணமேண்டுமென்று சிபார்சு செய்தோம். "பைலிங்வல் பார்முலா." ஆங்கிலம், தமிழ் இரண்டும் நிர்வாக மொழியாக அமையவேண்டுமென்ற அடிப்படையிலே முடிவு செய்து அதைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று திரும்பத் திரும்ப முயற்சி செய்து வந்திருக்கிறோம். இது மாதிரி இரட்டை மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்ளும்போது, இது எந்தக் காலம் வரைக்கும் நீடிக்கவேண்டுமென்பதைப்பற்றியும் பரிசீலனை செய்ய வேண்டியது அவசியம். அதைப்பற்றியெல்லாம் பரிசீலனை செய்து நாம் "ப்ரொலாங்டு பைலிங்வலிஸம்"—அதாவது இன்னொரு இடத்தில் ஆலோசனை செய்யும்போது எந்தக் கால அளவு இருக்க வேண்டுமென்று சொல்லும்போது, எவ்வளவு காலத்திற்கு இது அவசியமோ அவ்வளவு காலத்திற்கு இது நீடித்திருக்க வேண்டுமென்ற கருத்தைத்தான் நான் வலியுறுத்தி வந்திருக்கிறேன், அந்தக் கருத்தை என்னுடைய சார்பாக மட்டுமல்லாமல் இந்தச் சபையில் செய்த முடிவின் அடிப்படையில் தமிழ் மக்களின் சார்பாகத் தெரிவித்திருக்கிறேன். அதோடு மட்டுமல்ல. இந்தக் காலவரையறையின் அவசியம் தீர்ந்து விட்டது என்பதை நிர்ணயம் செய்ய வேண்டியவர்கள் யார் என்பதைப் பற்றியும் என் கருத்தைத் தெரிவித்தேன். அதை முடிவு செய்யக் கூடியவர்கள் இந்தி பேசக்கூடிய மக்களாக இருக்க முடியாது. இந்தி பேசாத மக்கள்தான் எந்தக் காலம் வரை இது தொடர்ந்து இருக்க வேண்டுமென்பதைப்பற்றி முடிவு செய்ய முடியும். அந்தக் கருத்தைத் தெரிவித்த காலத்திலே அதற்கு ஏற்பட்ட எதிர்ப்புகளை அங்கத்தினர்கள் உணர்ந்திருப்பார்கள். ஆனால், காலாவட்டத்தில் இந்தப் பிரச்னை பற்றி மேலும் மேலும் பரிசீலனை செய்து பார்க்கும்போது, அது யாரோ ஒரு கூட்டத்தார் மட்டும் முடிவு செய்யக்கூடிய விஷயமல்ல. அது எல்லா மக்களின் பிரச்னையாக இருக்க வேண்டும். ஆகையினால்தான் எல்லாரும் ஏகோபித்த ஒரு முடிவாக இருக்க வேண்டுமென்ற காரணத்தினால்தான்

[Sri C. Subramaniam] [5th September 1960

திரும்பத் திரும்ப யோசித்து இந்த முடிவுக்கு வந்ததை, இந்தி பேசாதவர்கள் இந்த நிபந்தனையின்பேரில்தான் ஒப்புக்கொள்ள முன்வந்தார்கள். இல்லாவிட்டால் ஒப்புக்கொள்ளக்கூடிய நிலைமை ஏற்படாது என்பதை உணர்ந்து அதை ஓரளவு வரவேற்கிறேன்.

" As long as it is necessary, how long it is necessary shall be determined by the non-Hindi speaking people. This is the formula."

ஆகையால் இதை அடிப்படையாகக் கொண்டு இந்த முடிவு அமுலுக்கு வரவேண்டுமானால் என்ன செய்வது என்பதைப்பற்றிதான் நாம் இன்றைக்கு ஆராய கடமைப் பட்டிருக்கிறோம். இந்த மொழிப் பிரச்னையை நாம் பல்வேறு கட்டங்களில் பரிசீலனை செய்தபோது நாம் ஒரு முடிவுக்கு வந்தோம். அந்த முடிவு, நாம் முன்பு சொன்னது மாதிரி வேறு கருத்துக்கள் இல்லையென்ற காரணத்தினால் வந்த முடிவு அல்லது ஏகோபித்த கருத்து என்ற அடிப்படையில் அல்ல. இப்போதைக்கு இது ஒப்புக்கொள்ளப்பட்டால், இந்த அடிப்படையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தோம். அதுதான் முதல் முதல் கவனிக்க வேண்டியது. இந்த மொழிப் பிரச்னை பற்றி அரசியல் அமைப்பில் இருக்கக்கூடிய 17-வது பகுதியை மாற்றுவது அவசியமா, இல்லையா, அல்லது இந்த அரசியல் அமைப்பு விதிக்குள்ளாகவே முடிவு செய்திருக்கின்றோமா, அவைகளை யெல்லாம் நாம் செயலில் கொண்டு வந்து விட முடியுமா என்பதைப்பற்றி யெல்லாம் நாம் திரும்பத் திரும்ப விவாதித்தோம் என்பது அங்கத்தினர்களுக்கு ஞாபகமிருக்கும். இதிலிருக்கும் நுணுக்கங்களைத் தெரிந்த பிறகு சட்டத்தைத் திருத்தத்தான் வேண்டுமென்ற முடிவுக்கு வந்தால் நானும் அதை ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அரசியல் சட்டத்தைத் திருத்துவது என்று சொன்னால் சாதாரண காரியம் அல்ல. அதற்குத் தனிப்பட்ட முறைகள், தனிப்பட்ட விதிகள், தனிப்பட்ட அளவிற்கு வோட்டு எல்லாம் நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றன. இன்றைக்கு நாம் செய்யக்கூடிய முடிவு மட்டுமல்ல இது. இந்தியாவில் உள்ள எல்லா மக்களையும் பாதிக்கும் மொழிப் பிரச்னை இது. மறுபடியும் அரசியல் சட்டத்தைத் திருத்துவது என்றால்—திருத்துவதுபற்றி எல்லாரும் ஒப்புக்கொள்ளலாம்—எந்த முறையில் திருத்துவது என்பதைப்பற்றி ஆலோசனை செய்ய முற்பட்டால் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு ஆலோசனை சொல்ல முன் வரும். நமக்குள்ளேயே இதுபற்றி ஆலோசனை செய்து ஒரு தனிப்பட்ட முடிவுக்குவரக் கஷ்டமான நிலைமை ஏற்பட்டாலும் ஏற்படலாம். ஆகையால் இன்றைக்கு இந்தப் பிரச்னை முதலில் இருந்து, 1947, 1948, 1949-லிருந்து இருந்து வருகின்ற இந்தப் பிரச்னையில் சிக்கலான முடிவு கண்டோமானால் மறுபடியும், " மெல்டிங் பாட் " என்பது போல் இந்த விஷயத்தைப் பரிசீலனை செய் என்று சொன்னால் அது கூடிய சீக்கிரம் முடியக் கூடிய காரியமல்ல. நாட்டின் கவனமும் இதிலே இழுத்துச் செல்லப்பட்டு விடுமாகையால் இது அவசியமா என்பதைப்பற்றி நன்றாக யோசனை செய்து முடிவு செய்ய வேண்டுமென்பதைத்தான் நாம் சர்வ கட்சிக் கூட்டத்தில் விவாதித்தோம். வாதித்ததற்குப் பிற்பாடு நாம் என்ன முடிவுக்கு வந்தோம் என்றால், ' அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியம் இல்லை, அரசியல் சட்டத்தைத் திருத்தாமலேயே இதை நாம் செயலுக்குக் கொண்டுவர முடியுமானால் அதை நாம் வற்புறுத்திக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை ' என்ற முடிவுக்கு வந்தோம். இதிலிருந்தே, அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியம் இல்லை என்று எல்லோரும் அந்தக் கருத்து உடையவர்களாக இருந்தார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால், இந்த அடிப்படையில் எல்லோரும் ஒப்புக்கொண்ட முறையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தோம். ஆகையால், முதல் மெமொராண்டத்திலும் சரி, இரண்டாவது மெமொராண்டத்திலும் சரி, அரசியல் சட்டத்தைத் திருத்தும் பிரச்னையைக் கவனியாமல், இருக்கும் அரசியல் சட்டத்திற்கு உள்ளாகவே, எந்த எந்த அளவுக்கு நாம் இதைப்பற்றி நடவடிக்கை எடுக்க முடியும் என்பதை ஆலோசனை செய்து பார்த்து, அரசியல் சட்டத்திலே இருக்கும் பிரகாரம் பார்லிமெண்ட் சட்டத்தின் மூலமே நாம் இதற்குத் தீர்வு காண முடியும் என்று நினைத்து அந்த அடிப்படையில் முடிவு எடுத்து வந்தோம்.



5th September 1960]

Sri C. N. ANNADURAI : அரசியல் சட்டத்தைத் திருத்தாமலேயே இதற்குள்ளாகவே தேவையான பரிகாரங்கள் தேடிக்கொள்ளலாம் என்பது மெமொராண்டம் கொடுத்தபோது இருந்த கருத்து என்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். ஆனால், மொழிக் கமிஷனுக்கு அவர்கள் சிபார்சு செய்யும் நேரத்தில், அல்லது முதல் சிபார்சு அனுப்பிய பிறகு, அரசியல் சட்டத்தைத் திருத்த சென்னை சர்க்கார் விரும்புகிறார்கள் என்று டாக்டர் சுப்பராயன் அவர்கள் குறிப்பிட்டிருப்பதை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : இதிலே இரண்டு விஷயங்கள் இருக்கின்றன. சர்க்காருடைய கருத்து—நாம் வாதித்ததற்கு பிற்பாடு முடிவுக்கு வந்தது. பார்லிமெண்ட் சட்டத்தின் மூலமாகவே நாம் எடுத்துக்கொண்ட முடிவுகள் பிரகாரம் செயல்படலாம் என்ற கருத்து தெரிவித்தோம். ஒரு சிலர், "இல்லை, இல்லை ; இருக்கும் அரசியல் சட்டம் அதற்கு இடம் கொடுக்காது" என்று சொன்னார்கள். அப்பொழுது சொன்னேன், "நம்முடைய முடிவைச் செயல்படுத்துவதற்கு அரசியல் சட்டம் தடையாக இருந்தால், அந்தக் காலத்தில் அரசியல் சட்டத்தைத் திருத்தியாக வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்தத் தயாராயிருக்கிறோம்" என்று. ஆனால், எங்களுடைய அபிப்பிராயத்தை, நாங்கள் எடுத்துக் கொண்ட முடிவுகளை, இருக்கும் அரசியல் சட்டத்தின் மூலமாகவே, பார்லிமெண்ட் சட்டமாகவே நிறைவேற்ற முடியும் என்பது எங்களுடைய நம்பிக்கை. "அந்த நம்பிக்கை தவறு ; அதற்குப் போதுமான அதிகாரம் இல்லை" என்றால், இப்பொழுதே உறுதி கொடுக்கிறேன்—சென்னை சர்க்காரே முன் வந்து ஏற்றுக்கொண்ட முடிவுகளை நிலைநிறுத்தும் முறையிலே அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும் என்று அப்போது ஏகோபித்துச் சொல்வதற்கு நாங்களும் தயாராக இருக்கிறோம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

Sri C. N. ANNADURAI : "தேவைப்பட்டால் அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு சென்னை சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ளும்" என்று இப்பொழுது அமைச்சர் தெரிவிப்பதற்கும், "அரசியல் சட்டத்தைத் திருத்துவதிலே ஏராளமான கஷ்டங்கள் இருக்கின்றன" என்று முன்னாலே பேசியதற்கும் பொருத்தம் என்ன இருக்கிறது என்பதை அவர்கள் தெளிவுபடுத்தவேண்டும்.

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்போதும் பொருத்தம் இருக்கிறது. இரண்டு பிரச்னைகள் வரும்போது, எது அந்த நேரத்திலே முக்கியம் என்று பார்க்கவேண்டியதாக இருக்கிறது. நமக்கு முக்கியமான பிரச்னை—நமக்குச் சாதகமாகத் தீர்வு காணவேண்டும் என்பது. தீர்வு காணமுடியவில்லையென்றால், அரசியல் சட்டத்தைத் திருத்துகிற கஷ்டம் பெரிதா, திருத்தாமல் இருக்கிற கஷ்டம் பெரிதா என்று பார்க்கும்போது, அப்பொழுது அது இரண்டையும் சீர்தூக்கிப் பார்க்கவேண்டியதாக இருக்கிறது. அப்படிப் பார்க்கும்போது, நமக்குத் தீர்வு காணுவது தான் முக்கியம். ஆகையால், ஒன்றையொன்று வைத்துக்கொண்டு, முதலிலே கவனித்ததையும் இரண்டாவது கவனித்ததையும் வைத்துக்கொண்டு முரண்பாடு காண முடியாது. இன்றைக்கு நாம் நினைப்பது, இருக்கும் அரசியல் சட்டத்திற்கு உட்பட்டே நாம் எடுத்த முடிவுகளைச் செயல்படுத்த முடியும் என்பது என்னுடைய நம்பிக்கை. அந்த அடிப்படையிலே இதைக்குறித்து அரசியல் சட்டத்தில் ஷரத்து இருக்கவேண்டும் என்பதற்காக மாற்ற வேண்டிய அவசியம் இல்லை என்பது என்னுடைய கருத்து. சட்ட நிபுணர்களோ, சுப்ரீம் கோர்ட்டோ வேறுவிதமாகத் தீர்ப்பு சொல்லக்கூடுமானால், அப்பொழுது யோசித்துப் பார்க்கவேண்டியதாக இருக்கிறது.

அரசியல் சட்டம் எப்படி இருக்கிறதோ, அதற்குத் தேவை எந்த அளவு என்று எடுத்துக்கொண்டு முடிவு பண்ணலாமா, இல்லை, அரசியல் சட்டத்தில் எப்படி இருந்தாலும் இந்த முடிவு தான் எங்களுக்கு அடிப்படையான கோரிக்கை, அந்த கோரிக்கைக்கு அரசியல் சட்டம் குறுக்கே

[Sri C. Subramaniam] [5th September 1960

இருந்தால், மற்ற சங்கடங்களை எதிர்ப்பாராமல் அதைத் திருத்திக்கொள்வதிலே ஆட்சேபணை சொல்ல முடியாது, என்பதிலே எங்களுக்கு முரண்பாடு இருக்காது என்று நான் வலியுறுத்திச் சொல்கிறேன்.

நாம் பார்க்கவேண்டியது—எல்லோரும் ஒப்புக்கொண்டது—பார்லிமென்டரி கமிட்டி சிபார்சு செய்திருக்கக் கூடிய எல்லாவற்றையுமே, இன்றைக்கு பிரதம மந்திரி கொடுத்திருக்கும் உறுதிமொழியின்படி, இருக்கும் அரசியல் சட்டத்திற்கு உட்பட்டே நாம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறோம். "பின்னால் நடவடிக்கை எடுக்க முடியாது, அரசியல் சட்டத்திலே வேறுவிதமாக இருக்கிறது" என்று சொன்னால் அப்பொழுது அது பரிசீலனை செய்யவேண்டிய விஷயம். அதற்காகத்தான் உறுதிமொழி கொடுத்து, நாம் நினைத்ததற்கும் மீறி, நாம் இப்பொழுது அறிவுக்கு எட்டியவரையில் பரிசீலனை செய்து பார்த்து முடிவுக்கு வந்திருக்கிறோம். அந்த அறிவுக்கும் மீறி வேறு யாராவது செய்யக்கூடிய முடிவு, எல்லோரையும் கட்டுப்படுத்தக்கூடிய ஒரு தீர்ப்பு வருமானால் அப்பொழுது வேறு வழி இல்லை, அப்பொழுது திருத்தித்தான் தீரவேண்டும் என்ற நிலைமை ஏற்படுகிறது. ஆகையால்தான், இதைப் பற்றி முடிவு எடுக்கக் கூடியவர்கள் இதை மனதில் வைத்துக்கொண்டு முடிவு எடுக்கவேண்டும் என்பதற்காக சென்னை சர்க்காரினுடைய நிலைமையையும் விளக்கவேண்டும் என்பதற்காக அரசியல் சட்டத்தைத் திருத்துவதில் எங்களுடைய கருத்து என்ன என்பதையும் நாம் தெரிவித்துக் கொள்ளவேண்டிய அவசியம் இப்பொழுது ஏற்படுகிறது. ஆகையால்தான், இப்பொழுது நாம் அரசியல் சட்டத்திற்கு உட்பட்டே நடவடிக்கை எடுத்துக் கொள்ள முடியுமானால் அதை நாம் வற்புறுத்திப் பெறுவதுதான் சரியான முறை என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகையால்தான், இன்றைக்குப் பிரதம மந்திரி அவர்கள் கொடுத்திருக்கும் உறுதிமொழி அடிப்படையிலே, நாம் தெரிவித்த கோரிக்கைகளின் அடிப்படையிலே, பார்லிமெண்ட் சட்டத்தின் மூலமாகவே அதை நிறைவேற்ற முடியுமானால் அப்பேர்ப்பட்ட முடிவைச் சர்க்கார் தங்களுடைய கொள்கையாக ஏற்றுக்கொண்டிருக்கும்போது அதை நிறைவேற்றுவது மிகவும் கடினமாக இருக்காது என்பதைத் தான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஆகவேதான் இன்றைக்கு இதிலே முடியுமா, முடியாதா என்பதைப் பற்றியெல்லாம் நாம் பரிசீலனை செய்து பார்க்கவேண்டியது, திரு. பந்த் அவர்கள் கூறிய சட்டம் உருவாகும்போது அந்தச் சட்டம் எந்த முறையில் இருக்கிறது, எந்த அடிப்படையில் இருக்கிறது என்று அந்தச் சட்டத்தைப் பார்த்ததற்குப் பிறகுதான் அதில் முடிவு கூற முடியும். இன்றைக்கு இருக்கும் பிரச்னை—நாம் முடிவு எடுக்கக் கூடியது, நாம் முன் சொன்னதை ஒப்புக்கொள்ளுகிறோமா, இல்லையா என்பதுதான். தீவிரக் கொள்கை கொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தார்கூட, அவர்கள் அடிப்படையாக தங்களுடைய கோரிக்கையாக வைத்திருப்பது, பிரதம மந்திரி அவர்கள் கொடுத்த உறுதிமொழி காப்பாற்றப்படவேண்டும், அதை மீறி, அதற்கு முரண்பட்டு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என்று அவர்களும் பல இடங்களில் வற்புறுத்தி, தீர்மானம் மூலமாக வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். எனக்குத் தெரிந்தவரையில் கூட்டங்களிலும் வற்புறுத்திக்கொண்டு வருகிறார்கள் என்பது என்னுடைய கருத்து. ஆகையால்தான், பிரதம மந்திரி அவர்கள் கொடுத்த உறுதிமொழி சட்டரூபமாக நிறைவேற்றப்படப் போகிறதா இல்லையா என்பதைப்பற்றியும் பார்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம். எனக்கு நம்பிக்கை இருக்கிறது —இது இவ்வளவு தெளிவாக, உறுதியாக வாக்குறுதி கொடுத்ததற்குப் பிற்பாடு அந்த வாக்குறுதிகள் புறக்கணிக்கப்படமாட்டா என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு முடிவு செய்யவேண்டியது, முதலிலே அரசியல் சட்டத்தை இப்பொழுது இருக்கும் நிலைமையிலே திருத்தும்படி வற்புறுத்தவேண்டிய அவசியம் இல்லை என்பது முதல் முடிவாக இருக்கவேண்டும் என்பதை நான் தாழ்மையாக, முக்கியமாக திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அந்த அடிப்படையிலே நாம் பார்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.



5th September 1960] [Sri C. Subramaniam]

அதற்கு அடுத்தபடியாக, பிரஸிடெண்ட் உத்தரவு இருக்கிறதே, அது ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைப்பற்றி நாம் மறுக்க முடியாது. அதுவும் ஒரு உண்மையான குழப்பத்தைப் பலருடைய மனதிலே ஏற்படுத்தியது என்பதிலும் சந்தேகம் இல்லை. அதற்குப் பிற்பாடு ஏற்பட்டிருக்கும் விளைவின் காரணமாக அந்தக் குழப்பம் நீக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். மேலாக அவர் வாசகத்தைப் பார்த்துக்கொண்டு ஒரு சமயம் ஏமாற்றுவதற்காக வந்ததோ என்றுகூட சிலர் சந்தேகப்படவேண்டிய நிலைமை ஏற்பட்டிருந்தது. ஆனால் 344-வது பிரிவின்கீழ் என்ன உத்தரவு போடவேண்டியிருந்தது என்பதைப் பற்றி ஒவ்வொன்றாக பரிசீலனை செய்து பார்த்தால் 344-வது பிரிவின்கீழ் போடவேண்டிய உத்தரவு அளவுக்கு மட்டும் அவர்கள் நிறுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்ற ஒரு முடிவை நாம் ஏற்றுக்கொண்டால், அதிலே இருக்கக்கூடிய, பிரதம மந்திரி அவர்கள் கொடுத்த உறுதிமொழிக்கும் நாம் கொடுத்த கோரிக்கைக்கும் முரண்பாடு ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஒன்று சொல்லலாம். "அந்த உத்தரவிலே ஏன் பிரதம மந்திரி சொல்லும் பிரகாரம், சட்டம் செய்யப்போகிறோம் என்று சொல்லியிருக்கக் கூடாது?" என்று கேட்கலாம். அது 344-வது பிரிவின் கீழ் வருவது இல்லை. 344-வது பிரிவின்கீழ் 1965-ம் வருஷம் வரைக்கும் என்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பதைப்பற்றி 1965-ம் வருஷமே இந்தச் சிபார்சின் பிரகாரம் ஒரு நடவடிக்கை எடுக்கலாம். ஆங்கிலத்தை விட்டுவிட்டு ஹிந்தியை உபயோகப்படுத்த ஒரு வரம்பு ஏற்படுத்தலாம். அல்லது ஆங்கிலத்தையே உபயோகப்படுத்த வேண்டுமானாலும் ஏற்படுத்தலாம். ஆனால், ஜனாதிபதி உத்தரவில் 1965-ம் வருஷம் வரைக்கும் அம்மாதிரி ஒரு வரம்பை ஏற்படுத்துவது அவசியம் இல்லை, கூடாது என்ற முடிவைத் தெரிவித்திருக்கிறார்கள். மற்றவைகளைப்பற்றிப் பார்த்தால், 1965-ம் வருஷத்திலேயே ஹிந்தியும் ஒரு ஆட்சிமொழி என்ற இடத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றால் அதற்காக என்ன நடவடிக்கைகள் எடுத்தால் அந்த நிலையை அடையமுடியும் என்ற குறிப்புத்தான் அதிலே இருக்கிறதே தவிர, வேறு ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI C. N. ANNADURAI : அவர்கள் குறிப்பிட்டது—

" Notwithstanding anything in Article 343, the President may, after consideration of the report referred to in clause (5), issue directions in accordance with the whole or any part of that report ".

Our complaint has been that no stress has been laid on the operative part.

THE HON. SRI C. SUBRAMANIAM : 343-வது பிரிவில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் 15 வருஷங்களுக்குப் பிற்பாடு ஆங்கிலமே இருக்காது என்றும், 15 வருஷங்கள் வரைக்கும் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டும் என்றும் கண்டிருக்கிறது. 344-வது பிரிவு பிரகாரம் மொழிக்கமிஷன் நியமிக்கப்படவேண்டும் என்று கண்டிருக்கிறது.

" *Article* 344 (1).—The President shall, at the expiration of five years from the commencement of this Constitution and thereafter at the expiration of ten years from such commencement, by order constitute a commission which shall consist of a Chairman and such other members representing the different languages specified in the Eighth Schedule as the President may appoint, and the order shall define the procedures to be followed by the Commission ".

அது ஒன்று. இந்தக் கமிஷன் எந்தெந்த விஷயங்களைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருப்பது தான் ரொம்பவும் முக்கியமானது.

[Sri C. Subramaniam] [5th September 1960

" (2) It shall be the duty of the Commission to make recommendations to the President as to—

(a) the progressive use of the Hindi language for the official purposes of the Union; "

Article 344 (2) (b) is the most important. It states—

" (b) restrictions on the use of the English language for all or any of the official purposes of the Union; "

In spite of Article 343, the President can pass an order restricting the use of the English language for certain purposes.

Now, let us go to items (c), (d) and (e), which state—

(c) the language to be used for all or any of the purposes mentioned in Article 348;

(d) the form of numerals to be used for any one or more specified purposes of the Union; and

(e) any other matter referred to the Commission by the President as regards the official language of the Union and the language for communication between the Union and a State or between one State and another and their use."

Article 438 deals with the language to be used in the Supreme Court and in the High Courts.

I shall now take up some of these points. As for the restrictions on the use of the English language for all or any of the official purposes, the Union President has categorically stated that there shall be no restriction. So, there is no question of its replacement now. It shall continue as it is. As for the language to be used for all or any of the purposes mentioned in Article 348, the position with reference to the language to be used in the Supreme Court and in the High Courts has been clearly stated in that Article itself.

As for the form of numerals to be used for any one or more specified purposes of the Union, we have categorically stated that the international numerals should continue to be used and I am sure they will be used. In the Hindi-speaking States, they may perhaps use the Hindi numerals and that is a point for discussion later on. As far as this is concerned, we need not attach much importance to it.

As for the last item " any other matter referred to the Commission by the President as regards the official language of the Union and the language for communication between the Union and a State or between one State and another and their use.", the decision is that the *status quo* shall continue.

Thus, these are the only matters on which the Commission should enquire into and make recommendations and with reference to which the President is called upon to pass his orders,



5th September 1960]

SRI C. N. ANNADURAI: Even the Commission went out of the way.

THE HON. SRI C. SUBRAMANIAM: I fully agree. The Commission made a mess of the whole thing and went beyond its terms of reference. While it was willing to suggest certain things, it was afraid of suggesting those things and therefore left things vague. If I may say so, the Language Commission, instead of suggesting a solution to the language problem, has greatly added to the difficulties. That will be the verdict of not only the present-day generation, but also that of the future generation. I am sure the future generation will give the same verdict. With great respect to the people who participated in that Commission—I suppose that they sincerely believed that they were doing the right thing by the nation and that is a quite different thing altogether—I would say that it is an error of judgment. That is all what I wish to say in that connexion.

ஆகையினாலே இப்பொழுது மொழிக் கமிஷன் என்னென்ன விஷயங்களை கவனிக்கவேண்டுமோ அதற்குப் புறம்பாக சில விஷயங்களை கவனித்திருக்கிறார்கள். பிறகு அதுபற்றி பார்லிமெண்டரி கமிட்டியிலும், பார்லிமெண்டிலும் விவாதம் நடைபெற்றது. அதற்குப் பிற்பாடும் தாங்கள் புறம்பாக உத்தரவு போடுகிறோம் என்று சொல்ல முடியாது. இதை வைத்துக்கொண்டு பார்க்கப்போனால், "பிரசிடென்ஷியல் ஆர்டர்" முரணை ஒன்றும் இல்லை என்று சொல்லும்பொழுது. இப்பொழுது முரணை நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதாக உத்தேசம் இல்லை என்று சொல்லும்பொழுது, அதை நாம் ஏற்றுக்கொள்ளுவது தான் சரி. இல்லை, முரணை இருக்கிறது என்று சொன்னால் அவர்களுக்கு ஒரு இடம் கொடுக்கிறது. அந்த உத்தரவு நாம் போட்ட கோரிக்கைகளுக்கு விரோதமாக இருக்கிறது. பிரதம மந்திரி அவர்களின் வாக்குறுதிக்கு விரோதமாக அந்த உத்தரவிலே ஏதோ இருக்கிறது என்று சொல்லி நாம் அவர்களுக்கு ஒரு இடம் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் சொல்லுகிற பிரகாரம் முரண் ஒன்றும் கிடையாது, முரணை ஒன்றும் செய்வதாக உத்தேசம் கிடையாது என்று வாக்குறுதி கிடைத்த பிற்பாடு, அதை ஏற்றுக்கொண்டு இனிமேல் நடக்கக்கூடிய நடவடிக்கைகளில் வாக்குறுதி மீறப்படுகிறதா என்பதைப் பார்த்துக்கொள்ளுவதில் நாம் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டியது அவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் நடவடிக்கைகள் எடுக்கக்கூடிய விஷயத்தில் பிரதம மந்திரி அவர்களோடு நின்று விடவில்லை. கொள்கை என்னவென்பதை அவர் வகுக்கலாம். அதை மந்திரி சபை ஒத்துக்கொள்ள வேண்டும், பிறகு பார்லிமெண்டு ஒத்துக்கொள்ளவேண்டும். பிறகு நடவடிக்கை எடுக்கும் பொழுது பல்வேறு நபர்கள் வந்து சேருவார்கள். இந்தி வருவதற்கு இவ்வளவு தூரம் தாமதப்படுத்தவேண்டுமா, அது உடனே வருவதற்கு தகுதி இருக்கிறது என்றெல்லாம் நினைத்துக்கொண்டு நடவடிக்கை எடுக்கக் கூடிய அதிகாரிகள் அவ்வப்பொழுது வந்து சேர்ந்துவிடலாம். (குறுக்கீடு) அரசியல் வாதிகளும் இருக்கிறார்கள். நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு அதிகாரிகளிடத்தில் தான் இருக்கிறது. அளவுக்கு மீறி, சட்டத்திற்கு மீறி சில அதிகாரிகள் நடந்துகொண்டுவிடுகிறார்கள். இந்தி விஷயத்தில் மட்டுமல்ல. நம்முடைய நிர்வாகத்தை எடுத்துக்கொண்டால் சில சமயங்களில் இதுமாதிரி இருக்கவேண்டுமென்று நினைத்துக்கொண்டு அதிகாரிகளும் கூட சட்டத்திற்கும் புறம்பாக நடந்துகொண்டுவிடுகிறார்கள். ஆகவே, அதைப்பற்றி குறை சொல்லுவதில் பிரயோசனம் இல்லை. நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ஏதாவது அம்மாதிரி தவறுதல் நடக்குமானால் நம்முடைய பிரதிநிதிகள் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியிருந்தால், அதற்கும் நாம் தயாராக இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

[5th September 1960

**Sri K. ANBAZHAGAN** : தலைவர் அவர்களே, மத்திய சர்க்காருடைய அதிகாரிகள் தவறான முறைகளிலே ஈடுபடுகிறபொழுது நாம் கவனமாக இருக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அப்படித் தவறான வழியில் ஈடுபடக்கூடிய முறை இங்கு இருக்கிற 344-வது விதியினுடைய இரண்டாவது வகுப்பு "பி" பிரிவில் கண்டபடி "restrictions on the use of the English Language," என்ற முறையில் வரக்கூடிய சூழ்நிலை இருக்கிற காரணத்தினால், அரசியல் சட்டத்தில் அதற்கேற்ற சூழ்நிலை இல்லை என்பதை அறிந்து, அரசியல் சட்டத்தைத் திருத்தினால் தான் இந்தத் தவறு ஏற்படாமல் இருக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்ளுவார்களா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : நான் முன்பே சொன்னேன். அரசியல் சட்டத்திலுள்ள விதிகளை நாம் சரியான முறையில் அமுல் நடத்தினால் இந்தத் தவறுகளெல்லாம் இன்றைக்கு இருக்காது என்று. இதைவிட அரசியல் சட்டத்தில் ரொம்பவும் விளக்கமாகச் சொல்லப் பட்டாலும், அதற்கும் மீறி தவறு நடக்கக் கூடிய சந்தர்ப்பமே ஏற்படாதா என்ன ? படித்த ரொம்ப பெரிய இடங்களிலே கூட அரசியல் சட்டத்தில் இருக்கக்கூடிய விதிகளுக்கும் மீறி நடக்கிறபொழுது, இப்பொழுது நாம் அதைப்பற்றி ஆச்சரியப்படுவதற்கு இல்லை. நாம் முதலிலே முக்கியமாகப் பார்க்கவேண்டியது இன்றைக்கு இருக்கககூடிய நிலைமையிலே—

"It shall be the duty of the Commission to make recommendations to the President as to "restrictions on the use of English language . . ."

ஆங்கிலம் உபயோகப்படுத்துவதில் "ரெஸ்டிரிக்ஷன்" வேண்டியதில்லை என்று ஜனாதிபதி உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

"No restriction shall be placed on the use of the English language." That is the President's Order.

**Sri K. ANBAZHAGAN** : The spirit of the Constitution is against it.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : How is it against? It is the duty of the President to pass an order taking into account the entire circumstances. After taking into account the various recommendations made by various bodies, he has categorically stated that no restriction shall be placed. Under these circumstances, I do not know how it is against the spirit of the Constitution, and if it was against the Constitution, the President should not have passed that order at all.

**Sri K. ANBAZHAGAN** : Articles 343 and 344 more or less encroach upon the position of the English language. They do not liberally allow the English language or its use to the extent Hindi is allowed.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : Ultimately, it depends upon the implementation. I do agree that implementation could be in a slightly different way without violating the provisions contained in the Constitution. I completely agree that it is the responsibility of the persons who now give the various assurances. If those assurances are broken in any way, then of course, we are entitled to take note of it and then consider the various measures necessary in that regard. The point for consideration now is this



5th September 1960] [Sri C. Subramaniam]

Should we assume even now that those assurances that have been given now would be broken? That means, that we doubt the *bona fides* of those who gave those assurances. If those assurances are are not kept up, I am afraid—whatever may be the constitutional provisions—God alone should save the country.

**Sri C. N. ANNADURAI** : Sir. Mention has been made that the President has definitely stated in his directive that no restriction should be placed on the use of English language. I charge the Government with this heinous crime, viz., that already they have restricted the use of the English language in various ways. I would like to know from the Hon. Minister, what is the statutory provision which enables the Indian Parliament being called the Lok Sabha. What is the statutory provision for printing the Money Order Forms in Hindi?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : I do not want to go into the merits of the points raised by the hon. Member. If, as a matter of fact, there has been any violation or restriction which is against the spirit—leave alone the letter—of the assurances already given, I am prepared to look into it and make representations to them. After all, there is nothing in the name, whether it is in English or in Hindi or in Sanskrit.

11-30 a.m.

**Sri C. N. ANNADURAI** : The Hon. Minister has stated that there is nothing in the name, but it happens to be a one-way traffic.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : How could there be a two-way traffic? இப்பொழுது நாம் கவனிக்க வேண்டியது, இந்தச் சட்டவரம்புக்குள்ளே, நமக்குக் கொடுத்திருக்கும் உறுதிமொழியை நிறைவேற்ற முடியுமா என்று பார்க்கிறோம். பின்னால் முடியவில்லை என்று சொன்னால், அப்பொழுது நாம் கவனிக்க வேண்டியது என்ன, என்னென்ன நடவடிக்கைகள், கூட்டாகவும், தனியாகவும் எடுக்கவேண்டும் என்பதெல்லாம் அப்பொழுது எழும், இப்பொழுது இல்லை. நாம் இப்பொழுது இந்த வாக்குறுதியை ஏற்றுக்கொள்வோம், அதை நம்புவோம். வாக்குறுதிக்கு ஏற்றபடி தான் நடவடிக்கைகள் எடுப்பார்கள், அதைப் புறக்கணிக்கும் முறையில் எடுக்கப்படமாட்டாது என்ற அந்த நம்பிக்கையில் இருப்போம். அப்படியில்லையென்றால், அப்பொழுது அதைப்பற்றித் திரும்பவும் நாம் உட்கார்ந்து யோசித்துப் பேசலாம். அதைத் தான் நான் திரும்பத் திரும்பச் சொல்லுகிறேன். இன்றைக்கு இருக்கும் நிலையில் பிரசிடெண்டு ஆர்டருக்கும் பிறகு இன்றைக்குக் கொடுத்திருக்கும் உறுதிமொழி எப்படி நிறைவேற்றப்படுகிறது என்பதைத்தான் பார்க்க வேண்டும். இப்பொழுது நமக்கு ஏற்பட்டிருக்கிறது அந்த நம்பிக்கைதான். அந்த உறுதிமொழி காப்பாற்றப்படுகிறதா, இல்லையா என்று பின்னால் தான் சொல்ல முடியும். ஆகவே, இப்பொழுது இந்த உறுதிமொழியை ஏற்றுக் கொண்டு, பின்னால் இதற்கு மாறாக நடவடிக்கைகள் இருந்தால், அப்பொழுது தான் யோசிக்க வேண்டிய சட்டம் வரும். இப்பொழுதே அதை அவநம்பிக்கையுடன் அணுகுவது சரியில்லை. உகந்ததல்ல, என்பது என் கருத்து.

இன்னொரு கருத்தையும்—வேறொரு இடத்திலும் சொன்னேன்—திராவிட முன்னேற்றக் கழகத்திற்காகச் சொல்லுகிறேன்; அவர்கள் மொழிப்பிரச்னையில் பங்குகொள்வதை வரவேற்கிறேன். அவர்கள் பங்கு

[Sri N. K. Palanisami] [5th September 1960

வருகிறார்கள். விஞ்ஞான புஸ்தகங்களைக்கூட மொழிபெயர்த்துக்கொண்டு வருகிறார்கள். அதற்கு அதிக நாட்களாகும் என்று தோன்றுகிறது. அது மட்டுமல்ல. இதற்கு ஏராளமான செலவும் ஆகும். அது மாகாண சர்க்காருடைய பொறுப்பாக இருந்தாலும் அதற்கு வேண்டிய செலவை மத்திய சர்க்காரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்தச் சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த அந்த மாகாணத்தில் அந்த அந்த பிரதேச மொழியில் ஆட்சியை நடத்த வேண்டும் என்று சொல்லும் பொறுப்பு அந்த அந்த மாகாணத்தைச் சேர்ந்ததாக இருந்தாலும் அதற்கு ஆகும் செலவை மத்திய சர்க்காரும் ஓரளவு ஏற்றுக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. ஆகவே இப்படியெல்லாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டால் ஆட்சி மொழி அமுலுக்கு வருமேயொழிய இல்லாவிட்டால் அது சட்டத்தில் தான் இருக்குமேயொழிய நடைமுறையில் வருவதற்கு இடம் இருக்காது.

இன்றைக்கு ஹிந்தி பேசக்கூடிய பகுதியிலிருக்கக்கூடிய மக்கள் அங்கே இருக்கக்கூடிய ஹிந்தி மொழியைத் தவிர மற்ற மொழி ஒன்றையும் அவர்கள் கட்டாய பாடமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மொழிக் கமிஷன் சொல்லி இருக்கிறது. அந்த முறையில் நிறைவேற்றி இருந்தால் எந்த விதமான குழப்பமும் ஏற்பட்டிருக்காது. அது இல்லாமல் இருந்து ஹிந்தி பேசப்படாத பகுதிகளில் இருக்கக்கூடிய மக்கள் மட்டும் தங்களுடைய பிரதேச பாஷையைத் தவிர இதர மொழி ஒன்றையும் கட்டாயமாகக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று சொன்னதால் தான் தங்களை ஏதோ கீழ் தளத்தில் வைத்திருப்பதாகவும் ஒரு பீதி ஏற்பட்டிருக்கிறது. அதாவது ஹிந்தி பேசப்படாதவர்கள் கீழ்த்தரமாக எண்ணக்கூடிய அளவில் ஒருவிதமான பீதி ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு பீதியையும் எண்ணத்தையும் போக்க வேண்டும். ஆகவே ஹிந்தி பேசக்கூடிய பகுதியில் உள்ள மக்களும் ஹிந்தியைத் தவிர இதர மொழி ஒன்றையும் கட்டாயமாக படிக்க வேண்டும் என்ற ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் இப்பொழுதுள்ள குழப்பம் ஏற்படாது.

ஆங்கிலத்தினுடைய நிலைமை என்ன என்ற முடிவுக்கு இன்னும் நம்மால் வர முடியவில்லை. இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில் கண்டிப்பாக இந்தக் குழப்பம் நீங்காது. சுமார் 350 வருஷ காலமாக ஆங்கிலம் படித்திருந்தும் கூட எந்த அளவுக்கு மக்கள் அதைப் படித்திருக்கிறார்கள் என்பது நம் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அது இருந்த போது எந்த அளவுக்கு நம்முடைய பாஷை வளர்ந்திருக்கிறது என்பதும் நமக்கு நன்றாகத் தெரியும். சுமார் 350 வருஷ காலமாக ஆங்கிலம் நமது ஆட்சி மொழியாக இருந்த காரணமாக இப்படிப்பட்ட நிலைமை நமக்கு ஏற்பட்டிருக்கிறது. அதைப்பற்றி சர்க்காருடைய மொழிக் கமிஷன் என்ன சொல்லி இருக்கிறது என்றால்—

"படிக்கும் பிள்ளைகளோ, அல்லது அவர்களின் காப்பாளர்களோ அம் மொழியைக் கற்க விரும்பா விட்டால், ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாக வைக்க வேண்டியதில்லை என ஏற்பாடு செய்ய வேண்டும். ஆங்கிலம் படிக்க விரும்பாத பிள்ளைகளின் விஷயத்தில், விருப்பப் பாடமாக ஆங்கிலத்தைக் கற்றுத் தருகிற பள்ளிகளில் மற்றொரு மொழியைக் கற்பிக்க வேறு ஏற்பாடு செய்திருக்க வேண்டும். ஆங்கிலத்தை விருப்பப் பாடமாகப் படிக்க விரும்பாத பிள்ளைகளுக்கு அவர்களுடைய தாய்மொழியில் சிறப்புப் படிப்பு கற்றுத் தரவும் ஏற்பாடு செய்திருக்க வேண்டும்"

என்று சொல்லி இருக்கிறது. சர்க்கார் கொள்கை என்ன ?—

"எனினும் ஆங்கிலத்தை விருப்பப் பாடமென்ற முறையில் படிக்க ஏற்பாடு செய்திருப்பது போதுமானதல்ல என்று இந்த அரசினர் உறுதியாக நம்புகிறார்கள். நாட்டு நலனை முன்னிட்டு எல்லா மாநிலங்களிலும் ஆங்கிலம் கட்டாய பாடமாக இருக்க வேண்டும். அது கட்டாய பாடமாக இருப்பது மட்டுமன்றி துவக்க கல்வி நிலையிலே கூட இதைக் கற்பிக்க வேண்டுமென்றும் அரசினர் கருதுகின்றனர்."



5th September 1960] [Sri N. K. Palanisami]

ஆகவே மொழிக் கமிஷன் ஆங்கிலத்தை கட்டாய பாடமாக வைக்கக்கூடாது என்று சொல்லி இருக்கிறது. ஆனால் நம் சர்க்கார் அது கட்டாய பாடமாக இருக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, ஹிந்தி பேசக்கூடிய பகுதிகளில் இரண்டு மொழிகள் பயின்றால் போதும். ஆனால் நம் மாகாணத்தில் பிரதேச மொழி அவசியமாகப் படித்தாக வேண்டும். அது மட்டுமல்ல. மூன்று மொழிகள் படிக்க வேண்டியதாக இருக்கிறது. இன்று தமிழ் மொழி ஆட்சி மொழியாக இருக்கிறது. எல்லாக் கல்லூரிகளிலும் தமிழிலேயே பாடங்களைக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்ற நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. அப்படி இருக்கும்போது நாலாவது ஐந்தாவது பாரத்திலிருந்து ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்வதில் என்ன அர்த்தம் என்பது தெரியவில்லை. ஒருக்கால் இப்படிச் சொல்வதால் படிப்படியாக ஆங்கிலமே மீடியம் அப் இன்ஸ்ட்ரக்ஷனாக வந்துவிடுமோ என்று கூட தோன்றுகிறது. அது தான் சர்க்காருடைய உத்தேசமா ? கல்லூரிகளில் தமிழில் பாடங்களைச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி விட்டு ஆங்கிலத்தைக் கொண்டு வந்து அதில் பாடங்களை வைப்பதன் அர்த்தம் என்ன என்பது தெரியவில்லை. ஏற்கெனவே ஹைஸ்கூல்களில் தமிழில் படித்துவிட்டு கல்லூரிகளில் ஆங்கிலத்தில் படிக்க வேண்டும் என்று சொல்லும்போது குழந்தைகளுக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது என்பது நமக்கு எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அந்த நிலைமையில் அவர்களால் கல்லூரிகளில் ஆங்கிலத்தில் நன்றாகப் படிக்கமுடியவில்லை. அது மட்டுமல்ல. கோயம்பத்தூரில் இப்பொழுது ஒரு பைலட் ஸ்கீமை ஆரம்பித்திருக்கிறார்கள், அங்குள்ள கல்லூரியில் தமிழ் மொழியில் பாடங்களை நடத்துவது என்று. அதில் படிக்கக்கூடிய மாணவர்கள் பாஸ் பண்ணிய பிறகு அவர்கள் மேல் படிப்பு படிக்க வேண்டுமானால் அவர்கள் ப்ரொபெஷனல் காலேஜில் படிக்க வேண்டிய வசதி செய்து கொடுக்கப்படுமா ? அந்த அந்த முறையில் அதற்கான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறதா? அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறதா ? எல்லா கல்லூரிகளிலும் தமிழ் போதனா மொழியாக இருக்க வேண்டும் என்று அந்தக் கொள்கையை ஒத்துக்கொண்டு அந்த அளவில் அங்கு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதன் பிறகு மேல் படிப்புக்கு வசதி செய்யாவிட்டால் குழப்பம்தான் ஏற்படும். 1948-ம் ஆண்டில் நம்முடைய வைஸ் சான்சலர்கள் எல்லோரும் ஒன்று கூடி இன்னும் ஐந்து வருஷங்களில் எல்லாக் கல்லூரிகளிலும் ஹிந்தி மொழியை நம் மாகாணத்தில் கொண்டு வருவதற்கு ஒத்துக் கொண்டார்கள். ஆனால் கொள்கை அளவில் அதை ஒத்துக்கொண்டால் அதில் இடைஞ்சல் ஏற்படுவதற்கு இடம் இருக்கிறது. நாம் ஆட்சி மொழியை தமிழ் என்று சொல்லி விட்டு அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்போது ஏதாவது இடைஞ்சல் இருந்தால் தவிர்க்க, அந்தத் தடங்கலை நீக்க சட்டத்தைத் திருத்த சர்க்கார் தயங்கக்கூடாது. என் தயங்க வேண்டும் ? அரசியல் கொள்கைக்குச் சம்பந்தமாகத்தான் சட்டம் செய்ய வேண்டும் என்று இருக்கிறது. அந்த அளவில் அந்தச் சட்டத்தைத் திருத்தி அமைத்துக் கொள்ளலாம். ஒரு பக்கத்தில் ஆங்கிலத்தைக் கொண்டு வந்து மற்றொரு பக்கத்தில் தமிழ் வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்யாமல் இருந்தால் அது சரியல்ல. ஆனால் இப்பொழுது சர்க்கார் செய்து வரக்கூடியதைப் பார்த்தால் கொள்கை அளவில் தமிழைக் கொண்டு வருகிறோம் என்று சொல்லிவிட்டு ஆங்கிலத்தைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்கள் என்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. ட்ரான்சிஷனல் பீரியடில் 1965-க்கு பிறகு கூட யூனியன் ஆட்சி மொழி ஆங்கிலமாக இருக்கும் என்று சொல்லி விட்டு இந்த மாகாணத்திற்கு தமிழ் தான் ஆட்சி மொழியாக இருக்கும் என்றும் சொல்லி இருக்கிறோம். அப்படி சொல்லிய பிறகு யூனியன் சர்வீஸ் கமிஷன் பரீட்சைகளை எந்த மொழியில் எழுதப்போகிறார்கள் என்பதுதான் தெரியவில்லை. யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரீட்சையை எந்த மொழியில் எழுத முடியும்? ஹிந்தி படித்தவர்களைவிட நாம் முன்னேறி இருப்போமா ? அவர்களுக்கு இருக்கக்கூடிய நிலைமை நமக்கு இருக்குமா ? என்பதை நாம் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும். ஆகவே தான் நான் சொல்லுகிறேன், 1965-க்குப் பிறகும் ஆங்கிலம் தொடர்ந்து இருக்க வேண்டும். யூனியன் சர்வீஸ்

[Sri N. K. Palanisami] [5th September 1960

கமிஷன் பரீட்சைகள் எல்லாம் அந்த அந்த பிரதேச மொழிகளில்தான் எழுதப்பட வேண்டும். அப்படி இருந்தால்தான் நியாயம், உண்மையான நியாயமான நிலைமை ஏற்படும்.

இன்னும் மத்திய சர்க்காருடைய உத்தியோகங்களுக்கு சிப்பந்திகளைத் தேர்ந்தெடுக்கும்போது அந்த அந்த மாகாணத்திலுள்ள ஜனத்தொகை அடிப்படையில் அதற்கு கோட்டா ஒதுக்கி அந்த அளவில் சிப்பந்திகளை தேர்ந்தெடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அதை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளும்படி செய்ய வேண்டும். ஒவ்வொரு மாகாணத்திலும் குறைந்த அளவில் தான் இருக்கிறார்கள் என்றது இல்லாமல் அந்த அந்த மாகாண ஜனத்தொகை அடிப்படையில் எவ்வளவு பேர்கள் தேர்ந்தெடுக்க வேண்டுமோ அந்த அளவில் தேர்ந்தெடுத்து வேலை கொடுக்க வேண்டும். அந்த நிலைமையை ஏற்படுத்த வேண்டும். அம்மாதிரி செய்தால் தான் எந்த மாதிரியான ஆபத்தும் பயமும் ஏற்படாது.

இன்றைக்கு ஸ்டேட் சர்வீஸ் கமிஷனை எடுத்துக்கொண்டால் அந்த பரிட்சையெல்லாம் தமிழில் நடந்தால் என்ன, ஏன் தமிழில் எழுத வசதி செய்து தரக்கூடாது, என்று கேட்க ஆசைப்படுகிறேன். அடுத்தபடியாக கோர்ட்டுகளை எடுத்துக்கொண்டால், இன்னும் கீழ்க் கோர்ட்டுகளை எடுத்துக் கொண்டாலும் நடவடிக்கைகள் எல்லாம் ஆங்கிலத்தில்தான் நடைபெறுகின்றன. அப்படி இல்லாமல் அந்த அந்த பிரதேச மொழியில் தான் நடத்த வேண்டும். அதற்கு அதிகப்படியான செலவு ஆகலாம். அந்தச் செலவை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதே மாதிரி ஜட்ஜுமெண்ட்கள் எல்லாம் தமிழில் எழுதப்பட வேண்டும். அதே சமயத்தில் ஹிந்தியில் இருப்பவைகளை யெல்லாம் ட்ரான்ஸ்லேட் செய்வதற்கு எல்லா வசதிகளையும் செய்து தரவேண்டும். இன்னும் சுப்ரீம் கோர்ட்டை எடுத்துக்கொண்டாலும் ஆங்கிலம், இந்தி என்ற இரண்டு மொழிகள் இருப்பது மாத்திரம் அல்லாமல் எல்லா மொழிகளிலும் மொழி பெயர்ப்பதற்கு வசதி செய்து தரப்படவேண்டும். அப்போதுதான் மொழி விஷயத்தில் ஜனங்களுக்கு இருக்கக்கூடிய பயம் நீங்கி ஒரு ஐக்கியத்திற்கு வர முடியும். ஆகவே இம்மாதிரி முறையில் சர்க்கார் கொண்டு வந்திருக்கக்கூடிய கொள்கையானது எதிர்க்கட்சிக்காரர்களும் சேர்ந்து ஆதரிக்கக் கூடியதாக இருக்கிறது என்பதனால் இதை நான் ஆதரிக்கின்றேன்.

* **Sri V. K. KRISHNAMURTHY** : கனம் தலைவரவர்களே, இந்தியாவின் மொழிப் பிரச்னை என்ற தலைப்பில் சென்னை அரசினர் விடுத்துள்ள கொள்கையை கூர்ந்தாராய்ந்த ஞான்று தமிழ் மொழியின் வரலாற்றை அடிப்படையாகக்கொண்டு மொழிப் பிரச்னையை நல்ல முறையிலாராய்ந்திருக்கிறார்கள்.

மொழிவழி தமிழகம் இயங்கத் தொடங்கிய பின்னர் தாய்மொழி—தாய் மொழிக்கல்வி—தாய்மொழி இலக்கியம் மனித நாகரிகத்தின் அடிப்படை என்றுணர்ந்து தமிழ் மொழியைக் கல்வி மொழியாக்கி—அரசியல் மொழியாக்கி—அலுவலக மொழியாக்கி—சட்ட மன்ற மொழியாக்கி—கல்லூரிகளில் பாட மொழியாக்கி—தமிழை உயர்த்தி உன்னத நிலையில் வீற்றிருக்க வைத்துள்ள பெருமைக்கு பொதுவாக அமைச்சரவைக்கும் சிறப்பாக கல்வி அமைச்சருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தமிழ் மொழி சிறந்தது—உயர்ந்தது—என்றாலும் உயர்ந்த நிலையை இயல்பாகவே அடையாத நிலைக்குரிய காரணம் என்ன ?

தமிழக வரலாற்றிலும்கூட பல மொழிகள் தமிழகத்தில் அரசோச்சின என்ற உண்மையை நம்மாநில மொழிப்பிரச்சனை அறிக்கை கரவாமல்—மூடி மறைக்காமல் விளக்கியுள்ளது.

பாலி மொழி ஆட்சிக்குப் பின்னர், சமஸ்கிருத மொழி ஆட்சிக்குப் பின்னர், பெர்சிய மொழி ஆட்சிக்குப் பின்னர், ஆங்கில மொழி அரசோச்சி வருகிறது. தொடர்ந்து நான்கு மொழிகள் அரசோச்சிய காலத்து சமஸ்கிருதத்தின் தொடர்பும்—துணையும்தான் தமிழை வளர்த்ததென்று புரட்டுவாதத்தைக் கூறாமலில்லை. பிறமொழியின் உதவியினால்தான், பிறமொழியின் ஆதரவினால்தான் வளர்ச்சியடைய முடியும்.



5th September 1960] [Sri V. K. Krishnamurthy]

வளர்ச்சியடைந்திருக்கிறது என்று கூறாமலில்லை. வடமொழி வரலாற்றையும், தமிழ்மொழி வரலாற்றையும் நன்கு ஆராய்ந்து பார்த்தால் உண்மை நன்கு விளங்கும். இருமொழிகளுக்கும் தொடர்பில்லை என்று தானாகவே நன்கு தெரியும். வடமொழி முக்கூறு வேதகால மொழி—பாஷா மொழி சமஸ்கிருத மொழி. வேதகால மொழிக்கும், பாஷா மொழிக்கும் தனித் தனி இலக்கணங்கள். ஆனால் சமஸ்கிருதத்திற்கோ இலக்கணமே இல்லை. பாஷா மொழியில் படைத்த பாணினீய இலக்கணத்தை சமஸ்கிருதம் ஏற்றுக்கொண்டது. ஆதலால் சமஸ்கிருதத்திற்கே இலக்கணமில்லை : ஆனால் தொல்காப்பியம் என்ற இலக்கணத்தை முதல் சங்க காலமுதல் தமிழ் மொழி பெற்றிருக்க, சமஸ்கிருதத்தால் தமிழ் வளர்ந்தது என்பது ஏற்க முடியாத ஒன்று. என்றாலும் தமிழ் மொழியின் மாண்பை மாய்த்தொழிக்க சதிகள் பல நடந்து முயற்சிகள் பல தொடர்ந்ததெனினும் தமிழ் தனி இலக்கணம், இலக்கியம், சமயம், வரலாறு பெற்று வாழ்ந்து வருவதை வரலாறு விளக்குகிறதென்பதில் ஐயமில்லை. இருமொழிக்கு ஓரிலக்கணமென்று ஈசான தேசிகர் இலக்கணக் கொத்து வரைந்து தமிழோடு கலந்தனர். தனித் தமிழ் நூலுண்டோ என்று அறைகூவி தமிழைத் தாக்கிய கொடுமையைக் கூறாமலிருக்கமுடியவில்லை.

தமிழ் மொழிக்கேற்பட்ட இவ்வெதிர்ப்புகளை எதிர்த்து தமிழ் வேறு—சமஸ்கிருதம் வேறு என்று மாதவச் சிவஞான யோகிகள் விளக்கந் தந்தனர். தமிழகத்தில் தமிழ் வாழ நிகழ்ந்த எதிர்ப்புகள் வளர்ந்த வண்ணமாயிருந்தன. 1939-ல் இந்தி புகுத்தப்பட்டபோது மக்களிடையே அனலேற்பட்டது ; இந்தி மொழி சமஸ்கிருதத்தின் கிளைமொழி என்றும், இந்தி பயின்றால் சமஸ்கிருதம் எளிதில் பயில்வார்களென்றும் பின்னர் ஆரியதர்மத்தைப் பரப்பமுயலும் என்ற கருத்தைக் கூறியதால் தமிழ் நாட்டில் பெரிய கிளர்ச்சி ஏற்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஆனால் இன்றோ நம் அமைச்சர் அவை ஏனைய மொழிகளும் வாழ—பன்மொழி நிரம்பிய நாடாகவே இந்தியா இருக்க வேண்டுமென்றும் எம்மொழி அழிவுக்கும் இடந்தராதவாறு தெளிவையும் விளக்கத்தையும் அனைத்திந்தியாவிற்குத் தந்த பெருமையைப் பாராட்டுகின்றேன். இந்தி தான் அரசோச்சும் என்ற கொள்கையைத் தகர்த்தெறிந்து அந்தந்த மாநிலங்களிலுள்ள மொழிகள் அந்தந்த மாநிலங்களில் அரசோச்சும் என்று வற்புறுத்தி ஏனைய மொழிகளை ஏமமுறவைத்த பெருமை நம் மாநில கல்வி அமைச்சருக்குண்டு. தேசிய மொழிவேறு, அகில இந்திய மொழிவேறு என்று விளக்கந்தந்து இந்தி அகில இந்திய மொழி என்றும் இந்தியோடு ஆங்கிலமும் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்றும், மத்திய அரசாங்கத்துக்கு சென்னை அரசாங்கம் அறிவித்தமை மகிழ்ச்சிக்குரியதே.

ஒரு மொழி பிறமொழிகளின்மீது ஆட்சி செலுத்தாமல் ஏனைய மொழிகளும், பண்பும், நாகரீகமும், இனமும் வளர நம் அமைச்சர் அவை நல்ல கொள்கையை வகுத்தளித்தமை தமிழகத்திற்கே நிலைத்த பெருமை. அதே நேரத்தில் தமிழ் மொழி வளர்ச்சியடைய வேண்டுமென்றால் என்னென்ன செய்தல் வேண்டுமென்ற ஆராய்ச்சி பிறக்கிறபோது பிறமொழி கலந்தால்தான் தமிழ் வளரும், இல்லாவிட்டால் தமிழ் வாழாது என்கின்ற கருத்து மேலோங்கி வருகிறது. தமிழ் மொழியின் வாழ்வும் தாழ்வும் ஒரு தலைமுறையைச் சார்ந்ததில்லை. ஆயிரமாயிரமாண்டுகளாகத் தமிழ்மொழி நின்று நிலவிவந்திருக்கிறது. தமிழக வரலாற்றிலே ஏனைய மொழிகள் அரசியல் அதிகாரம் பெற்று—சமய அதிகாரம் பெற்று—மொழி அதிகாரம் பெற்று—ஓங்கி நின்ற காலத்திலும்கூட தமிழ் பிறமொழி ஆதிக்கத்தால்—பிற இனத்தர் ஆதிக்கத்தால் அழிந்தொழிந்து போகாமல் தன்னிலையில் தனித்து நின்று வாழ்ந்திருக்கிறது என்பதைப் பார்க்கிறபொழுது, பிற மொழி கலப்பில்லை என்றால் தமிழ்வாழாது என்ற கருத்துக்கே இடம் கிடையாது என்பதை முடிந்த முடியாக நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். தனித்து நின்று வாழ்ந்ததன் காரணமாகத்தான்—அந்தத் தன்மை அதன் உயிர்ப்பண்பாக நின்ற காரணத்

[Sri V. K. Krishnamurthy] [5th September 1960

திலுல் தான் காலம் கடந்த மொழியாக அது இன்றும் நின்று நிலவுகிறது. இந்த முறையை ஆராய்ந்து பார்க்கிறபொழுது அதனுடைய தனித் தன்மையை இழித்துரைக்கும் முயற்சி அந்தக் காலத்திலும் இல்லாமலில்லை. முருகனை ஆற்றுப்படுத்திய நக்கீரர் காலத்தில் "ஆரியம் நன்று—தமிழ் தீது" என்று சொல்லப்பட்டதே. இன்று தமிழ்மொழியை ஆட்சி மொழியாகவும், கல்லூரி மொழியாகவும், அரசியல் மொழியாகவும் உயர்த்திய புரவலர் திரு. சி. சுப்பிரமணியம் காலத்திலும் ஆங்கிலம் நன்று என்றுதான் கூறப்படுகிறது. பிறமொழி கலப்பால் தமிழ் வளராது என்றதற்கு ஆன்ற சான்றைக்கூறுகின்றேன். தமிழ் மொழிவளர்ச்சி—இலக்கண வளர்ச்சி—இலக்கிய வளர்ச்சி பிறமொழிக் கலப்பால் தாழ்வுறும்—அழிவுறும்—

சங்க காலத்தில் 500 சொற்களுக்கு 2 வடமொழிச் சொற்கள்.
பட்டினப்பாலையில் 100 சொற்களுக்கு 2 வடமொழிச் சொற்கள்.
திருவாசகத்தில் 100 சொற்களுக்கு 7 வடமொழிச் சொற்கள்.
திருக்கோவை 300 சொற்களுக்கு 1 வடமொழிச் சொல்.
மணிமேகலையில் 100 சொற்களுக்கு 5 வடமொழிச் சொற்கள்.
தேவார காலத்தில் 100 சொற்களுக்கு 10 வடமொழிச் சொற்கள்.

கி.பி. 10-ம் நூற்றாண்டில் 100 சொற்களுக்கு 30 சதம், 40 சதம், 50 சதம், 60 சதம் புகுந்தன. ஆதலால் சிலப்பதிகாரம் பிறந்த சேரநாடு கண்ணகி வீடுபேறெய்திய சேரநாடு—வடவர் மீது படை எடுத்த சேரநாடு—இன்று தமிழ் நாடாக இல்லாமல் மலையாள நாடாக இருப்பதே காரணம்—தமிழ் மறைந்து மலையாளமொழி மலர்ந்ததின் காரணம் பிறமொழி நுழைவே. ஓர் இலட்சம் தமிழ்ப் பாடல்கள் பாடிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஊழியும்—மறைமலை அடிகளின் தனித்தமிழ் ஊழியும் தமிழர்கட்கு வழிகாட்டிகளாய் விளங்குகின்றன. "கடிசொல் இல்லை காலத்துப்படினே" என்ற தொல்காப்பியர் வாக்கு கலைச்சொற்களை (மூலசொற்களை) ஏற்று மொழி வளர்ப்போம்.

கூட்டு இந்தியாவா அல்லது வெட்டு இந்தியாவா? கூட்டு இந்தியாவிற்கு ஒரு அனைத்திந்திய மொழி இன்றியமையாதது. அது இந்தி. இதை விருப்பப்பாடமாக வைத்து யாவரும் இயல்பாகப் படிக்க வழி வகை செய்வதில் கீழ்க்கண்ட முறையைக் கையாளுவோமாக. இந்தித் தேர்வில் "தகுதி பெறுவதற்குரிய" வினாத்தாளாக இருக்கவேண்டுமே யன்றி "ஒரு போதும்" தேர்வு எழுதுபவர்களுள் போட்டி உணர்வை ஏற்படுத்தக்கூடியதாக அமையக் கூடாது. வெட்டு இந்தியாவுக்குரியவர்களுக்கு பொதுமொழி என்ற பேச்சே இல்லை.

அரசினரின் மொழிக்கொள்கையை முழுதும் ஆதரித்துப் பாராட்டு
2-00 noon. கிறேன்.

**Sri K. R. NALLASIVAM:** கனம் மன்றத் தலைவர் அவர்களே, முதலிலே மொழிப்பிரச்சனையில் காந்திஜி அவர்கள் என்ன சொல்லியிருக்கிறாரோ அதைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்லிவிட்டு, அதற்குப் பின் நம் முன்னால் இருக்கும் விஷயத்தைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன் இன்றைக்கு ஆட்சியாளர்கள் தங்களுடைய ஒவ்வொரு நடைமுறைப்பற்றியும் வெளியே சொல்லுகிற தத்துவங்கள் அதற்கு ஆதாரங்கள் காட்டும்போது காந்திஜீ அவர்களுடைய பிரசங்கத்திலிருந்து, காந்திஜீ அவர்களுடைய நடைமுறையிலே இருந்து எடுத்துக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் மொழித் துறையைப் பொறுத்த வரையில் காந்திஜீ அவர்கள் வழியை முழுக்க முழுக்க இன்றைய ஆட்சியாளர் கிட்ட நெருங்குவதே கிடையாது, புறக்கணித்து வருகிறார்கள். ஆட்சேபித்திருக்கிறார்கள், கொஞ்சம்கூட கவலைப்படவில்லை.

பிராந்திய மொழிதான் ஆட்சிமொழியாக இருக்க வேண்டுமென்று ஒவ்வொரு இடத்திலும் அவர்கள் கூறுகிறார்கள். அடுத்தபடியாக பொது மொழி என்ற பிரச்னை வருமானால் அதற்கும் காந்திஜீ ஒரு வழி கூறுகிறார்கள். அதையும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அந்தந்த பிராந்தியத்தில் அந்தந்த மாநில மொழியை உடனடியாக ஆட்சிமொழியாக்கி விட்டால் மாநில மொழிகள் ஒழுங்காக பயன்பெறக்கூடிய நிலை விரைவிலே உருவாகும். அதன் மூலம் அந்தந்த மாநிலங்களிலும் உள்ள மொழிகள் வளர்ச்சியுறும்போது நிச்சயமாக பொதுமொழி தன்போக்கிலே உருவாகும் என்று தெளிவாக கூறியிருக்கிறார்கள்.



5th September 1960] [Sri K. R. Nallasivam]

(Mr. Speaker in the Chair.)

ஆட்சிமொழி கமிஷன் தங்களுடைய ரிபோர்ட்டிலே இதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே பார்க்கும்போது, மொழிப்பிரச்சனையிலே நம் கவனம் வேறுபக்கமாக திருப்பப்பட்டிருக்கிறதே தவிர, இந்த ராஜ்யத்தில் தமிழ் எந்த அளவில் இருக்கிறது, அதை உருவாக்க இந்த சர்க்கார் எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கை தீவிரத் தன்மையாக இருக்கிறதா, அதைக் காப்பாற்றக் கூடியதாக இருக்கிறதா என்பதைப் பார்த்தால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஒரே ஒரு கல்லூரீயில், கோவையில் தமிழை போதனு மொழியாக ஆக்க முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சுதந்திரம் கிடைத்த 13 ஆண்டுகளுக்குப் பின் தமிழையோ அல்லது பொது மொழியாகிய இந்தியையோ வளர்ப்பதற்கு எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கை மிக மிகக் குறைவு. காந்திஜீ அவர்கள் குறிப்பிட்டதுபோல் பிராந்தியமொழி வளருமானால், தன் போக்கிலே பொதுமொழி நிச்சயமாக உருவாகிவிடும். அந்த அடிப்படையிலே தான் தாய் மொழியிலே எல்லாவற்றையும் நடத்தும் முறையில் 13 ஆண்டுகளாக இன்றைய ஆட்சியாளர் எந்த அளவிற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்தால் சந்தேகக் கண்ணோட்டத்தோடுதான் பார்ப்பதாக இருக்கிறது. அறிவாளர்கள் என்று சொல்லக் கூடிய மற்றும் ஒரு சாரார் இருக்கிறார்களே அவர்களுக்கு ஆங்கிலம் போய்விட்டால் எல்லாம் அழிந்துவிடும் என்ற பயம் இருக்கிறது. ஆனால் உண்மையிலே அந்த பயம் ஆட்சியாளர்களிடத்தில்தான் இருக்கிறதென்று தெளிவாக நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். நாளாவட்டத்திலே, பிராந்திய மொழி அல்லது நாட்டிலே இருக்கும் மொழிகள், வளர்ச்சி பெற்று ஆங்கிலம் இருக்கும் இடத்தில் இருக்கவேண்டுமென்று ஒவ்வொருவரும் கூறுகிறார்கள். நான் ஒரே ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். நம்முடைய பிராந்திய மொழி என்றைக்குத் தான் வளர்ச்சி உறும் என்று நீங்கள் நம்புகிறீர்கள். அதற்கும் காலகட்டம் உண்டு. ஆட்சியாளர்களுக்கும், மற்றும் அந்தக் கொள்கையை எதிர்க்கக் கூடியவர்களுக்கும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். பிராந்திய மொழி சகல இடங்களிலும் பொறுப்பிலே வந்தால்தான் நிச்சயமாக வேகமாக அது விரைவிலே உலகில் மற்ற மொழிகள் வளர்ச்சி அடைந்திருக்கும் அளவிற்கு வளர்ச்சி அடைய முடியும். தமிழுக்குப் போதுமான சக்தி கிடையாது என்று சொல்லுகிற வரையில் அதை ஆட்சிபீடத்தில் ஏற்றுவிக்காத வரையில் அது எப்படி வளர முடியும்? தந்தை தன்னுடைய மகன் வளர்ந்துவிட்ட பிறகு, பொறுப்பை அது விவசாயத் துறையாகயிருந்தாலும் சரி, வியாபாரத் துறையாகயிருந்தாலும் சரி ஒப்படைக்காமல் "நீ சிறு பிள்ளையாக இருக்கிறாய். நீ வலுவில்லாமல் இருக்கிறாய், போதிய சக்தியில்லாதவனாக இருக்கிறாய்" என்று சொல்லி பொறுப்பைக் கொடுக்காமல் இருப்பதுபோல் இன்றைய ஆட்சியாளர்கள் தமிழ் மொழிக்கு சக்தி இருக்கிறதா என்பதிலே சந்தேகம் இருக்குமானால் எப்படி அதை நிறைவேற்ற முடியும்? எப்படியாவது பொறுப்பை ஒப்படைத்து விட்டால் முதலில் சங்கடங்கள் ஏற்படத் தான் செய்யும். தமிழ் பிராந்திய மொழியாக பூராவும் ஒப்புக்கொண்டு விட்டால் இரண்டொரு ஆண்டுகளுக்கு தத்தித் தடுமாறும். பிறகு 4, 5 ஆண்டுகளுக்குள் அது தன்னுடைய இடத்தைப் பிடித்து விடும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

மொழி விஷயத்தில் எத்தனையோ அரசியல் கட்சிகள் அவர்கள் போக்கிலே போகிறார்கள். ஆங்கிலம் இல்லாவிட்டால் என்ன ஆகும் என்று சிலருக்குப் பயம் ஏற்படுகிறது. அரசாங்கத்திற்கும் இந்த பயம் இருக்கிறது.

[Sri K. R. Nallasivam] [5th September 1960

இந்த மொழி விஷயத்தில் குழப்பங்களுக்கெல்லாம் காரணம் இன்றைய ஆட்சியாளர் கொள்கைதான். அவர்கள் தெளிவாக அறிக்கைப்படி கொள்கையை ஏற்று மொழிப் பிரச்னையை எடுத்துக்கொண்டிருந்தால், நிச்சயமாக வங்காளத்திலே, அஸ்ஸாமிலே, ஏன் தமிழ் நாட்டிலேகூட கிளர்ச்சியைப் பார்த்திருக்க முடியாது. அரசாங்கத் தரப்பினரிடத்தில் ஏற்பட்டிருக்கும் சந்தேகங்கள், குழப்பங்கள்தான் அதற்குக் காரணம். எதிர்க்கட்சினர்களைப்பார்த்து அவர்கள் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லலாம். ஆனால் அரசாங்கத்தரப்பிலேதான் மொழி விஷயத்தில் பலவீனமாகவும், கோழைத்தனமாகவும், பேடித்தனமாகவும் கொள்கை கையாளப்படுகிற வரையில் நிச்சயமாக மொழிப் பிரச்சனை தீரப்போவதில்லை. சர்க்காருடைய கொள்கையைத் தெளிவாக்கிக் கொள்ளவேண்டும்.

**THE HON. SRI P. KAKKAN:** "பேடித்தனம்" என்ற வார்த்தையை கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னது அழகாக இல்லை. இம்மாதிரி சொல்வது சரிதானா என்று அறிய விரும்புகிறேன்.

**MR. SPEAKER:** "பேடித்தனம்" என்ற வார்த்தையை இந்தச் சபையில் உபயோகப்படுத்தக்கூடாது. கனம் அங்கத்தினர் இதை வாபஸ் பெறவேண்டும்.

**SRI K. R. NALLASIVAM:** நான் மேற்படி வார்த்தையை வாபஸ் பெறுகிறேன்.

மொழித்துறையில், பொதுவாக ஒவ்வொன்றாக வருகிற அறிக்கைகளைப் பார்த்தால் சர்க்காரின் தெளிவற்ற போக்கைத் தெரிந்து கொள்ள முடியும். மத்திய அரசாங்கமானாலும் சரி அல்லது மாநில அரசுகளானாலும் சரி அரசியல் சட்டத்தைப் பரிபூர்ணமாக கருத்தில்கொண்டு அதை நடைமுறையில் உருவாக்க வேண்டுமென்ற உற்சாகமும், உத்வேகமும் இருந்தால் நிச்சயமாக மொழித்துறையில் இந்தக் குழப்பம் ஏற்பட்டிருக்க வேண்டிய அவசியம் இராது. சில நாட்களுக்கு முன்பு நிதியமைச்சர் அவர்கள் சொன்னதாக ஞாபகம், இங்கு சொன்னார்களோ அல்லது வெளியில் சொன்னார்களோ தெரியவில்லை. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பாக உயர் நீதி மன்றத்தில் தமிழில்தான் தீர்ப்புகள் வழங்கப்பட்டன என்று அவர்கள் சொன்னதாக ஞாபகம். பொதுவாக, நம் மொழியைப் பொறுத்தவரையில் நாம் உபயோகப்படுத்த ஆரம்பித்தால் நிச்சயமாக நமக்கு வார்த்தைகள் எல்லாம் கிடைக்கும். அல்லது வார்த்தைகளை நாம் தேடிக்கொள்ள முடியும். வார்த்தைகள் இல்லை என்று சொல்வதற்கும் அல்லது வேண்டிய சாதனங்கள் இல்லை என்று சொல்வதற்கும் வித்தியாசம் உண்டு. வேண்டிய தமிழ் டைப்ரைட்டர்கள் இல்லை. தமிழில் வார்த்தைகள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது என்று சொல்வதைப் புரிந்து கொள்ள கஷ்டமாகயிருக்கிறது. தமிழில் வார்த்தைகளை உருவாக்குவதற்கு நாம் மிகக் கஷ்டப்பட வேண்டியதில்லை. அதற்கு வேண்டிய புலவர்கள், பண்டிதர்கள் நம் நாட்டில் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஆக்கம் கொடுத்தால் தமிழில் வார்த்தைகளை, மக்களுக்குப் புரியும்படியான வார்த்தைகளை அவர்களால் சுலபமாக உருவாக்க முடியும். அடுத்தபடியாக, பொது மொழியைப் பொறுத்த வரையில் நாம் பெரிதாக பயப்பட வேண்டிய அவசியமில்லை. நிச்சயமாக தேச பக்தியுள்ள எவனும் இதை மறுக்க முடியாது. இந்த நாட்டிலுள்ள ஒரு மொழிதான் பொது மொழியாக இருக்க வேண்டும் என்பதை—அது தமிழாக இருக்கலாம், மலையாளமாக இருக்கலாம் அல்லது தெலுங்காகயிருக்கலாம்—இந்த நாட்டிலுள்ள ஒரு மொழிதான் அதிகார பூர்வமான பொது மொழியாக இருக்க முடியுமே தவிர வெள்ளையர் நம்மை நூறு ஆண்டுகள் ஆண்டார்கள், 150 ஆண்டுகள் ஆண்டார்கள் என்பதற்காக அந்த அடிப்படையில் நாம் ஆங்கிலத்தை வைத்துக் கொண்டிருக்க முடியாது. அந்த மொழியில் எல்லாச் சிறப்புகளும் இருக்கின்றன என்று சொன்னால், அந்த மொழி உலகத்திலுள்ள எல்லா மொழிகளிலுள்ள வார்த்தைகளையும் சேகரித்து வைத்துக் கொண்டிருக்கிறது. நேற்றுகூட பார்த்தேன், இந்தி மொழியிலிருந்து 2,000 வார்த்தைகளை ஆங்கிலம் எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை. இலக்கிய வளம் அல்லது இலக்கண வளம் இல்லாத மொழியாகவே இந்தியை



5th September 1960] [Sri K. R. Nallasivam]

வைத்துக் கொள்வோம். அதில் முழு நம்பிக்கைக் கொண்டால், 10, 20 ஆண்டுகளில் அது சுய வளர்ச்சி பெற்ற மொழியாக நிச்சயம் திகழ முடியும். அதே வேளையில் இன்னொன்று நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். மத்திய அரசாங்கமானாலும் சரி அல்லது மாநில அரசுகளானாலும் சரி ஒரு விஷயத்தை தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். நமது மாநில அரசைப் பொறுத்த வரையில் ஒரு விஷயத்தை தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். தேசீய மொழி என்பது வேறு, இணைப்பு மொழி என்பது வேறு என்று ஆட்சி மொழிக் குழுவிடம் குறிப்பு கொடுத்திருப்பது மகிழ்ச்சிக்கு உரியதாகும். 14 மொழிகளும் இந்த நாட்டின் தேசீய மொழிகளாகும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பொது மொழி என்று சொல்லும்போது, அதை எப்படி உபயோகிக்க வேண்டுமென்று பார்த்தால், மத்திய அரசாங்கத்தினோடு கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ள அதை வைத்துக்கொள்ள வேண்டும். உயர் நீதி மன்ற மொழி எதுவாக இருக்க வேண்டுமென்று வரும்போது, அதற்கும் தெளிவான வழியிருக்கிறது. ஆனால் பர்லாங் கல்கள், போக்குவரத்து, ரோடுகளில் ஊர்களின் பெயரைப் போடுதல், மணி ஆர்டர் பார்ம்ஸ், கார்ட்டுகள் இவைகள் இந்தியில் இருக்க வேண்டுமா என்பதைப் பொறுத்த வரையில் நாம் தெளிவாக முடிவு செய்து விடலாம், நிச்சயமாக அது தேவையில்லை என்று. பிராந்திய மொழியில் அது குறிக்கப்பட வேண்டும். திரு. அன்பழகன் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்தில்கூட, இந்தியாவிலுள்ள மொழிகளில் ஒரு மொழி வளர்ச்சி பெற்று ஆங்கிலத்தின் இடத்தைப் பிடிக்கும் வரையில் ஆங்கிலம் இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படியானால் அவர்களும் கூட இந்த நாட்டிலுள்ள ஒரு மொழி வளர்ச்சி பெற்று அந்த இடத்தைப் பெற முடியும் என்று நம்புகிறார்கள். நான் சர்க்கார் பகுதியில் உள்ளவர்களையும் மற்றவர்களையும் கேட்டுக் கொள்கிறேன், இந்தி மொழியை ஆட்சி பீடத்தில் ஏற்றி வைத்தால் ஆங்கிலத்தை விட வேகமாக, ஆங்கிலத்தை விட சிறப்பான முறையில் இந்த மொழியைக் கொண்டு வர முடியும். ஆகவே நான் சர்க்கார் தரப்பினரையும் சரி, மற்றவர்களையும் சரி கேட்டுக் கொள்கிறேன், நாம் நம் மொழிகளில் நம்பிக்கை வைக்க வேண்டும். அடுத்தபடியாக, ஹைக்கோர்ட்டில் தமிழை வைப்பதா அல்லது இந்தியை வைப்பதா என்று வரும்போது நிச்சயமாக மாநில அளவிலுள்ள சகல பகுதிகளிலும் தமிழ் தான் இருக்க வேண்டும். இந்தி என்பது தொடர் மொழியாக இருக்க வேண்டுமே தவிர, சட்ட மன்றத்தில், ஹைக்கோர்ட்டில், அல்லது சந்தேகத்திற்குரிய எந்தயிடத்திலும், எந்தப் பகுதியிலும் இது இருக்கக்கூடாது. பொது மொழி என்ற அடிப்படையில் அதை ஏற்றுக் கொள்வதற்கு யாரும் தயக்கம் காட்டுவதற்கில்லை. அன்று காந்தியடிகள் குறிப்பிட்டதுபோல் பிராந்திய மொழிகளை ஒழுங்காக வளர்த்தால் பொது மொழிப் பிரச்னை தீர்ந்து விடும். ஆட்சி மொழிச் சட்டத்தை இயற்றி விட்டதாக சர்க்கார் சொல்கிறார்கள். எந்த வருடத்திற்குள் தமிழ் கல்லூரிகளில் போதனா மொழியாக வரும், எந்த வருடத்திற்குள் தமிழ் ஹைக்கோர்ட்டில் பொது மொழியாக வரும், எந்த வருடத்திற்குள் தமிழ் முழுக்க இந்த சட்ட மன்றத்தில் அதிகாரப் பூர்வமான மொழியாக வரப்போகிறது என்பதைத் தெளிவாக எடுத்துரைக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**SRIMATHI A. SUARES:** Mr. Speaker, Sir, I wish to make a few observations on the topic under discussion to-day, viz., the Language Policy of the Country.

Article 343 of the Constitution states categorically that the official language of the Union shall be Hindi in Devanagiri script. It also states that for a period of 15 years from the commencement of the Constitution the English language shall continue to be used for all the official purposes of the Union. The President has given power to authorise the use of the Hindi language in addition to the English language during the said period of 15 years.

[Srimathi A. Suares] [5th September 1960

Ten years ago, the year 1965 seemed a long way off but with the passing of the last decade 1965 has come very much nearer to us. What is the progress made in the non-Hindi speaking States in the study of Hindi? Ten years ago Hindi was introduced in our high Schools as a third language for a period of three years in Forms I to III in S.S.L.C. Schools and Standards VI to VIII in Anglo-Indian schools. This study was not compulsory and a failure in Hindi did not debar a pupil from being promoted to the next higher class. Gradually this arrangement was dropped in most schools and little or no progress was made.

In the present re-organized scheme of Secondary Education the three language formula has been introduced again but with a differance. This time Hindi will be taught in the last three years of the High School course, viz., Standards VIII, IX and X and the S.S.L.C. examination as well as the Anglo-Indian High School examination will include a paper in Hindi besides the regional language. One reason why sufficient progress has not been made in the study of this language is the inefficient way in which it is taught. Perhaps the teacher does not know sufficient Hindi himself or he does not know the correct method of teaching. We notice that progress is very slow. Often only a few lessons in the text book are taught for the year. It should be taught as a living language and not as a dead language like Latin. Facilities should be provided for the training of Hindi teachers and a sufficiently high minimum of general education should be fixed. Adults find it very difficult to learn a new language but the young generation that is in school to-day can master languages easily.

Being aware of the difficulty in mastering a language that is not spoken in the South there has been agitation to defer the enforcement of the provision under Article 343. But in the Lok Sabha the Prime Minister has given an assurance that Hindi will not be enforced on the non-Hindi speaking States until such time as they themselves desire or are prepared for the change-over.

President Prasad, during his recent visit to Madras gave an assurance that no language would be forced on the South. It appears now that the supporters of Hindi in the country now realise that they must have the goodwill of the non-Hindi speaking people in any further policy relating to the official language. The Union Home Minister announced in the Lok Sabha that shortly an amending Bill would be brought before the House for the extended use of English beyond 1965. This does not mean that the study of Hindi should be shelved in the South. Though the time-limit is extended indefinitely, a start must be made sooner or later. I feel that the students now studying Hindi in VIII Standard will be the nucleus of the southerners who will learn the language. In 1963, there will be about 70,000 S.S.L.C. students and 1,000 Anglo-Indian school students who would have studied Hindi for three years and appeared for public examination in this subject. When they have passed the High School and College classes,



5th September 1960] [Srimathi A. Suares]

if they desire to enter the All-India Services, they will study Hindi still further and be competent to serve the Central Government in any part of India.

When discussing the language policy, the place of English should also be considered. In Article 343, provision is made for the use of English for all the official purposes of the Union till 1965. In August 1959, when a non-official resolution moved by the Leader of my community relating to the inclusion of English in the VIII Schedule of the Constitution was debated in the Lok Sabha, the Prime Minister stated that English will continue as an additional or associate language for an indefinite period. He also said that English would continue as an alternative language so long as people require it. He would leave the decision in regard to this matter to the non-Hindi speaking people and not to the Hindi-speaking people. We know that English has an important place for retaining contact with the scientific and technological world. India is now taking great strides in heavy industries in its Five-Year Plans and to carry out these plans, India must move with foreign countries to secure aid —both financial and technical. Without a sound knowledge of English, such contacts will be impossible. English will also be necessary for communication between the Centre and the States and for inter-States communication for many more years till Hindi is developed sufficiently to replace English.

With the assurances from the Prime Minister as well as the President, there is no need for agitation either against Hindi or English. In a calm atmosphere, both these languages should be studied for internal use as well as to communicate with the countries of the world.

The third language in the policy though mentioned by me last is not the least important and that is the regional language. The Madras Government has already declared that Tamil is the State language. In January 1958, about 2,000 officers changed over from English to Tamil. A Pilot Scheme has been introduced in the Coimbatore Arts College, making Tamil the medium of instruction and from 1963 this change will be introduced in other colleges in the State. Steps are being taken to raise the standard of Tamil in the State. While steps are being taken for the promotion, dissemination and progress of the regional languages, care should be taken to avoid the spread of regionalism. The unity of India comes foremost and every citizen of India should try to strengthen this unity by making language and caste subordinate to matters concerning the unity of the country. If there is unity, our country can not only plan developmental schemes and carry them out successfully, but also face any danger on the borders of our country.

So, let us give the three languages their rightful places—Hindi as the language prescribed to be the official language of India, English as an associate language and the regional language in each

[Srimathi A. Suares] [5th September 1960

**State, for all purposes within the State.** There must be a proper **balance maintained** between these three languages. Knowledge of **Hindi alone** will cut us off from other countries in the world. Knowledge of English alone will cut us off from our fellow-**country-men** in this country. Knowledge of Tamil alone would **cut us off** from other countries in the world and not to speak of **parts of India.** So, my plea is that a correct balance should be **maintained** between these three languages and all the three lan**guages should be studied.**

**Sri A. VEDARATHNAM :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மொழி விஷயத்தில் நம்முடைய அரசாங்கம் எடுத்திருக்கின்ற நிலையை ஆதரிக்கும் முகத்தான் நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நம்முடைய அரசியல் சட்டம் அந்தந்த மாகாண நிர்வாகம் அனைத்தும் அந்தந்த மாநில மொழியிலேயே நடக்கவேண்டுமென்று முடிவு செய்திருக்கின்றது. இதுவரையிலும் நம்முடைய தாய் மொழிக்கு இந்த வாய்ப்பு இருந்ததில்லை. அந்த வாய்ப்பை இப்போது அரசியல் சட்டம் நமக்கு தந்தமைக்கு நாம் மிகவும் அவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம். இதனால் இந்த மாநிலத்தில் இருக்கின்ற நிர்வாகமும் தமிழ் மொழியில் நடக்க வேண்டும் என்பதில் யாருக்கும் எந்த விதமான ஆட்சேபணையும் இருக்க முடியாது. ஆனால் அனுஷ்டானத்தில் வருவதற்குத்தான் கொஞ்சம் கால தாமதம் ஏற்படுமே தவிர வேறு ஒன்றுமில்லை. ஒவ்வொரு மாநில மொழியிலும் மத்திய அரசாங்கத்தினுள்ள நிர்வாகம் நடக்கவேண்டும் என்று சொன்னால் அது முடியாத காரியம் என்பதை இந்த மொழிப் பிரச்னையில் அபிப்பிராயபேதம் உள்ளவர்கள் கூட ஏற்றுக்கொள்ளக்கூடும். நமது தேசிய மொழிகளாயிருக்கின்ற 14, 15 மொழிகளிலும் மத்திய அரசாங்கத்தின் நிர்வாகம் நடக்கவேண்டும் என்றால் அது ஒருக்காலும் சாத்தியமில்லை. எனவே தான் 15 ஆண்டுகள் அவகாசம் கொடுத்து அதற்குப் பின்னால், மத்திய அரசாங்கத்தினுடைய நிர்வாகம் இந்தி மொழியில் நடக்கவேண்டும், ஏனென்றால், இந்தி மொழி இந்த பாரத நாட்டில் மிகப் பெரும்பான்மையான மக்களால் பேசப்படுகிறது, அது மட்டுமல்ல, மகாராஷ்டிரம், குஜராத், வங்காளி, பஞ்சாபி போன்ற ஏனைய மொழி பேசுகின்றவர்களுக்கும் இந்தி நன்றாகப் பேசத் தெரியும், இந்தியை நன்றாகப் புரிந்து கொள்ள முடியும் என்ற காரணத்தாலும்தான் இந்தி மொழி ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். அதற்கான

12-30 p.m. காலவரையறை 1965-ம் ஆண்டு என்று அவர்கள் நிர்ணயித்திருக்கின்றார்கள். ஆங்கிலமும் இந்தியும் தொடர்ந்து மத்திய அரசாங்க மொழியாக இருந்து வரும். அதற்குப் பிறகு இந்தி மட்டும் ஆட்சி மொழியாக இருந்து வரவேண்டுமா அல்லது இப்போதிருப்பது போன்று ஆங்கிலமும் தொடர்ந்து இருந்து வரவேண்டுமா என்பதுதான் முக்கியமான பிரச்னை. இந்தப் பிரச்னையில் நம்முடைய தமிழகத்தைத் தவிர வேறு எந்த மாநிலமும் இந்த மாதிரி ஆங்கிலமும் தொடர்ந்து இருந்து வரவேண்டுமென்பதை வற்புறுத்தவில்லை. அவ்வாறு சொல்ல வேறுயாரும் முன்வரவில்லை. நம்மோடு இணைந்திருந்த சமயத்தில் ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய பகுதிகளிலும் இந்தி கட்டாயமாகக் கூடாது என்று சொல்லி வந்தார்கள். இப்போது நம்மிடமிருந்து பிரிந்து போனவுடன் அவர்கள் மாகாணத்திலே இந்தியைக் கட்டாய மொழியாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். கர்நாடகத்தில் இன்றைக்கு அரசாங்க உத்தியோகத்தில் இருப்பவர்கள் எல்லாம் "மத்திமா" பரிட்சை பாஸ் பண்ணினால்தான் தொடர்ந்து அரசாங்கம் உத்தியோகத்தில் இருக்க முடியும். அவ்வாறு பரிட்சை பாஸ் பண்ணவில்லையானால் மாநில அரசாங்கத்திலே கூட அவர்களுக்கு உத்தியோகம் இல்லையென்ற நிலையை ஏற்படுத்தி அவ்வளவு துரிதமாக அங்கெல்லாம் இந்தி மொழியைப் படிப்பதில் ஊக்கமூட்டியிருக்கிறார்கள். அகில இந்தியாவில் நம்முடைய மாகாணம் ஒன்றுதான் இந்த மொழிப் பிரச்னையில் மத்திய அரசாங்கத்தோடு வேறுபட்டு இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு இந்த அவையில் இருக்கும் அத்தனை கட்சிக்காரர்களும், ஒரு கட்சியாரைத் தவிர அதற்கு எதிர்ப்புக்



5th September 1960] [Sri A. Vedarathnam]

காட்டவில்லை என்ற விஷயத்தை நான்தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி இருந்தும் "மெஜாரிடி டிரனி" என்று உயர்ந்த, பரந்த நோக்கம் காரணமாக, நம்முடைய சகோதரர்களையும் சேர்த்து நம்முடன் அழைத்துச் செல்லவேண்டுமென்ற சமரச உணர்ச்சி காரணமாக, சர்வ கட்சிக் கூட்டத்தில் கல்வி சம்பந்தமான விஷயம் வந்த காலத்தில் எட்டாவது வகுப்புக்கு மேல் இந்தியை பாடமாக்க வேண்டுமென்பதை அவர்கள் ஒரு சமரச முடிவாக ஏற்றுக்கொண்டதை நான் வரவேற்கிறேன். அதனால் என்ன நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது ?

**Sri A. GOVINDASAMY :** "ஆன் எ பாயின்ட் ஆப் க்ளாரிபிகேஷன்."

**Mr. SPEAKER :** The hon. Member cannot raise on a point of clarification. He can raise a point of order. "க்ளாரிபிகேஷன்" எல்லாம் பிறகு சொல்லிக் கொள்ளுங்கள்.

**Sri C. N. ANNADURAI :** கமிட்டியில் செய்த முடிவைப்பற்றித் தவறான கருத்தை வெளியிடுவது........

**Mr. SPEAKER :** நீங்கள் பேசும்போது பதில் சொல்லவும். கமிட்டியில் சொல்லப்பட்ட கருத்து என்ன என்று எனக்கு எப்படித் தெரியும் ?

**Sri A. GOVINDASAMY :** "ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்". கமிட்டியில் சொல்லப்பட்ட கருத்துக்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும் என்று சொல்லப்படும்போது பகிரங்கமாக தவறான முறையில் இங்கே அந்தக் கருத்தை எடுத்துச் சொல்வது........

**Mr. SPEAKER :** என்ன கருத்து என்று அவர்களுக்குத் தெரியும். எனக்குத் தெரியாது.

**Sri A. VEDARATHNAM :** சர்வ கட்சிக் கூட்டத்தில் இந்தியை எந்த வகுப்பில் இருந்து துவக்குவது என்ற பிரச்னைதான் முக்கியமான பிரச்னையாக எடுத்துக் கொள்ளப்பட்டது அன்றைய கூட்டத்தில் எட்டாம் வகுப்பில் இருந்து அதைக் கட்டாயப் பாடமாக ஏற்றுக் கொள்ளவேண்டுமென்ற முடிவு செய்யப்பட்டது. எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்ட விஷயம் என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன்.

ஆகவே, இப்போது என்ன பிரச்னை ஏற்பட்டிருக்கிறது என்றால் நம்முடைய அரசியல் சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டுமா அல்லது நம்முடைய மதிப்புக்குரிய ஜனாதிபதி அவர்களும், நம்முடைய பிரதம மந்திரி அவர்களும் கொடுத்த வாக்குறுதி போதுமா அல்லது பாராளுமன்றத்தில் இதைப்பற்றி ஒரு சட்டம் கொண்டு வந்தால் போதுமா என்பதாகும். 1939-ம் ஆண்டிலே இந்தி கட்டாயம் என்ற திட்டம் அமுலுக்கு வந்த காலத்தில் நாம் அதை ஏற்றுக் கொண்டிருப்போமானால் இன்றைக்கு இந்த மாதிரிப் பிரச்னைகளைக் கிளப்ப வேண்டிய நிலைமை தமிழகத்திற்கு வந்திராது. ஏனைய மாகாணங்களைக் காட்டிலும் ஒரு படி முன்னதாக சென்னையானது இந்த இந்தி விஷயத்தில் மற்றவர்களுக்கு ஒருவழி காட்டியாகக்கூட இருந்திருக்கும் என்று சொன்னால் அது மிகையாகாது. எனினும் 1965-ம் ஆண்டுக்கு அப்பாலும் ஆங்கிலமும் தொடர்ந்து நம்முடைய தேசிய மொழிகளில் ஒன்றாக, பொது மொழிகளில் ஒன்றாக இருக்கலாம் என்பதை நம்முடைய மாகாண சர்க்கார் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். மத்திய அரசாங்கமும் அதை ஏற்றுக்கொண்டுவிட்டது. ஆனால் இனி என்ன நெருக்கடி வரப்போகின்றது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 1965-ம் ஆண்டுக்குப் பிறகு ஏனைய எல்லா மாகாணங்களும் இந்தியிலேயே செயலாற்றிக்கொண்டு வரும்போது, மத்திய அரசாங்கத்திலும் இந்தி நடைமுறையில் வரும்போது நம்முடைய மாகாணத்தில் மட்டும் ஆங்கிலத்தைக் கொண்டிருப்போமானால் மற்றவர்கள் பேசுவதை நாம் புரிந்து கொள்ளவும், நாம் பேசுவதை அவர்கள் புரிந்து

கொள்ளவும் வாய்ப்பு இராத நிலையைத்தான் நாம் உண்டாக்கிக்கொள்கிறோம் என்று நான் இந்த இடத்தில் எச்சரிக்க விரும்புகிறேன். ஏன் இப்படி ஆங்கிலம் நீடிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள் என்று எனக்கு விளங்கவில்லை. ஆறாம் வகுப்பில் இருந்து ஆங்கிலம் பள்ளிகளில் கற்றுக் கொடுத்து வந்தது. இனிமேல் ஐந்தாம் வகுப்பிலிருந்தே கற்றுக்கொடுப்பதாக முடிவு செய்திருக்கிறார்கள். மேலும், நான்காம் வகுப்பில் இருந்தே துவக்க வேண்டுமென்ற யோசனையும் இருந்து கொண்டிருக்கிறது. இவ்வாறு கீழ் வகுப்புகளில் இருந்து இந்த ஆங்கிலத்தைக் கற்றுக் கொடுப்பதன் காரணம் அந்த மொழி கற்றுக்கொள்வதற்கு அவ்வளவு கடினமாக இருப்பதுதான். முதல் வகுப்பில் இருந்தே ஆங்கிலம் கற்றுக் கொடுக்கப்பட்டாலும் அந்தக் கஷ்டம் நீங்கப் போவதில்லை. இதற்கு முன் இந்த அவையில் நிதியமைச்சர் அவர்கள் அளித்த ஒரு குறிப்பை நினைவுபடுத்திப் பார்த்தால், பரிட்சையில் பெரும்பாலும் தவறக் கூடிய மாணவர்களில் 100-க்கு 90 பேர் ஆங்கிலத்தில்தான் தவறியிருக்கிறார்கள் என்ற உண்மை தெரியவருகிறது. அதிலும் பிற்போக்கான வகுப்பைச் சேர்ந்தவர்கள், கல்வி வசதி பெறாத சமூகத்தினர் பெரும்பாலும் ஆங்கிலத்தில் மிகக் குறைவான எண்ணிக்கையே பெறுகிறார்கள். இதற்கு மாறாக இந்தியை எடுத்துக் கொண்டால் எட்டாம் வகுப்பில் இருந்து கற்றுக் கொடுப்பது என்ற முறையிலே இருந்திருப்பினும்கூட, ஒன்றாம் வகுப்பில் இருந்து ஆங்கிலம் கற்றுக் கொள்கிறவர்கள் அந்த மொழியில் எவ்வளவு திறமை பெற்றிருக்கிறார்களோ அதைக் காட்டிலும் அதிகத் திறமையைப் பெற்று விடமுடியும் என்று குறிப்பிட விரும்புகிறேன் இந்தி அவ்வளவு சுலபமான மொழி. தமிழைக் காட்டிலும் சுலபமாகக் கற்றுக் கொள்ளக்கூடிய மொழி என்று கூடக் குறிப்பிட விரும்புகிறேன். விஷாரத், ப்ரவீண் போன்ற உயர்ந்த பரிட்சைகளைக் காட்டிலும் பராங்கத் என்ற ஒரு பரிட்சை 7, 8 வருஷ காலமாக நடைபெற்று வருகிறது. அகில இந்தியாவிலே ஹிந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள்கூட, ப்ரசாரக், ப்ரவீண் தேறியவர்கள்தான் ஆந்திராவிலே பராங்கத் பரிட்சைக்கு வருகிறார்கள். ஏழு, எட்டு ஆண்டுகளாக அகில இந்தியாவிலும் முதன்மையாகத் தேறி வருகின்ற மாணவன் யார் என்று பார்த்தால் நம்முடைய தமிழன் என்ற விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த ஆண்டு குடியாத்தத்தில் ஒரு கைத்தறி நெசவாளர் அகில இந்தியாவிலும் இந்தப் பரிட்சையில் முதன்மையாகத் தேறிவந்திருக்கிறார் என்று சொன்னால், அறிஞர் அண்ணா அவர்களுக்கு நான் கூற விரும்புகிறேன்—அவர்கள் எம். ஏ. முதல் வகுப்பிலே பாஸ் பண்ணினவர்கள்; மொழியிலே அவர்களுக்கு இருக்கும் திறமை நன்றாகத் தெரியும். இரண்டு ஆண்டுகள் ஹிந்தியைக் கற்றுக்கொள்ள அவர்கள் முன் வருவார்களானால், வட நாட்டிலே இருக்கும் அன்பர்களிடத்திலே அவர்களுக்கு இருக்கும் வெறுப்பை நீக்கி, அவர்களுடைய ஹிந்தி மொழித் திறமையை அங்கு காட்டுவார்களானால் வட நாட்டில் பல லட்சக்கணக்கான தொண்டர்கள் சிஷ்யர்களாக அவர்களுக்கு வருவார்கள் என்ற விஷயத்தை நான் அவர்களுக்கு நினைவூட்டுகிறேன். எனவே இந்த மொழியிலே இருக்கும் வெறுப்பை அவர்கள் மாற்றி, வட நாடு தென்னாடு என்ற வேற்றுமையை அவர்கள் நீக்கிவிட்டு, கொஞ்சம் அக்கறை எடுத்துக்கொண்டு ஹிந்தியைக் கற்றுக்கொள்வதற்கு அவர்கள் முன் வருவார்களானால் தென்னாட்டிலே மட்டு மல்ல, வட நாட்டிலும் பல சிஷ்யர்கள் அவர்களுக்கு நிரம்பச் சேருவார்கள் என்ற விஷயத்தை அவர்களுக்குக்கூறி, ஹிந்திக்கு இன்றைக்கு நம்முடைய மாநில சர்க்கார் கொடுக்கும் மாற்றாந்தாய் உபசரணையை விட்டுவிட்டு, ஆங்கில மொழிக்கு என்ன உரிமை, என்ன ஸ்தானம் அளிக்கப்பட்டிருக்கிறதோ அதைக் காட்டிலும் அதிகம் இல்லாமற் போனாலும், ஆங்கில மொழியைப் பயிலுவதற்குப் பள்ளிக்கூடங்களில் என்ன வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அதையாவது குறைந்தபட்சம் ஹிந்திக்கும் கொடுக்கவேண்டும். என்றைக்கு இருந்தாலும் ஆங்கிலத்தை இந்த நாட்டில் தாயமொழியாகக் கொண்டவர்கள் ஒரு சதவிகிதம் கூட இல்லை. அப்படியிருக்கும்போது, அந்த மொழி இந்த நாட்டில் எந்தக் காலத்திலும் நிலைக்கப் போவதில்லை. இன்றைக்கு ஆங்கில பட்டதாரிகளாகச் சிறந்து விளங்குகிறவர்கள் தலைமுறை இருக்கும் வரையில்தான் இருக்குமே அல்லாமல், அதற்கப்பால் இந்த நாட்டின் பொது மொழியாக





ஹிந்திதான் திகழப் போகிறது. வருங்காலத்திலே என்றைக்காகிலும் மத்திய அரசாங்கத்திலே எல்லாத் துறையிலும் எல்லா வகையிலும் ஹிந்தி முதன்மை ஸ்தானம் வகிக்கும். ஆங்கிலத்திலே திறமையாகப் படித்து முதன்மை ஸ்தானம் வகிக்கும் தமிழகம் ஹிந்தி வரும் நேரத்தில் பின்னணிக்குத் தள்ளிவிடக்கூடாது என்ற விஷயத்தையும் இங்கே வற்புறுத்த விரும்புகிறேன். அப்போது கவர்னராக இருந்த திரு பட்டாபி சீதாராமையா அவர்கள் குறிப்பிட்ட வாக்கியத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (இத் தருணத்தில் சபாநாயகர் மணி அடித்து அடுத்த கனம் அங்கத்தினரைப் பேசுமாறு கூப்பிட்டார்.)

* **Sri K. ANBAZHAGAN** : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, சென்னை அரசாங்கம் இன்றைய தினம் பின்பற்றி வருகின்ற, அல்லது மேற்கொள்ள இருக்கிற இரு மொழிக் கொள்கையை யொட்டி தமிழகத்திலே ஏற்படக் கூடிய சூழ் நிலையையும், மத்திய அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையையும் எடுத்து வைப்பதற்கான முறையில் இந்த விவாதத்தில் பங்கு கொள்வதற்கான வாய்ப்பு பெற்றதற்கு நான் மகிழ்கின்றேன்.

1958-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 10, 11 நாட்களில் இந்தச் சட்ட மன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் இந்த அரசாங்கத்தினுடைய இரு மொழிக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தபோதிலும், அந்த இரு மொழிக் கொள்கையினால் ஏற்படவேண்டிய முழுப் பலனும் ஏற்படவில்லை என்று பல்வேறு உறுப்பினர்கள் சட்ட மன்றத்தில் விளக்கிப் பேசியிருக்கிறார்கள். *

இரு மொழிக் கொள்கை என்பதை சென்னை அரசாங்கம் டில்லி சர்க்காருக்கு எடுத்துச் சொன்ன காரணத்தால் பெருமைப்பட இடம் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களும் இதை ஆதரிப்பவர்களும் எடுத்து காட்டுவதைப் போலத்தான், நானும் குறிப்பாகத் தெரிவிக்க விரும்புகிறேன். இரு மொழி கொள்கையை ஏற்றுக்கொண்டு வற்புறுத்த வேண்டிய சூழ் நிலையை உண்டாக்கிய பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, சென்னை அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் நிச்சயமாக உண்டு. அதேபோன்று டில்லி சர்க்காரிலே அமர்ந்திருக்கும் பெரிய தலைவர்கள் குறிப்பாக இதை ஏற்றுக்கொண்டு, இந்த முடிவை ஒத்துக்கொள்வதாகத் தெரிவிக்க வேண்டிய சூழ்நிலையை உண்டாக்கியதிலேயும் முன்னேற்ற கழகத்திற்குப் பெருமை இருக்கிறது.

முன்னேற்றக் கழகத்திற்கு இதில் பெருமைக்கு இடம் இருக்கும் காரணத்தால்தான் என்று நான் கருதுகிறேன், நிதி அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டப் பேரவையில் பேசும்போது, ‘முன்னேற்றக் கழகத்தாரின் கருத்துக்களை வரவேற்கிறேன்; அவர்களுடைய ஆலோசனையை விரும்புகிறேன்’ என்று தெரிவித்தார்கள். மேல் சபையிலே பேசும்போது நிதி அமைச்சர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தார் இந்த மொழிப் பிரச்சினையில் தலையிடாமல் இருப்பார்களானால் எனக்குச் சற்று நிம்மதியாக இருக்கும்; திராவிட நாடு பிரிய வேண்டுமென்ற கொள்கையை உடையவர்கள் மொழிப் பிரச்சினையில் தலையிடுவதற்கு என்ன அவசியம் இருக்கிறது? என்ற கருத்தை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும் மேல் சபையிலே பேசும்போது, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக ஒருவர் மட்டுமே அவர் கண்ணுக்குத் தெரிந்ததால்தான் அப்படிப் பேசியிருப்பார் என்று எண்ணுகிறேன். ஆனால், இங்கே 15 பேர்கள் இருக்கும் காரணத்தால் போலும், அவர்கள் இங்கே ‘உங்களுடைய ஆலோசனையை வரவேற்கிறோம்’ என்று சொல்லியிருக்கிறார். அமைச்சர் வரவேற்றாலும்’ வரவேற்காவிட்டாலும் சில நோக்கிலே மக்களுடைய தேவையான பிரச்சினையை எடுத்துச் சொல்ல வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது.

அமைச்சர் அவர்கள் வரவேற்பதற்காக மட்டும்தான் எங்களுடைய கருத்தைச் சொல்வதென்றால் திராவிட முன்னேற்றக் கழகத்தார் சட்ட மன்றத்திற்கு வந்திருக்கவே கூடத் தேவையில்லை. ஆனால், நாங்கள் சொல்வதை அமைச்சருடைய உள்ளம் அப்படியே ஏற்றுக்கொள்ளுமா என்றால்,

[Sri K. Anbazhagan] [5th September 1960

அமைச்சருக்கு ஏற்பட்டிருக்கும் இக்கட்டான நிலைமையில் அடிப்படையில் அச்சத்திற்கு ஆட்பட்டு தயவு தாட்சண்யத்திற்கு உட்பட்டு, டில்லி சர்க்காருக்கு நல்ல பிள்ளைகளாக நடந்து தமிழ் நாட்டிலே தலை தப்ப விரும்பும் நிலையில்—ஏற்றுக்கொள்ளமுடியாது. அதனால்தான் அமைச்சர் அவர்கள் இருமொழிக் கொள்கை என்று எடுத்துச் சொன்னாலும், வடவரின் இந்திக்கு மட்டும் ஏற்பட்டு வரும் செல்வாக்கையும், இந்திக்கு ஊட்டப்பட்டு வரும் வலுவையும் தடுத்து நிறுத்த அமைச்சர் அவர்கள் இதுவரையில் தம்முடைய அரசாங்கத்தின் சார்பிலே சுண்டுவிரலைக்கூட அசைக்கவில்லை. வேண்டுமானால் சர்தார் வேதரத்னம் போன்றவர், அந்தக் காலத்து தேசிய வாதியாக உள்ளவருக்கு இன்று அமைச்சர் அவர்கள் மேற்கொண்டிருக்கும் கொள்கையில் ஏதோ ஒரு புதுமை மாற்றம் இருப்பதாகத் தெரியலாமே தவிர, என்னைப் போன்றவர்கள் கருத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் கருத்தில், முன்னேற்றக் கழகம் எடுத்துச் சொல்லும் அந்தக் கொள்கை வழியில் ஓரளவுதானே அமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார்கள். இது எப்படிப் பயன்தரும்? என்ற எண்ணமே தோன்றுகிறது. தி. மு. க. கொள்கையை ஏற்று முடிவு வரையில் அவர்கள் நடப்பார்களானால் நிச்சயமாகத் தமிழ் மக்களுடைய உரிமையைப் பாதுகாக்க முடியும் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஆனால், அதைவிட முக்கியமாகத் தெரிவிப்பேன்—திராவிட நாடு திராவிடருக்கே என்று சொல்லும் விடுதலைக் கொள்கை உடைய எங்களுக்குத்தான் மொழிப் பிரச்சினை மூலப் பிரச்சினையாக இருக்கிறது. அகில இந்தியா என்று பேசுகிறவர்களுக்கு, யூனியன் சர்க்காருக்கு உட்பட்டு ஆட்சி நடத்த வேண்டுமென ஆசைப்படுகிறவர்களுக்கு, எப்படியாவது மந்திரி பதவி நிலைத்தால் போதும் என்று நினைக்கிறவர்களுக்கு மொழிக் கொள்கை மூலம் அல்ல, மொழி மக்களுக்குத் தேவைப்படுகிற காரணத்தால், அந்த மொழியிலே மக்கள் பற்றும் அக்கறையும் கொண்டுவிட்ட காரணத்தால், மக்களிடத்திலே வாக்குகள் இருக்கிற காரணத்தால், அந்த வாக்கைப் பெறும் வாய்ப்பு தவறிவிடக்கூடாது என்ற உணர்ச்சியின் காரணத்தால், அமைச்சர் அவர்கள் தமிழுக்காகப் பல நேரங்களில் வாதாடிப் பேசுகிறார். இருந்தாலும், தமிழுக்குக் கிடைக்கவேண்டிய பாதுகாப்பையும் உயர்வையும் அவர் தேடத் தவறியிருக்கிறார் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

உண்மையாகவே, அரசியல் சட்டத்தைத் திருத்தாமல் இரு மொழி ஏற்பாட்டிற்குப் பாதுகாப்புத் தேடலாம் என்று சொல்வது வீட்டுக் கதவுக்குப் பூட்டு போடாமலே கூட, யாராவது திண்ணையில் விழித்திருந்து திருடிக்கொண்டு போகாமல் பார்த்துக்கொள்ளலாம் என்பதைப் போல் இருக்கிறது. அமைச்சர் அவர்களுக்குப் பூட்டுப் போடும் தெளிவு ஏற்படாத சூழ்நிலை இருப்பதைக் காண வருத்தப்படுகிறேன். உண்மையிலேயே அரசியல் சட்டம் ஏற்படுத்தப்பட்ட நேரத்தில், எந்தச் சூழ்நிலையில் ஏற்பட்டது என்பதைப் பார்த்தால் அதிலே உருவான விதிகளும் பகுதிகளும் எந்த நோக்கத்தோடு உருவாக்கப்பட்டன என்பது விளங்கும். இன்றைய தினம் அதே அரசியல் சட்டத்தை வைத்துக்கொண்டு, அந்தக் குறிப்புகளை வைத்துக்கொண்டு, அதைச் சிறிதளவு கூட மாற்றாமல் திருத்தாமல், இந்த ஏற்பாட்டிற்குப் பாதுகாப்புத் தேட முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது. அல்லது தற்போது முடிந்தாலும் நீண்ட காலம் நிலைக்காது என்ற உண்மை தெளிவுபடும்.

உண்மையாகவே அகில இந்திய தேசிய வாதிகள் அரசியல் சட்டத்தை உருவாக்கிய நேரத்தில், இந்தி ஒன்று தான் தேசிய மொழி என்ற தவறான நினைப்பில் நிலைத்து நின்றார்கள். ஆனால், நாளாவட்டத்தில் ஏற்பட்ட உண்மை விளக்கத்தால்தான், இந்தி ஆட்சி மொழி மட்டுந்தான், தேசிய மொழி அல்ல, தேசிய மொழிகள் பல இருக்கின்றன. அதிலே ஒரு சிறப்பான இடத்தை இந்திக்கு தேட பார்க்கலாம் என்ற கருத்தும் தெளிவும் தேசியவாதிகட்கு ஏற்பட்டது. ஆனால், அரசியல் சட்டம் உருவான நேரத்தில் இந்திதான் தேசிய மொழி என்ற உணர்ச்சி இருந்த காரணத்தால், பிற மொழியை அதற்குச் ஈடாக மதிக்காத காரணத்தால்,



5th September 1960] [Sri K. Anbazhagan]

தேசியவாதியாக உள்ள சர்தார் வேதரத்னம் அவர்கள் இன்றைய தினம் கூட இந்திக்கு முதல் இடம் இருக்கவேண்டுமென்று சொல்லுவது போன்ற அந்த உணர்ச்சி தடித்திருந்த காரணத்தால், அவர்கள் அரசியல் சட்டத்தை உருவாக்கியபோது, உண்மையாகவே இந்திக்கு எந்த எந்த தனிச் சிறப்பையும் ஆதிக்க நிலையும் உண்டாக்க முடியுமோ அவற்றை உண்டாக்கினார்கள். ஆனால், அன்றுங்கூட எதிர்ப்பு ஏற்படாமல் இல்லை. கோவை டி.ஏ. இராமலிங்கம் செட்டியார் போன்ற பெரியவர்கள் அப்பொழுதும் இந்திக்குத் தரப்படும் முதல் இடத்தை மறுத்தார். இந்திக்கு 'முதல் இடத்தை தர மறுத்தது, இரண்டாவது இடம் பிற மொழிக்குக் கிடைத்தால் போதாதா என்ற முறையில் மறுக்க முடிந்ததே தவிர, 'முதல் இடம் இந்திக்கு எதற்காக?' என்று மறுக்க முடியவில்லை.

ஆகையால்தான், அரசியல் சட்டம் 1950-ம் ஆண்டில் தோன்றியபோது, 1965-ம் ஆண்டிலே "தேவ நாகரியில் எழுதப்படும் இந்தி இந்த நாட்டின் ஆட்சி மொழி" என்று சாசனம் ஆக்கப்பட்டது. சாசனம் ஆக்கிவிட்டுத்தான் அந்தத் தனி உரிமையை இந்திக்காரர்கள் எடுத்துக்கொண்டுதான், இந்தி மொழி அல்லாத பிற மொழி பேசுபவர்களின் உரிமையை ஒதுக்கி வைத்தான், பிற மொழி பேசும் மக்களுடைய எதிர்ப்பைச் சமாளிக்க இந்தி பேசாத மக்களுடைய விருப்பத்தை ஓரளவு நிறைவேற்றுவதாகக் காட்டிக் கொள்ள 1965-வது ஆண்டுக்குப் பின்னாலும் தேவைப்பட்டால் ஆங்கிலத்தை நீடிக்க வழி செய்யலாம், முறை வகுக்கலாம் என்று விதி செய்தார்கள். ஆங்கிலத்திற்கும் இடம் வைத்திருக்கிறார்கள் என்றால் அது ஆங்கில நாட்டிலே இருக்கும் ஆங்கிலேயருக்காகத் தந்த இடம் அல்ல; இந்த நாட்டிலேயே ஆங்கில மொழி விற்பன்னராக, மேதைகளாகப் பலர் இருக்கிறார்களே அவர்களுக்காகத் தந்த இடமும் அல்ல; ஆங்கிலத்தையே குடும்ப மொழியாகக் கொண்டிருக்கிறார்களே அவர்களுக்காகத் தந்த இடமும் அல்ல; ஆனால் இந்தி பேசாத மக்கள் நல்ல வகையில் அரசாங்கத்தில் பங்கு கொள்ள வேண்டுமானால், பங்குகொள்ள ஆங்கிலத்தைத் தவிர வேறு வழியோ மொழியோ இல்லாததால்தான் பிற மொழி மக்கள் உரிமைக் குரலை எழுப்ப வேறு வழி இல்லை. தமிழில் எழுப்பினால் டில்லி சர்க்கார் காது கொடுக்காது; தெலுங்கில் எழுப்பினாலும் டில்லி சர்க்கார் செவி சாய்க்காது; வங்கத்தில் எழுப்பினாலுங் கூட அதற்கு முறையான, தகுதியான இடம் கிடைக்காது. அதுபோலவேதான் பிற மொழி பேசுபவர் எவரும் தங்களுடைய உரிமைக் குரலை எழுப்ப வேண்டுமானால், அதற்கு ஆங்கிலந் தவிர வேறு வழியில்லை என்ற நிலைமை ஏற்பட்டபோது உரிமை என்ற காரணத்தால் கூட அல்ல, "கன்செஷன்" விட்டுக்கொடுப்பது என்ற வகையில், கொஞ்சம் இடம் தரலாம் என்ற நோக்கத்தோடு தேவைப்படின் ஆங்கிலத்திற்கு இடம் அளிக்கலாம் என்று விதி செய்தனர். இப்படி இடமளித்திருக்கும் ஆங்கிலத்தின் நிலைமை இன்றைய தினம் எப்படி மாறி இருக்கிறது? 1965-க்குப் பின்னால் ஆங்கிலத்திற்கு அவசியமில்லை என்ற நோக்கத்துடன் 1965-க்கு முன்னால் கூட சந்தர்ப்பம் கிடைத்தால் மற்ற இந்திய மக்கள் ஏமாந்துவிட்டால், இந்திபேசாத மக்களுக்கு எதிர்ப்பு உணர்ச்சி ஏற்படாவிட்டால், கண்டிப்பதற்காக கறுப்புக் கொடி காட்டப்படும் என்ற நிலை ஏற்படாவிட்டால், அப்படிப்பட்ட எதிர்ப்பு வளராவிட்டால், நிச்சயமாக ஆங்கிலத்தை அதனுடைய இடத்தை விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக ஒதுக்கி இந்தியை உயர்த்தி விடலாம் என்ற முறையிலே அரசியல் சட்டம் அமைந்திருக்கிறது.

கனம் அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் அரசியல் சட்டத்தில் பாதுகாப்பு இருக்கிறது என்று சொன்னார்கள். நான் சொல்லுகிறேன், இந்த அரசியல் சட்டத்தின் விதியில் சதி இருக்கிறது, சூழ்ச்சி இருக்கிறது. அரசியல் சட்டத்தில் பிற மொழிகளை ஒதுக்கித் தள்ளுவதற்கு வழி வகைகள் அத்தனையும் இருக்கின்றன. பிற மொழிகளுக்கு எங்கே இடம் இருக்கிறது? அந்தந்த மாகாண அளவில் மாநில அரசில் பிற மொழிகள் இருக்கலாம் என்று சொல்லுவது நமக்கு அவர்கள் தரவேண்டிய உரிமை அல்ல. மாறாக மத்திய சர்க்காரில் நம்முடைய தமிழுக்கு என்ன இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. டெல்லி அரசில் ஆந்திர மக்களுடைய தெலுங்குக்கு என்ன

[Sri K. Anbazhagan] [5th September 1960

இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது ? தெலுங்கிற்கு, தமிழுக்கு இடம் இல்லை, 14 தேசீய மொழிகளுக்கும் இடம் இல்லை என்று சொன்னால், அந்தந்த மக்களுடைய விருப்பத்தை நிறை வேற்றுவதற்கு என்ன வழி இருக்கிறது என்று எண்ணிப்பார்த்துதான் இவ்வாறு செய்தார்களா என்றால், எண்ணிப்பார்க்க வில்லை என்றே கூறவேண்டும். ஆகவேதான் நான் குறிப்பிட்டுச் சொல்லுவேன், தேசீய மொழி இந்தி ஒன்றே என்ற கருத்து இருந்த நேரத்தில் கொண்டு வரப்பட்ட இந்த அரசியல் சட்டம்—இதனுடைய ஒவ்வொரு பிரிவுங்கூட விளக்கிக்காட்ட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருப்பதாலேயே சொல்லுகிறேன்—ஒவ்வொரு பிரிவும் இந்திக்குச் சார்பாக, பிற மொழிகளுக்கு உரிமை இல்லாமல், அவர்கட்கு தேவைப் பட்டால் மட்டும் ஆங்கிலத்தைப் பயன்படுத்த இடம் வைத்துச் செய்யப் பட்டுள்ளது. தேவைப்பட்டால் பயன் படுத்தலாம் என்ற விதியின்படி, ஆங்கிலத்தைப் பயன்படுத்த இந்திக்காரர்களுக்கு என்ன அவசியம் ? நமக்குத்தான் ஆங்கிலம் தேவைப்படுகிறது. இந்தி ஆட்சி மொழியாக ஏற்கப்பட்டுள்ள சூழ்நிலையில் இந்திக்காரர்களுக்கு பிற மொழி தேவை இருக்காது. ஆனால், ஒரு வேளை இன்றைய தினம் இந்தி மொழி வளம் பெறாமல் இருக்கிற காரணத்தினால், இந்தியிலே செவ்வையாக ஆட்சி நடத்தமுடியாது என்பது இந்தி வெறியர்களுக்கு தெளிவாகத் தெரிந்திருக்கக்கூடும். இந்தியாவிலே வழங்கி வளர்கின்ற மொழிகளை எடுத்துக்கொண்டால் பண்டித நேரு அவர்கள் சொல்லியது போல, தமிழைப் போல, கூர்ஜரத்தைப் போல, மராத்தியைப் போல, வங்கத்தைப் போல, இந்தி வளராத காரணத்தினால், வளரும் ஆற்றல் பெறாத காரணத்தினால், வளர்ப்பதற்குப் பல இடையூறுகள் இருக்கின்ற காரணத்தினால், அப்படிப்பட்ட இந்தி மொழியிலே நேரடியாக ஆட்சி நடத்த முடியாது என்பதை எண்ணி தங்களுடைய ஆட்சி வசதிகளுக்காகக்கூட ஆங்கிலத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கலாம். அப்படி ஆங்கிலத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை கட்டாயம் ஏற்பட்டிருக்கிறதே தவிர, ஆங்கிலத்தை ஏற்பதன் மூலம் பிற மொழி மக்களுக்கு நம்பிக்கை உண்டாக்கக்கூடிய அளவுக்கு, அவர்கள் உரிமையை உறுதிப்படுத்துகிற நிலை இன்னும் ஏற்படவில்லை.

பண்டித நேரு அவர்கள் தந்திருக்கிற உறுதி மொழியை நம்பித்தான் ஆக வேண்டும். அவர்களிடத்தில் நம்பிக்கை வைத்துத்தான் மேலும் நம்முடைய உரிமையைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பண்டித நேரு அவர்கள் நெடுநாள் வாழ வேண்டுமென்று தான் நான் ஆசைப்படுகிறேன். ஆனால், பண்டித நேருவுக்குப் பின்னால், அல்லது பண்டித நேருவின் காலத்திலேயே அவரது ஜனநாயக மனப்பான்மையில் பற்று இல்லாதவர்களின் ஆதிக்கம் வலுக்குமேயானால், இன்னும் 15 ஆண்டுகளுக்குப் பிறகோ, 20 ஆண்டுகளுக்கு பிறகோ கூட ஏன் இந்தி வரக்கூடாது என்று நினைப்பவர்கள் ஆட்சிக்கு வருவார்களேயானால், அல்லது இந்தி மொழிக்கு வாதிடுபவர்கள், இந்தியைத் திணிப்பதற்கு முயற்சி செய்தவர்கள், மொழிக் குழுவில் அமர்ந்து இந்திக்கு—அதன் ஆதிக்கத்துக்கு வாதாடியிருக்கிறார்களே அப்படிப்பட்டவர்களுக்கு அரசியல் செல்வாக்கு கிடைக்குமானால், அந்த நேரத்தில் இந்தி பேசாத மக்களின் நிலைமை என்ன என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். பண்டித நேரு அவர்கள் இதற்குத் தேவையான சட்டம் செய்ய, பாராளுமன்றத்தில் நடவடிக்கைச் சட்டம் கொண்டு வருவதாக சொல்லியிருக்கிறார். அப்படி நடவடிக்கைக்காகக் கொண்டு வரப்படக்கூடிய சட்டம் முழுப் பாதுகாப்பு ஆகாது. அப்படிப்பட்ட சட்டம் வருகிற போது பாராளுமன்றத்தில் தற்காலிகமாக ஆங்கிலம் நீடிக்கப்படவேண்டும். இன்னும் 10, 15 ஆண்டுகளுக்கு ஆங்கிலத்தை நீடிப்போம், அல்லது இன்னும் 25 ஆண்டுகளுக்கு நீடித்தால் போதும் என்று வரையறைகள் வகுக்கப்படலாம். அப்படி வரையறைகள் ஏற்படுகின்ற அளவுக்குப் பிற மொழி மக்களின் உரிமையைக் குறைப்பதாகத் தான் இருக்கும். ஆகவேதான், இந்த அரசியல் சட்டத்தின் ஆட்சி மொழிப் பிரிவில் காணப்படுகிற முதல் தொடரே மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தாராகிய நாங்கள் விரும்புகின்றோம்.



5th September 1960] [Sri K. Anbazhagan]

The official language of the Union shall be Hindi in Devanagari script.

என்பதே—அந்த விதி.

தேவநாகரி எழுத்துக்களைக்கொண்ட இந்தி மொழிதான் இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்று முதலிலே கூறப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னரே 15 வருஷங்களுக்கு ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது. அது நம்முடைய உரிமையைப் பாதுகாப்பது ஆகாது. இந்த தேசத்திலுள்ள வேறு சில கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் ஆங்கிலத்திற்காகத்தான் நாங்கள் வாதாடுகிறோம் என்று தவறுதலாக நினைக்கக்கூடும். தாய் மொழியை மறந்து ஆங்கிலந்தான் இருக்கவேண்டுமென்று கோருகிறவர்கள் நாங்கள் அல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அல்ல. எங்களுடைய தமிழுக்குக் கிடைக்கவேண்டிய இடம் கிடைத்துவிட்டால், இந்தி அல்லாத பிற மொழிகளுக்கு கிடைக்க வேண்டிய இடம் கிடைத்து விட்டால், இந்தியைப் பயன்படுத்துவதன் காரணமாக நம்முடைய உரிமை ஒரு சிறிதும் பாதிக்கப் படாது என்ற சூழ்நிலை ஏற்படுமேயானால், அந்தச் சூழ்நிலை ஏற்படுகின்ற அளவுக்கு பிற மொழி மக்களுடைய உரிமை தடைப்படாமல் இருக்குமேயானால், அந்த நேரத்தில் ஆங்கிலத்தை விலக்குவது பற்றி, அகற்றுவது பற்றி திராவிட முன்னேற்றக் கழகம் குறுக்கிடாது. இன்றைய தினம் ஆங்கிலத்தை அகற்றுவது, அல்லது அதனுடைய உபயோகத்தைக் குறைப்பது என்ற முறையில் கையாளப்படும்பொழுது, மத்திய அரசில் இந்திதான் அந்த இடத்தைப் பிடிக்கவேண்டும். இந்தி அந்த இடத்தை பிடிக்க பிடிக்க, பிற மொழி மக்களுடைய உரிமை பறிபோகிறது என்ற சூழநிலை இருக்கிற காரணத்தினால்தான் அரசியல் சட்டத்தின் முதல் பிரிவையே திருத்தியாகவேண்டுமென்று நான் வலியுறுத்திச் சொல்லுகிறேன். அது மட்டுமல்ல. முதல் பிரிவை திருத்தினால் மட்டும் போதாது. அதற்கு அடுத்து இருக்கிற பிரிவுகளில் என்ன கருத்து காணப்படுகின்றது. "இண்டர் நேஷனல் நியூமரல்ஸ்" உலகத்தில் பொதுவாகக் கையாளப்டுகின்ற எண்கள் பயன்படுத்தப்படவேண்டுமென்ற கருத்து ஒரு பிரிவில் இருக்கிறதே தவிர, அந்தக் கருத்தைப் புறக்கணிக்கும் வகையில் தேவநாகரி எண்களை பயன்படுத்துவதற்கு ஜனாதிபதி அனுமதி அளிக்கலாம் என்றும் விதி செய்துள்ளனர். இந்தி எண்கள் தமிழ் மக்களுக்கு மட்டும் புரியாதது அல்ல, இந்தியாவிலே பல்வேறு மொழிகளைப் பேசுகிறவர்களுக்கும் புரியாதது ஆகும். அந்த எண்களைப் பயன்படுத்த விதி செய்திருப்பதும், அந்த எண்கள், அந்த இந்தி மொழி பேசும் மக்கள் உள்ள வட்டாரத்தில் வழங்க ஆரம்பித்திருப்பதும், நம்முடைய அமைச்சர் ஒருவர் சுற்றுப் பயணம் செய்யும்பொழுது அவைகளைப் பார்த்தும் புரிந்துகொள்ளக் கூடாத நிலைமை ஏற்பட்டிருப்பதும் இந்த துணை விதி என்ன நிலைமையை உண்டாக்குகிறது என்பதைத் தெளிவாகக் காட்டும். மாறாகத் தமிழ் வெறி நமக்கு இருக்குமானால், தமிழ் எண்களேதான் பயன்படுத்தப்பட வேண்டும் என்றுகூட நாம் கேட்க முடியும். ஆனால், அப்படிக் கேட்பது உலகத்தின் வளர்ச்சியோடு ஒட்டிச் செல்லுவதற்கு உகந்ததாக இல்லை என்ற காரணத்தினால்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எவ்வளவுதான் தமிழ்ப் பற்று வைத்திருந்தாலும், பொது நோக்கத்தை இழந்துவிடாமல் பொது எண்களையே ஏற்றுக் கொண்டுள்ளனர். இன்றைய தினம் இந்தி எண்கள் வழங்கப்படுவதற்குக்கூட வழியும், வாய்ப்பும் அரசியல் சட்டத்தில் இருக்கிறது. அதே நேரத்தில் ஆங்கிலம் ஆட்சி மொழியாக நிலைக்கும் என்ற கருத்து அரசியல் சட்டத்தில் இல்லை. ஆங்கில மொழி தேவையாயின் அந்த அளவுக்கு நீடிக்கப்படலாம் என்ற கருத்தே இருக்கிறது. அதைவிட முக்கியமாக எப்பொழுது வேண்டுமானாலும் ஆங்கிலத்தின் உபயோகத்தைக் குறைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இருக்கிறது. நான் வற்புறுத்திச் சொல்வேன், அகில இந்திய மக்களின் நேரடியான பிரதிநிதிகள் கூடிப் பொது மக்களுடைய விருப்பத்தை அறிந்து அரசியல் சட்டம் உண்டாக்கப்படவில்லை. யார் யாரோ, ஏதோ சில காரணத்தினால் அந்த உயர்ந்த இடத்தில் அமர்த்தப்பட்டார்கள். அப்படிப்பட்டவர்களாலே தான் இந்த அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டது. எனவேதான் இன்று மாறுபாட்டுக்கு இடந்தருகிறது. மேலும் மொழிப் பிரச்னை ஒரு காலத்தில்

[Sri K. Anbazhagan] [5th September 1960

தீர்மானித்து முடித்துவிடக் கூடிய பிரச்னை அல்ல. மொழிப் பிரச்னை காலத்தைஒட்டி மாறிக்கொண்டே இருக்கும். அது மட்டும் அல்ல. மொழியினால் வளர்ந்து வருகிற உணர்ச்சி காலத்தைஒட்டி மாறிக்கொண்டே இருக்கும். 20 ஆண்டுகளுக்கு முன்பாக இருந்ததுபோலல்லாமல் இப்பொழுது தமிழ் எத்தனையோ துறைகளில் வளம் பெற்றிருக்கிறது. மக்களும் உணர்ச்சி பெற்றுள்ளனர். மக்களின் மொழிப்பற்று நாளும் வளர்கின்ற உணர்ச்சியாகும். மக்களின் மொழி உணர்ச்சி வளர்கின்ற காரணத்தினால் அந்த உணர்ச்சி இந்தியுடன் மோதிக்கொள்ளக்கூடாது என்று விரும்பினால், வளர்கின்ற உணர்ச்சிக்கு மதிப்பு அளிக்கவேண்டும். அரசியல் சட்டத்தைத் திருத்தி ஆங்கிலத்திற்கு நேரடியாக ஆட்சி மொழி உரிமை அளிக்கவேண்டும். பிறரிடத்தில் தயவு தாட்சண்யம் காட்டி ஆங்கிலத்திற்கு இடம் அளிப்பது என்பது பிற மொழி மக்களை ஏமாற்றப் பயன்படுமே தவிர, கிளர்ச்சிகளைத் தள்ளிவைக்கவும் கொந்தளிப்பை மூடி வைக்கவும் பயன்படுமே தவிர, உண்மையிலேயே பிற மொழி மக்களின் உரிமைகளை முழு அளவுக்குப் பாதுகாப்பதாகாது.

பண்டித நேரு அவர்கள் உறுதி மொழி அளித்திருப்பதை கனம் அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். பண்டித நேரு அவர்கள் ஆட்சிப் பீடத்தில் இருக்கிற காலத்திலேயே அந்த உறுதிமொழியைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளக்கூடாதா? அரசியல் சட்டத்தை திருத்துவதிலே என்ன தவறு இருக்கிறது? அரசியல் சட்டத்தைத் திருத்த முற்பட்டால் பண்டித நேரு அவர்களின் செல்வாக்கு பறந்துவிடுமா? அல்லது இந்த விண்ணப்பத்தை கனம் சுப்பிரமணியம் அவர்கள் பண்டித நேரு அவர்களிடம் எடுத்துச் சொன்னால் இவருடைய பதவி தான் பறி போய் விடுமா? அல்லது மதிப்புக் குறைந்துவிடுமா? காங்கிரசு ஆட்சி குலைந்து விடுமா? மாறாக அரசியல் சட்டத்தில் பாதுகாப்பு தேடப்படாவிட்டால், பொது மக்களின் ஐயப்பாடு நீங்காததாகையால் அமைச்சர் அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், "திராவிட நாடு திராவிடருக்கே" ஆகின்ற நாள், விரைவாகவே வரும். அதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. இந்த நேரத்தில் அரசியல் சட்டம் திருத்தப்படாவிட்டால், பிற மொழி பேசுகின்ற மக்களுக்குப் பாதுகாப்பு தரப்படாவிட்டால், பொதுவாகவே நாட்டில் விடுதலை உணர்ச்சி மேலும் ஓங்கத்தான் செய்யுமே தவிர, குறைந்துவிடாது. அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் முன்னரும் திருத்தத் தீர்மானம் கொடுத்தோம். இப்பொழுதும் திருத்தத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். அதை அருள் கூர்ந்து அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டு மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**MR. SPEAKER:** பிஸினஸ் அட்வைஸரி கமிட்டி கூட்டத்தின் முடிவுகளைப் பற்றி இப்பொழுது சொல்லுகிறேன்.

## II.—ANNOUNCEMENTS—*cont.*

### (4) BUSINESS OF THE HOUSE.

The House will sit till the 12th September 1960.

On the 6th, 7th and 8th instant, the Draft Third Five-Year Plan of the Madras State will be taken up for discussion.

On the 9th, 10th and 12th instant, Official Bills will be discussed.

The Privilege matter which was raised by the hon. Member, **Sri S. Lazar**, will be taken up on the 7th September.

The notice under rule 41 by the hon. Member, Sri M. **Kalyanasundaram**, will be taken up on 8th September.



5th September 1960]

## VII. GOVERNMENT MOTION—*cont.*

### OFFICIAL LANGUAGE POLICY—*cont.*

**SRI T. L. SASIVARNA THEVAR:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மொழிப் பிரச்னை விவாதத்தின்மீது பேசும்போது, தேசிய மொழியாக 14 மொழிகள் ஏப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைக் குறிப்பிட வேண்டும். அடுத்தபடியாக ஆட்சி மொழி என்ன என்ற பிரச்னை. நம் அரசியல் சட்டம் ஆக்கப்பட்ட காலத்தில் நாட்டில் ஹிந்தி மொழியை ஆட்சி மொழியாக்க முடியும் என்ற உணர்ச்சி இருந்தது. பின்னால் போகப் போக அது சரியாக இருக்கவில்லை. இரு மொழிக் கொள்கைக்கு இடம் ஏற்பட்டது. ஆங்கில மொழி பேசாத மக்கள், ஆங்கிலமும் மாற்று மொழியாக இருக்க வேண்டும் என்ற தீர்மானத்தை மத்திய சர்க்காருக்கு எடுத்துரைக்கப்பட்டது. ஆட்சி மொழி சம்மந்தப்பட்டவரை, இரண்டு மொழிக் கொள்கை, இரண்டு மொழிகளும் இருக்கலாம் என்ற முறை கடைசி வரை இருக்க வேண்டும். ஹிந்தி மொழி இந்த நாட்டில் பரிபூர்ண ஆட்சி மொழியாக ஆக முடியாது. அனுபவ பூர்வமாகச் சொல்லுகிறேன். 1933-34லேயே காந்தியடிகளால் ஹிந்தி பிரசார இயக்கம் ஆரம்பிக்கப் பட்டது. தமிழ் நாட்டிலே அதற்கான ஏற்பாடுகள் செய்தார்கள். ஆனால் அன்று முதல் இன்று வரை அந்த மொழிப் பிரசாரம் நடந்துகொண்டே தான் வருகிறது. இருந்தபோதிலும், எனக்குத் தெரிந்த மட்டில், பொது இடங்களிலே, இரண்டு பேர்கள் ஹிந்தியில் பேசுகிறார்களா என்று பார்த்தால், கிடையாது. அதற்கேற்றாற்போல் ஆங்கிலத்தை எடுத்துக் கொண்டால், அதுவும் சிறப்பாக தமிழ் நாட்டில், ஒரு ரயில் பிரயாணத்தின் போதும், மற்ற இடங்களிலும், தமிழையும் மறந்துவிட்டு, ஆங்கிலத்தில் பேசிக்கொள்வதைப் பார்க்கிறோம். அதே போல் சென்ற 25 வருஷங்களாக பரப்பப்பட்ட போதிலும், யாராவது இரண்டு பேர் நம் மாநிலத்தில் ஹிந்தியில் பேசுகிறார்களா என்று பார்த்தால், கிடையவே கிடையாது. ஆகவே நான் சொல்லுகிறேன், ஹிந்தி தமிழ் நாட்டில் பரிபூர்ணமாக ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்க முடியாது என்று.

(உதவி சபாநாயகர் தலைமை.)

ஆங்கிலம் அன்னிய மொழியாக இருந்தாலும், அது அடிமைச் சின்னம் என்று கருதுவதாக இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தோடு நாங்கள் ஆங்கிலம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று ஆதரிப்பதற்குக் காரணம் ஒன்றே ஒன்றுதான். இன்றைய நிலையில், மத்திய சர்க்காரோடு கடிதப் போக்குவரத்து நடத்துவதற்கு, தெலுங்கிலோ, தமிழிலோ, மற்ற மாநில பாஷையிலோ முடியாது; வேறு வழியில்லாததால், ஆங்கிலத்தை அபரபக்ஷமாக ஏற்றுக்கொள்வதில் தவறில்லை. 1970-80-ல் ஹிந்தி கூடுமான அளவு, தமிழ் மக்களும் பேசும் அளவுக்கு வளர்ந்து அம்மாதிரிச் சூழ் நிலை, ஏற்பட்டால், அன்றைக்கு இருக்கும் நிலைமைக்குத் தக்கவாறு செய்துகொள்ளலாம். ஆனால், இன்றைய தினம் ஹிந்தியைப் புகுத்துவது நல்லதல்ல. மத்திய சர்க்கார் சம்பந்தப்பட்ட வரையில், ஹிந்தியை மறைமுகமாகப் புகுத்துகிறார்கள், இல்லை என்று சொல்ல முடியாது. நிதியமைச்சரவர்கள் அரசியல் சட்டத்தைப் படித்தார்கள். அநேகம் பேர்கள் படித்திருக்கிறார்கள்; நானும் படித்திருக்கிறேன். ஆனாலும் திரு. அன்பழகன் சொன்ன படி, அந்தப்படி நிறைவேற்றவில்லை. மத்திய சர்க்கார் சம்பந்தப்பட்ட வரை ஹிந்தியைப் புகுத்துவதில் பின்வாங்கமாட்டார்கள் என்பது தெளிவாக இருக்கிறது. அதை மணியார்டர் பாரத்தில் பார்க்கிறோம். சமீபத்தில் மானாமதுரை முதல் ராமேஸ்வரம் வரை ஹிந்தி எண்ணில் மைல் கல்களில் எழுதப்பட்டிருக்கிறது. அது சரியாகக் கூட எழுதப் படவில்லை. கோணக் கோண எழுதியிருக்கிறார்கள். அதைக்கூட சரியாக எழுதவில்லை. சமீபத்தில் ஒரு வக்கீல் வீட்டில் இருந்தேன். அவர் அந்த சமயம் ஒரு மணியார்டர் பாரத்தில் கையெழுத்துப் போட "எங்கு போட வேண்டும்" என்று கேட்டார்கள். நான், என்ன தங்களுக்கு அது கூடத் தெரியாதா என்றேன். அப்படிப் படித்தவர்களே புரிந்துகொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. கடைசியில் போஸ்ட்மேன்தான் வழி காட்ட வேண்டும். அவனும், ஆங்கிலத்தில் பார்த்த பழக்கத்தில், அந்த இடம் எது என்று காட்ட முடியுமே தவிர, ஹிந்தி தெரிந்து சொல்வதாக இல்லை.

கனம் அமைச்சரவர்கள் சொன்னார்கள், கனம் பிரதம மந்திரி கொடுத்திருக்கும் வாக்குறுதியை ஏற்றுக்கொள்ள வேண்டும், அதை நம்பவேண்டும் என்று. என்னிடம் இப்பொழுது, அந்த பேப்பர் கட்டிங்ஸ் இல்லை. நான் நிச்சயமாக நிரூபிக்க முடியும். நேரு அவர்கள் பேசுவது அவ்வப்பொழுது சமாதானப்படுத்துவதாக இருக்கிறதே ஒழிய வேறொன்று மில்லை. ராஷ்டிரபதி பேச்சு ஹிந்தியைப் புகுத்துவதாக இருக்கிறது. அப்படிப்பட்ட சமயங்களில், கிளர்ச்சி ஏற்பட்டால், "பயப்படவேண்டாம்; ஒன்றும் கெட்டுவிடாது" என்கிறார்கள் நேரு அவர்கள். ஒருவர் செய்வதைச் செய்துகொண்டே போகிறார், மற்றவர் சமாதானம் செய்யக் கிளம்புகிறார்.

சமீபத்தில் தமிழ் நாட்டுக்கு மேன்மைதங்கிய ராஜன் பாபு அவர்கள் வந்தார்கள். திராவிட முன்னேற்றக் கட்சி எதிர்ப்புக் கிளர்ச்சி ஆரம்பித்தார்கள். உடனே திரு. நிதியமைச்சரவர்கள் ஒரு அறிக்கை விட்டார்கள். கிளர்ச்சி கைவிடப்பட்டது. ராஷ்டிரபதியவர்கள், ராஜன் பாபு அவர்கள் முதன் முதலாக மனம் விட்டு பேசியது பீச்சு மீட்டிங்கில் தான். அதற்கு முன்னால் அவர்கள் அப்படிப் பேசவில்லை. "ஹிந்தியை நாங்கள் திணிக்கிறோம் என்று சொல்லி, ஆங்கிலத்தை எங்கள் மீது திணிக்காதீர்கள்" என்றார்கள். ஆங்கிலம் புதிதல்லவே, ஆங்கிலம் ஏற்கெனவே உள்ள பாஷை. ஹிந்தி பேசும் மக்களுக்குங்கூட தெரிந்த பாஷை. எல்லோருக்கும் தெரிந்த பாஷை. ஹிந்தியை மக்களும், படித்தவர்களும் சரி, படிக்காதவர்களும் சரி, மாணவர்களும் உபயோகிக்க முடியவில்லை. எங்கு பார்த்தாலும் ஒரே தகராறு. ஆகவே, இந்த விஷயத்தில் சட்ட பூர்வமாக திருத்தம் ஏற்படுத்த வேண்டும். ஹிந்தி மொழி பேசாத மக்கள் ஒரு முடிவு செய்யும் வரை, நிர்வாக மொழியாக ஆங்கிலம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று திருத்தம் செய்ய வேண்டும். அவர்கள் எல்லாம் சரியாகத்தான் செய்வார்கள் என்று நம்பிக் கொண்டு இருக்க முடியாது. அவர்கள் சொல்லுவதை சட்ட பூர்வமாகச் செய்யட்டுமே, அதில் சென்னை அரசாங்கத்திற்குக் கஷ்டம் ஒன்றுமில்லை. ஆனால், அமைச்சரவர்கள் கஷ்டப்படுவார்கள். நம் நிதியமைச்சர் இருக்கிறார்கள். நல்ல தமிழ் ஆர்வம் உள்ளவர்கள். சட்ட சபைக்கு வந்தவுடனேயே அவர்கள் உணர்ச்சிகள் அதிகப்படுகிறது. சுத்தத் தமிழர். ஆனாலும், டெல்லிக்குப் போனவுடன், காங்கிரஸ்காரர் ஆகிவிடுகிறார்கள். விட்டுக் கொடுக்கும் சுபாவம் மேலோங்குகிறது. அவர்கள் இந்த ஒரு விஷயத்தில் மட்டும் காங்கிரஸ்காரராக இருக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே, உறுதிமொழியை சட்டபூர்வமாகச் செய்ய வேண்டும். அது அவசியம் பரிபூர்ணமாக திருத்தியமைக்கப்பட்டாக வேண்டும். இல்லையேல், பெரிய ஆபத்து ஏற்படும். 1965-க்குப் பின்னால் ஹிந்தியை புகுத்தக் கிளம்பினால், நாம் கிளர்ச்சி நடத்துவதாக இருந்தால், மற்ற காரியங்கள் தடைபடும். திட்டங்கள் சரிவர நடைபெறாது. அப்படித் திருத்தம் கொண்டுவராத வரையில், தொந்தரவு தீராது. அப்படிச் செய்தால் தான் இந்தப் பிரச்னைக்கு ஒரு 'புல் ஸ்டாப்' போட முடியும்.

தாய் மொழி சம்பந்தப்பட்டவரை, தமிழ் மொழி ஆட்சி மொழியாக இருக்கிறது. அதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். அதில்கூட சர்க்கார் மேலெழுந்தவாரியாகத்தான் இருக்கிறார்கள். ஒவ்வொரு தாலூகாவாக, ஜில்லாவாகச் செய்துகொண்டு போனால் நாம் சீக்கிரத்தில் முன்னேற முடியாது.

சமீப காலத்தில் கம்யூனிஸ்ட் சீனாவில், சியாங்–கே–ஷேக் ராஜ்யம் போய் மாஸே-துங் ராஜ்யம் வந்தவுடன், சகல பொதுக் காரியங்களும் சீன மொழியிலேயே இருக்க வேண்டும் என்று உத்தரவு போட்டு நிறைவேற்றி வருகிறார்கள். ஆகவே, உடனுக்குடன் ஒரு கருத்தை அமுல் நடத்த வேண்டுமென்றால், துணிச்சலுடன் செய்ய வேண்டும். தாலூகாவாரியாக, ஜில்லாவாரியாகச் செய்வானேன்? மாகாணம் பூராவிலும் உடனடியாகத் தமிழைக் கொண்டு வர என் தைரியமில்லை. அது கேவலமான காரியம்; வெட்கப்படக் கூடிய காரியம். கல்வியிலும் பரிபூர்ணமாகத் தமிழைக்





கொண்டு வரவில்லை. ஒரே கந்தரகோளமாக இருக்கிறது. 10-வது வரை தமிழில் போதித்து விட்டு, 11-வதிலிருந்து பூரா ஆங்கிலத்திலும் போதிக்கும்போது, மாணவர்கள் எப்படிப் படிக்க முடியும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஆகவே இப்பொழுது கோவை ஜில்லாவில் மட்டும் பரீட்சார்த்தமாக வைத்திருக்கிறார்கள். அதற்கு வேண்டிய பயிற்சி கொடுக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கு எடுத்துக்கொண்டது போன்று ஏன் எல்லா இடங்களிலும் எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளக்கூடாது என்று கேட்கிறேன். அந்த விதத்தில் ஏன் பரிபூரண மான ஒரு உத்தரவைப் போடக் கூடாது என்று கேட்கிறேன். அப்படிச் செய்திருந்தால் ஆட்சியாளர்களுக்கு எந்தவிதமான கஷ்டமும் இருந்திருக்கமுடியாது. தமிழ் மொழியை பரிபூர்ணமாகக் கொண்டுவர வேண்டுமானால் துணிச்சலாக அதற்கு வேண்டிய உத்தரவைப் போட்டுக் கொண்டு வரவேண்டும். இதற்கு முன் தமிழ் நாட்டில் எத்தனையோ மொழி ஆட்சி செலுத்தி வந்தன என்று ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி குறிப்பிட்டார். அதற்கு பல காரணங்களையும் எடுத்துக் கூறினார். ஒரு நாடு யாருக்கு அடிமைப்பட்டிருக்கிறதோ அவருடைய மொழிதான் ஆட்சி மொழியாக இருக்கும். அப்படித்தான் இது வரையிலும் தொன்று தொட்டு வந்திருக்கிறது. ஆங்கிலேயர்கள் ஆட்சி நடத்திய காலத்தில் அவர்களுடைய மொழிதான் நமக்கு ஆட்சி மொழியாக இருந்தது. அதற்கு முன் தெலுங்கு பேசியவர்கள் ஆட்சியாளராக இருந்தபோது தெலுங்கு ஆட்சி மொழியாக இருந்தது. அதைப் போலவே மராட்டியர்கள் ஆட்சியாளர்களாக இருந்தபோது மராட்டி மொழி ஆட்சி மொழியாக இருந்தது. அதைப் போலவே இப்பொழுது தமிழர்கள் ஆட்சி நடத்துகிறார்கள். அதனால் தமிழ்தான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும். அதன்படி தான் சட்டமும் இயற்றி இருக்கிறார்கள். ஹிந்தி மத்திய சர்க்காருடைய அளவில் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமானால் அந்த அளவில் நம் ராஜ்யத்தில் தமிழ் மொழி ஆட்சி மொழியாக இருக்க வேண்டும். அந்த நிலைமைக்கு தமிழ் மொழி வரவேண்டும் என்பதை தெரிவித்துக் கொண்டு என்னுடைய கருத்துக்களைச் சொல்லி இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

**Sri K. SATTANATHA KARAYALAR:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மொழி கொள்கை விவாதத்தின் போது இரு மொழி கொள்கையை நாம் ஒத்துக்கொள்கிறோமா அல்லது நமது மாகாண சர்க்கார் கூறும் இதே நிலையில் ஒத்துக்கொள்ளுகிறோமா இல்லையா என்பதைப் பற்றி எனக்கு முன் பேசிய நண்பர்கள் பல கருத்துக்களை தெரிவித்துள்ளார்கள். அதில் ஹிந்தி அவசியம் அகில இந்திய மொழியாக இடம் பெறும். அப்படி இடம் பெற்றாக வேண்டும் என்று சொல்லக் கூடிய நண்பர்களும் பேசினார்கள். இன்றைய நிலையில் பேசும்போது எந்த அளவு உணர்ச்சியை உண்டு பண்ணக்கூடியதாக இருக்கிறது இந்தப் பிரச்னை என்பதை சற்றுக் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. அதற்கு முக்கியமான காரணம் அகில இந்திய ரீதியில் ஹிந்திக்கு என்ன இடம் வேண்டும் என்று ஹிந்தி பிரியர்கள் சொல்வதைப் பார்த்துத் தான் இந்தப் பிரச்னைக்கு இப்படிப்பட்ட சூடு ஏறி இருக்கிறது. ஹிந்தி நிலைமையைப் பற்றிப் பேசும்போது ஆங்கிலம் பேசுகிறவர்களுக்கு ஆங்கில மொழி எப்படியோ, பிரெஞ்சு பேசுகிறவர்களுக்கு பிரெஞ்சு மொழி நிலை எப்படியோ அப்படியே தான் ஹிந்தி பேசுகிறவர்களுக்கும் ஹிந்தி மொழியின் நிலை. அதனால்தான் ஹிந்தி பேசாத பகுதியிலுள்ளவர்கள் அதற்கு இவ்வளவு பெரிய எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்கள். சமீப காலத்தில் சென்னை அரசாங்கத்தைப் பொறுத்த மட்டிலும் ஹிந்தி மாத்திரம் அல்ல இதர வட்டார மொழிகளும் அகில இந்திய ரீதியில் இடம் பெற வேண்டும் என்ற வாதம் நமது மாகாணத்திலிருந்து கிளம்பியுள்ளது. இந்த வாதம் எந்த அளவு இதர மாகாணங்களில் உதவி இருக்கிறது என்பதை நாம் பரிசீலனை செய்ய வேண்டும். இங்கு ஆளும் கட்சியும் மத்திய அரசாங்கத்தில் ஆளும் கட்சியும் வெவ்வேறு அரசியல் கட்சிகள் இல்லை என்றாலும் அரசியல் கட்சிகள் மொழிப் பிரச்னை பொறுத்த மட்டில் இரு மொழி கொள்கையைப் பற்றிப் பேசுகிறார்கள். தேசத் தலைவர்களும் சரி, ஆளும்

[Sri K. Sattanatha Karayalar] [5th September 1960

கட்சியைச் சேர்ந்தவர்களும் சரி ஒரே விதமாகப் பேசுவதாக இல்லை. ஒரு குரலில் பேசுவதாக இல்லை. அதற்கு ஒன்றிரண்டு அல்ல பல உதாரணங்களைக் கொடுக்க முடியும். அதனால் பல விதமான சங்கடத்தை உண்டாக்கி இருக்கிறது. ஹிந்தி நம்மீது கட்டாயமாக சுமத்தப்படுகிறது என்றும் சொல்லப்படுகிறது. எந்த அளவு ஹிந்தி இங்கே புகுத்தப்படுகிறது என்பதைப் பற்றி காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களும் சொல்லியிருக்கிறார்கள். அதை தடுத்து நிறுத்துவதற்கு நமது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைக் கேட்க ஆசைப்படுகிறேன். அதே நேரத்தில் நாம் போகக்கூடிய வழியில், நம் மாகாணத்தை விட்டு விட்டு இதர மாகாணத்தைப் பார்த்தால் நாம் போகக்கூடிய இந்த நிலைமையில் அவர்கள் ஒத்துக்கொள்கிறார்களா என்றால் அதுவும் சந்தேகத்திற்கிடமாகத்தான் இடம் கொடுக்கிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய நிலை தொடர்ந்து போனால் ஒரு சில ஆண்டுகளுக்குப் பிறகு அதாவது இன்னும் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு நம் நாட்டில் என்ன நிலை ஏற்படும் என்பதைப் பார்க்க வேண்டும். அண்டை ராஜ்யங்களில் ஹிந்திக்கு தயாராகிவிட்டார்கள் ஆகவே நீங்களும் தயாராக வேண்டும் என்று மத்திய அரசாங்கம் சொல்லக்கூடிய அளவுக்கு வந்து விடும். அந்த நிலைமைக்கு நம்மைக் கொண்டு போய்விடக் கூடியதாக இருக்கிறது நமது அரசாங்கத்தினுடைய கொள்கை என்பதை நான் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. திட்ட வட்டமாக ஒரு கொள்கையை வகுப்பதற்கு பதிலாக கொஞ்ச காலத்திற்குத் தொடர்ந்து ஆங்கிலம் இருக்க வேண்டும் என்று மாத்திரம் சொல்லிவிட்டு, அதற்கு அரசியல் சட்டத்தில் அதற்கு வேண்டிய திருத்தம் கொண்டு வர வேண்டாமா ? இல்லாவிட்டால் அது எப்படி நடைபெற முடியும் ? ஆனால் இங்கு தேசத் தலைவர்கள் பேசிய காலங்களில் ஹிந்தி கட்டாயமாக புகுத்தப் படாது என்றும் அதைப்போலவே ஆங்கிலத்தை எங்கள் மீது கட்டாயமாக புகுத்தாதீர்கள் என்றும் கூறுகிறார்கள். ஆங்கிலத்தை புதியதாக புகுத்தப் போகிறது என்கிற அடிப்படையில் அப்படிப் பேசினார்கள். அது புதியதாக புகுத்தப் போவதே இல்லை. ஏற்கெனவே அது நம்மிடையே இருந்து வருகிறது. ஏற்கெனவே இருக்கக்கூடிய ஆங்கிலத்தை எங்கள் மீது புகுத்தாதீர்கள் என்று சொன்னால் அது வட நாட்டுத் தலைவர்கள் பேசக்கூடிய பேச்சுதானே. இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில் யதார்த்தத்தை அது மறைப்பதாக ஆகும். ஹிந்தி கட்டாயமாக புகுத்தப்படும் என்ற நிர்ப்பந்தம் ஏற்படுகிறது என்று சொல்லக்கூடிய இந்த நேரத்தில் இப்படிச் சொல்லப்படுகிறது. ஆகஸ்ட் மாதம் 31-ம் தேதி ராஜ்ய சபையில் ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும்போது தத்தார் அவர்கள், ஆங்கிலம் அசோஷியேட் லாங்குவேஜாக தொடர்ந்து இடம் பெறும் என்று கூறியுள்ளார். அதற்காக கூடிய சீக்கிரம் ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வரப் போகிறார்களாம். அப்படிப்பட்ட திருத்தம் வரும்போது ஆங்கிலம் ஒரு துணை மொழியாகத்தான் வரும் என்றும் கூறியுள்ளார். அது பொது மொழியாக இருக்காது. பண்டித நேரு அவர்கள் ஆற்றிய உரையின் மொழிபெயர்ப்பு நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஹிந்தி மொழியில் ஒரு சொல் கூட புரியாமல் இருக்கிறவர்களுக்கு ஹிந்தி புகுத்தப் படமாட்டாது என்று சொல்லியிருக்கிறார். அவர்கள் மீது நிர்ப்பந்தப்படுத்தப் படாது என்றும் சொல்லி இருக்கிறார். அதற்கு பதில் சொல்லும் போது இங்கு என்ன சொல்லி இருக்கிறார்கள் என்றால்,

**" The orders of the Home Ministry were not at all in conflict with the assurance "**

என்று பதில் சொல்லி இருக்கிறார். அதைப் பார்க்கும் போது இன்றைக்கு ஹிந்தி மொழியில் தேர்வு பெற்றால்தான் இன்றைக்கு உத்தியோக உயர்வு கிடைக்கும் என்று இருக்கிறது. இதைப் பார்க்கும்போது பிரதம மந்திரி சொல்லியுள்ளதற்கும் இதற்கும் முரணை இருக்கிறதல்லவா ? ஒரு உத்தரவாதம் இல்லாமல் இருக்கிறது. இது போன்ற கொள்கைகள் இருப்பதால்தான் தமிழ் மக்களிடத்தில் ஒருவித கலவரத்தை உண்டு பண்ணியிருக்கிறது. நாட்டில் பொதுவான மொழி இருப்பதைப்பற்றி அபிப்பிராயப் பேதம் இருக்க முடியாது. ஒரு மொழி வளருவதற்கு அதிகப்படியான காலம் ஆகும். மொழி வளருவதற்கு எவ்வளவோ



5th September 1960] [Sri K. Sattanatha Karayalar]

காலம் ஆகும். அதற்கு கணக்குப் பார்க்க முடியாது.. அகில இந்திய ரீதியில் சில திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கிறோம். டெசிமல் காயினேஜ் கொண்டு வந்தோம், அதை இத்தனை ஆண்டுகளுக்குள் அமுலுக்கு கொண்டு வரலாம் என்று சொல்லிக்கொண்டு வந்தோம். அதைப் போலவே மற்ற எல்லா காரியங்களையும் அமுலுக்கு கொண்டு வரும்போது இத்தனை காலத்திற்குள் அமுலுக்கு வர வேண்டும் என்று சொல்லி அமுலுக்குக் கொண்டு வருகிறோம். ஆனால் ஒரு மொழியை இவ்வளவு காலத்திற்குள் கற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்வது அவ்வளவு சரியல்ல. துரதிருஷ்டவசமாக ஹிந்திப் பிரியர்கள் இவ்வளவு காலத்திற்குள் அதை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று சொல்வதால்தான் அதற்கு இவ்வளவு எதிர்ப்பு ஏற்பட்டிருக்கிறது. ஐந்து வருஷத்திற்குள் வளரும் என்பது இல்லை. பல வருஷங்களாகும். ஆயிரம் காலத்துப் பயிர் என்று சொல்லுவார்கள். அதைப் போலதான் இதுவும் இருக்கிறது. மொழி சம்பந்தமாக தலைவர்கள் இடையிலேயே அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன. பொதுவான மொழி எது என்று அறிவிக்கப்பட வேண்டும். அது ஹிந்தியாகவும் இருக்கலாம் அல்லது வேறு எந்த மொழியாகவும் இருக்கக்கூடும். சமீபத்திலே ஸ்ரீ ஹரங்டன் போன்ற அறிஞர் சொல்லும்போது இன்று பொதுவாக எல்லா இடத்திற்கும் நியாயமான பொது மொழி ஒன்று இருக்கவேண்டும் என்றால் அது தெலுங்கு மொழியாகத்தான் இருக்கவேண்டும், அதுதான் வடமொழிக்கும் தென்மொழிக்கும் இணைப்பாக இருக்கிற பொதுமொழி என்று கூறியிருக்கிறார். வருங்காலத்தில் எந்தமொழி இடம் பெறும் என்று இன்றைக்கு நாம் சொல்ல முடியாது. நாமே நிர்ணயிக்கவும் முடியாது. நமது தமிழ்மொழியிலேயேகூட இன்றைக்கு அநேகம் பிறமொழிச் சொற்கள் நிரந்தரமாக இடம் பெற்றிருக்கின்றன. உதாரணமாக ஜன்னல், ஜாடி, பீங்கான் போன்ற பல சொற்கள் நிரந்தரமாக இடம் பெற்றிருக்கின்றன. இன்னும் ஆங்கிலச் சொற்களேகூட ஆங்காங்கு பலப் பல வட்டாரங்களில் அவர்களுடைய சொல்லாகவே கலந்திருக்கிறது. மலையாளத்தில் காலேஜ் என்பது கோலேஜ் என்று வழக்கத்தில் இருக்கிறது. வராண்டா என்பது பராண்டா என்று வங்காளத்தில் வழங்கப்படுகிறது. ஒருமொழியே ஒரே பிரதேசத்தில் பலப்பலவாக வழங்குகிறது. ஓரிடத்தில் சாதம், ஓரிடத்தில் அன்னம், ஓரிடத்தில் சோறு என்று வழங்கப்படுகிறது. ஆகவே தேசம் பூராவுக்கும் ஒரு பொதுமொழி ஏற்படவேண்டும் என்றால் அது நீண்ட காலத் திட்டம். ஒருபுறத்தில் இந்தி பிரசார சபையைப் போன்ற ஸ்தாபனங்கள் பிரசாரம் செய்து வரட்டும். காலப்போக்கில் எது இந்தியாவின் பொதுமொழியாக அமைகிறதோ அது அமையட்டும். ஆனால் இன்றையதினம் பள்ளிக்கூடங்களில் இரண்டாவது மொழியாக-மூன்றாவது மொழியாக ஒரு மொழி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று செய்து அதை மறைமுகமாக இந்திமொழியாக்கித் திணிப்பது என்றால் அது சரியாகாது. அப்படித்தான் அது மறைமுகமாக இன்றைக்கு அமுலுக்கு வந்து கொண்டிருக்கிறது. ஆப்ஷனலாக அதை வைத்தாலும்கூட இன்றைய தினம் இந்தியைத் தவிர வேறு மொழியை எடுத்துக்கொள்ள வசதியே இல்லை. தென்னிந்திய மொழிகளிலேயே மலையாளம், அல்லது கன்னடம் அல்லது தெலுங்கு எடுத்துப்படிக்க ஒருவன் விரும்பினாலும் அதற்கு வழியில்லை. இதன் காரணமாக என்ன ஏற்படுகிறது என்றால் கட்டாய பாடமில்லை என்றாலும் மறைமுகமாக இந்தி கட்டாயபாடமாகவே ஆக்கப் படுகிறது. கல்லூரிக்கு வரும் வரையில் பாடங்களைத் தமிழில் படித்துவிட்டு, கல்லூரிகளுக்கு வரும்போது இன்றையதினம் ஆங்கிலம் இடம் பெறுகிறது. இனி அங்கும் இன்னொரு மொழி படிக்கவேண்டும் என்கிறபோது அது இந்தியாகத்தான் மறைமுகமாகத் திணிக்கப்படுகிறது. ஆகவே இதைத் தெளிவுபடுத்தவேண்டியது அவசியமாக இருக்கிறது. அகில இந்திய போட்டிகளில் இந்தியும், ஆங்கிலமும் தொடர்ந்து நிலைபெறவேண்டும் என்கிறபோது எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர்கள் தமிழும் அதில் இடம்பெறவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். இதைப்பற்றி எனக்கு நம்பிக்கையில்லை. ஏனென்றால் தமிழ் நிலைபெறவேண்டும் என்கிற போது மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்ற இதர எல்லா மொழிகளும்கூட இடம்பெறவேண்டும் என்று வற்புறுத்துவதற்கு இடம் இருக்கிறது. அது நடைமுறையில் சாத்தியமாக ஏற்படுவதாகாது. அகில

[Sri K. Sattanatha Karayalar] [5th September 1960

இந்திய ரீதியில் போட்டிப் பரிட்சைகளில் இந்தியிலேயே ஒரு பரிட்சை இந்தி அல்லாதவர்கள் எழுதவேண்டியிருப்பதுபோலவே இந்திக்காரர்கள் தென்னிந்திய மொழி ஒன்றில் அவ்வாறு பரிட்சை எழுதவேண்டும் என்று வற்புறுத்துவது அவசியமாகும். வடமொழியை தென்னிந்தியக் கல்லூரிகளில் புகுத்தும்போது தென்மொழி ஒன்றை கட்டாயமாக வடஇந்தியக் கல்லூரிகளில் புகுத்துவதுதான் நியாயமானது. தென்மொழி ஒன்றைப் பற்றி அவர்கள் மொழியில் உப-பரீட்சை எழுதுவது அல்ல, தென் மொழியிலேயே எழுதக்கூடிய பரிட்சையாக அது இருக்கவேண்டும். அப்போதுதான் நாம் எல்லோரும் ஒரு தேசத்தைச் சேர்ந்தவர்கள் என்ற மனப்பண்பு வளரும்.

இதற்கடுத்தபடியாக நான் சொல்ல விரும்புவது கல்லூரிகளில் எந்த மொழி போதனா மொழியாக இருக்கவேண்டும் என்பது பற்றி. உடனடியாக எல்லாக் கல்லூரிகளிலும் தமிழ் போதனா மொழியாக வரவேண்டும் என்று நண்பர்கள் பேசினார்கள். நானும் அதை வரவேற்கிறேன். ஆனால் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாக் கல்லூரிகளிலும் தமிழ் மொழியே போதனா மொழியாக ஆக்கிவிட்டால்—இந்தியா அரசாங்கப் பொதுப் போட்டியிலே கலந்துகொள்ளக்கூடிய மாணவர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்றது என்பதுதான். நமது அண்டை அயலில் உள்ள எல்லா மாகாணங்களும் நம்மைப்போலவே ஒரு கொள்கையைக் கடைப்பிடித்து எல்லா மாகாணத்தவர்களுக்கும் பொதுப்பாதுகாப்பாக சில ஏற்பாடுகள் செய்யப்படுவதற்கு முன் நமது மாகாணத்தில் மாத்திரம் தமிழை எல்லாக் கல்லூரிகளிலும் போதனா மொழியாக ஆக்கிவிட்டால் இதன் காரணமாக நம் பிராந்திய மாணவர்கள் பின் தங்கிவிடக்கூடிய ஒரு நிலையை உண்டாக்கிவிடக் கூடாது. ஆகவேதான் ஒன்றுக்கும் மேற்பட்ட கல்லூரி இருக்கும்போது ஒன்றில் தமிழ் போதனா மொழி என்றால் மற்றொன்றில் ஆங்கிலமே போதனாமொழியாக நீடிக்கும்படி செய்தால் நமது மாணவர்களுக்கு சரியான வாய்ப்பும், வசதியும் இருக்கும. காலவரையறையின்றி ஆங்கிலம் பொது மொழியாக நீடிக்கும் வரை இந்த ஏற்பாடு நம் ராஜ்யத்திலும் காலவரையறையின்றி நீடிக்க வேண்டும். எப்போது மாறுதல் ஏற்பட வேண்டும் என்று நாம் நிர்ணயிக்க வேண்டியதில்லை. ஒரு தலைமுறையிலே, அல்லது பல தலைமுறைகளுக்குப் பிறகோ அதன் போக்கிலேயே தானே மாறுதல் ஏற்பட்டுக்கொள்ளும்.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். இந்திக்கு நல்ல பிரசாரம் இருக்கட்டும். வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் தமிழ் அன்பர்கள், தமிழர்கள், தமிழ் மொழி வளரவேண்டும் என்கிற நினைப்பு உடையவர்கள் எல்லாம் ஒரு விஷயத்தைச் சிந்திக்கவேண்டும். இன்றைய தினம் ஆலப்புழையில் உள்ள தமிழர்கள்—தமிழ் படிக்கவேண்டும் என்றால் வசதி கிடையாது. திருவனந்தபுரத்தில் ஒன்றிரண்டு இடங்கள் வேண்டுமானால் இருக்கலாம். மைசூரில் உள்ள தமிழர்கள் தமிழ் படிக்க வேண்டும் என்றால் வசதி கிடையாது. இன்னும் ஹைதராபாத்தில் நிறையத் தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய குழந்தைகள் தமிழ் படிக்கவேண்டும் என்றால் வசதி கிடையாது. காசிப்பட்டில் தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய குழந்தைகளுக்குத் தமிழ் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்றால் வசதி கிடையாது. ஆக்ராவில் மூவாயிரம் தமிழர்கள் இருக்கிறார்கள். இன்னும் பம்பாயில் மட்டுங்காவில் வேண்டுமானால் குழந்தைகள் தமிழ் படிக்க வசதி உண்டு. தாதர் பகுதியில் 30 ஆயிரம் தமிழர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய குழந்தைகள் தமிழ் படிக்க வசதி கிடையாது. நாம் கல்விக்காக எத்தனையோ கோடி செலவு செய்து வருகிறோம். இப்படி நம் ராஜ்யத்திற்குள்ளேயே கல்விக்காகச் செலவு செய்வது மட்டும் போதாது. இந்திப் பிரசார சபை போல ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தி—தமிழ் மக்கள் எங்கெங்கு வாழ்கிறார்களோ அங்கெல்லாம் நம்முடைய குழந்தைகள் தமிழ் படிக்க வசதி செய்து கொடுக்கவேண்டியது நம்முடைய கடமையாகும். தமிழ் மொழியை வளர்ப்பதற்குப் பாடுபடுவது போல, தமிழ் மொழியைப் பாதுகாப்பதற்கும் நாம் தக்க வழிவகை செய்ய வேண்டும். எந்த மொழி இந்தியாவின் பொது மொழியாக இருக்கவேண்டும் என்பதை நாம் நிர்ணயிப்பதற்கில்லை. எந்த மொழி அவ்வாறு உருவாகிறதோ அது வரையில் இந்தி பேசாத பகுதி மக்களுக்குத் தக்க பாதுகாப்புக் கொடுக்கிற வகையில் அரசியல் திட்டத்தைத் திருத்தும் போது திட்ட வட்டமாகத் திருத்தவேண்டும். அரசியல் அமைப்பு பார்ட் 17-ல் பல திருத்தங்கள் அவசியம் என்று நினைக்கிறேன். அதிலே முதலில்—



5th September 1960] [Sri K. Sattanatha Karayalar]

**"Official language of the Union shall be Hindi in Devanagiri script and English"**

என்று இருக்கவேண்டும். ப்ரொவைசோவைப் பொறுத்த மட்டில்—

**"Provided that the President shall not make any change after the period of 15 years except with the concurrence of non-Hindi speaking people."**

என்று திட்டவட்டமாக இருக்கவேண்டும். இதையொட்டி பல திருத்தங்கள் அந்தப் பகுதியில் செய்யப்படலாம். அவைகளைச் செய்ய வேண்டியது மிகவும் அவசியம். அப்படிச் செய்தால் தான் இப்போதுள்ள பயம் நீங்கும். இந்திய தேச மக்கள் எல்லோரிடத்திலும் ஒரு ஒற்றுமையும், தேச ஐக்கிய உணர்ச்சியும் ஏற்படவேண்டும், நம்முடைய மக்களுக்கும் சரியானதொரு வாய்ப்பை, பாதுகாப்பை உண்டாக்கியவர்களாவோம் என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 3 p.m. 1-30 p.m.

The House then adjourned for lunch.

**(After lunch 3 p.m.)**

**(Mr. Speaker in the Chair.)**

SRI A. R. MARIMUTHU : கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது இச்சபையில் நடந்து கொண்டிருக்கும் மொழிப் பிரச்னை பற்றி விவாதத்தில் நான் என் கருத்துக்களை சொல்ல முன் வந்துள்ளேன். பொதுவாக, மொழிப் பிரச்னையை அணுகும்போது இந்த தேசம் ஒன்று என்ற கண்ணோட்டத்தில் தான் நாம் இப்பிரச்சனையை அணுக வேண்டும். தேசம் பிரிக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தில் மொழிப் பிரச்சனையை அணுகினோமானால் இந்திய தேசத்தின் மொழிப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு பதிலாக ஒரு பெரும் குழப்பமான நிலையைத்தான் இந்த நாட்டில் ஏற்படுத்த முடியுமே தவிர ஒரு நியாயமான முடிவிற்கு நாம் வர முடியாது. ஆகவே மொழிப் பிரச்சனையை நாம் ஆராயும்போது தேசம் ஒன்று என்பதை கருத்திற்கொண்டு ஆராய வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இன்று தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் தமிழை இந்தமாநில அரசாங்க மொழியாக நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். தமிழை எந்தளவிற்கு மாகாண அரசாங்கத்தின் நிர்வாக மொழியாக மாற்ற வேண்டுமோ அந்த அளவிற்கு துரிதமாக நாம் தமிழைப் புகுத்திய பிறகு அகிலயிந்திய ரீதியில் தொடர்பு மொழியாக எதைக் கொள்ள வேண்டுமென்ற பிரச்சனை வரும்போது அதை ஆங்கிலமாக வைப்பதா அல்லது இந்தியாக வைப்பதா என்று பிரச்னைதான் முன் வருகிறதே தவிர தமிழை மாற்றி அல்லது தமிழை அழிப்பதற்காக இந்தி கொண்டு வரப்படுகிறது என்ற வாதத்திற்கு இடம் கிடையாது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் தமிழுக்கு எந்தளவு முக்கியத்துவம் கொடுக்க முடியுமோ அந்தளவுக்கு தமிழை ஆட்சி பீடத்தில் ஏற்றிய பிறகு தமிழை புகுத்தமுடியாத இடத்தில் ஆங்கிலத்தை வைப்பதா அல்லது இந்தியை வைப்பதா என்று வரும்போது, ஒரு இந்தியன் என்ற முறையில் ஆங்கிலத்தை நாம் நீடித்து வைத்துக் கொள்ள முடியாது. இந்தியைத்தான் அந்த இடத்தில் வைத்துக் கொள்ள முடியும் என்ற முடிவுக்குத்தான் வர வேண்டடியிருக்கிறது. இந்தி வெறி 3-0 p.m.

பிடித்தோ அல்லது இந்தி ஒரு உயர்ந்த மொழி என்று காரணத்தினாலோ அல்ல, ஆனால் தேசம் ஒன்று என்ற நிலையை ஆராயும்பொழுது தேசத்தில் மூன்றில் ஒரு பகுதியினர் பேசும் மொழி அது என்ற அடிப்படையில் ஜனநாயக பண்போடு ஆராய்ந்து பார்க்கும்போது இந்தியை பொது மொழியாக ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆகவே, இந்தி வரும் போது அதை நாம் எந்த வகையிலும் எதிர்த்துப் பேசுவது என்பது அவ்வளவு முறையானதன்று என்று நான் கருதுகிறேன். பொதுவாக தமிழ் நாட்டைத் தவிர இதர ராஜ்யங்களில் எல்லாம் அநேகமாக இந்தியை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அப்படி ஏற்றுக் கொண்டு அந்த ராஜ்ய மக்கள் அகில இந்திய சர்வீஸ்களிலெல்லாம் முக்கிய பங்கு எடுத்துக் கொண்டு வளர்ச்சி பெற வாய்ப்பு ஏற்படுத்திக் கொண்டிருக்கும் போது தமிழ் நாட்டில், தமிழ் மக்கள் அம்மாதிரி அகில இந்திய சர்வீஸ்களில் முக்கிய பங்கு எடுத்து கொள்ளும் வாய்ப்பை நாம் தடை செய்து விடக் கூடாது. நேரு அவர்கள் கூட தமது உரையில் இந்திதான் பொது மொழியாக இருக்க முடியும் என்று வலியுறுத்தியிருக்கிறார். ஆனால் இந்தி பேசப்படாத மக்களின் தலையில் இந்தி கட்டாயப்படுத்தப் படமாட்டாது என்று அவர்கள் கூறுகிறார்கள். அப்படி அவர்கள் கூறினாலும் கூட, இந்தி கட்டாயப்படுத்தப்பட மாட்டாது என்று அவர்கள் கூறினாலும் கூட, அவர்கள் சொல்லியிருக்கிறார்களே என்று இந்தி கற்காமல் வாளாயிருந்து இருக்காது, நம் ராஜ்ய மக்களின் முன்னேற்றத்தில், நம் ராஜ்ய முன்னேற்றத்தில் நமக்கு மிக்க அக்கரை உண்டு என்பதற்காக இந்தியை நாம் படிக்கத்தான், இந்தியை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அரசாங்கத்தைப் பொறுத்தவரை, அகில இந்திய மொழியில் ஏதாவது ஒன்றை வைத்துக் கொள்ளலாம் என்று கூறியிருக்கிறார்கள். அது கூட தேவையில்லை. அகிலயிந்திய மொழியில் ஏதாவது ஒன்று வைத்துக் கொண்டாலும் அப்பொழுதும் இந்திதான் படிக்கும் நிலை ஏற்படும். ஒரு சில பள்ளிக்கூட மாணவர்கள் தெலுங்கு படிப்பதற்கு வசதி செய்து தர வேண்டுமென்று சொன்னால் அவர்களுக்காக தனி வசதி செய்து கொடுக்கப் போவதில்லை. ஆகவே, இந்தியை கொல்லைப்புறம் வழி கொண்டு வரப் போகிறோம் என்று சொல்வதற்குப் பதிலாக நேராகவே அதை, ஏற்று அதை படிக்கத்தான் வேண்டும் என்று அரசாங்கம் கூறுவதில் தவறு ஒன்றுமில்லை. திராவிட நாடு பிரிந்து விடப் போகிறது என்ற காரணத்தால் தயவு செய்து இன்றுள்ள மொழிப் பிரச்னையை அவ்விதம் அணுக வேண்டாமென்று நான் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களை கேட்டுக் கொள்கிறேன். திராவிட நாடு வருமா? வராதா? அந்தப் பிரச்னை வரும்போது அப்பொழுது அதை அணுகிக் கொள்ளலாம். அப்படிப் பார்த்தால், அவ்விதம் சிந்தித்தால் அகிலயிந்திய ரீதியில் இந்த பிரச்னையை தெளிவுபடுத்திக் கொள்ள முடியாது. திராவிட நாட்டின் இதர ராஜ்யங்களாக மைசூர், கேரளம், ஆந்திரா போன்ற நாடுகளில் அவர்கள் இந்தியைக் கட்டாயமாக வைத்து அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். திராவிட நாடு கிடைக்கும் காலத்தில் அவர்கள் மூன்று பேர்களும் சேர்ந்து ஆங்கிலத்தை அகற்றி விட்டு இந்தியைத்தான் ஏற்றுக் கொள்ளும்போது தமிழ்நாட்டில் மட்டும் ஆங்கிலத்தை வைத்துக் கொண்டு என்ன பயன்? அப்பொழுதும் இந்திதான் வரும். திராவிட நாடு கிடைக்குமா கிடைக்காதா என்பதுபற்றி இப்பொழுது விவாதிக்கவேண்டியதில்லை. அப்படி திராவிட நாடு கிடைக்கும்போது கூட இந்தியைத்தான் ஏற்றுக் கொள்ள வேண்டிய துர்பாக்கியகரமான நிலை வந்து விடும். ஆகவே, தமிழ் நாட்டின் அபிவிருத்திக்குத் தடையாக, தமிழ் மக்களின் அபிவிருத்திக்கு தடையாக உங்கள் செயல் இருக்கக் கூடாது. ஆகவே தேசத்தின் அபிவிருத்தியை மனதில் கொண்டு இந்தியை ஏற்றுக் கொள்வதில் தவறு இல்லை. அப்படி இந்தியை ஏற்றுக் கொண்டு படிக்கும்போது, அப்படி திராவிட நாடு கிடைக்கும்போது அதை மாற்றியமைக்க வேண்டுமென்றால் அதை மாற்றி அமைத்துக் கொள்ளலாம். அதில் தவறு இல்லை. ஆகவே, இந்தி படிப்பதைத் தடை செய்ய வேண்டாமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். நமது கல்லூரிகளில், பிராந்திய மொழியை போதனா மொழியாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அது அமுலாக்கப்படப் போகிறது. அரசாங்கத்தின் மிதமான போக்குத்தான் இந்தப் பிரச்னைக்கு



இடம் கொடுக்கிறது. ஆகவே, பிராந்திய மொழிகளை எந்தெந்த இடங்களில் கொண்டு வரப் போகிறார்களோ, அப்படிக் கொண்டு வர துரிதமாக நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டால் தமிழை இந்தி ஆக்கிரமித்துக் கொள்ளப் போகிறது என்று சொல்லக் கூடிய பிரச்னைக்கே இடமிருந்திருக்காது. தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில், ஆபீஸ், கோர்ட் போன்றயிடங்களில், அவைகளில் தமிழ் மயமாக்கப் போகிறோம். மாகாணம் சம்பந்தப்பட்ட கோர்ட்கள், ஆபீஸ்கள், இவைபோன்றயிடங்களில் பிராந்திய மொழியாகிய தமிழை ஆட்சிமொழியாகக் கொண்டு வந்திருக்கிறபோது சாதாரண மக்களுக்கு எந்த விதமான இடஞ்சலும் ஏற்படப் போவதில்லை. ஆகவே தமிழை நிர்வாகத்தில் கொண்டு வருவதற்கு துரிதமாக எல்லா இடங்களிலும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி வெகு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமேயானால் இந்த இந்திப் பிரச்னை அடிப்பட்டுப் போகும். அதுமட்டுமல்ல, இந்தி வருவதினால் தமிழ் பாதிக்கப்பட்டு விடும் என்று சொல்வதும் சரியல்ல, தமிழ் இதனால் அழிந்துவிடும் என்று சொல்வதும் பொருந்தாது. எந்த மொழியினாலும் தமிழை கொஞ்சம் கூட அழிக்க முடியாது, தமிழ் எப்போதும் வளர்ந்து கொண்டு தான் இருக்கிறது. மொழி வளர்ச்சி பொதுவாக முக்கியத்துவம் பெறவில்லை என்பதை நாம் ஓரளவு ஒத்துக்கொள்ளலாமே தவிர தமிழ் அழிந்து விடும் என்று சொல்வதை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தியால் தமிழ் அழிந்துபோகும் என்று சொன்னால், கழிந்த காலத்தில் ஆங்கிலம் தான் இந்த நாட்டில் இருந்தது, அப்போதும் தமிழ் அழிக்கப்பட்டு விடவில்லை. ஆகவே எந்த மொழியாலும் தமிழை அழிக்க முடியாது. ஆகவே இந்தி மொழி வருவதினால் தமிழ் அழிந்து விடும் என்கிற வாதத்தை சொல்லுவது, தமிழர்களுடைய திறமைக்கு இழுக்குத் தேடுவதாகவே இருக்கும். ஆகவே தயவு செய்து வாதத்தை கைவிட்டு விட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பிராந்திய மொழிகளை போதனா மொழியாக ஆக்கவேண்டும் என்று சொல்வதை ஏற்றுக்கொள்ளும்போது, அகில இந்திய யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் போன்றவைக்கு எழுதக்கூடிய பரீட்சைகளில் பிராந்திய மொழிகளிலேயே எழுதுவதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும். அந்த வாய்ப்பு இருந்தால் தான் இதர மொழி பேசும் மக்களுக்கு நலனாக இருக்கும். நம் நாட்டைப் பொறுத்தவரை தமிழை போதனா மொழியாகவும் ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகவும் வைத்திருப்பதால், நம் நாட்டிலுள்ளவர்களுக்கு இனிமேல் தமிழில் தான் அதிகமான வளர்ச்சி இருக்கும். ஆகவே நம் நாட்டிலுள்ளவர்களுக்கு குந்தகம் ஏற்படாத வகையில் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் போன்றவைகளுக்கு தமிழிலேயே பரீட்சைகள் எழுதுவதற்கும் அதே போன்று அந்தந்த பிராந்தியங்களில் உள்ளவர்களுக்கு அந்தந்த பிராந்திய மொழிகளிலேயே அகில இந்திய பரீட்சைகள் எழுதுவதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும் என்பதை நமது சென்னை அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, நமது ராஜ்ய அரசாங்கத்தார், தேசத்தில் எந்த நிலை வந்தாலும், பெரும்பான்மையான மக்களுடைய எண்ணம் எப்படி இருக்கின்றது என்பதைப் பார்த்து அதை பிரதிபலிக்கக்கூடிய முறையில் தமிழ் நாட்டில் எல்லா நிர்வாகங்களும் தமிழ் மொழியில் நடப்பதற்குரிய எல்லா நடவடிக்கைகளையும் வெகு துரிதமாக எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**SRI M. KALYANASUNDARAM**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரச்சனை மீது நான் கொடுத்திருக்கக்கூடிய தீர்மானங்களிலுள்ள அம்சங்களை முக்கியமாகக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மொழிப் பிரச்னையானது, ஒரு கட்சி சம்பந்தப்பட்ட பிரச்சனை அல்ல, எல்லாக் கட்சிகளுக்கும் அப்பாற்பட்டது. இதில் ஒட்டு மொத்தமாக மக்களுடைய நலனுக்காக ஏற்ற பரிகாரத்தை காண வேண்டியது தான் நம்முடைய விவாதத்தின் நோக்கமாய் இருக்கவேண்டும். சுதந்திரம் அடைந்த பிறகும் கூட மொழியின் பெயரால் இன்னும் சச்சரவுகள் ஏற்பட்டுக்கொண்டிருப்பது நமக்கு ஒரு சரியான எச்சரிக்கையாக இருக்கும்

[Sri M. Kalyanasundaram] [5th September 1960

என்று நான் கருதுகிறேன். சமீபத்தில் அசாமில் நடந்த நிகழ்ச்சிகள் அசாமிய மக்களுக்கோ அல்லது வங்காளி மக்களுக்கோ மட்டுமல்ல. இந்தியாவில் இருக்கக்கூடிய பல மொழிப் பேசக்கூடிய எல்லா மக்களுக்கும் சரியான எச்சரிக்கையாக இருக்கவேண்டும். சரியான படிப்பினையாகவும் கூட இருக்கவேண்டும். அதிகாரத்தில் இருக்கிறவர்களுக்கும் சரி, அல்லது அதிகாரத்தில் வரவேண்டும் என்று நினைப்பவர்களுக்கும் சரி இது ஒரு சரியான படிப்பினையாக இருக்கவேண்டும். இந்தியா பூராவுக்கும் இயங்கக்கூடிய கட்சியாக இருந்தாலும் சரி, அல்லது ராஜ்ய அளவில் இயங்கக் கூடிய கட்சியாக இருந்தாலும் சரி எல்லாக் கட்சிகளுக்கும் இது ஒரு படிப்பினை தான். மொழி வெறியின் பெயரால் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் இந்த நாட்டிலுள்ள மக்களுக்கும் ஒரு படிப்பினையாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். இந்த மொழிப் பிரச்னை இப்போது ஏற்பட்டதல்ல, அல்லது சமீபத்தில் ஏற்பட்டதல்ல. அந்நியர் ஆண்ட காலத்தில் அவர்களால் திணிக்கப்பட்ட கலாச்சாரம், நாகரீகம் இவற்றிற்கு எல்லாம் எதிராக தேசீய உணர்ச்சியினால் ஏற்பட்ட பிரச்சனை இது. ஆங்கிலம் அகற்றப்பட்டு இந்திய மொழிகளிலே ஒன்று நிர்வாக மொழியாக இருக்கவேண்டும் என்கிற லட்சியம் தேசீய இயக்கத்தோடு வளர்ந்து வந்த ஒன்று. சுதந்திரம் அடைந்த பிறகு அந்த லட்சியத்தை அமல் நடத்துவதில் எந்த அளவுக்கு முன்னேறி இருக்கிறோம் என்பதை பார்க்கவேண்டும் சுதந்திரம் அடைந்த பிறகு மொழி வழி ராஜ்யத்தை அப்போதே அமைத்திருந்தால் இப்போது இது சுலபமாக இருந்திருக்கும். மொழி வழி ராஜ்யம் அமைப்பதற்கு அப்போது எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் சுறுசுறுப்பாக இல்லை. பல கலகங்கள், பல குழப்பங்கள் இவைகள் எல்லாம் ஏற்பட்ட பிறகுதான் இந்த மொழி வழி ராஜ்யம் அமைக்கப்பட்டது. பம்பாய் போன்ற இரண்டு மொழிகள் உள்ள ராஜ்யத்தை மொழி வழியாகப் பிரித்து அமைக்க வேண்டும் என்று சொன்ன நேரத்தில் அதை ஏற்றுக்கொள்ளாமல் அரசாங்கம் பிடிவாதமாக இருந்தது. இப்போது தான் பிரிக்கப்பட்டது. அப்போதே கம்யூனிஸ்டு கட்சி கூறிய படி மொழி வழி ராஜ்யம் அமைந்திருக்குமானால் இந்த விதமான அசம்பாவிதங்கள் எல்லாம் நடந்திருக்காது. கம்யூனிஸ்டு கட்சி எல்லா மக்களுடைய நன்மையும் கருதி, தேச நன்மையை ஒட்டு மொத்தமாகக்கொண்டு யோசனைகளை கூறியது. அப்போது கம்யூனிஸ்டு கட்சி கூறிய யோசனைபடியேதான் இப்போது பம்பாய் ராஜ்யத்திற்கு பரிகாரம் ஏற்பட்டது. அதே மாதிரி மொழி வழி பிரச்னையை கட்சி வித்தியாசமில்லாமல் ஒரே மாதிரியான வழியில் தான் இருக்கவேண்டும் என்று தான் கம்யூனிஸ்டு கட்சி எப்போதும் யோசனைகளை கூறியிருக்கிறது. இதில் எது சிறந்த வழி என்பதை நாம் பார்க்க வேண்டும். இந்த நிலைமையில் அரசியல் சட்டத்தில் திருத்த வேண்டும் என்ற ஒரு கோரிக்கை இப்போது வந்திருக்கிறது. அதில் நியாயமான அம்சங்களும் இருக்கலாம் ஆனால் அதன் எதிரொலி என்னவாய் இருக்கும் என்பதையும் நாம் பார்க்கவேண்டும். அரசியல் சட்டத்தை எழுதிய காலத்தில் அரசியல் நிர்ணய சபையில் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதி யாரும் இல்லை. நமக்கு இந்தச் சபையில் வழி காட்டியாகவும் இருக்கின்ற நமது நிதி அமைச்சர் அவர்கள் அப்போது அரசியல் நிர்ணய சபையில் அங்கம் வகித்து வந்தார்கள். இப்போது கூறக்கூடிய காரியங்களை சிறப்பாக அப்போதே செய்திருக்கவேண்டும். அப்போது அவர்கள் சரியாக சிந்தித்துப் பார்க்கவில்லையோ என்னவோ, நம்முடைய அரசியல் சட்டத்தில் 344-வது பிரிவின்கீழ் இந்தி இந்தியாவின் ஆட்சி மொழி என்று சந்தேகத்திற்கு இடமில்லாமல் செய்து விட்டார்கள். அதை எப்படி அமல் செய்வது என்பதைப்பற்றி அப்போது திட்டவட்டமாக எதுவும் சொல்லவில்லை, கயிற்றின் மேல் நடனம் ஆடுவது போன்று பல யோசனைகளை அப்போது வைத்திருந்தார்கள். இவ்விதம் நிர்ணயிக்கப்பட்ட மொழி ஆட்சி மொழியாக இருக்க தகுதியுடையதா, அல்லது ஆங்கிலத்தையே இன்னும் நீடித்து வைத்திருக்கலாமா என்பதைப்பற்றி அப்போதே ஒரு சரியான முடிவு எடுத்து, இப்போது சொல்லக் கூடிய முறையில் அப்போதே பல யோசனைகளை கூறி வற்புறுத்தி ஒரு முடிவு செய்திருந்தால் இப்போது ஏற்பட்டிருக்கக்கூடிய சிக்கல்களை ஓரளவு தவிர்த்திருக்க முடியும். இந்தி தான் இந்த நாட்டின் ஆட்சி மொழி என்று எழுதியாகி விட்டது. நல்ல வேளையாக அதன் உப பிரிவு 3-ல் கொஞ்சம்



5th September 1960] [Sri M. Kalyanasundaram]

இடமும் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியும், அப்போது ஏதோ உணர்ச்சி வசப்பட்டு செய்தார்களே ஒழிய, இந்தி மொழி ஆட்சி மொழியாக இருக்க தகுதி பெற்று விட்டது, அல்லது எல்லா மக்களுடைய அதிலும் குறிப்பாக இந்தி பேசாத மக்களுடைய ஆட்சி மொழியாக இருப்பதற்குரிய அந்தஸ்தை பெற்றிருக்கிறது என்ற காரணத்தினால் அல்ல. அதனால் தான் மூன்றாவது பிரிவில் ஆங்கிலத்தை அவசியமான அளவுக்கு எந்தெந்த துறையில் வைத்திருக்கலாம் என்பதை பார்லிமெண்ட் பார்த்து முடிவு செய்வதற்கு அதிகாரம் வைத்திருக்கிறார்கள். இதில் இப்போது நாம் கூற வேண்டிய பரிகாரம் எதுவாய் இருக்கவேண்டும் என்பதை நாம் பார்க்கவேண்டும். "343-வது பிரிவின் முதல் பிரிவை மாற்றி இந்தியை எடுத்து விட்டு அதற்குப் பதிலாக ஆங்கிலம் இருக்க வேண்டும் என்று போடவேண்டும். அப்போது தான் இந்தி பேசாத மக்களின் உரிமையைப் பூரணமாகக் பாதுகாக்க முடியும்" என்று ஒரு சாரார் நம்முடைய நாட்டில் தெளிவாகச் சொல்கிறார்கள். அவர்கள் சொல்வதன் அடிப்படை என்ன? அவர்கள், தேச ஒற்றுமைக்காக இருக்கிறார்களோ அல்லது பிரிவினைக்காக இருக்கிறார்களோ என்ற அந்தப் பிரச்னையை ஒன்று சேர்த்து விடக்கூடாது. அவ்வாறு திராவிட நாடு பிரிய வேண்டுமென்று சொல்கிறவர்கள் மட்டுமல்ல, திராவிட நாடு பிரிவினையை ஆதரிக்காதவர்கள் கூடச் சொல்கிறார்கள். இந்தி பக்குவம் அடையவில்லை என்பது ஒன்று. பிரதேச மொழிகளுக்கு அதற்கு உரிய அந்தஸ்தைக் கொடுக்கக்கூடிய நிலைமையில் இருந்து ராஜ்ய சர்க்கார் தவற முடியாது என்பது மற்றொன்று. இந்த இரண்டு காரணங்களால் இந்தியை ஆட்சி மொழியாக்கினால் தமிழுக்கு ஆபத்து வருமோ என்ற பயம் இருக்கிறது. நிர்வாகத் திறமை குறையும் என்ற பயமும் இருக்கலாம். நல்லெண்ணத்தோடு பேச வேண்டுமே தவிர, கெட்ட எண்ணத்தோடு தாக்கினால் அது இந்த மொழிப் பிரச்னையில் சிக்கலைத்தான் ஏற்படுத்த உதவிகரமா இருக்குமே தவிர, பரிகாரம் காண உதவிகரமாக இராது. ஆகவே, இந்திக்குப் பதிலாக ஆங்கிலம் என்று அரசியல் சட்டத்தைத் திருத்தினால், இந்தி பேசுகின்ற 14 கோடி மக்களின் மனதில் என்ன எண்ணம் ஏற்படும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமா வேண்டாமா என்பது முக்கியமான பிரச்னையாக இருக்கிறது. ஆகவே, அரசியல் சட்டத்தில் "இந்திக்குப் பதிலாக ஆங்கிலம்" என்று திருத்தினால் நாம் 14 கோடி மக்களின் அனுதாபத்தை இழந்து விடுவோம். இதன் விளைவு என்ன? வங்காளத்தில் இருக்கக்கூடிய மக்களில் வங்காளம் பேசாதவர்களை வங்காளத்தை விட்டே வெளியேற்ற வேண்டுமென்று நிலைமை ஏற்பட்டுவிடும். டில்லியில், பம்பாயில், அந்தந்த ராஜ்யத்தில் உள்ள மொழியைப் பேசாதவர்கள் எல்லாம் வெளியேற்றப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டால் ஒவ்வொரு ராஜ்யமும் மற்ற ராஜ்யங்களோடு எதிர்த்து நிற்க வேண்டிய நிலைமை ஏற்படும். இது நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவிகரமாக இருக்குமா என்பதைச் சிந்தித்துப் பார்த்துப் பரிகாரம் சொல்ல வேண்டுமே தவிர, இந்திக்குப் பதிலாக ஆங்கிலம் என்று அரசியல் சட்டத்தைத் திருத்தி விடுவதால் நாம் எதிர்பார்த்த பலன் கிடைக்காது. இந்தி பேசப்படுகிற பகுதிகளிலேயே இந்தி ஆதிக்கம் செலுத்த முடிகிறதா என்று பார்த்தால், அங்கும் உயர்நீதி மன்றங்களிலும், கோர்ட்டுகளிலும், நடவடிக்கைகள் ஆங்கிலத்தில்தான் நடந்து வருகின்றன. சட்டசபை மசோதாக்கள் எல்லாம் ஆங்கிலத்தில்தான் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. இந்தி பிரதேச மொழியாக உள்ள இடங்களிலேயே அதற்கான நடவடிக்கைகள் சரியானபடி எடுக்கவில்லை. இந்த நிலையில் அரசியல் சட்டத்தைத் திருத்தினால் 14 கோடி மக்களுடைய அவநம்பிக்கையையும் ஆதரவையும் நாம் இழக்க வேண்டி வரும். இந்தி பேசாத மக்களும் அதிகமாக இருக்கிறார்கள். மொத்தத்தில் இந்தி பேசாத மக்கள் அதிகமாக இருப்பினும், ஒவ்வொரு மொழி பேசுபவர்கள் ஒரு சில கோடிதான் இருக்கிறார்கள். ஒரு ராஜ்யத்தோடு மற்றொரு ராஜ்யத்துக்குத் தொடர்பு இருக்கவேண்டும். இந்த ராஜ்யம் தனியாகப் பிரிந்து விட்டாலும் கூட தொடர்ப்பு இருந்தாக வேண்டும். தனியாகப் பிரிந்து விட்டால் வேலி போட்டு விட முடியாது. ஆகவே, அரசியல் சட்டத்தைத் திருத்தினால் நாட்டில் சீர்குலைவு ஏற்படவும், குழப்பங்கள் ஏற்படவும், ரத்தம் சிந்தும் நிலைமை ஏற்படுவதுமான ஒரு

துர்பாக்கிய நிலைமைதான் உருவாகும் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். உரிமைக்சாக ரத்தம் சிந்த வேண்டிய அவசியம் இருந்தால் சிந்தலாம். நாட்டு மக்களில் ஒரு சாராரும், மற்றொரு சாராரும் ரத்தம் சிந்த வேண்டுமா. உயிரைக் கொடுக்க வேண்டுமா என்பதை எல்லா அரசியல் கட்சிகளும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். திராவிட நாடு பிரிந்தால் சுபிட்சமாக இருக்கலாம் என்ற பிரச்னைக்கு இங்கே இடமில்லை இந்த விஷயத்தில் நாம் உடனடியாக என்ன பரிகாரம் காணவேண்டும் என்பதுதான் இப்போதுள்ள பிரச்னை. அதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அது, ஆங்கிலத்தைத் துணை ஆட்சி மொழியாகக் காலவரையறை இன்றி, இந்தி பேசாத மக்கள் விரும்புகிற வரையில் நீடிக்க வேண்டுமென்ற அளவுக்கு 343-வது பிரிவின் கீழ் சட்டம் இயற்றி அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதுதான் சாலச் சிறந்தது. அதன் மூலந்தான் இந்தி திணிக்கப்படும் என்ற பயத்திற்கு இடமில்லாமல், இந்தி பேசுகிற மக்கள், இந்தி பேசாத மக்கள் ஆகிய இரு சாராருக்குமிடையே ஒற்றுமை ஏற்படக்கூடிய நிலையை உண்டாக்க முடியும் என்ற காரணத்தினால்தான் என்னுடைய திருத்தத்தில், காலவரையறை இன்றி, இந்தி பேசாத மக்கள் விரும்புகிற வரையில் ஆங்கிலம் துணை ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமென்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்வது சாலச் சிறந்ததாக இருக்கும்.

நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தமட்டில் எல்லாக் கட்சிகளும் சேர்ந்தே ஆங்கிலம் இருக்க வேண்டுமென்ற எண்ணம் இருந்தபோதிலும் கூட, ஒன்று சேர்ந்து கொடுத்த யோசனை என்ற காரணத்தால் நம்முடைய ராஜ்யத்திற்குத் தனிப் பெருமை நிச்சயமாக உண்டு. "உடனடியாக எல்லாத் துறைகளிலும் இந்தி இருக்க வேண்டும், ஆங்கிலத்திற்குப் பதிலாக கல்லூரிகளில் போதனா மொழியாக இந்தி இருக்கவேண்டுமென்று" என்று சொல்லக்கூடிய இந்தி வெறியர்களுக்குச் சரியான பதிலாக அமைந்திருக்கிறது. பார்லிமெண்ட் கமிட்டி, இந்தி பேசக்கூடிய அங்கத்தினர்கள், தமிழ் நாட்டு அங்கத்தினர்கள் மட்டுமின்றி மற்ற ராஜ்ய அங்கத்தினர்கள், ஜனாதிபதி அவர்கள் எல்லோரும் இந்த யோசனையை ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுக்கு நம் ராஜ்யத்தில் இருந்து கொடுத்த யோசனையிலிருந்து பின் வாங்க வேண்டிய அவசியம் இருக்கிறதா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். என்னைப் பொறுத்தவரையில் அதிலிருந்து பின் வாங்க வேண்டிய அவசியம் இல்லையென்று தான் சொல்ல விரும்புகிறேன். ஜனாதிபதி அவர்கள் உத்தரவில் ஒரு சந்தேகம் இருக்கிறது. இதற்குப் பரிகாரம் நாம் கொடுத்த யோசனைகளை நிறைவேற்ற வழி செய்துவதுதான் என்பது என்னுடைய அபிப்பிராயம். இதை ஓரளவு பிரதம மந்திரி கொடுத்த வாக்குறுதியிலும், மற்ற அமைச்சர்களின் தெளிவுரையிலும் இந்த யோசனை ஒப்புக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், மத்திய சர்க்கார் செர்விஸ் கமிஷன் பரிட்சை எழுதுவது சம்பந்தமாக அவர்கள் சொல்லியிருப்பது நம்முடைய சந்தேகத்தைத் தூண்டிவிடுகிறது. மத்திய சர்க்கார் செர்விஸ் கமிஷன் சம்பந்தப்பட்ட மட்டில் இந்தியும் ஆங்கிலமும் மட்டுந்தான் இருக்கவேண்டுமென்று ஜனாதிபதி உத்தரவில் கூட சூசகமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மற்றப் பிரதேச மொழிகள் அங்கீகரிக்கப்படாதது குழப்பத்தை ஏற்படுத்தும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மத்திய சர்க்கார் உத்தியோகத்திற்குப் போக வேண்டுமென்றால் அந்தத் தேர்வுகளை ஆங்கிலத்தில் எழுத வேண்டும் அல்லது இந்தியில் எழுத வேண்டும். இதை இந்த உத்தரவுக்குக் காரணமாக இருந்தவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இது இந்தி பேசாத 17 கோடி மக்களுக்குப் பாதகமாக இருக்கிறது. இந்தப் 17 கோடி மக்களும் என்றென்றும் ஆங்கிலத்தையே நம்பி இருக்க வேண்டிய நிலைமை ஏற்படும். அவர்கள் மறைமுகமாக அப்படித்தான் விரும்புகிறார்கள் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. இந்தி ஆட்சி மொழி என்று சொல்லிவிட்டு, இந்தி பேசாத மக்களைத் திருப்திப்படுத்த ஆங்கிலமும் நீடித்திருக்கும் என்று இரண்டு பேரையும் பார்த்துக் கண் துடைக்கும் நிலைமையில் போகிறார்களே தவிர, ஆங்கிலத்தை எப்படிப் படிப்படியாக அகற்றுவது என்ற மார்க்கத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும்.





3-30 p.m.

பிரதேச மொழிகளில் மத்திய சர்க்கார் சர்விஸ் கமிஷன் தேர்வுகளில் எழுதுவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டால்தான் ஆங்கிலத்தைப் படிப்படியாக அகற்றப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படும். இப்பொழுது இல்லாவிட்டாலும், 15,20, 25 வருஷங்களில் எந்த ஒரு காலத்திலாவது ஆங்கிலம் அகற்றப்படவேண்டும். இந்திய மொழிதான் அந்த அந்தஸ்தில் இருக்கவேண்டும் என்ற விருப்பம் நிறைவேறவேண்டுமானால் உடனடியாகச் செய்யவேண்டியது—தமிழ், தெலுங்கு, மலையாளம் போன்ற ஹிந்தி பேசாத பிரதேச மொழிகளில் மத்திய சர்க்கார் சர்விஸ் கமிஷனின் தேர்வுகளில் எழுதுவதற்கு அங்கீகரிக்கப்படவேண்டும். இதிலே ஜனாதிபதி உத்தரவு குறைபாடானது என்ற பயத்தைத் தூண்டிவிடக்கூடியது. ஆகவே, ஜனாதிபதியின் உத்தரவைத் திருத்தினாலும் சரி, அல்லது நடவடிக்கை எடுத்தாலும் சரி, அந்த உத்தரவில் இருக்கும் குறைப்பாட்டைச் சுட்டிக்காட்டுகிறேன். என்னுடைய திருத்தத்தின் இரண்டாவது அம்சம் என்னவென்றால், ஹிந்தி, ஆங்கிலம் இரண்டோடு கூட பிரதேச மொழிகளையும் மத்திய சர்க்கார் தேர்வுகளில் அங்கீகரிக்கப்படவேண்டுமென்ற யோசனையை ஏற்றுக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். அப்பொழுதுதான் முதல் திருத்தத்திற்குகூட வலு இருக்கும், அர்த்தம் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தந்த ஸ்தலத்தில் இருக்கும் மத்திய சர்க்கார் காரியாலயங்களில் ஆங்கிலம் நீடித்திருக்கவேண்டிய அவசியம் இல்லை. அதற்குப் பதிலாக ஹிந்தி வரவேண்டிய அவசியமும் இல்லை. தமிழ் பேசக்கூடிய பிரதேசத்தில் தமிழிலே நடக்கலாம், ஹிந்தியிலும் ஓரளவுக்கு இருக்கலாம் என்ற நிலைமையானது உண்டாகவேண்டும். அப்படி ஹிந்தி கொண்டுவரும் வரையில் தமிழும் ஆங்கிலமும் வேண்டுமானால் இருக்கலாமே தவிர, திடீரென்று எல்லா பாரம்களையும் ஹிந்தியிலே அச்சடித்து அனுப்பவேண்டிய அவசியம் இல்லை. நிதி அமைச்சர் அவர்கள் சொல்லலாம், "அதிகாரிகள் தங்களுடைய உற்சாகத்தில் செய்திருக்கலாம்" என்று. உற்சாகத்தில் செய்வதானாலும் அதற்கும் ஒரு அளவு உண்டு. மொழி வெறியைக் கிளப்பிச் செய்யக் கூடிய குற்றங்களை அதிகாரிகளாகட்டும், அரசியல்வாதிகளாகட்டும் செய்தால், அதிலே வித்தியாசம் பார்க்காமல் அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவேண்டும். கிட்டத்தட்ட இரண்டு வருஷ காலமாக இந்தச் சபையிலேயும், தமிழ்நாட்டிலே, வெளியிலே கூட பல கட்சிகள் சுட்டிக் காட்டியிருந்தும்கூட இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கவில்லை ஆனால், ஜனாதிபதி உத்தரவில் இது சம்பந்தமாகக் காணப்படும் உறுதிமொழி ஆறுதல் அளிக்கக்கூடியது. அது நடைமுறைக்கு வந்தால்தான் திருப்தி வருமே தவிர, நடைமுறையில் எப்படி வரும், எப்பொழுது வரும் என்று நிதி அமைச்சர் அவர்கள் விவரம் இருந்தால் கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் இந்தத் திருத்தத்தை அவரும் சேர்ந்து வலியுறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். இது மத்திய சர்க்காரும் சேர்ந்து செய்யவேண்டிய முக்கியமான பிரச்னைகள். நம்முடைய ராஜ்ய சர்க்காருடைய பொறுப்பும் இருக்கிறது. ராஜ்ய சர்க்கார் ஏதோ எதிர் கட்சியினர் கூக்குரல் போடுகிறார்கள், ஹிந்தி என்று அரசியல் சட்டத்திலே எழுதி வைத்துவிட்டோம் என்று அதை நாம் எதிர்க்கமுடியாது. நாம் ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள், மற்ற கட்சிக்காரர்கள் மக்களிடத்திலே இருக்கக் கூடிய எதிர்ப்பை, வெறுப்பைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்ற காரணத்திற்காக செய்தால் போதாது. தமிழ் ஆட்சிமொழி என்று சட்டம் இயற்றிவிட்டோம். தமிழ் ஆட்சிமொழியாகி எல்லாத் துறைகளிலும் வர நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கவேண்டும். இப்பொழுது எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் மந்தமாக இருக்கிறது என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. அதுமட்டுமல்ல எதிர்ப்பைக் கண்டு பயப்படுகிறார்கள். ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டுமென்று சிலர் கூறினவுடனே அரசாங்கத்திற்குப் பயம் ஏற்பட்டுவிட்டதோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. ஆங்கிலம் இருக்கவேண்டுமென்று இப்பொழுது சொல்லக்கூடியவர்களின் வாதம் எவ்வளவு அர்த்தமற்றது என்பதைப் பார்க்கவேண்டும். இவர்கள் முன்பு அதிகாரத்தில் இருந்த காலத்தில் என்ன கொள்கையை அனுஷ்டித்திருக்கிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆங்கிலமா, ஹிந்தியா நம்முடைய நாட்டின் ஆட்சிமொழியாக இருப்பது என்பது இப்பொழுது

[Sri M. Kalyanasundaram] [5th September 1960

சர்ச்சைக்குரிய விஷயமே அல்ல. தேசீய மொழி என்ன என்பது நம்முடைய சபையில் ஏற்கனவே அதன் வியாக்கியானம் என்ன என்பதை விளக்கியாய்விட்டது. தேசீய மொழி அந்தஸ்து வேறு, நிர்வாக மொழி அந்தஸ்து வேறு. தேசீய மொழி என்றால், தேசத்தில் இருக்கும் அரசியல் சட்டத்தில் எட்டாவது ஷெட்யூலில் குறிப்பிடப்பட்டிருக்கும், 14 மொழிகளும் தேசீய மொழிகள். அவற்றுக்கு உரிய அந்தஸ்து கொடுக்க வேண்டும் என்பது லட்சியமாக இருக்கவேண்டும். அதற்குப் பதிலாக ஆங்கிலத்தை நீடிக்கவேண்டும் என்ற கோஷத்திற்குப் பயந்துவிடவே கூடாது. ஏன் நான் பிரதேச மொழிகள் நிர்வாக மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் இருக்கவேண்டுமென்று வலியுறுத்துகிறேன் என்பதற்கான காரணத்தை என் பாஷையில் சொல்வதைவிட ஒரு அறிஞருடைய பாஷையில் சொல்லவிரும்புகிறேன் :— **"To make popular control real, the State language must be one spoken and understood by large masses of people. Hindi is bound to be the language of the Central Government and the Legislature and also of the Provincial Governments in their dealings with each other and with the Government of India"** ஜனநாயகம் நடத்துகிறதற்கும் மொழிக்கும் எவ்வளவு சம்பந்தம் இருக்கிறது என்பதை இதைவிடத் தெளிவாகச் சொல்ல முடியாது. **"To make popular control real, the State language must be one spoken and understood by large masses of people."**

ஜனங்களால் புரிந்துகொள்ளக் கூடிய, ஜனங்களால் பேசக்கூடிய மொழி தான் ஆட்சிமொழியாக இருக்கவேண்டுமென்று கூறியிருக்கிறார்.

மேலும் பார்க்கலாம்

"If South India does not desire to be practically disfranchised in regard to the future Central Government of India and if educated men of the South do not wish to be disabled from taking part in All-India affairs or influencing the decisions taken in such matter, it is necessary that Hindi should be learnt by them. It is not possible or desirable to impose English for our sake on all and weaken the people's control over their representatives all over India. The Nehru-Report-Constitution has, it may be noted, adopted Hindi as the State language for India. This is the logical consequence of Self-Government of India. In educational matters, if we wish to avoid waste of energy and penalisation of a whole generation, we must anticipate things by a few years."

இதைக் கூறியது உத்தரப் பிரதேசத்திலே இருக்கும், ஹிந்தி தேசம் பூராவும் பரவவேண்டுமென்று பேசக்கூடிய ஹிந்திவெறி பிடித்தவர் அல்ல. இப்பொழுது ஆங்கிலம் தான் நீடிக்கவேண்டும் என்று கூறுகிற நம்முடைய மதிப்பிற்குரிய ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் ஹிந்தி புஸ்தகத்திற்கு எழுதிய முகவுரையில் அவ்வாறு எழுதியிருக்கிறார். வருஷங்கள் ஆகிவிட்டன. அவருக்கும் வயது ஆகிவிட்டதால் கருத்தை மாற்றிக் கொள்ளலாம். வேண்டாமென்று சொல்லவில்லை. அப்பொழுது ஆணித்தரமாகச்சொல்லிய உண்மைகள் காலம் மாறினாலும், அவர்கள் மாறினாலும் மாறிவிட முடியாது. உண்மைகள் எப்பொழுதும் நிலைத்திருக்கும் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஆங்கிலம் அகற்றப்படவேண்டுமென்று கூறியவர்கள் இப்பொழுது ஆங்கிலம் நீடித்திருக்கவேண்டுமென்று கூறுவது என்றால், அது மக்களிடையை குழப்பத்தை ஏற்படுத்தும். அரசியல் லாபத்திற்கு வேண்டுமானால் இதைப் பயன்படுத்தலாமே தவிர, இம்மாதிரி தேசத்தில் குழப்பத்தை பெரியோர்கள் ஏற்படுத்தக்கூடாது என்று இந்தச் சபையின் மூலமாக அவருக்குத் தெரிவித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சிமொழியாகவும், கல்லூரியில் போதனா மொழியாகவும் ஆவதற்கு உடனடியான நடவடிக்கையை அரசாங்கம் எடுத்திருப்பார்களானால், இன்றைக்கு இருக்கும் இடையூறினைத் தகர்த்திருக்கலாம்.



5th September 1960] [Sri M. Kalyanasundaram]

அப்படி நடவடிக்கை எடுத்தால் தமிழுக்கு ஆபத்து ஹிந்தியால் வர முடியாது. ஆங்கிலத்தினாலும் இருக்க முடியாது. ஆங்கிலம் போகப் போக, அந்த இடத்தில் தமிழ் வர முடியும். தமிழ் வருவதால் தமிழ் மக்கள் எல்லோருக்கும் நம்பிக்கை ஏற்படும். இன்றைக்கு டில்லியில் ஹிந்தி இருந்தாலென்ன, ஆங்கிலம் இருந்தாலென்ன என்ற, நிலைமை ஏற்படும். அப்பொழுதுதான் ஹிந்தி இந்தியாவில் ஆட்சி மொழி ஆகும் பக்குவம் ஏற்படும். 'அதுவரைக்கும் ஆங்கிலம் நீடித்திருக்க வேண்டும், டில்லி நிர்வாகத்தில்' என்று கூறுவதில் நியாயம் இருக்க முடியும். ஹிந்திக்குப் பதிலாக ஆங்கிலம் தான் இருக்கவேண்டுமென்று சொல்வது நம்முடைய தேசத்தின் முன்னேற்றத்திற்கும் லட்சியத்திற்கும் குந்தகம் விளைவிக்கக் கூடியதாகும். இந்தச் சபையின் கவனம், அரசாங்கத்தினுடைய கவனம் எந்தத் திசையில் திருப்பப்படவேண்டுமென்றால், மத்திய சர்க்காரோடு பேச்சு வார்த்தை நடத்தி, திருத்தங்களுக்கு முயல்வதோடு, அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளை உடனடியாக எடுத்தாகவேண்டும்.

எல்லா டிபார்டுமென்டுகளுக்கும் கடிதங்கள் தமிழில் எழுதினால் தமிழில் பதில் வர வாய்ப்பு இருக்க வேண்டும். இந்தச் சபையின் மொழி தமிழ் என்று கூறிய பிறகும்கூட, கேள்வி நேரத்தில் கேள்விகளுக்கு முதலில் ஆங்கிலத்தில் பதிலைப் படித்துவிட்டு, பிறகு தமிழில் கேட்கும் உப கேள்விகளுக்குத் தமிழில் அமைச்சர்கள் பதில் அளிக்கிறார்கள். கேள்விகளுக்குப் பதில்களைத் தமிழில் தயாரித்துக்கொள்வதில் என்ன கஷ்டம் ஏற்பட்டுவிடும் ? பதில் தயாரிக்கும் வரையில் வேண்டுமானால் ஆங்கிலத்தைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். அதன்பிறகு இங்கு பதில் அளிக்கும்போது தமிழில் அளிக்கக்கூடாதா? மொழி பெயர்த்துத் தயாராக வைத்திருக்காவிட்டாலும்கூட, அமைச்சர்கள் தங்களுக்குத் தெரிந்த தமிழில் கேள்விக்குரிய பதிலை மொழிபெயர்த்து சொல்லலாம் அல்லவா ? இதற்கு முயற்சிதானே தேவை? இந்த முயற்சியிலே ஏன் பின்தங்கவேண்டும்? அரசாங்கம் சுலபமாகச் செய்துவிடலாம்.

தமிழ்நாட்டில் பிறந்த தமிழர்கள் அல்லது வேறு எந்த பாகத்தில் இருந்தாலும் சரி, நம்முடைய உயர்ந்த ஜனாதிபதி வரையில் பிரதம மந்திரி வரையில் அவர்களுக்குத் தமிழில் கடிதம் எழுதி, தமிழில் பதில் பெறக்கூடிய உரிமை நாட்டில் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டதாக அர்த்தம். வெளிநாட்டில் இருக்கிறவர்கள்கூட நம்முடைய மொழி உணர்ச்சிக்கு எவ்வளவோ மதிப்புக் கொடுக்கிறார்கள். (ஒரு கனம் அங்கத்தினர் : ரஷ்யா) ரஷ்யாவை உதாரணமாகக் காட்டுகிறார்கள். மொழி விஷயத்தில் நாம் காப்பியடிக்க முடியாது. ரஷியாவினுடைய சரித்திரம் வேறு. ரஷ்ய மொழிக்கு இருந்த அந்தஸ்து வேறு, மற்ற மொழிகளுக்கு இருந்த அந்தஸ்து வேறு. அதுவே நம் ஹிந்திக்கு இருந்ததாகக் கூற முடியாது. நம்முடைய சரித்திரம் வேறு. நாம் அதிலிருந்து படிப்பினை கற்றுக்கொள்ள முடியும். ரஷ்ய மொழியை எல்லோரும் கற்றுக்கொள்ளலாம். அதேபோல் எல்லாம் செய்ய முடியுமா? குருட்டுத்தனமாகக் காப்பி அடிப்பதிலே பிரயோஜனமில்லை. காப்பியடிப்பது நம்முடைய நாட்டின் நிலைமைக்கு ஏற்ப ஆட்சிமொழியை ஏற்படுத்தும் பாதையாக இருக்கமுடியாது. அந்த நாட்டில் மொழிக்கு மதிப்புக் கொடுக்கிறார்கள். சிறுபான்மையோர் பேசக்கூடிய மொழிக்குகூட நல்ல மதிப்புக் கொடுக்கிறார்கள். தமிழ் மொழி அங்கே கற்கப்படுகிறது. நல்ல முறையில் கற்றுக்கொடுக்கிறார்கள். நான் இங்கிருந்து அங்கிருக்கும் சில நண்பர்களுக்கு கடிதம் எழுதினால் இதுவரைக்கும் அவர்கள் ரஷ்யா மொழியில் பதில் எழுதி, அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பையும் சேர்த்து அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது என்ன சொல்கிறார்கள் என்றால், "நீங்கள் தமிழில் எழுதினாலும் நாங்கள் தமிழிலேயே பதில் அனுப்புகிறோம்" என்று எழுதுகிறார்கள். அந்த அளவுக்கு உலகத்திலே இருக்கும் பல மொழிகளுக்கு முக்கியத்தும் கொடுப்பதற்கு முயற்சி எடுக்கிறார்கள்.

**Sri A. GOVINDASAMY :** அங்கே தமிழர்களை அழைத்துச் சென்றிருக்கிறார்களா ?

**Sri M. KALYANASUNDARAM :** தமிழில் அச்சடித்த புஸ்தகம் கூட வெகு அழகாக வந்திருக்கிறது. தமிழ் அங்கு சொல்லிக் கொடுக்கிறார்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள் ரேடியோவில் அவர்களைத் தமிழிலேயே பேசுமாறு கேட்டுக்கொண்டார்களாம். அவர்களும் பேசி இருப்பார்கள் என்று நம்புகிறேன். சைனாவாக இருந்தாலும் சரி, எந்த நாடாக இருந்தாலும் சரி நான் காப்பி அடிக்கச் சொல்லவில்லை. நம்முடைய புத்திசாலித்தனம் எங்கே போயிற்று? நம்முடைய சுய புத்தியையும் உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும். எல்லா மொழிகளுக்கும் பாதுகாப்பு இருக்கிறது என்ற நிலைமை ஏற்படவேண்டும். தாய் மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும். நம்முடைய சர்க்கார் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்தாலும்கூட, கோர்ட்டிலே ஏன் இன்னும் ஆங்கிலத்தில் பேசவேண்டும் என்ற நிலைமை இருக்கிறது? கோர்ட்டில் ஆங்கிலத்தில்தான் பேசவேண்டுமென்ற நிலைமை இருப்பதனால்தான் வக்கீல்களுக்கு முக்கியத்துவம் இருக்கிறது. கோர்ட்டு, நடவடிக்கை தமிழிலும் நடத்தலாம் என்றிருக்கவேண்டும். தொழில் கோர்ட்டு ரெவின்யூ கோர்ட்டு போன்ற இடங்களில் ஆங்கிலம் படிக்காத விவசாயி, தொழிலாளி வழக்கறிஞர்களுடைய உதவியுடன் சட்ட நுணுக்கங்களைத் தெரிந்துகொண்டு தாங்களே நேரிலேயே வாதாடி கட்டாயம் வழக்குகளை ஜெயிப்பார்கள். பிறருடைய உதவியைக் கொண்டு சட்டத்தைப் புரிந்துகொண்டு வாதாடுவார்கள். அவர்களுடைய உரிமை பாதுகாக்கப்படும். ஆங்கிலம் இருக்கவேண்டுமென்று ஏன் விரும்புகிறார்கள் என்று சொன்னால் நம்முடைய நிர்வாகத் திறமை குறைந்துவிடுமே என்பது அல்ல. சிலருடைய ஆதிக்கம் குறைந்துவிடுமே என்பதனால் தான். அறிவுக்கும், கல்விக்கும் ஒரு சிலருக்கே ஆதிக்கம் இருக்கவேண்டும் என்ற காரணத்தினால் தான். தனிப்பட்டவர்களுக்குச் சொத்து உரிமை இருப்பது போன்று, கலை, நாகரீகம், அறிவு எல்லாவற்றிலும் ஒரு சிலர் தங்களுக்கு ஏகபோக உரிமையை வைத்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தினால்தான். கேந்திர ஸ்தானத்தில் இருக்கிறவர்கள் ஆங்கிலம் நீடிக்காவிட்டால் தங்களுடைய பெருமை குறைந்துவிடுமோ என்று அஞ்சுகிறார்கள். அவர்களுடைய நிர்ப்பந்தத்திற்குச் சர்க்கார் பணிந்துவிடக்கூடாது. அம்மாதிரி நிர்ப்பந்தத்திற்குப் பணியாமல் கோர்ட்டுகளில் உயர்நீதி மன்றம் உள்பட எல்லா இடங்களிலும் தமிழும், ஆங்கிலமும் அங்கீகரிக்கப்படவேண்டும். கொஞ்ச காலம் வரையில் ஆங்கிலம் இருக்கலாம். ஆங்கிலத்தின் துணைகொண்டு தமிழை வளர்க்கவேண்டுமே தவிர, ஆங்கிலத்தை உடனே நீக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை. வழக்குமன்றங்களில் தமிழிலும் பேசலாம், மனுக்களும் போடலாம் என்ற முறை அங்கீகரிக்கப்படவேண்டும். வேண்டுமானால் மொழிபெயர்ப்பாளர்கள் வைத்துக்கொள்ளலாம்.

அதுபோன்றுதான் ராஜ்ய சர்வீஸ் கமிஷனிலும். தமிழில் 10-வது வரையிலும் படித்துவிட்டு, ராஜ்ய சர்வீஸ் கமிஷன் பரீட்சை ஆங்கிலத்தில் எழுதவேண்டும் என்று இருப்பதால், பல மாணவர்கள், பல ஜில்லாக்களிலிருந்து வரக்கூடியவர்கள் அந்தத் தேர்வுகளில், அவர்களுக்கு அறிவு வளர்ச்சி இருந்தாலும்கூட, ஆங்கில மொழியில் சரியாக எடுத்துச்சொல்ல முடியாத காரணத்தினால் பலர் தேர முடியவில்லை. தோற்றுவிடுகிறார்கள். ஆகையால் உடனடியாக ஆங்கிலம், தமிழ் இரண்டு மொழிகளிலும் ராஜ்ய சர்வீஸ் கமிஷன் பரீட்சை எழுதுவதற்கு அனுமதி கொடுக்கப்படவேண்டும்.

இன்னும் இதைவிட முக்கியமானது, சர்க்கார் கல்லூரிகளிலே தமிழை போதனா மொழி ஆக்கவேண்டும் என்கின்ற கொள்கையை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல. அதை நடைமுறையில் கொண்டு வருவதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. பாட புத்தகங்கள் கூட தமிழிலே வெளியிடப்பட்டிருக்கின்றன. அந்த பாட புத்தகங்களை பார்க்கும்பொழுது, பி. ஏ. படித்தவர்கள் மட்டுமல்ல, தமிழ் தெரிந்தவர்கள் யார் படித்தாலும் விஷயங்களைப் புரிந்துகொள்ள முடியும் என்பது என்னுடைய அபிப்பிராயம். எந்தக் கல்லூரியிலும் மழைக்குகூட நான் ஒதுங்கியிருக்காவிட்டாலும், இந்த மொழிப் பிரச்னை விஷயத்திலும், அரசியல் விஷயத்திலும், விஞ்ஞான வளர்ச்சி விஷயத்திலும், இன்று கல்லூரிகளில் உயர் பட்டப்படிப்பு படித்தவர்களைவிட எனக்கு ஓரளவுக்கு விஷயங்கள் தெரியும், அவைகளைப்பற்றி பேச முடியும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆங்கிலத்தின் உதவியைக்கொண்டுதான் தமிழிலேயே கற்றுக்கொள்ளுகிறேன். ஆகவே, தமிழ் மூலம் விஞ்ஞான படிப்பு, உயர்பட்டப் படிப்பு படிக்க முடியாது என்று சொல்லுவது ரொம்பவும் தவறு. தமிழில் திறமையாக எடுத்துச்சொல்ல முடியாது என்று நினைப்பது மிகவும் தவறு. ஆங்கிலத்தின் உதவியைக்கொண்டு நம்முடைய தமிழிலே இல்லாத விஷயங்களை வேண்டுமானால் கற்றுக்கொள்ளலாம். ஏன், ஆங்கிலம் என்று இல்லை. எந்த அன்னிய மொழியின் உதவியைக்கொண்டும் கற்றுக்கொள்ளலாம். ரஷ்யாவில் ஸ்புட்னிக்கை கண்டுபிடித்தது ஆங்கில விஞ்ஞானத்தைப் பின்பற்றியதால் அல்ல. அவர்கள் நாட்டுத் தாய்மொழியிலேயே விஞ்ஞானப் படிப்பு, உயர்தரப் பட்டப் படிப்பு படித்துத்தான். ‘ தமிழில் தாய்மொழியில் உயர்பட்டப் படிப்பு, விஞ்ஞான படிப்பு கற்றுக்கொள்ளுவது ரொம்பவும் சிரமமாக இருக்கும், ஆங்கிலத்தில் இருந்தால் தான் கஷ்டமில்லாமல் இருக்கும் ’ என்று சொல்லுவது சரியல்ல. நிச்சயமாக அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். (குறுக்கீடு) ஸ்புட்னிக் என்றே சொல்லிவிடலாம். அதில் என்ன கஷ்டம். ஸ்புட்னிக் என்று சொன்னால் எல்லோருக்கும் புரியும். ஆகவே, ஸ்புட்னிக் என்றே சொல்லிவிட்டால் போகிறது. முரட்டுத்தனமாக அதை மொழிபெயர்ப்பதில்தான் கஷ்டம் ஏற்படும்.



கல்லூரிகளில் போதனாமொழிப்பிரச்னை இப்பொழுது ஒரு சர்ச்சைக்கு இடம் அளித்திருக்கிறது. கல்லூரியில் தமிழ் தான் போதனா மொழியாக இருக்கவேண்டும் என்ற பிரச்னை இப்பொழுது ஏற்பட்டதல்ல. சுதந்திரம் அடைவதற்கு முன்னாலேயே 1938–39-ல் கல்வி நிபுணர்கள், சர்வகலாசாலை நிபுணர்கள் எல்லோரும் கூடி அந்தந்தப் பிரதேச மொழியில் தான் நன்றாக கல்வி போதிக்க முடியும். கற்கவும் முடியும் என்று அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள். அதற்கான முடிவு 1948-ல் எடுக்கப்பட்டது. ஐந்து வருஷத்திற்குள்ளே எல்லா சர்வகலாசாலைகளிலும் அந்தந்தப் பிரதேச மொழி போதனா மொழியாக்கப்படவேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டும்கூட, நம்முடைய சர்வகலாசாலை அதைக் காலம் தாழ்த்தியிருக்கிறது. சென்னை யூனிவர்சிட்டி மட்டுமல்ல, அண்ணாமலை யூனிவர்சிட்டியிலும் சரி தமிழை போதனா மொழியாக ஏற்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்காதது மட்டுமல்ல; தமிழுக்கு அந்த சக்தியில்லை என்ற மனோபாவம் படைத்தவர்க்ள் கேந்திர பதவியில் இருக்கக் கூடிய காரணத்தினாலே, தமிழை வளரவிடாமல் தடுக்கிறார்கள். தமிழ் புகுத்தப்படுவதைத் தடுக்கிறார்கள். ஆகவே, அது விஷயத்தில் சர்ச்சை ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கமும் இதை ஒரு வாய்ப்பாக நினைக்கிறார்களோ என்னவோ ! அல்லது எந்த எதிர்ப்பை முறியடித்துக்கொண்டு தமிழை போதனா மொழியாக ஆக்குகிறார்களோ என்னமோ பார்க்கவேண்டும். மூன்று வருஷங்களுக்குப் பிறகு இந்த எதிர்ப்பைக் காட்டி ஏற்கனவே ஏற்படுத்தியிருக்கக்கூடிய கல்லூரியில் மட்டும் தமிழை போதனாமொழியாக நிறுத்திக்கொண்டு இந்தத் திட்டத்தை பரீட்சித்துப் பார்த்ததில் தமிழ் அவ்வளவு பக்குவப்படவில்லை என்று சொல்லி பின்வாங்கப் போகிறார்களா என்று பார்க்கவேண்டும். அமைச்சர் அவர்கள் பேசுவதைப் பார்த்தால் முன்பு இருந்த வேகத்தைக் காணோம். மூன்றாவது வருடத்தில் எல்லாக் கல்லூரிகளிலும் தமிழை போதனா மொழியாக ஏற்படுத்திவிடலாம் என்பதை அவ்வளவு நிச்சயமாகக் சொல்லிவிடமுடியாது. அப்படி போதனா மொழியாக ஆக்குவதற்கு தமிழ் பக்குவம் அடையவில்லை என்று தெரியவந்தால், அதுபற்றி பின்னர் புனராலோசனை செய்யலாம் என்று அறிவித்திருக்கிறார்கள். அவர்கள் அப்படி நம்புகிறார்களா ? இப்பொழுது வந்திருக்கக்கூடிய பாட புத்தகங்களின் மூலம் படித்து விஷயங்களை கற்றுக்கொள்ள முடியாது என்று அமைச்சர் அவர்கள் நம்புகிறார்களா ? ஏன் அவர்கள் இந்த மாதிரி தயக்கம் காட்டவேண்டும் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. பிரதேச மொழி வளர்ச்சி அடைவது ரொம்பவும் முக்கியமானது. மத்திய சர்க்கார் ஆட்சிமொழி என்னவாக இருக்கவேண்டும் என்று முடிவு செய்வது சமமாக இருக்கவேண்டுமென்றால் பிரதேச மொழியில் வளர்ச்சி ரொம்பவும்

முக்கியமானது. சர்க்கார் இந்த விஷயத்தில் நடவடிக்கைகள் எடுப்பதில் தயக்கம் காட்டுகிறார்கள். அதனால்தான் தமிழ் போகப்போக இந்தி வந்துவிடுமோ என்று பயம் தமிழ் நாட்டில் ஏற்படுவது சகஜம். தமிழுக்கு பதிலாக தமிழ் நாட்டில் இருக்கவேண்டியது இந்தி அல்ல. இந்தி ஒரு மொழி என்கின்ற அளவுக்கு அதைக் கற்கவேண்டியது அவசியம். ' அப்பொழுதுதான் மற்ற ராஜ்யங்களோடு வடக்கே உள்ள மக்களோடு வர்த்தகத் துறையிலும் மற்ற துறைகளிலும் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள முடியும். இந்தியை ஒரு மொழி என்ற ரீதியில் கற்கவேண்டியது அவசியம் என்பதுதான் கம்யூனிஸ்டு கட்சியின் கருத்து. இந்தி மொழியை பள்ளியில் கற்றுக்கொள்ளுவதில் அதில் பாஸ் மார்க்குகள் வாங்கவேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்யப்படுகிறது. அம்மாதிரி நிர்ப்பந்தப்படுத்துவது தவறு. அதன் மூலம் எதிர்ப்பு தான் வளரும் என்று அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தி மொழியை ஒரு மொழி அளவில் கற்பதற்கு இடம் அளிக்கவேண்டும். தமிழுக்குப் பதில் இந்தி வருவது அல்ல. இந்தி வந்துவிடுமோ என்ற பயத்தைக் காண்பித்து ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கவேண்டுமென்று சொல்லுவது தமிழுடைய முன்னேற்றத்திற்கு உதவாது. தமிழ் நாட்டிலே எல்லாத் துறைகளிலும், தமிழே ஆட்சி மொழியாக, நிர்வாக மொழியாக, போதனா மொழியாக ஏற்பட்டால் தான் தமிழ் முன்னேற முடியும். அது மாதிரி சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டால் தான் 14 மொழிகளை பேசக்கூடிய மக்களிடையே ஒற்றுமை வளர்வதற்கு இடம் ஏற்படும். எந்த மொழியைப் பேசக்கூடியவர்களும் எந்த ராஜ்யத்திற்கும் போகலாம். எங்கு வேண்டுமானாலும் தொழில் செய்யலாம், மற்ற உத்தியோகங்களில் இருக்கலாம் என்று அரசியல் சட்டத்தில் கண்டிருக்கிற சுதந்திரம் உண்மையான சுதந்திரமாக இருக்கவேண்டுமென்றால் இம்மாதிரி பிரதேச மொழி வளர்வதற்கு இடம் கொடுக்கவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை தயங்காமல் எடுத்துக்கொள்ளவேண்டும். நம்முடைய அமைச்சர் அவர்கள் இதை மத்திய சர்க்காரிடம் வலியுறுத்தி, அவர்களுக்கு இருக்கும் செல்வாக்கை உபயோகப்படுத்தி, ஜனாதிபதியின் உத்தரவில் இருக்கக்கூடிய குறைபாடுகளை நீக்குவதற்கேற்ற சட்டங்களை பார்லிமெண்டில் உடனே கொண்டு வருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறிக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன், வணக்கம்.

**Sri N. R. THIAGARAJAN :** Sir, on a point of order. . . . (In Hindi).

**Mr. SPEAKER :** அங்கத்தினர் அவர்கள் சொன்னது எனக்கே புரியவில்லை.

**Sri N. R. THIAGARAJAN :** தாங்கள் எல்லா மொழிகளிலும் அங்கத்தினர்களைப் பேச அனுமதிக்கிறீர்கள், கனம் ரஷீத் ஹிந்தியில் பேசுகிறேன் என்றார்கள். அதையும் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**Mr. SPEAKER :** அவர்கள் உருதுவில் பேசவேண்டும் என்றார்கள். அதற்கு இடம் இல்லை. அங்கத்தினர் அவர்கள் சொன்னது அவர்களுக்கே புரிந்ததோ என்னவோ சந்தேகம். (சிரிப்பு).

*** C. N. ANNADURAI :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, மொழிப் பிரச்னை பற்றி நம்முடைய சட்ட மன்றத்திலே இதற்கு முன்னால் இரண்டொரு முறை விவாதித்திருந்த போதிலும், இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் பரபரப்பான நிகழ்ச்சிகள், நாட்டில் நடைபெற்ற எதிரொலிகள், இதன் மேல் எழுந்த அரசியல் விவாதங்கள் பொதுமக்கள் உள்ளத்திலும் பரவியிருக்கும் காரணத்தினால், மொழிப்பிரச்சினை சட்ட மன்றத்திலே இப்பொழுது கவனிக்கப்படுவது பொருத்தமானது என்று கருதுகிறேன். அவ்வளவு பொருத்தமான விவாதத்தில் நாங்கள் கலந்துகொள்ள கடைசி நேரத்தில் அனுமதி மறுத்துவிடுவார்களோ என்று அச்சப்பட்டேன். ஆனால், இன்று





காலையில் நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள், "நான் வரவேற்கிறேன்—அவர்கள் இதில் கலந்துகொள்வதை" என்று. ஆனால், அவர்கள் இதில் எங்கள் கருத்தைச் சொல்வதன் மூலம், எங்கள் பிரிவினைக் கொள்கை விஷயத்தில் ஏதோ மாறுதல் ஏற்பட்டிருக்குமோ என்ற எண்ணமும், ஒன்றுபட்ட இந்தியாவை ஆதரிக்கிறோம் என்ற எண்ணமும் தொனிக்கப் பேசினார்கள். எங்களுடைய கட்சி விஷயத்தில் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் புதிய அக்கறையை நான் நன்றியறிதலோடு வரவேற்றுப் பாராட்டுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகக் கருத்துக்களை எடுத்துச் சொல்லும் போது, எங்கள் மூலாதாரக் கருத்துக்கள் பாதிக்கப் படாத அளவுக்குப் பார்த்துக் கொள்ள போதுமான திறமை எங்களிடம் இருக்கிறது என்று தெரிவித்துக் கொண்டு, எப்பொழுதாவது எங்கள் திறமையில் குறைவு ஏற்பட்டால், வேறு கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், நண்பர் என்ற முறையில், அது சரியல்ல என்று எடுத்துச்சொல்லி எங்கள் கட்சிக்கு நிதி அமைச்சர் வலுவூட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். (சிரிப்பு). ஏனென்றால், இந்த மொழிப் பிரச்னை பற்றி பேசும் நேரத்தில் யாரும் ஒளிவு மறைவு இல்லாமல், இந்த ஒரு விஷயத்திலாவது, பேசுவது நல்லதென்று கருதுகிறேன்.

இந்த மொழிப் பிரச்னையில், இன்றைய தினம் ஆளும் கட்சியாக இருக்கும் காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கைகளைப் பல ஆண்டுகளாகக் கவனிக்கவேண்டும். இதில் திராவிட இயக்கத்தை நடத்தும் எங்கள் கட்சிகளுக்கு இருந்திருக்கிற அக்கறையையும் உண்மையிலேயே கூர்ந்து கவனிக்கவேண்டும். காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சியாக ஆவதற்கு முன்னாலேயே, ஹிந்தி தேசீய மொழி, என்று சொல்லி நாட்டில் ஹிந்திப் பிரசாரத்தில் நீண்ட காலத்திற்கு முன்னாலேயே இறங்கி, காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் இந்தியாவுக்கு 'ஹிந்தியே பொதுமொழி, சுயராஜ்யம் அடைந்த பிறகு முதல் காரியம் அதுவே' என்று வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். அந்த நேரத்திலெல்லாம், நாங்கள் நடத்தி வரும் தமிழ் இயக்கமோ, திராவிட இயக்கமோ, ஹிந்திக்குக் கணிசமான எதிர்ப்பினை நடத்தி வந்திருப்பதில் ஒரு ஒருமைப்பாடு இருந்து இருக்கிறது, 25 ஆண்டுகளாக. காங்கிரஸ் கட்சியிலும் இதில் ஒருமைப்பாடு இருக்கிறது என்றாலும், காலத்திற்குக் காலம், எதிர்ப்புணர்ச்சிக்குத்தக்கபடி, மாறுதல் அடைந்திருக்கிறது. மாறுதல் என்று சொல்லும்பொழுது, குறை சொல்லுகிறேன் என்று யாரும் கருதவேண்டாம். மாறுதல் வளர்ச்சிக்கு அடையாளம்; அவர்கள் உலகத்தை அறிந்து கொண்டார்கள் என்பதற்கு. அந்த அவர்கள் பண்பினை எடுத்துக் காட்டுகிறேன்.

காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சியான பிறகு, ஹிந்தி மொழியைப் பரப்ப ஏற்படுத்திய குழுக்கள் இரண்டு, மூன்று. அரசியல் நிர்ணய சட்ட சபை ஒன்று, அப்பொழுது அங்கு பேசப்பட்டதையெல்லாம் கனம் நிதியமைச்சரவர்கள் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும் என்று கூறிக்கொள்ளுகிறேன். அதன் பிறகு, காங்கிரஸ் (ஒர்க்கிங் கமிட்டி,) செயற் குழுவில் தீர்மானித்திருக்கிறார்கள். இன்னொன்று, ஹிந்தி ஸாஹித்ய சம்மேளனம் என்ற ஹிந்திக் குழுவிலும் செய்திருக்கிறார்கள். ஆக, மூன்று தனித்தனிக் குழுக்களிலே கவனிக்கப்பட்டிருக்கிறது இந்தப் பிரச்னை. அரசியல் நிர்ணய சபையிலே வந்த நேரத்திலே, அந்தச் சபையில் நமது நிதியமைச்சரவர்கள் அங்கம் வகித்து இருந்திருக்கிறார்கள். அந்த விவாதம் நடைபெற்ற குறிப்பேடுகளை ஆவலோடு படித்துப் பார்த்தேன். விஷயங்கள் சுவையுள்ளது என்பதற்காக மட்டுமல்ல,—சுவையான விஷயங்களும் அதில் அடங்கியிருக்கின்றன—அப்பொழுது நம் நிதியமைச்சரவர்கள் அங்கம் வகித்தார்களே, அவர்கள் ஹிந்தியைக் கையாள்வது பற்றி என்ன பேசியிருக்கிறார்கள் என்று துருவித் துருவிப் பார்த்தேன். வருத்தப்பட்டேன், மிகச் சிக்கலான ஒரு பிரச்னை விவாதத்திற்கு வந்து, உறுப்பினர்கள் தம் கருத்தினைத் திட்டவட்டமாக எடுத்துச் சொன்னபோது நிதியமைச்சர் ஒருவித கருத்தையும் சொல்லாமல் இருந்திருக்கிறார்கள். அதில் நழுவிக் கொண்டார்கள் என்று சொன்னால், அது சரியல்ல என்று சொல்லக் கூடும், ஆனால், மொழிப் பிரசனை வரலாற்றில், ஒரு முக்கியமான பாகம் எழுதப் படாமல் போய்விட்டது. என்ன பேசினார்கள், விவாதத்தில், நடைமுறையில்

[Sri C. N. Annadurai] [5th September 1960

கொண்டுவருவது பற்றி, என்று பார்த்தால், ஒன்றுமில்லை, நடுவே ஒரு விளக்கம் கொடுத்தார்கள் என்பதைத் தவிர. கோவை மாவட்டத்தைச் சேர்ந்த திரு ராமலிங்கம் செட்டியார் அவர்கள்—ஒரு நாளிலே இங்கே முதல் அமைச்சராக இருந்தவர் இன்றைய தினம் இந்தியத் துரைத்தனத்தில் அமைச்சராக இருக்கும் டாக்டர் சுப்பராயன், இவர்கள் எல்லாம் பேசிய நேரத்திலே, நமது நிதியமைச்சர் அவர்கள் பேசாமல் இருந்ததைப் பார்த்து மிக்க வருத்தப்பட்டேன். (குறுக்கீடு) கௌரவமாக பேசவில்லை என்று சொன்னேன், சான்ஸ் கிடைக்கவில்லை என்று சொல்கிறார், லால்குடி உறுப்பினர் அப்படிச் சொல்லத் தேவையில்லை. இந்தச் சிக்கலான, முக்கியமான பிரச்சினை விவாதிக்கப்பட்ட நேரத்திலே, அவர்கள் காட்ட வேண்டிய அக்கறை காட்டாமலே இருந்திருக்கிறார்கள். ஏறக்குறைய 300 திருத்தங்கள் கொடுக்கப்பட்டு, திரு. கோபாலசுவாமி அய்யங்கார் கொடுத்த அதிகார பூர்வமான தீர்மானம் விவாதிக்கப்பட்ட நேரத்திலே, நம் சட்ட சபையிலே விவாதிப்பது போலல்லாமல் திருத்தம், திருத்தமாக விவாதிக்காமல், ஒட்டுமொத்தமாக எல்லாத் திருத்தங்களையும் எடுத்துக்கொண்டு, யார் யார் என்னென்ன கருத்தைச் சொல்லவேண்டுமோ அவைகளைப் பேசினார்கள், அப்படிப் பேசும்போது, தங்கள் தங்கள் தீர்மானங்கள் மீதும் பேசி, ஏற்படுத்திய ஒரு குழப்பத்தைத் தவிர, இந்தியத் துணைக் கண்டத்திற்கு ஆட்சி மொழியாக என்ன மொழி இருக்க வேண்டும் என்ற ஒரு பிரச்சினையில் காட்டப்படவேண்டிய ஆவல், செலுத்தப்பட வேண்டிய அக்கறை, காட்டப்படவில்லை, செலுத்தப்படவில்லை; காட்டப்பட வேண்டிய திறமை, காட்டவில்லை. அப்பொழுது படித்துப் பார்த்தாலும், நிதியமைச்சரவர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறேன். மண்டு ஒரு முறை இந்தச் சபையில் குறிப்பிட்டேன்: இந்திய துணைக் கண்டத்திற்கு விடுதலை கிடைத்த காரணத்தினால், விடுதலை பெற்றுத் தந்தவர்கள் என்ற விருது பெற்றவர்கள் என்ற எண்ணத்திலும் இந்த நாட்டை நடத்துவதற்குப் பொறுப்பு நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்ற எண்ணத்தோடும் அங்கே கூடியிருக்கும் நேரத்திலே, ஒருவருக்கொருவர் அன்புரைகளைப் பரிமாறிக் கொள்ளும்போது, எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதை எண்ணிப் பார்க்காமல் செய்த முடிவுதான் இந்த ஹிந்தி ஆட்சி மொழி என்று இருக்கும் அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவு என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். அரசியல் சட்டத்திலே அந்தப் பதினேழாவது பிரிவு நல்ல முறையிலே திருத்தி அமைக்கப்படாத வரையில், அதிலே புதிய கண்ணோட்டம் செலுத்தப்படாத வரை, காலத்திற்கேற்ப மாற்றியமைக்காத வரை, இந்தச் சிக்கல்கள், இந்தப் பிரச்சினை, குழப்பங்கள், நிச்சயமாக மீண்டும், மீண்டும் தலை தூக்கிகொண்டுதான் இருக்கும். அஸ்ஸாம் அளவுக்குச் செல்லவில்லை யென்றாலும், தமிழன் போக்கு விவாத அளவோடு நிற்குமா என்று இப்பொழுது பேசத் தேவையில்லை என்றாலும், மொழி வெறி, மொழி ஆதிக்கம் காரணமாக குழப்பம் ஏற்படும் நேரத்தில், யாராலும் எதையும் தடுக்க முடியாது, விரும்பத்தகாத விளைவுகள் நிச்சயமாக ஏற்பட்டே தீரும். ஆகையால், இந்தியாவுக்கு ஆட்சி மொழி இந்தி என்று தீர்மானித்தது, சரியான சூழ்நிலையில் நல்ல விதமாக விவாதித்து எடுக்கப்பட்டத் தீர்மானம் அல்ல என்பதனை கனம் நிதியமைச்சரவர்களுக்கு நினைவு படுத்துகிறேன். அரசியல் நிர்ணய சபையிலே பலவாறு குறிப்பிட்டார்கள்)
4 p.m. நல்ல விதத்தில் விவாதிக்கப்பட்டு அது முடிவு எடுக்கப்பட்டதல்ல. இதைச் சொல்லும்போது அப்படி நான் சொல்வது மட்டுமல்ல, நமது மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்களுக்கும் நினைவு இருக்கும் என்று கருதுகிறேன், அரசியல் நிர்ணய சபையில் இப்படியே பலர் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி எடுத்துக்காட்டிச் சொல்லி இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக ஒரு அங்கத்தினர் அதைப்பற்றி மிகவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். இங்கு 315 பேர்கள் கூடி இதற்கு வழி கண்டுபிடிக்கத் தேவையில்லை, அதை இந்நாட்டு மக்களுக்கு விட்டுவிடலாம் என்று அவர் தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறார். இன்னும் பலர் அதைப்பற்றி விவாதித்திருந்தாலும் விவாதத்தின் கடைசியில் க்ளோஷர் மோஷன் கொண்டு வந்து இது வரையில் விவாதித்தது போதும் என்றும் இனிமேல் முடித்து விடலாம் என்றும் சொல்லி இருக்கிறார். சற்று தொடரலாம் என்று இன்னொரு உறுப்பினர் சொன்ன நேரத்தில் நமது மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் எழுந்திருந்து 'இந்தப் பிரச்னை இப்பொழுது தேவை இல்லை' புதிய திருத்தம் வரும்' அந்தக் காலத்தில்



5th September 1960] [Sri C. N. Annadurai]

இதைப்பற்றி எடுத்துச் சொல்லலாம்' என்று குறிப்பிட்டிருக்கிறார். அப்பொழுது கவனித்துக் கொள்ளலாம் என்றும் சொல்லி இருக்கிறார். இதனை அரசியல் நிர்ணய சபைத்தலைவர் ஏற்றுக்கொண்டு க்ளோஷர் மோஷனுக்கு இடம் கொடுத்துவிட்டு விவாதத்தை முடித்துவிட்டு கடைசியில் இரண்டொரு திருத்தத்தை மட்டும் வோட்டுக்கு விட்டார். அவை தோற்கடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டபோது கனம் திரு டி. எ. ராமலிங்கம் செட்டியார் அவர்கள் தம் திருத்தத்தைப்பற்றி வோட்டு எடுக்கவேண்டும் என்று சொல்லியபோது கையை உயர்த்தி வோட்டுகள் எடுக்கப்பட்டன. அந்த திருத்தத்திற்கு ஆறு வோட்டுகள் கிடைத்ததாக அரசியல் நிர்ணய சபைக் குறிப்புப் புத்தகத்தில் இருக்கிறது. அந்த ஆறு கரங்களில் நமது மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்களுடைய கரமும் இருந்ததோ என்னமோ அதைப்பற்றிக் குறிப்பிடவில்லை. அப்படி அவருடைய கரம் இருந்திருந்தால் அது தமிழ் நாட்டினுடைய நல்ல கரம்தான். அவருடைய கரம் இல்லாது இருக்குமானால் உண்மையிலேயே அவருடைய கரம் நமக்குப் பயன்படாமல் போய் விட்டது என்று தான் கருத வேண்டும் (சிரிப்பு). இப்படி எவ்வளவோ பல திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு தோற்கடிக்கப்பட்டிருக்கின்றன. அந்த முறையில் நிறைவேற்றப்பட்ட அரசியல் நிர்ணய சட்டத்தில் இருக்கக்கூடிய 17-வது பிரிவு மொத்தமாக திருத்தி அமைக்கப்படவேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடையது மட்டுமல்ல, இந்திய துணைக் கண்டத்திலுள்ள பலருடைய கருத்துமாகும்.

இந்தியா ஒன்றாக இருக்க வேண்டும் என்று கருதுகிறவர்கள் மட்டும் தான் இதைப்பற்றிப் பரிசீலனை செய்யவேண்டும், மற்றவர்கள் இதைப்பற்றிப் பேச வேண்டியதில்லை என்று சொல்லக்கூடிய கருத்து உண்மையிலேயே தவறான கருத்தாகும். அது பொருத்தமான வாதமாகாது. இந்தியா இப்பொழுது சுயராஜ்யம் அடைந்து விட்டது. சுயராஜ்யம் கிடைப்பதற்கு முன்னால் உப்பு சத்யாக்ரகம் செய்த போது 'சுயராஜ்யம் கிடைத்துவிட்டால் உப்பு வரியை எடுத்து விடுவோம்' என்று சொன்னார்கள். வெள்ளைக்கார ஆட்சி நடந்தபோது உப்பு சத்யாக்ரகம் செய்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளை விரட்ட வேண்டும் என்று சொன்னார்கள். அதன் பிறகு சுயராஜ்யம் கிடைத்து விட்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளை விரட்டி விட்டார்கள். அவர்களுக்குப் பதில் இப்பொழுது தேசியத் தலைவர்கள் அல்லது அவர்களுடைய இரண்டாவது தலைமுறை இப்பொழுது ஆட்சியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது ஏகாதிபத்தியவாதிகள் போய் விட்டார்கள், ஆனால் ஏகாதிபத்தியம் இருக்கிறது.

வெள்ளைக்கார ஏகாதிபத்தியம் போய் உள்நாட்டு ஏகாதிபத்தியம் வந்திருக்கிறது. வெள்ளைக்காரர் அவர்களுடைய ஏகாதிபத்தியத்தை மற்றவர்களுக்கு அளித்துவிட்டுப் போய் விட்டார்கள். இப்பொழுது இருக்கிற நிலைமையைப் பற்றி எடுத்துச் சொல்ல எந்தக் குடிமகனுக்கும் உரிமை இருக்கிறது. சுதந்தரப் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தாலும் சரி, சுதந்தரப் போராட்டத்தில் கலந்து கொண்டிருக்காவிட்டாலும் சரி சுதந்தரம் கிடைத்த பிறகு ஆளும் கட்சியுடன் குலவுபவனாக இருந்தாலும் சரி, எந்தக் குடிமகனாக இருந்தாலும் அவன் இந்த இந்திய துணைக் கண்டத்தில் இடம் பெற்றிருக்கக்கூடியவனாக இருந்தால் அவனுக்கு இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையைப்பற்றி எடுத்துச் சொல்வதற்கு வேண்டிய உரிமை இருக்கிறது. இப்பொழுது இருக்கிற சட்ட திட்டங்கள், பாகுபாடுகள் இவைகளைப்பற்றியெல்லாம் எடுத்துச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. அவரவர்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வேண்டிய உரிமை எல்லாக் குடிமகனுக்கும் இருக்கிறது. இதனை நமது நிதி அமைச்சர் அவர்கள் மறுக்க மாட்டார் என்றே நினைக்கிறேன். இன்று காலை கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் வரவேற்கிறேன். அவர் எவ்வளவோ தெளிவாகச் சொல்லியிருக்கிறார். நாட்டுப் பிரிவினையைப்பற்றி இன்னும் சொல்லிக்கொண்டிருந்தால் நாட்டின் ஒற்றுமை கெட்டுப்போய் விடும் என்று சொல்லுகிறார்கள்.

[Sri C. N. Annadurai] [5th September 1960

நாட்டைப் பிரிக்க வேண்டும் என்றால் தெற்கே உள்ளவர்களுக்கும் வடக்கே உள்ளவர்களுக்கும் இந்திய துணைக் கண்டத்தில் விரோதம் வந்துவிடும் என்ற பொருள் இல்லை. பிரிந்து போவதால் விரோதம் வந்துவிடாது என்பதற்கு எடுத்துக்காட்டாக நமது பிரதம மந்திரி நேரு அவர்கள் நம்முடைய ராஜ்யத்திலிருந்து கராச்சிக்குப் போகிறார். பிரிந்து போன பாகிஸ்தானுக்கு அவர் போக வேண்டிய காரணம் என்ன என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். இதனை நான் சொல்லும் போது அண்ணாத்துரை பண்டித நேரு அவர்களுடைய அந்தஸ்துக்கு தன்னை உயர்த்திக் கொள்கிறார் என்று காங்கிரஸ்காரர்கள் நினைத்துக் கொள்ளலாம். அப்படி அவ்வளவு பெரிய இடத்திற்கு என்னை உயர்த்திக் கொள்ளுகிறேன் என்று நினைத்தால் அது தவறான எண்ணம் என்றுதான் நான் கருதுகிறேன். அந்த முறையில் பேசும்போது அவ்வளவு உயர்ந்த பதவியில் உயர்த்திக்கொண்டு நான் பேசுகிறேன் என்று கருதவேண்டாம். பிரிந்து போவதால் ஏற்படக் கூடிய மனக் கசப்பு தானாகப்போய்விடும். ஆகவே இந்தப் பிரச்னையைப் பற்றி விவாதிப்பதற்கு நிச்சயமாக இடம் இருக்கிறது.

•

இந்திய துணைக் கண்டத்திற்கு தனியான ஆட்சி மொழி வேண்டியது அவசியம்தான். இந்தியத் துணைக்கண்டம் விடுதலை அடைந்தவுடனேயே அதைப் பற்றி முடிவு செய்திட வேண்டும். இப்படிப்பட்ட அடிப்படை பிரச்னையில் அப்பொழுதே கவனம் செலுத்திட வேண்டும் என்ற எண்ணத்தில் அப்பொழுதே அரசியல் நிர்ணய சபையில் உட்கார்ந்து கொண்டு இதைப்பற்றி முடிவு செய்திருக்கிறார்கள். அப்பொழுது நம்முடைய மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்களும் அங்கே இருந்திருக்கிறார். அப்பொழுது அங்கே ஹிந்தி வெறியர்கள் இருந்திருக்கிறார்கள். அதை அவர் மறுக்க மாட்டார் என்றே நினைக்கிறேன். அப்பொழுது அந்த அரசியல் நிர்ணய சபையில் ஹிந்தி மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டு வருவதைப்பற்றி ஒருவரும் எதிர்த்துச் சொல்லவில்லை. அந்த இடத்தில் ஹிந்தி எண்ணைப்பற்றித்தான் பிரச்னை எழுப்பப்பட்டிருக்கிறது. ஹிந்தி எழுத்திலுள்ள எண்ணைக் கொண்டு வருவதா அல்லது அரபி எண்ணைக் கொண்டுவருவதா என்ற பிரச்னைதான் எழுப்பப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாகத்தான் பல கருத்துக்களை அவர்கள் மறுத்து மறுத்துப் பேசியிருக்கிறார்கள். அப்படிப் பேசிய போது ஹிந்தி வெறியர்களில் ஒருவர் கூட இதைப்பற்றி பேசியிருக்கிறார். ஹிந்தி தேசிய மொழியாக இருக்க வேண்டும் என்று அவர் சொன்ன நேரத்தில் அதை விரும்பாத ஒரு உறுப்பினர் ஹிந்தி மொழி தேசீய மொழி அல்ல, ஆட்சி மொழி, நிர்வாக மொழி என்று சொன்னார். அதற்கு ஹிந்தி வெறியர்

**'You may call it official language but I call it national language. You may belong to another nation but I belong to the Indian Nation. You may oppose and walk out but I do not approve of your view.'**

என்றெல்லாம் பேசியிருக்கிறார். அவருடைய பேச்சுக்கு எவ்வளவு தூரம் கவனம் செலுத்தப்பட்டது என்பதைப்பற்றி எனக்குத் தெரியாது. அதைப் பற்றி கனம் நிதி அமைச்சருக்கு நன்றாகத் தெரியும். அப்பொழுது நடந்த விவாதம் எல்லாம் ஹிந்தி எண்ணை கொண்டு வருவதா அல்லது அரபு எண்ணைக் கொண்டு வருவதா என்பதுதான். ஹிந்திதான் ஆட்சி மொழி என்று முடிவு செய்துவிட்டார்கள். அதன் பிறகு கௌகத்தி மகாநாட்டில்தான் இதைப்பற்றி மறு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆட்சி மொழி என்று இல்லாவிட்டால் நாட்டில் ஒற்றுமை இல்லாத நிலை ஏற்பட்டு விடும் என்று சொல்கிறார்கள். சரித்திரத்தை நாம் பார்க்கவேண்டும் அதற்கு வேண்டிய ஆதாரத்தை தேடிப்பிடிக்க வேண்டும். ஸ்விட்சர்லந்து நாட்டில் நான்கு ஆட்சி மொழிகள் இருந்தும் நூற்றுக்கு ஒருவர் பேசக் கூடிய ஒரு மொழியையும் ஆட்சி மொழியாக ஆக்கியிருக்கிறார்கள் அதனால் ஒற்றுமை குலைந்துபோகவில்லை. ஸ்விட்சர்லண்டை கவனித்துப் பார்க்க வேண்டும். அங்கு ஆட்சி மொழி என்ன, அதனுடைய நிலை என்ன என்பதைப் பார்க்கவேண்டும்.



5th September 1960] [Sri C. N. Annadurai]

நான் அங்கு சென்றிருக்காவிட்டாலும் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கிறேன். நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள் கூடிய சீக்கிரத்தில் அந்த இடங்களுக்குச் செல்ல இருக்கிறார். அவர் அங்கு போகக் கூடிய காலத்தில் அதைப்பற்றி நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். அவர் தன்னுடைய சுற்றுப் பிரயாணத்தில் இதைப்பற்றி எல்லாம் தெரிந்து கொள்ளலாம். சுவிட்ஜர்லண்டில் ஒற்றுமை குலைந்து போய் விட்டதா என்பதையும் பார்க்கவேண்டும். கனடாவில் ஒற்றுமை குறைந்து விட்டதா? ஆங்கிலம் பிரஞ்சு இரண்டும் ஆட்சி மொழியாக இருக்கக்கூடிய இடத்தில் ஒற்றுமை குலைந்து போய்விட்டதா? வேறு எந்த இடத்திலும் ஒற்றுமைக்குப் பங்கம் ஏற்படாமல் இருக்கும் போது இந்த நாட்டில் மட்டும் ஒற்றுமை குலைந்து விடும் என்று சொல்வதற்கு என்ன காரணம்? ஒரு மொழிக்கு வளம் இல்லாமல் இருக்கலாம். இலக்கியம் இல்லாமல் இருக்கலாம், இலக்கணம் இல்லாமல் இருக்கலாம். ஏதோ சிலர் பேசுகிறார்கள் என்பதற்காக அதைக் கொண்டு வருவது என்பது கேலிக்கூத்தாகத்தான் இருக்கிறது. அது அந்நிய மொழியாகத்தான் இருக்கிறது. அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஹிந்தி வெறியர்களும் ஹிந்தி ஆதரவாளர்களும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஹிந்தி வெறியர்கள் என்று நான் சொல்லும்போது உத்திரப்பிரதேசம், மத்திய பிரதேசம், பீகார், போன்ற பிரதேசங்களிலிருந்து வருகிறவர்கள் அதைக் கொண்டு வர வேண்டும் என்று சொல்லுகிறவர்கள் ஹிந்தி ஆதரவாளர்கள் என்று நான் குறிப்பிடும் போது அது யாரைக் குறிப்பிடுகிறது என்றால் இங்கே ஹிந்தி வேண்டும் என்று ஆதரித்துப் பேசுகிறவர்களைக் குறிப்பிடுகிறது. அதாவது சர்தார் எ. வேதரத்தினம் போன்றவர்களை ஹிந்தி ஆதரவாளர்கள் என்று நான் குறிப்பிடுகிறேன். இதிலே யார் சொல்வதாக இருந்தாலும், "இந்தி மொழியில் என்ன இலக்கணம் இருக்கிறது, என்ன இலக்கியச் செறிவு இருக்கிறது?" என்று கேட்டால் துருவித் துருவிக் கண்டுபிடித்து அவர்கள் இரண்டு காவியங்களைத் தான்—காப்பியங்களைத்தான்—காட்டுகிறார்கள். ஒன்று துளசிதாசர் எழுதிய இராமாயணம். மற்றொன்று ஆல் இந்தியா ரயில்வே கெய்டு. (சிரிப்பு) இந்த இரண்டையும் தான் தங்கள் மொழியில் உள்ள சிறந்த இலக்கியமாகக் காட்டுகிறார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM: நம்முடைய இலக்கியச் செல்வத்தை எத்தனை வேண்டுமானாலும் உயர்த்திப் பேசிக்கொள்ளலாம். அதற்காக இன்னொன்றைத் தாழ்த்தக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

*SRI C. N. ANNADURAI: நான் மற்றவர்களைத் தாழ்வுபடுத்த வேண்டும், இழிவு படுத்தவேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. தாழ்வு படுத்தப்படுகிறோம், இழிவு படுத்தப்படுகிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இரண்டாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வருகிற நம்முடைய தாய் மொழியாகிய தமிழ்மொழி ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்று ஒரு நாளாவது நமது நிதி அமைச்சர் அவர்கள் கேட்டிருக்கக் கூடாதா? அவர்கள் அதைத் தள்ளிவிடட்டும். ஒப்புக் கொள்ளாமல் போகட்டும். என்றாலும் நம்முடைய தாய் மொழியாகிய தமிழ் இந்திய தேச ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமென்று நாம் வற்புறுத்தினோம் என்கிற மனச் சாந்தியாவது அவருக்கு ஏற்பட்டிருக்கக்கூடும். ஆனால் பரந்த மனப்பான்மை—வேதாந்த மனப்பான்மை என்றெண்ணி அவர் சொல்கிறார், "எல்லோரும் சொல்லலாம். நடப்பதாக இருந்தால் தான் சொல்லலாம். நடக்காத காரியத்தை வீணாகச் சொல்வானேன்" என்று. இரண்டு திங்களுக்கு முன்பாக மேற்கு வங்கச் சட்டசபையில் மொழிப்பிரச்னைபற்றி விவாதம் நடக்கையில் வங்காளத்தையும் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்திய வங்க நாட்டுப் பெரியவர்கள் "தமிழ் மொழியும் மிகச் சிறந்த மொழி. அதையும் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று பேசியிருக்கிறார்கள். கொங்கு நாட்டு அமைச்சரிடத்தில் இருந்து இதனைக் கூற கேட்பதற்குப் பதிலாக வங்க நாட்டில் இருந்து கேட்பதற்கு பாராட்டுவதா, எந்த வகையில் பாராட்டுவது என்று தெரியவில்லை. தமிழ் ஆட்சி மொழியாக

[Sri C. N. Annadurai] [5th September 1960

இருக்கவேண்டும் என்ற ஆர்வம் நமக்கு எழவில்லை. அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். தமிழ் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்று சொல்லக்கூட நாம் பயப்படுகிறோம். ஆனால் இதுவும் ஆட்சிமொழியாகத்தான் இருக்கவேண்டும் என்று அவர்கள் சொல்கிறார்கள். இப்படி நமது அமைச்சர் அவையில் உள்ளவர்களுக்கு—ஆளும் கட்சியாக உள்ளவர்களுக்கு தமிழ் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்று சொல்வதற்குக் கூட பயம் இருப்பதற்குக் காரணம் என்ன ? அதுதான் உள்ளே இருக்கக் கூடிய அரசியல் தத்துவம். என்னைப் போன்றவர்கள் பேசுவதைப் பார்த்து—இப்படி அவர்கள் பேசினார்களாமே, நீங்கள் அவர்களை இப்படிப் பேசவிட்டுக் கேட்டுக் கொண்டா இருந்தீர்கள் என்று கேட்டால் உடனே, "இல்லையே, உடனே குறுக்கிட்டு உங்களைப் பாராட்டிக்கொள்ளுங்கள், அதற்காக மற்றவர்களை இழிவுபடுத்தாதீர்கள் என்றல்லவா சொன்னேன்" என்று சொல்லிக் கொள்ளத்தான் வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்கிறார் கனம் நிதி அமைச்சர்.

ஆகவே இன்றைய தினம் ஒளிவு மறைவு இல்லாமல் பேசப்பட்டுவிட வேண்டும். நீங்கள் எதற்காக அச்சப்படுகிறீர்கள்? உங்களை யாரும் ஆதரிக்கமாட்டார்கள் என்று நினைக்கிறீர்களா ? உங்களை ஆதரிக்க நாங்கள் இருக்கிறோம். நீங்களே நிரந்தரமாகப் பதவியில் இருக்கவேண்டுமா ? இப்பொழுதே எங்களுடைய கட்சியின் ஒரு பகுதியினராகிய திராவிடக்கழகத்தினர் உங்களுக்குத்தான் ஆதரவு அளித்துக்கொண்டு வருகிறார்கள். நாங்களும் கூட இந்தக் காரியத்தைச் செய்யுங்கள்—அதற்கு எங்களுடைய பாதுகாப்பைத் தருவதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால் நீங்கள் தமிழ் நாட்டின் எதிர்காலத்தைப் பாதிக்கின்றவகையில் வட நாட்டாருக்குத் தாழ்ந்து போய்விடக்கூடாது. இந்தி மொழி ஆட்சி மொழியாக இருப்பதற்கு எந்த வகையிலும் தகுதி இல்லாதது எந்த வகையான தேவையும் இல்லாதது.

இன்னொன்று காலையிலேயே கேட்கவேண்டுமென்று கருதினேன்—ஆட்சி மொழி ஆட்சி மொழி என்று பேசுகின்றோம். ஆனால் ஆட்சி மொழி என்றால் என்ன என்பதற்கு இன்னமும் தெளிவான விளக்கம் தரப்படவில்லை. ஆட்சி மொழி என்பது எந்த எந்தக் காரியத்திற்காகப் பயன்படுத்தப்படும், எவ்வாறு பயன் படுத்தப்படவேண்டும் என்பதற்கு இன்னமும் விளக்கம் தரப்படவில்லை. ஆட்சி மொழி என்றால் கார்டு கவர்களில் இருக்க வேண்டும், சட்ட மன்றத்தில் பேசப்படவேண்டும், அந்நிய அரசாங்கத்தோடு தொடர்பு வைத்துக் கொள்ள எழுதப்பட வேண்டும் என்று இப்படி என்ன என்ன வகையில் தான் தீர்மானித்திருக்கிறார்கள் என்பதற்கு விளக்கம் நமக்கு இல்லை. அதற்குக் காரணம் அரசியல் அமைப்பின்படி ஆட்சி என்றாலே என்ன என்பதற்கு விளக்கம் இல்லாதது தான். ராஜ்ய நிர்வாகம், மத்திய நிர்வாகம், இரண்டும் சேர்ந்த நிர்வாகம் என்கிற அடிப்படையில் எது நம்முடைய ஆட்சியைச் சேர்ந்தது, எது அவர்களுடைய ஆட்சியைச் சேர்ந்தது, எது இரண்டு சர்க்காருடைய ஆட்சியையும் சேர்ந்தது என்று பிரித்துப் பார்க்கிறபோது நாம் ஒரு குழப்பமான நிலைமையில் இருக்கிறோம். இன்றைய தினம் நம்முடைய ஆட்சி மொழி என்று சொல்கிற நேரத்தில் நிதி அமைச்சர் திரு சுப்பிரமணியம் அவர்கள் தெளிவாக விளக்கம் கொடுக்க வேண்டும். அது எத்தனை பேர்களை பாதிக்கக் கூடிய பிரச்னையாக இருக்கிறது என்று. சென்னை சர்க்காரில் இருந்து மத்திய சர்க்காருக்கும், அல்லது சென்னைத் துறைத்தனத்தார், வங்கத் துறைத்தனத்தாருக்கும் எழுதுகிற கடிதப் போக்குவரத்து ஆட்சி மொழியில் இருக்க வேண்டும் என்றால் அதற்காக இப்படித் துருவித் துருவி வார்த்தைகளைக் கண்டுபிடிக்கவேண்டியதில்லை. அதற்காக இப்படிக் கோடிக் கணக்கில் பணத்தைக் கொட்டி வார்த்தைகள் கண்டுபிடிக்க வேண்டியதில்லை. அப்படி அவர்கள் தேடித்தேடி அலைவானேன்? இந்தி மொழியை வளப்படுத்துவானேன் ? அவர்களுடைய உள்நோக்கம் எதுவோ அதை வடக்கே உள்ளவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்வதற்கு அவர்களுக்கு இப்பொழுது துணிவு இல்லை. அந்தத் துணிவு இல்லாததற்கு காரணம் அவர்கள் எங்களைக் கண்டு பயப்படுவது தான் என்று நாங்கள் நம்புகிறோம். ஆனால் எங்களுடைய எதிர்ப்பைக் கண்டு எதற்காகப் பயப்பட வேண்டும் என்று நீங்கள் கேட்கலாம்.



5th September 1960] [Sri C. N. Annadurai]

நாங்கள் 150 பேர்கள், நீங்கள் 15 பேர்கள் தானே என்று பேசலாம். ஆனாலும் வட நாட்டவர்களுக்கு இத்தகைய அச்சம், இந்த மாறுதல் எப்படி ஏற்பட்டது ? இந்தி தேசீய மொழிதான் என்று பேசப்பட்டது மாறி, ஆங்கிலத்திற்கு சமமாகவாவது இந்தியை எடுத்துக் கொள்ளக்கூடாதா என்கிற முறையில் திரு. வேதரத்தினம் போன்றவர்கள் பேச ஆரம்பித்திருக்கிறார்கள் என்றால் இது பரிதாபமாகக் கூட இருக்கிறது. இந்தியை கட்டாயமாக தேசீய மொழியாக்க வேண்டும் என்கிற நிலையும், பிடியும் இப்போது தளர்ந்து விட்டது. அதை அவர்களே உணர்ந்து வருகிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் நம் அமைச்சர் அவை ஏன் அதைத் திட்ட வட்டமாக எதிர்க்கக்கூடாது என்று கேட்கிறேன்.

மதிப்பிற்குரிய திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் திரு. ராஜகோபாலாச்சாரியார் முன்னாளில் கொண்டிருந்த கருத்தையும், இப்போது கொண்டுள்ள கருத்தையும் எடுத்துக் காட்டினார்கள். ஒரு முறை கொண்ட கருத்தை தவறானதாக இருந்தால் மாற்றிக் கொள்ளவே கூடாது என்று நான் சொல்லமாட்டேன். அன்றைக்கு நண்பர் திரு. ராஜகோபாலாச்சாரியார் "எங்களுடைய கொள்கை A to Z கம்யூனிஸ்ட் கட்சியை ஒழிப்பது தான்" என்றார். அதே திரு. ராஜகோபாலாச்சாரியார் இப்போது "என்னுடைய கொள்கை A to Z காங்கிரஸ் கட்சியை ஒழிப்பது தான் "என்கிறார். எப்போதைக்கெப்போது அவருக்குக் கெட்டது என்று தோன்றுகிறதோ அந்தக் கெட்டதை ஒழித்து நல்லதை வைத்துக் கொள்ள வேண்டும் என்கிற கொள்கையை அவர் வைத்துக் கொண்டிருக்கிறார். நாமே ஒரு காரியத்தைச் செய்துவிட்டாலும் கூட அதை தீமையானது தான் என்று தெரிந்தால் தவறை ஒப்புக் கொள்வது தான் பெருந்தன்மை. ஆனால் எங்களைப் பொறுத்த வரையில் ஆச்சாரியார் காலத்தில் இந்தி வலுக்கட்டாயமாகப் புகுத்தப்பட்ட போது கூட எதிர்க்கத்தான் செய்தோம். இப்போதும் எதிர்க்கின்றோம். ஆகவே இன்றைய தினம் அவரைப் பாராட்டுவதா, கண்டிப்பதா என்பதற்கு எங்களுக்கு அவசியம் இல்லை. ஆனால் விசித்திரமான ஒரு விஷயம் இதைப்பற்றி பேசுகின்றபோது எனக்கு நினைவுக்கு வந்தது. எப்படி திரு. ராஜகோபாலாச்சாரியார் முன்னாளில் தாமே கட்டாய பாடமாக இந்தியைக் கொண்டு வந்துவிட்டு இப்போது அதை எதிர்க்கின்றாரோ அப்படியே மேற்கு வங்கத்தில் கல்வி மந்திரியாக இருந்த பிரபுல்ல சந்திரகோஷா அவர்கள் தம்முடைய காலத்தில் கட்டாயமாக இந்தியைப் புகுத்திவிட்டு இப்போது பேசும்போது **"I have committed a mistake and I admit it,"** "நான் தவறு செய்து விட்டேன். அந்தத் தவறை ஒப்புக் கொள்கிறேன்" என்று சொல்கிறார். ஆகையால் அமைச்சர்கள் தவறு செய்யலாம். செய்யும் தவறை ஒப்புக் கொண்டு திருத்திக் கொள்வதுதான் அமைச்சர் அவைக்கு இருக்க வேண்டிய பெருந்தன்மை. "இன்ன காரியம் நான் செய்து விட்டேன். ஆகையால் கடைசி வரையில் அதிலேயே இருப்பேன்" என்று யாரும் சொல்லத் தேவையில்லை. இந்திக்கு இங்கேயுள்ள எதிர்ப்பு போன்று ஆந்திராவில் இல்லையே, கேரளத்தில் இல்லையே என்று பல நண்பர்கள் பேசினார்கள். ஆனால் இந்தியை எதிர்த்து நாங்கள் கிளர்ச்சி துவக்கியபோது ஆந்திராவில் இருந்து பல நண்பர்களிடம் இருந்து எனக்குக் கடிதம் வந்திருக்கிறது. எங்களுக்கும் சேர்த்து நீங்கள் போராடி வெற்றி வாங்கித் தந்ததற்கு நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என எழுதியிருக்கிறார்கள். ஆனால் எனக்குக் கடிதம் எழுதியுள்ளவர்கள் நிதி அமைச்சருக்குப் பக்கத்தில் இருப்பவர்களைப் போன்ற அந்தஸ்து இல்லாதவர்களாக இருக்கலாம். என்னைபோன்ற சாதாரண மக்கள் தான் அவர்கள். ஆனாலும் ஆந்திராவில் உள்ளவர்களும் கூட இங்கே நடக்கிற காரியங்களைக் கூர்ந்து கவனித்துப் பாராட்டுகிறார்கள். இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கிற எல்லாப் பத்திரிகைகளும் இந்தி விஷயத்தில் கொண்டிருந்த பிடிவாதம் இன்றைய தினம் தளர்ந்து இருக்கிறது. அந்தப் பிடிவாதம் தளர்ந்ததற்குக் காரணம் தென்னாட்டில் இருந்த எழுந்த கிளர்ச்சிதான். இன்றைய தினம் அது இந்த அளவோடு நிற்க வேண்டும், பிரிவினைக்குப் போகக் கூடாது என்கிற எண்ணம்தான் அந்தப் பத்திரிகைகளுக்கு எழுந்துள்ளன.

இந்தியா ஒன்று என்று பேசுகிறவர்களிடம் காட்டுவதைவிட அதிக மதிப்பு எங்களிடம் காட்டி 'பிரிந்து போகாதீர்கள். ஒன்றாக இருக்கலாம். வாருங்கள்' என்று அந்த பத்திரிகைகள் எல்லாம் எழுவதைப் பார்க்கும் போது சந்தோஷமாகக் கூட இருக்கிறது, ஆனால் சந்தோஷத்திற்காக சித்தாந்தங்களை விட்டுவிடுவது தமிழனின் மரபு அல்ல. அதை, தமிழ் மரபு அறிந்து நிதியமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் இந்த மன்றத்திற்கு வெளியே ஒப்புக் கொள்வார்கள் என்று எனக்குத் தெரியும். ஆகவே இந்தி மொழி விஷயத்தில் எங்கள் கழகச் சார்பில் எடுத்துச் சொல்வது இதற்காகச் சட்டத்தை திருத்தியாக வேண்டும் என்பதாகும். சட்டத்தை திருத்துவதில் உள்ள சிக்கல்கள் பற்றி நமது நிதியமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். சிக்கல் நிச்சயமாக இருக்கும். எதிலேயும் சிக்கல் இருக்கும். ஆனால் சாமர்த்தியசாலிகள் முயற்சி செய்தால் சிக்கல்கள் தீரும். நமது நிதியமைச்சர் அவர்கள் அப்படிப் பட்டதொரு சாமர்த்தியசாலி என்பதை அவர்களே அடிக்கடி இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நானும் சில வேளைகளில் ஒப்புக் கொண்டிருக்கிறேன். ஆகவே, அவர்கள் இது சிக்கல்கள் நிறைந்தது என்று சொல்வதை விட்டு இதை நிறைவேற்றி வைக்கிறேன் என்று சொல்ல வேண்டும். நிறைவேற்றி வைக்கிறேன் என்று சொல்லி விட்டு அவரால் நிறைவேற்ற முடியாமல் போய்விடும் என்று நாங்கள் பயப்படவில்லை. ஏனெனில் அந்தக் கோட்டை சரிந்து கொண்டிருக்கிறது. **1945, 50**-ல் இருந்து வந்த பிடிவாதம் அல்ல இன்றைய தினம் இருப்பது. இன்றைய தினம் வடக்கே இருப்பதெல்லாம் இந்திக்காக நாம் எடுத்துக் கொண்ட முயற்சி வீணாகப் போய்விடக் கூடாதே என்பது தான். அது சட்ட புத்தகம் வரையிலாவது இருக்கட்டும் என்று சொல்லக் கூடிய அளவிற்குத் தான் இருக்கிறதே தவிர முன்னாள் இருந்த கொடி கட்டி ஆண்ட நிலை அல்ல. அன்று கட்டிய கோட்டை இன்று சுக்கு நூறாகிப் போயிருக்கிறது.

ஆகவே, தைரியமாக அரசியல் சட்டத்தைத் திருத்த முயற்சி எடுத்துக் கொள்ளலாம். அதற்கு, திரு. அன்பழகன் அவர்கள் கொடுத்திருக்கக் கூடிய தீர்மானத்தை சர்க்கார் தங்கள் தீர்மானமாக மாற்றிக் கொண்டு வருவதாகயிருந்தாலும் எனக்குப் பெருமைதான். ஒருமித்த கருத்து வர வேண்டும் என்பதற்காக இதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்கும் நேரத்தில், இதையொத்த ஒரு தீர்மானத்தை மேற்கு வங்க சட்ட சபையிலும், மேற்கு வங்க மேல் சபையிலும் வேறு ஒருவர் கொடுத்த தீர்மானத்தை எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒரு முகமாக ஆதரித்து அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அதே போல் இந்தத் தீர்மானத்தை நிறை வேற்றுவதால், அமைச்சர் அவைக்கு ஒரு பங்கமும் வந்து விடாது. அதனால் காங்கிரஸ் கௌரவம் கெட்டு விடாது. அதனால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு பெரிய செல்வாக்கு வந்து விடும் என்று பயப்படத் தேவையில்லை. எங்கள் செல்வாக்கைச் சிதைப்பதற்கு இவ்வளவு பேர்கள் இருக்கும்போது நீங்கள் எதற்காகப் பயப்பட வேண்டும்? ஆகவே அச்சப்படாமல் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதன் மூலம் இந்திய அரசியல் சட்டத்தின் **17**-வது பிரிவை மறுமுறையும் புனர்பரிசீலனை செய்து இந்தியாவிற்கு இந்தி ஆட்சிமொழி, அந்த இந்தி தேவநாகரி லிபியில் இருக்கும் என்ற பகுதியை அறவே நீக்கி விட்டு இந்தியாவில் ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்கும், இந்தியத் துணைக்கண்டத்தில் இருக்கிற மொழிகளில் ஒன்றோ, பலவோ ஆட்சி மொழியாவதற்கான தகுதி பெற்றதாக கருதப்படுகிற வரையில் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கும் என்ற வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். இதை நான் சொல்கிற நேரத்தில் ஆங்கிலத்திற்கு வக்காலத்து வாங்கிப் பேசுகிறோம், ஆங்கிலத்திற்கு ஆதரவாக பேசுகிறோம் என்று பலர் தப்பாக கருதுகிறார்கள். சில பேர்கள் ஆங்கிலம் படித்து விட்டால் அவர்களுக்குள்ள சலுகைகள் தமிழ் வந்தால், போய் விடும் என்ற பயத்தால் இப்படிச் சொல்கிறார்கள் என்று சொல்கிறார்கள்.





ஆங்கிலம் படிக்க எந்த அளவு புத்தி செலுத்தினார்களோ அந்தளவு தமிழில் செலுத்தினால் ஆங்கிலத்தில் எந்தளவு கீர்த்தி பெற்றார்களோ அந்தளவு தமிழிலும் கீர்த்தி பெற முடியும். ஒரு மொழி, புத்தியை கெடுத்து விடாது. ஆனால் புத்தியுள்ளவர்கள் எந்த மொழியிலும் நல்லது பெற முடியும். ஆகவே ஆங்கிலம் படித்து விட்டார்கள் சிலர், அதில் கிடைக்கும் சலுகை கெட்டு விடும் என்பதால் இந்தி வேண்டாம் என்கிறார்கள் என்று தப்புக் கணக்குப் போட வேண்டியதில்லை. தமிழ் ஆங்கிலத்தைவிட தரத்தில் குறைவானது என்று நாம் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. ஆட்சிமொழியாக இரண்டாயிரம் ஆண்டுகளாக இருந்த மொழி. அப்படிப்பட்ட ஒரு மொழிப் படிப்படியாக நம்மிடம் வருகிறபோது அந்த மொழியோடு கூட ஆங்கிலமும் படிக்க வேண்டுமென்று சொல்லி **'any one of the Indian languages**, இந்தியாவிலுள்ள வேறு மொழிகளில் ஒன்றையும் படிக்க வேண்டுமென்று இந்த மன்றத்தில் வலியுறுத்திச் சொன்னார்கள். நிதியமைச்சர் அவர்கள். அப்படியிருக்கும்போது, இந்திக்கு மட்டும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு இந்தி படிப்பதற்கு மட்டும் வழிவகைகள் செய்யப்பட்டிருக்கிறது என்பது மட்டுமல்ல. சம்பூர்ணானந்த் அவர்கள் காலையில் பேசியபோது சொன்னார்கள். அடுத்த வருஷத்திலிருந்து **11**-வது வகுப்பு வரையில் இந்தி கட்டாய பாடமாக்கப்படும் அதை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். அப்படி அவர் போன்றவர்கள் நம்பத்தக்க அளவில், எண்ணத்தக்க அளவில் இருக்கிற அந்த முறையை மாற்றி இந்திய மொழிகளில் எதுவானாலும் தெலுங்கு படிக்க வேண்டுமென்றாலும், கன்னடம் படிக்க வேண்டுமென்றாலும், மலையாளம் படிக்க வேண்டுமென்றாலும், வங்காளி படிக்க வேண்டுமென்றாலும், மராத்தி படிக்க வேண்டுமென்றாலும் வழிசெய்து தரவேண்டும். படிக்க வேண்டுமென்று கருதுகிற மாணவர்கள் எண்ணிக்கை எவ்வளவு இருக்கவேண்டும்? அந்த நிர்ணயத்தைச் சொல்லுங்கள். இத்தனை மாணவர்கள் கேட்டால் இன்ன மொழி ஆசிரியர் நியமிக்கப்படுவார் என்ற முறையை வகுத்து, பெற்றோர்கள், மாணவர்கள் எண்ணம் தெரிவிக்கும்போது அந்தந்த மொழிகளில் படிக்க வழி வகை வகுத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மொழிப் பிரச்னையில் நாம் நிச்சயமாக குறிப்பிடத்தக்க, மகிழத்தக்க, பெருமைப்படத்தக்க அளவு வெற்றி பெற்றிருக்கிறோம். அந்த வெற்றி முழு வெற்றியாக வேண்டுமென்றால் இந்திய அரசியல் சட்டத்தின் **17**-வது பிரிவில் நேர்த்தியான மாறுதல்—தலை கீழான மாறுதல் என்று கூடக் குறிப்பிடுவேன்—செய்ய வேண்டும். அப்படிப்பட்டதொரு மாறுதல் இந்திய அரசியல் சட்டத்தில் செய்யப்பட வேண்டும். செய்யப்பட வேண்டுமென்பதோடு கூட ஒரு மொழிதான் ஆட்சிமொழியாக இருக்க வேண்டுமென்கிற எண்ணம் நீக்கப்பட்டு எந்தெந்த மொழிகள் ஆட்சி மொழிகளாவதற்கு தகுதி பெற்றிருக்கிறதோ அவைகள் எல்லாம் ஆட்சி மொழிகள் ஆக வழி வகைகள் செய்யப்பட வேண்டும்.

அப்படிச் செய்வதால் குழப்பம் ஏற்படுமென்று நினைக்க வேண்டியதில்லை. இந்த மன்றத்தில் ஒரு மொழியில் பேசுகிற போது இன்னொரு மொழி மொழி பெயர்க்கப்பட வேண்டுமென்று ஒரு தீர்மானம் கொடுத்து அது தோற்கடிக்கப்பட்டது. **150** பேர்கள் ஒரு பக்கத்திலும், **15** பேர்கள் இன்னொரு பக்கத்திலும் இருப்பதால். அதை இந்திய பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொண்டு ஒரு மொழியில் பேசினால் இன்னொரு மொழியில் மொழி பெயர்க்க **6, 7** லட்சம் செலவில் விரைவாக கருவிகள் செய்து கொண்டு வருகிறார்கள். ஆக, நல்லதொரு காரியத்தைச் சொன்னால் அதன் எதிரொலி பல இடங்களிலும் கேட்கும் என்பதற்குச் சான்றுகள் இருக்கின்றன. ஆகவே நல்ல நோக்கத்தோடு கூறப்படுகிற எங்கள் தீர்மானத்தை துரைத்தனத்தார் ஏற்றுக் கொண்டு தங்கள் காங்கிரசுக்கு வலிவு தேடி இந்திய அரசாங்கத்தினிடம் வாதாடி, போராடி இந்த மொழிப் பிரச்னைக்கு நிரந்தரமான, எல்லோரும் கண்டு பெருமைப் படத்தக்க அளவிற்கு, தமிழ் பண்புக்கு ஊறு நேராத முறையில் நல்லதொரு முடிவிற்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை நிறுத்திக் கொள்கிறேன்.

[5th September 1960

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Mr. Speaker, Sir, with the permission of the Chair, I would like to move the following amendment :—

"*Add* the following at the end :—

'and on such consideration this House recommends to the State Government that the Central Government be requested to undertake appropriate lgeislation in order to implement the Prime Minister's assurances regarding the continued use of the English language for the official purposes of the Indian Union.' "

(The amendment was duly seconded.)

Sir, I am one of those who felt that the division of the country on a linguistic basis, was one of the blunders that were committed by the Indian Government. There started the trouble which we are witnessing now. The majority of the North Indians say that the majority of the Indians are Hindi-speaking people. But in my opinion, according to statistics, the Hindi-knowing people are in a minority and the people who speak other languages are in a majority. Hindi is an under-developed language with the technical terminology. Sir, Hindi is one of the 14 provincial languages recognized under the Constitution. Therefore, Hindi cannot be made the official language by force. *Status quo* must be maintained. If *status quo* is to be maintained, we must retain only English. That is my submission. Therefore the Hindi-speaking people who are in a minority when compared to the other language-speaking people should not think of imposing Hindi on the majority of the people. Hindi is as foreign to us as English or French and if the unity of the country should be maintained they should not think of imposing Hindi.

4-30 p.m.

With regard to bilingualism even though some formula has been arrived at the All-Party meeting, still there is the fear that there will be a sort of split in the administrative machinery and expenses will go up and there will be some expansion in the establishment. But I now feel that bilingualism, if adopted, should not be considered as implementation of Prime Minister's assurances.

Coming to the medium of instruction, as other hon. Members have pointed out, English teaching is started in V standard. Those studying in VIII, IX, X and XI standards who take academic course will have to study three languages. That is, Part I Regional language, Part II Hindi or any other Indian language not included in Part I and Part III—English or any other non-Indian language. In almost all the schools and especially in schools managed by District Boards, provision has not been made for the appointment of teachers to teach any other Indian language excepting regional language and Hindi. Therefore my submission is that this is an indirect imposition of Hindi, on the people. I would request the Hon. Minister for Education to go into this matter in detail and see that something is done as early as possible.

With regard to the teaching of scientific subjects, my submission is they should be taught only in English till such time as Tamil language replaces it. If one wants to keep abreast of scientific



5th September 1960] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

developments that are taking place in Western countries, since most of the scientific journals are published only in English, unless one learns English language, he cannot develop his scientific knowledge. Therefore it is advantageous to study scientific subjects in English. My submission is by studying these scientific subjects in English, standard of Tamil (regional language) will not go down. I say this because as regards humanities, viz., history and geography, etc., they are all taught only in Tamil. Therefore there will be a balanced development and standard of Tamil will not at all go down. As the hon. Member, Sri C. N. Annadurai, has pointed I know even in Switzerland there are many languages and all the languages are considered as national languages and they are all adopted as official languages with the result we find that there is so much unity in that country.

English is an international language and all the Commonwealth countries adopt English as official language in their countries. Even now in America and other Latin American countries and in Spain and Portugal, English is adopted more or less as medium. Even though Latin and other languages are taught, English is having very great importance in those countries. So English is common to the world. When the Hon. Finance Minister had to reply to a question in the Upper House the other day regarding the use of numerals, he said that numerals should be common to the whole world.

(Mr. Speaker in the Chair.)

If that is so, When English is considered as international language we should continue to have it. My submission is that English should continue as national or official language till such time as non-Hindi speaking people want it. The other day the President of our Republic while addressing a public meeting stated that the South should not think of imposing English on the North. He also felt that people living in the North should try to learn our language, viz., Tamil. What will happen if we neglect Hindi and continue to learn English and those people in the North do not learn English what will be the fate of our country then? That is a very serious problem that should be looked into. We must try our level best to see that our regional language, Tamil, is introduced in almost all the offices. Even though Government have issued instructions that Tamil should be used as an experimental measure in two districts, what I say is they should put their advise into practice. Government should try their level best to see that Tamil is developed and given all importance in all offices.

The Prime Minister says often, especially after some lessons have been learnt from Assam or Punjab or on account of the agitation started in the South, that Hindi will not be imposed. But what is being done now? Just as other hon. Members have pointed out, in post cards and money order forms we find only Hindi. We are unable to follow these things. Therefore even though the Prime Minister says that Hindi will not be imposed, still it has to be put into practice. We have to wait and see whether that

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [5th September 1960

assurance of the Prince Minister will be observed *in toto*. The Hon. Finance Minister was telling us this morning that the Prime Minister's assurance will be observed somehow. But people have got their own misgivings, as to how far this assurance will be kept up. That remains to be seen. We will have to wait and see. My submission is that if the unity of the country is to be maintained and if all these agitations should be stopped, English should continue to be the Central and inter-State official language till such time as non-Hindi speaking people want it and Tamil should continue as regional language of our State.

Regarding the candidates to be taken to Central Services there is the fear that people who do not know Hindi are not being taken in Central Services. That fear should also go. No candidate should be barred from promotion or appointment in Central Services if he does not possess Hindi qualification. That bar should go. As other hon. Members have pointed out, the Government of Madras should take immediate steps to move the Central Government to amend Article 343 of the Constitution and other connected Articles as early as possible with a view to implementing the Prime Minister's assurance. That is all my submission, Sir.

**THE HON. SRI C. SUBRAMANIAM** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மொழிப் பிரச்னைபற்றி ஒளிவு மறைவில்லாமல் பேசித் தீர்க்கவேண்டுமென்ற முறையில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் பேசியது வரவேற்கத்தக்கது. ஏன் என்று சொன்னால் இதிலே குழப்பமான நிலைமை ஏற்படுவதற்கு சில காரணங்கள் நம் மனதிலே இருப்பதை வெளியிலே சொல்லுவது சரியா, இல்லையா என்கிற தயக்கத் தின் காரணமாக சிலர் வெளியில் சொல்லாமல் இருக்கின்றார்கள். சில பேர், ஒரு தடவை சொல்லியாகிவிட்டதே, இதை இனி எப்படி மாற்றிக் கொள்வது என்கின்ற அபிப்பிராயத்தில் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு மொழிப் பிரச்னையை அணுகும்போது நாம் எந்த நோக்கத்தோடு அணுகுகிறோம் என்பதை முதலில் நாம் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். இதோடு இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணவேண்டும் என்ற நோக்கத்தோடு அணுகு கிறோமா அல்லது இன்னும் அதிகமான குழப்பம் ஏற்பட வேண்டும், இன்னும் இந்த விவகாரம் அதிகமாகவேண்டும் என்ற முறையில் அணுகுகிறோமா என்பதை நாம் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். இந்த அடிப்படையில் இந்தப் பிரச்னையைப் பார்க்கும் போது, நாம் இதில் என்ன நினைக்கிறோம் என்பதை மட்டும் வைத்துக் கொள்ளாமல், இந்திய துணைக்கண்டம் முழுவதுக்கும்—தேசம் என்று சொல்லுவதற்குப் பதிலாக துணைக்கண்டம் என்று சொல்லப்படுகிறதே, அந்த முறையில் இந்திய துணைக்கண்டம் முழுவதுக்கும்—அதிலும் எல்லா பகுதிகளிலும் இருக்கக்கூடிய மக்களும் ஒப்புக்கொள்ளக்கூடிய வகையில் ஒரு தீர்வு காணவேண்டும் என்று சொல்லும்போதுதான் பலவித மான குழப்பங்கள் வந்து சேருகின்றன. இதில் நமக்கு மட்டும் ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று சொன்னால், அல்லது தமிழ் நாட்டுக்கோ அல்லது திராவிட நாட்டுக்கோ ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று சொன்னால், இதில் நாம் மட்டும் முடிவு எடுத்துக்கொண்டால் போதும். ஆனால் அகில இந்தியாவுக்கும் இது ஒப்புக்கொள்ளக்கூடிய ஒன்றாக இருக்க வேண்டுமென்று நினைக்கும்போது நம்முடைய கருத்துக்கள் மட்டு மல்ல ; நம்முடைய முடிவுகள் மட்டுமல்ல ; மற்றவர்களும் நம்முடைய கருத்துக்களையும், முடிவுகளையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் நியாயமானதாக இருக்கவேண்டும். பழங்காலம் போல் படையெடுத்துச் சென்று வெற்றி பெற்று ஒரு மொழியைப் புகுத்தவோ, பண்பைப்



5th September 1960] [Sri C. Subramaniam]

புகுத்தவோ, கலாச்சாரத்தைப் புகுத்தவோ முடியாது. அந்தக் காலம் அல்ல இது. ஒருவருக்கொருவர் பேசி—மனம் விட்டுப் பேசி, எப்படி ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்பதைப் பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டிய காலம் இது. இது என்னுடைய கருத்து. மற்றவர்கள் இதை ஒப்புக் கொண்டாலும், ஒப்புக்கொள்ளாவிட்டாலும் இதிலே தீர்வு காண முடியாது என்றிருந்தால் இந்தப் பிரச்னைகளுக்கு என்றைக்குமே ஒரு முடிவு காண முடியாது. அதிருஷ்டவசமாக நாம் இதற்கு முன்பே கூட இந்த மொழிப் பிரச்னையைக் குறித்து விவாதித்தோம். அதிலே, ஒன்றுபட்ட ஒரு அடிப்படையான நடவடிக்கை எடுப்பதற்கு ஒப்புக்கொண்டபோது இது மாதிரிதான் நம்முடைய கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டு அதே சமயத்தில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து ஒரு முடிவுக்கு வந் தோம். அதே மாதிரிதான் அகில இந்திய ரீதியிலும் நாம் இன்றைக்குப் பல கருத்துக்களை வலியுறுத்தி வந்தாலும்கூட, எல்லாரும் ஒப்புக் கொள்ளக்கூடிய ஒரு முடிவுக்கு வர வேண்டியது அவசியமாக இருக் கிறது. அந்த முறையில்தான் அரசியல் சட்டத்தில் இருக்கக்கூடிய 17-வது பகுதியைப் பற்றி முன்பே விவாதித்தோம். அரசியல் நிர்ணய சபையில் இது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. திரு அண்ணாத்துரையவர்கள், இந்த அரசியல் நிர்ணய சபை செய்த முடிவு தவறு என்பதைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார்கள். அந்தச் சந்தர்ப்பத்திலே இது மாதிரி ஒரு முடிவு எடுத்திருக்கக்கூடாது என்று சொன்னார்கள். நம்முடைய அரசியல் சட்டத்தை உருவாக்குவதுபற்றி அப்போது இருக்கக்கூடியவர்கள் முடிவு செய்து அதற்கென்று மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய சபை ஒன்றை ஏற்படுத்தி, அந்தச் சபை நம்முடைய அரசியல் சட்டத்தை வகுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்தார்கள். அவர்கள் அந்தப் பிரச்னையை எல்லாம் அன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையிலே பரி சீலனை செய்து பார்த்து முடிவு எடுத்தார்கள். அதனால் அதிலே இருக்கக் கூடிய முடிவுகள் எல்லாம் திருத்தமே இல்லாமல் என்றைக்கும் நிலைத் திருக்க வேண்டுமென்ற ஒரு கருத்தை நாம் வலியுறுத்த வரவில்லை. அன்றைக்கு இதிலே பங்கெடுத்துக்கொண்டவர்கள் நம்முடைய சுதந்திர நாடு எந்த முறையிலே வளரவேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன், எந்த விதமான அரசியல் அமைப்பு இருக்க வேண்டும், எந்த விதமான நிர்வாக அமைப்பு இருக்க வேண்டுமென்று பரிசீலித்து முடிவு எடுத்தார் கள். அந்த நிர்வாகம் நன்றாக நடைபெறுவதற்கு மாநில அமைப்பு எப்படி இருக்க வேண்டுமென்பதை எல்லாம்கூட அன்றைக்கு ஆலோசனை செய்து அவர்களுக்குத் தெரிந்த அளவிற்கு, அவர்களுக்கு இருந்த அறிவு அளவிற்கு அந்த முடிவைச் செய்திருக்கிறார்கள். இன்றைக்கு திரு. அண்ணாத்துரை அவர்கள் அவர்களுக்கெல்லாம் அறிவு குறைவு, வேறு விதமாக முடிவு எடுத்திருக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இது மாதிரி தீர்ப்புச் சொல்லயாருக்கும் உரிமை இருக்கிறது. (SRI C. N. Annadurai: வார்த்தையை மாற்ற வேண்டாம்.) சூழ்ச்சி செய்துவிட்டார்கள் என்று அவர்கள் பாஷையில் சொல்வார்கள். ஆகையால் அன்றைக்கு எடுத்த முடிவு தவறு என்று சொல்ல யாருக்கும் உரிமை இருக்கிறது. ஆனால் மொழிப் பிரச்னையில் அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று சொல்லுகிறவர்கள் இன்னொரு குழப்பத்தை உண்டாக்க வேண்டுமானால் மறுபடியும் இதை முழுக்க முழுக்க ஆரம்பிக்கலாம். அரசியல் நிர்ணய சபையில் நான் பங்கெடுத் துக்கொண்டதைப் பற்றி இவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டு அவர்கள் அதனுடைய நடவடிக்கைகளை எல்லாம் பிரித்துப் பார்த்து நான் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளைப் பற்றிக் குறிப்பிட்டது பற்றி அவர்களுக்கு நான் உண்மையிலேயே நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இதில் ஒன்றும் ஒளிப்பதற்கில்லை. அந்தக் காலத்தில் இது போன்ற பிரச்னைகளில் வழி காட்டக் கூடிய தகுதி எனக்கு அன்று இல்லையென்பதை ஒப்புக்கொள்கிறேன்.

அதே சமயத்தில நான் இன்னொன்றையும் வலியுறுத்திச் சொல்லவிரும்புகிறேன். இது ரொம்பவும் சிக்கலான பிரச்னையாக இருக்கிற தென்ற காரணத்தினால் முதலிலேயே காங்கிரஸ் கட்சி முடிவு செய்து, பிறகு உடனடியாக அரசியல் நிர்ணய சபைக்குக் கொண்டுவந்து ஒரு முடிவு காணப்பட்டது. காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் உட்கார்ந்து துருவித்

[Sri C. Subramaniam] [5th September 1960

துருவி ஆராய்ந்து அதன் பிறகு முடிவு எடுப்பதன் மூலமாகத்தான் தீர்வு காண முடியும் என்ற முடிவுக்கு வந்தார்கள். ஆகையால் கட்சிக் கூட்டத்தில் மாதக் கணக்கில் இது விவாதிக்கப்பட்டது என்பதை கனம் அண்ணாத்துரை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்குப் பிற்பாடுதான் இதில் ஒரு தீர்வு காண முடியும் என்று வழி காட்டக் கூடிய முறையில் காலம் சென்ற ஸ்ரீ கோபாலசாமி அய்யங்கார் 17-வது பகுதியில் ஒரு தீர்வைக் கண்டார்கள். அதுவும் முதலிலே கட்சி அடிப்படையிலே ஒப்புக்கொள்ளப்பட்டது. எந்த அளவுக்கு விவாதம் செய்ய வேண்டுமோ அந்த அளவு விவாதித்து அதன் பிறகுதான் இதில் ஒரு தீர்வு காணப்பட்டது. கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் செய்யப்பட்ட பிறகுதான் இது அரசியல் நிர்ணய சபைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஒரு வோட்டு வித்தியாசத்திலே வெற்றி பெற்றது என்று சொல்லுவதுகூட கட்சிக் கூட்டத்தில்தான். இந்த அளவுக்குக் கட்சிக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, மிகுந்த சர்ச்சைக்குப் பிறகு முடிவு எடுக்கப்பட்டது என்பதை அரசியல் நிர்ணய சபை முடிவுகளைப் பார்த்தால் தெரிந்துகொள்ள முடியாது. கட்சி விவாதங்கள் எப்படி நடைபெற்றன என்பதை எடுத்துப் பார்த்தால்தான் இது தெளிவாகப் புரியும். வருங்காலத்தில் சரித்திரம் எழுதுபவர்கள் இந்தக் குறிப்புகளையும் வைத்துக்கொண்டு வரலாற்றை எழுதுவார்கள் என்று நம்புகிறேன். "கான்ஸ்டிட்யுவன்ட் அசெம்பிளி முன் சில திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன; அவை சரியாக விவாதிக்கப்படவில்லை" என்று சொன்னால், எல்லா விஷயங்களும் முன்னரே பரிசீலிக்கப்பட்டு அரசியல் நிர்ணய சபையின் முன்னர் கொண்டுவந்த காரணத்தினால் அவை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. சில பேருக்கு திருத்தங்கள் கொடுத்தால்தான் மனதுக்குத் திருப்தியாக இருக்கும். அந்த முறையில் சிலர் திருத்தங்கள் கொடுத்தார்கள்.

இந்தப் பிரச்னையை நாம் எல்லாம் சேர்ந்து விவாதிக்கக் கூடிய நேரத்தில் இந்த அரசியல் சட்டத்திற்கு உட்பட்டே இந்த மாற்றத்திற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று பார்த்தால் அவ்வாறு நினைக்கக் கூடிய அளவிற்கு அந்தப் பகுதி அமைந்திருக்கிறது என்பதை ஒப்புக்கொள்வார்கள். அவ்வாறு நினைக்காதிருந்தால் அந்த முடிவுக்கு மேல் முதல் மெமோராண்டம், இரண்டாவது மெமோராண்டம் எல்லாம் வந்திருக்கவே முடியாது. ஆகையினால் தான் இன்றைக்கு இந்தப் பிரச்னையை நாம் நோக்கும்போது எப்படியும் இந்த 17-வது பகுதியை மாற்றித்தான் ஆக வேண்டுமென்ற அடிப்படை நோக்கத்துடன் நாம் அணுகுவோமேயானால், இன்றைக்குத் தீர்வு காண்பது முடியாது. வேண்டுமானால் இன்னும் கொஞ்சம் குட்டையைக் குழப்பலாம். அப்படி முடியாமல் போகும்போது மறுபடியும் வேண்டுமானால் இதைப் பரிசீலனை செய்வோம் என்ற கருத்தைத்தான் நான் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகிறேன். இன்றைக்கு கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் சொன்னதுபோல், இதையே மாற்ற வேண்டுமென்று சொல்லும்போது, ஒரு பக்கத்திலே இருக்கும் குழப்பத்தை இன்னொரு பக்கத்திலே குழப்பிவிட்டு, "பார்த்தீர்களா? இது துணைக் கண்டமேயொழிய நாடு அல்ல." என்றால் எங்கு பார்த்தாலும் குழப்பமாக இருக்கும். ஆகவே பிரித்துவிடுவது தான் சரி என்று ஆதாரம் தேடுவதற்கு வேண்டுமானால் இந்தப் பிரச்னையைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற முறையில் கனம் அங்கத்தினர்கள் சிக்கல் செய்தால் அது வேறு விஷயம். ஆனால், இந்த கனம் அங்கத்தினர்கள் இங்கு சொன்னதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். இதற்குத் தீர்வு காண அதற்காகப்பாடுபட இருக்கிறோம் என்று இவர்கள் சொல்வார்களானால், தயவு செய்து இந்தக் கருத்தை விட்டுவிட வேண்டும். இது முடியுமா, முடியாதா என்று பார்த்தால், நம்முடைய சக்திக்கு மீறிப்போகக் கூடிய காரியம் அல்ல என்று நான் உணருகிறேன். இன்றைக்கு இருக்கும் அரசியல் சட்ட வரம்புக்குள்ளாகத் திருத்திக கொள்ள முடியுமா, முடியாதா என்று பார்த்ததற்குப் பிறகு நம்முடைய கருத்தை மாற்றிக்கொள்ளலாமே தவிர, இப்போதே மாற்றிக் கொள்வது சரியல்ல என்பதையும் அவர்கள் கட்சியிலிருந்து பேசக் கூடியவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



5th September 1960] [Sri C. Subramaniam]

அவர்கள் மெமோராண்டம் தயாரிக்கும்போது ஒப்புக்கொண்டது மட்டுமல்ல, இன்றைக்கு அவர்களுக்கு மொழிக் கிளர்ச்சியும், பிரதம மந்திரி அவர்களுடைய உறுதிமொழி காப்பாற்றப்பட வேண்டும், அதற்கு மீறி ஒன்றும் நடக்கக்கூடாது என்ற அடிப்படையில்தான் அவர்கள் கிளர்ச்சி அமைந்திருந்தது. இன்றைக்கு அந்த உறுதிமொழி ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. நடவடிக்கைகளும் எடுப்பதற்கு இன்றைக்கு ஒப்புக்கொண்டிருக்கும்போது, "இல்லை, அப்பொழுது சொன்னது அது; இப்பொழுது நீங்கள் ஒப்புக்கொண்டதற்குமேல் இன்னொருபடி போகப் போகிறேன்," என்ற முறையில் சொல்வது என்றால், அது எங்கு போய் நிற்குமோ தெரியாது. இவர்கள் எந்த வரம்புக்குப் போய் நிற்கப் போகிறார்கள் என்று யாருக்குமே உறுதி இல்லாமல் போய்விடும் நாம் பேசும் பேச்சுக்கும் நாம் செய்கின்ற தீர்மானத்திற்கும் அப்பொழுது கொஞ்சங்கூட மதிப்பு இல்லாமல் போய்விடுமோ என்று நான் பயப்படுகிறேன் என்ற கருத்தை அவர்கள் கொஞ்சம் கவனித்துப் பார்க்க வேண்டும் என்று கனம் அங்கத்தினர் திரு. அண்ணாத்துரை அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகையால்தான் இந்தப் பிரச்னையை அரசியல் சட்டத் திருத்தப் பிரச்னையாக ஆக்க வேண்டாம் என்று அவர்களை நான் மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். அம்மாதிரி ஒரு கட்டம் வராது என்று நான் நம்புகிறேன். அப்படிப்பட்ட கட்டம் வருமானால், அப்பொழுது எல்லோரும் கூடி ஆலோசிக்கலாம் என்று மறுபடியும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இதற்கு ஆதாரம் தேடக்கூடிய முறையில் பல பெரியவர்கள் பெயரைச் சொல்லி, அவர்கள் முன்பு கொண்டிருந்த கருத்துக்களை மாற்றிக் கொண்டதாகவும், கருத்து மாறுவது வளர்ச்சிக்கு அறிகுறி என்று சொல்லி, அவர்களைப் பெருமைப்படுத்திப் பேசினார்கள். நானும்கூட அடிக்கடி விரும்புவது—அவர்கள் எப்படி மாறுதலானது வளர்ச்சிக்கு அறிகுறி என்று சொல்லி மற்றவர்களைப் பாராட்டுகிறார்களோ, அதைப் போல் கனம் திரு. அண்ணாத்துரை அவர்களும் மாறி, அவரும் வளர்ச்சி அடைந்ததைக் குறித்து அவரைப் பாராட்டக் கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுங்கள் என்று நான் அவர்களைத் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொள்கின்றேன். அந்த வாய்ப்புக்காக நான் காத்துக்கொண்டிருக்கிறேன். அந்த வாய்ப்பு வரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. (ஒரு கனம் அங்கத்தினர்: கானல் நீர்) அது பார்ப்பதைப் பொருத்திருக்கிறது. உண்மையான நீராக ஏற்படும் என்பதில் எனக்குச் சந்தேகம் கிடையாது. ஆகையால்தான் பொறுத்துப் பார்க்கலாம் என்று நான் தெரிவிக்கின்றேன். கனம் திரு. அண்ணாத்துரை அவர்கள் என்றைக்குமே வளர்ச்சியிலே நம்பிக்கை உள்ளவர்கள். மாறுதலிலே நம்பிக்கை உள்ளவர்கள். புரட்சிலே நம்பிக்கை உள்ளவர்கள். ஆகையால், இருபது வருஷங்களுக்கு முன்னாலேயிருந்து வைத்துக்கொண்டிருக்கும் கருத்தை விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருக்கிறேன் என்று சொல்வது அந்தக் கருத்துக்கு உகந்தது அல்ல. உண்மையான புரட்சி வீரராகிய அவருக்குக் கூடிய சீக்கிரத்திலே இந்தக் கருத்துப் புரட்சி அவர்கள் மனதிலே ஏற்பட்டு நாம் எல்லோரும் பாராட்டுவதற்குரிய வகையில் வளர்ச்சி அடைந்திருக்கிறார் என்று பாராட்டுவதற்கு, அவர் கட்சியும் வளருகிறது என்ற அடையாளம் ஏற்படுவதற்கான ஒரு வாய்ப்பினைக்கூடிய சீக்கிரத்தில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றைக்கு இரு மொழிக் கொள்கையைப் பற்றிப் பேசிக்கொண்டு வரும்போது, இரு மொழிக் கொள்கை நடைமுறையில் நடக்கக் கூடியதா என்ற கருத்தை கனம் திரு. வி. கே. ராமசாமி முதலியார் அவர்கள் தெரிவித்தார்கள். கனம் திரு. அண்ணாத்துரை அவர்கள் பேசும்போது. "என் இரண்டு மொழிகள் மட்டும் இருக்க வேண்டும்? எத்தனை மொழிகள் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாமே. இரண்டு மொழி போதாது. இன்னும் பல மொழிகளும் நிர்வாக மொழிகளாக இருக்கத் தகுதி உள்ளவை" என்றார்கள். அவர்கள் இரண்டுபேரும் தனியாக உட்கார்ந்து பேசி முடிவு சொன்னால் நன்றாக இருக்கும்.

இதிலே நான் ஒப்புக்கொள்ளுகிறேன். மூன்று மொழி, நான்கு மொழி வைத்து நிர்வாகத்தை நடத்துகிருர்கள். அதற்குமேல் போனதாக இதுவரை அனுபவம் இல்லை. அப்படிப் போனுல் பெரும் குழப்பம் ஏற்படும் என்று சொல்கிருர்கள். நான்கு மொழிகள் என்ருல், எந்த நான்கு மொழிகளை எடுத்துக்கொள்வது என்ற பிரச்னை வருகிறது. கனம் திரு. அண்ணுத்துரை அவர்கள் சொன்னுர்கள், அவர்களுக்கு இருக்கும் தமிழ் அன்பை வைத்துக்கொண்டு, என்னைக் குற்றம் சொல்லக் கூடிய முறையில், " தமிழ் மொழியும் பொதுவான ஆட்சி மொழியாக வரவேண்டுமென்று வாயால் ஒரு சொல்லாவது சொன்னுரா ?" என்று. வாயால் சொல்வது ரொம்பச் சுலபம். வாயால் சொல்லித் திருப்தி ஏற்பட்டாலும், காரியத்திலே எப்படி ஏற்படமுடியும் என்று பார்க்க வேண்டும். தமிழ் மொழியை திராவிடத்திலே இருக்கும் நான்கு மொழிகளுக்கும் பிரதிநிதித்துவ மொழியாக இந்தப் பக்கத்தில் எடுத்துக் கொள்ளலாம். ஒரிஸ்ஸா, அஸ்ஸாம் இவைகளுக்குப் பிரதிநிதியாக வங்காள·மொழியை எடுத்துக்கொள்ளலாம். ஹிந்தி மொழி ஒரு பக்கம் இருக்கலாம். குஜராத்தி, மராத்தி இப் பகுதிகளுக்கு ஒரு மொழியை எடுத்துக்கொள்ளலாம். இப்படி நான்கு மொழிகள் வைத்து நடத்துவது என்பது புதிதான கருத்து அல்ல. அது பல காலங்களுக்கு முன் இருந்து வரக் கூடிய ஒரு கருத்து. இன்றைக்கு நான் கேட்க விரும்புகிறேன்— நாம் போய் தென்னுட்டிலே இருக்கும் நான்கு மொழிகளுக்கும் பிரதிநிதி மொழியாக தமிழை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னுல், எந்த அளவுக்கு நமக்கு ஆதரவு கிடைக்கும் ஆந்திரத்திலிருந்தும் கேரளத்திலிருந்தும் கன்னடத்திலிருந்தும் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

இன்றைக்கு இதிலே இருக்கும் முக்கியமான கஷ்டம் என்னவென்று பார்க்க வேண்டும். ஏதோ வாயளவிலே பேசவேண்டுமென்ருல், அதற்கு மேலே கற்பனை உலகத்திலிருந்து பேசவேண்டுமானுலும், என் பக்கத்திலே இருக்கிறவர்களும் அதிகமாக மிகைப்படுத்திச் சொல்ல முடியும். ஆகையால்தான் இன்றைக்கு மொழிப் பிரச்னைக்கு ஒரு முடிவு காண வேண்டுமென்று சொல்லும்போது இதை அடிப்படையாக வைத்துக்கொண்டு பார்க்க வேண்டியதாக இருக்கிறது.

இப்பொழுது எடுத்துவரும் முயற்சி காரணமாக, இந்தி ஆங்கிலத்தை உடனடியாகத் தவிர்த்துவிடுமோ என்று பல பேர்கள் பயப்படுகிருர்கள். எனக்கு அந்தப் பயம் இல்லை. இந்தி எந்த அளவுக்கு வளம் அடைந்திருக்கிறது. இந்தி பேசுகிறவர்களே அதை வளப்படுத்தட்டும் என்று விட்டுவிட்டால் எந்த வேகத்திலே அது வளம் அடையும் என்பதைப் பற்றி எனக்குக் கொஞ்சம் மனதிலே சில நினைப்புகள் உண்டு. அந்த அடிப்படையிலே பார்க்கும்போது, நாம் அதைப் பற்றி அதிகமாகப் பயப்படுவதற்கு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையால்தான் நாம் ஏற்றுக்கொண்டிருப்பது—ஆங்கிலமும் தொடர்ந்து நம்முடைய நன்மைக்காக இருந்தாக வேண்டும் என்பது. ஏனென்ருல் வரலாற்று அடிப்படையிலே ஆங்கில ஆட்சியின்கீழ் இருந்த காலத்திலேயே ஓரளவு இந்த ஆங்கிலம் படித்துத் தேர்ச்சி பெற்றிருக்கிருேம். அதன் காரணமாக ஆங்கிலத்திலே நிர்வாகங்கள் நடத்துவதிலே நமக்கு பயிற்சி இருக்கிறது. அதிலே சுலபமாகவும் நடவடிக்கைகளை நடத்த முடிகிறது என்ற காரணத்தால் அது தொடர்ந்து இருக்க வேண்டுமென்று கேட்பதற்கு உரிமை உண்டு. அந்த உரிமை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இரு மொழிக் கொள்கை கொடுக்கப்பட்டு அது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. 'நான் அன்றைக்கு அப்படிச் சொன்னேன், இன்றைக்கு என்னுடைய கருத்தை மாற்றிக்கொண்டு வேறு விதமாகக் கொடுக்கிறேன்' என்று சொன்னுல், முடிவு இல்லாமல் போகும். முடிவு காணும் முறையில் அணுகவில்லை என்பதை வலியுறுத்துவதாக இருக்கும். இரு மொழிக் கொள்கையை நாம் ஒப்புக்கொள்ளும்போது, இருக்கும் சட்டத்திலேயே அதை அமுல் நடத்த முடியும் என்ற நம்பிக்கை இருக்கும்போது வேறு விஷயங்களுக்கு அவசியம் இல்லை. அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய சர்க்காரை வற்புறுத்துவது தான் அவசியமென்ருல், அவசியம் ஏற்படும்போது செய்யலாம். அதுகூட



61353

இல்லாமலேயே அவர்கள் செய்யக் கடமைப்பட்டிருக்கிருர்கள். எதற்கும் தூண்டுதல் இருக்க வேண்டும் என்று நாம் நினைத்தால், அதற்காக பிரதம மந்திரி கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றக் கூடிய எல்லா விதமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துவது அவசியமானுல் அதையும் கட்டாயம் செய்யலாம்.

**Sri C. N. ANNADURAI** இரு மொழிக் கொள்கை நாட்டிலே எப்படி இருக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் தயவு செய்து விளக்க வேண்டும்.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** இது எனக்குத் திடீரென்று தூக்கிப்போடுகிறது. இத்தனை நாள் எந்த இரு மொழிக் கொள்கையை நீங்கள் ஒப்புக்கொண்டீர்கள் ?

V21,3,'N60

**Sri C. N. ANNADURAI :** நீங்கள் இதைச் சொல்வதற்காகவேதான் சொல்கிறேன். இரு மொழிக் கொள்கை என்பதை கமிட்டியிலே ஒப்புக்கொண்டு, அவரவர்கள் விட்டுக்கொடுத்துப் பேசினுர்கள். நாங்கள் ஒப்புக்கொண்ட பகுதி, 'ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்' என்ற பகுதிதான். அதை இந்த மன்றத்தில் விளக்கிப் பேசியிருக்கிறேன். இருமொழிக்கொள்கை நடைமுறையில் எப்படி இருக்கும் என்பதை இப்பொழுது நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

N60-3651

**The Hon. Sri C. SUBRAMANIAM :** நீங்கள் இப்பொழுது ஸ்விட்ஸர்லாந்து நாட்டில் மூன்று மொழிகள் இருக்கின்றன என்று சொன்னீர்களே, அந்த முறையில்தான். ஸ்விட்ஸர்லாந்து நாட்டிலுள்ளதைத் தெரிந்துதான் அவர் சொல்கிருர் என்று நான் நம்புகிறேன்.

**Sri C. N. ANNADURAI :** ஸ்விட்ஸர்லாந்து நாட்டில் நடந்து கொண்டிருக்கும் முறையை அப்படியே இங்கு நடத்தினுல் குழப்பமாகி விடக்கூடும். எந்த முறை நமக்கு நல்லது என்று முடிவு. செய்து, கடைப் பிடிக்கப்போகிறீர்கள் ?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** ஸ்விட்ஸர்லாந்து நாட்டில் நடத்தும் முறையில்தான் இங்கும் நடத்துவதாக உத்தேசம்.

**Sri M. KALYANASUNDARAM :** அப்படியே மூடிவைத்துப் பேசுங்கள்.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** தெரிந்ததையே விளக்கச் சொல்கிருரே என்பதற்காகத்தான் அப்படிச் சொல்கிறேன். ஏன் அதை விளக்கச் சொல்கிருர்களே என்பதுதான் எனக்குப் புரியவில்லை. ஆகையினுலே இது ஒரு புதியதாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு திட்டம் அல்ல. இரு மொழிக் கொள்கையை வைத்து நிர்வாகம் நடத்தக்கூடிய நாடுகள் இருக்கின்றன. மூன்று மொழிகளை வைத்து நிர்வாகம் நடத்தக்கூடிய நாடுகள் இருக்கின்றன. அந்த நாடுகளில் எந்தெந்த முறையிலே நிர்வாகம் நடத்தப்படுகின்றன என்று அவர்களிடமிருந்து புள்ளி விவரங்கள் தருவிக்கப்பட்டன. இரு மொழிக் கொள்கையை நாம் விவாதிக்கக்கூடிய காலத்தில் அதை எல்லாம் அடிப்படையாக வைத்துக்கொண்டு தான் விவாதித்தோம். இரு மொழிக் கொள்கையை ஒன்றும் தெரியாமலே கண்ணை மூடிக்கொண்டு வெறும் வார்த்தையில் நாம் முடிவு செய்துவிடவில்லை. அப்படி முடிவு செய்வதற்கும் திரு. அண்ணுத்துரை அவர்கள் விட்டுவிடமாட்டார்கள். ஒன்றுமே தெரியாமல் இரு மொழிக் கொள்கையைப் பற்றி வார்த்தை அளவில் முடிவு எடுத்தோம் என்று அவர்கள் நினைப்பார்களேயானுல், அது அவர்களையே குறைத்துக் கூறிகொள்வதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எந்தெந்த முறையிலே ஒவ்வொரு நாட்டிலும் நிர்வாகம் நடைபெறுகிறது, இரு மொழிகளை வைத்துக்கொண்டு, மூன்று மொழிகளை வைத்துக்கொண்டு 'பைலில்' அதை எப்படி நடத்துகிருர்கள்,

[Sri C. Subramaniam] [5th September 1960

பார்லிமெண்டில் எப்படி நடத்துகிறார்கள், சட்டம் செய்வதில் எப்படி நடத்துகிறார்கள் என்பதை எல்லாம் தெளிவாகத் தெரிந்துகொண்ட பிறகு தான் இரு மொழிக் கொள்கையை ஒப்புக்கொண்டோம். குருட்டுத்தனமாக ஒன்றுமே தெரியாமல் வெறும் வார்த்தையில் நாம் அதை ஒத்துக் கொள்ளவில்லை. நன்றாக விவாதித்த பிறகுதான் அதை ஒத்துக் கொண்டோம். திடீரென்று இப்பொழுது சந்தேகம் வந்திருக்கிறது. என்ன காரணம் என்று தெரியவில்லை. அது வேறு சமாசாரம்.

இன்றைக்கு இரு மொழிக் கொள்கை நிர்வாக அமைப்பிலே இருக்க வேண்டும் என்பதை நாம் ஒப்புக்கொண்டிருக்கும்போது, அதை அடிப்படையாக வைத்துக்கொண்டுதான், அதற்கு என்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமோ, சட்ட ரீதியாக என்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமோ, அவைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தியும், ஆங்கிலமும் நமக்கு வேண்டும் என்பதால், ஆங்கிலத்துடன் இந்தியை இணைத்து, இந்தி முதல் மொழி, ஆங்கிலம் தொடர்மொழி என்று இருந்தாலும் சரி அல்லது ஆங்கிலம் முதல் மொழியாக இருந்து, இந்தி தொடர் மொழியாக இருந்தாலும் சரி அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எல்லாம் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்திக்கு மத்திய நிர்வாக மொழி என்கின்ற அந்தஸ்தை கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கிறோம். அதற்கான அந்தஸ்தை ஏற்படுத்துவதற்கு யாராவது முயற்சி செய்வார்களேயானால், அதை ஒப்புக்கொண்ட பிற்பாடு, அது மாதிரி செய்யக் கூடாது என்று தடை சொல்லுவது நியாயம் இல்லை என்ற கருத்தைத்தான் அவர்கள் முன்னிலையிலே வைக்க விரும்புகிறேன்.

இது மாதிரி கொள்கையை நாம் ஒப்புக்கொண்டிருந்தாலும்கூட இன்று நடைமுறையில் சில சிக்கல்கள் ஏற்படுகின்றன என்பதைத் தெரிவித்தார்கள். ஆம், சிக்கல்கள் ஏற்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. அது சாதாரணமான விஷயம் அல்ல. அந்தச் சிக்கல்களை தீர்த்து வைப்பது நமது கடமை. எப்படியோ அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு எனக்குத் திறமை இருக்கிறது, அதற்காக நாம் வாதாட வேண்டுமென்று சொன்னார்கள். இந்தச் சிக்கல்களைத் தீர்க்க நாம் எல்லோரும் சேர்ந்து முயற்சி செய்தால், நாம் உடனே பயனடைய முடியும். இவைகளைக் கட்டாயம் தீர்த்து வைக்க முடியும் என்று கருதுகிறேன். அப்படிப் பார்க்கும்பொழுது, முக்கியமாகக் கார்டு, மணியார்டர் பாரம் இவைகள் இந்தியில் இருப்பது ஒரு சிக்கலாக இருக்கிறது (ஒரு கனம் அங்கத்தினர் : மைல் கல்). மைல் கல்லில் நமக்குப் புரியாத ஒரு மொழியில் மட்டும் போடவில்லை. தமிழிலும் போட்டிருக்கிறார்கள், மற்ற மொழிகளிலும் போட்டிருக்கிறார்கள். அது வேறு விஷயம். இந்தியில் மட்டும் இருக்கக் கூடிய மணியார்டர் பாரம் வழங்கப்பட்டால், இந்தியில் மட்டும் இருக்கக் கூடிய கார்டு, கவர் வழங்கப்பட்டால், இந்தி தெரியாதவர்கள் அதை உபயோகப்படுத்த முடியாத நிலைமை ஏற்படுகிறது. உண்மையிலேயே அதற்கு என்ன குறை வேண்டுமானாலும் சொல்லலாம். என்ன குற்றம் வேண்டுமானாலும் சொல்லலாம். குற்றம் சாட்டினால் மட்டும் போதாது. அதை நீக்கி வைக்க என்ன செய்வது என்பதைப் பற்றி யோசிக்க வேண்டும். நான் மேல் சபையிலே சொன்னேன். இப்பொழுது ஆங்கிலம்தான் நீடித்து நிர்வாக மொழியாக இருக்கிறது. ஆகையினால் இந்த பாரம்கள் ஆங்கிலத்திலும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் வேறு இடத்தில் போனாலும் படிக்கக்கூடிய நிலைமை இருக்கும். தமிழ் தெரிந்தவர்கள் இருக்கக்கூடிய இடத்தில் மணியார்டர் பாரம்கள், கார்டு கவர்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் இருக்க வேண்டும் ; ஆந்திரப் பிரதேசத்தில், தெலுங்கிலும் ஆங்கிலத்திலும் இருக்கவேண்டும். மைசூரில் கன்னடத்திலும் ஆங்கிலத்திலும் இருக்க வேண்டும் ; இந்தி பிரதேசத்தில் இந்திலும், ஆங்கிலத்திலும் இருக்க வேண்டும் என்ற முறையை நாம் ஒப்புக்கொண்டால் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணுவதாக இருக்கும்.

அதே மாதிரித்தான் எண். இந்த எண் சம்பந்தப்பட்ட வரையில், மொழி வெறி எவ்வளவு தூரம் போகும் என்பதற்கு இது ஒரு உதாரணமாக விளங்குகிறது. எண்ணும்கூட இந்தி நியூமெரல்ஸாகத்தான் இருக்க



5th September 1960] [Sri C. Subramaniam]

வேண்டுமென்று சொல்லுவது ஒரு பக்கத்தில் மொழி வெறி எவ்வளவு தூரம் போயிருக்கிறது என்பதை அளவிட்டுக் காண்பிக்கிறது. ஒரு பக்கம் வெறி ஏற்படுமேயானால், அதற்குத் தகுந்தாற்போல், 'ரீஆக்ஷன்', இன்னொரு எதிர் வெறி ஏற்படத்தான் செய்யும். எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய முடிவு என்று சொல்லும்போது, மற்றவர்கள் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய முடிவுக்கு வருவதற்குத் தயாராக இருந்தால்தான் இதில் ஒரு தீர்வு காண முடியும். அந்த அடிப்படையிலே என்னைப் பொறுத்த வரையிலும், இந்த முடிவுக்கு வருவதாக எல்லோரும் ஒப்புக்கொண்டு, அதற்கேற்ற ஒரு முடிவை இன்றைக்கு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும் (குறுக்கீடு). இந்த விஷயத்தில் எந்த அளவுக்கு வெறி போயிற்று என்று கேட்கிறார்கள். எண்ணும் இந்தி நியூமெரல்ஸாக இருக்க வேண்டும் என்று சொல்லுவது வெறியின் ஒரு அளவைக் குறிக்கிறது என்றுதான் நான் சொன்னேன். அந்த அடிப்படையிலே நாம் தீர்வு காணும்பொழுது ஸ்ரீ கலியாணசுந்தரம் அவர்கள் தமிழை எந்த அளவுக்கு இங்கு உபயோகப்படுத்த வேண்டும் என்கின்ற பிரச்னையையும் கொண்டு வந்தார். தமிழை போதன மொழியாக்கும் பிரச்னையையும் கொண்டு வந்தார். இந்த உறுதியை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தமிழைப் பொறுத்த வரையிலும், நம்முடைய ராஜ்யத்திலே அதற்கு முதல் இடம் கொடுத்து, எந்தெந்த இடத்திலே அதை உபயோகப்படுத்த முடியுமோ, அதற்கான முயற்சிகளை நாம் எடுத்துக்கொண்டு வருகிறோம். அதே மாதிரி தமிழை போதன மொழியாக ஆக்குவதிலும் இன்றைக்கு ஒரு கொள்கை வகுத்துக்கொண்டு, ஒரு திட்டம் வகுத்துக்கொண்டு, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக நாம் இன்றைக்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம். ஸ்ரீ கலியாணசுந்தரம் அவர்கள் ஏதோ எனக்குக் கொஞ்சம் நம்பிக்கைக் குறைவு ஏற்பட்டிருக்கிறது என்பது போல் தெரிவித்தார்கள். சில சமயங்களில் நமது மனதிலே இருப்பதே மற்றொருவரைப் பற்றிப் பிரதிபலிக்கலாம். சில சமயங்களில் அம்மாதிரி ஏற்படுவது வழக்கம் உண்டு. அது மாதிரி இல்லை என்று நினைக்கிறேன். அவர்கள் விரும்புவது இதில் உறுதியாக இருந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது தான். நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய திட்டங்களில் உறுதியாக இருந்து, அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத்தான் நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே மாதிரிதான் தமிழை நம் ராஜ்யத்தில் நிர்வாக மொழியாக ஆக்க வேண்டும் என்று சட்டம் செய்திருக்கிறோம். அதற்குப் பிற்பாடு அதற்கு வேண்டிய முயற்சிகளை நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்தியை உடனடியாக நிர்வாக மொழியாக ஏற்படுத்தினால் குழப்பங்கள் ஏற்பட்டுவிடும். அதற்குப் போதுமான தயாரிப்புகளை ஏற்படுத்திக்கொண்டுதான் அதைச் செய்ய வேண்டும் என்று எப்படி நாம் சொல்லுகிறோமோ, அதே போல தமிழை நிர்வாக மொழி ஆக்குவதில் நாம் சர்வ ஜாக்கிரதையாக இருந்து, நிர்வாகம் சீர்குலைந்து போகாமல், அதற்கு வேண்டிய தயாரிப்புகளைச் செய்து கொண்டு, ஆங்கிலத்தை விட்டுவிட்டு நம்முடைய ராஜ்யத்தில் நிர்வாகத்தை வெவ்வேறு கட்டத்தில் படிப்படியாக தமிழில் நடத்த முடியும். ஒரேயடியாக தமிழை நிர்வாக மொழியாக எடுத்துக்கொள்ள முடியும் என்று நினைப்பது தவறு.

மொழிப் பிரச்னையை அணுகும்பொழுது ஒரு நம்பிக்கையுடன், நம்மிடத்திலேயே நம்பிக்கையுடன், மற்றவர்களும் அதில் நம்பிக்கை வைக்கக் கூடிய முறையிலே இந்தப் பிரச்னையை அணுகினால், அதில் கூடிய சீக்கிரம் நல்ல முடிவு காணமுடியும். சில சமயங்களில் நமக்கே நம்பிக்கை குறைவு ஏற்பட்டு, நம்மையும் மீறி நம் மீது வேறு ஒரு மொழியை திணித்து விடுவார்களோ, நம்முடைய சக்திக்கும் மீறி நிர்ப்பந்தம் செய்துவிடுவார்களோ, நம்மையும் மீறி யாராவது வந்து ஆதிக்கத்தை நம் மீது திணித்துவிடுவார்களோ, வேறு மொழியை நம்முடைய இஷ்டம் இல்லாமலே, நம்முடைய சம்மதம் பெறாமலே புகுத்துவார்களோ என்ற சந்தேகம் ஏற்பட்டால், அதனால் நம்முடைய சக்தி குறையும். அதனால் தன்னம்பிக்கைக்குறைவு ஏற்படும் என்பதைத்தான் தெரிவித்துக்கொள்ள

[Sri C. Subramaniam] [5th September 1960

விரும்புகிறேன். நாம் எந்த அளவுக்கு உறுதியாக இருக்கிறோமோ, எந்த அளவுக்கு அந்த உறுதி தன்னம்பிக்கையின் அடிப்படையில் இருக்கிறதோ, அந்த அளவுக்கு நம்முடைய சம்மதம் இல்லாமல் வேறு ஒருமொழியை இங்கு கொண்டுவந்து யாராலும் திணிக்க முடியாது. நாம் எல்லோரும் சேர்ந்து அந்த அளவுக்கு உறுதி கொண்டால், யாரும் எதையும் நம்மீது திணிக்க முடியாது என்ற நம்பிக்கை நமக்கு இருக்க வேண்டும். அவநம்பிக்கையினால் சக்திக் குறைவு தான் ஏற்படும். சட்டத்தை மட்டும் திருத்தி விட்டால் அதற்கு அணை கட்டிவிட முடியாது. இன்றைக்கு நாம் விரும்புவதை நம்முடைய சக்தி, நம்முடைய நம்பிக்கை அடிப்படையிலே இது மாதிரி நடந்துதான் தீரவேண்டுமென்று நாம் கேட்கிறோம். அந்த அடிப்படையில் நடக்கும் என்பதில் சந்தேகமே கிடையாது. அதே மாதிரித் தான் மற்றவர்களுடைய நம்பிக்கையையும் பெறுவது நம்முடைய கடமையாகும். மற்றவர்கள் நம்மிடத்திலே அவநம்பிக்கை கொள்ளும்பொழுது, மொழிப் பிரச்னையை கொண்டுவந்து நாட்டுப் பிரிவினைப் பிரச்னையை தீர்ப்பதற்கு பார்க்கிறார்களா என்று அவநம்பிக்கை ஏற்படும்பொழுது, நல்ல காரியங்களைச் சொன்னாலும், அதை ஏற்றுக்கொள்ளுவதில் சங்கடம் ஏற்படும். நாட்டுப் பிரிவினையில் நம்பிக்கை வைத்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தனியாகப் போய் 'இந்தப் பிரச்னையில் நாங்கள் சொல்லக்கூடிய முடிவு இது, அதை ஏற்றுக்கொள்ளவேண்டும்' என்று சொல்லும்பொழுது நல்ல கருத்துக்களாக இருந்தாலும் கூட, மற்றவர்கள் அதை சந்தேகத்துடன் நோக்குவார்கள். எல்லோரும் சேர்ந்து இந்தப் பிரச்னைக்கு உண்மையாகவே ஒரு முடிவு காணவேண்டுமென்று முயற்சி செய்து எடுக்கக்கூடிய முடிவு அவ்வாறு இராது. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தாங்கள் இந்தப் பிரச்னையைத் தனியாக எடுத்துக்கொண்டு, தனியாகத் தீர்வு காணப் போகிறோம் என்று சொன்னால் அது நல்ல கருத்துகளாக இருந்தாலும் கூட, அது சந்தேகத்துடன் தான் நோக்கப்படும். நாட்டுப் பிரிவினையில் நம்பிக்கைக்கொண்டு அதை நிலை நாட்டுவதில் ஈடுபடக்கூடியவர்கள் ஏதோ இந்தியாவுக்கு உதவியாக மொழிப் பிரச்னையில் தீர்வு காண முயற்சி செய்கிறோம் என்று சொன்னால், அதை ஏற்றுக்கொள்ளுவதில் சங்கடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அந்தச் சங்கடத்தை உணர்ந்து, எல்லோரும் ஒப்புக் கொள்ளும் முறையிலே அவர்கள் மொழிப் பிரச்னையைத் தீர்ப்பதற்குத் தொடர்ந்து ஆதரவாக இருந்து, அத்துடன் மொழிப் பிரச்னையைத் தீர்ப்பதன் மூலம் நாட்டில் நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தி, சமாதான நிலைமையை ஏற்படுத்தி, சிறு விஷயங்களில் மக்களுடைய கவனம் இழுத்துச் செல்லப்பட்டு குழப்பம் ஏற்படாதபடி, நம்முடைய சக்தி வீண் விரயம் ஆகாதபடி பொருளாதாரத் துறையில், கல்வித் துறையில், ஆற்றல் துறையில் முன்னேறுவதற்கு நம்முடைய சக்தி பயன்படக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தி, மொழிப் பிரச்னையில் தீர்வு காண்பதற்கு இந்தச் சபை ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி ஒத்துக்கொள்ளச் சரியான தீர்மானம் எது என்று பார்த்தால், கனம் ராமசுவாமி முதலியார் அவர்கள் கடைசியாகக் கொடுத்தார்களே அந்தத் தீர்மானத்தை நாம் எல்லோரும் ஏற்றுக்கொண்டு, என்னுடைய பிரேரபணையையும் அதில் இணைத்து, ஏகமனதாக நிறைவேற்ற வேண்டும். அப்படிச் செய்வது மொழிப் பிரச்சினைக்கு பெரிய பணியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொண்டு முடிக்கிறேன்.

**SRI K. ANBAZHAGAN: On a point of clarification, Sir.** அமைச்சரவர்கள் பேசுகிறபோது இரு மொழிக் கொள்கையை பிரதமர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள், உறுதி மொழி தந்திருக்கிறார்கள் என்று தெரிவித்தார். பிரதமர் ஏற்றுக் கொண்டார்கள் என்றால், மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்றுதான் பொருள். ஒரு மொழி ஏற்கப்பட்டு அரசியல் சட்டம் இருக்கிறது. அதில் இருமொழி என்று குறிப்பிடுவது அவசியம். அதை இப்பொழுது எடுத்துச் சொல்வது பிரதமரின் கடமை அல்லவா ? அதைப் பிரதமர் நிறைவேற்றி வைக்கமாட்டார்கள் என்று நிதியமைச்சரவர்கள் கருதுகிறார்களா ? அதை அறிய விரும்புகிறேன்.



5th September 1960]

**THE HON. SRI C. SUBRAMANIAM:** இப்பொழுது இருக்கும் சட்டத்தை மாற்ற வேண்டுமானால், அதற்கு அவசியம் இருக்க வேண்டும். இப்பொழுது இருக்கும் சட்டப்படியே இரு மொழிக் கொள்கையை நிறைவேற்ற முடியுமா என்று பார்த்து, அப்படி நிறைவேற்ற முடியும் என்று கருதுகிறோம். திருத்த வேண்டுமென்றால், என்ன அவசியம் என்று நாம் சொல்லியாக வேண்டும். இருமொழிக் கொள்கையை விதிகள் பிரகாரமே செய்ய முடியும்போது, திருத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை என்றுதான் கருதுகிறேன்.

**SRI V. K. RAMASWAMY MUDALIYAR:** சமீபத்தில் கேள்விப் பட்டதிலிருந்து, அரசியல் சட்டத்தைத் திருத்தியமைக்க மத்திய சர்க்காரிடம் ஒரு யோசனை இருப்பதாகத் தெரிய வந்திருக்கிறது. அது பற்றி நம் சர்க்காருக்கு ஏதாவது தகவல் தெரியுமா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** இதுவரைக்கும் அம்மாதிரி அவசியம் ஏற்படவில்லை. மாற்றுவதில் சிக்கல்கள் ஏற்பட்டு, இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையும் சீர்கெடும் என்பதனால் யாரும் அந்த முயற்சி செய்யமாட்டார்கள். இது வரையிலும் அப்படிப் பட்டக் கருத்து இருப்பதாகத் தெரியவில்லை. சர்க்காருக்கும் தகவல் இல்லை.

**SRI K. ANBAZHAGAN:** இப்பொழுதும் ஒருமொழிக் கொள்கையின்றி, இரு மொழிக் கொள்கை என்று ஏற்பட்ட பிறகும், மாணவர்களை ஹிந்தி படிக்க கட்டாயப்படுத்தக் காரணம் என்ன ?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** அங்கத்தினருக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைக் குறிப்பிட விரும்பினேன், ஆனால், மறந்து விட்டேன். திரு அண்ணாதுரையவர்கள் சென்ற விவாதத்தின்போதே எத்தனை பேர்கள் படிக்கிறார்கள் என்றும், எல்லாருமே ஹிந்தி படிக்க வேண்டும் என்கிறார்களா, இதற்குப் புள்ளி விவரங்கள் வேண்டும் என்றார்கள். இதிலே நம் ராஜ்ய முழுவதற்கும் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படவில்லை. பக்கத்திலுள்ள, சென்னை நகரத்திற்கு மட்டும் எடுக்கப்பட்டிருக்கிறது. 1959–60-ல் 3,653 மாணவர்களில் —இது எட்டாவது ஸ்டாண்டர்ட் முதல் இந்தக் கொள்கை அமுலுக்கு வருகிறது—2,666 பேர்கள் ஹிந்தி எடுத்திருக்கிறார்கள். அது 73 சத விகிதம் ஆகிறது. பாக்கி இருக்கக்கூடிய 27 சத விகிதம் ஹிந்தியல்லாத மற்ற மொழிகளைப் படிக்கிறார்கள். 1960–61-ல், அதாவது நடப்பாண்டில், 3,736 மாணவர்களில்—இது மூன்று வருஷத்திற்குத் தொடர்ந்து வருகிறது, புது எட்டாவது வகுப்பில் ஆரம்பிக்கிறது—2,707 பேர்கள் ஹிந்தி எடுத்துப் படிக்கிறார்கள். மற்றவர்கள் ஹிந்தியல்லாத மற்ற மொழிகளைப் படிக்கிறார்கள். ஆகையினால், இன்றைக்கு மற்ற மொழிகள் படிக்கச் சௌகரியம் செய்து கொடுக்கவில்லையென்றால், இப்பொழுது தமிழ் மாணவர்களை எடுத்துக் கொண்டால், அவர்கள் ஹிந்தி தவிர மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்ற மற்ற மொழிகளை எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லும்போது, அவர்கள் எதை விரும்புகிறார்களா என்று பார்க்கவேண்டியிருக்கிறது. ஹிந்தியும் படிப்பது என்பதை திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் ஒப்புக்கொண்டு, இரு மொழிக் கொள்கைய்ய ஒப்புக்கொண்டு இருக்கும் நேரத்தில் ஹிந்தியை எடுத்துப் படிக்க முன் வந்தால் அதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. நாம் இன்று ஹிந்தியைப் படிக்கக்கூடாது என்று வலியுறுத்த முடியாது. எந்த வகுப்பாக இருந்தாலும், எந்த மொழியாக இருந்தாலும், ஒரு குறைந்த எண்ணிக்கை இருக்கவேண்டும் என்று விதியில் போட்டிருக்கிறோம். பத்து அல்லது 12 என்று நினைக்கிறேன் ; ஞாபக மறதியாக இருக்கிறது. எண்ணிக்கை வேண்டுமானால் பின்னால் தருகிறேன். அப்படி எந்த் மொழியைப் படிப்பது பற்றியும் எவ்விதப் புகாரும் வரவில்லை. அவர்களுக்கு வந்திருக்கிறதோ, என்னவோ தெரியாது. அப்படிப் புகார் வந்திருந்தால், உடனே எனக்கு அனுப்பியிருக்கலாம்.

**SRI C. N. ANNADURAI:** விவாதம் நடைபெற்ற பிறகு வந்திருக்கிறது.

[5th September 1960

**THE HON. SRI C. SUBRAMANIAM**: விவாதத்தைப் பார்த்த பிறகு சில பேர் எழுதியிருக்கலாம். அது உண்மையான குறையாக இருந்தால் அதை எனக்குத் தெரிவித்தால், அல்லது அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதைத் தீர்ப்பது சர்க்காரின் கடமை. இன்றைக்கு மாணவர்கள், நாம் எடுத்திருக்கும் முடிவை வைத்துக் கொண்டு பார்த்தால், ஹிந்தி படிப்பதும் தவறான கருத்தாகாது . . . (குறுக்கீடு).

**MR. SPEAKER**: இண்டரப்ஷனுக்கு முடிவு இல்லையா ?

(Hon. Members Sri P. U. Shanmugam, Sri M. P. Subramaniam and Sri M. Karunanithi rose.)

**MR. SPEAKER**: We cannot have too many interruptions at this stage. The hon. Members had their chance of speaking. There must be an end to these interruptions. We cannot devote the rest of the day for interruptions. Now, hon. Member Sri Kalyanasundaram may seek clarification.

**SRI M. KALYANASUNDARAM**: அமைச்சரவர்கள் பதிலிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகவில்லை. பிரதமர் அவர்களின் வாக்குறுதியில் இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று, மத்திய நிர்வாகங்களில், ஆங்கிலம் தொடர்ந்து, ஹிந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை இருக்கவேண்டும். அரசியல் சட்டத்தின்படிக்கும், புதிய சட்டம் கொண்டு வருவது ஒன்று. இரண்டாவதாக, யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷன் தேர்தல்களில் ஹிந்தி படிக்காதவர்கள் பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும். அந்த அம்சம் சம்பந்தப்பட்ட வரை, ஹிந்தியும் ஆங்கிலமும் தேர்வு மொழிகளாக இருக்கவேண்டும். அப்படியிருப்பதால், ஹிந்தி பேசாத மக்களுக்கு பிரதிகூலம் இல்லாத பிரகாரம் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்போகிறார்கள் ?

**THE HON. SRI C. SUBRAMANIAM**: இதிலே பரீட்சை எழுதுவது எந்த மொழியில் என்று கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். இப்பொழுது நாம் ஏற்றுக் கொண்டிருக்கும் முறைப்படி, ஹிந்தி, ஆங்கிலம் இரண்டும் தொடர்ந்து நிர்வாக மொழியாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அப்படி உத்தியோகம் தேடுபவர்கள் ஹிந்தி அல்லது ஆங்கிலம் பயின்றிருக்கவேண்டும்.

ஹிந்தியும், ஆங்கிலமும் தெரியாமல் எனக்கு தமிழ் தெரியும், அதில் நல்ல ஆர்வம் இருக்கிறது, திறமை இருக்கிறது, அதனால் நிர்வாகத்தில் பங்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொன்னால் அதை ஒத்துக் கொள்ள முடியாது. ஆகையால் அதை யோசித்துச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. இதைப்பற்றி பரிசீலனை செய்யவேண்டியதாக இருக்கிறது என்பதை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மற்ற மொழிகளை பார்த்தாலும் அதற்கும் இடம் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே எல்லாவற்றையும் உத்தேசித்துதான் முடிவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதைப்பற்றி காங்கிரஸ் காரிய கமிட்டி முடிவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதைப்பற்றி பரிசீலனை செய்ய வேண்டியதாக இருக்கிறது. உடனடியாக முடிவு எடுக்க முடியாது. இதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. கனம் அங்கத்தினர்கள் சொல்லக்கூடிய பல சிக்கல்களையும் பரிசீலனை செய்ய வேண்டியதாக இருக்கிறது. அவைகளையெல்லாம் பரிசீலனை செய்து முடிவு எடுத்து அதற்குப் பின் பார்லிமெண்டுக்குச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. இப்படிப்பட்ட பல சிக்கல்கள் பலவாறு இருப்பதை கனம் அங்கத்தினர்கள் உணருவார்கள் என்றே நினைக்கிறேன். மற்ற நாடுகளில் எப்படி நடைபெறுகிறது என்பதைப் பார்த்து அதன்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். அதன் பிறகு ஏதாவது மாறுதல் செய்யவேண்டும் என்று தோன்றினால் அதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கும், அதன்படி திட்டம் வகுக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன். ஆகவே உடனடியாக இதைப்பற்றி முடிவு செய்ய முடியாது, முடிவு செய்யக்கூடிய விஷயம் அல்ல என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.



5th September 1960]

**SRI P. U. SHANMUGAM**: கனம் சபாநாயகர் அவர்களே, எங்கள் கட்சித் தலைவர் அண்ணா அவர்கள் பேசும்போது இருமொழிக் கொள்கையைப்பற்றி பேசினார். ஆங்கிலமும் ஹிந்தியும் தொடர்ந்து நடத்தப்படுமா என்பதைப்பற்றிப் பேசினார். அதற்கு கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது ஆங்கிலம் எவ்வளவு காலம் இருக்கும் என்றும் ஹிந்தி எவ்வளவு காலம் கழித்து வரும் என்பதைப்பற்றியும் சொல்லிக் கொண்டிருப்பதில் இரு மொழிப் பிரச்னையில் குழப்பம் இருப்பதாகத் தெரிகிறது. அந்தக் குழப்பத்தை விளக்கமாக கூறுவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM**: ஆங்கிலமும் தொடர்ந்து இருக்கும். ஹிந்தியும் தொடர்ந்து கற்றுக்கொடுக்கப்படும். ஆங்கிலம் வேண்டும் என்று நினைக்கிறவர்கள் ஆங்கிலத்தை எடுத்துக்கொள்ளலாம், ஹிந்தி வேண்டும் என்று நினைக்கிறவர்கள் ஹிந்தியை கற்றுக்கொள்ளலாம். இதில் குழப்பம் ஏற்படுவதற்கு இடம் இல்லை. குழப்பம் செய்யவேண்டும் என்று நினைக்கக்கூடியவர்களுக்குத்தான் குழப்பமாக இருக்கும் என்பதை மட்டும் சொல்லிக்கொள்ளுகிறேன்.

**SRI C. N. ANNADURAI**: உண்மையிலேயே கனம் அமைச்சருடைய விளக்கம் நன்றாகத் தெரிந்திருக்கிறது. ஆங்கிலமும் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு ஒரு குறிப்பிட்ட மொழியின் தரம் உயர்ந்த பிறகு அதற்கு முதலிடம் கொடுக்கப்படுமா ? மற்ற நாடுகளுடன் தொடர்பு இருக்க வேண்டும் என்பதற்காக ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டும் என்றும் சொல்லப்படுகிறது.

**THE HON. SRI C. SUBRAMANIAM**: இப்படியெல்லாம் சொல்லிக் கொண்டே போனால்தான் குழப்பம் ஏற்படுகிறது. அப்படி குழப்பம் ஏற்படாமல் இருப்பதற்காகத்தான் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதைத் தீர்மானமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே இப்பொழுதுள்ள தீர்மானத்தை அப்படியே நிறைவேற்ற வேண்டும். ஹிந்தியை எடுத்துவிடவேண்டும், ஆங்கிலம் மட்டும் தொடர்ந்து நடக்கவேண்டும் என்பதை ஒத்துக்கொள்ள முடியாது. ஆகவே இப்பொழுது இருக்கக்கூடிய தீர்மானத்தை அப்படியே ஒத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். வேறு வழியில் முயற்சி செய்ய மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அதை வேண்டுமானால் மேடையில் பேசுவதற்கு வைத்துக் கொள்ளலாம். ஆகவே இப்பொழுதுள்ள தீர்மானத்தை அப்படியே நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் மகாநாடுகளில் வேண்டுமானால் வேறு விதமாக பேசிக்கொள்ளலாம்.

Hon. Member Sri K. Anbazhagan and some other hon. Members rose.)

**SRI K. ANBAZHAGAN**: தலைவர் அவர்களே, . . . .

**MR. SPEAKER**: இப்படி பேசிக்கொண்டே போனால் என்ன செய்வது ? ஒவ்வொருவருக்கும் பதில் சொல்வது என்பது முடியாது. I shall allow only the hon. Member Sri Anbazhagan to seek clarification. His will be the last interruption and I am sorry I cannot allow any more interruptions.

**THE HON. SRI C. SUBRAMANIAM**: Thank you, Sir.

**SRI K. ANBAZHAGAN**: கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சென்னையிலும், அதற்கு அண்டையிலுள்ள பள்ளிக்கூடங்களிலுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கையை எடுத்துக் காட்டினார்கள். சென்னை ஒரு காஸ்மோபாலிடன் சிடி என்பதை அவரே சொல்லியிருக்கிறார். பல்வேறு மொழி பேசக்கூடிய இடம் இது. பல பள்ளிக்கூடங்களில் பல

[Sri K. Anbazhagan] [5th September 1960

மொழிகள் பேசக்கூடியவர்கள் இருக்கிறார்கள். அங்கேயெல்லாம் இந்தியைத் தவிர மற்ற மொழியைப் பயில வேண்டும் என்றால் அதற்கு வேண்டிய ஆசிரியர்கள் கிடையாது. தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் கிடைக்கவில்லை என்று அதற்கு இடம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அப்படி தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால் இருக்கக்கூடிய ஆசிரியர்கள் என்ன மொழியைக் கற்றுக்கொடுக்க இருக்கிறார்களோ அந்த மொழியில் பயிலுவதற்குத்தான் பிள்ளைகள் முன் வருகிறார்கள். தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் இருந்தால் அவர்களை நியமித்தால் பிள்ளைகள் அந்தந்த மொழிகளைக் கற்றுக்கொள்ள முன் வருவார்கள். அப்படிப்பட்ட நிலைமை இல்லாததால்தான் இந்தியைக் கட்டாயமாகப் படிக்கக் கூடிய நிலைமை ஏற்படுகிறதுக் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மூன்று மொழிகளைக் கற்றுக்கொள்ளவேண்டும் என்று எல்லோரும் சேர்ந்து தான் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதாவது செகண்டரி ஸ்டேஜிலும், உயர் நிலை பள்ளி ஸ்டேஜிலும் மூன்று மொழிகள் பயிலவேண்டும் என்று எல்லா கட்சி தலைவர்களும் சேர்ந்து முடிவு செய்திருக்கிறார்கள். அதன்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி புனராலோசனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அது வேறு விஷயம் ஹிந்தி அல்லது இன்னொரு மொழியைக் கற்றுக்கொள்ளவேண்டும். அதற்கு வேண்டிய வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்குத் தகுந்த எண்ணிக்கை இருந்தால் அதற்கு வேண்டிய ஆசரியர்களை நியமிப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. தெலுங்கு படிக்க வேண்டுமானாலும், கன்னடம் படிக்க வேண்டுமானாலும், குஜராத்தி படிக்க வேண்டுமானாலும், எது படிக்க வேண்டுமென்று முன் வந்தாலும் அதற்கு ஏற்பாடு செய்வதற்குச் சர்க்கார் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துத் கொள்ளுகிறேன். இரு மொழிக் கொள்கையை ஒப்புக்கொண்ட பிறகு ஹிந்தியைக் கட்டாயம் படிக்க வேண்டும் என்பது இல்லை. அதை இஷ்ட பாடமாகப் படிக்கலாம். போதனா மொழி எது வேண்டுமானாலும் இருக்கலாம். அதனால் இந்தியை திணிப்பதாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, I withdraw my first amendment.

The amendment was, by leave, withdrawn.

The amendments of hon. Members Sri M. Kalyanasundaram and Sri K. Anbazhagan were put and lost.

MR. SPEAKER : I shall now put the second amendment moved by hon. Member Sri V. K. Ramaswamy Mudaliyar to vote. The question is—

"*Add* the following at the end :—

'and on such consideration this House recommends to the State Government that the Central Government be requested to undertake appropriate legislation in order to implement the Prime Minister's assurances regarding the continued use of the English language for the official purposes of the Indian Union.'"

The amendment was declared carried by voice vote.



5th September 1960]

(Some Hon. Members drew the attention of Mr. Speaker to the fact that a Member belonging to the ruling party said 'No' when the amendment was put to vote.)

MR. SPEAKER : The Chair does not care to which party an hon. Member belongs. The Chair is guided solely by the voice of the hon. Members and is not interested in any other factor. *யார் யார் என்ன சப்தம் போட்டாலும் அதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. எந்த சப்தம் ஜாஸ்தியாகக் கேட்கிறதோ அதைக் கேட்டுத்தான் நான் முடிவு சொல்லுவேன்.*

I shall now put the motion, as amended, to vote. The question is—

"That the policy of the Madras Government on the Official Language be taken into consideration, and on such consideration this House recommends to the State Government that the Central Government be requested to undertake appropriate legislation in order to implement the Price Minister's assurances regarding the continued use of the English language for the Official purposes of the Indian Union."

The motion, as amended, was put and carried.

MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow. 5-28 p.m.

The House then adjourned.

VIII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

## A. Statutory Rules and orders.

* 123. *Amendment to the Suppression of Immoral Traffic in Women and Girls (Madras) Rules*, 1958, *issued in G.O. Ms. No.* 1241, *Home, dated* 25*th April* 1960. [*Laid on the table of the House under Section* 23 *of the Suppression of Immoral Traffic in Women and Girls Act*, 1956 (*Central Act* 104 *of* 1956.)]

† 124. *Amendment to the Madras Industrial Disputes Rules*, 1958, *issued in G.O. Ms. Nos.* 3054 *and* 3055, *Industries, Labour and Co-operation, dated* 22*nd June* 1960. [*Laid on the table of the House under Section* 38 *of the Industrial Disputes Act*, 1947 (*Central Act XIV of* 1947).]

† 125. *Notification issued with G.O. Ms. No.* 1647, *Home, dated* 3*rd June* 1960 *under the Madras Motor Vehicles Taxation Act*, 1931. [*Laid on the table of the House under Section* 11 (1) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931).]

† 126. *Ammendment to the Madras Spirituous Essences Rules*, 1959, *issued in G.O. Ms. No.* 2020, *Home, dated* 12*th July* 1960. [*Laid on the table of the House under Section* 54 (3) of the *Madras Prohibition Act*, 1937 (*Madras Act X of* 1937).]

[5th September 1960

* 127. *Amendment to Rule 4 of the Madras Dramatic Performances Rules, 1955, issued in G.O. Ms. No. 2088, Home, dated 16th July 1960. [Laid on the table of the House under Section 13 of the Madras Dramatic Performances Act, 1954 (Madras Act XXXIII of 1954).]*

‡ 128. *Notification issued with G.O. No. 1278, Local Administration, dated 28th July 1960 under the Madras Village Panchayats Act, 1958. [Laid on the table of the House under Section 179 (4) of the Madras Village Panchayats Act, 1958. (Madras Act XXXV of 1958).]*

‡ 129. *Notification issued with G.O. No. 864, Revenue, dated 15th February 1960 under the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959 [Laid on the table of the House under Section 116 (3) of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Madras Act 22 of 1959).]*

‡130. *Notification issued with G.O. No. 3180, Industries, Labour and Co-operation, dated 28th June 1960 under the Madras Catering Establishments Act, 1958. [Laid on the table of the House under section 29 (4) of the Madras Catering Establishments Act, 1958 (Madras Act XII of 1958).]*

‡131. *Notification issued with G.O. No. 1082, Public (Services-A) regarding the exclusion of the Officer-in-charge of Information Centre at Madurai from the Commission's purview. [Laid on the table of the House under Section 320 (5) of the Constitution of India.]*

## B. Reports, Notifications and other papers.

§ 58. *List of unstarred questions for 23rd August 1960. (Question numbers 12 to 36.)*

§59. *Answer to Legislative Assembly unstarred Question No. 970 asked by Sri S. Pakkiriswamy Pillai.*

§ 60. *Answer to Legislative Assembly unstarred Question No. 354 asked by Sri A. Vedarathnam.*

§ 61. *Proposals of Development Commissioner regarding the formulation of Panchayat Development Schematic Budget as authorized basis of Block-level planning for the Third Five-Year Plan of Madras State issued in G.O. No. 664, Rural Development, dated 16th August 1960.*

† 62. *The Madras Public Premises (Eviction of Unauthorised Occupants) Bill, 1960 (L.A. Bill No. 24 of 1960.)*

† 63. *The Madras General Sales Tax (Amendment) Bill, 1960 (L. A. Bill No. 25 of 1960.)*

† 64. *The Madras State Aid to Industries (Amendment) Bill, 1960 (L.A. Bill No. 26 of 1960.)*



5th September 1960]

† 65. *The Madras State Housing Board Bill, 1960 (L. A. Bill No. 31 of 1960).*

† 66. *The Madras Cinemas (Regulation) Amendment Bill, 1960 (L.A. Bill No. 32 of 1960).*

† 67. *The Madras Appropriation (No. 3) Bill, 1960 (L.A. Bill No. 33 of 1960).*

‡ 68. *'Third Five-Year Plan—Madras State—Draft Outline' and 'Draft Third Five-Year Plan—Large Scale and Medium Industries' (With corrigendum.)*

69. *Notes on Artificial Rain-making Experiments.*

---

* Sent by Post on 22nd July 1960.
† Sent by Post on 30th August 1960.
‡ Sent by Post on 3rd September 1960.
§ Placed on the table on 23rd August 1960.

APPENDIX I.

[Vide answer to the starred question No. 417, asked by Sri V. K. Kothandaraman at the meeting of the Legislative Assembly held on 5th September 1960, on page 2 supra.]

*Statement showing the names of Gazetted Officers who died while in service and to whom ex-gratia payments were sanctioned since 1957.*

1. Late Sri S. A. David, Executive Engineer, Public Works Department.

2. Late Sri P. Arumuga Mudaliar, Deputy Secretary to Government, Revenue Department.

3. Late Sri V. Chandrasekaran, Assistant Engineer (Electrical).

4. Late Sri S. Nithyanandham, Joint Registrar of Co-operative Societies.

5. Late Sri M. G. Padmanabha Mudaliar, Joint Registrar of Co-operative Societies.

6. Late Sri S. Chidambaranathan, Deputy Registrar of Co-operative Societies.

7. Late Sri P. Kunhirama Menon, Assistant Agricultural Chemist.

8. Late Sri P. K. Ramachandran, Assistant Engineer, Public Works Department.

9. Late Sri K. Ratnaswamy, Assistant Engineer, Public Works Department.

10. Late Sri R. Perumal, Revenue Divisional Officer, Erode, Sankari.

11. Late Sri T. Sivasankaran, Subdivisional Magistrate, Sankari.

12. Late Sri S. Venkataraman, Assistant Secretary to Government, Food and Agriculture Department.

13. Late Sri M. Perianna Pillai, Block Development Officer, Gangavalli.

14. Late Sri R. Ekambaram Pillai, Assistant Engineer, Public Works Department.

15. Late Sri L. J. Fernandez, Assistant Engineer (Highways).

16. Late Sri N. R. Krishnaswamy, Commercial Tax Officer, Coimbatore (North).

17. Late Sri T. K. Kothandarama Naidu, Deputy Registrar of Co-operative Societies.

18. Late Dr. P. Sanjeeva Rao, Medical Officer, Government Hospital, Coonoor.





APPENDIX II.

[Vide answer to starred question No. 418 asked by Sri P. G. Manickam at the meeting of the Legislative Assembly held on 5th September 1960, on page 2 supra.]

*Statement showing the quantity of fertilisers requested for 1960-61 and the quantity received up to 30th June 1960.*

*Figures in tons.*

| *Fertilisers.* | *Requirements of fertilisers for 1960-61 intimated to the Government of India.* | *Quantity actually received.* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| Ammonium Sulphate .. .. | 1,45,000 | 10,647 |
| Package Plan allotment .. | 8,250 | 2,926 |
| Urea .. .. .. | 22,000 | 2,255 |
| Ammonium Sulphate Nitrate .. | 30,000 | 848 |
| Calcium Ammonium Nitrate .. | 7,500 | 945 |
| Superphosphate .. .. .. | 81,000 | 11,774 |

## APPENDIX III.

[Vide answer to the starred Question No. 420 asked by Sri T. S. Ramaswami at the meeting of the Legislative Assembly held on 5th September 1960 on page 6 supra.]

*Comparative statement of pay, dearness allowance, house-rent allowance, batta to the traffic staff in the Madras and Kanyakumari branches of the Madras State Transport Deparment.*

| Designation of staff. | Scale of pay. Allotted personnel of T. C. State. (1) | Scale of pay. Persons recruited after 1st November 1956. (2) | Dearness allowance. Allotted personnel of T. C. State (1) | Dearness allowance. Persons recruited after 1st November 1956. (2) | House rent allowance. Allotted personnel of T.C. State. (1) | House rent allowance. Persons recruited after 1st November 1956. (2) | Batta. Allotted personnel of T.C. State. (1) | Batta. Persons recruited after 1st November 1956. (2) | Remarks. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Drivers | (a) 50—3—65 3—85—EB—5—100 | 40—2—60 | For basic pay of Rs. 45 and below—Rs. 32.<br>For basic pay of Rs. 46 and above—Rs. 38.<br>For pay of Rs. 150—Rs. 33.<br>For pay above Rs. 150—Rs. 35. | For basic pay of Rs. 39 and below—Rs. 36.<br>For Rs. 40—Rs. 38.<br>For Rs. 41—60—Rs. 39.<br>For Rs. 60—80 and Rs. 80—100—Rs. 41.<br>Above Rs. 100, 17½ per cent of pay plus Rs. 25 | Both the traffic staff allotted and those appointed subsequent to 1st November 1956 are paid at the following rates—<br>For Rs. 39 and below—Rs. 5.<br>For Rs. 40 to 80—Rs. 7.<br>For Rs. 81 to 100—Rs. 9.<br>For Rs. 101 to 150—Rs. 12. | | Re. 1 for a single duty of 8 hours. | Rs. 1·12 per duty of 8 hours. | Drivers of former T.C. State are paid Rs. 5 as driving allowance. |
| | (b) 40—2—50 EB—3—80 | | | | | | | | |
| Conductors | (a) 35—3—65—EB—3—80 | 30—2—50 Conductors who have passed S.S L.C. will be started on Rs. 40. | | | | | Do. | Do. | Conductors of former T.C. State are paid Rs. 3 as security allowance. |
| | (b) 35—3—65 | | | | | | | | |
| Station Masters (T.C. State Personnel). | | | | | | | | | |
| Checking Inspectors and Time-keepers corresponding post created after 1st November 1956. | (a) 60—5—100—EB—5—125 | 35—2—55 Checking Inspectors and Time-keepers who have passed S.S.L.C. or equivalent examination will be started on Rs. 45. | | | For pay exceeding Rs. 150 but not exceeding Rs. 162 marginal adjustment not exceeding Rs. 162. | (10 per cent of pay plus Rs. 2). | The allotted Station Masters are not paid daily batta. | Rs. 1·25 for checking Inspectors. Re. 1 for Time-keepers for 8 hours duty. | |
| Assistant Transport Inspectors (T.C. State). | | | | | | | | | |
| Traffic Inspectors (Madras State). | (a) 80—5—120 EB—6—150 | 100—5—150 | | | | | Rs. 1·25 per 8 hours duty. | Nil. | |
| Transport Inspector (T.C. State). | | | | | | | Do. | Nil. | |
| Traffic Inspectors (Madras State). | (b) 125—7½—200 | Do. | | | | | | | |

(1) Particulars in respect of personnel allotted from former T.C. State.

(2) Particulars in respect of personnel of Madras State.

## APPENDIX IV.

[Vide answer to the starred Question No. 422 asked by Sri M. P. Sarathi at the meeting of the Legislative Assembly held on 5th September 1960 on page 7 supra.]

*Statement showing the quantity and value of hand-made paper produced in Government Hand-made Paper Units from January to May 1960.*

| (1) | *Reams.* (2) | *Numbers.* (3) | *Value.* (4) |
|---|---|---|---|
| | | | RS. |
| 1 Manifolding paper .. | 337 | .. | 2,545·50 |
| 2 Blotting paper .. .. | 12 | .. | 543·60 |
| 3 Impression paper .. | 442 | .. | 6,347·50 |
| 4 Utility paper .. .. | 6 | .. | 128.44 |
| 5 Boards .. .. .. | .. | 3 | 400·00 |
| 6 Document paper .. | 95 | .. | 6,402·50 |
| 7 Flat files .. .. | .. | 2,767 | 1,230·30 |
| 8 Statistical cards .. | .. | 9 | 705·00 |
| 9 Wrapping paper .. | 8 | .. | 300·00 |
| 10 Table pads .. .. | .. | 47 | 157·00 |
| 11 Ordinary writing paper. | 5 | .. | 113·62 |
| Total .. | 905 | 3,826 | 18,873·46 |



## APPENDIX V.

[Vide answer to the starred question No. 444 asked by Sri S. M. Annamalai at the meeting of the Legislative Assembly held on 5th September 1960, on page 2? supra.]

*Statement showing the details of Community Development Works Programme taken up during 1959–60 with reference to orders issued in G.O. Ms. No. 640 Public (Rural Development Project), dated 28th February 1955, in Kalasapakkam and Polur Blocks in North Arcot district.*

| *Serial number and name of block.* (1) | *Name of work.* (2) | *Amount sanctioned.* (3) |
|---|---|---|
| | | RS. |
| 1 Kalasapakkam Block.. | Improvements to Melsolankuppam to Vadakarainamiandal road. | 1,200 |
| 2 Do. .. | Construction of an open draw well Karayambadi, hamlet of Anaivadi. | 2,000 |
| 3 Do. .. | Construction of an open draw well at Kadaladi. | 1,500 |
| 4 Do. .. | Improvements to Polur-Chengam Road to Poovambattu. | 2,500 |
| 5 Do. .. | Construction of an open draw well at Padagam. | 2,000 |
| 6 Do. .. | Construction of an open draw well at Kandapalayam. | 1,500 |
| 7 Do. .. | Construction of an open draw well at Padagam. | 1,500 |
| 8 Do. .. | Construction of a drinking water well at Mansurabad. | 1,500 |
| 9 Do. .. | Construction of a drinking water well at Mattavettu. | 1,500 |
| 10 Do. .. | Gravelling Cuddalore-Chittoor road to Ladavaram. | 2,100 |
| 11 Do. .. | Gravelling road from Banambattu to Polur-Chengam road. | 2,000 |
| 12 Do. .. | Improvements to Polur-Chengam road to Kunnathur, hamlet of Kadaladi. | 2,468 |
| 13 Do. .. | Improvements to flaying centre at Vadakarainamiandal | 800 |
| 14 Do. .. | Construction of a platform in the flaying centre at Vadakarainamiandal. | 400 |
| 15 Polur Block .. .. | Draw well in Pudur .. .. | 1,800 |
| 16 Do. .. .. | Do. Padavedu .. .. | 1,800 |
| 17 Do. .. .. | Do Kunnathur .. .. | 1,800 |
| 18 Do. .. .. | Culvert in Illupagunam .. .. | 2,500 |
| 19 Do. .. .. | Nainavaram road .. .. .. | 3,000 |
| 20 Do. .. .. | Draw well in Pudupalayam .. | 1,800 |
| 21 Do. .. .. | Do. Papambady .. | 1,800 |
| 22 Do. .. .. | Do. Tindivanam .. | 1,800 |
| 23 Do. .. .. | Do. Athimoor .. .. | 1,800 |
| 24 Do. .. .. | Do. Kalambur .. .. | 3,000 |
| 25 Do. .. .. | Do. Thirusur .. .. | 1,800 |
| 26 Do. .. .. | Do. Potharai .. .. | 1,800 |
| 27 Do. .. .. | Do. Ericuppam .. | 1,800 |
| 28 Do. .. .. | Repairs to Periagram well .. | 1,800 |
| 29 Do. .. .. | Draw well in Euvambady .. | 1,800 |
| 30 Do. .. .. | Do. Mambattu .. .. | 1,800 |
| 31 Do. .. .. | Do. Turinjicuppam .. | 1,800 |
| 32 Do. .. .. | Do. Enduvumbady .. | 3,000 |
| 33 Do. .. .. | Do. Thuvarandal .. | 3,000 |
| 34 Do. .. .. | Do. Pettai .. .. | 3,000 |
| 35 Do. .. .. | Culvert in Trisur .. .. | 3,000 |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Tuesday, the 6th September 1960.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I. QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Teachers (transfer)*

*451 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) இவ்வாண்டு வட ஆற்காடு மாவட்ட ஆட்சி மன்றத்தின் நிர்வாகத்திலுள்ள எத்தனை பி.டி. செகண்டரி கிரேடு, ஹையர் கிரேடு ஆசிரியர்கள் மாற்றப்பட்டனர்?

(ஆ) இவர்களில் எத்தனை பேர்கள் அவர்களாகவே மாறுதல் கோரினர்?

THE HON. SRI SUBRAMANIAM: (a) & (b) The time and labour involved in gathering the particulars will not be comensurate with the public purpose that may be served.

SRI S. M. ANNAMALAI: ஸார், மற்ற ஆண்டுகளைவிட இந்த ஆண்டு அதிகமான ஆசிரியர்களை மாற்றியிருக்கிறார்கள். சில அதிகாரிகள் வேண்டுமென்றே இவர்களை மாற்றியிருக்கிறார்கள் என்பதை சர்க்கார் உணருமா? இதைத் தடுப்பதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்?

THE HON. SRI C. SUBRAMANIAM: நிர்வாகத்தில் மாறுதல் செய்வது அவ்வப்போது ஏற்படுகின்ற நிலைமையை உத்தேசித்துத் தான். அதிகாரிகள் வேண்டுமென்றே கஷ்டங்கள் கொடுக்கிறார்கள் என்று சொல்வது சரியல்ல. அப்படி ஏதாவது இருந்தால், சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் கவனிக்கப்படும்.

SRI V. K. KRISHNAMURTHY: பஞ்சாயத்து யூனியன் அமைக்கப்படுவதன் காரணத்தால், அந்த யூனியனிலுள்ள ஆசிரியர்கள் அந்த யூனியனிலேயே பணியாற்றுவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று ஜில்லாபோர்டு அதிகாரிகள் விண்ணப்பம் செய்தால் அரசாங்கம் அதை கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: பஞ்சாயத்து யூனியனில் இருக்கக்கூடிய ஆசிரியர்களை வேறு பஞ்சாயத்திற்கு மாற்றாமல் அதற்குள்ளேயே வேலை செய்யவேண்டியவர்களாக இருக்கிறார்கள். பின்னால் சங்கடம் ஏற்படாமல் இருக்க இவ்விதமாக ஏற்படுத்தப் படுகிறது.

[6th September 1960

SRI V. SUBBIAH : பஞ்சாயத்து யூனியன் ஏற்படுவதற்கு முன்னால் அந்தந்த ஆசிரியர்களை அங்கங்கேயே வைத்துக் கொள்ளாமல், விரும்பாத ஆசிரியர்களை மாற்றுகிறார்கள் என்பது உண்மையா?

THE HON. SRI C. SUBRAMANIAM : என்னிடம் அந்த தகவல் இல்லை.

SRI S. M. ANNAMALAI : சர்க்கார் பஞ்சாயத்து யூனியன் இருக்கின்ற அந்த இடங்களில் ஆசிரியர்களை மாற்றுவதில் ஆட்சேபணை ஒன்றும் கிடையாது. ஒரு பஞ்சாயத்திலிருந்து வேறு பஞ்சாயத்து யூனியனுக்கு மாற்றப்படுகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா? அப்படி மாற்றுகின்றபோது கரப்ஷன் கூட நடக்கிறதென்று சர்க்காருக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : வெறுமனே தகவல் இல்லாமல் கரப்ஷன் இருக்கிறதென்று பொதுவாகச் சொல்வது சரியல்ல. இதைப்பற்றி தகவல் ஏதாவது இருந்தால், அதைச் சர்க்காருடைய கவனத்திற்கு கொண்டுவந்தால், கவனிக்கப்படும். பஞ்சாயத்து யூனியனில் கரப்ஷன் இருக்கிறது என்று சொல்வது நிர்வாகத்தை பாதிக்கக்கூடியதாக இருக்கிறது.

*Bridges (Parambikulam)*

* 452 *Q.*—SRI P. S. CHINNADURAI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பாம்பிக்குளம் பகுதியில் கட்டப்பட்ட பல சிறு பாலங்கள் உடைந்துவிட்டன என்பது உண்மையா ?

(ஆ) அதற்கான காரணங்கள் என்ன ?

(இ) இதன் காரணமாகச் சர்க்காருக்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) & (*c*) Do not arise.

*Members of Parliament (Tamilnad)*

* 453 *Q.*—SRI. N. MARUDACHALAM (on behalf of SRI V. K. KOTHANDARAMAN) : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சாத்தனூரில் 1960 ஜூன் மாதத்தில் தமிழ்நாடு எம்.பி.க்களைக் கொண்ட கூட்டம் நடைபெற்றதா ?

(ஆ) அதில் கலந்து கொண்ட அமைச்சர்கள், அதிகாரிகள் யார் யார் ?

(இ) அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் விவரங்கள் யாவை ?



6th September 1960]

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The Minister (Works), the Minister (Electricity), Secretary to Government (Public Works Department), Chief Engineer (Irrigation), Special Chief Engineer, Parambikulam-Aliyar Project and the Superintending Engineers and other officers of the Public Works Department, the Collector of North Arcot and the Chief Engineer (Electricity), Madras State Electricity Board, participated in the meeting.

(*c*) The meeting was held for a general discussion on the Irrigation and Power Projects in Madras State. No decisions as such were taken at the meeting. The several suggestions put forth by the Members of Parliament at the meeting are being considered by Government.

SRI A. A. RASHEED : Sir, since the meeting was held in Sathanur in the North Arcot district, why were not the M.L.As. of the North Arcot District invited to this meeting?

THE HON. SRI P. KAKKAN : We will invite M.L.As.

SRI S. M. ANNAMALAI : சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு கூட்டத்திற்கு அழைப்பு அனுப்பியிருந்ததாகச் சொன்னார்கள். அப்படி யாருக்கும் தபால் வரவில்லையே. கனம் அமைச்சர் அவர்கள் வட ஆற்காடு சுற்றுப்பிரயாணம் வருவதாகச் சொல்லப்பட்டதே தவிர, கூட்டத்தில் கலந்துக்கொள்ளவேண்டுமென்று அழைப்பு அனுப்பப்படவில்லை.

THE HON. SRI P. KAKKAN : பார்லிமெண்ட் அங்கத்தினர்களும், மற்ற அதிகாரிகளும் கலந்துகொள்ள செய்தார்கள். எல்லா எம்.எல்.ஏ-க்களுக்கும் இதைப்பற்றி தெரிவிக்கவில்லை.

*Open places (disfigurement)*

* 454 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the date when 'The Madras Open Places (Prevention of Disfigurement) Act, 1959, came into force; and

(*b*) the number of cases registered so far under the Act?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 16th March 1959.

(*b*) 141.

*Juvenile delinquents*

* 455 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் சென்னை ராஜ்யத்திலுள்ள சிறைச்சாலைகளில் எத்தனை இளங் குற்றவாளிகள் இருக்கிறார்கள் ?

(ஆ) இவர்களுள், எத்தனை பேர்களுக்கு கல்வி, தொழில் பயிற்சி முதலியன அளிக்கப்படுகின்றன?

[6th September 1960

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) 4,857 up to 30th June 1960.

(b) 1,677 are given education and 4,605 are given industrial training.

SRI P. G. MANICKAM : மேற்கொண்டு இளம் குற்றவாளிகள் அவர்களுடைய தண்டனை முடிவு பெற்ற பிறகு அந்தந்தத் தொழிலை நடத்துவதற்கு சர்க்கார் உதவி அளிக்கிறார்களா? அப்படியென்றால் அவர்களுக்கு என்னென்ன உதவிகள் அளிக்கப் பட்டிருக்கின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதற்கான புள்ளி விவரங்கள் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

(கனம் அங்கத்தினர்கள் ஸ்ரீ எம். கந்தசாமி படையாச்சியும், ஸ்ரீ வி. எஸ். அருணாசலமும் கனம் சபாநாயகருக்கும், பேசும் அங்கத்தினருக்கும் குறுக்கே சென்றார்கள்.)

MR. SPEAKER : கனம் அங்கத்தினர்களுக்கு ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். சபாநாயகருக்கும் பேசும் அங்கத் தினருக்கும் குறுக்கே கனம் அங்கத்தினர்கள் போகக்கூடாது. இப்பொழுது கனம் அங்கத்தினர்கள் ஸ்ரீ கந்தசாமி படையாச்சி அவர்களும், ஸ்ரீ அருணாசலம் அவர்களும் குறுக்கே போனார்கள். அப்படி யாரும் போகக்கூடாதென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI K. B. S. MANI : இளம் குற்றவாளிகள் தங்களுடைய தண்டனை காலம் முடிந்த பிறகும்கூட அவர்கள் எடுத்துக் கொள்ளும் பயிற்சிகள் முடியாதிருந்தால், பயிற்சி காலம் விஸ்தரிக் கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவர்களுடைய தண்டனை காலத்திற்குள் கொடுக்கப்படும் பயிற்சி முடியா விட்டால், அதைத் தொடர்ந்து கொடுப்பதற்கு தண்டனை முடிந்த பிறகு கவனிக்கப்படும்.

## *Khadi*

* 456 Q.—SRI S. NAGARAJA MONIGAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the production and sale of Khadi in the State is on a profitable basis;

(b) if so, the profit and loss account for 1958-59 and 1959-50; and

(c) whether there is any proposal to reduce the price of Khadi cloth?



6th September 1960]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The latest audited accounts available are for 1957–58, according to which the Khadi production and sale is on a profitable basis.

(b) The audit of the *pro forma* accounts for 1958–59 and 1959-60 have not yet been completed. It is not therefore possible now to furnish the profit and loss account.

(c) No.

SRI S. NAGARAJA MONIGAR : Sir, is it not a fact that the Governmental effort is there for a considerable number of years for increasing the production of Khadi and, if so, is it not fair to hope that there will be a reduction in the price of Khadi?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விலையைக் குறைப் பதற்கு அவ்வப்போது நமது சர்க்கார் கவனித்து வருகிறது. அது மட்டுமல்லாமல் ஆல் இந்தியா காதி அண்டு வில்லேஜ் கமிஷன் மத்தியஸ்தர்களும் கவனித்து வருகிறார்கள். விலை குறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்போது குறைக்கப்படுகிறது.

SRI S. NAGARAJA MONIGAR : How is it that auditing is not yet over for two years. May I hope that in the interest of the development of Khadi, efforts will be made to see that auditing, etc., are over earlier?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆடிட்டிங்கில் ஓரளவு தாமதம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. கூடிய சீக்கிரத்தில் கணக்குகளை பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்படுவதைப்பற்றி கவனம் செலுத்தப்பட்டுவருகிறது.

SRI N. R. THIAGARAJAN : அம்பர் சர்க்கா நூலில் தயார் செய்யப்படும் கதர் விலையைக் குறைப்பதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த விஷயம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

SRI K. B. S. MANI : முந்திய காலத்தை விட கதர் உற்பத்தி அதிகமாக இருந்தும், விற்பனை அதிகமாக இருந்தும் பல சென்டர் களில் பணத்தைக் கையாடி விடுவதன் காரணமாக சர்க்காருக்கு நஷ்டத்தை உண்டாக்கி இருப்பதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஓரிரு இடங்களில் ஓரிருவர் பணத்தைக் கையாடி இருக்கலாம். அது எங்கும் இருக்கும் விஷயம். கதர் விஷயத்தில் பிரத்தியேகமாக ஒன்றும் இல்லை.

## *Kundah Project*

* 457 Q.—SRI K. R. NALLASIVAM : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தற்போது குந்தாவில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவென்ன ?

(ஆ) அம் மின்சாரம் தொழில் துறைக்கா அல்லது விவசாயத் துறைக்கா அதிகம் விநியோகிக்கப்படுகிறது?

THE HON. SRI V. RAMAIAH: (a) About ten lakh units per day.

(b) The power generated in all the power houses in the State including Kundah are being fed into the Madras Power Grid for utilization throughout the State for industries, agriculture, domestic use, etc. It is not therefore possible to assess as to how much of the power generated at Kundah is being utilised for industry, agriculture, etc.

SRI K. R. NALLASIVAM. இப்போது கொடுப்பதைவிட நீர்ப் பாசனத்துக்கு, பம்ப் செட்கள் கொடுத்து, அதிகமான அளவில் மின்சாரம் சப்ளை செய்ய அரசாங்கம் திட்டமிடுமா?

THE HON. SRI V. RAMAIAH: இப்போது விவசாயத்துக்கு அதிகமான அளவில் மின்சாரம் கொடுத்துக் கொண்டு வருகிறோம். அதிகமான பம்ப் செட்கள் கொடுத்து அதற்கான மின்சாரமும் கொடுக்கப்படும்.

SRI A. A. RASHEED: May I know whether the first generator is generating to its full capacity and may I also know whether the second generator has been put into commission?

THE HON. SRI V. RAMAIAH: The hon. Member may put a separate question.

SRI N. K. PALANISAMI: குந்தாத் திட்டம் பூராவும் நிறைவேற்றப்பட்டால் இப்போது விவசாயத்திற்குக் கொடுக்கும்படியான மின்சாரம் பாதி நேரத்திற்குப் பதிலாக முழு நேரமும் கொடுக்கப்படுமா?

THE HON. SRI V. RAMAIAH: மின்சாரம் அதிகமாக உற்பத்தி செய்யச் செய்ய தேவையும் அதிகமாக வளர்ந்து கொண்டே இருக்கிறது. ஆகவே, இன்றைக்கு இருக்கக் கூடிய சில கட்டுப்பாடுகள் சில நிபந்தனைகள் இன்னும் நீண்ட காலத்திற்கு இருக்க வேண்டிய நிலை நம்முடைய மாகாணத்தைப் பொறுத்த வரையில் இருக்கிறது. அது ஒரு நல்ல அறிகுறி என்பதைக் கனம் அங்கத்தினர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

*Siruvani river*

* 458 *Q*.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state whether this Government have approached the Kerala Government regarding the utilization of Siruvani river waters in Coimbatore district for drinking purposes to meet the extended needs of Coimbatore town and also, for wayside irrigation schemes?

THE HON. SRI M. A. MANICKAVELU: Yes, Sir. The Government of Kerala have not so far agreed to the proposal to permit any larger supply of water from Siruvani source, than at present.





SRI N. K. PALANISAMI: இந்த சிறுவாணித் திட்டம் நிறைவேற்றப்பட்டால் எந்த அளவுக்குத் தண்ணீர் கிடைக்கும்? பாசனத்திற்கு எந்த அளவு வசதி கிடைக்கும்?

THE HON. SRI M. A. MANICKAVELU: Now the scheme as such supplies about 2 to 3 millon gallons of water. When the new scheme is put into effect, it is estimated that it will give a supply of 12·5 million gallons.

SRI S. NAGARAJA MONIGAR: சிறுவாணி நதியில் உள்ள ஜலம் நமக்குச் சேரவேண்டிய அளவு சேருவதற்குக் கேரள சர்க்கார் தடையாக இருக்கிறதா?

THE HON. SRI M. A. MANICKAVELU: The point is the whole catchment area is in Kerala area. But formerly it was in the former Composite State of Madras. Therefore we have to negotiate with the other State in order to utilise the full resources of the water and that is being done.

SRI M. KALYANASUNDARAM: கேரள அரசாங்கத்தோடு இந்தப் பேச்சு வார்த்தை எந்த அளவில் இருக்கிறது, எப்போது முடிவுக்கு வர முடியும்?

THE HON. SRI M. A. MANICKAVELU: It is all at the Ministerial level. The Zonal Council met and the Government of India have asked for some particulars. The good offices of the Central Government may also be forthcoming in this matter.

*Polaroid sheets*

* 459 *Q*.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Electricity be pleased to state whether there is a proposal for compulsory fixing of polaroid sheets with the wind screen and headlight glasses in the cars and lorries to prevent glare and dazzle from the headlight?

THE HON. SRI V. RAMAIAH: The answer is in the negative.

SRI A. A. RASHEED: Is the Hon. Minister aware that accidents of cars and lorries take place during nights due to glare of headlights? If so, will the Government reconsider their decision and see that polaroid sheets are fixed on the wind screens compulsorily?

THE HON. SRI V. RAMAIAH: Accidents take place not only during night time but also during day time. It is not merely due to glare of lights but bad driving. Government are always on the move to consider suggestions which will be useful to prevent accidents and in that context this may also be considered.

SRI V. SANKARAN: முக்கியமாக லாரிகளைப் பொறுத்தவரை இரவில் லாரிகள் எதிரில் வரும்போது கண் கூசுவதால் விபத்து ஏற்படக்கூடிய நிலை ஏற்படுகிறது. லைட்டைக் குறைத்தால்கூட அப்படிப்பட்ட நிலை இருப்பதால் அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

[6th September 1960

MR. SPEAKER : இப்போதுதான் பதில் சொன்னேரே !

THE HON. SRI V. RAMAIAH : (Glare) அதிகமாக இருக்கக் கூடிய காரணத்தினால் கனம் அங்கத்தினர் சொல்லக் கூடிய நிலைமை இருக்கிறது. அந்த ' glare-ஐத் தவிர்ப்பதற்கான மற்ற வழிகளும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

SRI S. LAZAR : Is the Government aware that there are some lorries with no provision for dimlighting at all? Will the Government see that every lorry is provided with dimlights also apart from bright lights?

THE HON. SRI V. RAMAIAH : According to the conditions, dimlights have to be provided. But unfortunately many of the lorries do not make use of it.

SRI N. MARUDACHALAM : ஸார், லாரிகளை இரவு நேரங்களில் ஓட்டுவதைத் தடுத்து நிறுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

MR. SPEAKER : இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

THE HON. SRI V. RAMAIAH : லாரிகளை இரவு நேரங்களில் ஓட்ட வேண்டாமென்று அரசாங்கம் சென்ற வருஷத்திற்கு முந்திய வருஷம் ஒரு உத்தரவைப் போட்டது. ஆனால், லாரிகளை இரவு நேரங்களில் நிறுத்திய காரணத்தால் நமது மாகாணத்தில் "கூட்ஸ்" போக்குவரத்து அதிகமாகப் பாதிக்கப்பட்டுவிட்டது. அதனால் அந்த உத்தரவைத் திரும்பவும் எடுத்து விட வேண்டிய நிலைமை ஏற்பட்டு அரசாங்கம் அந்த உத்தரவை வாபஸ் வாங்கிக் கொண்டது.

SRI K. VINAYAKAM : After the lifting of this ban on driving of these lorries during nights, has the Government in its possession any statistics of how many accidents have occurred during the stipulated period so that driving during nights may be banned, Sir?

THE HON. SRI V. RAMAIAH : Regarding banning of plying of lorries during nights, when we took that decision we did consider particularly the difficulties pointed out by others who use other vehicles. But we found that it would greatly impede movement of goods. Particularly the hon. Member who comes from Madras City would not have got, if that ban had continued, vegetables for his morning food. Such considerations made Government relax that rule and the question of taking all steps to check unduly fast driving, glaring lights, etc., is constantly under the review of Government.

*Tanks (Madurai district)*

* 460 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Works be pleased to state the number and particulars of major and minor tanks in the Madurai district to be improved during the Second Five-Year Plan period and their estimated cost?

THE HON. SRI P. KAKKAN : The particulars* are placed on the table of the House.

* Printed as Appendix I on pages 218-219 infra.



6th September 1960]

SRI N. R. THIAGARAJAN : ஸார், "மதுரை ஜில்லாவில் மராமத்துப் பணிகள்" என்ற புத்தகத்தில் பல்வேறு குளங்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கின்றன. எனக்குத் தெரிந்த வரையில் எந்த இடத்திலும் வேலை நடைபெறவில்லை. இந்த வேலைகள் நடைபெறுகின்றனவா, இனியாவது நிறைவேற்றத் திட்டமிடப் பட்டிருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : கண்மாய்களைச் செப்பனிடத் திட்டமிடும்போது, உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழும், ஸ்பெஷல் மைனர் இரிகேஷன் திட்டத்தின் கீழும் திட்டமிட்டு மராமத்து இலாகாவினர் நேரடியாகவே அந்தக் கண்மாய்களைச் செப்பனிட ஏற்பாடு செய்து வருகிறார்கள். சில வேலைகள் முடிந்திருக்கின்றன; சில வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன; இன்னும் சில வேலைகள் இனிமேல் எடுத்துக் கொள்ளப்படும்.

*Agricultural holdings*

* 461 Q.—SRI T. SAMPATH : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether a survey of agricultural holdings in our State was done in 1954 by Food and Agricultural Organization;

(b) if so, whether details of such survey will be placed on the table of the House; and

(c) whether a similar survey would be conducted now?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

(a) No, Sir.

(b) & (c) Do not arise.

SRI T. SAMPATH : May I know, Sir, whether the Government are going to conduct such a survey now?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I don't think such a survey is necessary.

*Official language*

* 462 Q.—SRI M. P. SUBRAMANIAM (on behalf of SRI P. U. SHANMUGAM) : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்திய ஜனாதிபதி மொழிக் குழு அறிக்கையின் மீது, தமது உத்திரவைப் பிறப்பிக்கும் முன் இந்த மாநில அரசாங்கத்தின் அபிப்பிராயத்தைக் கேட்டாரா ?

(ஆ) அப்படியானால், இம் மாநில அரசாங்கம் என்ன அபிப்பிராயம் தெரிவித்துள்ளது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) No, Sir.

(b) Does not arise.

(Sri M. P. Subramaniam rose . . . )

MR. SPEAKER : We had a whole day discussion on this issue yesterday. Does the hon. Member want to put some more supplementaries to-day also?

[6th September 1960

*Tea Estate (Periyakulam)*

* 463 *Q*.—**SRI N. R. THIAGARAJAN** : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா பெரியகுளம் தாலுக்காவில் உள்ள ஹைவேஸ் தேயிலை எஸ்டேட்டுக்கு பாரஸ்ட் நிலத்தில் எத்தனை ஏக்கர் குத்தகைக்கு விடப்பட்டது?

(ஆ) அந்நிலங்களுக்கு வருடத்திற்கு என்ன குத்தகை வாங்கப்படுகிறது?

(இ) மொத்தம் எத்தனை ஏக்கர் தேயிலை பயிரிடப்படுகிறது?

(ஈ) இப்படி பாரஸ்ட் நிலத்தில் மற்றவர்களுக்கும் குத்தகைக்கு விட உத்தேசம் உண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) An area of 9,894 acres and 62 cents in Narayanathevanpatti village (Cumbum Range) was assigned to the Highway Tea Estate;

(*b*) the question of collection of rent does not arise, as this is not a lease;

(*c*) 1,279·46 acres; and

(*d*) there are no fresh proposals to grant leases of forest lands *for tea cultivation*. But, there is a proposal to lease out suitable areas in Cumbum Range for cardamom cultivation.

**SRI N. R. THIAGARAJAN** : நாராயணதேவன்பட்டி கிராமம் மாத்திரம் இல்லாமல் நரசிங்க கிராமத்திலும் தேயிலைத் தோட்டம் பயிர் செய்யப்படுகிறது. இதைத் தவிர வேறு யாரேனும் தேயிலைத் தோட்டம் வைக்கவேண்டுமென்றால் இதைப் போலக் குத்தகைக்கு கொடுப்பார்களா?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : முன்பு தேயிலைத் தோட்டம் விருத்தி செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு கொடுக்கப்பட்டது. இப்போது அதேமாதிரி கேட்பவர்களுக்கு எல்லாம் கொடுப்பதாக உத்தேசம் இல்லை.

*Ambar charka*

* 464 *Q*.—**SRI A. VEDARATHNAM** : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கதர், கிராமக் கைத்தொழில் போர்டிலிருந்து இதுவரை நம் மாநில அரசாங்கத்துக்கு அம்பர் சர்க்கா அபிவிருத்திக்காக எவ்வளவு ரூபாய் அனுமதிக்கப்பட்டிருக்கிறது?

(ஆ) அந்தத் தொகையில் எவ்வளவு இதுவரை மாநில அரசாங்கத்தாரால் பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கிறது?

(இ) மீதமிருக்கும் தொகையைப் பயன்படுத்த அரசாங்கம் என்ன திட்டமிட்டிருக்கிறது?



6th September 1960]

(ஈ) இம்மாநிலத்தில் அம்பர் சர்க்கா எங்கு உற்பத்தியாகிறது?

(உ) எத்தனை அம்பர் சர்க்காக்கள் எங்கெங்கே விநியோகிக்கப்பட்டிருக்கின்றன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) to (*e*) Information is being collected and will be placed on the table of the House as soon as possible.

**SRI A. VEDARATHNAM** : காதி அண்ட் வில்லேஜ் இண்டஸ்ட்ரீஸ் போர்டினால் இதற்காக பயன்பட ஒருகோடி ரூபாய் உதவப்படுகிறது. எந்தவகையில் அது பயன்படுத்தப்பட்டு வருகிறது என்று தயவு செய்து சொல்லமுடியுமா?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : அதைப்பற்றி தனியாக கேள்வி போட்டால் எல்லா விவரங்களும் கொடுக்கப்படும்.

*Overhead tanks*

* 465 Q.—**S. M. ANNAMALAI** : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்ட போளூர், களம்பூர் கிராமங்களின் குடி தண்ணீர் வசதிக்காக **overhead tanks** கட்டும் விஷயம் எந்த நிலையில் உள்ளது?

THE HON. SRI M. A. MANICKAVELU : *Polur*.—There is no proposal at present to construct an overhead tank at Polur.

*Kalambur*.—There is already an overhead tank at Kalambur. The construction of an additional overhead tank has been included in the programme for 1960–61 under the Rural Water Supply Comprehensive Programme and the Work is likely to be taken up in due course.

**SRI S. M. ANNAMALAI** : போளூருக்கு ஸ்கீம் இல்லையென்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அந்த இடத்தில் கூட வருஷந்தோறும் கோடை காலங்களில் ரேஷன் கோட்டாபடிதான் தண்ணீர் கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆகவே தேசீய குடி தண்ணீர் விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் அங்கும் ஒரு திட்டம் வகுக்க சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்வார்களா?

**THE HON. SRI M. A. MANICKAVELU** : அங்கே தண்ணீருக்கு பல ஏற்பாடுகள் இப்போதே செய்யப்பட்டிருக்கிறது. கிணறுகளை எல்லாம் ஆழப்படுத்திக்கொண்டு வருகிறார்கள். சுமார் நாற்பது, நாற்பத்துமூன்று குடிதண்ணீர் கிணறுகள் அங்கே உதவி வருவதாகத் தகவல் இருக்கிறது. நல்லவேளையாக போன வாரம் அங்கே ஐந்து சுழி மழை பெய்திருக்கிறது.

[6th September 1960

*Pannaikadu Panchayat*

* 466 *Q.*—SRI M. P. SUBRAMANIAM (on behalf of SRI P. S. CHINNADURAI) : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா பண்ணைக்காடு பஞ்சாயத்தை இரண்டு பஞ்சாயத்துக்களாகப் பிரித்து சர்க்கார் உத்திரவிட்டதை அங்குள்ள மக்கள் ஆட்சேபித்திருக்கிறார்களா ?

(ஆ) அதன்பேரில் சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Representations have been received from certain residents of Pannaikadu for constituting a single panchayat for Pannaikadu village.

(*b*) The representations are under consideration.

SRI M. P. SUBRAMANIAM : ஸார், ஏற்கனவே பண்ணைக்காடு பஞ்சாயத்து . . . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : As the matter is before the court, it is *subjudice*.

*Red-tapism*

* 467 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken to reduce red-tapism to minimum, in all Government departments ?

THE HON. SRI. C. SUBRAMANIAM : There are already adequate provisions in the office manuals in regard to checking of delays and arrears in the office with a view to ensure promptitude in despatch of business. Instructions have recently been issued to all officers that communications from non-official bodies like Chambers of Commerce, etc., and from non-officials should as far as possible, be acknowledged immediately on receipt and that final replies should be sent as soon as possible after the necessary inquiries are over.

SRI M. KALYANASUNDARAM : May I know, Sir, whether the Government have any proposals to have a probe into the matter to see how far the present manuals themselves are responsible for red-tapism and if so, how they are going to rectify the defect?

THE HON. SRI C. SUBRAMANIAM : The Government are aware of the problems involved in the despatch of business in the Government offices. I had looked into the manuals also trying to find out whether there are inherently any defect in the manuals themselves. I find the manuals, if they are worked properly, would reduce much of the delays which are being caused in most of the sections of the Government offices. But unfortunately various procedures and practices have come into existence. Unless we cut them, it may not be possible to see that there is speedy disposal of Government business. However, the matter is engaging the attention of the Government.



6th September 1960]

SRI S. LAZAR : Sir, this kind of delay is being very much felt by the public. It has also been realised by the party. Even in the recent All-India Congress Session at Bangalore a decision was taken. May I know whether, pursuant to the decision, any further step was taken by the Government or whether at least any committee was appointed to go into the question of reducing delay in the disposal of Government business?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir. The matter is engaging the attention of the Government. I had a detailed discussion with all the Members of Board of Revenue and the Secretaries and the heads of departments. I asked them to express their views frankly and to suggest ways and means to see that there is expeditious disposal of Government business. We had a very general discussion. We have formed a small committee consisting of some of the Board Members, some of the Secretaries and they are considering the whole thing. I hope to get a report from them.

*Seepage (Mettur)*

* 468 *Q.*—SRI P. G. MANICKAM :<br>SRI K. R. NALLASIVAM : } கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மேட்டூர் வாய்க்கால் வலதுகரை பாசன பிரதேசத்தில் கோயமுத்தூர் ஜில்லா, பவானி தாலுகாவிலுள்ள, நீர் கசிவினாலே பாதிக்கப்பட்ட சேரிகளின் ஜாபிதா ஒன்று ஸ்தல எம்.எல்.ஏ-க்கள் மூலமாக ரெவின்யூ டிபார்ட்மெண்டுக்கு அனுப்பப்பட்டதா ?

(ஆ) அப்படியானால் அதன்மீது எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகளின் விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) Yes, Sir.

(ஆ) The lists were forwarded to the Collector of Coimbatore with instructions to expedite the rehabilitation proposals and to settle all such cases after obtaining reports promptly from the subordinates. The Collector has also been asked to submit progress reports to Government every month in this regard.

SRI P. G. MANICKAM : சட்டசபை மெம்பர்களாகிய நாங்களும் இங்கே வந்த பிறகு கடந்த நான்கு வருஷங்களாக இதுபற்றி ஏராளமான விண்ணப்பங்களும் அனுப்பியிருந்தும் இதுவரைக்கும் ஐந்து சேரிகளுக்குத்தான் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது இன்னும் இருபது, இருபத்தைந்து சேரிகளுக்கு நில ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. ஸ்பெஷல் தாசில்தாரின் ஆறு மாத கெடுகாலம் கூட முடியப்போகிறது. ஆகவே இந்தத் திட்டம் வெகுசீக்கிரம் முடிவு அடைவதற்கு தனித்திட்டமாவது வகுப்பதுபற்றி யோசனை செய்யுமா ?

**THE HON. SRI M. A. MANICKAVELU :** இதிலே குறிப்பிடப்பட்ட கிராமங்கள் 21. இந்த கிராமங்கள் ஒவ்வொன்றிலும் ஏதாவது ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த தகவல் என்னிடம் இருக்கிறது. ஏதாவது ஒரு கட்டத்தில் அங்கே நடவடிக்கை எடுக்கப்பட்டுத்தான் வருகிறது.

**SRI K. R. NALLASIVAM :** மேட்டூர் கால்வாய், கீழ் பவானி கால்வாய் ஆகிய இரண்டு பகுதியிலுமாக உள்ள சேரிகளில் நீர்க் கசிவு காரணமாக ஏற்படுகிற இன்னல்களைப்போக்க ஐந்தாறு ஆண்டுகளாகத் திட்டமிடப்பட்டு வந்தும் கூட வருஷத்துக்கு நான்கைந்து சேரிகளுக்குத்தான் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. துரிதமாக இதை நிறைவேற்ற விசேஷ நிதி, திட்டம் ஏதாவது வகுப்பதற்கு யோசனை செய்ய முடியுமா ?

**THE HON. SRI M. A. MANICKAVELU :** ஏதாவது ஒரு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஓரிடத்தில் நோட்டிபிகேஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஓர் இடத்தில் நிலம் ஆர்ஜிதம் செய்ய நோட்டிபை பண்ணப்பட்டிருக்கிறது. இப்படி ஏதாவது ஒரு நடவடிக்கை எல்லா இடங்களிலும் எடுத்துக்கொள்ளப் பட்டுத்தான் வருகிறது.

**SRI G. G. GURUMURTHI :** ஹரிஜன சேரிகள் மட்டும் அல்லாமல், மிகவும் பின் தங்கிய கிராமங்களில் உள்ளவர்களுக்கும் பரிகாரம் காண அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

**THE HON. SRI M. A. MANICKAVELU :** எந்த எந்தப் பகுதியிலே நீர் கசிவு எற்படுகிறதோ அங்கெல்லாம் நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

### *Pumpsets*

*** 469 *Q.*—SRI K. R. NALLASIVAM :** கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை ஜில்லா ஈரோடு தாலூகாவிலுள்ள காலிங்கராயன் வாய்க்கால் வலதுபக்கப் பாசனப் பகுதியில் இறவைப் பாசனத்திற்கு அனுமதி பெற்றுள்ள நிலங்களில் பம்ப் செட் வைத்துத் தண்ணீர் இறைத்துக் கொள்வது பற்றி, சம்பந்தப்பட்ட விவசாயிகள் முறையீடுகள் ஏதேனும் செய்து கொண்டார்களா ?

(ஆ) அதன் மீது சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

**THE HON. SRI P. KAKKAN :** (*a*) Yes, Sir.

(*b*) The matter is under the consideration of the Government.



**SRI K. R. NALLASIVAM :** அதாவது காலிங்கராயன் வாய்க்காலைப் பொறுத்த வரையில் கீழ் பவானியின் பின்னால் நீர்க்கசிவு ஏற்பட்டு வருகிறது. முன்பு அது சரியில்லாத காரணத்தினால் பம்பு செட்டுகள் வைப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. இப்போது தண்ணீரும் தொடர்ந்து வந்துகொண்டிருப்பதனால் பம்பு செட்டுகள் வைப்பதற்கு அனுமதி கொடுப்பது பற்றி சர்க்கார் முடிவு செய்வார்களா என்று கேட்கவிரும்புகிறேன்.

**THE HON. SRI P. KAKKAN :** கனம் அங்கத்தினர் நான் சொன்ன பதிலை கவனிக்கவேண்டும். அரசாங்கத்தின் கவனத்தில் இதுபற்றி யோசனை இருந்து வருகிறது என்று சொன்னேன்.

*** 470 *Q.*—SRI K. R. NALLASIVAM :** கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் கீழ்பவானிப் பாசனப் பகுதியில் மின்சார உபயோகத்துக்குத் தடை நீக்கப்பட்ட பின், தாலூக்கா வாரியாக, மின்சார பம்ப்செட்டுகளுக்கு அனுமதி கோரி விவசாயிகளிடமிருந்து சர்க்காருக்கு எத்தனை விண்ணப்பங்கள் வந்தன ?

(ஆ) எத்தனை பம்ப் செட்டுகளுக்கு மின்சார இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது தாலூக்காவாரியாக ?

(இ) இப் பகுதியில் மின்சார இணைப்பை துரிதப்படுத்த விசேட நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

**THE HON. SRI P. KAKKAN :** (*a*) Gobi—444.

Bhavani—108.

Erode—492.

Dharapuram—309.

Karur—79.

(*b*)—

Gobi—47.

Bhavani—1.

Dharapuram—4.

(*c*) Every effort is being taken to extend supply to the wells in the Lower Bhavani Project area according to priority of applications and readiness of parties to avail themselves of supply.

**SRI V. S. MANIKKASUNDARAM :** இந்த ஜனங்களின் விண்ணப்பத்தை அனுசரித்து சர்க்கார் 1—9—1956-ல் ஜீ.ஓ. 9797 பி.டப்ளியூ. என்ற உத்தரவை பிறப்பித்தார்களா ? அந்த உத்தரவை அனுசரித்து அங்கு கொடுக்கப்படும் மின்சார பம்ப் செட்ஸ், ஆயில் என்ஜின் பம்ப்செட்ஸ் இவைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறதா ? அளிக்கப்பட்டிருந்தால் எத்தனை

பம்ப்செட்டுகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது? அனுமதி இல்லாமல் பம்ப்செட்டுகள் வைத்ததற்கு கிரிமினல் கோர்ட்டில் ப்ராஸிக்யூஷன் எடுக்கப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI P. KAKKAN: அங்கத்தினர் அவர்கள் பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள ஆவலாயிருக்கிறார்கள். கேஸ் சம்பந்தப்பட்ட பட்டியல் என்னிடம் தகவல் இல்லை. தனி கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன். கிணறுகளுக்கு உத்தரவு கொடுக்கப் பட்டிருக்கிறது. ஜீ. ஓ. எம். எஸ். 486 பி.டப்ள்யூ.டி. 11—2—1955-ன் படி 200 கிணறுகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. 18—2—1956 ஜீ.ஓ.எம்.எஸ். 668 பி.டப்ள்யூ.டி. படி 100 கிணறுகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. 1—6—1957-ல் ஜீ.ஓ. 2137 படி 63 கிணறுகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜீ.ஓ.எம்.எஸ் 3048 படி 300 கிணறுகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆக, பரிசீலனை செய்து எவை எவைகளுக்கு கொடுக்கலாமோ அவைகளுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது.

SRI G. G. GURUMURTHI: லோயர் பவானியில் உள்ள தடையை எடுத்ததற்குப் பிற்பாடு மற்றபடியுள்ள, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை போன்ற இடங்களில் தடையே கிடையாது. அப்படியிருந்தும், அந்த பிராந்தியங்களிலும் லோயர் பவானி ஏரியாவில் உள்ளதைப் போன்று பம்ப் செட்ஸ் வைக்க சர்டிபிகேட்ஸ் வாங்க வேண்டுமென்று அதிகாரிகள் வற்புறுத்துகிறார்கள். அதனால் பல திட்டங்கள் திருப்பி அனுப்பப்படுகிறது. பி.டப்ள்யூ.டி. எலெக்ட்ரிஸிடி டிபார்ட்மென்ட், இரிகேஷன் டிபார்ட்மென்ட் போன்ற இடங்களில் தடை ஏற்படுகிறது. ஆகவே, இந்த ஜீ.ஓ. இல்லாத இடங்களில் கூட அதிகாரிகளால் நிர்ப்பந்தம் செய்யப் படுவதால் பல திட்டங்கள் தடைபடுகிறது என்று அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதை நிவர்த்திக்க அந்த அந்த அதிகாரிகளுக்கு தகுந்த உத்தரவு அனுப்புவார்களா?

THE HON. SRI P. KAKKAN: பவானி வாய்க்கால் பிரதேசம் சம்பந்தப்பட்டதில், அரசாங்கம் நன்கு பரிசீலனை செய்து அந்தந்த வட்டார மக்களுக்கு மின்சார வசதி அளித்து வருகிறது. ஒரே இடத்தில் பம்ப் செட்ஸ் வைத்தால் கீழ் ஆயக்கட்டுதாரர்களுக்கு தண்ணீர் போகாது. ஒரு பர்லாங்குக்கு அப்புறம் கொடுக்க உத்தரவு போடலாமா என்று பார்க்கலாம்.

SRI K. R. NALLASIVAM: நான் கேட்பது, ஒன்று அல்லது இரண்டு பர்லாங் அடுத்தாற்போல் உள்ள கிணறுகள் பற்றி. அருகிலுள்ள அல்லது கடைக்கோடியில் உள்ளவைகளுக்கு சீக்கிரம் மின்சாரம் கொடுக்கவேண்டுமென விண்ணப்பம் போட்டால் காலதாமதமாகிறது. அதையாவது சீக்கிரம் கொடுக்க உத்தரவு போடப்படுமா?

THE HON. SRI P. KAKKAN: உத்தரவு கொடுக்கும்போது, எக்ஸிக்யூட்டிவ் என்ஜினியரைப் பார்த்து ஆட்சேபணையில்லா சர்டிபிக்கேட் கொடுத்த பிற்பாடு பம்ப் செட்ஸ்க்கு மின்சாரம் கொடுக்கப்படுகிறது.





SRI K. G. PALANISWAMY GOUNDER: லோயர் பவானியில் தாராபுரம் டெயில் எண்டாக இருப்பதால் மெயில் கனால் 2 பர்லாங் என்றும், ப்ராஞ்ச் கனால் 1 பர்லாங் என்றும் இருக்கிற கட்டுப்பாட்டை நீக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

THE HON. SRI P. KAKKAN: தனிக் கேள்வி வேண்டும்.

### *Beedi*

* 471 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state the number of beedi factory employers who have taken out beedi factory licences after the settlement arrived at between beedi employers and the employees during July 1960?

THE HON. SRI R. VENKATARAMAN: The settlement was arrived at only on 11th July 1960 and it is too early to collect the information required, if it is to be of any value.

SRI N. K. PALANISAMI: எல்லா பீடி முதலாளிகளும் லைசென்ஸ் எடுத்துக் கொள்வதற்கு காலவரையறையை நிர்ப்பதற்கு சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN: எல்லா பீடி முதலாளிகளும் லைசென்ஸ் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற விதியை போட்டிருக்கிறோம். இப்பொழுது அவர்கள் ஆங்காங்கு எடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

### *Shikar (Foreign tourists)*

* 472 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to allow foreign tourists to go for shikar in the State forests; and

(*b*) if so, where?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) No Sir. The existing game rules permit any foreign tourist to go for shikar and enjoy the same facilities as are extended to any Indian shikari provided he complies with the requirements of all the relevant rules and regulations.

SRI A. A. RASHEED: Is the Hon. Minister aware of the fact that foreign tourists are attracted to our neighbouring States because of the greater facilities for Shikar available in those States? If so, may I know whether the Government will consider the question of affording the same facilities to the foreign tourists so that they could be attracted to our State also?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I do not have information as to the exact facilities that are provided in the other States to the foreign tourists. But, I may tell the hon. Member that so far as this State is concerned, consistent with the need to preserve forests, and game sanctuaries, all necessary facilities are provided, whether they are foreign tourists or local tourists.

*Baby food*

* 473 *Q.*—SRI A. VEDARATHNAM :
SRI V. K. KOTHANDARAMAN :
SRI P. G. MANICKAM :
} கனம் கைத் தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குழந்தைகள் உணவு சம்பந்தமான தொழிற்சாலை, நீலகிரியில் ஏற்படுத்துவது இப்போது எந்நிலையில் இருக்கிறது?

(ஆ) இத்திட்டத்திற்காகும் மொத்த செலவு எவ்வளவு?

(இ) இதில் வெளி உதவி என்ன கிடைக்கிறது?

(ஈ) இத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் உணவு எத்தகையது?

(உ) ஆண்டுதோறும் உற்பத்தியின் அளவு எவ்வளவு?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) The proposals for establishment of a baby food factory in Ootacamund are only in the exploratory stage.

(ஆ) *to* (உ) It is too early to furnish these details.

SRI A. VEDARATHNAM : நம் மாநில அரசாங்கமே இந்தத் தொழிலை ஆரம்பிக்க இருக்கிறதா? அல்லது மத்திய அரசாங்க உதவியோ அல்லது வெளி நாட்டு உதவியோ இதற்கு ஏதேனும் உண்டா? அப்படியானால் தயவுசெய்து அதன் விவரங்களை அறிவிக்க முடியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : அதெல்லாம்தான் இப்பொழுது பரிசீலனையில் இருக்கின்றன.

SRI P. G. MANICKAM : குழந்தைகளுக்கான உணவு என்று இதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. குழந்தைகளுக்கான உணவு என்றால் எந்தெந்தவிதமான உணவுப் பொருள்கள் இந்த தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும்.

THE HON. SRI R. VENKATARAMAN : க்ளாக்ஸோ, டேமக்ஸ், ஆஸ்டர்மில்க் போன்றவைகள் குழந்தைகள் உணவு.

SRI J. MATHA GOWDER : குழந்தைகள் உணவு உற்பத்தி சாலைக்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 19 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாக காணப்படுகிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முதல் ஆண்டிலேயே அதைத் துரிதமாக ஏற்படுத்த சர்க்கார் பரிசீலனை செய்யுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : அதுதான் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன்.



*Agricultural labourers*

* 474 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கூலி வேலை செய்யும் விவசாயத் தொழிலாளர்களுக்கு இனாமாக வீட்டு மனைகள், வீடுகள் கட்டித்தரும் திட்டமுண்டா?

(ஆ) அப்படியானால், வடாற்காடு மாவட்டத்தில் 1959-60-ல் மிகவும் பின்னடைந்த வகுப்பைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு எத்தனை வீட்டு மனைகள், வீடுகள் கட்டித் தரப்பட்டன?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Among the landless agricultural labourers, only the Harijans and the Harijan converts who cannot afford to pay the cost of the house-sites in full are granted house-sites free of cost from the Harijan Welfare Funds. According to B.S.O. No. 21 all landless poor including agricultural labourers irrespective of their caste are eligible for the grant of house-sites free of cost from the Government lands available. There is however no scheme for construction of houses free of cost to any agricultural labourer.

(*b*) Does not arise.

SRI S. M. ANNAMALAI : கூலி வேலை செய்யும் விவசாயிகள் மிகவும் பின்தங்கிய வகுப்பினர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு இதுவரையிலும் எந்த இடத்திலும் வீட்டு மனைகள் வாங்கித் தந்ததாக இல்லை. ப்ளானிங் கமிஷன்கூட சிபார்சு செய்திருக்கிறது, அவர்களுக்கு வீட்டு மனைகள் இனாமாக தரவேண்டுமென்று. அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, சர்க்கார் நிலங்களில்தான் இனாமாக தரப்படுமென்று சொன்னார்கள். ஏன், ஹரிஜனங்களுக்கு தரப்படுவதைப்போல் இவர்களில் ஒரு சிலருக்காவது இனாமாக வீட்டு மனைகள் வழங்கக் கூடாது? இதுபற்றி திட்டக் கமிஷன் சிபார்சு செய்திருக்கிறதே? அதை ஏன் அமுல் நடத்தக்கூடாது?

THE HON. SRI P. KAKKAN : ஹரிஜனங்கள், ஆதிவாசி சகோதரர்கள். இவர்கள் ரொம்ப நாள் கஷ்டப்பட்டு பல துறைகளிலும் பின்தங்கியிருப்பதால் அவர்களுக்கு சர்க்கார் தனிச் சலுகை கொடுத்து மனைகட்டுகள் வாங்கிக் கொடுப்பது அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும் இவர்களுக்கு சர்க்கார் பூமியாக இருந்தால் கொடுக்கப்படுகிறது. அதோடு இவர்களுக்கு ஓரளவு ஒத்தாசை செய்ய சர்க்கார் திட்டமிட்டிருக்கிறார்கள். புஞ்சை நிலமாகயிருந்தால் 150 ரூபாய் பெறுமானமுள்ளதாகயிருந்தால் அதில் பாதியை பார்ட்டி கொடுக்க வேண்டும். அப்பொழுது அவர்களுக்கு அந்த நிலம் ஆர்ஜிதம் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நஞ்சை நிலமாகயிருந்தால் 300 ரூபாயில் பாதி அவர்கள் கொடுப்பார்

களானால் அதை அரசாங்கம் பரிசீலனை செய்யும். கார்டன் லாண்டாகயிருந்தால், 250 ரூபாயாகயிருந்தால் அதில் பாதி கொடுத்தால் அதையும் பரிசீலனை செய்ய திட்டமிருக்கிறது.

SRI S. M. ANNAMALAI : புஞ்சை நிலத்திற்கு 150 ரூபாயும் நஞ்சை நிலத்திற்கு 300 ரூபாயும் கொடுத்து வாங்கி வீட்டுமனைகள் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்படி எந்த இடத்தில் எப்போது கிடைத்திருக்கிறது, இவ்விதம் புஞ்சை நிலத்திற்கு 150 ரூபாயும் நஞ்சை நிலத்திற்கு 300 ரூபாயும் கொடுத்து சர்க்கார் வாங்கித்தர முடியுமா? எந்த இடத்தில் இவ்விதம் கிடைக்கிறது என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI P. KAKKAN : ஜாஸ்தியாக உணவு உற்பத்தி செய்கின்ற இடத்தில் இந்த விலைக்கு வாங்க முடியாது என்பது உண்மைதான். உணவு உற்பத்தி அதிகம் செய்ய முடியாத இடங்களாக இருந்தால், அவைகளைப் பார்த்து எங்கே "சீப்"பாக கிடைக்கும் என்பதைப் பார்த்து வாங்க சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறது.

SRI K. B. S. MANI : ஏழைகளுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் சர்க்காரில் இருந்தபோதிலும், இதனால் எல்லோரும் திருப்தி அடைவதாக தெரியவில்லை. ஆகவே ஏழைகள் எங்கெங்கு குடியிருக்கின்றார்களோ அந்தந்த இடங்களையே அவர்களுக்கு பட்டா செய்து கொடுப்பதற்கு, அதாவது நத்தம், சேரி, புறம் போக்கு போன்ற இடங்களில் இருந்தால் அவைகளை பட்டா செய்து கொடுப்பதற்குச் சர்க்காருக்கு என்ன கஷ்டம் இருக்கிறது? அவ்விதம் ஏதாவது கஷ்டங்கள் இருந்தால் அதற்கு ஒரு ஸ்பெஷல் கமிட்டியை நியமித்தோ அல்லது வேறு வழியிலோ நிவர்த்தி செய்து பரம்பரையாக குடியிருக்கின்ற ஏழை மக்களுக்கு பட்டா செய்து கொடுப்பதற்கு சர்க்கார் முன் வருமா?

THE HON. SRI P. KAKKAN : விவசாயத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதைப்பற்றித்தான் இந்தக் கேள்வியில் இருக்கின்றன. கனம் அங்கத்தினர் இப்போது குறிப்பிடுவது ஹரிஜனங்களைப்பற்றியது. அதற்குத் தனியாக கேள்வி போட்டால் பதில் தெரிவிக்கலாம்.

*Amaravathi Puduvaikal*

* 475 *Q.*—SRI P. S. CHINNADURAI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தாராபுரம் தாலூகா அமராவதி புது வாய்க்காலில் 17, 18-ம் நெம்பர் மதகுகள் கட்டப்பட்டுத் திறக்கப்படாமலும், கிளை வாய்க்கால்கள் வெட்டப்படாமலும் இருப்பது பற்றிய மகஜர், சம்பந்தப்பட்ட பகுதியிலுள்ள விவசாயிகளிடமிருந்து அரசாங்கத்துக்கு வந்ததா?



(ஆ) அப்படியானால், அதன்மீது அரசாங்கம் இதுவரை எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI P. KAKKAN : (அ) Yes Sir.

(ஆ) On examination, it has been found that sluices Nos. 17 and 18 of the Amaravathi Main Canal were completed during the year 1958–59 and that water was being let in through the branch channels from 1959.

*Prices*

* 476 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விலைவாசிகளை ஸ்திரப்படுத்துவது சம்பந்தமாக பொதுக் கொள்கையை உருவாக்கும் பொறுப்பை ராஜ்ஜிய முதன் மந்திரிகளிடம் விட்டுவிட 1960-ம் ஹு மார்ச் மீ 20-ம் தேதி டெல்லியில் நடைபெற்ற தேசீய அபிவிருத்திக் கவுன்ஸில் தீர்மானத்தின் பேரில் சென்னை சர்க்கார் திட்டக் கமிஷனுக்கு என்னென்ன கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்?

THE HON. SRI C. SUBRAMANIAM : The National Development Council at its meeting held on the 19th and 20th March requested the Chief Ministers of States to forward their suggestions relating to price policy for the Third Plan for consideration at the meeting of the National Development Council to be held on 17th April. The suggestions of the State Governments are now under consideration of a High Level Committee set up by the National Development Council. It is not in the public interest to divulge the nature of the suggestions made by the Government.

SRI P. G. MANICKAM : ஸார், கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தபடி அந்த ஹை லெவல் கமிட்டியில் யார் யார் அங்கத்தினர்களாய் இருக்கிறார்கள்?

THE HON. SRI C. SUBRAMANIAM : Some of the members of the Planning Commission, some of the Chief Ministers of States and some of the Finance Ministers of States.

SRI N. R. THIAGARAJAN : ஸார், இந்த விலைவாசிகளை சீர் படுத்தும்பொழுது, கிராமங்களிலுள்ள விவசாயிகள், தங்களுக்கு அரிசியினுடைய விலை, பருப்பினுடைய விலை, புளியினுடைய விலை மிளகாயினுடைய விலை இவைகள் எல்லாம் குறைந்து விட்டன என்று குறை கூறிக்கொண்டேயிருக்கிறார்கள். ஆகவே, அரிசியின் விலை, பருப்பின் விலை, புளியின் விலை, மிளகாய் விலை இவைகளை எல்லாம் உயர்த்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா? அல்லது விலை குறைவை ஈடு செய்வதற்கு சர்க்காரிலிருந்து ஏதாவது சப்ஸிடி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : கண்ட்ரோல் என்று சொல்லும்போது விலை மேலே உயர்ந்து போகாமல் பார்த்துக் கொள்வதுபோல், விலை கீழே போய்விடாமலும் பார்த்துக்கொள்ள

வேண்டும். நியாயமான விலையில், விவசாயிகளுக்கும் உற்சாகம் குறைந்து விடாமல் இருக்கும்படியான stabilisation of prices) நிலையில் விலைகளை நிர்ணயிக்கவேண்டும் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். அந்த அடிப்படையில்தான் பிரைஸ் பாலிஸி நிர்ணயிக்கப்படுகிறது.

*Kalingarayan channel*

* 477 Q.—SRI K. R. NALLASIVAM: } SRI N. K. PALANISAMI: } கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) கோவை ஜில்லா ஈரோடு தாலுகாவில் மேல் காலிங்கராயன் வாய்க்கால் வெட்டுவது எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

(ஆ) இதன் மூலம் பயன் பெறக்கூடிய விஸ்தீரணம் எத்தனை ஏக்கர்?

(இ) இதில் முன்பே கீழ்பவானித் திட்டப் பகுதியில் சேர்ந்துள்ள நிலத்தின் விஸ்தீரணம் எவ்வளவு?

(ஈ) இதற்காகும் உத்தேச செலவு எவ்வளவு?

(உ) இவ்வாய்க்காலில் எத்தனை மாதங்கள் தண்ணீர் விடப்படும்?

THE HON. SRI P. KAKKAN: (a) The excavation of the Upper Kalingarayan Channel will be taken up after the scheme is sanctioned by Government. Plans and estimates for the scheme have been received by Government from the Chief Engineer (Irrigation) and the report of the Board of Revenue on the scheme is awaited.

(b) 16,000 acres of new area and 12,500 acres of existing ayacut under the Lower Bhavani Project.

(c) 12,500 acres.

(d) Rs. 262·00 lakhs.

(e) For 5½ months in a year, i.e., from the 15th August to the end of January.

SRI K. R. NALLASIVAM: இந்த மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திற்காக கொடுக்கப்பட்டிருக்கும் புத்தகத்தில் இது பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது . . . .

'Drainage and seepage water entering the Bhavani river . . . என்று சொல்லப்பட்டிருக்கிறது . . .

MR. SPEAKER: கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுவது ஒன்றும் இங்கு கேட்கவில்லை.

SRI K. R. NALLASIVAM: அதாவது இந்த வாய்க்காலுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஆதாரமானது கீழ் பவானியிலிருந்து ஏற்படும் நீர் கசிவுத் தண்ணீர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நீர் கசிவு நிரந்தரமாக இருக்கும் என்று சர்க்கார் கருதுகிறதா?



THE HON. SRI P. KAKKAN: லோயர் பவானி அணை கட்டிய பிறகு அந்த வட்டாரத்தில் தண்ணீர் கசிவு ஏற்பட்டு தண்ணீர் வீணாக போகிறது, அதிலும் குறிப்பாக கடைசியில் இருக்கும் விவசாயிகளுக்கு தண்ணீர் சரியாகப் போய் சேருவதில்லை என்று அரசாங்கத்தினிடம் முறையிட்டிருக்கிறார்கள். நாங்களும் வரி கொடுக்கிறோம், ஆனால் எங்களுக்கு மட்டும் ஒழுங்காக தண்ணீர் கிடைப்பதில்லை என்று அங்குள்ள மக்கள் என்னிடம் கனம் நிதி அமைச்சர் அவர்களிடமும் பல தடவை கூறியிருக்கிறார்கள். இதைப் பற்றி அதிகாரிகளிடம் பரிசீலனை செய்யச் சொன்னோம். அதன் பின்னால் தான் "அப்பர் காளிங்கராயன் வாய்க்கால்" என்ற ஒரு திட்டத்தை கொண்டு வந்திருக்கிறோம். இதன் மூலம் இப்போது இருந்து வரக்கூடிய தண்ணீர் கஷ்டம் ஓரளவு தீரும் என்று நினைக்கிறேன்.

SRI N. K. PALANISAMI: இந்தத் திட்டத்திற்காக 2 கோடி 62 லட்சம் ரூபாய் செலவு செய்யப்படும் என்றும், அதன்படி சுமார் 12 ஆயிரம் ஏக்கர்கள் பாசன வசதி பெறும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதன்படி பார்த்தால் ஏக்கர் ஒன்றுக்கு சுமார் 2,000 ரூபாய் செலவு செய்யப்படும் என்று தெரிகிறது. இதைவிட குறைந்த செலவில் ஏற்கனவே பல திட்டங்களை அவனாசி தாலுகா, கோயம்புத்தூர், ஈரோடு போன்ற இடங்களில் உள்ள மக்கள் கேட்டிருக்கிறார்களே, அவைகளுக்கு எல்லாம் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

THE HON. SRI P. KAKKAN: அரசாங்கம் ஒரு திட்டத்தை கொண்டு வரும்போது அந்தந்த இடங்களிலுள்ள தேவைகளைப் பார்த்து, அங்குள்ள மக்களின் கஷ்டங்களை எல்லாம் அறிந்து தான் முடிவு செய்கிறது. ரூபாய் அதிகமாக செலவாகும் என்பதைப்பற்றி கவலை படப்போவதில்லை. மக்களுடைய கஷ்டங்கள் நீங்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். அந்த முறையில் தான் இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

SRI K. R. NALLASIVAM: இவ்வருடம் கீழ் பவானியில் நீர் கசிவு நின்று விட்டது என்பது சர்க்காருக்குத் தெரியுமா? இல்லையென்றால் அதைப்பற்றி பரிசீலனை செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI P. KAKKAN: சமீபத்தில் நான் அந்தப்பக்கம் சுற்றுப்பிரயாணம் செய்யவில்லை. ஆகவே இந்த விவரங்கள் எனக்கு தெரியாது.

SRI G. G. GURUMURTHI: இந்த மேல் காளிங்கராயன் வாய்க்கால் திட்டம் கொண்டு வருவதற்கு முன்பாகவே, இந்த நீர் கசிவை உபயோகித்துக்கொள்ள பல சிறு திட்டங்கள் சீப் என்சினியரிடத்தில் இருந்ததே அவைகள் எல்லாம் என்னவாயிற்று? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

THE HON. SRI P. KAKKAN: தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படும் இடங்களுக்கு ஒத்தாசை செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன்தான் இந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டிருக்கிறோம். கனம் அங்கத்தினர்கள் குறிப்பிடுகிற திட்டங்களைப் பற்றியுள்ள விவரங்களை கொடுப்பதற்கு தனிக்கேள்வி வேண்டும்.

(ஸ்ரீ ஜி. ஜி. குருமூர்த்தி எழுந்தார்.)

MR. SPEAKER: மூலக் கேள்வி கேட்டிருப்பவருக்குத்தான் ஒன்றுக்குமேல் உபகேள்வி கேட்க சந்தர்ப்பம் கொடுக்கமுடியும். தங்களை எப்படி அடிக்கடி உபகேள்வி கேட்க அனுமதிக்க முடியும்? வேண்டுமென்றால் நீங்களும் அதைப்பற்றி ஒரு கேள்வி அனுப்புங்கள்.

SRI P. G. MANICKAM: முன்னால் சொன்ன நீர் க்ஸிவை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் இதற்காக நான்கு திட்டங்கள் 1960-ல் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது என்றும் முன்னால் தெரிவிக்கப்பட்டது, இப்போது கொண்டுவரப்பட்டிருக்கும் காளிங்கராயன் வாய்க்கால் திட்டம் இதற்கு தடையாய் இருப்பதாக தெரிகிறது, ஆகவே இதை இன்னும் பரிசீலனை செய்து பார்த்து முன்னால் போட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்கு சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI P. KAKKAN: கனம் அங்கத்தினர் அவர்கள் இதற்கு தனியாக கேள்வி போடலாம்.

*Lift Irrigation*

* 478 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal to increase the number of Lift Irrigation Schemes; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) Yes, Sir. A statement [a] showing the new scheme proposed, is placed on the table of the House.

SRI N. K. PALANISAMI: கன்யாகுமரி ஜில்லாவில் ஒரே ஒரு இடத்தில்தான் 'லிப்ட் இர்ரிகேஷன்' இருக்கிறது. தாழ்வான இடத்திலிருந்து தண்ணீரை உயர்வான இடத்திற்கு கொண்டு போகும் திட்டம் ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. நூற்றுக் கணக்கான ஏக்கருக்குப் பாயக்கூடிய திட்டம் அது. நம் மாகாணத்தில் அம்மாதிரி பல இடங்களில் திட்டம் கொண்டுவர முடியும். அம்மாதிரி திட்டங்களை எந்த எந்த இடத்தில் வைக்க முடியும் என்று பரிசீலனை சர்க்கார் முயற்சிக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: முதலில் கேட்ட கேள்விக்கு விடை அளித்திருக்கிறேன். அதற்குமேல் விவரங்கள் என்னிடம் ஒன்றும் இல்லை.

[a] Printed as Appendix II on page 220 infra.



SRI A. VEDARATHNAM: மேஜைமீது வைக்கப்பட்டிருக்கும் அறிக்கையில் ஐந்தாவது ஐட்டத்தில் உள்ள மானங்கொண்டான் பம்பிங் ஸ்கீம், தென்னடியார் பம்பிங் ஸ்கீமுக்கு முந்தி ஆரம்பிக்கப்பட்டது. அதற்காக லட்ச ரூபாய் அரசாங்கம் செலவு செய்திருக்கிறது. ஐந்து இடத்தில் ஐந்து பம்பிங் ஸ்கீம் ஏற்படுத்தி, ஒவ்வொரு இடத்திலும் 100 ஏக்கருக்கு அதிகமாகப் பாசனத்திற்குத் திட்டமிட்டிருந்துங்கூட காத்திருக்கவேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? நூறு, இருநூறு ஏக்கருக்காவது பாசனம் கொடுக்க முன்வரக்கூடாதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இரண்டு, மூன்று திட்டங்களை நிறைவேற்றும்போது தண்ணீர் போதிய அளவு கிடைக்குமா என்பதுதான் முக்கியமாகப் பரிசீலிக்கவேண்டிய விஷயம். அதைப் பரிசிலனை செய்வதிலேதான் கொஞ்சம் தாமதம் ஏற்படுகிறது.

*Air-port (Vellore)*

* 479 Q.—SRI A. A. RASHEED:<br>SRI P. SARATHI: } Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether the Government have recommended to the Union Government for converting the landing ground at Vellore into a regular air-port; and

(b) if so, the reply received from them?

THE HON. SRI P. KAKKAN: (a) & (b) No Sir. But our information is that regrading and levelling of the strip is in progress and that further improvements to the strip and a small terminal building are provided for in the Third Plan.

SRI A. A. RASHEED: May I know whether Government have received mahajars from public of Vellore for converting the landing ground into an Air Port? If so what is the action taken by Government? Is the Hon. Minister aware of the fact that the present landing ground remains unused for a long number of years?

THE HON. SRI P. KAKKAN: I have no facts with me now whether we have received any petition or not. The Indian Airlines Corporation have not shown any interest for an aerodome for Vellore. The Director-General has added that if at any time the Indian Airlines Corporation decides to operate air service at Vellore, the necessary facilities will be provided by that department.

SRI A. GOVINDASAMY: நெய்வேலி நிலக்கரி திட்டத்தை உத்தேசித்து அதன் அருகே ஏற்கனவே இருந்த உளுந்தூர் பேட்டை விமான நிலயத்தை மீண்டும் கொண்டுவர அரசாங்கம் ஆலோசிக்குமா?

MR. SPEAKER: மூலக் கேள்வி வேலூரில் விமான நிலையம் ஏற்படுத்துவதைப் பற்றியது. கனம் அங்கத்தினர் ஸ்ரீ கோவிந்தசாமி அவர்கள் நெய்வேலிக்கு அருகில் விமான நிலையம் ஒன்று

ஏற்படுத்துவதைப்பற்றிக் கேட்கிறார். அந்தக் கேள்வி 'ஔட் ஆப் ஆர்டர்' ஆகும். ஏனென்றால், உபகேள்வி மூலக் கேள்விக்குச் சம்பந்தம் உடையதாக இருக்கவேண்டும்.

### *Polytechnics*

* 480 *Q.*—Sri A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் தனியார் துறையில் ஆரம்பிக்க இருக்கும் பாலிடெக்னிக்குகள் எத்தனை? எங்கெங்கே?

(ஆ) அவற்றில் போதிக்கப்போகும் தொழில்கள் என்னென்ன?

(இ) இவற்றிற்கு அரசாங்கம் அளிக்கும் உதவி என்ன?

(ஈ) அவைகள் எப்போது துவங்கும்?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) It is proposed to establish 10 more polytechnics in the Third Plan period, i.e., during 1961—65. The distribution of these between the public and the private sector and their location have not yet been settled. Tentatively, it is proposed that 8 of the 10 polytechnics should be non-Government Institutions.

(*b*) Usually instruction is imparted, to start with, in the three basic courses, viz., Civil, Mechanical and Electrical Engineering.

(*c*) The State Government give 25 per cent of the total non-recurring cost and 50 per cent of the recurring cost arrived at after deducting the tuition fees, any other net income derived in working the institution and the grant given by the Government of India.

(*d*) It has been tentatively planned to start 3, 3, 2 and 2 polytechnics in the first four years of the Third Plan period respectively.

Sri A. VEDARATHNAM : அரசாங்கம் கொடுக்கும் உதவி அல்லாமல் தனியார் இந்தப் பாலிடெக்னிக்கை ஆரம்பிக்கவேண்டுமானால், அவர்கள் இதற்காக வைக்கவேண்டிய மூலதனம் எவ்வளவு என்பதைத் தயவுசெய்து அறிவிக்கமுடியுமா?

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்பொழுது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இதை மாற்றியமைக்கவேண்டுமென்று பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகையால், மத்திய சர்க்காரிடத்திலிருந்து அதுபற்றி முடிவான தகவல் இன்னும் வரவில்லை. தகவல் வந்தால்தான் சொல்லமுடியும்.

Sri A. GOVINDASAMY : நெய்வேலிப் பகுதியில் அரசாங்கத் துறையில் ஒரு பாலிடெக்னிக் திறக்க அரசாங்கம் முயற்சிக்குமா?





The Hon. Sri C. SUBRAMANIAM : எந்த எந்த இடத்தில் வைப்பது என்று இப்பொழுது குறிப்பாகச் சொல்ல முடியாது. ஆனால், கனம் அங்கத்தினர் சொன்னதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளப்படும்.

Sri J. MATHA GOWDER : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆரம்பிக்கப்படும் பத்து பாலிடெக்னிக்குகளில் ஒன்றை பாலிடெக்னிக்கே இல்லாத நீலகிரி ஜில்லாவில் ஆரம்பிக்க சர்க்கார் முன்வருமா? அப்படியில்லையென்றால், தனியார் யாராவது ஆரம்பிக்க முன்வந்தால் அவர்களுக்கு உதவி செய்ய சர்க்கார் தயாராக இருப்பார்களா?

The Hon. Sri C. SUBRAMANIAM : எந்த எந்த இடத்தில் வைப்பது என்று இன்னும் முடிவாகவில்லை. நீலகிரியைப்பற்றி அவர்கள் சொன்ன காரணத்தால், அதுவும் கவனிக்கவேண்டிய விஷயம் என்று தெரியவருகிறது.

### *Express way*

* 481 *Q.*—Sri S. M. ANNAMALAI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் துரிதப்பாதைகள் (Express ways) அமைப்பதைக் குறித்து மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்குத் திட்டங்கள் அனுப்பியுள்ளார்களா?

(ஆ) அப்படியாயின் அவைகளின் விவரங்களென்ன?

The Hon. Sri P. KAKKAN : (*a*) & (*b*) The proposal for the conversion of Madras-Bangalore Road as an expressway has been included in the Third Five-Year Plan for National Highways which will be forwarded to the Government of India shortly. There is also another proposal for the improvement of the road from Neyveli to Madras via Vikravandy to Express Highway Standards, regarding which the Government of India have been consulted on the scope of their financial assistance.

Sri S. M. ANNAMALAI : இந்தப் பாதைகளுக்குச் செலவாகும் தொகை எவ்வளவு? அதற்கு மத்திய சர்க்கார் எவ்வளவு தருவார்கள் என்று சொல்லமுடியுமா? மற்ற மாநிலங்கள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே பல பாதைகளைப் போட்டிருக்கிறார்களே, ஏன் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் இன்னும் 'திட்டம் அனுப்பியிருக்கும் நிலையில்' இருக்கிறது?

The Hon. Sri P. KAKKAN : எவ்வளவு மத்திய சர்க்காரிடத்திலிருந்து கிடைக்கும் என்பது சம்பந்தமாக நாம் எழுதி தெரிந்து கொண்டுதான் பின்னால் முடிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

[6th September 1960

*Plantation labourers*

*482 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மலைத்தோட்டத் தொழிலாளர்களுக்கு போனஸ் தொகையை நிர்ணயிப்பது சம்பந்தமாக 1960-ம் வருஷம் ஜூலை மாதம் 9-ஆம் தேதியில் சென்னையில் தொழிற் கமிஷனர் காரியாலயத்திலே தோட்டச் சொந்தக்காரர்கள், தொழிலாளர் பிரதிநிதிகளடங்கிய கூட்டம் ஒன்று நடைபெற்றதா?

(ஆ) அப்படியானால், அக்கூட்டத்தில் கலந்தாலோசிக்கப் பட்ட விஷயங்கள் யாவை?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The question of evolving a formula for the payment of bonus for 1959 in the plantation industry was discussed and it was decided to set up a Committee to go into the question.

MR. SPEAKER : Sir, I may add that since the answer was framed a settlement was reached throughout the industry for payment of bonus for the year 1958–59.

*Baby taxis*

* 483 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal to increase the seating capacity of the Baby taxis from three to four; and

(*b*) if so, when?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) Recently the Government examined such a proposal and issued orders that all contract carriages in the City of Madras and in the mufassal intended to carry three passengers, besides the driver, shall be permitted to carry four passengers besides the driver. However, these orders have not been implemented, pending disposal of a Writ Petition filed in the High Court, Madras, by a baby taxi owner in Madras City.

*Panchayat*

* 484 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சமீபத்தில் இம்மாநிலத்தில் நடந்த பஞ்சாயத்துத் தேர்தலில் எத்தனை பஞ்சாயத்துக்களில் பெண்களுக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை?

(ஆ) எத்தனை பஞ்சாயத்துக்களில் இன்னும் தேர்தல் நடக்கவில்லை?



6th September 1960]

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) The information is not readily available. Particulars have to be gathered after verifying the results of elections to over 9,000 Panchayats for which elections have been held from 1958 onwards. The particulars have been called for from the Inspector of Municipal Councils and Local Boards and are awaited.

***Political sufferers***

* 485 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்குக் கல்வி சம்பந்தமாக என்னென்ன விதமான உபகாரச் சம்பளம் வழங்கப் படுகின்றன?

(ஆ) 1960-61-ல் எத்தனை குழந்தைகளுக்கு உபகாரச் சம்பளம் வழங்கப்படும்?

(இ) இவர்களுள் எத்தனை பேர்களுக்கு (1) கல்வி, (2) தொழிற்கல்வி சம்பந்தப்பட்ட உபகாரச் சம்பளம் வழங்கப் பட்டன?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) Educational concessions by way of full remission of tuition fees in all educational institutions, including institutions for collegiate and technical education, are granted to the children of political sufferers, whose incomes are within certain specified limits. In addition to this, it has been decided to institute a scheme of scholarships limited in number, the value of which may generally cover special fees, hostel fees, cost of books, etc. The details of the scheme for the award of scholarships are being worked out.

(ஆ) & (இ) Particulars are not readily available.

SRI M. R. KANDASWAMI MUDALIAR : சமீபத்திலே மத்திய அரசாங்கத்திலிருந்து அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி, இலவசச் சாப்பாடு, இலவச இடம் முதலியவைகள் கொடுப்பதாக அறிக்கை வந்ததா? அது விஷயமாக நம்முடைய அரசாங்கத்திற்குத் தகவல் கிடைத்திருக்கிறதா? எந்தத் தேதியிலிருந்து அது அமுல் நடக்கும்? நம்முடைய ராஜ்யத்திற்கு மத்திய அரசாங்கம் எவ்வளவு கொடுக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைப்பற்றித்தான் இப்பொழுது சொன்னேன். இது இப்பொழுது சர்க்காருடைய பரிசீலனையில் இருந்து வருகிறது. முடிவானதற்குப் பிறகுதான் சொல்ல முடியும்.

[6th September 1960

SRI P. G. MANICKAM : தியாகிகளுக்கு மட்டுந்தானு இவ்வித சலுகை அளிக்கப்படும்? அவர்களுடைய உற்றர் உறவினருக்கும் அளிக்கப்படுமா? அவ்வாறு அளிக்கப்பட்டால், யார் யாருக்கு அளிக்கப்படும்?

THE HON. SRI C. SUBRAMANIAM : தியாகிகள் எல்லாம் பள்ளிக்கூடத்திற்கு வருகிற வயதினராக இருப்பார்களா என்று தெரியாது. தியாகிகளின் குழந்தைகள், பேரன்மார்களுக்குக் கொடுக்கவேண்டும் என்பதுதான் திட்டம்.

SRI P. S. CHINNADURAI : ராஜ்யத்திலேயுள்ள அரசியல் தியாகிகளின் ஜாப்தா ஒன்றை, மாவட்டவாரியாகத் தயாரித்து அங்கத்தினர்களுக்குக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது அதைப் பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை. பூரா ஜாப்தாவும் தயாரிக்கப் பட்டிருக்கிறதா இல்லையா என்பதைப்பற்றி தெரிந்துகொள்ள கனம் அங்கத்தினருக்கு அக்கறை இருக்குமானுல், வேறு கேள்வி போடலாம். அல்லது சர்க்காருக்கு எழுதலாம்.

MR. SPEAKER : இன்னும் ஐந்து கேள்விகள் இருக்கின்றன. தயவுசெய்து மேலும் ஐந்து நிமிஷங்கள் எடுத்துக்கொண்டு கேள்விகளை முடிக்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

*Ministers' tour*

* 485-A *Q.*—SRI P. S. CHINNADURAI : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) முதல் அமைச்சரும், தொழில் அமைச்சரும் 1960, மே மாதத்தில் தஞ்சை ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்து என்ன வேலை செய்தார்கள்?

(ஆ) அதன் விளைவாக சர்க்காருக்கும் மக்களுக்கும் ஏற்பட்ட பயன் என்ன?

(இ) இதனுல் ஏற்பட்ட பணச் செலவு எவ்வளவு?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The tour was undertaken by the Chief Minister and the Minister for Industries mainly to explain the provisions of the Land Ceiling Bill to the public. In addition, they inspected certain developmental works in the district and fulfilled certain public functions.

(*b*) Their tour was in the public interest.

(*c*) The expenditure incurred by the Government in regard to the tour was Rs. 400 only.



6th September 1960]

SRI P. S. CHINNADURAI : இந்த சுற்றுப் பிரயாணத்தின் போது பல கிராமங்களுக்கு விஜயம் செய்வதற்கான வாய்ப்பு முதல் அமைச்சர் அவர்களுக்கு ஏற்பட்டது. அதனுல் அநேகமாக நன்மையே ஏற்பட்டிருக்கும் என்று கருதுகிறேன். இதைப் போல கோவை ஜில்லாவில் பல்லடம் தாலுகா பகுதியிலே முதல் அமைச்சர் அவர்களும், விவசாயத் துறை அமைச்சர் அவர்களும் சுற்றுப்பிரயாணம் செய்ய முன்வருவார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்களே இதுமாதிரி மந்திரிகளை சுற்றுப்பிரயாணம் செய்ய வேண்டும் என்று அழைத்ததை நான் வரவேற்கிறேன். அவர்கள் அந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நான் நம்பு கிறேன்.

*Schools for the blind*

* 485-B *Q.*—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப் பாரா—

(அ) 1960-ல் சென்னை ராஜ்யத்தில் (1) அரசாங்கத்தாரால, (2) தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் குருடர்களுக்கான பள்ளிக்கூடங்கள் எத்தனை?

(ஆ) இப்பள்ளிக்கூடங்களிலே எத்தனை மாணவர்களும், மாணவிகளும் படிக்கிறுர்கள்?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Government Schools 2 and Private Schools 3.

(*b*) 314 boys and 157 girls as on 31st March 1959.

SRI P. G. MANICKAM : இவர்களுக்கு தொழில் பயிற்சிகூட அளிக்கப்படுகிறதா? அவ்வாறு தொழில் பயிற்சி அளிக்கப்பட்டால் எந்தவிதமான தொழில் பயிற்சி அளிக்கப்படுகிறது?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆம், இவர்களுக்கு தொழில் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. இதுமாதிரி கண் இல்லாதவர்கள் செய்யக்கூடிய பல தொழில்கள் இருக்கின்றன. 'டைப்ரைடிங், கார்பெண்டரி வொர்க், பாஸ்கெட் வீவிங்,' இது மாதிரி பல தொழில்கள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன.

*Pay Commission*

* 485-C *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to make the rules issued on the recommendations of the Pay Commission applicable to persons who have retired and have been re-employed and are actually on duty on the date of the issue of these rules?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI N. K. PALANISAMI : Sir, since the re-employed persons continue to do the same work, will the Government be pleased to make these rules applicable to them?

[6th September 1960

THE HON. SRI C. SUBRAMANIAM : 'ரி-எம்ப்ளாய்மெண்டு' செய்வதே அவர்களுக்கு சலுகை கொடுப்பதுமாதிரி ஆகும். அவர்கள் ஏற்கனவே வேலையிலிருந்து ரிடையர் ஆனவர்கள், அதற்குப் பிற்பாடு 'காண்டிராக்ட் பேஸிஸில்' 'ரி-எம்ப்ளாய்' செய்யப்பட்டிருக்கிறார்கள். 'ரி-எம்ப்ளாய்' செய்யப்பட்டவர்களுக்கு கொடுத்தால், அவர்களுக்கு மட்டும் கொடுத்து நிறுத்தி விட முடியாது, எல்லோருக்கும் கொடுத்தாகவேண்டி வரும்.

*Engineering Colleges (selection)*

* 485-D Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the number of applicants from each district to the Engineering Colleges in the State in 1960;

(b) the number selected in each district; and

(c) the basis adopted in the allocation of seats to each district?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a), (b) & (c) A statement* is placed on the table of the House.

SRI T. S. RAMASWAMI : May I know, Sir, why Madras City has been allotted additional seats from the point of view of the population ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது ஒவ்வொரு ஜில்லாவுக்கும் இவ்வளவு ஸ்தானங்கள் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஷெட்யூல்டு காஸ்டு, ஷெட்யூல்டு ட்ரைப்-ஐ பொறுத்தவரையில் பொதுவாக மாகாணம் முழுவதற்கும் ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. போதுமான அளவு அதற்கான மாணவர்கள் இல்லாமல் அதில் காலியாக இருக்கக் கூடிய ஸ்தானங்கள் பொதுவாக ஒதுக்கப்பட்டு, அதில் மூன்றில் ஒரு பங்கு மதராஸ் ஸிடிக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

SRI T. S. RAMASWAMI : மதராஸ் ஸிடியிலுள்ளவர்கள் பல ஜில்லாக்களிலிருந்து இங்கு வந்து குடியேறியவர்கள். ஆகவே, அவர்கள் அவர்களுடைய ஜில்லாவுக்குள்ள நேடிவிடி ஸர்டிபிகேட்டைக் கொடுத்து மனுச் செய்துகொள்ளுகிறார்கள். அவர்களுக்கு அந்த வாய்ப்பு இருக்கும்பொழுது, மூன்றில் ஒரு பங்கு ஸ்தானங்களை மதராஸ் ஸிடிக்குமட்டும் ஏன் ஒதுக்கவேண்டும். அதை எல்லா ஜில்லாக்களுக்கும் பகிர்ந்து கொடுக்கக்கூடாதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒரு இடத்திற்குத்தான் அவர்கள் நேடிவிடி ஸர்டிபிகேட் கொடுக்கமுடியும். ஒன்று மதராஸ் ஸிடிக்கு கொடுக்கமுடியும், அல்லது அவர்களுடைய ஜில்லாவுக்கு கொடுக்கமுடியும். இரண்டு இடங்களுக்கும் கொடுக்கமுடியாது. சென்னை நகரத்திற்கு போடவில்லையென்றால், இன்னொரு பக்கத்தில் ஒரு ஜில்லாவுக்கு போடலாம். அது அவர்கள் செய்ய வேண்டிய முடிவு. கனம் அங்கத்தினர் பார்ப்பார்களேயானால் கோவை ஜில்லாவில் 332 விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன.

* Printed as Appendix III on pages 220–222 infra.



6th September 1960]

அதற்கு அடுத்தபடியாக மதுரையில் 315 விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. அதனால்தான் சென்னை நகரத்திற்கு கொஞ்சம் அதிகமாக ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

*Pension Rules*

* 485-E Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) Whether the Government have received any resolution from the Madras High Court Advocates' Association protesting against the recent Government Order, amending the Pension Rules of Government servants; and

(b) the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes.

(b) The matter is under the consideration of Government.

SRI T. S. RAMASWAMI : May I know, Sir, whether this Government Order was passed at all amending the rules of pension and if so, the reasons for the same. May I also know the number of persons benefited?

THE HON. SRI C. SUBRAMANIAM : A statement is to be made on this subject very soon.

MR. SPEAKER : Questions are over.

*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—POINT OF ORDER REGARDING DEMONSTRATION WITH IN THE HOUSE.

9-30 a.m.

MR. SPEAKER : Hon Members are aware that on the 17th August 1960, hon. Member, Sri S. Lazar, drew my attention to the fact that certain Members were wearing some symbols to demonstrate outwardly their sympathy or mourning in regard to something which happened elsewhere.

I have not been able to find a precedent in the annals of the House of Commons which is on all fours with the point raised by hon Member, Sri S. Lazar. In the House of Commons Members are strictly forbidden to bring in weapons like a sword. Decorations like medals or badges have to be removed before entering the Chamber except by those who are required to be in court dress. Sticks and umbrellas are not allowed unless the hon. Member concerned has a disability which makes their use reasonable and proper. They are allowed to bring books or papers in the Chamber, which they may require to consult or to refer to in the course of the debate; but with the exception of Ministers, whose despatch cases and official wallets are under a special dispensation, despatch cases should not be brought in. Attache cases also should not be brought in. Ladies, however, are permitted to bring their handbags, as it would be unreasonable to prohibit them from carrying handbags in the House as the handbags fulfilled the office of pockets in male garments. All these restrictions have been laid down so that

nothing unbecoming may happen in the Assembly. History has shown that sometimes these things have been used for acts of violence by one side against another.

THE HON. SRI C. SUBRAMANIAM : Nothing happened in our Assembly.

MR. SPEAKER : Therefore I am going to say that we in this House need not be afraid of this matter because we are so friendly. Ours is the only Assembly that I have seen where the Government benches and the Opposition benches are so close, and frequently, consultations take place between one another. In all other assemblies considerable distance separates these benches.

Also things which are unbecoming are not allowed, such as smoking, eating chocolates and sweets, pealing and eating of oranges, etc. Things like eggs are also not permitted because at times these things are thrown at one another.

All these restrictions were imposed so that the dignity and decorum of the House are maintained. Nothing that would impair this dignity or which could cause injury to other Members is allowed.

I do not think that these little badges which hon. Members belonging to the Dravida Munnetra Kazhagam wore could be considered harmful or are equivalent to weapons.. In fact, they were so small that I myself did not observe them till the hon. Member brought it to my notice.

However, I feel that the Legislature of a State is the moulder of its laws and the guardian of its rights and liberties. As, in this Chamber matters are decided after discussion, hon. Members should try to convince the other side by arguments and not by displaying badges and by demonstrations.

I would like to conclude with an earnest entreaty to hon. Members not to resort to any demonstration whatever feelings may be which would incidentally lower the prestige of the House. In according respect to established parliamentary practice, a Member is according respect to himself. I do not say that the wearing of a small badge is a violation of any rule of this House or of any convention in any Parliament. However, I hope Members will do their best to contribute to the dignity of this House and its proceedings.

### III.—ANNOUNCEMENTS.

#### (1) BILLS PASSED BY THE COUNCIL.

MR. SPEAKER : I have to announce that the Legislative Council has passed the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1960 (L.A. Bill No. 23 of 1960) without any recommendation and that the following Bills also have been passed by the Legislative Council without any amendment.

(1) The Madras Preservation of Private Forests (Amendment) Bill, 1960 (L.A. Bill No. 27 of 1960).





(2) The Industrial Employment (Standing Orders) (Madras Amendment) Bill, 1960 (L.A. Bill No. 14 of 1960).

(3) The Madras Places of Public Resort (Amendment) Bill, 1960 (L.A. Bill No. 20 of 1960).

(4) The Madras Nurses and Midwives (Amendment) Bill, 1960 (L.A. Bill No. 22 of 1960).

### IV.—INFORMATION RE. SRI LAZAR'S PRIVILEGE MATTER.

SRI M. KALYANASUNDARAM : On a point of information, Sir, yesterday you were pleased to announce that the privilege matter given notice of by hon. Member Sri S. Lazar would be taken up tomorrow for ascertaining the opinion of the leaders of parties. It is an important issue. I want to consult proper authorities. So I request that some other day may be fixed for it instead of tomorrow. We have also to debate on the draft outline of the Third Five Year Plan to-day and tomorrow, and if the notice that I have given under Rule 41 of the Assembly Rules is also taken up tomorrow together with the privilege matter, the time allotted for the Third Plan debate would be curtailed. Therefore I submit that this can be postponed to some other day.

MR. SPEAKER : Will 9th be agreeable?

SRI M. KALYANASUNDARAM : Yes, Sir.

MR. SPEAKER : It will be taken up on the 9th.

### V.—GOVERNMENT BILLS.

#### (1) THE MADRAS CHIT FUNDS BILL, 1960 (L.A. BILL NO. 5 OF 1960).

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I beg to present the Report of the Joint Select Committee on the Madras Chit Funds Bill, 1960[a] (L.A. Bill No. 5 of 1960).

#### (2) THE MADRAS APPROPRIATION (NO. 3) BILL, 1960 (L.A. BILL NO. 33 OF 1960).

MR. SPEAKER : I understand that some hon. Members want to speak on this Bill. I would like to know how many hon. Members want to speak on this Bill and for how long.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : I want to speak on the Bill, Sir.

SRI M. KALYANASUNDARAM : I would also like to speak on the Bill, Sir.

MR. SPEAKER : The convention is—and there has been agreement also on this—that much time is not to be taken on the discussion of the Appropriation Bill, especially after the elaborate general discussion that had taken place. Anyway, I am not

[a] Printed as Appendix I on pages 222-236 infra.

[Mr. Speaker] [6th September 1960

against the Members talking on the Bill. I raised this question now only to ascertain from the hon. Members as to how much time they would require to speak on the Bill.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: I would not take much time Sir.

SRI M. KALYANASUNDARAM: I will also be very brief, Sir.

MR. SPEAKER: All right. Hon. Member Sri Ramaswamy Mudaliyar may now speak.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Mr. Speaker, so far as this Appropriation Bill is concerned, I do not want to say much. The only point that I wish to emphasis in this connection is that Dr. Gopal, who has been quoted by the Pay Commission, has been urging that the salaries should be fixed at some stage taking into consideration the cost of living index and the payment of dearness allowance should be resorted to only when the cost of living index rose beyond a particular number. This kind of merging the dearness allowance with pay is not at all desirable. Because, supposing at some stage the cost of living index goes down, it may not be possible for the Government to reduce the salary. This is all my submission, Sir.

SRI M. KALYANASUNDARAM: ஸார் எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டதானது இந்தப் பகுதியிலிருந்து அத்தகைய யோசனை வந்திருப்பது வருந்தத்தக்கது என்பது என் அபிப்பிராயம். எல்லா நிபுணர்களும் சொன்னதெல்லாம் பொய்த்த பிறகுதான், சம்பளக் கமிஷன்கள் கிராக்கிப்படி தனியாக இருக்க வேண்டியதில்லை, விலைவாசி இன்றைக்கு இருப்பதற்குக் கீழே குறையாது என்று பல நிபுணர்கள் கருத்தோடு செய்திருப்பது தவறு என்று கூறுவது சரியல்ல. இனியும் வாழ்க்கைத் தரம் உயரும் என்ற கருத்திலேயே, மத்திய சர்க்காரால் நிறுவப்பட்ட சம்பளக் கமிஷனும், ராஜ்ய சர்க்கார் சம்பளக் குழுவும், பெரிய நிபுணர்களைக் கலந்துகொண்டு, இதைவிட விலைவாசி குறையாது என்கிற கணிப்பின் மீது ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அது நியாயமான முடிவு. இதே சமயத்தில், கேள்வி நேரத்தில் கனம் தியாகராஜன் அவர்கள் ஒரு யோசனையைத் தெரிவித்தார்கள், விலைவாசி இறங்குவதானால், கிளர்ச்சி ஏற்படும் என்று. அப்படியிருக்கும் போது, இந்த சர்ச்சையில், இந்த நேரத்தில் அவர்கள் அப்படிச் சேர்த்தது தவறு என்று சொல்வதானது வருந்தத்தக்கது என்று தான் நினைக்கிறேன். இன்னும் விலைவாசி ஏறாமல் பார்க்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. விலைவாசி இறங்குவதானால், அது சுபிட்சத்தின் அறிகுறி. ஆகவே, விலைவாசி ஏறாமல் பார்த்துக் கொள்ள அதற்குத் தனியாக ஒரு விசாரணை நடத்த வேண்டும். அப்பொழுது தான் இன்னும் அதிருப்தி ஏற்படாமல் இருக்கும். இப்பொழுது இருக்கக்கூடிய பஞ்சப்படி,



6th September 1960] [Sri M. Kalyanasundaram]

150 ரூபாய்க்குக் கீழே ரூ. 10, அதற்கு மேலே ரூ. 20 என்பதை உயர்த்த முடியுமா என்பதிலும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

நாம் அதிகமாகச் செலவு செய்வதால், நிர்வாகத்தின் திறமை அதிகமாக ஏற்படவேண்டும். நிர்வாகத்தின் மூலம், ஜனங்களுக்கு செய்யப்படும் சேவையில் அபிவிருத்தி ஏற்படவேண்டும். அதற்குரிய முறையில், கடிதப் போகுவரத்துக்களில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்கும் முறையில், ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். கேள்வி நேரத்தில், ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும் சந்தர்ப்பத்தில், நிதியமைச்சரவர்கள் மான்யுவல்கள் சிறப்பாக இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். மான்யுவல்களைப் பற்றித் தெரிந்துக்கொள்ளக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிடையாது. என் அபிப்பிராயம் இப்பொழுது இருக்கும் நிர்வாக முறை சரியில்லை என்பது. எந்தெந்த அதிகாரிகளுக்கு எந்தெந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று பார்க்கப் போனால், பொறுப்புக்களைப் பகிர்ந்து கொடுக்கப்படவில்லையென்பதில் கவனம் செலுத்தியாக வேண்டும். பொது விவாதத்தின் போதும் சொன்னேன்—ஆர்கனைசேஷன் அண்டு மெதேட்—என்பது பற்றி. இதெல்லாம் எப்பொழுதும் நிரந்தரமாக இருக்கும் விஷயம் அல்ல. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அவசியத்திற்கு ஏற்றாற்போல், ஸ்தாபன அமைப்பில், முறைகளில் மாறுதல் வேண்டுமானால் அதைச் செய்தாக வேண்டும். ஆர்கனைசேஷன் அல்லது அமைப்பு, மெதேட் அல்லது வேலைமுறை, இந்த இரண்டிலும், பழைய காலத்து அமைப்பே சரி என்று இருக்கக் கூடாது. என்னென்ன மாறுதல்கள் வேண்டுமோ, திட்டங்களில் மாறுதல்கள், நோக்கங்களில் மாறுதல்கள், லட்சியங்களில் மாறுதல்கள், முறைகளில் மாறுதல்கள் ஏற்பட்டாக வேண்டும். ஆகவே, இந்த ஸ்தாபன, வேலைமுறைகளைப் பரிசீலிக்க, துரிதமாகக் கடிதப் போக்கு வரத்து நடந்து மக்களுக்கு திறமையான சேவைகள் செய்ய ஒரு தனிப்பட்ட விசாரணைக் குழுவை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் ராமசுவாமி முதலியார் அவர்கள் சொன்ன கருத்துக்கு பதில் திரு. கல்யாணசுந்தரம் கொடுத்து விட்டார்கள். அந்த வேலை எனக்கு இல்லை. கனம் கல்யாணசுந்தரம் நிர்வாக அமைப்பு பற்றி குறிப்பிட்டார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி பரிசீலனை செய்து, அது நன்றாக நிறைவேற செவ்வையாக இயங்கக்கூடிய நிர்வாக இயந்திரத்தை அமைக்க வேண்டும் என்பது தான் சர்க்கார் யோசனையும். கேள்வி நேரத்தில் சொன்னது போல், அந்த விஷயம் சர்க்கார் கவனத்தில் இருக்கிறது; பரிசீலனை நடக்கிறது. திட்டத்தைப் பற்றி விவாதிக்கும் போது, அது பற்றி அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லுவார்கள் என்று நம்புகிறேன். அப்பொழுது நானும் பதில் சொல்வதாக இருக்கிறேன்.

[6th September 1960

MR. SPEAKER: The question is:

'That the Madras Appropriation (No. 3) Bill, 1960 (L.A. Bill No. 33 of 1960) be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 and the Schedule were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI C. SUBRAMANIAM: I move—

'That the Madras Appropriation (No. 3) Bill, 1960 (L.A. Bill No. 33 of 1960) be passed.'

The motion was put and carried and the Bill was passed.

## GOVERNMENT MOTION.

### DRAFT OUTLINE OF THE THIRD FIVE-YEAR PLAN.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I move—

*'That the Draft Outline of the Third Five-Year Plan be taken into consideration.'*

கனம் சபாநாயகர் அவர்களே,

சென்னை சர்க்கார் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைப் பற்றிச் சிந்திக்க, பல்வேறு குழுக்களை அமைத்த, இந்தத் திட்டமானது, அகில இந்தியாவுக்கும் இணைக்கப்பட்ட திட்டத்தின் ஒரு பகுதியாகும். இந்தத் திட்டத்தின் அடிப்படையில் நம்முடைய திட்டம் எவ்வாறு அமைந்து இருக்கிறது, இந்தப் பகுதி எந்த இடத்தைப் பெற்றிருக்கிறது என்று நாம் ஆலோசனை செய்தால் தான் நாம் சரியான முடிவுக்கு வர முடியும் என்பது என்னுடைய கருத்து. முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், அதைப் போலவே இந்த மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம், இப்படி படிப்படியாக நாம் நம்முடைய லட்சியத்தை நோக்கி சென்றுகொண்டிருக்கிறோம். ஒவ்வொரு திட்டத்தையும் எந்த லட்சியத்துக்காக எடுத்துக்கொள்ளுகிறோமோ அந்த லட்சியத்தை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்துகொண்டு வருகிறோம்.

முதல் முதலாகத் திட்டத்தின் அடிப்படை என்ன என்பதைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு நாம் ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய ஒரு பணி ஒரு ஜனநாயக அரசியல் அமைப்பின் மூலமாக சுதந்திர இந்தியாவில் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதுதான், மக்களிடத்தில் இருக்கக்கூடிய வறுமையைப் போக்க வேண்டும் என்பதுதான்: அவர்கள் வளமாக வாழ ஏற்பாடு செய்ய வேண்டும். அதை எப்படிச் சாதிக்க முடியும் என்பதைப் பார்க்க வேண்டும். இவற்றைத் திட்டங்களின் மூலமாகச் சாதிக்க முடியும் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள். அதற்கு உற்பத்தியை அதிகரிக்க வேண்டியதாக இருக்கிறது. பல்வேறு பொருள்களின் உற்பத்தியை மிக அதிகமான அளவில் உற்பத்தி செய்வதன் மூலமாக மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை ஓரளவு உயர்த்த முடியும். ஆகவே, திட்டம் என்று [illegible]



6th September 1960] [Sri C. Subramaniam]

உயர்த்துவதற்காக உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதுதான். அப்படி உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சொல்லும்போது அதை எந்த அளவு எந்தக் காலத்தில் பெருக்க முடியும் என்பதையும் நாம் பரிசீலனை செய்து பார்த்து அதற்காக ஒரு திட்டத்தைப் போட்டு அந்த உற்பத்தியைப் பெருக்கக் கூடிய பணியைச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சொல்லும்போது ஏதோ விவசாயத்தில் மட்டும் உற்பத்தியைப் பெருக்குவது என்றில்லாமல் தொழில் விவசாயம் மூலமாக அதில் அதிகப்படியான கவனம் செலுத்தி அதிகப்படியாக உற்பத்தி காண முயற்சிக்க வேண்டும். விவசாயத் துறையாக இருந்தாலும் சரி, தொழில் துறையாக இருந்தாலும் சரி ஆர்வமும், ஆற்றலும் படைத்த மக்கள் இருந்தால்தான் நாம் நல்ல மாற்றம் காண முடியும், அதன் மூலம் உற்பத்தியைப் பெருக்க முடியும். அப்படி உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சொல்லும் போதுஏதோ யந்திரங்களோ அல்லது உற்பத்திக்கு வேண்டிய நிலங்களோ இருந்தாலும், அதற்குத் தேவையான நிபுணர்கள் இருக்க வேண்டியதாக இருக்கிறது. அதற்குக் கல்வி வசதி இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதே மாதிரி சுகாதார வசதியும் இருக்க வேண்டும். ஆகையால் தான் இன்றைக்கு நல்ல சுகாதார வசதி, வைத்திய வசதி கல்வி வசதி இவைகளையெல்லாம் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டும் என்று சொல்லும்போதும் உற்பத்தியை உயர்த்த வேண்டும் என்று சொல்லும் போதும் மக்களுக்கு இவைகளையெல்லாம் செய்து கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஆகவே இவைகள் எல்லாம் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டதாக இருக்கின்றன. ஒன்றைச் செய்ய வேண்டுமானால் அதற்கு உதவியாக மற்றொன்றைச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. அந்த அடிப்படையில் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுத்து இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை முடிக்கும் தருவாயில் உள்ளோம். இன்றைக்கு மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் என்று சொல்லும்போது முதல் இரண்டு திட்ட காலத்தை விட அதிக அளவு உற்பத்தி பெருக வேண்டியதாக இருக்கிறது. இவ்வாறு உற்பத்தியைப் பெருக்க நாம் முயலும்போது மக்களுடைய எண்ணிக்கை மேலும் மேலும் உயர்ந்துகொண்டேதான் போகிறது என்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். சாதாரணமாக இரண்டாவது திட்ட காலத்தில் நாம் எதிர்பார்த்தது வருஷம் ஒன்றுக்கு 1·5 சத விகிதம் தான் மக்களின் எண்ணிக்கை உயர்வை எதிர்பார்த்தோம். ஆனால் இன்றைக்கு கிடைத்திருக்கக்கூடிய புள்ளி விவரப்படி பார்த்தால்—வரப்போகிற ஜனவரி, பிப்ரவரியில் தான் சரியான புள்ளி விவரங்களைக் கணக்கிடப்போகிறோம்—2 சத விகிதத்திற்கு மேல் உயர்ந்திருக்கிறதாக கணக்கிட்டிருக்கிறார்கள். அதற்கு மேல் 2·14 என்று கூட சொல்லலாம். இதையும் நாம் மனதில் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சொல்லும்போது மக்களுடைய எண்ணிக்கையும் அதனுடன் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. அதனால் நாம் எந்த அளவு வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்று நினைக்கிறோமோ அந்த அளவு உயர்த்த முடியவில்லை. மக்களின் எண்ணிக்கை குறைந்து உற்பத்தி அதிகமானால் அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயரும் என்பதைப்பற்றி நான் சொல்லி தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. எண்ணிக்கை குறைந்தால் தான் பொருளாதார உற்பத்திக்கு ஏற்றவகையில் உற்பத்தி பெருகி மக்களுடைய வாழ்க்கைத்தரமும் உயருவதற்கு வழி ஏற்படும்.

ஆகவே மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு எல்லா வகைகளிலும் வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. ஆதலால் தொழில் துறையிலும் சரி, விஞ்ஞானத் துறையிலும் சரி இன்னும் பல்வேறு துறையிலும் பல வசதிகளைச் செய்து [illegible] வேண்டியதாக இருக்கிறது. நமது நாட்டில் [illegible]

[Sri C. Subramaniam] [6th September 1960

துறையில் மிகவும் பிற்போக்காக இருக்கிறது. அதையும் நாம் மன தில் வைத்துக்கொள்ள வேண்டும். மற்ற நாடுகள் எவ்வளவோ விஞ்ஞானத் துறையில் முன்னேற்றமடைந்திருக்கின்றன. ஆனல் நம் நாடு அந்த அளவில் முன்னேற்றமடையவில்லை. தொழில் நுணுக்கம் தெரிந்தவர்கள் மிகவும் குறைவு. ஆகையால்தான் இன்றைக்கு நம் நாட்டில் இருக்கக்கூடிய சில குறைகளை மனதில் வைத்துக்கொண்டு எப்படி உற்பத்தியைப் பெருக்க முடியும் என் பதைப்பற்றி யோசனை செய்ய வேண்டியதாக உள்ளது.

10-00 a.m. மூன்றுவது திட்டத்தைப் பற்றி நாம் சிந்திக்கும்பொழுது முதல் இரண்டு திட்டங்களில் நமக்கு ஏற்பட்டுள்ள அனுபவங்களை வைத்துக் கொண்டு பார்க்கவேண்டும். ஏனென்றல் நம்முடைய வசதிகளைத் திரட்டிக்கொள்வதிலும், வசதிகளைப் பயன்படுத்திக்கொள்வதிலும், நிர்வாக இயந்திரத்தின் அமைப்பைப்பற்றியும் ஓரளவு அநுபவம் ஏற்பட்டிருக்கிறது. இந்த அநுபவத்தை வைத்துக்கொண்டு மூன்று வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எந்த அளவுக்கு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்பதைப்பற்றி முடிவு செய்யவேண்டும். இப்படி முடிவு செய்யவேண்டுமென்று சொல்லும்போது மூன்றுவது திட்ட காலத்தில் உள்ளதைமட்டும் பரிசீலனையில் எடுத்துக்கொள்ளக்கூடாது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வகுக்கும்பொழுதே மூன்று வது திட்டமும் எந்த முறையில் வகுக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் இரண்டாவது திட்டத்திலேயே—பர்ஸ்பெக்டிவ் ப்ளான்—என்று கொடுத்திருக்கிறர்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் என்ற நூலில் 11-வது பக்கத்தில் பார்ப்பீர்களானல் (growth in income and investment) என்ற தலைப்பில் 1951-ல் இருந்து 1976-வரையில் 25 ஆண்டுகளுக்கு எந்த அளவு முதலீடு செய்ய வேண்டும், முதலீடு செய்வதன் மூலமாக தேசிய வருமானம் எந்த அளவுக்கு உயரும் என்றெல்லாம் கணக்கிட்டுக் கொடுத் திருக்கிறர்கள். இன்றைக்கு அதையும் வைத்துக்கொண்டு மூன்றுவது திட்டத்தைப் பார்க்க வேண்டும். இரண்டாவது திட்டத்தைப் பொறுத்த வரையில் நம்முடைய அநுபவமும் இருக்கிறது.

நமது திட்டப்படி முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மொத்தமாக 3,100 கோடி ரூபாயும், இரண்டாவது திட்டத்திற்கு மொத்தமாக 6,200 கோடி ரூபாயும் முதலீடு செய்ய வேண்டுமென்று முடிவு செய்திருந்தோம். இரண்டாவது திட்டம் இப்போது முடிவடையும் தருவாயில் இருக்கிறது. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நாம் முதலீடு செய்யவேண்டியது ரூ. 9,900 கோடி என்று அப்பொழுதே முடிவு செய்திருக்கிறேம். அதேபோல நான்காவது திட்டத்திற்கு 14,800 கோடி ரூபாய் என்றும், ஐந்தாவது திட்டத்திற்கு 20,700 கோடி ரூபாய் முதலீடு செய்யவேண்டும் என்றும் வகுத்திருக்கிறேம். இது பற்றி ஓரளவு புள்ளி விவரங்கள் கொடுத்திருக்கிறர்கள்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முதலீடு செய்ய வேண்டியது 6,200 கோடி ரூபாய் என்றும், மூன்றுவது திட்டத்திற்கு 9,900 கோடி ரூபாய் என்றும் வெறும் ரூபாய் அளவில் மட்டும் சொன்னல் போதாது. வெறும் ரூபாயைக் கொண்டு திட்டம் செய்வது இல்லை. ரூபாய் என்பது அதற்கான பொருள்கள், அதனல் கிடைக்கிற வசதிகள்—இவைகளை அளவு கோலாகக்கொண்டு வகுக்கப் பட்டுள்ளது. அந்நூலில் மேலும் குறிப்பிட்டிருக்கிறர்கள்: 1952–53-ம் வருஷ விலைவாசி அடிப்படையாகவைத்துக் கொண்டு 9,900 கோடி ரூபாய் மூன்றுவது திட்டத்தில் முதலீடு செய்யப்படவேண்டும் என்பது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதே மாதிரி இரண்டாவது திட்டத்திற்கும் மொத்தமாக 6,200 கோடி ரூபாய் செலவிடப்பட வேண்டும் என்று திட்டமிட்டிருந்ததானது 1952–53-ம் வருஷ விலைவாசியை அடிப்படையாகக் கொண்டு தான். விலைவாசி இப்போது திட்டத்திட்ட அப்போது இருந்ததைவிட 25 சத விகித



6th September 1960] [Sri C. Subramaniam]

அதிகமாகியிருக்கிறது. இந்த விலைவாசி உயர்வை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நாம் மொத்தமாக 6,200 கோடி ரூபாய் செலவழிப்பது என்று திட்டமிட்டு வேலை செய்திருந்தாலும் அந்தப் பணத்தைக் கொண்டு நாம் அடையக்கூடிய பலன் முக்கால் பங்காகத்தான் இருக்கும். குறிப்பாக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 6,200 கோடி ரூபாய் முதலீடு செய்யவேண்டும் என்று நிர்ணயித்துக்கொண்ட போது 2,400 கோடி ரூபாய் தனியார் துறையிலும், 3,800 கோடி ரூபாய் பொதுத் துறையிலும் நாம் முதலீடு செய்ய வேண்டும் என்று முடிவு செய்திருந்தோம். மூன்றுவது திட்டத்தை நாம் இன்றைக்கு உருவாக்க முற்படும்போது எந்த அளவுக்கு இரண்டாவது திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறேம் என்பதைப் பற்றி ஆராயக் கடமைப் பட்டிருக்கிறேம். அவ்வாறு நாம் பார்க்கும்போது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மொத்தமாக 6,200 கோடி ரூபாய் முதலீடு செய்வது என்று தீர்மானித்திருந்ததற்கும் அதிகமாகவே இப்போது முதலீடு செய்திருப்பது தெரிய வரும். தனியார் துறையிலும், பொதுத் துறையிலுமாகச் சேர்த்து 6,800 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இது நாம் போட்டிருந்த திட்டத்திற்கு 600 கோடி ரூபாய் அதிகமாகும். ஆனல், 1952–53-ம் வருஷ விலைவாசி அடிப்படையைக் கணக்கில் கொண்டு பார்த்தால் இந்த 6,800 கோடி ரூபாய் 6,180 கோடி ரூபாய்க்குத் தான் சமமாகும். காரணம் பொது வாக அப்போது இருந்ததைவிட இப்போது விலைவாசி 18 சத விகிதம் உயர்ந்திருக்கிறது. ஆகவே, இந்த விலைவாசி உயர்வின் காரணமாக நாம் இரண்டாவது திட்ட முடிவில் மொத்தமாக 6,800 கோடி ரூபாய்—போட்ட திட்டத்திற்கு 600 கோடி ரூபாய் அதிகமாகவே—செலவிட்டிருந்தாலும்கூட, 1952–53-ம் வருஷ விலைவாசி அடிப்படை யில் 6,180 கோடி ரூபாய்க்குச் சமமாகத்தான் ஆகிறது. இதுவும் கூட போட்ட திட்டத்திற்கு 20 கோடி ரூபாய் தான் குறைவாக உள்ளது. மற்றப்படி போட்ட திட்டப்படியே செலவு செய்திருக்கிறேம். ஆகவே இப்போது விவாதத்திற்காக இரண்டாவது திட்டத்திற்கு நாம் போட்ட திட்ட அளவுப்படியே செலவு செய்திருக்கிறேம். அதிலிருந்தும் வர வேண்டிய முழுப்பலன் வந்து விட்டது என்று வைத்துக்கொள்வோம்.

இரண்டாவது திட்டம், மூன்றுவது திட்டம், நான்காவது திட்டம் ஆகியவற்றில் நாம் கனரகத் தொழில் (ஹெவி இண்டஸ்ட்ரி) சம்பந்தப்பட்ட வரையில் அதிகமாக முதலீடு செய்வது என்று திட்டமிட்டோம். அதில் எவ்வளவு அதிகமாக முதலீடு செய்கிறேமோ அந்த அளவுக்குத்தான் பிற்காலத்திலே நம்முடைய பொருளா தாரம், வெளிநாட்டின் உதவி இல்லாமல் சீர்பெற்று நாமே தனித்து இயங்கக்கூடிய சக்தியைப் பெறுவோம். இந்த அடிப்படையில் தான் நம் கொள்கை வகுக்கப்பட்டது. ஆனல், பொதுத் துறையைப் பார்க் கும்போது இரண்டாவது திட்டத்தில் மொத்தமாக ரூ. 3,800 கோடிக்குப் பதிலாக 3,500 கோடி ரூபாய் தான் முதலீடு செய்திருக்கிறேம். ஆனல், தனியார் துறைக்கு 900 கோடி ரூபாய் அதிகமாக இருக்கிறது. நாம் திட்டம் போட்டபடியே, அடிப்படையான கனரகத் தொழில்—பொதுத் துறையிலே ஏற்பட்டாலும் சரி, தனியார் துறையிலே ஏற் பட்டாலும் சரி அதைப்பற்றி நான் அதிகமாக கவலைப்படமாட்டேன்—ஏற்படவேண்டும். பொதுத் துறையிலே ஏற்படவேண்டிய திட்டங்கள், இங்கு நிறைவேற்றப்பட முடியாமல் அதன் காரணமாக தனியார் துறையிலே 900 கோடி ரூபாய் அளவிற்கு அதிகமான திட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தப் பொருளாதார அபிவிருத்தி சரியாகத் தான் வந்துகொண்டிருக்கிறது. இதைத் திருத்துவதற்கான அதி காரமும் (கரக்டிவ் மெஷர்) வேண்டுமானல் நம்முடைய கையில் தான் இருக்கிறது. தனியார் துறையில் 3,300 கோடி ரூபாய் என்றல் எந்தத் திட்டங்களிலே எந்தத் தொழில்களிலே இது முதலீடு செய் யப்பட்டிருக்கிறது என்று பார்க்கும்போதுதான் நமக்கு கொஞ்சம் ஏமாற்றம் ஏற்படுகிறது. அடிப்படை தொழில்கள் (பேசிக் இண்டஸ் ட்ரீஸ்) அதிகமாவதற்குப் பதிலாக சாதாரணமாக இருக்கும் அன்றுட

உபயோகத்திற்கான தொழில்கள்தான் (கன்சூமர் இண்டஸ்ட்ரீஸ்) அதிகமாகி இருக்கிறது. சில பேர் அதை வரவேற்கலாம். வரவேற்றாலும்கூட நாம் திட்டம் போட்டபடி முன்னேறிச் செல்வதற்கு அது அடிப்படையாக இருக்கிறதா என்றால், இல்லை. இந்த நிலைமை நீடித்தால் மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் மட்டுமல்ல நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மட்டுமல்ல எக்காலத்திலும் வெளியாரை நம்பித்தான்—வெளி நாடுகளிலிருந்து இயந்திரங்களை வரவழைத்துத்தான், பிற நாட்டு உருக்கு முதலியவைகளை நம்பித்தான், அந்நிய நாட்டு தொழில் நிபுணர்களின் உதவியைப் பெற்றுத்தான்—நம்முடைய காரியங்களைச் செய்ய முடியும் என்ற நிலைமை ஏற்பட்டு விடும். அவ்வாறு ஏற்பட்டுவிட்டால் நம்முடைய அரசியல் அடிமை நீங்கிவிட்டாலும், பொருளாதார அடிமைத்தனம் தொடர்ந்து போய்க்கொண்டுதான் இருக்கும்.

மூவாயிரத்து முந்நூறு கோடி ரூபாய் எப்படி தனியார் துறையிலே முதலீடு செய்யப்பட்டிருக்கிறதென்பதை நாம் ஓரளவு பரிசீலனை செய்துப் பார்க்கும்போது இப்பொழுது தேவை அதிகமில்லாத பல பொருள்கள் உற்பத்தி செய்வதற்கு அது உபயோகப்பட்டிருக்கிறது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. இதையும் நிபுணர்கள் பரிசீலனை செய்து பார்த்து இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலே எப்படி முதலீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை ஆராய்ந்து தெரிவிப்பார்கள் என்று நம்புகிறேன்.

இப்பொழுது கொடுத்திருக்கும் புள்ளி விவரங்களை வைத்துக் கொண்டு பார்த்தால் 3,300 கோடி ரூபாய்க்கு அதிகமாக திட்டமிட்டதற்கு மேலாக, 900 கோடி ரூபாய் இன்று தனியார் துறையிலே முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. முன்பு போட்ட அடிப்படையிலே நடைபெறவில்லை. என்னுடைய கருத்தையே எல்லோரும் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று நான் சொல்லவில்லை. மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திலும் அவ்வாறு நேராத அளவிற்கு நாம் முயற்சி செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். தனியார் துறை பொதுத் துறை என்று பாராமல் இவைகளில் எந்தெந்தத் தொழில்கள் ஏற்படவேண்டும் என்பதை அடிப்படையாக வைத்துக்கொண்டு விவாதிக்க விரும்புகிறேன். அவ்வாறு பார்க்கும்போது சிறிது ஏமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. முன்னே எடுத்துக்கொண்ட முடிவு சரியா என்ற சந்தேகம் இருந்தால் அந்த சந்தேகத்தை நீக்கி சரியான முடிவு எடுக்க வேண்டும். நிறைவேற்றும்போது ஒன்றுக்கொன்று முரண்பாடு ஏற்பட்டிருக்கிறது. இதனால் நமக்குள்ளே குழப்பம் ஏற்படுகிறது. மக்களிடத்திலும் குழப்பம் ஏற்படுகிறது. நிபுணர்களிடத்திலும் குழப்பம் ஏற்படுகிறது. ஆகவே திட்டத்திற்குப் பதிலாக ஒரு குழப்ப நிலைமை ஏற்படுகிறது.

ஆறாயிரத்து இருநூறு கோடி ரூபாய் முதலீடு செய்தால் எந்த அளவுக்கு நம்முடைய தேசிய வருமானம் உயரும் என்று கணக்குப் போட்டிருக்கிறார்கள். அப்பொழுது அவர்கள் கணக்குப் போட்டுச் சொன்னது தேசிய வருமானம் 13,480 கோடி ரூபாய் அளவிற்கு இரண்டாவது திட்ட காலத்திற்குள் உயரவேண்டுமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். முதல் ஐந்தாண்டு திட்ட இறுதியில் 10,800 கோடி ரூபாய் ஆக இருந்தது. முதலீடு காரணமாக உற்பத்தி பெருகி தேசிய வருமானம் 13,480 கோடி ரூபாய் அளவிற்கு உயர வேண்டும். அதாவது 25 சத விகிதம் உயரவேண்டுமென்று கணக்குப் போட்டோம். இப்பொழுது கணக்குப் பார்க்கும்போது சமீப காலத்திலே 20 சத விகிதத்திலிருந்து 21 சத அளவிற்குத்தான் உற்பத்தி பெருகும் என்ற கணக்கு கிடைத்திருக்கிறது. இரண்டு மூன்று நாட்களில் வந்த புள்ளி விவரத்தைப் பார்த்தால் 20 சதம், 21 சதம் கூட வருமா, 17 சதம், 18 சதத்திலேயே நின்றுபோய் விடுமா என்ற சந்தேகமும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு காரணம் என்ன என்பதைப்பற்றி ஆலோசிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.





உடனே சிலர், "எதிர்பார்த்தபடி முதலீடு ஆகவில்லையே, எதிர்பார்த்தபடி உற்பத்தி பெருகவில்லையே, திட்டம் எதற்கு ?" என்று வெகு சுலபமாகத் திட்டத்தைக் குறை சொல்லிவிடலாம். அதை ஆராயக் கடமைப்பட்டிருக்கிறோம். அதற்குச் சரியான பதில் இருக்குமானால் அதை மக்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். நம்முடைய தேசிய வருமானம் முக்கியமாக எந்தத் துறையிலே ஏற்படுகிறது என்று பார்க்கும்போது, மற்ற நாடுகளில் எல்லாம் விவசாய வருமானம் குறைவு, தொழில் வருமானம் பெரிது. எழுபத்தைந்து சதம் தொழிலின் மூலமும் 25 சதம் விவசாயத்தின் மூலமும் வருமானம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனால், இங்கே அப்படியல்ல. இங்கே ஒன்றுக்குப் பாதி அளவு விவசாய வருமானம் இருப்பதால், விவசாய உற்பத்தி ஏதாவது காரணத்தால் பாதிக்கப்பட்டால் தேசிய வருமானம் முழுமையுமே பெரிய அளவில் பாதிக்கப்படுகிறது என்பதைப் பார்க்கிறோம். அப்படி விவசாய உற்பத்தி என்றைக்குமே ஒரே மாதிரி இருக்கும் நிலைமையில் இருக்குமா என்று பார்த்தால், இருக்க முடியாது. இன்றைக்கு இருக்கும் நிலைமையில் வானம் எந்த அளவிற்கு பொழிகிறதோ, நமக்கு எந்த அளவிற்கு விளைச்சல் கொடுக்கிறதோ, அதைப் பொறுத்துத்தான் விவசாய உற்பத்தி இருக்கிறது. மழை பெய்யாமல் போனால் பல பகுதிகளில் விவசாய உற்பத்தி குறைகிறது. அப்படி குறையும்போது தேசிய வருமானமும் அந்த அளவு கீழே போய்விடுகிறது. திட்டம் நல்ல முறையில் பலன் கொடுக்கிறதா என்று பார்ப்பதற்கு இவ்விரண்டு வருமானங்களையும் பிரித்துப் பார்க்க வேண்டும். விவசாய வருமானத்தை எந்த அளவு உயர்த்திக்கொண்டிருக்கிறோம், தொழில்களிலே எந்த அளவு உயர்த்திக்கொண்டிருக்கிறோம் என்று பார்த்தால் விவசாய வருமானம் இன்னும் ஊசலாடிக்கொண்டிருக்கிறது. ஒரு வருஷம் அதிகம் இருக்கிறது. இன்னொரு வருஷம் மழை குறைந்தால் தானாக கீழே போகிறது. நூறு, 150 கோடி அளவுக்குக் கூட கீழே போகிறது. அதன் காரணத்தால் தேசிய வருமான அளவு குறைவாகக் காணப்படுகிறது. இனிமேல் அதிக வருமானம் இருக்கக்கூடிய தொழில் துறையை எடுத்துப் பார்த்தால் ஐந்தாண்டு காலத்திலே நாம் எல்லோரும் பெருமைப்படக்கூடிய அளவிற்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பதில் சந்தேகம் இல்லை. சென்ற ஆண்டில் 8 சதம், 9 சதம் தொழில் உற்பத்தி பெருகி இருக்கிறதென்பதைப் பார்க்கிறோம். ஒரு காலத்தில் சின்ன தடங்கல் ஏற்பட்டது. அந்தத் தடங்கலை மீறி இந்தத் தொழில் உற்பத்தி அதிகமாகி இருக்கிறது. உற்பத்தி அதிகமான தொழில் எது என்பது ஒருபுறம் இருக்க, பொதுவாக தொழில் உற்பத்தி பெரிய அளவில் பெருகி இருக்கிறது. ஓரளவு திருப்தி அடையக்கூடியதாகவும் இருக்கிறது. விவசாய வருமானக் குறைவு காரணத்தால் நாம் எதிர்பார்த்த அளவு தேசிய வருமானம் பெருகவில்லை என்பதை வைத்துக் கொண்டு திட்டம் சரியாக நடைபெறவில்லை, திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதில் குறைகள் ஏற்பட்டுவிட்டன என்று நாம் நினைப்பதற்கு இடமில்லை.

தேசிய வருமானம் எந்த அளவு பெருகவேண்டுமென்று நாம் எதிர்பார்த்தோமோ அதற்குப் பதிலாக குறைந்த அளவிற்குத்தான் தேசிய வருமானம் இருக்கிறதென்பதைப் பார்க்கிறோம். இன்னொன்றும் முன்னாலே குறிப்பிட்டேன். ஆண்டு ஒன்றுக்கு நம்முடைய மக்களின் எண்ணிக்கை உயர்வு $1\frac{1}{2}$ சத விகிதம் அளவிற்கு இருந்திருக்குமானால், மக்களுடைய எண்ணிக்கை குறைவாக இருந்திருக்கும். இரண்டாவது திட்ட கால அளவில் சராசரி நபரின் வருமானம் குறைவாக இருந்தால், என்ன கெட்டுப்போயிற்று என்று கேட்கலாம். மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் முதலீடு 10 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்ய வேண்டுமென்றால் இந்தத் தேசிய வருமானத்திலிருந்துதான் வரவேண்டி

இருக்கிறது. மக்கள் தங்களுடைய வருவாயை உடனடியாகச் செலவழிக்காமல் சேமித்து, அதை முதலீடு செய்யும் சக்தி எந்த அளவில் இருக்கிறதோ அந்த அளவுக்குத்தான் ஒரு நாடு முன்னேற முடியும்.

ஆகவே இன்று சராசரி வருமானம் நாம் எதிர்பார்த்த அளவு உயராமல் குறைவாகயிருக்குமானல் நமது சராசரி சேமிக்கும் சக்தி குறைந்துவிட்டதுதான் அதற்குக் காரணம். ஆகவே மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், எதிர்பார்த்தளவு சேமிப்பு ஏற்பட வேண்டுமென்ருல் நமது இன்றைய தேவைகளைக் குறைத்துக் கொண்டு, நாளைய சுபிட்சத்திற்கு நாம் முதலீடு செய்யத் தயாராயிருந்தால்தான் எதிர்பார்க்கும் அளவில் திட்டத்தை நிறைவேற்ற முடியும். இவ்வுண்மையைப் பொதுமக்கள் நன்கு உணரவேண்டும்.

திட்டம் என்று சொல்லும்போது மாய மந்திரங்களை வைத்துக் கொண்டு செய்யக்கூடிய காரியமல்ல. மக்களின் சக்தி எந்த வழியில், எந்த வேகத்தில் செல்லவேண்டும் என்பதை அறிந்து அவ்வழிகளில் திருப்பி விடுவதுதான் திட்டம். மக்களின் சக்தி எந்த அளவு இருக்கிறதோ அந்த அடிப்படையில்தான் திட்டம் கணிக்கப்படவேண்டும். இப்பொழுது 10,200 கோடி ரூபாய் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முதலீடு செய்யலாம் என்று தாற்காலிகமாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ரூபாய் 9,900 கோடி என்று இருந்தது ரூ. 10,200 கோடியாகியிருக்கிறதே என்று பார்க்கும்போது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நினைத்தற்கு மேலாக முதலீடு செய்கிருேமோ என்று பலருக்குத் தோன்றலாம். நான் முன்பு குறிப்பிட்டதுபோல் 1952–53 விலைவாசியை வைத்துப் பார்த்தால் இந்த ரூ. 10,200 கோடி என்பது ரூ. 8,000, 8,500 கோடிக்குத்தான் வரும். முன் பின் இருக்கலாம். எனவே மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு எதிர்பார்த்ததைவிட குறைவாகத்தான் முதலீடு செய்ய இன்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் இதை உயர்த்த முடியுமா என்று பார்க்க வேண்டுமே தவிர குறைக்கலாமா என்று நினைத்தால் நமது உற்பத்தி வேகம் குறையும். அதனல் நம் முன்னேற்றத்தின் வேகமும் குறையும். முன்னேற்றத்தின் வேகம் குறையும்போது, நமது இன்றைய குறைகள் நீடித்து நம் காலத்தில் மட்டுமல்லாது அடுத்த தலைமுறையையும் தொடர்ந்து இந்தத் தீமை பீடித்துக்கொண்டிருக்கும். என் இவ்வளவு கஷ்டப்படவேண்டும், சிறிது சிறிதாக முன்னேறினல் போதுமே என்ருல் அது சரியா ? சிறிது சிறிதாக முன்னேறி பலம் பொருந்திய ஒரு பொருளாதார சக்தியைப் பெற முடியுமா என்று யோசித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிருேம். ரூபாய் 10,200 கோடி அல்லது ரூ. 9,900 கோடி என்று வைத்தாலும் நமது இன்றைய பிற்பட்ட நிலையில் முழு சக்தியையும் நாமே பெற்று, நாமே முதலீடு செய்யக்கூடியது என்பது முடியாத காரியம். பண அளவில் பூராவும் வந்தாலும்கூட, இன்று நாம் பல திட்டங்களை வகுக்கும்போது, பல தொழிற்சாலைகளை நிர்மாணிக்கும்போது, நம் நாட்டிலுள்ள பொருள்களையும், இயந்திரங்களையும் மட்டும் வைத்துக் கொண்டு அவைகளை அமைத்து விட முடியாது. வெளிநாட்டிலிருந்து இயந்திர உதவி பெற்றுத்தான் நாம் தொழில்களை அமைக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, வெளிநாட்டிலிருந்து இயந்திரங்களைப் பெற்றுத்தாகை வேண்டும். அப்படி இயந்திரங்களைப் பெறுவது என்ருல் உடனடியாகப் பணம் கொடுத்து வாங்கி விட முடியாது. அவர்களுக்கு வேண்டிய பொருள்களைக் கொடுக்க நமக்குச் சக்தியிருக்க வேண்டும். அமெரிக்காவிலிருந்து 200 கோடி ரூபாய் அளவிற்கு இயந்திரங்கள் வாங்குகிருேம் என்ருல் நாம் அந்த 200 கோடி ரூபாயையும் நம் கரென்ஸியில் கொடுத்து விட முடியாது. அப்படி கொடுக்க முடியாது. அதற்குச் சரியான, அதன் மதிப்புள்ள பொருள்களைக் கொடுக்கக்கூடிய சக்தி இருந்தால்தான் அந்த இயந்திரங்களை விலைக்கு வாங்குவதுபோல் வாங்க முடியும். நாம் சாமான்கள் கொடுக்கலாம் . என்ருலும் அவை





அவர்களுக்கு உபயோகமுள்ளதாகயிருக்கவேண்டும். வெளிநாட்டு இயந்திர உதவி வேண்டுமென்று சொல்லும்போது அதன் விலைக்கு ஏற்றவகையில் நாம் நம் பொருள்களைப் பண்டமாற்ருகக் கொடுத்து வாங்கக்கூடிய சக்தி நமக்கு இருக்கிறதா? நாம் விரும்பினலும் விரும்பாவிட்டாலும் அன்னிய நாட்டு உதவி கடனக இருந்தாலும் சரி அல்லது இதை மான்யமாகப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று அவர்கள் பரிசாகக் கொடுத்தாலும் சரி வெளிநாட்டு உதவி நமக்கு இன்று மிகவும் அவசியம். அந்த அடிப்படையில்தான் நாம் திட்டங்கள் வகுத்திருக்கிருேம். வெளிநாட்டிலிருந்து எந்த அளவு நாம் இயந்திரங்கள் தருவிக்கவேண்டியிருக்கிறது? அப்படி தருவிக்கிற இயந்திரங்களுக்கு எந்த அளவு நாம் உடனடியாகப் பொருள் கொடுத்து சரி செய்ய முடியும்? மீதியை எப்படிக் கடனகப் பெறுவது என்பதைக் கணக்குப் போட்டுப்பார்த்து யாரிடம், எந்த அளவு, கடன் கிடைக்கும் என்பதை மனதில் வைத்துக் கொண்டு ரூ. 9,900 அல்லது ரூ. 10,200 கோடிக்குத் திட்டம் வகுக்க நாம் கடமைப்பட்டிருக்கிருேம். பின், திருப்பிக்கொடுக்க வேண்டிய கடன்கள் இருக்கின்றன. அதையும் கணக்குப் போட வேண்டியிருக்கிறது. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அதை திருப்பிக் கொடுக்கவேண்டும். ஆக, ரூ. 2,500 கோடி வெளிநாட்டிலிருந்து உதவி பெறவேண்டும். மீதியை நம் நாட்டிலுள்ள மக்களின் சக்தியிலிருந்து பெறவேண்டுமென்பதுதான் திட்டத்தின் அடிப்படை. திட்டம் வகுப்பது என்ருல், பெரிய பெரிய திட்டங்களின் அட்டவணையைப் போட்டு விட்டு, இவ்வளவு செலவாகும் என்று மட்டும் கணக்குப் போட்டுவிட்டால் போதாது. அல்லது இதற்கு இவ்வளவு அன்னியச் செலாவணி வேண்டும் என்று கணக்கு போட்டு விட்டால் மட்டும் போதாது. அது திட்டமாகாது.

திட்டம் என்று வரும்போது என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டுமென்று திட்டம் வகுக்கவேண்டும். அவைகளுக்கு எவ்வளவு செலவாகும் என்று மதிப்பிடவேண்டும். அன்னியச் செலாவணி எவ்வளவு வேண்டும் ? அதை எப்படிப் பெறுவது என்றும் முடிவு செய்யவேண்டும். அதற்கு மேலாக நம் முதலீட்டுச் சக்தியை நாம் எந்த அளவு சேமிக்கவேண்டும் என்பது பற்றியும் முடிவு செய்யவேண்டும். அதோடு மட்டுமில்லாது இந்தத் தொகையை நாம் எங்கிருந்து எடுக்கமுடியும் என்பதற்கெல்லாம் வழி காட்டினல்தான் அது உண்மையான திட்டமாகுமே தவிர நமக்கு இவ்வளவு கோடி ரூபாய் வேண்டுமென்று மட்டும் முடிவு செய்து விட்டால் போதாது. நமக்கு வேண்டிய தொகையை எப்படி எங்கிருந்து (“ டாப் ” செய்வது) அணுகுவது என்று ஆலோசித்து முடிவு காணவேண்டும். ரத்தம் எடுக்க வேண்டும் என்ருல் ஒரு இடத்திலிருந்துதான் எடுக்க முடியுமே தவிர எல்லா இடத்திலிருந்தும் எடுக்கமுடியாது. முதலீடு செய்யவேண்டுமென்று வரும்போது, அதற்கு வேண்டியதை வரி போட்டு வாங்கினலும் சரி அல்லது கடனகை வாங்கினலும் சரி அந்தத் தொகையை எதற்காக உபயோகிப்பது என்பதைப் பொறுத்து அது இருக்கிறது. மக்களின் சக்தி—அவர்களின் வளம் வீணகச் செலவழிக்கப்படாமல் அவற்றை முதலீடு செய்யக்கூடிய முறையில் நாம் ஓர் ஏற்பாட்டைச் செய்ய வேண்டியது திட்டத்தின் அடிப்படையாகும். இதை ஒப்புக்கொள்ளவில்லை என்ருல் பின் இந்தத் திட்டத்தைப்பற்றி நினைக்கவேண்டிய அவசியமேயில்லை. இந்த அடிப்படையில்தான் நாம் முன்னேற முடியும். ஆகவே, அகில இந்திய அளவில் நிர்ணயிப்பதாக இருந்தாலும் சரி அல்லது ராஜ்ய அளவில் நிர்ணயிப்பதாக இருந்தாலும் சரி மக்களின் சக்தியை எந்த அளவு சேமிக்க முடியுமோ அந்த அளவுக்குச் செய்யவேண்டும். மக்களின் சக்தியை ஒரு அளவுகோலாக எடுத்துக்கொள்ளவேண்டும். ரூபாய் 10,200 கோடி முதலீடு செய்யவேண்டுமென்று சொல்லும்போது எந்தெந்தத் துறைகளில் இதை முதலீடு செய்யவேண்டுமென்பது பற்றி நாம் ஆராயக் கடமைப் பட்டிருக்கிருேம்.

[Sri C. Subramaniam] [6th September 1960

டு இதை எப்படிச் செலவு செய்வது ? எந்த விதத்தில் முதலீடு
10-30 a.m. செய்வது ? இதற்கான பணத்தை எவ்வாறு திரட்டப்போகிறோம் என்பவை ஒருபுறமிருக்க, இப்போது மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திற்கு என்று குறிப்பிட்டிருக்கும் 10,200 கோடி ரூபாயை எவ்வாறு செலவு செய்யப்போகிறோம் என்பதைப்பற்றியும் நாம் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். முதலாவதாக நமக்குத் தன்னம்பிக்கை ஏற்படவேண்டும். அதற்காகத்தான் "டேக் ஆஃப் ஸ்டேஜ்" என்று சொல்லுவார்களே, அதாவது இந்த பதம் ஏரோப்ளேனிலிருந்து வந்தது, ஏரோப்ளேன் ஆகாயத்தில் கிளம்புவதற்கு முன்னால், ஒரு குறிப்பிட்ட அளவு வேகத்திற்கு, கீழேயே போகவேண்டும், அதாவது குறிப்பிட்ட 100 அல்லது 80 மைல் வேகத்தில் போனால்தான் மேலே கிளம்ப முடியும் என்றிருந்தால், அதற்குக் குறைவான 60 அல்லது 50 மைல் வேகத்தில் போய்க்கொண்டிருந்தால் ஏரோப்ளேன் மேலே கிளம்ப முடியாது. அதே போன்றுதான் இந்த "டேக் ஆஃப் ஸ்டேஜ்" வேகத்தை நாம் அடைந்தாக வேண்டும். அந்த வேகத்தை அடையவேண்டுமானால் நாம் செய்யவேண்டிய முயற்சிகள் என்ன என்பதையும் நாம் பார்க்கவேண்டும். மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திலும் சரி, நான்காவது ஐந்தாண்டு திட்டமாக இருந்தாலும் சரி, அவைகளில் நாம் செய்யவேண்டிய வேலைகள் என்ன, நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை, என்பதற்கு வழி காட்டக்கூடிய முறையில் மற்ற நாடுகளின் அனுபவங்கள் நம் முன்பு உள்ளன. உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம், இன்றைக்கு நாம் ஒரு உருக்குத் தொழிற்சாலையை அமைக்கவேண்டும் என்று நினைக்கிறோம். இதற்காக ரஷ்யாவிலிருந்து உதவி வந்து சேருகிறது. பின்னால் இங்கிலாந்திலிருந்து உதவி வந்து சேருகிறது. ஜெர்மனியிலிருந்தும் வந்து சேருகிறது. இப்படியே அமெரிக்காவிலிருந்தும் உதவி வந்து சேராதா என்று பார்த்துக்கொண்டிருக்கலாம். இவ்விதம் நான்கு அல்லது ஐந்து உருக்குத் தொழிற்சாலைகளை எப்படியோ—கடன் வாங்கியோ அல்லது வேறு எந்தவிதத்திலோ அமைத்து விடலாம். அவ்விதம் இல்லாமல் தொடர்ந்து, நம்முடைய பொருளாதாரம் உயருவதற்கு வழி செய்யக்கூடிய முறையில் வருடத்திற்கு ஓர் உருக்குத் தொழிற்சாலை அமைப்பதற்குரிய திட்டத்தை நாமே அமைத்தாகவேண்டும். இதற்காக அந்நிய நாடுகளிலிருந்து கடன் வாங்கிக்கொண்டிருக்க முடியாது. இவ்விதம் வாங்கிக்கொண்டிருந்தால் அதுவே ஒரு பெரிய பளுவாய் போய்விடும். அதை விட்டு விட்டு, நம் நாட்டிலேயே நமக்கு வேண்டிய இயந்திரங்களை உற்பத்தி செய்வதற்கும், நமக்கு வேண்டிய பொருள்களை தயார் செய்வதற்கும் வேண்டிய அளவில் தொழிற்சாலைகளை நாமே அமைத்தாகவேண்டும். அந்த நிலைமை ஏற்படுவதற்கு தற்போது கொஞ்சம் கஷ்டமாக இருந்தாலும்கூட பின்னால் நமக்கு வேண்டிய தொழிற்சாலைகளை அமைப்பதற்குரிய இயந்திரங்களை எல்லாம் நம் நாட்டிலேயே செய்யக்கூடிய நிலைமை நமக்கு ஏற்பட்டாக வேண்டும். சர்க்கரைத் தொழிற்சாலையை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். ஒரு சர்க்கரைத் தொழிற்சாலை அமைக்கவேண்டுமென்றால் முன்னால் அந்நிய நாடுகளிலிருந்துதான் இயந்திரங்கள் வரவேண்டியதாய் இருந்தன. ஆனால் இப்போது அதற்கான இயந்திரங்களை நாமே தயார் செய்யக்கூடிய நிலையில் இருக்கிறோம், அதனால்தான் வருடம் ஒன்றுக்கு ஆறு தொழிற்சாலைகள் வரை அமைப்பதற்குச் சக்தியுள்ளவர்களாய் இருக்கிறோம். ஆறு மட்டுமல்ல, இனிமேல் ஆண்டு ஒன்றுக்குப் பத்தோ அல்லது பன்னிரண்டோ தொழிற்சாலைகள் அமைப்பதற்கு நமக்கு வசதியிருக்கிறது. இதற்கான இயந்திரங்களை எல்லாம் நாமே உற்பத்தி செய்ய முடியும். இது எந்த அளவுக்கு இனி பெருகும் என்பதைப்பற்றி இப்போது கணக்குப்போட்டு பார்க்கவேண்டிய தேவையில்லையென்றாலும் இந்த அளவுக்கு முன்னேறிக்கொண்டு போகலாம் என்ற தன்னம்பிக்கையும் இடமும் நமக்கு இருக்கவேண்டும். இப்பேர்ப்பட்ட "டேக் ஆஃப் ஸ்டேஜ்" நமக்கு ஏற்படவேண்டும். ஆகையினால் அடிப்படையாக இருக்கக்கூடிய தேவைகள் என்ன என்பதை நாம் முதலில் கவனிக்க



6th September 1960] [Sri C. Subramaniam]

வேண்டும். முக்கியமாக உருக்குத்தொழிற்சாலை இல்லாமல் நாம் எந்த வேலையும் செய்ய முடியாது. அதற்கடுத்தாற்போல் மற்ற உலோகங்களையும் எடுத்துக்கொள்ளவேண்டும். அலுமினியம், ஈயம், செம்பு, நிக்கல் போன்ற பல உலோகங்கள் இருக்கின்றன. இவைகளை எல்லாம் உபயோகப்படுத்தித்தான் நம்முடைய பொருளாதார வளத்தைப் பெருக்க முடியும். அதற்கு நாம் முதலீடு செய்ய வேண்டும். வெறும் உலோகங்களை வைத்துக்கொண்டு நாம் ஒன்றும் செய்யமுடியாது. இவைகளுக்கான தொழிற்சாலைகளை அமைப்பதற்கு வேண்டிய இயந்திரங்களை நாம் தயாரிக்கவேண்டும். மேலும் இந்த உலோகங்களை உபயோகித்து இயந்திரங்களாக செய்யக்கூடிய சக்தியை நாம் பெற்றாகவேண்டும். அதிலும் பெரும் இயந்திரங்களை செய்யக்கூடிய சக்தி நமக்கு ஏற்படவேண்டும் என்று சொல்லும்பொழுது அதற்கான திட்டங்களை எல்லாம் போட்டாக வேண்டியிருக்கிறது.

இந்த முறையில் நாம் திட்டங்களை வகுத்துக்கொண்டு போவோமேயானால் தொழில்கள் நாட்டில் பெருகுவதற்கு வாய்ப்புக்கள் ஏற்படும். அதே நேரத்தில் மக்களுக்குப் போதுமான உணவு கிடைக்கவேண்டும். உடை கிடைக்கவேண்டும். மற்ற நாடுகளோடு ஒப்பிட்டுக் கூறும் அளவிற்கு இல்லாவிட்டாலும்கூட, ஓரளவுக்கு நாம் கொடுத்தாகவேண்டும். மக்களுடைய அன்றாடத் தேவைகளுக்கு ஏற்றபடி எந்த தொழில்களை ஏற்படுத்தலாம் என்பதைப்பற்றி தீர்மானிக்கவேண்டும். (பேஸிக் இண்டஸ்ட்ரீஸுக்கும் கன்ஸ்யூமர்ஸ் இண்டஸ்ட்ரீஸுக்குமிடையே பாலன்ஸ்ஸாக இருப்பவைகளை) அடிப்படைத் தொழில்கள் அன்றாட நுகர் பொருள்களுக்கான தொழில்கள் ஆகிய இரண்டையும் சமன் செய்யும் வகையிலே உள்ள தொழில்களைப் பார்த்து அதற்கேற்றபடி அமைக்கவேண்டியிருக்கிறது. அதோடு, இதில் எந்த அளவுக்கு முதலீடு செய்யலாம், எந்த அளவுக்கு உடனடியாக நிறைவேற்றமுடியும் என்பதைப்பற்றியும் நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தைப் பொறுத்தவரை இதில் சில தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்ற என் கருத்தை நான் முன்பே வெளியிட்டேன். இப்போதுள்ள திட்டத்தில் முதலீடு எந்த அளவில் செய்யவேண்டும், எந்த அடிப்படையில் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதைப் பார்த்துத்தான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 10,200 கோடி ரூபாய்க்குத் திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. ரூபாய் 2,000 கோடிக்கும் அதிகமாக வெளிநாடுகளிலிருந்து உதவி கிடைத்தாலும்கூட மீதியை நம் நாட்டிலேயே சேகரித்தாகவேண்டும். அதை எப்படிச் சேகரிக்கப் போகிறோம் என்பதைப்பற்றியும் நாம் கவனித்தாக வேண்டும். அப்படி பார்க்கும்பொழுது, எங்கெங்கு அதிகமாக சேகரிக்க முடியும் என்பதையும் நாம் பார்க்கவேண்டும். நம் நாட்டில் பெரிய பணக்காரர்களாக எத்தனைபேர்கள் இருக்கிறார்கள் ? அதிலும் ஐந்து லட்சத்திற்கும் மேலாக வரும்படி வரக்கூடிய நபர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்று பார்க்கும்பொழுது, 100 அல்லது 120 பேர்கள்தான் இருக்கிறார்கள். இதற்கு மேலாக பல கம்பெனிகள் இருக்கலாம், அவைகள் எல்லாம் தனியாகப் பிரிந்து இருக்கின்ற கம்பெனிகள். (SRI K. VINAYAKAM: Is it for the whole country or State ?) நம்முடைய ராஜ்யத்திற்கு மட்டும் என்று இருந்தால் மிகவும் நன்றாய் இருக்கும், இது இந்தியா பூராவுக்கும் இருப்பது. நான் சொல்வதில் கொஞ்சம் மாறுதல் இருக்கலாம். இப்படி எண்ணிக்கை சொற்பமாக இருக்கின்ற பெரிய பணக்காரர்களிடமிருந்து நமக்கு வேண்டிய மூலதனத்தைச் சேர்த்துவிட முடியாது. இதை பரவலான முறையில்தான் சேகரிக்க ஏற்பாடு செய்தாக வேண்டும் . . .

**SRI M. KALYANASUNDARAM:** கனம் அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய கணக்கு 1951–52-ல் உள்ள கணக்காய் இருக்கலாம். அப்போதுள்ள கணக்கு என்ன ? 1960–61-ல் இருக்கிற கணக்கு என்ன என்பதையாவது தெரிவிக்க முடியுமா ?

[6th September 1960

**THE HON. SRI C. SUBRAMANIAM:** சமீபத்தில்தான் இதைப் பற்றிய ரிசர்வ் பாங்க் ரிப்போர்ட் வந்திருக்கிறது. வேண்டுமென்றால் அதையும் கொடுக்கலாம். கழிந்த 10, 12 வருடங்களின் கணக்குகளின் புள்ளி விவரங்களை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே இந்தச் சேமிப்பை மக்களிடமிருந்து வாங்கவேண்டும் என்று சொல்லும்போது மக்களிடம் புதிய வரிகளைப்போடவேண்டும். ஏற்கனவே வரிகள் உயர்ந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதிகமான வரி கொடுக்கக் கூடியவர்கள் குறைந்து கொண்டு வருகிறார்கள், குறைவான வரி கொடுக்கக்கூடியவர்கள் பெருகிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு.) ஏமாற்றுகின்றவர்களைப் பற்றி நாம் சொல்ல முடியாது. ஏமாற்றுகின்றவர்கள் இரண்டு பக்கத்திலும் இருக்கலாம். இன்றைக்குச் சேமிப்பு சக்தியைப் பெருக்க வேண்டும் என்கின்ற முடிவுக்கு நாம் வந்தாக வேண்டியிருக்கிறது. நம்மிடம் சேமிப்புச் சக்தி எவ்வளவு இருக்கிறது, செலவு செய்யக் கூடிய சக்தி எவ்வளவு இருக்கிறது என்பதையும் நாம் பார்த்தாக வேண்டும். இந்த முறையில் பார்க்கும்போது, பரவலாகத் தான் இந்தச் சேமிப்பை ஏற்படுத்த முடியுமே தவிர ஒரு சிலரிடமிருந்து மட்டும் ஏற்படுத்த முடியாது. அந்த அடிப்படையில்தான் நாம் திட்டங்களைக் கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த அளவில் பார்க்கும்போது இன்றைக்கு வருமானம் எதில் அதிகமாக வந்து கொண்டிருக்கிறது என்று பார்க்கும்போது தொழில் துறையில்தான் அதிகமான வருமானத்தை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. அதே சமயத்தில் விவசாயத் துறையில் வருமானம் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை எடுத்துப் பார்க்கும்போது, நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தவரை உற்பத்தி பெருகியிருக்கிறது. அகில இந்திய ரீதியில் எடுத்துப் பார்த்தாலும், எதிர்பார்த்த அளவிற்கு இல்லாவிட்டாலும்கூட, ஓரளவுக்கு உற்பத்தி பெருகியிருக்கிறது என்பதை நம்மால் பார்க்கமுடியும்.

நாட்டின் முதலீட்டுச் சக்தி உயரவேண்டுமானால் விவசாயத் துறையில் இருக்கின்றவர்களும் சம்பாதித்ததையெல்லாம் உடனடியாகச் செலவழித்து விடாமல் ஓரளவு சேமித்து வைத்து முதலீட்டுக்குக் கொடுக்க வேண்டும். முதலீடு செய்து அவர்கள் அந்த முதலீட்டின் பலனைப் பெறும் அளவுக்கு ஏற்பாடு செய்ய முடியும். வரியாகக் கொடுத்து விட்டு அதற்குப் பின்னாலே எந்த விதமான வருமானமும் கிடையாது என்ற முறையில் அல்ல இது. அதிலிருந்து உடனடியாக வருமானத்தைப் பெற முடியாவிட்டாலும்கூட பின்னால் பெறக்கூடிய முறையிலே அந்த ஏற்பாட்டைச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. பரவலாக விவசாயத் துறையிலும் இந்தச் சேமிப்பு ஏற்பாட்டைச் செய்தாக வேண்டும். தொழில் துறையிலும் சேமிப்புக்கு ஏற்பாடு செய்தாக வேண்டும்.

தொழில் துறையில் சேமிப்பு என்றால் எப்படி ? தொழில் துறையில் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவைகளை உற்பத்தி செய்ய ஓரளவு செலவு ஏற்படுகிறது. இயந்திரச் செலவு, வேலை செய்பவர்களுக்குச் சம்பளம் ஆகியவை உற்பத்திச் செலவில் அடங்குகிறது. இதையெல்லாம் கணக்குப் பார்த்து, ஒரு மூட்டைக்கோ, அல்லது ஒரு டன்னுக்கோ இன்ன விலை என்று நிர்ணயிக்கப்படுகிறது. உற்பத்திச் செலவு அளவுக்கே விற்றால் லாபம் கிடையாது. அதற்கு மேல் அதிகமாக மக்களிடத்தில் விற்கும்போது, 100 ரூபாய் பொருளை 110 ரூபாய்க்கு விற்கும்போது அந்த உற்பத்திச் செலவு அளவுக்கு மேல் 10 ரூபாயை யாரிடத்தில் விற்கிறோமோ அவர்களுடைய வாங்கும் சக்தியை இந்தப் பொருள்கள் மூலமாக உறிஞ்சிக் கொள்ளுகிறோம். எந்த அளவுக்கு அதிகமாக பொருள்கள் விற்கப்படுகின்றனவோ அந்த அளவுக்கு லாபம் அதிகமாக வரும். அப்படி வாங்கப்படுகிற தொகை எதற்காக உபயோகப்படுத்தப்படுகிறது என்பதைப் பொறுத்துத்தான் தொழில் துறையின் சேமிப்பு அமைந்திருக்கிறது. நாம் அதிகமாக முதலீடு செய்ய வேண்டு-



6th September 1960] [Sri C. Subramaniam]

மென்று நினைக்கும்போது, இந்தத் தொழில் துறையில் உற்பத்திச் செலவுக்கு மேல் லாபம் வைத்து விற்கும்போதுதான் சேமிப்பு ஏற்பட முடியும். அந்த லாபம் தனிப்பட்டவர்களின் ஆடம்பர வாழ்க்கைச் செலவாகப் போய்விட்டால் அது மக்களிடத்திலிருந்து உறிஞ்சப்பட்டு ஒரு சில தனிப்பட்டவர்களுடைய ஆடம்பர வாழ்க்கைக்குப் பயன்படுவதாகும். அது பிற்போக்கான பொருளாதார அமைப்பாகும். அவ்வாறில்லாமல் இந்தப் பத்து ரூபாய் முழுவதும் ஒரு புதிய தொழிலில் ஈடுபடுத்தப்பட்டால் அது தேசிய நலனுக்காக உபயோகப்படுத்தப்படுகிறது என்று வைத்துக் கொள்ளலாம். ஆகவே, இன்றைக்கு உள்ள பிரச்னை லாபம் எந்த அளவுக்கு வருகிறது என்பதல்ல ; அந்த லாபத்தினால் சேமிப்பு ஏற்படுகிறதா என்பதே கேள்வி. அந்த லாபம் எந்த முறையில் உபயோகப்படுத்தப்படுகின்றது என்பதைப் பொறுத்தே அதை நாம் காணவேண்டும். இந்த லாபத்தின் மூலமாகத்தான் நாம் ஓரளவு சேமிப்பைத் திரட்ட முடியும்.

லாபம் வரும்போது இன்னொன்றையும் பார்க்கிறோம். ஐந்து ரூபாய் லாபம் வந்தது, பத்து ரூபாய் லாபம் வந்தது என்று கூறி, தொழிலாளர்கள் இன்னும் அதிகமாகக் கூலி வேண்டுமென்று கேட்கிறார்கள். அதுவும் நியாயமாகத்தான் இருக்கிறது. அந்த லாபம் முழுவதையும் தொழிலாளர்களுக்குப் பிரித்துக் கொடுத்து விடுகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவ்வாறு கொடுத்து விடுவதனாலேயே தீங்கு வந்து விடுவதில்லை. பிரித்துக் கொடுத்த பிற்பாடு தொழிலாளர்கள் அந்தப் பணத்தை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதைப் பொறுத்துத் தான் இருக்கிறது. தொழிலாளர்கள் எல்லாச் சம்பளத்தையும் அன்றாடச் செலவில், சினிமாப் பார்ப்பதிலும், சாப்பாட்டிலும், துணிகள் வாங்குவதிலும் செலவழித்து விட்டால் நாட்டின் சேமிப்புச் சக்தி விரயமாகிவிடுகிறது. அவ்வாறு இல்லாமல் அந்தச் சம்பள உயர்வில் ஓரளவு வேண்டுமானால் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு எடுத்துக் கொண்டு பெரும் பகுதியை முதலீட்டுக்கு உபயோகப்படுத்தக்கூடிய முறையிலே செய்வோமேயானால் அப்போது சேமிப்பு ஏற்பட முடியும் ; மூலதனம் அமைவதற்கும் உரிய " காபிடல் பார்மேஷன் " ஏற்பட வழி உண்டாகும். இன்றைக்குத் தொழில் துறையில் அதிக லாபம் வரும்போது தொழிலாளர்களுக்கு நியாயமான கூலி வழங்குவது அவர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்துகிறது. அப்படித் தொழிலாளர்களுக்கு அதிகமாகக் கூலியைக் கொடுத்து, முதலீடு செய்யக்கூடிய சக்தி குறைந்துவிட்டால் நம்முடைய வளர்ச்சி குன்றிவிடும். இன்றைக்கு, " சம்பள உயர்வு கொடுத்துக்கொண்டே போகிறார்கள், மூலதன அமைவு (' காபிடல் பார்மேஷன் ') இல்லாமல் முதலீடு செய்ய வசதி இல்லாமல் போகிறது " என்ற கூக்குரல் எழுகிறது. அது நியாயமான புகாராகவும் இருக்கலாம். அந்தப் புகார் இல்லாமல் செய்து விட முடியுமா, இந்த முதலீடு அவசியமா, நியாயமானதா என்பதை நாம் பரிசீலித்துப் பார்த்து மூன்றாவது திட்ட காலத்தில் முடிவு எடுப்பது மிகவும் முக்கியமானது என்ற கருத்தைத் தான் நான் இந்தச் சபையின் முன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதை நாம் பார்க்கும்போது தனியார் துறையில் தொழில் துறை எவ்வாறு இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். தனியார் துறையில் 3,300 கோடி ரூபாய் அளவுக்குத் தொழில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்றால் ஒரு சில நபர்கள்தான் இந்தப் பெரும் வளர்ச்சியில் பங்கு கொண்டிருக்கிறார்கள் என்பதில் சந்தேகம் கிடையாது. (SRI M. KALYANASUNDARAM : அவர்களிடந்தான் வசதி இருக்கிறது.)

யாரிடம் அதிகமான அளவுக்குச் செல்வம் இருக்கிறதோ அவர்களிடந்தான் இன்னும் அதிகமாகப் போய்ச் சேரும் என்று இயேசு கிறிஸ்துகூடச் சொல்லியிருக்கிறார். ஆகையால் இன்றைக்குத்

[Sri C. Subramaniam] [6th September 1960

தொழில் வளர்ச்சி தனியார் துறையில் ஏற்பட்டிருக்கிறது என்று
சொன்னாலும்கூட நம்முடைய ராஜ்யத்தை எடுத்துக்கொண்டால்
10 பேர்—அகில இந்திய ரீதியில் எடுத்துக்கொண்டால் 100 பேர்—
அதற்குப் பொறுப்பாக இருக்கிறார்கள். அவர்களிடந்தான் மேலும்
மேலும் தொழில்கள் குவிந்து கொண்டே போகின்றன. இதனால்
நம்முடைய சமுதாயக் கொள்கை என்ன என்பதைப் பற்றிக்
குறிப்பிட வேண்டியிருக்கும். இந்தச் சமயத்தில் ஓரளவு அதைக்
குறிப்பிடுவது அவசியமாக இருக்கிறது. இன்றைக்குச் சமுதாயக்
கொள்கை, உற்பத்தி பெருக வேண்டுமென்பதுதான். அதன்
மூலம் ஒரு பக்கத்தில் போய் பொருளாதார சக்தி குவியக் கூடாது.
பரவலாக எல்லாருக்கும் கொடுக்க வேண்டுமென்று நாம் நினைக்
கிறோம். இன்றைக்குப் பொருளாதார சக்தி பரவலாக ஏற்படவில்லை
என்பதற்காக உற்பத்தியைக் குறைத்து விடுவோமேயானால் பொரு
ளாதார சக்தியும் குறைந்து விடும். பிறகு, பிரித்துக் கொடுக்க
ஒன்றும் இருக்காது. பொருளாதார சக்தி பரவலாக ஏற்படவில்லை;
சில இடங்களில் குவியலாக இருக்கிறது. அதன் காரணமாகத்
தொழில் அபிவிருத்தி ஒரு பக்கம் ஏற்பட்டிருக்கிறது. நாம்
இந்தப் பொருளாதாரச் சக்தியைப் பரவலாக எல்லாருக்கும் கிடைக்கக்
கூடிய முறையில் ஏற்பாடு செய்யவேண்டும். இதில் தொழிலாளர்
கொள்கை, தொழிற்கொள்கை (இண்டஸ்ட்ரியல் பாலிஸி), ஊதியக்
கொள்கை (வேஜ் பாலிஸி) எல்லாம் அடங்கியிருக்கின்றன என்பதே
என் கருத்து. இன்றைக்கு ஒரு தொழிலில் நிகர லாபம் வரும்போது,
தொழிலாளர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்ற
கொள்கையை ஏற்றுக் கொண்டால், அந்தத் தொழிலாளர்கள்
அதைச் செலவழிக்காமல் முதலீடு செய்வதற்கு அவர்கள் ஏற்பாடு
செய்வார்களேயானால் அதன் மூலம் இரண்டு நன்மைகள் ஏற்படு
கின்றன. அதனால் தொழிலாளர்கள் பங்கு அதிகமாகிறது. அவர்
களுக்குப் பலனில் பங்கு கிடைக்கிறது. அதே சமயத்தில் முதலீட்
டுக்கும் அவர்கள் உதவி செய்கின்றார்கள். அதோடு மட்டுமல்ல;
அவர்களுடைய பொருளாதார சக்தியும் உயருகிறது. தொழிலாளர்
கள் வெறும் தொழிலாளர்களாகவே இருந்து கொண்டிருப்பதற்குப்
பதிலாக அவர்களும் தொழில் உற்பத்தி ஸ்தாபனங்களில்
நேரடியான பங்கு பெறவும், அந்த ஸ்தாபனங்களில் நிலையான
அக்கறை எடுத்துக் கொள்ளக்கூடிய நிலைமையும் ஏற்படுகிறது.

இப்படி முதலீடு செய்ய வேண்டுமென்றால், தனிப்பட்ட தொழி
லாளர்கள் பேரிலும் பங்குகள் எடுத்துக் கொள்ளலாம். தொழி
லாளர்களுக்கு வரக்கூடிய பங்கையெல்லாம் ஒரு ட்ரஸ்ட் வைத்து,
அதன் மூலமாக வெவ்வேறு தொழில்களில்—நாம் இப்பொழுது
இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் செய்வது போல்—ஈடுபடுத்தி,
மொத்தமாக வரும் லாபத்தை அவரவர்கள் பங்குப் பிரகாரம்
பிரித்துக் கொடுக்கலாம். தொழிலாளர்களுடைய சக்தியை முத
லீட்டுக்குப் பயன்படுத்த வேண்டும் என்பது என்னுடைய முதல்
கருத்தாகும். அதைச் சபை முன் வைக்கிறேன்.

இதை ஏற்றுக்கொள்வோமானால், தொழிலாளர்களுக்கு அதிக
மாகக் கொடுத்ததால் "மூலதன அமைவு" ("காபிடல் பார்மேஷன்")
இல்லை என்ற தகராறும் வராது. இன்னொன்றும் முக்கியமாக
ஏற்படுகிறது. ஒரு இடத்திலே பொருளாதார சக்தி குவிவதற்குப்
பதிலாக, 10 லட்சம் பேர்கள், 50 லட்சம் பேர்கள் தொழிலாளர்
கள் இருக்கிறார்கள் என்றால், இந்தத் தொழிலாளர்கள் அத்தனை
பேரும், அதிலே பங்கெடுத்துக் கொள்ளும்போது, ஒரு சிலருக்குள்ள
சொத்து உரிமை மாறி, பலருக்கும் உரிமையாவதைப் பார்க்கிறோம்.

அமெரிக்காவில் பொருளாதாரத்தில் ஏற்பட்டிருக்கும் முக்கியமான
மாறுதலைக் கவனிப்போம். அங்கே 50 வருஷ காலத்திலே என்ன
மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பற்றிப் பல நிபுணர்கள்



6th September 1960] [Sri C. Subramaniam]

எழுதியிருக்கிறார்கள். அங்கு 50 வருஷங்களுக்கு முன்னால் பார்க்கும்
போது, நம் நாட்டில் இப்பொழுது இருப்பதைப்போல ஒரு
சில கோடீஸ்வரர்கள் இருந்தார்கள்; மற்றவர்கள் ஏழைகளாக
இருந்தார்கள். தொழில் முழுவதும் கோடீஸ்வரர்கள் கையில்
தான் இருந்தது. இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் முக்கியமான மாறு
தல், எந்தத் தொழிலை எடுத்துக்கொண்டாலும் சரி, சாதாரண
மாக இருக்கக்கூடிய தொழிலாளர்கள், வீட்டு வேலை செய்கின்ற
தொழிலாளர்கள் கூட, ஒவ்வொருவரும் பல தொழில் ஸ்தாபனங்
களிலே பங்கு போட்டு பங்குதாரர்களாக இருக்கிறார்கள். அங்கே
" ஒவ்வொரு தொழிலாளியும் ஒரு முதலாளி, ஒவ்வொரு முத
லாளியும் ஒரு தொழிலாளி" (**Every labourer is a capitalist
and every capitalist is a labourer**) என்ற முறையில் அமெரிக்கா
வில் புதிய மாறுதல் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த ஏற்
பாட்டை கம்யூனிஸ முறையை அனுசரித்து, எல்லாம் சமுதாயத்
திற்குப் பிரதிநிதியாக இருக்கும் சர்க்காரிலே இருக்கவேண்டும்
என்று ஏற்பாடு செய்வது ஒரு முறை. அதை விட்டுவிட்டு, பரவ
லான முறையில், தொழிலாளர்களும் பாமர மக்களும் பங்கெடுத்
துக்கொள்ளக்கூடிய முறை இருக்கவேண்டுமென்றால், தொழிலா
ளர்களுடைய சக்தியை அதிகப்படுத்தி, அவர்களுக்கு வரும் வரு
வாயை அதிகப்படுத்தி, அந்த வருவாயை வேறு செலவுகளிலே
ஈடுபடுத்தாமல், முதலீட்டிலே ஈடுபடுத்துவதன் மூலமாகத்தான்
நாம் பரவலான அம்முறையை ஏற்படுத்த முடியும். இதனால் பொரு
ளாதார சக்தி ஒரு இடத்திலே குவிவதையும் தடுக்க முடிகிறது
என்பதை வலியுறுத்திக் கூறுகின்றேன்.

இன்றைக்குத் தொழிலாளர்கள், தொழிலதிபர்கள் ஆகிய
இருவருக்கும் இடையே உள்ள முரண்பாடும் நாளடைவில் மறைந்து
விடக்கூடும். தொழிலாளர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால்,
" அதிக உற்பத்தி ஆவதினால் நமக்கு என்ன லாபம்? " என்று
நினைக்கிறார்கள். ஆனால், தொழிலாளர்களுக்கே அந்தந்தத்
தொழிலில் பங்கு இருக்கும்போது, அவர்களுக்கு அதிலே ஒரு
அக்கறை பிறந்துவிடுகிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டு
மானால், நான் எப்போதோ ஒரு பாங்கில் பத்து ரூபாய் பங்குப்
பணம் போட்டிருந்தேன். அதற்குரிய " டிவிடெண்டு " எனக்கு
சமீபத்தில் வந்து சேர்ந்தது. பெரிய அளவுக்குப் போடாவிட்டாலும்,
பத்து ரூபாய் அளவுக்குப் பங்குப் பணம் போடும்போது, அதிலிருந்து
ஒரு வருவாய் வரும்போது, அதிலே அக்கறை ஏற்படுகிறது.

SRI C. N. ANNADURAI: பாலாய் பாங்கில் போட்டிருந்தீர்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: பாலாய் பாங்கில் அல்ல.

பங்குப் பணம் போடும்போது, அந்தப் பாங்கியின்மீது அக்கறை
ஏற்பட்டுவிடுகிறது. அதுபோலவே, தொழில் ஸ்தாபனங்களில் தொழி
லாளர்கள் தாங்களும் பங்குதாரர்களாக இருக்கிறோம் என்ற மனப்
பான்மை ஏற்படும்போது அந்தத் தொழில் வளரவேண்டும், உற்பத்தி
பெருகவேண்டும், அதிலே லாபம் வரவேண்டும் என்று ஓரளவு
அக்கறை ஏற்பட்டுவிடுகிறது. வேலை நிறுத்தம் செய்யவேண்டுமென்று
தொழிலாளர்களிடையே ஏற்படுகிற மனப்பான்மையும், வேலை
நிறுத்தத்தை ஒடுக்கவேண்டுமென்று மற்றவர்களிடையே எழுகின்ற
மனப்பான்மையும் ஓரளவு குறையும். அதிக லாபம் வருமானால்,
தொழிலாளர்களுக்கு அதன் மூலம் பங்குக்கேற்றபடி ஈவுத் தொகை
யாக வந்து சேர்ந்துகொண்டிருக்கும் என்ற நிலைமை ஏற்படுகின்றது.
ஆகையால்தான் தொழிலாளர்களுடைய பங்கைக் குறைக்கலாம், வரு
வாயைக் குறைக்கலாம், அதன்மூலம்தான் முதலீடு அதிகமாக ஏற்பட
முடியும் என்ற ஒரு வாதத்தையும் நாம் எதிர்த்து முறியடிக்க
முடியும்.

[Sri C. Subramaniam] [6th September 1960

இதைப்போன்ற ஏற்பாடு செய்வதன் மூலமாகத்தான் தொழிலிலே
ஒரு குழப்பச் சக்தி இருப்பதைத் தவிர்க்க முடியும், தொழிலாளர்கள்
பரவலாகச் சொத்துரிமை பெறுவதற்கு ஏற்பாடு செய்ய முடியும்,
"தொழில் நன்றாக வளரவேண்டும்" என்று தொழிலாளர்களி
டையே அக்கறை ஏற்படுவதற்கும் நாம் அதிலே ஏற்பாடு செய்ய
முடியும். எந்த முறையிலே இதை நாம் செய்ய முடியும் என்று
யோசனை செய்து, இதற்கு வழிவகுத்தால், அதன் மூலமாக இந்தப்
பலன் ஏற்படுவது மாத்திரமல்லாமல், பின்னால் விலைவாசியை ஓர்
அளவிலே . வைத்திருப்பதற்கும் சாதகமாக இருக்கும் என்ற
கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன்.

இவ்வாறு தொழில் உற்பத்தியைச் செய்யவேண்டுமென்று
சொல்லும்போது, நான் முன்பு சொன்னதுபோல், மாதத்திற்கு
மாதம், வருஷத்திற்கு வருஷம் விலை உயர்ந்துகொண்டே போகு
மானால், எவ்வளவு செலவழித்தாலுங்கூட, செலவழிக்கப்பட்டதன்
பலன் குறைந்துகொண்டே வருகிறது. ரூபாய் 10,200 கோடி என்று
மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே செலவு செய்தாலும், அது
1952–53-ம் வருஷ விலைவாசி அடிப்படையில் ரூ. 8,500 கோடி
அளவுக்குத்தான் இருக்கிறது. விலைவாசி வருஷா வருஷம் விஷம்
போல் ஏறிக்கொண்டே போவது அவசியமா இல்லையா என்பதை
யோசிக்க வேண்டியிருக்கிறது. திட்டம் வேண்டும், திட்ட அடிப்படை
யிலே முன்னேற்றம் ஏற்படவேண்டும், திட்ட அடிப்படையிலே முதலீடு
வேண்டும் என்று சொல்வோமானால், வருஷத்திற்கு வருஷம்,
என், சில சமயங்களில் நாளுக்குநாள், மாதத்திற்குமாதம்—
விலை உயர்கிறது. அதுபோன்ற நிலைமை ஏற்படுமானால், முதலீடு
செய்வதற்கும் சேமிப்பதற்கும் உள்ள சக்தி ஏற்படுவது கஷ்டமாக
இருக்கிறது. விலை பெரிய அளவில் ஏறுமானால், சம்பளம் எவ்வ
ளவு தந்தாலும், அது பூராவும் அவர்களுடைய வாழ்க்கைத்
தரத்தை உயர்த்தாமல், இருக்கும் வாழ்க்கைத் தரத்திலும் இருக்க
முடியாமல் கஷ்டமாக இருக்கிறது. அப்பொழுது சேமிப்பு இல்லாமல்
போகிறது. இந்தச் சக்தி ஏற்படவேண்டுமென்றாலும்கூட, இந்த
விலை ஒரு நிதானமாக இருக்கவேண்டியது அவசியம். எந்த அள
விலே வரையறுக்கப்படுகிறது என்பதைப்பற்றிக் கவலை இல்லை.
"முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே இருந்த விலைவாசிக்குப் போகவே
வேண்டாம் ; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எந்த அளவுக்கு
இருந்தது என்று சராசரி போட்டு, அதை அடிப்படையான விலையாக
எடுத்துக்கொள்ளுங்கள்" என்றால் அதை நான் ஏற்றுக்கொள்ளத்
தயாராக இருக்கிறேன். விலையை நிர்ணயம் செய்த பிற்பாடு தாறு
மாறாக, கீழும் மேலும் போகக்கூடாது. ஏதோ 5 பர்சன்ட் மேலோ
கீழோ போகலாம். இதற்குள்ளே ஒட்டிக்கொண்டிருக்குமானால்,
அடங்கி இருக்குமானால், இதனால் பெரும் பாதகம் வந்துவிடாது.
ஆனால், தாறுமாறாக ஏறும் நிலைமையிலே இன்னொரு கஷ்டத்தை
யும் பார்க்கிறோம். எப்படித் தாறுமாறாக ஏறுகிறது ? செயற்கை
முறைகளிலே ஒரு ("ஸ்கேர்ஸிடி") தட்டுப்பாட்டை உண்டாக்கி,
அதன் மூலமாக விலை உயர்வை ஏற்படுத்துவதைப் பார்க்கிறோம்.

சமீபத்தில் நூல் விலை உயர்ந்தது. மில் முதலாளிகளைக் கேட்டால்,
"அதற்கு நாங்கள் பொறுப்பு இல்லை" என்கிறார்கள். பஞ்சு விற்
கிறவர்களைக் கேட்டால், அவர்களும் அப்படியே சொல்லுகிறார்கள்.
தொழிலாளர்களும் தங்களுக்கு ஒன்றும் அதிகமாக வருவாய்
வரவில்லை என்கிறார்கள். இப்படியிருக்கும்போது, நூல் விலை 15
பர்சன்ட் அளவுக்கு ஏறியிருக்கிறதைப் பார்க்கிறோம். அப்படி
ஏறும்போது, நியாயமான கணக்கு வருகிற மாதிரி வந்தாலும்
பரவாயில்லை ; அதை முதலீட்டுக்குக் கொண்டுவரலாம். ஆனால்,
தாறுமாறாக ஏறும்போது, கணக்கில் வராத லாபம் ஏற்படுவதற்கும்,
"ப்ளாக் மணி" க்கும் இடம் கொடுத்து விடுகிறது. "ப்ளாக் மணி"
வரும்போது கணக்கில் கொண்டுவர முடியாது. அதை முதலீடு
செய்ய முடிவதில்லை. ஆகவே, தேங்கிப் போகிறது. அது தேங்கிப்



6th September 1960] [Sri C. Subramaniam]

போவதினால் பொருளாதாரம் அடியோடு கெடுகிறது. அதனால், மக்க
ளுடைய சக்தியும் தேங்கிப் போய், மேலும் மேலும் முதலீட்டில்
ஈடுபட்டு பொருளாதார வளர்ச்சிக்கு உபயோகப்படாமல் அது எங்கோ
போய்த் தேங்கிவிடுகிறது. அதனால் பல சமுதாயத் தீமைகள்
விளைவதற்கு வழி ஏற்படுகின்றது. குறுக்கு வழியிலே செலவழிக்க
ஆரம்பித்துவிடுகிறார்கள். இதைத் தவிர்க்க வேண்டுமென்றாலும்,
முதலிலே சேமிப்புச் சக்தியைச் சமப்படுத்த வேண்டுமென்றாலும்
விலையைக் கட்டுப்படுத்துவது அவசியம். தாறுமாறாக விலை ஏறி,
தேங்கிப் போகும் பொருளாதார நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு
விலைக் கட்டுப்பாடு அவசியம். பல பேர் கேட்கிறார்கள், "எத்தனையோ
பொருள்கள் இருக்கின்றனவே, எல்லாவற்றுக்கும் விலைக் கட்டுப்பாடு
செய்துவிட முடியுமா ?" என்று. கார் உற்பத்தியை எடுத்துக்கொண்
டால், எத்தனை கார்கள் விற்றுவிடப்போகின்றன ? ஆயிரம் கார்கள்
விற்கலாம், இந்த முறையற்ற முறைகளிலே. ஆனால், கணக்குப்
பார்த்தால், மொத்தத்தில் இது அதிகமில்லை. ஆனால், நூலைப்
பொருத்தவரையில், அதைக்கொண்டு உற்பத்தியாகும் துணியை எல்
லோரும் வாங்கவேண்டியதாக இருக்கிறது. ஒரு சிறு அளவு,
இரண்டு ரூபாய் அளவுக்கு, கட்டு ஒன்றுக்கு அதிகம் விலை வைத்தா
லும், ஒரு மாதத்திற்கு ஒரு கோடி இரண்டு கோடி ரூபாய் அளவுக்குக்
காணாமல் மறைந்துபோகும் நிலைமை ஏற்படுகிறது. இதுபோன்ற
இன்றியமையாத பொருள்களில் உணவு மிகவும் முக்கியமானது.
ஸில்க் துணியை வேண்டுமானால் 'பெரியவர்கள்' வாங்கலாம்.
அது ஒரு புறம் இருக்கட்டும். சாதாரண மக்கள் வாங்கும் துணி
மிகவும் இன்றியமையாததாக இருக்கிறது. ஆகவே, துணி, உணவுப்
பொருள் இந்த இரண்டுக்காவது நாம் உடனடியாக விலைக் கட்டுப்
பாட்டை ஏற்படுத்தியாக வேண்டும். அடுத்தபடியாக, குடியிருப்பு வசதி
இருக்கிறது. அதற்கும் கட்டுப்பாடு வேண்டும். அதற்காக நாம்
சமீபத்தில் சட்டம் செய்திருக்கிறோம். ஆகையால், விலையைக் கட்டுப்
படுத்துவது மிகவும் அவசியமாக இருக்கிறது. அதைக் கட்டுப்படுத்த
வில்லையென்றால் என்ன ஆகிறது ? தொழிலாளர்கள் தங்களுக்கு
அதிகச் சம்பளம் வேண்டுமென்ற கிளர்ச்சி, விலைவாசி அதிகமாகப்
போகும்போது ஏற்படுகிறது. அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை
நிலைநிறுத்த முடியாமல் போகிறது. என்.ஜி.ஓ.-க்களைப்பற்றி
நிதி ஒதுக்கல் சட்டம் நிறைவேற்றினோம் என்றால், அதுவும் விலை
உயர்வு காரணமாக ஏற்பட்டதுதான். அப்படிக் கொடுத்தும் திருப்தி
இல்லை. அதற்குமேலே விலை ஏறுகிறது, முன் இருந்த அளவு கூட
வசதி இல்லையே என்று அவர்கள் குறை சொல்லுகிறார்கள். இன்னும்
அதிகமாக வரி போட்டு வேறு விதத்தில் நாம் அதிகமாக நிதியைத்
திரட்டினாலுங்கூட இதுமாதிரி அன்றாடச் செலவைச் சம்பளத்திற்கே
அதிகமாகக் கொடுத்துவிடவேண்டுமென்ற நிலைமைதான் ஏற்பட்டுக்
கொண்டிருக்கிறது.

ஆகையினால்தான் இன்றைக்குத் திட்டம் நிறைவேறவேண்டும், 11-00 a.m.
சேமிப்பு ஏற்படவேண்டும் என்று சொன்னால், விலை நிர்ணயக்
கொள்கையை வகுக்கவேண்டும். விலை நிர்ணயக் கொள்கையை
வகுத்தால் மட்டும் போதாது. அதை அமுலுக்குக் கொண்டு
வந்தாக வேண்டும். அந்த முறையில் நாம் வேண்டிய ஏற்பாடு
களைச் செய்யவேண்டும். "விலை உயர்ந்து கொண்டே போகட்
டும், சம்பளம் உயர்ந்து கொண்டே போகட்டும்" என்று
சொன்னால், "ஸ்பைரல் இன்ப்ளேஷன்" தான் ஏற்படும். ஒன்றை
ஒன்று தள்ளிக்கொண்டே போய், மேலே தாங்கமுடியாத நிலைமை
ஏற்பட்டு, பொருளாதாரம் முழுதும் நாசமாகக்கூடிய நிலைமை
ஏற்படும். முன்னேற்ற சக்தி வளரவேண்டுமென்று சொன்னால், பண
வீக்கத்தைத் தடுக்க வேண்டுமென்று சொன்னால்—சம்பள உயர்வு
வருவது ஒரு பக்கம். அதனால் கொஞ்சம் முதலீடு அதிகமாக
ஆகலாம் என்று சொல்லலாம்—விலை நிர்ணயக் கொள்கை மிகவும்
அவசியம். விலை நிர்ணயக் கொள்கையை அடிப்படையாக வைத்துக்
கொண்டு தொழிலாளிகளுக்கு எவ்வளவு கொடுக்கவேண்டும்,

[Sri C. Subramaniam] [6th September 1960

முதலாளிகள் எவ்வளவு பெறலாம், மற்றவர்களுக்கு எவ்வளவு
பிரித்துக் கொடுக்கலாம் என்ற அளவுகளை வகுத்தால்தான் சேமிக்க
முடியும். திட்டம் போட்டுத்தான், திட்ட ரீதியாகத்தான் அதைச்
சொல்ல முடியும். நாம் கணக்குப் போட்டுச் சொல்லவேண்டும்.
ஏதோ விலை ஏறிக்கொண்டு போகிறது, ஏதோ வாங்குகிறார்கள்,
எப்படியோ வந்து சேர்ந்துவிடும் என்று நினைத்தால் அது திட்டம்
(பிளானிங்) அல்ல. டிரிப்டிங் தான். அது திட்டத்திலிருந்து விலகிப்
போவது. திட்டம் (பிளானிங்) என்ற பெயரை அதற்குக் கொடுக்க
முடியாது. நமக்குத் திட்டம் (பிளானிங்) வேண்டுமா? அல்லது
(டிரிப்டிங்) அதிலிருந்து விலகிப்போகவேண்டுமா என்பதை ஆலோ
சித்து முடிவு செய்யவேண்டும். திட்ட அட்டவணை போட்டு, கணக்குப்
போட்டுவிட்டால் மட்டும் போதாது. அதற்கு வேண்டிய வசதிகளையும்
ஏற்படுத்தவேண்டும், முறைகளை வகுக்கவேண்டும். அப்படிச் செய்யா
விட்டால் அது விலகிப் போவதாக (டிரிப்டிங்காக) இருக்கும் என்பதிலே
சந்தேகம் இடையாது. அதற்கான ஒரு முடிவையும் நாம் எடுக்கக்
கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்தபடியாக, நாம் முடிவு செய்யவேண்டியது எந்தத் துறையிலே
என்னென்ன உற்பத்தி செய்யவேண்டும் என்பதுதான். விவசாயத்
துறைக்கு முதல் இடம் கொடுத்து, விவசாய உற்பத்தி பெருகவேண்டு
மென்பதில் சந்தேகம் இடையாது. அதற்கு என்ன முயற்சி எடுக்க
வேண்டும், ராஜ்ய சர்க்கார் அளவிலே என்ன செய்யவேண்டும்
என்பதைப்பற்றி இந்தக் குறிப்பிலே விரிவாகக் கொடுக்கப்பட்
டிருக்கிறது. அதை நான் திருப்பிச் சொல்லவேண்டிய அவசியம்
இல்லை. தொழில் துறையிலே நாம் என்னென்ன முயற்சி எடுத்துக்
கொள்ளவேண்டும், எப்படிச் செய்யவேண்டும் என்பதைப்பற்றியும்
இந்தக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது.

இரண்டு முக்கிய லட்சியங்களை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.
அதை நாம் வலியுறுத்திக்கொண்டும் வருகிறோம். அதை நடைமுறை
யில் கொண்டு வந்தாகவேண்டும். முதலிலேயே நான் குறிப்பிட்டேன்.
பணக்காரர்கள் இன்னும் அதிகப் பணக்காரர்களாக ஆகக்கூடிய
நிலைமை, ஏழைகள் முன்பு இருந்த நிலைமையிலே இருப்பது,
அல்லது அதைவிட மோசமான நிலைமையில் போய்க்கொண்டிருப்பது
என்ற நிலைமை ஏற்படாமல், பரவலாக எல்லோருக்கும் நன்மை
ஏற்படக்கூடிய முறையில் திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டும்.
அதற்கான வழி முறைகளை வகுக்கவேண்டும். அதைப்பற்றி சில
கருத்துக்களை நான் சொன்னேன். இரண்டாவதாக கவனிக்கவேண்
டியது, எப்படி ஒரு தனிப்பட்ட நபர் மட்டும், தனிப்பட்ட சமூகம் மட்டும்
முன்னேறிக்கொண்டிருக்கக்கூடாதோ, அதேபோலத்தான் ஒரு பகுதி
மட்டும் முன்னேறிக்கொண்டு, மற்ற பகுதிகள் பின்தங்கி இருக்கக்
கூடிய நிலைமை ஏற்படக்கூடாது. நாட்டில் சில பகுதிகள் முன்னேறிக்
கொண்டிருப்பதையும், மற்ற பகுதிகள் முன்னேறக்கூடாத நிலைமை
யில் இருப்பதையும் தவிர்க்கவேண்டும். தனிப்பட்டவரிடையே வேறு
பாடு ("இண்டிவிஜுவல் டிஸ்பாரிடி") ஒரு பக்கம் இல்லாமல் இருக்க
வேண்டும். அதற்கு அடுத்தபடியாக, பகுதி வேறுபாடு ("ரீஜனல்
டிஸ்பாரிடி") இல்லாமல் இருக்கவேண்டும். பகுதிக்குப் பகுதி இருக்கக்
கூடிய ஏற்றத்தாழ்வை மாற்றி அமைத்தாக வேண்டும். இந்த
இரண்டு கருத்துக்களையும் கொள்கை அளவில் எல்லோரும் ஒப்புக்
கொண்டிருக்கிறார்கள். ஆனால் அது எந்த அளவுக்கு நடைமுறையில்
வந்திருக்கிறது என்று பார்க்கும்பொழுது, திருப்தி அடையக்
கூடிய அளவுக்கு இல்லை என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டாக
வேண்டும். தேசீய அபிவிருத்தி ஆலோசனைக்குழு (கவுன்சில்) கூடும்
பொழுது, ஒவ்வொரு கூட்டத்திலும் எப்படியாவது இதைச் சொல்ல
வேண்டுமென்ற காரணத்தினால், "நியூஸன்ஸ், திரும்பத் திரும்பச்
சொல்லுகிறாரே" என்று மற்றவர்கள் நினைத்தாலும்கூட, ஒவ்வொரு
சமயத்திலும் ரீஜனல் டிஸ்பாரிடியை நீக்குவதற்கு நாம் வழி
வகுத்தாகவேண்டும்—அதற்கான புள்ளி விவரங்களைச் சேகரித்தாக



6th September 1960] [Sri C. Subramaniam]

வேண்டும் என்று வலியுறுத்திக்கொண்டு வருகிறேன். புள்ளிவிவரம்
இல்லாவிட்டால், வெகு சுலபமாக இந்தக் கோரிக்கையைத் தட்டிக்
கழித்து விடுகிறார்கள். இப்பொழுது தென் பிராந்தியத்திற்கு பல
தொழில்கள் ஒதுக்கவேண்டும் என்று கேட்டபொழுது, அங்கே நமக்கு
அண்டையிலே இருக்கக்கூடிய ராஜ்யங்களைத் தட்டிவிடுகிறார்கள்.
அதன் பலன் என்னவென்றால் ஆந்திராவைச் சேர்ந்தவர்கள்,
எல்லாம் தமிழ் நாட்டிற்கே போய்ச் சேருகிறதே என்று சொல்லு
கிறார்கள். கனம் மந்திரி வெங்கடராமன் அவர்கள் எல்லா லைசென்ஸ்
களையும் வாங்கிக்கொண்டு போய்விட்டார்களே என்று புகார் சொல்லு
கிறார்கள். ஓரளவுக்கு அம்மாதிரி இருக்கலாம். அகில இந்திய ரீதியில்
ஒப்பிட்டுப் பார்க்காமல், ஆந்திராவுக்கும் நமக்கும் கணக்குப்போட்டு
ஒருவருக்கொருவர் அதிகமாக வாங்கிக்கொண்டு போய்விட்டதாகச்
சொல்லுவதினால் நன்மை ஒன்றும் வந்துவிடாது. அதேமாதிரிதான்
நம்மையும் தட்டி விடுவதற்கு ஆரம்பித்திருக்கிறார்கள். "நீங்கள்
ரீஜனல் டிஸ்பாரிடி என்று சொல்லுகிறீர்களே, ராமனாதபுரத்தில்
நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்?" என்று கேட்கிறார்கள். அதேமாதிரி
நான் நிதி மந்திரியாக இருப்பதால் கோவைக்கே எல்லாத் திட்டங்
களையும் போட்டுவிட்டதாகச் சொல்லி அல்லது சென்னையில் அதிகமாக
திட்டங்களை போட்டுவிட்டதாகச் சொல்லி, நமக்குள்ளேயே தட்டிவிட்டுக்
கொண்டிருந்தால் நம்முடைய நோக்கம் நிறைவேறாது. குழப்பம்
தான் ஏற்படும்.

திட்டம் போடுவது குழப்பத்தை உண்டாக்குவதற்காக அல்ல.
திட்டம் போடுவது தெளிவை உண்டாக்கி பல பணிகளை நிறைவேற்று
வதற்கான சூழ்நிலையை உண்டாக்குவதற்காகத்தான். ஆகவே
இங்கே ராமனாதபுரம் ஜில்லாவில் அதைச் செய்யவில்லை, இதைச்
செய்யவில்லை. அப்படியிருக்கும்பொழுது நீங்கள் இதையெல்லாம்
சொல்லுவதற்கு நியாயம் இல்லை, என்று சொல்லக்கூடிய
வாதம் யாராலும் ஒப்புக்கொள்ளக்கூடிய வாதம் அல்ல.
"ரீஜனல் டிஸ்பாரிடி" இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்
டியது மிகவும் அவசியம். அதற்கு எந்த முறையில் திட்டம் வகுக்க
வேண்டும் என்பதைப்பற்றி நாம் ஆராயக் கடமைப்பட்டிருக்கிறோம்.
ஓரளவுக்கு ஆராய்ந்து பார்த்திருக்கிறோம். "தென் பிராந்தியத்திற்கு
எவ்வளவு என்று சொல்லிவிடுங்கள், நாங்கள் அதை எங்களுக்குள்
பிரித்துக்கொள்ளுகிறோம், அதற்கு பிளானிங் கமிஷனின் உதவியை
நாடவில்லை, எங்களுக்குள் எப்படிப் பிரித்துக்கொள்ளுவது என்பதை
முடிவு செய்து ஒத்துக்கொண்டு, நாங்களே பிரித்து எடுத்துக்கொள்ளு
கிறோம்" என்று பல சமயங்களில் நான் சொல்லியிருக்கிறேன். இப்
பொழுது ஓரளவுக்கு அதை நாம் கவனிக்கவேண்டும். தமிழ் நாட்டை
மட்டும் நான் பிரித்துப் பேசவில்லை. ஆந்திரா, கேரளா, மைசூர்
என்று பொதுவாக இருக்கக்கூடிய தென் பிராந்தியத்தைப் பற்றியே
நான் பேசியிருக்கிறேன். அதே மாதிரி வடக்கேயும் பிற்போக்கான
பிராந்தியங்கள் பல இருக்கின்றன. அவைகளுக்கும் முக்கியத்துவம்
கொடுத்தாகவேண்டும் என்பதையும் நான் வலியுறுத்துகிறேன். ஒரு
பக்கத்தில் அதிகமாகப் போகக்கூடாது என்பதைத்தான் வலியுறுத்து
கிறேன். சென்னையை மட்டும் பிரித்துச் சொல்லவில்லை, தென்
பிராந்தியத்தை மட்டும் பிரித்துச் சொல்லவில்லை. எந்தப் பகுதிகள்
பிற்போக்கான நிலைமையில் இருக்கின்றனவோ, அந்தப் பகுதிகளின்
பிற்போக்கை நீக்குவதற்கு நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.
நடவடிக்கை எப்படி எடுக்கமுடியும்? புதிய தொழில்களை ஆரம்பிப்பதி
னாலும், புதிய பாசனத் திட்டங்களை ஏற்படுத்துவதினாலும் பிற்போக்கான
பகுதிகளை முன்னேறச் செய்யலாம். நாம் இன்றைக்கு அதற்கான
முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். திட்டத்தைப் பரிசீலனை
செய்யும்பொழுது இந்த அம்சத்தையும் மனதில் வைத்துக்கொண்டு
பரிசீலனை செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்.

எல்லாத் தொழில்களும் நமக்கே கிடைக்கவேண்டுமென்ற விருப்பம்
ஒரு பக்கம். ஸ்ரீ அண்ணாதுரை அவர்கள் நேற்று 'ஆசைப்
படுவதில் நியாயம் இல்லை என்று சொல்ல முடியாது' என்று.

[Sri C. Subramaniam] [6th September 1960

சொன்னார்கள். ஆசைப்படலாம். ஆனால், அதில் எது சாத்தியம் என்பதைப் பார்த்துத்தான் முடிவு செய்யவேண்டியிருக்கிறது. எல்லாத் தொழில்களும் நமக்கு வேண்டும் என்று நாம் ஆசைப்பட்டாலும்கூட, அவைகளுக்கான சாத்தியக்கூறு எப்படி இருக்கிறது என்பதைப் பார்த்துத்தான் முடிவு செய்யவேண்டும். நம்முடைய ராஜ்ய திட்டத்தை, அகில இந்திய ரீதியிலே,—அகில இந்திய ரீதியிலும்கூட ஒரு ஐந்து வருஷத்திற்கு மட்டும் அல்ல, 10, 15 வருஷத்திற்கு ஏற்பட வேண்டிய முன்னேற்ற அடிப்படையை வைத்துக்கொண்டு—பரிசீலனை செய்வோமானால், நல்ல முடிவுக்கு வரமுடியும். நாங்கள் தயாரித்து இருக்கும் திட்டத்தில் குற்றம் குறைகள் இருந்தாலும், அந்தக் குற்றங் குறைகளை நீக்கி, நல்லதொரு திட்டத்தைச் சமர்ப்பிக்க முடியும் என்பதை நாம் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். நம்முடைய திட்டத்தைப் பொறுத்தவரையிலே மூன்று விஷயங்களுக்கு முக்கிய இடம் கொடுத்திருக்கிறோம். முதலாவதாக, விவசாயத் துறையில் எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைகிறோமோ அந்த அளவுக்கு மக்களுடைய சக்தி உயர முடியும். நம்முடைய ராஜ்யத்தில் 100-க்கு 70 பேர்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருப்பதால், அவர்களுடைய சக்தி உயராவிட்டால், சேமிப்புச் சக்தியும் அந்த அளவுக்குக் குறைந் திருக்கும். புதிய தொழில்கள் ஆரம்பித்து, மாறுதல்கள் ஏற்படுவது வேறு. இப்பொழுது இருக்கும் நிலைமையை அனுசரித்தால், விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுடைய சக்தி உயரவேண்டும், விவசாய உற்பத்தியைப் பெருக்கி ஆகவேண்டும். பெருவாரியான மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருப்பதால், விவசாயத் துறைக்கு முதல் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது திட்ட காலத்தில் நாம் பெருமைப்படும் அளவுக்கு, விவசாயத்தில் முன்னேற்றம் அடைந்து இருக்கிறோம். மற்றப் பகுதிகளில் ஏற்பட்டிருப்பதைவிட, நம் ராஜ்யத்தில் விவசாய உற்பத்தி கணிசமாக அதிகரித்திருக்கிறது. அதை அடிப்படையாக வைத்துக் கொண்டு, மூன்றாவது திட்ட காலத்திலும் கணிசமான உற்பத்திப் பெருக்கு காணமுடியும் என்று நினைப்பதில் தவறு ஒன்றும் இல்லை. ஒரு தரம்தான் பெருக்கம் அடைய முடியும், மறுபடியும் அடைய முடியுமோ, முடியாதோ என்பதில்லை.

அடுத்தபடியாக முக்கியத்துவம் வாய்ந்தது மின்சாரம். விவசாயத்திற்கும், தொழிலுக்கும் அவசியமானது மின்சாரம். ஆகவே, அதற்கு இரண்டாவது இடம் கொடுத்திருக்கிறோம். அணைகளெல்லாம் அநேகமாகக் கட்டி முடிந்துவிட்டன. புதிதாக ஏதாவது இருக்கிறதா என்று அமைச்சரவர்கள் பல்வேறு பாகங்களிலும் சென்று பார்த்துக்கொண்டு வருகிறார்கள். அதற்காகவும் தொகை ஒதுக்கியிருக்கிறோம். அதற்கும் மேலாக அடிப்படையாக இருக்கும் தொழில்களில், எந்தெந்தத் தொழில்கள் ஏற்படுத்த முடியும் என்று பரிசீலனை செய்திருக்கிறோம். இப்பொழுது இரும்பு உருக்குத் தொழில் அமைக்கச் சாதகமான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. நம்பிக்கை ஊட்டும் முறையில், பலன் தெரிகிறது. அடுத்தாற்போல், அலுமினியம் தொழில். தொழில் துறை பற்றித் தனியாக அறிக்கை தயாரித்து அங்கத்தினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதில், சட்ட சபைக் குழுவினரின் அபிப்பிராயங்களும் தந்திருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, போக்குவரத்து வசதி. தூத்துக்குடித் துறைமுகத்திற்கு முதல் இடம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதை சேது சமுத்திரத் திட்டத்தோடு சேர்த்துச் செய்யவேண்டும் என்று இருக்கிறது. தூத்துக்குடித் துறைமுகம் நமக்கு வேண்டுமென்று சொன்னால், அது தமிழ் நாட்டுத் துறைமுகம் என்பதற்காக மட்டுமல்ல, தூத்துக்குடித் துறைமுகத்திற்கு முதல் இடம் அளிக்கப்பட வேண்டுமென்று ஒரு தனிப்பட்ட நிபுணர்கள் கமிட்டி அப்படிச் சிபாரிசு செய்திருக்கிறது. அதே போல ரெயில்வே வசதிகள் இவற்றை எப்படிச் செய்வது என்று ஆராயவேண்டும். மின்சாரத்தைப் பற்றிச்



6th September 1960] [Sri C. Subramaniam]

சொல்லும்போது, அணுசக்தியைப் பற்றியும் ஆராயவேண்டியிருக்
கிறது. முதல் அணுசக்திக் கூடம் ஏற்பட்டாகிவிட்டது. இரண்டாவது
கூடத்தை நம் ராஜ்யத்தில் நிறுவ முயற்சி செய்கிறோம்.

மேலும், பரிசீலனை செய்ததின் காரணமாக, நம் ராஜ்யத்தில்
எண்ணெய் இருப்பதற்கான சின்னங்கள் தெரிகின்றன. அது பற்றித்
தீவிரமாக இரண்டாவது கட்டப் பரிசீலனை நடக்கிறது. பரிசீலனை
வெற்றி பெற்றால், ஓர் எண்ணெய்த் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டும்
என்று வலியுறுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். ஆகவே, அதற்கான
ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

அடுத்தபடியாக எஞ்ஜினியரிங் தொழில். எளிய (லைட்) எஞ்ஜினி
யரிங் தொழிலில், எல்லோரும் பாராட்டக்கூடிய முறையில், அகில
இந்தியாவிலும் பார்க்கும்போது, நாம் முன்னேறியிருக்கிறோம்
என்று சொல்ல வேண்டும். நம் தமிழ் நாடு முன்னணியில் இருப்
பதைப் பற்றி நாம் பெருமை கொள்ளலாம். இப்பொழுது கிண்டி
தொழில் பேட்டை இருக்கிறது ; அதே போன்று பல தொழில் பேட்டை
கள், பல ஜில்லாக்களில் தாலூகா தலைநகரங்களிலும் ஏற்பாடு செய்
திருக்கிறோம். இதற்கப்பால் அறிவு வளத்தைப் பெருக்க வேண்டும்.
அதற்குக் கல்வித் துறையில் என்னென்ன செய்ய வேண்டுமென்று,
திட்டம் போட்டு இருக்கிறோம். அதன் பிறகு, சுகாதார வசதி,
வைத்திய வசதி, கால்நடை வளம் இவை எந்த அளவுக்கு அபி
விருத்தி செய்யப்பட வேண்டுமென்பதும் குறிப்பில் கொடுக்கப்பட்டிருக்
கிறது. அப்படிப் பல வழிகளிலும். பரிசீலனை செய்து திட்டம் தீட்டி
யிருக்கிறோம்.

திட்டம் தீட்டுவதனாலேயே திட்டம் நிறைவேறி விட முடியுமா
என்றால், முடியாது ; நிர்வாக அமைப்பு முறை திறமையுள்ளதாக
(administrative organization) இருக்க வேண்டும். தனியார்
துறையானாலும் சரி, பொதுத் துறையானாலும் சரி, நிர்வாக அமைப்பு
முறை திறமையாக இல்லாவிட்டால், திட்டங்களை நிறைவேற்ற முடி
யாது. அதைத்தான் கேள்வி நேரத்தில் பிரஸ்தாபித்தார்கள். ஏதோ
முன்போல, கலவரங்களை அடக்கிக் கொண்டு, மக்களுக்குக் கோர்ட்டு
வசதி செய்து கொடுத்து வசதிகளைச் செய்வது என்பது முன்பு இருந்த
சமுதாய அமைப்புக்கு உகந்ததாக இருக்கலாம் ; அதற்கேற்றவாறு
நிர்வாக அமைப்பும் திறமை வாய்ந்ததாக இருந்து இருக்கிறது ஆனால்,
இன்று புதிய புதிய தொழில்கள் மலர ஏற்பாடு செய்தாக வேண்டும் ;
இப்பொழுது இரும்புத் தொழிலை எடுத்துக் கொள்ளுங்கள். எந்த
இடத்தில் அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்துவது, அதற்கு வேண்டிய
தண்ணீர் வசதி எங்கு இருக்கிறது என்றெல்லாம் பரிசீலனை செய்து
பார்க்க வேண்டியிருக்கிறது. அதற்கு வேண்டிய ரெயில்வே வசதிகள்,
ரோடு வசதிகள் எல்லாம் செய்தாக வேண்டியிருக்கிறது. குறித்த
காலத்தில் இவையெல்லாம் சேர்ந்து அமைக்கப்படவேண்டும். இல்லா
விட்டால் விரயம் இல்லாமல் காரியங்களைச் செய்ய முடியாது. சில
இடங்களில் அப்படித்தான் நடந்து விடுகிறது. குறையை ஒப்புக்கொள்
வதில் தவறு ஒன்றுமில்லை. ஒரு இடத்தில் ஒரு பாலத்தை எட்டு
கோடி, பத்து கோடி என்று செலவு செய்து கட்டுவோம் ; ஆனால்,
நதிக்குப் பாலம் கட்டி விட்டாலும், இணைப்பு ரோடு அமைக்கப்படாமல்
இருக்கும். அதுபற்றிக் கேட்டால், மத்திய சர்க்காருக்கும், ராஜ்ய
சர்க்காருக்கும் கடிதப் போக்குவரத்து நடந்துகொண்டிருக்கிறது
என்று சாக்கு வரும்; பல கோடி ரூபாய்களைச் செலவு செய்த பிறகு
மக்களுக்கு அது உபயோகமில்லாமல் இருக்கும்; அது மக்களின்
போக்குவரத்துக்கோ, பொருளாதார நன்மைக்கோ பயன்படாமல்
இருக்கும். ஆகவே, எந்தத் திட்டம் போட்டாலும், அதில் இணைந்து
வேலை செய்யும் முறை (கோ-ஆர்டினேஷன்) ரொம்ப அவசியம்.

இப்பொழுது நிலக்கரியை எடுத்துக்கொண்டால், பல்வேறு தொழில்
களுக்கு, நிலக்கரி அவசியமாக இருக்கிறது. ரெயிலுக்கு அது முக்கிய
மாக வேண்டியிருக்கிறது. நம்மிடமிருக்கும் இரண்டு தொழிற்சாலை

களுக்கும், உரம் உற்பத்தி செய்ய, நிலக்கரி வேண்டியிருக்கிறது. புதிய புதிய தொழிற்சாலைகளை அமைக்கும்போது, நிலக்கரி இருந்தால் தான் அவை பயன்தர முடியும். இன்று நிலக்கரி உற்பத்தியில் குறை ஏற்பட்டிருக்கிறது என்று வைத்துக்கொண்டால், அதன் விளைவை அறிந்துகொள்ள சென்ற வருஷ நிகழ்ச்சி வலியுறுத்தப்படவேண்டும். விவசாயத்திற்கு முதல் இடம் கொடுக்கும்போது, அதற்கு உரம் அத்தியாவசியமாக இருக்கிறது. ஆகவே, உரத்திற்கு முதல் இடம் கொடுத்தாக வேண்டும் என்று முடிவு செய்கிறோம். நம்மிடம் இரண்டே தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஒன்று திருவாங்கூரிலும், இன்னொன்று சிந்திரியிலும் இருக்கின்றன. அம்மோனியம் சல்பேட் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைகள் 1958–59-ல் மூன்றேகால், அல்லது மூன்றரை லட்சம் டன் அளவுக்கு உற்பத்தி செய்தார்கள் சிந்திரியில். சென்ற ஆண்டில், 1959–60-ல், 60,000 டன் குறைந்து விட்டது. உர உற்பத்திக்கு முதல் இடம் கொடுக்க வேண்டும் என்று சொல்லும் காலத்தில், உர உற்பத்தி செய்யும் இயந்திர சக்தியை வைத்துக்கொண்டும், உற்பத்தி குறைந்திருக்கிறது. அதற்கு என்ன காரணம் ? வேறு பல காரணங்கள் இருக்கலாம். ஆனால், அவற்றில் ஒன்று போதுமான நிலக்கரி இல்லை என்பதுதான். இருக்கும் நிலக்கரி ரெயிலுக்கும் மற்ற தொழிற்சாலைகளுக்கும் கொடுக்க வேண்டியிருந்தது. சிந்திரிக்குப் போதுமான நிலக்கரி கிடைக்க வில்லை. கோ-ஆர்டினேஷன் இப்படியிருந்தால் புதுப் புதுத் திட்டங்களால் என்ன பிரயோஜனம் ? ஆகவே, எல்லாவற்றையும் கண்காணித்து, அங்கங்கே வேண்டியதைச் செய்ய வேண்டியிருக்கிறது. நிலக்கரி அமைச்சு (கோல் மினிஸ்ட்ரி) தனியாகவும், ரெயில்வே அமைச்சு தனியாகவும், மற்ற அமைச்சுகள் தனித்தனியாகவும் இயங்க முடியாது. எல்லோரும் உட்கார்ந்து, இன்னின்னதற்கு இவ்வளவு நிலக்கரி வேண்டும் என்று ஒரு இணைப்பைச் செய்தாலொழிய, திட்டம் போட்டால் மட்டும் போதாது.

இன்று விவசாய உற்பத்தியை எடுத்துக்கொள்ளுங்கள். உற்பத்தியைப் பெருக்க வேண்டிய முறைகள், வழிகள், கருவிகள் என்னென்ன என்று நமக்குத் தெரியும். ஆனால், அந்த அறிவு தனி ஒவ்வொரு விவசாயிக்கும் நடைமுறையில் உபயோகப்படும் முறையில் கொண்டு வரப்படவேண்டும். திட்டத்தில் இருந்தால், உத்தரவில் இருந்தால், ஏட்டில் இருந்தால் மட்டும் போதாது ; நடைமுறையில் அதைக் கொண்டு வரவேண்டும். அதற்கான ஏற்பாடுகள் செய்தாக வேண்டும். உழவனுக்குப் புதிய வழியைப் புகட்டியாக வேண்டும். வசதிகள் செய்து கொடுத்தாக வேண்டும். கூட்டுறவு க்ரெடிட் வேண்டுமானால், அதைச் செய்து கொடுத்தாக வேண்டும். ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லை என்ற முறையில் அமைப்பு இருந்தால், விவசாய உற்பத்தி எப்படிப் பெருகும் ? நான் நம் ராஜ்யத்தை மட்டும் வைத்துக்கொண்டு இதைச் சொல்லவில்லை. ஸென்ட்ரல் அமைப்பில் முரண்பாடுகள் இருக்கின்றன. அதில் ஒன்றும் ரகசியம் இல்லை ; பத்திரிகைகளில் அம்பலமாகியிருக்கிறது. கூட்டுறவு மந்திரிகளைக் கூட்டி ஒரு மகாநாடு நடத்தினார்கள். பிறகு, சமுதாய நலத் திட்டத்தைப் பற்றி, விவசாய மந்திரிகள் ஒரு மகாநாடு நடத்தினார்கள். இதற்கும், கூட்டுறவு மந்திரிகள் மகாநாட்டிற்கும் சம்பந்தமே இல்லை.

இப்படி ஒன்றுக்கு ஒன்று முரண்பாடு இருந்தால் திட்டங்களை எப்படி நிறைவேற்ற முடியும் ? இன்றைக்கு நாம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எடுத்து நிறைவேற்ற வேண்டியதாக இருக்கிறது. அதற்கு வேண்டிய நிர்வாக அமைப்பை அமைக்க வேண்டியதாக இருக்கிறது. அதற்கு மக்கள் தியாகம் செய்யத் தயாராக இருக்கவேண்டும். அவ்விதம் அவர்கள் தியாகம் செய்யத் தயாராக இருந்தாலும், சேமிப்பு சக்தியை அவர்கள் நம் கையில் கொடுத்தா





லும் அது வீணாகிப் போகக்கூடாது. அதன் மூலம் அவர்கள் பயனடைய வேண்டும். ஆகவே நாம் எடுத்து நடத்தக்கூடிய திட்டங்கள் எல்லாம் மக்களுக்குப் பயன் கொடுக்கக்கூடிய அளவில் நிறைவேற்றப்படவேண்டும். ஆகவே திட்டம் என்று சொல்லும்போது மக்களுக்குப் பலன் அளிக்கக்கூடிய வகையில் பணிகள் நிறைவேற வேண்டும். அதற்குத்தான் நாம் முதலிடம் கொடுக்க வேண்டும். அதற்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம். ஒரு திட்டத்தை எடுத்து நிறைவேற்றும்போது அதை நிறைவேற்றக்கூடிய சக்தி-ஆற்றல் எல்லாம் இருக்கவேண்டும். அதற்கு வேண்டிய யோசனைகளையெல்லாம் கனம் அங்கத்தினர்கள் இந்தச் சபையில் எடுத்துச்சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதைப்பற்றி விவாதிக்கும்போது அவரவர்கள் தங்களுடைய தொகுதிக்கு என்னென்ன வேண்டும் என்பதையெல்லாம் சொல்லுவார்கள். அது அவசியம்தான். அத்துடன் அதற்கு அடிப்படையான கருத்துக்களையெல்லாம் சொல்லவேண்டும். இன்றைக்கு நாம் முடிவு செய்யக்கூடியவைகள் அகில இந்திய அடிப்படையில் இருக்கக்கூடியதாக இருக்கவேண்டும். அகில இந்திய அடிப்படையில் முன்னேற்றம் கண்டால் அது நமக்கும் முன்னேற்றம் கண்டதாகத்தான் ஆகும். அந்தக் கருத்தை உடையவன் நான். அதனால்தான் அதைப்பற்றிச் சொல்லுகிறேன். எந்தத் திட்டத்தை எடுத்து நிறைவேற்றினாலும் அது அகில இந்திய அடிப்படையில் நிறைவேற்றப்பட்டால் அதன் மூலம் வரக்கூடிய வெற்றியெல்லாம் அகில இந்தியாவுக்கும் பயனுள்ளதாகும். அந்த அடிப்படையில் நாம் எல்லாவற்றையும் பார்க்கவேண்டும். அந்த அடிப்படையில் இங்கு விவாதத்தை நடத்தவேண்டும். அந்த விதத்தில் இங்கு விவாதம் நடக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதற்கு வேண்டிய ஆர்வமும் இங்கு இருக்கிறது. அந்த முறையில் இங்கு விவாதம் இயங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

Sri N. K. PALANISAMI : Sir, as the Hon. Minister's introductory speech contains an important policy statement, I request that copies of his speech may please be printed and circulated to all the Members.

Mr. SPEAKER : The hon. Minister has made an extempore speech. All the available matter has been printed and circulated to hon. Members. Moreover, the hon. Member has heard the Hon. Minister speak. I do not know why he wants the speech to be circulated.

Sri M. P. SUBRAMANIAM : We got these books only to-day, Sir.

The Hon. Sri C. SUBRAMANIAM : Sir, may I make a suggestion? As soon as the copy of my speech is ready, I shall have it edited, cyclostyled and circulated to the Members as early as possible. That is all we could do.

Mr. SPEAKER : The hon. Members have heard the speech of the Hon. Minister. Anyway, the Hon Minister has promised to circulate copies of his speech as early as possible. There are many hon. Members who have expressed their desire to speak today. I have got with me the names of seven such hon. Members. They are absolutely willing to take part in the discussion to-day. So,

[Mr. Speaker] [6th September 1960

we need not postpone the discussion and we can straightaway start it just now. The hon. Member Sri N. K. Palanisami need not therefore bother about it. Let us start the discussion to-day and those who are willing to take part in the discussion may do so. If the hon. Member gets a chance tomorrow—'If he gets a chance tomorrow's is important—he may speak tomorrow.

**SRI P. U. SHANMUGAM:** இன்னும் ஒரு நாள் அதிகப் படியாக இதைப்பற்றி விவாதிக்க ஒதுக்கலாம் என்று தோன்று கிறது. அப்படி ஒதுக்க முடியுமா ?

**MR. SPEAKER:** இதற்குப் பதில் அளிப்பது கனம் நிதி அமைச்சர் அவர்கள். அவர்கள் வெளியூர் போகிறார் என்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இன்னும் ஒரு நாள் அதிகப்படியாக ஒதுக்கினால் அவரால் பதில் அளிக்க முடியாது. அது சாத்தியம் அல்ல. ஆகவே இந்த மூன்று நாட்களுக்குள் இந்த விவாதத்தை முடித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM:** பதில் சொல்ல வேண்டியது நானாக இருந்தாலும் கனம் திரு. ஆர். வெங்கட்ட ராமன் அவர்களும் பதில் சொல்லலாம். ஏனென்றால் அவர் மேல் சபையில் இதைப்பற்றிய விவாதத்திற்குப் பதில் சொல்ல இருக் கிறார். அதனால் அவரால் முடியும். அப்படி ஒரு நாள்கூட உட்கார்ந்தால் 9-ம் தேதியன்று அவர் பதில் சொல்லுவார். அதற்கு இடம் இருக்கிறது.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I agree that the reply to the debate may be on the 9th instant.

THE HON. SRI C. SUBRAMANIAM: "Fortunately, Hon. Sri Venkataraman has followed my speech. So, I hope there would not be much difficulty for him to reply to the debate."

Some hon. Members rose . . .

MR. SPEAKER: If there is one reasonable request, I can comply with it. If there are 20 requests, how am I to comply with all of them ? Now, it is agreed that the debate may be extended by one day, that is, upto the 9th instant.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I may please be permitted to make another suggestion. Let us watch till tomorrow and see how the discussion proceeds. Suppose, there is lack of interest and there are repetitions. There may not be any need for or any purpose in extending the debate by one more day. So, let us take a decision tomorrow on the question of extending the debate by one more day.

MR. SPEAKER: All right. Now, I have got sufficient number of names of hon. Members in my list. So, we can proceed with the discussion. I may, however, point out in this connection that



6th September 1960] [Mr. Speaker]

un-preparedness cannot be an excuse. Every hon. Member is expected to have thoroughly studied the various aspects of the Plan and un-preparedness in this matter is no excuse.

இந்த விவாதத்தை ஆரம்பிக்கிறவருக்கு முதலில் இருபது நிமிஷங்கள் கொடுக்கப் போகிறேன். அதற்குப் பிறகு பேசுகிறவர் களுக்கு ஒவ்வொரு அங்கத்தினருக்கும் 15 நிமிஷங்கள் வீதம் கொடுக்கப் போகிறேன். ஏழு அங்கத்தினர்கள் பேச வேண்டியதாக இருக்கிறது. இன்னும் எத்தனை அங்கத்தினர்கள் பேச வரப்போகிறார்களோ தெரியாது. அதனால் ஒவ்வொரு வருக்கும் 15 நிமிஷங்களுக்கு மேல் கொடுக்க முடியாது. ஜாஸ்தி வேண்டுமானால் பேசிய பிறகு பார்க்கலாம். இப்பொழுது கனம் சட்டநாத கரையாளர் பேசுவார்.

* **SRI K. SATTANATHA KARAYALAR:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை பொது மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அவர்கள் எதிர் பார்த்திருந்த பல ஆசைகள் நிராசையான காரணத்தால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலாவது அது பூர்த்தியாகுமா என்ற அவாவுடன் எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். எந்த அளவு அவர்களுடைய அவாவை இந்தத் திட்டம் பூர்த்தி செய்யும் என்று உறுதியாகச் சொல்வதற்கு இல்லை. ஏனெனில் இதற்கு ஒருமுகமான வரவேற்பு இந்தத் திட்டம் தயாராகி வந்த நாளிலிருந்து இது வரை வந்திருப் பதாகத் தெரியவில்லை. கனம் நிதி அமைச்சர் அவர்கள் இன்று சவிஸ்தாரமாக அதன் அடிப்படைக் கொள்கைகளை விவாதித்து இப்பொழுது பேசினார்கள். ஆனால் அவர்கள் பிரசங்கத்திலேயே இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் கால வரம்பு முடிவு காலத் திற்குள் எந்த அளவு மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்யும் என்பதைப்பற்றியும் திட்டம் அந்த அளவு மிகப் பெரிய திட்டம் என்று சொல்வதற்கு இல்லை என்பதையும் அவர்களே குறிப்பிட்டார்கள். திட்டத்தைப் பற்றி சிந்திக்கும்போது நமது தேவையைப்பற்றி சிந்தித்து திட்டத்தை வரையறுப்பது நல்லது என்று எண்ணுகிறேன். நமது நாட்டில் கிட்டத்தட்ட 40 கோடி மக்களுக்கு 10,200 கோடி ரூபாய்க்குத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. கனம் அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையில் பழைய விலைவாசிகளை வைத்துக் கொண்டு அதனுடைய மதிப்பு 8,500 கோடி ரூபாய்தான் இருக்கும் என்று கூறினார். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கிட்டத்தட்ட 3,650 கோடி ரூபாய் பொதுத் துறையிலும் 31,000 கோடி ரூபாய் தனியார் துறையிலும், ஆக 6,750 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது. இதை வைத்துப் பார்த்தால் இன்று இருக்கக்கூடிய இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டப்படி செய்யக்கூடிய ஒரு முதலீடு 4,600 கோடியிலிருந்து 7,250 கோடி வரையில் அதாவது சுமார் 58 சதவிகிதம் உயர்வாகக் காண்கிறது.

[Sri K. Sattanatha Karayalar] [6th September 1960

அதைப்போல 6,750-லிருந்து 10,200 கோடி வரையில் கணக் கிட்டால் 51 சதமான அளவிற்கு உயர்ந்து காண்கிறது. இந்த மதிப்பீடு மிகவும் குறைவு என்று கனம் மந்திரி அவர்களே குறிப்பிட்டார். ஒரு திட்டத்தை நிறைவேற்றும்போது நமது நாட்டின் தேவை என்ன என்பதைப் பார்த்து அந்த அளவுக்குத் திட்டம் இருக்க வேண்டும். அதை வைத்துப் பார்த்தால் நாம் குறிப்பாகக் கணக்கிட விரும்புவதெல்லாம் நாட்டில் இப்பொழுது இருக்கக்கூடிய வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டும் என்பதுதான். அதற்கு ஏற்ப விவசாயத் துறையிலும் சரி, தொழில் துறையிலும் சரி நாட்டு மக்களுக்கு எந்த அளவில் வேலை கிடைக்குமோ அந்த அளவில் திட்டம் வகுக்க வேண்டும். நமது மக்களுக்கு வேலை கிடைக்கும் வகையில் திட்டம் அமைய வேண்டும். அப்படி அமைத்தால்தான் வேலை இல்லாமல் இருக்கிறவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்படியான நிலைமை ஏற்படும். தேசிய வருமானம் ஓரளவுக்கு உயர்ந்திருக்கிறது என்றாலும்—நாம் எந்த அடிப்படையில் திட்டமிட்டிருந்த போதிலும்—இன்றையத்தினம் பெரும் அளவுக்கு விலைவாசிகள் உயர்ந்து போய்விட்டது என்பதை அமைச்சர் அவர்களே குறிப் பிட்டிருக்கிறார்கள். நாட்டின் பொருளாதார வளர்ச்சியை கிட்டத் தட்ட ஒரு மலை ஏறுவதோடு ஒப்பிட்டுப் பார்த்தால் மலையில் ஏறுவது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு கீழே சறுக்கிவிடாமல் நின்று கொள்வதற்கு எடுத்துக்கொள்ளும் முயற்சியும் முக்கிய மானது. ஏறுவதற்குச் செய்கிற அத்தனை முயற்சியும், சறுக்கி விடாமல் நின்றுகொள்வதற்கும் செய்யவேண்டும். இன்றைய தினம் நம்முடைய தேசிய வருமான உயர்வு, தொழில் வள உயர்வு இவையெல்லாம் ஒருபக்கம் இருந்தாலும், பெருகிக்கொண்டே போகிற ஜனத்தொகையைச் சரிக் கட்டுவது, வேலையில்லாத் திண்டாட்டத்தைக் கட்டுப் பாட்டுக்குள்ளேயே வைத்திருப்பது, வேலை வாய்ப்பை அதிகப் படுத்திக்கொள்வது ஆகியவை எல்லாம் சீராகத் திட்டத் துடனேயே சேர்ந்து வரவேண்டும். அப்போதுதான் நாம் சருக்கி விழாமல் முன்னேற முடியும். வேலை வாய்ப்பு வசதிகள் எப்படி இருக்கும் என்பதைப்பற்றி அவர்களுடைய மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட டிராப்ட் ப்ளானைப் பார்த்தால் அது நமக்கு மிகவும் கவலை தருவதாகத் தோன்றுகிறது. திட்டத்தில் சொல்லுவதாவது :—

11-30 a.m. Taking the size and pattern of investment during the Third Plan, it is at present estimated that additional employment likely to be created will be of the order of 3.5 million in agriculture and about 10.5 million outside agriculture . . . not allowing the employment situation to worsen during the Plan period will require about 1 million extra employment opportunities . . . In page 84 it states, " the Third Plan may start with a backlog of unemployment greater by about 2 million than the Second Plan. It is estimated that the new entrants to the labour force in the Third Plan would be about 15 million.



6th September 1960] [Sri K. Sattanatha Karayalar]

இதைப்பார்க்கும்போது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பெருகி இருக்கிற வேலையின்மையையும் கவனித்தால் இன்னும் மோசமான நிலைமையில்தான் போய்ச் சேரும் என்று திட்டம் சொல்லுகிறது. அவர்களுடைய திட்டப்படியே கிட்டத்தட்ட 15 மிலியன் என்று வருகிறது. அதில் விவசாயத் துறையில் 3½ மிலியன் வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்று சொல்லப் படுகிறது. துரதிருஷ்டவசமாக இன்றுள்ள நிலைமையையும், பொருளாதாரத்துறை நிபுணர்களுடைய கருத்துக்களையும் வைத்துப் பார்த்தால் இத்துறையில் அவ்வளவு எதிர்பார்ப்பது சரியாகாது. இந்தத் துறையில் கணக்கிட்டிருப்பது தவறு என்று பலரும் கருதுகிறார்கள். ஓட்டு மொத்தமாக எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் வேலை தேவைப்படுபவர் 30 மிலியன் என்று கணக்கிட முடியும். இப்படிப் போடப்பட்டிருக்கிற எஸ்டிமேட் அதிகமாக இருக்கிறதோ என்று கருதலாம். நான் டாக்டர் வி. கே. ஆர். ராவ் அவர்களுடைய கணக்குப்படி பார்த்தால்கூட 2-½ கோடிக்கு வரும். இவர்கள் அத்தனை பேர்களுக்கும் வேலை வாய்ப்புக் கிடைக்கவேண்டுமென்றால் மிக அதிகமாக முதலீடு செய்தால்தான் முடியும் என்று கண்டிருக்கிறார். நாம் இப்போது முதலீடு செய்வதை வைத்துப் பார்க்கும்போது வேலை வாய்ப்பு மிகவும் குறைவாகத்தான் இருக்கும் என்று தோன்றுகிறது.

(இச்சமயம் ஸ்ரீ. எஸ். எம். அண்ணாமலை தலைமை வகித்தார்)

அப்படி 25 ஆயிரம் கோடிக்கு முதலீடு செய்யவேண்டும், என்று சொன்னால் அதற்கு வழிவகை என்ன, வாய்ப்புகள் என்ன என்பதைச் சிந்திக்கவேண்டியது மிகவும் அவசியம். ஏனெனில் மந்திரி அவர்கள் இன்று காபிடல் பார்மேஷன்பற்றி ஒருதலைப் பட்ட கொள்கை ஒன்றைப் போட்டுள்ளார்கள். தொழில் துறையில் எப்படிப் பணம் சேரும், பணம் எப்படி வரும் என்பதைப்பற்றி ஒரு தத்துவரீதியான அடிப்படையில் சில விஷயங்களைச் சொன்னார்கள். ஆனால் அது நடைமுறையில் சாத்தியமா என்பது வேறு விஷயம். ஏற்கனவே அரைவயிற்றுக் கஞ்சிக்குத் திண்டாடிக் கொண்டிருக்கிற தொழிலாளி வர்க்கத்தை 'மேலும் உங்கள் தேவைகளைக் குறைத்துக்கொண்டு முதலீடு செய்ய முன் வரவேண்டும்' என்று சொன்னால் அது சாத்தியமாகத் தோன்ற வில்லை. நல்ல வருவாய் வரக்கூடியவர்களையே எடுத்துக் கொண்டால் அவர்கள் இன்றையதினம் எவ்வளவு முதலீடு செய்திருக்கிறார்கள் ? அவர்களுடைய செலவை எப்படிக் குறைத்துக்கொள்ள முடிந்திருக்கிறது என்று பார்க்கலாம். அப்படி இருக்க அரிசி படி பதினைந்து அணா இருந்தது ஒரு ரூபாய் ஐந்து அணா என்று போய்விட்ட இந்தக் காலத்தில் தொழிலாளர்கள் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய வருவாயில் மிச்சம் பிடிக்க முடியும் என்று நாம் எதிர்பார்ப்பது தவறான கணக் காகும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக நிதி நிலை பற்றி வருவாய் பெறுவதுபற்றி, முதலீடு செய்யக்கூடிய மார்க்கம் பற்றி திட்டத்தில் ஒன்றுமே தெளிவான முறையில் குறிப்பிடப் படவில்லை. அது ஒரு வேளை எண்ணிச் செய்த காரியமாக

[Sri K. Sattanatha Karayalar] [6th September 1960

இருக்குமோ என்று எண்ணுகிறேன். ஆனால் அகில இந்திய ரீதியில் வந்து இருக்கக்கூடிய மூன்றாவது திட்டத்திலே இதைப்பற்றி சூசகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் நம்முடைய வருமானத்தையும் எந்த முறையில் சரிக்கட்டுவது என்பதற்குச் சில குறிப்புகள் காணப்படுகிறது. மூன்றாவது திட்டத்தில் முதலீடு செய்வதற்குத் திட்டமிட்டிருக்கிற தொகையில் கிட்டத்தட்ட 3,250 கோடிக்கு வெளிநாட்டை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறோம். அதிக வரி விதிப்பின் மூலம் 1,650 கோடி எதிர்பார்க்கப்படுகிறது.

அதிகப்படியான வரி வசூல் என்கிறபோது திட்டத்திலே என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று பார்க்கவேண்டும்.

'The fulfilment of the additional taxation target of Rs. 1,650 crores over the five-year period is vital for the successful implementation of the plan . . . an additional tax target of Rs. 1,650 crores will involve considerable effort on the part of the Central and State Governments . . . additional taxation in States will have to be about one-third of the total just mentioned, i.e., Rs. 550 crores.

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் இங்கு சொல்ல வருவது எல்லாம் இந்த 550 கோடியில் நம் பங்கு சுமார் 50 கோடிக்கு அதிகமாகலாம் என்று தெரிய வருகிறது. குறிப்பாக நாம் ஒரு பங்கு முதலீடு செய்தால் மத்திய சர்க்கார் 2 பங்கு தருவதாகத் தெரிகிறது. அந்த மூன்றில் ஒரு பங்கு மிகக் குறைவு. நான்கில் ஒரு பங்கு முதலீட்டுப் பணத்தை நாமே சேகரித்துக் கொள்வ தானாலும் அது பெரும் தொகையாகும். 400 கோடி திட்டத்தில் 100 கோடி நம்மதாகிவிடும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்ல விரும்புவதெல்லாம் புதிதாக ஒரு வரி மத்திய அரசாங்க வரி விதிப்பு அல்லாமல் மாகாண அரசாங்கத் திட்டத்திற்காக விதிப்பது அசாத்தியம். நம்மால் தாங்கக்கூடிய நிலையில் நாம் இல்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒன்றிரண்டு துறைகளில், லாண்ட் டாக்ஸ், அக்ரிகல்ச்சரல் இன்கம் டாக்ஸ் இவைகளை இன்னும் அதிகமான முறையில், Rational. செய்து தப்புவதற்கு வழியில்லாத முறையில் அவைகளை வசூல் செய்யும் முறை ஏதாவது செய்தால் நன்றாயிருக்கும். அப்படியல்லாது மறைமுகமாக விதிக்கக்கூடிய வரியை மேலும் விதித்து சாதாரண மக்களைத் துன்பப்படுத்தும் முறையில் இந்தத் திட்டம் அமைந்து விடக்கூடாது. எந்த பொது மக்களின் ஒத்துழைப்பை நாம் கோருகிறோமோ அந்த மக்களின் ஒத்துழைப்பு நமக்குக் கிடைக்காமல் போவதற்கு இது வழிவகை செய்வதாக இருக்கும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நமக்குள்ள வழிவகைகளில் இருந்து கிடைக்கக் கூடிய காண்ட் அக்கௌண்ட் சேவிங்க்ஸ்-யைப்பற்றி அதிகம் என்றால் கணக்கிட முடியவில்லை. ஏற்கெனவேயுள்ள, "காரி ஓவர்" இனத்தை, "கமிட்டட் எக்ஸ்பென்ஸை" வைத்துப் பார்த்தால் நமது நிதி நிலையிலிருந்து நம் திட்டத்திற்காக



6th September 1960] [Sri K. Sattanatha Karayalar]

எதுவும் எடுக்க முடியும் என்று தோன்றவில்லை. ஆகவே இந்த அரசாங்கத்தை, குறிப்பாக நிதியமைச்சர் அவர்களையும், அவர்களைச் சார்ந்தவர்களையும் நான் கேட்டுக்கொள்வது என்ன வென்றால், "பைனான்ஸ் கமிஷனிடம்" சண்டை போட்டு நமது யதார்த்த நிலையைக் கூறி நமக்கு "டாக்ஸேஷன் எலாசிட்டி" இல்லாததால் அதிகத் தொகையை ஒதுக்க வேண்டுமென்று வற்புறுத்த வேண்டும். எவ்வளவு தீர்வை இடவேண்டுமென்று கழிந்த காலத்தில் திட்டமிடப்பட்டதோ, அது 13 கோடி என்று இருந்தால் 20 கோடிக்கு அதிகம் நாம் தீர்வை வசூலித்திருக் கிறோம். அப்படி நாம் நல்ல பிள்ளைகளாக நடந்திருக்கிறோம். தீர்வை வசூல் செய்வதில் கறாறும் கண்டிப்பும் நம் மாகாணத்தில் தான். இவ்வளவு செய்திருப்பதால் இனிமேலாவது தீர்வை விதிக்கக்கூடாது. எந்தத் துறைகளில் எல்லாம் தீர்வை இடவேண்டுமோ அவைகள் எல்லாம் செய்துவிட்டோம். ஆகவே இனித் தீர்வைக்குப் போகக்கூடாது. அதே சமயத்தில் நாமும் சில வழிகளைக் கண்டாக வேண்டும் என்பதை ஒத்துக் கொள்கிறேன். தொழிலாளர்களின் ஊதியத்தை நிலையான வரம்பில் நிறுத்த வேண்டுமென்ற ஆலோசனையோடு ஒத்துக் கொள்வதற்கில்லை. வருவாய் தரக்கூடிய டிரான்ஸ்போர்ட் துறையை எடுத்துக் கொள்வோம். டிரான்ஸ்போர்ட் அமைச்சர் அவர்களே கூறினார்கள், ஒரு எக்ஸ்ப்ரஸ் ரூட்டில் ஒரு வருடத்திலேயே போட்ட முதலைத் திரும்ப எடுக்கும் நிலைக்கு வருவாய் வந்தது என்று சொன்னார்கள். டிரான்ஸ்போர்ட்டை எடுத்துக்கொண்டால் கிட்டத்தட்ட 200 லட்சம் ரூபாய் மூலதனம் இட்டிருக்கிறார்கள். உத்தேசம் 30 லட்சம் ரூபாய் ஆண்டொன்றுக்கு நமக்கு அதிலிருந்து லாபம் கிடைக்கிறது. ஆகவே நான் கேட்கிறேன், ஏன் இதை விரிவுபடுத்தி தேசிய மயமாக்கப்படுத்தக்கூடாது? இதில் 5¼ % வட்டி வேறு கிடைக்கிறது. இப்படிப் பணம் கிடைக்கக் கூடிய வாய்ப்பை விட்டு விட்டு, காமதேனுவை விட்டு விட்டு பொது மக்கள் தலையில் ஏன் கை வைக்க வேண்டும்? ஆகவே பசியோடு பசியாகத் தொழிலாளிகள் பங்கு கொடுக்க வேண்டும் என்ற முறையை விட்டு விட்டு இதுபோன்ற துறைகளில் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, நாம் தீர்வை விதிக்கும்போது மத்திய சர்க்கார் தீர்வை விதிப்பதைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். குறிப்பாகத் தீர்வை விதிக்க வேண்டிய இடத்தில் விதிக்காது அல்லது பிரிக்க வேண்டிய இடத்தில் பிரிக்காமல் விடப்படுகிறது. கழிந்த காலத்தில் நமக்கு கிடைத்த தேசீய வருமானம் எங்கு போய்ச் சேர்ந்தது என்று தெரியவில்லை என்று பண்டித நேரு அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகவும், ஏழைகள் மேலும் ஏழைகளாகவும் போய் கொண்டிருக்கிறார்கள் என்று நிதியமைச்சர் அவர்களே குறிப்பிட்டார்கள். வெளிநாட்டு வியாபாரத் துறையை எடுத்துக் கொள்வோம். அதில் பெருவாரியாக லாபம் இருக்கிறது என்று நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஆகவே "ஸ்டேட் ட்ரேடிங்" துறையை எவ்வளவு விரிவுபடுத்தவேண்டுமோ

அவ்வளவு தூரம் விரிவுபடுத்தவேண்டும். அதற்காக எந்தெந்த முறைகளைக் கையாள முடியுமோ அவைகளை அரசாங்கம் கையாள வேண்டும். இதுபற்றி டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் சொல்லி இருக்கிறார்கள்:

"Then there are likely profits from State trading. At present State trading is confined to a comparatively narrow sector; this needs to be expanded a great deal not only for securing a larger mobilization of resources but also from the point of view of proceeding towards the establishment of a socialist socity. To-day due to import control and the large unsatisfied demand for imports that accompanies it, very large profits are being made by the traders in imports and there is no reason why this by-product of planned economic development should be left to be enjoyed by private individuals"

'ரிசோர்ஸஸ்-யை' அதிகம் சேகரிப்பது மட்டுமல்லாமல்,

"this would not only lead to the accrual to Government of the profit from such export trade, but it would also enable Government to exercise a more effective control over the leakages in foreign exchange receipts that are inherent in its being left in the hands of private trade" என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஒரு சோஷலிஸ சமுதாயத்தை அடைவதற்கு ஒரு மார்க்ஸிஸ தத்துவவாதியோ அல்லது மார்க்ஸிஸ நிபுணரோ அல்ல இப்படிக் கூறுவது. டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ், நமது அரசாங்கம் பல காரியங்களுக்காகக் கலந்து ஆலோசிக்கும் பொருளாதார நிபுணர். அவரே அப்படி குறிப் பிட்டுள்ளார். இந்தத் திட்டத்திற்கு பணம் சேர்க்கக்கூடிய முறைகள் எப்படியிருக்கவேண்டுமென்பதை குறிப்பிட்டுவிட்டு அடுத்தபடியாக இன்று நடைமுறையில் உள்ள திட்டங்களின் குறைகளை மட்டும் குறிப்பிட்டுவிட்டு நமது தேவையையும்பற்றி குறிப்பிட்டுவிட்டு முடித்துக்கொள்கிறேன்.

இந்த பிளானைப் பொறுத்தமட்டில் இதனுல் நமது மாகாணத்தில் எந்தளவு நன்மையும், தின்மையும், சாதகமும், பாதகமும் ஏற்பட் டிருக்கின்றன என்று கேட்டால் அதற்குள்ள கணக்கு இல்லை. அகில இந்திய ரீதியிலோ மாகாண ரீதியிலோ இதற்குள்ள புள்ளி விவரங்கள் நல்ல முறையில் நம்மிடம் இல்லை. தேவையுள்ள புள்ளி விவரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. ஆகவே வட்டார ரீதியில் நாம் எந்த அளவிற்கு வளர்ந்திருக்கிறோம் என்று பார்க்கவேண்டு மென்றால் அதற்கான புள்ளிவிவரங்கள் மிகவும் அவசியம். அதை சேகரிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். திட்டம் என்று சொன்னுல் அது ஒரு "கண்டினிவஸ் ப்ரோஸஸ்" என்று அமைச்சர் அவர்களே குறிப் பிட்டார்கள். அப்படித் தொடர்ச்சியாகத் திட்டமிட்டுக்கொண்டி ருக்கிறோமே என்றால் இல்லை. திட்டமிடுகிறோம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடியும்போது அதோடு மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தை இணைக்கிறோம். மூன்றுவது ஐந்தாண்டுத்





திட்ட முடிவில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை இணைப்போமோ என்று தெரியவில்லை. நான் சொல்வது, தொடர்ச்சியாக வேலை செய்வதற்கு உகந்த முறையில் ஒரு தனி இலாகா வேலை செய்ய வேண்டும். ஒரு அட்வைசரி பாடியாவது இருக்கவேண்டும். சட்டசபை குழுவே தொடர்ந்து கொண்டு போகவேண்டுமென்று நான் கூறவில்லை. இதை நல்ல முறையில் விரிவுபடுத்தி பல கட்சி நண்பர்களையும் வைத்துத் தொழில் அதிபர்களுக்குப் பிரதிநிதித் துவம் கொடுத்து, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடம் கொடுத்து, தொழிலாளர் தலைவர்களுக்கு இடம் கொடுத்து, பிரபல பொருளாதார நிபுணர்கள் ஒன்றிரண்டு பேர்களையும் சேர்த்து ஒரு ஆலோசனைக் குழு தொடர்ந்து செயலாற்றிக் கொண்டு போனுல் அதிக நன்மை கிடைக்கும்—அதோடு போகப் போக திட்ட மாறுதல்கள் ஏதாவது செய்ய வேண்டி வரலாம்: காலத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்ற வகையில் மாறுதல்கள் செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்படலாம். இப்பொழுது இந்தக் குழு மிகவும் உதவிகரமாக இருக்கும். அல்லது அகில இந்திய ரீதியில் ப்ளானிங் கமிஷன் மட்டும் இருந்து வேலை செய்வதைவிட, ஸோனல் அடிப்படையில், ஸோனல் கௌன்ஸில் பற்றி குறிப்பிடும்போது அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள், அங்கு தென்பகுதிக்காக எந்த நேரத்திலும் வாதாடுகிறோம் என்று; அந்த ஸதர்ன் ஸோனுக்கு மட்டுமாவது ஒட்டு மொத்தமாக ஒரு திட்டம் வேண்டும். அதற்கு ஒரு தனிக் கமிஷன் வேண்டும். அது ஸோனல் டெவலப்மென்ட், ரீஜினல் டெவலப்மென்ட் இவைகளில் நல்ல கவனம் செலுத்த முடியும். அடுத்தபடியாக, நாம் மேற்கு நோக்கி ஓடுகிற ஆறுகளையெல்லாம் கிழக்கு நோக்கித் திருப்ப வேண்டுமென்று சொல்கிறோம். கேரளாவில் உள்ளவர்கள் ஒரு மாஸ்ட்டர் ப்ளான் வைத்து வேலை செய்ய ஆரம்பித்துக் கொண்டிருக்கிறுர்கள். இது ஒன்றுக்கு ஒன்று முரண்படத்தக்க வரையில் போகிறது. ஆதலால் நமக்கும் பயன்படத்தக்க வகையில், தேசத்திற்கும் கேரளத்திற்கும் பயன்படத்தக்க வகையில், மேற்கு நோக்கி ஓடும் நதிகளை கிழக்கு நோக்கி திருப்பினுல் நல்லது. எல்லாருக்கும் அது பயன் தரும். நம்மிடம் என்ன அணைத் திட்டங்கள் இருக்கின்றன என்று சிந்தித்தால் இரண்டு திட்டங்களுக்கு அதிகமாக நம்மிடம் உருப்படியான திட்டம் எதுவும் இல்லை. ஆதலால் கேரளத்தில் வீணுகப் போகும் தண்ணீரை நாம் பயன்படுத்த வேண்டும் மூன்றுவது திட்ட காலத்தில். அதற்கான திட்டங்கள் தீட்டப்படவேண்டும். குறிப்பாக அப்பர் பெரியாறு திட்டம், சிரியாறு திட்டம் போன்றவைகளை நாம் இந்தத் திட்ட காலத்திற்குள்ளாகவே பெறுவதற்கு வழிவகைகள் காணவேண்டும். நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், முக்கியமாக அணு சக்தி உலை நமக்கு அவசியம் வேண்டும். அது எக்கனுமிக்கலாகயிருந் தாலும் சரி, அன்-எக்கனுமிக்கலாக இருந்தாலும் சரி. நம் மாகாண வளர்ச்சிக்கு அது மிகவும் அவசியமாகும். சேது சமுத்திரத் திட்டத்தைப்பற்றி சொல்ல வேண்டியதேயில்லை.

பின்னர், இந்த மைனர் போர்ட்ஸ்களை (சிறு துறைமுகங்களை)
விருத்தி செய்ய வேண்டியதும் மிக முக்கியமானதொன்றாகும்.
அவைகளை விருத்தி செய்வதற்கு விரிவான முறையில் திட்டம்
வகுக்கப்படவேண்டும். இப்பொழுது எண்ணை சுத்திகரிப்பு மிக
முக்கியத்துவம் அடைந்திருக்கிறது. அகில இந்திய ரீதியில்
இதில் பல சிக்கல் ஏற்பட்டிருக்கிறது என்பதை மறந்துவிடக்
கூடாது. இரும்புத் தொழில் ஒரு இடத்தில் மட்டும் இருந்தால்
போதாது. வட்டார ரீதியில் வளர்ச்சி அடையும் முறையில்
சேலத்திலுள்ள கனிப்பொருள்களை நன்கு பயன்படுத்த நாம்
திட்டம் வகுக்க வேண்டும். காரிர்ஷ்டவசமாக ரெயில்வேயைப்
பற்றி திட்டமிடும்போது தென்னாட்டை மறந்துவிட்டார்கள்
என்றே தோன்றுகிறது. ரெயில்வேயைப் பொறுத்த மட்டில்,
தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதில் எந்தவிதமான
சந்தேகமும் இல்லை. மேற்கோள் காட்டுவதற்குச் சந்தர்ப்பம்
இல்லாத நிலையில் ரெயில்வே விஷயத்தில் நம்மை மோசமான
முறையில் நடத்தியிருக்கிறார்கள் என்பதோடு நிறுத்திக்
கொள்கிறேன். இவைகளை எல்லாம் நிவர்த்தி செய்ய வேண்டு
மென்றால் இப்படித் தனியாக ஒரு திட்ட போர்ட்டு இருந்தால்,
தனி ஸோன் இருந்தால் ரெயில்வே பிரதிநிதிகளும் அதில் கலந்து
கொண்டு ரீஜனல் டெவலப்மெண்ட்க்குத் தகுந்த முறையில் வழி
வகைகள் கண்டு பிடித்து நிறைவேற்ற முடியும்.

இவைகள் எல்லாம் இருந்தபோதிலும்கூட கொள்கை அடிப்
படையில் சில மாறுதல்கள் இருக்க வேண்டும். சாதாரண
மனிதனுக்கு உற்சாகம் தரக்கூடிய முறையில் நிலைச்சீர்த்திருத்
தத்தை வெகு துரிதமாகக் கொண்டுவந்து அதன் மூலமாக உபரி
சேவிங்ஸ் ஏற்படச் செய்யவேண்டும். பணச் சேர்க்கைக்காக
அந்தப் பணம் முழுவதும் உபயோகப்படவேண்டும்.

கடைசியாக நான் சொல்ல விரும்புவது, சோஷியலிஸ
சித்தாந்தத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிற இந்தச் சர்க்கார்,
வருவாய்க்கு, குறிப்பாக சம்பள வருவாய்க்கு வரையறுக்கக்
கூடிய விதத்தில் ஒரு சட்டம் செய்ய வேண்டும். இதனால் பெரிய
வருமானம் சர்க்காருக்கு வந்துவிடும் என்று நான் சொல்லவில்லை.
4,000 ரூபாய், 5,000 ரூபாய் கம்பெனிகளில் சம்பளம் வாங்கிக்
கொண்டிருக்கிறார்கள் எத்தனையோ பேர்கள். இவர்கள் சம்பளம்
இத்தனை ரூபாய்தான் இருக்கவேண்டும் என்று நிர்ணயம் செய்ய
வேண்டும். இவ்விதம் ஒரு லிமிட் ஏற்படுத்தினால்தான் சம்பளம்
வாங்குபவர்களிடையே இருக்கின்ற வேற்றுமை ஓரளவு குறைவ
தற்கு வாய்ப்பு ஏற்படும்.

அதோடு, பாங்குகள் விஷயத்தை எடுத்துக் கொண்டால், தேச
மக்களின் பணத்தை எல்லாம் சூதாடுவது என்கின்ற நிலை மாற
வேண்டும். ஆகவே பாங்குகள் எல்லாம் தேசத்தின் சொத்தாக
ஆகவேண்டும். அப்போதுதான் இந்த நிலைமாறும். அதற்கடுத்த





படியாக டிஸ்ட்ரிக்ட் அட்மினிஸ்ட்ரேஷனைப் பொறுத்தவரையில் அதைச் சீரமைக்கவேண்டும். அங்கிருக்கின்ற அதிகாரிகளின் மனப்பான்மை எல்லாம் மாறவேண்டும். நாம் இங்கு எவ்வளவு தான் திட்டங்களை போட்டாலும் கடைசியில் இவைகளை நிறை வேற்ற வேண்டிய பொறுப்பு கிராம சேவக்களிடமும், வில்லேஜ் ஆபிசர்களிடத்திலும் தான் போய் சேருகிறது. கிராம முன்சீப் போன்ற அதிகாரிகள் எல்லாம் திறமையாக வேலை செய்தால்தான் இதில் நாம் வெற்றி காண முடியும். ஆகவே இந்தத் திட்டங்களை எல்லாம் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே அதற்கு நமது ஜில்லா நிர்வாக சீரமைப்புக்கு ஏற்பாடு செய்தால்தான் நம்முடைய பொருளாதாரத்தைச் செம்மைப்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இவ்வளவு நேரம் பேசுவதற்கு சந்தர்ப்பம் தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

SRI C. R. RAMASWAMI: கனம் தலைவர் அவர்களே, நமது நிதி அமைச்சர் அவர்கள் இப்போது கொண்டு வந்திருக்கும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றியும், அதன் மூலமாக எந்த அளவுக்கு நாம் வெற்றிபெற முடியும் என்பதைப் பற்றியும் எடுத்துரைத்தார்கள். கழிந்த காலத்தில் எல்லாம் நாம் பல திட்டங்களின் அடிப்படையில்தான் நம் நாடு பல காரியங்களை நிறைவேற்றி வருகிறது. அதில் நல்ல வெற்றியும் கண்டிருக் கிறோம். இதைப்பார்த்து நாம் அனைவரும் சந்தோஷப்படக்கூடிய நிலையில் இருக்கிறோம் என்பதை யாரும் மறுக்க முடியாது. நாட்டில் ஏற்பட்டிருக்கக்கூடிய பல துறைகளில் நாம் முன்னேற் றத்தைக் காண்கிறபொழுது நாம் நிச்சயமாகத் திட்டங்களின் அடிப்படையில் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பதை யாரும் மறக்க முடியாது. ஆனால் சில பெரியவர்கள் சொல்லு கிறார்கள், இதற்காகத் திட்டம் எதற்கு, வருடா வருடம் கிடைக் கிற சேமிப்பைப் பயன்படுத்திக்கொண்டு நாம் அன்றாடத் தேவை யைப் பூர்த்தி செய்து கொள்ளலாம், இதற்காகத் திட்டத்தை தீட்டி, இதற்காகப் பணத்தைத் தேடி அன்னிய நாட்டில் கடன் வாங்கி நாட்டைக் கடன்படுத்தி மக்களுக்குத் துயரத்தைக் கொடுக்க வேண்டாம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் உண்மை யில் மக்களுக்குத் துயரம் ஏற்படுகிறதா, அல்லது முற்போக்கான நிலை ஏற்படுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். இன்றைக்கு மேல் நாடுகளை எல்லாம் பார்த்தால், இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற தேசங்களில் எல்லாம் தனிப்பட்டோர் துறையில் எவ்வளவோ வெற்றி கண்டிருக்கிறார்கள், அங்கெல்லாம் மக்கள் சுபிட்சமாக வாழ்கிறார்கள், ஆகவே அம்மாதிரியான நிலைமையை இங்கும் கொண்டு வரலாம் என்று பலர் சொல்லுகிறார்கள். அந்த நாடுகளிலும் 200 வருடத்திற்கு முன்னால் நம் நாட்டில் இப்போது இருக்கின்ற நிலைமைதான் இருந்தது. அதன் பின்னால் ஏற்பட்ட இண்டஸ்ட்ரியல் ரெவல்யூஷன் மூலமாகத்தான் இப்போது நல்ல நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்களும் பல பெரிய திட்டங்களைப் போட்டுத்தான் இப்போது இந்த நிலைக்கு

வந்திருக்கிறார்கள். ஆனால் நாம் இப்போதுதான் திட்டங்களைப் போட ஆரம்பித்திருக்கிறோம். எந்த ஒரு வேலையாக இருந்தாலும் சரி, அதற்கென்று ஒரு பிளான் அவசியம் வேண்டியிருக்கிறது. ஆனால் நாம் போட்டிருக்கிற திட்டங்களுக்கு எல்லாம் எவ்வளவோ பணம் தேவைப்படுகிறது, இதற்கு எங்கே போகப்போகிறோம் என்பதை நாம் சிந்தனை செய்து பார்க்கவேண்டும். நமக்கு இருக்கின்ற சக்திக்கு ஏற்ற அளவுதான் நாம் திட்டங்களைப் போட முடியும், அதற்கு மீறி, சக்திக்கு அப்பாற்பட்டு நாம் திட்டங்களைத் தீட்டி அதன் மூலமாகப் பல கஷ்டங்களை ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. இரண்டு திட்டங்களை நாம் நிறைவேற்றிவிட்டோம். இப்போது மூன்றாவது திட்டத்திற்கு பல முதலீடுகளைப் போடவேண்டுமென்று மத்திய அரசாங்கத்தார் கேட்டிருக்கிறார்கள். நமது அரசாங்கம் ஆரம்பத்தில் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சுமார் 80 கோடி ரூபாய் செலவு செய்தது. அதன் பின்னால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 189 கோடி ரூபாய் செலவு செய்துவிடுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது மூன்றாவது திட்டம் 400 கோடி ரூபாய்க்குப் போட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டங்களை எல்லாம் மத்திய அரசாங்கத்தார் போடுவதாக இருந்தாலும் சரி, ராஜ்ய அரசாங்கத்தார் போடுவதாக இருந்தாலும் சரி, இதற்கு வேண்டிய வருமானம் Resources for the plan வழி தேடும்போது மக்களுக்கு எந்தவிதமான கஷ்டமும் இல்லாமல் பொருளாதாரத் துறையில் எந்த விதமான கஷ்டமும் ஏற்படாமல், விலைவாசி உயர்வு மேலும் ஏற்படாமல் வருவாயைத் தேட வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. பல நிபுணர்களும் இதைப்பற்றிச் சிந்தித்திருக்கிறார்கள். இருந்தாலும் இப்போது இருக்கக்கூடிய நிலையில் இன்னும் விலைவாசிகள் மேலே போகாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. விலைவாசி உயர்வை ஜாக்கிரதையாகக் கட்டுப்படுத்தினால் ஒழிய நமது திட்டத்தில் நாம் வெற்றி காணமுடியாது. இதில் நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால், நமக்கு வேண்டிய வருவாயை எப்படிக் கண்டுபிடிப்பது என்பதைப்பற்றி நாம் ஆராய்ச்சி செய்து பார்க்கவேண்டும். திட்டத்தைப்பற்றி பல நிபுணர்கள் சொல்லியிருப்பதைப் பார்த்தால், இந்த வருவாய்க்காக பல விதங்களில் டயரக்ட் டாக்ஸ், இன்டயரக்ட் டாக்ஸ், இன்டர்னல் பாரோயிங், Surpuls from public sector projects, அவுட்ஸைட் லோன்ஸ், போன்ற ஐந்தாறு வழிகளில் வருவாயைத் தேடிக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் இப்போதுள்ள நிலைமையைப் பார்த்தால் இன்டயரக்ட் டாக்ஸ் இப்போதே அதிகமாக ஆகிவிட்டது, இனிமேல் கூடுதலாகப் போட முடியாது என்று பலரும் சொல்லியிருக்கிறார்கள். டயரக்ட் டாக்ஸ்-ஸைப் பொறுத்த வரையில் யாரும் தடை செய்ய வேண்டியதில்லை. இன்டயரக்ட் டாக்ஸ் என்று வரும்போதுதான் சாதாரணமாகச் சாமான்களின் விலை எல்லாம் உயர்ந்துவிடுகிறது. அரசாங்கத்திற்கு இன்டயரக்ட் டாக்ஸ் மூலமாகத்தான் வருவாய்





அதிகமாகக் கிடைக்கும் என்று இருந்தபோதிலும்கூட, இன்டய- ரக்ட் டாக்ஸ் போடும்போது மிகுந்த ஜாக்கிரதையாக இல்லாவிட் டால், இதன் மூலமாக மக்களுக்குக் கூடுதலான துயரம்தான் ஏற்படுமே ஒழிய புதிய உற்சாகம் ஒன்றும் ஏற்படாது. ஆகவே இன்டயரக்ட் டாக்ஸ் என்னும் கருவியைக் கையாளும்போது மிகுந்த ஜாக்கிரதையுடன்தான் இருக்க வேண்டும். ஆகவே இன்டயரக்ட் டாக்ஸ் போடும்போது எப்போதும் நன்கு ஆராய்ந்து அரசிப் பார்த்துப் போடவேண்டும். டயரக்ட் டாக்ஸ் போடுவதைப்பற்றி யாரும் கவலைப் படப் போவதில்லை. இதனால் நாலைந்து பணக்காரர்கள் தான் கத்துவார்கள், அதைப்பற்றி யாரும் கவலைப்படப் போவதில்லை, நேரடியாக வசூல் செய்வ தற்கும் இதுதான் மிகவும் சுலபமாக இருக்கும்.

அடுத்தபடியாக, இன்டர்னல் பாரோயிங் பற்றி நமது நிதி அமைச்சர் அவர்கள் இன்று சொன்னார்கள். நாட்டில் ஓரளவுக்குத் தான் கடன் வாங்கும் சக்தி இருக்க வேண்டும். இப்போதுள்ள நிலைமையைப் பார்த்தால் யார் ஒருவர் எந்த இண்டஸ்ட்ரீஸ் ஆரம்பித்தாலும், ஆரம்பத்தில் அரசாங்கத்தினுடைய உதவியைக் கேட்கிறார்கள். அரசாங்கத்தினிடமிருந்து கடன் வாங்கித் தான் தங்கள் தொழிலை ஆரம்பிக்கிறார்கள். அவர்கள் உள்நாட்டிலேயே கிடைக்கும் சேமிப்பைக்கொண்டு தொழில்களை ஆரம்பிக்க முன் வருவதில்லை. ஆனால் பெரிய கம்பெனியார் இப்போது முன் வந்திருக்கிறார்கள். அவர்களை நான் பாராட்டுகிறேன். ஓரளவுக்கு அரசாங்கத்தை எதிர்பார்க்காமல், தாங்களாகவே நாட்டிலுள்ள சேமிப்பைக் கொண்டு தொழில்களை அல்லது வியாபாரங்களை நடத்தினால் நன்றாக இருக்கும். இது தவிர அபிவிருத்தித் திட்டங் களுக்காக எவ்வளவோ கடன் வாங்குகிறோம். அவைகளை எல்லாம் நாம் ஜாக்கிரதையாகத் திரும்ப செலுத்த வேண்டியிருக் கிறது. செலவு செய்யும்போது ஆங்கிலத்தில் சொல்லுகின்ற Parkinson's Law -வின்படி பார்த்தால் அரசாங்கத்தில் டிப்பார்ட் மெண்ட்கள் எல்லாம் வளர்ந்து கொண்டே போகும். அதே சமயத்தில் உருப்படியாக வேலை ஒன்றும் நடைபெறாது. இதைப் பற்றி அந்தப் புஸ்தகத்தில் நன்றாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை அரசாங்கத்தைச் சேர்ந்த அதிகாரிகள் எல்லாம் வாசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எவ்வளவுதான் வருமானம் வேண்டுமென்றாலும் டயரக்ட் டாக்ஸ் மூலமாகப் போட்டுக்கொள்ளலாம். இன்டைரக்ட் டாக்ஸ் மூலம் போடும் போதுதான் உத்தியோகஸ்தர்களுடைய செலவு எல்லாம் ஏராளமாகிக் கொண்டேபோகும். அப்படியில்லாமல் ஒரு குறிப் பிட்ட அளவிற்கு, அதாவது ஒரு குறிப்பிட்ட பெர்ஸென்டேஜ் தான் செலவு செய்யவேண்டும் என்றிருக்கவேண்டும். ஒரு திட்டத்தின் கீழ் ப்ரொடக்டிவ் எக்ஸ்பென்டிச்சர் குறைவாகவே இருக்கவேண்டும். அம்மாதிரியில்லாமல் வேறு ஏதாவது செலவு செய்வோமானால் ப்ரொடக்டிவ் ரிஸல்ட் மிகவும் குறைவாகவே இருக்கும். ஆகவே இதையும் நாம் கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும், இன்னொரு விதமாகவும் பணம் சேர்த்துக் கொள்ளலாம்.

பப்ளிக் செக்டாரிலிருந்து அதிகப்படியான பணத்தைப் பெற்றுக் கொள்வது என்பது. இன்றைக்கு அரசாங்கம் ஃபெர்டிலைஸர்ஸ், எலக்ட்ரிஸிட்டி போன்றவைகளை எடுத்து நடத்துகிறது. இன்னும் இது போன்ற பல பெரிய தொழில்கள் இருக்கின்றன. இதன் மூலமாகவும் ஓரளவுக்கு வருவாய் கிடைக்கும்.

லைப் இன்ஷூரன்ஸை நேஷனலைஸ் பண்ணியிருக்கிறார்கள். 12-00 noon. அவர்கள் அதை நேஷனலைஸ் செய்த பிறகு ஏகப்பட்ட பணம் அரசாங்கத்திற்குக் கிடைத்து வருகிறது. ஏறக்குறைய 15 கோடி ரூபாயிலிருந்து 20 கோடி ரூபாய் வரை கிடைப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, ஓரளவு தொழில்களைத் தேசிய மய மாக்குவதில் தவறில்லை. அதனால் அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பணம் கிடைக்கிறது. வெளி நாடுகளிலிருந்து பணம் கடன் வாங்கி அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்ற லாம் என்று சொல்கிறார்கள். அதற்கும் ஒரு எல்லை இருக்க வேண்டும். வெளி நாடுகளிலிருந்து நாம் வாங்குகின்ற பணத்தை என்றைக்காவது திருப்பிக் கொடுத்துத்தான் ஆக வேண்டும். ஆகவே, கடன் வாங்கும்போது மிகவும் ஜாக்கிரதை யாக இருக்க வேண்டும். எதற்குக் கடன் வாங்க வேண்டும், எதற்குக் கடன் வாங்கக் கூடாது என்பதை அலசிப் பார்த்து முக்கியமான விஷயங்களுக்கு மட்டுமே கடன் வாங்க வேண்டும். நமக்குச் சுய நம்பிக்கை ஏற்பட நாட்டின் சேமிப்பை வைத்துக் கொண்டு முன்னேற்றம் அடையவேண்டுமே தவிர வெளி நாடுகளி லிருந்து அதிகமான அளவில் அதற்காகக் கடன் வாங்கக் கூடாது. சில முக்கியமான தொழில்களுக்கு இயந்திரங்கள் வெளி நாட்டில் இருந்து வாங்க வேண்டிய அவசியம் ஏற்படலாம். அந்த இயந் திரங்களைத் தருவிப்பதற்கு வேண்டிய அளவு கடனைத்தான் வெளி நாடுகளில் இருந்து வாங்க வேண்டுமே தவிர, அதிகமாகக் கடனை வாங்கி நமது நாட்டை வெளி நாட்டுக்கு "மார்ட்கேஜ்" ஆக வைக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து.

நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தவரை 400 கோடி ரூபாய்க்குத் திட்டம் போட்டிருக்கிறார்கள். நல்ல முறையில் போட்டிருக்கிறார்கள். இந்தச் சபை உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்று உட்கார்ந்து பரிசீலித்து எல்லா விதத்திலும் நல்ல முறையில் திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள். இதிலும் சில மாறுதல்கள் செய்யலாம். சிலவற்றுக்கு அதிகமாகப் பணம் ஒதுக்கி இருக்கிறார்கள்; சிலவற்றுக்குக் குறைவான பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். இன்னும் கொஞ்சம் யோசித்துப் பார்த்து முக்யத்துவம் கொடுக்க வேண்டிய (ப்ரையாரிடி) இனங்களுக்கு அதிகப் பணம் ஒதுக்க வேண்டும். விவசாயத்துக்கு, உணவுப் பொருள் உற்பத்திக்கு முதலிடம் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம். "பர்டிலைசர் பாக்டரி" அமைப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். "அக்ரிகல்சர், புட், பவர், இண்டஸ்ட்ரிஸ்" ஆகியவற்றுக்கு அதிகமான அளவுக்குப் பணத்தைச் செலவு செய்து அந்தத் தொழில்கள் வளர்ச்சி பெற வழி செய்யவேண்டும்.





இப்போது விவசாயத்தைப் பொறுத்தவரை முக்கியமாக "பர்டிலைசர் பாக்டரி" உடனடியாக அமைக்கப்பட வேண்டும். அதன் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். எண்ணூரில் ஒரு பாக்டரி அமைக்கப் போகிறார்கள். நேற்று அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளி விவரத்தில் நமக்குத் தேவைப்படுகிற உரத்தின் அளவு 140,000 டன் என்றும், 10,000 டன் தான் கிடைத் திருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். இதைப் பார்க்கும் போது வியப்பாக இருக்கிறது. ஆகவே, இந்த உரத் தொழிற் சாலைக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உணவு உற்பத்தியானது முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிவடைந்த பிறகு ஏழு லட்சம் டன் உணவு உற்பத்தி பெருகியிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 14 லட்சம் டன் உணவு உற்பத்தி பெருகும் என்று எதிர்பார்த்தாலும் 9 லட்சம் டன்தான் வரும் என்று கூறியிருக்கிறார்கள். அது மிகவும் குறைவான உயர்வு என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். பதினைந்து லட்சம் டன் கிடைப்பதாயிருந்தால் உணவு நெருக்கடி நிச்சயமாக நீங்கி இருக்கும். அவ்வாறு உற்பத்தி பெருக முடியாமல் இருப் பதற்கு மூல காரணம் உரம் இல்லாத கஷ்டந்தான். உரம் அதிக மான அளவில் கிடைத்தால் நாம் கேரள ராஜ்யத்திற்குக் கூட உணவுப் பொருள் கொடுக்கக் கூடிய சந்தர்ப்பம் கிடைக்கும்.

அடுத்தபடியாக, "எலக்ட்ரிசிடி பவர் டெவலப்மெண்ட்" பற்றி அதே சிரத்தை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். இதில் அதிக மான அளவுக்கு முதலீடு செய்து வருகிறார்கள். இந்த விஷயத்தில் நல்ல முறையில் வேலை செய்து வருகிறார்கள். ஆனால், இதில் ஒரு கருத்து வேற்றுமை எனக்கு இருக்கிறது. "இவ்வளவு கிராமத் தில் லைட் போட்டு விட்டோம், இத்தனை வீதிகளில் லைட் போட்டு விட்டோம்" என்று சொல்லி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக் கூடாது. ஒவ்வொரு கிலோ வாட் மின்சாரமும் பொருளாதாரத் துறையில் நாட்டை முன்னேற்றப் பயன்படுத்தப்படுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். வீடுகளிலும், வீதிகளிலும் விளக்குகள் போட்டு விட்டால் போதாது. மின்சார சக்தியை இம்மாதிரி விரயம் பண்ணக் கூடாது. நம்மிடம் மின்சார சக்தி நிறைய இருந்தால் கிராமங்களுக்கெல்லாம் விஸ்தரிக்கலாம். ஆனால் இருக்கின்ற மின்சார சக்தியைப் பயன்படுத்துவதில் முதலிடம் தொழில்களுக்குக் கொடுக்கவேண்டும். நேற்றைய தினம் நடந்த விருந்தில் கனம் உள்நாட்டு அமைச்சர் அவர்கள் பேசும்போது "ரஷ்யாவில் ரோடுகள் போடுவது கூட அவ்வளவு முக்கியமல்ல; ட்ராக்டர்கள் வாங்கி விவசாயத்திற்குப் பயன் படுத்துவதுதான் முக்கியமாகக் கருதப்படுகிறது" என்று சொன் னார்கள். ஆகவே, எது முக்கியம், எது முக்கியமல்ல என்பதைச் சீர்தூக்கிப் பார்த்து மின்சார சக்தியைப் பயன்படுத்த வேண்டுமே தவிர. கிராமங்களுக்கெல்லாம் மின்சாரத்தை விஸ்தரிக்கிறோம் என்று சொல்வது சரியல்ல.

[Sri C. R. Ramaswami] [6th September 1960

தொழில் துறையில் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்பதை அரசாங்கமே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நமது மந்திரி திரு. வெங்கட்ராமன் அவர்கள் மேலும் விபரத்தை எழுதிக் கொண்டு ஒரு பெரிய புஸ்தகம் தயார் செய்து எந்தெந்தத் துறையில் நமது மாகாணம் முன்னேற்றம் அடைய வழிகள் இருக்கின்றன; எந்தெந்தப் புதிய துறைகளில் நாம் உடனடியாக ஈடுபடவேண்டு மென்பதைப் பற்றியெல்லாம் அந்தப் புத்தகத்தில் கூறியிருக்கிறார்கள். அதில் தனியார் துறையில் எந்தெந்தத் தொழில்களை யெல்லாம் அமைக்கலாம் என்று கூறியிருக்கிறார்கள். இதை எல்லாரும் பயன்படுத்திக் கொண்டு நமது மாகாணத்தின் முன்னேற்றத்திற்கு அதிகமாகப் பாடுபட வேண்டும். இதில் குறிப்பிடப் பட்டிருக்கும் முக்கியமான திட்டம் இரும்புத் தொழிற்சாலை பற்றியதாகும். கனம் சட்டநாத கரையாளர் சொன்னது போல் தொழில்கள் பரவலாக ஏற்பட வேண்டும். நாடு பூராவும் இருக்கவேண்டும். ஒவ்வொரு மாகாணத்திலும் இந்த மாதிரி இரும்புத் தொழிற்சாலை இருந்தால் அதனால் "ட்ரான்ஸ்போர்ட்" கஷ்டம் குறையும். இரும்புத் தொழிற்சாலை, நெய்வேலி லிக்னைட் ஆகிய இரண்டும் நம்முடைய மாகாணத்தில் மிக முக்கியமான தொழிற்சாலைகள் ஆகும். அரசாங்கம் இந்த இரண்டிலும் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். நிபுணர்கள் கொண்ட குழு ஒன்று இரும்புத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கான பரிசீலனையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் வெற்றி காண்பார்கள் என்பதில் சந்தேகம் கிடையாது. இது நம்முடைய நாட்டின் இரும்புப் பற்றாக்குறையை நீக்கும் என்று நாம் நிச்சயமாக நம்பலாம். இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற எல்லாரும் துணையாக இருந்து வெற்றிகரமாக நடத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**SRI J. MATHA GOWDER:** கனம் சபைத் தலைவர் அவர்களே, நம் முன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மாதிரித் திட்டத்தை நாம் இன்றைக்கு விவாதத்திற்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த மாதிரி இதற்கு முன்பு நாம் இரண்டு திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம். முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் என்ற திட்டங்களைப் போட்டு, அந்தத் திட்டங்கள் எவ்வாறு நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றன என்ற புள்ளி விவரங்களைப் பற்றியெல்லாம் ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்ட இறுதியிலும் நமக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அதை நாம் அறிந்தே இருக்கிறோம். அதே நிலையில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவாகும் தறுவாயில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவு எவ்வகையிலே இருக்கும் என்பதைப் பற்றி நம்மிடத்திலே இன்றைக்கு மாதிரித் திட்டத்தைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். சுமார் பத்தாயிரம் கோடி ரூபாய் உத்தேச செலவு அளவிலே இந்த நாட்டின் திட்டத்தைப் பொதுவாக வகுத்திருக்கிறார்கள். நடைமுறையிலே திட்டங்கள்



6th September 1960] [Sri J. Matha Gowder]

எவ்வளவு மாறுபடும் என்பதைப்பற்றி இப்பொழுது நாம் சர்ச்சைக்கு எடுத்துக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. மக்களுடைய அவசியத்தைப் பொறுத்து, நாட்டினுடைய நிலைமையைப் பொறுத்து, திட்டங்களை நாம் மாற்றிக்கொண்டே போகிறோம். ஆனால், இன்று நாம் திட்டம் போடும்போது, ஜனத் தொகை அடிப்படையில் வைத்துத் திட்டத்தைப் போடுகிறோம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் எத்தனை கோடி மக்கள் இந்த நாட்டில் இருக்கிறார்கள், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் போது எத்தனை கோடி மக்கள் அதிகமாகப் பெருகு வார்கள் என்ற கணக்கை வைத்து, ஜனத்தொகைப் பெருக்கத் திற்கு ஏற்றபடி உணவுத் தானியங்களை அதிகமாக உற்பத்தி செய்யத் திட்டமிடுகிறோம். அதிக தானிய உற்பத்திக்கும் அதிக ஜனத்தொகை உற்பத்திக்கும் இணக்கம் ஏற்படும் வகையில், சரிக் கட்டக்கூடிய வகையில் திட்டம் போடுகிறோம். ஜனத்தொகைப் பெருக்கம், $1\frac{1}{2}$ சத விகித அளவுக்கு அதிகரிக்கும் என்று இரண்டா வது திட்டத்தில் மதிப்பிட்டிருந்தாலும், இப்பொழுது 2 சத விகிதத்திற்கும் மேலாக உயர்ந்திருப்பதைப் பார்க்கும்போது அதை நம்முடைய நாட்டின் துரதிருஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். எந்த அளவுக்கு தானியங்களை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டுமென்று திட்டம் போட்டிருந்தோமோ, அதையும் மிஞ்சிவிட்டது ஜனத்தொகைப் பெருக்கம். ஆகவே, ஜனத் தொகைப் பெருக்கத்தை நாம் கண்காணிக்க வேண்டும். இதற்கு ஒரு சரியான தீவிரமான நடவடிக்கை வேண்டும்.

இந்த நாட்டில் ஜனப் பெருக்கம் அதிகமாகாமல் இருப்பதற்காகக் குடும்பக் கட்டுப்பாட்டை நாம் செம்மையாக அமுல் படுத்தினால்தான் இந்தத் திட்டமெல்லாம் பலன் தரமுடியுமே அல்லாது, ஜனப் பெருக்கம் ஏறிக்கொண்டே போகப் போக நாம் எந்தத் திட்டத்தைப் போட்டாலும் அந்தத் திட்டங்கள் நாளாவட்டத்தில் எதிர்பார்த்த பயனில்லாமல் போய்விடும். இதை நாம் கண் கூடாக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பார்த்திருக்கிறோம். இதற்கு சர்வ கட்சிக்காரர்களுடைய ஆதரவும் வேண்டும். குடும்பக் கட்டுப்பாடு வேண்டும் என்று நாம் சொல்லுகிறோம். ஆனால், ஜனப்பெருக்கம் ஏற ஏற, அதற்கேற்றபடி நாட்டிலுள்ள நிலப் பரப்பிலே விவசாயம் செய்து மக்களுக்கு எவ்வளவு அதிகமாக உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யமுடியும் என்று திட்டம் போடும்போது, அதையும் மீறி ஜனப்பெருக்கம் ஏறிக் கொண்டே போயிருக்கும் நிலைமையைப் பார்த்தால், நிச்சயமாக எந்த நாளிலும் இந்த நாட்டினுடைய பிரச்னையைத் தீர்க்க முடியாத நிலைமையில் இருக்கிறோம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த நிலையில் சர்க்கார் திட்டம் வகுத்துக்கொண்டு, குடும்பக் கட்டுப்பாடு தேவை என்று சொல்லும்போது, சர்க்கார் இதைச் சொல்லிவிட்ட காரணத்திற்காக சீக்கிரமாக ஒரு பத்திரிகையிலே படம் வருவதைப் பார்க்கிறோம். நம்முடைய சுகாதார அமைச்சர் கனம் திரு. மாணிக்கவேலு நாயக்கருடைய கையிலே

[Sri J. Matha Gowder] [6th September 1960

க்த்தியை வைத்துக்கொண்டு பெண் ஒருத்தியினுடைய வயிற்றை அவர் அறுக்கிற மாதிரி விசித்திரமான படங்களைப் போடுகிறார்கள். எந்த நோக்கத்திற்கு மக்களுக்காக இந்தக் குடும்பக் கட்டுப் பாட்டை ஏற்படுத்தியிருந்தோமோ அதற்கு மாறாக, அதுவும் கிராமப்புறத்திலே இருக்கும் மக்களுடைய நன்மைக்கு நேர்மாறாக, ஏதோ சர்க்கார் கத்தியை எடுத்து மக்களை அறுக்கிறார்கள் என்று தோன்றும் முறையில் இந்த நாட்டினுடைய மக்கள், அதுவும் குறிப்பாக தமிழ்நாட்டு மக்களுடைய பண்பு இப்படிப் போகிறதே என்று பார்க்கும்போது பரிதாபப்படக்கூடிய நிலையிலே நாம் இருக்கிறோம்.

நாம் திட்டம் போட்டு மக்களுடைய வாழ்க்கைத் தரத்தைப் படிப்படியாக ஒவ்வொரு ஆண்டும் உயர்த்திக்கொண்டு போக வேண்டுமென்று நினைத்துக் காரியங்கள் செய்யும் போது, அதைக் கவனிப்பதை விட்டுவிட்டு, ஏதோ மக்களைக் கொலை செய்து விடுவோம் என்று தோன்றும்படி மக்களுடைய மனதைத் திருப்பப் பார்க்கிறார்கள். இந்த நாட்டினுடைய முன்னேற்றத்தைக் கூட தடை செய்யக்கூடிய அளவுக்கு மக்களிடையே பிரசாரம் செய்யக் கூடிய மக்கள் இந்தத் தமிழ்நாட்டில் இருப்பார்களானால், அதைத் தமிழ்நாட்டின் துரதிருஷ்டம் என்றுதான் சொல்லவேண்டும். அதுபோன்ற பத்திரிகைகளைச் சர்க்கார் கட்டுப்படுத்தினால்கூட நல்லது. திட்டங்களை நிறைவேற்ற முடியாத அளவுக்கு பத்திரிகை செயல்படுமானால், அதைக் கட்டுப்படுத்தி விட்டால்கூட ஓரளவு நம்முடைய நாடு முன்னேறும் என்று நான் நினைக்கிறேன். இது உடனடியாக கவனிக்கப்படவேண்டிய விஷயம். எதிர்க் கட்சிக்காரர்களும் இதற்கு ஒத்துழைக்கவேண்டும். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் மக்களுக்கும் நாட்டுக்கும் நல்லது செய்வதற்காகத்தான் என்பதை மக்களிடத்திலே பிரசாரம் செய்யவேண்டுமென்று மக்கள் சார்பாக எதிர்க்கட்சிக்காரர்களை நான் மிகவும் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நாட்டினுடைய தொழில் அபிவிருத்தியைக் குறித்து இந்தப் புத்தகத்திலே கொடுத்திருக்கும் விவரங்களைப் பார்க்கும்போது, இரும்புத் தொழிற்சாலையை இங்கே ஏற்படுத்துகிறோம், கரும்பு ஆலைகளை இங்கே ஏற்படுத்துகிறோம் என்கிறார்கள். நீலகிரியி லுள்ள களி மண்ணைக்கூட மந்திரி கனம் திரு. வெங்கட்ராமன் அவர்கள் விட்டபாடில்லை. களி மண்ணைக் கொண்டு என்ன செய்ய வேண்டுமென்று ஆராய்ச்சி செய்வதற்கு லட்சக் கணக்கான ரூபாயை ஒதுக்கிவைத்து, அதையெல்லாம் எப்படி நாம் பயன் படுத்தி இந்த நாட்டு மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கமுடியும், இந்த நாட்டு மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை எப்படி உயர்த்த முடியும் என்பதைக் குறித்து ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்து நாம் பெருமைப் படவேண்டும்.

(மிஸ்டர் ஸ்பீக்கர் தலைமை வகித்தார்.)

ஒன்று எதிர்க் கட்சி நினைக்கலாம்—சிந்திரி-மந்திரி என்பது போல். 'அங்கே பெரிய இரும்புத் தொழிற்சாலை, இங்கே களி மண் தொழிற்சாலை தானா?' என்று மக்களிடத்திலே சொல்வதற்குக்



6th September 1960] [Sri J. Matha Gowder]

காத்துக்கொண்டிருப்பார்கள். அது அல்ல பிரச்னை. இந்த நாட்டில் கிடைக்கும் கனி வளங்களைக் கண்டு பிடித்து, இரும்பை யும், நிலக்கரியையும் உபயோகப்படுத்தி இரும்புத் தொழிற்சாலை யொன்றை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். பல கரும்பு ஆலைகளை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். விறைகப் போகும் களிமண்ணைக்கூட எடுத்து எந்த விதமாகப் பயன்படுத்தலாம், மக்களுக்கு இதனால் என்ன பலன் ஏற்படும் என்ற முறையிலே ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள், என்பதைப் பார்க்கும் போது நாம் சென்னை மாநிலத்திலிருக்கும் அமைச்சரவையைப் பெருமைப்படுத்தி மக்களிடத்திலே சொல்லவேண்டுமென்று நான் எதிர்க்கட்சிக்காரர்களை மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்ளு கின்றேன்.

தொழிலாளிகளுக்குக் கூலி நிர்ணயம் செய்யும் அளவில் அந்தத் தொழிலில் அவர்களுக்குப் பங்கை ஏற்படுத்தக்கூடிய அளவில் இதிலே அவர்கள் முதலீடு செய்ய முடியுமா என்று ஒருசிலர் கேட்கின்றார்கள். 'இன்றைக்கு இருக்கும் வருவாயை வைத்து எப்படி அவர்கள் மிச்சம் பிடித்து எந்த முதலீட்டிலே போடு வார்கள்?' என்று கேட்கிறார்கள். தொழிலாளிகள் அதிகக் கூலி வேண்டுமென்று கேட்கும் போது, முதலாளிகள் அதிகமாகச் சம்பாதித்து விடுகிறார்களே, அதனால் தங்களுக்கும் அதிக அளவுக்குக் கூலி வேண்டுமென்று அந்த நோக்கத்தோடுதான் பார்க்கிறார்களே தவிர, தொழில் துறையிலே தொழிலாளிகளுக்கும் பங்கு உண்டு என்ற நிலையை நாம் ஏற்படுத்தினால், நிச்சயமாகத் தொழிலாளிகள் தங்களுடைய பங்கை அங்கே போடத் தயாராக இருக்கிறார்கள். அவர்களுக்குக் கிடைக்கும் ஊதியத்திலே மிச்சம் பிடித்து, அந்தத் தொழிலில் அவர்கள் முதலீடு போடத் தயாராக இருக்கிறார்கள் என்ற உண்மையை நான் அமைச்சர் அவர்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன். தொழிலாளர்களைப் பார்த்து, 'தொழிலில் நீங்களும் முதலீடு போட்டால் உங்களுக்கு இத்தனை சத விகிதம் லாபம் இருக்கிறது; ஒரு தொழிற்சாலையில் ஒரு ஆண்டுக்கு இத்தனை ரூபாய் லாபம் ஏற்படுகிறது, அதிலே இத்தனை சத விகிதம் தொழிலாளர்களுக்குப் பங்கு கொடுக்கப்படும்' என்று ஏற்படுத்தினால் நிச்சயமாக எந்தத் தொழிலாளியும் அதிலே சேரமாட்டேன் என்று சொல்லமாட்டார்: சம்பளத்திலே சிக்கனமாகச் செலவழித்து, மிச்சம் பிடித்துப் போட அவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

ஸோனல் முறையில், ஒவ்வொரு மாகாணத்தினுடைய அவசியங் களையும் பார்த்து நாம் திட்டங்களை ஏற்படுத்துவதாகச் சொல்கிறோம். அதே நிலையில், மாகாண அளவிலே திட்டங்களைப் போடும்போது, ஜில்லா அளவிலும் வரவேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். சென்னை நகரத்தை எடுத்துக்கொண்டால், இதில் பல தொழில் பேட்டைகள் அதிகரித்துக்கொண்டு போகின்றன. பல தொழிற்சாலைகள்

[Sri J. Matha Gowder] [6th September 1960

ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. பல தொழிற்சாலைகளைத் தனிப்பட்டவர்களும் ஆரம்பிக்கிறார்கள். சர்க்கார்த் துறையிலும் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. ஆனால், கிராமப்புறங்களில் பரவியிருக்கிறதா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இந்த நிலையிலே நம்முடைய மாநிலத்திலேயே எந்த ஜில்லா பின்தங்கியிருக்கிறது என்பதையும்கூட நாம் பார்க்கவேண்டும். ஏதோ இராமநாதபுரம் ஜில்லாவைச் சொல்லக்கூடும் என்றாலுங்கூட, நான் ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த மாநிலத்தின் கடைசிப் பிள்ளை நீலகிரி ஜில்லாவாகும். இதைவிடச் சின்னக் குழந்தை பிறக்கப் போவதில்லை. அந்த அளவுக்கு நீலகிரி ஜில்லா மாத்திரம் சென்னை மாநில சர்க்காருடைய கடைசிப் பிள்ளை—செல்லக் குழந்தை என்றுகூட நான் சொல்வேன்.

**Sri D. S. AUTHIMOOLAM :** கன்யாகுமரி ஜில்லா . . . . . .

**Sri J. MATHA GOWDER :** நீலகிரி ஜில்லாவைப் பொறுத்தவரையில் என்ன செய்யவேண்டும் என்பதிலே அரசாங்கம் கண்ணுங் கருத்துமாக இருக்கவேண்டும் என்பதை நான் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN :** Baby Food தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுகிறதே. (சிரிப்பு.)

**Sri J. MATHA GOWDER :** Baby Food தொழிற்சாலை ஆரம்பிப்பதைக் குறித்து மிகவும் நன்றி. இந்த மாநிலத்தில் இருக்கும் பிற ஜில்லா மக்களுக்குக்கூட Baby Food கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். அவ்வளவையும் நாங்களே சாப்பிட்டுக் கொண்டிருக்கப் போவதில்லை. இந்த நிலையிலே ஒன்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். நம்முடைய மாநிலத்திற்கே நீலகிரி ஜில்லாவை ஒரு மாதிரி ஜில்லாவாக, அதாவது மாடல் டிஸ்ட்ரிக்டாக எடுத்துக்கொள்ளவேண்டும். இந்த ஜில்லாவிற்கு சுய தேவை பூர்த்தி என்பதைப்பற்றி பரிசீலிக்கவேண்டும். இரண்டு திட்டங்கள் போட்டோமே, அவைகளில் இதைப்பற்றி பரிசீலிக்கவில்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது சர்க்கார் இதை ஒரு கொள்கையாக வைத்துக்கொண்டு, ராஜ்யத்தில் இதை மாடல் டிஸ்டிரிக்டாக வைத்துக்கொண்டு அங்கே சுய தேவையை பூர்த்தி செய்ய திட்டமிடவேண்டும். அப்படிச் செய்தால் நம் ராஜ்யத்தில் இருக்கக்கூடிய எல்லா ஜில்லாக்களிலும் 10, 15 வருஷங்களுக்குள் சுய தேவையைப் பூர்த்தி செய்து விடலாம். சமுதாய நலத் திட்டத்தில் மாடல் வில்லேஜ் என்று எதற்காக எடுத்துக்கொண்டிருக்கிறோம்? சுய தேவையைப் பூர்த்தி செய்வதற்காகத்தான். ஆகவே, நம் மாநிலத்தில் நீலகிரி ஜில்லாவை மாடல் டிஸ்டிரிக்டாக எடுத்துக்கொண்டு சுய தேவையைப் பூர்த்தி செய்யவேண்டுமென்று வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.



6th September 1960] [Sri J. Matha Gowder]

நீலகிரி ஜில்லாவைப் பொறுத்தவரையில், எந்தத் திட்டம் போடும்பொழுதும், முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலும் சரி, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் சரி, அந்த ஜில்லாவினுடைய சுயதேவையை பூர்த்திசெய்ய என்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றி சரியானபடி கவனிக்கவில்லை என்று ஒரு குற்றச்சாட்டாக சொல்லவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த ஜில்லாவின் நிலைமை என்ன, சீதோஷ்ண நிலைமை என்ன என்பதைப்பற்றி கவனிக்கப்படவில்லை. எந்த ஒரு தொகை ஒதுக்கினாலும், அந்த ஜில்லாவுக்கு சமவெளிப் பிரதேசத்திற்கும் மலைப் பிரதேசத்திற்கும் ஒரே மாதிரி 'பெர் காபிடா' கணக்குப்போட்டுத்தான் ஒதுக்குகிறார்கள் என்று பல முறை நான் இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். 'பாபுலேஷன் பேஸிஸில்' பணத்தைப் பிரித்துக் கொடுக்கும் பொழுது, நீலகிரி ஜில்லாவில் இருக்கக்கூடிய 3½ லட்சம் ஜனத்தொகைக்கு 'பெர் காபிடா' எவ்வளவு என்று கணக்குப்போட்டு கொடுக்கிறோம். அதை வைத்துக்கொண்டு அங்கு வேலை ஒன்றும் நடக்கவே முடியாது. வேறு ஜில்லாவில் சமவெளிப் பிரதேசத்தில் ரோடு போடுவதற்கு மைலுக்கு ரூ. 1,000, ரூ. 2,000 செலவு ஆனால், நீலகிரி ஜில்லாவில் மலைப் பிரதேசத்தில் ரோடு போடுவதற்கு மைலுக்கு ரூ. 15,000 வேண்டும். ஆகவே, எங்கள் ஜில்லாவினுடைய நிலை என்ன என்பதை பரிசீலிக்கவேண்டும். மூன்றாவது ஐந்து வருடத் திட்டமல்ல, 10-வது ஐந்து வருடத் திட்டம் போட்டாலும் இம்மாதிரி 'பெர் காபிடா' கணக்குப்போட்டு அந்த ஜில்லாவிற்கு பிரித்துக்கொடுத்தால், அந்த ஜில்லா என்றைக்கும் முன்னேறவே முடியாத நிலையில் இருக்கிறது என்பதை மிகவும் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திட்டம் போடும்பொழுது இதை மனதிலே வையுங்கள் என்று முன்பே சொல்லியிருக்கிறேன். எங்கள் ஜில்லா ஒரு செல்லக் குழந்தை போன்றது, அதற்கு கொஞ்சம் அதிகமாக கொடுக்க வேண்டும் என்பதை மனதில் வைக்கவேண்டுமென்று நான் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அந்த ஜில்லாவில் வேறு எந்தவிதமான 'இண்டஸ்டிரியல் ஸ்கோப்பும்' கிடையாது. அங்கு தேயிலைத் தோட்டங்கள்தான் இருக்கின்றன. தேயிலை பாக்டரியை அடுத்து வேறு ஏதாவது மில்கள் வைக்க முடியுமா என்றால், அதற்கு சீதோஷ்ண நிலை ஒத்துக்கொள்ளவில்லை. தொழில் பேட்டைகள் ஆரம்பிக்க வேண்டுமென்றால் அதுவும் முடியவில்லை. 'பிலிம் இண்டஸ்டிரி' வருகிறது. 'பேபி புட் பாக்டரி' வருகிறது என்பதுபற்றி சந்தோஷப்படுகிறேன்.

அங்கு இருக்கக்கூடிய இரும்பை என்ன செய்கிறார்கள் என்பதைப்பற்றி திட்டவட்டமாக முடிவு தெரியவில்லை. அங்கு ஏராளமாக இரும்பு கிடைக்கிறது, தங்கம் கிடைக்கிறது,

[Sri J. Matha Gowder] [6th September 1960

அலுமினியம் கிடைக்கிறது. அதை ஏன் பயன்படுத்தக்கூடாது? (குறுக்கீடு.) தங்கம் இருக்கிறது. நான் காண்பிக்கிறேன். அமைச்சர் அவர்களுக்கு நேரிடையாகக் கொண்டுபோய் காண்பிக்கிறேன். • (சிரிப்பு.) நான் தங்கத்தை எடுத்துக் கொடுக்க முடியும். சுரங்கம் இருக்கிறது. வெள்ளைக்காரர் காலத்தில் சுரங்கத்திலிருந்து தங்கத்தை எடுத்து எப்படி அவர்கள் அதை பயன்படுத்தினார்கள் என்பதைக் காண்பிக்கிறேன். அங்கே உடைந்த மெஷினரிகூட ரிஸர்வ் பாரெஸ்டில் இருப்பதை நான் காண்பிக்கிறேன். அந்த நிலையிலே அதைப் பரிசீலனை செய்து நாட்டிற்கு பயன்படுத்தவேண்டும். இண்டஸ்டிரீஸ் மினிஸ்டர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன், தயவு செய்து அதை பரிசீலனைசெய்து பார்க்கவேண்டும் என்று. அவ்வாறு பரிசீலனை செய்து அதிலிருந்து கிடைக்கக்கூடிய பலனை அந்த ஜில்லா மக்களே அனுபவிக்கக்கூடிய அளவிலே அந்த ஜில்லாவிலே ஏதாவது ஒரு தொழிற்சாலை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்யவேண்டும் என்று நான் மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். சேலத்திற்குக் கொண்டுபோகலாம் என்றால் அதிக தூரம் கொண்டு போகவேண்டிய நிலைமை ஏற்படும். அந்த ஜில்லாவில் இருக்கக்கூடிய பொருள்களையெல்லாம், வேறு ஜில்லாக்களுக்கு கொண்டு போக ஆரம்பித்தால், அந்த ஜில்லா மக்களுக்கு எந்த விதமான நன்மையும் ஏற்படாது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு.) சேலத்திற்குக் கொண்டு வரலாம் என்ற நிலையிலே, வேறு ஜில்லாவிற்குக் கொண்டு வந்தால், அந்த ஜில்லா மக்கள் அதனால் பயன் அடைய முடியாத நிலைமையில் இருக்கிறார்கள் என்பதைப்பற்றி அடிக்கடி சொல்லியிருக்கிறேன். இதை அமைச்சர் அவை நன்கு கவனிக்கவேண்டும். இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட நகலில் சர்க்கார் பல திட்டங்களை கொடுத்திருக்கிறார்கள். குழப்பத்தை உண்டுபண்ணாமல், மக்களுடைய சக்தி விரயமாகாத நிலைமையிலே இந்தத் திட்டம் மக்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்கக்கூடிய அளவிலே, 'மான்பவர்' திட்டத்திற்கு பயன்படக்கூடிய அளவிலே, எதிர்க்கட்சிக்காரர்கள் பிரசாரம் செய்யவேண்டுமே அல்லாது, மக்களின் சக்தியை வேறு துறையிலே இழுத்துச் செல்லக்கூடிய முறையிலே, ஏதோ தேசியம் என்று சொல்லி அரசியல் கட்சியில் அழைத்துக் கொண்டு போகக்கூடிய முறையிலே மக்களிடையே குழப்பத்தை உண்டாக்கக்கூடாது. மூன்றாவது திட்டத்தையாவது குழப்பம் இல்லாமல் எல்லோரும் அமோகமாக ஆதரித்து செய்யக்கூடிய அளவிலே மக்களைப் பயன்படுத்திக்கொண்டு, மக்களுடைய முழு சக்தியும் திட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு வேண்டிய வழிவகை செய்வதற்கு சர்வ கட்சிகளும் ஒத்துழைத்தால், நம் நாடு நிச்சயமாக முன்னேற்றமடையும் என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

MR. SPEAKER : மந்திரி அவர்கள் சொல்லுகிறார் நீலகிரி ஜில்லாவில் தங்கமே கிடையாது என்று.



6th September 1960]

## III.—ANNOUNCEMENTS—*cont.*

### (2) SITTINGS OF THE HOUSE.

MR. SPEAKER : நாளை மாலையும் சபை உட்காரவேண்டும் என்று எல்லா அங்கத்தினர்களும் கேட்டுக்கொண்டதின் பேரில், கட்சித் தலைவர்களும் நானும் அதற்கு ஒப்புக் கொண்டிருக்கிறோம். ஆகையினாலே நாளை மாலை 3 மணி முதல் 5½ அல்லது 6 மணி வரைக்கும் இந்தச் சபைக் கூட்டம் நடக்கும். நாளை மாலை தலைவர்கள் மட்டும் பேசப்போகிறார்கள். கனம் அங்கத்தினர் ஸ்ரீ. சின்னதுரை அவர்கள் ½ மணி நேரமோ, அல்லது ஸ்ரீ. கல்யாணசுந்தரம் அவர்கள் ¾ மணி நேரமோ பேசலாம். பிறகு மற்ற தலைவர்கள் பேசலாம். மாலையில் நேரம் இருந்தால் இன்னும் இரண்டு அங்கத்தினர்கள் பேசலாம் என்பதையும் இந்தச் சபைக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதற்காக இப்பொழுது பேசாமல் இருக்கவேண்டாம். நாளை மாலையில் நேரம் இருந்தால் இரண்டு அங்கத்தினர்கள் பேசலாம். இல்லாவிட்டால் தலைவர்கள் பேசவேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

## VI.—GOVERNMENT MOTION—*cont.*

### (2) DRAFT OUTLINE OF THE THIRD FIVE-YEAR PLAN—*cont.*

* SRI S. RAMASWAMY THEVAR : கனம் சபாநாயகர் அவர்களே, நாம் இப்பொழுது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். நானும் அதைப் பற்றி ஓரிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இரண்டு திட்டங்களை தீட்டிவிட்டோம், அதிலிருந்து நல்ல பலனை அடைந்துவிட்டோம் என்பதற்காக மூன்றாவது திட்டத்தை நாம் இன்று நெருங்குகிறோம். முதலாவதாக நாட்டிலே உணவு உற்பத்தி பெருகி வெளி நாட்டிலிருந்து உதவி இல்லாமல், வெளி நாட்டிலிருந்து இறக்குமதி இல்லாமல் இதுவரையில் நாம் இருந்தோமா என்று பார்த்தால், இல்லை. நாட்டிற்கு முக்கியமாக வேண்டியது உணவு. உணவு உற்பத்தி செய்பவர்கள் விவசாயிகள். நாட்டிலே உணவு பற்றாக்குறை இருந்துவருகிறது. இரண்டு திட்டங்கள் தீட்டியும்கூட உணவு உற்பத்தியை நாம் பெருக்க முடியவில்லை. வெளி நாடுகளுடைய உதவியை நாடிக் கொண்டிருக்கிறோம். அந்தத் திட்டங்களிலுள்ள குறைகளை போக்க வழிவகை செய்யாமல் அதே மாதிரி நாம் இன்னும் திட்டங்களை தீட்டிக்கொண்டே போவோமானால் நாடு முன்னேற முடியாது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று தஞ்சை ஜில்லாவில் தீவிர சாகுபடி முறை கையாளப் படுகிறது. மக்களிடையே தீவிரப் பிரசாரம் செய்யப்படுகிறது. ஏக்கருக்கு 150 பவுண்டு அமோனியம் சல்பேட் போடவேண்டும், அப்பொழுதுதான் பயிர் நல்ல பலனை தரும் என்று சொல்லப் படுகிறது. ஆனால், கிடைப்பதோ 50 பவுண்டுதான். அதற்குமேல்

[Sri S. Ramaswamy Thevar] [6th September 1960

கிடைக்கவில்லை. யாராவது போய்க்கேட்டால் 50 பவுண்டுக்குத் தான் பெர்மிட் கொடுக்கப்படுகிறது. 'கோட்டா' கிடைக்கவில்லை, 'எதிர்பார்க்கப்படுகிறது' என்று சொல்லப்படுகிறது. இந்த அளவிலே போய்க்கொண்டிருப்போமானால், இந்தத் திட்டங்கள் நல்ல முறையிலே நடைபெற முடியாது. ஆற்றிலே போட்டாலும் அளந்து போட வேண்டும் என்று ஒரு பழமொழி உண்டு. திட்டம் தீட்டவேண்டுமென்றால் அதற்கு முதல் கிடைக்கவேண்டும். முதல் எப்படி வருகிறது, எங்கேயிருந்து வருகிறது என்று பார்த்தால், நாம் கடன் வாங்கவேண்டிய நிலை இருக்கிறது. கடன் வாங்கி நாம் இந்தக் காரியங்களைச் சரிவர செய்யமுடியுமா? கடன் வாங்கிச் செய்பவர்கள் எப்படி முன்னுக்கு வரமுடியாதோ, அதேபோன்று நாட்டிற்காக இன்று நாம் கடன் வாங்குவது, பிற
12-30 p.m. நாட்டினரிடம் கையேந்தி நிற்பது நல்லது அல்ல. எந்த சமயத்திலும் கடன் கொடுப்பார்கள் என்று நினைக்க முடியாது. சில சமயங்களில் உதவி செய்யலாம். மற்ற சில சமயங்களில் உதவி செய்யாமலும்போய் விடலாம். பிற நாடுகளின் உதவியை எதிர் பார்த்து நாம் திட்டங்களை தீட்டுவது நல்லது அல்ல என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மற்றபடி நாம் திட்டம் தீட்டுகிறோம். கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவாகிறது. ஆனால் திட்டங்களெல்லாம் நல்ல முறையில் நடக்கின்றனவா என்று நாம் பார்க்கவில்லை. நிர்வாகத்தில் ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன. கண்டிக்கக்கூடிய அளவில் நாம் இல்லை. எல்லாம் சலுகை, தாட்சண்ணியம் என்று போகிறது. நாட்டிலுள்ள மக்களிடமும், இது நம் நாடு, நம் தேசம், நம் கிராமம் என்ற உணர்ச்சிகள் இல்லை. ஒரு சாரார் ஆளுகிறார்கள், அதிகாரம் செய்கிறார்கள், நாம்பாட்டுக்கு இருப்போம் என்ற மனோபாவம் தான் இருக்கிறது. அவர்களுக்கு ஏனைய நாடுகளில் போல் நாமும் வாழவேண்டும், முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற எண்ணம் வருவதில்லை. எந்த திட்டத்தைத் தீட்டினாலும், மக்கள் ஒத்துழைக்க வேண்டும். மக்கள் ஒத்துழைக்காவிட்டால், எதையும் சாதிக்க முடியாது.

(டெபுடி ஸ்பீக்கர் தலைமை.)

மக்கள் சொல்லும் குறைகளை அதிகார வர்க்கத்தார்கள் கவனிப்பதில்லை. எமது தாலூகாவில் ஒரு குடி தண்ணீர் கிணறுக்கு திட்டம் போட்டார்கள், 1,500 ரூபாய் அளவில். கிணறு தோண்டப்பட்டது. தற்செயலாக தண்ணீர் சீக்கிரமே வந்து விட்டது. ரூ. 150 கூட செலவாகியிராது. வெறும் மண் சாந்தில் தான் கட்டியிருக்கிறார்கள். அந்த நிலையில் ஏதாவது குறை சொன்னால், என்னடா செய்து விடுவாய் என்கிறார்கள். மந்திரிகள் வலம் வருகிறார்கள், வரட்டும் நல்லதுதான். அப்படி வரும்போது மக்கள் குறைகளைக் கேட்டுச் சரிசெய்ய வருகிறார்கள். அப்படி வரும்போது எவனோ ஒருவன் தன் குறையை மந்திரியிடம் சொன்னால், பின்னால், அவன்தான் கஷ்டப்படுகிறான். "மந்திரியிடம் மனுக் கொடுத்தாயே, அவர்களைப் போய் கேள்" என்று விரட்டுகிறார்கள். நிர்வாகம் நல்ல முறையிலே இயங்கவில்லை.



6th September 1960] [Sri S. Ramaswamy Thevar]

கண்டிப்பு இல்லை. அதிகாரிகள் இஷ்டம்போல் நடக்கிறார்கள். குழந்தைகளைக்கூட கண்டிக்காவிட்டால், கெட்டு விடுகிறார்கள். நிர்வாகத்தில் கண்டிப்பு அவசியம் என்று வற்புறுத்துகிறேன்.

இன்றோடு இரண்டு திட்டங்கள் போட்டாகிவிட்டன. இரண்டாவது திட்டம் முடிவடையப்போகிறது. நாட்டில் என்ன சுபிக்ஷம் ஏற்பட்டுவிட்டது? 100-க்கு 70 பேர்கள் விவசாயிகள் என்று சொல்லுகிறோம். விவசாய மக்கள் என்ன அபிவிருத்தியைக் கண்டிருக்கிறார்கள்? அவர்கள் பழைய நிலையில்தான் இருக்கிறார்கள். பழைய குடிசை, பழைய கந்தல், விவசாயிகளின் கஷ்டங்கள் கொஞ்சங்கூட மாறவில்லை. அதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். எமது பக்கத்தில் பார்த்தால், தாய்மார்கள் தாலி கூட இல்லாமல், நூல், மஞ்சக் கயிறுதான் போட்டிருக்கிறார்கள்; மணிகூடக் கிடையாது. இந்த நிலையில் நாம் இன்னும் மேலும் மேலும் கடன் வாங்கித் திட்டம் தீட்டுகிறோம்; அயல் நாடுகளில் வேறு போதாதற்குக் கடன் வாங்கப் போகிறார்கள். மக்கள் தவிக்கும் இந்த நேரத்தில் மேலும் மேலும் அதிக வரிகளைப் போடப்போகிறார்கள். இம்மாதிரி வரிகளைச் சுமத்தப் பார்ப்பது சரியல்ல. மக்கள் அதிக வரிப் பளுவைத் தாங்கும் அளவில் இல்லை. இந்த நேரத்தில் கடன் வாங்கி, வரியைச் சுமத்தி திட்டம் போடுவது நல்லதல்ல என்று சொல்ல விரும்புகிறேன்.

திட்டம் போடுகிறோம். நாட்டிலே விலைவாசிகள் உயர்ந்து விட்டன, அதிகமாக உயர்ந்து விட்டன. இருபது வருஷங்களுக்கு முன் கால் ரூபாய்க்கு வாங்கிய பண்டம் இன்று ஐந்து ரூபாய்க்குக் கூட கிடைக்கவில்லை. பண்டங்கள் கிடைத்தாலும், அவை பதுக்கப்படுகின்றன. அதிலேயும் கண்ட்ரோல் முறை வேறு. அது நாட்டிலுள்ள ஒரு சிலருக்குத்தான் கொடுக்கப்படுகிறது. "மானொபொலி ஆப் ட்ரேட்" கொடுக்கப்படுகிறது. இந்த முறைகள் ஒழிய வேண்டும். மக்கள் திட்டங்களுக்கு ஒத்துழைக்க வேண்டுமானால், இந்த கண்ட்ரோல்கள் ஒரு சிலருக்கு மாத்திரம் கொடுப்பதைக் கைவிடவேண்டும். லைசென்ஸ்கள், பர்மிட்டுகள், கோட்டாக்கள் இவை சிலருக்குக் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். நாட்டிலே ப்ரீ ட்ரேட் இருக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

மேலும் மேலும் அதிக வரிகளைப் போட்டு மக்களை அதிகக் கடனாளிகளாக்காமல், அவர்கள் வாழ்வைப் பயனுள்ளதாகச் செய்யவேண்டும். முக்கியமாக எமது பகுதியில், கொடுத்த கடன்களை சர்க்காரால்கூட வாங்க முடியவில்லை. அடிக்கடி ஜப்திகள் நடக்கின்றன. அதே சமயத்தில், விவசாயி உழவு காலத்தில், பயிரிடும் காலத்தில், கலெக்ஷன் ட்ரைவ் என்று கிராமந்தோறும் போய், ஆடு, மாடுகளை ஜப்தி செய்கிறார்கள். எமது பகுதியிலே செட்டில்மெண்ட் முடியவில்லை. க்ரௌண்ட் டாக்ஸ் போட்டு, ஒன்பது வருஷ வரிகளை, ஒரே நாளில் கட்டு என்று பிடிவாதம் செய்கிறார்கள்; ஜப்தி செய்கிறார்கள். வரிகளை அப்படிக் கொடுக்காவிட்டால், "ஏன், நீங்கள் மந்திரிகளிடம்

சொல்ல முடியாது? உத்தரவு வாங்கமுடியாது?" என்று கேட்கிருர்கள். அமைச்சர்கள் கிராமங்களுக்கும் மற்ற இடங்களுக்கும் செல்லும் நேரத்தில், மக்கள் தங்கள் குறைகளைச் சொல்லி, முறையாக மனுக்கள் கொடுக்கிருர்கள். கஷ்டப்படுகிற மக்கள் தங்கள் குறைகளுக்கு பரிகாரம் தேட வழி செய்யவேண்டும் என்று கேட்கிருர்கள். பின்னுலேயே, அதிகாரிகள், "என்னடா செய்துவிட்டார் உன் மந்திரி" என்கிருர்கள். பயமுறுத்துகிருர்கள். ஆகவே, அந்த பீதி போகவேண்டும், பயம் போகவேண்டும். இன்று கிராம மக்கள், மக்கள் போலன்றி, மாக்கள் போல் நடத்தப்படுகிருர்கள் என்று சொல்லிக்கொண்டு, என் உரையை முடிக்கிறேன்.

*SRI N. MAHALINGAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் சபையின் முன் விவாதத்திற்கு இருக்கக்கூடிய, மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம் நாட்டில், நாம் முதல் இரண்டு திட்டங்களை நிறைவேற்றிய பிறகு, இன்னும் திட்டம் அவசியமா என்ற கேள்வியைப் பார்க்கும்போது, நம் நாட்டு அறிஞர்கள் இன்னும் இவ்வளவு பிற்போக்காக இருக்கிருர்களே என்பதுதான் புலனுகிறது. உலக நாடுகள் மிக அதிகமாக முன்னேறிக் கொண்டிருக்கிற நேரத்தில், அவர்களெல்லாம் சிறந்த முறையில் திட்டமிட்டு, அந்தந்த துறைகளில் முன்னேற வேண்டும் என்று நினைக்கிருர்கள். ஆனுல், நம் தேசம் மட்டும் "Laissez Faire" என்ற முறையிலேயே இருந்தோம் என்ருல் நம் தேசம் மிக மிகப் பிற்போக்காகவே இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்த மூன்ருவது திட்ட நகலை சர்க்காரும், சட்டசபையில் உள்ள சகல கட்சிகளும் சேர்ந்து தயார் செய்திருக்கிருர்கள். நம் மாகாணத்திற்கு சுமார் ரூபாய் 390 கோடி என்றிருக்கிறது. நம் சட்ட சபையிலே ஒரு கட்சியார்கள் 1,000 கோடி ரூபாய்க்கு திட்டமிட்டுச் செய்யவேண்டும் என்று கேட்டார்கள். அதற்குப் பின்னுல், திட்டக் கூட்டங்களில் அவர்கள் கலந்துக் கொள்ளாமல், திட்டங்கள் கொடுக்காமல் இருந்திருக்கிருர்கள். அது எங்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுப்பதாக இருக்கிறது. ஆயிரம் கோடி ரூபாய்க்குத் திட்டம் வேண்டுமாருல், அந்தத் தொகை எந்தெந்த துறைகளில் எந்தெந்த அளவுக்குச் செலவு செய்யவேண்டும் என்பதற்கும் வழிவகைகள் சொல்லியிருக்கவேண்டும். அப்படிச் சொல்லாமல் இருந்துவிட்டதால், அவர்கள் தங்கள் கடமையைப் பூரணமாக நிறைவேற்றியதாக இருக்காது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த தேசம் பூராவுக்கும் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு என்று 10,200 கோடி ரூபாய் இருக்கவேண்டும் என்று இப்பொழுது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. தேசத்தில் இருக்கக்கூடிய சிறந்த பொருளாதார நிபுணர்கள் இதைப்பற்றி கூறியிருக்கிருர்கள். ஈஸ்டர்ன் எகானமிஸ்ட் போன்ற பத்திரிகைகள்கூட 9,000 கோடி வரை மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இருக்கலாம் என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். ஆகவே நமது சர்க்கார் பத்து சதவிகிதம் அதிகமாக போட்டிருப்பதெல்லாம் சரியாகத்





தான் இருக்கிறது. 10,200 கோடி என்று நிர்ணயித்திருக்கிருர்கள். இது நடைமுறையில் நடக்கக்கூடிய திட்டம்தான். நமது தேசத்தில் நிர்வகிக்கக்கூடியவையாகவும் நமது நிதி சௌகரியத்தை அனுசரித்தும்தான் இந்த மூன்ருவது ஐந்தாண்டு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மாகாணத்தைப் பொறுத்த மட்டிலும் நம்முடைய ராஜ்ய முன்னேற்றத்திற்கும் சரியான முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய ராஜ்யத்தில் மேலும் அதிகப்படியான தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டியது அவசியமாக இருக்கிறது. அகில இந்தியாவிலேயே விவசாயத் துறையில் நம்முடைய ராஜ்யம் உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது என்று சமீபத்தில் இந்திய உணவு மந்திரி அவர்கள்கூட பார்லிமெண்டில் குறிப்பிட்டிருக்கிருர். அப்படி இருக்கும்போது மேலும் விவசாயத்துறையில் எவ்வளவு தூரம் அதிக உற்பத்தி செய்யமுடியும் என்று பார்க்கும்போது முப்பது சதவிகித அளவுக்குத்தான் செய்யக்கூடியதாக இருக்கிறது. நம்முடைய ராஜ்யத்தில் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமானுல் ராஜ்யத்தின் வளத்தை அதிகப்படுத்த வேண்டுமானுல் அதை தொழில் மூலமாக அதிகப்படுத்துவது அவசியமாக இருக்கிறது. அதற்கு வேண்டிய நம்முடைய ராஜ்யத்திற்கு, அதிகப்படியான உருக்கு, தேன் இரும்பு, நிலக்கரி, கோக் போன்ற பொருள்கள் அவசியத் தேவையாக இருக்கின்றன. பல பொருள்களின் விலையை தேசம் பூராவும் ஒரே விலையாக நிர்ணயம் செய்திருக்கிருர்கள். சர்க்கரை, சிமெட்டி, உருக்கு போன்ற பொருள்களுக்கு தேசம் பூராவும் ஒரே விலையாக நிர்ணயித்திருக்கிருர்கள். அதேபோல் நிலக்கரிக்கும் தேசம் பூராவும் ஒரே விலை நிர்ணயிக்க வேண்டும். அப்படி ராஜ்யம் பூராவும் ஒரே விலையாக இருக்கும்படி நிர்ணயித்தால்தான் தொழில் அபிவிருத்தி அடைவதற்கு வசதியாக இருக்கும். அதன் காரணமாக அகில இந்தியாவில் உற்பத்திச் செலவையும் இங்கு ஆகக்கூடிய உற்பத்திச் செலவையும் பார்க்கும்போது அதிகப்படியான வித்யாசம் இருக்கிறது. அது மட்டுமல்ல. சென்ற ஐந்தாண்டு திட்ட காலத்தைப் பார்த்தாலும் நம் ராஜ்யத்தில் அதிகமாக ரயில்வே போக்குவரத்தில் விஸ்தரிப்பு ஏற்படாமல் இருக்கிறது. அதற்கு ரயில்வே நிபுணர்கள் என்ன காரணம் சொல்லுகிருர்கள் என்ருல் தென் பிராந்திய ரயில்வே ஓடிக்கொண்டிருப்பதால் வருஷம் ஒன்றுக்கு ஐந்து கோடி ரூபாய் அவர்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்லுகிருர்கள். தென் பிராந்திய ரயில்வேக்கு சுமார் இரண்டு லட்சம் டன் நிலக்கரி உபயோகப்படுத்தப்படுகிறது என்றும் சுமார் முப்பது ரூபாய் நிலக்கரி விலையில் வித்யாசம் இருக்கிறது என்றும், கல்கத்தாவுக்கும் தென் பிராந்தியத்திற்கும் விலையில் வித்யாசம் இருப்பதால் இரண்டு லட்சம் டன் விலையில் சுமார் ஐந்தாறு கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது என்றும் சொல்லுகிருர்கள். அதனுல் நிலக்கரி விலையை கட்டுப்படுத்த வேண்டிய நிலை இருக்கிறது

என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். ஆகவே ரயில் துறையை விஸ்தரிப்பதற்கும் தொழில் துறையில் அபிவிருத்தி காண்பதற்கும் நிலக்கரி விலையை நாடு பூராவும் ஒரே மாதிரியாக இருக்கும்படியாக ஏற்பாடு செய்யவேண்டிய அவசியமாக இருக்கிறது. அதற்கு நீம்முடைய சர்க்கார் ஏதாவது முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு விஷயத்தையும் இந்தச் சபையின் முன் வலியுறுத்த விரும்புகிறேன். பத்து லட்சம் ரூபாய்க்கு முதலீடு செய்யக்கூடிய தொழில்களுக்கு லைசென்சு அவசியம் இல்லை என்றும் அவைகளுக்கு வேண்டிய இறக்குமதி லைசென்சு போன்றவைகள் சுலபமாகக் கிடைக்கும் என்றும் சொல்லி இருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கதுதான். அப்படி பத்து லட்சம் ரூபாய் என்று இருப்பதை இருபது லட்சம் ரூபாய் என்று உயர்த்தினால் எவ்வளவோ சௌகரியமாக இருக்கும். அப்படி அதை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதைத் தவிர இறக்குமதி சாமான்கள் மூலதன சாமான்கள் ரா மெடீரியல் முதலியவைகளுக்கு லைசென்சு எல்லாம் டில்லியிலிருந்து வரவேண்டியதாக இருக்கிறது. சிறு கைத்தொழிலை மட்டும் நம்முடைய மாகாண கைத்தொழில் டைரக்டர் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அப்படி இல்லாமல் சென்னை மாகாணத்திற்கு வேண்டிய இறக்குமதி சாமான்கள் எல்லாவற்றிற்கும் லைசென்சு கொடுக்கக்கூடிய அதிகாரத்தை மாகாண கைத்தொழில் இலாகா டைரக்டர் அவர்களுக்கு கொடுக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் நமது மாகாணத்தில் தொழில் அபிவிருத்தி அடைவதற்கு சௌகரியமாக இருக்கும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தொழில் அபிவிருத்தி அடைவதற்கு மூலதன சாமான்களை வெளி நாடுகளிலிருந்து வரவழைக்க வேண்டியதாக இருக்கிறது. அதற்கு வேண்டிய வெளிநாட்டு நாணய வசதி நமக்கு இல்லை. அதனால் வெளி நாட்டிலிருந்து நாம் கடன் வாங்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. சில அங்கத்தினர்கள் "வெளி நாடுகளிலிருந்து கடன் வாங்கக்கூடாது, பொருளாதாரத்தில் கஷ்டம் ஏற்படும்" என்றெல்லாம் சொல்லுகிறார்கள். பொருளாதாரத்தில் தலை சிறந்த தலைவர்கள்கூட அப்படி வெளி நாடுகளிலிருந்து கடன் வாங்கி தொழில் அபிவிருத்தி செய்வதுதான் நல்லது என்று சொல்லி இருக்கிறார்கள். இதை கவனிக்கும்போது கடன் வாங்கக்கூடாது என்று சொல்லுகிறவர்கள் பொருளாதார தத்துவத்தில் மிகவும் பிற்போக்காகத்தான் இருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். உலகத்திலேயே மிக மேம்பட்டு விளங்கக்கூடிய ரஷ்யாகூட ஆரம்ப காலத்தில் அமெரிக்கா தேசத்திலிருந்தும் மற்ற ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் நிறைய கடன் வாங்கித்தான் அபிவிருத்தி வேலைகளைச் செய்திருக்கிறார்கள், என்பதை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். யுத்த காலத்தில் ஜெர்மனி தேசம் எவ்வளவோ சேதத்திற்கு உள்ளாகியது. அந்த தேசத்தின் வளம்



எல்லாம் போய்விட்டது. அந்த தேசத்தின் தொழில் அபிவிருத்திக்காக அதன் பிறகு வெளி நாடுகளிலிருந்து மூலதன இறக்குமதி மூலம் கடன் வாங்கித்தான் தன்னுடைய தேசத்தை முன்னேற்றமடையச் செய்திருக்கிறது என்பது கண்கூடு. இப்பொழுது வெஸ்ட் ஜெர்மனி எப்படி விளங்குகிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். ஆகவே வெளி நாட்டிலிருந்து தொழில் அபிவிருத்திக்கு கடன் வாங்குவது அவசியம்தான். அப்படி வாங்கக்கூடிய கடன் சரியானபடி உபயோகப்படுத்தப்படுகிறதா என்றுதான் பார்க்கவேண்டும். அதனால் கடன் வாங்கக்கூடாது என்று சொல்வது சரியல்ல, அது ஒரு சரியான வாதம் அல்ல என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். விவசாய உற்பத்தி செய்கிறவர்கள்கூட ஆரம்ப காலத்தில் கடன் வாங்கித்தான் விவசாய உற்பத்தி செய்து வருகிறார்கள். பூமியை சீர்திருத்தம் செய்வதற்கு அவர்கள்கூட கடன்தான் வாங்கிச் செய்கிறார்கள். அதன்மூலம் உற்பத்தியை அதிகரிக்கிறார்கள். ஆகவே தேச அபிவிருத்திக்கு கடன் வாங்கி அபிவிருத்தி செய்வதுதான் நல்லது. ஆகவே தொழில் உற்பத்திக்கும் கடன் வாங்க வேண்டியது அவசியமாக இருக்கிறது என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

அது தவிர தொழில் துறையில் நல்ல அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று பல தொழில் திட்டங்களை தயார் செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. இப்பொழுது அமெரிக்கா போன்ற நாடுகளில் ஒவ்வொரு ராஜ்யத்திலும் என்னென்ன மூலப் பொருள்கள் இருக்கிறது என்று அறிந்து வருகிறார்கள். அந்தந்த ராஜ்யங்களில் என்னென்ன மூலப் பொருள்கள் இருக்கிறது என்றும் அதை வைத்துக்கொண்டு என்னென்ன தொழில்களை ஆரம்பிக்கலாம் என்றும் அதற்கு என்னென்ன வசதிகள் இருக்கிறது என்றும் அந்த தொழிலுக்கு எவ்வளவு செலவு ஆகும், அதில் எவ்வளவு லாபம் கிடைக்கும் என்ற கணக்குகளையெல்லாம் கண்டுகொண்டு லிஸ்ட் தயாரித்து ஒரு ப்ராஜெக்ட் ரிபோர்ட்டை தயார் செய்து அனுப்புகிறார்கள். அதைப்போலவே நம்முடைய ராஜ்யத்திலும் எந்த எந்த தொழில்களை ஆரம்பிக்கலாம் என்று அவர்கள் விளம்பரம் செய்வதுபோல் நாமும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். அந்த முறையில் இங்கும் ப்ராஜெக்ட் ரிப்போர்ட் தயார் செய்து விளம்பரப்படுத்தவேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன். அவ்வாறு செய்வதற்கு, இப்பொழுது இருக்கக்கூடிய கைத்தொழில் டைரக்டருக்கு நாளுக்கு நாள் வேலை அதிகரித்துக் கொண்டே இருக்கிறபடியால், அதற்காக தனியாக டெவலப்மெண்ட் டைரக்டர் என்று ஒரு தனிப்பட்ட டைரக்டரை ஏற்படுத்த வேண்டும் என்றும் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதைத் தவிர நம்முடைய மாகாணம் தொழில் துறையில் முன்னேற்றமடைந்து கொண்டிருக்கிறது. அதனால் நகரங்களில் நெருக்கடி அதிகரித்துக்கொண்டிருக்கிறது. நகரங்களில் பல

தொழில்களை ஆரம்பிப்பதால் கிராமங்களிலிருந்து அதிகப்படியானவர்கள் நகரங்களில் வந்து குடியேறுகிறார்கள். இங்கு வந்து தொழில் செய்வதற்கு பலர் வருகிறார்கள். அதன் காரணமாக நகரங்களில் நெருக்கம் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக சேரிகள் ஏற்பட்டு வருகின்றன. அதனால் நகரங்களில் மக்கள் வாழ்வதற்கு சுகாதார வசதி செய்து கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதை உத்தேசித்து அதற்காக தனியாக டைரெக்டர் ஆப் டவுன் பிளானிங் என்று ஒருவரை நியமிக்க வேண்டும். மாகாணத்திலுள்ள எல்லா நகரங்களிலுள்ள முனிசிபாலிட்டி நகரங்களுக்கும் சரியான விஸ்தரிப்பு திட்டங்கள் அமைக்க வேண்டும். அந்த அளவில் அவருடைய அதிகாரத்தை விஸ்தரிக்கவேண்டும். அந்த முறையில் திட்டமிடவேண்டியது அவசியமாக இருக்கிறது. அதற்கு மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் ஏற்பாடு செய்யவில்லை. அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நகரங்களில், அதனுடைய பகுதிகளில் இருக்கக்கூடிய விவசாய நிலங்களின் விலைகள் எல்லாம் திடீரென்று உயர்ந்து இருக்கின்றன. அந்த நிலங்களை வாங்குவதில் கூட்டுறவு சங்கங்களுக்குக் கூட பல கஷ்டங்கள் இருக்கின்றன. வீடு கட்டுவதற்கு கூட்டுறவு சங்கங்களுக்கு நிலம் வேண்டுமென்று சொன்னாலும்கூட சர்க்கார் நில ஆர்ஜிதம் செய்கின்ற முறை மிகவும் மந்தமாகவும், தாமதமாகவும் இருக்கிறது. அதைச் சீக்கிரம் செய்யவேண்டியது அவசியம். விலை நியாயமானதாக இருக்கவேண்டும். சரியான முறையில், நியாயமான விலையில் காலதாமதமின்றி அந்நிலங்களை ஆர்ஜிதம் செய்து வீடுகள் கட்டித் . தருவதற்கு வசதி செய்ய வேண்டும்.

சாதாரணமாக பொள்ளாச்சி—வீடு கட்டும் சொஸைடித் தலைவர் என்ற முறையில் நான் இதைச் சொல்லமுடியும். நிலம் 3,000 ரூபாய் என்று ஆர்ஜிதம் செய்தால் அதற்குமேல் மின்சார வசதி, விளக்கு, சாக்கடை வசதி—என்று இவைகளுக்காக ஆகும் செலவைச் சேர்த்தால் சென்ட் ரூ. 100 என அங்கத்தினர்களுக்குக் கிரயம் ஆகிவிடும். இந்த வசதிகளை எல்லாம் செய்யாமலேயே அந்த விலைக்கு பக்கத்திலுள்ள அபிவிருத்தி செய்யாத நிலத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கோர்ட் தீர்ப்பளிப்பதும், அதனால் கோவை போன்ற நகரங்களில் ஏற்படக்கூடிய கஷ்டமும் சர்க்கார் அறிய வேண்டும். ஆகவே சட்டத்தில் இருக்கக்கூடிய ஒரு சிக்கலைப் போக்கி சரியான முறையில், நியாயமான முறையில் நஷ்டஈடு கொடுப்பதற்கும், சௌகரியமாக எடுத்து அபிவிருத்தி செய்வதற்கும் வசதியாக சட்டம் இருக்கும்படி செய்யவேண்டும். கோர்ட்டுகள் தீர்ப்பில் நில அபிவிருத்தி செலவை கணக்கெடுக்கும்படி திருத்தம் அவசியம். அப்போதுதான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இந்தத் துறையில் பல அபிவிருத்திகளைக் காணமுடியும்.





இதைத் தவிர நம்முடைய ராஜ்யத்தில் மின்சார அபிவிருத்திக்கு வேண்டிய பல விஷயங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்றாலும் குறிப்பாக ஏழெட்டு மாதங்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற வசதிகள் சிலவிடங்களில் இருக்கிறது. அந்த வசதிகளைப் பூரணமாக உபயோகப்படுத்தாமல் இருக்கிறோம். பன்னிரண்டு மாதமும் மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். அவையன்னியில் இந்தத் திட்டங்களையும் எடுத்துக்கொண்டால்தான் அதிகமாக மின்சாரத்தை உபயோகப்படுத்திக்கொள்ள வாய்ப்பு ஏற்படும். ஆகவே இவ் விஷயத்திலும் கவனம் செலுத்தவேண்டும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிபெற எல்லாவிதமான உதவிகளையும், ஒத்துழைப்பையும் எல்லா அங்கத்தினர்களும் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

SRI V. SANKARAN: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட ட்ராப்ட் ப்ளானை வரவேற்று அதில் உள்ள நல்ல அம்சங்களைப் பாராட்டி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். திட்டத்தினுடைய முக்கிய அம்சம் என்ன என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கமாகக் கூறினார்கள். ஆனால் ஒரே ஒரு வருத்தம் இருக்கிறது. இந்த நகல் திட்டத்தின் தஸ்தாவேஜி—ஆங்கிலக்காப்பி நேற்று கொடுக்கப்பட்டது. இன்றுதான் தமிழ் காப்பி கொடுக்கப்பட்டது. அதைப்பற்றி உடனே இப்பொழுதே விவாதம் செய்யவேண்டும் என்று சொல்வதனால் அதைப்படித்து அதில் உள்ள குணங்களையும் குற்றங்களையும் எடுத்துச் சொல்வது என்றால் சாத்தியமானது அல்ல. ஒருவாரமாவது டைம் இருந்தால்தான் நன்றாகப் படித்து திட்டவட்டமாக ஒவ்வொன்றையும்பற்றி அபிப்பிராயம் சொல்ல முடியும். ஆகவே இப்பொழுது விவாதம் நடந்துவிடுகிறது என்றாலும் கூட பின்னாலும் ஒரு சந்தர்ப்பம் இதுபற்றி அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்தை எடுத்துச் சொல்வதற்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(3) Subject to the provisions of sub-section (2), anything done or any action taken, including any appointment or delegation made, notification, order, instruction or direction issued, or any rule, regulation or form framed, certificate granted or registration effected, under the corresponding law shall be deemed to have been done or taken under this Act and shall continue to have effect accordingly, unless and until superseded by anything done or any action taken under this Act.

(4) Unless the context otherwise requires, the Madras General Clauses Act, 1891 (Madras Act I of 1891), shall apply for the interpretation of this Act in its application to the transferred territory.

(5) For the purpose of facilitating the application of this Act in the transferred territory, any court or other authority may construe this Act with such alterations not affecting the substance as may be necessary or proper to adapt it to the matter before the court or other authority.

(6) Any reference to the corresponding law in any law which continues to be in force in the transferred territory after the commencement of this Act shall, in relation to that territory, be constructed as a reference to this Act.

*Explanation.*—For the purpose of this section the expression "transferred territory" shall mean the Kanyakumari district and the Shencottah taluk of the Tirunelveli district.

**70.** *Power to remove difficulties.*—(1) If any difficulty arises in giving effect to the provisions of this Act, the Government may, as occasion may require, by order, do anything which appears to them to be necessary for the purpose of removing the difficulty.

(2) All orders made under sub-section (1) shall, as soon as possible, after they are made, be placed on the table of both Houses of the Legislature and shall be subject to such modifications by way of amendment or repeal as the Legislature may make either in the same session or in the next session.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

---

**Wednesday, the 7th September 1960.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—FELICITATIONS TO HON. SPEAKER.

THE HON. SRI C. SUBRAMANIAM: Before we proceed I would like on behalf of the House to extend to you our felicitations on your 61st birthday. (Cheers.) We hope and trust and pray that you will have a long, healthy and useful life of service to the Nation and particularly continued service to this House.

SRI M. KALYANASUNDARAM: கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய அவைக்கு வழிகாட்டக்கூடிய தலைவர், நிதி அமைச்சர் அவர்கள் கூறிய வாழ்த்துக்களோடு நானும் கலந்துக் கொள்ளப் பிரியப்படுகிறேன். தங்களுக்கு 60 வயது பூர்த்தியானதாகவே நாங்கள் நம்ப முடியவில்லை. தங்களுடைய சுறுசுறுப்பு, அதுவும் நாங்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே தாங்கள் காட்டக்கூடிய விழிப்புணர்ச்சி, இதையெல்லாம் பார்க்கும்போது, தங்களுக்கு 60 வயது ஆனதாகவே கருத முடியவில்லை. தாங்கள் இன்னும் வாலிபமாகவே இருக்கிறீர்கள். வாலிபமாக இருந்து 60-வயது பூர்த்தியாகி 61-வது வயதில் இருக்கும் தினத்தில் ஏற்படக்கூடாத சில நிகழ்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. அதைப் பார்த்துத் தாங்கள் உற்சாகந்தான் அடைவீர்கள் என்று நம்புகிறேன். உரிய சந்தர்ப்பத்தில் அதைக் குறிப்பிட விரும்புகிறேன். நிதி அமைச்சர் அவர்கள் கூறிய வாழ்த்துக்களிலே நானும் கலந்துக்கொள்ளுகிறேன்.

SRI A. GOVINDASAMY: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த அவையின் முதல்வர் கனம் திரு. சுப்பிரமணியம் அவர்கள், தாங்கள் நீண்ட நாள் வாழ்ந்து இந்த அவைக்கு நல்ல சேவை செய்வதோடு நாட்டுக்கும் சிறந்த தொண்டு புரிய வேண்டுமென்ற விருப்பத்தைத் தெரிவித்தார்கள். அதே கருத்தை நானும் வலியுறுத்துகிறேன். நீங்கள் இந்தச் சபையை நல்ல முறையிலே நடத்தி எங்களுக்கெல்லாம் பெருமையையும் பூரிப்பையும் தேடித் தந்திருக்கிறீர்கள். அதைத் தொடர்ந்து இந்தச் சபையின் கௌரவம் நீடிக்க, தாங்கள் நீடூழி வாழ்ந்து எங்களுக்கு வழி காட்டவேண்டுமென்று எங்களுடைய விருப்பத்தை என் கட்சியின் சார்பில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: Hon. Leader of the House and hon. Members, I am indeed overwhelmed by the affection shown by all of you on the occasion of my 61st birthday. While on the one hand I feel sorry that I am getting old, on the other hand I feel

[Mr. Speaker] [7th September 1960

enthusiastic and happy over the fact that many friends here, some of whom are older than me, are wishing me well. I am grateful to you all for the expression of felicitation that you have offered to me. Let me pray to God to give me strength to fulfil your expectations and do what I can to this House, to this country and to this Nation. Thank you.

II.—POINT OF INFORMATION *re* PRIVILEGE OF THE HOUSE.

**SRI N. R. THIAGARAJAN :** ஆன் எ பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன், ஸார், சபையில் கேள்விகள் ஆரம்பிப்பதற்கு முன்பு நான் ஒன்று தங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இன்று நம்முடைய சபையின் அஜெண்டாவிலுள்ள விஷயங்களை விவாதிப்பதற்கு ஹை கோர்ட் உத்தரவிட்டிருக்கிறதா? அவர்கள் அனுமதி பெற்றுத்தான் விவாதிக்க வேண்டுமா? இந்தச் சபையில் கனம் அங்கத்தினர்களுக்கு பேச உரிமை இருக்கிறது. இந்தச் சபையின் கனம் அங்கத்தினர்களில் ஒருவருக்கு, கோர்ட்டுக்கு வரும்படி நோட்டீஸ் வந்திருக்கிறது. அதைக் கவனிக்க சபாநாயகருக்கு உரிமை இருக்கிறதல்லவா? சபாநாயகருக்கே நோட்டீஸ் வந்திருப்பதாகத் தெரிகிறது. எதைக் கவனிக்கலாம், எதைக் கவனிக்கக் கூடாது என்பதற்கு நம்முடைய சபைக்கு உரிமை இருக்கிறதா என்று தீர்மானிக்கவேண்டும்.

**MR. SPEAKER :** கனம் அங்கத்தினர்களில் யாருக்காவது சந்தேகம் ஏற்பட்டு, பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்ப வேண்டுமானால், கேள்வி நேரம் முடிந்த பிறகுதான் கேட்க வேண்டும். கேள்வி நேரத்திற்கு முன்பு கேட்கக்கூடாது. கேள்வி நேரம் முடிந்த பிறகு ஏதாவது கேட்கவேண்டுமானால் கேளுங்கள். இப்பொழுது தயவு செய்து உட்காருங்கள். சபையின் உரிமை, கௌரவம் இவைகளை என்னால் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்குப் பரிபூரணமாக இருக்கிறது.

**SRI N. R. THIAGARAJAN :** கேள்வி நேரத்தையாவது அவர்கள் அனுமதித்திருக்கிறார்களா?

**MR. SPEAKER :** கேள்வி நேரத்தை அனுமதிக்க யாருடைய அனுமதியும் எனக்கு வேண்டியதில்லை என்றுதான் நான் சொல்லக்கூடும். யாரும் என்னை நிறுத்தவில்லை. கேள்வி நேரத்தைக் கொடுத்திருக்கிறேன். ஆகவே, எனக்கு [illegible] உரிமை இருக்கிறது என்று தான் அர்த்தம்.



7th September 1960]

III.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Canal (Kangianur)*

* 486 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் காங்கேயனூர், போளூர், காப்பளூர், ஏரிகளுக்குப் போகும் கால்வாயை மராமத்து செய்யக் கோரி எஸ். எம். அண்ணாமலை, எம்.எல்.ஏ.-யிடமிருந்து கடித எண் S. M. A./F-5/Vol. III/14 தேதி 1959-ம் வருடம் அக்டோபர் மாதம் 9-ந்தேதி சர்க்காருக்குக் கிடைத்ததா?

(ஆ) அப்படியானால் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The matter was examined by the Government in consultation with the Collector of North Arcot and the Board of Revenue. The Executive Engineer, Public Works Department, Vellore, has been directed by the Collector of North Arcot to investigate measures to draw water into the Polur supply channel without the ryots having to resort to put up korambu and to attend to silt-clearance in the supply channel.

MR. SPEAKER : Today we have got 46 questions. I would like to have the co-operation of all hon. Members in disposing of all the questions early.

**SRI S. M. ANNAMALAI :** செய்யாற்றில் தண்ணீர் வரும்போதெல்லாம் அங்கே அணைக்கட்டு இல்லாத காரணத்தால் கால்வாயில் தண்ணீர் வராமல் தடைப்படுகிறது. மணல் அதிகமாகச் சேர்ந்து கால்வாயில் தண்ணீர் வருவது கிடையாது என்ற காரணத்தையொட்டி அதில் ஒரு அணைக்கட்டு கட்ட சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** நான் முன்பு விடையளித்ததைப்போல், அதே விஷயத்தைப்பற்றித்தான் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

*Pay (Police officers)*

* 487 *Q.*—SRI A. A. RASHEED (on behalf of SRI V. K. KOTHANDARAMAN) : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to remove the difference in the scales of pay of Police Officers and that of Fire Service Personnel?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No. Sir. The scale of pay of the various posts in the Fire Service Department were considered with due regard to the general principles followed

[7th September 1960

by the Pay Commission in regard to the revised scales of pay of the different services and with reference to the educational qualifications and the duties and responsibilities attached to the various posts in that department. As the old scale of pay of the Leading Fireman, Fireman-Driver, Fireman-Mechanic and Fireman Carpenter corresponded to that of Police Constables, the Pay Commission recommended a revised scale of pay identical with that of the Police Constables. The Pay Commission's recommendation has been accepted and orders have been issued accordingly.

SRI A. A. RASHEED: May I know the actual difference of pay between the Police and Fire Service personnel?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I have stated the existing scales of pay of these fire services. The Pay Commission referred to the corresponding scales of pay of constables and said that the revised scale of pay applicable to the constables should be made applicable to these Fire Service men also.

SRI S. NAGARAJA MONIGAR: சாதாரண போலீஸிலே உள்ளவர்களுடைய வேலை நேரத்தைப்போலவே பையர் சர்விஸிலுள்ளவர்களுக்கும் இருக்கிறதா? அல்லது சில சந்தர்ப்பங்களில் மாத்திரம் வேலை இருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பையர் ஸர்விஸிலே உள்ளவர்களுக்கு எப்பொழுதும் வேலையில்லையென்றாலும், தீ விபத்து எப்பொழுது நேர்ந்தாலும் அவர்கள் வேலை செய்ய வேண்டியிருக்கிறது.

*Ford Foundation*

*488 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

சென்னை ராஜ்யத்துக்கு அமெரிக்கா ஃபோர்டு ஸ்தாபனத்தின் மூலமாக எந்தெந்த துறைகளுக்கு பொருளாதார உதவி கிடைத்தது?

THE HON. SRI C. SUBRAMANIAM: A statement[a] giving a brief description of the schemes which obtained financial aid from the Ford Foundation is placed on the table of the House.

A sum of Rs. 20·47 lakhs has been so far received as assistance from the Ford Foundation from 1952 onwards. This excludes the Package Deal now in operation in Tanjore district.

[a] Printed as Appendix I on pages 398–402 infra.



7th September 1960]

*Text-books*

*489 *Q.*—SRI M. KALYANASUNDARAM (on behalf of SRI N. K. PALANISAMI): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) with reference to the answer given to question No. 838 on 27th April 1960 whether a committee has been constituted for the publication of Tamil books for 1961–62; and

(*b*) if so, the manner in which subjects are to be selected for the same?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) & (*b*) Government do not propose to publish Tamil text-books for use in schools during the year 1961–62. The question of constituting a committee does not therefore arise now.

*490 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1960-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ந் தேதியில் 838 நெ. கேள்விக்கு பதிலில் கூறியபடி அரசாங்கம் பாடப்புத்தகம் தயாரிப்பதற்கு அனுஷ்டிக்கும் முறை என்ன?

(ஆ) இதற்காக ஏதேனும் கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறதா?

(இ) அப்படியானால், அதன் உறுப்பினர்கள் யார்? அவர்களின் தகுதி என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) Government have now undertaken the publication of English text-books for Standards V, VI and VII. The English text-book for Standard V published by them, is in use in schools from the current year. The book was prepared by Sri S. Palaniswamy, M.A., L.T., Deputy Director of Public Instruction. He is also preparing the book for Standard VI for use in 1961–62. Tamil text-books will be published by Government from 1961–62 for Tamil use in 1962–63 only. It has been decided to entrust the work of preparation of books to a panel of authors and to select the best books.

(*b*) No, Sir.

(*c*) Does not arise.

SRI M. KALYANASUNDARAM: அரசாங்கம் வெளியிட்டி-ருக்கக்கூடிய புத்தகங்களை பள்ளிக்கூடங்களில் பாட புத்தகங்களாக ஏற்றுக்கொள்ளுவதற்கு தானகவே அரசாங்கம் உத்தரவு போடுகிறதா? அல்லது டெக்ஸ்டு-புக் கமிட்டிக்கும், அந்தப் பள்ளிக்கூடங்களுக்கும் அந்த விஷயம் விடப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: 'டெக்ஸ்டு-புக் கமிட்டி' அதற்கு ஆதரவு கொடுக்கவேண்டும். அதற்கு பிறபாடுதான் பள்ளிக்கூடங்களுக்கு அந்தப் பாட புத்தகங்களை வைக்க முடியும்.

SRI A. VEDARATHNAM : இப்பொழுது அரசாங்கம் தயார் செய்திருக்கிற புத்தகம், இதற்கு முன் தனியார் தயார் செய்திருக்கும் புத்தகத்திலிருந்து எந்த வகையிலே மாறுபட்டிருக்கிறது? அதிலிருந்த குறைகள் இதில் ஏதேனும் நிவர்த்திக்கப் பட்டிருக்கிறதா? அதற்கும், இதற்கும் உள்ள முக்கியமான வித்தியாசம் என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது நன்றாக எழுதப் பட்டிருக்கிறது என்றுதான் சொல்லப்படுகிறது. அரசாங்கம் தயாரித்த புஸ்தகத்திற்கும், இன்னொரு புஸ்தகத்திற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது என்பதை பரிசீலனை செய்து பார்க்காமல் உடனடியாக சொல்ல முடியாது.

SRI M. KALYANASUNDARAM : அரசாங்கம் வெளியிட்டுள்ள பாட புத்தகங்கள் எத்தனை பள்ளிக்கூடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன இந்த ஆண்டில்?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆங்கில புத்தகம் ஐந்தாவது 'ஸ்டாண்டர்டில்' எல்லா பள்ளிக்கூடங்களிலும் வைக்கப்பட்டிருக்கிறது.

* 491 Q.—

MR. SPEAKER : As the hon. Member who has given notice of this question, Sri K. Periannan, is not in his seat, the question and answer will be printed in the proceedings.

*Harijan Welfare (Tiruchirappalli)*

SRI K. PERIANNAN : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1959-60-ல் திருச்சி ஜில்லா ஹரிஜன நல இலாகாவிற்கு சர்க்கார் கொடுத்த மானியம் எவ்வளவு?

(ஆ) இனவாரியாக எவ்வளவு? இதில் எவ்வளவு செலவாயிற்று? எவ்வளவு சர்க்காருக்குத் திருப்பித் தரப்பட்டது?

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) A statement [a] is placed on the table of the House.

*Oil refinery*

* 492 Q.—SRI A. A. RASHEED : SRI V. K. KOTHANDARAMAN : SRI P. G. MANICKAM : SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to State—

(a) whether the Government have recently requested the Union Government to set up an oil refinery in Madras; and

(b) if so, the reply received from them?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) In November 1959 this Government requested the Government of India to include the scheme for the establishment of an oil refinery at Madras in the Third Five-Year Plan and to take on hand preliminary investigations connected with location of the project.

[a] Printed as Appendix II on page 403 infra.





(b) The Central Government have replied to say that the proposal to establish an additional refinery based on imported or indigenous crude oil was only in the preliminary stage and that the views of this Government would be kept in view while taking a final decision.

SRI A. A. RASHEED : Has the attention of the Government been drawn to the Press Reports that Oil Refineries would be set up in other States? If so, will the Government re-emphasise the importance of setting up an oil refinery in our State, to the Central Government?

THE HON. SRI R. VENKATARAMAN : We have been taking up this matter constantly with the Government of India.

*493 Q.—

MR. SPEAKER : As the hon. Members Sri N. K. Palanisami and Sri M. P. Sarathi are not in their seats, the question and the answer will be printed in the proceedings [a].

* 494 Q.—

MR. SPEAKER : As the hon. Member Sri T. Sampath is not is his seat, the question and answer will be printed in the proceedings.

*Indian Medicine*

SRI T. SAMPATH : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government propose to constitute a committee for formulating proposals for starting a Degree Course in Indian Medicine?

THE HON. SRI M. A. MANICKAVELU : The Government have constituted a Committee consisting of the following persons :—

1 Dr. P. M. Mehta, M.D., M.S., F.C.P.S., F.I.C.S.—*Chairman.*

2 Sri S. Viswanatha Sarma—*Member.*

3 Dr. S. Govindaswami Mudaliar, H.P.I.M.—*Member.*

4 Dr. Syed Niamathulla—*Member.*

5 Dr. A. N. Subaraman, M.B., M.S —*Member-Secretary.*

*Vettavalam Panchayat.*

* 495 Q.—

* 495 Q.—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI P. U. SHANMUGHAM) : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை தாலுகா வேட்டவலம் ஊர் ஆட்சி மன்ற முன்னாள் தலைவர் பணம் கையாடல் செய்திருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதா?

(ஆ) அப்படியானால் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

[a] Answered subsequently—vide page 293 infra.

[7th September 1960

(b) The Collector of North Arcot has sanctioned the prosecution of Sri R. Dharmalingam Chettiar, ex-President of the Vettavalam Panchayat for breach of trust in respect of three sums, viz., Rs. 101-25 nP., Rs. 711 and Rs. 739-42 nP. from out of the Vettavalam Panchayat funds during the term of his office.

### *Adult Education*

* 496 Q.—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. P. SUBRAMANIAM): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the teachers under the Salem District Board have been deputed for Adult Education Training conducted in 1957 at Thirukkazhukunram in Chingleput district;

(b) if so, how many of them have not been paid travelling allowance so far; and

(c) the reasons therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) Yes, Sir.

(b) & (c) Out of 17 teachers deputed for training, two claimed their travelling allowance in time and payment has been made to them. Of the remaining 15 teachers, 11 have submitted their bills and these are under scrutiny. The remaining four teachers from whom bills have not yet been received, have been reminded to submit them. The delay in payment was due to the non-submission of bills by the teachers in time.

### *Higher studies (Foreign)*

* 497 Q.—SRI N. R. THIAGARAJAN: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1957-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் 1960-ம் ஆண்டு மார்ச் மாதம் முடிய நமது ராஜ்யத்திலிருந்து கல்வி, கலா சாரம் முதலியன கற்க எத்தனை பேர்கள் வெளி நாடுகளுக்கு அனுப்பப்பட்டார்கள்?

(ஆ) அதில் மாணவர்கள் எத்தனை பேர்?

(இ) மற்றவர்கள் எத்தனை பேர்?

(ஈ) சர்க்கார் ஒவ்வொருவருக்கும் சராசரி எவ்வளவு பணம் உதவி தந்தது?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ), (ஆ) (இ)—No student as such was sent abroad during the period, but 41 State Government employees were sent abroad for higher studies and research.

(ஈ) Out of the 41 officers, two were deputed under the Modified Overseas Scholarship Scheme of the Government of India, while the others were deputed for training taking advantage of offers made by foreign Governments and agencies. The



7th September 1960]

expenditure incurred on the foreign training of the officers under the Modified Overseas Scholarship Scheme is borne equally by the Government of India and the State Government. In the case of the other officers, the expenditure on their training is generally met by the foreign Government or agency offering the scholarship.

SRI A. A. RASHEED: May I know the number of women students who have been sent abroad for higher studies and may I also know whether these people, after their return, have been gainfully employed?

THE HON. SRI C. SUBRAMANIAM: The persons who have been sent abroad are Government employees and therefore they should have got employed in the same posts that they were occupying at the time they were sent for this training. I do not have the list to answer whether any ladies were deputed.

SRI T. S. RAMASWAMI: May I know whether the officers have gone over to the foreign countries under Foreign Governments' Scholarships under loss of pay or whether they have been granted study leave with pay?

THE HON. SRI C. SUBRAMANIAM: I would like the hon. Member to put a separate question.

SRI T. T. DANIEL: May I know whether there is any foreign aid for sending the students for higher studies from our State?

THE HON. SRI C. SUBRAMANIAM: Yes, it is under foreign aid—under the Colombo Plan, T.C.M., and such other aids.

SRI N. R. THIAGARAJAN: சட்ட மன்ற அங்கத்தினர் யாரேனும் வெளி நாட்டிற்கு போக விரும்பினார்களா? அவர்களை அனுப்புவதற்கு தடை இருக்கிறதா? அப்படியில்லை என்றால் அவர்களை அனுப்பாததற்குக் காரணம் என்ன? (சிரிப்பு.)

MR. SPEAKER: கனம் அங்கத்தினர் அவர்கள் அப்ளிகேஷன் போட்டுவிட்டு பிறகு கேட்கலாமே?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதுவரையிலும் ஒருவரும் முன்வரவில்லை. ஒரு சமயம் இந்தக் கேள்வி கேட்ட பிற்பாடு யாராவது முன்வருவார்களோ என்னவோ தெரியாது.

### *Handloom (rebate)*

* 498 Q.—SRI A. VEDARATHNAM: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கைத்தறி ரிபேட் தொகையை மோசடி செய்ய யத்தனித்தவர்களைக் கண்டுபிடித்தாகி விட்டதா?

(ஆ) எத்தனை பேர் இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளனர்?

[7th September 1960

*(இ) அவர்கள் பேரில் ஏதேனும் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறதா? அப்படியானல் அதன் விபரமென்ன?*

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes, Sir.

(*b*) & (*c*) A statement[a] is placed on the table of the House.

*Kalasamudram tank*

* 499 *Q.*—SRI S. M. ANNAMALAI: *கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—*

*(அ) நட்சத்திர குறியிடாத கேள்வி எண் 230-க்கு 1960-ம் ஆண்டு மார்ச் மாதம் 25-ம் தேதியில் அளித்த பதிலையொட்டி போளூர் தாலூகா, காளசமுத்திரம் ஏரியின் தண்ணீரை நிலங் களுக்கு பாய்ச்சுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படு கிறது?*

*(ஆ) அங்குள்ள நிலங்களுக்கு நஞ்சை தீர்வை 1958, 1959, 1960-ல் வசூலிக்கப்பட்டதா?*

THE HON. SRI M. A. MANICKAVELU: (அ) The question of undertaking repairs to the Kalasamudram tank is being re-examined by the Government in the Food and Agriculture Department in consultation with the Superintending Engineer (Food Production) and the Board of Revenue (Food Production).

(ஆ) Remission was granted for faslis 1367 and 1368 and only a portion of the actual wet assessment was collected in these faslis. In fasli 1369 actual wet assessment was collected.

SRI S. M. ANNAMALAI: *இந்த காளசமுத்திரம் ஏரி மதகுக்கு மேல் 4 அடி மண் தூர்ந்துவிட்டிருக்கிறது என்று சர்க்காரே நட்சத்திரக் குறியிடப்படாத கேள்விக்கு பதில் அளித்தார்கள். ஆகையினல் 1959-ம் வருஷத்திற்கு எப்படி நில வரி வசூலிக்க லாம்? தண்ணீர் வந்திருந்தபோதிலும் மதகினல் பாய்ச்சப்பட வில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா? அப்படியிருக்கும் பொழுது எப்படி நிலவரியை அவர்களிடமிருந்து வசூலிக்கலாம்?*

THE HON. SRI M. A. MANICKAVELU: *அந்த ஏரி தூர்ந்து போயிருக்கிறது. 59-வது பசலியில் அங்கு இருக்கிற குடிகளே ஓரளவுக்கு மண்ணை எடுத்து கொஞ்சம் வழி செய்ததினல், தண்ணீர் சாகுபடிக்கு கிடைத்தது. இருந்தாலும், அரசாங்கமும் இந்த மண்ணையெல்லாம் எடுப்பதற்கு யோசனை பண்ணிக்கொண் டிருக்கிறது. முதலில் ஏன் கைவிடப்பட்டது என்றல், சுமார் 10 ஏக்கருக்குத்தான் பாசன இடைஞ்சல் இருந்தது. இம்மாதிரி தூர்ந்துக்கொண்டே போனல் கஷ்டம் ஏற்படும். ஆகையினல் இப்பொழுது அதுபற்றி புனராலோசனை செய்யப்படுகிறது.*

[a] Printed as Appendix III on pages 404–407 infra.



7th September 1960]

*Correspondence (Tamil)*

* 500 *Q.*—SRI M. KALYANASUNDARAM (on behalf of SRI V. K. KOTHANDARAMAN): *கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) தமிழில் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ள வேண்டுமென்று ஆட்சி மொழி சட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட காரியாலயங்களில் தமிழில் பிரசுரிப்பதோடு, ஆங்கிலத்தில் பிரசுரிக்க வேண்டுமென்றும், ஆங்கிலம்தான் அதிகார பூர்வமானது என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளதா?*

*(ஆ) அதற்கான காரணம் என்ன?*

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) & (*b*) Yes, Sir.

(ஆ) The procedure is in consonance with clause 3 of Article 348 of the Constitution of India.

*Lottery*

* 501 *Q.*—SRI P. G. MANICKAM: *கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

*1960-ம் ஆண்டில் பல்வேறு விதமான சூதாட்டங்கள் நடத்தியதற்காக* (i) *எத்தனை பேர்கள் தண்டிக்கப்பட்டார்கள்?*

(ii) *எத்தனை பேர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (i) 12,859.

(ii) 10,782.

Besides these, 53 persons were sentenced to both fine and imprisonment.

*Hindi*

* 502 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government are aware of the move of the Dravida Munnetra Kazhagam Party to agitate against the introduction of Hindi in the Madras State; and

(*b*) if so, the steps to be taken to counteract the move?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes, Sir.

(*b*) The Government are watching the situation closely, and will take appropriate action as and when necessary. The agitation purports to be against the directions issued by the President recently under Article 344 (6) of the Constitution, but the Government cannot see that there is anything in those directions to agitate about as far as this State is concerned.

SRI A. A. RASHEED: Sir, is the Hon. Minister aware that recently pelting of stones against shops took place in Kumbakonam during the agitation and if so, what steps have been taken by the Government to prevent such hooliganism hereafter?

[7th September 1960

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government have no information about it. But I have seen some reports in the press. We are watching the situation. Police authorities will take adequate action to avert hoolinganism.

SRI M. KALYANASUNDARAM ஸார், திராவிட முன்னேற்றக் கழகத்தார் இயக்கத்தை ஒடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமா? அல்லது . . . (குறுக்கீடு)

MR. SPEAKER : The Hon. Minister said that he was watching the situation.

SRI M. KALYANASUNDARAM : இதிலே இருக்கக் கூடிய பிரச்சினை ஹிந்தி சம்பந்தமானது. அது பற்றி மத்திய சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு இருக்கிறது. பிரதம மந்திரி கொடுத்த வாக்குறுதி சம்பந்தமாக எடுக்க வேண்டிய நடவடிக்கையை பொறுத்த வரை என்ன காரியங்கள் செய்யப்பட்டன? கிளர்ச்சியைத் தவிர்க்க மட்டுமா நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மொழிப் பிரச்சினை பற்றியும், ஹிந்தி அரசாங்க நிர்வாக மொழியாவது பற்றியும் நம் மாகாணத்தில் மக்களுடைய உணர்ச்சி சம்பந்தமாகவெல்லாம் என்னுடைய சகா, கனம் கல்வி அமைச்சரவர்கள் இந்த மன்றத்திலே விளக்கியிருக்கிறார்கள். கிளர்ச்சி சம்பந்தமாக அது பல விதம் இருக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்னால் கூட நான் வீட்டில் இருக்கும்போது, இந்த சபைக்கு வருவதற்கு முன்னால், ஒரே சத்தமாக, "ஒழிக, ஒழிக" என்று கத்திக் கொண்டு இருந்தார்கள். யார் ஒழிக என்று தெரியவில்லை. கிளர்ச்சியில் பல விதம் உண்டு; ஒழுங்கான கிளர்ச்சி, ஒழுங்கற்ற கிளர்ச்சி : ஒழிக, ஒழிக என்று கத்திக் கொண்டே இருப்பவர்கள், அவர்களுக்கும் பின்னால் கல்லை எடுத்துப் போடவேண்டும் என்று தோன்றும். அது மாதிரிப் பண்ணுகிறவர்களை அடக்க வேண்டும், அதைத்தான் கவனித்துக்கொண்டு இருக்கிறோம் என்று சொன்னேன்.

SRI A. GOVINDASAMY : கல்லை எடுத்து யார் போடுகிறார்கள் : ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர், அவர்கள் கிளர்ச்சி செய்கிறார்கள், கல்லைத் தூக்கிப் போடு என்று செய்யலாம் அல்லவா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : **கனம்** அங்கத்தினர் அவர்களுக்கு நேர்மை ஒன்றும் புரியவில்லை. யார் கல்லை எடுத்துப் போட்டாலும் அது அடக்கப் படவேண்டும். கனம் அங்கத்தினர் அவர்கள் ஆத்திரப்படுவதைப் பார்த்தால், அதில் அவர்களுக்குச் சம்பந்தம் இருப்பது போல் தோன்றுகிறது.

SRI A. GOVINDASAMY : ஸார், நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்புகிறேன். நானே அப்படிச் செய்திருப்பேன் என்று . . . . .



7th September 1960]

MR. SPEAKER : கனம் அங்கத்தினருக்கு சம்பந்தம் இருக்குமோ என்று தோன்றுகிறது, என்று சொன்னார்கள். **It is not unparliamentary.**

SRI A. GOVINDASAMY : நான் சம்பந்தப்பட்டிருப்பதாக . .

MR. SPEAKER : **கனம்** அங்கத்தினர் அவர்களுக்கு அந்த யோசனை இல்லாவிட்டால், ஏன் கவலைப்பட வேண்டும்? கவலைப் படவேண்டாம்.

*Hospital (Govindanagar)*

* 503 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டப்படி மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலுகா, கோவிந்த நகரத்தில் ஆஸ்பத்திரி திறக்காததன் காரணம் என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU : The information is being collected and will be placed on the table of the House as soon as possible.

*Christian Prayers*

* 504 Q.—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கிருஸ்தவ மிஷனரிகள் நடத்தும் உதவிபெறும் பள்ளிகளில் குறிப்பாக ஹாஸ்டலில் உள்ள ஹிந்து மாணவர்களை சர்ச்சுக்குப் போய் தொழும்படியும், பிரார்த்தனையில் கிருஸ்தவ பாடல்களையே பாடும்படியும் கட்டாயப்படுத்தி வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : The Government are not aware of any such practice.

SRI A. VEDARATHNAM : ஸார், 'ஸெகுலர் ஸ்டேட்டில்', இம்மாதிரி மதப் பிரார்த்தனை செய்வதும், மற்ற மதப் பிரார்த்தனைகளுக்கு இடமில்லாமல் செய்வதும் சரியா? அந்த இடங்களில் ஒரு மத சம்பந்தப்பட்ட பிரார்த்தனைக்குப் பதிலாக, காந்திஜி அவர்கள் செய்தது போல் சர்வமத பிரார்த்தனை நடத்த சர்க்கார் முன் வருவார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : பள்ளிக்கூடங்களைப் பொறுத்தவரை, பள்ளிக்கூட நடவடிக்கையில் ஒரு ஐட்டமாக பிரார்த்தனையை வைத்துக்கொள்ளக் கூடாது. தனியாக, இஷ்டம் உள்ளவர்கள், பிரார்த்தனைகள் நடத்திக் கொள்ளலாம். அவரவர்கள், மற்றவர்கள் உரிமையைத் தெரிந்து கொண்டு சுமுகமாக நடத்தலாம். ஒருவருக்கொருவர் கசப்பும், வெறுப்பும், ஏற்படும்வண்ணம் நடப்பதும் கிளர்ச்சி செய்வதும் கூடாது.

[7th September 1960

இந்த ஹாஸ்டல், பள்ளிக்கூடங்களில், மற்றவர்கள் உணர்ச்சிகளைத் தெரிந்து கொண்டு, அதற்குத் தகுந்த வழியில் நடந்து கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

SRI T. T. DANIEL : May I know, Sir, whether it is not a fact that in all aided schools and hostels run by Christian Missioneries all non-Christian students are not compelled to participate in the Christian form of prayer?

THE HON. SRI C. SUBRAMANIAM : Prayer is not compulsory but it is purely voluntary.

SRI R. SRINIVASA IYER : Sir, this is a question relating to schools. Sir, is the Hon. Minister aware that in colleges run by Christian Missionaries students are fined Rs. 2 per day, if they do not attend prayer classes especially Hindu Students?

THE HON. SRI C. SUBRAMANIAM : No instance has been brought to my notice.

### *E.S.L.C. Examination*

* 505 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இவ்வாண்டு எட்டாம் வகுப்புக்குண்டான சர்க்கார் பரீட்சையில் கேள்வித்தாள்கள் கடினமாக இருந்தது உண்மையா?

(ஆ) அப்படியானால், அரசாங்கம் இது விஷயமாய் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) There was a complaint that two or three questions in the paper on Elementary Mathematics were a bit difficult to answer for an average pupil.

(ஆ) This is a matter for the Board of Examiners to consider.

SRI S. M. ANNAMALAI : இப்படி ஸிலபஸில் இல்லாத சில கணக்குகளைக் கொடுத்ததால், பல மாணவர்கள் தவறியிருக்கிறார்கள். அவர்களுக்கு சலுகைகள் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இது சர்க்காரோ, இந்த சட்ட சபையோ குறுக்கிட்டு செய்யக் கூடிய காரியம் இல்லை. அதற்கென்று ஒரு போர்டு இருக்கிறது, அது இதையெல்லாம் கவனித்து தக்க நடவடிக்கை எடுத்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

SRI A. A. RASHEED : Sir, is it a fact that compared to previous years the passes during this year were very low, as low as 25 per cent in the Elementary School-Leaving Certificate Examination?

MR. SPEAKER : How do the Govenment know that? If the Hon. Minister answers, I have no objection.



7th September 1960]

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not have any opinion about the low percentage of passes and what the reasons are for that.

### *Adulteration (foodstuffs)*

* 506 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உணவு பொருள்களிலே கலப்படம் செய்து விற்பனை செய்ததற்காக 1960-ம் வருடத்திலே எத்தனை பேர்கள் தண்டிக்கப்பட்டார்கள் ?

(ஆ) உணவுப் பொருள்களிலே கலப்படம் செய்து விற்பனை செய்வதைத் தடுக்க அரசாங்கம் என்ன விசேஷ நடவடிக்கைகள் எடுத்துள்ளது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) During the period from 1st January to 31st May 1960, 728 persons were convicted.

(ஆ) Under the provisions of the Prevention of Food Adulteration Act necessary action is taken to prevent the manufacture and sale of any adulterated foodstuffs. This Act provides for severe and deterrent punishments including imprisonment of offenders. Deterrent penalties like imprisonment and heavy fines are producing desired results. Food Inspectors have been appointed in 157 local bodies in the State for enforcing the provisions of the Act.

SRI P. G. MANICKAM : ஸார், நகரங்களிலே, குறிப்பாக கிராமங்களிலேகூட, கலப்படம் இல்லாத உணவுப் பொருள்களைப் பார்க்கிறதே அரிதாக இருக்கிறது. சர்க்காரால் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை. பொது ஜனங்கள் அவதிப்படுகிறார்கள். ஆதலால், அது சம்பந்தமாக சர்க்கார் கவனம் செலுத்துமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்போது இருக்கிற சட்ட பிரகாரமே தண்டனைகள் ரொம்பப் பிரமாதமாக இருக்கிறது. முதல் தடவை குற்றத்திற்கு, ஒரு வருஷ சிறைத் தண்டனை, ரூ. 2,000 'ஃபைன்'; இரண்டாவது தடவை குற்றமானால், இரண்டு வருஷத் தண்டனையும், ஃபைனும்; மூன்றாவது குற்றத்திற்கு, நாலு வருஷ சிறை, ஃபைன் என்றெல்லாம் இருக்கிறது. இப்போது, நிறைய இன்ஸ்பெக்டர்களெல்லாம் வைத்து தடைகள் பண்ணுவதால், கலப்படம் செய்வது குறைந்து கொண்டே வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### *Fire accident (Mental Hospital)*

* 507 *Q.*—SRI A. A. RASHEED :<br>SRI A. VEDARATHNAM : } Will the Hon. the Minister for Revenue be pleased to state the extent of damage caused to Mental Hospital due to a fire on 26th June 1960?

THE HON. SRI M. A. MANICKAVELU : Rs. 25,000.

[7th September 1960

SRI A. A. RASHEED : Sir, May I know the cause of action and is it a fact that the condition of the Mental Hospital patients worsened after the fire accident?

THE HON. SRI M. A. MANICKAVELU : This has nothing to do with the condition of the patients of the Mental Hospital. This fire is reported to have taken place on account of short circuit in electrical wiring.

SRI A. VEDARATHNAM : இந்த விபத்தினால், உயிர் சேதமோ, வேறு அபாயமோ ஏற்பட்டதுண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நல்ல வேளையாக அப்படி ஒன்றும் ஏற்படவில்லை.

## *Primary Health centres*

*508 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மதுரை ஜில்லாவில் எத்தனை பிரைமரி ஹெல்த் சென்டர்கள் திறக்க திட்டமிடப்பட்டது ?

(ஆ) அவைகளில் எத்தனை எங்கெங்கு திறக்கப்பட்டது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Eight, Sir.

(*b*) Six centres have so far been opened at the following places :—

1. Dhadicombu.
2. Natham.
3. Thirupparankundram.
4. Dombacheri.
5. Alanganallur.
6. Athoor.

SRI N. R. THIAGARAJAN : ஆறு சென்டர்கள் என்றால், பாக்கியெல்லாம் எப்பொழுது திறக்கப்படும் ? 503-வது கேள்விக்கு பதிலளிக்கையில், மேசையில் வைக்கப்பட்டிருக்கிறது என்றார்கள். இந்த வரிசையில் ஒன்றும் இல்லை . . . .

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் அவர்கள் அப்பொழுதே அதைச் சொல்லியிருக்கவேண்டும்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த நிலையங்களையெல்லாம், அவ்வப்பொழுது ஏற்படுத்தி வருகிறோம். கொஞ்சம் தாமதம் என்றால், அதற்குக் காரணம் போதுமான டாக்டர்கள் கிடைக்கவில்லை. இப்பொழுது முன் வருகிறார்கள்; இனி துரிதமாகத் திறக்கப்படும்.



7th September 1960]

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் (ஸ்ரீ தியாகராஜன்) அவர்கள் 503-வது கேள்வியின் பதிலைச் சரியாகப் படிக்கவில்லை. will be placed.............as soon as possible என்று இருக்கிறது. அதை அவர்கள் கவனிக்கவில்லை என்று தோன்றுகிறது. இன்றைக்கு வைக்கிறோம் என்று இல்லை.

## *Community Development Projects*

* 509 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா— 9 a.m

(அ) நம் மாநிலத்திலுள்ள (i) இரண்டு பிர்க்காக்கள், (ii) ஒரு பிர்க்காவிலுள்ள சமுதாய நலத் திட்டப் பகுதிகள் எத்தனை ?

(ஆ) இவைகள் எந்த அடிப்படையில் பிரிக்கப்படுகின்றன ?

(இ) வடாற்காடு மாவட்டம் போளூர் சமுதாய நலத் திட்டத்தின் மக்கள் தொகை எவ்வளவு ?

(ஈ) அதை இரண்டு சமுதாய நலத் திட்டப் பகுதிகளாகப் பிரிக்க உத்தேசம் உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) (i) Number of blocks consisting of one firka ... ... ... ... 71

(ii) Number of blocks consisting of one firka and part of firka or firkas ... ... ... ... ... ... 108

(iii) Number of blocks consisting of one or more part firkas only ... ... ... ... ... ... ... 62

(iv) Number of blocks consisting of two or more firkas, or, two firkas and part firka or firkas ... ... 124

The blocks in the Kanyakumari district numbering 9 cannot be classified on the above basis.

(*b*) According to the All-India Scheme, each block is expected normally to consist of about 100 villages with a population of about 66,000.

(*c*) 99,591.

(*d*) No, Sir.

SRI S. M. ANNAMALAI : ஸார், அதிகப்படியான மக்கள் இருக்கிறார்கள் என்ற காரணத்தினால் போளூர் சமுதாய நல திட்டத்தை அங்கு அமைத்திருக்கிறார்கள். அதே காரணமாக சுண்டசாலையிலும் அதிகப்படியான மக்கள் இருக்கிறார்கள் என்ற காரணத்தினால் அமைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் அங்கு சமுதாய நல திட்டத்தை பிரிக்க சர்க்கார் முன்வந்திருக்கிறார்கள். அங்கு மலை ஜாதியினர் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த திட்டத்தினால் எந்த விதமான பலனும்

[7th September 1960

கிடைக்கவில்லை. அதன் காரணமாக இந்த இரண்டு பிர்க்காக்களையும் அவர்களுக்கு பயன் கிடைக்கும் அளவில் இரண்டு சமுதாய நல திட்ட பகுதிகளாக பிரிக்க சர்க்கார் முன் வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கேள்வியின் 'டி' பகுதிக்கு "நோ ஸார்" என்று பதில் சொல்லி இருக்கிறேன்.

SRI A. GOVINDASAMY : இரண்டு பிர்க்காக்கள் கொண்ட பகுதியில் ஒரு பிர்க்காவில் சில கிராமங்களை மட்டும் எடுத்துக் கொண்டு தொடர்ச்சியாக எடுக்காமல் இடைவெளி இருப்பதாக இருக்கிறது. அப்படி சில கிராமங்கள் வருகின்றன. அதில் 'கன்டிகுவிட்டி' இல்லாமல் இருக்கிறது. அதை மாற்றி அமைக்க சர்க்கார் யோசிக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM 'கண்டிகுவிட்டி' இல்லாமல் இருப்பது நியாயம் இல்லை என்று இருந்தால் கனம் அங்கத்தினர் அவர்கள் அதைப்பற்றி எழுதி அனுப்பினால் அதை கவனிககலாம்.

*Leprosy.*

* 510 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-61-ல் நம் ராஜ்யத்தில் குஷ்டரோக நிவாரண வேலைகளை நடத்துவதற்காக மத்திய அரசாங்கத்தாரால் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) இத்தொகை மூலமாக என்னென்ன விதமான குஷ்டரோக நிவாரண வேலைகள் நம் மாகாணத்தில் ஆரம்பிக்கப்படும்?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) The particulars required are being collected and will be placed on the table of the House as early as possible.

*College of Integrated Medicine*

* 511 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any proposal to extend the hospital and college buildings, of the College of Integrated Medicine, Madras; and

(*b*) if so, whether necessary teaching staff and doctors and nurses have been appointed therein?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) Does not arise.



7th September 1960]

*Javadu Hill Tribes.*

* 512 *Q.*—SRI S. M. ANNAMALAI கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1958-59-ம் ஆண்டில் கவர்னர் அவர்கள் வடஆற்காடு மாவட்டம் செங்கம், சென்றபோது ஜவ்வாது மலை மலைவாசிகளுக்குத் தனியாக தேசிய அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்க வேண்டுமென்று மக்களால் மனு கொடுக்கப்பட்டதா?

(ஆ) அவர்களின் கோரிக்கைகள் யாவை?

(இ) அப்படியானால், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) No, Sir.

(ஆ) & (இ) Do not arise.

*Elementary Schools (Gobichettipalayam)*

* 513 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் ஜில்லா, கோபிச்செட்டிபாளையத்தில் ஏற்படுத்தப்போகும் பஞ்சாயத்து யூனியன் பிரதேசத்திலே ஆறு வயது முதல் ஏழு வயதான பள்ளிக்கூடத்தில் படிப்பதற்கு லாயக்கான சிறுவர் சிறுமியர் எத்தனை பேர்?

(ஆ) இவர்களுள் ஹரிஜன சிறுவர் சிறுமிகள் எத்தனை பேர்?

(இ) மேற்கண்ட கோபிச்செட்டிபாளையம் பஞ்சாயத்து யூனியன் பிரதேசத்தில் கட்டாயக் கல்வி அமுலுக்குக் கொண்டு வரப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) 1,481 boys and 1,101 girls.

(ஆ) 271 boys and 203 girls.

(இ) Yes, Sir, in six revenue villages in 1960–61.

*Soil testing.*

* 514 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள "The Soil Testing Laboratory" மூலமாக எத்தனை தடவை "Soil Testing" செய்யப்பட்டது?

(ஆ) விவசாயிகளிடமிருந்து "Soil Testing"-க்காக எத்தனை "Samples" அனுப்பப்பட்டன?

(இ) அவைகளுள் எத்தனை "Samples" பரீட்சை செய்யப்பட்டன?

(ஈ) "Fertility of the soil" பற்றி எத்தனை தடவை Government Agricultural Chemist எடுத்துரைத்தார்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Soil samples—535. Water samples—32.

(b) 701 soil samples.

(c) 198 soil samples.

(d) The Government Agricultural Chemist, whenever he goes for inspection of sites for starting State Seed Farms in the State or for starting Model Orchards along with other specialists, used to speak to the ryots of the locality, about the needs of soil testing and the availability of free services which the Government offers through Soil Testing Service at Coimbatore. Such tours have been undertaken by the Government Agricultural Chemist six times during 1960 up to the month of June.

### *Ayahs*

*515 Q.—SRI P. G. MANICKAM : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

1960-61-ஆம் ஆண்டு எத்தனை தாய்களுக்கு (Thayis) எந்தெந்த ஆஸ்பத்திரிகளிலே பயிற்சி கொடுக்கப்படும்?

THE HON. SRI M. A. MANICKAVELU : Nine hundred Thayis are proposed to be trained during 1960-61. In the first instance training will be given to 450 Thayis, in the Primary Health Centres at the following places—

1. Kaniyambadi Valley under the Agency of Project Implementation Committee, North Arcot district.
2. S. V. Nagaram.
3. Vettavalam.
4. Thirunavalur.
5. Uthiramerur.
6. Vellakoil.
7. Dombacheri.
8. Vellalore.
9. Kilarajakularaman.
10. Peraiyur.
11. Bagalur.
12. Chinnadarapuram.
13. Konulampallam.
14. Alangudy.
15. Keela Iral.
16. Vadakkankulam.





The remaining 450 candidates will be given training before March 1961 in Primary Health Centres which will be selected soon.

SRI P. G. MANICKAM : ஒவ்வொரு ப்ரைமரி ஹெல்த் செண்டர்களிலும் தாய்களை நியமிக்கப்படுவது மிகவும் நல்ல தாகையால் எல்லா செண்டர்களிலும் அவ்வாறு நியமிப்பதைப் பற்றி சர்க்கார் கவனம் செலுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU அவ்வித பயிற்சி கொடுப்பதற்கும் அப்படிப்பட்ட பயிற்சிக்கு வேண்டிய வசதி யெல்லாம் எங்கெங்கே இருக்கிறதோ அந்தந்த இடங்களில் அப்படிக் கொடுப்பதுதான் முக்கியமான கொள்கை. இந்த 900 பேர்களுக்கு பயிற்சி கொடுக்க எந்த முறையில் நல்லதாகக் கொடுக்கமுடியுமோ அந்த வகையில் கொடுக்க முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

SRI K. B. S. MANI : இப்படிப்பட்ட தாய்களுக்கு பயிற்சி கொடுக்க எங்கே தாய் பயிற்சி முகாம்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன? அவர்கள் 'டெஸ்ட்' பாஸ் செய்திருக் கிறார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : எங்கேயெல்லாம் சுகா தார நிலையங்கள் இருக்கின்றனவோ அங்கேயெல்லாம் பயிற்சி கொடுக்கப்படுகிறது.

### *Motor-cycle*

*516 Q.—SRI P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதில ளிப்பாரா—

(அ) அயல் நாடுகளுடைய உதவியோடு குறைந்த விலையில் மோட்டார் சைக்கிள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று சென்னை ராஜ்ஜியத்தில் ஏற்படுத்த உத்தேசமுண்டா?

(ஆ) அப்படியாயின் அதன் விவரங்கள் யாவை?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) & (ஆ) The Enfield India, Limited, have a scheme for manufacturing in their existing factory at Tiruvothiyur annually 6,000 motor scooters and 9,600 two-stroke engines of low horse power which can be fitted to scooters and light-weight motor-cycles, with the technical collaboration of a company in the United Kingdom. The Government of India have granted a licence to the Enfield India Limited for this purpose under the Industries (Development and Regulation) Act, 1951.

SRI P. G. MANICKAM : இந்த தொழிற்சாலை எப்பொழுதி லிருந்து ஆரம்பமாகும்?

THE HON. SRI R. VENKATARAMAN : இது நடந்துக்கொண்டி ருக்கிறது. புதிதாக சில இனங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

[7th September 1960

### Waste lands

* 517 SRI P. G. MANICKAM : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) அரசாங்கத்துக்குச் சொந்தமான விவசாயத்துக்கு லாயக்காக உள்ள தரிசு நிலங்களிலே ஹரிஜன விவசாயிகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நிலத்தின் விஸ்தீர்ணம் எவ்வளவு?

(ஆ) இந்நிலங்களில் இதுவரைக்கும் ஹரிஜன விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் நிலங்கள் எத்தனை ஏக்கர்கள்?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) and (ஆ). The extent of cultivable waste lands reserved for Harijans for the entire state is 33,211.48 acres out of which an extent of 14,843.78 acres has been assigned to them.

SRI P. G. MANICKAM : ஒவ்வொரு ஜில்லாவிலும் எத்தனை ஏக்கர் பூமி ஹரிஜனங்களுக்கு கொடுக்க இருக்கிறது என்ற ஒரு குறிப்பை அனுப்பும்படியாக சர்க்கார் ஒரு அறிக்கை விட்டிருந்தது. அதன் பிறகு கனம் அமைச்சர் அவர்கள் என்னுடைய பவானி தாலுகாவுக்கு வந்தபோது சுமார் 100 எக்கராவுக்கு 2,000 பட்டாக்களை ஹரிஜனங்களுக்கு வழங்கி இருக்கிறார்கள். அப்படி ஒவ்வொரு ஜில்லாவிலும் இருக்கிறது. அப்படி ஒவ்வொரு ஜில்லாவிலும் செய்தால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நன்றாக வாழ வழி ஏற்படும். அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படி பட்டா வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்வதில் சர்க்கார் கவனம் செலுத்துமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : அப்படி பட்டா வழங்குவதற்கு உடனடியாக எல்லாவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. அது சம்பந்தமாக அவ்வப்போது அதிகாரிகளுக்கு உத்தரவும் அனுப்பிக்கொண்டிருக்கிறோம். சாத்தியமான நடவடிக்கைகள் என்னென்ன எடுக்க வேண்டுமோ அவைகள் எல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன.

### Panchayats

* 518 Q.—SRI P. G. MANICKAM : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) பிளாக்குகள் (Block Development Scheme) உள்ள பிரதேசங்களிலே இன்னும் எத்தனை பஞ்சாயத்துக்கள் அமைக்க வேண்டும்?

(ஆ) பஞ்சாயத்து யுனியன்கள் ஏற்படுத்தப்பட்டு போகும் பிரதேசங்களிலே இன்னும் எத்தனை பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்த வேண்டும்?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) The particulars required for answering the Question have been called for from the Inspector of Municipal Councils and Local Boards.



7th September 1960]

(b) It is presumed that the Hon'ble Member refers to the number of Panchayats yet to be constituted in the areas where the Panchayat Union Councils will be established on 2nd October 1960. The areas have been entirely covered by Panchayats and their total number is 2,772.

### Residential Quarters (Doctors)

* 519 Q.—SRI P. G. MANICKAM : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) முதலாவது, இரண்டாவது ஐந்து ஆண்டுத் திட்டக் காலத்திலே பிரதம சுகாதார நிலையங்களிலே வேலை செய்யும் டாக்டர்களுக்கு, எத்தனை குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டன?

(ஆ) மற்ற சிப்பந்திகளுக்கு எத்தனை வீடுகள் கட்டப்பட்டன?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) & (b) The information is being gathered and will be placed on the table of the House as soon as possible.

### Fountain pen

* 520 Q.—SRI P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

சென்னை மாகாணத்தில் எந்தெந்த தொழிற்சாலைகளிலே பவுண்டன் பேனுக்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன?

THE HON. SRI R. VENKATARAMAN : Particulars for answering the question are being collected and they will be placed in the Legislature Library as soon as possible.

### Press Censorship.

* 521 Q.—SRI P. S. CHINNADURAI : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மத்திய சர்க்கார் ஊழியர்கள் 1960 ஜூலை மாதம் வேலை நிறுத்தம் செய்தபோது இந்த ராஜ்யத்தில் செய்தித் தணிக்கைக்கு சர்க்கார் ஏற்பாடு செய்திருந்தார்களா?

(ஆ) அதன் பலன் என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) No, Sir.

(b) Does not arise.

SRI P. S. CHINNADURAI : மத்திய சர்க்கார் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்த காலத்தில் வேலை நிறுத்தம் சம்பந்தமான செய்திகளையெல்லாம் சர்க்கார் முதலில் பரிசீலனை செய்த பிறகு தான் பத்திரிகைகள் வெளியிடவேண்டுமென்ற அளவில் சொல்லி விட்டு இப்பொழுது கனம் அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லுகிறார்கள். இதில் எந்த பதில் சரியானது என்பதை தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த மாதிரி அதிகாரம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அம்மாதிரி ஏதாவது இருக்கிறது என்று எனக்கு தெரியப்படுத்தினால் அதை வைத்துக் கொண்டு இனிமேலாவது அதன்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ள முயற்சி பண்ணுகிறேன்.

*Women's welfare*

* 522 Q.—SRI P. G. MANICKAM : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப் பாரா—

(அ) 1960-ல் மாதர் நல இலாகா ஸ்டேட் அட்வைசரி கமிட்டியில் மொத்தம் எத்தனை அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்? இவர்களுள் ஹரிஜனங்கள் எத்தனை பேர்?

(ஆ) மாதர் நல இலாகா மூலமாக கிராமங்களில் என்னென்ன வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) There are 12 members. There is no Harijan Member in the Committee.

(b) A three-fold programme under Social Education, Pre-Basic Education and Cottage Industires is being implemented by the Women's Welfare Department in the villages. Instructions in such subjects as Home Science, First Aid, etc., and training in simple handicrafts like spinning, tailoring, etc., and also in remuneratives handicrafts are given to women of the villages. Pre-Basic classes are conducted for the benefit of children.

SRI K. B. S. MANI : இந்த மாதர் நல இலாகா பொதுவாக ஹரிஜனங்களுக்கு அதிகமாக சேவை செய்வதில் அக்கறை காட்டவேண்டியிருப்பதனால் இந்த பன்னிரண்டு மெம்பர்கள் கொண்ட கமிட்டியில் இனிமேல் ஹரிஜனங்களுக்கும் இடம் கொடுப்பார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஹரிஜனங்களுடைய நலனைக் கவனிக்க ஹரிஜனங்கள் இருந்தால் தான் முடியும் என்ற கருத்தைக் கூடிய சீக்கிரம் நீக்கிவிடவேண்டும். ஹரிஜனங்களுடைய நலனின் இனி ஹரிஜனங்கள் அல்லாதாருக்கும் அதிக சிரத்தை ஏற்படுவதற்கு ஊக்கம் அளிக்கவேண்டும்.

*Diversified courses*

* 523 Q.—SRI T. S. RAMASWAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the number of Higher Secondary Schools (High Schools) in the State where diversified course (functional or professional) were adopted during the last three years;

(b) the nature of these courses;

(c) whether any equipments (by way of mechanical implements) were allotted and purchased in various High Schools in the Kanyakumari district before the reorganization and whether they are utilised; and



(d) the cost of equipments (mechanical) in the S.L.B. High School, Nagercoil and whether they are put to use?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) A statement* is placed on the Table of the House.

(c) Prior to the reorganisation of States, equipment was supplied to the schools in Kanyakumari district by the Travancore-Cochin State. The courses opened then are being continued, and the equipment is being utilised.

(d) A rough estimate of the cost of all the articles of equipment supplied by the erstwhile Travancore-Cochin State to the school for both the Engineering and Secretarial courses is Rs. 60,000 (Rupees sixty thousand only). Since the equipment for the Engineering course was found to be inadequate, a sum of Rs. 2,000 was sanctioned by the Director of Public Instruction, Madras, and the required equipment was purchased. The equipment is being put to use.

*Salary (teachers)*

* 524 Q.—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப் பாரா—

(அ) உதவி பெறும் ஆரம்பப் பாடசாலைகளில் வேலை பார்க்கும் ஹையர் கிரேட், ஜூனியர் கிரேட் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கும், நகராண்மைக் கழகம், சர்க்கார் பள்ளிகளில் வேலை பார்க்கும் மேற்படி ஆசிரியர்களுக்கும் சம்பள விகிதத்தில் வித்தியாசம் உண்டா?

(ஆ) அப்படியானால், என்ன வித்தியாசம்?

(இ) இந்த வித்தியாசங்களை நிவர்த்திக்குமாறு கேட்டு அரசாங்கத்திற்கு ஆசிரியர்கள் சங்கங்கள் விண்ணப்பித்திருக்கின்றனவா?

(ஈ) அதன்பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) The scales are as follows :—

| | | RS. |
|---|---|---|
| Government schools | ... ... ... ... | 30—1—50. |
| Schools under Local bodies | ... ... ... | 30—1—45. |
| Schools under Aided agencies | ... ... | 30—1—38. |

(c) Yes, Sir.

(d) The Madras Pay Commission has recommended the removal of the disparity. The matter is under consideration.

* Printed as Appendix IV on page 408 infra.

SRI A. VEDARATHNAM : பே கமிஷன் ரிப்போர்ட்டில் கண்ட படி இப்போது ஏற்பட்டுள்ள வித்தியாசத்தைச் சரிகட்டுவது அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது என்றாலும், இதற்கு முந்திய வித்தியாசங்களை ஒழிக்க ஏதேனும் பரிகாரம் தேடப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : முந்தைய வித்தியாசத்தைத்தான் புதிய உத்தரவின் மூலம் ஒழிக்கப் போகிறோம்.

*Seminars*

*525 Q.—SRI S. NAGARAJA MONIGAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether Seminars in Block Development Department to exchange ideas are being held in the State;

(b) if so, the various kinds of Seminars and the period and the area within which they are being held;

(c) the objects of these respective Seminars in detail; and

(d) when the next Seminars in Salem district are to be held?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes.

(b) The various kinds of Seminars held are—

(i) Regional Seminars of Officials and non-officials;

(ii) Seminars on 'Social Education';

(iii) Panchayat Development Seminars; and

(iv) Seminars of Grama Sevaks and Sevikas.

In all cases except the Seminars of Gramasevaks, the Seminars are held as and when considered necessary. No rigid instructions regarding grouping of districts and the periodicity of their holding have been issued by the Government. The Seminars of Gramasevaks are held once in a year at places and dates to be determined by the Collectors.

(c) General exchange of experiences and ideas.

(d) No decision has been taken regarding Seminars to be held hereafter.

SRI S. NAGARAJA MONIGAR : சர்க்கார் ரீஜினல் செமினார் என்று அபிஷியல், நான்-அபிஷியல் கூடி நடந்து வருகிறது. இவைகள் அனுபவத்தில் மிகவும் உபயோகமாக இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே அவைகளை அடிக்கடி நடத்த ஏற்பாடு செய்தால் நல்லது. அதைத் தொடர்ந்து அடிக்கடி அந்த அந்த ஜில்லாக்களிலேயாவது நடத்த ஏற்பாடு செய்ய முடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் வருவதனால் அதன் மூலம் இந்தப் பரிசீலனை நடைபெறும்.





SRI A. GOVINDASAMY : அகில இந்தியாவுக்கும் சமுதாய நலத் திட்டத்தை நல்ல முறையில் பரிசீலனை செய்வதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும் முசௌரியில் ஒரு நிலையம் இருப்பது போல சென்னை ராஜ்யத்திலே ஒன்றை ஏற்படுத்த நமது அரசாங்கம் உத்தேசிக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது செமினாரைப் பொறுத்தது.

*Blocks (Delimitation)*

*526 Q.—SRI S. NAGARAJA MONIGAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any representations were made to the Government that the existing system of delimitation of blocks on the basis of population only is causing hardship to people of the thinly populated regions and that delimitation should be remodified on the basis of area also; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) No such representation has been received. The assumption, however, that blocks are delimited on the basis solely of population strength is not correct.

(b) Does not arise.

SRI S. NAGARAJA MONIGAR : தற்போது எங்களுக்குக் கொடுத்துள்ள பட்டியலில் சேலம் ஜில்லாவில் பதினேழு ப்ளாக்குகள் என்றால் அதிக பரப்பளவுக்கு ஒரு ப்ளாக் என்று அமைக்கப்பட்டிருக்கிறது. அறுபதினாயிரம் ஜனத்தொகைக்கு ஒரு ப்ளாக் என்றால் அதையும்விட அதிகமான ஜனத்தொகை உள்ள பகுதியும்கூட ஒரு ப்ளாக்காக அமைத்து இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஒரு ப்ளாக்குக்கு 17 லட்சம் ரூபாய் செலவிடுவது என்கிறபோது அதிக ஜனத்தொகை உள்ள இடத்திலும் இது தான் செலவழிக்கப்படுகிறது. ஆகவே இதை ஆராய்ந்து விஸ்தீர்ணம், ஜனத்தொகை இந்த அடிப்படையில் ப்ளாக்குகளை மாற்றி அமைக்க நடவடிக்கை எடுப்பார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது வெறும் ஜனத்தொகை மட்டும் அல்ல, பிற்போக்கான நிலைமை, பரப்பளவு ஆகிய எல்லாவற்றையும் மனதில் கொண்டுதான் இந்த ப்ளாக்குகள் பிரிக்கப்படுகின்றன. அப்படித்தான் நிச்சயம் செய்யப்பட்டிருக்கிறது. இனிமேல் அதைப் பரிசீலனை செய்து மாற்றுவது என்பது முடியாத காரியம். ஏதேனும் தனிப்பட்ட இடத்தில் கஷ்டம் இருந்தால் அதை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதைப் பரிசீலனை செய்யலாம்.

### *Elementary Schools*

*527 Q.—SRI P. G. MANICKAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப் பாரா—

(அ) 1960-ஆம் வருடத்திலே, கோயம்புத்தூர் ஜில்லாவில் எத்தனை ஆரம்பப் பாடசாலைகள் உயர்நிலை (Higher Elementary Schools) ஆரம்பப் பாடசாலைகளாக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன?

(ஆ) இவைகளுள், எத்தனை ஆரம்பப் பாடசாலைகள் உயர் நிலை ஆரம்பப் பாடசாலைகளாக்கப்பட்டன?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) Proposals were received in 55 cases.

(ஆ) Permission has been granted in 43 cases.

SRI P. G. MANICKAM: சில பள்ளிகளிலே—இரண்டு மைல் களுக்கு உள்ளே உள்ள இடங்களில் அதிகமான எண்ணிக்கை யுள்ள மாணவர்கள் இருக்கிறார்கள் என்றும், ஆகவே பக்கத்தில் இருக்கிற கிராமங்களிலும் அதிக மாணவர்கள் இருக்கிறார்கள் என்றும் ஆகவே உயர்நிலைப் பள்ளியாக சில ஆரம்பப் பள்ளிகளை மாற்றலாம் என்றும் ஜில்லா போர்டு சிபார்சு செய்தும், இன்ஸ் பெக்டர்கள் சிபார்சு செய்தும் மேலதிகாரிகள் கவனிக்கவில்லை. அப்படிப்பட்ட கேஸ்கள் ஏதாவது இருப்பினும் அதை மீண்டும் பரிசிலனை செய்து உயர்நிலைப்பள்ளியாக ஏற்படுத்துவார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: உத்தரவு போடவேண்டி யவர்கள் 'டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரெக்ஷன்' தான். சிபார்சு செய்கிறவர்களே செய்ய முடியாது. கீழே இருப்பவர்கள் சிபார்சு செய்வதை அப்படியே ஒப்புக்கொள்ளவேண்டுமென்பது இல்லை.

### *Community Development*

*528 Q.—SRI P. G. MANICKAM: கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதில ளிப்பாரா—

(அ) 1960-ஆம் ஆண்டு, ஜூன், 6-ம் தேதி முதல் 11-ம் தேதி வரை ஸ்ரீநகரில் நடந்த அகில இந்திய சமுதாய அபிவிருத்தி மகாநாட்டிலே சென்னை ராஜ்யத்தின் பிரதிநிதிகளாக யார் யார் அங்கம் வகித்தார்கள்?

(ஆ) இம்மகாநாட்டிலே சமுதாய அபிவிருத்தித் திட்டங்களை தீவிரமாக அமுல் நடத்துவதற்காக என்னென்ன விதமான முறைகள் பின்பற்ற வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டன?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) The following Officers were deputed to attend the Annual Conference at Srinagar:—

1. Sri R. A. Gopalswami, I.C.S., Development Commissioner, Madras.



2. Sri G. Venkatachalapathy, Additional Development Commissioner, Madras.

3. Sri A. Venkatesan, I.A.S., Director of Agriculture, Madras.

(ஆ) The Annual Conference on Community Development held recently at Srinagar is the latest of a series of Annual Conferences of the Development Commissioners of all States in the Union in which certain heads of Development Departments also take part. These Conferences afford opportunities for discussing the progress achieved and the difficulties encountered in implementing the Community Development Programme. The Conference at Srinagar has made a number of recommendations. The most important of these deal with the steps that should be taken for increased production in agriculture, and allied industries and about what the panchayat and associate organisations can do in the field of development. A copy of the main recommendations and conclusions of this Conference is placed in the Library of the Legislature.

SRI P. G. MANICKAM: தேசீய அபிவிருத்தித் திட்ட மானது தற்போது 'ஃபஸ்ட் ஸ்டேஜ்', 'செகண்டு ஸ்டேஜ்', என்று இரண்டு விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது 'ஸ்டேஜில்' சரியானபடி முன்னேற்றம் காணவிட்டால் மூன்றாவது 'ஸ்டேஜ்' கூட ஏற்படுத்தலாம் என்று மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி ஏதாவது கலந்து ஆலோசித்து சிபார்சு செய்திருக்கிறார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இந்தச் சிபார்சுகளின் நகல் சட்டசபை லைப்ரரியில் இருக்கிறது. அதைப் படித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI A. GOVINDASAMY: ஸ்ரீநகர் மகாநாட்டில் பஞ்சாயத்து விஷயமாக பஞ்சாப், ஒரிசா போன்ற மாகாணங்கள் செய்திருக்கும்படியான முடிவுபற்றி சென்னை ராஜ்யமும் ஆலோ சிக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: நாம் இதுபற்றி ஒரு சட்டமே செய்திருக்கிறோம். இந்தச் சட்டப்படிதான் நாம் நடக்கமுடியுமே தவிர மற்ற ராஜ்யங்கள் செய்திருப்பது என்ன என்று பார்த்துச் செய்யமுடியாது.

SRI S. NAGARAJA MONIGAR: ஸ்ரீநகரில் நடந்த மகா நாட்டில் ப்ளாக்குகள் பிரிப்பதுபற்றி ஏதாவது ஆலோசிக்கப் பட்டதா? இதுவரையில் பிரிக்கப்பட்ட ப்ளாக்குகளை மாற்றி அமைக்கும் யோசனை உண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM: அந்தச் சிபார்சு லைப்ர ரியில் இருக்கிறது. அதைப் படித்து பார்த்த பிறகு ஏதாவது விஷயம் தெளிவுபடுத்தப்படவேண்டும் என்றால் கேட்கலாம்.

*Teachers (Recruitment)*

* 529 *Q.*—SRI S. M. ANNAMALAI : } கனம் நிதி அமைச்சர்
SRI M. P. SARATHI : }

அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பள்ளிகளில் உயர் பதவிகளில் சர்க்காரே நேரடியாக ஆசிரியர்களை நியமிக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) அப்படியானால், அதன் விபரமென்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No Sir; in the case of posts in Government schools only, the appointments are made by Government or by Officers of the Education Department as the case may be.

(*b*) Does not arise.

*Engineering graduates*

*530 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாகாணத்திலே தற்போது எத்தனை இஞ்ஜினியரின் பட்டதாரிகள் இருக்கிறார்கள்?

(ஆ) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இன்னும் எத்தனை இஞ்ஜினியரிங் பட்டதாரிகளுக்குப் பயிற்சி கொடுக்கப்படவேண்டும்?

(இ) வருடந்தோறும் எத்தனை இஞ்ஜினியர் பட்டதாரிகளுக்குப் பயிற்சி கொடுக்கத் திட்டமிடப் பட்டிருக்கிறது?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The Government have no information.

(*b*) It has been estimated that roughly 2,200 degree holders will be required for employment under the State Government.

(*c*) At present, the sanctioned intake in all the Colleges in the State is 1,157. It is proposed to increase this by 560 more during the Third Plan.

SRI P. G. MANICKAM : அதிகமான இஞ்ஜினியரின் பட்டதாரிகள் தேவையாக இருப்பதனால், இப்பொழுது இருக்கக்கூடிய கல்லூரிகள் போதியதாக இல்லை. ஆகையால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது அதிக கல்லூரிகள் ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிதான் விவாதித்துக்கொண்டிருக்கிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் போதிய என்ஜினியரிங் கல்லூரிகள் ஏற்படுத்துவதற்கு முயற்சிப்பதாகச் சொன்னேன். இப்பொழுது இருக்கக்கூடிய கல்லூரிகளில் அதிகமான [illegible] [illegible] பரிசீலனையில் இருக்கிறது.





*Schools (Javadu Hills)*

* 531 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) ஜவ்வாது மலையில் காட்டிலாகாவினால் நடத்தப்படும் பள்ளிகள் எத்தனை?

(ஆ) இதில் ஆசிரியர்கள் இல்லாத பள்ளிகள் எத்தனை?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) Nine.

(ஆ) Nil.

SRI S. M. ANNAMALAI : ஜவ்வாது மலையில் இருக்கும் பள்ளிக்கூடங்களில் எத்தனை ஆசிரியர்கள் ஜவ்வாது மலையிலேயே குடியிருக்கிறார்கள்? அங்கே யாரும் குடியிருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் வாரத்திற்கு ஒரு முறைகூட சரியாக வருவதில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகையால் அவர்களுக்கு குடியிருக்க தனியாக வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : என்னிடத்தில் அவர்களின் எண்ணிக்கை மட்டும்தான் இருக்கிறது. மற்ற விஷயங்களுக்கு தனிக்கேள்வி போடவேண்டும்.

MR. SPEAKER : I think hon. Member Sri Kalyanasundaram wanted some questions to be answered. May I know what that question is?

SRI M. KALYANASUNDARAM : Sir, when question No. 493 given notice of by hon. Member Sri Palanisami was called, I was not here. I request that that question may please be answered now. I am putting that question on behalf of hon. Member Sri Palanisami, Sir.

MR. SPEAKER : I have no objection.

* 493 *Q.*—SRI N. K. PALANISAMI : } Will the Hon. the
SRI M. P. SARATHI : }
Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government's attention has been drawn to the press statement made by Dr. Smelikov, Soviet Deputy Minister for Trade at Madras on 28th May 1960 that the Soviet Government would consider if request for help is sought by the Government to establish an oil industry; and

(*b*) if so, the steps taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) This is a matter for the Government of India to consider at the appropriate time.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk * at the commencement of a speech indicates revision by the Member.]

IV ANNOUNCEMENTS.

(1) SERVICE OF NOTICE ON THE HON. SPEAKER BY THE HIGH COURT OF MADRAS.

MR. SPEAKER : I want to inform hon. Members that I have been served with a notice by the High Court of Madras in the case ' Sri A. Ramachandran *v.* Hon. Speaker, Writ No. 876 of 1960 ', directing that I should appear personally or by advocate on the 4th October 1960 at 10-45 a.m. before the High Court of Judicature at Madras to show cause why the petition of Sri Ramachandran should not be complied with. This petition is for the purpose of issue of a writ in the nature of Mandamus directing me as Speaker of the Madras Legislative Assembly to forbear from allowing consideration or discussion of the Privilege Motion tabled by Mr. Lazar or any other motion of a like nature put down for consideration by the Madras Legislative Assembly on the 7th September 1960 or any adjourned date.

Article 212 of the Constitution reads as follows :—

(1) The validity of any proceedings in the Legislature of a State shall not be called in question on the ground of any alleged irregularity of procedure.

(2) No Officer or Member of the Legislature of a State in whom powers are vested by or under this Constitution for regulating procedure or the conduct of business, or for maintaining order in the Legislature shall be subject to the jurisdiction of any Court in respect of the exercise by him of those powers.

As per this constitutional provision, I feel that I cannot be and do not propose to be subjected to the authority of any Court in the exercise of my powers (Cheers).

V.—PRIVILEGE MATTERS.

(1) NOTICE ISSUED BY THE HIGH COURT TO THE HON. SPEAKER.

MR. SPEAKER : I have received notice of a number of Privilege matters. I shall take them one by one. I shall call upon the Members who have given notice to raise them. Then, we shall decide what we should do with them. First of all, I call upon the hon. Member Sri Kalyanasundaram to raise his privilege matter.

SRI M. KALYANASUNDARAM : Sir, I shall now read my Motion . . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, may I make a submission? May I know how many Members have given notice of Privilege Motions?

MR. SPEAKER : The hon. Member Sri Kalyanasundaram has given notice of one; the hon. Member Sri V. S. Manikkasundaram has given notice of two; the hon. Member Sri T. Sampath has given notice of one and the hon. Member Sri P. S. Chinnadurai has given notice of one motion. The notices given by the



hon. Members Sri Kalyanasundaram, Sri Manikkasundaram and Sri T. Sampath are Privilege matters and the motion given notice of by the hon. Member Sri P. S. Chinnadurai is an Adjournment Motion. Sri Chinnadurai's adjournment motion covers the same subject as the one contained in the Privilege matters. So, we shall take up the Privilege matters first and then the Adjournment Motion.

THE HON. SRI C. SUBRAMANIAM : I would like to make a respectful submission. I suggest that all the Motions may first be read out by the hon. Members who have given notice of them. Let the House know what those motions are about and what is contained in them. Later, you may please call upon the Members to explain their points. Now, for the present, let the hon. Members confine themselves to the reading of the motions. Later, they may make a speech on their motions.

MR. SPEAKER : I agree to the suggestion made by the Hon. Leader of the House. Now, I call upon the hon. Member Sri Kalyanasundaram to read his notice.

SRI M. KALYANASUNDARAM : I shall now read my notice, Sir, which states—

" Kindly permit me to raise a motion of privilege regarding the notice issued by the High Court to the Speaker, which is an interference with the Privilege of the House to prepare the Agenda ".

SRI V. S. MANIKKASUNDARAM : I shall read my notice, which states—

" It appears that the High Court of Judicature at Madras has admitted a petition for the issue of a Writ of Mandamus directing the Speaker of the Madras Assembly to forbear from allowing consideration of the Privilege Motion tabled by Mr. S. Lazar on the ground that such a consideration is in violation of Article 211 of the Constitution of India.

Article 212 (2) lays down that, no officer or member of the Legislature of a State in whom powers are vested by or under this Constitution for regulating procedure or the conduct of business, or for maintaining order, in the Legislature, shall be subject to the jurisdiction of any Court in respect of the exercise by him of those powers.

The petition tends to lower the dignity of the Chair, to interfere with the conduct of the business of this House and to interfere with the freedom of speech of the members of this House. It amounts to a breach of privilege of the Speaker and of the members of this House.

I therefore request that the said matter be referred to the Committee of Privileges for enquiry and report."

I shall now read my second notice. It refers to a petition that has been admitted by the High Court praying that action might be taken against the hon. Member Sri S. Lazar.

[7th September 1960

THE HON. SRI C. SUBRAMANIAM: This is a separate motion and refers to a different subject. So, that Motion need not be read out now. It could be taken up separately.

(2). PETITION FOR ISSUE OF WRIT OF MANDAMUS TO THE HON. SPEAKER.

SRI T. SAMPATH: Sir, I shall now read my notice, which states—

"I give notice of the following motion of privilege :—

It is reported in the papers that one Sri A. Ramachandran appears to have filed a writ petition before the Hon'ble High Court of Judicature of Madras requesting the High Court for the issue of Writ of Mandamus calling upon the Hon. Speaker to forbear from proceeding with the discussion on the motion of privilege given notice of and moved by Sri S. Lazar on 5th September 1960 and the High Court appears to have admitted the same and asked the Hon. Speaker through the Advocate-General not to proceed with the discussion.

The said Ramachandran appears to have filed another Writ Petition requesting that the High Court should take proceedings against Sri S. Lazar for contempt of Court, and that the High Court appears to have admitted the same and issued notice to Sri S. Lazar.

The said actions of Ramachandran are in violation of Articles 194 and 212 of the Constitution of India affecting the privileges of this House and of the Member Sri S. Lazar. "I feel that there is a *prima facie* case for referring this matter to the Committee of Privileges."

MR. SPEAKER: Now that the hon. Members have read their notices, they may make a brief speech explaining these matters. The hon. Member Sri Kalyanasundaram may now speak.

SRI M. KALYANASUNDARAM: Sir, this is a petition for a Writ to direct the Speaker and to issue an injunction to the Speaker not to allow the Motion of Privilege to be taken for consideration or discussion in this House. Not only with regard to the Motion given notice of by the hon. Member Sri Lazar, but any other Motion that may come up before the House is affected. So, it is a wholesale injunction—of course if it materializes—to the Speaker with regard to what subjects he should allow to be discussed or should not be allowed.

At the outset, I want to make one matter clear. Regarding the merit of Privilege Motion given notice of by hon. Member Sri
9-30 a.m. Lazar, I may state that I am not on that point now. I wish to reserve my comment for that occasion. But now whether the hon. Member Sri Lazar has the right to move such a privilege motion and the Hon. Speaker is in order in having allowed it for discussion or for being raised before this House, is the point relevant now. No doubt Article 211 says that no discussion shall take place in the



7th September 1960] [Sri M. Kalyanasundaram]

legislature of a State with respect to the conduct of any Judge of the Supreme Court or of a High Court in the discharge of his duties. This article is to prevent such discussion. But which is the authority which is vested with the power to control that? It is no other authority outside this House. It is this House which should decide whether it is a discussion pertaining to the conduct of a Judge or otherwise and how is that authority exercised by this House or by the Hon. Speaker. When once the Hon. Speaker allows it to be raised, it clearly means that he feels that it does not infringe the provisions of Article 211. When the Hon. Speaker gives such ruling there is no force on earth to question that. It cannot be questioned before any Court. That is the position according to the Constitution. In fact my opinion, without meaning any criticism on your ruling, is that you, Mr. Speaker has been very zealously guarding the prestige of the High Court. Perhaps in the fitness of things the High Court thought it necessary to send you greetings on your 61st birthday by a notice like this because it is in recognition of the fact that you have been zealously guarding their (High Court's) prestige in this House. Whenever any hon. Member rose to speak about the conduct of any High Court Judge, you have never tolerated that. That is my experience. Even genuine criticism of the High Court judgment has not been allowed. That is my grievance.

MR. SPEAKER: You cannot question my ruling.

SRI M. KALYANASUNDARAM: I am not questioning your ruling, Sir. We have to bow before your ruling. Article 212 lays down that the Courts could not inquire into proceedings of the Legislature. That is why Article 212 immediately succeeds Article 211. That is why protection is also given to the officers of this House. The Speaker is an officer of this House. Any hon. Member of this House who presides in the absence of the Speaker is also protected. It is for the Hon. Speaker to decide what subject should be allowed in the Agenda and what should not be allowed. If the High Court thinks of interfering with even the preparation of the Agenda, then what is to happen to this House. Is this House the supreme body representing the will of the people or not? In my opinion it is this House which is the supreme body representing the will of the people and there can be no further authority outside this House to interfere with the activities of this House. What is the position under law? Even if an hon. Member is found guilty of contempt charge what is the action that the High Court could take on a speech made by that hon. Member in this House. They can only have the satisfaction to declare that the speech amounts to a contempt of Court. Beyond that the High Court is powerless. That is the position. That is the limited powers of the High Court. I wish the High Court realises the limitation of its authority.

THE HON. SRI C. SUBRAMANIAM: Even in discussions I think we should not step beyond limits. I think to say that the High Court should have no power will be outside our jurisdiction.

[Sri C. Subramaniam] [7th September 1960

The High Court is an institution which has been constituted under the provisions of our Constitution and we should have the highest regard for the High Court. Therefore even an indirect disrespect cast on the High Court is a disrespect on ourselves and Constitution. Therefore whatever may be the attitude of the High Court and whatever may be the observation of the High Court, as far as this House is concerned we should keep up the dignity of this House and also protect the dignity of High Court. That is our first duty as legislators of this State.

MR. SPEAKER: I agree with what the Hon. Finance Minister has stated.

SRI M. KALYANASUNDARAM: I am grateful to the Hon. Leader of the House for the valuable advice he has given. I am not anxious to bring down the reputation of the High Court. I want to make that clear. I am only anxious to preserve the dignity of this House and I do not want interference in the rules of this House. But in the way in which things are happening there are symptoms of attack on parliamentary institutions. That is why I want that nothing should be done to attack parliamentary institutions. That is why I have raised this as a matter of privilege. My motion is there more or less on the same subject. Though for a different purpose my motion is there. I was anxious to protect the dignity of this House. I am sorry that the High Court has thought it fit to interfere with the preparation of our agenda, and issued a notice to Hon. Speaker. I think it is posted for further hearing today. I submit that the Hon. Speaker will proceed with the agenda. The Speaker has no eyes to see, no ears to hear except as directed by this House.

MR. SPEAKER: Why do you anticipate what I am going to do? Do not discuss that subject.

SRI M. KALYANASUNDARAM: I have faith in your capacity to regulate the proceedings of this House. You are protecting our rights. I also thought it my duty to suggest to the Hon. Speaker, as an hon. Member of this House, that instead of referring this matter to the Committee of Privileges--I think the Hon. Speaker thinks it is a matter of privilege--you have already agreed with me and your statement itself shows that . . .

MR. SPEAKER: My statement was made first. Therefore you have agreed with me. (Laughter).

SRI M. KALYANASUNDARAM: I am prepared to correct myself. That only strengthens my argument. I submit that if you, Mr. Speaker, agree that there is a *prima facie* case for breach of privilege, the matter may be discussed in this House itself and not be referred to the Committee of Privileges.

THE HON. SRI C. SUBRAMANIAM: Before proceeding further I would like to make a submission to you Sir, and the House with regard to the procedure to be adopted here in this House. I think it should be our endeavour to see that whatever might



7th September 1960] [Sri C. Subramaniam]

happen, as I have already stated, we ourselves should be anxious to protect the dignity of the High Court. That does not mean that we should give up the dignity, rights and privileges of this House. In my view both are not contradictory to each other. In the situation which has arisen there are 2 main questions arising according to me. One question is with reference to the person who initiated this proceeding by making allegations with regard to the procedure in this House and also may I respectfully submit challenging the authority of the Hon. Speaker and also casting imputations against the competency of the Hon. Speaker to regulate the proceedings in this House—not only the person who initiated the proceeding but also the person who argued the case before the High Court substantiating the point raised in the affidavit. That is quite a different thing. We need not have any compunction that we have got to express our views.

But there is another matter, as you have pointed out. Article 212 takes out of the jurisdiction of the Courts any matter which pertains to you, Sir, in regard to the conduct and the procedure of this House. We may not discuss this matter without going into Article 211 also and issue of notice by the High Court. I have no doubt in my mind, even though strictly Article 211 will not be infringed, I am sure you, Mr. Speaker, will not allow that to be infringed (I have every confidence that you will do that) still I do not think discussion should go on in a public way like this with the Press here and the gallaries there. I think it would be advisable to clear off the gallaries and have a secret session. On that principle we can have a general discussion in a secret session without giving publicity to the matter we discuss. (Sri M. Kalyanasundaram: I am opposed to it). That is my respectful submission, Sir. Of course it is for you, Mr. Speaker, to decide whether we should have a secret session or not. Under Rule 239 of the Assembly Rules the Speaker whenever he thinks fit, may order strangers to withdraw or the press gallery to be cleared. Even in a secret session if any hon. Member gives expression to the conduct of a Judge, you Mr. Speaker will not allow it because it will infringe Article 211 of the Constitution. You would put a bar on such reference. So, Sir, it is my respectful submission that we may have a secret session. It is for hon. Members of this House to decide. I think it will be in fairness for all hon. Members to have a secret session so that we may discuss these matters, subject of course to rules. It is not as if when we have a secret session we will be infringing rules of procedure and the Constitution. Certain matters need not be given publicity. That is why I respectfully submit that it is better to have a secret session. I am prepared to be guided by your decision, Sir. Ultimately your decision will have to prevail in this matter.

SRI M. KALYANASUNDARAM: Regarding the suggestion of the Hon. the Leader of the House that the discussion should be held *in camera*, I feel, Sir, that it is not necessary because all the discussion that takes place in the High Court is open to the Press. There is no such discussion *in camera*. After all we are

representatives of the people and we could discuss the matter openly. We are interested not only in keeping the dignity of this House but also the dignity of the High Court. So I do not see why the Hon. the Leader of the House is showing lack of confidence in us. We are responsible Members of this House and you are here to regulate the proceedings, if we do anything out of the way. Why should the Hon. the Leader of the House make the suggestion that the discussion should be held *in camera?* I suggest that it could be held openly so that it may be a corrective to the public opinion. Therefore I submit, Sir, that you can decide the matter and I have no remarks to offer.

MR. SPEAKER : When I allowed hon Member Sri S. Lazar's privilege matter, I did not express any opinion whether it involved a question of privilege or not, though it was argued that the mere fact that I had allowed it to be raised it meant that there is discussion. In this matter, I have no objection to hear the views of the hon. Members. But if there is going to be any reference to the conduct of the Judges, it may be a violation of Article 211 of the Constitution. I agree that the occasion is a unique one. There may be no objection for the discussion of the action of the Advocate. He is not covered by the Constitution. But the Judges are protected. We can go into a secret session. There have been precedents for it. On the 10th February 1955, on a similar privilege matter the House went into a secret session. I have no objection to have a secret session if views are expressed without referring to the conduct of Judges. I have no objection to an open session also. But if the hon. Members infringe or violate Article 211, I will have to call them to order. It will be very difficult for the Members to completely avoid referring to the conduct of the Judges. How am I to know that no reference at all will be made to the conduct of the Judges? Therefore to avoid all complications and embarrasment the House can go into a secret session where Members can talk freely and then resume open session in which a resolution might be passed.

SRI T. L. SASIVARNA THEVAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விஷயத்தைப்பற்றி பேச ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே ரகசியக் கூட்டம் போன்று வைத்து பேசியிருக்கவேண்டும். பேசவேண்டியதை எல்லாம் பேசி முடித்துவிட்ட பின்னால் இப்போது ரகசியக் கூட்டம் நடக்கவேண்டும் என்று சொன்னால், அதன் காரணமாக பொதுமக்களிடையே சந்தேகம் தான் ஏற்படும். ஆகவே இதைப்பற்றி ரகசியக் கூட்டத்தில் விவாதிக்கவேண்டிய தேவையில்லை என்பதுதான் என் அபிப்பிராயம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI P. S. CHINNADURAI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த உரிமைப் பிரச்னை பற்றியுள்ள விவாதத்தை ரகசியக் கூட்டத்தில் வைத்துக்கொள்ளலாம் என்ற சர்க்கார் கட்சித் தலைவருடைய அலோசனையைப் பொறுத்த வரையில் என்னுடைய அபிப்பிராயம், இந்த விவாதத்தை வெளிப்படையாக நடத்துவது தான் முற்றிலும் பொருத்தமாக இருக்கும். காரணம் அரசியல்



சட்டத்தினுடைய 211-வது ஷரத்தை இந்த சபையிலுள்ள எந்த அங்கத்தினர்களும் மீறியதில்லை, இனிமேல் மீறப்போவதுமில்லை. இது எந்த விதமாக இருந்தபோதிலும் இந்த விவாதம் இந்த சபையில் வெளிப்படையாக நடந்தால்தான் உண்மையாக நாம் அரசியல் சட்டத்திற்கு சரியான மரியாதை கொடுத்து நடந்து கொண்டதாக இருக்கும். கனம் சபாநாயகர் அவர்களுக்கு நான் இன்னும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ரகசியமாகவோ அல்லது வெளிப்படையாகவோ இதை விவாதித்தாலும் நீதிபதியின் ஒழுக்கத்தைப்பற்றியோ அல்லது அவரது நடத்தையைப்பற்றியோ அங்கத்தினர்கள் யாராவது சொல்லிவிடக்கூடும் என்று அஞ்சி அதனால்தான் ரகசியமாக இதைப்பற்றி விவாதித்தோம் என்கின்ற உணர்வை இதன்மூலம் நாட்டுமக்களுக்கும் மற்றவர்களுக்கும் ஏற்படுத்திவிடக்கூடாது. இன்னும் சொல்லப்போனால் இதைப் பற்றி வெளிப்படையாக விவாதித்தாலும் சரி, ரகசியமாக விவாதித்தாலும் சரி, நீதிபதியைப்பற்றி பாதகமாக ஒரு வார்த்தைகூட இங்கு பேசப்படும் என்று தாங்கள் கருதுகிறீர்களா? அப்படி பேசினாலும் தாங்கள்தான் சம்மதிப்பீர்களா? எனக்குப் பரிபூரண நம்பிக்கை இருக்கிறது, தாங்கள் அதற்கு சம்மதிக்க மாட்டீர்கள் என்று. ஆகவே ரகசியமாக இதை விவாதிப்பதில் என்ன பயன்? வெளிப்படையாக விவாதிப்பதுதான் பொருத்தமாக இருக்கும், அதோடு அதுதான் நியாயமானதாகவும் இருக்கும். அதோடு இங்கு வெளிப்படையாக விவாதிப்பதின் மூலமாக நியாயத்தின் பல்வேறு அம்சங்களைப்பற்றியும் விவரமாக பொதுமக்களும் தெரிந்து கொள்வதற்கு இது ஏதுவாக இருக்கும். அது மட்டுமல்ல, ரகசியமாக விவாதித்தாலும், பின்னால் இங்கே இருக்கின்ற அங்கத்தினர்கள் அவரவர்கள் தொகுதிகளுக்குப் போகும்போது என்ன நடந்தது என்று கேட்டால், நடந்த விஷயங்களை சொல்லித்தான் ஆக வேண்டும். என்னைப்பொறுத்த வரையில் இதைப்பற்றிக் கேட்கும் போது சொல்லாமல் இருக்க முடியாது என்பதை சொல்லிக் கொள்கிறேன். . . . . . . . . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : I agree that an open discussion may place restraint on the hon. Members to be careful not to infringe Article 211. (Sri M. Kalyanasundarm : You are correct.) That is perhaps the view expressed by hon. Members Sri M. Kalyanasundaram and Sri P. S. Chinnadurai and also Sri T. L. Sasivarna Thevar. They are entitled to have their views. I do not propose to impose my point of view but the final authority is the Hon. Speaker.

MR. SPEAKER : It is a fact that this House is the supreme authority. I am elected by this House. Whatever direction this House gives, it will prevail. If it is the desire of this House that we must have open discussion, I have not the slightest objection. Now let me take the sense of the House.

The question is—

"That the House do have an open discussion on this matter."

The motion was put and carried."

(Mr. Deputy Speaker in the Chair.)

[7th September 1960

**SRI M. KALYANASUNDARAM**: கனம் சபாநாயகர் அவர்களே, இது ஒரு முக்கியமான அரசியல் பிரச்னை. நம் நாட்டிலே ஜனநாயகம் வளர வேண்டும் என்று நாம் விரும்பு கிறோம். ஜனநாயக முறையில் சோஷியலிஸ சமுதாயத்தை அமைக்கவேண்டும், வர்க்கபேதங்களை ஒழிக்க வேண்டுமென்று அநேகமாக இந்த நாட்டில் இருக்கின்ற கட்சிகள், ஸ்தாபனங்கள் எல்லாம் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. அப்படியிருக்கும்பொழுது ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் ஸ்தாபனங்கள் எது என்று திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதனைக் கொடுக் கப்பட்டிருக்கின்ற உரிமைகளை பாதுகாக்க வேண்டியது அவசியம். ஒரு ஜனநாயக அமைப்பில் மக்களால் தேர்ந்தெடுக்கப் படக்கூடிய ஸ்தாபனங்கள், அதாவது பார்லிமெண்ட், சட்டசபை போன்ற ஸ்தாபனங்கள், ஆகியவைதான் மக்களின் ஆதிபத்திய உரிமையை பாதுகாக்கக்கூடிய ஸ்தாபனங்கள். அந்த ஸ்தா பனங்களின் எதேச்சதிகார உரிமையையும் கட்டுப்படுத்த வழிகள் இருக்கின்றன. நிர்வாக அதிகாரிகள் அதிகாரங்களை உபயோகப்படுத்தும்பொழுது அதில் தனிப்பட்டவர்களின் சுதந்திரம் பாதிக்கப்பட்டால், அதை பாதுகாத்துக்கொள்வதற்கு இந்த சபைக்கும் அதிகாரம் உண்டு, உயர்நீதி மன்றத்திற்கும் அதிகாரம் உண்டு. அதோடு இந்த சபையின் இயற்றப்படும் சட்டங்களை இந்த மந்திரிசபையோ அல்லது நிர்வாகமோ அமல் நடத்தும்பொழுது அதில் ஏதாவது தவறுகள் நடந்தால் அதற்கு பரிகாரம் தேடிக்கொள்வதற்கு உயர்நீதி மன்றம் இருக்கின்றது. சட்டங்களின் பாதுகாவலுக்கு இருப்பது நீதிமன்றங்கள். இந்த முறையை பிரிட்டிஷ் பார்லிமெண்டோடு ஒப்பிடுவது சரியாகாது. பிரிட்டிஷ் பார்லிமெண்டைப் பொறுத்தவரை, அது ஏற்பட்ட போது இருந்த நிலைமை, அப்போது இருந்த சரித்திரம் அவைகள் எல்லாம் வேறு. ஆனால் நம்முடைய பார்லிமெண்ட் ஸ்தாபனங்கள் பிறந்த சூழ்நிலை வேறு. அந்நியர் ஆண்டுகொண்டிருந்ததை மாற்றி நாம் சுதந்திரம் அடைந்த பின்னால்தான் நம்முடைய பார்லிமெண்டும் நம்முடைய சட்டசபைகளும் தோன்றி யிருக்கின்றன.

பிரிட்டனில் என்ன சூழ்நிலை? பிரிட்டனில் ஆதிக்கம் செலுத் தியது முடியரசு. அங்கு நிலவியது தனி நபர் ஆதிக்கம். எதேச் சதிகாரத்தை உபயோகப்படுத்தி பார்லிமெண்ட் நடவடிக்கை களில் தலையிட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் சுதந் திரமாக இயங்க முடியாதபடி ஆபத்து இருந்த காலத்தில் முடி யரசை எதிர்த்து பார்லிமெண்ட் உரிமைகள் பிறந்தன. இங்கு அதுமாதிரி தனி நபர் ஆதிக்கம் கிடையாது. மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்டவர்கள்தான் அதிகாரத்தில் இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது மக்கள் உரிமையைப் பாதுகாப்பது மிகவும் முக்கியமானது. அதில், இந்தச் சபையும் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும்; நீதி மன்றங்களும் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். நான் இப்போது இந்த நியமனத்தைப்பற்றி அபிப்பிராயம் கூற விரும்பவில்லை. இப்போது நாம் இங்கு கவனிக்கவேண்டியது இந்தச் சபைக்கு ஆதிபத்திய உரிமை உண்டா இல்லையா என்பதுதான். கட்டாயம் உண்டு என்றுதான்



7th September 1960] [Sri M. Kalyanasundaram]

நான் சொல்லுவேன். இந்தச் சபை எந்தப் பிரச்னைகளை விவாதிக் கலாம், எந்தப் பிரச்னைகளை விவாதிக்கக்கூடாது என்பது இந்தச் சபையின் வரம்புக்கு உட்பட்டதே தவிர, இந்த சபைக்கு வெளியே இருக்கக்கூடிய எந்தச் சக்திக்கும் உட்பட்டது இல்லை. என்பதுதான் அரசியல் சட்டத்தின் 212-வது பிரிவின் அர்த்தம்.

"Article 212 (2)—No officer or member of the Legislature of a State in whom powers are vested by or under this Constitution for regulating procedure or the conduct of business, or for maintaining order, in the Legislature shall be subject to the jurisdiction of any court in respect of the exercise by him of those powers".

என்று 212-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. அதனுடைய அர்த்தத்தைக் கொஞ்சம் கவனிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளு கிறேன். இந்தச் சபையின் நடவடிக்கைகளை நடத்துவதன் பொறுப்பு சபாநாயகருடையது. அந்தப் பொறுப்பில் தவறு ஏற்படுமானால் அதைத் திருத்தக்கூடிய பொறுப்பு இந்தச் சபைக்கும், இந்தச் சபையினால் ஏற்படுத்தக்கூடிய கமிட்டி களுக்குந்தான் உண்டே தவிர, இந்தச் சபைக்கு அப்பாற்பட்ட வர்கள் அல்ல. இந்தச் சபையிலேயேகூட ஒரு சில அங்கத்தினர்கள் பாதிக்கப்படலாம். ஒழுங்கீனமான தீர்ப்புகளாக இருந்தாலும்கூட (கனம் ஸ்ரீ ஆர். வெங்கட்ராமன்:—"தவறான" என்று சொல் லுங்கள்), தவறான தீர்ப்புகளாக இருந்தாலும்கூட அதனால் பாதிக்கப்பட்டவர்கள் கோர்ட்டுக்குப் போகமுடியாது. அதற்குப் பரிகாரம் என்ன இருக்கிறது? சபாநாயகர்மீது நம்பிக்கை இல்லை என்று தீர்மானம் கொண்டு வரலாம். இந்தச் சபையில் விவா தித்து முடிவு எடுக்கவேண்டுமென்று கோரலாம். இந்த விஷயத்தில் இந்தச் சபையின் அங்கத்தினர்களுக்குக்கூட உரிமை கிடையாது என்பதுதான் இந்தப் பிரிவின் அர்த்தம். இதன் நட வடிக்கை சம்பந்தமாக எந்த எந்த விஷயங்களை அட்டவணையில் சேர்க்கலாம், எந்த அளவுக்கு விவாதிக்கலாம்; எந்த அளவுக்கு விவாதிக்கக்கூடாது என்ற விஷயங்களை ஒழுங்கு படுத்தக்கூடிய எல்லா அதிகாரங்களும் சபாநாயகரைச் சேர்ந்தது. அதைக் கோர்ட்டில்கூட விவாதிக்க முடியாது. இந்தச் சபையின் உரிமையைப் பாதுகாப்பது கூட இந்தச் சபை யின் பொறுப்பு. முன் காலத்தில் மன்னர்கள் தவறு செய்ய மாட்டார்கள் என்ற கருத்து இருந்தது. அதற்கு எதிராக அந்தப் பயம் வேறு ரூபத்தில் வரும் ஆபத்து இருந்ததைப் பார்த்திருக்கிறோம். ஜனநாயக ஸ்தாபனத்தின் மீது நீதிமன்றங் கள்பெயரால் இப்பேர்ப்பட்ட தாக்குதல் வர நேர்ந்திருப்பது மிகவும் வருந்தத்தக்கது. என்னுடைய தீர்மானம்கூட இதனால் பாதிக்கப்படக் கூடிய நிலைமை ஏற்படலாம். ஆயினும், பாதிக் காது என்று நிச்சயமாக நம்புவதற்கும் இடமிருக்கிறது. அர சாங்கம், நீதிமன்றங்கள், சட்டசபை ஆகியவைகளுக்குள்ளே ஒரு சுமுகமான சூழ்நிலை நிலவ வேண்டும். ஒருவருக்கொருவர் நல்ல முறையிலே குறைகள் இருந்தால் சுட்டிக் காட்டி தவறுகள் ஏற்படுமானால் தடுத்து நிறுத்தி மூன்றும் இயங்க வேண்டும். ஆனால் ஒன்றுக்கொன்று குரோதங்களை வளர்த்துக் கொண்டு

[Sri M. Kalyanasundaram] [7th September 1960

போகுமேயானுல் ஜனநாயகத்திலேயே மக்கள் நம்பிக்கையை இழக்கக் கூடிய ஆபத்து ஏற்படும். ஆகவே, இந்த "பெடிஷனை" ஹைகோர்ட் அனுமதித்தது சரியா என்பதைப் பரிசீலிக்க வேண்டும்.

அதை அனுமதித்தது துரதிருஷ்டமானது. அந்த நோக்கம் நிறைவேறக் கூடியதல்ல. இந்த மன்றத்திலே இருக்கக் கூடிய "மெஜாரிடியினர்" தவறு செய்து விட்டால் கூட, ஐந்து வருஷங் களுக்கு ஒரு முறைதான் பரிகாரம் இருக்கிறது. இதனுல் பாதிக் கப்பட்டவர்கள் இந்தச் சபையில் மெஜாரிடி பொறுப்பேற்று இருக்கக்கூடிய நிதியமைச்சர், போலீஸ் அமைச்சர், முதல் அமைச்சர் எல்லோரும் சேர்ந்துதான் பொறுப்பு. நான் பிரித்துச் சொல்ல விரும்பவில்லை. ஒரு மந்திரி மட்டும் குற்றவாளி என்று நான் சொல்ல விரும்பவில்லை. ஒரு அதிகாரி குற்றம் செய்தால் கூட மந்திரிகள்தான் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும். ஆகவே, அமைச்சர்கள் இந்தக் கூட்டுப் பொறுப்பில் செய்யக் கூடிய தவறுகள் நிறைய இருக்கலாம். இந்தப் பிரச்னையை ஜூலை மாதத்திலேயே கொண்டு வரவேண்டுமென்று நினைத் திருந்தேன். உயர்நீதி மன்றம் குறுக்கிட்டு விட்டதால் எடுத்துக் கொள்ள முடியாது போய்விட்டது. ஆகவே, இந்தச் சபையில் அமைச்சர்கள் தவறு செய்தால் அதற்குப் பரிகாரம் ஐந்து வருஷத்திற்குப் பிறகு வரக்கூடிய தேர்தலில், மக்களிடத்தில் இவர்கள் செய்திருக்கும் தவறுகளை எடுத்துச் சொல்லி அவர் களுக்கு வோட்டுப் போடக்கூடாது என்று கூறக்கூடிய நிலைமை யில்தான் இருக்கிறோம். ஆகவே,. இப்போது உயர்நீதி மன்ற மானது இதில் தலையிட்டு இன்ன விஷயத்தைச் சேர்க்கலாம் இன்ன விஷயத்தைச் சேர்க்கக்கூடாது என்று சொல்வதானது, இந்தச் சபையின் அந்தஸ்தானது ஒரு முனிசிபாலிடியை விட, ஒரு கார்ப்போரேஷனைவிட கேவலமாகப் போய்விடும் என்று வருந்துகிறேன். 211-வது விதியின்படி ஒழுங்கீனம் ஏற்படக் கூடாது ; அது அரசியல் சட்டத்தில் தெளிவாக இருக்கிறது. சபா நாயகர்தான் இதற்குப் பொறுப்பானவர். ஆகவே, உயர்நீதி மன்றம் இதில் தலையிட்டது சரியல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம். சபாநாயகர் ஹைகோர்ட்டுக்குப் போகக்கூடாது என்பதுதான் என் வேண்டுகோள். நீங்கள் கோர்ட்டுக்குப் போவது என்றுல் அது இந்தச் சபையின் கௌரவத்தைப் பாதிக்கும் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**Mr. SPEAKER :** சில கட்சித் தலைவர்களுக்கு இந்த உரிமைப் பிரச்னை வரும் என்று தெரியாது, அவர்கள் இந்தச் சட்ட நுணுக் கங்களைப் பரிசீலித்துப் பார்க்கவேண்டுமென்று சொல்கிருர்கள். ஆகையால் இதோடு இந்த விவாதத்தை நிறுத்தி விட்டு, நாளைக்கு இதை எடுத்துக்கொள்ளலாம். அதில் இந்தச் சபைக்கு ஒன்றும ஆட்சேபம் இருக்காது என்று நினைக்கிறேன். ஆகவே நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

The hon. Member cannot expect me to commit myself.



7th September 1960]

**Sri P. S. CHINNADURAI :** ஆலோசனை செய்து முடிக்காத வர்கள் வேண்டுமானுல் நாளைக்கு பேசட்டும். ஆலோசனை செய்து முடித்தவர்களையாவது இன்றைக்குப் பேச அனுமதியுங்களேன். என்னுடைய கருத்தை மட்டுமாவது நான் இன்றைக்குச் சொல்லி விடுகிறேன்.

**Mr. SPEAKER :** "ப்ரிவிலேஜ் மோஷன்" கொடுத்தவர்களே நாளைக்குப் பேசலாம் என்று சொல்லும்போது, கொடுத்தவர்கள் கொடுக்காதவர்கள் எல்லோருமே நாளைக்குப் பேசலாம்.

The subject-matter of the adjournment motion given notice of by the hon. Member is covered by the privilege matter. So I think discussion to-day is not necessary.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** நாளை காலை 9-½ மணி யிலிருந்து 10-½ மணி வரை வைத்துக் கொள்ளலாம்.

Mr. SPEAKER : Yes, I adjourn consideration of this subject to 9-30 a.m. tomorrow.

**Sri S. SOWDI SUNDARA BHARATHI :** ஒரே ஒரு விண்ணப்பம் 10-00 a.m.
ஸார். இந்த விஷயத்தை நாம் விவாதிப்பதற்கு முன்பாக நாம் ஒரு விஷயத்தை மனதில் வைத்துக்கொள்வது நல்லது என்று கருதுகிறேன். எல்லோரும் தற்போது சிறிது உணர்ச்சி வசப்பட்டி ருப்பதாக நான் நினைக்கிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : The hon. Member may leave it to the Hon. Speaker. He has already adjourned further consideration to tomorrow.

**Sri S. SOWDI SUNDARA BHARATHI :** இரண்டு, மூன்று நாள் கழித்து இதை வைத்துக்கொண்டால் ரொம்ப நல்லது.

The Hon. Sri C. SUBRAMANIAM : We are quite cool and calm.

### IV.—ANNOUNCEMENTS—*cont.*

#### (2) BILLS PASSED BY THE COUNCIL.

Mr. SPEAKER : I have to announce that the Legislative Council has passed the Madras (Transferred Territory Extension of Laws Bill, 1960 (L.A. Bill No. 17 of 1960) without any recommendation and the following Bills without any amendment :—

(1) The Madras Panchayat Union Councils (Special Provisions for First Constitution) Bill, 1960 (L.A. Bill No. 19 of 1960).

(2) The Indian Penal Code and the Code of Criminal Procedure (Madras Amendment) Bill, 1960 (L.A. Bill No 7 of 1960).

(3) The Madras Judicial Proceedings (Regulation of Reports) Bill, 1960 (L.A. Bill No. 12 of 1960).

## (3) ELECTION OF MEMBERS TO THE COMMITTEE ON ESTIMATES.

MR. SPEAKER : I have also to announce to the House that out of the FIFTEEN Members who were nominated to the Committee on Estimates, as a result of the election held on 6th September 1960, the following FOURTEEN Members have been declared duly elected to the Committee on Estimates for the year 1960-61 :—

1 Sri K. Appavoo Pillai.
2 Sri N. V. Chockalingam.
3 Sri B. Doraiswamy Reddiar
4 Sri T. Karia Gounder.
5 Sri A. R. Marimuthu.
6 Sri P. K. Mookiah Thevar.
7 Sri P. M. Munuswami Gounder.
8 Sri C. Muthiah Pillai.
9 Sri N. K. Palanisami.
10 Sri K. Pandiaraj.
11 Sri C. R. Ramaswami.
12 Srimathi Savithri Shanmugam.
13 Sri M. S. Selvarajan.
14 Sri P. Vedamanikkam.

Under rule 164 (1) of the Madras Legislative Assembly Rules, the Hon. Minister for Finance and the Chairman of the committee on Public Accounts shall be Members ex-officio.

Under rule 165, I nominate Sri C. R. Ramaswami as the Chairman of the Committee.

SRI V. S. MANIKKASUNDARAM : Sir, I have given notice of another Motion.

MR. SPEAKER : The matter is over for the present. The hon. Member should have raised it earlier.

## VI.—ADJOURNMENT MOTION *re* : CERTAIN WRIT PETITION FILED IN THE HIGH COURT.

SRI P. S. CHINNADURAI : கனம் சபாநாயகர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புப் பிரேரணை கொடுத்திருக்கிறேன். அது என்ன கதி ஆயிற்று என்று தெரியவில்லை.

MR. SPEAKER : இந்த உரிமைப் பிரச்னையில் உள்ள விஷயத்தில் நீங்கள் கொடுத்த ஒத்திவைப்புப் பிரச்னையும் கலந்திருப்பதால் இதைக்கூட நாளைக்கு எடுத்துக்கொள்ளுகிறேன்.

## VII. CALLING ATTENTION TO THE IRREGULARITIES POINTED OUT BY THE MADRAS HIGH COURT IN THE APPOINTMENT OF THE GOVERNMENT PLEADERS.

MR. SPEAKER : I have received notice under Rule 41 of the Assembly Rules from hon. Member Sri Kalyanasundaram calling attention of the Hon. the Chief Minister to a matter of urgent public importance, viz., 'the irregularities pointed out by the Madras High Court in the matter of appointment of the present Government Pleader.' He may speak now. Let the hon. Member be brief.



SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, நான் கொடுத்திருக்கும் பிரேரணை, நம்முடைய சட்டசபை விதிகளின் 41-வது விதியின்படி கொடுத்திருக்கும் பிரேரணை சர்க்கார் வக்கீல் நியமனம் சம்பந்தப்பட்டது ஆகும். திரு. அழகிரிசாமி அவர்கள் சர்க்கார் வக்கீலாக நியமனம் செய்யப்பட்டதில் சில ஒழுங்கீனங்கள் இருப்பதாக உயர்நீதி மன்றம் எடுத்துக்காட்டியிருப்பது மட்டுமல்ல, நடவடிக்கை சம்பந்தப்பட்டமட்டில் நடவடிக்கை ஒழுங்கீனமானது என்பதே என்னுடைய கருத்தாகும்.

SRI P. S. CHINNADURAI : பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார். சர்க்கார் வக்கீல் நியமனம் சம்பந்தமாக உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்து கொள்வதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாக அறிகிறேன். உயர்நீதி மன்ற விதிகளின்படி, 90 தினங்கள் அப்பீலுக்கான காலமாக பொதுவாக வரையறுக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால், கனம் அங்கத்தினர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் பேசுவதோ, நிதி அமைச்சர் அவர்கள் இதற்குப் பதில் கொடுக்கும் அறிக்கையோ sub judice ஆகாதா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : 1948-ம் ஆண்டில் இதுமாதிரி ஒரு பிரச்னை கிளம்பியபோது அப்பொழுது சபாநாயகராக இருந்த திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் இந்தத் தீர்ப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அதாவது—

"The appeal has not begun and until it has begun this matter is not *sub judice.*"

அந்தத் தீர்ப்பின்படி, அப்பீல் போடாதிருக்கும் வரை அது *sub judice* ஆகவில்லை. அப்பொழுது சபாநாயகராக இருந்த திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் தீர்ப்பு கொடுத்திருக்கிறார். ஆகையால்தான் நான் ஆமோதித்தேன்.

SRI P. S. CHINNADURAI : ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். அப்பீல் போடுவதற்காக நீதிபதியினுடைய தீர்ப்பின் நகல் வேண்டுமென்று ஏற்கனவே விண்ணப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த நகல் இல்லாமல் அப்பீல் போடுவது என்பது இயலாது. தயவு செய்து சபாநாயகர் அவர்கள் நன்கு கவனிக்க வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : A ruling has been given by the Speaker.

MR. SPEAKER : Let us hear him.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, you have given a ruling that as long as the appeal has not been filed, it is not *sub judice.* So, I do not think that the hon. Member can go behind that ruling and say that because an application has been filed for a copy of the judgment, the matter is *sub judice.* That will only amount to questioning your authority and ruling, Sir.

[7th September 1960

SRI P. S. CHINNADURAI : I have no intention of questioning the Speaker's ruling and authority. I only want some clarification.

இந்த அளவுக்குப் பதட்டம் அவருக்கு என் இருக்கவேண்டுமென்று எனக்குப் புரியவில்லை. பதட்டப்படவே வேண்டியதில்லை. ரொம்ப நிதானமாகக் கவனித்துப் பேச வேண்டிய விஷயம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அப்பீல் போடப்படவில்லை என்றால், அப்பீல் போடுவதற்கு முன்னுடி தீர்ப்பினுடைய நகல் இருந்தால்தானே போட முடியும்? நகலுக்கு விண்ணப்பிக்கப்பட்டிருக்கிறது. அது அவசியமா இல்லையா என்பதைச் சபாநாயகர் அவர்கள் நிர்மானிக்கக்கூடும். இதற்கு முழு அதிகாரம் சபாநாயகருக்கு இருக்கிறது. அப்பீலுக்கான கால வரம்பு இருக்கிறது. அப்பீல் போடுவதற்காக தீர்ப்பின் நகல் விண்ணப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையிலே இதைக் குறித்துப் பேசுவது sub judice ஆகாதா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : **sub judice** என்று எனக்கு எப்படித் தெரியும்? 'அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது; இதைப்பற்றி விவாதம் செய்யக்கூடாது' என்று நோட்டீஸ் அனுப்பினால்தானே எனக்குத் தெரியும். ஒருவர் அப்பீல் போடப்போகிறார் என்பதை வைத்து விவாதம் பண்ண முடியாதே. ஆகையால்தான், எனக்கு முன்பு இருந்த சபாநாயகர் அவர்களின் தீர்ப்பைப் படித்தேன். திரும்பவும் வேண்டுமானால் படிக்கிறேன். 'அப்பீல் தாக்கல் ஆகிறவரைக்கும் பேசலாம். அப்பீல் தாக்கல் ஆன பிறகு பேசக்கூடாது' என்று தீர்ப்பு இருக்கிறது. அதைத்தான் படித்தேன்.

ஒன்று சொல்கிறேன். கனம் அங்கத்தினர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் பேசும்போது அரசியலமைப்பின் 211-வது பிரிவை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஜட்ஜினுடைய conduct -ஐ 'டிஸ்கஸ்' பண்ணக்கூடாது. கேஸை விளக்கலாம். அரசியலமைப்பின் 211-வது பிரிவு **affect** ஆகிறதென்றால் அவருடைய கவனத்திற்குக் கொண்டுவருவேன்.

**SRI M. KALYANASUNDARAM :** கவனித்துப் பேசுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : 'Conduct' would mean both in approval as well as in disapproval.

MR. SPEAKER : I shall decide it.

**SRI M. KALYANASUNDARAM :** அது கூட சபாநாயகர் தான் முடிவு கட்ட வேண்டும். நிதி அமைச்சருக்கு அனுகூலமாக அர்த்தம் பண்ண முடியாது.



7th September 1960]

SRI S. NAGARAJA MONIGAR : பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன், சார்.

**MR. SPEAKER :** நீங்கள் இப்பொழுது கேட்கக் கூடாது. நான் இப்போது ஒரு விளக்கம் கொடுக்கவேண்டும். 1949-ம் ஆண்டில் இது போன்ற பிரச்னை ஒன்று வந்தபோது அப்பொழுதிருந்த சபாநாயகர் சொன்னதாவது :

This is a reference from the famous Bradlaugh case—

"The House of Commons is not subject to the control of the courts in the administration of that part of the law which relates to its internal procedure only, and that even if its interpretation of a statute prescribing rights exercisable within its walls is erroneous, the courts have no power to interfere. For such purposes the House can practically change or practically supersede the law."

ஆகையால் இந்த சபைக்கு முழு அதிகாரம் இருக்கிறது. இதை நடத்தவேண்டுமென்றால் நடத்த வேண்டியதுதான். அப்பீல் பண்ணிவிட்டால் பேசலாம்.

**SRI M. KALYANASUNDARAM :** தாங்கள் அது சம்பந்தமாக ரொம்பவும் தெளிவுபடுத்திவிட்டதால் அந்த ஆட்சேபணையைப் பற்றி நான் பேசவேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன்.

இப்பொழுது நான் குறிப்பிட விரும்புவது எல்லாம், உயர் நீதி மன்றத்தினுடைய தீர்ப்பு அல்ல; சர்க்கார் நடவடிக்கையைப் பற்றித்தான். சர்க்கார் நடவடிக்கையில் இருக்கும் ஒழுங்கீனங்கள் என்ன என்பதைப்பற்றித்தான் என்னுடைய கவலை. உயர்நீதி மன்றத்திற்குக்கூட இத்தகைய சந்தர்ப்பத்தைச் செய்து கொடுத்தது எது என்று பார்ப்போமானால், அது சர்க்காருடைய நடவடிக்கைதான் என்பது என்னுடைய முதல் குற்றச்சாட்டு—சர்க்காரின் மீது தான்.

அந்த நபர் சம்பந்தப்பட்டமட்டில், இதனால் பாதிக்கப்பட்ட அதிகாரி சம்பந்தப்பட்டமட்டில், அவரிடத்திலே எனக்கு அனுதாபம் உண்டு. பத்து வருஷ காலமாக சட்ட இலாகா செக்ரடரியாக இருந்து, இந்தச் சபையின் பல கமிட்டிகளிலே அவர் வந்து கலந்துகொண்டு பங்கெடுத்தவர். எனக்கு நேரடியாக அவருடைய திறமை, ஆற்றல் இவைகளைப்பற்றி நன்றாகத் தெரியும். அவரிடத்திலே எனக்கு அனுதாபம்தான். அப்பேர்ப்பட்ட ஒரு மனிதருடைய எதிர்காலத்தை சர்க்காருடைய ஆர்வ மிகுதியினால் கெடுத்து விட்டார்கள் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். அவர் நம்முடைய இலாகாவில் நீண்ட காலமாக அதிகாரியாக இருந்தவர். அதே சமயத்தில், ஜுடிஷியல் டிபார்ட்மெண்டில் அவருக்கு ப்ரொமோஷன் கிடைத்துக்கொண்டே வருகிறது. அவருடைய பேரெண்ட்

டிபார்ட்மென்ட் ஜுடிஷியல் டிபார்ட்மென்ட். ஜுடிஷியல் டிபார்ட்மென்டிலேயிருந்து நம்முடைய சர்க்கார் இலாகாவுக்கு அவர் இரவலாகத் தரப்பட்டிருந்தார். அங்கேதான் அவருக்கு இருக்கவேண்டிய் இடம். 1959-ம் வருஷத்திலே அவரை உயர் நீதி மன்றத்தின் நீதிபதியாக நியமிக்கவேண்டும் என்கின்ற ஆர்வம் அரசாங்கத்திற்கு இருந்திருக்கலாம். இன்றைக்கு இருக்கிற அரசியல் சட்டத்தின் பிரகாரம் யார் உயர் நீதி மன்றத்தின் நீதிபதியாக இருக்கவேண்டுமென்பதுபற்றி முதல் அமைச்சர் அவர்களுக்கு ஆலோசனை கூறுவதற்கு உரிமை உண்டு. உயர் நீதி மன்றத்தின் பிரதம நீதிபதிக்கும் ஆலோசனை கூறுவதற்கு உரிமை உண்டு. அதுதான் முறை. ஸ்ரீ. அழகிரிசுவாமி அவர்களை சென்னை உயர் நீதி மன்றத்தின் நீதிபதியாக நியமிக்க என்னென்ன யோக்கியதாம்சங்கள் உண்டோ அந்த யோக்கியதாம்சங்கள் அவர்களுக்கு இல்லை. யோக்கியதாம்சம் என்றால், தகுதி, திறமையைப்பற்றி அல்ல. முதலாவது ஜுடிஷியல் டிபார்ட்மெண்டில் விசாரணை நடத்தும் நீதிபதியாக ஐந்து வருஷங்கள் இருந்திருக்கவேண்டும் அல்லது வக்கிலாக, தொழிலாற்றக்கூடிய வக்கீலாக அவர் பணி புரிந்திருக்கவேண்டும். இது இரண்டும் இல்லாமல் அவர் நிர்வாக இலாகாவிலே அதிகாரியாகவே இருந்து விட்டார் என்பதுதான் அவருக்கு இருக்கக்கூடிய பிரதிகூலமான ஒரு அம்சம். அதை எப்படி நாம் சமாளிப்பது என்பதிலே நம்முடைய அமைச்சர் அவை சுற்றி வளைத்து அவருக்கு உதவி செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த நியமனத்தைச் செய்திருக்கிறார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டு அரசாங்கத்தின் பேரில் இருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். நான் ஆமோதித்தோ அல்லது எதிர்த்தோ பேசுவதாக அர்த்தமில்லை. இந்த நியமனம் செல்லத்தக்கதல்ல, சரியான அதிகாரத்தோடு அவர் இந்தப் பதவியை வகிக்கவில்லை என்று போடப்பட்டுள்ள மனுவிலே மனுதார் குறிப்பிட்டிருக்கக்கூடிய விஷயங்கள் . . . .

**Mr. SPEAKER :** 41-வது விதியின்படி ஒரு பெரிய 'ஸ்பீச்' பண்ண முடியாது. பாராளுமன்றத்தில் 'ஸ்பீச்சே' பண்ணுவதில்லை. இந்தச் சபையிலே 'ஸ்பீச்' பண்ணலாம் என்ற வழக்கம் இருக்கிறது. 41-வது விதியின்படி சுருக்கமாகப் பேசவேண்டும். நீண்ட பிரசங்கம் செய்யக்கூடாது.

**Sri M. KALYANASUNDARAM :** 1959-ம் வருஷத்திலே எடுத்த முயற்சி வெற்றி பெறவில்லை என்ற காரணத்தினால், இப்பொழுது 1960-ம் வருஷத்திலே அவரை எப்படி உயர் நீதி மன்றத்திற்குக் கொண்டு வருவது என்று பார்த்தார்கள். அதற்கு முதல்படியாக சர்க்கார் வக்கீல் ஸ்தானம் காலியாக இருந்தது. இதற்கு முன்னாலே நடந்த ஒரு நிகழ்ச்சியையும் கவனிக்க வேண்டும். 1959-ம் வருஷத்திலே அவர் சர்க்கார் இலாகாவிலிருந்து ஸிடி ஸிவில் கோர்ட்டு நீதிபதியாக மாற்றப்பட்டார். அப்படி மாற்றப் பட்டு ஐந்து வருஷ தகுதி அடைவதற்குள்ளேயே அவர் ரிடையர்



ஆகவேண்டிவரும். ஆகையால் உயர் நீதி மன்றத்திற்குப் போவதற்கு வழி இல்லாமல் போய்விடும். ஆகவே, இதற்கு வழி என்ன என்று கண்டுபிடித்தார்கள் என்று நான் ஊகிக்கவேண்டியிருக்கிறது. ரிடையர் ஆவதற்கு முன்பே ரிடையர் ஆனபிறகு கூட பாதிக்காமல் எப்படி அவரை உயர் நீதி மன்றத்திற்கு நீதிபதியாக அனுப்புவது என்பதில் அமைச்சர் அவை விசேஷ அக்கறை செலுத்தியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஸிடி ஸிவில் கோர்ட்டு ஜட்ஜ், ஜில்லா நீதிபதி அந்தஸ்து உடையது. ரிடையர் ஆவதற்கு முன்னதாகவே அந்தப் பதவியிலிருந்து விலகுவதற்கு அவருக்கு வசதி செய்து கொடுத்து, அவருக்காக ரிடையர் ஆனாலும்கூட அவர் ஒரு பொதுக் காரியத்திற்காக, அரசாங்கத்தை முட்டுக் கொடுத்து நிறுத்துவதற்காக பொதுக் காரியத்திற்காக அரசாங்கமே சரிந்துவிடும்போல், இவர் சர்க்கார் வக்கீலாக வராவிட்டால், வேறு யாராவது சர்க்கார் வக்கீலாக வந்தால், சர்க்கார் சார்பிலே இருக்கக்கூடிய அத்தனை வழக்குகளும் சரிந்துவிடும், ஏதோ ஆபத்து ஏற்பட்டுவிடும் என்று அரசாங்கம் பயந்ததோ என்னவோ, வேறு 'ப்ராக்டிஸிங் லாயர்ஸ்' தொழில் செய்யக்கூடிய வக்கீல் இந்தப் பதவியை வகிக்க அருகதை இல்லை என்று நினைத்து, இவரை, தன் பதவியிலிருந்து விலக வைத்து, அவர் தனது பதவியை தியாகம் செய்துவிட்டு பொதுக் கடமையை நிறைவேற்றுவதற்காக வந்திருப்பதற்காகவேண்டி அவருக்கு முழுப் பென்ஷனும் கொடுக்கவேண்டும் என்று சர்க்கார் உத்தரவை மாற்றி இவரை சர்க்கார் வக்கீலாக நியமனம் செய்திருக்கிறார்கள். இது சரியான வழியல்ல, குறுக்கு வழியில் இந்த நியமனத்தை செய்திருக்கிறார்கள் என்று தமிழகத்திலுள்ள வக்கீல்களிடையே சர்க்காருடைய நடத்தையில் அவநம்பிக்கையும், பயமும் ஏற்பட்டிருக்கிறது. இம்மாதிரி தங்களுக்கு வேண்டிய ஒருவரை, தாங்கள் நம்பிக்கை வைத்திருக்கும் ஒருவரை எப்படியும் கொண்டுவரவேண்டும் என்பதற்காக இப்படி தவறான உத்தரவு பிறப்பித்து அல்லது உத்தரவுகளை இஷ்டப்படி மாற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக நமது சர்க்கார் செயலைப்பற்றி, சர்க்கார் நடவடிக்கையைப்பற்றி தமிழ் நாட்டிலுள்ள பெரும்பாலான வக்கீல்களிடையே சந்தேகமும், கொந்தளிப்பும் ஏற்பட்டிருக்கிறது. இதனால் நம்முடைய எதிர் காலத்து நீதிபரிபாலனத்திற்கு அபாயம் ஏற்படும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஒரு வக்கீலுக்கு சேவை புரியப் போய், அநேகமாக பெரும்பாலான வக்கீல்களின் எதிர்ப்பை சம்பாதித்துக் கொண்டுவிட்டார்கள் என்பது என்னுடைய அபிப்பிராயம். இதனால் பொது நலன் ஏற்பட்டுவிட்டதாக நான் நினைக்கவில்லை. ஏன் இப்படி இவர்களை நியமிக்கவேண்டும், இதற்கு வேறு வழியே இல்லையா, என்பதற்குள்ள சமாதானத்தை இந்தச் சபைக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறார்கள் சர்க்கார். குறுக்கு வழியிலே போய் எப்படியாவது திரு. அழகிரிசுவாமி அவர்களை சர்க்கார் வக்கீலாகக் கொண்டு வந்துவிடவேண்டும் என்று கருதி, அதற்கு வேண்டிய

[Sri M. Kalyanasundaram] [7th September 1960

வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டிய அவசியம் என்ன? இதிலிருந்து ஒரு யூகம் பிறப்பதற்கு இடம் அளிக்கிறது. சமீப காலத்தில் இதற்கு முன்பு திரு. வீராசாமி அவர்கள் உயர் நீதி மன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார்கள். திரு. அழகிரிசுவாமி அவர்கள் ஒரு வருஷம் சர்க்கார் வக்கீலாக இருந்த உடனேயே அடுத்த பரிசிலனையில் இவருடைய பெயரும் உயர் நீதி மன்ற நீதிபதியாக நியமிக்கப்படுவதற்கு அனுப்பப்பட்டு, இவரை உயர் நீதி மன்ற நீதிபதியாகக் கொண்டுவருவதற்கு செய்யப்பட்ட முயற்சி இது. சர்க்கார் வக்கீல் பதவிக்கு வேறு நபர் கிடைக்கவில்லை என்ற காரணம் அல்ல என்கின்ற குற்றச்சாட்டை சாட்டுவதற்கு அரசாங்கத்தினுடைய நடவடிக்கை இடம் அளிக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். இப்படி தவறான, அவநம்பிக்கை உண்டாகக்கூடிய முறைகளை கையாண்டு அவர்கள் செய்த நன்மை என்ன என்றால், திரு. அழகிரிசுவாமி அவர்கள் சகஜமாக கோர்ட்டில் ஆஜராக முடியாமல் செய்துவிட்டார்கள், அவருக்கு நன்மை செய்யவில்லை. நீதிபரிபாலனத்திற்கும் நன்மை செய்யவில்லை. இது மாதிரி ஒரு நடவடிக்கைக்குக் காரணம் என்ன? இந்த நடவடிக்கைத்தான் சிறிது நேரத்திற்கு முன்பு உயர் நீதி மன்றத்திற்கும், இந்தச் சபைக்கும் இருக்கக்கூடிய உரிமையைப்பற்றி ஏற்பட்ட நிகழ்ச்சிக்குக் காரணமாயிருந்தது. அப்பேர்ப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. இதில் குற்றவாளி யாராவது இருந்தால், நம்முடைய அமைச்சர் அவை தான் குற்றவாளி என்பது என்னுடைய அபிப்பிராயம். இந்தச் சபைக்கு இதற்குத் தகுந்த சமாதானம் கொடுக்க சர்க்கார் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கொடுக்கக்கூடிய விவரங்கள் என்னவென்பதைத் தெரிந்து கொள்ளாமல் நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. குற்றச் சாட்டைச் சொன்னால்தானே சமாதானம் தெரியும். சமாதானம் என்ன என்பதைத் தெரிந்துகொண்ட பிறகு அதன் பேரில் அபிப்பிராயம் சொல்லுவதற்கு பின்னாலே சந்தர்ப்பம் இருக்க வேண்டும். எனக்குக் கிடைத்த விவரங்களைக்கொண்டு—நீதிமன்றத்தின் தீர்ப்பில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் மட்டுமல்ல—நான் சொல்லுகிறேன். (குறுக்கீடு.) நீதிபதியின் குறிப்பினால் மட்டுமல்ல நான் இந்த விஷயத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது. நீதிபதியினுடைய குறிப்பும் எனக்குத் தெரியும். ஐந்து தொழிலாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்றால் வேறுவிதமாக இருக்கும். நீதிபதி அவர்கள் சொல்லியிருக்கக் கூடிய கருத்தும் என்னுடைய கருத்தும் சில உடன்பாடாக இருக்கலாம். இந்தச் சபைக்கு அமைச்சர் அவை பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்த அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அந்த அறிக்கையின்மீது ஒரு விவாதத்திற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



7th September 1960]

MR. SPEAKER: Perhaps it would be of interest to know what is in May's Parliamentary Practice under the rulings of House of Lords with regard to the point raised by the hon. Member Sri P. S. Chinnadurai.

Matters awaiting the adjudication of a Court of Law should not be brought forward in debate (except by means of a bill). This rule was observed by Sir Robert Peel and Lord John Russel, both by the wording of the speech from the throne and by their procedure in the House, regarding Mr. O'Connel's case and has been maintained by rulings from the Chair.

The Speaker of the House of Commons has also ruled out of order the discussion of allegations of bribery and corruption at an election before the expiration of the period during which an election petition could be lodged. A matter decided by a Court but open to appeal is not *sub judice* unless notice of appeal has been given. Here we are not aware of the fact that an appeal has been filed. This is an additional point in favour of my ruling.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: With regard to the notice under Rule 41, I am to read the following statement of the Hon. Chief Minister.

Arising out of the appointment of Sri A. Alagiriswami as Government Pleader last June I wish to place the relevant facts of the case for the consideration of the House. In doing so I am departing from the convention that confidential correspondence on matters of this nature, is not usually made public. In as mcuh as the issues have now become controversial it may not any longer be in public interest to claim the usual privilege.

Sri Alagiriswami had been a member of the Madras Judicial Service recruited from the Bar as District Munsiff in December 1941. In 1947 he joined the Madras Secretariat as Private Secretary to the Chief Minister, Sri Omandur Ramaswami Reddiar. In 1948 Sri Alagiriswami was posted to the Law Department of the Madras Secretariat, where he rose by stages to the post of Law Secretary. For over 10 years he was directly responsible for drafting many complicated pieces of legislation which had come up for the consideration of this House. His work and conduct in the Law Department was so good that the Government considered that he would be a suitable choice for the High Court Bench. Accordingly when a vacancy arose in the High Court early in 1959, the Government suggested to the Chief Justice that he might consider the claims of Sri Alagiriswami for the post. The Chief Justice examined the records of Sri Alagiriswami and recommended him for the post of an Additional Judge of the Madras High Court. The Governor concurred with this proposal and the Government recommended his name to the President for appointment as Additional Judge of the Madras High Court. The President, however, did not see his way to accept this recommendation on the ground that Sri Alagiriswami

had not acquired enough practical experience as Judges. Soon after, in May 1959, Sri Alagiriswami reverted to the Judicial Department and was posted as Judge of the Madras City Civil Court. In the normal course the Government might have proposed him again to the High Court if he had acquitted himself well as a Judge and after he had acquired the necessary practical experience of trial work.

His work as Law Secretary had brought him in intimate contact with the Advocate-General who had also formed a high opinion of Sri Alagiriswami's legal attainments. Therefore, when the question of filling up the post of Government Pleader arose early in 1960 and some names from the Bar were under consideration, the Advocate-General advised the Government that from the point of the expeditious despatch of Government work, the best choice would be Sri Alagiriswami. This suggestion did look somewhat unorthodox in view of the prevailing practice that Government Pleader was selected from leading Members of the Bar. There was also the further complication that to be appointed as Government Pleader, Sri Alagiriswami had to resign his post in the Judicial Service and revert to the Bar. Even after considering these aspects in consultation with Sri Alagiriswami, the Advocate-General pressed his earlier advice. The House should note that the work of the Government Pleader is closely connected with that of the Advocate-General and that the Government Pleader is expected to assist the Advocate-General wherever he is called upon to do so. Naturally, it would not be right to appoint as Government Pleader, a person in whom the Advocate-General did not have the necessary measure of confidence. It should also be remembered that in this case the choice of the Advocate-General had fallen on a person whom the Government had already considered suitable for the High Court Bench and therefore they had no occasion to doubt the merits of the choice. It was under these circumstances that the Government appointed Sri Alagiriswami as the Government Pleader in June 1960. I may categorically state that the suggestion that this appointment was made with the intention of improving the prospects of Sri Alagiriswami to the High Court Bench, is totally incorrect.

This decision was one taken by the Government as a whole and not that of any individual Minister. The Ministers concerned with the matter was myself, Sri Bhaktavatsalam, the Home Minister and Sri C. Subramaniam, the Minister in charge of Legal Affairs. Even though some of the discussions with the Advocate-General were conducted by Sri C. Subramaniam, both myself and Sri Bhaktavatsalam were being kept informed of the matter from the beginning. The final decision was taken by me under circumstances explained already, in consultation with the other two colleagues of mine, according to the normal procedure obtaining in the Secretariat. Therefore the ultimate responsibility for





that decision is largely mine, and my other two colleagues can be held answerable only to the extent I had shared that responsibility with them.

It is true that the Government granted Sri Alagiriswami the pension which he had earned on the service rendered by him up to the date of resignation from the Judicial Department. The Pension Rules applicable to him as they stood on that date, did not provide for the sanction of a pension to an officer who resigned prematurely before attaining the age of superannuation. But the Pension Rules of the All-India Services did permit a pension to a member of those services who had to resign as a condition of his appointment under a Statutory or other body. The spirit of this rule applied to the present case because Sri Alagiriswami had to resign his post not because he wanted to rest or seek private employment, but just because he was being appointed as Government Pleader. The Pension Rules of the Madras Judicial Service had not provided for such a contingency because such cases had not arisen before. It was only fair and equitable that under the circumstances, Sri Alagiriswami had to resign from the Judicial Service, he should be given the pension which he had earned on his earlier service. This act of the Government is consequential to the earlier decision to appoint him as Government Pleader and I leave it to the judgment of the House how any adverse inference could be drawn therefrom.

It may indeed be argued in the afterlight of event that the Government should have anticipated that the appointment was likely to provoke resentment amongst the Members of the Madras Bar and that it was also liable to be misconstrued by certain sections of the Public as an act of individual preferment and therefore the Government should not have accepted the advice of the Advocate-General. I would like to submit that, even placing the best construction on the line of argument, it would only mean that perhaps two views were possible on the question. It would certainly not mean that the decision taken by the Government lacked good faith. In the matter of the appointment of a particular individual to the post of Government Pleader no major question of State policy is involved. In the day-to-day business of the Government, decisions of this nature have to be taken frequently. The main points to be ensured were that the person selected had the necessary qualifications and that he would fit smoothly into the organization conducting the legal affairs of the Government. Leading Advocates were indeed being appointed to the post in the past, but that did not mean that the Members of the Bar had acquired a prescriptive right to the post and that a person from outside should not be appointed at all, however suitable he might be. I have now explained all the relevant circumstances and I would only plead that the action of the Government should be judged by the House and by Members of the public outside, with understanding and fairplay and in particular without passion and prejudice.

[7th September 1960

* MR. SPEAKER : This statement read out by the Hon. the Home Minister is the statement of the Hon. Chief Minister.

VIII. GOVERNMENT MOTION.

(1) CHANGE OF NON-OFFICIAL DAY INTO OFFICIAL DAY.

THE HON. SRI C. SUBRAMANIAM : I move the following motion :—

" That Rule 23 of the Madras Assembly Rules be suspended and the House do proceed to transact Official Business on Thursday, the 8th September 1960."

The motion was put and carried.

(2) ASSOCIATION OF COUNCIL MEMBERS WITH THE COMMITTEE ON ESTIMATES OF THE ASSEMBLY.

THE HON. SRI C. SUBRAMANIAM : I move—

" That this House recommends to the Legislative Council that they do nominate five Members of the Council to associate with the Committee on Estimates of this House for the year 1960-61 and communicate to this House the names of the Members so nominated."

The motion was put and carried.

(3) DRAFT OUTLINE OF THE THIRD FIVE-YEAR PLAN—*cont.*

MR. SPEAKER : We shall now continue the discussion on the Third Five-Year Plan.

Regarding the amendments to the main motion hon. Members who have already given notice of amendments may move them now. Amendments given notice of subsequently will be considered tomorrow.

SRI S. M. ANNAMALAI : Sir, I move the following amendments :—

Add the following at the end—

" and on such consideration this House recommends

(i) that Krishna and Godavari system to bring water to this State be added in the Third Five-Year Plan;

(ii) that the construction of a reservoir across Kamandalanathi at Shenbagathope, Polur taluk be added in the Third Five-Year plan; and

(iii) the establishment of a sulphur industry at Thaniar Reserve Forest in Polur taluk be added in the Third-Five year Plan."

*Add* the following at the end—

" and on such consideration this House recommends to the Central Government to set up an Atomic Power Station in this State ".

The amendments were duly seconded.



7th September 1960]

SRI K. ANBAZHAGAN : Sir, I move the following amendment :—

*Add* at the end the following :—

" And on such consideration this House is of opinion,

(a) that the amount sought for is inadequate since this State has not received due and adequate share or treatment in the Industrial sphere during the First and Second Five-Year Plan periods and in view of the fact that the potentialities and natural resources have not been adequately tapped and utilized and as there is the urgent and imperative necessity for implementing schemes like Sethusamudram Canal, the Tuticorin Port, the Atomic Power Plant, laying of new railway lines and the Iron and Steel Plant; and

(b) both in Public and Private Sectors that the amounts allotted by the Centre, to implement Central Schemes and starting Industries in the Plan decade have been inadequate and discriminatory to the people of this State and urges the State Government to demand from the Centre for an adequate amount fixing the States share both in the Public and Private Sectors, on the basis of population, the percentage unemployed and underemployed, the lower rate of per-capita income, and the industrial backwardness of the region."

The amendment was duly seconded.

SRI A. GOVINDASAMY : Sir, I move the following amendment :—

*அப்படி ஆலோசனைக்கு எடுத்ததின் பேரில் கீழ்க்கண்டவற்றை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று இச்சபை அபிப்பிராயப்படுகிறது.*

*(1) நெய்வேலி திட்டம் அபிவிருத்தி அடைந்து வருவதால், கடலூர் துறைமுகத்தை விஸ்தரித்தல்.*

*(2) நெய்வேலி திட்டம் அபிவிருத்தி அடைந்துவருவதால், உளுந்தூர்பேட்டை பழைய விமான நிலையத்தை புதுப்பித்தல்.*

*(3) நெய்வேலி நிலக்கரி திட்டத்தை இராஜ்ய சர்க்காரே ஏற்றுக்கொள்வது. இதுவரை மத்திய அரசாங்கம் முதலீடு செய்த தொகையை இராஜ்ய சர்க்கார் கடனாக பெற்றுக் கொள்ளுவது.*

*(4) வளவனூர் பகுதியில் சர்க்கரை ஆலை ஒன்று நிர்மாணிக்க வேண்டியது.*

*(5) விழுப்புரம் வட்டம் பனமலை ஏரித் தண்ணீர் வருவதற்கு நந்தன் கால்வாய்த் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றி வைத்தல்.*

*(6) சென்னை—செங்கற்பட்டு, வட ஆற்காடு—தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களுக்கு விவசாயத்துறையில் பயன்படும்படியாக ஆந்திரா பகுதியில் கடலில் வீணாக கலக்கும் கோதாவரி நதியின் தண்ணீரை தமிழ் நாட்டிற்கு கொண்டுவர முயற்சி செய்தல்.*

The amendment was duly seconded.

[7th September 1960

SRI M. KALYANASUNDARAM : I have already given notice of my amendment. I have got a copy of it now. It has not been roneoed and circulated. I request that I may be kindly permitted to move the amendment .

MR. SPEAKER : All right. You can move your amendment.

SRI M. KALYANASUNDARAM : Sir. I move the following amendment :—

*Add* at the end of the following :—

"and on such consideration this House recommends that the Government should give special emphasis to the following schemes, projects and policies among others :—

(1) Inter-State irrigation schemes for the utilisation of surplus waters of the rivers flowing in adjoining States of Kerala and Andhra for mutual benefit;

(2) Neuclear Power Station for Madras;

(3) Exploration of oil deposits in the Cauvery basin and location of a refinery;

(4) Steel plant utilising Salem iron ore and Neyveli lignite;

(5) Expansion of output of lignite at Neyveli to ten million tons per year;

(6) Manufacture of Heavy Electrical Equipment;

(7) Construction of East Coast Road and the Development of Madras-Neyveli-Salem road into Express way;

(8) Development of Tuticorin into Major Port as part of the Sethusamudram Project;

(9) Deep-Sea fishing;

(10) Development of track capacity of the Suburban Railways, to ensure speedy movement of goods traffic and opening of new lines wherever necessary;

(11) Improvement of drinking water and drainage schemes for Madras, Tiruchirappalli, Salem, Coimbatore, Madurai, [illegible]

(12) Suitable price policy to hold the price line;

(13) Orientation of wage policy and labour policy, calculated to ensure the co-operation of the workers for the succcss of the Plan;

(14) Protection for hand-loom industry to ensure full employment and reasonable wages.

(15) Tapping of Sewage gas for meeting fuel shortage."



7th September 1960]

The amendment was duly seconded.

SRI T. L. SASIVARNA THEVAR : Sir, I move the following amendment :—

*அவ்விதம் ஆலோசனைக்கு எடுத்துக் கொண்டதின் பேரில் அடியிற்கண்டவற்றையும் அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று இச்சபை அபிப்பிராயப்படுகிறது :—*

*(1) நமது மாநிலத்தில் மிக மிக பின்தங்கிய கீழ் இராமனாதபுரம் பகுதி முதுகுளத்தூர் வகையறா தொகுதிக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்க மேல் பெரியார் திட்டத்திற்கு முதலிடம் கொடுத்து சேர்த்துக் கொள்வது.*

*(2) அதே போன்று, தற்சமயம் மூடிப் போயிருக்கும் வைகை நதியின் கிளை நதியான கிருதமால் நதியை வெட்டி, வைகையோடு இணைத்து, ஒழுங்கு செய்து புதுப்பித்தல்.*

*(3) நாராயணக்காவேரி திட்டத்தை உடனடியாக ஆரம்பித்தல்.*

*(4) பெருநாளி, கமுதி—முதுகுளத்தூர் பகுதியில் பொதுவார் துறையில் நூற்பு ஆலைகள் ஆரம்பித்தல்.*

The amendment was duly seconded.

SRI K. SATTANATHA KARAYALAR : I may also be permitted to move my amendment, Sir. 10-30 a.m.

MR. SPEAKER : I have not received the hon. Member's amendment. Unless I receive the amendment in time and the same is circulated to the Members, how am I to know that the hon. Member has given an amendment? I cannot allow an imaginary amendment. Either I must have received the amendment or the Secretary should have received it.

SRI K. SATTANATHA KARAYALAR : I have given the amendment to the Secretary just now, Sir.

MR. SPEAKER : All right. I shall allow the hon. Member to move the amendment now as a special case.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move the following amendments :—

"*Add* the following at the end—

'and on such consideration while welcoming the various schemes under Power, Irrigation, Industries, Education, etc., this House is of the opinion that the Irrigation schemes are highly inadequate and urges this Government—

(1) to press the Central Government to negotiate with the Kerala Government to utilize the west-flowing rivers such as Upper Periyar River and Keeriyar River for irrigating the lands in Madurai, Ramanathapuram and Tirunelveli districts;

(2) to impress on the Central Government the necessity to have more power for this State by establishing immediately an Atomic plant;

[Sri K. Sattanatha Karayalar] [7th September 1960

(3) to impress the Central Government the inadequacy of New lines in III Plan and the urgent necessity to have a railway link between Tirunelveli and Nagercoil and between Salem and Bangalore;

(4) to impress on the Central Government to give top priority for the development of Tuticorin Harbour and Sethusamudram Scheme;

(5) to impress on the Central Government the necessity to have an Oil Refinery in our State;

(6) and this House urges that immediate steps must be taken to hold the price-line;

(7) that the Plan as such is inadequate to meet the unemployment situation in the Country; and

(8) to launch a crop insurance scheme and to give credit for agriculture on a much larger scale than at present.'

The amendment was duly seconded.

MR. SPEAKER: Yesterday we decided that the House should sit this evening also and that hon. Member Sri Chinnadurai may lead the discussion this morning. This decision was of course taken in his absence. I now understand that hon. Member Sri Chinnadurai wants to speak this evening. So, other hon. Members may speak this morning. Each hon. Member will be given ten minutes. In the evening, hon. Members Sri Chinnadurai and Sri Kalyanasundaram will speak. Hon. Member Sri Anbazhagan represented to me that he wants more time than ten minutes. In that case, I would suggest to him to speak this afternoon. I think, as Deputy Leader of the Dravida Munnetra Kazhagam Party, he could speak for a longer time this afternoon. However, if he wants to speak just now, I have no objection. But, he will get only ten minutes. Hon. Member Sri Daniel may now speak.

SRI A. GOVINDASAMY: Sir, hon. Member Sri Anbazhagan would like to speak just now.

MR. SPEAKER: Well, I have no objection. But he must remember the restriction with regard to the time, viz., 10 minutes! He may speak now.

* SRI K. ANBAZHAGAN: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, பல உரிமைப் பிரச்னைகள் எழும்பிய பிறகு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி சில கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டிய நிலைமைக்கு ஏற்பட்டிருக்கிறது. கனம் அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டம் எவ்வளவோ சிறந்த முறையில் வகுக்கப்பட்டிருக்கிறது என்று விளக்க முனைந்தார். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி நேற்று அமைச்சர் அவர்கள் நிகழ்த்திய உரையானது உண்மையிலேயே பாராளு மன்றத்தில் நிகழ்த்தப்பட வேண்டிய உரையாகவே தோன்றியது. அது இம்மாநிலத்தின் தனித் தன்மையை விளக்குவதாக அமையவில்லை என்பதை மட்டும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஏனெனில், இந்திய முதல் அமைச்சர் பண்டித நேரு அவர்கள் [illegible]



7th September 1960] [Sri K. Anbazhagan]

நிகழ்த்திய உரையை எவ்வளவு அழகாகத் தமிழில் நிகழ்த்த முடியும் என்று காட்டுவதைப்போல் நமது நிதி அமைச்சர் பேசியிருக்கிறார். நிதி அமைச்சர் அவர்கள் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி விளக்கிப் பேசுகிற நோத்தில் முதல் இரண்டு திட்டத்தின் பலன்கள் பலவற்றை எடுத்துக் காட்டினார். ஆனால் முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களின் விளைவுகள் எவையாயினும் அவை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தினை மோதுகிறது என்பதை நாம் எண்ணிப் பார்த்துக் கொள்ளவேண்டும். முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் போடப்பட்ட மூலதனத்தில் நமக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான பங்கு கிடைக்கவில்லை. அந்தத் திட்டங்களைப் பற்றிய அடிப்படை விவரங்களை அறிந்தவர்கள் நிச்சயமாக இதை உணர்ந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். முதல் ஐந்தாண்டுத் திட்டங்களில் அகில இந்திய அரசாங்கத்தினுடைய திட்டத்தின்படி 2,600 கோடி ரூபாய் அதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் ஏறத்தாழ அத்திட்டத்தில் 3,360 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருந்தும் கூட நம்முடைய அரசாங்கத்திற்குக் கிடைத்தது 86 கோடி ரூபாய்தான். செலவழிக்கப்பட்டதோ 80 கோடிதான். நம்முடைய மாநிலத்தின் பங்காக மொத்தமாக கொடுத்திருந்தாலோ, அரசாங்கத்தின் மூலமாக வந்தாலும் சரி, தனியார் தொழில் மூலமாக வந்தாலும் சரி அல்லது மத்திய அரசாங்கத் திட்டத்தின் மூலமாக வந்தாலும் சரி ஆக மூன்று வழிகளின் மூலமாகவும் 280 கோடி ரூபாய் கிடைத்திருக்க வேண்டும். ஆக அரசாங்கத்தின் மூலமாக 80 கோடி ரூபாய், வேறு தனியார் துறை மூலமாகவும் மத்திய அரசின் திட்டம் மூலமாகவும் கிடைத்தது 30, 40 கோடி ரூபாய் ஆக 120 கோடி ரூபாய்தான் கிடைத்திருக்கிறது. அந்தத் தொகை நமக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான மொத்தத் தொகையில் 150, 160 கோடி ரூபாய் அளவுக்கு குறைந்திருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசாங்கம் 4,800 கோடி ரூபாய்க்கு திட்டமிடத் தொடங்கி 6,750 கோடி ரூபாய் அளவிற்கு முதலீட்டை உயர்த்தியிருக்கிறது. அப்படி உயர்ந்த முதலீடு அந்தத் திட்டத்தில் தனியார் துறையில் செலவு செய்யப்பட்டதில் அதிகமாகி இருக்கிறது. அப்படி அதிகமான தொகை ஏறத்தாழ 800 கோடி ரூபாயாகும் என்று நேற்று நமது நிதி அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார். அதேபோது நமது மாநிலத்திற்குக் கிடைக்க வேண்டிய தொகை எவ்வளவு? இப்பொழுது நமக்குக் கிடைத்தது எவ்வளவு என்று எண்ணிப் பார்த்தால் உண்மை விளங்கும். நமது நிதி அமைச்சர் முதலில் 398 கோடி கேட்ட போதிலும், திட்டக் குழுவினர் நமக்கு அனுமதித்தது 152 கோடிதான். அதற்கு மேல் நாமாகவே தேடிக் கொண்டதும், கானடா நாட்டின் நன்கொடையும் சேர்த்து 188 கோடி ரூபாய் அளவு திட்டம் நிறைவேறியுள்ளது. ஆனாலும் நாம் கேட்டுப் பெறவேண்டிய 560 கோடி ரூபாயில் நமக்குக் கிடைத்ததுபோக மிச்சம் கிடைக்க வேண்டிய தொகை ஏறத்தாழ 300 கோடி ரூபாய் ஆகும். அப்படிக் கிடைக்க வேண்டிய தொகையும், அதாவது 300 கோடி ரூபாயும், முதல் திட்டத்தில்

[Sri K. Anbazhagan] [7th September 1960]

நமக்குக் கிடைக்க வேண்டிய தொகையான 150 கோடி ரூபாயும்
இந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நமக்குக் கிடைக்க
வில்லை, தமிழ் மக்களுக்குச் சேரவில்லை.

(Sri S. Ranganatha Mudaliar in the Chair.)

அதைப்போலவே மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தை
எடுத்துக்கொண்டால் இப்பொழுது அவர்கள் வகுத்திருக்கும்
திட்டம் ஏறத்தாழ 10,200 கோடி அளவினதாகும். இந்த 10,200
கோடி ரூபாயும், மத்திய துறையில் 2,150 கோடி ரூபாயும்,
தனியார் துறையில் செலவழிக்க வேண்டியதாக 4,500 கோடி
ரூபாயும், மாநில அரசாங்கங்களுக்கு என 3,850 கோடி ரூபாயும்
ஆக பிரிக்கப்பட்டுள்ளது. சென்னை அரசாங்கத்திற்கும், பிற
மாநில அரசாங்கங்களுக்கும் அளிக்கப்பட்டிருப்பது 3,250 கோடி
ரூபாய் அளவுதான். இதில் நம்முடைய அரசாங்கம் கேட்டிருக்கக்
கூடிய தொகை நியாயமான தொகை, கட்டாயமாக பெறவேண்டிய
தொகை, எந்தக் காரணத்தைக்கொண்டும் வெட்ட அனுமதிக்க
முடியாத அளவு குறைந்தபட்ச தொகையாகும். நம்முடைய
அரசாங்கத்திற்கும் மாநில மக்களுக்கும் கிடைக்க வேண்டிய
தொகையைப் பெற நமது உரிமையை நிலை நாட்டவேண்டும்.
நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் மாநில திட்ட அமைச்ச
ராகவும் இருக்கிறார். அவர் இந்தத் திட்டத்தை வழங்கும்போது
இன்று குறைந்தது 398 கோடி ரூபாய் அளவு கேட்பதற்கு முன்
வந்துள்ள போதிலும் இந்தத் திட்டத்தைப்பற்றிய ஆலோசனை
தொடங்குகிற காலத்தில், ஏறத்தாழ ஒரு ஆண்டுக்கு முன்னர்
சென்ற டிசம்பர் மாதம் அவர் தவருன அடிப்படையில் 250 கோடி
அளவில்தான் திட்டமிட முடியும் என்று தெரிவித்தார்.
அப்பொழுது எதிர்க் கட்சி தலைவர்கள் பலரும் தங்களுடைய
கண்டனத்தைத் தெரிவித்தார்கள். மூன்ருவது திட்டத்தில்
முதலிலேயே 250 கோடி ரூபாய் கேட்க ஆரம்பிக்கிறீர்களே, இது
தவறு அல்லவா? இரண்டாவது திட்ட காலத்தில் சுமார்
400 கோடி ரூபாய் கேட்டபோதிலும் 152 கோடி அளவுக்கு
மட்டுமே மத்திய அரசு அனுமதித்து, அது இன்று 188 கோடி
அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறதே, அப்படி இருக்கும்போது
250 கோடி ரூபாய் அளவே கேட்கிறீர்களே? இது முறைதான?
என்று பலரும் கண்டித்தார்கள். மத்திய அரசாங்கத்தில்
இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைவிட மூன்ருவது
ஐந்தாண்டுத் திட்டம் $1\frac{1}{2}$ மடங்கு பெரியதாகத் திட்டமிடப்படும்
போது அந்த அளவில் நாமும் முன்னர் 400 கோடி கேட்டவர்கள்
இப்பொழுது 600 கோடி ரூபாய் கேட்கவேண்டாமா? அப்படி
இல்லாமல் 250 கோடி ரூபாய் கேட்கத் தொடங்குகிறீர்களே என்று
வருத்தத்தைத் தெரிவித்தோம். ஆனல் கனம் அமைச்சர்
அவர்கள் அதை மதிக்கவில்லை. இந்தச் சூழ்நிலையில் வெளி
மாகாண அமைச்சர்கள் தமது உரிமையினைக்காட்டி அதிகப்படியாக
கேட்டார்கள். மைசூர் அரசாங்கம் நம்மைவிட அதிகமாகக்
கேட்டார்கள். கேரள அரசாங்கமும் அதிகமாக கேட்க முன்
வந்தார்கள். இதைக் கவனித்த பின்னரே நமது அமைச்சர்



7th September 1960] [Sri K. Anbazhagan]

398 கோடி ரூபாய் கேட்க முன் வந்துள்ளார். இதற்குக்கூட
உண்மையிலேயே அவர்களை நான் பாராட்டுகிறேன். 250 கோடி
ரூபாய் கேட்பது தவறு என்று உணர்ந்து எங்களுடைய வாதத்தை
எழுப்பிய நேரத்தில் அமைச்சர்கள் 'கேலி' செய்தனர். ஆனல்
இன்று ஓரளவு ஏற்றுக் கொண்டுள்ளனர். மேலும் சென்னை
மாநிலம், பின்தங்கிய நிலையில் இருந்து தொழில் துறையில்
முன்னேற்றம் அடையும் வழிவகைப்பற்றி கூறுவதற்கு என்று
நியமிக்கப்பட்ட நிபுணர் லோகநாதனுடைய குழுவின் ஆலோசனை
முற்றும் எங்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை. அந்த ஆலோசனை
விவரம் கிடைத்திருந்தால் அதைக் கண்டறிந்து இச்சமயத்தில்
சொல்வதற்கு வாய்ப்பு இருந்திருக்கும். இன்று பொதுவாகக்
கூறப்படுவது தவிர வேறு பல திட்டங்களைப்பற்றி எடுத்துச்
சொல்வதற்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

THE HON. SRI R. VENKATARAMAN: அவருடைய எல்லா
குறிப்புகளையும் அச்சுப் போட்டு புஸ்தகமாகக் கொடுத்திருக்
கிறோம். அதில் விவரங்கள் இருக்கின்றன. அதில் இருக்கக்
கூடிய நல்ல திட்டங்கள் எல்லாவற்றையும் சபைக்கு சீக்கிரமாக
கிடைக்கச் செய்யவேண்டும் என்பதற்காக அது அச்சுப் போடப்
பட்டிருக்கிறது.

SRI K. ANBAZHAGAN: நிபுணர் லோகநாதன் தெரிவித்துள்ள
ஆலோசனைகளை இந்த அரசாங்கம் வேறு வகையில் தெரிவித்
திருக்கிறார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்.
அதனல் லோகநாதன் குழுவின் ஆலோசனைக்கு நாம் இப்பொழுது
நன்றி செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். திராவிட
முன்னேற்றக் கழகக் கட்சித் தலைவர் அண்ணு அவர்கள் மூன்ருவது
திட்டத்தில் ஆயிரம் கோடி ரூபாய் அளவில் திட்டத்தைத்
தயாரித்து அதை நிறைவேற்ற முன்வர வேண்டுமென்று அறிவித்த
நேரத்தில் இது மிகவும் அதிகம் பேராசை என்று அமைச்சர்
அவர்கள் வாதாடிச் சொன்னர். உண்மையாக அது என்ன
ஆயிற்று? அறிஞர் அண்ணு அவர்கள் குறிப்பிட்ட அந்த ஆயிரம்
கோடி ரூபாய் அளவிற்குத்தான் இன்றைய தினம் மூன்ருவது
திட்ட காலத்தில் இயற்கையிலேயே சென்னை மாகாணத்தில் பல்
வேறு துறைகளில் செலவு செய்ய வேண்டியதாக இருக்கிறது
என்பதைத் திட்ட வட்டமாக எடுத்துக்காட்டியிருக்கிறது
நிபுணர் லோகநாதன் அறிக்கை. அதுமட்டுமல்லாமல் அந்த
ஆலோசனையில், ஏறத்தாழ இரண்டாயிரம் கோடி ரூபாய்
அளவிற்குத் திட்டம் தந்துள்ளார். அப்படித் தந்திருக்கிற
திட்டம் பத்து ஆண்டுகளுக்கு என்றும் குறிப்பு காணப்படுகிறது.
ஆனல் கனம் நிதி அமைச்சர் அவர்கள் முன்பு ஒரு நாள் அதை
மறுத்து பத்து ஆண்டு காலத்திற்கு அல்ல. பதினைந்து ஆண்டு
காலத்திற்கு அத்திட்டம் என்றார்கள். ஆனல் குறிப்போ—வேறு
விதமாக உள்ளது. மேலும் எந்த வகையில் வைத்து நோக்கினலும்
இன்றையதினம் மத்திய அரசியலார் நமது சென்னை மாநிலத்
திற்குக் கொடுக்க வேண்டியது மூன்ருவது திட்டத்தில் ஏறத்தாழ
850 கோடி ரூபாய். மொத்தம் பத்தாயிரம் கோடிக்குத் திட்டமிடு
கிறபோது இது இந்தியாவில் உள்ள நாற்பது கோடி மக்களுக்கு

மாகச் செய்யப்படுவதாகும். தமிழ் நாட்டில் மட்டும் 3½ கோடி மக்கள் இருக்கிறார்கள். நாற்பது கோடி மக்களுக்குப் பத்தாயிரம் கோடி என்றால் 3½ கோடி மக்களுக்கு திட்டத்தட்டப் பதினொன்றில் ஒரு பங்கு அல்லது பன்னிரண்டில் ஒரு பங்கு ஒதுக்கப்படுவதுதான் நியாயமானதாகும். இன்றைக்கு 850 கோடி ரூபாய் நம் மாநிலத்திற்கு ஒதுக்கப்படவேண்டும் என்றால் இது அரசாங்கத்துறையில் ஒதுக்கப்பட்டு செலவழிக்கப்படுமா, அல்லது தனியார் துறையில் முதலீடு செய்வதற்கு என்று ஒதுக்கப் படுமா என்பதுபற்றியும் நாமே தீர்மானிக்க வேண்டும். குறிப்பாக சென்னை அரசாங்கமே மேற்கொள்வதாக இருந்தாலும் சரி அல்லது மத்திய அரசாங்கத்தின் பொறுப்பிலேயே செலவழிக்கப்படுவதாக இருந்தாலும் சரி, 850 கோடி ரூபாய் அளவிற்கு இந்த மாநிலத்தில் முதலீடு செய்ய நிச்சயமாக தொகை ஒதுக்கப்பட்டாகவேண்டும்.

இன்னும் ஏற்கெனவே இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் நாம் ஏமாந்து போய் கைவிட்ட தொகையையும் சேர்த்தால் திட்டதட்ட அவர்கள் 1,200, 1,300 கோடி ரூபாய் அளவுக்கு நம் ராஜ்யத்திற்கு ஒதுக்கித் தந்தாகவேண்டும். ஏற்கெனவே ஏமாந்தவர்கள் நாம். முன்னரே வஞ்சிக்கப்பட்டு இருக்கிறோம். ஆகவே இன்றைய தினம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக நமக்கு இவ்வளவு தொகை ஒதுக்கப்பட வேண்டும், இன்ன இன்ன தொழில்களை ஆரம்பிக்க இங்கே வசதி செய்து தரப்படவேண்டும் என்று அமைச்சர் அவை மத்திய திட்டக் குழுவிடம் வற்புறுத்துகிறபோது நமது உரிமைகளை மக்கள் தொகை அடிப் படையில் வற்புறுத்த வேண்டும். அடுத்து, மாநில மக்களின் சராசரி வருமான அடிப்படையில் நமது வட்டாரம் இருக்கக் கூடிய பிற்பட்ட நிலையை மாற்றி அமைப்பதை அடிப்படையாகக் கொண்டு வற்புறுத்த வேண்டும். அதிலும் தொழில் துறையில் நாம் பின்தங்கியிருக்கிற அளவுக்கு இங்கே தொழில்கள் வளர வேண்டும் என்பதை வற்புறுத்த வேண்டும். மேலும் சொல்வதானால் நம்முடைய மாநிலத்தில் பெரிய அணைக்கட்டுகளைக் கட்டுவதற்கு இனி வாய்ப்பு இல்லை. விவசாயத்தில் மாநில இயற்கை வசதிக்கேற்ப எவ்வளவு திட்டமிட முடியுமோ அவ்வளவும் நிறைவேற்றியிருக்கிறோம். இனி தொழில் துறையில் ஈடுபட்டு முன்னேறினால்தான் மாநிலத்தின் பிற்போக்குத் தன்மையை ஒழிக்க முடியுமே தவிர வேறு வழிவகை ஏதும் இல்லை என்பதை வற்புறுத்தியாகவேண்டும். ஆனால் இன்றையதினம் தொழில் துறைக்காக ஒதுக்கியிருக்கிற மூலதனம் மிகவும் குறைவு என்று நான் கருதுகிறேன். இதை அதிகப்படுத்தவே நமக்குச் சேர வேண்டிய நியாயமான பங்கைப் பெற்றாகவேண்டும். இன்னும் சொல்லப்போனால் சென்ற இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் நாம் ஏமாந்து விட்டு விட்டத் தொகையை சேர்த்துப் பெறுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும்.

அடுத்து ரயில்வே போக்குவரவுத் துறையை எடுத்துக் கொண்டால் எல்லா வகையிலும் நாம் இன்னும் பிற்போக்கான நிலையிலே இருந்துகொண்டிருக்கிறோம். முதல் ஐந்தாண்டுத்





திட்டத்தில் 424 கோடி ரூபாய் செலவழித்தார்கள். அதில் நமக்கு கிடைத்த பங்கு மிகவும் குறைவானது. ஏமாற்றமளிப்பது. அதேபோல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொளாயிரம் கோடி செலவழித்திருக்கிறார்கள். அதிலும் நமது சென்னை மாகாணத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை மிகமிகக் குறைவு. தென்னாட்டில் போடப்படவேண்டும் என்று வற்புறுத்தப்பட்ட முக்கியமான இருப்புப் பாதைகள் எல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட வில்லை. ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதோடுகூட அதைப் பரிசீலனை செய்ய வழிவகை செய்வதற்குக்கூட முன்வரவில்லை நாம் சிபாரிசு செய்திருக்கிற சேலம்-பங்களூர் ரயில் பாதை கன்னியாகுமாரி-திருநெல்வேலி ரயில் பாதை, காஞ்சி-வேலூர் ரயில் பாதை, சேலம்-கரூர் ரயில் பாதை, மானாமதுரை-தூத்துக்குடி ரயில் பாதை ஆகிய ரயில் பாதைகளில் ஒரு பாதைக் கூட ஏற்றுக்கொள்ளப்படவில்லை. தாம்பரத்திலிருந்து விழுப்புரம் வரையில் மின்சார ரயில் பாதையை ஏற்றுக்கொண்டதாகச் சொல்கிறார்கள். செயல் அளவில் அதுவும் அமுலாக்கப்படவில்லை. ஆகவே, இப்படி எல்லா வகையிலும் நாம் புறக்கணிக்கப்பட்டு வருவதை உணரவேண்டும். இதைவிட முக்கியமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். நேற்றையதினம் அமைச்சர் அவர்கள் பேசும்போது தென்னாட்டு மக்கள் புறக்கணிக்கப்பட்டு வருகிற சூழ்நிலையை நன்றாக உணர்ந்திருக்கிற காரணத்தினால்தான் என்று நம்புகிறேன். பிரதேச வித்தியாசங்களை ஒழிக்கும் முறையில் நமது திட்டங்களை அமைக்கவேண்டும் என்று சொல்லியிருக் கிறார்கள். முக்கியமாக "தேசிய அபிவிருத்தி ஆலோசனைக் குழு கூடும்பொழுது, ஒவ்வொரு கூட்டத்திலும் எப்படியாவது இதைச் சொல்லவேண்டுமென்ற காரணத்தினால், நியூஸன்ஸ், திரும்பத் திரும்ப சொல்கிறாரே" என்று மற்றவர்கள் நினைத்தாலும்கூட, ஒவ்வொரு சமயத்திலும், "ரீஜினல் டிஸ்பாரிடியை" நீக்குவதற்கு நாம் வழிவகுத்தாகவேண்டும்—அதற்கான—புள்ளி விவரங்களைச் சேகரித்தாகவேண்டும் என்று வலியுறுத்திக்கொண்டு வருகிறேன்" என்று கூறியிருப்பதுடன், "தென் பிராந்தியத்திற்கு எவ்வளவு என்று சொல்லிவிடுங்கள், நாங்கள் அதை எங்களுக்குள் பிரித்துக் கொள்கிறோம், அதற்குப் ப்ளானிங் கமிஷனின் உதவியை நாட வில்லை. எங்களுக்குள் எப்படி பிரித்துக் கொள்வது என்பதை முடிவு செய்து ஒத்துக்கொண்டு நாங்களே பிரித்து எடுத்துக் கொள்கிறோம்" என்றும் நிதி அமைச்சர் சொல்லியிருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படைத் தத்துவத்தை நிதி மந்திரி அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தென்னாட்டுக்குக் கொடுக்க வேண்டிய பங்கைக் கொடுத்துவிட்டால் அதை தென்னாட்டில் உள்ள ராஜ்யங்கள் ஒருமித்து நின்று முறையாகப் பங்குப் போட்டுக்கொள்ளலாம் என்பது தி.மு.க-வின் உரிமைக் குரலாகும். அது மட்டும் அல்லாமல் தென்னாட்டு மந்திரிகள் ஒருமித்து நின்று எல்லாத் துறையிலும் தென்னாட்டுக்குரிய பங்கை, அகில இந்திய திட்டத்தில் கிடைக்க வேண்டிய தொகையை நமக்குச் சேரவேண்டிய பங்கை வற்புறுத்திப் பெற

வேண்டும். இதற்கான வழிவகைகளை அமைச்சர்கள் உறுதியோடு நின்று காணவேண்டும். அதற்குரிய ஆதரவைக் கேட்டால் எதிர்க் கட்சியில் இருக்கிற தி.மு.க-வினராகிய நாங்கள் தருவதற்கு தயாராக இருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

SRI T. T. DANIEL: Mr. Chairman, Sir. While discussing the Third Five-Year Plan draft, may I place some facts before the House and before the Government. We as a Nation have decided to evolve a socialistic pattern of society and that too in our lifetime; and it is for the creation of a Welfare State which affords equal opportunities for all to fight the battle of life we have been making radical changes in the structure of the existing society. I would therefore say that this draft plan will have to be looked at from the angle as to how far it is in furtherance towards that noble goal. I would say that the Third Plan is a socialist plan. I call it socialist plan because a large quantity of the amount under Third Plan is to be utilized for ameliorating the conditions of several lakhs of people in our country. Under the Third Plan a sum of Rs. 15 crores is allotted for improving the lot of down-trodden people in our State who occupy the lowest rung in our society. About 29,000 houses are proposed to be constructed for Harijans under the Third Plan. Besides 3·9 crores of rupees is allotted for giving free clothing for the Harijan girl students who will be studying in the elementary schools. It is also stated that under the Third Plan Rs. 80 lakhs are to be allotted for giving noon meals for the poor children of the Harijan community. While applauding the proposals and the schemes that are evolved for uplifting the Harijan community which form nearly one-fourth of the population of our State, I would like to point out to Government that the sum that is allotted both for the backward classes as well as for Harijan community has been put under one head. It will be better that the allotment is split up and the matter made specifically clear as to what amount will be allotted for the uplift of the Harijan community and what will be allotted for uplifting the backward classes.

So far as spread of literacy is concerned it must be the primary object of every Government when once you create a socialistic pattern of society, to eradicate illiteracy as far as possible. Keeping that in mind a sum of about Rs. 38 crores has been allotted under the Third Plan. It is also proposed to introduce compulsory free education upto the age group 6 to 11.

There is a provision in the Constitution that there shall be compulsory free education in our country. The sum that is allotted in the Plan is not sufficient taking into consideration the fact that there will be only fifty per cent literacy in our State at the end of the Second Plan period.

About 2·3 crores of rupees has been allotted for implementing the noon meal programme so as to accelerate the number of [illegible] of the students studying in the elementary schools.





I wish that the Government should not be satisfied with implementing the noon meal programme for the elementary schools only. But they should also extend the scheme to Middle schools and High schools. I think that social organizations like the Bharat Sevak Samaj can also successfully implement this noon meal scheme. So far as my district is concerned, the Bharat Sevak Samaj had introduced this scheme. This scheme has been introduced in fifteen High schools in the district. We have also a programme of extending the noon meal programme to the rest of the Middle and High schools during the course of one or two years.

While I was perusing the plan, I failed to find out that our Government have not allotted any amount for this social organization. So far as other States are concerned they have a scheme, which is meant for the utility of such organizations under the Third Plan. I do not understand why no amount has been allotted in this draft plan that is prepared.

Now coming to the other topic of proper minimum medical aid in a Welfare State, I would say that proper consideration has also been bestowed on extending the medical scheme. A sum of Rs. 11·5 crores is allotted under this plan. It is proposed to have another Medical College under the Third Plan. I will say that their aim should be to have one doctor for every thousand population of the State so that every individual in this State may be guaranteed of the minimum medical aid when he requires. In the plan it is suggested that there will be a deficit of one thousand doctors at the end of the Third Five-Year Plan. It is also said that we may have seven thousand doctors at the end of the Third Five-Year Plan. This scheme of extending medical Scheme, I will say, is rather very small scheme compared to the peculiar conditions obtaining in our State. We may have a Master Plan so that very soon we can realize the objective of giving minimum medical aid, free aid, to every individual in the State.

So far as the question of unemployment among the educated and uneducated is concerned, it must be the primary duty of the Government to clearly tell the public the percentage of educated and uneducated unemployed people in our State. The Government should conduct a survey of the educated and uneducated employed. The absence of such a survey for the past thirteen years creates a doubt as to whether the Government is seriously interested in relieving this problem or not. Only thirty lakhs of rupees have been allotted under the Plan for conducting this survey. This is very meagre. Unless and until we have exact statistics of the percentage of educated and uneducated unemployed, we will not be in a position to solve this problem. Our Government should tell at what time employment could be guaranteed to all educated and uneducated.

[Sri T. T. Daniel] [7th September 1960

Coming to the irrigation schemes it has to be said all praise to the Government. We are rapidly progressing so far as the food production is concerned. We have been able to raise our food production from 38 lakhs to 44 lakhs of tons in the first year and 53 lakhs of tons in the second plan period and 70 lakhs of tons is the target production for the Third Plan.

I would say that for the sound economy of our country we must increase the quantity of export to foreign countries. The report from the Tea Board will clearly suggest that the tea industry is not very prosperous and it is falling down. So far as tea industry is concerned, there is great competition between the African tea and that of Indian tea in the open market. Our Government have not provided anything for the expansion of the tea industry as well as the rubber industry in the State.

So far as the Hydro-electric power is concerned we urge to take the one hydro-electric power at Pechipara in Kanyakumari district. Incidentally, I will say that our Government should have a Medical College, an Agricultural College and an Engineering College in Kanyakumari district. They should also have this Chittar Pattanamkal Scheme and Manimuthar Scheme. Eraniel, Kolachel, Kuzhithurai and Nagercoil rural water supply scheme should also find a place in the Kanyakumari district. All these schemes were in the Second Plan in the erstwhile Travancore-Cochin State Government, when they placed the fact before the Planning Commission. Unfortunately, all these schemes were omitted, when it was known that Kanyakumari district would be added on to the Madras State. I would also say that there was National Water Supply Scheme actually included in the Second Draft Plan in the erstwhile Travancore-Cochin State. I would like it to be included in the Third Plan. I would also request to introduce the National Water Supply and Drainage Scheme for the district.

Lastly, the Government should also bestow its attention on the expansion of the Coir Industry. It has a good market. So far as coir industry is concerned, we should focus all our attention on that industry and allot substantial amount for its improvement and development of that industry. If all our exports are increased, surely our dollar earning capacity will increase and that will incidentally result in the improvement of our economic development of our country.

**Sri P. M. PERIA KARUPPAN AMBALAM**: தற்காலிக தலைவர் அவர்களே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் நம் நாட்டில் பலவிதமான முன்னேற்றகரமான வேலைகளை செய்திருக்கிறோம். அதுபற்றி மக்கள் எல்லோரும் மிக சந்தோஷப் படுகிறார்கள். ஏழை எளிய மக்கள் எல்லோரும் நீர்ப்பாசனத் திட்டங்கள் போன்றவைகளை நிறைவேற்றியிருப்பது கண்டு மிகவும் சந்தோஷப்படுகிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும்கூட நம் மாநிலத்தில் இன்னும் பல நல்ல வேலைகள் செய்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருப்பதுபற்றி நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எங்கள் பகுதியில் மதுரை–காரைக்குடிக்கு



7th September 1960] [Sri P. M. Peria Karuppan Ambalam]

மேலூர் வழியாக ரெயில் பாதை போடாதது கண்டு வருத்தப் படுகிறோம். நாற்பது வருடங்களுக்கு முன்பாகவே இந்தத் திட்டத்தை எடுத்து சர்வேயெல்லாம் செய்திருக்கிறார்கள். அது பற்றி நான் பல தடவை இந்தச் சபையில் பேசியிருக்கிறேன். இருந்தாலும் இதை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது சேர்ப்பார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அப்படி சேர்க்கப்படாதது கண்டு நாங்கள் மிகவும் வருத்தப்படுகிறோம். ஆகவே, இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது அதை சேர்க்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் கிராமப் பகுதியில் கிட்டத்தட்ட அறுபது மைல்களுக்கு ரெயில் லைனேயில்லை. அங்குள்ள வியாபாரிகள் தங்கள் விளைபொருள்களை கொண்டு செல்வதற்கோ அல்லது பிள்ளைகள் பள்ளிகளுக்குச் சென்று படிப்பதற்கோ எந்த விதமான வசதியும் இல்லாது கஷ்டப்படுகிறார்கள். இந்தக் காரணத்தைக் கொண்டாவது அங்கு ஒரு ரெயில்வே லைனை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டாவதாக, மேலூர் தாலுகா என்பது மிகவும் பின்தங்கிய தாலுகா என்பது இந்த சபைக்குத் தெரியும். விவசாயிகள்தான் அங்கு அதிகமாகயிருக்கிறார்கள். அங்கு விவசாயிகளுக்கு மூன்று அல்லது நான்கு மாதங்கள்தான் விவசாய வேலை உண்டு. மீதி எட்டு மாதங்கள் அவர்கள் காலத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஏழை விவசாயிகளுக்கு வேறு எந்த விதமான தொழிலும் கிடைக்காது. அவர்கள் சோம்பேறித்தனமான காரியங்களை செய்துகொண்டு தங்கள் வாழ்க்கைத் தரத்தை கீழ் நிலையில் ஆக்கிக்கொண்டு வருகிறார்கள். ஆகவே, அந்தப் பகுதிகளில் சிறு கைத்தொழில்கள், குடிசைத் தொழில்கள் போன்றவைகளை ஏற்படுத்தினால் நலமாகயிருக்கும் என்றும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மதுரை போன்ற பெரிய நகரங்களில் மில்கள், பெரிய கைத்தொழில் நிலையங்கள், பெரிய தொழிற்சாலைகள் இவைகள் அங்கு ஏற்படுத்துவதன் காரணமாக கிராம மக்கள் நகரங்களுக்குச் சென்று நகரங்களின் நிலையை மோசமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். கிராம மக்கள் கிராமங்களில் வாழ்வதற்கு பிரியப்படாமல் இருக்கிறார்கள். ஆக, இந்த முறை மாறவேண்டிய காரணத்தினால், கிராமங்களில் அவசியமாக கைத்தொழில் நிலையங்கள் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலூர் தாலுகாவில் ஆயிரக்கணக்கான ஏக்கர் தரிசாக இருக்கின்றன. அங்கு நல்ல கிணறுகளை தோண்டி, கூட்டுறவு முறையில் அங்கு விவசாயம் செய்தால் நல்ல பயன் ஏற்படும் என்று நான் நினைக்கிறேன். முன்பு இதுபற்றி சொல்லி, அதை கலெக்டர் அவர்கள் பார்த்து அது பரிசீலனையில் இருந்தது. அதை வெகு சீக்கிரத்தில் எடுத்து நடத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மூன்றாவதாக எங்கள் மேலூர் தாலுகாவில் அநேக பெரிய குளங்கள் இருக்கின்றன. பி.டபிள்யூ.டி.-யிலிருந்து அந்தக் குளங்களை செப்பனிடுவதில்லை. அவைகளை எல்லாம் மைனர் இர்ரிகேஷன் குளங்கள் என்று சொல்லி தள்ளி வைத்து கவனிக்கப்படுவதில்லை. அக்குளங்கள் எல்லாம் மேடிட்டு இருக்கின்றன. அதன் காரணமாக,

[Sri P. M. Peria Karuppan Ambalam] [7th September 1960

தண்ணீர் தங்க முடியாது, விவசாயத்திற்கு தண்ணீர் கிடைக்காது மிகவும் கஷ்டப்படுகிறார்கள், அங்குள்ள விவசாயிகள். நல்ல தருணத்தில் குளங்கள், கண்மாய் இவைகளில் தண்ணீர் இல்லாது விவசாயம் பாழடைந்து போகிறது. ஆகவே, அந்தப் பகுதியிலுள்ள குளங்களை நன்கு ஆழப்படுத்தி, அவைகளை செப்பனிட வேண்டுமென்று அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறேன். எங்கள் பகுதியில் மிகவும் பின்தங்கிய மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். அக்காரணத்தினால்தான் பெரியாற்றுப் பாசனம் கொடுத்ததாக பெரியோர்கள் சொல்கிறார்கள். மிகவும் பின்தங்கிய மக்கள் இங்கு இருக்கிறார்கள், அவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும். இடமாவது வாங்கிக்கொடுக்க வேண்டும். அப்படி இடம் வாங்கிக் கொடுத்தால் அவர்கள் மண் சுவர் வைத்து, கீற்றுகள் போட்டு குடிசை கட்டி வாழ்ந்து கொள்வார்கள். அரசாங்கம், ஒரு ஏக்கர் புஞ்சை நிலம் 150 ரூபாய் என்றும், நஞ்சை ஏக்கர் 300 என்றோ, 350 என்றோ என்று கருதி திட்டமிடுகிறார்கள். சாதாரண புஞ்சை நிலம் ஏக்கருக்கு 1,000 ரூபாய்க்குக் குறைந்து வாங்க முடியாது, நஞ்சை என்றால் ஏக்கர் ஒன்றுக்கு 2,500, 3,000 ரூபாய் கொடுக்கவேண்டும். அப்படியிருக்க அரசாங்கம், 150, என்றும், 300 ரூபாய் என்றும் திட்டமிட்டிருப்பது, அங்குள்ள ஏழை மக்களுக்கு நிலத்தை வாங்கிக் கொடுக்க வசதியற்ற நிலையைத்தான் ஏற்படுத்தும். ஆகவே, அரசாங்கம் அந்த விலையை அதிகப்படுத்தி அங்குள்ள ஏழைகளுக்கு நிலம் வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பின்னர், பல ஆண்டுகளாக மதுரையில் ஒரு யூனிவர்ஸிட்டி ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே இந்த ஆண்டிலாவது மதுரையில் ஒரு யூனிவர்ஸிட்டி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தை நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, அதிகப்படியான விவசாய உற்பத்தி செய்யவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். விவசாயத்திற்கு முக்கிய தேவையான விதைகள் காலாகாலத்தில் கிடைப்பதில்லை. ஜுன் அல்லது ஜுலை மாதத்திற்குள் அக்ரிகல்சால் கோடவுனில் விதைகள் ஸ்டாக் செய்யப்படவேண்டும். நாம் எவ்வளவு மூட்டை விதை ஸ்டாக் வைத்திருக்கவேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறோமோ அந்தளவு விதை கோடவுனில் இருக்கவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்த வேண்டுமென்று அரசாங்கத்தை கேட்டுக்கொண்டு நான் என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

11-00 a.m. * **SRI V. SUBBIAH**: தற்காலிக தலைவர் அவர்களே, இன்று முதல், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்து மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்ப காலத்தில் இருக்கக்கூடிய இந்நேரத்தில் இந்நாட்டில் எவ்வளவு பற்றாக்குறை இருக்கிறது என்பதை சர்க்கார் உணருமானால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்கூட அந்தப் பற்றாக்குறையை தீர்க்கக்கூடிய அளவில் விவசாயத்திற்கு போதுமான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை என்று சொல்ல முடியும். சிறு நீர்ப்பாசனம், சிறு



7th September 1960] [Sri V. Subbiah]

தொழில்கள் இன்டஸ்ட்ரீஸ் இவைகளை எல்லாம் எடுத்துக்
கொண்டால் மலைக்கும், மடுவிற்கும் உள்ள வித்தியாச அளவில்
தொகை ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இன்று விவசாயத்திற்காக
27 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால் எதிர்காலத்திலாவது
இந்த உணவுப் பற்றாக்குறையை நீக்க முடியுமா என்ற நிலையில்
தான் இருக்கிறது. பொதுவாக நம் ராஜ்யத்தில் ஜனத்தொகை
அடிப்படையில், நில விஸ்தீர்ண அடிப்படையில் பார்த்தாலும்
கூட இன்றையதினம், கிராமவாசிகள், விவசாயத்தை நம்பி
வாழக்கூடியவர்கள் 75 சதவிகிதத்திலிருந்து 80 சதவிகிதம் வரை
இருப்பார்கள். இதை யாராலும் மறுக்க முடியாது, அரசாங்கப்
புள்ளிவிவரங்களிலிருந்து. அந்நிலையில் விவசாயத்திற்காக 27
கோடி ஒதுக்கியிருக்கிறார்கள் என்றால் அது மிக மிக குறைந்த
அளவு என்றுதான் சொல்லமுடியும். அதை திட்டமிட்டவர்கள்,
திட்டமிட்ட பொருளாதாரம் என்று சொல்லக்கூடியவர்கள் அதற்
காக நல்லதொரு கணிசமான தொகை ஒதுக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். உரத்திற்காக, ஸ்ப்ரேயர்ஸ்-க்காக ஒதுக்கப்
பட்டிருக்கிற தொகை மிக மிகக் குறைவு என்று சொல்ல முடியும்.
நம் ராஜ்யத்தின் தொகை 400 கோடியாக இருந்தாலும்கூட எந்த
இனத்திலாவது குறைத்துக் கொண்டு விவசாயத் துறைக்கு
இன்னும் ஜாஸ்தியான தொகை ஒதுக்கப்பட வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். நீர்ப்பாசனத் துறையை எடுத்துப்
பார்ப்போமானால், மைனர் இர்ரிகேஷன் திட்டங்களை எடுத்துக்
கொள்வோம். குறிப்பாக குற்றச்சாட்டாக சொல்லமுடியும்,
திருநெல்வேலி, கோவில்பட்டி, சங்கரன்கோவில், போன்றவைகள்
வானம் பார்த்த பிரதேசங்கள். அதுமட்டுமல்ல. ராமநாதபுரம்,
சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை போன்ற தாலுக்
காக்களும் வானம் பார்த்து வாழக்கூடிய ஏரியாக்கள். இந்தப்
பகுதிகள் எல்லாம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்
சேர்க்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் என் கண்ணுக்கு
எங்குமே தென்படவில்லை. வாழ வகையுள்ள இடங்களில், பாசன
வசதியுள்ள இடங்களில் மேலும் பல திட்டங்கள் அமைக்கப்
படுகிறதே தவிர வரண்ட பிரதேசங்களுக்கு, பிற்பட்ட பிரதேசங்
களுக்கு, தண்ணீரை நினைத்துக்கூட பார்க்க முடியாதிருக்கக்கூடிய
வசதியற்ற நிலையில் இருக்கும் இடங்களுக்கு எந்தவிதத் திட்டமும்
இல்லை என்றால் இது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டமா என்று
கேட்கிறேன்.

இந்த நிலையில் அரசாங்கத்தில் இருக்கின்ற அதிகாரிகள் திட்ட
மிட்டிருந்தார்கள் என்றாலும் கூட நமது நிதி அமைச்சர்
அவர்கள் அந்த பிராந்தியங்களில் இருக்கின்ற நிலைமையையும்
கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். எங்கள் பகுதியைப்
பொறுத்தவரையில் எத்தனையோ ஆறுகள் வியர்த்தமாக ஓடிக்
கொண்டிருக்கின்றன. பெரும் நதிகள், வைப்பாறு, சித்திரா நதி
போன்ற நதிகள் எல்லாம் போய்க்கொண்டிருக்கின்றன.
இவைகளில் எல்லாம் பல அணைகளை கட்டினால் ஆயிரக்கணக்கான
ஏக்கர்கள் நீர்ப்பாசன வசதி பெற முடியும். இதை எல்லாம்
இந்தத் திட்டத்தில் சேர்ந்திருப்பதாகவே தெரியவில்லை. இப்படி

[Sri V. Subbiah] [7th September 1960

நீர்ப்பாசனத்திற்கு வசதி செய்து கொடுக்கா விட்டால் பற்றாக்
குறை ஏன் இந்த நாட்டில் ஏற்படாது என்று கேட்க விரும்பு
கிறேன். இந்த நிலைமையை தவிர்க்கவேண்டுமென்றால், திட்ட
மிட்டவர்கள் எப்படி திட்டமிட்டிருந்தாலும், எந்தப் பகுதி
வரண்ட பிரதேசம், எந்த பகுதியில் மண் வளம் அதிகமாக
இருக்கிறது என்பதை எல்லாம் கவனத்தில் வைத்துக்கொண்டு
இம்மாதிரியான திட்டங்களை தயாரிக்கவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில் அதிகமான அளவில்
தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. எங்கள் பகுதியில் மின்சாரம்
அதிகமாக தேவைப்படுகிறது. 10, 15 கஜம் ஆழத்திலிருந்துதான்
தண்ணீர் இறைக்க வேண்டியிருக்கிறது, இதற்கு மின்சாரம்
மிகவும் தேவையாக இருக்கிறது. ஆனாலும் இப்போது
அங்குள்ளவர்களின் நிலைமை என்ன? மின்சாரத்தை எவ்வளவு
தான் கொடுத்தாலும், மின்சாரத்திற்கு விவசாயிகள் கொடுக்க
வேண்டிய கட்டணம் குறையப் போகின்றதா என்று பார்த்தால்
அவ்விதம் குறையப்போவதாக ஒன்றும் தெரியவில்லை. விவசாயி
களை எடுத்துக்கொண்டால், மின்சாரம் சம்பந்தமாக அவர்களுக்கு
எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன. அவர்களுக்கு க்ரூப்பிங்
ஸிஸ்டம் போன்ற பல தொல்லைகள் இருப்பதாக அவர்கள்
தினமும் முறையிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய
குறைகளை கேட்டால் பெரிய பட்டியலாக நீண்டு கொண்டேப்
போகிறது. இந்த குறைகள் எல்லாம் நீங்கக்கூடிய வகையில்
மின்சாரத்திற்கு இந்தத் திட்டத்தில் 77 கோடி ரூபாய் ஒதுக்கப்
பட்டிருப்பதைப் பார்த்து சந்தோஷப்படுகிறேன். ரோடுகளை
எடுத்துக்கொண்டால், 13 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.
இப்போதுள்ள நிலைமை என்னவென்று பார்த்தால் நேஷனல்
ஹைவேஸ் ரோடுகளும், ஸ்டேட் ஹைவேஸ் ரோடுகளும் தான்
நன்றாக இருக்கின்றன. அந்த ரோடுகளில் உள்ள மைல் கற்களிலும்
கூட எல்லாம் நல்ல பெயின்ட் அடித்து நன்றாக வைத்திருக்கிறார்கள்.
ஆனால் கிராமாந்திரங்களில் உள்ள ரோடுகளைப் பார்த்தால்,
முன்னால் எல்லாம், கிராமந்திரங்களிலுள்ள ரோடுகளில் எல்லாம்
மனிதர்கள் நடந்து கொண்டு இருந்தார்கள், ஓரளவு வண்டி
களும் போய்க்கொண்டிருந்தன. ஆனால் இப்போது மனிதர்களும்
நடந்து போவதற்கு லாயக்கற்ற முறையில் எங்குப் பார்த்தாலும்,
மழை காலத்தில் போக்குவரத்துக்கு வசதியற்ற நிலைமையில்
இருக்கின்றன. கிராம ரஸ்தாக்கள் எல்லாம் நன்றாக இருந்தால்
தான் நகரங்களிலுள்ள மார்க்கட்டுகளுக்கு கிராமங்களிலுள்ள
உற்பத்திப் பொருட்கள் போவதற்கு வசதியாக இருக்கும்.
அதேபோன்றுதான் விவசாயிகளுக்கும் நகரங்களிலுள்ள ரசாயன
உரங்கள் போன்றவர்களை கொண்டு வருவதற்கும் வசதியாக
இருக்கும். அந்த முறையில் பார்த்தால் இப்போது ஒதுக்கப்பட்
டிருக்கும் தொகை குறைவாகவே இருக்கிறது என்று தான்
சொல்ல முடியும்.

கூட்டுறவு இயக்கத்தை பொறுத்த அளவில், கடன் வசதிகளை
அதிகமாக பெருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.
லேவாதேவி கடன் சம்பந்தமாக பல சட்டங்களை நாம் நிறை



7th September 1960] [Sri V. Subbiah]

வேற்றியிருக்கிறோம். ஆனால் விவசாயிகளைப் பொறுத்தவரையில்
அவர்களுக்கு கடன் கொடுப்பதற்கு நாட்டில் யாருமேயில்லை.
கூட்டுறவு கிரெடிட் சொஸைடியை நம்பித்தான் அவர்கள் வாழ்
கிறார்கள். அந்த முறையில் பார்த்தால் அவர்களுக்கு கூடுதலான
அளவில் கடன் கொடுப்பதற்கு வேண்டிய தொகை ஒதுக்கப்பட
வில்லை என்றுதான் சொல்ல வேண்டும். முன்னால் எல்லாம் 30,
அதன் பின்னால் 60 சதவிகிதம் பேர்களுக்கு கடன் வசதி செய்து
கொடுக்கமுடியும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி
யானால் மீதி மக்களுடைய கதி என்ன என்பதுதான் தெரிய
வில்லை. ஆகவே இதிலும் கணிசமான அளவுக்கு வேண்டிய
பணத்தை ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
மேலும் இப்போது இருந்து கொண்டிருக்கின்ற கூட்டுறவு ஆக்ட்
ஆனது மிகவும் பழமையானது. ஆகவே அதை திருத்தவோ
அல்லது புதிய சட்டத்தைக் கொண்டு வரவோ செய்ய வேண்டும்.
முக்கியமாக பல இடங்களிலும் கூட்டுறவு இயக்கத்தின் பேரால்,
பல மோசடிகள், பல கையாடல்கள் அடிக்கடி நடந்து கொண்டி
ருக்கின்றன. இவைகளை எல்லாம் தடுக்க வேண்டும். அதோடு
மார்க்கட்டிங் சொஸைடிகளை எல்லாம் இன்னும் அதிகமான
அளவில் பெருக்கவேண்டும். அதோடு முக்கியமாக கோடவுன்
களை கட்டும்போது கிராமப்புறங்களில்தான் இவைகளை கட்ட
வேண்டும். அதேபோன்று சிறிய தொழில்களை ஆரம்பிப்
பதிலும் கிராமங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்;
50 ஆயிரம் ஜனத்தொகையுள்ள இடங்களுக்குத்தான் இந்த
வாய்ப்பு ஏற்பட முடியும் என்று தெரிகிறது. இவ்விதம் நிர்ண
யிப்பதாக இருந்தால் மேலும் மேலும் நகரங்களைத்தான் வளர்ப்
பதாக இருக்கும். இதன் காரணமாக கிராமாந்திரங்களில்
யாரும் வாழ்வதற்கு விரும்புவதில்லை. இதோடு நகரப் பொருளா
தாரத்திற்கும் கிராம பொருளாதாரத்திற்கும் மலைக்கும்
மடுவுக்கும் உள்ள வித்தியாசம்தான் எப்போதும் இருந்து
கொண்டிருக்கும். இன்றைக்கு நகரங்களில் இருக்கின்ற ஒரு மில்
தொழிலாளியை எடுத்துக்கொண்டால், ஒரு மில்லில் எட்டு மணி
நேரம் நிழலிலே ஸ்பின்டில்களில் வேலை செய்தால், அவர்களுக்கு
தினசரி 4 ரூபாய், 5 ரூபாய் கூலி கிடைத்து விடுகிறது. அதே
நேரத்தில் ஒரு விவசாயக் கூலியை எடுத்துக்கொண்டால், அவன்
வேலை செய்வதற்கு இத்தனை மணி நேரம் என்று கணக்கு கிடை
யாது. வெயிலிலோ அல்லது மழையிலோ நின்று வேலை செய்
கின்றான், என்றாலும்கூட அவனுக்கு ஒரு ரூபாய் கூலி கிடைப்
பது கஷ்டமாகவே இருக்கிறது. இப்படியே நிலைமை நீடித்துக்
கொண்டிருந்தால் அவனுடைய வாழ்க்கை என்ன ஆவது
என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே
கிராம பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும் என்று சர்க்கார்
உண்மையாக எண்ணினால் கிராமங்களுக்கு உதவக்கூடிய பலவித
மான திட்டங்களை போடவேண்டும், அதற்குரிய வகையில்
இப்போதுள்ள திட்டங்களை மாற்றி அமைத்து அமல் நடத்தினால்
இது வெற்றி பெறும் என்று கூறிக்கொண்டு என் பேச்சை
முடித்துக்கொள்கிறேன்.

[7th September 1960.

*Sri M. WILLIAM: Mr. Chairman, Sir, while discussing the Third Plan, we have to assess how the First and Second Plans have worked. I can say that there has been some appreciable progress, but not to the extent that we expect. There have been many shortfalls. The shortfalls are due mostly to want of co-operation on the side of the people. People as it were are rather indifferent to new ways of training and adopting new techniques in the matter of agricultural operations. It is very difficult to change their mode of thinking and also their mode of acting. It is very difficult to make them give up their traditional way of thinking and way of doing things. We must educate them and we must enlighten them as to the beneficial advantages that would result in adopting the new techniques in the matter of irrigation and also in the matter of agriculture and also development of industries. For that purpose and with that idea in view, we have ushered in the various developmental schemes in most of the areas. How far these developmental schemes have worked and how far the authorities who are in charge of those schemes have succeeded in working those schemes and in removing their ignorance is doubtful. The administrative machinery is not moving as we expected. They still conform to the official way of doing things and they do not mingle freely with the people. They do not sympathise with their feelings. They do not take the people into their confidence in solving the problems. Of course, as it were, at the beginning, there was some success in the blocks, but later on, the whole thing was rather officialised. There is mere collection of statistics and writing of accounts. This is the way in which our Blocks are functioning and unless the Blocks are rejuvenated, I am sure we cannot get the expected results; not only that, we are now thinking of ushering in the Panchayat Unions. It is also expected to work for the benefit of the people. The Block Development Officers and the Panchayat Unions are to work harmoniously. Unless these two institutions work harmoniously, there would be a deadlock in the achievement of the objects and we may not get the desired results and the progress also will not be the same as we expect. So, there must be proper guidance so that these institutions could work harmoniously keeping in view the ultimate objective of bringing good to the people. I know of instances where the Block Development Officers are not even prepared to accept and act on the unanimous decision of the Panchayat Unions. If any Panchayat member with best of motives wants to do anything, the Block Development Officer gives a different colour to it. If he is prepared to accept it, probably he thinks it below his dignity. This sort of hitch between official block and the people must vanish if the schemes that we are launching are to bring good results to the people.

With regard to credit facilities I have to add one word. Now the scheme of opening land mortgage banks is contemplated. How far they are going to be of use to the people is still to be seen. I am the Vice-President of a land mortgage bank working in Kanyakumari district. It is only the few limited rich few who are benefited by these land mortgage banks. The conditions imposed





are so very strict that the ordinary middle-class men and low income groups are not able to get any loan from land mortgage banks. Instead of bringing more land mortgage banks it would be of immense use to the public if agricultural banks are opened in each Panchayat. The agricultural banks are affording much relief to the middle class and lower income groups in some of the Panchayats. There are agricultural banks which are functioning properly. We have been agitating for opening of more agricultural banks in Kanyakumari district. We have been approaching the concerned authorities, asking them to open one agricultural bank in each panchayat. Unlike the panchayat in other parts of the State, each panchayat in Kanyakumari district has a population of 20,000 to 25,000. So in each panchayat there should be at least one agricultural bank, so that the poor people who take to agriculture and cottage trade may got easy credit facilities. I am sure the Hon. Finance Minister will consider this aspect and press the Central Government encourage the opening of more agricultural banks.

Another matter is the problem of unemployment. As has been already suggested a survey has to be taken to assess the unemployment among educated and uneducated. A large number of students who have passed S.S.L.C. are without work and they are wandering about in the streets. Unless something is done to absorb them in some kind of work, I am sure there will be some sort of disturbance in the country. They must have something to do and unless these people are encouraged by being given some work or other, I think the evil effect would be more. Something in that direction has to be done and a survey has to be taken with regard to the unemployment which is prevailing all over the country.

With regard to irrigation works I am glad to say that in Kanyakumari, " Chitraru Pattam Kalvai Scheme " (a medium size irrigation project) has been included in the Draft Third Plan. Mambzhathanai Scheme has also been included in the Draft Third Plan. So also the protected water-supply schemes in Kuzhithurai, Thuchalai and Kolachhal have been included in the Draft Third Plan. These are schemes which were included even in the Draft Second Five-Year Plan, by the erstwhile Travancore-Cochin State, but were dropped in the final plan. At least this time I am sure our Finance Minister will see to it that these schemes are implemented as early as possible.

(Mr. Speaker in the Chair.)

Another important thing is the opening of a rubber factory in Kanyakumari district. Now we find that about 2,000 acres are to be planted with rubber by Government during the Third Plan period. Even ordinary individuals are planting rubber to the extent of nearly 500 to 1,000 acres per year. That is what is being done even now. But Government in the course of five years in the Third Plan have adopted a policy of bringing 2,000 acres under rubber cultivation. There are about 30,000 acres of land available for rubber cultivation. All the available lands must be

[Sri M. William] [7th September 1960.

brought under rubber cultivation in the coming five years of Third Plan so that at least by the beginning of the Fourth Plan there may be enough rubber plantations for starting a Rubber Factory in Kanyakumari district. That may in a way absorb young men in service give employment to them and add to the wealth of the State.

Similarly there are small-scale industries which deserve encouragement. In this connection I would like to point out the difficulties that are being experienced by tappers. There are about 1 lakh of tappers in the Kanniyakumari district. They are leading a half-starved lives. They should be given some sort of encouragement. Even palm-gur industry is one of small-scale village industries that has been recognised by the All-India Khadi Board. Five lakhs of rupees had been allotted under the Second Plan for the development of this industry in the Kanniyakumari district. But not even one lakh of rupees has been spent for this purpose. This industry requires encouragement at the hands of Government. I hope sufficient steps will be taken to reorganize tappers and develop this industry. I am sure that some insurance system for these tappers will be introduced. As we know these tappers climb the trees several hundred feet high and very often serious accidents occur resulting in deaths. Unless something is done for the families of those deceased persons their (the family's) lot will be a miserable one. Some sort of insurance system must be organised for these tappers to act as a safeguard for their families.

With regard to unemployment that is increasing I would suggest that a survey be undertaken. Some system of unemployment may be introduced as in operation in western countries doles. So that they may get something daily to eke out their livelihood. I am sure the Hon. Finance Minister will consider this matter also. With these words I resume my seat.

**Sri S. M. ANNAMALAI**: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இப்போது சட்ட மன்றத்தின் முன்னால் வைத்திருக்கக்கூடிய மூன்றாவது ஐந்தாண்டு நகல் திட்டத்தின் மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நகல் சட்ட மன்றத்தின் முன் வருவதற்கு முன்னால் இன்னும் சில புள்ளி விவரங்களைச் சர்க்கார் தந்திருந்தால் நாங்கள் அதைப் பற்றி விவாதிப்பதற்கு இன்னும் சௌகரியமாக இருந்திருக்கும். அதாவது மாநிலவாரியாக தேசீய வருவாய், "பர்காபிடா இன்கம்", ஒவ்வொருவராலும் செலுத்தப்பட்ட "டாக்சேஷன் இன்கம்" ஆகியவை பற்றிய புள்ளி விவரங்களைக் கொடுத்திருந்தால் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை இன்னும் நன்றாக விவாதித்திருக்கலாம்.

இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டமானது ஏறத்தாழ 10,200 கோடி ரூபாய் அளவுக்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதிலே தனியார் துறையில் தொழில்களை ஆரம்பிக்க 4,200 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். பொதுத் துறையைப் பொறுத்த



7th September 1960] [Sri S. M. Annamalai]

வரையில் 6,000 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். தனியார் துறைக்கு இந்த அளவு அதிகப்படியாக ஒதுக்கியிருப்பதைப் பார்க்கும்போது இந்த சர்க்கார் உண்மையிலேயே தாங்கள் மேற்கொண்டிருக்கக்கூடிய சோஷலிசப் பாதையில் செல்கிறார்களா என்பதில் சந்தேகம் ஏற்படுகிறது. முதலாவது ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறிய பிறகு இன்றுள்ள நிலையைப் பார்த்தால் நாளுக்கு நாள் "ப்ரைவேட் செக்டாரின்" முதலீடுகள் அதிகமாகிக் கொண்டே வருவது தெளிவாக விளங்குகிறது. இதைப் பார்க்கும்போது சோஷலிச சமுதாயக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிற சர்க்கார் உண்மையிலேயே சோஷலிச சமுதாயத்தை அமைக்கப் போகிறார்களா அல்லது இப்படி முதலாளித்துவத்தை மேலும் மேலும் வளர்த்துக் கொண்டிருக்கப் போகிறார்களா என்பது தெரியவில்லை.

இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் என்னென்னத் திட்டங்களை நிறைவேற்றப் போகிறார்கள் என்று பார்க்கும்போது மத்திய அரசாங்கத்தார் வெளியிட்டிருக்கும் புஸ்தகத்தில், தற்போது தேசீய வருவாய் 8·5 சதவிகிதம் வரி செலுத்தி வருவதை 11 சதவிகிதம் அதிகமாக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது 2.5 சதவிகிதம் வரியை அதிகமாக டைரக்ட் டாக்சேஷன், இண்டைரக்ட் டாக்சேஷன் மூலமாக போடப்போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்போலவேதான், 11-3 a.m.
இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 4,000 கோடி ரூபாயில் நிறைவேற்றப்படும்போது 1,175 கோடி ரூபாய் சர்க்கார் நோட்டுகள் அடித்திருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப்படும் இந்த நேரத்தில் 550 கோடி ரூபாய்க்கு நோட்டு அடித்து வெளியிடப் போகிறோம் என்று சொன்னால், நாளுக்கு நாள் பண வீக்கம் அதிகமாகி மேலும் மேலும் விலைவாசி உயரத்தான் செய்யுமே தவிர, அதைக் கட்டுப்படுத்துவதற்கு சர்க்கார் இடத்திலே உண்மையான கொள்கை கிடையாது. இப்படி விலைவாசி உயர்ந்துகொண்டு போனால் திட்டங்களினால் பாதிக்கப்படக் கூடியவர்கள் பாமர மக்கள் என்பதைச் சர்க்கார் உணர வேண்டும். மேலும் மேலும் வரிகளைப் போட்டு, அதே சமயத்தில் மேலும் மேலும் நோட்டுகள் அடித்துக்கொண்டே போனால் பண வீக்கம் ஏற்பட்டு, உணவுப் பொருள்களின் விலைவாசி ஏற்றத்தினால் பாதிக்கப்படக் கூடியவர்கள் பாமர மக்கள் என்பதைச் சர்க்கார் உணரவேண்டும். நோட்டு அடித்தும் வரி போட்டும் பணத்தை வசூல் செய்து, அதைப் பலவித வழிகளிலே செலவழித்து உண்மையிலேயே திட்டங்கள் நல்ல முறையில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா என்று பார்க்கவேண்டும்.

நம்முடைய மாநில சர்க்கார் வெளியிட்டிருக்கும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டப் புத்தகத்தைப் பார்த்தால், குறித்த அளவு உணவு உற்பத்தி செய்யப்படவில்லை என்று தெரிகிறது. 12.79 லட்சம் டன் உணவு உற்பத்தி செய்யவேண்டும் என்று திட்டமிட்டோம். ஆனால், 9 லட்சம் டன் தான் உற்பத்தி செய்ய முடிந்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்நியச் செலவாணி எப்படி இருக்கிறதென்றால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடையும் இந்தத் தருணத்தில் கூட பற்றாக்குறை

[Sri S. M. Annamalai] [7th September 1960

யாகத்தான் இருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறிய பிறகும்கூட இன்னும் நல்ல முறையில் அந்தத் திட்டம் முன்னேறவில்லையென்றால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வந்த பிறகு பாமர மக்களுடைய 'பர் காபிடா இன்கம்' அதாவது சராசரி வருவாய் உயருமா என்று பார்த்தால் உயராது என்றுதான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டப் புத்தகத்திலிருந்து உணர முடிகிறது.

வரி போடுகின்றபோது, மாநில சர்க்காரைப் பொறுத்தவரையில் மொத்த அளவில் மூன்றில் ஒரு பங்கான 55 கோடி ரூபாய் அளவுக்கு நாம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வரியாகப் போடவேண்டும் என்று இருக்கிறது. ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 55 கோடி ரூபாய் என்றால், ஆண்டு ஒன்றுக்கு 11 கோடி ரூபாய் அளவுக்கு வரி போடவேண்டும். 11 கோடி ரூபாயை எப்படி இவர்கள் பெறப் போகிறார்கள், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் என்பது எனக்குப் புரியவில்லை. மறைமுகமான வரி விதிப்பு பாமர மக்களைத்தான் அதிகமாகப் பாதித்துக் கொண்டிருக்கிறது. நேரடியான வரி விதிப்பை விட்டு மறைமுகமான வரி விதிப்பை அதிகமாகப் போடப் போகிறோம் என்றால், உண்மையிலேயே அதனால் பாதிக்கப்படக் கூடியவர்கள் பாமர மக்கள்.

பாலுக்கு வரி போட்டதன் காரணமாக, படி பால் ஒரு ரூபாய்க்குக் கிடைத்துக் கொண்டிருந்தது இப்பொழுது ரூபாய் 1-4-0 அளவுக்கு விலை ஏறிவிட்டது. அதனால் பாமர மக்கள்தான் அந்த வரியைச் செலுத்த வேண்டியிருக்கிறது. இப்படி மறைமுகமாக வரி வசூலிப்பதன் மூலமாக பாமர மக்களிடத்திலேயிருந்து மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு உண்டான பணத்தைச் சேகரிக்கப் போகிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் அந்தப் பாமர மக்கள் பயன் அடைகிறார்களா என்றால், அதுதான் இல்லை. ஒரு சிலர்தான் பயன் அடையும் நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் போடப்படும் வரி 'டைரக்ட் டாக்ஸேஷ'-னாக இருக்கவேண்டுமே தவிர, 'இன்டைரக்ட் டாக்ஸேஷ'-னாக எந்த வகையிலும் இருக்கக்கூடாது. அதனால் பாமர மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், அணை எங்கெங்கு கட்டவேண்டுமோ அங்கெல்லாம் கட்டியாய்விட்டது, மேற்கொண்டு அணை கட்டுவதற்கேற்ற ஆறு இல்லை என்று பல முறை பேசப்பட்டது. நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்—தென் பிராந்திய மாநிலங்களை வைத்துக்கொண்டு, அதற்கென ஒரு கமிஷன் நியமித்து, ஆந்திரம், கேரளம் போன்ற பிற மாநிலங்களில் ஓடும் ஆறுகளில் எவ்வளவு மீதத் தண்ணீர் இருக்கிறதோ அதை நம்முடைய மாநிலத்திற்கு ஏன் பயன்படுத்தக்கூடாது என்று பார்க்கவேண்டும். அந்தத் தண்ணீரைக் கொண்டுவந்து பயன்படுத்துவோமானால், நம்முடைய மாநிலத்தில்



7th September 1960] [Sri S. M. Annamalai]

உணவு உற்பத்தி அதிகமாகும் அல்லவா, அதை ஏன் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க முயற்சி எடுக்கக் கூடாது என்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பப்ளிக் செக்டார் என்று சொல்லும்போது, பவர், ட்ரான்ஸ்போர்ட், ஹெவி இன்டஸ்ட்ரீஸ் என்று சொல்லியிருக்கிறார்கள். ட்ரான்ஸ்போர்ட் என்று சொல்லும்போது, மத்திய சர்க்காருடைய மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 18 கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். பஸ் தொழிலைத் தேசியமயமாக்க வேண்டும். பஸ் தொழில்தான் நம்முடைய மாநிலத்திற்கு நல்ல வருவாய் தரக்கூடியது. நல்ல வருவாய் வரும் இனத்தையெல்லாம் தனிப்பட்டவர்களுடைய கையில் விட்டுவிட்டால், உண்மையிலேயே நமக்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குத் தேவையான பணம் கிடைக்காது. ஆகவே, நாங்கள் இந்தச் சட்ட மன்றத்தில் மேலும் மேலும் வற்புறுத்துவது, பஸ் தொழிலைத் தேசிய மயமாக்கவேண்டும் என்பது. பதினெட்டு கோடி ரூபாய் மத்திய சர்க்கார் ஒதுக்கியிருப்பது போதாது. மாநில சர்க்காருடைய மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டப் புத்தகத்தைப் பார்த்தேன்—அதில்கூட பஸ் தொழிலைத் தேசியமயமாக்கப்படக் கூடிய கொள்கை விளக்கப்படவில்லை. சட்ட மன்றத்தில் மேலும் மேலும் வற்புறுத்தியும்கூட, நல்ல திட்டங்கள் கொடுத்தும்கூட, ஆண்டொன்றுக்குப் பத்து கோடி ரூபாய் சர்க்காருக்கு இதன் மூலம் கிடைக்கும். அதனால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நல்ல முறையில் நிறைவேற்றலாம் என்றாலும்கூட, சர்க்கார் செவி சாய்ப்பதாகத் தெரியவில்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆண்டொன்றுக்குப் பதினோரு கோடி ரூபாய் வரி போடப் போகிறார்கள். பஸ் தொழிலை தேசிய மயமாக்கினால் வரி போடாமலேயே திட்டத்தை நிறைவேற்றலாமே. அதே போல சினிமாத் தொழிலைக்கூட தேசிய மயமாக்கலாம். இப்படி முக்கியமான தொழில்களைத் தேசியமயமாக்கலாம். மத்திய சர்க்காரே 'ட்ரான்ஸ்போர்ட்' என்று சொல்லியிருந்தாலும்கூட, மாநில சர்க்கார் ஏன் அதைப் புறக்கணித்திருக்கிறார்கள்? மத்திய சர்க்கார் ஒதுக்கியிருக்கும் 18 கோடி ரூபாய் போதாது என்று ஏன் இவர்கள் சொல்லக்கூடாது? அதை அதிகமாக ஒதுக்கி நம்முடைய மாநிலமும் அதிகமான பணத்தை அவர்களிடமிருந்து பெற்று ஏன் இந்த பஸ் தொழிலைத் தேசியமயமாக்கக் கூடாது என்று நான் கேட்கிறேன்.

அதைப் போலவேதான், கைத்தொழில் அமைச்சர் அவர்கள் என்னுடைய தாலுகாவில் கிடைக்கும் கந்தகத்தைப் பயன்படுத்த கந்தகத் தொழிற்சாலை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் துவக்குவதற்காகச் சேர்க்கப்படும் என்றார்கள். நான் புத்தகத்தைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். கந்தகத் தொழிற்சாலை ஆரம்பிப்பதைப்பற்றி ஒரு குறிப்பும் அதில் கிடையாது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அது சேர்க்கப்படும் என்பதற்கான அறிகுறி ஒன்றும் காணப்படவில்லை.

[Sri S. M. Annamalai] [7th September 1960

ரயில் பாதையைப் பொறுத்தவரையில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நமக்கு உரிய பங்கு கிடைக்கவில்லை. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நாங்கள் ஏழு ரயில் பாதைகளுக்குச் சிபார்சு செய்தோம். அதைக்கூட எடுத்துக் கொள்ளவில்லை என்று மாநில சர்க்கார் சொல்கிறார்கள். 'சிபார்சு செய்திருக்கிறோம்' என்று வாயினால் சட்ட மன்றத்தில் அமைச்சர்கள் சொல்கிறார்களே தவிர, 'மத்திய சர்க்கார் கவனிப்பார்கள்' என்று பதில் சொல்லப்படுகிறதே தவிர, உண்மையிலேயே ரயில் பாதைகள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் போடப்படவில்லை. புத்தகத்தைப் பார்த்தால், வட நாட்டில் பல ரயில் பாதைகள் 1,200 மைலுக்குப் போடப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறதே தவிர, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் ஒரு ரயில் பாதைகூட மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்றப்படும் என்று சொல்லப்படவில்லை, உறுதி கூறப்படவில்லை. ஏதோ ஆறு ரயில் பாதைகள் இங்கிருந்து சிபார்சு செய்யப்பட்டிருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். சிபார்சு எந்த அளவுக்கு எடுபடும் என்பது ஐயமாக இருக்கிறது. இரண்டாவது திட்டத்தில் சொன்னோம், வற்புறுத்தினோம், வேண்டிக்கொண்டோம், கெஞ்சினோம் கேட்கவில்லை. முப்பது பணம் செலவழித்தோம், இரண்டு குளம் வெட்டினோம், ஒன்றில் தண்ணீர் வரவில்லை என்பதுபோல், ஏழு ரயில் பாதைகளுக்குச் சிபார்சு செய்தோம், ஒன்றுகூட இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்ற நிலை இருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆறு ரயில் பாதைகள் ஏற்படுத்த சிபார்சு செய்திருப்பதாகச் சொல்கிறார்கள். உண்மையிலேயே ஒரு ரயில் பாதையாவது கிடைக்குமா என்ற அச்சம் இருக்கிறது. ஆகையினாலே அமைச்சர்கள் தைரியமாக இருக்க வேண்டும். நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர், வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று சொல்லிக்கொண்டிருப்பது இதைப் பார்த்தால் உண்மையாக விளங்கவில்லையா? வடக்கு எந்த வகையில் வாழ்கிறது, தெற்கு எந்த வகையில் தேய்கிறது? தேசீய வருவாய் மாநில வாரியாகக் கொடுத்திருந்தால், வடக்கிலுள்ள மாநிலங்களின் தேசீய வருமானம் என்ன, இந்த மாநிலத்திலுள்ள தேசீய வருமானம் என்ன என்பது தெரிய வரும். இந்த மாநிலம் புறக்கணிக்கப்பட்டிருப்பது தெரியவரும். அதேபோல 'பெர் காபிடா இன்கம்' புள்ளிவிவரமும் மாநில வாரியாகக் கொடுக்கப்பட்டால், வடக்கே உள்ள பிற மாநிலங்களில் 'பெர் காபிடா இன்கம்' அதிகமாக இருப்பதும், தெற்கே உள்ள நம் மாநிலத்தில் 'பெர் காபிடா இன்கம்' குறைவாக இருப்பதும் விளங்கும். நம்முடைய மாநிலம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது எப்படி என்பது தெரியும். அதேமாதிரி தொழில் வளம் எப்படி இருக்கிறது என்று பார்த்தால், தென் நாட்டில் குறைந்திருக்கிறது. புள்ளிவிவரங்களைப் பார்த்தால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும், முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் எவ்வளவு முன்னேறியிருக்கிறது வட நாட்டிலுள்ள மாநிலங்கள், நம்முடைய மாநிலம் எவ்வளவு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியும்.



7th September 1960] [Sri S. M. Annamalai]

அதுபோலத்தான் மின்சாரத் திட்டமும். அணுசக்தி மின்சார நிலையம் ஆரம்பிக்கவேண்டும் என்று முதல் முதலில் கேட்டது நம்முடைய மாநிலம்தான். ஆனால் நம்மை புறக்கணித்துவிட்டு பம்பாய் மாநிலத்திற்கு முதல் இடம் கொடுத்திருக்கிறார்கள். அடுத்தபடியாக இப்போது 3, 4 சிறிய அணுசக்தி மின்சார நிலையங்கள் ஆரம்பிக்கப்போவதாக மத்திய சர்க்கார் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சிறிய நிலையங்களாவது இந்த மாநிலத்திற்குக் கிடைக்கும்படி இந்த சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்தவேண்டும். நெய்வேலி தெர்மல் ஸ்டேஷன் ஏற்பட்ட பிறகும்கூட 25 சதவிகிதம் மின்சார சக்தி நமக்கு குறைவாக இருக்கிறது. ஆகையால், மத்திய சர்க்காரிடம் வற்புறுத்தி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அணுசக்தியிலிருந்து மின்சாரத்தை பெரிய அளவில் உற்பத்தி செய்வதற்கான நிலையத்தை நம் மாநிலத்தில் ஏற்படுத்தும்படிச் செய்யவேண்டும். சிறிய அளவில் 3, 4, நிலையங்கள் ஏற்படுத்துவதாக மத்திய சர்க்கார் சொல்லுகிறார்கள். 'எங்களுக்கு சிறிய அளவில் தேவையில்லை. நாங்கள்தான் முதல் முதலில் கேட்டோம். எங்கள் மாநிலத்தில் பெரிய நிலையம் ஒன்று நிறுவப்படவேண்டும்' என்று மத்திய சர்க்காரிடம் வற்புறுத்தி, தைரியமாக வாதாடவேண்டும். 'எங்களுடைய மாநிலத்து மக்கள் கேலி செய்கிறார்கள், தயவு செய்து எங்கள் மாநிலத்தில் இந்த அணுசக்தி மின்சார நிலையத்தை ஏற்படுத்துங்கள்' என்று மேலும் தைரியமாக மத்திய சர்க்காரிடம் வற்புறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

Sri P. G. KARUTHIRUMAN: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நகல் மிகவும் சிறப்பாக அமைந்திருக்கிறது. விவசாயத்தைப்பற்றியும், விவசாயத்திலே போடும்படியான முதலீடு பற்றியும், மற்றும் விவசாயிகளுக்கு மிகவும் முக்கியமான தேவையாக இருக்கக் கூடிய உரத் தொழிற்சாலையைப் பற்றியும் இதில் சொல்லப்பட்டிருக்கிறது. பல திட்டங்களைப்பற்றி நான் பேசுவதை விட, ஏழு, எட்டு, வருஷங்களாக இந்த சட்ட மன்றத்தில் வலியுறுத்திச் சொல்லிக் கொண்டிருப்பதைப்பற்றியே மறுபடியும் வலியுறுத்த விரும்புகிறேன். விவசாயத்தினுடைய பெருக்குக்காக விவசாயிகளுக்கு வேண்டிய தகுதியான, நியாயமான உற்பத்தி பொருள்களின் விலை உற்பத்தி செய்பவர்களுக்கு ஆதரவாக இருக்கும்படியான திட்டங்களைப் போடவேண்டும் என்று பல சந்தர்ப்பங்களில் நான் யோசனை சொல்லி வந்திருக்கிறேன். நெய்வேலி நிலக்கரி சுரங்கத் திட்டத்தில் மிகவும் முக்கியமானது உர உற்பத்தி தொழிற்சாலை. இதையெல்லாம் எதிர்க்கட்சிக்காரர்கள் படிக்கவில்லை என்று நினைக்கிறேன். வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்றெல்லாம் படிக்காமலேயே சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன். இந்தப் புத்தகத்தில் இதைப்பற்றி 15-ஆம் பக்கத்தில் சொல்லியிருப்பதை படிக்கிறேன்.

[Sri P. G. Karuthiruman] [7th September 1960

"The Fertiliser Plant will be erected and is expected to be in full production from March 1963. This factory, when finalised, will probably be the largest urea factory in the world producing the fertiliser by the total recycle process."

"Largest factory in the world என்று சொல்லப்பட்டிருக்கிறது. உலகத்திலேயே மிகவும் பெரிய தொழிற்சாலையாக அமையும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு). எட்டுச் சொரைக்காய் என்று அங்கத்தினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அவர்கள் தொகுதியிலுள்ள நெய்வேலியையே அவர்கள் பார்த்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். பார்க்காமலேயே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

விவசாயப் பயிர்கள் நன்றாக வளர வேண்டுமென்றால், பூரணமாக பலன் கிடைக்க வேண்டுமென்றால், ஒவ்வொரு ஏகரா நிலமும் எவ்வளவு சத்துக்களை எடுத்துக்கொள்ளுகிறது என்பதை ஓரளவுக்கு அறிந்துகொள்ளவேண்டும். நெல் பூரணமாகக் கிடைக்கவேண்டுமென்றால், நைட்ரஜன் தழைச் சத்து 50 பவுண்டும், பாஸ்பாரிக் மணிச்சத்து 25 பவுண்டும் வேண்டும். கரும்புக்கு நைட்ரஜன் தழைச்சத்து 60 பவுண்டும், பாஸ்பாரிக் மணிச்சத்து 70 பவுண்டும் வேண்டும். இந்த அளவு சத்துக்களை ஒரு தரம் பயிரிட்டால், அந்தப் பயிர் உணவாக எடுத்துக் கொள்கிறது. உரம் போடாமலிருந்தாலும்கூட ஓரளவுக்கு வெள்ளாமை கிடைக்கிறது. இதற்கு அடிப்படைக் காரணம் உரத்தைப் போடுவதைத் தவிர, ஏற்கனவே பூமியிலேயே பூசார சத்துக்கள் இருக்கின்றன. காற்று, மழை, இடி, மின்னல் இவைகளினால் இயற்கையாக வந்து சேரும் மணிச் சத்துக்கள், தழைச் சத்துக்கள் ஓரளவு பூமியில் இருந்துகொண்டிருக்கின்றன. செயற்கை எருக்களை, அமோனியம் சல்பேட், உரியா இவைகளை பூமிக்கு தனிப்பட்ட முறையிலே உபயோகப்படுத்துவது நல்லது அல்ல. கனம் சபாநாயகர் அவர்கள் டாக்டர், அவர்களுக்குத் தெரியும். வெண்ணெயில் எல்லாவிதமான சத்தும் நிறைய இருந்தாலும்கூட, அரிசியைவிட்டு வெண்ணெயையே முழுவதும் சாப்பிடுவதில்லை. 'ரபேஜ் ஆகாரம்' என்று சொல்லுவார்கள். எல்லாவற்றோடும் சேர்த்து வெண்ணெயும் ஒரு பகுதி சாப்பிடுகிறோம். வெண்ணெயில் எல்லாவிதமான சத்துக்களும் இருக்கிறது என்பதற்காக வெண்ணெயையே முழுவதும் சாப்பிட்டுவிட முடியாது.

MR. SPEAKER : இந்த விவாதத்தில் என்னை எதற்காக கனம் அங்கத்தினர் அவர்கள் இழுக்கவேண்டும்.

Suppose the hon. Member says something wrong. How can I get up and say that the hon. Member is wrong?

SRI P. G. KARUTHIRUMAN : தாங்கள் தவறு என்று சொன்னால் நான் அதை ஏற்றுக்கொள்ளுகிறேன்.



7th September 1960] [Sri P. G. Karuthiruman]

MR. SPEAKER : நான் அப்படிச் சொல்லப்போவதில்லை. இந்த விவாதத்தில் கனம் அங்கத்தினர் அவர்கள் என்னை இழுக்க வேண்டாம்.

SRI P. G. KARUTHIRUMAN : செயற்கை உரங்களை ஓரளவுக்குப் பிரயோசனப்படுத்தி, பாக்கிக்கு கம்போஸ்டு உரங்களை பூமியிலே சேர்த்தால்தான் பூமியில் பூசார சத்துக்கள் குறையாமல் இருக்கும். யூரியாவையே பூரணமாக உபயோகித்தால் அதிலே இருக்கிறது. பூரணமாக வளரவேண்டுமென்றால் பாஸ்பாரிக்கும் நைட்ரஜன் கண்டெண்ட்ஸ், தழைச்சத்து மட்டும்தான் வேண்டும். அமெரிக்காவில் தழைச் சத்து, தானியச் சத்து, பாஸ்பாரிக், அமோனியம் சல்பேட் இரண்டும் சேர்ந்த 'அமோபாஸ்' என்ற உரத்தை உபயோகித்து பூசாரத்தைக் காப்பாற்றுகிறார்கள். யூரியா மட்டும் உபயோகிக்காமல், பாஸ்பாரிக்கையும் சேர்த்து, டபிள் ஸூபர் பாஸ்பேட், டிரிபிள் ஸூபர் பாஸ்பேட் என்ற மாதிரி உரம் தயாரித்தால், பூமியினுடைய வளம் பெருகுவதற்கும், பூசார சத்துக்களைப் பாதுகாப்பதற்கும் மிகவும் இன்றியமையாத உரப் பொருளாக அமையும். இப்பொழுது இருக்கக்கூடிய அமோனியம் சல்பேட், நைட்ரஜன், தழைச்சத்து ஒரு பவுண்டு ஒரு ரூபாய் விலையாகிறது. இருபத்திரண்டு சதவிகிதம் அமோனியம் சல்பேட் இருக்கிறது. இருநூற்று இருபத்திநான்கு பவுண்டு கொண்ட ஒரு மூட்டை சுமார் 40 ரூபாய் விலை ஆகிறது. யூரியா நாளைக்கு வந்தால் அதிலே 100-க்கு 50 பங்கு 'நைட்ரஜன் கண்டெண்ட்ஸ்' இருக்கக்கூடும். அதனுடைய விலை மிகவும் குறைந்து இருக்கவேண்டும். ஒரு பவுண்டு எட்டு அணா விலைக்கு அடங்கக்கூடிய முறையில் திட்டம் போடுவதுதான் விவசாயிகளுக்கு மிகவும் பலன் அளிக்கக்கூடியதாக இருக்கும்; மிகவும் நல்ல முறையில் விவசாயிகள் விவசாயம் செய்வதற்கு சிறப்பாக அமையும். யூரியா மட்டுமல்ல, டபிள் ஸூபர் பாஸ்பேட், ட்ரிபிள் ஸூபர் பாஸ்பேட் என்று இருக்கிறது. அதை எடுத்து 100-க்கு 50 பங்கு மணி சத்து பாஸ்பாரிக்கையும் சேர்த்து யூரியாவையும் சேர்த்து 'அமோபாஸ்' என்ற நிலையில் 70,000 டன் உரம் தயாரித்தால் சுமார் 35 லட்சம் ஏகராவுக்கு நல்ல சிறந்த உரமாக அமையும் என்ற ஆலோசனையை நிதி அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நிதி அமைச்சர் அவர்கள் போன தரம் விலைவாசியைப் பற்றி பேசும்பொழுது "கருத்திருமன் பொருளாதாரம்" என்று குறிப்பிட்டார்கள். அது எந்த நிலையிலே என்பது தெரியாது. ஆனால், ஒன்று மட்டும் நிச்சயமாக ஏற்கனவே சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன். அதை இப்பொழுதும் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். எப்பொழுதும் அதைத் திட்டவட்டமாகச் சொல்ல முடியும். இன்று உணவு உற்பத்தி அதிகமாகியிருக்கிறது என்றால், ஓரளவுக்கு இப்பொழுது இருக்கக்கூடிய விலை ஏற்றத்தினால்தான் விவசாயிகளுக்கு உற்சாகம் பெருகி வருகிறது என்று சொல்லவேண்டும். அரசியல் நோக்கத்திற்காக வேண்டு

[Sri P. G. Karuthiruman] [7th September 1960

மானால் குறைத்துவிடலாம் என்று பேசிக் கொள்ளலாம். ஒரு ஏகருக்கு எவ்வளவு செலவாகிறது, 'காஸ்ட் ஆப் ப்ரொடக்ஷன்' எவ்வளவு ஆகிறது, ஒரு ஏகருக்கு வரவு எவ்வளவு என்பதற்கான புள்ளிவிவரம்—விவசாயி கொடுத்த புள்ளிவிவரம் அல்ல—சர்க்கார் ஆராய்ச்சிப் பண்ணையிலிருந்து கொடுத்த புள்ளிவிவரம் என்னவென்றால், கோவையில் நஞ்சைக்கு 'காஸ்ட் ஆப் ப்ரொடக்ஷன்' 1957-58-ல் ஒரு ஏகருக்கு உற்பத்திச் செலவு ரூபாய் 663. 1958-59-ல் உற்பத்திச் செலவு ரூபாய் 560. இது டிபார்ட்மெண்டிலே கொடுத்திருக்கும் புள்ளி விவரங்கள், நெட் இன்கம் அண்ட் உற்பத்திச் செலவு. கோயம்புத்தூரில், 1957-58-ல் பாசன வசதி பெற்ற இடங்களில் ரூபாய் 237, 1958-59-ல் ரூபாய் 266. ஆகவே, ஒரு ஏக்கரில் நெல் விளைவாகும்படியான தானியத்தின் மதிப்பு, சராசரி, 1957, 1958, 1959-ல் 560 பளஸ் 240, ரூபாய் 800. நிதியமைச்சர் குறிப்பிட்ட சமயத்தில், மூன்றாவது திட்டத்தில், இரண்டாவது திட்டக் காலத்தில் என்ன விலைவாசி இருந்ததோ அதுவே ஊர்ஜிதமாகும் என்றார்கள். விலைவாசி ஏற்றத் தாழ்வு, வியாபாரிகள் பதுக்கி வைத்துக்கொண்டிருப்பதால்தான்; அதனால், உற்பத்திக்காரர்களுக்கு ஒரு நன்மையும் ஏற்படுவதில்லை. இரண்டாவதாக, ஒரு ஏக்கராவுக்கு நெல் விளைவிக்க ரூபாய் 800 செலவாகிறது. அதில் சராசரி வரவு 20 மூட்டைகள். ஆகவே, இப்பொழுது இருப்பதைவிட விலை குறைந்தால், விவசாயிகளுக்குக் கஷ்டம்தான் ஏற்படும். மக்களுக்குப் பணி செய்ததாக இருக்காது. நான் ப்ளாக் மார்க்கெட் ப்ரைஸ் பற்றிச் சொல்லவில்லை. இருபது மூட்டைதான் வரவு என்றால் விவசாயி கஷ்டமான நிலையில்தான், இக்கட்டான நிலையில்தான் வேலை செய்கிறான் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மூன்றாவது திட்ட காலத்தில் இரண்டாவது திட்ட விலை வாசி ஊர்ஜிதப் படுவதை வரவேற்கிறேன். இதில் 25 பர்செண்ட் குறைந்தாலும், அந்த விலை கிடைத்தால்தான் விவசாயி வாழமுடியும். ஒரு மணு நெல் ரூபாய் 15-க்குக் கீழே இருக்கக்கூடாது. நேருஜீகூட சொன்னார்கள், விவசாயப் பொருள்களின் விலைகளை ரொம்பக் கீழே விடக் கூடாது என்றும், நேரே நாமே ஆதரிக்கக்கூடிய நிலைமை இருக்க வேண்டும் என்றும். மூட்டை நெல், அல்லது மணு, ரூபாய் 14-க்குக் கிடைத்தால், சர்க்கார் 15-க்கு வாங்கவேண்டும். ரூபாய் 16 ஆகும்போது, சர்க்கார் தலையிட்டு ரூபாய் 14-க்கு விற்றால்தான், விவசாயம் தழைத்து, பொருளாதாரத்தில் அவர்கள் முன்னேற முடியும். அதுதான் மூன்றாவது திட்டத்தில் விவசாயிகளுக்குச் செய்யும் பெரும் சேவையாக இருக்கும். விவசாயம் ஓங்கிச் சிறப்பாக வேண்டுமானால், பாசன வசதி இல்லாது, வானத்தை, மழையை நம்பி வாழும் விவசாயிகளுக்கு, நிச்சயமாக க்ராப் இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டு வர வேண்டும். முப்பத்தேழு லட்சம் நஞ்சை நிலங்களுக்கும் அப்பொழுதுதான் நன்மை கிடைக்கும். ஒரு ஏக்கருக்கு ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என்றாவது போட்டு, உற்பத்திச் செலவாவது கிடைக்கும் முறையில் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் இந்த உணவுப் பிரச்னைக்கு ஒரு தீர்வு காணமுடியும். அது விவசாயத்தில் முதல் இடம் பெறவேண்டும்.



7th September 1960] [Sri P. G. Karuthiruman]

இப்பொழுதே சென்னை விவசாயிகள் அதிக உற்பத்தி செய்கிறார்கள்; இன்னும் யூரியா, சூப்பர் பாஸ்பேட், தானிய சத்து, மண் சத்து, தழைச் சத்து • இவைகளும் கிடைத்தால், நம் உற்பத்தி அதிகமாகவே பெருகும். யூரியா மட்டும் போட்டுக் கொண்டிருந்தால், பல ஆண்டுகளுக்குப் பிறகு பூமி கோளாறாகப் போய்விடும். பூசத்து குறைந்துவிடும். இன்னும் மத்திய சர்க்கார் போன் மீல் அல்லது எலும்பு உரம் தயாரிக்க ஏற்பாடு செய்கிறார்கள். (மணியடிக்கப் பட்டது). இரண்டு நிமிஷங்கள், ஸார்.

MR. SPEAKER : All right.

SRI P. G. KARUTHIRUMAN : அதற்கடுத்தாற்போல், விவசாயத்திற்கு முதுகெலும்புபோல் இருப்பது, கால் நடைச் செல்வம். அதற்கு 3.9 கோடி போடப்பட்டிருக்கிறது. அது போதாது என்பது என் அபிப்பிராயம். வருஷத்திற்கு இரண்டு கோடியாக, மூன்றாவது திட்டத்தில் ரூபாய் 10 கோடியாவது செலவழிக்க ஆலோசனைகளைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* SRI R. SRINIVASA IYER : Sir, I thank the Government, hon. Minister and the staff for having prepared these third five-year plan books in detail giving statistics and Appendices so that we can know really in great detail the plans, though these are only draft plans or only outline for our consideration.

Sir, the total expenditure likely to be incurred by this State is said to be about 400 crores of rupees. I appeal to this Government and the Central Government not to cut it off or slice it off as usual. We may require much more depending upon the capacity of the State Government and the Central Government to raise funds for them either in the private sector or in the public sector.

Next to this, I congratulate this Government on the success of the recent loan floated by them. The success of the loan is an indication that the public are behind their plans and in the working of their plans (Hear, hear). The Madras Government have succeeded in the First and Second Plans and so far as the Second Plan is concerned, they have succeeded beyond the targets fixed. This is appreciated by the public by the fact that they have come forward to subscribe to these loans in a large measure and have also oversubscribed.

There seems to be an agitation carried on by a section of the public and a political party crying halt to these plans. I am against it and the success of the loan is an indication and authority for those parties not to cry halt to the planning. My request is that we must plan for 50 years ahead. We cannot plan for the nonce. We must plan for a country to develop fifty years ahead. If you stop planning, we will not plan hereafter. I would only illustrate that it is like comparing with a man walking a number of miles but if he thinks of taking rest for ten minutes then he cannot walk further. That is the position. Let us not, therefore, cry halt to planning.

[Sri R. Srinivasa Iyer] [7th September 1960]

I wish now to deal only with a few matters because there is not enough time. First I shall take the question of Industries, for which a special book has been prepared and given to us. Without going into facts and figures we do feel that we have been agitating for the starting of a steel plant at Salem for at least ten years past. There is of course investigation, research, foreign aid, foreign experts giving opinion and so on but the delay is rather too much. I do not know, if "Dame Rumour" comes true, the steel plant at Salem may not come true. Because I am told that instead of spending 30 crores on the setting up of a steel plant at Salem we could rather spend on developing or increasing the capacity of production of the three steel plants, viz., Durgapur, Rourkela and Bhilai at 10 crores each. I suggest that we have got enough iron ore in this State. It has not so far been either found out or exploited. Our State Geological Department is not enough. It should be strengthened. It should be independent. The State Geological Government should explore the possibilities of our mines and mineral resources. We find that in other foreign countries iron ores of a lesser quality were being used. We are

12 noon. also told that ours is a better quality. So, I think that it is worthwhile not to transport iron ores from this State to the other States or foreign countries, but it is worthwhile to transport coal to the site where iron ore is available and also make use of our Neiveli lignite as best as possible, and to start as many Small Steel Plants or Pig Iron Plants as possible in our State wherever iron ore is available.

While I am speaking on this subject, I would like to remind the Government that we have no College of Mining and Metallurgy in this State. Sir, some ten years back, we thought of starting such a College. In any one of our Universities, either in the Madras University, or the Annamalai University or in Coimbatore or some other place where facilities are available, a college should be started. There is necessity for such a college. We must get the necessary funds, laboratory and other conveniences and buildings also so that we may start this College as early as possible. We find that this is not found in the Third Plan. Three Engineering Colleges are envisaged in the Third Plan. Of these, I request that one may be a College of Mining and Metallurgy.

Now, about the minor industries and small-scale industries, we must remember that India lives in the villages. The villagers have no occupation for about 50 per cent of their time during the agricultural season and no occupation at all during the entire period of the non-agricultural season. They are now very much under-employed, though not unemployed. Being under-unemployed is also a great problem. We must find for them full work so that they could get wages for the entire month and year. If we did not find employment for these people in the villages, we would be neglecting the villages, and thereby we would be neglecting the prosperity of the country as a whole. That will be the



7th September 1960] [Sri R. Srinivasa Iyer]

result. If we neglect the villages, the country will also be neglected. There should be a charkha in every house. I would suggest that there should be handlooms in every village. It should be possible for the villagers to weave the cloth required for the village, at least the coarse varieties and not the fine voiles and other things within the village itself. Many lakhs of rupees are spent by these villages in purchasing cloth. If every village was enabled to manufacture all its cloth requirements, it would really by very helpful. We are told that in Switzerland, every house is a watch-making unit. Similarly, in our country also, we must develop small-scale industries suited to our genius and our conditions and develop all the available resources in that connection. If this is done, I am sure that every villager will be fully employed throughout the year and he will get the fullest opportunity of being able to earn throughout the year. He will get work for at least 8 hours in a day. Some such concrete steps should be taken without delay so that this exodus of labours from the villages to the city could be stopped.

Now, I come to communications. In this connection, the Hon. Finance Minister has pertinently stated that we could refer to certain Central subjects also. Take for instance the Roads and Railways. The economy of the country largely depends on the existence of good communication, by both rail and road. Every village must have a good road nearby. The villagers must have good and easily and quickly reachable roads. Then only they could market their produce without difficulty and with speed. We do not know when the 'Tambaram-Villupuram Electrification of Railways' will materialise. We were told that the scheme will soon materialise. But, we are now told that it will be only electrification of the Madras-Chingleput line. It is given in page 5 of the Report circulated to us. Talk of this scheme has been there for a long time. We were told at one time that there was some difference of opinion with regard to whether A.C. or D.C. should be used. All those controversies were started too late in the day. Whatever it is, the electrification of that line has come to a standstill. That is the real position. I am not grudging that other parts have been given priority. Still, I have to mention one fact in this connection. While 800 miles of railway track have been electrified during the Second Plan in other parts of the country, we in Madras have not had even one mile electrified. I stress that Madras-Villupuram line should be electrified as early as possible. Considering the great potentialities of trade in and around Vridhachalam and the need for connecting Neiveli to Salem, it is of paramount importance that top priority should be given to this scheme. If there is, however, any immediate difficulty in taking up this electrification scheme, steps should immediately be taken to lay a double track in this line. Priority should be given at least to laying double track. Only then, we would be in a position to solve the bottleneck of too many crossings and see that there was quick transport in that line.

[Sri R. Srinivasa Iyer] [7th September 1960

The next point that I would like to mention is the Pattukkottai-Thanjavur railway line. This was proposed some 25 years ago and the District Board had also given guarantee. Somehow or other, it has been shelved and is not found in the Third Plan. I request that priority may be given to this line also.

We would do well to have a look at the Railway Map for a network of Indian Railways in the north for seeing how they are maintained and how they would help the growth and development of industries. Without proper communication, how can we connect Salem and Neiveli? We depend on the Salem iron ore and the Nieveli lignite for developing our industries. We should take all possible steps to see that there was no transport bottleneck. I leave it at that and I shall now go to Roads.

So far as the East Coast Road which is also called Sethu Road is concerned, we have 451 miles long road to be covered in the East Coast. We find that in the Third Plan, we have provided a sum of Rs. 5 crores for this road. This is the road which is proposed to be developed into a National Highway. I have been corresponding with the Centre with regard to that road. They say that they cannot declare it as a National Highway for want of funds at the Centre. Anyway, it is within the State Plan. No doubt, they have given top priority and I am thankful to all the Members of the several Committees who have prepared this Plan for giving it top priority. It is a very important road. I am sure it will be a beautiful and the longest Marina in the whole world if properly developed. When it is developed as a National Highway, at least 200 miles of it will be a beautiful track running just by the side of the sea.

The 20-year plan in respect of the village roads, I am afraid, will not solve the difficulties that we notice now. Moreover, it is too long a period for development of these roads. Probably, most of us may not live to see the plan being achieved in 1981. I request that every village should be connected with a metal road. At least within a mile there should be metal road. Then only, it will solve the difficulties at present experienced by the villagers in carrying their agricultural produce to nearby markets or railway stations as the case may be.

We must also undertake public health schemes for the benefit of the villages. We must take all steps necessary to improve our villages. Because, only when the villages are improved, the country can improve.

We must also concentrate on improving the resources of the country and also economic life of the people. Then only the country's economy will improve. As a result of the First and Second Plans admittedly the national income has increased. But a doubt has arisen as to where this increase of wealth has gone and a Committee to find this out is also proposed to be appointed or has already been appointed. Usually, such committees are



7th September 1960] [Sri R. Srinivasa Iyer]

constituted only for the purpose of shelving the issues referred to them. When we appoint a Committee, that Committee submits a report, that report will be considered and no action will be taken and probably another Committee will be appointed in its place. Like this, one Committee will follow another. Let us have no more committees of this nature. In this connection, I would like to make a suggestion. It is this. The Government of India should come forward and order the demonetisation of all Currency Notes from Rs. 5, i.e., Rs. 5, 10 and 100 very quickly. After giving some time, the Government may issue new notes of different designs, colours and sizes. If this is done, I am quite sure, we would be able to achieve a great thing. All the blackmarket money will come to light. Then we will know where the wealth, the increased wealth is. Our Prime Minister has stated that he found in some villages fine tiled roofs in the place of thached huts, and also, jewels, vessels, etc. To a certain extent, it showed that there is a general improvement in the country's economy. But, he was not satisfied. This is what he has stated. If the wealth is accumulating in the hands of a few individuals only, and if it has not reached the vast population of the country and if the majority of the population did not get the benefits, then it cannot be considered a success for the Plans. Just 5 cent of the population might have derived the benefits of the Plan. For the purpose of effectively finding out who exactly were the persons who reaped the benefits, I have suggested the demonetisation of the Currency Notes from Rs. 5 onwards. If it is done, I am quite sure and I have no doubt in my mind, that all the blackmarket money will come to the open market. There would also be another indirect advantage. Even the counterfeit currency will be eliminated. All that the Government will have to do is to get back the existing currency in the denominations of Rs. 5, 10 and 100 and issue new notes, in their places, of an entirely different colour, size and design. This should be done at least before beginning of the Third Plan. I am of the view that this is the most effective way of checking inflation and finding out where the extra income and extra wealth has gone.

I now come to Agriculture. The hon. Member who spoke just before me, Sri Karuthiruman has stated what all he could say about Agriculture and stabilising prices. But, the most important thing about Agriculture is Irrigation. We have almost exhausted all the Major Irrigation resources in the country. We have only to depend upon our Minor Irrigation schemes for extending agriculture in our State. We have a number of jungle streams which are now going to waste and the flow of which is wasted into the sea. We must think of proper, suitable schemes for harnessing all these resources under our Minor Irrigation schemes. Except one or two big Irrigation Projects we have mainly to depend on small Project for our Irrigation. That is why I say that we must develop our Minor Irrigation Schemes.

[Sri R. Srinivasa Iyer] [7th September 1960

Along with developing our roads and railway communications, we must also develop Minor Ports in our State. Most of them were flourishing very well in the past. They are almost closed now. They were serving as a source of navigation also. All these Ports should be developed. Athiramapatnam is one of the minor ports. It is easily developable. It is not mentioned in the schedule as one of the minor ports included under the Third Five-Year Plan Programme. Nagapattinam, Cuddalore and Pondicherry are three harbours which could be developed as major harbours. If Madras Harbour is to be expanded by spending Rs. 10 crores it means that we will have to get at least thousands of people from the villages to work in this harbour. To avoid that, to distribute industry, to distribute traffic and labour and remove congestion in the city I suggest that every harbour which is capable of being improved should be improved. In that category come Nagapattinam, Cuddalore and Pondicherry. Of course Tuticorin is there. Tuticorin has been talked about by everybody. Rs. 30 crores was whittled down to Rs. 10 crores. We do not know whether we will get at least Rs. 3 crores. Tuticorin is a port which should be developed as first rate harbour like Madras or Cochin. The other minor ports like Cuddalore, Pondicherry and Nagapattinam should also be given equal importance. We must distribute our traffic. We must distribute the manpower to work in these harbours. We should see that minor ports are also well developed. In this connection, I appeal that the amount allotted for development of minor ports should be increased. So far as major ports are concerned, they come under the Central list. But development of minor ports comes under State jurisdiction and in this connection I appeal that a Committee of Experts to improve minor ports in our State should be appointed at State level. That Committee should be asked to report about the needs of minor ports and suggest ways of improvement for their development. Thank you Sir.

**SRI M. SELVARAJ:** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, மூன்றாவது ஐந்தாண்டு நகல் திட்டத்தின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். பொதுவாக மூன்றாவது ஐந்தாண்டு நகல் திட்டத்தைச் சமர்ப்பித்து அதிலே முக்கியமாக விவசாயத்தைப் பற்றியும், விவசாயத்திற்கு அதிகத் தொகை ஒதுக்குவது பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயத்திற்கு 2.4 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தும் அவர்கள் குறிப்பிட்டுள்ள தொகையைக் கணக்கிட்டுப் பார்க்கிறபோது இதனால் பெரிய காரியங்கள் எதுவும் செய்ய முடியாது. சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எல்லாவற்றிலுங்கூடக் கவனம் செலுத்த முடியாது. மேலும் இது எந்தவகையிலும் அதிகப்படியான உணவு உற்பத்தியைப் பெருக்க வசதி செய்யவும் முடியாது என்று சொல்ல விரும்புகிறேன். நீர்ப்பாசனம் என்று பார்க்கிறபோது சிறிய அளவில் கொண்டு வந்திருக்கிறார்கள். மேலும், சிறிய சிறிய ஏரி, குளங்களைச் சீர்திருத்த வேண்டுமென்றால்



7th September 1960] [Sri M. Selvaraj]

அதற்கான தொகை ஒதுக்கப்பட்டிருப்பது போதாது. இன்னும் அதிகத் தொகை ஒதுக்க வேண்டுமென்பதாக இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக விவசாயத்திற்கு உறுதுணையாக இருக்கிற மின்சாரத்தை எடுத்துக்கொண்டால் மூன்றாவது திட்டத்தில் 1965-66-க்குள் நமக்குத் தேவையானது ஒன்பதாயிரத்து அறுநூற்றுப் பதின்மூன்று மிலியன் யூனிட்டுகள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளிவிவரப்படி 73 மிலியன் யூனிட்டுகள்தான் கிடைக்கிறது. மேற்கொண்டு நமக்குக் குறைவு இரண்டாயிரத்து இருநூறு மிலியன். இப்படி மொத்தத் தேவையில் 25 சதவிகிதம் குறைவாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே நம்முடைய தேவையை அதிகப்படுத்திக்கொள்வதற்கு அணுசக்தி மின் உற்பத்தி பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும், நெய்வேலியில் இருந்து உற்பத்தி செய்யப்படுகிற மின்சார சக்தியைப் பற்றியும் கணக்கிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நெய்வேலித் திட்டம் எப்படி நிறைவேற்றப்படுகிறது என்பதைப் பார்க்கிறபோது திருப்திகரமாக இல்லை. இவர்கள் மூன்றரை லட்சம் டன் பழுப்பு நிலக்கரியை 1961 ஆரம்பத்திற்குள் எடுக்க வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறார்கள். ஆனால் அங்கு நடைபெறுகிற வேலையைப் பார்க்கவேண்டும். ஒரு பகுதியில்தான் 104 அடி ஆழம் போய் இருக்கிறார்கள். ஆனால், மற்ற இரண்டு பகுதியில் எழுபத்தைந்து, எழுபது அடி ஆழம்தான் தோண்டியிருக்கிறார்கள். 1963 முடிவுக்குள்ளாவது கரி எடுக்க ஆரம்பிப்பார்களா, இல்லையா என்று சொல்ல முடியாமல் இருக்கிறது. ஆனால் வடக்கே உள்ளவர்களோ நம் மாநிலத்தில் நிலக்கரி எடுக்க முயற்சி செய்வதற்கு முன்பாகவே ரூர்கேலா, துர்காபூர், பிலாய் ஆகிய இடங்களில் எல்லாம் திட்டங்கள் போட்டு அவற்றைப் பூர்த்தி செய்துவிட்டார்கள். அங்கு இருந்து எடுக்கக்கூடிய இரும்புகளைக்கூட வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற அளவுக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய மாநிலத் திட்டத்தை அவர்கள் வேண்டுமென்றேதான் காலம் தாழ்த்தினார்கள். இனியாவது அத்திட்டத்தைத் துரிதப்படுத்த எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், நமக்கு அணு மின்சார சக்தி நிலையம் தேவை. தர்மல் ப்ளான்ட் 250 கிலோவாட்ஸ்—கிடைக்கும் வகையில் செய்வதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு 1961-62-ல் கூட மின்சாரம் கிடைக்காது என்று என்னால் உறுதியிட்டுக் கூற முடியும்.

(Sri K. Sattanatha Karayalar in the Chair.)

1963-ல் அங்கு ஏற்படுத்தப் போகிற உரத் தொழிற்சாலை நல்ல முறையில் செயல்படும், நல்ல பலனும் கிடைக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

[Sri M. Selvaraj] [7th September 1960

நெய்வேலி நிலக்கரியை வைத்து சேலத்தில் ஏற்படுத்த இருக்கிற இரும்புத் தொழிற்சாலையை வளப்படுத்தவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், மத்திய சுரங்க இலாகா அமைச்சர் அவர்கள் நெய்வேலியில் திட்டமுடிவில் எடுக்க இருப்பதாகச் சொல்கிற பழுப்பு நிலக்கரியின் அளவைக்கொண்டு சேலத்தில் இருக்கிற இரும்பைத் துளிக்கூட எடுக்க முடியும் என்று நினைப்பதற்கில்லை. மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் சேலம் இரும்புத் தொழிற்சாலை நிறுவப்படமாட்டாது என்று சந்தேகப்படவேண்டியதாக இருக்கிறது. இன்னும் புது ரயில்வே பாதைகள் போடுவதில் நமது தென்னகம் எவ்வாறு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நன்றாக எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். ஜனத்தொகை அடிப்படையில் நமது மாநிலத்திற்குரிய பங்கு பூராவையும் நமது அமைச்சர் அவை பெறுவதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு துறையிலும் நாம் புறக்கணிக்கப்பட்டு வருகிறோம். எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை எடுத்துக்கொண்டாலும் அதைத் தனியார் துறைக்கே தள்ளி விட்டார்கள். சர்க்கார் துறையில் சிலவற்றையும், தனியார் துறைக்கென்றே சிலவற்றையும், சர்க்காரும் தனியாரும் சேர்ந்து வைத்துக்கொள்ள சிலவற்றையும்—என்று தனித்தனியாக ஒதுக்கியிருக்கிறார்கள், இந்தத் திட்டங்களை. இன்றைக்குப் பார்க்கப் போனால் மோட்டார் டயர்களுடைய விலை நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில் மிகவும் அதிகமாக உயர்ந்து விட்டது. அதற்குக் காரணம் மோட்டார் வாகனங்கள் அதிகமாகியிருப்பது தான் என்று சொல்லப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழிற்சாலையை ஏற்படுத்தவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. அதை ஏற்றுக்கொண்டு அங்கே ரப்பர் தொழிற்சாலையை ஏற்படுத்தி டயர் உற்பத்தி செய்தால் ஓரளவு அதிக வசதி ஏற்படும். பல தொழில்கள் முன்னேற்றம் அடைவதற்கும் வாய்ப்பு ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதைப்பற்றியெல்லாம் சொல்லும்போது திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது, புறக்கணிக்கப்படுகிறது என்று சொல்வது வழக்கமான குறைபாடுதான் என்று எண்ணிவிடாமல் இதில் உள்ள உண்மையை உணரவேண்டும்.

காரணம் சொல்லப்படுகிறது, கடல் காற்று அடிக்கிறது, ஆதலால் அந்த இடம் சரியாகயில்லை என்று. தண்ணீர் வசதி இல்லாததால் எடுத்து விட்டார்கள் என்று காரணம் கூறியிருக்கிறார்கள். உண்மையிலேயே சென்னை மாநிலத்தில், தமிழ் நாட்டில் பெரிய தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதை மத்திய அரசாங்கம் விரும்ப வில்லை என்பதைத்தான் காட்டுகிறது. இதை மனதில் கொண்டு, அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிற உறுதி மொழிகளைக் கொண்டு இந்த மாநிலத்தில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, அணு மின்சார நிலையம் இவைகளைக் கொண்டு வருவதற்குண்டான வாய்ப்பினை தேடித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். [illegible] (மணியடிக்கப்பட்டது) அடுத்தபடியாக நம் [illegible] இன்றைய விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டிய [illegible]



7th September 1960] [Sri M. Selvaraj]

கள் எடுத்து விலைவாசிகளை கட்டுப்படுத்தினால்தான் நாம் எந்தத் திட்டத்தைப் போட்டாலும் அவைகளை ஓரளவு வெற்றிகரமாக்க முடியும் என்று கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* SRIMATHI A. S. PONNAMMAL தற்காலிக சபாநாயகர் அவர்களே, நமது அமைச்சர் அவர்களால கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். முதலில், என் தொகுதியைப் பொறுத்தமட்டில் மஞ்சளாறு திட்டம், தண்ணீர் திட்டத்திற்காக நிலக்கோட்டை, சோளவந்தான் இவைகளை எல்லாம் எடுத்திருப்பதற்காக அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அமைச்சர்களுக்கும் நான் என் தொகுதி மக்கள் சார்பில் எனது வணக்கத்தையும், பாராட்டுதல்களையும் முதற்கண் தெரியப்படுத்திக் கொள்கிறேன். அடுத்தபடியாக, இன்று ஒரு சர்வகலாசாலை கோவையிலோ அல்லது மதுரையிலோ ஏற்படுத்தலாம் என்று எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. கோவையில் வேண்டாமென்று சொல்லவில்லை. இருந்தபோதிலும் ப்ரயாரிடி பிரகாரம் சென்னைக்கு அடுத்த பெரிய நகரம் மதுரை மாநகரம். அப்படியிருந்தும் மதுரை இன்னும் பல துறைகளிலும் முன்னேற்றம் அடைய வேண்டிய நிலையில்தான் இருக்கிறது. மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, இதோடு திருச்சியையும் சேர்த்துக்கொள்ளலாம், இந்த ஐந்து ஜில்லாக்களுக்கும் பொதுவாக மதுரையில் இந்த சர்வகலாசாலை அமைப்பது நன்றாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இங்கு பேசும் போது பல கனம் அங்கத்தினர்கள் கூறினார்கள், இந்த 400 கோடி ரூபாய் அளவை வைத்துக்கொண்டு என்ன செய்யப்போகிறோம், குறைந்தது 700 கோடியாவது இருக்க வேண்டுமென்று கூறினார்கள். அவர்கள் சொல்கிற 700 கோடி அளவிற்கு மத்திய அரசாங்கத்திலிருந்து நம் அரசாங்கம் நல்ல முறையில் வாங்கி விடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது, எங்களைச் சார்ந்தவர்களுக்கும் இருக்கிறது. எப்படியென்றால், மத்திய சர்க்கார் எடுத்துக்கொள்ளக்கூடிய பல திட்டங்கள் இருக்கின்றன. நெய்வேலி நிலக்கரித் திட்டத்தை மத்திய அரசாங்கமே எடுக்கப் போகிறது. தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தை மத்திய அரசாங்கமே நேரிடையாக எடுக்கப் போகிறது. நீலகிரியில் பிலிம் தொழிற்சாலையை மத்திய அரசாங்கமே ஏற்றுக்கொள்ளப் போகிறது. சர்ஜிகல் யூனிட்ஸ்-யையும் மத்திய அரசாங்கமே ஏற்றுக்கொள்ளப்போகிறது. இவைகளை மத்திய அரசாங்கம் தென் மாகாணங்களில் எடுத்துச் செய்வார்கள் என்ற நம்பிக்கை யிருக்கிறது. அப்படி மத்திய சர்க்கார் எடுத்துச் செய்ய இருப்பதையும் சேர்த்துப் பார்க்கும்போது, பல கோடி ரூபாய்கள் நமக்கு சேருகிறது என்பதை 700 கோடிகூட இல்லையே என்று சொல்கிறவர்களுக்கு எடுத்து சொல்ல விரும்புகிறேன். முன் நூற்று தொண்ணூற்றெட்டு கோடி அளவிற்கு திட்டம் தீட்டியிருக்கிறோம். இதில் நாம் ஒன்றை மனதில் கொள்ள வேண்டும். நாம் திட்டம் வகுக்கும்போது, மனித சக்திக்கு முக்கியத்துவம்

கொடுத்து, வேலையில்லாதவர்களுக்கு, தொழில் இல்லாதவர்களுக்கு, வேலை செய்ய சக்தி இருப்பவர்களுக்கு எந்தவிதமான வகையும் இதுவரை செய்யாமல் இருந்து வருந்தத் தக்கது. லேபர் காண்ட்ராக்ட் சொசைட்டி ஏற்படுத்தி அங்கு வேலை செய்கிறார்கள். அவர்கள் உழைப்பின் பலனை மற்றவர்கள் சுரண்டாமல் இருக்க அவர்களுக்கு நல்ல பல சலுகைகள் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கு ரிபேட் கொடுக்கிறோம். மில் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்கிறோம். அதே போன்று இதில் வேலை செய்பவர்களுக்கு, இவர்கள் நாள் ஒன்றுக்கு 1, 1½ ரூபாய் கூலி பெறுகிறார்கள்—மூன்று மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது ஆறு மாதத்திற்கு ஒரு முறையோ இவர்களுக்கு போனஸ் கொடுப்பதற்கு அரசாங்கம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதற்கு வேண்டிய தொகை ஒதுக்கினால்தான், மனித சக்தியை இந்த நாட்டில் நல்ல முறையில் பயன்படுத்தக்கூடிய முறையில் திட்டம் வகுத்தவர்களாவோம். அவர்களுக்கு, மில்களில் வேலை செய்யக்கூடியவர்களுக்கு எப்படி உணவுப்பொருள்கள், மற்றும் துணிமணிகள் இவைகளை சேகரித்து குறைந்த விலையில் கொடுக்கப்படுகிறதோ அதேபோல் இவர்களுக்கும் கொடுக்கப்படவேண்டும். அப்படியானால்தான் நாம் மனித சக்தியை நன்கு பயன்படுத்தி சோஷியலிச சமுதாயத்தை வெகு சீக்கிரத்தில் அமைத்து விடமுடியும், என்ற நம்பிக்கை எல்லோருக்கும் இருக்கிறது. அடுத்தபடியாக, வீடு கட்டும் திட்டத்தை எடுத்துக் கொள்வோம். ரூரல் ஹௌஸிங் ஸ்கீம். பல சட்டங்கள் போட்டு, பல என்ஜினியர்களைப் போட்டு நகர் புறங்களில் வீடுகள் கட்டுகிறோம். அதே போன்றுதான் கிராமங்களிலும் வீடு கட்ட வேண்டுமென்ற நிபந்தனை இருக்கிறது. இதை கண்டிப்பாக மாற்றியாக வேண்டும். ஏனெனில், 2,000 ரூபாய் கடன் வாங்கி வீடு கட்டக்கூடியவர்கள் ப்ளான் போட்டு, எஸ்டிமேட் போட்டு சிறு சிறு ரூம்கள் கட்டினால் நாலைந்து குழந்தைகள் உள்ளவர்கள் ஒரு ஹாலில் படுத்துக்கொள்ள முடியாது. அவர்களிடமே பணம் கொடுத்து அவர்கள் நல்ல காற்றோட்டமான வீடுகள் கட்டிக் கொள்ளட்டும். ஆங்காங்கு கிடைக்கக்கூடிய "ரா மெட்டீரியல்ஸ்"-ஐ வைத்துக்கொண்டு வீடு கட்டிக்கொள்ளலாம். ஆகவே, ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ்-களை திருத்தியமைக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் கிராமங்களில் வீடு கட்டும் திட்டங்கள் நல்ல முறையில் நடக்கும். அடுத்தபடியாக, சோஷியலிஸ சமுதாயத்தில் பணக்காரர்களுக்கு பல துறைகளிலும் வரி போடப்படுகிறது. பஸ் ரூட்களுக்கு பெர்மிட் கொடுக்கிறோம். அப்படி பர்மிட் கொடுக்கும்போது 100 பஸ் வைத்திருப்பவர்களுக்கும், 150 பஸ்கள் வைத்திருப்பவர்களுக்கும், 200 பஸ் வைத்திருப்பவர்களுக்கும் மேலும் மேலும் பர்மிட் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த அவல நிலை போக்கப்படவேண்டும். நடுத்தர நிலையில் இருப்பவர்களுக்கு "ஷார்ட் ரூட்களை", நாலைந்து பேர்கள் சேர்ந்து நடத்துவதாகயிருந்தால் அவர்களுக்கு முதல் சலுகை கொடுக்கப்பட வேண்டும், என்று கலெக்டர்களுக்கு கண்டிப்பாக உத்தரவு அனுப்புவார்களேயானால்



சாதாரண மக்களும் பொருளாதாரத் துறையில் முன்னுக்கு வருவதற்குள்ள திட்டத்தை தீட்டியவர்களாவோம். முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைந்து, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடையும் தருவாயில், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஆரம்பிக்கும் நிலையில் இருக்கிறோம். ஹரிஜன மக்களுக்காக இன்று 15 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். அப்படி 15 கோடி ஒதுக்கியும் அவர்கள் இன்னும் பொருளாதாரத் துறையில் முன்னுக்கு வரமுடியாத நிலையில்தான் இருக்கிறார்கள். அவர்களின் "எக்கனாமிக் ப்ராப்ளம்" இன்னும் "ஸால்வ்" ஆக வில்லை. வீடு கட்டுவதற்காகவும், மனைக்கட்டுகள் வாங்கு வதற்கும் ஆறு கோடி ஒதுக்கியிருக்கிறோம். பல பேர்கள் சேர்ந்து ஒரு தொழிலை ஆரம்பிக்கவேண்டுமென்றால் அதற்கு மெஷின்ஸ் வேண்டும். அப்படி மெஷின்ஸ் வாங்க, சர்க்கார் கடன் வாங்கிக் கொடுத்தாலும்கூட நாலில் ஒரு பங்கு, அல்லது ஐந்தில் ஒரு பங்கு இவர்கள் முதல் பணம் கட்டவேண்டும் என்ற அளவில் இருக் கின்றன விதிகள். இந்த விதியை மாற்றி ஹரிஜன மக்களும், பின்தங்கிய மக்களும் பலர் சேர்ந்து ஒரு தொழில் செய்வதற்கு முன்வந்தால் ஐந்தில் ஒரு பங்கு, அல்லது நாலில் ஒரு பங்கு முன் பணம் கொடுக்கவேண்டும் என்பதை மாற்றி அதற்கு ஏதாவது வழி செய்தால் நலமாகயிருக்கும். அப்பொழுதுதான் அவர்கள் பொருளாதாரத் துறையில் முன்னுக்கு வருவதற்கு நாம் திட்டம் வகுத்தவர்களாவோம். அடுத்தபடியாக, ரோடுகள். கிணறு இல்லாத ஊர் இருக்கக்கூடாது, பள்ளிக்கூடம் இல்லாத ஊர் இருக்கக்கூடாது, ரோடு வசதியில்லாத ஊர் இருக்கக்கூடாது என்று நாம் திட்டம் போட்டிருக்கிறோம். அப்படியிருந்தும், ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குச் செல்ல "அப்ரோச் ரோடு" போடவேண்டுமென்றால் அவர்கள் 50 சதவிகிதம் போடவேண்டும், சர்க்கார் 50 சதவிகிதம் கொடுப்பார்கள். ஆண்டு ஒன்றுக்கு 30 ரூபாய்கூட வருமானம் இல்லாத பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அவர்கள் பணத்திற்கு என்ன செய்வார்கள்? ஆகவே, ஊர்களை ஏ, பி, ஸி, டி என்று கிளாஸிபை செய்து எங்கு மிகவும் பின் தங்கிய மக்கள் இருக்கிறார்களோ, யார் 50 சதவிகிதம் பணம் கொடுக்கமுடியாத நிலையில் இருக்கிறார்களோ, உதாரணமாக எங்கள் தொகுதியை எடுத்துக்கொண்டால் பாளமேடு பிர்க்கா போன்றயிடங்களை எடுத்துக்கொண்டால், அங்கெல்லாம் 60 சத விகிதம், 70 சதவிகிதம், 80 சதவிகிதம் பணத்தை அரசாங்கமே கொடுத்து மீதி பணத்தை ஊரார் கொடுக்கவேண்டும் என்ற நிலையை ஏற்படுத்தினால் ரோடுகள் அமைப்பது சுலபமாக யிருக்கும். அடுத்தபடியாக, உணவு உற்பத்தியைப் பெருக்கு வதற்காக நாம் பல கோடி ரூபாய்கள் குறைந்த வட்டியில் கொடுக்கிறோம். அறுபது சதவிகிதம் கூட்டுறவு முறையில் மக்களுக்கு கடனைக் கொடுத்து வருகிறோம். இந்தக் கடனை வாங்கி தங்கள் சக்தியையும் பயன்படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்கினாலும்கூட உழைப்பின் சக்தியை அனுபவிக்க முடியாத நிலையில் இன்னொரு வியாபாரிக்கு விற்கும் நிலைதான் இருக்கிறது. வியாபாரிகள் குறைந்த விலையில் விவசாயிகளிடம் வாங்கி

உயர்ந்த விலைக்கு வேறுயிடங்களில் விற்றுவிடுகிறார்கள். இந்த அவல நிலையைப் போக்க வேண்டுமென்றால், ஒவ்வொரு ப்ளாக்கிலும், ப்ளாக் சம்பந்தப்பட்ட வரையிலாவது ஆங்காங்கு ஒரு மார்க்கெட்டிங் சொஸைட்டி ஏற்படுத்தி, ஒரு சொஸைட்டியிலிருந்து இன்னொரு சொஸைட்டிக்கு, ஒரு சொஸைட்டியில் கடலையிருந்தால் அதை இன்னொரு சொஸைட்டிக்கு கொடுத்து அங்கு நெல்லிருந்தால் அங்கிருந்து நெல்லையும், இப்படி ஒரு சொஸைட்டியில் இருப்பதை இன்னொரு சொஸைட்டிக்கு கொடுத்து அங்குள்ளதை இங்கு வாங்கி, இங்குள்ளதை அங்கு கொடுக்கக்கூடிய ஏற்பாடு இருந்தால் இந்த விலைவாசி உயர்வைத் தடுக்கமுடியும். அப்படிச் செய்வதால் உழைப்பின் பயனை உழைப்பவன் அனுபவிக்க முடியும் என்று நான் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

12-30 p.m.

(Deputy Speaker in the Chair.)

அதற்கு அடுத்தபடியாக ரயில் சம்பந்தமாக எடுத்துக் கொள்வோமென்றால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆறு அல்லது ஏழு திட்டங்களை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அதில் மதுரையில், திண்டுக்கல்-கூட்டூர் பாதையில் ரயில் வசதி வேண்டும் என்று அங்கு உள்ளவர்கள் பல நாட்களாக கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். திரு. என். ஆர். தியாகராஜன் போன்றவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். இதைப்பற்றி மத்திய சர்க்காருக்கு இந்த சர்க்கார் சிபாரிசு செய்யவில்லை என்று கேட்டு நாங்கள் மிகவும் வருந்துகின்றோம். அதையும் இந்த அரசாங்கத்தின் சிபாரிசுகளோடு சேர்த்திருப்பார்களேயானால் மத்திய அரசாங்கம் கருணைகொண்டு இந்த வேலையை நடத்த முன் வந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். ஆகவே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள்ளாக இந்த வேலையையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்யவேண்டும் என்று நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சில அங்கத்தினர்கள் சர்க்கார் அதிகாரிகள் ஆளும் கட்சிக்குப் பக்கபலமாக இருக்கிறார்கள் என்றும் சமுதாய நலத் திட்டங்களில் வீணாக அதிகச் சம்பளம் கொடுத்து வைத்திருப்பது சரியல்லவென்றும் கூறுகின்றார்கள். அதே சமயம் தங்கள் தங்கள் பகுதிகளுக்கு சமுதாய நலத்திட்டம் வேண்டும் என்றும் கேட்கிறார்கள். வெளியில் பேசும்போது எதற்காக சமுதாய நலத் திட்டத்தில் எஸ்.ஈ.ஓ. (எம்), எஸ்.ஈ.ஓ. (டபிள்யூ) என்றும் கேலியும் பேசுகின்றவர்கள் சட்டமன்றத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் போகவில்லையே என்று கூப்பாடு போடுவது வேடிக்கையாக இருக்கிறது.

**DEPUTY SPEAKER:** The Hon. Member's time is up. She should finish.

**SRIMATHI A. S. PONNAMMAL:** இவ்விதம் எல்லாம் வெளியில் [illegible] இங்கே வந்து வேலை வாய்ப்புகளைப் பெருக்கவேண்டும் [illegible] என்றால் அதில் அவர்கள் சொல்லுவதில் எந்த அளவு





உண்மையிருக்கின்றது என்று எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இவர்கள் எல்லாம் மலைத்துப்போகின்ற அளவில் நம்முடைய திட்டங்களை எல்லாம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் திறமையாக செய்து முடிக்கவேண்டும், அதற்கு ஆண்டவன் அருள்புரிய வேண்டும் என்று கூறி என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** SRI R. CHIDAMBARA BHARATHI** கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை இந்த சபையில் பிரேரேபித்திருப்பதையும், அதன் பேரில் நடைபெறுகின்ற விவாதத்தையும் நான் கூர்மையாக கேட்டுக் கொண்டிருந்தபொழுது, எனக்கு ஒரு ஞாபகம் வந்தது. சம்பந்தியும் சம்பந்தியும் கல்யாணம் செய்து கொண்டார்கள். ஆனால் அவர்களுக்கு உறவினர்களாக இருப்பவர்கள் பொறுப்பில்லாமல் இருக்கின்றவர்கள், அதில் அக்கரையில்லாமல் இருக்கின்றவர்கள், இதில் அபிமானம் இல்லாதவர்களாக இருக்கின்றவர்கள், கல்யாணம் நடத்துகின்றவர்களைப் பார்த்து, கல்யாணம் நிச்சயிக்கும்போது ஏன் என்னிடத்தில் கேட்கவில்லை, மாப்பிள்ளை பார்க்கும்போது என்னை ஏன் அழைக்கவில்லை, ஜாதகம் பார்க்கும்போது என்னை ஏன் கலந்து கொள்ளவில்லை, என்றெல்லாம் பொறுப்பில்லாமல் கேட்டுக்கொண்டேயிருப்பார்கள். பின்னால் சமுதாயத்திலுள்ள பல நல்ல பெரியார்கள் முன்வந்து அவர்களை வேண்டி சமாதானப்படுத்தி கல்யாணத்திற்கு அழைத்துக்கொண்டு வருவார்கள். கல்யாணத்திற்கு முன் பந்தியில் அவர்கள்தான் இருப்பார்கள். அங்கேயிருந்தும் சொல்லிக்கொண்டிருப்பார்கள், இந்த சேலையைப்பாருங்கள், நான் இதை எடுக்கச்சொல்லியிராவிட்டால், இதை இவர்கள் எடுத்திருக்க மாட்டார்கள் என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருப்பார்கள். அதே போன்று மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி இங்கு பலர் (கிரிட்டிசிஸம்) விமர்சனம் செய்துகொண்டிருந்தார்கள். முன்னால் நடந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களும் நடக்காமல் இருப்பதற்குரிய ஆலோசனைகளை எல்லாம் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இப்போது ஒரு மாதிரியாக அதிகாரிகளும் நமது அமைச்சரவையும் சேர்ந்து ஒரு நல்ல திட்டத்தை கொண்டுவந்திருக்கிறார்கள். அதை இப்போது அமல் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்போது, நாங்கள் எல்லாம் முன்னால் உட்கார்ந்து ஆலோசனை சொன்னதின் காரணமாக இந்தத் திட்டம் வர முடிந்தது. அதன் காரணமாக திராவிட நாடு அமைவதை அரசாங்கம் ஒப்புக் கொண்டது போலவும் இங்கு ஒருசிலர் பேசுகிறார்கள். சமுதாயத்தில் தான் முன்பு குறிப்பிட்டதைப்போல் சில சம்பவங்களை எப்படி தவிர்க்க முடியாதோ அதேபோல் அரசியலிலும் இது தவிர்க்க முடியாதபடி இருக்கிறது. அந்த முறையில்தான் இங்கு கூறினவைகளை எல்லாம் கேட்டுக்கொண்டிருந்தேன். நமது நிதி அமைச்சர் அவர்கள் நல்ல ஆற்றல் உள்ளவர்கள், நல்ல திறமைசாலி, அவர்கள் இதைப்பற்றி இன்னும் கூடுதலாக, சாங்கோபாங்கமாக சாற்றுவார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் இந்தத்

திட்டத்தைச் சமர்ப்பித்து பேசிய பேச்சானது, இந்த தேசத்தினுடைய மூலை முடுக்குகளில் எல்லாம் இருக்கின்ற பிரச்னைகளை ஆராய்ந்து நம் சபையின் முன் வைக்கப்பட்ட அம்சம் என்றுதான் சொல்லவேண்டும். முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியதின் காரணமாக இந்த நாட்டில் போதிய அளவு சேமிப்பு சக்தி வளரவில்லை என்பதைப்பற்றி குறிப்பிட்டார்கள். இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் சுமார் 269 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறோம். இதையெல்லாம் இரும்பு, மரங்கள், சிமின்ட், இவைகளில் எல்லாம் செலவு செய்திருக்கிறோம். இதில் வேலை செய்த கான்டிராக்டர்களுக்கும் நல்ல லாபம் கிடைத்திருக்கும். மூன்றில் ஒரு பங்கு ரூபாய் சாதாரண உழைப்பாளர்களுக்குத்தான் போய் சேர்ந்திருக்கவேண்டும். ஆனால் அதை அவர்கள் சேகரித்து வைத்திருக்கிறார்களா என்று பார்த்தால், மக்களிடம் சேமிப்பு சக்தி இல்லை என்ற முடிவுக்குத்தான் நாம் வந்திருக்கிறோம். ஆகவே மக்களிடம் சேமிப்பு சக்தியை நாம் வளர்த்தாக வேண்டும். சேமிப்புகள் எல்லாம் மறுபடியும் நாட்டினுடைய திட்டங்களுக்கு பயன்படுத்தக்கூடிய முறையில் இருக்கவேண்டும் என்றும் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது மிகவும் வரவேற்க வேண்டிய அம்சம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் உழைப்பாளர்களிடம் சேர்ந்த பணம் எங்கே சென்றிருக்கிறது என்பதைத்தான் நாம் ஆலோசிக்கவேண்டும். இதில் நான் ஒரு கருத்தை தெரிவிக்க விரும்புகிறேன். நான் மிகவும் திறமையாக இதை தெரிவிக்கிறேன் என்று யாரும் நினைக்க வேண்டிய தேவையில்லை. நாம் நல்ல ரோடுகளைப் போடுகிறோம். அதன் காரணமாக டயர்கள் அதிகமாக தேய்வதில்லை. ஸ்பெயர் பார்ட்ஸ் அதிகமாக பழுது அடைவதில்லை, இவ்விதமாக செலவு குறைகிறது. இது சாதாரணமாக எல்லோருக்கும் தெரிந்த விஷயம். எல்லா தொழில்களையுமே தேசிய மயமாக்கவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். நான் தேசியமயமாக்க வேண்டும் என்று சொல்வதை எதிர்ப்பவர் அல்ல. சர்க்கார் உடமையாகிவிட்டால் அவைகளை என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்கின்ற நிலை, சர்க்கார் கார் என்றால் அதை நெருப்பு வைத்து கொளுத்தலாம் என்கின்ற எண்ணம், இத்தகைய மனப்பான்மை வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்த மனப்பான்மை நீங்குகிற வரையிலும் தேசியமயமாக்க வேண்டியது அவசியமில்லை, என்பதுதான் என்னுடைய கருத்து. நமமுடைய வருமானம் எல்லாம் முக்கியமாக எங்கே போய் சேருகிறது என்று யோசித்துப்பார்த்தால், ஒரு விஷயத்தை நாம் அனைவரும் புரிந்து கொள்ள முடியும். எந்த ஒரு 10 கிராமங்களை எடுத்துக் கொண்டாலும் சரி, அங்கு மூன்று, நான்கு டூரிங் சினிமா தியேட்டர்கள் இல்லாமல் இராது. பத்து வருடங்களுக்கு முன்னால் இரண்டு தியேட்டர்கள் இருந்த இடத்தில் இப்போது பத்து, பன்னிரண்டு தியேட்டர்கள் இருக்கின்றன. முன்பு ஆறு மாதம், பத்து மாதத்திற்கு என்று ஒரு சினிமாப் படம் வெளி வந்து கொண்டிருக்கும், இப்போது 15 தினங்களுக்கு ஒரு படம் வெளிவந்து கொண்டிருக்கிறது. அதிலும் முன்பு 50 ஆயிரம்





ரூபாய் செலவு செய்யப்பட்டது என்றால், இப்போது ஆறு லட்சம் ஏழுலட்சம் செலவு செய்து ஒவ்வொரு படமும் எடுக்கப்படுகிறது. இந்த நாட்டிலுள்ள ஸ்டுடியோக்கள் எல்லாம் போதாது என்று வெளியே போய் படம் எடுக்கிறார்கள். இந்த அளவுக்கு சினிமாத் துறை வளர்ந்திருக்கிறது. இதில் போடக்கூடிய பணம் எல்லாம் இதில் ஈடுபட்டிருக்கிறவர்களுடைய சொந்தப்பணம் அல்ல. யாரும் பைத்தியக்காரத்தனமாக இதில் மூலதனம் போட்டு தங்கள் பணத்தை செலவு செய்ய முன் வர மாட்டார்கள். அப்படியானால் இந்தப்பணம் யாருடைய பணம் என்று ஆலோசித்துப்பார்த்தால், இவை எல்லாம் நாட்டிலுள்ள சாதாரண மக்களுடைய பணம் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும். இன்றைக்கு சாதாரணமாக ஒரு சினிமா தியேட்டரில் போய் பார்த்தால் இரண்டரை ரூபாய், மூன்றரை ரூபாய் ஸீட்டுகளில் எல்லாம் அதிகமாகவும் ஓசி டிக்கட் உள்ளவர்களும், அதிகாரம் உள்ளவர்களுமாகத்தான் இருப்பார்கள். அது தவிர வெளியூரிலிருந்து நிச்சயம் பார்த்துத்தான் ஆகவேண்டும் என்ற முறையில் ஒன்றிரண்டு பேர்கள் வந்திருப்பார்கள். மீதியிருக்கக்கூடிய ஆறரை அணா, எட்டு அணா ஸீட்டுகளில் எல்லாம் அந்தந்த இடங்களிலுள்ள சாதாரண மக்கள்தான் அதிகமாக இருப்பார்கள். இந்த அளவுக்கு இன்றைக்கு சினிமாத்துறையில் வருமானம் பெருகியிருக்கிறது. இவ்வளவு தூரம் பெருகியிருப்பதைப் பார்த்து நான் பொறாமை கொள்ளவில்லை. நம் ராஜ்யத்தில் எல்லாத் துறையிலும் வருவாய் பெருக வேண்டியதுதான். ஆனால் இப்பேர்ப்பட்ட வருமானம் ஒரே இடத்தில் குவிந்து கிடக்கிறது, சினிமாக்கதை எழுதுகிறவர்களிடத்தில் குவிந்து கிடக்கிறது, சினிமா நடிகர்களிடம் குவிந்து கிடக்கிறது, சினிமா தியேட்டர்காரர்களிடம் குவிந்து கிடக்கிறது. அவ்வாறு குவிந்திருக்கும் பணம் எந்த அளவுக்குச் சமுதாயத்திற்குத் தீமை அளிக்கிறது என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டியது மிகவும் அவசியம். அங்குள்ள பணத்தையும் நாட்டின் ஆக்க வேலைகளுக்காக உபயோகப்படுத்துவது பற்றித் தீர்மானிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிழக்கு ராமநாதபுரம் பகுதியில் வைகை நதித் திட்டத்திற்காக 125 லட்சம் ரூபாய் ஒதுக்கி இருப்பதை நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில் தொழில் துறையைப் பற்றிப் பார்க்கும்போது அங்கு தொழில் துறை வளரவில்லை என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். அது பற்றிப் பல முறை இந்தச் சபையில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். கிழக்கு ராமநாதபுரம் பகுதி வறுமை மிகுந்தது என்று மாத்திரம் சொல்லவில்லை, அது எந்த நிலைமையில் இருந்தது என்றால், தமிழ் நாட்டின் சுதந்திரத்திற்கும் இந்திய நாட்டின் சுதந்திரத்திற்கும் பண்டைய நாளைய முஸ்லீம் காலம் தொட்டு சுதந்திரத்திற்காக அடிபட்டு, மிதிபட்டு பல கஷ்டங்களுக்கு உள்ளாகி ஆழ்ந்துபோன பகுதி. இரண்டு சமஸ்தானங்களால் ஆளப்பட்டு வந்தது, ஜமீன் அபாலிஷனுக்குப் பிறகுதான் அங்குள்ள மக்கள் ஓரளவு சௌகரியமாக இருக்கும்

[Sri R. Chidambara Bharathi] [7th September 1960

நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பகுதியில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. அங்கு திருப்பத்தூர் தாலூகாவில் இரும்புக் கனி அதிகமாக இருப்பதாகத் தெரிகிறது. அங்கிருந்து இரும்புக் கட்டி எடுக்கப்பட்டு சர்க்காருக்குக்கூட அனுப்பப்பட்டது. சேலம் இரும்புக்கனியைப் பார்க்கிலும் அதிக இரும்பு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. மானாமதுரைப் பகுதிகளிலும் இரும்பு இருக்கிறது. சிவகங்கையில் உள்ள கரும்பைக் கொண்டு அங்கு ஒரு சர்க்கரை ஆலையை நிறுவுவது பற்றிச் சர்க்கார் யோசித்து வருகிறார்கள். சிவகங்கை தாலூகா, மானாமதுரை ஆகிய பகுதிகளில் உள்ள கரும்பில் அதிக இனிப்புச் சத்து இருக்கிறது. ஆகவே, அங்கு ஒரு சர்க்கரை ஆலையை நிறுவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சர்க்கரை ஆலைக்குத் தேவையான அளவுக்கு அங்கே கரும்பு விளைகிறது. அதோடு கூட்டுறவு முறையில் ஒரு சர்க்கரை ஆலையை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அது மூன்றாவது திட்டத்தில் காணப்படவில்லை. அதைப் பற்றியும் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிழக்கு ராமநாதபுரம் பகுதியில் மானாமதுரை, திருப்புவனம், இளையான் குடி மூன்றும் பெரிய நகரங்கள். இவை மூன்று வருஷத்திற்கு முன்னால் எப்படி இருந்ததோ அப்படியேதான் இன்றும் காட்சி அளிக்கிறது. முக்கியமாக இளையான்குடியில் ஒரு தொழில் பேட்டை அமைப்பதைப் பற்றி சர்க்கார் யோசித்து வருவதாகத் தெரிகிறது. அதை உடனடியாக அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இன்னொன்று. அது அச்சுப் பிழையாக இருக்குமோ என்று கருதுகிறேன். அவ்வாறு இருந்தால் அதைக் கவனிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். வைகை அணைக்கட்டில் இருந்து இரு வாய்க்கால்கள் கிழக்கு ராமநாதபுரம் பகுதிக்கு வைகை கரைகள் வழியாக கட்டப்படவேண்டும் என்று மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட ஏடுகளில் இருக்கிறது. வைகை நதியில் கட்டப் பட்டு இருக்கும் போரணையிலிருந்து இரண்டு பகுதிகளாக விடப்பட்டிருக்கின்றன. இரண்டு பகுதிகள் இருக்கும் இடத்திலும் இரண்டு கால்கள் வேண்டுமென்பதுதான் சிவகங்கை மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. இதை சிவகங்கை விவசாய மகாநாட்டிலும் வற்புறுத்திக் கூறியிருக்கிறேன். அதைச் சர்க்கார் ஆராய்ச்சி செய்து மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க முடிவு செய்யப் பட்டிருக்கிறது. சர்க்கார் புத்தகத்தில் அச்சுப் பிழை இருந்தால் திருத்திக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு மிக முக்கியமான விஷயம் கவனிக்கப்படாமல் இருக்கிறது. தஞ்சையிலும், மாயவரத்திலும், திருச்சியிலும் நகரத்தின் மத்தியில் பாசன ஆறுகள் ஓடுகின்றன. அதேபோல் வைகைப் பாசனக் கால்கள் மதுரை நகர் வழியாக ஓடுகின்றன. நகர மக்களுக்கு அதனால் எந்த விதமான லாபமும் கிடையாது. தண்ணீர் வருமானம் நேரடியாக முனிசிபாலிடிக்குச் செல்வ தில்லை. அந்த நதிக்கு தஞ்சை, மாயவரம், திருச்சி போன்ற



7th September 1960] [Sri R. Chidambara Bharathi]

இடங்களில் சர்க்காரே செய்து இருப்பதுபோல் கால்களுக்கு அலகல்படித்துறை கட்டவேண்டும். கோயம்புத்தூரை எடுத்துக் கொண்டால் அழகான மலைகள் இருக்கின்றன. சென்னையில் கடற்கரை இருக்கிறது. மதுரை நகரம் சென்னைக்கு அடுத்த பெரிய நகரம். சுமார் ஆறு லட்சம் மக்களுக்கு அதிகமாக அங்கு வசிக்கிறார்கள். அங்கு, மாலை நேரத்தில் எங்காவது உல்லாச மாகச் செல்லவேண்டுமானால் போவதற்கு இடமே கிடையாது. மிக வசதி உள்ளவர்கள் மூன்று மைல்கள், நான்கு மைல்கள் தூரம் சென்று வரலாம். மதுரை நகரில் வைகை நதி அழகாகச் சென்று கொண்டிருக்கிறது. நதியின் இரு பக்கங்களிலும் புறம்போக்கு நிலம் அதிக அளவில் இருக்கிறது. அந்த இரண்டு பக்கங்களிலும் ரோடு அமைத்து, பூங்காக்கள் அமைத்துக் கொடுப்போமேயானால் ஜனங்கள் 4, 5 மைல் தூரம் போகாமல் அங்கே மாலைப் பொழுதை உல்லாசமாகக் கழிக்க முடியும். இதைப் பற்றிப் பல காலமாகச் சொல்லி வருகிறோம். நான்கு ஜில்லாக்களுக்குத் தலைநகராக மதுரை இருப்பதால் இந்த வசதியை உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதுரை நகரில் இல்லாத விவசாயக் கல்லூரி, வெட்டர்னரி காலேஜ் இரண்டையும் அமைத்து மதுரைக்கு ஒரு யுனிவர்சிட்டியையும் அவசியம் அமைத்துக் கொடுக்கவேண்டும். அது மிக முக்கியம் என்பதும், நியாயமும் கூட.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நிதி குறைவாக இருக் கிறது என்று கூறுகிறார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டமிடப்பட்டது 150 கோடி ரூபாய். ஆனால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் பார்த்தால் 187 கோடி ரூபாய் அளவுக்குச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. 37 கோடி ரூபாய் அதிகமாகச் செலவு செய்திருக்கிறோம். மத்திய சர்க்கார் அவசியப்பட்டால் அவர்கள் சக்தி, நம் சக்தி இரண்டையும் பார்த்து திட்டமிட்ட அளவுக்குமேல் பணம் தேவைப்பட்டால் பணம் அங்கிருந்து வர ஏதுவாக இருக்கும் என்று கூறிக்கொண்டு எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM: தலைவர் அவர்களே, முதலாவது ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப் பட்டு இப்போது மூன்றாவது திட்டத்தின் தலைவாசலில் நிற்கின்ற தருவாயில், இங்கு முதலிலே அகில இந்திய ரீதியிலே நகல் திட்டத்தைப் பரிசீலனை செய்து, அதற்குப்பின் இங்கு பேசிய ஒவ்வொருவரும் மாநில வாரியாகவும், கடைசியில் மாவட்ட வாரியாகவும் அவரவர்கள் தொகுதியில் போய் முடியக் கூடிய வாய்ப்பு எல்லா அங்கத்தினர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நோக்கில், சமுதாய அபிவிருத் தியை அடிப்படையாகக் கொண்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். தனி யார் துறையிலே அதிகமான அளவுக்குப் பணம் ஒதுக்கப்பட்

டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. பொதுத் துறையிலும அதிகப்பணம் செலவழிக்கப்பட இருக்கிறது. தனியார் துறையில் அதிகமான அளவுக்குத் தொகை கொடுத்திருப்பது சோஷலிச சமுதாயம் என்ற பேச்சுக்கு மாறுனது என்று அங்கத்தினர்கள் கூறினார்கள். நிதியமைச்சர் அவர்கள் நேற்றையதினம் மிகவும் தெளிவாக எடுத்து உரைத்தார்கள். ஒன்று கம்யூனிசப் பாதையில் போகவேண்டும். அது இல்லாவிட்டால் ஜனநாயக பாணியில் நம் சமுதாயத்தில், சமூக அமைப்பிலே மேல் தளத்திலும் அடித் தளத்திலும் இருக்கக் கூடியவர்களுக்கு இடையே உள்ள மேடு பள்ளத்தைச் சமப்படுத்தி ஒரு சமுதாயத்தை அமைக்க வேண்டும். ஜனநாயகத்தைப் பின்பற்றும் நாம் நம் நாட்டினுடைய சூழ்நிலைக்கும், நாட்டின் பண்டைய கலாசாரத்திற்கும், பண்பாட்டிற்கும் தகுந்த முறையில்தான் நாம் ஏற்றுக் கொண்டிருக்கக்கூடிய காரியங்களைச் செய்யமுடியும். கம்யூனிஸ்ட் நாடுகளிலே கட்டாயத்தின் பேரில் அரசாங்கமே அத்தனை உரிமைகளையும், தனி மனிதனின் சக்தி, உடமைகள், தொழிலாளர்களின் உழைப்புச் சக்தி அத்தனையையும் தன்னிடமே வைத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, அங்கு ஒரு சில எதேச்சாதிகாரிகளின் கையில் சிக்கிக் கொண்டிருப்பதன் மூலமாக அங்குள்ள எல்லாத் தொழில்களையும் அரசாங்கமே கைக்கொண்டிருக்கிறது. அமெரிக்கா தேசத்தில் . . . .

"Every labourer is a Capitalist and every Capitalist is a labourer" அப்படி நம் நாட்டில் அமைத்திருக்கிறோம். ஆகவே, நம் நாட்டில் இரண்டு துறைகளிலும் தொழில்களை ஏற்று நடத்துகிறோம். பஸ் போக்குவரத்தைப் பொதுத் துறையில் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சில அங்கத்தினர்கள் சொல்கிறார்கள். பஸ் தொழிலானது எல்லாரது கண்களையும் உறுத்திக் கொண்டிருக்கிறது.

பஸ் ட்ரான்ஸ்போர்ட்டைப் பொறுத்த வரையில், சில வருஷங்களுக்கு முன்பு நம் சென்னை மாநிலத்தில் ஒரு சில பணக்காரர்கள் ஒரு சில லட்சாதிபதிகள் மட்டுமே நடத்திக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது அந்த நிலை போய், ஸ்மால் ஆபரேட்டர்கள்கூட, ஒன்றிரண்டு பஸ் வைத்துக்கொண்டு நடத்திக்கொண்டிருப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறதென்றால், இதுவும் நாட்டிலுள்ள செல்வத்தைப் பரவல் முறையில் அமைக்க வகை செய்கிறது. இதை ஏன் நாம் கவனித்துப் பார்க்கக்கூடாது என்று நான் தாழ்மையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நாட்டிலுள்ள செல்வத்தைப் பரவல் முறையில் ஆக்கவேண்டும் என்று சொல்லும்போது, அமெரிக்க தேசத்தில் இருக்கும் சமுதாய அமைப்பில் இருக்கவேண்டும் என்று சொல்கிறோம். மண் குடத்தை எல்லோர் கையிலும் கொடுப்பதைவிட, பொன் குடத்தை எல்லோர் கையிலும் ஏன் கொடுக்கக்கூடாது என்று நம்முடைய நாட்டில் உள்ளவர்களால் கருதப்பட்டு நகல் திட்டம் உருவாகி, இது மக்கள் திட்டமாக அமைந்திருக்கிறது.



சட்ட மன்றத்திற்கு வெளியிலே பல அறிவாளிகள்கூட, "திட்டம் என்பது ஒரு (ஒயில்டு எலிபென்ட்) மத யானை; அதைக் கட்டித் தீனி போடுவதுபோல, மக்களுடைய வரிப் பணத்தை வீணாக்குவதா?" என்று பிரசாரம் செய்கிறவர்கள் இந்தச் சட்ட சபையின் முன்னால் வந்து, 'திட்டம் வேண்டாம்' என்று சொல்லும் தைரியம் அவர்கள் மனதில் வருமா என்று நான் கேட்கிறேன். மக்கள் திட்டமாக, எல்லோரும் வரவேற்கத்தக்க முறையில் அது அமைந்திருக்கிறது.

வரி போடப் போகிறோம் என்று குறிப்பிட்டார்கள். மறைமுக வரியைத் தாங்க முடியாத நிலைமை ஏற்படும் என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடியதுதான். ஆனால், நாட்டிலுள்ள அத்தனை பேருக்கும் சௌகரியம் வேண்டுமென்று பார்க்கிறோம். ரோடு வசதி, போக்குவரத்து வசதி அமைத்துக் கொடுக்கும்போது அதன் பலன் எல்லோருக்கும்தான் கிடைக்கிறது. அப்படியிருக்க பணக்காரர்கள் மட்டுந்தான் நேர்முக வரி கொடுக்கவேண்டுமா? தார் ரோடில், சிமெண்ட் ரோடில் ஏழையும் போகிறான், பணக்காரனும் போகிறான். இப்படி அத்தனை பேருக்கும் வசதி கிடைத்திருக்கும்போது, அத்தனை பேர்களும் அவரவர்களுடைய சந்தாத் தொகையை, நாட்டு முன்னேற்றத்திற்காக, மறைமுக வரியாகக் கொடுக்கவேண்டுமென்ற முடிவுக்கு வருவோம். ஒரு சில பணக்காரர்கள் மட்டும் நேர்முக வரி கொடுத்துவிட்டால் நாடு முன்னேற்றம் அடைய முடியாது. ஐந்து லட்சத்திற்கு மேல் வருமான வரி கொடுக்கக் கூடியவர்கள் 100 அல்லது 110 பேர்கள் இருப்பார்கள் என்று சொன்னார்கள். நேர்முக வரி போட்டால் மட்டும் போதாது.

கடனைப்பற்றி கனம் அங்கத்தினர் திரு. ஸ்ரீனிவாச அய்யர் அவர்கள் சொன்னார்கள். 12 கோடி ரூபாய்க்குக் கடன் எழுப்பிய இரண்டு நாட்களுக்குள்ளேயே அதிகமாக வசூலாகிவிட்ட நிலை மக்களுக்கு ஐந்தாண்டுத் திட்டத்தில் இருக்கும் நம்பிக்கையை எடுத்துக் கூற ஒரு சந்தர்ப்பமாக இருப்பதை நாம் கவனிக்க வேண்டும். திட்டத்தின் பலன் விவசாயிகளுக்கு இன்னும் அனேகமாக எட்டவில்லை என்று சொன்னார்கள். நம்முடைய நாட்டில் 100-க்கு 70 பேர் விவசாயிகளாக இருக்கிறார்கள். திட்டத்தின் பலனை அவர்களே இன்னும் அனுபவிக்க முடியவில்லை என்ற நிலை இருக்கும்போது, பெரும்பாலான மக்களுடைய வீட்டுக்கு திட்டத்தின் பலன் இன்னும் பூராவாக எடுத்துச் செல்லப்படவில்லை என்பதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

தொழில் துறையைப் பொறுத்தவரையில் நல்ல முன்னேற்றம் காணும் வகைகள் இந்தத் திட்டத்தில் இருக்கின்றன. கனம் அமைச்சர் அவர்கள் நேற்று பேசும்போது, 'ரீஜினலிஸம்' என்னும் உணர்ச்சி வரக்கூடாது, அது நல்லதல்ல என்று சொன்னார்கள். கையிலோ காலிலோ முள் தைத்துவிட்டதென்றால் கண்ணில் தண்ணீர் வருவதுபோல ஒரு மாவட்டத்திலே இருக்கும்

[Srimathi Rajathi Kunchithapatham] [7th September 1960

குறையை மேலே இருக்கிறவர்கள் அறிகிறார்கள் என்பதை உணருகிறோம். இருந்தாலும், அவரவர்களுடைய மாவட்டத்தில் இருக்கும் குறைகளை எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியாது என்பதனால் எங்களுடைய நெல்லை மாவட்டத்தைக் குறித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

நெல்லை மாவட்டத்திற்கு நீர் வளம் ஏற்படும் என்று எதிர்பார்த்தோம். தாம்பிரபரணித் தண்ணீர்தான் கதியாக இருக்கிறது. அதை முழுதும் பயன்படுத்தியாகிவிட்டது. அடுத்தபடி பம்பையாறு திட்டம் இருக்கிறது. ஒரு சில வாரங்களுக்கு முன் வந்த செய்தியில் அந்தப் பம்பையாறு திட்டத்திற்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டாற்போல் தோன்றுகிறது. சங்கரன்கோயில், கோயில்பட்டி பகுதிகள் மிகவும் பஞ்சப் பகுதிகளாக இருக்கின்றன. அந்தப் பிராந்தியத்திற்குப் பயன்படக்கூடிய கீரியாறு, ராம நதி, கல்லாறு திட்டங்களைப் பரிசீலனை செய்து திட்டத்தில் சேர்த்துக் கொண்டு விவசாயிகளுக்கு ஒரு விமோசனத்தைத் தேடித்தர வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இந்தத் திட்டங்களை இன்னும் மும்முரமான வகையிலே பரிசீலிப்பதற்காக கமிட்டி அமைக்கப்பட்டு, விவசாய முன்னேற்றத் திட்டங்களுக்கு ஆவன செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நெல்லை ஜில்லாவை ' ford of South India என்று சொல்வதுண்டு. மற்ற மாவட்டங்களில் கல்லூரிகள் ஏற்படுவதற்கு முன்பாகவே திருநெல்வேலி மாவட்டத்தில் ஏற்பட்டதன் காரணமாக, இன்று அங்கு பல கல்லூரிகள் இருக்கின்றன—ஆண்களுக்கும், பெண்களுபகும். அந்த வகையிலே அங்கே ஒரு இன்ஜினியரிங் கல்லூரி வேண்டும். தூத்துக்குடியில் வ. உ. சிதம்பரனார் பேரால் ஒரு இன்ஜினியரிங் கல்லூரி துவக்குவதாகச் சொல்கிறார்கள். தூத்துக்குடியில் இன்ஜினியரிங் கல்லூரி வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்கிறேன்.

பாளையங்கோட்டையில் 25 லட்ச ரூபாய் செலவில் பெரிய ஆஸ்பத்திரி கட்டுகிறார்கள். அங்கே மருத்துவக் கல்லூரி ஏற்படுத்தினால் மிகவும் சந்தோஷத்தோடு வரவேற்கக்கூடிய நிலையில் மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மதுரையில் ஒரு மருத்துவக் கல்லூரி இருக்கிறது. திருநெல்வேலியில் ஒன்று துவக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தெற்கே இருக்கும் மாவட்டங்களை எடுத்துக் கொண்டால், கன்னியாகுமரி, இராமனாதபுரம், திருநெல்வேலி இந்த மூன்று மாவட்டங்களுக்கும் நடுநாயகமாக திருநெல்வேலி விளங்குகிறது. அங்கே ஒரு சர்வகலாசாலை ஏற்படுத்தப்படவேண்டும். சர்வகலாசாலை மதுரைக்கு வேண்டுமென்று மதுரை எம்.எல்.ஏ.-க்கள் கேட்டுக் கொண்டார்கள். மதுரையில் வைத்துவிட்டால் அது ஒரு கோடியிலே போய்விடும். ஆனால், கன்னியாகுமரி, இராமனாதபுரம், மதுரை ஆகிய ஜில்லாக்களுக்கு நடுநாயகமாக இருப்பது நெல்லை



7th September 1960] [Srimathi Rajathi Kunchithapatham]

அங்கே அந்தச் சர்வகலாசாலை இருக்கவேண்டுமென்ற என் தாழ்மையான அபிப்பிராயத்தை மந்திரி அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளுகின்றேன்.

தூத்துக்குடி துறைமுகத்தை 45 லட்ச ரூபாய் செலவில் அபிவிருத்தி செய்வதற்கு அனுமதி இருப்பதாகச் சொல்கிறார்கள். இன்று அதிகமாக அணைக்கட்டுத் திட்டங்கள் செய்வதற்கில்லை என்று முடிவு செய்யப்பட்ட பின் தொழில் வளம் ஆவதற்குத்தான் வழி தேடவேண்டும். தொழில் துறை, வியாபாரத் துறை முதலியவை பெருகினால், நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் போகமுடியும், மக்களுடைய வாழ்க்கைத் தரமும் உயரும். தூத்துக்குடித் துறைமுகம் விஸ்தரிக்கப்படுமானால் அதனால் மக்கள் மிகவும் பயன் அடைவார்கள். தென் கோடியில் இருக்கும் தூத்துக்குடிப் பகுதிக்குப் பல தடவை அமைச்சர் அவர்கள் வந்து பார்த்து அங்குள்ள மக்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு ஆவன செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை அவர்கள் கவனிக்கவேண்டும். நாற்பத்தைந்து லட்ச ரூபாய் அதனுடைய அபிவிருத்திற்குப் போதவே போதாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

தென் பிராந்தியத்தில் புதிய ரயில் பாதைகள் போடுவதென்றால், நிலக்கரி தூரத்திலிருந்து வர வேண்டியிருப்பதால் ரொம்ப நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். அம்மாதிரியாகச் சொல்லிவிட்டால் அங்கிருக்கும் மக்களை ஆறுதல் செய்துவிட முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன், கரி வெகு தூரத்திலிருந்து வருகிறதனால் அதிகச் செலவாகிறது என்றால், பெரம்பூரில் தயாராகும் ரயில் பெட்டிகள் மற்ற இடங்களுக்குப் போகும்போது அதிகச் செலவு ஏற்படவில்லையா, அதிக சிரமம் இல்லையா ? இருந்தாலும் மற்ற இடங்களுக்கு விஸ்தரிக்காமலா இருக்கிறார்கள் ? கரி எங்கிருந்து வருவதாக இருந்தாலும் சரி, கன்யாகுமரி வரையில் ரயில் பாதை போடவேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன். அந்த மாவட்டத்திலுள்ள மக்கள், குறிப்பாக அங்கிருக்கும் குழந்தைகள், இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் நடந்தும்கூட இன்னும் ரயில் எப்படியிருக்கும் என்றுகூடத் தெரியாமல் இந்த யூ-2 விமான காலத்தில் இருக்கிறார்கள். அடுத்த ஐந்தாண்டுத் திட்ட காலத்திலாவது அங்குள்ள குழந்தைகள் அவர்கள் பக்கத்தில் ரயிலைப் பார்க்க வாய்ப்பு இல்லாத துர்ப்பாக்கிய நிலை கட்டாயம் போக்கப்பட வேண்டும். திருநெல்வேலியிலிருந்து கன்யாகுமரிக்கு கட்டாயம் ரயில் பாதை போடப்படவேண்டும். கன்யாகுமரி ஜில்லாவை எடுத்துக்கொண்டால், அரசியல் ரீதியாகப் பார்த்தாலும் அது மிகவும் ஸ்ட்ராடஜிக் பொஸிஷனில் இருக்கிறது. கன்யாகுமரி இந்தியாவின் தென்கோடியில் இருக்கிறது. அதை ரயில்பாதை மூலம் இணைத்துவிட்டால், இந்தியாவின் வட கோடியிலிருந்து தென்கோடி வரைக்கும் ரயில் பாதை மூலம் இணைத்துவிட்டோம் என்று பெருமை அரசாங்கத்திற்கு ஏற்படும். அதோடுகூட, அங்கேயுள்ள மக்கள் 45 மைல் தூரம் சென்றால்தான் திருவனந்தபுரம் ரயில் நிலையத்தைப் பார்க்க முடியும். வடக்கே திருநெல்வேலி

[Srimathi Rajathi Kunchithapatham] [7th September 1960

ஜங்ஷன் இருக்கிறது. அதுவும் 48 மைல் தூரத்தில் இருக்கிறது. இப்படியாக கன்யாகுமரி மாவட்டத்தை ரயில் தொடர்பு இல்லாமல் அனாதையாக வைத்திருப்பது நல்லதல்ல. ஆகவே, ரயில் பாதையைக் கன்யாகுமரி வரையில் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நெல்லை மாவட்டத்தில் இருக்கும் சித்ரா நதியைப் பற்றி கனம் அங்கத்தினர் திரு. சுப்பையா அவர்கள் குறிப்பிட்டார்கள். அதே போல், கல்லாறு, ராமநதி போன்று மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகள் இருக்கின்றன. இனிமேல் அத்திட்டங்கள் வருவதற்கு வழி இல்லையென்றாலும், அதைப்பற்றிச் சிறிது ஆராய்ந்து பார்க்க வேண்டும். அமைச்சர் அவர்கள் மனது வைத்தால் கட்டாயம் அந்தத் திட்டங்கள் நடைபெறக்கூடும். சித்ரா நதி மேல் ஒரு அணைக்கட்டு கட்டவேண்டும் என்பதைக் கேட்டுக் கொண்டு, இந்தத் திட்டங்களில் அமைச்சர் அவர்கள் எங்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

1-00 p.m. SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட நகலைப்பற்றி ஆராய்வது அவசரம் மாத்திரமல்ல, அவசியமும்கூட; இதை உணர்ந்து, தீர ஆலோசனை செய்து, எல்லாக் கட்சியினர்களையும் உள்ளே அழைத்து ஒரு ஐந்தாண்டுத் திட்ட நகல் தயாரித்திருப்பது இதுதான் முதல் தடவை என்று எண்ணுகிறேன். அது வரவேற்கத் தக்கது மாத்திரமல்ல, அரசியல் நாணயத்தையும் பிற கட்சிகளுக்கு மத்தியிலே எழுப்புவதற்கு ஒரு வாய்ப்பாகவும் இருக்கும் என்று எண்ணுகிறேன். அந்த முறையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எல்லோரும் உட்கார்ந்து எது நம் மாகாணத்திற்கு நல்லது என்று யோசித்து நாம் தீட்டி இருக்கிறோம். நானூறு கோடி ரூபாய் செலவாகும் என்று எண்ணம். நானூறு கோடி ரூபாய் போதுமா, போதாதா, அல்லது ஆயிரம் கோடி ரூபாய், இரண்டாயிரம் கோடி ரூபாய் தேவையா என்று ஆராய்ச்சியிலே இறங்குவதற்கு முன்னால் நாம் இந்த நானூறு கோடி ரூபாயையும் நன்றாக பயன்படுத்தி எது முக்கியமான திட்டங்களோ அவற்றை விட்டுவிடாமல் முடிவாக்க் கொண்டுவருவதற்கு எதைச் செய்ய வேண்டுமோ, அதைச் செய்வதுதான் அவசியம். ஆயிரம் கோடி ரூபாய், இரண்டாயிரம் கோடி ரூபாய் என்று டாக்டர் லோகநாதன் அவர்கள் சொல்லிவிட்டார்கள் என்றால், பணம் வந்துவிடலாம், அந்தப் பணத்தைச் சரியான முறையில் பயன்படுத்தி, அதற்கு வேண்டிய 'டெக்னிகல் நோ ஹௌ' என்று சொல்லுவார்களே, அவர்களைப் பெற்று திட்டங்களை முழுவதும் வெற்றிகரமாக நிறைவேற்றுவது என்பது சாதாரண காரியமல்ல. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நமக்குக் கொடுத்திருந்ததைவிட ஓரளவுக்கு அதிகமாக செலவழித்து நம்முடைய மாகாணத்திலுள்ள அதிகாரிகளும், மற்றவர்களும் மிக சாமார்த்தியசாலிகள் என்பதை உணர்த்தியிருக்கிறோம். பணத்தை மட்டும் ஆசைப்பட்டு கேட்டால் போதாது. அதற்கேற்ற அளவிலே திட்டங்களை வெற்றிகரமாக



7th September 1960] [Srimathi T. N. Anandanayaki]

நிறைவேற்றுவதற்கு நாம் தயார் செய்து கொண்டிருக்கிறோமா என்பதை உணரவேண்டும். இதையெல்லாம் தீர ஆலோசித்து எந்தத் திட்டங்களை முக்கியமாக நிறைவேற்றவேண்டுமோ, அவைகளை விட்டுவிடாமல் நடத்த வேண்டும்.

இந்தத் திட்டம் 400 கோடி ரூபாய்க்கு அமைந்திருக்கிறது. இந்தப் பணத்தில் எவ்வளவு மக்களிடத்திலே வரிப் பணமாக வசூல் செய்யப்போகிறார்கள், எவ்வளவு மத்திய அரசாங்கத்தினிடமிருந்து வாங்கப் போகிறார்கள் என்பது பற்றி இப்பொழுது திட்டவட்டமாக ஒன்றும் சொல்ல முடியாது. ஆனால் நான் ஒன்று கண்டிப்பாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இனிமேல் வரி மாத்திரம் போடாமல், வேறு எந்த மாற்று வழியிலாவது பணம் சேகரிக்க முடியுமானால் அது மிக மிக வரவேற்கத்தக்கதாக இருக்கும். இனிமேல் வரிப் பளுவை தாங்குவதற்கு நமது மக்களுக்கு சிறிதும் சக்தி கிடையாது. 'டைரக்ட் டாக்ஸஸ்', நேர்முகமான வரி ஒன்றும் போடாமல், மத்திய அரசாங்கத்தினிடமிருந்து பணத்தை வாங்கியோ அல்லது கடன் எழுப்புவது போன்ற வேறு முறைகளைக் கையாண்டோ, அல்லது 'இண்டர்னல் ரிஸோர்ஸஸ்' வேறு ஏதாவது வழியை பயன்படுத்தி இந்தத் திட்டத்திற்கு வேண்டிய பணத்தைப் பெறுவதுதான் மிக மிக வரவேற்கத் தக்கது. அதைத்தான் மக்களும் விரும்புவார்கள் என்று கருதுகிறேன்.

அதைவிட முக்கியமான பிரச்னை, பிளானிங் கமிஷனில் சென்னைக்கு இப்பொழுது பிரதிநிதித்துவம் இல்லை. குறிப்பாக தெற்கு மாகாணங்களுக்கே பிரதிநிதித்துவம் இல்லை என்று நினைக்கிறேன். எதற்காக சென்னைக்கு முக்கியத்துவம் தேவை என்று கூறுகிறேன் என்றால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணத்தை ஒழுங்காக பயன்படுத்தி, அதற்கு மேலே தொகையை செலவழித்த மாகாணம் ஏதாவது இருக்கிறதா என்றால், சென்னைக்குத்தான் அந்தப் புகழ் வருகிறது என்று எண்ணுகிறேன். ஆகையினால் நிதி அமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்தினிடம் எடுத்துக் கூறி இந்த மாகாணத்திற்கு பிளானிங் கமிஷனில் எப்படியாவது ஒரு பிரதிநிதித்துவம் வாங்க வேண்டும். பிளானிங் கமிஷனில் இந்த மாகாணத்திற்கு ஒரு பிரதிநிதித்துவம் இருந்தால்தான் இங்கிருக்கிற அவசரத்தை உடனுக்குடன் தெரிவித்து, அதற்கான பணம் தேவையாக இருந்தால் அதையும் வாங்குவதற்கு வாய்ப்பு இருக்கும். நமக்குக் கொடுத்த பணத்தை ஒழுங்காக செலவழிப்பதற்குச் சக்தி இருக்கிறது என்பதை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உணர்த்தியிருக்கிறோம். ஆகையால், மிகவும் முன் நிற்கின்ற சென்னை மாகாணத்திற்கு பிளானிங் கமிஷனில் ஒரு பிரதிநிதித்துவம் தேவை என்பதை வற்புறுத்தி அதை வாங்கிவிடவேண்டும் என்று எண்ணுகிறேன்.

அடுத்தபடியாக, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (Village must be the unit) கிராம முன்னேற்றத்தில் அக்கறை காட்ட வேண்டும். முதல் இரண்டு திட்டங்களிலே அகில இந்திய ரீதியிலே மிகவும் அவசியமான திட்டங்களை ஓரளவுக்கு நிறைவேற்றி

[Srimathi T. N. Anandanayaki] [7th September 1960

விட்டோம். பெரிய அணைக்கட்டுகள் கட்டினோம், பெரிய தொழிற்
சாலைகள் ஆரம்பித்தோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்
நாம் ஒரு கிராமத்தை யூனிட்டாக வைத்துக்கொண்டு, முக்கிய
மாக கிராம அபிவிருத்தியில் அதிக அக்கறை காட்டவேண்டும்.
காரணம் இரண்டு ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் சற்றேறக்குறைய
10,000 கோடி ரூபாய் பாரத நாட்டில் செலவழித்திருக்கிறோம்.
ஆனால், பட்டித் தொட்டியில் இருக்கக்கூடிய பாட்டாளி மக்கள்
ஐந்து வருஷத் திட்டத்தின் வெற்றியைப் பற்றி, நோக்கத்தைப்
பற்றி புரிந்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு இல்லை என்று எண்ணு
கிறேன். ஆகவே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிராமத்தில்
அதிக அக்கறை காட்டி, சாதாரண ஒரு கிராம மகன்,
சாதாரண பட்டித்தொட்டியில் வாழ்கின்ற பாட்டாளி மகன் திட்ட
நோக்கத்தை புரிந்துகொண்டு, அதற்கு தன்னுடைய உதவியும்
தேவை என்று சொல்லக்கூடிய அளவுக்கு அவர்களை உணர
வைக்கக்கூடிய பொறுப்பு இந்தத் திட்டத்தில் இருக்கிறது.
ஆகவே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிராமங்களின்
முன்னேற்றத்தில் அதிக அக்கறை செலுத்தவேண்டியது மிகவும்
அவசியம். ஓரளவுக்கு நாம் நம்முடைய திட்டங்களில் ஏற்கனவே
கவனம் செலுத்தியிருக்கிறோம் என்று எண்ணுகிறேன்.

அடுத்தபடியாக, முக்கியமான பிரச்னை 'ரூரல் வாடர் சப்ளை'
கிராமங்களில் குடி தண்ணீர் வசதிக்காக இரண்டாவது ஐந்
தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கி வைத்த பணத்தைக்கூட நாம் அவ்
வளவு திருப்திகரமாக செலவு செய்யவில்லையோ என்ற ஐயப்பாடு
இருக்கிறது. அதுபற்றி நிதி அமைச்சர் அவர்கள் விளக்கம்
கூறினால், அதை ஏற்றுக் கொள்ளத் தயார். 'ரூரல் வாடர் சப்ளை'
கிராமங்களுக்கு 'ப்ரொடக்டட் வாடர் சப்ளை' கொடுப்பதற்கு
நாம் ஒதுக்கி வைத்த பணத்தை நல்ல முறையில் பயன்படுத்தாத
காரணம், திட்டம் வருவதற்கு சற்று தாமதமாகி விடுகிறது என்று
கூறுகிறார்கள். அந்தத் திட்டங்கள் வருவதற்கு தாமதமாவதற்குக்
காரணம், அதற்குத் தகுந்த நுட்பங்கள் தெரிந்தவர்கள் இல்லை
என்று சொல்லப்படுகிறது. கிராமப்புறத்தில் இப்படிப்பட்ட
திட்டங்கள் தீட்டுவதற்கு உடனடியாக என்ன வசதியைத் தர
முடியுமோ, அந்த வசதியை அரசாங்கம் செய்து கொடுத்தால்
தான், இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் முக்கியமாக கிராமங்
களுக்குக் குடிதண்ணீர் வசதி செய்துகொடுக்க முடியும். அதே
போல் கிராமப் புறங்களில் ரோடு வசதிகள் செய்து கொடுப்
பதிலும் அதிக அக்கறை காட்டவேண்டும். மூன்றாவது
ஐந்தாண்டுத் திட்டத்தில் கிராம முன்னேற்றத்திற்கும் அதிக
கவனம் செலுத்துவது மிகவும் பாராட்டத்தக்கதாக இருக்கும்.
அதனால் கிராம மக்களுக்கு அதிக நன்மை ஏற்படும் என்று நினைக்
கிறேன்.

அடுத்தபடியாக, சென்னையில் கூவம் நதிப் பிரச்னை, பெரிய
தலைவலிப் பிரச்னையாக இருக்கிறது. இப்பொழுது ரொம்ப நாட்
களாக இந்த கூவம் நாற்றத்தைப் போக்கவேண்டும், போக்க
வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். முதல்
ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்தே கார்பரேஷனும் இந்த கூவம்



7th September 1960] [Srimathi T. N. Anandanayaki]

நாற்றத்தைப் போக்குவதற்கு வழி இருக்குமா என்று யோசித்துக்
கொண்டிருக்கிறார்கள். யோசித்துக் கொண்டிருக்கிறோம், வரு
கிறது, வருகிறது, கமிட்டி போட்டிருக்கிறோம் என்று சொல்லிக்
கொண்டேயிருந்தால் பிரயோஜனம் இல்லை. இந்த ஐந்தாண்டுத்
திட்டத்திலும் இனிமேல் இதற்கு ஒரு 'ஹைபவர் 'கமிட்டி'
போடப்பட்டு இந்த கூவம் நாற்றத்தைப் போக்குவதற்கு
யோசனை செய்கிறோம் என்று சொல்லப்படுகிறது. நாற்றத்தைப்
போக்குவதற்கு யோசனை செய்கிறோம் என்று சொல்லாமல்,
இதற்கு இந்தத் திட்டத்தில் மிகவும் முக்கியமான ஒரு
இடத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு
கிறேன். சென்னை ராஜ்ய தலைநகரமே இங்கு இருக்கிறது.
இருபத்தைந்து லட்சம் மக்கள் இந்த நாற்றத்தை
நெருக்கடியில் சகித்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது.
இது அவர்களுடைய சுகாதாரத்தை பாதிக்கக்கூடிய
பிரச்னையாக இருக்கிறது. இதை நமது அமைச்சர் அவர்கள்
உணர்ந்து எல்லாவற்றிற்கும் மேலாக முக்கியமான இடத்தை
இந்த விஷயத்திற்கு கொடுக்கவேண்டும். இந்த நாற்றத்தைப்
போக்கவேண்டுமென்று ஏற்கனவே கார்பரேஷன் பல தீர்மானங்
களை நிறைவேற்றியிருக்கிறது. திட்டங்கள் போட்டு அனுப்பி
யிருக்கிறார்கள். அரசாங்கம் அது சம்பந்தமாக உடனடியாக வேலை
செய்வதற்கு அக்கறை எடுத்துக்கொள்வார்களேயானால் கூவத்தின்
நாற்றத்தை ஓரளவுக்கு போக்கலாம். அது போன்று பக்கிங்-
ஹாம் கெனலை ஒரு பயனுள்ள கெனலாக மாற்றுவதற்கு, அதன்
மூலம் வருமானம் வரக்கூடிய அளவிற்கு நாம் வசதி செய்யலாம்.
அதற்கு 'ஹை பிரையாரிடி' கொடுத்து அதை உடனடியாகச்
செய்வதற்கு வழி தேடவேண்டும்.

தூத்துக்குடி துறைமுக விஷயத்தைப் பற்றி இந்த ஐந்தாண்டுத்
திட்டத்தில் அதை கவனிப்பதற்கு முன் வந்திருக்கிறோம் என்று
நிதி அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அதோடு சேது சமுத்திர
திட்டத்தையும் சேர்க்கவேண்டும். எத்தனையோ நாட்களாக சேது
சமுத்திர திட்டத்தைப் பற்றி கேட்டுக் கொண்டிருக்கிறோம்.
மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் கிடைக்குமா அதற்கு
என்பது சந்தேகமாக இருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத்
திட்டத்தில் வருமா, அல்லது ஐந்தாவது திட்டத்தில் வருமா என்ற
ஐயப்பாடு இல்லாமல் இந்தத் திட்டத்திலேயே சேது சமுத்திர
திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து நிறைவேற்றவேண்டும்.
'ஏதோ 'எக்ஸ்பெர்ட்ஸ்'-க்குள் வேறுபாடு இருக்கிறது, அதற்காக
ஒத்தி வைத்திருக்கிறோம்' என்று சொல்லப்படுகிறது. அந்த
'எக்ஸ்பெர்ட்களை' ஒன்றாகச் சேர்த்து சீக்கிரம் ஒரு முடிவுக்கு
வருவதற்கு வழி செய்து, சேது சமுத்திர திட்டத்தை இந்தத்
திட்டத்திலேயே சேர்க்கவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்
கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, முக்கியமானது 'டெக்ஸ்டைல் இண்டஸ்டிரி'.
இந்த விஷயத்தில் கோவை மாவட்டத்தின் பெருமை வேறு எந்த
மாவட்டத்திற்கும் கிடையாது. நூல் மில்களை பொறுத்தமட்டில்
கோவை முன்னேறியிருக்கிறது. அது 'லங்காஷையர் ஆப் தி
ஈஸ்டு' என்று சொல்லப்படுகிறது. இவ்வளவு முக்கியத்துவம்

வாய்ந்த கோவைக்கு இனிமேல் எதற்கு மேலும் மில்கள் கொடுக்க வேண்டுமென்று திட்டக் கமிஷன் எண்ணலாம். எப்படி நாம் பின் தங்கிய மாவட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறோமோ, அதே மாதிரி பிளானிங் கமிஷனும் பின்தங்கிய மாகாணத்திற்கு கொடுக்கலாம் என்று எண்ணலாம். அதேமாதிரி சொல்லி நம்மை ஏமாற்றிவிடாமல் நிதி அமைச்சர் அவர்கள் பார்த்துக்கொள்ளவேண்டும். நூல் மில்கள் இங்கு இருக்கின்றன என்றால், பிற மாகாணங்களில் நெசவு மில்கள் அதிகமாக இருக்கின்றன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இரண்டு மிலியன் கதிர்களுக்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. (ஒரு கனம் அங்கத்தினர்: மூன்று மிலியன் கதிர்கள்). I stand corrected. மூன்று மிலியன் கதிர்களுக்கு இடம் அளிக்கப் பட்டிருக்கிறது. ஏதோ கோவை முன்னேறி விட்டது என்ற காரணத்திற்காக நமக்கு வருகிற கதிர்களைக் குறைப்பதற்கு விடக் கூடாது. நமது தமிழ் நாட்டில் பன்னிரண்டாயிரம் ஸ்பிண்டில்களில் தான் அதிகமாக மில்கள் இருக்கின்றன. பன்னிரண்டாயிரம் ஸ்பிண்டில்கள் இருக்கும் மில் எகனாமிக் யூனிட் இல்லை, குறைந்தது ஒரு மில்லுக்கு இருபதாயிரம் ஸ்பிண்டில் கபாஸிடியாவது இருக்க வேண்டும், அப்பொழுதுதான் எகனாமிக் யூனிட்டாக நடத்த முடியும் என்ற முறையில் அதையும் ஓரளவுக்கு உயர்த்துவதற்கு நம்முடைய இண்டஸ்டிரிஸ் மினிஸ்டர் அவர்கள் அக்கறை எடுத்துக்கொண்டு முன்வந்தால் மிகவும் வரவேற்கக் கூடியதாக இருக்கும். சென்னையில் ஒரு நூற்பு மில் ஏற்படுத்த வேண்டும். சூளையிலிருந்த எட்வர்டு டெக்ஸ்டைல் மில் மூடப்பட்டுவிட்டது. அதில் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ராமனாதபுரம், ஸ்ரீவில்லிபுத்தூர், நாங்குநேரி ஆகிய இடங்களில் உள்ள மக்கள் வசதிக்காக அங்கே ஏற்படுத்துவதோடுகூட, சென்னையில் 25 லட்சம் ஜனத்தொகை இருக்கிறது. அங்கு பி. அண்டு சி. மில் ஒன்றுதான் இருக்கிறது. எட்வர்ட் மில் மூடப்பட்டுவிட்டது. ஆகையால் சென்னையிலும் ஒரு டெக்ஸ்டைல் மில் ஏற்படுத்துவதற்குக் கனம் அமைச்சர் அவர்கள் அக்கறை காட்டி, அதையும் இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் கொண்டுவருவதற்கு வழி தேட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு காலம் குறுகியிருப்பதால், இத்தோடு என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

**Sri A. MARIAPPAN :** உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் கொண்டுவந்துள்ள மூன்றாவது திட்டத்தை வரவேற்று ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கைத்தறி நெசவுத் தொழிலுக்கு இந்த மாகாணத்திலே சென்ற இரண்டாவது திட்டத்தில் ஏழு கோடி ரூபாயும், இந்த மூன்றாவது திட்டத்தில் ரூ. 11 கோடியென்றிருப்பதை வரவேற்கிறேன். ஆனால், அந்தப் 11 கோடியும் போதாது என்றும் தெரிவிக்கிறேன். மத்திய சர்க்காரைப் பொறுத்த வரையில், கைத்தறி நெசவுத் தொழிலுக்கு இரண்டாவது திட்டத்தில் ரூ. 31 கோடி செலவழித்





திருக்கிறார்கள். மூன்றாவது திட்டத்திற்கு ஒதுக்கியிருப்பது ரூ. 32 கோடிதான். அப்படியிருக்கும்போது, நம் மாகாண கைத்தறித் தொழிலுக்கு அதிகம் மத்திய சர்க்காரிலிருந்து வருமா என்று ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. மத்திய சர்க்காரால் அமைக்கப்பட்ட ஒர்க்கிங் க்ரூப் ஃபார் தி ஹாண்ட்லூம் இண்டஸ்ட்ரி, ஸ்டடி டீம் கமிட்டியார் கைத்தறிக்கு ரூ. 140 கோடி ஒதுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அதில் பெரும்பாலோர் உத்தியோகப் பற்றில்லாதவர்கள், சிலர் உத்தியோகஸ்தர்கள். அவர்கள் ரூ 140 கோடி வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மாகாண சர்க்கார், மத்திய சர்க்காரிடம் வற்புறுத்தி அந்த ரூ. 140 கோடியை ஒதுக்க கேட்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நம் திட்டத்திலே ரிபேட்டுக்காகத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது திட்டத்தில் ஒரு லட்சம் தறிகள் அதிகமாகப் போகின்றன. இப்பொழுதே வருஷத்திற்கு ரூ. 80 லட்சத்திற்கு மேல் ரிபேட் கொடுக்கிறோம். ஆகவே, இந்தத் தொகை காணாது என்று குறிப்பிட விரும்புகிறேன். நூற்பாலைகளைப் பொறுத்த வரையில், 4 ஆலைகளுக்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. சமீபத்தில் 20, 40 நம்பர் நூல்கள் விலை 50 பர்சென்ட் கூடியிருக்கிறது. 16½ ரூபாயிலிருந்து 25 வரை உயர்ந்திருக்கிறது. ஒரு பந்துக்கு 31 நயே பைசே கொடுத்ததை 27 ஆகக் குறைக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்தத் தொழிலில் வருமானம் மிகக் குறைவாக இருக்கிறது. ஆதலால் இன்னும் பத்து நூற்பு மில்கள் வைக்கவேண்டும். அப்பொழுதுதான் நெசவாளர்களுக்குத் தேவையான நூல் கொடுக்க முடியும். நெசவாளர்களுக்கு பிராவிடண்டு பண்டு கொடுக்க திட்டமிட்டதற்குச் சர்க்காரைப் பாராட்டுகிறேன். கைத்தறி நெசவுக்கும் ஷார் காபிடல், ஒர்க்கிங் காபிடல் இவற்றுக்கும் போதிய தொகை ஒதுக்கி இருப்பதற்கு சர்க்காரைப் பாராட்டுகிறேன். மாகாண சங்கங்களுக்கு ஒர்க்கிங் கேபிடலுக்கு என்று ஐந்து லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது போதாது என்பதைச் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கூட்டுறவு இயக்கத்திற்கு வெளியிலே இருக்கும் நெசவாளர்களுக்கு நிதி கார்பொரேஷன் ஏற்படுத்தி உதவ முன் வந்ததற்கும் பாராட்டுகிறேன். அதோடு எல்லோருக்கும் நெசவுக் கருவிகள் கொடுக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சேலம் ஜில்லாவைப் பொறுத்த வரையில், தொப்பையாறு, சின்னாறு திட்டங்களை எடுத்ததற்காகச் சர்க்காரைப் பாராட்டுகிறேன். இரும்புத் தொழிற்சாலையை உடனடியாக ஏற்படுத்த சர்க்கார் முயற்சிக்க வேண்டும். நெய்வேலியிலிருந்து, பழுப்பு நிலக்கரி சேலத்திற்கு வர, சேலம்—விருத்தாசலம் ரெயில்வே லைனை இரட்டிப்பாக்க வேண்டும். இரும்புத் தொழிற்சாலை ஏற்படும் முன்பே, முன்கூட்டியே ஆலோசனை செய்து, விருத்தாசலம்—சேலம் அல்லது கடலூர்—சேலம் லைனை இரட்டிப்பாக்க

ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அதேபோல், சேலம்—பங்களூர் லைனை மத்திய சர்க்காருக்குச் சொல்லி இரட்டிப்பாக்க வேண்டும். அது வெகு நாட்களாகத் தடைபட்டிருக்கிறது.

சேலத்தில் ஒரே ஒரு ஆர்ட்ஸ் காலேஜ்தான் இருக்கிறது. ஆகவே, ஆரம்பிக்க இருக்கும் எஞ்ஜினியரிங் காலேஜ்களில் ஒன்றை சேலத்தில் அமைக்க வேண்டும். அதோடு கூட, இன்னும் இரண்டு ஆர்ட்ஸ் காலேஜ்களும் ஏற்படுத்த வேண்டும். நம் மாகாணத்தில் சேலம் ஒரு பெரிய நகரம். அந்த நகரத்து மக்களுக்கே அங்கு இருக்கும் காலேஜில் இடம் கிடைப்பதில்லை. அங்கே ஒரு மருத்துவக் கல்லூரியும் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்குத் தகுந்த பெரிய ஆஸ்பத்திரி அங்கு இல்லையென்றால், அங்கு கல்லூரி வருவதன் காரணமாக அங்கு இருக்கும் தலைமை ஆஸ்பத்திரியை சிறந்ததாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஏற்படுத்தப் போகும் கல்லூரிகளில் ஒன்றைச் சேலத்திற்குக் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

சேலம் ஜில்லா மேட்டுப் பாங்கான இடம். அங்கே உள்ள ஏரி, குளங்களைச் செப்பனிட வேண்டும். கிணறுகளை எடுத்துக் கொண்டால், ஏனைய தென்னாற்காடு போன்ற ஜில்லாக்களில் ஆகும் செலவைவிட அதிகமாக ஆகும். ஆகவே, அங்கு அதிகப் பணம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். குடி தண்ணீர் மேட்டூரிலிருந்து வந்தாலும், அது போதியதாக இல்லை. ஆகவே, சேலம் மக்களுக்குப் போதிய அளவு குடிதண்ணீர் கிடைக்கும் வண்ணம் திட்டமிட்டுச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

**SRI M. R. KANDASAMI MUDALIYAR :** கனம் உதவி சபா நாயகர் அவர்களே, சபையின் முன் கொண்டு வந்திருக்கக்கூடிய மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் உரை மீது சிற்சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதி முன் நிற்கிறேன். நம்முடைய மாகாண அமைச்சர்கள் மற்றும் எதிர்க்கட்சி அங்கத்தினர்களைக் கொண்ட குழு எல்லோரும் ஒன்று சேர்ந்து திட்டமிட்டு இந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரக்கூடிய முறையில் திட்டத்தை வகுத்து அதற்கான காரியங்களை நிறைவேற்ற ஓரளவுக்கு 399 கோடி ரூபாய் கிடைக்கக்கூடிய அளவில் ஒரு நம்பிக்கையுடன் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதில் இன்னும் ஏன் அதிகமாகக் கொண்டுவந்திருக்கக் கூடாது, ஆயிரம் கோடி ரூபாய் கேட்டோமே அப்படிக் கேட்டும் கனம் நிதி அமைச்சர் அவர்கள் முதலில் 250 கோடி ரூபாய்க்குத் திட்டம் கொண்டு வந்தார் என்றும் இப்பொழுது அதற்கு அதிகமாக ஏறத்தாழ 400 கோடி ரூபாய் வரையில் திட்டம் வகுத்து கொண்டு வந்திருக்கிறார்கள் என்றும் அதனால் அவர்கள் ஏற்கனவே சொல்லிய திட்டம் அதாவது ஆயிரம் ரூபாய்க்குக் கொண்டு வந்த திட்டம் சரியான திட்டம்தான் என்றும், மத்திய சர்க்கார் துறையிலும் தனியார் துறையிலும் செலவு செய்ய ஆயிரம் ரூபாய் திட்டம் சரியான திட்டம்தான் என்றும் கூறியுள்ளார்கள்.





நம்முடைய அமைச்சர் சுப்ரமணியம் அவர்கள் மத்திய அரசாங்கத்தினிடம் அதிகமாக வாங்குவதாக இருந்தால் அதற்கு எந்த விதத்திலும் ஆட்சேபணை கிடையாது. இன்னும் அதிகப்படியான தொகை வாங்குவதில் எல்லோருக்கும் சந்தோஷம்தான். நம்மால் மத்திய அரசாங்கத்தினிடம் எவ்வளவு பெற முடியும், மத்திய அரசாங்க திட்டத்தில் நமக்கு எவ்வளவு கிடைக்கும் என்பதைப் பற்றி நமது நிதி அமைச்சர் அவர்கள் சற்றுச் சிந்தித்துப் பார்த்து அந்த அளவுக்கு தொகையைப் பெறுவதற்கு அந்த அளவுக்குத் திட்டத்தை வகுத்துக் கொண்டு வந்திருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. இன்னும் அதிகப்படியாக வாங்குவதற்கு அவரால் முடியும். சென்ற இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதலில் கேட்ட தொகையைக் கூட மத்திய அரசாங்கம் கொடுக்க மறுத்த போதிலும் பிறகு அதிகமாகவே வாங்கப்பட்டிருக்கிறது. நமது அரசாங்கம் மத்திய அரசாங்கம் கொடுத்த தொகையை வைத்துக் கொண்டு பணம் பூராவையும் செலவு செய்துவிட்டு மேற்கொண்டு பல திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்று சொல்லி இன்னும் அதிகப்படியாகவே வாங்கி செலவு செய்திருக்கிறார்கள். அப்படி மேலும் முப்பது அல்லது முப்பத்தி மூன்று கோடி ரூபாய் வாங்கி அதிகமாகப் பெற்று இருக்கிறார்.

அதைப்போலவே இப்பொழுது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் இந்த 400 கோடி ரூபாய் போதவில்லை என்று சொன்னால், அடுத்து வேறு பல திட்டங்களை அவ்வப்போது எடுத்துக் கொள்ள வேண்டிய திட்டங்களைப்பற்றி சொல்லி இப்பொழுது கொடுக்கப்பட்டுள்ள தொகை போதவில்லை என்று சொல்லி அந்தந்தச் சமய சந்தர்ப்பத்திற்கு ஏற்றார்போல் கால தேச வர்த்தமானத்தை உத்தேசித்து எந்தெந்தத் திட்டங்களை எடுத்து நிறைவேற்ற வேண்டியது அவசியமோ, அவசரமோ அவைகளை யெல்லாம் எடுத்து நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்படும். அதற்கு வேண்டிய பணத்தை மத்திய அரசாங்கத்தினிடமிருந்து கேட்டு வாங்கிக் கொள்வதற்கு, நல்ல முறையில் பேசி வாங்குவதற்கு வேண்டிய ஆற்றலும் நமது அமைச்சர்களுக்கு இருக்கிறது. பல அபிவிருத்தி வேலைகளுக்கு அப்படி வாங்கி வருவார்கள் என்பதில் எந்த விதத்திலும் சந்தேகம் இல்லை. அதற்கு வேண்டிய தகுதியும் திறமையும், ஆற்றலும், நம்பிக்கையும் நம்முடைய அரசாங்க அமைச்சர்களுக்கு இருக்கிறது.

அத்துடன் நான் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன், சிற்சில திட்டங்களைப்பற்றி. இதற்கு முன் இந்த அசெம்பிளியில் ஒன்றிரண்டு திட்டங்களைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறேன். பெங்களூர்—சேலம் ரயில் பாதையை உடனடியாகப் போடுவதற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதல் [illegible] கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. அதைப்பற்றி வற்புறுத்தப் பட்டும் வந்தது. அந்த வேலையைத் துரிதமாக எடுத்து நடத்த

[Sri M. R. Kandaswami Mudaliyar] [7th September 1960

வேண்டும் என்றும் சொல்லப்பட்டது. அதை இந்த மூன்றுவது
ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொண்டிருந்தால் கொஞ்சம்
சந்தோஷமாக இருந்திருக்கும். சேர்த்துக்கொள்ளுவார்களோ
மாட்டார்களோ என்ற பயம் இருக்கிறது. அது ஏற்கனவே
இருந்த லைன் தான். எடுக்கப்பட்ட லைனைத்தான் போடவேண்டும்
என்று சொல்லப்பகிறது. அது இல்லாமல் இருப்பதால் அதை
எடுத்து விட்ட காரணத்தால் அங்குள்ள பொது மக்கள் போக்கு
வரத்திற்கு மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள்.
ஆகவே சேலம்—பெங்களூர் ரயில் பாதையைப் போடுவதற்கு
வேண்டிய ஏற்பாட்டை உடனடியாகச் செய்யவேண்டும் என்ற
நம்பிக்கையுடன் இதைக் கண்டிப்பாக மூன்றுவது ஐந்தாண்டுத்
திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்
கொள்ளுகிறேன்.

நம்முடைய மாகாணத்தில் இப்பொழுது இருக்கக்கூடிய பெரும்
பிரச்னை தொழில் பிரச்னைதான். வேலை இல்லா திண்டாட்டம்
நீடித்துக் கொண்டிருக்கிறது. தற்சமயம் கைத்தறி நெசவுத்
தொழில் குடிசைத் தொழிலாக அமைந்திருக்கிறது. சுமார் எட்டு
அல்லது பத்து மாத காலமாக அந்தத் தொழில் மிகவும் கஷ்டப்
படக்கூடிய நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது. கைத்தறி
நெசவாளர்கள் மிகவும் கஷ்டமான நிலைமையில் தங்களுடைய
வாழ்க்கையை நடத்திக்கொண்டு வருகிருர்கள். அது கனம்
அமைச்சர் அவர்களுக்கே நன்ருகத் தெரியும். நான் இப்பொழுது
ஒன்றைக் கேள்விப்படுகிறேன். அதாவது மத்திய அரசாங்கம்
கதிர்களை சப்ளை பண்ண முற்படும்போது நம்முடைய மாகாணம்
இந்தத் தொழிலில் மிகவும் முற்போக்காக இருக்கிறது என்ற
காரணத்தால் இங்கு கொடுக்க வேண்டிய கதிர்களைக் குறைத்து
குறைவாகக் கொடுக்கவேண்டும் என்று சொல்லி இருப்பதாகத்
தெரிய வருகிறது. இப்படிப்பட்ட ஒரு வதந்தி நிலவிவருகிறது.
மற்ற மாகாணங்களைவிட நம்முடைய மாகாணத்தில்தான்
அதிகப்படியான நெசவாளர்கள் இருக்கிருர்கள். இது கண்கூடு.
அப்படி அதிகமாக இருக்கும்போது நமக்குத்தான் அதிகமாகக்
கொடுக்க வேண்டும். நம் மாகாணத்தில் அதிகப்படியான மில்
கள் கிடையாது. அதிகப்படியான கதிர்கள் சப்ளை செய்தால்
அதிகப்படியான நூல்களை தயார் செய்து பம்பாய் அஹமதாபாத்
போன்ற மில் ஆலைகள் அதிகமாக இருக்கக்கூடிய இடங்களுக்கு
அனுப்பி வைக்கலாம். நூற்பு ஆலைகள் இங்கு அதிகமாக இருப்
பதால் அதிகப்படியாக நூல் நூற்று மில் இருக்கக்கூடிய இடங்
களுக்கு அனுப்புவதற்கு சௌகரியமாக இருக்கும். அதிகப்படி
யாக கதிர்கள் இல்லாமல் இருப்பதால் குறைவாக நூல் நூற்பதால்
நூல் விலை அதிகமாகி இருக்கிறது. இப்பொழுது நூல் பற்ருக்
குறை இருக்கிறது. அதிகமாகக் கதிர் சப்ளை செய்தால் இந்த
பற்ருக்குறையை தவிர்க்கலாம். இங்கே இருக்கக்கூடிய நூல்களை
அதிகமாக விலை கொடுத்து அங்கே வாங்கிக்கொண்டு போவதால்
இங்குள்ள கைத்தறிக்காரர்கள் மிகவும் அவதிப்படுகிருர்கள். இந்த
நிலைமையைச் சமாளிப்பதற்கு நமது அமைச்சர் அவர்கள் இரண்டு



7th September 1960] [Sri M. R. Kandaswami Mudaliyar]

லட்சம் கதிர்கள் வேண்டும் என்று கேட்டிருப்பதாக தெரிகிறது.
அதற்குமேல் தேவை என்றுகூட கணக்கிட்டிருக்கிருர்கள்.
மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நான்கு நூற்பு ஆலை
களுக்கு கதிர்கள் சப்ளை செய்தால் அதிகமாக நூல் நூற்ருல் நம்
முடைய கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்னை ஒரு வழியில்
தீரும். அதன் மூலம் மற்ற மாகாணங்களுக்கும் பம்பாய் அகமதா
பாத் போன்ற நகரங்களுக்கும் நாம் நூல் சப்ளை செய்யலாம்.
அந்த அளவு நாம் உற்பத்தி செய்யலாம். தயாரிக்க முடியும்.
இன்னும் பல வழிகளில் அவர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுத்
தால் அவர்களுக்கு நல்ல கூலி கிடைக்கும், அதற்கு வேண்டிய
வாய்ப்பு இருக்கிறது. இந்த நிலைமையில் இந்த மாகாணத்திற்கு
பவர் லூமைக் கொண்டு வரலாம் என்று சொல்லுகிருர்கள்.
மற்றும் 2,500 தறிகளைக் கொண்டு வரலாம் என்ற யோசனையையும்
கனம் அமைச்சரிடம் புகுத்தியிருக்கிருர்கள் என்று நினைக்கிறேன்.
இப்பொழுது சிறிய தொழில்கள் எல்லாம் பெரிய நகரங்களில்தான்
அமைக்கப்படுகிறது. அதனுல் கிராமங்களிலுள்ளவர்கள் நகரங்
களுக்கு வரக்கூடியதாக இருக்கிறது. அதைத் தடுக்கவேண்டும்.
அதனுல் கிராமங்களில் குடிசைத் தொழிலை அபிவிருத்தி செய்ய
வேண்டும். நூல் மில்களை பெரிய டவுன்களில் ஏற்படுத்தி நாலா
யிரம் ஐயாயிரம் ஜனத்தொகையுள்ள ஏரியாவில் குடிசைத்
தொழிலை ஆரம்பிக்கலாம். சிறிய நூற்புத் தொழிலை ஆரம்பிக்க
லாம். ஜப்பானிய யந்திரத்தில் பதினுறு கதிர்கள் இருக்கின்றன.
நாள் ஒன்றுக்கு பத்து ராத்தல் நூற்கலாம் என்று சொல்லு
கிருர்கள். அதைக் குடிசை தொழில் என்ற முறையில் வாங்கிக்
கொடுக்கலாம். இதை வாங்கிக் கொடுத்தால் கிராமங்களில் பெரிய
அளவில் நூற்கலாம். ஆகவே குடிசைத் தொழிலில் அபிவிருத்தி
என்ற முறையில் பதினுறு கதிர்கள் கொண்ட ஜப்பானிய இயந்
திரங்களை நமது மாகாணத்தில் அவசியம் கொண்டு வரவேண்டும்.
அதை அதிகமாக இறக்குமதி செய்து கிராமங்களில் பெரிய அள
வில் நூலை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள
வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்
என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தற்சமயம் சொசைட்டிகளில் இருக்கக்கூடிய நெசவாளர்
களுக்கு வீட்டு வசதி போன்ற வசதிகளைச் செய்து கொடுத்து
வருகிருர்கள். அவர்களை விட இரண்டு மடங்கு தனிப்பட்ட நெச
வாளிகள் இருக்கின்ருர்கள். அவர்களின் மீது சர்க்கார் இன்னும்
அக்கறை செலுத்தவில்லை. கைத்தறி நெசவாளர்களுக்கு என்று
11 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிருர்கள். இன்னும் அதிகமாக
ஒதுக்க வேண்டும். தனிப்பட்ட நெசவாளர்களுக்கு வீட்டு
வசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.
கிராமங்களுக்கு என்று பார்த்தால் வீடு கட்டும் திட்டத்திற்கு
என்று 25 லட்சம் ஒதுக்கி இருக்கிருர்கள். நெசவாளர்கள் மாகா
ணம் பூராவும் இருக்கிருர்கள். அந்த அடிப்படையில் பார்த்தால்
ஜில்லாவிற்குக் குறைவாகத்தான் கிடைக்கும். அது பிரயோசனம்
இல்லை. அதாவது ஒரு லட்சம் அல்லது இரண்டு லட்சம்தான்

[Sri M. R. Kandaswami Mudaliyar] [7th September 1960

கிடைக்கும். அவர்களுடைய எண்ணிக்கைக்கு இது போதாது. இன்னும் அதிகமாக அந்த வகையில் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சேலம் ஜில்லா மிகவும் வறண்ட பிரதேசம். இதைப்பற்றி பல முறை சொல்லி இருக்கிறேன். அது ஒரு பிற்பட்ட ஜில்லா. பல வசதிகளை அங்கே செய்து கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. தற்சமயம் தொப்பையாறு—சின்னாறு அணைக்கட்டுகள் கட்டுவதாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதைப்பற்றி சந்தோஷம் தான். இன்னொரு திட்டத்தையும் எடுத்து நடத்த வேண்டியது அவசியமாக இருக்கிறது. காவிரியிலிருந்து பாயக்கூடிய தண்ணீரை அதாவது ஒகேநகல்—திருமணிமுத்தாறு இவைகளை ஒன்றுகச் சேர்த்து வைக்க வாய்க்கால் வெட்டிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதைச் செய்து கொடுத்தால் அந்த ஜில்லாவில் அதிகப்படியான நீர்ப்பாசன வசதி ஏற்படுவதற்கு வழி இருக்கிறது. அதையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பல கிராமங்களுக்கு ரோடு வசதிகளே கிடையாது. கிராம ரோடு வசதிக்கு நான்கு கோடி ரூபாய் தான் ஒதுக்கி இருக்கிறார்கள். அது போதாது. எல்லா கிராமங்களிலும் ரோடுகள் சீர்கேடான நிலையில் தான் இருக்கின்றன. அப்படித்தான் மாகாணம் பூராவும் இருக்கின்றன. எல்லாத் தொகுதி அங்கத்தினர்களும் அதைப்பற்றித்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதற்கு அதிகத் தொகை ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

குடி தண்ணீர் திட்டத்தைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. ராசிபுரம்—திருச்செங்கோடு முதலிய பகுதிகளுக்குக் குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று நாலைந்து ஆண்டுகளாக முயற்சி எடுத்துக்கொண்டிருந்தும் இன்னும் அந்த வசதி செய்து கொடுப்பதாக இல்லை. இந்த அபிவிருத்தி திட்டத்தில்கூட அதைப் பற்றிக் காணோம். இத்துடன் மேஜர் பஞ்சாயத்து ஏரியாக்களிலும் உடனடியாகக் குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன். அம்பர் சர்க்காவை கிராமங்களுக்கு வாங்கிக் கொடுத்து வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். சேலத்தில் இரும்பு அலுமினியம் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லி பல வாக்குறுதி கொடுத்தும் பிறகு ஏமாற்றப்படுகிறது என்று எதிர்க்கட்சியில் சொல்லக்கூடிய அளவில் இருக்கிறது. அதற்கு இடம் கொடுக்காமல் சீக்கிரத்தில் இங்கே இரும்பு அலுமினியம் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.



7th September 1960]

DEPUTY SPEAKER : The House will now adjourn for lunch and meet again at 3–00 p.m. 1–30 p.m.

The House then adjourned for lunch.

**(After Lunch—3 p.m.)**

MR. SPEAKER : இப்போது இரண்டு மணிநேரம் விவாதிக் கலாம். திரு. சின்னதுரை அவர்கள் அரை மணி நேரம் பேசினுல் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் முக்கால் மணி நேரம் பேசலாம். பாக்கியுள்ள நேரத்தில் இன்னும் சில அங்கத் தினர்களையும் பேச அனுமதிக்கலாம். ஆகவே திரு. சின்னதுரை அவர்களை அரை மணி நேரம் பேசவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது முதலில் திரு. தியாகராஜன் அவர்கள் பேசுவார்கள்.

S·I N. R. THIAGARAJAN : தலைவர் அவர்களே, இந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டத்திலே நியாயமாக எல்லா ராஜ்யங் களுக்குமாக ராஜ்யத் துறையில் 3,600 கோடி ரூபாய் ஒதுக்கப்பட் டிருக்கிறது. அதில் கிட்டத்தட்ட பன்னிரண்டில் ஒரு பங்கு 3 கோடி ரூபாய்தான் நமக்கு வரவேண்டும். அப்படி இருக்க 395 கோடி ரூபாய் அல்லது 400 கோடி ரூபாய் நம்முடைய ராஜ்யத்திற் காக நம் சர்க்கார் பெற்றிருப்பது பாராட்டத் தக்கது என்று முதலில் கூறுகிறேன். இந்த 400 கோடியில் சிறிதும் குறைந்து போகாமல் சென்ற இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் போட் டதைவிட அதிகமாகவே பெற்றிருப்பது போல கொஞ்சம் அதிகமாகவே இந்த மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்த வரையிலும் பெறவேண்டும் என்று சொல்லிக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக சபையில் மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் இருப்பதால் அவர் இலாகா சம்பந்தப்பட்ட விஷயங்களை முதலில் கூற விரும்புகிறேன். ரோடுகள் சம்பந்தமாக புது ரோடுகள் போடுவது பற்றி அதிக திட்டங்கள் இல்லை என்று நினைக்கிறேன். ஏற்கனவே உள்ள ரோடுகளை அகலப்படுத்துவது, அல்லது மெடல் ரோடாகப் போடுவது, நல்லமுறையில் அவைகளை வைத்துக்கொள்வது ஆகியவை பற்றி மட்டும்தான் திட்டம் இருக் கிறது. புது ரோடுகள் போடுவதில் திட்டவட்டமாக ஒரு கொள்கையை வகுத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய ராஜ் யம் 400 ப்ளாக்குகளாக ஆக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய விஸ்தீரணம், ஜனத்தொகை, அந்தப் பிரதேசத்தில் உள்ள ரோடு களின் நீளம் ஆகியவற்றை யெல்லாம் கணக்கெடுத்து எந்த இடத் தில் ரோடுகளே இல்லையோ அங்கெல்லாம் ரோடுகள் போடுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். தேனீ பிர்க்கா, ஆண்டிப்பட்டி பிர்க்கா, முதலிய இடங்களில் 250 சதுரமைல் களுக்கு ரோடுகளே கிடையாது. ஆண்டிப்பட்டி பிர்க்காவில் இருந்து மெயின் ரோடுகளுக்குப் போய்ச் சேர பதினைந்து மைல்கள் போகவேண்டும். இன்னும் சிலவிடங்களில் போடப்

பட்டிருக்கிற மண் ரோடுகள் கூட மெடல் செய்யப்படவில்லை. ஏற்கனவே ரோடுகள் இருக்கக்கூடிய நகரப் பகுதிகளில்தான் புதிதாக ரோடுகள் போடப்பட்டிருக்கின்றன. ஆனால் பல கிராமங்களில் ரோடுகள் இல்லாமல் இருக்கின்றன. ஆகவே எங்கெங்கே ரோடுகள் இல்லையோ அங்கெல்லாம் ரோடுகள் போடுவதற்கு இந்த மூன்றாவது திட்டத்திலே வகை செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல நீர்ப்பாசனம் சம்பந்தப்பட்ட மட்டில் என்னுடைய தொகுதியில்—தேனி பிர்க்காவில் நீண்ட்நாளாக ஒரு வாய்க்கால் சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு குறை இருந்து வருகிறது. அதைப்பற்றி இங்கே எடுத்துச் சொல்ல வேண்டுமென்று எனக்கு 50 கடிதங்களுக்கு மேல் வந்திருக்கின்றன. மேலும் நேரிடையாகவே பலர் இங்கே வந்திருக்கிறார்கள். அதற்கு ஆகும் செலவைப் பற்றியோ, இதர விஷயங்களைப் பற்றியோ சர்க்கார் கணக்குப் போட்டுக் கொண்டிருக்காமல் அதைச் செய்வதனால் ஜனங்களுக்கு அதிக நன்மை ஏற்படும் என்பது ஒன்றை மட்டும் கவனத்தில் எடுத்துக் கொண்டு அத்திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். பெரியாரில் இருந்து ஒரு வாய்க்கால் வெட்டிக் கொண்டுவந்து கொடுத்தால் 18 கண்மாய்களுக்கு மேல் உபயோகத்திற்கு வரும். அதோடு அங்குள்ள ஆயிரக் கணக்கான கிணறுகளுக்கும் தண்ணீர் சப்ளை கிடைத்து விடும் என்று நினைக்கிறேன். அந்தத் தண்ணீர் கொடுப்பதில் கஷ்டம் ஒன்றும் ஏற்படாது. வைகை ஒரு பக்கத்தில், பெரியார் ஒரு பக்கத்தில் இருப்பதால் தண்ணீர் சுலபமாக இறங்கிவிடும். ஆகவே இத் திட்டத்தை அவசியம் 1961-ம் வருஷம் மார்ச் இறுதிக்குள் முடித்துக் கொடுக்கவேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல என்னுடைய தொகுதியில்—என்னுடைய தொகுதி என்று இல்லாவிட்டாலும், முதல் அமைச்சருடைய சாத்தூர் தொகுதி—சாத்தூர் ஏரியாவில் வைப்பாறு என்று ஒரு ஆறு இருக்கிறது. சிறு பிள்ளையாக இருக்கும் காலம் தொட்டு நான் அந்த ஆற்று மணலில் விளையாடி யிருக்கிறேன். அந்த ஆற்றில் மாரி காலத்தில் வருகிற நீர் வீணாக சமுத்திரத்தில் போய் விழுந்து கொண்டிருக்கிறது. அதில் வரக்கூடிய வெள்ளம் பல காலமாக வீணாகவே போய்க்கொண்டிருக்கிறது. அங்கே அணை கட்டினால் பத்தாயிரம் ஏக்கருக்கு மேல் பாசன வசதி செய்து கொடுக்க முடியும் என்பது என்னுடைய உறுதியான நம்பிக்கை. அதையும் பரிசீலனை செய்து இந்த மூன்றாவது திட்டத்திலே அதைச் சேர்க்க வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல சுகாதார இலாகாவைப் பொறுத்தவரையில் நிறைய குறைகள் இருக்கின்றன. அதில் திட்டவட்டமாகப் பல காரியங்கள் வகுத்து அவை நடைபெறவில்லை என்பது என்னுடைய குறை. மூன்று லட்சம் மக்கள் வாழும் எங்கள் பகுதியில் ஆஸ்பத்திரி இல்லை. பத்து மைல் வட்டாரத்திற்குள்ளேயே





ஆஸ்பத்திரி இல்லை. இதைப்பற்றி நான் வந்தது முதற் கொண்டு சொல்லி வருகிறேன். அங்கே ஒரு ஹெல்த் சென்டர் வைக்கும் விஷயமாகக் கூடப் பரிசீலனை செய்யவேண்டும். மற்ற இலாகாக்கள் என்றால் அதற்கு ரேன்ஜ், டிவிஷன் என்றெல்லாம் இருக்கிறது. ஆனால் சுகாதார இலாகாவைப் பொறுத்தவரையில் அதுமாதிரியாக ரேன்ஜ் ஒன்றும் வைத்துக்கொள்ளப்படவில்லை. ஆஸ்பத்திரிகள் இல்லாத இடத்தில் வைத்திய உதவி செய்து கொடுப்பதற்கு எவ்விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளாமல் எதற்கெடுத்தாலும் அந்தப் பிராயந்தியத்தில் மதுரையிலேயே எல்லாக் காரியங்களும் செய்யப்பட்டு வருகிறது. ஆகவே ஆஸ்பத்திரிகள் விஷயத்தில் திட்டவட்டமாக ஒரு கொள்கையை வகுத்து நல்லமுறையில் வேலை செய்யவேண்டும் என்பது என் அவா.

இதைப்போன்றே நூற்றுக்கணக்கான விஷயங்கள் இருக் கிறது. கூட்டுறவு இலாகாவில் என்னுடைய தொகுதியில் கோவாப்ரேடிவ் பில்டிங் சொஸைடி ஆரம்பித்தோம். ஒரு வருஷ மாக லோன் அப்ளை செய்துகொண்டிருக்கிறோம். அதை யாரும் கவனிக்கவில்லை. இப்படிக் காலதாமதமாகாமல் இவ்விஷயங் களைத் துரிதமாகப் பைசல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். போடுகிற திட்டங்கள் அநேகமாக நல்ல முறையில் நிறைவேற்றப்படுவதில்லை.

பாக்கியுள்ள சின்னஞ்சிறு விஷயங்கள்—இந்த புத்தகத்தில் கண்டபடி ஒரு காரியம் கூட—நடைபெறவில்லை. ஆகவே, இந்தக் காரியங்கள் எல்லாம் நடைபெறுவதற்கு வேண்டிய முயற்சிகளை அரசாங்கம் கைக்கொள்ள வேண்டும். அடுத்தபடியாக நான் என் அனுபவத்தைச் சொல்கிறேன். அதைப் பரிசீலனை செய்யுங்கள். ஜில்லா போர்டில் நான் இருந்தபோது அங்கு 52 மெம்பர்கள் இருந் தார்கள். மெம்பர்கள் கோரும் விஷயங்களைச் செய்வதற்கு என்று 2, 3 லட்சம் ரூபாய் ஒதுக்கி வைப்போம். எந்த பிர்க்காவில் முக்கியமான குறைகள் இருக்கின்றனவோ அவைகளை நீக்கி வைக்க அந்தத் தொகை செலவு செய்யப்படும். அதாவது அந்தத் தொகைக்குள் வரும்படி செய்யப்படும். அதேபோன்று இங்கு 205 தொகுதிகளைச் சார்ந்த மெம்பர்கள் இருக்கிறார்கள். மெம்பர் கோருகிறவற்றை, அவர்கள் சொல்லும் முக்கியமான குறைகளை நீக்குவதற்கு, அதாவது பாலம் கட்ட வேண்டும், ஒரு உயர்நிலைப் பள்ளி வேண்டும், அல்லது நல்ல ரோடுகள் வேண்டும் என்றெல்லாம் கேட்கும்போது, அந்தக் கோரிக்கைகள் நியாயமானதாக இருந் தால், செய்தால் போதும்—அதற்காகக் கொஞ்சம் தொகையை ஒதுக்கி வைத்தால் நன்றாகயிருக்கும் என்று சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* SRI S. RAMALINGA PADAYACHI : கனம் சட்டமன்ற தலைவர் அவர்களே, இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட அறிக் கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடியும் தருவாயில், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை

[Sri S. Ramalinga Padayachi] [7th September 1960

ஆரம்பிக்கும் நிலையில் இருக்கிறோம். திட்டம் போட்டு எதற்கு காரியங்கள் செய்வது என்று நேற்று ஒருவர் சொன்னார். திருவள்ளுவர் என்ன சொல்லியிருக்கிறார் என்றால்,

"அளவு அறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல இல்லாகித் தோன்றாகா கெடும்."

என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல் திட்டமிட்டுத்தான் காரியங்கள் செய்யவேண்டுமே தவிர திட்டம் இல்லா விடில் ஒன்றுமே செய்ய முடியாது. அதற்காகத்தான் முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் என்று திட்டங்கள் போடுகிறோம். இத்திட்டங்கள் முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத்திற்காக 78 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது வரவேற்கத் தக்கதே. நம் நாட்டில் 70% மக்கள் விவசாயத் துறையில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே, விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பது போற்றத் தக்கதே. விவசாயத்தில் முக்கியமாக புஞ்சையை எடுத்துக் கொண்டால் காலாகாலத்தில் மழை பெய்யாவிடில் ஒன்றுமே செய்ய முடியவில்லை. ஆகவே, இயந்திரக் கலப்பையை வைத்து உழுதால் பயிர்கள் நன்கு வளர முடியும். இயந்திரக் கலப்பை உபயோகிப்பதுதான் நல்லது. இப்பொழுது அப்படி 500 கலப்பைகள் கொடுக்கப் போவதாக குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆயிரம் கலப்பைகள், இயந்திரக் கலப்பைகள் கொடுத்தாலும் நல்லதுதான். நிலத்தில் 2/3 பங்கு புஞ்சையாக இருக்கின்றன. ஆகவே, புஞ்சை நன்கு விருத்தியடைந்தால்தான், நம் நாட்டின் உற்பத்தியின் அளவைப் பெருக்க முடியும். ஒரு பழமொழி சொல் வார்கள், "அகல உழுவதை விட ஆழ உழு" என்று. சாதாரண கலப்பையைக் கொண்டு 2-1/2 அங்குலம் அல்லது 3 அங்குலம் உழ முடியும் என்றால் இயந்திரக் கலப்பையை உபயோகித்தால் 10 அங்குலம் வரை ஆழமாக உழ முடியும். ஆகவே, விவசாய அபி விருத்தியைப் பெருக்குவதற்கு நாம் இயந்திரக் கலப்பைகளை உபயோகிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, எங்கள் தொகுதியில் எந்தவிதமான பாசன வசதியும் இல்லாதிருப்பது பற்றி வருத்தம் அடைகிறேன். இருந்தபோதிலும், மருதையாறு திட்டத்திற்கு முதல் பரிபாலிட்டி கொடுக்கப் பட்டிருக்கிறது. அது என் தொகுதி யில் இல்லாதிருந்தாலும் அதற்காக சந்தோஷப்படுகிறேன். ஒரு கோடி 88 லட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. அதற்காக சந்தோஷப்படுகிறேன். அப்பர் மருதையாறு திட்டத்தைச் செய் வதின் மூலம் ரெயில்வேக்கு பாதகம் அடிக்கடி ஏற்படுவதை நீக்க முடியும். 2,000, 3,000 ஏக்கர்களுக்கு மேல் பாசன வசதி செய்து கொடுக்க முடியும். அதையும் பரிசீலனை செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, மின்சாரம். நம் மாநிலத்தில் மின்சாரம் நல்ல முறையில் பரவி வருகிறது. அது இன்னும் வேகமாக பரவுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, ஹரிஜனங்களுக்குக்காக அவர்களின் நன்மைக்



7th September 1960] [Sri S. Ramalinga Padayachi]

காக தொகை ஒதுக்கியிருந்த போதிலும், அவர்களுக்கு மனைக் கட்டுகள் வழங்குவதில், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அல்லது நாலாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்திற்குள்ளாவது எல்லோருக்கும் மனைகள் வழங்கி இந்த மனை வழங்கும் திட்டத்தை முழுதும் நிறைவேற்ற முடியும் என்று தோன்றவில்லை. மாவட்ட அதிகாரிகளை இதுபற்றி கேட்கும்போது அவர்கள் சொல்கிறார்கள், 50,000 ரூபாய் கொடுக்கிறார்கள், இதை வைத்துக்கொண்டு எப்படி எல்லோருக்கும் மனைக் கட்டுகள் உடனடியாக வழங்க முடியும் என்று கேட்கிறார்கள். ஆகவே, ஹரிஜனங்களுக்கு வீடு கட்டும் திட்டம் இல்லாவிட்டாலும் மனைக்கட்டுகள் வழங்கும் திட்டத்தை யாவது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து, எல்லோருக்கும் மனைக்கட்டுகளாவது வழங்க வேண்டும்.

அடுத்தபடியாக, பல தொழில்பள்ளி பற்றி சொல்லப் பட்டிருக்கிறது. இன்ன இன்ன ஊரில் என்று சொல்லவில்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பத்து பல தொழில் பள்ளிகள் துவங்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த பத்து பள்ளிகளில் அரியலூரில் ஒரு பள்ளியாவது ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் உடையார் பாளையம் தாலூகா மிகவும் பிற்பட்ட தாலூகா. எங்கள் தாலூகா வில் குடிதண்ணீர் கஷ்டம் எப்பொழுதும் இருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் தேசிய குடிநீர் வழங்கும் திட்டம் ஒன்று திருச்சியில் அமைய இருக்கிறது. ஆனால் உடையார் பாளையம் சேர்க்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, உடையார் பாளையத்தில் தேசீய குடிநீர் வழங்கும் திட்டம் ஏற்படுத்தப் பட வேண்டும். அங்கு சுகாதார முறையில் குடி தண்ணீர் வழங்க திட்டம் வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கு இதற்காக ஒரு நிரந்தரமான திட்டம் வகுத்துத் தரவேண்டும். அடுத்தபடியாக, உடையார்பாளையம் தாலூ காவில் முந்திரி ஏராளமாகப் பயிரிடப்படுகிறது. அங்கு ஒரு ப்ளாஸ்டிக் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டியது மிக அவசியம். உடையார்பாளையம் தாலூகா பிற்போக் கான தாலூகா. முதல் அமைச்சர் அவர்கள் எங்கள் தொகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்து பார்த்து இந்த மாநிலத் திலேயே உடையார்பாளையம் தாலூகாதான் மிகவும் பிற்பட்ட பகுதி என்று சொல்லியிருக்கிறார்கள். கனம் ராமையா அவர் களும் எங்கள் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதி என்று அடிக்கடி சொல்லி இருக்கிறார்கள். அங்கு ஒரு ப்ளாஸ்டிக் தொழிற்சாலை அவசியம் அமைக்க வேண்டும். ஆகவே, இதை மூன்றாவது ஐந் தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, சிறுநீர்ப்பாசனங்களை எடுத்துக் கொண்டால் எங்கள் தொகுதியில் மேடிட்டு, தூர் ஏற்பட்டு தண்ணீர் பிடிப்புக் குறைந்து வருகிறது. அதற்கு கணிசமான தொகை செலவு செய்து, எங்கள் பகுதியில் உள்ள ஆயக்கட்டு குளங்களை நன்கு செப்பனிட வேண்டும். பத்து வருட கால மாகவே எவ்வளவோ குளங்கள் மராமத்து செய்யப் படாமல் இருக்கின்றன. ஆகவே, அவைகளைச் செப்பனிடுவதற்கு

வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக மிகவும் பிற்பட்ட சமுதாய மக்களின் நலனுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை மிகக் குறைவாகயிருக்கிறது. அவர்கள் இன்னும் பொருளாதாரத் துறையிலும், கல்வித் துறையிலும் முன்னேற்றமடையவில்லை. அவர்கள் பொருளாதாரத் துறையிலும், கல்வித் துறையிலும் முன்னேறுவதற்கு மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிகப்படியான தொகை ஒதுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு நான் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* SRI N. V. CHOCKALINGAM: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தை வரவேற்று சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். திட்டத்தில் குறிப்பாக விவசாயமும் தொழிலும் தான் குறிக்கப்பட்டிருக்கிறது. ராமனுதபுரம் ஜில்லா, திருப்பத்தூர் தாலூகாவுக்கு இந்த மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எதுவும் செய்யப்படவில்லை என்பதை நான் சுட்டிக் காண்பிக்க விரும்புகிறேன். ராமனுதபுரம் திருப்பத்தூர் தாலூகா இந்த மாகாணத்திலேயே மிகவும் பிற்போக்கான ஏரியா என்பதை எல்லோரும் அறிவார்கள். திருப்பத்தூர் தாலூகாவுக்கு நீர்ப்பாசன வசதி செய்து தர வேண்டுமென்ருல் அப்பர் பெரியார் திட்டத்தைக் கொண்டு வந்தால்தான் முடியுமே தவிர வேறு எந்த விதமான வழியும் இல்லை என்பது முடிவான விஷயம். இதைப் பற்றி இந்தச் சபையில் பல முறை சொல்லியிருக்கிறேன். ஆனல் இது விஷயமாக இந்தத் திட்டத்தில் எதுவும் சொல்லப்படவில்லை.

அடுத்தபடியாக, அந்தத் தாலுகாவில் காட்டாறுகள் அனேகம் இருக்கின்றன. அவைகளில் சிறு சிறு அணைகள் கட்டினுல் நீர்ப்பாசன வசதி பெற்று பல ஏக்கர் நஞ்சை நிலங்கள் விளைவதற்கு ஏதுவாக இருக்கும். அதைப்பற்றி இந்தத் திட்டத்தில் எதுவும் காணவில்லை. இதையெல்லாம் விட்டுவிட்டாலும் கூட அங்குள்ள ஏரிகளுக்குப் பக்கத்தில் சமுதாயக் கிணறுகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று அங்குள்ள மக்கள் கேட்டிருந்தார்கள். இதற்கான நல்ல ஊற்றுக்கள் இங்கே இருக்கின்றன என்பதை பலரும் சொல்லி இருக்கிருர்கள். இப்போது அந்தக் கிணறுகள் வெட்டுகின்ற பொறுப்பு எந்த டிபார்ட்மெண்ட்டுக்கு என்றே புரியாமல் இருக்கிறது. ரெவின்யு டிப்பார்ட்மெண்ட்டைக் கேட்டால் எங்களுக்குத் தெரியாது என்கிருர்கள். புட் ப்ரொடக்ஷன் டிப்பார்ட்மென்டை கேட்டால் எங்களுக்குத் தெரியாது என்கிருர்கள்: பி. டப்ளியு. டிபார்ட்மென்டைக் கேட்டாலும் அப்படியே சொல்லுகிருர்கள். ஆகவே சமுதாயக் கிணறுகள் வெட்டுவதற்கு யார் பொறுப்பு? இதை எப்போது நிறைவேற்ற வேண்டும் என்பதைப்பற்றி சர்க்கார் ஊர்ஜிதப் படுத்தி ஒரு உத்தரவு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சமுதாயக் கிணறு என்பது, சர்க்காரால் கிணறு வெட்டப்பட்டு, அதற்கான செலவை 10 வருடத்தில் ஒரு தீர்வையாகப் போட்டு, அந்தச் செலவை வசூல் செய்து கொள்வது என்பது தான் என்று கருதுகிறேன். இவற்றை





உடனடியாக ஏற்படுத்திஞல், தண்ணீர் வசதியில்லாத இடங்களுக்கு மிக அனுகூலமாய் இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்கடுத்தபடியாக, தொழில், 4 லட்சம் ஜனத்தொகையுள்ள எங்கள் திருப்பத்தூர் தாலூகாவில் எந்த விதமான தொழிற் சாலையும் இல்லை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே ஏதாவது ஒன்றிரண்டு தொழிற்சாலையை அங்கு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, இப்போது தூர்வை எடுக்கும் இயந்திரம் ஒன்று புதுக்கோட்டையில் இருப்பதாகத் தெரிகிறது. புதுக் கோட்டையில் இந்த இயந்திரத்தின் மூலமாக என்ன வேலை நடை பெறுகிறது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனல் இந்த இயந் திரத்தை ஆறு நேர் ஓடிய கண்மாய்களில்தான் உபயோகிக்க முடியும் என்று சொல்லுகிருர்கள். எங்கள் பக்கத்தில் இம் மாதிரியான பல பகுதிகள் இருக்கின்றன. நான்கு லட்சம் ஜனத் தொகை கொண்ட எங்கள் தாலூகாவில் தூர்வை எடுக்கும் இந்த இயந்திரம் வேண்டும் என்று கேட்டால், 'உங்கள் தாலூகாவுக்கு இதைக் கொடுக்க முடியாது, சில குறிப்பிட்ட தாலூக்காக் களுக்குத்தான் கொடுக்க முடியும்' என்று சொல்லுகிருர்கள். ஆகவே எங்கள் தாலூகாவுக்கும் இதைப்போல் கொடுத்து உதவ சர்க்கார் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்..

அடுத்தபடியாக, இந்த அசெம்பிளியின் ஆரம்ப காலத்திலிருந்தே நான் சொல்லி வந்திருக்கிறேன், அதாவது காரைக்குடியிலிருந்து திருப்பத்தூர் வழியாக மதுரைக்கு ஒரு ரயில் பாதை போட வேண்டும் என்று. இதைப்பற்றி சில பேப்பர்களில் பார்த்தபோது, இந்தத் திட்டத்தை இப்போது நிறைவேற்ற இயலாது என்று சொல்லப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இப்போது இல்லாவிட் டாலும் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் இதை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பாலிடெக்னிக் கல்வியைப் பொறுத்த வரையில் எங்கள் பகுதியில் பிரைவேட்டாகத்தான் ஒன்றை ஏற்படுத்தியிருக் கிருர்கள். சர்க்கார் மூலமாக இன்னும் பாலிடெக்னிக் கல்வி நிலையங்களை ஏற்படுத்திஞல் தான் சாதாரண மக்கள் தொழில் கல்வியை கற்றுக்கொள்வதற்கு வசதி யாக இருக்கும். அத்துடன் பாண்டிய நாட்டுக்கே மத்திபமாக விளங்கக்கூடிய மதுரையில் ஒரு யூனிவர்சிட்டியை ஏற் படுத்த வேண்டியது மிகவும் அவசியம் என்று கூறிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

SRI P. S. CHINNADURAI: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இப்போது மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நகல் நம் முன்னல் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இதனைப் பொறுத்த வரையில் என் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.. கடந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களின் விளைவாக நம் நாட்டில் பொதுவாகச் செல்வம் அதிகரித்து இருந் தாலும் அந்தச் செல்வமானது நாட்டு மக்களுக்குப் போதிய

[Sri P. S. Chinnadurai] [7th September 1960

அளவில் பயன்படவில்லை. அதோடு நாட்டு மக்களுடைய சராசரி
வருமானம் எந்த அளவுக்கு உயரும் என்று முதலில் எதிர்
பார்த்தோமோ அந்த அளவுக்கு உயரவில்லை என்பதை நாம்
காண்கிறோம். இதனைக் குறித்து லோக் சபையில் நடை
பெற்ற விவாதத்தின் போது கூட, சர்க்கார் தரப்பிலிருந்து
பேசிய நமது நாட்டின் பிரதம மந்திரி இரண்டாவது ஐந்தாண்டுத்
திட்டம் உட்பட பல திட்டங்கள் நிறைவேறிய காலத்தில் செல
வழிந்த பணம், அந்தக் காலகட்டத்தில் சேர்ந்த வருமானம்
இவைகளைப் பார்க்கும்போது, இதன் மூலம் கிடைத்த தேசீய
வருமானம் எங்கே போயிற்று என்று கண்டுபிடிக்கவேண்டும்,
அதற்காக ஒரு கமிஷனைப் போட வேண்டியும் நேரிடலாம் என்று
சூசகமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இரண்டு ஐந்தாண்டுத்
திட்டங்களின் மூலமாக நாட்டிலே செல்வம் அபிவிருத்தி அடைந்
திருக்கிறது என்பது ஓரளவுக்கு உண்மையே. எந்த அளவுக்குச்
செல்வம் அபிவிருத்தி ஏற்படவேண்டுமோ அந்த அளவுக்கு ஏற்
படவில்லை என்றாலும், ஓரளவுக்கு அபிவிருத்தி அடைந்திருக்
கிறது. ஆனால் அடைந்திருக்கின்ற செல்வ அபிவிருத்தியானது
ஒருசிலருடைய கைக்குத்தான் போயிருக்கிறதே தவிர நாட்டு
மக்களுடைய கைக்குப் பரவலாக வந்து சேரவில்லை.
பணக்காரர்கள் பணக்காரர்களாகிக் கொண்டேயிருக்கக்
கூடியதையும், அதே நேரத்தில் சாதாரண உழைப்பாளிகள்
தங்கள் உழைப்பின் மூலமாக எந்தவித நன்மையையும்
அடையாமல் மேலும் ஏழைகளாகப் போய்க்கொண்டிருக்கின்ற
நிலைமையைத்தான் நாம் பார்க்கின்றோம். இந்த அனுபவங்களை
வைத்துக்கொண்டுதான் நாம் மூன்றாவது ஐந்தாண்டுத்
திட்டத்தைப் பார்க்க வேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்
இதற்கு முன்னால் இருந்த திட்டங்களைக் காட்டிலும் பெருந்
தொகை செலவிடுவதற்குரிய வகையில் அமைந்திருக்கிறது. விலை
வாசி ஏற்றத்தின் காரணமாக இந்த மதிப்பீடு சற்று
குறையும் என்றாலும், இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும்
தொகை உண்மையிலே பெரும் தொகை தான். கடைசி இரண்டு
ஐந்தாண்டுத் திட்டங்களைக் காட்டிலும் இதற்கு ஒதுக்கப்
பட்டிருக்கும் தொகை அதிகம் என்பதில் சந்தேகமில்லை. மூன்று
ஐந்தாண்டுத் திட்டங்களும் நிறைவேறிய பிறகு நம் நாட்டினுடைய
நிலைமை எவ்வாறு இருக்கும் என்பதற்குக் கடந்த கால திட்டங்கள்
நமக்கு எடுத்துக்காட்டாக இருக்கும். இரண்டாவது ஐந்தாண்டுத்
திட்ட காலத்தில் முதலாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில்
இருந்ததைவிட வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகக் காணப்
பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத், திட்ட காலத்திலும் 53
லட்சம் பேர்களுக்கு வேலையில்லாத நிலைமை தான் இருக்கும் என்று
திட்டக் கமிஷன் குறிப்பிட்டிருக்கிறது. அப்படியானால் மூன்றாவது
திட்ட காலத்திலும் இதைவிட இன்னும் அதிகமான பேர்களுக்கு
வேலையில்லாத நிலை ஏற்படக்கூடாது, அம்மாதிரிப்பட்ட நிலையை
நாம் எதிர்நோக்க வேண்டியிருக்குமென்று சொல்வோமேயானால்,
நமது திட்டத்தில் பெருத்த குறை இருக்கின்றது என்பதைத்தான்
எடுத்துக் காட்டுகிறது.



7th September 1960] [Sri P. S. Chinnadurai]

ஆகையால் நாட்டிலே இருக்கின்ற வேலையில்லாத் திண்டாட் 3-30 p.m.
டத்தைப் போக்குவதற்கும், வளர்ந்து வருகின்ற ஜனத் தொகைப்
பெருக்கத்தினாலே ஏற்படுகின்ற புதிய நிலைமைகளைச் சமாளிப்
பதற்கும், நாட்டிலே இருக்கின்ற மக்களுடைய மனித சக்தியைப்
பயன்படுத்திக் கொள்ளுவதற்கும் ஏற்றதாக ஒரு திட்டத்தை நாம்
வரைய வேண்டியது மிகவும் அவசியம் என்பதைத்தான்
இங்கே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அந்தக் கண்ணோட்டத்
தோடு பார்க்கிறபோது அகில இந்திய ரீதியிலே வரையப்பட்ட
மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டமானாலும் சரி, நம்முடைய ராஜ்யத்
திற்கு வரையப்பட்ட திட்டமானாலும் சரி, உண்மையிலேயே குறை
பாடு உடையதாகத்தான் இருக்கிறது என்பதைக் கூற விரும்பு
கிறேன். ஏதோ குறை சொல்ல வேண்டுமென்பதற்காக எதிர்க்
கட்சித் தரப்பில் இருந்து நான் இதைக் கூறவில்லை. அவ்வாறு
எடுத்துக்கொள்ளக் கூடாது என்று அரசாங்கத் தரப்பில் உள்ள
வர்களை நான் வேண்டிக் கொள்கிறேன். திட்டமிட்ட முறையிலே
தான் பொருளாதார முன்னேற்றம் காண முடியும் என்பது
சோஷலிச தத்துவத்தின் அடிப்படையான அம்சம் என்று நான்
குறிப்பிட விரும்புகிறேன். சோஷலிசத் தத்துவத்தை இன்றைய
ஆளும் காங்கிரஸ் கட்சி ஏற்றுக் கொள்வதற்கு முன்னாலேயே கூட
இந்தத் திட்டமிடுவதற்கு இந்திய அரசாங்கம் துவங்கியது.
ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து நான்காவது ஆண்டில்தான்
பாராளு மன்றத்தில் சோஷலிச இலட்சியத்தை ஏற்றுக்
கொள்வது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இருந்த
போதிலும் 1951 ஆண்டிலிருந்தே, முதலாவது ஐந்தாண்டுத்
திட்டம் துவங்கிவிட்டது. ஆகையினாலேதான் இந்தத் திட்டமிடு
கின்ற நிலையை சோஷலிஸ்ட் என்ற நிலைமையில் வரவேற்பேனே
அல்லாமல் ஒரு போதும் வேண்டுமென்றே குறை கூற வேண்டு
மென்ற நோக்கத்தோடு தாழ்த்திப் பேச முன்வர மாட்டேன்.
அந்தக் கண்ணோட்டத்துடன் திட்டமிடப்படுகிறதா என்பதுதான்
முக்கியமானது.

கனம் நிதியமைச்சர் அவர்கள் பேசும்போது தம்முடைய
பேச்சிலே மிக அழகாக ஒன்றைக் குறிப்பிட்டார். அவர்கள்
விருப்பப்பட்டோ, படாமலோ வெளி வந்த அந்த வார்த்தைகள்
உண்மையிலேயே இந்தத் திட்டத்தின் அடிப்படைப் போக்கை,
நோக்கை மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது என்று நான்
கருதுகிறேன். அமெரிக்காவில் இருக்கும் நிலைமையைக் கனம்
நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அங்கு ஒரு
தொழிலாளிக்கும், ஒரு முதலாளிக்கும் இருக்கக்கூடிய நிலைமை,
அமெரிக்கப் பொருளாதார அடிப்படை இவை கனம்
நிதியமைச்சர் அவர்களையும், அவரைச் சார்ந்த கட்சிக்
காரர்களையும் மிகவும் கவர்ந்திருக்கிறது என்று நான்
எண்ணுகின்றேன். அதைப்பற்றி அதிகமாக விவரித்துப் பேசி
நான் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. ஒன்று மாத்திரம்
நிச்சயம். நம்முடைய ராஜ்ய சர்க்கார், அகில இந்திய சர்க்கார்
உட்பட திட்டமிடும்போது சோஷலிசம் என்ற ஒரு லட்சியத்தை
மனதிலே வைத்துக்கொண்டோ அல்லது வெளிப்படையாகச்
சொல்லிக் கொண்டோ திட்டமிட முற்பட்ட போதிலும் அவர்

களுடைய உள்ளத்தின் ஆழத்திலே அமெரிக்க மாடல் சோஷலிசந்தான் நிலைத்திருக்கிறது என்பதை நான் காண்கிறேன். அமெரிக்க மாடல் சோஷலிசம் நல்லதா, ரஷ்ய மாடல் சோஷலிசம் நல்லதா என்ற வாதப் பிரதிவாதங்களில் நான் இறங்க மாட்டேன். எப்படியும் நம்முடைய நாட்டுக்கு ஏற்றதான, நம்முடைய நாட்டு சூழ்நிலைக்கு மக்கள் வாழ்க்கை நிலைக்கு, சரித்திர பூர்வமான நிலைக்கு ஏற்றதான ஒரு சோஷலிசப் பொருளாதாரத் திட்டம் அமைய வேண்டுமென்பதுதான் என்னுடைய எண்ணம். நம்முடைய நாட்டு சூழ்நிலைக்கு ஏற்ப சமதர்ம, பொருளாதாரத் திட்டதை வகுக்கவும், அமுல் நடத்துவதற்கும் நம்முடைய அனுபவத்தால் துணை புரிய வேண்டுமென்று இருந்தாலும் கூட, மகாத்மா காந்தி அவர்கள் இதைக் குறித்துப் பன்முறை சூசகமாக அவர்களுடைய வாழ்நாளில் எடுத்துக் கூறியதை இந்த நேரத்தில் நினைவுப் படுத்திக் கொள்வது மிகவும் அவசியமாகும்.

நம்முடைய நாட்டின் பொருளாதார முன்னேற்றம் கிராமத்தை அடிப்படையாகக் கொண்டு, கிராம மக்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்க வேண்டுமென்று காந்திஜி அவர்கள் தம்முடைய வாழ்நாளில் பன்முறை எடுத்துக் கூறி வந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் சிந்தித்துப் பார்த்தால் பல உண்மைகள் நமக்குப் புலனாகும் என்பதில் ஐயமே கிடையாது. எப்படிப்பட்ட பெரிய தொழில்களை ஏற்படுத்தினாலும் கூட, புதிய புதிய, பல வகையான தொழிற்கூடங்களை ஏற்படுத்தினாலும் கூட, பெரும்பாலோராக இருக்கக்கூடிய கிராம மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தால்தான் நாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்ல முடியும். அவ்வாறு மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவில்லையானால் பெரும் தொழில்கள் நிலைத்து நிற்க முடியாது.

நம்முடைய நாட்டிலே உள்ள மொத்த ஜனத் தொகையில் 100-க்கு 75 பேர் கிராமங்களில் வாழ்கிறவர்கள். மொத்தம் உள்ள ஜனத் தொகையில் சுமார் 68.1 சதவிகிதம் பேர்கள் வருமானத்திற்காக உழைப்பை நல்கக் கூடிய மக்கள், விவசாயத் தொழிலை நம்பி அதிலே ஈடுபட்டிருக்கின்றவர்கள். இப்படிப்பட்ட நிலைமை நம் நாட்டிலே இருக்கும் போது விவசாயத்திற்கு முதலிடம் கொடுத்து வகுக்கப் படா விட்டால் வேறு எந்த ஒரு திட்டமும் நாட்டிலே வெற்றிகரமான பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி கோலாது. நாம் நம்பிக் கொண்டிருப்பது சோஷலிசம் என்பது உண்மையானால், அது எவ்விதமான சோஷலிசமாக இருந்தாலும் சரி, பெரும்பான்மையான மக்களுக்குச் சமதர்மத்தை நல்க வேண்டுமானால் மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர வழி வகுத்தாக வேண்டும். விவசாயிகள் வெகு காலமாக நம்முடைய நாட்டிலே புறக்கணிக்கப் பட்டு வந்திருக்கிறார்கள். வெகு காலமாகக் கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கின்றன. இந்த நாட்டிலே உள்ள ஏற்றத் தாழ்வுகளைப் பற்றியும் ஜாதி முறையிலே உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறித்தும், பொருளாதார ரீதியிலே உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறித்தும் பலப்பல அரசியல் கட்சிக்காரர்கள் எடுத்துக் கூறி வருகிறார்கள். மிகவும் முக்கியமான பாகுபாட்டை



நம்முடைய நாட்டிலே நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். நம்முடைய நாட்டிலே இருக்கின்ற பலவகை வேறுபாடுகளிலே மிகப் பெரிய ஒரு வேறு பாடு இருக்கிறது. இந்திய நாடு இரண்டு நாடாக இருக்கிறது என்பதை நான் காண்கிறேன். ஒன்று நகர இந்தியா. வெகு காலமாகப் பராமரிக்கப்பட்டு, தனியாகப் பாலூட்டி வளர்க்கப் பட்டு வருகின்ற நகர இந்தியா. இன்னொன்று, வெகு காலமாகப் புறக்கணிப்பட்டு, பல வகையிலேயும் இழிவுபடுத்தப்பட்டு, தாழ்த் தப்பட்டு, முன்னேற முடியாமல் தடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் இருக்கும் கிராம இந்தியா. நாம் போடுகின்ற திட்டங்கள் இந்த ஏற்றத்தாழ்வுகளைச் சமப்படுத்த உதவாவிட்டால் உண்மையிலேயே அதனால் பலன் இருக்காது. நாட்டிலே இருக்கக் கூடிய பெரும் பான்மையான மக்களுக்குத் துணை புரியாத எந்தத் திட்டமும் உண்மையிலேயே நாட்டை உயர்த்துவதாக எவரும் கருத முடி யாது. திட்டங்களைப் போடுகின்ற நாம் இதனைக் குறிப்பாக நம் முடைய கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். மாடிக்கு மேல் மாடியாக நகரங்களில் கட்டிடங்கள் வளர்ந்து வருகின்றன. கிராமங்களில் இருக்கும் மண் குடிசைகள் கூட இடிந்து விழுந்து கொண்டிருக்கின்றன. நகரங்களில் கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள் பெருகிக் கொண்டே வருகின்றன. கிராமங்களில் இவைகள் எட்டாக் கனியாக விளங்கி வருவதைக் காண்கிறோம். சுகாதார வசதிகள், வேலை வாய்ப்புகள் நகரங்களில் பெருகிக் கொண்டே வருகின்றன. இதற்கு என்ன காரணம்? அதற்குக் காரணங்கள் எதுவாக இருந்தபோதிலும்கூட காரணங்களைக் கண்டறிந்து குறைகளை நீக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். கிராமங்களை அடிப்படையாகக் கொண்டு நாம் திட்டமிட வேண்டும். ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்தவர்கள், தேசிய வரு மானம் 5 சதவிகிதம் உயரவேண்டுமென்றும், சுய தேவைப் பூர்த்தி அடைய வேண்டுமென்றும் தங்களுடைய கருத்துக்களை, நோக்கங் களாகக் கூறியிருக்கிறார்கள்.

தேசிய வருமானம் உயருகிறது, மக்களின் சராசரி வருமானம் உயருகிறது என்று சொல்லி கோடிக்கணக்கான மக்களை நாம் வெகு நாட்களாக ஏமாற்றிக் கொண்டிருக்கக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். தேசிய வருமானம் மொத்தத்திலே உயரலாம். ஆனால் அவ்வாறு உயரும் பல நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்கள் ஒரு பக்கத்திலே ஒரு ரிஸர்வாயரிலே தேங்கு வதைப்போல் ஒரு இடத்தில் தேங்கிவிடுமானால் மற்றவர்களுக்கு அதனால் லாபம் ஒன்றும் கிடையாது. ஒரு பக்கத்திலே ஏராளமான பணம் குவிந்துவிடுவதும், ஒருசில குடும்பத்தினர் சுகமாக வாழ் வதும், பல குடும்பத்தினர் தங்களுடைய வாழ்க்கையிலே போதிய நலன்களைப் பெறாமல் வாடுவதுமான நிலைமை இருக்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஆகையால்தான், சராசரி வருமானம் என்று நான் சொல்கிறபோது, உண்மையிலேயே மக்களுடைய சராசரி வாழ்க்கைத் தரத்தை அது உயர்த்துகிறதா, நாம் போடும் திட்டங்கள் மூலம் ஒவ்வொரு குடும்பத்திலும் உண்மையான பொருளாதார வருமானம் கூடுதலாக அமைந்திருக்கின்றதா என்பதை நாம் கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். கிராமங்களிலே வாழ்க்கைத் தரம் உயராத வரையில் நாம் என்ன செய்வதற்கு இயலும் என்று நான் மறுபடியும் கேட்க விரும்புகிறேன்.

[Sri P. S. Chinnadurai] [7th September 1960

ஏராளமான புதிய தொழில்களை வளர்த்து, சைக்கில் செய்து குவிக்கலாம், மோட்டார் சைக்கில் செய்து குவிக்கலாம், ஏராளமான மின்சார சாதனங்களைச் செய்து குவிக்கலாம், இன்னும் பல்வேறு வகையான அத்தியாவசிய சாதனங்களையும், இதர உபயோகப் பொருள்களையும், மற்றும் எத்தனை வகைப்பட்ட நவீன சாதனங்கள் மனித வாழ்க்கைக்குப் பயன்படுமோ அத்தனையையும் செய்து நாட்டில் குவிக்கலாம். ஆனால், இவைகளை வாங்குவதற்கு ஆள் எங்கே என்று நான் கேட்க விரும்புகிறேன். நாட்டிலே இருக்கும் 78 சதமான மக்கள் ஏழைகளாக இருக்கும் வரையில், போதுமான வருமானம் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கும் போது சைக்கில்களையும், மோட்டார்களையும் இதர சாதனங்களையும் வாங்குவதற்கு யார் முன்வருவார்கள் என்று கேட்கிறேன். நகர மக்களைப் பொறுத்தவரையில், அவர்களில் ஒரு சாரார் மாத்திரம் இவைகளை வாங்கினால் போதும் என்று நினைக்கிறீர்களா? அப்படியானால் இந்த நாடு உரிய முன்னேற்றத்தை அடைந்துவிட முடியுமா என்று கேட்கிறேன். உண்மையிலேயே, கிராமங்களிலே வாழும் 78 சதமானமுள்ள பெரும்பான்மையான மக்கள் தங்களுடைய வாங்கும் சக்தியை அதிகரிப்பதற்கேற்ற வகையிலே வருமானத்தைப் பெறுவதற்கு நம்முடைய திட்டங்கள் மூலம் வழி வகுத்தால்தான் இந்த நாட்டிலே எந்தத் தொழில்களும்--இரும்புத் தொழிற்சாலை, எஃகுத் தொழிற்சாலை அல்லது ரசாயனத் தொழிற்சாலை, சிமெண்ட் தொழிற்சாலை, இப்படி எந்தத் தொழில்களாக இருந்தாலும், அந்தத் தொழில்கள்—வளர்ச்சி அடைவதற்கு உதவியவர்கள் ஆவோம் என்று உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். அந்த அடிப்படையிலே, பார்க்கும்போது, போதுமான அளவிலே கவனம் செலுத்தி, நம்முடைய ராஜ்யத்தின் திட்டமும் சரி, அகில இந்தியத் திட்டமும் சரி, ஆக்கப்படவில்லை என்று நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

எல்லோரையும் கலந்துகொண்டு இந்நகல் திட்டத்தைத் தயாரித்ததாகச் சொன்னார்கள். எல்லோரையும் கலந்துக்கொண்டு தயாரிக்கப்பட்ட போதிலும், சர்க்கார் கட்சியைச் சேர்ந்தவர்கள் எந்தப் போக்கிலே சிந்திக்க முற்பட்டிருக்கிறார்களோ எந்தப் போக்கிலே இதை வரைய முன்வந்தார்களோ அதே போக்கிலேதான் இந்தத் திட்டங்கள் வரையறுக்கப்பட்டனவே தவிர, மற்றக் கட்சிக்காரர்களுடைய மனப்பான்மையை ஏற்றுக்கொள்கிற முறையிலே வகுக்கப்படவில்லை என்று நான் இங்கே உறுதியாகக் கூறுவதற்கு முடியும்.

இனி நம்முடைய ராஜ்யத்தின் விசேஷத் தன்மைகளைக் குறித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய ராஜ்யத்திலே விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்குக் கடந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே நாம் எடுத்துக் கொண்ட முயற்சிகள் முற்றிலும் வெற்றிபெறவில்லை. முழுமையாக வெற்றியடையவில்லை, ஓரளவு வெற்றி அடைந்தது என்பதைக் கனம் விவசாயத்துறை அமைச்சர் கூடஒப்புக்கொள்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். அதற்குக் காரணம் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால், இந்தக் குறைபாட்டை நம்மால்



7th September 1960] [Sri P. S. Chinnadurai]

நிவர்த்திக்க முடிந்திருக்கக் கூடாதா, கடந்த காலத்திலே என்பது சர்ச்சைக்குரிய விஷயம். இனி வருங்காலத்தில் அப்படிப்பட்ட குறைபாடுகள் வராத நிலைமையில் நாம் நம்முடைய திட்டங்களை வகுக்க முடியாதா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

பன்னிரண்டு லட்சம் டன் அதிகப்படியான தானியத்தை உற்பத்தி செய்வதற்கு நாம் தீர்மானித்தோம். அது பூரணமாக வெற்றியடையவில்லையே என்றால் அதற்குக் காரணம் உரப் பற்றாக்குறைதான் என்று சொன்னோம். உரப் பற்றாக்குறை எந்த அளவுக்கு இருக்கிறது என்று நமக்குத் தெரியவில்லை. வேறு வழிகள் மூலம் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு நம்மால் ஏற்பாடு செய்ய முடியாதா என்பதைத்தான் நாம் இங்கே கவனிக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகின்றேன். என்னுடைய கருத்தில் அது முடியும் என்றுதான் தோன்றுகிறது. உதாரணமாக, நம்முடைய ராஜ்யத்தில் தரிசாகக் கிடக்கும் நிலங்களை, விரைவாகச் சாகுபடிக்கு லாயக்குள்ள நிலங்களாக்குவதற்கு எந்த அளவு நம்முடைய முயற்சிகள் கடந்த காலத்தில் இருந்தன? ஆண்டொன்றுக்கு 1 சதமானம் 1-½ சதமானமுள்ள நிலத்தைத்தான் சாகுபடிக்குக் கொண்டுவருவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டோம்; அது போதாது. நம்முடைய ராஜ்யத்தில் இன்னும் சாகுபடிக்கு லாயக்குள்ள தரிசு நிலங்கள் சுமார் 40 லட்சம் ஏக்கருக்கு மேல் இருக்கின்றன என்று அரசாங்கக் கணக்குகள் கூறுகின்றன. இந்த நாற்பது லட்சம் ஏக்கரில் பாதி அளவாவது, பாதி இல்லாதுபோனாலும், கால் பாகமாவது, அதாவது பத்து லட்சம் ஏக்கர்களையாவது சாகுபடிக்கு லாயக்குள்ள நிலமாக ஆக்குவதற்கு நாம் வழிவகை செய்திருக்கிறோமா என்பதுதான் என்னுடைய முக்கியமான கேள்வி. அதற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட நகல் சரியான பதில் அளிக்கவில்லை என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பத்து லட்சம் ஏக்கர் தரிசு நிலத்தை நாம் சாகுபடிக்கு லாயக்குள்ளதாக ஆக்கிவிடுவோமானால் அதன் மூலம் எவ்வளவு அதிகப்படியான தானியத்தை நாம் உற்பத்தி செய்யமுடியும் என்று கனம் அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால், நாம் ஏன் அந்த முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை? அதற்குக் காரணம் நமக்குத் தெரியாது. ஆனால், ஒரு காரணத்தை என்னால் ஊகிக்க முடிகிறது. கனம் நிதி அமைச்சர் அவர்கள் பேசிய பேச்சிலிருந்து போதுமான நிர்வாகத் திறமை உடையவர்கள் நம்முடைய ராஜ்யத்திலே இந்த அளவுக்குமேலே நிறைவேற்றுவதற்கு இல்லை என்பதுதான் அது. அப்படித்தான் அதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். நாம் இதற்குமேல் திட்டமிட்டால் அதை நிறைவேற்றும் திறமை நமக்குக் கிடையாது. 'நமக்கு' என்று சொல்லும்போது இந்த ராஜ்ய சர்க்காருக்குக் கிடையாது. இதுதான் இன்றைக்குள்ள நிலைமை.

THE HON. SRI M. A. MANICKAVELU: அப்படியா?

SRI P. S. CHINNADURAI: பொதுவாக, 'அட்மினிஸ்ட்ரேஷன்' விஷயத்தில் திறமை போதாது. நமக்கு இல்லை. அது கடந்த காலத்தில் நேர்ந்துவிட்ட குறை. அதை நிவர்த்திக்க

[Sri P. S. Chinnadurai] [7th September 1960

வேண்டுமென்றுதான் நான் கூறுகிறேன். இந்தச் சர்க்காரைக் குறை கூறுவதாக கனம் அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்ளக் கூடாது. குறைபாடு இருக்கிறது. அதைப் போக்கிக்கொள்ள வேண்டுமென்றுதான் சொல்லுகிறேன். தரிசு நிலங்களைப் பண்படுத்தி சாகுபடிக்கு லாயக்குள்ளதாக ஆக்குவதற்கு என்ன அதிகத் திறன் வேண்டியிருக்கப் போகிறது? அந்தப் பொறுப்பை அந்தந்தப் பஞ்சாயத்துக்களுக்கு விட்டுப் பாருங்கள். அவர்கள் செய்து முடிப்பார்கள். ஒவ்வொரு பஞ்சாயத்தின் கையிலும், அமைந்துகொண்டிருக்கும் பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸிலின் கையிலும் அந்தப் பொறுப்பை விட்டுப் பாருங்கள். அவர்கள் ஒழுங்காக நிறைவேற்றுவார்கள்—போதுமான பணத்தைக் கொடுப்பார்களானால்; இதன் மூலம் ஏராளமான பேர்களுக்கு வேலை கிடைக்கும். வருஷத்திற்கு இரண்டு லட்சம் ஏக்கர் என்று கணக்கிட்டு பத்து லட்சம் ஏக்கர்களைப் பண்படுத்துவது என்றால் ஏராளமான பேர்களுக்கு வேலை கிடைக்கும். வேலை கிடைப்பது மட்டுமல்ல; ஒவ்வொரு ஆண்டிலும் விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்கு அதன் மூலம் வகை ஏற்படும். இந்த மிக முக்கியமான யோசனையை அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து.

சாகுபடிக்கு லாயக்குள்ள நிலங்களை அபிவிருத்தி செய்வது மாத்திரமல்ல; மேலும் நீர்ப்பாசன வசதியை எடுத்துப் பார்ப்போம். நீர்ப்பாசன வசதிகளைப் பொறுத்த வரையில், நம்முடைய மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பார்க்கும்போது உண்மையிலேயே ஒரு பக்கம் வருத்தம், இன்னொரு பக்கம் கோபமும் கூட வருகிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் எட்டாவது ஸ்தானத்தை வகித்து வந்தது நம்முடைய ராஜ்யம் அகில இந்தியாவிலே. மூன்றாவது ஐந்தாண்டுக் காலத்தின் முடிவிலே எப்படியிருக்கும் என்று அகில இந்திய ரீதியிலே கொடுக்கப்பட்டிருக்கும் நகல் இருக்கிறது. நம்முடைய ராஜ்யத்தின் நிலை பன்னிரண்டாவதாக இருக்கும்—நீர்ப்பாசன அளவிலே. ஏன் இந்தப் பின்னேற்றம்? இதனை முன்னேற்றம் என்று சொல்ல முடியுமா? எட்டாவது நிலையிலிருந்து பன்னிரண்டாவது நிலைக்குத் தள்ளப்படுவது முன்னேற்றம் ஆகுமா? மற்ற ராஜ்யங்கள் முன்னுக்குப் போகிறபோது நம்மால் முன்னுக்குப் போக முடியவில்லையென்றால், இதற்குச் சரியான வழி வகுக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம் என்று சொல்ல விரும்புகிறேன். காவிரியைப் பயன்படுத்திக் கொண்டு விட்டோம் என்று சொல்லிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. வேறு பல வகையான திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் நாம் இந்த நீர்ப் பாசனத் துறையிலே ஏற்பட்டிருக்கும் நெருக்கடிக்குப் பரிகாரம் கண்டாக வேண்டுமென்று நான் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். ஏராளமான குளங்கள் தூர்ந்து போய்க் கிடக்கின்றன; வண்டல் படிந்து கிடக்கின்றன. அந்தக் குளங்களைத் தூர் எடுத்து, சீர்படுத்துவதற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் என்ன முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று பார்த்தால் ரொம்பவும் வேதனைப் படத்தக்க நிலைமையைத்தான் பார்க்கிறோம்.



7th September 1960] [Sri P. S. Chinnadurai]

இந்த ஆலோசனைகளெல்லாம் சரியானபடி அமைத்து திருத்தப்படவேண்டுமென்ற காரணத்திற்காகத்தான் இதனை நான் குறிப்பிடுகிறேன்.

நம்முடைய ராஜ்யத்தில் சுமார் 2,093,000 ஏகரா குளங்கள், ஏரிகளின் மூலமாகப் பாசன வசதி பெற்று வருகிறது. இதிலே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 20,000 ஏகராவுக்குப் பாசன வசதி கொடுக்கின்ற அளவுக்கு உள்ள குளங்களை சரிப்படுத்துவதற்கு நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். மொத்தத்தில் எவ்வளவு நீர்ப்பாசன வசதி பெறுமோ அந்த அளவு நிலப்பரப்பிலே ஒரே ஒரு சதமானம் உள்ள குளங்களை நாம் சரிப்படுத்துவதற்கு வகை செய்திருக்கிறோம் என்றால் 20 ஐந்தாண்டுத் திட்டத்தை நாம் அமுல் நடத்தினால் தான், சுமார், 100 ஆண்டு காலத்தில் இப்பொழுது இருக்கிற குளங்கள் எல்லாம் வண்டல் பாய்ந்த நிலையை மாற்றி சரிப்படுத்தி அமைக்கப்படும் என்று ஆகிறது. இது கவனக்குறைவால் ஏற்பட்ட பிசகோ என்று கூட நினைக்கிறேன். ஆகையினால், இதைச் சர்க்கார் கவனிக்கவேண்டும். ஏராளமான குளங்கள் சுமார் 28,000 குளங்கள் ஏற்கனவே இருக்கின்றன. அவைகளை தூரு எடுத்து சரிப்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நாம் மேற்கொள்ளவேண்டும். இந்தத் திட்ட காலத்தில் குறைந்த பட்சம் 10,000 குளங்களையாவது சரிப்படுத்த நாம் முன்வருவோமேயானால், அதன் மூலம் மக்களுக்கு வேலை கிடைக்கும், நீர்ப்பாசன வசதியும் பெருகும், கூடுதலான நிலத்திற்குப் பாசன வசதி கிடைக்கும், கூடுதலான உற்பத்தி கிடைக்கும். ஆகவே, இதில் நாம் அதிக கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம்முடையே ராஜ்யத்தில் 820,000 பாசனக் கிணறுகள் இருக்கின்றன. கிணறுகளின் மூலம் பாசன வசதி பெறும் நிலத்தின் பரப்பு இந்த ராஜ்யத்தில் சுமார் 21 சதமானம் ஆகும். கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும், கிணறுகளில் போதிய நீர் கிடைப்பதற்கு வகை செய்வதற்கும் நாம் செய்திருக்கிற ஏற்பாடுகள் அறவே போதாது என்று நான் இங்கே குறிப்பாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இவைகளையெல்லாம் கவனிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். எட்டு லட்சம் கிணறுகள் இருந்தாலும் கூட ஒரு லட்சம் பம்பு செட்டுகள் தான் இருக்கின்றன. சுமார் 64,659 டீசல் என்ஜின்கள் இருக்கின்றன. ஆகவே, 164,000 கிணறுகள் இன்றைக்கு உண்மையாக நல்ல உபயோகத்தில் இருக்கின்றன என்று ஆகிறது. மீதம் உள்ள 6 லட்சத்து சொச்சம் கிணறுகள் இனிமேல் தான் சரியான உபயோகத்தில் வைக்கப்பட வேண்டும். அதற்கு நம்முடைய ராஜ்ய சர்க்கார் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செய்திருக்கிற ஏற்பாடு போதாது என்று நான் இங்கே உறுதியாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

பருத்தி விளைச்சல் சம்பந்தமாக நம்முடைய ராஜ்ய சர்க்கார் செலுத்தியிருக்கிற கவனம் போதாது என்று நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய ராஜ்யத்தின் மொத்த தேவை சுமார் 825,000 பேல்கள். ஆனால், உண்மையிலேயே இன்றைக்கு விளைவித்துக் கொண்டிருப்பது 4½ லட்சம் பேல்கள்தான்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இன்னும் 1-½ லட்சம் பேல்கள் அதிகமாக உற்பத்தி செய்யலாம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. மூன்றாவது திட்டத்தில் நாம் நினைத்தவாறு 1-½ லட்சம் பேல்கள் அதிகமாக உற்பத்தி செய்தாலும், அப்படியும் 2-¼ லட்சம் பேல்கள் பஞ்சு நமக்கு இல்லாமல்தான் இருக்கும். இந்த நிலையைப் போக்குவதற்கு நாம் துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் தீரவேண்டும். ஏற்கனவே இருக்கிற பஞ்சு ஆலைகளுக்கு 8-¼ லட்சம் பேல்கள் வேண்டும். புதியதாக 5 லட்சம் கதிர்கள் வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். ஐந்து லட்சம் கதிர்கள் இங்கே மேலும் நிர்மாணிக்கும் பொழுது நம்முடைய ராஜ்யத்தில் பருத்தி தேவை இன்னும் கூடுதலாகும். அப்பொழுது அதற்கும் சேர்த்து நாம் பருத்தி விளைவித்தாக வேண்டும். அப்படிப் பார்க்கும்பொழுது பருத்தி விளைச்சலுக்கு நாம் போட்டிருக்கிற ஏற்பாடு பிரத்தியட்ச நிலைமையை அவர்கள் உணர்ந்து செய்திருக்கிற ஏற்பாடு என்று எனக்குத் தோன்றவில்லை. ஏதோ கொஞ்சம் விளைச்சலை அதிகரிக்கலாம் என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1-½ லட்சம் பேல்கள் அதிகரிக்கலாம் என்று திட்டம் போட்டிருந்தார்கள். ஆதலால் இப்பொழுது 1-½ லட்சம் பேல்கள் அதிகரிக்கலாம் என்று போட்டிருக்கிறார்களே தவிர, வேறு ஒன்றும் நாம் இதில் காணவில்லை. பருத்தி விளைச்சலை அதிகரிப்பதற்கு பிரத்தியட்ச நிலைமையை கருத்தில் கொண்டு தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

புகையிலை உற்பத்தி சம்பந்தப்பட்ட வரைக்கும் ஏற்கனவே நான்கு ஆண்டு காலத்திற்கு முன்னால் எவ்வளவு புகையிலை விளைவித்தோமோ, அந்த நிலப் பரப்பின் அளவானது மூன்றில் ஒரு மடங்காக இப்பொழுது குறைந்திருக்கிறது. இந்தக் குறையை நிவர்த்தி செய்ய ராஜ்ய சர்க்கார் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்பாடு செய்யவில்லை என்று நான் குற்றம் சாட்டிக் குறிப்பிட விரும்புகிறேன். இவைகளையெல்லாம் கவனிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

கால்நடை வளர்ச்சியை எடுத்துக்கொண்டாலும் கூட, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் எந்த அளவு அபிவிருத்தி அடைந்திருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு அபிவிருத்தி அடையவில்லை. 1956-57-ம் ஆண்டில் இருந்த நிலையைக் காட்டிலும், அதற்குப் பிந்திய ஆண்டுகளிலே கால்நடைகளின் வளம் குறைந்திருக்கிறது. அதற்குரிய காரணம் என்னவென்பதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அதே சமயத்தில் விவசாயக் கல்லூரிகள், கால்நடை வைத்திய கல்லூரிகள், தொழில் கல்லூரிகள் இவைகள் சம்பந்தமாக நாம் போட்டிருக்கும் திட்டம் ஏதோ பெயருக்கு ஒரு சடங்காகச் செய்யப்பட்ட ஏற்பாடாகத் தோன்றுகிறதே தவிர, உண்மையிலேயே பிரத்தியட்ச நிலைமையை அனுசரித்து விவசாய நாட்டிற்கு ஏற்றதாக இந்தத் திட்டம் வகுக்கப்படவில்லை என்றுதான் நான் காண்கிறேன். உண்மையில் பார்க்கப்போனால்





மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒவ்வொரு மாவட்டத் திற்கும் ஒரு விவசாயக் கல்லூரி ஏற்படுத்தினால் கூட போதாது. அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்பது என்னுடைய கருத்தாகும். சமீபத்தில் விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் ரஷ்யாவுக்குச் சென்று வந்திருக்கிறார்கள். அங்கே எந்த அளவுக்கு விவசாய விஞ்ஞானத்திலே நாட்டம் செலுத்தப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் கண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் இதை ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

இன்னும் குறிப்பாக கோவை ஜில்லா போன்ற பகுதிகளில் நீர்ப்பாசனத் திட்டங்கள் சம்பந்தமாக விசேஷ ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பரம்பிகுளத் திட்டத்தின் அனுகூலத்தை அனுபவிக்க இயலாத நிலைமையிலே உள்ள மேட்டுப்பாங்கான பகுதிகளில் அந்தத் திட்டத்தின் மூலம் அனுகூலம் செய்வதற்குச் சர்க்கார் வழி வகை செய்ய வேண்டுமென்று கோருகிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அவைகள் சொல்லப்படவில்லை. இருந்தாலும், இனியாவது யோசித்து அவைகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பல்லடம், தாராபுரம் தாலூகா பகுதிகளில் மேட்டுப் பாங்கான பல இடங்களில் குட்டைகள் போன்ற சிறிய நீர்த் தேக்கங்கள் ஏற்படுத்தி பரம்பிக் குளத்திட்டத்தின் மூலமாகத் தனிப்பட்ட குழாய்கள் வைத்து அந்தக் குட்டைகளில் தண்ணீர் வரும்படியான ஒரு ஏற்பாட்டை சர்க்கார் செய்யவேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் மேட்டுப் பாங்கான நிலங்களில் வாழ்கின்ற மக்கள் ஓரளவுக்குப் பாசன வசதி பெறுவார்கள் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக இன்னொரு விஷயத்தையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கோடிக்கணக்கான ரூபாய் செலவழிக்கும் திட்டம் என்றால்தான் சர்க்காருக்கு விழிப்பு ஏற்படுகிறது. ஒரு இடத்தில் கிணறு வேண்டும், அதற்கு ரூ. 10,000 செலவிடுங்கள் என்றால், சர்க்கார் மனதிலே அது உறைப்பதில்லை. ஏன் என்று கேட்கிறேன்? எந்த வகையான நீர்ப்பாசனத் திட்டமாக இருந்தாலும் அதற்கு வழி வகை செய்யவேண்டியது சர்க்கார் அல்லவா? கோடிக்கணக்கான ரூபாய் செலவழித்தால்தான் நீர்ப்பாசனத் திட்டமா? ஆயிரக் கணக்கில் செலவு செய்தால், அது நீர்ப்பாசனத் திட்டம் இல்லையா? ஒவ்வொரு ஊரிலும் சர்க்காருடைய செலவிலே கிணறுகளை வெட்ட வேண்டும். அவ்வாறு கிணறுகளை வெட்டி அதன் மூலம் பாசனத்திற்கு வழி வகுக்க வேண்டும். அதற்குரிய நீர் வரியை வேண்டுமானால் வாங்கிக் கொள்ளலாம். சர்க்கார் தங்கள் சொந்தச் செலவில் கிணறுகளை வெட்டி, அந்தக் கிணறுகளில் தண்ணீர் காணும்படியான நிலையை ஏற்படுத்தி அவைகளின் மூலம் விவசாயிகளுக்குப் பாசன வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் குறிப்பாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[Sri P. S. Chinnadurai] [7th September 1960

தொழில் துறையைப் பொறுத்தவரையிலே தேசிய பொருளா
தார ஆய்வுக் குழுவானது வருகிற 10 ஆண்டு காலத்திற்கு 2,000
கோடி ரூபாய் செலவழிக்கலாம் என்ற ஒரு திட்டத்தை
வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதைச் சர்க்காருடைய
கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். தொழில்
துறையிலே எவ்வளவோ அபிவிருத்தி காணப்பட வேண்டும்.
விவசாயத் துறையில் எந்த அளவுக்கு நாம் அபிவிருத்தியைக்
காண்கிறோமோ அதற்கேற்றவாறு தொழில் துறையிலே நாம்
அபிவிருத்தியை வகுத்துக்கொண்டால்தான் அதன் மூலம்
கிராமப் பொருளாதாரம், விவசாயப் பொருளாதாரமும், தொழில்
துறைப் பொருளாதாரமும் இணைந்து போக ஏதுவாக இருக்க
முடியும். ஆகையினால், அதையும் கவனித்து நம்முடைய ராஜ்யத்
தில் பலவகையான தொழில்களுக்கு வழி வகுக்கவேண்டும் என்று
நான் வேண்டிக்கொள்ளுகிறேன்.

நீலகிரியில் இருக்கிற இரும்புக் கனியைப் பயன்படுத்துவதற்
குரிய திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட வரைவிலே நான்
காணவில்லை. அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டியது
இந்த ராஜ்ய சர்க்காருடைய முக்கியமான கடமை என்பதை
நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தை
களை இத்தோடு முடித்துக்கொள்ளுகிறேன்.

4-00 p.m. **Sri M. KALYANASUNDARAM**: கனம் சபாநாயகர்
அவர்களே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் சம்பந்தமாக
மத்திய அரசாங்கத்தினாலும், நம் ராஜ்ய சர்க்காராலும் தயாரிக்கப்
பட்டுள்ள நகலும், யோசனைகளும் நம் முன்பு இருக்கின்றன.
அதற்கு மேலாக, இன்றைய தினம், நம்முடைய நிதி அமைச்சர்
பேசியபோது கொடுத்துள்ள புள்ளி விவரங்கள் உள்ளன. இந்த
திட்டங்களில், நம்முடைய ராஜ்ய சர்க்கார் சம்பந்தப்பட்டவரை
யோசனைகள் தயாரிப்பதில், எல்லாக் கட்சிப் பிரதிநிதிகளும்
அடங்கிய ஒரு ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டு, அவற்றின்
முன்பு யோசனைகள் வைக்கப்பட்டது என்பது உண்மை. ஆனால்,
கொள்கைகள் பற்றியோ, பணவசதிகள் பற்றியோ, அந்த
ஆலோசனைக்குழு விவாதிக்கச் சந்தர்ப்பமும் இல்லை, அவகாசமும்
போதவில்லை. இருப்பினும், காலதாமதம் ஆகிவிடும் என்பதனால்
இப்பொழுது இந்த யோசனைகளும், நகலும் விவாதிக்க எடுத்துக்
கொள்ளப்பட்டிருக்கிறது. சர்க்கார் வைத்திருக்கும் யோசனைகள்,
ஆலோசனைக் குழுவில் வந்த எல்லாவற்றையும் சேர்த்திருப்பதாக
அர்த்தம் இல்லை. அந்த நிலையில்தான் இது விவாதத்திற்கு
வந்திருக்கிறது.

திட்ட சம்பந்தமான யோசனைகள் பற்றி ஆராய்வதற்கு
முன்பு, நாம் இந்தத் திட்டத்தின் அடிப்படை நோக்கங்கள்,
கொள்கைகள் பற்றியும் ஓரளவுக்கு ஞாபகப்படுத்திக் கொள்ள
வேண்டும். நம்முடைய ஐந்தாண்டுத் திட்டங்களின் நோக்கம்,
தொடர்ந்து, தொழில் துறையில், விவசாயத் துறையில் உற்பத்தி
பெருகுவதற்கும், நம்முடைய தேவைப் பொருள்களுக்கும், உணவுப்
பண்டங்களுக்கும் பிறநாடுகளைச் சார்ந்து நிற்காமல், நம் சொந்த



7th September 1960] [Sri M. Kalyanasundaram]

பலம் கொண்டே நிற்கவேண்டும் என்பதுதான் அதன் நோக்கம்.
அந்த நோக்கம் இருப்பதால்தான் அதற்கு என் கட்சியினுடைய
ஒரு ஆதரவு பூர்வமான யோசனைகள், இந்தத் திட்டங்களுக்கு
இருப்பது. எந்த தேசமானாலும், பொருளாதாரத் துறையில்
வலுவாக இருந்தால்தான், அன்னிய நாட்டார் மதிப்பார்கள்.
அந்த முறையில், பிறநாடுகளைச் சார்ந்து இராமல், திட்டமிட
வேண்டியது அவசியம். அந்த அடிப்படையில் இரண்டு திட்டங்
களில் செய்தவற்றைப் பற்றி யோசிக்கும்போது, சில துறைகளில்
தொழில் வளத்திலும், உணவுப் பண்ட உற்பத்தியிலும், ஐந்து
கோடியிலிருந்து, கிட்டத் தட்ட ஏழரைக் கோடி அளவுக்கு
அதிகரிக்கச் செய்திருக்கின்றது என்று கூறலாம். தேசிய
வருமானத்தை எடுத்துக்கொண்டால், 42 பர்செண்ட் உயர்ந்திருக்
கிறது. அந்த உயர்வு, இன்றைய விலைவாசி அடிப்படையில் அல்ல,
1952-53 விலைவாசி அடிப்படையில். ஆகவே, 42 பர்செண்ட்
உயர்ந்திருக்கிறது என்று மத்திய சர்க்கார் அமைச்சர்
கூறுகிறார்கள். பள்ளி விவரங்கள் சர்ச்சைக்குரியது என்று
பாராளுமன்ற அங்கத்தினர் ஒருவர் குறை கூறியிருக்கிறார்கள்.
இருப்பினும், தேசிய வருமானம் அதிகரித்திருக்கிறது என்பது
அடிப்படையான உண்மை. ஆனால், இவ்வளவு தொழில்
வளர்ச்சியும், முன்னேற்றமும் ஏற்பட்டிருந்த போதிலும், இதனால்
பலன் அடைந்தவர்கள் யார் என்று கட்டாயம் கவனிக்க வேண்டும்.
பலன் அடைந்தவர்கள் பெரும்பாலும், பெரிய முதலாளிகளும்,
பெரிய நிலப்பிரபுக்களும்தான். உழைக்கக்கூடிய மக்கள்
சம்பந்தப்பட்ட மட்டில் அவர்களுடைய உண்மையான
சம்பளம் விலைவாசி உயர்வின் காரணமாக 30 சதவிகிதம்
குறைந்திருக்கிறது என்பது உண்மை. பத்து வருஷத்தில்,
இரண்டு திட்டங்கள் போட்டும், 30 சதவிகிதம் குறைந்திருக்கிறது.
அதனாலேயே திட்டங்களின்மீது, பொது ஜனங்களுக்கு உற்சாகம்
ஏற்படுவதில்லை. அமுலாவதும் சாத்தியமாக இல்லை. மேலும்,
மக்களிடையே திட்டங்களினால்தான் விலைவாசி உயர்கிறது என்ற
எண்ணம் வளர்வதற்கும் சந்தர்ப்பம் கொடுக்கிறது. திட்டம்
அதிகமாக, அதிகமாக, திட்டத்தின் இலக்கு, தொகை அதிகமாக
அதிகமாக அம்மாதிரிச் சந்தேகங்கள் ஏற்படுகின்றன;
அதனாலேயே சிலர் இவ்வளவு பெரிய திட்டம் கூடாது என்று
குறை சொல்லும் நிலை ஏற்பட்டிருக்கிறது. திட்டத்தின் பண
அளவு பொறுத்த வரையில், தனியார் துறை, சர்க்கார் துறை
இரண்டிலும் ஈடுபடுத்தப்பட்டிருப்பது, பத்தாயிரம் கோடிக்குச்
சிறிது அதிகம். இது வரையறுக்கப்பட்டுவிட்டது. அதற்கு
மேல் அதிகமாகக் கிடைக்குமோ என்னவோ, அது சந்தேகத்திற்
குரிய விஷயம். நான் சம்பந்தப்பட்டமட்டில், திட்டங்கள்
போட்ட அளவுக்கு, அதன் பலன் ஜனங்களுக்குக் கிடைக்கச்
செய்யவேண்டுமென்று விரும்புகிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத்
திட்ட காலத்தில், அன்னியச் செலவாணிக் கஷ்டங்கள்
காரணமாக, பிறநாடுகளிலிருந்து உதவியளிக்கக்கூடியவர்கள்,
தங்கள் சொந்த நலனுக்காகவே செய்ததால் படக்கூடிய
சங்கடங்கள் காரணமாக, இரண்டாவது திட்ட அளவைக்

குறைக்கலாமா, அல்லது திட்ட காலத்தை நீடிக்கலாமா என்ற சர்ச்சை எழுந்தது. அம்மாதிரி ஆபத்து ஒன்றும் ஏற்படாமல், மூன்றாவது திட்ட காலத்தில், நமக்கு உண்மையில் உதவி செய்யக் கூடியவர்களைமட்டும் நம்பி, நம் சொந்த பலத்தையும் நம்பி இருக்கவேண்டும், அதில் கவனம் செலுத்தவேண்டும்; சர்க்கார்த் துறையில் பெரிய கன ரகத்தொழில்களை ஏற்று நடத்தவேண்டும். நிதி அமைச்சரவர்கள் நேற்று கூறினார்களே, அம்மாதிரி இயந்திரங்களை உற்பத்தி செய்யும் இயந்திரங்களை நாம் உற்பத்தி செய்யவேண்டும். இரும்பு உருக்கக்கூடிய இயந்திரங்களைப் பொறுத்தவரையில் எப்பொழுதும், வெளி நாடுகளையே நம்பியிருக்க வேண்டிய அவசியம் இல்லை. பெரும் இயந்திரங்கள் சம்பந்தப்பட்ட மட்டில், அதையெல்லாம் தனியார் துறையில் அதிகமாக ஈடுபடுத்தாமல், சர்க்கார் துறையிலேயே ஈடுபடுத்த வேண்டும். நேற்றையதினம், நிதியமைச்சர் கூறியதுபோல், தனியார் துறையில் அதிகமாக இருக்கிறது. ஏன்? அவர்களுக்கு அன்னியச் செலாவணி வசதிகள் கிடைக்கின்றன; ஏனென்றால், நம் நாட்டில் இருக்கும் தனிப்பட்ட நபர்கள் அமெரிக்கா, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி போன்றவைகளோடு தொடர்பு கொண்டு, அன்னியச் செலாவணி பெற்றுச் செய்கிறார்கள். அப்படிக் கிடைக்கும் மூலதனம் தனியார் துறையில் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையில் இருப்பது தொழில்களுக்குப் பொருளாதார ஆக்கம் அளிப்பதாக இருக்க முடியாது. தனியாருக்கு வர்த்தக முன்னேற்றத்தில் நீண்ட கால திருஷ்டி உண்டு. ஆகவே, அவர்களுக்குச் சிறிய தொழில்களில் உதவி அளிக்கலாம்.

இப்பொழுது, எண்ணெயை எடுத்துக் கொள்ளலாம். ரிபைனரி வேண்டுமென்று நம் அமைச்சரவர்கள் யோசனையில் வலியுறுத்திச் சொன்னார்கள். காவேரி டெல்டாவில் எண்ணெய் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதைத் தோண்டி எடுக்க வேண்டும். கால வரவழைக்கும் எண்ணெய்ப் பொருள்களை இங்கேயே தயாரிக்கலாம் என்று பல ஆண்டுகளாகவே, அந்த யோசனையை நிதி அமைச்சர் அவர்கள் இங்கேயும் அபிவிருத்திக் கவுன்சிலிலும் கூறி வந்திருக்கிறார்கள்.

அவர்கள் விலையைக் குறைக்க மாட்டேன் என்கிறார்கள். ஏற்கனவே அமெரிக்கக் கம்பெனி அதில் ஆதிக்கம் செலுத்துகிறது. ஏனென்றால் அவர்களுடைய லாபத்திற்குப் போட்டியாக ஏற்பட்டுவிடும் என்று அவர்கள் கருதுகிறார்கள். சோவியத் யூனியன் போன்ற மேல் நாடுகள் எண்ணெயைக் கொடுக்க முன்வந்தால் அவர்கள் அதற்கு செய்யக்கூடிய இடையூறுகள் எவ்வளவோ இருக்கின்றன. வேண்டுமானாலும் அரை நயா பைசா குறைத்துக் கொடுக்கிறோம் என்றுதான் சொல்லுகிறார்களே தவிர, இங்கே ஆயில் ரிபைனரியை அமைப்பதற்கு ஒத்துக்கொள்ள மாட்டேன் என்கிறார்கள். ஆகவே எண்ணெயைத் தோண்டி எடுப்பதற்கு வேண்டியவற்றை இறக்குமதி செய்வதற்கு முன் வரவேண்டும். எந்தெந்த நாடுகளிலிருந்து



உதவி பெறவேண்டுமானாலும் அதைப் பெற்று இறக்குமதி செய்ய வேண்டும். அப்படிக் கொண்டு வந்து சாதாரணமாக பொதுத் துறையில் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிச் செய்வதுதான் அவசியம் என்பதை வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதன் மூலம்தான் கன ரகத் தொழிலைப் பெருக்க முடியும். அதன் மூலமாகத்தான் இந்த நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்க முடியும். அதனால் பிறநாடுகளுடன் சேராமல் இருக்கவேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் இதற்கு வேண்டிய பண வசதியைப்பற்றி நேற்று கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார். அவர் நேற்று பேசியதைப் பார்த்தால் அவர் இந்தச் சபையில்தான் பேசினாரா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அல்லது அவருக்கு டெவலப்மெண்ட் கவுன்சிலுக்கு போக முடியாமல் இருப்பதால் அவர் வெளி நாட்டிற்குச் செல்வதால் அங்கே பேச வேண்டியதை இங்கு பேசி விடலாம் என்ற கருத்தில் பேசினாரோ என்றுகூட தோன்றுகிறது. இங்கே டிபென்ட் பண்ணி பேசவேண்டிய அவசியமே இல்லை. இங்கு எடுத்துச் சொல்லியவைகளையெல்லாம் தேசிய அபிவிருத்திக் கவுன்சிலில் சொல்ல வேண்டியவைகள்தான். பணம் என்பதன் பொருள் என்ன? பணத்தை மட்டும் நம்பி இருக்க முடியாது. அதற்கு அவர் சில உதாரணங்களைக் கொடுத்தார்கள். குறிப்பாக அவர் சிறு சேமிப்புத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். சிறு சேமிப்புத் திட்டக் கொள்கையைப்பற்றி ஆட்சேபணை இல்லை என்று நான் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன். இதைப்பற்றி நான் பல சந்தர்ப்பங்களில் சொல்லி இருக்கிறேன். ஆனால் கனம் அமைச்சர் அவர்கள் தத்துவார்த்த ரீதியில் சொல்லியிருக்கிறார். முதலாளிகளைத் தொழிலாளர்களாக ஆக்கவும் தொழிலாளர்களை முதலாளிகளாக ஆக்கவும் அவர் முயற்சிக்கிறார். அந்த லட்சியத்தில்தான் அவர் பேசியிருக்கிறார். அதைக் கவனிக்கும் போது அது எனக்கு ஆச்சர்யத்தைத்தான் கொடுத்தது. சோஷலிச சமுதாயம் வேண்டும் என்று பார்லிமெண்ட் வகுத்திருக்கிறது. அந்த முறையில் நமது நிதி அமைச்சர் அவர்கள் பேசுகிறாரா என்பதைப் பார்க்க வேண்டும். ஏழை எளியவர்கள் தலையில் இந்தத் திட்டத்தைச் சுமத்துவதாகத்தான் தோன்றுகிறது. அந்த முறையில்தான் அவர் இங்கு நேற்று பேசியிருக்கிறார். சிறு சேமிப்புத் திட்ட மூலமாக அடுத்த ஐந்து ஆண்டுகளில் 550 கோடி ரூபாய், அதாவது ஆண்டு ஒன்றுக்கு 110 கோடி ரூபாய் வீதம் வசூல் செய்யப்போவதாகச் சொல்லி இருக்கிறார். பெரும்பாலும் அவற்றை ஏழைகளிடமிருந்துதான் வசூலிக்க வேண்டியதாக இருக்கும். அந்தச் செல்வத்தை அவர்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டுதான் சம்பாதித்திருப்பார்கள். அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாகக் கிடைத்த செல்வம்தான் அவர்களிடத்தில் இருக்கும். அவைகளைத்தான் வசூலிக்கப் போகிறார்கள். அவர்களுடைய சேமிப்பு 42 சத விகிதம் அதிகமாக உயர்ந்திருக்கிறது என்று

சொல்லப்படுகிறது. அந்தப் பணம் எங்கே போயிருக்கிறது
என்பதைப் பார்க்கவேண்டும். உற்பத்தியை அதிகப்படுத்தி
அதிகமாகச் சம்பாதிக்கிறார்கள். அந்த நிலைமையில் முதலாளி
களைத் தொழிலாளிகளாக்க வேண்டும் என்பதும், தொழிலாளிகளை
முதலாளிகளாக்க வேண்டும் என்பதும் சரியல்ல. தொழி
லாளிகள் வேலை செய்தால்தான் சேமிப்பு ஏற்படும், உற்பத்தி
அதிகமாகும். தொழிலாளர்களுடைய உழைப்பால்தான் உற்பத்தி
பெருகும். அப்பொழுதுதான் முன்னேற்றம் காணமுடியும்.
பணக்காரர்களை ஏழைகளாக்குவது சோஷலிசம் அல்ல. மக்கள்
எல்லோரும் தங்களுடைய வாழ்க்கைக்கு வேண்டிய தேவைகளை,
வசதிகளை செய்து கொள்ளவேண்டும். அதற்கு வேண்டிய
வாய்ப்புக் கொடுக்கவேண்டும். அதுதான் சோஷலிச நோக்கம்.
ஆனால் ஏதோ தவறான பிரசாரம் செய்வதாக இருக்கிறது.
முதலாளிகளைத் தொழிலாளர்களாக்குவதும் தொழிலாளர்களை
முதலாளிகளாக்குவதாகவும் இருப்பது சரியல்ல. தொழிலாளர்கள்
பணக்காரர்களாக ஆவதற்கு வேண்டிய திட்டங்களைக்கொண்டு
வரவேண்டும். அதற்கு என்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றி
யோசிக்க வேண்டும். அதற்கு இண்டஸ்ட்ரியல் கூட்டுறவு வேண்டு
மானாலும் வைக்கலாம். அப்படி வைத்தால் தொழிலாளர்களுக்கு
எந்த அளவில் பொருளாதார சக்தி வந்துவிடும் என்பதைப்
பார்க்க வேண்டும். நமது பிரதம மந்திரி அவர்களே ஒப்புக்
கொண்டிருக்கிறார். 'நாட்டில் அதிகமாக உற்பத்தியாகி இருக்
கிறது, அந்த நிலைமையில் அந்தச் செல்வம் எல்லாம் எங்கே
போயிக்கிறது?' என்று கேட்கிறார். உண்மையிலேயே அது
யாரோ ஒருவருடைய கைக்குத்தான் போயிருக்கிறது. அதை
அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார். அதைப்பற்றி ஒரு விசாரணை
நடத்த வேண்டும் என்றும் கூறியிருக்கிறார். அதைப்போலவே
நம்முடைய அமைச்சர் அவர்களும் அதைக் கவனிக்க வேண்டும்.
திட்டத்தைப் போடும்போது சம்பளத்தை அதிகமாகக் கேட்
கிறார்கள். சம்பளத்தைக் கொடுத்தால் விலைவாசிகள் அதிக
மாகிறது என்று நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். ஆகவே
விலைவாசிகளைக் கட்டுப்படுத்த தக்க நடவடிக்கை எடுத்துக்
கொள்ள வேண்டும். ஜாஸ்தியாகக் கொடுக்கப்படுகிற சம்பளம்
ப்ராவிடெண்ட் பண்ட் ரூபத்தில் போகிறது. ப்ராவிடெண்ட்
பண்ட் ரூபமாகவும் சேமிப்பு மூலமாகவும் 510 கோடி
ரூபாய் போகிறது. அந்த அளவில் வசூலிக்க வேண்டிய
தாக இருக்கிறது. அதனால் விலைவாசிகள் உயருகிறது.
உற்பத்தியில் வரக்கூடிய செல்வம் எல்லாம் விலைவாசி
உயர்வில் போய் விடுகிறது. அதை வசூலிக்கக் கூடிய
வாய்ப்பு பெரிய மொத்த வியாபாரிகளுக்கும் பெரிய பணக்
காரர்களுக்கும்தான் போய் விடுகிறது. அதனால் விலைவாசி
உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டியதாக இருக்கிறது. அதற்கு
வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொண்டால் உற்பத்தி அதிகரிப்
பதன் பலனை ஜனங்கள் அனுபவிக்க வாய்ப்பு ஏற்படும். அப்
பொழுதுதான் ஜனங்களுடைய ஒத்துழைப்பு திட்டத்தின்
வெற்றிக்குக் கிடைக்க முடியும் என்பதை என்னால் கூற முடியும்.





இதில் கனம் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தினால் நன்றாக
இருக்கும். இப்படி அவர் டெவலப்மெண்ட் கவுன்சிலில்
சொன்னால் அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்களோ என்னமோ.

(Deputy Speaker in the Chair.)

இதைத் தவிர வேறு நடை முறைக்கு வருவதற்கு வழி இல்லை.
அதிக உற்பத்தியால் வரக்கூடிய பணம் எங்கே இருக்கிறது
என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள்
புரிந்து கொண்டுதான் இருப்பார்கள். ஆனால் அதைப்பற்றி
இங்கே சொல்ல மாட்டார்கள் என்று நினைக்கிறேன். கடன்
மூலமாகக் கடந்த பத்து வருஷமாக எவ்வளவு வசூலிக்கப்பட்டி
ருக்கிறது என்பதையும் கவனிக்க வேண்டும். உற்பத்தியின்
பலன் எங்கே என்று அப்பொழுது பார்க்கலாம். இப்பொழுது
பல வரிகள் போடப்பட்டு அவை வசூலிக்கப்பட்டு வரு
கின்றன. வருமான வரி என்றும், டாக்ஸ் ஆன் எக்ஸ்பெண்டிசர்
என்றும் வசூலிக்கப்பட்டு வருகின்றன. செலவு செய்யக்கூடிய
வைகளுக்கும் புதியதாக வரி போடப்பட்டிருக்கிறது. இந்த
இரண்டு வரிகளும் சேர்ந்து 1950-51-ல் 125 கோடியாக இருந்தது.
1960-61-ல், அதாவது பத்து வருஷங்களில், அது 188 கோடியாக
உயர்ந்திருக்கிறது. இது எல்லாம் பெரிய மில் முதலாளிகளும்
பெரிய மனிதர்களும் கொடுக்கக்கூடிய வரிதான். சாதாரண
ஜனங்கள் கொடுக்கக்கூடிய வரிகள் டாக்ஸ் ஆன் கம்மாடிட்டிஸ்.
இவை பெரும்பாலும் ஜனங்கள் கொடுக்கக்கூடிய வரிகள்தான்.
இதுவும் நாம் எதிர் பார்த்த அளவுக்கு அதிகரித்திருக்கிறது.
277 கோடியிலிருந்து 476 கோடிக்கு உயர்ந்திருக்கிறது. அதாவது
இரண்டு மடங்காக உயர்ந்திருக்கிறது. ஆனால் வருமான
வரி, செலவு வரி 125 லிருந்து 188 கோடிக்குத்தான் உயர்ந்திருக்
கிறது. அங்கேதான் இருக்கிறது ஐயம். பணக்காரர்களுக்கு
வருமானம் ஜாஸ்தி இல்லை. ஏழைகளுக்குத்தான் அதிகமான
வருமானம் வருகிறது என்று கருதுகிறார்களா என்று தெரிய
வேண்டும். வருமான வரி போன்றவைகளின் மூலம் வரக்கூடிய
வருமானம் கடந்த பத்து வருஷங்களில் 125 கோடியில் இருந்து
188 கோடிதான் உயர்ந்திருக்கிறது. ஆனால் பொதுமக்கள்
செலுத்தக்கூடிய வரியோ 227 கோடி ரூபாயிலிருந்து 476 கோடி
யாகக் கடந்த பத்து ஆண்டுகளில் உயர்ந்திருக்கிறது. பணக்
காரர்களிடம் இருந்து வசூல் செய்யக்கூடிய வரி அவ்வளவு
உயராததற்குக் காரணம் அவர்களுக்கு வருமானம் குறைவு
என்று அர்த்தம் இல்லை. வருமானம் அதிகமாக இருந்தும்கூட
அவை ஒளிக்கப்படுகின்றன. அல்லது சரியான முறையில் வசூல்
செய்யப்படவில்லை. அவர்களுடைய வருமானம் பூராவும்
வருமான வரி கணக்குக்கு வருவதில்லை. அவர்கள் கொடுக்கிற
கணக்கில் உள்ள கோளாறுதான் அந்த வருமான இனம் நமக்குக்
குறைந்துபோய் விட்டதற்குக் காரணம். ஆகவே இன்றைய
தினம் இன்னும் அவர்களிடத்தில் பணம் வசூலிக்கச் சந்தர்ப்பம்
இருக்கிறதென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சிறு
சேமிப்புத் திட்டத்தின் மூலம் ஏழை எளிய தொழிலாளர்களிடத்
தில் பணம் திரட்டலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்ன

[Sri M. Kalyanasundaram] [7th September 1960]

கருத்தை ஒப்புக்கொள்கிறேன். எப்போது? அவர்களுக்கு அதிக
வருமானம் கிடைத்து, வாழ்க்கைத்தரத்தைச் சீராக வைத்துக்
கொள்வதோடுகூட அவர்கள் ஆடம்பரச் செலவுகள் செய்ய
ஆரம்பித்து விட்டார்கள் என்றால் அவர்களிடத்தில் உள்ள
பணத்தை எப்படியாவது முதலீடு செய்வதற்கு வழி கண்டு
பிடிக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM :** வரியாக வசூல் பண்ணு
வதற்கும், கடனாக வேறு வழியில் வசூல் பண்ணுவதற்கும் வித்தி
யாசம் இருக்கவேண்டும். மக்களிடத்தில் கடனாக வாங்குவது
தான் சிறு சேமிப்பின் மூலமாக ஏற்படக்கூடியது. வரி மூலமாக
வசூல் பண்ணக்கூடியதற்கும், இதற்கும் ஒன்றுபடுத்திப் பேசு
வது ஒன்றுக்கொன்று பொருத்தமானதாக இருக்காது என்று
தெரிவித்துக்கொள்கிறேன்.

**SRI M. KALYANASUNDARAM :** இப்போது நமக்கு வேண்டி
யது பணம், முதலீடு செய்வதற்காக. வரியின் மூலமாக வந்தா
லும், கடன் மூலமாக வந்தாலும் நமக்கு இப்போது பணம்
வேண்டியிருக்கிறது. கடன் மூலமாக நாம் பணத்தைத்
திரட்டுவோம் என்றால் அதைத் திருப்பித் தரக்கூடிய ஒரு
நிலையும் பின்னால் இருக்கிறது. ஆனால் நமக்கு வரவேண்டிய
வரிப்பணம் ஒளிக்கப்படாமல், ஏமாற்றப்படாமல் வந்து சேரு
வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டாலேயே நமக்குத்
தேவைப்படுகிற முதலீட்டு மூலதனம் கிடைத்து விடும்
என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காரணம், இன்றைக்கு 1,650 கோடி ரூபாய்க்கு புதிய வரி கூடப்
போடவேண்டியதாக இருக்கும் என்று அந்த அறிக்கையில்
கொடுத்திருக்கிறார்கள். அந்த 1,650 கோடி ரூபாயில் மூன்றில் ஒரு
பங்கு ராஜ்யங்களின் பங்காக இருக்கவேண்டும் என்றும் சொல்லி
இருக்கிறார்கள். ஆகவே மத்திய சர்க்காரே நேரிடையாக வரி
போடப்போவதோடுகூட அதில் மூன்றில் ஒரு பகுதியைப் பெறு
வதற்காக ராஜ்ய சர்க்காரும் வரிபோட வேண்டிய நிலைமை ஏற்
பட்டாலும் ஏற்படும். கிட்டத்தட்ட நம் ராஜ்யத்தைப் பொறுத்த
வரையில் நாற்பது, நாற்பத்தைந்து கோடிக்கு வரிபோடும்படியாக
ஏற்படும். மத்திய சர்க்கார் வரி போடுவதாக இருந்தாலும்,
ராஜ்ய சர்க்கார் போடுவதாக இருந்தாலும், பண்டங்களின்
மீதும் இதர பொருள்களின் மீதும் போடப்போகிற
இந்த வரி மறைமுகமாக ஏழை எளிய மக்களையே
தான் பாதிக்கப் போகிறது. ஒரு பக்கத்தில் விலைவாசி
உயர்வு, இன்னொரு பக்கத்தில் ஏற்கனவேயே அதிகமாகப்
போட்டிருக்கிற வரிப் பளு. இவற்றோடு புதிதாக இந்த
வரித் திட்டமும் வருமானால் ஏழை எளிய மக்களுடைய
உற்சாகம், ஊக்கம் பெரிதும் பாதிக்கப்படும் என்பதை
கனம் நிதி அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன். நமக்கு வேண்டிய மூலதனத்தைச் சேகரிப்
பதற்கு வழி சொல்லுங்கள், வழி சொல்லுங்கள் என்று எங்களைக்
கேட்கிறபோது, புதிதாக நாங்கள் வரி போடுவதற்கு வழி சொல்
வதற்கு முன்னால், வரவேண்டிய வரிப்பணத்தையே ஒழுங்காக



7th September 1960] [Sri M. Kalyanasundaram]

வசூல் செய்வதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டால்
நமக்குத் தேவையான பணம் கிடைக்கும், இன்னும் அதிகமாகக்
கூடக் கிடைக்கும் என்று சொல்ல விரும்புகிறேன். புதிய முறை
யில் எப்படி மூலதனத்தை அதிகப்படுத்திக்கொள்ளலாம் என்று
இங்கே ஒரு அரை மணி, முக்கால் மணி பேசுவதற்குள் சொல்ல
முடியாது. வேண்டுமென்றால் சர்வகட்சிக் கூட்டத்தில் உட்
கார்ந்து அதைப்பற்றி யோசிப்பதற்கும், எங்கள் கட்சியின்
சார்பில் ஆலோசனை சொல்வதற்கும் தயாராக இருக்கிறேன்
என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மூன்றாவது திட்ட காலத்தில் விலைவாசி உயர்வு, விலைவாசி
வீழ்ச்சி ஆகிய இரண்டுக்கும் இடம் கொடுக்காமல் விலையைக்
கட்டுப்பாடான நிலைமையில் வைத்துக்கொள்ள தக்க முயற்சி
எடுக்க வேண்டும். அதுவும் குறிப்பாக விவசாயப் பண்டங்களின்
விலையை சமநிலையில் இருக்கும்படியாகக் கட்டுப்படுத்த வேண்டு
மென்றால் கொள் முதல் செய்து விநியோகம் செய்யும் பொறுப்பு
அரசாங்கத்தின் கையில் இருந்தால்தான் சாத்தியமாகும். வெளி
யாரின் பிடிப்பில் அந்தச் சக்தி இருக்கிற வரையில் விவசாயப்
பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்த முடியாது.
அதுவும் சமீபத்தில் சோவியத் ரஷ்யா போய்விட்டு
வந்திருக்கிற நமது விவசாய மந்திரி அவர்கள்
அங்கேயுள்ள நிலைமை பற்றியும், இங்குள்ள நிலைமை
பற்றியும் அங்குள்ளது போல இங்கே செய்ய முடியாது
என்பதற்கான காரணங்களைப் பற்றியும் அடிக்கடி கூறிவருகிறார்
கள். அதுவும் அங்கே போய் வந்த பிறகு கொஞ்சம் ஹாஸ்ய
மாகக்கூட பேச ஆரம்பித்திருக்கிறார்கள். சோவியத் ரஷ்யாவின்
திட்டம் நமக்குப் பொருந்தாது. தனிப்பட்டவர்களிடத்தில்
அங்கே இன்னமும் நிலம் இருந்து கொண்டிருக்கிறது என்று வலி
யுறுத்திச் சொல்லி வருகிறார்கள். கம்யூனிசம் என்றால் யாரும்
சொந்த நிலம் வைத்துக் கொள்ளக்கூடாது என்பது அல்ல. அங்கே
உள்ள எல்லா அம்சங்களையும் பற்றிச் சொன்னாலும் பரவாயில்லை.
அங்கு இருக்கக்கூடிய நிலைமையைப் புரிந்துகொள்ள முடியும்.
அங்கே ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இரண்டு, இரண்டரை
ஏக்கர் நிலம் சொந்தமாக வைத்துக் கொள்ளலாம். ஆனால் அவர்
களே சொந்தமாகப் பயிரிடக்கூடிய நிலமாகத்தான் அவை
இருக்கும். கூலிக்கு ஆள் வைத்துப் பயிரிடக்கூடிய நிலமாக
இருக்காது. அந்த நிலத்தை விற்கவோ, மாற்றிக் கொடுக்கவோ
அவர்களுக்கு உரிமை உண்டு. ஆனால் பெரும்பண்ணைகள் எல்லாம்
சர்க்காரிடத்திலேயேதான் இருக்கின்றன. அதனால்தான் வருஷம்
பன்னிரண்டு மாதமும் ஒரு கோடியில் இருந்து இன்னொரு கோடி
வரையில் ஒரே விலைதான் இருக்கிறது. உற்பத்தியாகக்கூடிய
பெரும்பகுதி விளைபொருள்கள் சர்க்கார் கையிலேயே இருப்
பதனால்தான் அம்மாதிரி விலையைக் கட்டுப்படுத்த முடிகிறது.
இங்கே அப்படிச் செய்ய முடியாது. பெரிய கூட்டுறவுப் பண்ணை
கள் இருந்தால்தான் முடியும் என்கிறார்கள். நான் ரஷ்யாவைப்
போலச் செய்யவேண்டும் என்றோ, சீனாவைப் போலச் செய்ய
வேண்டுமென்றோ சொல்ல முன்வரவில்லை. பெரிய நிலப் பிரபுக்கள்
கையில், அது 30 ஏக்கராக இருந்தாலும் அதிகமாக இருந்தாலும்,

[Sri M. Kalyanasundaram] [7th September 1960

நிலம் இருக்கிற வரையில் விலையைக் கட்டுப்படுத்த முடியாது.
விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு இதர நீர்ப்பாசனத்
திட்டங்களை எல்லாம் போடலாம். நிலச் சீர்திருத்த மசோதா
கூட பொறுக்குக் கமிட்டிக்கு முன்பாக இருக்கிறது. திட்டக்
கமிஷன் மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வருவது போலச் செய்ய
வேண்டிய திருத்தங்களை எல்லாம் செய்தால் தான் நாம் இதில்
முன்னேற்றம் காணமுடியும்.

4-30 p.m. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட கால முடிவில் அது பத்து
கோடிக்கு உயர வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. பத்து
கோடிக்கு அதிகமாக இருக்க வேண்டும். உணவுப் பொருள்
விஷயத்திலாவது நாம் பிற நாடுகளை நம்பாமல் இருக்கவேண்டும்.
அத்தியாவசியப் பொருள்களுக்கு நாம் நம் நாட்டையே நம்பி
யிருக்க வேண்டும். விளை பொருள்களை நாம் உற்பத்தி செய்து
அதை ஏற்றுமதி செய்து நம் அன்னியச் செலவாணியைப்
பெருக்கிக்கொள்ளலாம். ஆகவே, நாம் விவசாயத்தில் அதிக
அக்கரை செலுத்த வேண்டும். விவசாய உற்பத்தியைப் பெருக்கு
வது மட்டுமல்ல, உணவுப் பொருள்களின் உற்பத்தியை பெருக்கு
வது மட்டுமல்ல, மற்றும் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய பருத்தி
போன்ற கச்சாப் பொருள்களையும், அவைகளின் உற்பத்தியையும்
பெருக்குவதற்குள்ள அடிப்படையில் இருக்க வேண்டுமென்றால்
நிலச் சீர்திருத்தம் கட்டாயம் அவசியம். கம்யூனிஸ்ட் கட்சி
சொல்கிற யோசனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்ல
வில்லை. காங்கிரஸ் மகாநாடுகளில் போட்டிருக்கக்கூடிய தீர்மானங்
களை, ப்ளானிங் கமிஷன் கொடுத்திருக்கக்கூடிய யோசனைகளை,
இவைகளையாவது நடைமுறையில் கொண்டுவர வேண்டிய நட
வடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று என்றால் இந்த சந்தர்ப்பத்
தில் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. நமது ராஜ்யம்
சம்பந்தப்பட்டவரையில், 398 கோடி, கிட்டத்தட்ட 400 கோடி
ரூபாய்க்கு சர்க்கார் துறை, தனியார் துறை எல்லாவற்றையும்
சேர்த்து யோசனைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகள்
எல்லாம் ஒப்புக்கொண்டுவிட்டதாக அர்த்தம் அல்ல. இவைகள்
எல்லாம் வந்துவிடும் என்று அர்த்தம் அல்ல. இவைகளைப் பெறு
வதற்கு, பலமாக இருப்பதற்கு நிதியமைச்சர் அவர்கள் இங்கு
இதுபற்றி விவாதம் நடத்துகிறார்கள். ஆலோசனைக் குழுவில்
வந்த எல்லா யோசனைகளையும் சேர்த்திருந்தால் இன்னும் அதிக
மாக வந்திருக்கும் என்று நினைக்கிறேன். ஆலோசனைக் குழுவில்
கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நம் ராஜ்ய திட்டங்களுக்காக 500
கோடியாவது ஒதுக்க வேண்டுமென்று யோசனை கொடுத்திருந்
தேன். அவை, 500 கோடிக்கு அதிகமாகப் போகும் என
நினைக்கிறேன். அந்த யோசனைகளையெல்லாம் மதிப்பிட்டுப் பார்த்
தால் 600 கோடிக்கு அதிகம் வரும் என்று நினைக்கிறேன். 1,000
கோடி, 2,000 கோடி என்று ரூபாயளவில் மதிப்பிட வேண்டுமென்று
நான் விரும்பவில்லை. நேற்று அமைச்சர் அவர்கள்கூட
பின் தங்கிய இடங்களில் என்னென்ன வசதிகள் செய்து
தரவேண்டுமென்று யோசிக்க வேண்டுமென்று யோசனை
கூறினார்கள். விந்திய மலைக்கு வடக்கே இருந்தாலும் சரி அல்லது
விந்திய மலைக்கு தெற்கே இருந்தாலும் சரி பின் தங்கிய பகுதிகளில்



7th September 1960] [Sri M. Kalyanasundaram]

தொழில் வளத்தைப் பெருக்குவதற்குள்ள அகில இந்திய திட்டம்
வேண்டும். சிலர் திட்டத்தையே எதிர்க்கிறார்கள். திட்டத்தினால்
தான் கோளாறுகள் வந்துவிட்டன என்று. அப்படி திட்டத்
தையே எதிர்ப்பவர்களுக்கு நாம் பதில் சொல்ல வேண்டிய அவசிய
மில்லை. அரசாங்கம் செய்யக்கூடிய சில தவறுகளை பயன்படுத்திக்
கொண்டு அவர்கள் திட்டத்தை எதிர்க்க முடிகிறது. அது திட்டம்
போடும் நோக்கத்தில் உள்ள கோளாறு அல்ல. அவைகளை நிறை
வேற்றும்போது கோளாறுகள் ஏற்படலாமே தவிர திட்டத்தையே
எதிர்ப்பது சரியல்ல. அகில இந்தியத் திட்டம் போட்டால்தான்
எல்லா ராஜ்யங்களுக்கும், எல்லா மொழி பேசும் பகுதிகளுக்கும்
எந்தவித வித்தியாசமும் இல்லாமல் அவைகள் எல்லாம் விருத்தி
யடைய வழியிருக்கிறது என்பதினால்தான் திட்டக் கமிஷன் வேலை
களையும், திட்டக் கமிஷனையும் ஆதரிப்பது. அப்படிப் பார்க்கும்
போது ராஜ்ய வளர்ச்சிக்கு குந்தகமாக இருக்கக்கூடிய பிரச்னை
கள் என்னென்ன என்று பார்க்க வேண்டும். சென்னை ராஜ்யத்தில்
தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டுமென்றால் அதற்கு முக்கியமாக
வேண்டியது, நிலக்கரி, போக்குவரத்து வசதி, இன்னும் மின்சாரம்
இவைகள் அடிப்படைத் தேவைகள். இவைகளைப் பொறுத்திருக்
கிறது, தொழில் வளருவதும் திட்டமிட்ட அடிப்படையில் பொரு
ளாதாரம் முன்னேறுவதும். பின் தங்கிய பகுதிகளுக்கு உதவி
அளிக்கக்கூடிய அகில இந்தியக் கொள்கை என்னவென்று பார்க்க
வேண்டும். நமது ராஜ்யம் போக்குவரத்து விஷயத்தில் பின்
தங்கியிருக்கிறது. ரெயில்வே போக்குவரத்தை எடுத்துக்கொண்
டாலும் சரி, நெடுஞ்சாலைப் போக்குவரத்தாலும் சரி நம் ராஜ்யம்
பின் தங்கிக் கிடக்கிறது. ரெயில்வே போக்குவரத்தில், குறிப்பாக
ஸதர்ண் ரெயில்வேயை எடுத்துக்கொண்டால், கேரளம், தமிழ்
நாடு, மைசூர், ஆந்திரா, பம்பாயில் ஒரு பகுதி இதுவரையில் வியா
பித்திருக்கிறது ஸதர்ண் ரெயில்வே. ஆறாயிரம் மைல் விஸ்தீர்ணம்
உள்ளது. இதில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில்
புது லைன்கள் போடுவதற்கு பூராவிற்கும் ஒதுக்கிய தொகை, 156
கோடி ரூபாய். ஆனால் தென் பிராந்திய ரெயில்வேக்கு மட்டும்
ஒதுக்கிய தொகை, 92 லட்சம் ரூபாய்தான். நூற்று ஐம்பத்தாறு
கோடி எங்கே, தொண்ணூறு லட்சம் எங்கே? தொண்ணூற்று
இரண்டு லட்சம் ரூபாயில் என்னென்ன புது லைன்கள்
போடப் பட்டன? சென்னை ராஜ்யத்தை மட்டும் எடுத்துக்
கொண்டால், "ஸீரோ" தான். அந்த 92 லட்சம் கூட
செலவழிக்கப்படவில்லை. கேரளத்தில் ஒரு புதுப் பாதை
அமைத்ததும்; ஆந்திராவில் ஒரு பகுதியில் மீட்டர் கேஜிலிருந்து
ப்ராட் கேஜாக மாற்றினதைத் தவிர. இந்த 156 கோடி, புதுப்
பாதைகள் போட. ஆக, இங்கு 92 லட்சம் ஒதுக்கப்பட்டு அந்தத்
தொகையும் செலவழிக்கப்படவில்லை. ரெயில்வேயைப்பற்றி
தனியாக ஆராய வேண்டுமென்றால், அதற்கு வேண்டிய புள்ளி
விவரங்கள் என்னிடம் இருக்கின்றன. நான் கேட்கிறேன், ஏன்
இந்த பகுதி புறக்கணிக்கப்படவேண்டுமென்று? சென்னையை,
பம்பாய், கல்கத்தா, டெல்லியோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம், பெரிய
நகரங்கள் எல்லாம் எப்படி இணைக்கப்பட்டிருக்கிறதென்று.
இரட்டைப் பாதையில்லாத பெரிய நகரங்களே கிடையாது.

பம்பாயிலிருந்து டெல்லி வரை இரட்டைப் பாதை. கல்கத்தா விலிருந்து டெல்லி வரை இரட்டைப் பாதை. இது, குட்ஸ் போக்குவரத்து சுலபமாக நடப்பதற்கு. வேண்டுமானல் சமா தானம் சொல்லலாம், வெள்ளைக்காரன் காலத்தில் செய்தது, நாங்கள் என்ன செய்யலாம் என்று. இப்படிப்பட்ட குறைபாடு களைப் போக்க வேண்டும். திருச்சியிலுள்ள ஒரு தொழில் அதிபர் என்னிடம் குறிப்பிட்டார்கள். அமெரிக்காவிலிருந்து சென்னைக்கு ஒரு இயந்திரம் வந்து சேருவதற்கு எவ்வளவு காலமாகிறதோ அதைவிட அதிக காலமாகிறது சென்னையிலிருந்து ஒரு இயந்திரம் திருச்சி அல்லது சேலத்திற்கு வருவதற்கு, என்று. இதை ஒரு முக்கிய மனிதர் குறிப்பிட்டு ஆதாரம் காட்டினர்கள். அது, உண்மையாக இருக்கலாம். நெய்வேலிக்கு இயந்திரங்கள் போவதற்கு எவ்வளவு காலதாமதமாகிறது? புள்ளிவிவரங்கள் வேண்டுமானல் கொடுக்கலாம். இரட்டைப் பாதை இருந்தால் குட்ஸ் வர ஒரு பக்கமும், மற்றவை வேறு பாதையிலும் சென்று வருவதாகயிருந்தால் துரிதமாக போக்குவரத்தை நடத்த முடியும். துரிதமான போக்குவரத்தை நடைபெறுவது, பாதையைப் பொறுத்திருக்கிறது. ஆகவே, நாம் இங்கு "டபிள் ட்ராக்" போட வேண்டுமென்று வலியுறுத்திக் கூற வேண்டும். அதில்லா விடில் என்ன ஆகிறது? பல சமயத்தில் நமது உணவு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடிய நேரத்தில், பருப்புக்கு ஏன் பற்றுக்குறை என்று கேட்டால், வங்காளத்திலிருந்து அவை வர வண்டி கிடைக்கவில்லை என்று சொல்வதுண்டு. கல்கத்தா விலிருந்து சென்னை வரை இரட்டைப்பாதை போட்டிருந்தால் இந்த குறைபாடு நீங்கியிருக்கும். சென்னையிலிருந்து கோவை, கொச்சின் ஹார்பருக்கு, சென்னையிலிருந்து தூத்துக்குடிக்கு போகும் பாதை இரட்டைப் பாதையாக்க வேண்டியது அவசியம். அப்படிச் செய்தால் இங்கு துரிதப் போக்குவரத்து இருக்க முடியும். நமக்கு பொருள்கள் வருவதற்கும், இங்கிருந்து போவதற்கும் வசதியிருக்க வேண்டும். அகில இந்தியத் திட்டக் கொள்கையில் இருக்கக்கூடிய கோளாறு எரிபொருள் சம்பந்த மானது. நமது ராஜ்யத்தில் எரிபொருள் பற்றுக்குறை இருக்கிறது. நிலக்கரியாகட்டும், மின்சாரம் ஆகட்டும் பற்றுக்குறையில்தான் இருக்கிறோம். பல திட்டங்கள் போட்டும் இனியும் நமக்கு மின் சாரத்தில் பற்றுக்குறை இருக்கிறது. பல தொழில்களுக்கு மின் சாரம் கொடுக்க முடியாத காரணத்திஞல் தேக்கம் ஏற்படக்கூடிய நிலை இருக்கிறது. ரெயில்வே போக்கு வரத்திற்கு மிக அவசிய மானது நிலக்கரி. நிலக்கரி சம்பந்தமாக, அகில இந்தியக் கொள்கை சரியான கொள்கை அல்ல. வங்காளத்தில் அல்லது பீஹாரில் உள்ள தொழிற்சாலைகளுக்கு டன் ஒன்றுக்கு 21 ரூபாய்க்கு கிடைக்கிறது. நிலக்கரி எடுக்கக் கூடிய இடத்தில், சுரங்கம் உள்ள இடத்தில் விலை 19 ரூபாய். தெற்கு அவை வரும்போது டன்னுக்கு 60 ரூபாய்க்கு மேலாகிறது, செலவு. ஆக, இங்கு ரெயில்வேக்கு டன் ஒன்றுக்கு 59 ரூபாய்க்கு மேலாகிறது. அதை வைத்துக்கொண்டு தென் பிராந்திய ரெயில்வே 7 கோடி நஷ்டத்தில் ஓடுகிறது என்று கணக்கு கொடுப்பார்கள். நிலக்கரிக்காக ஆகும் செலவையும் வைத்துக் கொண்டு 7 கோடிக்கு அதிகமாக நஷ்டம்



இருக்கிறது என்கிறர்கள். இந்த நஷ்டத்தைக் காண்பித்து தென் பிராந்திய ரெயில்வேயை அபிவிருத்தி செய்யமுடியாது என்று ரெயில்வே போர்ட் சமாதானம் சொல்கிறர்கள். ஆகவே, நிலக்கரி சம்பந்தமாக ஒரு அகில இந்தியக் கொள்கை வேண்டும். பீஹாராக யிருக்கட்டும், ஹைதராபாத்தாக இருக்கட்டும், அல்லது கன்னியா குமரி பக்கத்தில் இருக்கட்டும், நிலக்கரி ஒரு சமமான விலைக்கு கிடைக்கும் விதத்தில், உருக்கு, சிமெண்ட் போன்றவைகளின் விலை களை எப்படி ஒரு மாதிரி கட்டுப்படுத்தியிருக்கிறர்களோ அப்படி நிலக்கரியும் கிடைக்கும்படிச் செய்வது தொழில் வளர்ச்சிக்கு மிகவும் அவசியம் என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்பு கிறேன்.

அடுத்தபடியாக தூத்துக்குடி துறைமுகம். 600 மைல்கள் நமக்கு கடற்கரை இருக்கிறது. இவைகளிலுள்ள வசதியை எல்லாம் பெருக்கவேண்டும். சென்னையைப் பொறுத்தவரையில் வேண்டுமென்றல் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல லாம். தூத்துக்குடி துறைமுகம் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்று சொல்வது நம்முடைய ராஜ்யத்திலுடைய நன்மையை மட்டும் கருதியல்ல. இன்றைக்கு இருக்கக்கூடிய போக்குவரத்து வசதி யைப் பொறுத்தவரையில், தூத்துக்குடி துறைமுகத்தை விருத்தி யாக்கவேண்டிய திட்டத்தையும், சேது சமுத்திர திட்டத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும். இதனல் நன்மையடையப்போவது தமிழ் நாடு மட்டுமல்ல, இந்தியா விலுடைய நன்மைக்கும் இது முக்கியமானது. இதன்மூலம் கப்பல் போக்குவரத்தை சுலபமாக்க முடியும். தற்போதுள்ள நிலையில் சென்னையிலிருந்து ஒரு கப்பல் பம்பாயிக்கு போக வேண்டுமென்றாலும் சரி, அல்லது கல்கத்தாவிலிருந்து ஒரு கப்பல் கொச்சின் துறைமுகத்திற்கு போகவேண்டுமென்றாலும் சரி இப் போதுள்ள வசதிப்படி இலங்கையைச் சுற்றி ஒன்றரை நாள் கழித்துத்தான் போக வேண்டும். இந்த சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்படுமானல் நேரமும் அதே சமயத்தில் தூரமும் குறையும் என்று சொல்லப்படுகிறது. மண்டபத்தின் அருகே இந்த கால்வாய் திட்டத்தை அமைத்து, அதை தூத்துக்குடி துறைமுகத்திட்டத்தையும் இணைந்து நிறைவேற்றப் படுமானல் நம் நாட்டுக்கு மட்டுமல்ல, இங்கிருந்து, சென்னை, விசாகப்பட்டினம், கல்கத்தா, சிட்டகாங், சிங்கப்பூர் போன்ற இடங்களுக்கும் போவதற்கு வசதி ஏற்படும், இதனல் இப்போது போய்க்கொண்டிருக்கும் தூரமும் குறைக்கப்படும் என்று நிபுணர்கள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறர்கள். முன்னல் கேப்-காமிரின் வருவதை, சூயஸ்கால்வாய் வந்த பிறகு எவ்வாறு தவிர்க்கப்பட்டதோ அதே போன்று இப் போது சுற்றி வருவதை நம்மால் தவிர்க்க முடியும். (குறுக்கீடு) என்னைவிட இதைப்பற்றியுள்ள விவரங்களை கனம் நிதி அமைச்சர் அவர்கள் கூடுதலாக ஆராய்ந்திருப்பதால், இப்போது இருந்து கொண்டிருக்கும் கப்பல் போக்குவரத்தை இன்னும் 25 சதமானம் அதிகப்படுத்த முடியும் என்ற விவரத்தையும் கொடுக்கின்றர்கள். ஆகவே ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது இதனல் பல நன்மைகள் ஏற்படுவதற்கு வசதிகள் இருக்கின்றன என்பது நமக்கு தெரிகின்றது. நம் நாட்டுக்கு மட்டும் அல்ல, வெளி

[Sri M. Kalyanasundaram] [7th September 1960

நாட்டு கப்பல்களும் இங்கு வருவதற்கும், நம் நாட்டிலுள்ள
கப்பல்கள் கிழக்கு ஆசிய நாடுகளுக்குப் போவதற்கும் வசதியாக
இருக்கும். சோவியத் ரஷ்யா போன்ற நாடுகளிலிருந்து நாம்
எண்ணெய் இறக்குமதி செய்யப்போகின்றோம், இனிமேல் நாம்
எண்ணெய் உற்பத்தி செய்கின்ற காலத்தில் வெளிநாடுகளுக்கு
ஏற்றுமதி செய்வதற்கும் இது வசதியாக இருக்கும் என்பதையும்
நாம் கவனிக்க வேண்டும். ஆகவே சேது சமுத்திரத் திட்டத்
தையும் தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தையும் சேர்த்து, இரண்
டையு ஒன்றாக இணைத்து எடுத்துக்கொள்ள வேண்டும். தூத்துக்
குடி துறைமுகத் திட்டத்தை வேண்டுமென்றால் இப்போது
எடுத்துக்கொள்வதற்கு வலியுறுத்தலாம் என்று சொல்லலாம்,
அது அவ்வளவு நல்ல யோசனை என்று சொல்ல முடியாது.
சாவித்திரி தனக்கு பிள்ளை வரம் கிடைத்தால் போதும், என்று
புருஷனுடைய உயிரை மீட்பதற்கு கேட்டதுபோல் இருக்கின்றது.
தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தை மட்டும் வேண்டுமென்றால்
இப்போது வலியுறுத்தலாம் என்று சொல்லுவது சரியல்ல,
தூத்துக்குடி துறைமுகம் பெரிதாகிவிட்டால் மட்டும் பெரிய முன்
னேற்றம் ஏற்பட்டுவிட முடியாது. (குறுக்கீடு.) முன்னேற்றம்
ஏற்படலாம், முன்னேற்றமே ஏற்படாது என்று நான் சொல்ல
வரவில்லை. ஆனால் இந்த இரண்டு திட்டங்களும் இணைந்திருந்தால்
தான் நாம் எண்ணுகின்ற முன்னேற்றம் ஏற்பட முடியும். ஆகவே
ஒட்டுமொத்தமாக இந்த இரண்டு திட்டத்தையும் சேர்ந்தாற்
போல் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மத்திய சர்க்கார்
இடத்தில் நாம் வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

அதோடு நம் ராஜ்யத்தில் இரும்பு பற்றாக்குறை அதிகமாக
இருந்துகொண்டிருக்கிறது. நாம் ஒரு இலக்கை வைத்துக்
கொண்டிருக்கிறோம், அதற்கான புள்ளிவிவரங்கள் எல்லாம்
கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த விவரங்களுக்கு எல்லாம்
நான் போக விரும்பவில்லை. சேலத்தில் கிடைக்கின்ற இரும்பைக்
கொண்டு ஒரு உருக்குத் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டும்
என்பது கடந்த பத்து ஆண்டுகாலமாக சட்டசபையிலும் சரி,
வெளியிலும் சரி, இதைப்பற்றி சொல்லிச்சொல்லி மக்களுக்கு ஒரு
நம்பிக்கையை வளர்த்துவிட்டிருக்கிறோம். இது மூன்றாவது
ஐந்தாண்டுத் திட்டத்தில் நிச்சயமாக சேர்க்கப்பட வேண்டும்.
இந்த நகலைப் பார்த்தால், இதைப்பற்றி எவ்வளவு தெளிவில்லாமல்
சொல்ல முடியுமோ அவ்வளவு தெளிவில்லாமல் சொல்லியிருக்
கிறார்கள். அதையும் சேர்த்து நெய்வேலியில் கிடைக்கின்ற
பழுப்பு நிலக்கரியையும் உபயோகப்படுத்தி நிச்சயமாக ஒரு
உருக்குத் தொழிற்சாலை ஏற்படுத்தியாக வேண்டும். இதை நாம்
திட்டக் கமிஷன் மூலமாக மத்திய அரசாங்கத்திலிருந்து
பெற்றாக வேண்டும். நம்முடைய பக்கத்தில் இதை ஏற்படுத்தினால்
தான் இங்கே வேலை வாய்ப்பை பெருக்க முடியும். இப்போது
இருக்கின்ற நிலையை எடுத்துப்பார்த்தால், போதிய அளவுக்கு
நம் நாட்டில் வேலை வாய்ப்புகள் இல்லை. ஆகவே தான் தொழில்
பரவலாக இருக்கவேண்டும் என்று சொல்லுகின்றோம். நான்
காவது உருக்குத் தொழிற்சாலையை பொக்காரா என்ற இடத்தில்
ஆரம்பிக்கப்போவதாக சொல்லப்பட்டிருக்கிறது. அங்கே ஆரம்



7th September 1960] [Sri M. Kalyanasundaram]

பிக்கப்போவதைப்பற்றி எனக்கு எந்தவிதமான ஆட்சேபனையும்
இல்லை. நமக்கு வேண்டியது உருக்குத் தொழிற்சாலைதானே,
அதை இங்கே ஆரம்பித்தால் என்ன, வடக்கே ஆரம்பித்தால்
என்ன, தொழிற்சாலைதானே பெருக வேண்டும் என்ற சித்தாந்
தத்தைச் சொல்லக்கூடும். நமக்கு வேண்டியது வேலை வாய்ப்பு,
அந்த முறையில் பார்க்கும் போது இந்த நாட்டில் வேலை வாய்ப்
புகள் அதிகமாக பெருக வேண்டும். அதற்காகத்தான் இதை
சேலத்தில் ஆரம்பிக்கவேண்டும் என்று சொல்லுகின்றேன்.
இதைப்பற்றி சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தால், மூன்றாவது
ஐந்தாண்டுத் திட்டத்தில், இதற்கான வசதிகள் இருந்தால், அது
இருந்தால், இது இருந்தால் என்று சொல்லி தட்டிக் கழிக்கக்
கூடிய நிலைதான் இருந்துகொண்டிருக்கிறது. அவ்வாறு
இல்லாமல் நிச்சயமாக சேலத்தில் ஒரு உருக்குத் தொழிற்
சாலையை ஏற்படுத்துவதற்கு வலியுறுத்த வேண்டும், மத்திய
அரசாங்கத்தை என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, நெய்வேலியில், பழுப்பு நிலக்கரித் திட்டத்தின்
மூலமாக, கூடிய சீக்கிரத்தில் கரி எடுக்க முடியும் என்கிற நம்
பிக்கை பிறந்திருக்கிறது என்பதைப்பார்த்து நான் சந்தோஷ
மடைகிறேன். இதனுடைய பூரா உபயோகமும் சேலத்திலுள்ள
இரும்பை உருக்காக்குவது மட்டுமல்ல, மற்ற பொருட்களை
தயாரிப்பதற்கும், எரிபொருள் பற்றாக்குறையைப் போக்குவதற்
கும் கோக் போன்ற கரிகளை தயார் பண்ணுவதற்கும் உபயோகப்
படுத்த வேண்டும். இதற்காக என்ன நடவடிக்கை எடுக்க
முடியும் என்பதைப்பற்றி யோசிக்க வேண்டும். பழுப்பு நிலக்
கரியை கட்டி கரியாக தயாரித்து எரிபொருளாக உபயோகப்
படுத்தலாம் என்ற யோசனை இருந்து வருவதாக தெரிகிறது.
அதோடு முக்கியமாக நேரடியாக கியாஸ் தயாரிப்பதற்கு
முயற்சிகள் எடுத்தால் என்ன என்பதைப்பற்றியும் நாம்
யோசிக்க வேண்டும். அதோடு ரோடு போடுவதற்குள்ள
பொருளையும் தயாரிக்க முடியுமா என்பதைப்பற்றியும் ஆலோசனை
செய்ய வேண்டும். இதற்கான வாய்ப்பு இருப்பதாக நிபுணர்கள்
சொல்லியிருக்கிறார்கள். இவ்விதம் கிடைக்கின்ற கியாஸை பெரிய
நகரங்களுக்கு, திருச்சி, சேலம், போன்ற நகரங்களுக்கு கொண்டு
போகலாம், அங்கு மட்டுமல்ல, சென்னைக்கு கொண்டு வரலாம்.
இதன் மூலமாக பல ஏழை குடும்பங்கள் தங்கள் தேவைகளை
பூர்த்தி செய்ய சாத்தியம் இருக்கிறதா என்பதைப்பற்றி
ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு இன்னும் நம்முடைய தொழில் அபிவிருத்தியின்
பெயரால், மற்ற சேவைகளுக்கு அதிகமான பணம் ஒதுக்கப்
படுகிறது. எந்த அளவுக்கு ஒதுக்க வேண்டுமோ அந்த அளவுக்கு
ஒதுக்கவேண்டியது அவசியம்தான். பொதுவாக என்ன
எண்ணம் ஓங்கி கொண்டிருக்கிறது என்றால், உற்பத்தி பெருக்கக்
கூடியவைகளுக்கு மட்டும்தான் அதிகமாக செலவு செய்ய
வேண்டும் என்ற எண்ணம் ஓங்கி நிற்கிறது. சுகாதாரம்,
வைத்திய வசதிகள், கல்வி, அதிலும் முக்கியமாக டெக்னிக்கல்
கல்வி இவைகளுக்கு எல்லாம் அதிகமான பணம் ஒதுக்கலாம்.
மற்றவைகளுக்கு எல்லாம் சரியாக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது

என்ற எண்ணம் இருந்து கொண்டிருக்கிறது. கிடைக்கின்ற வருமானத்தை பூராவும் செலவு செய்யவேண்டுமென்று நான் சொல்ல வரவில்லை. நிரந்தரமாக எப்போதும் இப்படித்தான் இருக்கவேண்டுமென்றும் சொல்லவில்லை. சில அம்சங்களைப் பொறுத்தவரையில் சில அத்தியாவசியமான தேவைகள் இருக்கின்றன. அதாவது முக்கியமான பெரிய நகரங்களுக்கு எல்லாம் குடிதண்ணீர் பிரச்னை ஒரு பெரிய பிரச்னையாக இருந்து கொண்டிருக்கிறது. திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், சேலம் முதலிய நகரங்களில் எல்லாம் இந்த பிரச்னை முக்கியமாக இருந்து கொண்டிருக்கிறது. சென்னையைப் பொறுத்தவரையிலும் இது ஒரு பெரிய பிரச்னையாக இருந்து கொண்டிருக்கிறது. சென்னையில் ஜனத்தொகை வர வர அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது. பத்து வருடத்திற்கு முன்னால் இருந்ததைவிட இப்போது இருப்பதை பார்த்தால் எவ்வளவு அதிகரித்திருக்கிறது என்பது தெரிய வரும். ஆனால் குடிதண்ணீர் வசதி அந்த அளவுக்கு பெருகியிருப்பதாக தெரியவில்லை. ஆகவே இவைகளுக்கு போதுமான அளவு பண வசதி ஒதுக்க வேண்டியது மிகவும் அவசியம். நாட்டில் நல்ல வளர்ச்சியை காண முடியும். அதன் மூலமாக தொழில் வளர்ச்சியும் அதிகமாக பெருகும்.

தொழில் வளர்ச்சிக்கு நிலக்கரி, எரி பொருள், மின்சார சக்தி ஆகியவை மட்டும் இருந்து விட்டால் போதாது. நம்முடைய நகர அமைப்புகளும் அதற்குத் தகுந்த மாதிரி சுகாதாரத்தோடு இருக்கக் கூடியதாக இருக்கவேண்டும். உற்பத்தியில் ஈடுபடக் கூடியது இயந்திரங்கள் மட்டுமல்ல; மனிதர்களும் முக்கியமானவர்கள். மனிதர்கள் திடகாத்திரத்தோடு வாழ்ந்து நல்ல முறையிலே உற்பத்தியில் ஈடுபடுவதற்குள்ள சுகாதாரமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது ரொம்ப அவசியம். குடிதண்ணீர், புதை சாக்கடை போன்ற திட்டங்களுக்குப் போதுமான அளவு நிதியை ஒதுக்க முயற்சி எடுக்க வேண்டுமென்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

எரி பொருள் பற்றாக்குறையைப் போக்குவதற்கு, கோக் என்ற நிலக்கரியை இங்கே தயாரிக்க, பச்சை நிலக்கரியைச் சுட்டுத் தயாரிக்கக்கூடிய ஒரு வகை நிலக்கரி அது. அது உலோகப் பொருள்களை உருக்க அவசியமானது. அந்த கோக் நிலக்கரி கிடைக்காமல் தொழிற்சாலைகள் மூடப்படுவதும், தொழிலாளர்களுக்கு வாரத்திற்கு ஐந்தாறு நாட்களுக்குக்கூட வேலை இல்லாமலும் உள்ள நிலைமைகள் சில இடங்களில் இருக்கின்றன. விலை அதிகமாக இருப்பினும் அந்தப் பற்றாக்குறையைப் போக்க வேண்டும். விலை அதிகமாக இருந்தாலும் கூட பீகாரில் இருந்தோ, ஹைதராபாத்தில் இருந்தோ வரவழைத்துக் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம்.

மின்சார சக்தி உற்பத்தி பண்ணுவதிலும், கிராமங்களுக்குக் கொடுப்பதிலும் மற்ற ராஜ்யங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நாம் முன்னேறி இருக்கிறோம் என்று அமைச்சர்கள் அடிக்கடி கூறுகிறார்கள். இருப்பினும் நம்முடைய தேவையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நமக்கு மின்சாரமானது இன்னும் பற்றாக்குறையாகத்தான் இருக்கிறது. அதற்கான விவரங்கள் இதிலே



கொடுக்கப்பட்டிருக்கின்றன. எப்படி மின்சார உற்பத்தியைப் பெருக்குவது? நெய்வேலியில் புதிதாக ஒரு மின்சார நிலையம் கட்டப்பட்டு வருகின்றது. அதன் மூலம் மின்சார சக்தியை அதிகப்படுத்துவது வரவேற்கத்தக்கது. இவை எல்லாம் இருந்தால்கூட நம்முடைய மின்சார பற்றாக்குறை போகவேண்டுமானால் கட்டாயம் அணு சக்தியின் உதவியைக் கொண்டு மின்சாரத்தைத் தயாரிக்கக் கூடிய நிலையத்தை நம்முடைய ராஜ்யத்தில் நிறுவ நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்பது மிகவும் முக்கியமானது. வேண்டுமானால் இன்னும் தெற்கே இருக்கக் கூடிய ராஜ்யங்களுக்கும் உதவி செய்யும் அடிப்படையில் நிறுவுவதை நான் ஆட்சேபிக்கவில்லை. நம்முடைய சென்னைக்கு ஒரு அணு சக்தி மின்சார நிலையத்தை ஏற்படுத்த வேண்டியது அவசியம். அதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**Sri A. VEDARATHNAM :** ஆலய நிலங்களையும் மடங்களின் நிலங்களையும் டெனண்ட் பார்மிங் சொசைட்டிகளுக்குக் கொடுப்பதில் பலவித மான சொஸைடிகளுக்குக் கிடைக்கவில்லை என்ற புகார் வந்திருக்கிறது. அவைகளை கனம் அமைச்சரிடம் நேரிலும் சில விண்ணப்பங்கள் மூலமாக வும் தெரிவித்திருக்கிறார்கள். மேஜையின் மீது வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையின் 24-வது ஐட்டம் வேதநாயகி டெனண்ட் பார்மிங் கோவாப ரேடிவ் சொசைட்டி, 27-வது ஐட்டம் வேதாரண்யம் கோவாபரேடிவ் சொசைட்டி, 44-வது ஐட்டம் கரியபட்டினம் டெனண்ட் பார்மிங் கோவாப ரேடிவ் சொசைட்டி, இவைகள் ரிஜிஸ்தர் ஆகி ஒரு வருஷ காலமாகியும் கூட விவசாய காலம் முடிவு ஆகப்போகிற காலம் ஆகியும் கூட இன்னும் அவை களை எந்த விதமான முறையிலும் கவனிக்கவில்லை என்று கூறுகிறார் கள். அதனால் அவைகளுக்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN :** புதியதாக அமைப்பதில் சற்று காலதாமதம் தான் ஆகிறது. ஏனென்றால் இப்பொழுது புதியதாக சொசைட்டிகளை ஆரம்பிக்கப்படுவதால் அவைகளைப்பற்றியெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதனால் ஆரம்ப காலத்தில் சற்று காலதாமதம் ஆகிறது. இப்பொழுதுள்ள அனுபவத்தைக் கொண்டு இனிமேல் காரியங்கள் நடைபெறும் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**Sri K. B. S. MANI :** தஞ்சை ஜில்லாவிலுள்ள தருமபுர திருவாடுதுறை ஆதீன மடாதிபதிகள் சர்க்காருடைய நிபந்தனைகளை ஒத்துக் கொண்டு சர்க்காருடன் ஒத்துழைப்பதாகக்கூறி பல நிலங்களைக் கொடுத் திருப்பதால் மேற்கொண்டு அவர்களை ரிக்வெஸ்ட் செய்து இன்னும் அதிகப்படியான நிலங்களைக் கொடுக்கும்படியாகச் செய்து அவைகளையும் கூட்டுறவு சாகுபடிக்குக் கொண்டு வருவதற்கு அவர்களை கேட்டுக்கொள் வார்களா ?

[8th September 1960

**THE HON. SRI R. VENKATARAMAN :** அதைப்பற்றி தான் நாங்கள் அடிக்கடி வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். கனம் விவசாய இலாகா மந்திரி அவர்கள் இது விஷயமாக அதிக ஊக்கம் எடுத்துக் கொண்டு அவர்கள் போகிற இடங்களிலெல்லாம் மடங்கள் கோவில்கள் நிலங்கள் இருக்கிற இடங்களில் இதைச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்திக்கொண்டு வருகிறார்கள்.

**SRI V. SUBBIAH :** இப்படி கூட்டுறவு முறையில் இல்லாமல் தனிப்பட்ட விவசாயிகள் எல்லோரும் சேர்ந்து கூட்டுறவு முறையில் விவசாயம் செய்கிறோம் என்று சொல்லி சர்க்காரை சலுகைகள் கேட்டால் அவர்களுக்கு அவசியமான சலுகைகளைக் கொடுக்க சர்க்காருக்கு ஏதாவது உத்தேசம் இருக்கிறதா ?

**THE HON. SRI R. VENKATARAMAN :** தனிப்பட நிலம் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் கூட சேர்ந்து கூட்டுறவு இயக்கத்தில் சாகுபடி செய்ய வேண்டும் என்பதுதான் சர்க்காருடைய விருப்பமும். அப்படிச் செய்ய யார் முன் வந்தாலும் அவர்களுக்கு சாகுபடி செய்வதற்கு வேண்டிய சலுகைகள் எல்லாம் கொடுக்கப்படும்.

**SRI S. M. ANNAMALAI :** தனிப்பட்டவர்களுடைய நிலங்களில் சில ஏறத்தாழ மூன்று ஆண்டுகளாக தரிசாக கிடக்கிறது. லாண்ட் யூடிலைசெஷன் ஆக்ட்படி" அவைகளை சாகுபடி செய்யச் சொல்ல சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது. இந்த நிலைமையில் சிலர் ஒரு வருஷம் சாகுபடி செய்து விட்டு இரண்டு வருஷம் சாகுபடி செய்யாமல் இருக்கிறார்கள். அப்படி இருந்தால் அவர்களை சாகுபடி செய்யச் சொல்லும் அளவுக்கு சட்டத்தைத் திருத்தி அமைக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ? அப்படி பயிரிடாமல் இருந்தால் அந்த நிலங்களை சட்டப்படி எடுத்துக்கொண்டு கூட்டுறவு முறையில் சாகுபடிக்குக் கொண்டு வருவதற்கு தக்கபடி சட்டத்தைத் திருத்துவதற்கு சர்க்கார் முன்வருமா ? அந்த முறையில் கூட்டுறவு சாகுபடி பண்ணையை ஆரம்பிக்க சர்க்கார் முன்வருமா ?

**THE HON. SRI R. VENKATARAMAN :** That may be the policy of the hon. Member. That cannot arise by way of a question.

**SRI T. IRUSAPPAN :** ஆத்தூர் தாலூகாவில் இருக்கக்கூடிய தரிசு நிலங்களை கூட்டுறவு சாகுபடிக்கு எடுத்துக்கொள்வதாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக ராமநாயகன்பாளையம், நாவலூர் போன்ற இடங்களிலும் கூட்டுறவு விவசாயப் பண்ணை ஆரம்பிக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI R. VENKATARAMAN :** I think, I have come to the limit of my knowledge. I cannot answer individual questions. தனித்தனியாக ஒவ்வொரு சொஸைட்டியைப் பற்றியும் சொல்லமுடியாது. அதற்கு விவரங்கள் வேண்டும். அப்படிக் கேட்க வேண்டுமானால் தனியாக கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

*Seepage (Subsidy)*

*541 Q.—**SRI P. G. MANICKAM :** கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) " G.O. No. 2879, Revenue, dated 16th September 1955 " உத்திரவுப் பிரகாரம் லோயர் பவானி சமுதாய நல திட்டப் பிரதேசத்திலே நீர்க்கசிவினாலே சேதமடைந்த வீடுகளில் குடியிருந்த குடும்பங்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக " Cash subsidy " கொடுக்கப்படுவதற்காக ஒதுக்கப்பட்ட தொகையிலே இதுவரையில் செலவழிக்கப்படாமலிருக்கும் தொகை எவ்வளவு ?



8th September 1960]

(ஆ) இன்னும் எத்தனை கிராமங்களிலுள்ள, எத்தனை குடும்பங்களுக்கு மேற்கண்ட " Cash subsidy " கொடுக்கப்படவில்லை ?

**THE HON. SRI M. A. MANICKAVELU :** (அ) Rs. 1,55,165.

(ஆ) The balance amount of subsidy, namely, Rs. 1,55,165 has yet to be disbursed to 1,550 families in 46 villages.

**SRI P. G. MANICKAM :** மேற்கொண்டு ஒரு உத்தரவானது 1955-ல் வெளியிடப்பட்டிருக்கிறது. ஒரு லட்சத்திற்கு மேல் செலவு செய்யப் படாமல் இருக்கிறது. 150-க்கு மேற்பட்ட குடும்பங்கள் வீட்டு நிலங்கள் கிடைக்காமல் இருக்கிறார்கள். காரணம் அவர்களுக்குக் கிடைக்க கால தாமதம் ஆகிறது. அதனால் பல ஜனங்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே கூடிய சீக்கிரத்தில் அவர்களுக்கு தொகையைப் பிரித்துக் கொடுக்க வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுக்குமா ?

**THE HON. SRI M. A. MANICKAVELU :** சீக்கிரம் செய்ய வேண்டும் என்பதற்குத்தான் முயற்சி செய்யப்படுகிறது. இருந்தாலும் இம் மாதிரி விநியோகம் செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது என்பது வாஸ்தவம்தான். ட்ராப்ட் நோடிபிகேஷன் கொடுக்கும் முன் விசாரணை நடத்த வேண்டியதாக இருக்கிறது. நோடிபிகேஷனுக்குப் பிறகு மூன்று மாத டயம் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அதன் பின் அதற்கு ஆட்சேபணைகள் வரவேண்டியதாக இருக்கிறது. அதன் பிறகு அவார்ட் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. பின்னும் மூன்று மாதம் இருக்க வேண்டியதாக இருக்கிறது. கடைசியாக லே அவுட் இதெல்லாம் இருக்கிறது. இதற்கெல்லாம் கொஞ்ச கால தாமதம் ஆகிறது.

**SRI P. G. MANICKAM :** அவ்வாறு லோயர் பவானி வாய்க்கால், மேட்டூர் வாய்க்கால் பகுதிகளில் ஹரிஜன சேரிகள் எந்த நிலையில் இருக்கின்றன என்பது அங்குள்ள எம்.எல்.ஏ.-க்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே அவர்கள் கொண்ட ஒரு கமிட்டியையாவது போட்டு அங்குள்ள நிலைமையை ஆராய்வதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI M. A. MANICKAVELU :** நிலைமை தெரிந்துதான் இருக்கிறது. தெரிந்திருந்தும்தான் சில சமயங்களில் காலதாமதம் ஏற்படுகிறது என்று சொன்னேன்.

*Foreshore lands*

* 542 Q.—**SRI V. K. RAMASWAMY MUDALIYAR :** Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether it is a fact that at the recent settlement of zamin villages in Tiruvallur taluk (Chingleput district) patta lands situated in the foreshores of tanks and enjoyed by private persons were declared as poramboke lands, on the ground that they are liable to submersion for over 21 days;

(b) if so, how many acres of land and in how many villages;

(c) how many persons became landless and how many persons' holdings were reduced thereby;

(d) whether any compensation has been granted to such persons and if so, in how many villages and for how many persons;

(e) if not, under what provisions of law they were deprived of their private property without compensation;

[8th September 1960

(f) whether the Government propose to re-assign lands which are liable to submersion for less than 21 days to their original owners after fresh survey; and

(g) whether it is a fact that foreshore patta lands, which are liable to submersion in foreshore of tanks in ryotwari villages have been allowed to continue as patta lands without being declared as poramboke lands?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) Yes, Sir, in respect of lands liable for submersion for a period exceeding three weeks.

(b) 1,441·74 acres in 44 villages.

(c) The information is not readily available. The Collector has to gather the particulars after conducting a detailed enquiry in respect of 2,018 cases. The time and labour involved in getting the particulars will not be commensurate with the public interests served.

(d) & (e) Uuder section 3 (b) read with section 19-A of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, the rights of a permanent character created by the landholder prior to the date of taking over of the estate in respect of tank-bed lands are not enforceable against the Government. The question of payment of compensation does not therefore arise. However Government have issued orders that persons who are not melwaramdars and who have been refused ryotwari patta for such lands are eligible for assignment of valuable or non-valuable lands at the disposal of the Government equivalent in value to the tank-bed lands. They are also given preference for assignment of Government lands over those who are not eligible for the concession.

(f) Yes, Sir.

(g) Ordinarily, there can be no cases of the kind in the ryotwari area, as under the Board's Standing Orders all lands liable to submersion when a tank is full should remain registered as tank poramboke as long as the tank is maintained. The Collector of Chingleput has, however, been asked on the point specifically and his reply is awaited.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Sir, this matter has been pending for a very long time with the result that many poor ryots are affected. So, may I know whether the Government will take early steps to rectify this matter?

THE HON. SRI M. A. MANICKAVELU: According to me, there is nothing to rectify. I have made a long statement explaining the manner in which these encroachments have been made. In the days of Zamindars and Mirasdars, they have allowed this in the tank-bed lands, foreshore lands. When Survey and Settlement took place, we found out the inroads made on such tanks and as a matter of concession, we allowed this in respect of land which is



8th September 1960]

not submersible for more than three weeks. In respect of lands which are submersible for a longer period we cannot allow it in the interests of a larger number of ryots.

SRI K. VINAYAKAM: Sir, while answering clause (a) of the question, the Hon. Minister stated that patta lands were declared as poramboke lands on the ground that they were liable to submersion for over 21 days. On what basis the pattas were given in the past? Even in the days of zamindars, there would have been this submersion under water and I think this would have been taken into consideration by the zamindars.

THE HON. SRI M. A. MANICKAVELU: If the zamindars had this point in view, no legislation like this is necessary at all. The zamindars did things as they liked. They had no consideration for the good of the common man, that is, the greatest good for the greatest number.

SRI V. SUPBIAH: இனாம் கிராமங்களிலே 21 நாட்களுக்குமேல் நீரில் மூழ்கி இருப்பதன் காரணத்தால், முன்னால் கிரயம் செய்யப்பட்டு, பட்டா செய்யப்பட்டு நேரடியாக விவசாயம் செய்துகொண்டிருக்கிற நிலங்களை அரசாங்கம் எடுத்துக் கொள்வதற்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறதா? அப்படியானால் அப்படி கிரயம் செய்யப்பட்டு, பட்டா செய்யப்பட்டு விவசாயிகள் நேரடியாக பயிர் செய்துகொண்டிருக்கின்ற நிலங்களை அவர்களே பயிர் செய்ய அனுமதியளிக்க அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: நான் முன்னமே சொன்னேன், ஜமீன்தார்கள் ஆதிக்கத்தில் ஏற்பட்ட கோளாறுகள் இவை என்று. இதைத் திருத்தி அமைத்து பெருவாரியாக பாதகம் ஏற்படாமல் இருப்பதற்காக இந்த மாதிரி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

SRI S. M. ANNAMALAI: 1942-லிருந்து ஏறக்குறைய 30 ஆண்டுகளாக உபயோகித்துக்கொண்டிருந்த நிலங்களை சர்க்கார் புறம்போக்கு நிலங்களாக மாற்றுவது சரிதானா? இதை எந்த முறையில் சர்க்கார் பரிசீலனை செய்து வருகிறது? இதைத் திருத்துவதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது? ரயத்துவாரி கிராமங்களில் உள்ள நிலங்களை புறம்போக்கு நிலங்களாக மாற்றாமல், அதே சமயத்தில் ஜமீன் நிலங்களை மாத்திரம் விட்டுவிட வேண்டுமென்று சொல்வது சரிதானா? ஏன் இந்தச் சட்டத்தைத் திருத்தி அமைக்கக்கூடாது?

THE HON. SRI M. A. MANICKAVELU: பல ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று கனம் அங்கத்தினர் சொன்னமாதிரி செய்து விட்டால் பல லட்சக்கணக்கான மக்களுக்கு பாதகம் ஏற்பட்டுவிடும். ஆகையால் பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு பாதகம் ஏற்பட்டால் பரவாயில்லை என்று தோன்றுகிறது.

*Cars (Manufacture)*

* 543 Q.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have recommended to the Union Government for the location of a factory in Madras to manufacture medium-priced cars?

THE HON. SRI R. VENKATARAMAN: There is already a factory at Vandalur manufacturing medium-period motor cars

[8th September 1960

This Government have recommended to the Government of India the application of this factory for the grant of a licence to expand its production capacity.

SRI A. A. RASHEED : In view of the importance of this industry, may I know whether the Government could not see their way in recommending to the Union Government for location of this medium-priced cars factory in our State also?

THE HON. SRI R. VENKATARAMAN : It is a suggestion for action.

SRI A. VEDARATHNAM : சமீபத்தில் 6,500 ரூபாய் விலையுள்ள கார்கள் தயாரிக்கப்போவதாக மத்திய அரசாங்கம் அறிவித்திருக்கிறது. இந்தக் கார்களை எந்த இடத்தில் உற்பத்தி செய்யப்போகிறார்கள்? நமது மாகாணத்தில் இந்த உற்பத்திசாலையை ஆரம்பிக்க நமது சர்க்கார் முயற்சி எடுப்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : 5,000 ரூபாயிலிருந்து 7,000 ரூபாய் வரைக்கும் மதிப்புள்ள கார்களை செய்யலாம் என்று ஒரு ஸ்டேஜ்க்கு வந்திருக்கிறது. ஆகவே இதைப்பற்றி ஒன்றும் செய்வதற் கில்லை.

SRI A. A. RASHEED : As for the factory in Vandalur, may I know whether there is any exact proposal for expansion? What is their target per month?

THE HON. SRI R. VENKATARAMAN : They have a capacity of 220 Standard-Tens per month. As for expansion, they expect to produce 500 Standard-Heralds every month.

SRI R. KRISHNASAMI NAIDU : கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது 13 ஆயிரத்திற்கு மேல் விலையிலுள்ள கார்களை வாங்குவது சாத்தியமல்ல என்று கருதி 5 ஆயிரத்திற்கும், 6 ஆயிரத்திற்கும் கார்கள் தயாரித்து வந்தால் போக்குவரவில் இப்பொழுது தெருக்களிலே இருக்கும் நெரிசல் மேலும் அதிகரிக்குமே. ஆகையால் இதையும் ஆராய்ந்து உடனடியாக நடவடிக்கை எடுக்க சர்க்கார் முயற்சி செய்வார்களா ?

(No answer.)

SRI A. R. SUBBIAH MUDALIAR : இதற்காக வண்டலூர் பாக்டரியில் சர்க்கார் பொறுப்பு எடுக்க உத்தேசம் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதைப்பற்றி சர்க்காருக்கு எந்தவிதமான பொறுப்பும் இல்லை.

*Sathanur Reservoir*

*544 *Q.*—SRI P. U. SHANMUGAM : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருவண்ணாமலைக்கு சாத்தனூர் நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : The Government have sanctioned the investigation of Tiruvannamalai Water-Supply Improvements Scheme and the investigation report is awaited from the Chief Engineer, P.W.D. (General). Sathanur Reservoir and Cheyyar River are two alternative sources of supply. The actual source for the scheme will be decided after the investigation is completed.



SRI S. M. ANNAMALAI : இதற்காக செலவாகக்கூடியது எவ்வளவு என்று சொல்ல முடியுமா ? பல ஆண்டு காலமாக இந்தப் பிரச்சினை இருந்துகொண்டு இருக்கிறது. ஆண்டுக்கு ஆண்டு தண்ணீர் பற்றாக் குறை அதிகரித்துக்கொண்டு வருகிறது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகையால் என் சர்க்கார் பரிசீலனை செய்யவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்பொழுது பரிசீலனை செய்ய உத்திரவிடப்பட்டிருக்கிறது. சீப் என்ஜினியரிடமிருந்து ரிபோர்ட் வந்த பிறகுதான் எவ்வளவு செலவாகும் என்று தெரியும்.

*Hospital Advisory Committee*

*545 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received a copy of the resolutions passed by the Hospital Advisory Committee, Ariyalur on 2nd March 1960 requesting (i) for the provision of an overhead tank; (ii) for the construction of a compound wall and (iii) for an increase in the present bed strength; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI K. R. VISWANATHAN : May I know whether such a copy of the resolutions was received by the District Medical Officer and recommendations were made to the Government with regard to these points?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தத் தீர்மானத்தின் நகல் அரசாங்கத்திற்கு இன்னும் வரவில்லை என்று சொன்னேன். இன்னும் படுக்கைகளை அதிகப்படுத்தவேண்டும் போன்ற யோசனைகள் பரிசீலனையில் இருக்கிறது.

SRI K. R. VISWANATHAN : May I know when the report was received by the Government and when the Government propose to take a decision in these matters?

THE HON. SRI M. A. MANICKAVELU : The suggestion of the Head of the Department was received some time back. It is being examined. After it has been examined, necessary action will be taken.

*Waste lands*

*546 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் ஜில்லாவிலே சாகுபடிக்கு லாயக்கானதாக உள்ள தரிசு நிலங்களிலே எத்தனை ஏகரா நிலங்கள் எத்தனை பேர்களுக்கு 1959—1960-ல் விநியோகம் செய்யப்பட்டன ?

(ஆ) இந்நிலங்களை நிலமில்லாத விவசாயிகளுக்கு வழங்கி, கூட்டுப் பண்ணை ஏற்படுத்த உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) An extent of 673·40 acres of land was assigned to 187 persons during 1959–60, i.e., for the 12 months from April 1959 to March 1960.

(ஆ) Steps are being taken to start a co-operative farm in Kempanaickenpalayam group and Talavadi villages respectively. The Collector of Coimbatore has promised to obtain reports from the Block Development Officers, examine the possibility of farming a co-operative society and submit a report to the Government. It is also reported that about 380 acres of cultivable lands assigns to 100 Harijans in Nichampalayam village, Erode taluk, and about 312 acres of cultivable lands assigned to 75 Harijans in Pallapalayam village in Erode taluk, are available for farming societies. Another proposal to form a farming society in about 300 acres of land in the Welsapuram village, Avanashi taluk, Coimbatore district, has been received by the Co-operative Department from 35 Harijans of the Welsapuram Vivasaya Sangam. Further particulars on the proposals are awaited from the Registrar of Co-operative Societies.

SRI P. G. MANICKAM : 1960-ம் ஆண்டு மார்ச்சு மீ 25-ம் தேதியில் என்னுடைய 523 அன்-ஸ்டார்ட் கேள்விக்கு பதிலளிக்கப்பட்டபோது, கோவை ஜில்லாவில் 36.675 ஏக்கர் 10 செண்ட் நிலம் இருப்பதாகவும் இந்த நிலங்களை, குறிப்பாக பவானியில் 5,9·5 ஏக்கர் 80 செண்ட், கோபி செட்டிப்பாளையத்தில் 26,152 ஏக்கர் 87 செண்ட் இருப்பதாக தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அங்கு இந்த நிலங்கள் 50, 100 ஏக்கர்கள் என்று ப்ளாட்களாக அமைந்திருக்கிறது. அவைகளை கூட்டுறவுப் பண்ணையில் கொண்டு வருவதற்கு அவைகளை அங்குள்ள ஏழை மக்களுக்கு பட்டா செய்து கொடுத்து கூட்டுறவு முறையைப் புகுத்துவதற்கு சர்க்கார் பரிசீலனை செய்யுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் என்னிடமிருந்து கேட்பதற்குப் பதிலாக அவரே நிறைய தகவல்கள் கொடுத்திருக்கிறார்கள். நான் சொன்ன இடங்களை, எப்படி கூட்டுறவு முறையில் வேண்டுமென்று கேட்டார்களோ அப்படி குறிப்பிட்ட இடத்தைச் சொல்லி அந்தபோல் கேட்க முன்வந்தால் அப்பொழுது கவனிக்கப்படும்.

SRI P. G. MANICKAM : மேற்கண்ட நிலங்களில் இன்னும் பெரும் பாலான நிலங்களுக்கு பட்டா கொடுக்கவில்லை. அவை இன்னும் பிரித்துக் கொடுக்கப்படவில்லை, ஏழை ஜனங்களுக்கு. ஆகவே அது பிரித்துக் கொடுக்கப்பட்டு பட்டா வழங்கலாவது முதலில் சர்க்கார் நடவடிக்கைகள் எடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : பட்டா கொடுப்பதற்கும், இம்மாதிரி ஸொஸைட்டி ஏற்படுத்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டுதான் வருகிறது. குறிப்பாக எங்கேயாவது அம்மாதிரி துரிதமாக எடுக்கப்படவில்லை என்று எனக்கு எழுதித் தெரிவித்தால் அதை கவனிக்கலாம்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : ஆத்தூர் தாலூகாவில் இப்படி பல்லாயிரக்கணக்கான ஏக்கர் இருப்பதால், நமக்கு உணவுப் பற்றாக்குறையும் இருப்பதால் அங்கு கூட்டுறவுப் பண்ணைகள் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?



THE HON. SRI M. A. MANICKAVELU : ஆத்தூர் தாலூகாவில் முதலில் ரிசர்வ் ப்ளாக், சும்மா இருந்த நிலத்தை பயிர் செய்யக் கொடுத் தால் நன்றாயிருக்குமென்று கொடுத்தோம். அப்படிக் கொடுத்தும் பிரயோஜனமில்லை. ஆகவே, இப்படி பலனை அடைய முடியும் என்று யோசனை செய்து கூட்டுறவு பண்ணையாகவா அல்லது வேறு விதத்தில் செய்யலாமா என்பது யோசனையில் இருக்கிறது.

*Language test*

* 547 Q.—SRI M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Government after the Reorganization of States had abolished the language test in languages other than Tamil for State and Subordinate Services;

(b) if so, why was it not given effect to by the Medical Department with regard to nurses; and

(c) the reasons for the delay?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Yes.

(b) It has been given effect to.

(c) Does not arise.

*Rural Housing Scheme*

* 548 Q. SRI A. VEDARATHNAM : மாண்புமிகு கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சமீபத்தில் ஹைதராபாத்தில் நடந்த ஜாகை மந்திரிகள் மகாநாட்டில் கிராம ஜாகை திட்டம் பற்றி என்ன முடிவு செய்யப்பட்டது ?

(ஆ) இம்மாநிலத்தில் அம் முடிவு எப்போது அமுலுக்கு வரும் ?

(இ) இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு ?

(ஈ) ஹைதராபாத் மகாநாட்டின் முடிவிலிருந்து எவ்வளவு தொகை அதிகரிக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) A copy[a] of the recommendations of the Housing Ministers' Conference held at Hyderabad in 1959 relating to the Village Housing Projects Scheme, is placed on the Table of the House.

(b) The Government of India communicated their decisions on these recommendations in June 1960 and orders have since been issued for the implementation of the scheme in this State in accordance with the decisions of the Government of India.

(c) A sum of Rs. 70 lakhs has been set apart for the Second Plan period.

(d) There has been no increase in the Plan allocation, consequent on the decisions of the Conference.

(a) Printed as Appendix III on pages 496—497 infra

**Sri M. P. SUBRAMANIAM:** இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 70 லட்சம் ரூபாய் கிராமப் புறங்களில் வீடு கட்டும் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டதென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவைகளில், எந்தளவு நாம் இதுவரையில் வீடுகள் கட்டியிருக்கிறோம். எந்த அளவு செலவு செய்திருக்கிறோம் என்று கூறமுடியுமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN:** இந்தத் திட்டம், மத்திய அரசாங்கம் போட்டதில் 50% தான் கடன் கொடுக்கமுடியும் என்று அவர்கள் விதிகள் நிர்ணயித்தார்கள். சென்னை ராஜ்ய சர்க்கார் வைத்திருக்கிற கூட்டுறவு திட்டத்தில் 30% நாங்கள் கடன் கொடுக்கிறோம். ஆகவே இந்தத் திட்டத்தின்கீழ் அதிகமாக யாரும் வீடு கட்டுவதற்கு கடன் வாங்கவரவில்லை. இதற்குப் பதிலாக கிராமங்கள் எல்லாவற்றையும் சர்வே செய்து மாஸ்டர் ப்ளான் முதலியவைகள் தயாரிக்க ராஜ்ய சர்க்கார் 5,94,000 ரூபாய் சாங்க்ஷன் செய்திருக்கிறது. 2½ லட்சம் வரையில் பட்டுவாடாவாகிவிட்டது. சற்றேறக்குறைய வீடுகள் 610 கட்ட ஏற்பாடாயிருக்கிறது.

**Sri A. VEDARATHNAM:** மேஜைமீது வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் ட்ரைபல் ஏரியாவில் வீடுகள் கட்டுவது பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. சில கண்டிஷன்ஸ் பேரில் வீடுகள் அமைக்கவேண்டியிருக்கிறது. ட்ரைபல் ஜனங்களுக்கு பாதித் தொகை அவர்கள் கடனாக வாங்கி பாக்கியை அவர்கள் போட்டுக் கட்டுகிற நிலைமையில் அவர்கள் இருக்கிறார்களா ? எனவே அவர்களுக்கு சலுகை கொடுக்க, விதிகளில் விசேஷ சலுகைகள் காட்ட அரசாங்கம் முன் வருமா ? இப்படிக் கட்டப்படுகிற வீடுகளுக்கு ஏதாவது டைப் "டிஸைன்" அரசாங்கத்தினிடம் இருக்கிறதா ?

**The Hon. Sri R. VENKATARAMAN:** மலைஜாதியினருக்கு வீடு கட்டும் திட்டம், இந்தத் திட்டத்தில் அவர்களுக்கு வசதியில்லை. 50% கடன் கொடுத்து 50% அவர்களே போட்டுக் கொள்ளவேண்டுமென்று சொன்னால் அவர்களால் போட்டுக்கொள்ள முடியாது. அவர்களுக்கு வேறு திட்டங்கள் மூலம் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகிறது. கிராமங்களில் சர்வே செய்து, பொது வசதிகள் செய்வதற்கான வழிகளையெல்லாம் இதன் மூலம் செய்யமுடியும்.

**Sri A. GOVINDASAMY:** கிராமங்களில் வீடு கட்டும் திட்டத்தில், ஒரேயிடத்தில் மனைகள் இருக்கவேண்டுமா ? அல்லது வெவ்வேறு இடங்களில் இருந்தாலும் கொடுக்க அரசாங்கம் யோசிக்குமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN:** முதன் முதலில் போட்ட திட்டத்தில் ஒரேயிடத்தில் மனைகள் எல்லாம் இருக்க வேண்டுமென்று விதிகள் போட்டிருந்தார்கள். அவற்றையெல்லாம் தளர்த்த வேண்டுமென்று ஹைதராபாத்தில் நடந்த மகாநாட்டில் சிபார்சு செய்யப்பட்டது. அதை சர்க்கார் இப்பொழுது ஏற்றுக் கொண்டிருக்கிறது.

**Srimathi A. S. PONNAMMAL:** கிராமப்புறங்களில் வீடு கட்டுவது' ரூரல் ஹௌஸிங் ஸ்கீமின் கீழ் வீடுகள் கட்டிக் கொள்ளுங்கள் என்று சொன்னால் அவர்கள் கூறுகிறார்கள்., எஞ்ஜினியர்கள் சிறு சிறு அறைகளாக கட்டச் சொல்கிறார்கள், அப்படிக் கட்டினால் பிள்ளை குட்டிகளை வைத்துக் கொண்டு இருக்க வசதியாகயில்லை. ஆகவே இந்த ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்களை ரிலாக்ஸ் செய்து பெரிதாக கட்டிக்கொள்ள அவர்களுக்கு சலுகை கொடுக்கும் முறையில் அமைந்தால் நலமாகயிருக்கும். ஆகவே அப்படிச் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN:** இந்தத் திட்டம் மக்களுக்கு விரும்பத் தக்கதாகயில்லை என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஏனெனில் அதிலுள்ள விதிகள் எல்லாம் மிகவும் நெருக்கடியாக இருக்கின்றன. அதை தளர்த்துவதற்குத்தான் சர்க்கார் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது.



### *Family Planning*

*549 *Q.*—**Sri P. G. MANICKAM:** கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1959-60-ல் கருத்தடை திட்டத்துக்காக சென்னை சர்க்காரால் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) கருத்தடை சிகிச்சை எத்தனை ஆண்களுக்கும், பெண்களுக்கும் செய்யப்பட்டது ?

(இ) எத்தனை ஆண்களுக்கும், பெண்களுக்கும் கருத்தடை சாதனங்களும் மருந்துகளும் சப்ளை செய்யப்பட்டன ?

**The Hon. Sri M. A. MANICKAVELU:** (*a*) The amount allotted in the Budget Estimate for 1959-60 for "Family Planning Scheme" is as follows :—

| | RS. |
|---|---|
| (1) Family Planning Clinics ... ... | 3,87,000 |
| (2) Family Planning Institute ... ... | 12,800 |
| (3) Research into sub-fertility ... ... | 8,300 |
| | 4,08,100 |

(*b*) From the year 1956 to the end of June 1960, 3,547 men and 7,250 women have undergone sterilization operation in Government hospitals in the State.

(*c*) Information is being gathered and will be laid on the table of the House in due course.

**Sri P. G. MANICKAM:** இந்தத் திட்டத்தை பொது ஜனங்களுக்கு தெரியப்படுத்துவதற்காக என்னென்ன விதி முறைகள் சர்க்காரால் கையாளப்பட்டு வருகின்றன ?

**The Hon. Sri M. A. MANICKAVELU:** ஆஸ்பத்திரிகளில் இதற்காக புத்திமதி சொல்வதற்கு "பாமலி ப்ளானிங் நபர்கள்" இருக்கிறார்கள், ஆண்களுக்கும் பெண்களுக்கும். மற்றும் நகரங்களில் இன்னும் விஸ்தாரமாக ஆலோசனைகள் கொடுக்கப்படுகின்றன. கண்காட்சிகளிலெல்லாம் "பாமிலி ப்ளானிங் பூத்" வைக்கப்படுகின்றன. தேனாம்பேட்டையில் நடந்த கண்காட்சிக்கு நான் போய் இருந்தேன். அங்கு, இந்த பூத்தில்தான் நிறைய ஜனங்கள் இருந்தார்கள்.

### *Gold coins unearthed*

*550 *Q.* **Sri A. VEDARATHNAM:** கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலூகா, லால்பேட்டையை அடுத்த திருச்சின்னபுரம் கிராமத்தில் முன் காலத்திய தங்க நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டனவா ?

(ஆ) அப்படியானால், இது யார் காலத்து நாணயம் ? எவ்வளவு கண்டெடுக்கப்பட்டன ?

(இ) அந்த இடம் மேலும் சோதிக்கப்பட்டதா ? அதன் விவரம் என்ன ?

(ஈ) இப்படிக் கண்டெடுக்கும் சொத்துக்களை பொதுவாக அரசாங்கம் என்ன செய்கிறது ?

**THE HON. SRI M. A. MANICKAVELU** : (a) Yes, Sir.

(b) About sixteen items of Gold coins weighing 17-5/8 varahans and worth about Rs. 700 have been found. It is not exactly known to which period these coins belong to.

(c) Yes. The Tahsildar, Chidambaram, is making further enquiries in the matter and their results will be known later.

(d) Action in such cases is taken as contemplated in the Indian Treasure Trove Act of 1878.

**SRI A. VEDARATHNAM** : இப்படி கண்டெடுக்கப்பட்ட நாணயங்களில் ஏதாவது எழுத்துக்கள் இருக்கின்றனவா ? அப்படியானால் அவை என்ன என்று கண்டுபிடிக்கப்பட்டிருந்ததா ? இல்லையென்றால் அதைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்திற்கு அனுப்பப்பட்டு அவைகள் பரிசீலிக்கப்பட்டதா ? அப்படியானால் அதிலிருந்து ஏதாவது சரித்திரம் கிடைத்திருக்கிறதா ? அப்படியென்றால் அதைப்பற்றியுள்ள விவரங்களை தெரிவிக்க முடியுமா?

**THE HON. SRI M. A. MANICKAVELU** : இந்த நாணயத்தில் ஒரு பக்கம் யானை இருக்கிறது. இன்னொரு பக்கத்தில் புஷ்பம் இருக்கிறது. அதைப்பற்றி பரிசீலிப்பதற்கு டிப்பார்ட்மெண்ட் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது. இது ராஜ ராஜ சோழன் காலத்திலுள்ள நாணயம் என்று சொல்லப்படுகிறது. இதிலுள்ள எழுத்துக்களை எல்லாம் பரிசீலித்தால் தான் இதிலுள்ள முழு விவரங்களையும் அறிந்துகொள்ள முடியும்.

**SRI A. GOVINDASAMY** ; ஸார், லால்பேட்டைப் பகுதியில் இம்மாதிரியான நாணயங்கள் இன்னும் இருக்கின்றதா என்பதைக் கண்டுபிடிக்க இன்னும் பூமிக்கடியில் தோண்டிப் பார்க்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**THE HON. SRI M. A. MANICKAVELU** : இப்போது தோண்டி எடுப்பதைப் பற்றி ஆராய்ச்சி நடக்கவில்லை. எடுத்த நாணயத்தைப்பற்றித் தான் ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கிறது.

### *Students' Co-operative Societies*

*551 Q.—**SRI P. G. MANICKAM** : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் ஜில்லாவிலிருக்கும் எத்தனை உயர்நிலைப் பள்ளிக்கூடங்களிலே மாணவர்கள் கூட்டுறவு சொஸைட்டிகள் ஏற்படுத்தப்பட்டன ?

(ஆ) இந்த சொஸைட்டிகளில் மாணவர்களின் பங்குத் தொகையாக எத்தனை ரூபாய்கள் செலுத்தப்பட்டிருக்கின்றன ?

(இ) கூட்டுறவு இலாகா மூலமாக இந்த சொஸைட்டிகளுக்கு எத்தனை ரூபாய்கள் கடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : (a) to (c) The time and labour involved in collection of these figures will not be commensurate with the public purpose to be served.

**MR. SPEAKER** : Questions are over.



[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—PRIVILEG MATTER

**MR. SPEAKER** : Yesterday we decided that we will take the question of privilege at 9-30 a.m. to-day. 9-00 p.m.

**SRI M. KALYANASUNDARAM** : Regarding the privilege matter given notice of by me I want to make one submission. Not only in respect of the matter given notice of by me but even with regard to other privilege matters, I would suggest that it will be better if we take them up tomorrow.

**MR. SPEAKER** : I have no objection, if it is taken up tomorrow.

**THE HON. SRI C. SUBRAMANIAM** : I have also no objection.

**MR. SPEAKER** : So I think it is agreed we take it up tomorrow. All right.

**SRI P. S. CHINNADURAI** : I want to know the reason for that.

**MR. SPEAKER** : No reason need be given.

**SRI P. S. CHINNADURAI** : I think they are going to withdraw that motion.

## III.—ADJOURNMENT MOTIONS

### (1) FAILURE OF THE POLICE TO INTERVENE AGAINST CERTAIN VIOLENT ACTIVITIES IN NELLIKUPPAM.

**MR. SPEAKER** : I have received notice of an Adjournment Motion from the hon. Member, Sri M. Kalyanasundaram. He wants the House to discuss a matter of urgent public importance, viz., the failure of the police to intervene against the violent activities of the Youth Congress against the Communist Party workers in Nellikuppam, South Arcot district, on 4th September 1960.

How is it a Government's responsibility? I want to know from the hon. Member, Sri M. Kalyanasundaram, how is this Government responsible. The hon. Member need not make a long speech.

**SRI M. KALYANASUNDARAM** : நான் இதைப்பற்றி பெரிய பிரசங்கம் செய்யப்போவதில்லை. போலீஸ் கொடுக்கவேண்டிய பாதுகாப்பு இதில் கொடுக்கப்படவில்லை. பாதுகாப்பு கொடுக்கவேண்டியது சர்க்காருடைய பொறுப்பு. இதில் என்ன சம்பவம் என்றால், சமீபத்தில் நெல்லிக்குப்பம் ஆலைத் தொழிலாளர்கள், பாஸ் ஸ்டேஷனில் தபால் இலாகாவைச் சேர்ந்த ஒரு தொழிலாளியை தாக்கியதற்காக இளர்ச்சி செய்திருக்கிறார்கள். பின்னால் அதன் பேரில் வழக்கு நடந்திருக்கிறது. இந்த வழக்கில் சில போலீஸ் அதிகாரிகள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு பழி வாங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு "யூத் காங்கிரஸ்" என்ற ஒரு ஸ்தாபனத்தை போலீஸ்காரர்களே தூண்டிவிட்டு சில ஒழுங்ன

[Sri M. Kalyanasundaram] [8th September 1960

மாணவர்களையும், அதில் சேர்த்து வைத்துக்கொண்டு, அங்குள்ள தொழிலாளர்களையும், கம்யூனிஸ்டு கட்சி ஊழியர்களையும் தாக்கி வருகிறார்கள்.... (குறுக்கீடு.)

THE HON. SRI C. SUBRAMANIAM : This cannot be raised as an adjournment motion. It is positive action.

SRI M. KALYANASUNDARAM : It is positive action of a particular political group to attack another political group.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் சபாநாயகர் அவர்களே, இது கேள்வி கேட்கக் கூடிய ஒரு விஷயம்தான், இதைப்பற்றி அவசரப் பிரேரணை கொண்டுவருவதற்குரிய விஷயமல்ல என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Why not the hon. Member, Sri M. Kalyanasundaram put a short-notice question. Government will answer.

SRI M. KALYANASUNDARAM : I will give notice of a short-notice question, but I would request the Hon. Minister to give a reply.

MR. SPEAKER : You cannot force me to accept the short-notice question. I must allow it. I have also to decide. You cannot request the Hon. Minister alone. You must request both of us. Your requesting the Hon. Minister alone does not help me. (Laughter.) I rule the adjournment motion out of order.

(2) *Failure of the Government in not taking action on the death due to drowning of some Tamilians who went to Ceylon.*

MR. SPEAKER : என்னிடத்தில் இன்னொரு அட்ஜர்ன்மெண்ட் மோஷன் வந்திருக்கிறது. இதை திரு. கோவிந்தசாமி அவர்களும், திரு. கருணாநிதி அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். அதாவது சமீபத்தில் இங்கு வேலையில்லாத சில பேர்கள் இலங்கைக்குப் போனதாகவும், அவர்கள்போன கப்பல் மூழ்கிவிட்டதாகவும் அதைப்பற்றி அரசாங்கம் கவனிக்கவில்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் அரசாங்கத்திற்கு என்ன பொறுப்பு இருக்கிறது ? இதைப்பற்றி நான் அரசாங்கத் தரப்பிலிருந்து அபிப்பிராயம் கேட்கப்போவதில்லை. இது அவுட் ஆப் ஆர்டர் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

## IV.—ANNOUNCEMENTS.

### (1) BILLS PASSED BY THE COUNCIL.

MR. SPEAKER : I have to announce to the House that the Madras Appropriation (No. 3) Bill, 1960 (L.A. Bill No. 33 of 1960) has been passed by the Legislative Council without any recommendation.

### (2) ELECTION TO THE MADRAS LAND IMPROVEMENT BOARD.

MR. SPEAKER : I have also announce to the House that I have received three nominations for election to the Madras Land Improvement Board. As the number of candidates duly nominated



8th September 1960] [Mr. Speaker]

is equal to the number of vacancies to be filled, viz., THREE, I declare the following three candidates to have been duly elected to the Madras Land Improvement Board :—

(1) Sri K. S. Ardhanareeswara Gounder.

(2) Sri D. Dasarathan; and

(3) Sri G. Vagheesam Pillai.

## V.—GOVERNMENT MOTION.

### DRAFT OUTLINE OF THE THIRD FIVE-YEAR PLAN.

MR. SPEAKER : We will now proceed with the discussion on the Draft Outline of the Third Five-Year Plan. Yesterday it was decided that Sri Annadurai and Sri V. K. Ramaswami Mudaliyar will speak to-day and then the Hon. Leader of the House would reply. But to-day in view of the one hour that was allotted for the consideration of privilege motion being not fully utilized and having saved some time thereby, I will now allow Sri Pakkirisami Pillai and the Deputy Leader of the I.N.D.C. also (these two hon. Members only) to speak to-day.

SRI A. GOVINDASAMY : One member from our Party may also be allowed to speak to-day.

MR. SPEAKER : Sri Pakkirisami Pillai is the leader of a party. Sri Sasivarna Thevar is the Deputy Leader of another party. I have said that I will allow only these two hon. Members to speak to-day in addition to Sri Annadurai, Sri V. K. Ramaswamy Mudaliyar and the Hon. Leader of the House.

SRI P. G. KARUTHIRUMAN : One member from our Party may be allowed to speak.

MR. SPEAKER : I have said that I will allow only leaders of parties and Deputy Leaders of parties. Have you got a Deputy Leader for your party? If there is one I will allow him to speak. (Laughter.) The hon. Member Sri Sasivarna Thevar may now speak.

SRI T. L. SASIVARNA THEVAR : கனம் சபாநாயகர் அவர்களே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை இந்த சபையின் முன் வைத்து கனம் நிதி அமைச்சர் அவர்கள் பேசிய பேச்சின் மீது சில கருத்துக்களை சொல்ல நான் ஆசைப்படுகிறேன். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் சுமார் 80 கோடி ரூபாயும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சுமார் 189 கோடி ரூபாயும் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று நான் நினைக்கிறேன். இப் இரண்டுக்குமாகச் சேர்ந்து சுமார் 270 கோடி ரூபாய் ஆகியிருக்கிறது. போது வரக்கூடிய மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு சற்றேறக்குறைய 400 கோடி ரூபாய் ஆகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சென்ற இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலமாக மக்களுக்கும், நாட்டுக்கும் என்ன நன்மைகள் எல்லாம் கிடைத்திருக்கின்றன என்பதை கொஞ்சம் பரிசீலனை செய்து பார்த்து, அதிலுள்ள கஷ்ட நஷ்டங்களை எல்லாம் கணக்கெடுத்துப் பார்த்து, அவைகளை எல்லாம் பரிசீலனை செய்த பிறகு இந்தத் திட்டத்தைப் போட்டிருந்தால் நன்றாக இருக்கும். சென்ற திட்டங்

களால் நாட்டுக்கு ஏற்பட்ட நன்மை என்ன, அதன் மூலமாக நாட்டிலுள்ள இன்றைய நிலைமை என்ன என்பதைப் பார்த்தால் இன்றைக்கு நாட்டில் எல்லாப் பொருள்களின் மீதும் விலைவாசி அதிகமாக ஏறிப்போயிருக்கிறது. குறிப்பாக உணவுப்பொருட்களின் மீது அதிகமாக விலையேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இதை நாம் எல்லோரும் ஒப்புக்கொள்கிறோம். அதற்குக் காரணம் என்னவென்றால் பண மலிவு தான் (இன்ஃப்லேஷன்). பண மலிவு ஏற்படுவது நாட்டுக்கு நல்லதல்ல. பண மலிவு அதிகமாக ஏற்படுவதற்கு காரணம் நம்மிடம் திட்டமிட்ட பொருளாதாரம் இல்லை என்பதுதான் என்று பல அரசியல் அறி ர்கள் கூறுகிறார்கள். நிதி அமைச்சர் அவர்கள் இந்தப் பிளானைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகையில், ஏரோப்ளேனிலுள்ள "டேக் ஆஃப்" முறையைப்போல் நமது திட்டத்தையும் நடத்த வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். டேக் ஆஃப் ஸ்டேஜ் இருந்தால்தான் ஏரோப்ளேன் மேலே நன்றாக பறந்து போக முடியும், அதே போல் தான் நமது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டமும் மேல் நோக்கி செல்ல வேண்டும் என்று கருத்தைத் தெரிவித்தார்கள். நான் குறிப்பிட விரும்புவது ஏரோப்ளேன் போன்ற நமது திட்டம் ஒழுங்காக மேலேப் போய் சேருமா என்பது தான். அப்படி ஒழுங்காகப் போய் சேராது என்பதுதான் என் அபிப்பிராயம், காரணம் அதற்குள்ள பண வசதி நம்மிடம் இல்லை ..................

MR. SPEAKER : குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும், உங்களுக்கு 20 நிமிடநேரம் பேசுவதற்கு கொடுக்கிறேன், திரு. பக்கிரிசாமிப் பிள்ளை அவர்களுக்கு 25 நிமிட நேரம் கொடுக்கிறேன்.

SRI T. L. SASIVARNA THEVAR : நன்றி. நமக்கு வேண்டிய பணத்திற்கு இப்போதுள்ள நிலையில் நாட்டு மக்கள் மீது இன்னும் வரியை போட முடியாது. ஆகவே தான் போதிய சக்தி இல்லாமல் மேலே பறந்து போக முடியாமல் கீழே விழுந்து விட வேண்டிய நிலைமை ஏற்படும் என்று பல அரசியல் அறிஞர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் ஒழுங்காக நல்ல முறையில் மேலே போய் சேரமுடியும் என்று தெரிவிக்கிறார்கள்.

ஆனால் இரண்டு திட்டத்தின் நடவடிக்கைகளையும் அனுபவத்தில் வைத்துப் பார்க்கும்போது முன்னால் சொன்ன அபிப்பிராயம்தான் நிறைவேறுமோ என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களினால் ஏற்பட்ட நன்மை, லாபம் எல்லாம் எங்கே போய்ச் சேர்ந்தன என்று கண்டுபிடிக்கப்படவில்லை. அதைப்பற்றி ஆராய ஒரு ஆராய்ச்சிக் குழு ஏற்பாடு செய்து அதைப் பரிசீலிக்க வேண்டும். நம்முடைய முதலமைச்சர் கூட இதைப் பற்றிப் பேசியிருக்கிறார். இந்தச் சூழ்நிலையில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களுக்குச் செலவிடப் பட்ட பணம் ஒழுங்காகச் செலவிடப்பட்டிருக்கிறதா என்பது பரிசீலிக்கப்பட்ட பிறகு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஓரிரண்டு ஆண்டுகள் கழித்து ஆரம்பித்தால் என்ன ? ஜில்லாவாரியாக நடந்த சில காரியங்களைப் பற்றி என்னால் சொல்ல முடியும். பல காரியங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணம் ஆங்காங்கு ஜில்லா சம்பந்தப்பட்ட மட்டில் செலவழிக்கப்படவில்லை என்பதற்கு சாட்சியங்கள் இருக்கின்றன. சென்ற கூட்டத்திலும், இந்தக் கூட்டத்திலும் ஸ்ரீ என். ஆர். தியாகராஜன் அவர்கள் இது பற்றிய கேள்விகளைக் கேட்டு வருவது உங்களுக்குத் தெரியும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் எங்கள் பகுதியில் இவ்வளவு ஆஸ்பத்திரிகள் திறக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறதே, இதுவரை ஒன்று கூடத் திறக்கப்படாததற்குக் காரணம் என்ன என்று அவர் கேட்டார். அதே போல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ்ப் பல குளங்கள் வெட்டப்படும் என்று சொல்லப்பட்டு இதுவரை ஒரு குளம் கூட வெட்டப்படாததன் காரணம் என்ன என்று கேட்டார். இந்த முறையில் அவர் ஐந்தாறு கேள்விகள் கேட்டார். சமீபத்தில்கூட டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்திற்கு நான் சென்றிருந்தேன். அந்தக் கூட்டத்தில், தாவாரியாக ஒவ்வொரு இலாகாவுக்கும் செலவழிக்கப்படவில்லை என்று கூறப்பட்டதே தவிர அதற்கான காரணம் என்ன என்று கூறவில்லை. இரண்டு லட்சம் ரூபாய் செலவழிக்கத் திட்டமிடப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தர்



களைக் கேட்டால் பணம் அப்படியே இருக்கிறது என்று சொல்வார்கள். விவசாயக் கடன் என்று விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கத் திட்டமிட்டிருக்கிறோம். கிணறு வெட்டுவது, விதைகள் வாங்குவது ஆகிய காரியங்களுக்காகக் கொடுக்கப்படக் கூடிய கடன் அது. அவை பூராவும் கிராம மக்களுக்குப் பயன் அளித்திருக்கிறதா ? அந்தக் கிராம மக்களிடம் வசதி இல்லை. அந்தக் கடனை வாங்கவேண்டுமென்றால் அதிகச் செலவாகிறது. அதற்காக "சால்வன்சி சர்டிபிகேட்" "என்கம்ரன்ஸ் சர்டிபிகேட்" கொடுத்தால்தான் கடன் கிடைக்க முடியும். அதனால் யாரும் கடனை வாங்க முடியாமல் இருக்கிறது. அதற்காக ஒதுக்கப்பட்ட பணமானது அப்படியே இருக்கிறது. இதில் உத்தியோகஸ்தர்கள் மேல் குற்றம் சொல்வதற்கில்லை. இந்த மாதிரியாக எந்த இலாகாவை எடுத்துக் கொண்டாலும் கண்டிப்பான முறையில் செலவு செய்யப்படவில்லை. உதாரணத்திற்கு ஒன்று சொல்வேன்.

எங்கள் பகுதியில் இரண்டு கோழிப்பண்ணைகள் நடத்தப்பட்டு வந்தன. இன்று அதன் கட்டிடங்கள் கூட இடிந்து கிடக்கின்றன. பேரையூரில் ஒரு பண்ணை வைத்தார்கள். அந்தப் பண்ணைக்கு 400 கோழிகள் வாங்கிக் கொடுக்கப்பட்டன. அந்த 400 கோழிகளில் இன்று 43 கோழிகள்தான் மிச்சமிருக்கிறது. இதுபற்றி வெடரினரி டாக்டர், நோயின் காரணமாக அத்தனை கோழிகளும் இறந்து போய் விட்டதாகச் சொல்கிறார். (கனம் ஸ்ரீ கே. காமராஜ் : சாப்பிட்டு விட்டு இறந்து போய்விட்டதாகச் சொல்லலாம்) கனம் முதலமைச்சர் அவர்கள் சொல்வது ஒரு காரணமாக இருக்கலாம். எங்கள் பகுதியில் ஆட்டுப் பண்ணை ஒன்று வைத்தார்கள். அந்த ஆடுகளில் சில இறந்து விட்டன. (கனம் ஸ்ரீ சி. சுப்பிரமணியம் : மனிதன் சாப்பிடாததை வைத்தால்தான் இராமநாதபுரத்தில் நிற்கும் போல் தெரிகிறது). அந்த வகையில் உங்களுடைய ஆட்கள் சாப்பிட்டதைக் காண ரொம்ப சந்தோஷம். அங்கு 4, 5 ஆடுகள் சீக்குப் பிடித்துச் செத்து விட்டதாகச் சொல்கிறார்கள். செத்த ஆடுகளைப் போஸ்ட் மார்ட்டம் பண்ணியதாகச் சொல்கிறார்கள். இந்தமாதிரி பொதுவாக எதை எடுத்துக் கொண்டாலும் எல்லாத் திட்டங்களும் பரிபூரணமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இந்த மாதிரி சிறிய அளவில் திட்டமிட்ட திட்டங்கள் சரியானபடி நிறைவேற்றப்படவில்லை. ஏதோ சில நீர்ப்பாசனத் திட்டங்கள் வேண்டுமானால் நிறைவேற்றப்பட்டிருக்கலாம். இந்தச் சிறிய திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகைகள் பூராவும் தவறான முறையில் தான் செலவழிக்கப்பட்டிருக்கின்றன.

சிறு தொழில்கள் சம்பந்தப்பட்ட மட்டில் பல ஊழல்கள் இருக்கின்றன. ஆயில் சொசைடி வைக்கிறார்கள். அதற்காகப் பணம் கொடுக்கிறார்கள். ஆனால் இது முன்னுக்கு வர முடியவில்லை. இயந்திரத்தோடு போட்டி போட முடியவில்லை. அதிலிருந்து கிடைக்கும் பிண்ணாக்கை விற்பதில் கூட நஷ்டந்தான் ஏற்படுகிறது. ஒன்று நஷ்டத்திற்கு ஓடுகிறது அல்லது தனிப்பட்டவர்களுக்குப் பயன்படுகிறது. இந்த மாதிரி நிலைமையை பூராவும் பரிசீலிக்க வேண்டும்.

நிதியமைச்சர் அவர்கள் மூன்றாவது திட்டக் காலத்தில் இதைக் காட்டிலும் விலை ஏறப்போகிறது என்பதைச் சூசகமாகத் தெரிவித்திருக்கிறார்கள். சம்பளத்தைக் கூட்டிக்கொடுத்தால் அந்த அதிகப்படி சம்பளத்தைச் சேமிப்புக்குக் கொடுத்து விட்டால் நலமாக இருக்குமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். எங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் கூட, சட்டசபை மெம்பர்களுடைய சம்பளத்தை அதிகப்படுத்த வேண்டுமென்ற அபிப்பிராயம் இருக்கிறது. எங்களுக்கு 250 ரூபாயைக் கொடுத்து விட்டு 100 ரூபாயை எடுத்துக்கொண்டால் வலையில்லை. விலைவாசியைக் கட்டுப்படுத்தாமல் அதிகப்பணத்தைச் சேமிப்பில் போடவேண்டுமென்று சொல்வது சரியல்ல. பண வீக்கம் இருக்கும் வரையில் கண்டிப்பாக விலைவாசி ஏறத்தான் செய்யும். அதைப்பற்றிப் பல கருத்துக்கள் இருக்கின்றன. விலைவாசி குறைந்தால் குறைகிறதே என்று சில அங்கத்தினர்கள் சம்சாரிகளுக்காக அனுதாபப்படுகிறார்கள். விலைவாசி ஏறிவிட்டால் தொழிலாளர்களுக்குக் கஷ்டமாகிவிடுமே என்று சிலர் கஷ்டப்படுகிறார்கள். ஆனால் விலைவாசி

மட்டும் இறங்குவதாக இல்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைந்த பிறகு விவசாயம் சம்பந்தப்பட்ட மட்டில் தன்னிறைவு ஏற்பட்டு விடும் என்று சொல்கிறார்கள். நிச்சயமாக விலைவாசி குறையத்தான் வேண்டும். முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பிறகு தன்நிறைவு பெற்று விடும் என்று மத்திய அரசாங்கத்தில் சொன்னார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பிறகு தன்நிறைவு பெற்றுவிடும் என்று மத்திய அரசாங்கமும், சென்னை அரசாங்கமும் கூறியது. இப்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு முடிந்த பிறகு தன் நிறைவு பெற்றுவிடும் என்று சொல்கிறார்கள். ஒவ்வொரு முறையும் சொல்வது செயல்படாமல் இருக்கிறது என்று சொன்னால் எங்கோ ஏதோ கோளாறு இருக்கிறது என்றுதான் அர்த்தம். கோடானு கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டும் இப்போது தேசீய வருமானம் 17 சதவிகிதம் என்று குறிப்பிடுகிறார்கள். அரசாங்கம் கொடுக்கும் கணக்கை நான் நம்புவதில்லை. யார் அதைச் சரி பார்க்க முடியும். அரசாங்கக் கணக்கை எப்படித் தயார் பண்ணுகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். உங்கள் கிராமத்தில் எவ்வளவு கோழிகள் இருக்கிறது என்று கேட்டால் அதற்கான கணக்கை முன்சீப் கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர் ஒரு வெள்ளைக் காகிதத்தை எடுத்து 600 கோழிகள், 2,000 முட்டைகள் என்று ஏதோ கணக்குக் கொடுக்கிறார். அதை யார் "செக்" பண்ணப் போவது? (கனம் ஸ்ரீ சி. சுப்பிரமணியம் : 600 கோழிகளுக்கு ஒரு நாளைக்கு இரண்டாயிரம் முட்டைகளா ?) இன்றைய தேசீய வருமானம் 17 சதவிகிதம் என்பது உங்களுக்குப் பெரிய தோல்வி அல்லவா ?

ஏற்கனவே, நீர்ப்பாசனம் சம்பந்தப்பட்ட மட்டில் பரிபூரணமாக கவனம் செலுத்தப்படவில்லை. வட்டார அபிவிருத்தித் திட்டங்களில் நிறைய ஊழல்கள் இருக்கின்றன. பணமும் நிறைய அனுவசியமாக, செலவழிக்கப்படுகிறது. ஒரு வகையில் திருப்திப்படலாம் அரசாங்கத்தில் உள்ளவர்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்து முடிந்த அளவு பல உத்தியோகஸ்தர்களையும் பல சிப்பந்திகளையும் நியமித்திருக்கிறோம். அவர்கள் சௌகரியமாக அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு வேலையும் செய்யாமல் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கும் உத்தியோகஸ்தர்கள் ப்ளாக்கிலே ஏராளமாக இருக்கிறார்கள். 4½ மணிக்குமேல் ஜீப்பை எடுத்துக்கொண்டுபோய், "25 சத வீதம் தொகை கொடுத்தால் நல்லது. ரோடு போடலாம், ஆஸ்பத்திரி கட்டலாம்" என்று கிராமத்திலே சிலரை பார்த்துக் கேட்கிறார்கள். கொடுத்தால் பார்க்கிறார்கள், கொடுக்காவிட்டால் இந்த கிராமத்திற்கு செய்ய முடியாது என்று வந்து விடுகிறார்கள்.

கிராம சேவக்குகளைப் பற்றிச் சொல்லவேண்டுமானால், நான் பழைய குற்றச்சாட்டைத்தான் சொல்லவேண்டும். அவர்கள் பரிபூரணமாக கட்சி வேலையைச் செய்து வருகிறார்கள். அவர்கள் கட்சிப் பிரசாரத்திற்காக இருக்கிறார்களே தவிர, மக்களுடைய நன்மைக்காக இல்லை என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**Sri R. KRISHNASAMI NAIDU :** ஆட்சியினர் நிறைவேற்றும் திட்டங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்ல அவர்கள் கடமைப்பட்டவர்கள்.

**Sri T. L. SASIVARNA THEVAR :** அப்படி அவர்கள் செய்ய வில்லை என்றுதான் நான் சொல்லுகிறேன்.

சபாநாயகர் அவர்களே, இந்த முறையிலே பார்த்தால், சென்ற இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களும் பரிபூரணமாக வெற்றியடையவில்லை என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் பரிபூரணமாக வெற்றி கிடைக்காது என்று தான் செல்வேன்.

நீர்ப்பாசனம் சம்பந்தப்பட்ட மட்டில், பெரும் அணைக்கட்டுத் திட்டங்கள் [illegible] விட்டன. சிறிய நீர்ப்பாசன வேலைகளுக்கு நிறையப் பணம் [illegible] நிறைவேற்றுவதாகத் தோன்றுகிறது. பூராவும் நல்ல முறையில் [illegible] இருக்கும். இன்றைக்கு முடிந்த அளவு சமுதாயத்



திற்கு நேரடியாகச் செய்யக்கூடிய சில காரியங்களை மட்டும் செய்தால்கூட நிறைய பலன் கிடைத்துவிடும். இவ்வளவு பணம் வசூலிக்க வேண்டிய அவசியம் இல்லை. கஷ்டம் இராது. ஒரு கிராமம் சம்பந்தப்பட்ட மட்டில் வசதியான ரோடு, பள்ளிக்கூடம், குடி தண்ணீர் வசதிக்கான கிணறு, அதற்கு மேற்பட்டு அந்தக் கிராமத்தில் இஷ்டப்பட்டால் கடன் வசதிக்கான ஒரு சொஸைட்டி வைக்கலாம். இம்மாதிரி காரியங்களை மட்டும் கவனித்து விடுவோமானால், மற்ற காரியங்களை அளவுக்கு மீறிச் செய்யவேண்டியதில்லை. கோழிப் பண்ணை, ஆட்டுப் பண்ணை, எண்ணெய் சொஸைட்டி என்று இப்படி எக்கச்சக்கமாகச் செலவிடவேண்டிய காரியங்களைச் சுருக்கி, திட்டத்திற்குச் செலவு செய்தால் அனுவசியமான செலவுகளைக் குறைக்க முடியும்.

விவசாயம் சம்பந்தப்பட்ட மட்டில் பிரமாதமான உதவி செய்யப்பட்டிருக்கிறது என்பதாகக் கூறுகிறார்கள். என்ன உதவி செய்கிறார்கள் ? விவசாயிகளுக்குப் பூராவும் கடன் கொடுத்திருக்கிறார்கள். காங்கிரஸ் ஆட்சிக்கு வந்த பிற்பாடு இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களையும் போட்ட பிற்பாடு ஏற்படக்கூடிய நிலைமை என்னவென்றால், மக்களை நிறைய கடன் காரர்களாக்கியிருக்கிறார்கள். இல்லை என்று சொல்ல முடியாது. கிணறு வெட்ட 250 ரூபாய் மான்யம் கொடுக்கப்படுகிறது. அது தவிர, எல்லா வசதியும் கொடுக்கப்படுகிறது. உரத்திற்குக் கடன், நிலத்தைச் சீர்திருத்த கடன் என்று இப்படி கடன் கடன் என்று கொடுத்து விவசாயிகளைக் கடன்காரர்களாக்கியிருக்கிறார்களே தவிர, அவர்களுக்கு ஒன்றும் நல்லது செய்திருப்பதாக ஏற்படவில்லை.

என் தொகுதி சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு வார்த்தை சொல்கிறேன். கீழ் ராமநாதபுரம் பகுதியைப்பற்றி அமைச்சருடைய பிரசங்கத்தில் குறிப்பிட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அங்கே மேலப் பெரியார் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று சென்ற சட்டசபைக் கூட்டத்தில் நீர்ப்பாசன மான்யம் சம்பந்தப்பட்ட விவாதத்தின்போது நான் கூறினேன். அன்றைய தினம் கனம் மராமத்து இலாகா அமைச்சர் கனம் திரு. கக்கன் அவர்கள் பேசும்போது, ரீஜினல் கவுன்சிலில் வைத்துப் பரிசீலனை செய்து, வேண்டிய உதவி செய்வதாகச் சொன்னார்கள். சமீபத்தில் நடந்த ரீஜினல் கவுன்சில் கூட்டத்தில் அந்தத் தீர்மானம் கொண்டுவரப்படவில்லை என்பதை வருத்தத்துடன் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அது புறக்கணிக்கப்பட்டது.

அதே மாதிரி வைகையோடு இணைக்கப்பட்ட ஆறு என்னுடைய தொகுதியில் இருக்கிறது. இருதமா நதி காலப்போக்கில் தூர்ந்து போய் வைகை நதிக்கு இருந்த இணைப்பு தூர்ந்து போய் விட்டது. அதை வெட்டிவிட்டால் மழை பெய்யும் காலத்தில் ஆற்றில் தண்ணீர் வரும். அந்தத் தண்ணீர் வைகையோடு சேர்ந்தால் அந்தப் பிராந்திய மக்களுக்குச் சற்றேறக்குறைய 100, 200 கிராமங்களுக்கு பாசன வசதி கிடைக்கும் என்பதை குறிப்பிட்டிருக்கிறேன். அதுவும் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை என்று வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கிழக்கு ராமநாதபுரம் சம்பந்தப்பட்ட திட்டத்தில் வைகைநதியோடு தண்ணீர் வந்து சேரும் அளவுக்கு அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக வைகைத் தண்ணீர் சேதப்படாமல் மிச்சப்பட்டுவிடும். ஆகவே, இருதமா நதி, மேல பெரியார் திட்டத்தின் மூலம்தான் மேற்கொண்டு நன்மை கிடைக்க வசதி இருக்கிறது. அதற்கு முதல் இடம் கொடுக்கவேண்டுமென்ற வகையில் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன்.

கைத்தொழிலில் மிகப் பிற்போக்கானது எங்களுடைய தொகுதியாகும். அந்தத் தொகுதியிலே நூற்பு ஆலை வைக்கவேண்டுமென்ற அபிப்பிராயத்தை ஆறு மாதங்களுக்கு முன்னால் நம்முடைய கவர்னர் பெருமான் அந்தப் பக்கம் வந்த சந்தர்ப்பத்தில் ஒரு மகஜர் மூலமாகத் தெரிவித்தோம். அதைப்பற்றி கலெக்டரைக் கலந்து அவர்கள் பரிசீலனை செய்தார்கள். சர்க்காரிலிருந்து கிடைத்த பதில்—"ஸ்பிண்டில் ஜாஸ்தி

[Sri T. L. Sasivarna Thevar] [8th September 1960

யாகிவிட்டது, நீங்கள் கேட்டுக்கொண்ட கோரிக்கையின்படி நூற்பு ஆலை
வைக்க இயலாது" என்று இருக்கிறதே தவிர, அதைப் பற்றி வேறு பதில்
கொடுக்கவில்லை.

**THE HON. SRI K. KAMARAJ :** மூன்று ஆலைகள் வரப்போ
கின்றனவே.

**SRI T. L. SASIVARNA THEVAR :** சபையில்கூட, அமைச்சர்
அவர்களுடைய நடவடிக்கை மூலமாகத் தெரிகிறது மூன்று
ஆலைகள் அங்கு வரலாம் என்று. அப்படியானல் ரொம்ப சந்தோஷத்
தோடு வரவேகுத் தயாராக இருக்கிறேன். ஆனல், கூட்டுறவு முறையில்
செய்யவேண்டுமன்ற அபிப்பிராயத்தைக் கூறுகிறார்கள்.

**THE HON. SRI K. KAMARAJ :** தனிப்பட்டவர்களுக்கு அந்த
"ஏரியா"வில் லைசென்ஸ் தருகிறார்கள்.

**SRI T. L. SASIVARNA THEVAR :** பண வசதி இல்லையே.

**THE HON SRI R. VENKATARAMAN :** கனம் அங்கத்தினர்
அவர்களுக்கும் அந்தத் தொகுதி மக்களுக்கும் நான் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். மூன்று ஆலைகளுக்கு அந்தப் பகுதியில்
லைசென்ஸ் கொடுத்தாகி விட்டது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.
தனிப்பட்டவர்களை, செய்யக்கூடியவர்களாகப் பார்த்து, நாங்கள் அங்கு
அனுப்பி வைத்திருக்கிறோம்.

**SRI T. L. SASIVARNA THEVAR :** தனி நபர்கள் வேறு பிராந்தி
யத்தில் செய்யக்கூடியவர்களாகப் பார்த்து அனுப்பி வைத்திருப்
பதாகச் சொல்கிறார்கள். அதை முதல் அமைச்சர் அவர்கள் சொல்ல
வில்லை.

**THE HON. SRI K. KAMARAJ :** நானே சொல்லுகிறேன்.

**SRI. T. L. SASIVARNA THEVAR :** அப்படியென்றால் ஆட்சேபணை
இல்லை. அங்கே எந்த விதத்தில் வருவதாக இருந்தாலும் சரி, மூன்று
ஆலைகள் வருவதாக இருந்தால் நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால், அந்தப்
பிராந்தியம் சம்பந்தப்பட்ட வரையில் ரயில் போக்குவரத்து வசதி இல்லை.
அதற்காக நம்முடைய மாநில அமைச்சர் அவர்கள் சிபார்சு செய்யும்போது,
விருதுநகர்—கீழக்கரை, மானமதுரை—தூத்துக்குடி இவ்விரண்டு ரயில்
பாதைகளைப் போடுவதற்கு சிபார்சு செய்யப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்
கிறது. தவறு செய்யாமல் அவைகள் நிறைவேற்றப்படவேண்டுமென்று
கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

**SRI S. PAKKIRISAMI PILLAI :** கனம் தலைவர் அவர்களே,
மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உண்டான விவரங்களைப்
பற்றி விரிவாக நிதி அமைச்சர் அவர்கள் பேசின பிறகு நானும் பேசு
வதற்கு வாய்ப்பு கிடைத்ததற்காக தலைவர் அவர்களுக்கு என்னுடைய
வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இரண்டொரு விஷயங்
களைப் பற்றி மாத்திரம் குறிப்பாகப் பேசலாம் என்று எண்ணுகிறேன்.

இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குத் தேவையான பணம்
அதிகமான அளவில் இருக்கிறது. முதல், இரண்டாவது ஐந்தாண்டுத்
திட்ட காலத்தில் எவ்வளவு வைத்திருக்கிறார்களோ அதற்கு மேலே, சில
இடங்களில் இரட்டிப்பாக வைத்திருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத்
திட்டம் வெகு அழகாக அமைய வேண்டும். நம் நாடு, நம் ராஜ்யம் வளம்
பெற்று, நல்ல வாழ்வை அடையும்படியான நிலையிலே இருந்தாக
வேண்டும் என்பது எல்லோருடைய கருத்தாகும்.



8th September 1960] [Sri S. Pakkirisami Pillai]

நம்முடைய ராஜ்யத்திலேயே மிகவும் பெருமைப்படக் கூடியதும் மிகப்
பிரசித்தமானதும் நெய்வேலிச் சுரங்கத் திட்டமாகும். நெய்வேலிச்
சுரங்கத் திட்டம் அத்தனை பேர்களும் அவாவுடன் எதிர்பார்க்கும்படியான
நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு
அனுகூலங்களைப் பெற முடியுமோ அதைப் பெறுவதற்கு உண்டான
சலுகைகளை இன்னும் நம் ராஜ்யம் மத்திய அரசாங்கத்தாரிடமிருந்து
பெறவில்லை என்பது என்னுடைய கருத்து.

இன்னொரு இடத்தில் ஒரு நண்பர் சொன்ன மாதிரி, பக்ரா-நங்கல்
அணைத் திட்டத்திற்கு ஒரு இண்டர்நாஷனல் இண்டரஸ்ட், அதாவது சர்வ
தேச அவா உண்டாகி, அந்தப் பெருமையை எல்லோரும் பேசிக்கொண்டிருக்
கும்படியான நிலையிலே அங்கு இருக்கிறது என்று சொன்னால், அதற்கு
ஒப்பான நிலைமையிலே நம்முடைய நெய்வேலித் திட்டம் இருந்துகொண்
டிருக்கிறது.

(Sri K. Sattanatha Karayalar in the Chair.)

நம்முடைய ராஜ்யத்திற்கு உண்டான இந்தப் பெரிய திட்டத்திலே ஏன் 10-00 a.m.
அந்த ஒரு அவாவை மக்கள் மத்தியிலே உண்டாக்கி மத்திய அரசாங்கம்
தன் முழுக் கவனத்தையும் செலுத்தும்படியான நிலையில் வைக்கவில்லை
என்பதை நாம் கொஞ்சம் யோசித்துப் பார்ப்போமானல் நன்றாகத் தெரி
கிறது. நெய்வேலித் திட்டத்திற்கு அடுத்தபடியாக சேலத்தில் இரும்புக்
கனி சுரங்கத் திட்டம். இந்த இரும்புக் கனியும் நிலக்கரியும்
சேர்ந்து நமது நாட்டில் ஒரு சுபிட்சத்தை உண்டாக்கும் என்ற ஒரு ஆசை
நமது மனதிலே இருந்து கொண்டிருக்கிறது. அது கைகூடி ஆகவேண்டும்.
சேலத்தில் இருக்கும்படியான இரும்புக் கனி, நெய்வேலியில் இருக்கும்
படியான நிலக்கரி இத்தனையும் ஒன்றாகப் பிணைத்து நன்றாக வேலை
செய்யவேண்டுமென்று சொன்னால், இந்த இரண்டு இடங்களுக்கும் போதிய
போக்குவரத்து சாதனங்கள் அங்கே இருந்தாகவேண்டும். ஆனல்,
இப்பொழுது இருக்கும்படியான ரோடுகள், நெடுஞ்சாலைகள் இந்த இரண்டு
இடங்களுக்கும் சரியானதாக இல்லவே இல்லை. ஏதோ ஒரு ரயில்
தொடர்பு விருத்தாசலம் வரையில் வந்திருக்கிறது. இதில் அடிக்கடி
சாமான்களைக் கொண்டு போவதற்கும், வருவதற்கும் முடியாது. சாலைகள்
மிகவும் குறுகியவைகளாக இருக்கின்றன. அங்கே நடுவே இருக்கும்
பாலங்களெல்லாம் மிகவும் குறுகியவைகளாக இருக்கின்றன. தூர
திருஷ்டி கொண்டு இத்தனை ரோடுகளையும் செப்பனிட்டு, பாலங்களையும்
உடனடியாக விஸ்தரிக்கவேண்டியது அரசாங்கத்தினுடைய முதல் கடமை
யாக இருக்கவேண்டும். அந்த ஒரு நிலையிலே எப்பொழுது வேலை
செய்வார்கள் ? அங்கங்கே அங்கத்தினர்களுடைய அபிலாஷைகளில் இருக்
கும்படியான வேறு திட்டங்களைச் செய்துகொண்டு போனல் மாத்திரம்
போதாது. நெடுஞ்சாலைகளைச் செப்பனிடுவதில் மிகவும் கண்ணும் கருத்து
மாக இருந்து வேலை செய்யவேண்டிய நிலைமையிலே அரசாங்கம் இருந்
கொண்டிருக்கிறது. இப்பொழுது இருக்கும்படியான நெடுஞ்சாலைகளைப்
பார்த்தோமானல் அவைகள் ரொம்பவும் குறுகிய சாலைகள். அதனால்
லாரி போக்குவரத்து கூட தாராளமாகப் போக முடியவில்லை. நிறைய
விபத்துக்கள் ஏற்பட்டுக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். அந்த
சாலைகளை அகலப்படுத்துவதற்கு முடியாது. காரணம், சாலை மரங்கள்
சாலை பக்கத்திலே போட்டு
நடப்பட்டிருக்கின்றன. ஆகவே, இன்னொரு சாலை பக்கத்திலே போட்டு
அகலப்படுத்த வேண்டிய நிலையிலே இப்பொழுது நமது ராஜ்ய சர்க்காரின்
பொறுப்பு இருந்துகொண்டிருக்கிறது. நாம் கொஞ்சம் வடக்கே போய்ப்
பார்த்தோமானல், கல்கத்தாவிலிருந்து பஞ்சாபுக்கு ரயில் மார்க்கமாகப்
போகும்பொழுது 4 நிமிஷங்களுக்கு ஒரு கூட்ஸ் வண்டி போய்க்கொண்
டிருக்கிறது. அந்த மாதிரி நிலை நமது ராஜ்யத்தில் இல்லை.
திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னது போல் நமது ராஜ்யத்தில் குட்ஸ்
வண்டி மணிக்கு 8 மைல் வேகத்தில் போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே,
நமக்குப் போக்குவரத்து சாதனங்கள் சரியானதாக இல்லை. சாலைகள் ஒரு
பக்கம் சரியானதாக இல்லை. பாலங்கள் சரியானதாக இல்லை. போதுமான
அளவுக்கு சாலைகளெல்லாம் செப்பனிடப்படவில்லை. உடனே இந்தச்
சாலைகளெல்லாம் செப்பனிடப்பட வேண்டும். நிலக்கரியையும் இரும்புக்

[Sri S. Pakkirisami Pillai] [8th September 1960

கனியையும் ஒன்ருகச் சேர்த்து, பிணைத்து, தரப்படுத்துதவதற்கான உண்மை
யான திட்டத்தை நிறைவேற்றும் நாம் உடனடியாக சேலத்தையும் நெய்
வேலியையும் ஒன்ருகச் சேர்த்து அதற்குண்டான ரோடுகளை முதலிலேயே
அமைக்கும்படியான நிலையிலே இருந்தாகவேண்டும். மொத்தத்தில் நாம்
பார்க்கும்பொழுது வாணிபம் பெருகவேண்டுமென்று சொன்னல், சாலைகள்
சரியாக அமைந்திருக்க வேண்டும்.

நண்பர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் ' சின்னச் சின்ன ஊர்களிலே
நெருக்கடியான ரோடுகளில் பஸ்கள் போகும்படியாக இருப்பதால்,
மக்கள் கஷ்டப்படும்படியான நிலையில் வண்டிகளில் போய்க்கொண்டிக்
கிருர்கள், அந்த ரோடுகளெல்லாம் எப்பொழுது சீர்திருத்தப்படுமோ,
என்னவோ ' என்ற சந்தேகக் குறிக்கோள் கொண்டு பேசினர்கள். ஆகவே,
அம்மாதிரியான நிலைமையைப் போக்குவதற்கு முதலடியாக அரசாங்கம்
முன்வரவேண்டும்.

இது தவிர, நம் சென்னை நகரத்திலும்கூட ரோடுகளை சர்க்கார் பஸ்கள்
உபயோகப்படுத்திக் கொண்டிருந்தும், ரோடுகளுக்கு உண்டான செலவை
கார்பொரேஷனே செலவு பண்ணும்படியான நிலையிலே விட்டு வைத்திருக்
கிருர்கள். அதன் நிலைமை இப்பொழுது என்ன என்பதையும் நாம்
பார்க்கிருேம். ஏதோ ஒன்றிரண்டு முக்கியமான ரோடுகள் நல்ல நிலைமை
யிலே இருந்தாலும், அது மாத்திரம் போதாது. எல்லா ரோடுகளும், பஸ்
போகிற ரோடுகளெல்லாம் நல்ல முறையில் இருக்கும்படியான நிலைமைக்கு
அரசாங்கத்தார் முன்வந்து பண உதவி செய்து கொடுத்து, அந்த ரோடு
களெல்லாம் செப்பனிடப்படவேண்டும். கார்பொரேஷன் அதிகாரிகள்
அதைச் செய்வதற்குத் தயாராக இருக்கிருர்கள். ஆனல் பணம்
தேவை. பணத்தை அரசாங்கம் அவர்களுக்குக் கொடுக்காமல் மடக்கி
வைத்து விட்டு, மற்ற ஜில்லாக்களுக்கு ஒரு கொள்கை, நகரத்திற்கு ஒரு
கொள்கை என்ற நிலையிலே இருக்குமானல், நகரத்திலே அதனுடைய
அந்தஸ்திற்கு ஏற்றவாறு ரோடுகளை வைத்திருக்கும்படியான நிலை இல்லை.
பெரிய ரோடுகளே இப்படி என்று சொன்னல், சின்ன ரோடுகளின் கதி
என்ன ஆகும் என்பதை நாமே உணர்ந்து கொள்ளலாம். மிகவும்
கேவலமான நிலைமையிலே சென்னையில் இருக்கும்படியான ரோடுகள்
இப்பொழுது இருந்துகொண்டிருக்கின்றன. இவைகளைச் சரிப்படுத்துவதற்கு
அரசாங்கத்தார் உடனடியாக ஒரு குழுவை அமைத்து விசாரணை செய்து,
அதற்குண்டான வேலைகளைச் செய்யவேண்டும் என்று நான் இந்தச்
சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன்.

நண்பர் நிதி மந்திரி அவர்கள், அவர்களுடைய பிரசங்கத்தில் பொரு
ளாதாரத் தத்துவத்தைப் பற்றி வெகு அழகாக விவரித்துச் சொன்னர்கள்.
தொழிலாளர்கள் தங்களுடைய சம்பளத்திலிருந்து சேமிப்பு செய்ய
வேண்டும், வீண் விரயம் செய்யக்கூடாது. வீண் விரயம் செய்தால் உற்பத்திப்
பெருக்கம் எற்படாது, வீண் விரயம் பண்ணும்படியான நிலையிலே
தொழிலாளர்கள் இருப்பார்களேயானல், அது நாட்டிற்கு நன்மை பயக்
காது, நாட்டிற்கு அது ஒரு நல்ல பணியாக முடியாது என்ற தத்துவத்தில்
பேசினர்கள். இந்தப் பொருளாதாரப் பிரசங்கம் முதலாளித்துவ பொரு
ளாதார நிலைமையிலேயே செய்யப்பட்டிருப்பதை நாம் பார்த்தோம்.
ஏதோ இம்மாதிரியான பிரசங்கங்களெல்லாம் ஏழைகளுக்கும்,
தொழிலாளிகளுக்கும்தான் பிரசங்கங்களாக இருந்துகொண்டிருக்
கின்றன. ஆனல், சுரண்டி, கொழுத்து, சுகபோகங்களை உண்டு வாழும்
படியான முதலாளிகளுக்கு அம்மாதிரிப் பிரசங்கங்கள் கிடைக்கவில்லை.
அம்மாதிரியான பிரசங்கம் செய்வதற்கு பெரிய அதிகாரிகள் யாரும் முன்
வருவது கிடையாது. ஏன் இதைச் சொல்லுகிறேன் என்று சொன்னல்,
நாம் இப்பொழுது கணக்கு எடுத்துப் பார்த்தால் தொழிலாளர்களெல்லாம்
கடன் சுமையிலே இருந்து கொண்டிருக்கிருர்கள். வீண் விரயம் செய்
கிருர்கள் என்று நான் சொல்ல முடியாது. ஏதோ ஒரு சிறிய பகுதி
அந்த மாதிரி நிலையிலே இருக்கலாம். ஆனல் பெரிய பகுதி தங்களுடைய
குடும்பத்தை; குமாரர்களையும், குமாரத்திகளையும் வைத்துக்கொண்டு
சுற்றத்தாரையும் வைத்துக்கொண்டு காப்பாற்றும்படியான நிலையில்



8th September 1960] [Sri S. Pakkirisami Pillai]

தான் இருக்கிருர்கள். தொழிலாளர்கள் பாடுபட்டு உழைக்கும் கூட்டத்
தார்கள். அந்த நிலையிலே பார்க்கும்பொழுது அவர்களுக்குக் கடன்
இருந்துகொண்டுதான் இருக்கிறது. அந்தக் கடன் சுமையை நீக்கு
வதற்கு அரசாங்கம் என்ன வழி செய்திருக்கிருர்கள் என்று பார்த்தால்,
ஒன்றையும் காணும். தொழிலாளர்களுக்கு உண்மையான நலன்கள்
ஏதாவது இந்தத் திட்டத்தில் இருக்கிறதா என்று பார்த்தால், அது
மறைவாகத்தான் இருக்கிறது. ஏதோ தொழிலாளர்களுக்கு உண்டான
திட்டங்களெல்லாம் இந்தியா கவர்ன்மெண்டினுடையது என்று சொல்ல
முடியாது. ராஜ்ய சர்க்காருடைய அங்கீகாரத்திலே அவர்களுடைய ஆதர
விலே பல திட்டங்களைத் தீட்டி தொழிலாளர்களுக்கு நல்ல பணி செய்வதற்கு
இடம் இருக்கிறது. ஏதோ முதல் இரண்டு திட்டங்களில் இல்லை என்று
சொன்னலும், இந்த மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் இம்மாதிரி
திட்டம் ஒன்றும் இல்லை, எதுவும் காணும் என்பதைப் பற்றி நான் இந்த
சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம். இப்பொழுது கல்வி விஷயத்திலே ஏதோ ரூ. 100,
105 சம்பளம் வாங்கினலும், உடனே எந்த ஜாதிக்காரராக இருந்தாலும்,
தாழ்த்தப்பட்ட சமூகத்தை, பிற்போக்கு சமூகத்தைச் சேர்ந்தவர்களாக
இருந்தாலும், சம்பளத்தைக் கட்டி ஆகவேண்டும். அதை மாற்றி
அமைக்கவேண்டுமென்று சொன்னபோது, அதற்கு அரசாங்கம் ஒத்துக்
கொள்ளவில்லை, மறுத்துவிட்டார்கள். பிள்ளைகள் படிப்பதற்குத்தான்
அப்படி இருக்கிறது. இப்போழுது 100, 105 அல்லது 110 ரூபாய் இருந்
தவர்களுக்குத்தான் அப்படிப்பட்ட சலுகைகள் இருக்கின்றன. அவர்
களுடைய பிள்ளைகள்தான் படிக்க முடியும் என்று இருக்கிறது.
இந்த நிலைமையில் பெண்கள் படிக்க முன் வருவதாகவே இல்லை. பெண்கள்
உயர்நிலைப் பள்ளிகளில் படிக்க வருவதாகவே இல்லை. பெற்ருேர்
களுக்கு பணம் இல்லாத காரணத்தால் பெண்கள் அப்படிப் படிக்க முடிய
வில்லை. 100 ரூபாய் என்று இல்லாமல் 150 அல்லது 200 ரூபாய் என்று
வைத்தால் அநேகம் பிள்ளைகள் படிக்க முன்வருவார்கள். முக்கியமாக
பெண்கள் படிக்க முன்வருவார்கள். பிள்ளைகளைவிட பெண்களுடைய
படிப்புக்குத்தான் முக்கியமாகக் கவனம் செலுத்த வேண்டியது அவசிய
மாக இருக்கிறது. பெண்களுக்கு அதிகப்படியாகச் சலுகை காண்பிக்க
அரசாங்கம் முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய
வார்த்தையை இத்துடன் முடித்து கொள்ளுகிறேன்.

* **Sri C. N. ANNADURAI**: சட்ட மன்றத் தலைவர் அவர்களே,
மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி இந்த மன்றத்தில் பல
ருடைய கருத்துக்களைக் கேட்பதற்கு வாய்ப்புக் கிடைத்த பிறகு திராவிட
முன்னேற்றக் கழக சார்பில் என்னுடைய கருத்தைத் தெரிவிக்க வாய்ப்புக்
கிடைத்ததற்கு மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மூன்ருவது ஐந்தாண்டு
திட்டத்தைப் பற்றிய கருத்தைத் தெரிவிக்கிற நேரத்தில் கடல் நீர் கரிக்
கிறது என்று சொன்னவுடன் உங்களுக்குக் கடல் என்ருல் பயமா? கடல்
பிரயாணம் என்ருலே பயமா? கடற்கரையில் நின்றுகொண்டு பேசுகிருயே,
உனக்குக் கப்பல் என்ருலே பயமா? கப்பல் கடலில் நிற்கக்கூடாதா?
உப்பு இல்லாமல் மனிதன் வாழ முடியுமா? கடல்நீர் கரிக்கிறது
என்கிருயே, உப்பு பிடிக்கவில்லையா? கடலும் பிடிக்கவில்லையா? என்று
கேட்பது போல் மூன்ருவது ஐந்தாண்டு திட்டத்தில் நாங்கள் காணக்
கூடிய சில குறைபாடுகளை எடுத்துச் சொல்லக் கூடிய நேரத்தில் உங்களுக்குத்
திட்டம் என்ருலே பிடிக்கவில்லையா, திட்டங்களை நிறைவேற்றுவதில் உங்க
ளுக்குத் திருப்தி இல்லையா? திட்டம் வெற்றி பெறுவது பிடிக்கவில்லையா?
என்ற வகையில் ஆளும் கட்சியில் உள்ளவர்கள் அமைச்சர்கள் உள்பட
எண்ணிக்கொள்வது அவ்வளவு பொருத்தமானது அல்ல என்று நான் கருது
கிறேன். ஐந்தாண்டுத் திட்டங்கள் உண்மையிலேயே அலட்சியப்படுத்தத்தக்
கவை என்று நாங்கள் கருதியிருப்போமானல் இந்த ஐந்தாண்டுத் திட்டங்
கள் எந்த முறையில் வகுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றி அக்கறை
செலுத்தி இருக்கமாட்டோம். திட்டமிட்டபடி வாழ்க்கை நடத்தப்பட
வேண்டும் என்பது 19-வது நூற்றாண்டு முடிந்து 20-வது நூற்றாண்டு
ஆரம்பமானவுடன் நாகரிக அரசுகள் ஒவ்வொன்றும் மேற்கொண்டிருக்கும்

கொள்கையாகும், நடைமுறையாகும். எந்த விதத்திலும் எந்த நாட்டிலும்
அவர்கள் திட்டமிட்டபடி காரியத்தைச் செய்வதில் வரவேற்கத்தக்க வகையில்
கொள்கை வெற்றி பெற்று வந்திருக்கிறதே தவிர திட்டமிடாமல் வாழ்க்
கையை நடத்த வேண்டும் என்று எடுத்துச் சொல்லுகிற கொள்கை பதினெட்
டாவது நூற்றாண்டில் மறுக்கப்பட்டு, பத்தொன்பதாவது நூற்றாண்டில்
அது குற்றுயிராக இருந்து, இருபதாவது நூற்றாண்டில் அது அறவே
மடிந்து விட்டது. ஆகவே திட்டம் அல்லது கொள்கையைப் பற்றியோ
திட்டமிட்டபடி வாழ்க்கை நடத்தப்படவேண்டும், அது தனிப்பட்டவர்க
ளுடைய வாழ்க்கையானாலும் சரி, சமுதாய வாழ்க்கையானாலும்
சரி, அல்லது அரசியல் வாழ்க்கையானாலும் சரி, அது திட்டமிட்டபடி
நடத்தப்படவேண்டும் என்பதில் எங்களில் யாருக்கும் ஐயப்பாடு இல்லை
ஆனால் இப்பொழுது போடப்படும் திட்டம் யார் சார்பில் போடப்
படுகிறது என்பதும், யாரால் நடத்தப்பட்டு வருகிறது என்பதும், அதில்
என்ன பலன்களை எதிர் பார்த்தார்கள் என்பதும், எதிர் பார்த்த பலன்
களில் ஏதாவது குறைவு இருக்கிறதா, குறை இருந்தால் அதற்கு யார்
பொறுப்பு என்பதும், அந்தக் குறையைப் பூர்த்தி செய்வது மறுபடியும்
அவசியமா என்பதும்தான் இதில் எண்ணிப் பார்க்க வேண்டிய விஷய
மாகும். நம்முடைய கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த திட்டத்தைப்
பற்றி விளக்கும் நேரத்தில் இதை ஒரு தனித்திட்டமாகப் பார்ப்பதற்கு இல்லை,
பல ஐந்தாண்டுத் திட்டங்களில் இது இடையிலேயுள்ள திட்டம் என்பது
மட்டும் அல்ல, இனி வர இருக்கும் திட்டங்கள் அல்லது இதற்கு முன்னால்
போடப்பட்ட திட்டங்கள் அவைகளுக்கு இடையில் இருக்கும் ஒரு வளையம்
என்றும் குறிப்பிட்டார். அந்தச் சங்கிலித் தொடர் முதல் ஐந்தாண்டுத்
திட்டத்திலிருந்து தொடங்கி ஆளும் கட்சியிலுள்ள பல தலைவர்களுடைய
கருத்தின்படி ஏறத்தாழ இன்னும் ஐந்து அல்லது ஆறு ஐந்தாண்டுத்
திட்டங்கள் வரையில் 25 அல்லது 30 ஆண்டு காலத்திற்கு தொடர்ந்து
செல்லும் என்று தெரிகிறது. அவ்விதம் பணியாற்றினால்தான் இந்
நாட்டினுடைய பொருளாதார நிலையைச் செம்மைப்படுத்த முடியும்
என்று அவர் கூறுகிறார். அந்தக் கருத்திலும் அதற்காக அவர்கள்
முயற்சி செய்வதிலும் அவர்கள் ஆர்வம் காட்டுவதிலும் யாரும் குறை
படுவதும் இல்லை, அது தவறு என்று யாரும் வாதாடவும் மாட்டார்
கள். ஆனால் பொருளாதாரத் துறையில், அரசியல் துறையில் இந்தத்
திட்டத்தைத் தீட்டும் நேரத்தில் முதல் இரண்டு திட்டங்கள் தீட்டப்பட்டு
நிறைவேற்றப்பட்டு அதில் கிடைத்த பலன்கள் என்ன என்பதைப் பார்த்து
மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வகுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது
என்னுடைய தாழ்மையான கருத்தாகும். அந்த முறையில்தான் வகுத்
திருக்கிறோம் என்று குறிப்பிட்டிருப்பதை நான் மறந்து விடவில்லை.
ஆனால் முதல் திட்டமானாலும் அதற்குப் பிறகுள்ள திட்டமானாலும் பொருள்
உற்பத்திக்காக மட்டும் அல்ல, செல்வம் சேகரிக்கப்படவேண்டும் என்பதற்காக
மட்டுமல்ல, சேகரிக்கப்படும் செல்வத்தின் மூலம் வாழ்க்கைத்தரம்
உயர்ந்து அந்த வாழ்க்கைத் தரம் சிலருக்கு மட்டும் உயர்ந்து விடாமல்
பரவலாக சமுதாயத்தினுடைய தரத்தையே உயர்த்த வேண்டுமென்ற
பரந்த நோக்கத்தோடு தான் திட்டங்கள் வகுக்கப்பட்டன. அந்தத் திட்டங்
களைப்பற்றிய அறிவிப்புகளைப் படிக்கும் நேரத்தில் உண்மையிலேயே நேற்று
முன்தினம் இந்தியத் துணைக் கண்டத்தின் பிரதம அமைச்சர் சொன்னது
போல் கனவு உலகத்திற்கு நாம் சென்று கொண்டிருக்கக்கூடும். அப்படிப்
பட்ட நல்ல இன்பகரமான சூழ்நிலைகள் அதைப்படிக்கும் நேரத்தில் ஏற்படு
கின்றன. எல்லா மக்களுக்கும் நிலம், எல்லா மக்களுக்கும் தொழில்,
எல்லா மக்களுக்கும் இருப்பிடம், எல்லா மக்களுக்கும் வயிறாரச் சோறு,
நோய்தீர மருந்து, அறிவார்க் கல்வி, இப்படிப்பட்ட சிறந்த திட்டங்களை நாம்
வைத்திருக்கிறோம் என்று அறிக்கையில் குறிப்பிடுவதை படிக்கும் நேரத்தில்
உண்மையிலேயே கனவு உலகத்திற்குத் தூக்கிச் செல்லப்படுகிறோம். அப்படிப்
பட்ட இன்ப நுகர்ச்சிகள் வாக்களிக்கப்படுகின்றன. அப்படி வாக்களிக்கப்
பட்ட வகையில் முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுப்
பலன் கிடைத்ததா என்றால் கொஞ்சம் பெரிய விஷயத்தில் அதிகமான
[illegible] கணிக்கலைக் காட்டுகிறவர்கள் "ஆம்" என்று கவலைப்படாமல்தான்
[illegible] ஆனால் இன்றையதினம் கவனித்தால் ஒரு அடக்க உணர்ச்சி
[illegible] தெரிகிறது. உண்மைதானவே வெளிப்பட்டு விடும் என்ற





அச்சம் ஏற்பட்டிருக்கிறது. சிலபல துறைகளில் எதிர்பார்த்த பலன் கிடைக்க
வில்லை, கிடைத்த பலனும் சமுதாயத்துக்குப் பரவலாகச் சேராமல் எங்கோ
போய்ச் சேர்ந்துவிட்டது; எது எங்கே போய் சேர்ந்தது என்பதைக் கண்டு
பிடிக்கக் கூடிய வேலையில் இப்போது இருக்கிறோம், அதற்கு நிபுணர்
குழுவை அமைத்திருக்கிறோம் என்று பேசப்படுகிறது. அதைக் கண்டு
பிடிப்பது நல்லது என்று அவர்கள் இன்றைய தினம் ஒரு முடிவுக்கு வந்திருக்
கிறார்கள்.

இதிலிருந்து முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் எதிர்பார்த்த
பலன் கிடைக்கவில்லை என்பதும், கிடைத்த பலனும் சமுதாயத்துக்குப்
பரவலாகப் போய்ச்சேராமல் ஒரு சிலரிடத்தில் குவிந்து விட்டது என்பதும்
தெரிகிறது. இதை மனதில் வைத்திருப்பார்களானால் மூன்றாவது ஐந்தாண்
டுத் திட்டத்தைத் தீட்டும் நேரத்தில் பலன் குறைந்ததற்கு என்ன கார
ணம் என்பதைப் பார்த்து அவைகளை நீக்கிவிட்டு, கிடைத்தபலன் சமுதாயத்
துக்குப் போய்ச் சேராமல் ஒரு சிலரிடத்தில் மட்டும் குவிந்ததற்குக் கார
ணம் என்ன என்பதை ஆராய்ந்து பார்த்து அந்த ஒரு சிலரிடத்தில்
அந்தப் பலன் குவியாமல் இருப்பதற்கு ஏற்ப முறைகளை வகுக்கவேண்டும்
அப்படி வகுத்து இருக்கிறார்களா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை.
ஏன் நிச்சயமாக இல்லை என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லுகிறேன்
என்றால் இதைவிட அழுத்தம் திருத்தமாக கனம் நிதி அமைச்சர் அவர்கள்
சொன்னார், "தொழில்கள் வளர வேண்டும் என்பதுதான் என்னுடைய
நோக்கமே தவிர அது தனியார் துறையானாலும் சரி, பொதுத் துறையிலி
ருந்தாலும் சரி, எந்தத் துறையில் வளருகிறதாக இருந்தாலும் சரி, அதைப்
பற்றி நான் கவலைப்படமாட்டேன், எனக்குக் குறிப்பாகத் தொழில் வளர
வேண்டும், உற்பத்தி பெருகவேண்டும், பொருள் கிடைக்க வேண்டும் என்பது
தான் என்னுடைய நோக்கமே தவிர அதை யார் நடத்துகிறார்கள், அது
தனியார்துறையிலா அல்லது பொதுத்துறையிலா என்பதைப்பற்றி நான்
கவனிப்பதே இல்லை" என்று அவர் மிகவும் அழுத்தம் திருத்தமாகச்
சொன்னார். அவருடைய அழுத்தம் திருத்தமான கருத்துக்குக் காரணம்
அவர் சார்ந்திருக்கும் கட்சியினர் நடத்தும் அரசிலே இதைப்பற்றி ஏற்
கெனவே நிறைவேற்றப்பட்டிருக்கும் இண்டஸ்ட்ரியல் பாலிஸி. அந்தத் தீர்மா
னத்தை எண்ணிக்கொண்டு தனியார் துறை, பொதுத்துறை என்று பிரித்துப்
பார்க்கப் போவதில்லை என்று அமைச்சர் அழுத்ததிருத்தமாகச் சொன்னார்.
நான் அதைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். தனியார்துறை, பொதுத்
துறை என்பதைப்பற்றி உங்களுக்குப் பாகுபாடு இல்லாமல், எப்படி
இருந்தாலும் தொழில் வளர்ந்தால் போதும் என்கிற எண்ணம் பெருந்தன்
மையின் பாற்பட்டதாக இருந்தாலும்—அந்த முறையைக் கையாண்டதால்
தான்—அந்த முறையைக் கையாளுவதால்தான் முதல் இரண்டு ஐந்
தாண்டுத் திட்டங்களிலும் கிடைத்த பலன், கிடைத்த தேசிய வருமானம்
தனிப்பட்டவர்களுடைய கையிலே போய்ச் சேர்ந்து கொண்டது ஏழை
எளியவர்கள் வாழ்கின்ற சமுதாயத்திற்குப் பரவலாகப் போய்ச் சேரவில்லை.
அது தெரிந்திருந்தும் ஏன் மீண்டும் அந்தத் தவற்றைச் செய்ய
வேண்டும்? நிச்சயமாக இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத்
துருவித் துருவிப் பார்த்தும் தனியார் துறை, பொதுத் துறை ஆகிய இரண்
டையும் அலசிப் பார்த்தும் என்ன தெரிகிறது? பொதுத் துறை வளர்ச்சி
அடையாது தனியார் துறை அதிகப்பட அதிகப்பட்ட அதன்பயன் சமு
தாயத்திற்குப் போய்ச்சேராது என்று பொருளாதார நிபுணர்கள் மட்டும்
அல்ல—இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களினால் நமக்குக் கிடைத்த அனு
பவம்கூட உணர்த்துகிறது. உணர்த்தியும்கூட தனியார் துறை பற்றிக் காட்
டப்பட்டிருக்கிற அக்கறை பொதுத் துறைக்குச் செலுத்தப்படவில்லை என்
றால், "நீங்கள் தெரிந்தும் தவறு செய்கிறீர்கள், தெரிந்தும் மக்களுக்குத்
துரோகம் செய்கிறீர்கள், தெரிந்தும் சமதர்மத் திட்டத்தைத் தலைக்கீழாக
மாற்றி சமதர்மத் தத்துவத்தையே தகர்த்தெறிகிறீர்கள்" என்கிற குற்றச்
சாட்டில் இருந்து எப்படித் தப்பப் போகிறீர்கள்?

ஆகையால் தான் முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களைப் பொருத்த
வரையிலும் நீங்கள் அனுசரித்த கொள்கை திட்டங்களின் பலனைப் பரவலாக

சமுதாயத்திற்குப் போய்ச் சேரவிடாமல் தடுத்துவிட்டது என்கிற காரணத் தினால் நீங்கள் அந்தக் கொள்கை அடிப்படையிலேயே இன்றையதினம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தையும் வகுப்பதன் காரணமாக—போடு கிற திட்டங்களினால் பலன் கிடைக்கிறது என்றாலும்கூட—அது குறுகிய அளவுக்குக் கிடைக்கிற பலனாக இருந்தாலும்—பெருகிய அளவில் கிடைக் கிற பலனாக இருந்தாலும்—சமுதாயத்திற்குப் போய்ச் சேராது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இதை விளக்கிப் பேசுகின்ற நேரத்தில் மிக அருமையான கருத்தை எடுத்துச்சொன்னார்கள். மிக அருமையான கருத்து என்பது மட்டும் அல்ல; மிகப் புதுமையான கருத்தும் கூட; மிகப் புதுமையான கருத்து என்பது மட்டும் அல்ல; அவர்கள் கட்சியே அதை ஏற்றுக்கொண்டதா இல்லையா என்பதைக்கூட எண்ணிப்பார்க்காமல் மிகத் துணிச்சலாகச் சொன்ன கருத்து. அந்தக் கருத்து என்னவென்றால்; "பொருள் உற்பத்தி பெருகப் பெருக, தொழில் வளர வளர அதில் கிடைக்கக் கூடிய லாபம், தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய உரிய பங்கு அவர்களிடத்தில் போய்ச் சேர்ந்தாலொழிய தொழி லாளர்களுக்கு உள்ளுணர்ச்சி ஏற்படாது, உற்சாகம் ஏற்படாது. ஆகை யால் உற்பத்தி பெருகப் பெருக, லாபம் வளர வளர தொழிலாளர்களுக்கு அதன் பங்கு போய்ச் சேரவேண்டும். ஆனால் அந்தப் பணத்தை அவர்கள் எப்படிச் செலவழிக்கிறார்கள் என்பதைக் கவனிக்கலாம். அவர்கள் ஆடம் பரத்தில் செலவிட்டால் அதைத் தடுக்கலாம். வாழ்க்கைத் தரத்தை மிக அதிகமாகப் பெருக்கிக்கொள்ள ஆரம்பித்தால்—சீராக ஒரு நிலையில் இருக் கும்படி செய்து—அவர்களிடத்தில் மிஞ்சுகிற பணத்தைச் சிறு சேமிப்புத் திட்டமாகச் சேகரித்து அப்பணத்தைத் திட்டங்களின் முதலீட்டுக்குப் பயன் படுத்தலாம்" என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இதே சட்டமன்றத்தில்—சென்ற ஆண்டு என்று கருதுகிறேன்—உற்பத்தி பெருகவேண்டுமானால் தொழிலாளர்களுடைய கூலி இனி உயரவேகூடாது, அவர்களுடைய கூலி கட்டுப்படுத்தப்படவேண்டும் என்று பேசிய உறுப்பினர் கள் இதைக்கேட்டு ஒரு பெரிய அதிர்ச்சிக்கு உள்ளாகியிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். உற்பத்தி அதிகமாகவேண்டும், அதிகமாகவேண்டும் என்று பேசப்படுகிற நேரத்தில் உற்பத்தியைப் பெருக்காமல் இருக்கிற பெரும் குற்றம் தொழிலாளர்களையே சார்ந்தது, தொழிலாளர்கள் தங்கள் கூலியை உயர்த்த வேண்டும், உயர்த்தவேண்டும் என்று கிளர்ச்சி செய்துகொண்டே போவதனால் உற்பத்தியைப் பெருக்கவேண்டும்; அதிக மூலதனமிட்டு அதிகப் படுத்தவேண்டும் என்கிற அக்கறை முதலாளிமார்களுக்கு ஏற்படாமல் போகிறது என்று இந்தச் சட்டமன்றத்தில் எடுத்துப் பேசியவர்களுடைய கருத்துக்களை எல்லாம் தகர்த்து எறிகின்ற முறையில் நமது மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் இன்றைய தினம் தொழில் வளர வளர, லாபம் பெருகப் பெருக தொழிலாளர்களுக்கு அதன் பங்கு போய்ச் சேரவேண்டும் என்று துணிச்சலோடு சொன்னார்கள் என்றால் உண்மையில் அந்தக் கருத்து வரவேற்கத் தக்கதாகும். தேம்ஸ் நதிக் கரையில் உலவுவதற்கு முன்னால் கூவம் நதிக்கரையில் இருக்கிற கொள்கையைக் கைவிட்டு விட்டதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். அவர்களுடைய லண்டன் பயணத்தில் அவர்கள் பார்க்கவேண்டிய பல காட்சிகளோடு கூட—இரண்டு மூன்று நூற்றாண்டுகளாக அந்நாட்டுப் பொருளாதார நிபுணர்கள், அரசியல் தத்துவ அறிஞர்கள் ஏற்படுத்தி வைத்த இலட்சிய விளக்க இடங்களுக்குச் சென்று இங்கிலாந்து நாட்டில் தொழில் புரட்சி ஏற்பட்ட நேரத்தில் தனிப்பட்ட முதலாளிகள் அடித்துக்கொண்டிருந்த கொள்ளை லாபம் எவ் வாறு கட்டுப்படுத்தப்பட்டது என்பதையும் அறிந்துகொண்டு வருவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. ஆனால் அரசாங்கச் சார்பில் செல்பவர் களுக்கு அந்தச் சந்தர்ப்பம் எளிதில் கிடைப்பது இல்லை. ஆனாலும் அந்தச் சந்தர்ப்பத்தை நிதி அமைச்சர் அவர்கள் ஏற்படுத்திக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். (கனம் ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம்: ஏற்படுத்தப்பட்டிருக்கிறது) ஆகையால் அவர்கள் லண்டன் போவதற்கு முன்னால் நல்லதொரு தத்து [illegible] இங்கே சொல்லிவிட்டுப் போவதற்காக நான் மகிழ்ச்சி அடை [illegible] மேல்நாடுகளில் நல்லவிதமாகச் சுற்றுப்பிரயாணம் செய்து, காண





வேண்டிய இடங்களையெல்லாம் கண்டு, பெறவேண்டிய அனுபவங்களை எல்லாம் பெற்று, பெற்றதை ஒன்றுகூட ஒளிக்காமல் இந்த இடத்தில் யெடுத்துச் சொல்லி, நல்லவற்றையெல்லாம் இங்கும் நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, லண்டன் பயணம் வெற்றிகரமாகவேண்டும் என்ற என் நல்லெண்ணத்தையும், வாழ்த்தையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழிலாளர்களுக்குரிய பங்கை அதிகப்படுத்த, அந்தப் பங்கை அவர்கள் வீணாக்கவிடாமல், விரயமாக்க விடாமல் மூலதனத்திற்கே திரும்பப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்ற கருத்தை இதற்கு முன்னால் இத் திட்டத்துதைப்பற்றிப் பேசியவர்கள் எல்லாம் எங்காவது எடுத்துச் சொல்லியிருக்கிறார்களா, இல்லையா என்று நேற்றும், முன்தினமும் எல்லா ஏடுகளையும் துருவித் துருவிப் பார்த்தேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட விவாதத்தின் போது ஒரே ஒரு பாராளு மன்ற உறுப்பினர் தெரிவித்த கருத்து இதற்கு ஒத்ததாக இருந்தது. லாபம் பெருகப் பெருக தொழிலாளர்களுடைய கூலியை உயர்த்தி, வேண்டுமானால் அந்த உயர்வுக் கூலியை அவர்கள் விரயமாக்கிவிடாமல், விலைவாசியைக் கட்டுப்படுத்தி, அப் பணத்தை நீங்கள் புதுத் தொழில்களுக்கு எடுத்துக்கொள்ளுங்கள் என்று அப்போது நிதி அமைச்சராக இருந்த திரு. தேஷ்முக் அவர்களை ஒரு உறுப்பினர் கேட்ட நேரத் தில், "இது நல்ல யோசனைதான். ஆனால் செல்வம் சமுதாயத்தில் பரவலாகப் போய்ச் சேர்ந்துவிட்டால் அதைத் திரும்பப் பெறுவது சிரமமாக இருக்கும். எவ்வளவு பரவலாகப் பிரிந்துசென்றிருக்கிறது, அவற்றைத் திரட்டுவது என்றால் எந்த அளவுக்குக் கிடைக்கும் என்று கணக்கெடுத்துப் பார்த்துத் திட்டங்களையும் போட முடியாது. ஆக இப்படி இரண்டு சங்கடங்கள் இருக்கின்றன" என்று எடுத்துப் பேசியிருக்கிறார்கள். அது தவிர இதைப் பற்றி அதிகமான அளவுக்கு விவாதிக்கப்படவில்லை. ஆகவே இன்றைய தினம் இந்தக் கருத்தைத் தெள்ளத் தெளிவாக நமது சபையில் எடுத்துச் சொல்லிய நிதி அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னதோடு நிற்காமல் மத்திய சர்க்காரிடத்திலும் எடுத்துச் சொல்லி அவர்களை இதற்கு இணங்கச் செய்ய வேண்டிய பொறுப்பையும் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தக் கருத்தை அதிக அக்கறையோடு அவர்கள் தெரிவித்திருப்பதன் காரணத் தினால் இதனுடைய சாதக பாதகங்களை எல்லாம் அவர் நன்றாக ஆராய்ந்து பார்த்துத்தான் இந்த முடிவுக்கு வந்திருப்பார்கள் என்பதில் ஐயம் இல்லை. அப்படி ஒரு நிலைமை ஏற்படுமானால் உண்மையில் தொழில்துறையில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களிடத்திலே, உற்பத்தியைப் பெருக்குகின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள தொழிலாளர்களிடத்திலே ஒரு புத்துணர்ச்சி ஏற்படும். தங்களுக்கு நல்வாழ்வு கிடைக்கும், நாட்டின் பொது நன்மைக்கும் பயன்படும் என்கிற உணர்ச்சி ஏற்படுமானால் அவர்கள் செய்கின்ற பொருள்களுடைய அளவு பெருகும் என்பது மட்டும் அல்ல, செய்யப்படுகின்ற பொருள்களுடைய தரமும் நிச்சயமாக உயரும். இன்றைய தினம் பொருள் உற்பத்தி அதிகமாகியிருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் பொருளினுடைய தரத்தில் தொழிலாளர் அக்கறை காட்டுகிறார்கள் என்று சொல்ல முடியாது. இதற்குக் காரணம் என்னவென்றால் இன்னாள் வரையில் நமது நிதி அமைச்சர் உள்பட, காங்கிரஸ் மேலிடத்தில் உள்ளவர்கள் வரையில் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்றார்களே தவிர தரத்தைப்பற்றிக் கவலை காட்டியதில்லை. அதுவும் பண்டித ஜவஹர் லால் நேரு அவர்கள் மிக நல்ல முறையில் கற்பனை உலகில் மட்டும் அல்ல, கவிதா உலகத்திலும் உலவுகின்றவர் போல பேசிவந்திருக்கிறார்கள். அதைப் பார்த்தும் மற்றவர்களும் "பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறீர்களே, ஏழ்மையைப் பிரித்துக்கொடுப்பதா? வறுமையைப் பிரித்துக்கொடுப்பதா? செல்வத்தைப் பிரித்துக் கொடுக்கவேண்டு மென்றால் எங்கே செல்வம் இருக்கிறது?" என்று கேட்டு வந்திருக் கிறார்கள். நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுடைய கருத்து, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் கொண்டிருக்கிற கருத்துக்கு ஓரளவு மாறு பட்டது என்று நான் கருதுகிறேன். நான் மாறுபட்டது என்று சொல் கிறேனே தவிர முரண்பட்டது என்று சொல்லவில்லை. ஆகையால் இன்னும்

சிரமம் எடுத்துக்கொண்டால் தம்முடைய கருத்துக்கு பண்டித நேரு அவர்களை இசையச் செய்ய முடியும் நம்முடைய நிதி மந்திரி அவர்களால். ஆகவே அந்தப் பொறுப்பையும் இவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(Mr. Speaker in the Chair.)

இந்தத் தொழில் துறையில் முதலிலே செல்வத்தைப் பெருக்க வேண்டும், அதற்குப் பின் பிரித்துக்கொள்ள வேண்டும் என்று சொல்கிற போது ஜூலை மாதம் முழுவதும் உற்பத்தியைப் பெருக்க வேண்டும், ஆகஸ்டு மாதம் முழுவதும் கணக்குப் பார்க்க வேண்டும், செப்டம்பர் மாதத்தில் பிரித்துக் கொடுக்கவேண்டும் என்று சிலர் தவறாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். உற்பத்தியைப் பெருக்குவது ஒரு சமயம், பிரித்துக் கொடுப்பது மற்றோர் சமயம் என்றல்ல. இரண்டும் ஒரே காலத்தில்; இரண்டும் தொடர்ந்து செய்யப்பட வேண்டிய விஷயங்களாகும். இதையும் நிதி அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தியதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் துவக்குகிற நேரத்தில் நாம் எந்தச் சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதையும் கவனிததுப் பார்க்க வேண்டியது முக்கியம். இன்னும் வைதீக பாஷையில் சொல்வதானால் சுப சகுனத்தில் துவக்கப்படுகிறதா, அபசகுனத்தில் துவக்கப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். பொருளாதார பாஷையில் சொல்ல வேண்டுமானால் இவ்வளவு பெரிய பாரத்தைத் தாங்குவதற்குரிய சக்தி உடையதாக சமுதாயத்தைத் தயாரித்துவிட்டு, இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோமா இல்லையா என்று
10-20 a.m. பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது வைதீக பாஷையை நான் பயன்படுத்த விரும்பவில்லை. நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் ஓரளவு வைதீக கோலத்திலே இன்று காணப்பட்டாலுங்கூட (சிரிப்பு) பொருளாதார பாஷையை பயன்படுத்த விரும்புகிறேன். (குறுக்கீடு வைதீகத்தில் கெடுதல் இல்லை.) அதனால்தான் வைதீகம் என்று சொன்னேன், அடைமொழி வைக்கவில்லை.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் துவக்கப்படும் நேரத்தில் எல்லா விலைவாசிகளும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இருந்ததைவிட 100-க்கு 20 பங்கு உயர்ந்திருக்கிறது. இந்த நேரத்தில் நாம் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தீட்டியிருக்கிறோம். முன்னாலே 100 ரூபாயில் முடிக்கப்படக்கூடிய காரியத்தை இப்பொழுது இயற்கையாகவே பொருள்களின் விலை ஏறி இருப்பதால் 120 ரூபாய் செலவிட்டால்தான் முடியும். இதைப்பற்றிய விவரங்களை நிதி அமைச்சர் அவர்கள் ஆயிரம் கோடி எப்படி வளருகிறது என்று குறிப்பிட்டார்கள். ஆனால் நான் எடுத்துச் சொல்வது மூன்றாவது திட்டத்தைத் தீட்டுகிற நேரத்தில் அப்படிப் பட்ட நெருக்கடிக்கு இடையிலேதான் நாம் திட்டம் தீட்டுகிறோம் என்பதுதான். அதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். அதைப்போலவே அன்னிய செலாவணிப்பிரச்னையில் நமக்கு முன்பு இருந்ததைவிட சிக்கல் அதிகரித்திருக்கிறதேதவிர அதிகமான அளவு அந்த சிக்கல் தீர்க்கப்பட்டதாகத்தெரியவில்லை. வெளியே இருந்து வரவழைக்கும் பொருளினுடைய அளவை கட்டுப்படுத்த முடியும் எனினும் அன்னிய செலாவணி விஷயத்தில் சிக்கல் வளர்ந்திருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுச் திட்டத்தில் நமக்கு அன்னிய செலாவணி அதிகம் தேவையாக இருப்பதால் அப்படிப்பட்ட நெருக்கடியைச் சமாளித்துக்கொண்டுதான் திட்டத்தை நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். இதிலே வெளி நாட்டிலிருந்து வரவழைக்கும் பொருளினுடைய அளவையும் இங்கிருக்கிறது வெளி நாட்டுக்கு அனுப்பப்படவேண்டிய பொருளினுடைய அளவையும் வகைப்படுத்த வேண்டும். இங்கிருந்து வெளிநாட்டுக்கு அதிகமான பொருளை அனுப்பி அன்னிய செலாவணியைச் சம்பாதித்து ஆக வேண்டும். ஆகையால் இந்த இரண்டு, மூன்று முக்கியமான காரியங்கள் சரியாக நடத்தப்படவேண்டும். இதைச் சொல்லும் நேரத்தில் இவைகளை நடத்தமுடியுமா, முடியாதா என்ற ஐயப்பாட்டுக்காக அல்ல, இவைகளை நடத்துகிற பொறுப்பு இந்த மாநில அரசுக்கு இல்லை,



மாநில அரசிலே சில அமைச்சர்களுக்கு அதற்கேற்ற திறமை இருக்கலாம், மத்திய அரசிலே செய்யும் காரியங்களிலே பல குளறுபடியாக இருக்கின்றன என்று உள்ளூரத் தெரிந்தும் இருக்கலாம், ஆனால் அன்னிய செலாவணி விஷயத்தைக் கட்டுப்படுத்தும் விஷயம் ஏற்றுமதி, இறக்குமதி விஷயங்களிலே ஏற்றுமதியை அதிகப்படுத்தி, இறக்குமதியைக் கட்டுப்படுத்தக்கூடிய அந்தக் காரியம் செய்கின்ற விஷயத்தில் அதிகாரம் மாநில அரசுக்கு இல்லாத காரணத்தால் இந்த விஷயத்திலே மத்திய அரசாங்கம் எவ்வளவு திறமையாக நடக்கிறார்களோ அதைப் பொறுத்துத் தான் நம்முடைய மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 'உயிர் இருப்பதா? இல்லாமல் போவதா ? குத்துயிராக இருப்பதா ?' என்று தீர்மானிக்கப் படவேண்டியிருக்கிறது.

ஆகையால்தான் பல தடவை எடுத்துச் சொன்னதுபோல், இந்த முறையும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். எப்படித் தனிப்பட்ட அங்கத்தினர்கள் அமைச்சர்களைப் பார்த்து, "இந்த ஏரிக்கு கரையை உயர்த்திக் கொடுங்கள், குளத்தின் படிக்கட்டை அகலப்படுத்திக்கொடுங்கள், அமோனியம் சல்பேட் கொடுங்கள்" என்று கேட்கிறார்களோ, அதைப் போல் இங்கே இருக்கும் அமைச்சர்கள் அங்கே சென்று 'எங்களுக்கு இன்னது இன்னது தேவை' என்று கேட்கிற நிலை இருக்கிறதே தவிர பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்க்கத்தக்க அளவிற்கு இந்த மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை. அதைச் சொல்லும் நேரத்தில் திருப்பித் திருப்பி இதையே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்று முன்னாலே எல்லாம் அருவருப்பு அடைந்தார்கள். ஆனால் இந்த முறை நிதி அமைச்சர் அவர்கள் அருவருப்பு அடையமாட்டார்கள் என்று கருதுகிறேன். அவர்களே சொல்லியிருக்கிறார்கள்—"நேஷனல் டவலப்மெண்ட் கவுன்சிலில் உள்ளவர்கள் அருவருப்பு அடைந்தாலும் பரவாயில்லை, இது என்ன பெரிய நியூசன்ஸாக போய்விட்டதே என்று எண்ணினாலும் பரவாயில்லை. நான் திருப்பி திருப்பி ரீஜினல் டிஸ்பாரிடி போக வேண்டும் போகவேண்டு"மென்று எடுத்துப் பேசினேன் என்று சொன்னார்கள். அவர்கள் சொல்லுவதையே அருவருப்பாகக் கருதுவார்கள் என்று ஏற்படுமானால் நான் சொல்லுவதை அருவருப்பாக கருதுவதிலே ஆச்சரியம் ஒன்றும் இல்லை. அருவருப்பாக உள்ள கசப்பான உண்மைகளை எடுத்துச் சொல்லத்தான் வேண்டுமென்ற முடிவுக்கு கனம் நிதி அமைச்சர் அவர்கள் அந்த இடத்தில் வந்திருப்பார்களானால் அதே முடிவுக்கு நாங்கள் வந்தால் அதைத் தவறாகக் கருதமாட்டார்கள் என்று கருதுகிறேன். திரும்பத் திரும்ப சொல்லுகிறேன். இந்த மாநில அரசுக்கு பொருளாதாரத் துறையைச் செம்மைப் படுத்தத்தக்க அதிகாரம் இல்லாத காரணத்தால்தான் எவ்வளவு திட்டங்கள் தீட்டினாலும் அதை நிறைவேற்றிச் செல்வதிலே ஏற்படக்கூடிய சாதக பாதகம் அத்தனையும் மத்திய சர்க்கார் எப்படி நடக்கிறார்களோ அதைப் பொருத்திருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லுவேன்—நம்முடைய தொழில் இங்கே வளரவேண்டுமானால், நம்முடைய செல்வம் பெருக வேண்டுமானால் துறைமுகங்கள் எல்லாம் விருத்தி செய்யப்பட வேண்டும். முக்கியமாக தூத்துக்குடித் துறைமுகம்—சேது சமுத்திரத் திட்டத்தோடு இணைத்திருக்கும் திட்டம்— நிறைவேற்றப்படவேண்டுமென்று நாம் எடுத்துப் பேசுகிறோம். நெய்வேலி நிலக்கரி திட்டத்தை விரைவில் நிறைவேற்றி அதன் அளவையும் வகையும் அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்லுகிறோம்.

சேலத்து இரும்பை உருக்குத் தொழிலுக்குப் பயன் படுத்திவிரைவில் முன்னேற்றம் காணவேண்டுமென்று நாம் எடுத்துப் பேசுகிறோம். இந்த மூன்று பிரச்னைகளில்—நம் மாநில அரசை நடத்திச் செல்கிறவர்களை நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் உங்களுக்குள்ள அதிகாரங்கள் என்ன? மனுப்போடுவதைத் தவிர, மகஜர் அனுப்பு வதைத் தவிர, வற்புறுத்துவதைத் தவிர திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்வதைத் தவிர, உங்களுக்கு இருக்கும் அதிகாரங்கள் என்ன என்பதை எண்ணிப் பார்த்தால் அதிகாரம் அற்ற ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை, நான் உணர்ந்திருப்பதைப் போலவே நீங்களும் உணர்வீர்கள் என்று ...கிறேன். ஆகையால்தான் சென்னை ராஜ்யத்திற்குத் தரப்பட்டிருக்கும்

இந்த மூன்ருவது திட்டத்தைப்பற்றிய குறிப்பேடுகளைப் பார்த்தால், நாங்கள் இந்த மாநிலத்தில் மின்சார துறைகளின் அளவு அடைபட்டிருக்கும் காரணத்தால் அணு உலையை ஏற்படுத்தித் தீரவேண்டுமென்ற முடிவுக்கு வந்து விட்டோம். இந்த முடிவை ஏற்றுக்கொள்ளும்படி மத்திய சர்க்காரைக் கேட்டிருக்கிறேம், ஏற்றுக்கொள்ளக்கூடும் என்ற நம்பிக்கை நாளுக்கு நாள் வலுவடைந்துவருகிறது. இருந்தாலும் வற்புறுத்தப் போவ தில்லை என்று கூறப்பட்டிருக்கிறது. உங்களால் இந்த பாஷையிலே தான் பேச முடிகிறது. ஆராய்ந்து பார்ப்போமானல் அணு உலைக்கூடம் வேண்டு மென்று கேட்ட முதல் மாநில அரசு நம்முடைய மாநில அரசுதான். மற்ற மாநிலங்களெல்லாம் சாதாரணமாக நீரிலிருந்து மின்சாரம் எடுக்க வச திகள் மிக அதிகமாக பெற்றிருக்கின்றன. நம்மிடத்திலிருந்த வசதிகள் அத் தனையையும் மிகத்திறமையாகப் பயன்படுத்தி பிறமாநிலங்கள் பார்த்துக்கூட "எப்படி இவ்வளவு மின்சாரத்தை பெருக்கினீர்கள்?" என்று கேட்கத்தக்க அளவு பெருக்கியான பிறகு நமக்கு அணு உலைக்கூடம் அமைத்தாலொழிய, தொழில் துறைக்கு தேவையான மின்சாரத்தைப் பெறமுடியாது என்பதை இன்று அல்ல நேற்று அல்ல 10 ஆண்டுகளாக துரைத்தனத்தவர்க்கு அறிவித்திருந்தும், அவர்கள் காதிலே வாங்கிக்கொண்டு கருத்திலே வாங்கிக் கொள்ளாத காரணத்தால் அது மகாராஷ்டிரத்தில் வருவதைப் பார்க் கிறேம். இதற்கு அவர்கள் சொல்வது, "அதுவும் ஒரு வகையில் நன்மை தான். அது எப்படி அங்கே நடக்கிறது என்று பார்த்து நன்ருக நடந்தால் பிறகு நாம் ஏற்படுத்திக் கொள்ளலாம்" என்பதாகும். இது பக்கத்து வீட் டுப் பிள்ளையைப் கிணற்றில் இறக்கி ஆழம் பார்ப்பது என்று சொல்வார்களே அது போல் இவர்கள் பேசிப் பார்க்கிருர்கள். மற்ற விஷயத்தில் ஏக இந்திய என்று பேசுகிருர்கள். அவர்களுக்கு நஷ்டம் வந்தால் வரட்டும் அதைப் பார்த்துவிட்டு பிறகு வேண்டுமானல் பார்த்துக்கொள்ளலாம் என்றும் பேசுவது என்ருல் நீங்கள் மத்திய சர்க்காருக்காக வாதாடுகிறீர்கள். மத்திய சர்க்காரினுடைய வழக்கறிஞராக நீங்கள் நடக்கிறீர்கள், அதற் கேற்ற கட்டணத்தைப் பெறுகிறீர்கள். ஆகையால்தான் அந்த முறையைக் கைவிட்டு இந்த மாநிலத்திற்குத் தேவையானது அத்தனையும் நிறைவேற்று வதற்கான அதிகாரங்களை நீங்கள் மத்திய சர்க்காரிடத்திலே கேட்டுப் பெறவேண்டுமென்று நான் கூற விரும்புகிறேன்.

இந்த மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இருக்கும் அந்தக் குறை பாடு நமக்கு இருக்கும் ரயில்வே வசதிகளைப் பார்க்கும் நேரத்தில் இன்னும் பளிச்சென்று தெரிகிறது. தொழில் வளரவேண்டுமானல் ரயில்வேக்கள் வளர்ச்சி அடைந்திருக்க வேண்டும். ரயில்வேக்கள் வளர்ச்சி அடைந் திருந்தால்தான் தொழில் துறை வளர்ச்சிக்கான நிலைமை ஏற்படும். பயித்தியம் தீர்ந்தால்தான் பெண் கொடுப்பார்கள். பெண் கொடுத்தால் தான் பயித்தியம் தீரும் என்ற பழங்கதைபோல் அதை நாம் திரும்பத் திரும்பப் பேசிக்கொண்டிருக்கிறேம். அப்படி பேசுகிற போது மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தியத் துரைத்தனத்தார் அமைக்க இருக்கும் ரயில்வேக்களில் 1,200 மைல் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிருர்கள். அந்த 1,200 மைலில் நம்முடைய தமிழகத்தில் மட்டும் அல்ல, தென் பகுதிக்கே அதிகமான அளவு அக்கரை காட்டவில்லை என்பது பற்றிப் பாராளு மன்றத்தில் பேசியதைப் படித்துப் பார்த்தால் உண்மையிலேயே எவ்வளவு தேசியப்பற்று உள்ளவர்களாக இருந்தாலும் நெஞ்சம் நோகும். தென் பகுதிக்கு ஒரு மைல் அளவுக்குக்கூட புதிய ரயில்வே பாதை அமைக்க முடியவில்லை என்று அங்கே சுட்டிக் காட்டியிருக்கிருர்கள். எல்லாக் கதவுகளும் அடைக்கப்பட்டு, திறந்துவிடப்பட்டிருக்கும் ஒரே ஒரு ஜன்னல் பக்கமாக முகத்தை வைத்துக்கொண்டு, தென்றல் வீசுகிறபோது முகத்தை அந்தப் பக்கத்திலே திருப்பி நீங்கள் உயிர் பிழைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று சொல்லத்தக்க அளவிற்கு மாநில அரசினுடைய அரசு இருக்கிறது. அதனல் பொருளாதாரம் பாதிக்கப் படுகிறது. ஆகையால் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி நான் சொல்லுகிற முதல் கருத்து அதை நிறைவேற்றுவதற்கு ஏற்ற ஆற்றல், அதிகாரம், பலம், நம்மிடத்திலே ஒப்படைக்காமல் வேறு இடத்தில குவிக்கப்பட்டிருக்கிறது. முதலிலே, குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரம் பரவலாக்கப்பட்டாலொழிய அப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவது





விரும்புகிறேன். இல்லை என்பதை நான் எடுத்துச் சொல்லிக்கொள்ள மற்ருெரு மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நான் காணுகின்ற குறை—முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலே இருந்ததைவிட மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சமதர்மத் தத்துவம் மெள்ள சரிந்துவிட்டு இருக்கிறதென்று சொல்வதைவிட இது தெரிந்தே தூக்கி எறியப்பட்டிருக்கிறதென்று நான் சொல்லுவேன்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நாங்கள் சோஷலிஸ பாட்டர்ன் போல் திட்டம் வைத்திருக்கிறேம் என்று பேசப்பட்டது. இரண்டாவது ஐந்தாண் டுத் திட்டத்தில், நாங்கள் சமதர்மத் திட்டத்தையே வைத்திருக்கிறேம் என்று வலியுறுத்தப்பட்டது. ஆனல், மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத் தில், அதன் புள்ளி விவரங்களைப் பார்க்கிற நேரத்தில், சமதர்மத் திட்டம் அடியோடு கைவிடப்பட்டதா என்று சந்தேகிக்கும் விதத்தில் பொதுத் துறையைக் குறைத்து, தனியார் துறையை அதிகப்படுத்தியிருப் பதைப் பார்க்கிறேம். இரண்டாவது திட்டத்தில் போடப்பட்டதைவிட இந்த மூன்ருவது திட்டத்தில் தனியார் துறைக்கு அதிகமான அளவிற்குத் தான் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த மூன்ருவது திட்டத்தைப் பற்றிக் குறிப்பிலே தரப்பட்டிருக்கிறது:

"It will be seen that as compared to the levels of private investment in the Second Plan as now estimated, the Third Plan proposes a substantial step-up mainly in the field of large and medium industries from 700 crores to 1,050 crores"

என்று இதில் எழுதப்பட்டிருக்கிறது. நாம் சமதர்மத்தை நோக்கி நடந்து கொண்டிருக்கிறேம் என்று பேசுகிருர்கள். நேரு அவர்கள் அந்தப் புனித மான பயணத்தில் ஈடுபட வாருங்கள் என்று எல்லோரையும் அழைக்கிருர் அந்தப் பயணம் எங்கு அழைத்துச் செல்லுகிறது என்று பார்த்தால், மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தரப்பட்டிருப்பதைவிட அதிகமாக அக்கறை, அதிகக் கவனம் தனியார் துறைக்குத் தரப்பட்டிருக்கிறது. அதுவும் "லார்ஜ் அண்ட் மீடியம் இண்டஸ்ட்ரீஸ்"க்கு தரப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. இந்த நேரத்தில்தான் நமது நிதி அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தை இதோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். தனியார் துறையை வளர்ப்பதில் என்ன கேடு வந்துவிடும்? தனியார் துறை வளர்ந்தாலும் தொழிலும் தானகவே வளருகிறதே என்ற அவர்களது வாதம் மற்ருெரு வாதத்தால் அடிபட்டுப் போயிருக்கிறது. தனி யார் துறை வளர்வதால் அதில் கிடைக்கிற லாபம் பதுங்கிவிடுகிறது என்று அவர்களே இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிருர்கள். பதுங்கி விட்டது என்பது மட்டுமல்ல, அது கள்ளத்தனமாக வைக்கப்பட்டிருக்கிறது என்றும் சொன்னர்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : If I am asked to choose as between no industry and private industry, I say private industry. But if it is a question of private industry vs. public industry, certainly I will prefer public industry.

SRI C. N. ANNADURAI : என் வாதம் ராஜாஜி வாதத்தில் என்னைக் கொண்டு போய்விடவில்லை. நாம் தொழில்கள் அமைக்க வேண்டும், நாம் முன்னேற வேண்டும். தனியார் துறையில் அக்கறை செலுத்தியிருந்தும் முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் தனியார் துறையில் கிடைத்த லாபம் பொதுக் காரியத்திற்கு வரவில்லை என்று தெரிந்திருந்தும் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1.050 கோடி ரூபாய் தனியார் துறைக்கு அதிகப்படுத்தியிருப்பது உண்மையிலேயே நல்லதுதான என்று எண்ணிப் பார்க்கவேண்டும். வளர்ந்திருக்கிற தேசிய வருமானம் எங்கு போயிருக்கிறது என்று கண்டுபிடிக்க ஒரு குழு அமைக்கவேண்டு மென்று நேரு அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிருர்கள். நிச்சயமாக அப்படி ஒரு குழு அமைக்கப்படும். ஐந்நூறு மெம்பர்கள் கொண்ட

[Sri C. N. Annadurai] [8th September 1960

பாராளுமன்றத்தில் ஒரு குழு அமைக்க வேண்டுமென்றால், அதில் தகுந்த நிபுணர்கள் கிடைக்காமல் போய்விடமாட்டார்கள். அவர்கள் எதைக் கண்டுபிடிப்பார்கள் ? இவ்வளவு பணம் கள்ளத்தனமாக வைக்கப்பட்டிருக்கிறது என்று கண்டுபிடிப்பார்களானால், இவ்வளவு பணம் கள்ளத்தனமாகச் செல்வதற்கு எந்தெந்த அதிகாரிகள் உடந்தையாக இருந்தார்கள், எந்தெந்த அதிகாரிகளின் திறமைக் குறைவால் இவ்வளவு பணம் கள்ள மார்க்கெட்டில் வந்தது என்று பார்த்து அந்த அதிகாரிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். அவர்கள் எத்தனை பேர்கள், முந்திரா போன்றவர்களுக்கு வேண்டியவர்கள் இருக்கிறார்கள் என்று கண்டுபிடித்து அறியலாமே தவிர, பணம் திரும்ப வந்துவிடும் என்று குழு அமைக்கவில்லை. எதிர்க் கட்சிகள் இது பற்றிப் பேசுகிறபோது, " பயப்படாதீர்கள், பயப்படாதீர்கள் நாங்கள் ஒரு குழு அமைக்கப்போகிறோம், பணம் எங்கு போயிருக்கிறது என்று கண்டுபிடிக்கலாம் " என்று சொல்வதற்கு இந்தக் குழு பயன்படுமே தவிர, மறைந்தது மறைந்ததுதான். நிதி அமைச்சர் அவர்கள் கோவை வாசி என்பதால் அவர்கள், கள்ளத்தனமாக சேமித்து வைக்கப்பட்டிருக்கும் பணம் சீமான்களாலும், கோமான்களாலும் எப்படி எந்தெந்தத் தவறான காரியங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது என்று நெருங்கியிருந்தல்ல, தொலைவில் இருந்துகொண்டு, சந்தோஷத்தோடு அல்ல, அருவருப்போடு கவனித்துப் பார்த்திருப்பார்கள். அப்படிப் போய்விட்ட பணத்தை எப்படித் திரும்பப் பெறப் போகிறோம் ? அப்படி முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் பாழாய்ப்போன பணம் திரும்ப வராது என்று தெரிந்திருந்தும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் ஏன் தனியார் துறைக்குத் தொடர்ந்து அதிகத் தொகை ஒதுக்குகிறீர்கள் ? மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் தனியார் துறையைக் கொழுக்க வைத்துப் பின்னர் அதிலும் பாழாகிப் போன பணத்தை மறுபடியும் கண்டுபிடுக்க வழி வகைகள் காண குழுக்கள் அமைக்கப் போகிறோம். இந்தச் சந்தர்ப்பத்தில் நிதி அமைச்சர் அவர்களுக்கு ஒரு விகடத் துணுக்கு வெளிவந்ததைக் கூற விரும்புகிறேன். ஒரு ஓவியன் ஒரு படத்தைத் தீட்டினானும், ஒரு பசுவும் புல்லும் இருப்பதாக : ஆனால் அதில் பசுவும் காணப்படவில்லை, புல்லும் காணப்படவில்லை. 'புல் எங்கே ?' என்று கேட்டதற்கு 'அதைப் பசு தின்றுவிட்டது' என்று கூறினானும். பின் 'பசு எங்கே ?' என்று கேட்டதற்கு, 'பசு புல்லைத் தின்றுவிட்டுப் போய்விட்டது' என்றானாம். அதே போல், உயர்ந்திருக்கிறதாகக் கூறப்படும் தேசிய வருமானம் எங்கே என்று கேட்டால், 'பாருங்கள் பதினாயிரம் கோடிக்குத் திட்டம் தீட்டியிருக்கிறோம்' என்று சொல்லி, இவ்வளவு வருமானம் வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். 'சரி, அந்தப் பணம் எங்கே போய்விட்டது ?' என்று கேட்டால், 'அதைத் தேடிக்கொண்டிருக்கிறோம்' என்று சொல்கிறார்கள். ஆக, நம் தேசிய வருமானம் ஒரு சிலரிடம் சிக்கிவிட்டதற்கு நீங்கள் உடந்தையாக இருந்தீர்கள் என்று நான் குற்றஞ் சாட்டக் கூடத் தயங்கமாட்டேன். அப்படிப்பட்ட முதலாளிகள், இங்குள்ளவர்களைப் பற்றி நேரில் எனக்குத் தெரியாது. அகில இந்திய ரீதியில் எடுத்துக்கொண்டால், அப்படிப்பட்ட முதலாளிகள்தான் இன்றைய தினம் ஆட்சி நடத்துகிற கட்சிக்கு லட்சக் கணக்கில், கோடிக் கணக்கில் பணத்தைத் தேர்தல் நிதிக்கு அள்ளித் தருகிறார்கள். அதை வெட்கமில்லாமல் ஒப்புக்கொண்டுமிருக்கிறார்கள். அதை நாங்கள் தடுக்க மாட்டோம் என்று பாராளுமன்றத்திலும் சொல்லியிருக்கிறார்கள். வெண்ணெயை வழித்தவன் கையைச் சுவைக்காமல் இருக்கமாட்டான் என்ற கொச்சை மொழி போல் முதலாளிகளிடம் தேர்தலுக்குப் பணம் வாங்கிய காரணத்தினால், மேலும் மேலும் நீங்கள் தனியார் துறையைத் தட்டிக் கொடுக்கிறீர்கள் என்ற பலமான குற்றச்சாட்டை எங்கள் கட்சி கூறுகிறது, எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் எண்ணத்தில் அது வலிவு பெற்றது என்பதால். ப்ரபஸர் கால்டார் என்ன சொல்லுகிறார்கள் என்று பாருங்கள். இன்றைய தினம் மறைத்துவைக்கப்பட்டுக் கொடுபடாமல் இருக்கிற வருமான வரி எவ்வளவு என்றால், 300, 400 கோடி இருக்கலாம் என்கிறார்கள். ஐம்பது அல்லது 100 கோடிதான் இருக்கலாம் என்கிறார்கள் சிலர். சிலர், 30, 50 கோடிதான் இருக்கும் என்று வாதிக்கிறார்கள். இதை எப்படி எந்த முறையில் எடுக்கலாம் என்று பேசிக்கொண்டிருக்[illegible] புதைந்த பொருள் எப்படிக் கிடைக்கும் ? இருந்[illegible]





8th September 1960] [Sri C. N. Annadurai]

நாயனாரே மறைவாகப் புதைத்து வைத்த ஓட்டைக் காணாமல் பரிதவித்தார் என்று சொன்னால், மறைத்து வைத்திருப்பதை நம் நாட்டு இந்த நாயன்மார்கள் எப்படிக் கண்டுபிடிக்கப்போகிறார்கள் ? இப்பொழுதும் தனியார் துறைக்கு அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள். அதே நேரத்தில், நாங்கள் சோஷலிஸத்தைக் கைவிடவில்லை, நாங்கள் பொதுத் துறையைத்தான் வளர்க்கப்போகிறோம் என்று மக்கள் எண்ணத்தக்க வகையில்,

" The growth of public sector in various fields such as power, transport and heavy industries places the State in a better position to ensure the broad direction of economic activity from the aspect of public interest "

என்று போடப்பட்டிருக்கிறது. போக்குவரத்துத் துறை மின்சாரம், பவர் இப்படிப்பட்டவைகள் எல்லாம் பொதுத் துறையில் இருப்பதால் மாநில அரசுகளுக்கு மகத்தான சக்தி கிடைத்துவிடுமென்று நம்பிக்கை தெரியப் படுத்தப்பட்டிருக்கிறது. மின்சாரம் சர்க்கார் துறையிலும் இருக்கிறது, பொதுத் துறையிலும் இருக்கிறது. போக்கு வரத்து பற்றி சர்க்கார் என்ன சொல்கிறார்கள் ? போக்கு வரத்துத் துறையை தேசிய மயமாக்க வேண்டுமென்று சொல்லுகிற நேரத்தில், எல்லாம் போயும் போயும் உனக்கு இதுதான் கிடைத்ததா என்று கேட்பதும், இவை நம்மிடத்தில்தானே இருக்கிறது என்றும் சொல்கிறார்கள். இந்த மன்றத்தில் ஒருவர் சொன்னார், பஸ் முதலாளிகள் ஆஸ்ட்ரேலியாக்காரர்களோ அல்லது அமெரிக்கர்களோ அல்ல, இந்த நாட்டுக்காரர்கள்தானே, அவர்கள் பணம் சம்பாதித்தால் என்ன ? அதனால் என்ன கெடுதல் வந்துவிடும் என்று சொன்னார்கள். நம் நாட்டில், திருடுகிறவன்கூட இந்த நாட்டுக்காரன்தான். அவன் திருடிய பொருளை இந்த நாட்டில்தானே செலவழிக்கிறான் ? ஆனால், திருட்டு என்றால் அது எப்படிப்பட்ட குற்றமோ, அதேபோலத்தான் '*accumulation of wealth is immoral*' என்று மிகக் கடுமையான பதத்தை நேரு அவர்களே இரண்டு தினங்களுக்கு முன்னால் உபயோகப் படுத்தி இருக்கிறார். ஒழுக்கத்தைப் பற்றி நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். '**accumulation of wealth after a particular stage is unpatriotic and anti-national**' என்று சொல்லக்கூடிய அளவிற்கு கருத்து வளர்ந்திருக்கிற போது நீங்கள் இந்த டிரான்ஸ்போர்ட் விஷயத்தில் என்ன கொள்கையைக் காட்டியிருக்கிறீர்கள் ? படிப்படியாக இந்தப் போக்கு வரத்துத் துறையைப் பொதுத்துறைக்கு மாற்றப்போகிறோம் என்று சொல்லுவார்கள். இவ்விதம் 13-வது பக்கத்தில் சொல்லிவிட்டு, அடுத்தாற்போல் 248-வது பக்கத்தில்,

Road Transport programmes will be mainly in the private sector, but a provision of Rs. 18 crores is proposed for expansion of the nationalised road transport services என்று.

இந்தியத் துணைக் கண்டம் பூராவுக்குமாக 18 கோடி ரூபாயை இந்தப் போக்கு வரத்து சாதனங்களைத் தேசிய மயமாக்குவதற்கு ஒதுக்கியிருக்கிறார் கள். இதை அதிலேயே சொல்லிவிட்டுப் பின்னும் சொல்லுகிறார்கள் :

It is expected that about 5,000 vehicles will be added to the fleet of nationalised undertakings during the period of the plan.

இப்படி இருக்கும் பொழுது எங்கேயிருந்து சோஷலிஸ பாணியை, சமதர்ம சமுதாயத்தை நிறைவேற்ற இருக்கிறீர்கள் ? எப்படி நிறைவேற்ற முடியும் ? என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஆகையினால், இதைப் பற்றி இரண்டாவது குற்றச்சாட்டாகச் சொல்லுவது, நீங்கள் சமதர்மக் கொள்கையை விட்டு மெள்ள மெள்ள நழுவிக் கொண்டே இருக்கிறீர்கள். அது ஒரு வேளை சுதந்திரக் கட்சியின் வளர்ச்சியினால் ஏற்பட்ட எண்ணமோ என்னவோ தெரியவில்லை, அல்லது சுதந்திரக் கட்சி, கம்யூனிஸ்டுகளுக்கும், காங்கிரஸ்காரர்களுக்கும் இப்போது வித்தியாசமே தெரியாத அளவுக்கு காங்கிரஸ்காரர்கள் மாறிவிட்டார்கள் என்று சொல்லுவதை எண்ணிக் கொண்டு, நம்மை எங்கே கம்யூனிஸ்டுகள் என்று கருதிவிடப் போகிறார்களோ என்ற எண்ணத்தில்தான் இவ்வாறு பின்னேக்கிப் போய்க் கொண்

டிருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. உண்மையிலேயே இவர்கள் சமதர்மத் திட்டத்தை, பொது உடமை திட்டத்தை நோக்கிப் போகிறார்கள் என்றால் உண்மையிலேயே மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். அவர்களுக்குக் கொடுத்திருக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், அவர்களுக்குத் துரோகம் செய்யக்கூடிய முறையில் தனியார் துறையை அதிகப்படுத்துகிறார்கள் என்றால், கள்ளத் தனமாக நாட்டு மக்களிடமிருந்து பணத்தைப் பதுக்குகின்றவர்களுக்கு மறைமுகமாகவும், நேர்முகமாகவும், ஆக்கம் கொடுக்கின்றீர்கள் என்கின்ற குற்றச்சாட்டை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நான் எடுத்துச் சொல்ல விரும்புவது நல்ல மறுமலர்ச்சி எண்ணத் துறையில் ஏற்பட்டிருக்கிறது என்பது தான். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தப் பகுதிக்குப் போதிய அளவுக்குப் பணம் ஒதுக்கப்படவில்லை என்று சொன்னபோது இந்தப் பகுதி, அந்தப் பகுதி என்று பிரித்துப் பேசுவானேன், அவ்விதம் பேசுவது பாரதத்திற்கு விரோதம், அவ்விதம் பேசுவது தேசியத்திற்கு விரோதம், இவ்விதம் பேசுவதை நாம் எப்படிச் சகித்துக்கொள்ள முடியும் என்று பேசினவர்களை எல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும். காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை ஒன்றுதானே என்று பேசியவர்கள் எல்லாம் சிறிய குழந்தை போன்று இருக்கின்ற எங்கள் நீலகிரி மாவட்டத்திற்கு அதிகமாகச் செலவு செய்யுங்கள், என்று ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மாவட்டத்திற்காக வாதாடுவது தேசீயத்திற்கு விரோதமல்ல என்று எடுத்துச் சொல்கிறார்கள். அந்த முறையில்தான் நமது நிதி அமைச்சர் அவர்கள் ரீஜனல் டிஸ்பாரிட்டி என்ற அளவில் நமது மாநிலத்துக்குப் பங்கு கேட்கிறார். அப்படிக் கேட்கும் தன்மையையும் பார்த்து, அப்பேர்ப்பட்ட ஒரு புதிய உணர்ச்சி ஏற்பட்டிருப்பதைப் பார்த்து நாட்டிலே நல்ல முறையில் ஒரு மறுமலர்ச்சி எண்ணத் துறையில் ஏற்பட்டிருப்பதைப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். நான் சொல்லுவதிலுள்ள வார்த்தைகளை கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறான மறுமலர்ச்சி இன்றைக்கு "எண்ணத் துறையில்" ஏற்பட்டிருக்கிறது, ஏற்பாடுத் துறையில் அல்ல. பாராளுமன்றத்தில் நடைபெறுகின்ற விவாதங்களைப் பார்க்கும்போது, நமது தென்னகத்தில் இருந்து போயிருக்கின்ற உறுப்பினர்கள், அவர்கள் காங்கிரஸ் கட்சிக்காரர்களாயிருந்தாலும் சரி, எங்கள் கழகத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் சரி, கம்யூனிஸ்ட்டுகளாயிருந்தாலும் சரி, பிரஜா சோஷியலிஸ்டு கட்சியினராய் இருந்தாலும் சரி, மத்திய சர்க்காரைத் தட்டிக் கேட்கிறார்கள், அதட்டிக் கேட்கிறார்கள். "எங்கள் தென்னகத்திற்கு என்ன செய்யப் போகிறீர்கள், தென்னகம் வஞ்சிக்கப்படுகிறது, இன்னும் அதை அங்குள்ள மக்கள் தாங்கிக் கொண்டிருக்க மாட்டார்கள். ரயில்வேயை எடுத்துக் கொண்டால் எல்லாம் வடக்கே தானா? உர உற்பத்திச்சாலைகளை எடுத்துக்கொண்டால் அவைகள் எல்லாம் வடக்கே தானா? உருக்குத் தொழிற்சாலையை எடுத்துக்கொண்டால், ஒன்றுக்கு நான்கு வடக்கே தானா" என்று தட்டிக் கேட்கிறார்கள். தூத்துக்குடித் துறைமுகம் ஏன் கவனிக்கப்படவில்லை, மங்களூர் துறைமுகம் பற்றி ஏன் கவனிக்கப்படவில்லை என்று கேட்பதை நாம் இன்று பார்க்கின்றோம். தென்னகத்திலுள்ள துறைமுகங்கள் எல்லாம் கவனிக்கப்படவில்லை, அதே நேரத்தில் அங்கே கண்டாலா போன்ற துறைமுகங்கள் எல்லாம் எடுத்துக்கொள்ளப்படுகிறதே, எங்கள் இடம் வஞ்சிக்கப்படுகிறதே, ஏன் என்றெல்லாம் கேட்கிறார்கள். இவ்விதம் கேட்பது எங்கள் கழகத் தோழர்கள் மட்டும் அல்ல, காங்கிரஸ் கட்சித் தோழர்கள் கேட்கிறார்கள். இவ்விதம் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு பாராளுமன்றத்தில் வாதாடுவதை நாம் பார்க்கின்றோம். இதைப் பார்த்துக்கூட நான் ஆச்சரியப்படவில்லை, பாராளுமன்றத்தில் இருக்கின்ற வடக்கேயுள்ள உறுப்பினர்களும் இதை எதிர்க்காமல் இருக்கிறார்கள். ஏன் எதிர்க்காமல் இருக்கிறார்கள் என்றால், நம்முடைய நியாயமான கோரிக்கையை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். அவர்கள் மட்டுமல்ல, நேரு பண்டிதரே உணர்ந்திருக்கிறார் என்பதை நான் அறிவேன். நீங்கள் உணர்ந்துகொள்ள மாட்டீர்கள் என்பதையும் நான் அறிவேன். அவ்விதம் உணர்ந்தால் எங்கே உங்களது நெஞ்சகத்தில் பலவீனம் ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சுகிறீர்கள். அந்த உணர்வு உங்





களுக்கு ஏற்படாமல் இருப்பது உங்களைப் பொறுத்தவரை நல்லதுதான். பாராளுமன்றத்தைப் பொறுத்தவரை அங்குள்ளவர்கள் இதை நன்றாக உணர்ந்திருப்பதினால்தான் எங்கள் கழகத் தோழர் சம்பத் அவர்கள் பேசினாலும் சரி, அல்லது கோவை மாவட்டத்தைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர் ராமசாமி அவர்கள் பேசினாலும் சரி, கேரள நாட்டைச் சேர்ந்த தாணு பிள்ளை பேசினாலும் சரி, ஆந்திராவைச்சேர்ந்த வேதகுமாரியாக இருந்தாலும் சரி, (குறுக்கீடு) தாணுபிள்ளை என்று சொல்லுவது மலையாளப் பெயர் போன்று இருந்தது, அதனால்தான் குறிப்பிட்டேன். இவ்விதம் யாராக இருந்தாலும் தென்னகத்திலுள்ள உறுப்பினர்கள் இப்போது தட்டிக் கேட்கிறார்கள். இவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று வடவர் கவனத்தோடு கேட்கிறார்கள். இவ்விதம் தங்கள் நாட்டுக்காக, தங்கள் இடத்திற்காகப்பேசுவது தேசீயத்திற்கு விரோதம் அல்ல என்று பண்டிதர் நேருவே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இன்னின்ன திட்டங்களை நிறைவேற்றியாக வேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில், பார்த்துச் செய்யலாம், பக்குவம் இருந்தால் செய்யலாம் என்று சொல்லுகின்ற பெருந்தன்மையில் நமக்கு நம்பிக்கை இருக்கிறது. ஆனால் பண்டித நேருவைச் சூழ்ந்திருக்கின்றவர்கள் இந்த நம்பிக்கையைத் தவறான காரியத்திற்குப் பயன்படுத்துகிறார்கள். நமது அமைச்சர் தம் நண்பர்களை தம் அறைக்கு நம்பிக்கையுடன் அழைத்திருக்கலாம். அவ்விதம் அழைத்திருக்கும்போது, அவர் உள்ளே குளிப்பதற்குச் சென்றிருக்கும்போது அவரது மேஜையிலுள்ள டிராயரை இழுத்து, அதில் எழுதி வைத்திருக்கின்ற ஆர்டரைப் படிக்கின்றார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள், இவ்விதம் நடந்ததாகச் சொல்லுகிறேன் என்று யாரும் கருத வேண்டாம். அப்படி நடந்துவிட்டால் என்ன நிலை ஏற்படும்? அது போலப் பண்டிதர் நேருவைச் சூழ்ந்திருக்கின்றவர்கள் அவருடைய நம்பிக்கையை, அவருடைய பெருந்தன்மையைத் தவறான காரியத்துக்குப் பயன்படுத்துகிறார்கள்.

நாம் திட்டவட்டமாக மத்திய சர்க்கார் அவர்களிடம் கேட்க வேண்டியது, மாநில சர்க்காருக்கு என்னென்ன திட்டங்களைத் திட்டவட்டமாக நிறைவேற்றப் போகிறீர்கள், சேது சமுத்திரத் திட்டம், தூத்துக்குடி துறைமுகத்தை அபிவிருத்தி செய்தல், ஆகிய திட்டங்களை எல்லாம் நிறைவேற்றப் போகிறீர்களா இல்லையா என்று திட்டவட்டமாகக் கேட்க வேண்டும். இந்த நேரத்தில் நான் அமைச்சரவையைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், உங்களுடைய திறமையைப்பற்றி நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. இதில் நீங்கள் வெற்றி பெறுவதிலிருந்து தான், இனிமேல் உங்களுடைய திறமையைப் பற்றி நாட்டு மக்கள் தீர்மானிக்கவேண்டும், உங்களுடைய நாணயசுத்தியைப் பரிசோதிப்பது இதில் தான் இருக்கிறது. திருப்பித் திருப்பி தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழப்படுத்த வேண்டும் என்று நாங்கள் சொல்லுவதும் அதற்கு நம்முடைய தொழில் அமைச்சர் அவர்களும் நம்முடைய நிதி அமைச்சர் அவர்களும் பார்க்கலாம் என்று பதில் அளிப்பதும் வெறும் பத்திரிகையில் தான் இருக்கிறதே தவிர வேறு எந்த விதமான பலனையும் காணவில்லை. தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழப்படுத்தவேண்டிய திட்டம் இன்னும் விவாதத்திற்கு இடமாகவே இருக்கிறது. இதைப்பற்றி விசாரித்து ரிப்போர்ட் கொடுப்பதற்காக இந்திய சர்க்கார் நமது ராஜ்யத்தின் தலைசிறந்த அறிவாளி திரு. ராமசாமி முதலியார் அவர்களை நியமித்தார்கள், அவர்கள் ஆராய்ச்சி செய்து கொடுத்த அறிக்கையை வைத்துக் கொண்டு அதில் ஏற்படுகின்ற சில்லறைத் தகராறை வைத்துக்கொண்டு, 10 கோடியா, 15 கோடியா என்கின்ற புள்ளி விவரங்களில் ஏற்படும் தகராறை வைத்துக்கொண்டு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க முடியுமோ என்னவோ தெரியவில்லை, அல்லது நேற்று இங்கு குறிப்பிட்டது போன்று, நான்காவது திட்டத்தில் தான் சேர்க்க வேண்டுமோ, அல்லது ஐந்தாவது திட்டத்தில் தான் சேர்க்க வேண்டுமோ என்று கூறக்கூடிய அளவுக்குத்தான் நிலைமை இருந்துகொண்டு இருக்கிறது. நான் மீண்டும் இந்த அமைச்சரவையைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், இந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றப் போகிறீர்களா அல்லது நாங்கள் இதைவிட்டு விலகவா என்று மத்திய சர்க்காரை இந்தச் சர்க்கார் துணிந்து கேட்க வேண்டும். அப்படிக் கேட்பதில் என்ன தவறு இருக்கிறது? நம்முடைய வேண்டுகோளில் நியாயம் இருக்கிறது. வங்காள முதலமைச்சர்

[Sri C. N. Annadurai] [8th September 1960

தங்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை என்பதற்காகத் தங்கள் ராஜ்யத்தில் சுதந்திர தினத்தையே கொண்டாடவில்லை. வங்காள கவர்னர் சுதந்திர தின் விருந்து கொடுக்க வில்லை. அவர்கள் எல்லாம் தேசிய வாதிகள் தான். ஒரு நாள் நீங்களும் அவர்களும் ஒரே ஜெயிலில் இருந்தவர்கள். நான் வேண்டுமென்றால் அன்றைக்கு வேறு இடத்தில் இருந்திருக்கலாம். நான் தான் அன்றைக்கு ஜெயில் வார்டனாயிற்றே. நீங்கள் எல்லாம் ஒன்றாக இருந்தவர்கள் தான். தங்களுடைய மாநில மக்களின் உரிமையைக் கேட்கவில்லை என்று தெரிந்த நேரத்தில் அவர்கள் சுதந்திர தினத்தைக் கொண்டாடமாட்டோம், என்று சொல்லக்கூடிய அளவுக்கு அவர்களிடம் உரிமை ஆர்வம் பிறந்திருக்கிறது.

நீங்கள் எப்படி யிருக்கிறீர்கள் என்றால், அடிக்கடி போய்க் கேட்கிறீர்கள், அவர்கள் சொல்வதை கேட்டுவிட்டு திருப்பித் திருப்பி இங்கு மனம் நொந்து முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு திரும்பிவருகிறீர்கள். தட்டிக்கேட்டால் கண்டிப்பாகக் கிடைக்கும். நமது நிதிஅமைச்சர் அவர்கள் ஏசுநாதரைப்பற்றி குறிப்பிட்டார்கள். நானும் ஏசுநாதரைப்பற்றி குறிப்பிட விரும்புகிறேன். "தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்" என்று ஏசுநாதர் சொல்லியிருப்பதை நீங்கள் கடைப்பிடிக்கவேண்டும். ஆனால் நீங்கள் தட்ட மறுக்கிறீர்கள், நீங்கள் எப்படியிருக்கிறீர்கள் என்றால், கதவு திறக்குமா, அது திறக்கும் போது பரபரவென்று உள்ளே புகுந்துவிடலாம் என்று பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள். நான் கூறுகிறேன், இந்திய சர்க்காரின் கதவு இரும்புக் கதவு, தட்ட வேண்டிய உங்கள் கரங்களோ, தேர்தலில் வேலைசெய்து, வேலைசெய்து சக்தி இழந்துபோன கரங்கள். திராணி இல்லாத கரங்கள். அதனால் தான் திறக்கப்படுவதில்லை. வட நாட்டில் இவ்விதம் 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் என்று திரும்பத் திரும்ப கேட்கப்படுகிற திட்டங்கள் ஏதாவது இருக்கின்றன என்று கணக்குக் காட்ட முடியுமா ? இந்த மாநிலத்தின் கவர்னராக இன்று இருக்கக்கூடிய திரு. விஷ்ணுராம் மேதி அவர்கள் அஸாம் மாகாணத்தில் முதல் மந்திரியாக இருந்தபொழுது அந்த நாட்டில் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிலை ஏற்படுத்த வேண்டும் என்று கிளர்ச்சி செய்தது நமக்குத் தெரியாதா ? அவ்விதம் செய்தவர் தான் இன்றைக்கு நம்மிடம் பாரதத்தை எல்லாம் ஒன்று என்று எண்ணுங்கள் என்று கூறுகிறார். அன்றைக்கு அவர்கள் அஸாம் மாகாணத்தில் முதலமைச்சராக இருந்த காலத்தில், எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிலை ஏற்படுத்தாவிட்டால்—அங்கிருந்த பெரும் பெரும் தலைவர்கள் எல்லாம் என்ன சொன்னார்கள் தெரியுமா—அதைக் கேட்டால் ஆச்சரியமாய் இருக்கும். இதை ஏற்படுத்தாவிட்டால், "we will secede", அஸ்ஸாம் மாகாணம் பிரிந்து போகும் என்று கூறினார்கள். அப்படிப்பட்ட தேசீயக் கனல், தேசப்பற்று, அல்லது நாட்டுப்பற்று ஏன் உங்களிடம் ஏற்படவில்லை ? வேறு எதற்கெல்லாமோ தான் உங்கள் தேசியப்பற்று உதவுகிறது. அந்த முறையில்தான் உங்கள் தேசப்பற்றை கட்டுப்படுத்தியிருக்கிறீர்கள். அந்த முறையில் தான் மத்திய சர்க்காரும் நம்மை கட்டுப்படுத்தியிருக்கிறார்கள்.

ஆகவே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி விவாதிக்கிற இந்த நேரத்தில் ரீஜனல் டிஸ்பாரிட்டி என்பதைப்பற்றி குறிப்பிட்டதைப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். அந்த பாஷை எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். வடக்கு தெற்கு என்று பேசாமல் "ரீஜனல் டிஸ்பாரிடி" என்று சொல்லட்டும். இன்னும் சூசகமாக வேண்டுமானால் வேறு முறையில் சொல்லிக் கொள்ளட்டும். முதல் ஐந்தாண்டுத் திட்டம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட நேரம், இப்போது தமிழ் நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக இருக்கும் நண்பர் அழகேசன் அவர்கள் அப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலம் அது. விவாதங்கள் எல்லாம் முடிந்த பிறகு அப்போதிருந்த தலைவர் அவர்கள் எழுந்து இன்னும் இரண்டு நிமிஷங்கள் இருக்கின்றன என்று கூறி அழகேசன் அவர்களைப் பேசுகின்றீர்களா என்று கேட்டார் : அதற்குள்ளே பேசி விடுகிறேன் என்று கூறி ஒன்றே ஒன்றைத் தான் அவர் அன்று குறிப்பிட்டார். இருஷ்ணா பெண்ணாறுத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுங்கள் என்று கேட்டார். இது வரை ஏன் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை என்று கேட்கவில்லை நான் அந்த இப்போது இங்கு குறிப்பிடுவது. ஒரு பாராளுமன்ற



8th September 1960] [Sri C. N. Annadurai]

உறுப்பினருக்கு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி விவாதிக்கும்போது இரண்டு நிமிஷங்கள்தானா கொடுப்பது என்றும் நான் கேட்கவில்லை. அப்படிக் கேட்டால் நேற்றைய தினம் ஒரு அங்கத்தினர் கூறியது போல் "கிடைத்த சான்ஸ் அவ்வளவுதான்" என்று பேசுவார்கள். நான் அந்தக் குறைபாட்டைப்பற்றிக் குறிப்பிட வரவில்லை. நான் அதைக் கூறி அவரைக் குறைவு படுத்தவும் விரும்பவில்லை. எனது மாவட்டத்தைச் சேர்ந்தவர் அவர். அவர் அந்த இடத்தில் வேறு ஒரு பதத்தை உபயோகப்படுத்தினார். நம்முடைய அமைச்சர் அவர்கள் "ரீஜினல் டிஸ்பாரிடி" என்று நாசுக்காகக் கூறியிருக்கிறார்கள். இதுவரை வடநாட்டாரால் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் பல்வேறு திட்டங்கள் "வீட் ஸோன்" கோதுமைப் பகுதியிலேயே இருக்கின்றன. அரிசிப் பகுதியிலே இல்லை ; அதற்கு கிருஷ்ணா—பெண்ணாறு திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கூறியிருக்கிறார். திராவிடநாடு என்று நாங்கள் சொன்னால், நீங்கள் உங்களுக்கு இருக்கிற கூச்சம் காரணமாக, அச்சம் காரணமாக, "ரீஜினல் டிஸ்பாரிடி, பிரதேசவாரி, அரிசிப் பகுதி" என்று கூறிக்கொண்டு வருகிறீர்கள். இப்படி, படிப்படியாக நிச்சயம் ஒரு நாள் எங்கள் பக்கத்திலே வருவீர்கள் என்பதிலே எனக்குக் கொஞ்சமும் சந்தேகம் இல்லை. வருவது மட்டுமல்ல, எங்களுடைய திட்டங்கள், யோசனைகள் எல்லாவற்றையும் இன்னும் 10 வருஷத்தில் அல்லது 15 வருஷத்தில் வாங்கிக் கொள்ளப் போகிறீர்கள். அதுவும் எங்களுக்குத் தெரியும். அத்தகைய கருத்துக்கு நாட்டு மக்களைத் தயாரிப்பதுதான் எங்களுடைய நோக்கம். அது வரையில்தான் எங்களுக்கு வேலை. அப்படித் தயார் படுத்தியவுடன் அந்த இடத்தில் நீங்கள் வந்து உட்கார்ந்து கொள்ளுவதில் மிகச் சமர்த்தர்கள் என்பதை உங்களைப்பற்றி அனுபவத்தில் மிக நன்றாகத் தெரிந்துள்ள நான் அறிவேன். நீங்கள் "ரீஜினல் டிஸ்பாரிட்டி, கோதுமைப் பகுதி, அரிசிப் பகுதி" என்று பேசி வருவதே தான் நாங்கள் வடக்கு தெற்கு என்று பேசி வருகிறோம். எங்களைப் பார்த்து நீங்கள் கேட்கின்றீர்கள்—ஏன் வடக்கு தெற்கு என்று பிரிக்கின்றீர்கள் என்று. கோதுமை ஆகாதா ? ஏன் நீங்கள் கோதுமை-அரிசி என்று பிரிப்பானேன் ? கோதுமை வேகாதா ? தின்றால் சுவை இருக்காதா ? ஜீரணம் ஆகாதா ? வலிவு தராதா ? கோதுமைப் பகுதியிலேயே எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்றுகிறார்கள் என்று ஏன் சொல்ல வேண்டும். அரிசியைப் பயிரிடாமல் கோதுமையைத் தின்றால் என்ன ? ஏன் அழகேசன் அவர்களுக்கு "அரிசிப் பிராந்தியத்தைக் கவனியுங்கள்" என்று பேசத் தோன்றியது ? அதுதான் அடக்கப்பட முடியாத உள் உணர்ச்சி. அதை 1,500 ரூபாய் கொடுத்து அடக்கினாலும், 5,000 ரூபாய்க் கொடுத்து அடக்கினாலும், பெரிய சலுகைகளைக் கொடுத்து அடக்கினாலும் உங்கள் உள்ளத்தில் இருந்து அந்த உணர்ச்சி எப்படியும் பீறிட்டுக்கொண்டு வெளியே வந்துவிடுகிறது.

நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலில் "நியூசன்ஸ்" என்று கருதினாலும், திரும்பத் திரும்பக் கேட்டேன் என்று நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் கூறினார்கள். எனக்கு அந்த அளவுக்குத் திருப்தி. அந்த அளவுக்கு என் பக்கத்தில் வந்தார் என்பதைப் பார்த்துப் பூரிப்படைகிறேன். அவர் அங்கே பேசியிருப்பது "தென்னாட்டுக்கு இவ்வளவு என்று ஒதுக்கி விடுங்கள்; அதிலே ஆந்திராவுக்கு எவ்வளவு, தமிழகத்திற்கு எவ்வளவு, மைசூருக்கு எவ்வளவு, கேரளத்திற்கு எவ்வளவு என்பதை எங்களுக்குள்ளே நாங்களே முடிவு செய்து கொள்ளுகிறோம்" என்பதேயாகும். பிறகு உங்களிடத்தில் வராமல் இருக்கிறோம் என்று கூறியிருக்கிறார். நான் நம்முடைய நிதியமைச்சர் அவர்களுக்குச் சொல்வேன் "இதுதான் திராவிட நாடு". (சிரிப்பு.)

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த அளவுக்கு இருந்தால் சரி.

SRI C. N. ANNADURAI : ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், திராவிட நாட்டை ஆந்திரக்காரன் ஒப்புக் கொண்டானா, மலையாளக்காரன் ஒப்புக்கொண்டானா, என்று பேசுகின்ற பேச்சைப் போல்,

[Sri C. N. Annadurai] [8th September 1960

நம்முடைய நிதியமைச்சர் சொன்னதை மலபார்க்காரன் ஏற்றுக்கொண்டானா? கன்னடக்காரன் ஏற்றுக்கொண்டானா? ஆந்திரக்காரன் ஏற்றுக்கொண்டானா என்று நான் கேட்கலாம்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்கேயே அந்த இடத்திலேயே ஏற்றுக்கொண்டார்கள்.

SRI C. N. ANNADURAI : அந்த இடத்திலேயே ஏற்றுக்கொண்டதாகச் சொன்னார்கள். நான் அந்த ஆதாரத்தைப் பார்த்து பிறகு என் கருத்தைச் சொல்லுவேன். அந்த இடத்தில் ஏற்றுக்கொண்டார்கள் என்பது உண்மையாக இருக்குமானால்—அமைச்சர் சொல்வது உண்மையாகத்தான் இருக்கும்—அதே மாதிரி, அவர்கள் எப்படி அந்தந்த நாட்டுப் பிரதிநிதிகளோடு சம எடையோடு உட்கார்ந்து பேசியபோது ஏற்றுக்கொண்டார்களோ அதைப் போல்தான் திராவிட நாட்டுப் பிரிவினை பற்றி சம எடையோடு உட்கார்ந்து பேசினால் நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள். ஆகவே, ஆந்திரம் ஏற்றுக்கொண்டு விட்டதா, மலையாளம் ஏற்றுக்கொண்டு விட்டதா, கன்னடம் ஏற்றுக்கொண்டு விட்டதா என்று கேட்பது எங்களை உற்சாகப்படுத்த வேண்டுமானால் பயன்படுத்திக் கொள்வோமே தவிர மனதைத் தளர விட அல்ல. நான் கேட்கிறேன் இந்த மூன்றைப் பற்றி மட்டும் நிதியமைச்சருக்கு அக்கறை வருவானேன்? ஒரிஸா இருக்கிறது. பிற்போக்கான பகுதிதான். ஒரிஸாவுக்கும் சேர்த்து நியாயம் வழங்குங்கள் என்று ஏன் கேட்கவில்லை? அவர்களுடைய உள் உணர்ச்சி, பந்தம் ஆந்திரம், கேரளம், கர்னடகம் ஆகியவற்றிலே பாய்ந்ததே தவிர அதைத் தாண்டிப் போகவில்லை. நீங்கள் எவ்வளவுதான் முயற்சி எடுத்துக்கொண்டாலும் அதைத் தாண்டிப்போக முடியாது. நீங்கள் முயற்சித்துக்கொண்டுதான் இருக்கிறீர்கள். ஆயினும் இந்த மூன்று இடத்திற்கு மேல் போக முடியவில்லை. அதுதான் நீங்கள் எங்களைப் பற்றிச் சாட்டுகிற பலமான குற்றச்சாட்டு. அதைப் போலவே, இந்த நான்கு பகுதிகளும் ஒரே விதமான எண்ணத்தைக் கொண்டு, ஒரே விதமான அதிகாரத்தைக் கொண்டு கூட்டு முயற்சியில் வாழ்க்கையை நடத்துவது என்பதே திராவிட நாடு. அதுதான் திராவிட நாடு என்றால் சரி என்றார் அமைச்சர். அமைச்சர் அவர்கள் சாமர்த்தியமாக அப்படியானால் பணத்தைப் பிரித்துக் கொடுத்து விட்டால் சுலபமாகப் போகிறது என்றும் கூறுவார், அவர், வக்கீலாக இருந்து இருந்து ஏற்பட்டுப்போன பழக்கம். "அப்படியானால் நீ பார்த்தாயா? வெளிச்சம் இருந்ததா? வெளிச்சம் இல்லையானால் எப்படிப் பார்த்தாய்?" இது வக்கீல் வாதம். அப்படிப்பட்ட வாதத்தை இங்கே நிலை நாட்டிக் கொள்ள முடியாது. உண்மையிலேயே "ரீஜனல் டிஸ்பாரிடி" என்ற அடிப்படைத் தத்துவம் வரவேற்கத்தக்கது. அந்த அளவுக்கு அமைச்சர் அவர்கள் உணர்ந்திருப்பதைப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைகிறேன் அதை வலியுறுத்திப் பேசி நம்முடைய மாகாணத்தின் உரிமையையும், பங்கினையும் அதிகப்படுத்த வேண்டும். வயிறார உணவு, மானத்துக்கு ஆடை, அறிவுக்குக் கல்வி, நோய் தீர மருந்து, குடியிருக்க இடம், செய்வதற்குத் தொழில், தொழிலில் போதுமான அளவு கூலி, கூலியை வைத்து வாழ்க்கை நடத்த ஆரம்பித்தால் விலைவாசி ஏறாமல் இருக்கக் கூடிய அளவுக்கு உணவு விலைக் கட்டுப்பாடு ஆகியவற்றைச் செய்து தர வேண்டும். மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உபயோகப்படுத்தக் கூடிய பணம் போக மிச்சத்தை முதலீட்டுக்குப் பயன்படுத்துவது என்ற அளவுக்குத் திட்டமிடப்பட வேண்டும். ஆகவே, நாம் நம் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமானால் "ரீஜனல் டிஸ்பாரிடி" என்று சொல்வதற்குப் பதிலாக வடக்கு தெற்கு என்று சொன்னால், பேசினால் வாய் வெந்துவிடாது ; குற்றம் வந்துவிடாது.

இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரயில்வேத் துறையில் நியாயம் கிடைக்க வேண்டும், துறைமுகத் துறையில் நியாயம் கிடைக்க வேண்டும், திரு ஸ்ரீநிவாச அய்யர் அவர்கள் சொன்னது போல் அதிராம்பட்டிணத்தை ஏன் மறந்து விட்டீர்கள்? நம்முடைய அமைச்சர் அவர்கள் [illegible] போனது இல்லையென்று நினைக்கிறேன். உண்மையிலேயே வளப் [illegible] வேண்டிய சிறு துறைமுகம் அது. பொறையாறு பகுதி [illegible]



[8th September 1960 [Sri C. N. Annadurai]

நம்முடைய மாகாணத்திலே பல்வேறு தூர்ந்து போன துறைமுகங்களை வளப்படுத்த வேண்டுமென்று சொன்னார். இவற்றையெல்லாம் அபிவிருத்தி செய்ய தக்க அளவு தொகையை கேட்டுப் பெறவேண்டும். பணமா பெரிது என்று நீங்கள் சொல்லலாம். இது இல்லாதவன் பேசுகிற பேச்சு. இல்லாதவனிடம் ஒரு ஐந்து ரூபாய் கிடைத்து விட்டால் நல்ல மல் ஜிப்பா தைத்துப் போட்டுக்கொண்டு நோட்டு இருப்பது வெளியே தெரியும்படி காட்டிக் கொண்டு போவான். மிகுந்த பணம் வைத்திருப்பவர்கள் கஜம் எட்டணா துணியை வாங்கிச் சட்டை தைத்துப் போட்டுக் கொண்டு நான் மக்களுக்காகவே இருக்கிறேன் என்று பேசுவார்கள். அவர்களுக்குத் தெரியும் எங்கெங்கே, எப்படி எப்படி தங்களுடைய செல்வாக்கை வெளிக் காட்டிக் கொள்வது என்று. ஏழையிடம் பணம் சேர்ந்தால் எப்படி அவன் அதைக் காட்டிக் கொண்டு போகிறானோ அதே போல் நம்முடைய மாகாண அமைச்சர்கள், இதோ பார் நெய்வேலி, அதோ பார் பெரம்பூர் கோச் பாக்டரி, வட நாட்டில் உள்ளவர்கள், மத்திய சர்க்கார் இவ்வளவு கொடுத்திருக்கிறார்கள் என்று பேசிக்கொண்டிருப்பது நம்முடைய எதிர்காலத்தையே பாழ் படுத்தி விடுகிறது என்பதை அவர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். ஆகையினால் அந்த வகையிலே இல்லாமல் நம்முடைய மாகாணத்தினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு, ஏழை மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயரக் கூடிய அளவுக்கு வேண்டிய பணத்தைக் கேட்டுப் பெற்றுத் திட்டங்களைத் திட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் ஆயிரம் கோடி ரூபாய் கேட்டேன் என்பதற்காக, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் வெளியிலே பேசும்போது என்னைப் பண்டாரம் என்று சொன்னார். இப்போது என்ன சொல்ல எண்ணியிருக்கிறாரோ ? கணக்குப் போட்டுப் பார்த்தால் நான் கேட்ட ஆயிரம் கோடி ரூபாய் குறைவு என்பது யாருக்கும் நன்றாகப் புரியும்.

இந்த ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி என்ன கருத்து என் போன்றவர்கள் கொள்ள இருக்கிறது என்பதை நான் ஒரு சிறு குறிப்பை உங்கள் முன்னால் எடுத்துச் சொல்லி, அதைப்பற்றி என்னுடைய கருத்து இதுதான் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

"I am unable to share the enthusiasm which has been expressed in this House for the plan."

என்று சொல்லிவிட்டு

"The Commission says that any upward movement in wages of the industrial worker at this stage would necessarily result in increasing prices."

என்று சொல்லி, தொழிலாளர்களுக்குக் கூலியை உயர்த்தினால் திட்டம் கெட்டு விடும் என்று சொல்லப்படுவதற்குத் தரப்படுகிற பதிலாக

"I am unable to understand this logic. It is a simple rule of three : If you hold prices and increase wages, profits will go down; if you hold profits and increase wages, prices will go up; if you hold profits and prices, wages will go down.

What the Commission suggests in a disguised manner is that you must hold the profit at its level and you must also hold the price at its level and inevitably lead to lowering of wages.

Sir, I am willing to make this offer. Labour is perfectly willing for a wage-freeze provided industrialists will assure us that they will charge to the people only cost plus ten per cent and nothing more."

என்று சொல்லப்படுகிறது. தேசியத்தை வளர்ப்பதற்காகவும், தொழில் துறையை அதிகப்படுத்துவதற்காகவும், திட்டங்கள் வெற்றிபெறுவதற்காகவும் நாம் தியாகம் செய்யவேண்டும், உழைப்பை நல்க வேண்டும், எல்லாக் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுவதை

[Sri C. N. Annadurai] 8th September 1960]

மனதிலே வைத்துக்கொண்டுதான் இது சொல்லப்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் அப்படிப்பட்ட ஒரு தியாக உணர்ச்சியோடு, தங்களுடைய கூலியைக் கூட உயர்த்திக் கொள்ளாமல் இருக்கச் சம்மதிக்கிறார்கள். ஆனால், எப்பொழுது ? பொருளை உற்பத்தி செய்யும் முதலாளிகள், தாங்கள் போடுகின்ற முதலுக்கு உற்பத்திச் செலவோடு கூட பத்து சத விகிதம் மட்டும் வைத்துக்கொள்ளலாம், அதற்குமேல் கேட்பதில்லையென்று தொழிலதிபர்கள் சொல்லிவிடுவார்களானால், நாங்கள் கூடத் தொழிலாளர்களை அனுகி ஊதிய உயர்வு வேண்டாமென்று சொல்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

" Why should not the Planning Commission tell the industrialists that they must charge only cost plus ten per cent and nothing more and that sacrifice is called for from the industrialists.''

இந்த வாதத்தைச் சொன்னவர் இப்பொழுது நம்முடைய சபையில் இல்லை. இப்பொழுது நம் தொழிலமைச்சராக இருக்கும் கனம் திரு. வெங்கட்டராமன் அவர்கள் தான் பாராளுமன்றத்தில் இருந்தபோது இப்படிப்பட்ட அருமையான கருத்தைச் சொன்னார்கள். "தொழிலாளர்களுக்கும் கூலியைக் குறைக்காதீர்கள் " என்று பேசினார்கள். உடனே அந்த இடத்திலேயே இதே பக்கத்திலிருந்து போயிருந்த தொழில் துறை அதிபர் திரு. கோயங்கா அவர்கள் "ஏன் ?"என்று கேட்டு, இவருக்கும் அவருக்கும் வாதங்கள் ஏற்பட்டன.

நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால், பதவி நல்லவர்களை எப்படி எப்படிக் கெடுத்துவிடுகிறது என்பதை எண்ணிப் பார்த்து அந்த வாய்ப்பு என் போன்றவர்களுக்கு என்றென்றும் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்று என்னை நானே எச்சரித்துக் கொள்வதற்கே தவிர, யாரையும் குறை சொல்வதற்காக அல்ல.

அப்படிப்பட்ட வகையில், தொழிலாளர்களுக்குக் கூலியைக் கொடுத்து, அந்தக் கூலியிலிருந்து அவர்களுக்கு ஏற்படும் மிச்சத்தைத் திருப்பிப்பெறும் ஒரு நல்ல முறையை வகுத்தால் இங்கு தொழில் அபிவிருத்தி ஏற்படும். அதற்கு நம்முடைய தொழிலமைச்சர் அவர்கள் தனியாகப் புத்தகத்தைத் தயாரித்து "இவைகளையெல்லாம் செய்யப்போகிறோம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இது அத்தனையும் பொதுத் துறையில் செய்ய இருக்கும் காரியங்களுக்காக ஏறக்குறைய இரண்டாயிரம் லட்ச ரூபாய் வெளி நாட்டுச் செலாவணி தேவைப்படுகிறது. இதைப் பெறுவதற்கு அவர்களுக்குத் தைரியம் இருக்கிறதா ? மத்திய சர்க்காரிடத்திலே அந்த உத்தரவாதம் பெற்றுவிட்டார்களா? அவர்களைக் கேட்டுக்கொண்டுதான் அத்தனையும் ஏற்பாடு செய்வதாக வகுத்தார்களா ? அல்லது இனி எடுத்துக்கொண்டு போய் கேட்கப் போகிறார்களா ? என்பது விளக்கப்பட வேண்டிய விஷயம். அவர்கள் 14 தொழில்களைப் பொதுத் துறையிலும் 34 தொழில்களைத் தனியார் துறையிலும் இங்கே ஏற்படுத்துவதாகக் கொடுத்திருக்கிறார்கள். இதைப் பற்றிய விவாதம் உண்மையிலேயே பொதுப்படையாகப் பேசப்படுவது மட்டும் போதாது என்று கருதுகிறேன்.

துறைவாரியாக, விவசாயத் துறை, தொழில் துறை, சமுதாய நலத் துறை இவை அத்தனையும் வைத்துக் கொண்டு பார்த்தால்தான் நல்லபடியான விளக்கங்களை எந்தக் கட்சியில் உள்ளவர்களும் பெற முடியும். பொதுவாக, செலவழிக்கும் பணம், கம்யூனிடி டெவலப்மெண்ட் மூலமாகச் செலவழிக்கும் பணம் ஏழை மக்களை, கிராம மக்களை முன்னேற்றிவிட்டது என்று நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் கூட மகிழ்ச்சி அடைந்தார். "இப்பொழுது எல்லாம் கிராமத்திலே போய்ப் பார்த்தால், அங்கே புதிதாக வீடு கட்டுகிறார்கள். புதிய, புதிய ஆடை கட்டிக் கொண்டிருக்கிறார்கள், ஏதோ ஒரு வகையிலே முன்னேற்றம் காண்கிறேன்", என்று அவர் கூடச் சொல்லி இருக்கிறார். "இது அத்தனைக்கும் காரணம் சமுதாய நலத் திட்டம் (கம்யூனிட்டி டெவலப்மெண்ட்)" என்று எடுத்துப் பேசியிருக்கிறார்.



[8th September 1960 [Sri C. N. Annadurai]

சமுதாய நலத் திட்டத்தைப் பற்றி பண்டித நேரு அவர்கள் சொன்னதைவிட ஆர்வத்தோடு வேறு யாரும் சொல்ல முடியாது. யாராவது சொன்னால், அவர் சொன்னதிலே ஏதேனும் பகுதியைத் தான் கவனம் வைத்துக் கொண்டு சொல்லவேண்டும். அப்படி ஆர்வத்தோடு சொல்கிறார்கள். " It has revolutionalised the village life" என்று சொல்லியிருக்கிறார். அதாவது கிராமப் புற மக்களுடைய வாழ்க்கையை அது புரட்சிகரமாக மாற்றியிருக்கிறது என்று சொன்ன அதே பண்டித நேரு அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்னால் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை நிதி அமைச்சர் அவர்கள் கூர்ந்து பார்க்கவேண்டும். பண்டித நேரு அவர்கள் ராஜ்ய சபையில் பேசியபோது சொன்னார்.:

" Community Development was brilliant for some time, but the shine has been lost and it has become officialised and the process has been slowed down. "

என்று அந்த சமுதாய நலத் திட்டமே இன்றைய தினம் அதிகாரமயமாகிவிட்டது, பலன் குறைந்து விட்டது, பளபளப்பு போய் விட்டது. சுவை கூட இல்லை என்று பண்டித நேரு அவர்கள் பேசி இருக்கிறார்கள். ஆகையால், எல்லாப் பக்கத்திலும் எதிர்பார்த்த அளவுக்குப் பலன் கிடைக்காத இந்தக் கசப்பை நாம் உட்கொண்ட போதிலும், இதை முன்னுக்கு வைத்துக் கொண்டு, "ஆகையால் திட்டம் வேண்டாம், முன்னேற்றம் வேண்டாம்" என்று சொல்லாமல் நாம் இதுவரையில் கையாண்ட பொருளாதாரத் தத்துவ முறை கேடு பயப்பது என்று உணர்ந்து, தெளிவாக, திட்டமாக, எங்களுடைய திட்டம் சமதர்மம் தான் அதிலே தனியார் துறைக்கு இந்த அளவுக்கு மேல் இடம் தரமாட்டோம் என்று அறிவித்து விட்டு, தனியார் துறையிலே இதுவரை தேங்கியிருக்கும் முதலையும் லாபத்தையும் பெறுவதற்கு வழிவகை கண்டுபிடித்து இதிலும் நம்முடைய மாநில உரிமையைப் பாதுகாக்க வழிவகை செய்து இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்திச் செல்லவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

நாங்கள் இந்தத் திட்டத்திற்குத் தோள் கொடுத்து காப்பாற்றுவோம் என்று சொல்லுவதற்கில்லை. நாங்கள் உங்களோடு உடன் இருக்கிறோம் திட்டங்களை நீங்கள் வெற்றிகரமாக நடத்தும் நேரத்தில் உண்மையிலேயே நீங்கள் எங்களிடத்தில் எந்த அளவுக்கு ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறீர்களோ அந்த அளவுக்கு ஒத்துழைப்பை நாங்கள் நிச்சயமாகத் தருவோம். ஆனால், அந்த ஒத்துழைப்பைப் பெறவேண்டுமானால், முன்னாலே நீங்கள் உடனடியாகத் தெரிவிக்க வேண்டியது—மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நெய்வேலியும், சேலத்து இரும்பும் நமக்குப் பயன்படத்தக்க அளவு முடிவு பெறுமா, அணு உலைக் கூடம் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இங்கே நிறைவேற்றப்படுமா, சேது சமுத்திரத் திட்டமும் தூத்துக்குடித் திட்டமும் இதிலே நிறைவேற்றப்படுமா, புதிய ரயில் பாதைகள் இங்கே அமைக்கப்படுவதற்கு வழி வகை இருக்குமா என்பதில் நீங்கள் உடனடியாக உத்தரவாதம் பெறவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். இந்த அமைச்சரவையின் பேரில் மக்களுக்கு இருக்கும் நம்பிக்கைப் பிரச்னையாகவே இதைக் கருதலாம். இதை அவர்கள் தீர்த்து வைப்பதற்கு உண்மையிலேயே வழிவகை இல்லையென்றால் மரியாதையாக. அரசியல் நாகரீகத்தோடு அவர்கள் பதவியிலிருந்து விலகி, மத்திய சர்க்காரிடத்திலே, "நீங்கள் எப்படியோ பார்த்துக் கொள்ளுங்கள்" என்று ஆட்சியை ஒப்படைத்து விடுவீர்களானால் பிறகு அவர்கள் இருக்கிறார்கள், மக்கள் இருக்கிறார்கள், குறுக்கே நீங்கள் இருந்து மோதிக் கொள்ளத் தேவையில்லை என்று சொல்லிக் கொள்கிறேன். வழி மறித்திருக்கும் நந்தி போல், மத்திய சர்க்காருக்கும் மக்களுக்கும் நடுவே நீங்கள் இருந்து கொண்டு, வரும் அதிர்ச்சியையெல்லாம் நீங்கள் தாங்கிக்கொள்கிறீர்கள். வரும் எதிர்ப்புகளை நீங்கள் ஏற்றுக்கொள்ளுகிறீர்கள். அதற்குத் தான் அவர்கள் உங்களைக் கட்டணம் கொடுத்து வைத்திருக்கிறார்கள் என்று எண்ணும் நேரத்தில் உங்கள் நிலையைப் பார்த்து மிக்கப் பரிதாபப்படுகிறேன். அப்படிப்பட்ட பரிதாபமான நிலையிலிருந்து தயவு செய்து [illegible]

நாட்டுத் தலைவர் ஆகுங்கள், விடுதலை வீரர் ஆகுங்கள், நாட்டை முன்னேற்றுங்கள், பொருளாதார நிபுணர்களாகுங்கள். அந்த நேரத்திலே பார்த்தால், இப்படி ஒரு பக்கம், அப்படி ஒரு பக்கம் இருக்காது, ஒரே பக்கம் தான் இருக்கும் என்பதை நான் எடுத்துச் சொல்லி, அப்படிப்பட்ட துணிவை நீங்கள் பெறுங்கள், பெறுங்கள் என்று சொல்லி, நம்முடைய கனம் நிதி அமைச்சர் அந்தத் துணிவை தேம்ஸ் நதிக்கரைக்குச் சென்ற பிறகாவது பெற்றுக்கொண்டு இந்தக் கூவம் நதிக் கரைக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அவருடைய பயணம் வெற்றிகரமாகவும், அவருடைய ஆரோக்கியம் நல்லவிதத்திலும் இருந்து, அவர்களுடைய வாழ்க்கை முறைகள் அந்த இடத்திலே அவருக்கு நல்ல பகுத்தறிவையும் நல்ல அரசியல் சிந்தனை சக்தியைத் தரத்தக்க அளவுக்கு நல்ல சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்று விரும்புகிறேன். அங்கு அவர் தேடிப் பெறும் அறிவுச் செல்வத்தை அவர் கொண்டுவந்து இங்கே தருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். டில்லியிலிருந்து செல்வத்தைக் கொண்டு வந்து தருவதற்குத் தான் அவர்களால் முடியாமற் போனாலும் அங்கு இடைக்கும் செல்வத்தை அறிவுச் செல்வத்தை, "கோட்டா". இல்லாத செல்வத்தை, "ப்ரையாரிடி" இல்லாத செல்வத்தை, நம்முடைய அமைச்சர் அவர்கள் தாராளமாகக் கொண்டுவந்து, இந்த நாட்டுக்குத் தருவார் என்று எதிர்பார்க்கிறேன். அந்தச் செல்வத்தைத் தரப்போகிற கோவைச் செல்வரை நான் மனதாரப் பாராட்டி வாழ்த்தி வழியனுப்புகிறேன். வணக்கம்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, I move the following amendment :—

" *Add* at the end the following—

' and on such consideration this House is of opinion that the Government should take effective steps for the accomplishment of the following :—

(1) More Small Scale Industries should be allotted to the Private Sector;

(2) as a beginning, the railway track from Tambaram to Villupuram should be doubled and electrified;

(3) irrigation schemes like an Anicut over the Cheyyar and Minor Irrigation schemes included in the Third Plan;

(4) steps should be taken to hold the price line at a static level; and

(5) that more facilities like tractors, fertilizers and soil researches, lift irrigation, etc., should be given to agriculturists.' "

Sri T. L. SASIVARNA THEVAR : I second the amendment, Sir.

Sri M. KALYANASUNDARAM : Sir, I move the following amendment :—

" *Add* at the end the following—

' and on such consideration this House recommends that the Government should give special emphasis to the following schemes, projects and policies among others :—

(1) Steel plant utilizing Salem iron ore and Neyveli lignite;





(2) Inter-State Irrigation Schemes for the utilization of surplus waters of the rivers flowing in adjoining States of Kerala and Andhra for mutual benefit;

(3) Development of Tuticorin into Major Port as part of the Sethusamudram Project;

(4) Nuclear Power Station for Madras; and

(5) Exploration of oil deposits in the Cauvery basin and location of a refinery.' "

Sri N. K. PALANISAMI : I second the amendment, Sir.

* Sri V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் சபா நாயகர் அவர்களே, இப்பொழுது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையானது இந்தச் சபையின் முன்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அதிலே முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 86 கோடியும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 152 கோடியும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 400 கோடியும் செலவழிப்பதாகக் கண்டிருக்கிறது. ஆனால், இந்தியா பூராவும் எடுத்துக் கொண்டால், சுமார் ரூ. 10,200 கோடி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவழிப்பதாகத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இதில், ரூ. 1,650 கோடி வரி மூலம் வசூலிக்கப்போவதாகக் கண்டிருக்கிறது. அப்படி வரி மூலம் வசூலிப்பது சம்பந்தமாக, நம்முடைய மாகாணத்தில் எவ்வளவு தூரம் வரி போடப்போகிறார்கள், எப்படி வரி போடப்போகிறார்கள் என்பதையெல்லாம் திட்டவட்டமாகச் சொல்லவில்லை. முக்கியமாக, அன்னிய நாடுகளிலிருந்து கடன் டாலர் மூலமாகவும், ஸ்டர்லிங் மூலமாகவும் நாம் வாங்கப் போகிறோம். ரூபாயாக வாங்கப் போவது இல்லை. அதைத் தவிர, "பி.எல். 480" என்ற உதவியின் கீழ் நாம் சில உணவுப் பொருள்களை வாங்கப் போகிறோம். (ஸ்ரீ எம். கலியாணசுந்தரம் : வாங்கியாகிவிட்டது) 10 வருஷங்களுக்கு முன்பு டாலர் மதிப்பு ரூ. 2¾ ஆக இருந்தது. இப்பொழுது ரூ. 5 ஆக இருக்கிறது. இன்னும் சில வருஷங்களுக்குப் பிறகு ஒரு டாலர் மதிப்பு ரூ. 20 ஆகிவிடும். அது பற்றி நாம் ஆச்சர்யப்படுவதற்கில்லை. நாம் இப்பொழுது வாங்குகின்ற கடன் அப்பொழுது பார்ப்போமானால் 4 மடங்கு அதிகமாகிவிடும். இவ்வளவு தூரம் நாம் கடன் வாங்குவதன் காரணமாக ஒரு பெரிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இவ்வளவு கடன் வாங்கியிருப்பதை எப்பொழுது எவ்வளவு காலத்தில் நாம் திருப்பிக் கொடுக்கப் போகிறோம் என்பதெல்லாம் நமக்குத் தெரியவில்லை. இம்மாதிரி அடிக்கடி வெளி நாடுகளிலிருந்தும், உள்நாட்டிலிருந்தும் கடன் வாங்கிக்கொண்டே போவதன் காரணமாக, "இன்ப்ளேஷன்" பணவீக்கம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன் காரணமாக விலைவாசிகளெல்லாம் ஏறிக் கொண்டே போகிறது. அதை நாம் எப்படி, எப்பொழுது தடுக்கப் போகிறோம் ? விலைவாசிகள் எப்பொழுது குறையப் போகிறது ? இதனுடைய முடிவு என்ன ? பிரதம மந்திரி அவர்கள் சமீபத்தில் எவ்வளவோ 'தொகை திட்டத்தின் கீழ் செலவழிக்கப்படுகிறது. ஆனால் இது எப்படியெல்லாம் எங்கே போயிற்று என்று தெரியவில்லை' என்று சொன்னார்கள். அது பற்றி கனம் நிதி அமைச்சர் அவர்கள் அவர்களுடைய பேச்சின் போது இம்மாதிரி விலைவாசிகளெல்லாம் விஷம் போல் ஏறிக்கொண்டே போவதன் காரணமாக மக்களுக்குக் கஷ்டம் விளைகிறதே தவிர, வேறு ஒன்றும் இல்லை. என்று கூட குறிப்பிட்டார்கள். முக்கியமாக என்னைப்பொறுத்தமட்டில் நான் சொல்வது என்னவென்றால், ஏதாவது இதற்கு ஒரு வழி கண்டாகவேண்டும். அப்படிக் காணாத பட்சத்தில், திட்டத்தைக் குறைத்து நடத்தவேண்டும், அல்லது பூராவாகிலும் கைவிட்டாக வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் இனிமேல் மக்களுக்கு வரி போட்டு சுமத்தக் கூடாது. அப்படி வரி போடுவதன் காரணமாக மக்கள் அதிகமாகக் கஷ்டப்பட்டு வருகிறார்கள். நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், எல்லாக் கட்சியினர் கூட்டத்தில் ஒவ்வொரு தலைவரையும்

கூப்பிட்டுப்பொதுவான குழு ஒன்று அமைத்து நாங்கள் இவைகளை யெல்லாம் பரிசீலனை செய்து கொண்டு வருகிறோம் என்று. என்னைப் பொறுத்த மட்டில் நான் அந்தக் கமிட்டிகளில் ஒரு பார்வையாளராகத் தான் இருந்து கொண்டு வருகிறேன். முக்கியமாக சர்க்கார் போட்ட திட்டங்கள் தான் அந்தக் குழுவின் பரிசீலனையால் முடிவாக ஆகியிருக்கிறது. எல்லாக் கட்சியினருடைய நோக்கம் என்னவென்றால், உற்பத்தி பெருகவேண்டும், மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவேண்டும், பொருளாதாரத் துறையில் நம்முடைய நாடு உயரவேண்டும் என்பது தான். அது பற்றி ஒருவரும் ஆட்சேபணை சொல்ல முடியாது. இவைகளையெல்லாம் நாம் எப்படிச் செய்யப்போகிறோம் என்பதைப் பற்றி எல்லாம் நன்றாகப் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும்.

நாம் சில கனரகத் தொழில்களை ஏற்படுத்தப் போகிறோம் பொதுத் துறையில். வெளிநாடுகளிலிருந்து அதற்காக சில இயந்திரங்கள் இறக்குமதி செய்யவேண்டும். அதன் காரணமாக அநேக தொழிற்சாலைகளெல்லாம் ஏற்படவேண்டும். அதற்காக நமக்கு அன்னியச் செலாவணி வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு பக்கம் அம்மாதிரியான திட்டங்களை நடத்த வேண்டியிருந்தபோதிலும், இது வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதில் குறுக்கே நிற்குமா என்பதைப் பற்றி நாம் யோசிக்கவேண்டும். அப்பொழுது காந்தி அவர்கள் சொன்னார்கள். 'Machines are eating the men who made it.' ஆனாலும் பூராவும் மெஷின்களை நிராகரிக்க முடியாது. ஓரளவுக்கு அவைகளை இறக்குமதி செய்து நாம் உற்பத்தி செய்வதற்கும், பொருளாதாரத் துறையில் முன்னேறுவதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டியது அவசியம். அப்படி இருந்தபோதிலும் அது சில கஷ்டங்களை, வேலையில்லாத் திண்டாட்டத்தை உண்டாக்குமா என்பதைப் பற்றி நாம் பரிசீலிக்க வேண்டும். சமீபத்தில் மதுரையில் பசுமலையில் மகாலக்ஷ்மி மில்லில் நிறைய மெஷினரிகள் இறக்குமதி செய்த காரணத்தினால், அநேகம் பேர்களுக்கு வேலையில்லாமல் போய், அவர்களெல்லாம் பரிதாபகரமாகத் தெருவில் நிற்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். ஆகவே, அம்மாதிரி செய்வதால் வேலையில்லாத் திண்டாட்டத்தை உண்டாக்குமா என்பதைப் பற்றி சற்று நன்றாக யோசித்துப் பார்க்க வேண்டும். இவைகளையெல்லாம் யோசித்துத் தான் அத்தியாவசியமான மெஷினரிகள் எவை தேவையோ, அவைகளையெல்லாம் இறக்குமதி செய்வதற்கு முற்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். உதாரணமாக டெக்ஸ்டைல் மில்களை எடுத்துக் கொண்டால், அதனால் கைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு பக்கம் பாதகம் ஏற்படுகிறது. அம்மாதிரி ஏற்படாமல் இருப்பதற்கு என்ன வழி வகைகளையெல்லாம் செய்திருக்கிறோம் என்பதைப் பற்றி நாம் யோசிக்க வேண்டும். கைத்தறிப் பிரசாரம் ஒரு பெரிய பிரசாரம். அவர்களுக்கு இன்னும் சரிவரப் போதுமான சலுகைகளைக் கொடுத்து அவர்களுடைய பிரசார்த்தைத் தீர்த்து வைப்பதற்கு முன் வர வேண்டும். எங்கு பார்த்தாலும் அந்தப் பிரசாரம் ஒரு பெரிய அருவருப்பை உண்டு பண்ணுகிறது. இதனால் என்ன ஏற்படுமோ என்ற பயமும் இருக்கிறது. இவைகளை யெல்லாம் தீர்ப்பதற்கு சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

முக்கியமாகச் சொல்லப் போனால், நமக்கு "பிளானிங் எகானமி" ( Planning Economy ) இல்லாததன் காரணமாக இம்மாதிரிக் குறைபாடுகள் அதிகமாக ஏற்பட்டுக் கொண்டே வருகின்றன. மத்திய சர்க்கார் நம்மிடத்தில் இவைகளைத் திணித்துப் பிளானிங் போடவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால், நாம் போடுகின்ற பிளானை நிறைவேற்றுவதற்கு மத்திய சர்க்காரிடமிருந்து எவ்வளவு உதவி வருகிறது என்பதைப் பார்க்க வேண்டும். காந்தியடிகள் இருக்கும்பொழுது பொருளாதாரத் திட்டங்களெல்லாம் போட்டிருக்கிறார்கள். "காந்தியன் எகானமி" இப்பொழுது எங்கே போயிற்று என்பதை நான் கேட்க விரும்புகிறேன். காந்தியடிகள் போட்ட திட்டங்களின்படி நடக்கிறார்களா ? ஏன் அதைக்





கைவிட்டார்கள் ? "செல்ப் ஹெல்ப்", (Self help) "டிரஸ்டிஷிப் தியரி " (Trusteeship theory) என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அவைகளை யெல்லாம் நாம் இப்பொழுது கைவிட்டுவிட்டோம். அவைகளை ஆதரிப்பதே இல்லை. அவைகளைப் பற்றிக் கவனம் செலுத்துவதே கிடையாது.

நிதி அமைச்சர் அவர்கள் ஆரம்ப உரையில் அத்தியா வசியமில்லாத சில பொருள்களெல்லாம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உற்பத்தியாகி விரயம் ஆயிற்று என்றெல்லாம் சொன்னார்கள். உண்மை. அதற்குக் காரணம் என்ன ? "அட்மினிஸ்டிரேட்டிவ் மெஷினரி" சரிவர நடக்கவில்லையா, சரிவர பரிபாலிக்கப்படவில்லையா ? சரியான திறமைசாலிகள் இல்லையா ? அதில் ஏன் கவனம் செலுத்தவில்லை ? மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் அம்மாதிரி நடக்காது என்பதற்கு என்ன உத்தரவாதம் ? மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இவை எல்லாம் சரிவர நடப்பதற்கு என்ன செய்யப்போகிறார்கள் ? இவைகளையெல்லாம் அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டும். முக்கியமாக நம்முடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் போதுமான நிபுணர்கள் இல்லை. அது ஒரு பெரிய குறை. ரஷ்யாவில் ஆரம்ப காலத்தில் அம்மாதிரி நிபுணர்கள் இல்லாததனால் தான் அப்போது போட்ட திட்டங்கள் சரிவர நடக்கவில்லை. அம்மாதிரி இல்லாமல் நமக்குப் போதுமான நிபுணர்களை ஏற்படுத்திக்கொண்டு இந்தத் திட்டங்களை யெல்லாம் ஆரம்பிக்க வேண்டும். அம்மாதிரி இல்லாத காரணத்தினால் தான் நம்முடைய திட்டங்கள் சரிவர நிறைவேறவில்லை.

(Sri S. M. Annamalai in the chair.)

அது தவிரவும், தேசீய அபிவிருத்தி, சமுதாய நலத் திட்டங்கள் மூலம், பிளாக்குகள் ஏற்பட்டு, அதன் காரணமாக, லட்சக்கணக்கான பொருள்கள் விரயமாகிறது. இம்மாதிரியான திட்டங்கள் காரணமாக ப்ளாக்குகள் ஏற்பட்ட இடங்களில், என்ன சதவிகிதம் மக்களுக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறது ? முன்பு, மத்திய இலாகா அமைச்சர் ஸ்ரீ டே அவர்கள் சொன்னார்கள், அதாவது அநேகமாக இந்தத் திட்டங்களினால் நன்மைகள் அதிகமாக ஏற்படவில்லை, நல்ல முறையிலே திட்டங்களை நடத்த வேண்டும் என்று. இப்பொழுது, மூன்றாவது திட்டத்தின் கீழ், கோடிக்கணக்கான ரூபாய்கள் இந்தத்திட்டங்களுக்கு செலவாக இருக்கிறது. இந்தத்திட்டங்களெல்லாம் நல்ல முறையிலே நடத்தப்படுமா, கிராமங்கள் எப்படி நகரங்கள் ஆக முடியும், மக்களுக்கு என்னென்ன நன்மைகள் ஏற்படமுடியும் என்பதையெல்லாம் அமைச்சரவர்கள் தங்கள் பதிலில் சொல்ல வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்ளுகிறேன். அதைப் பற்றி அநேக இடங்களில் பேசியாகி விட்டது. 11-30 a.m.

ப்ளாக்குகள் செலக்ஷன் செய்வதிலும், பிற்போக்கான இடங்கள் அப்படியே இருக்கின்றன; முற்போக்கான இடங்களை தான் எடுத்துக் கொள்ளுகிறார்கள். பிற்போக்கான இடங்களை எடுக்கப்படாமல் விடப்பட்டு இருக்கின்றன. ப்ளாக்குகள் பொறுக்குவதில், கட்சி நோக்கோடு செய்கிறார்கள். அது ரொம்பத் தப்பானது. கட்சி நோக்கத்தை விட்டுவிட்டு, உண்மையிலேயே மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு செய்ய வேண்டும். ஜில்லா ப்ளானிங் கமிட்டிகளில் அநேக சிபாரிசுகள் செய்யப்படுகின்றன. ஆனால், அவைகள் பின்னால் நிராகரிக்கப்படுகின்றன. அப்படிக்கெல்லாம் இருந்தால், எதிர்க்கட்சிக்காரர்கள், மற்ற கட்சிக்காரர்கள் எப்படி அரசாங்கத்துடன் ஒத்துழைக்க முடியும் என்று கேட்கிறேன். ஆகவே, இந்த விஷயங்களில் கட்சி நோக்கோடு பார்க்காமல், ப்ளாக்குகளை பிற்போக்கான பிராந்தியங்களுக்கு விஸ்தரித்து, கூடிய சீக்கிரம் மக்களுக்கு நன்மை செய்ய வழி தேடவேண்டும்.

மக்கள் மனுக்கள் கொடுத்தால், உடனுக்குடன் பதில் வருவதில்லை. எத்தனையோ தடவைகள் இந்த மன்றத்திலேயே அநேக அங்கத்தினர்கள் அதைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். ஆனால், குறைகள் அப்படியே இருக்கின்றன. வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவில்லை. அவைகளையும் கவனிக்க வேண்டும்.

மொத்தம் இப்பொழுது நம் நாட்டில் இருக்கும் கடன் 4,964 கோடி ரூபாய், அல்லது சுமார் 5,000 கோடி. அவ்வளவு கடன் இருந்தும், இன்னும் கடன் வாங்கினால், எப்படித் திருப்பிக் கொடுப்பது ? இப்பொழுது என்ன நினைக்கிறார்கள் என்றால், திட்டங்கள் அத்தனையும் நாமே வகுத்து, நம் காங்கிரஸ் ஆட்சி காலத்திலேயே செய்து முடிக்க வேண்டும் என்று ஆளும் கட்சியில் இருப்பவர்கள் நினைக்கிறார்கள். அதன் காரணமாக மக்கள் கஷ்டப்படுகிறார்கள். "Do not sacrifice the present for the future" அதனால் கஷ்டப்படுகிறவர்கள் மக்கள். எதிர்காலத்தில் வருபவர்களுக்கு இவர்கள் ஒன்றும் விட விரும்பவில்லை. நாமே செய்துவிடவேண்டும் என்கிறார்கள். நன்மை செய்ய வேண்டும். ஆனால், எந்தக் காலத்தில் எவ்வளவு காலத்தில் எவ்வளவு செய்ய வேண்டும் என்பதையும் யோசிக்க வேண்டும். வரிகளைப் போடக்கூடாது என்று சொல்லவில்லை. ஆனால், மக்கள் சுமக்கும் அளவுதான் போடப்படவேண்டும் என்கிறோம். அவர்களது கொடுக்கும் திறனையும் கவனிக்கவேண்டும். ஆகவே தான் அதிகவரிப் பளுவை எதிர்க்கிறோம்.

திட்டம், திட்டம் என்று போட்டு மக்களிடம் ஒரு திட்ட மனப்பான்மையைக் கிளப்புகிறார்கள். திட்டம் காரணமாக பல நன்மைகள், நல்ல காரியங்கள் ஏற்படும் என்று எண்ணி மக்கள் ஏமாறுகிறார்கள். "Control of production of wealth is the control by government of human life itself." ஆகவே, திட்டம் போடுவதால் மக்கள் முன்னேறுவதற்குப் பதில், மக்கள் அடிமைகளாக்கப்படுகிறார்கள். அந்த மனப்பான்மை போய் ஆகவேண்டும்.

(Mr. Speaker in the Chair.)

இவைகளினால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இப்பொழுது சமீபத்தில் மத்திய சர்க்கார் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால், அதன் காரணமென்ன ? விலைவாசி உயர்வினால் தான் என்பதை மறுக்க முடியாது. விலைவாசி உயர்வினால் அவர்களுக்கு, அம்மாதிரியான நிலை ஏற்பட்டது. அம்மாதிரி நிலை ஏற்படக்கூடாது.

இந்த திட்டத்தின் உண்மையான நோக்கம் என்னவென்றால், இது வோட்டுகாரணமாக, எலெக்ஷன் காரணமாகப் போடப்பட்ட திட்டம் என்று தான் வசிக்க வேண்டியிருக்கிறது. 1962 முதல் 1967 வரை திட்டம் என்றால், அவர்கள் அதுவரையில் தாங்களே ஆட்சியில் இருக்கப் போகிறோம் என்று செய்திருக்கிறார்கள். ஆகவே, திட்டம் மக்கள் நன்மைக்காக செய்யும் முறையில் அமையவில்லை. இந்தத் திட்டங்கள் காரணமாக, பணவீக்கம் ஏற்பட்டு, விலைவாசிகள் உயரப் போகின்றன. இப்படி விலைவாசிகள் உயர்ந்து கொண்டே போனால், கண்ட்ரோல் வரும். கண்ட்ரோல் வந்தால், அதன் காரணமாக கருப்பு மார்க்கெட்டு வரப்போகிறது. இப்பொழுது இன்கம்-டாக்ஸில் பார்க்கிறோம். சுமார் 1,000 கோடி வரை பதுக்கப்பட்டிருக்கிறது என்றும், வெளிவரவில்லையென்றும் மத்திய சர்க்கார் அறிக்கைகளில் பார்க்கிறோம். 295 கோடி வரை இன்கம் டாக்ஸ் வசூலிக்காமல் இருக்கிறது என்று பார்க்கிறோம். இது பரிதாபமாக இருக்கிறது. இந்தத் திட்டங்கள் போட்டாலும், பணக்காரர்கள் பணக்காரர்களாகவே இருக்கிறார்கள், ஏழை ஏழையாகவே இருக்கிறார்கள். அதைத் தடுக்க ஒரு வழியையும் காணோம்.

இப்பொழுது சமீபத்தில், கண்ட்ரோல் விஷயமாக, புட் அண்ட் அக்ரிகல்சர் மினிஸ்டர் பாராளுமன்றத்திலே, மத்திய சர்க்கார் சார்பில் சொல்லி இருக்கிறார்கள், இந்தக் கண்ட்ரோல் வருவது பற்றி. அவர்கள் சொல்வது—



The Hon. Food Minister Sri S. K. Patil of the Central Government said as follows :—

"People talk of State Trading and the State Trading is responsible for the rise in prices. If we are to artificially peg down the prices, you have to create a machinery for which the machinery itself add to the prices of commodities. But State Trading in the Punjab Government brought them a profit of 60 lakhs last year.

When the House asked him why the prices went up, he said, 'if you employ a costly machinery, the prices will go up and so we require a State Trading of the type in which we have to help the prices in not going up and be helpful to farmers'."

இம்மாதிரிச் சொல்கிறார்கள் திட்டவட்டமாக. கண்ட்ரோல்கள் வருவதால் இம்மாதிரியான குழப்பங்கள் வருகிறது. அதில் கண்டிப்பாகக் கவனம் செலுத்தியாக வேண்டும்.

விவசாயிகளுக்கு உற்பத்தியைப் பெருக்க நாம் என்ன செய்திருக்கிறோம் ? நம் தமிழகத்தில், விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுடைய தேவைகளெல்லாம் பூர்த்தியாகவில்லை. சிறு நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. நல்ல விதைகள் கிடையாது. நல்ல உரங்கள் கிடைக்கவில்லை. இவைகளை விவசாயிகள் ப்ளாக் மார்க்கெட்டில் வாங்க வேண்டியிருக்கிறது. அதனால் கஷ்டப்படுகிறார்கள். இந்த நிலையில் உணவுப் பொருளைப் பெருக்கி இருக்கிறோம் என்று சொல்வது தவறான பேச்சு, நல்ல பேச்சல்ல. உணவு உற்பத்தியாகவே இல்லை. ஏதாவது தக்க நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும். மூன்றாவது திட்டத்தின் கீழ் 500 ட்ராக்டர்கள் வாங்குவதாகச் சொல்லி இருக்கிறோம். வரும் என்கிறார்கள். இதற்கு மத்திய சர்க்கார் அந்நியச் செலவாணி கொடுப்பார்களா, இது எப்பொழுது நிறைவேறும் என்பதைப் பற்றியெல்லாம் சிந்திக்க வேண்டும். அம்மாதிரி அந்நியச் செலவாணி அதிகமாக நமக்குக் கிடைக்காத காரணத்தால்தான் நாம் அதிகமாக கஷ்டப்பட வேண்டியதாக இருக்கிறது. அதைப்பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை. அதனால் நாம் ரொம்பவும் பரிதாபகரமான நிலைமையில் இருக்கிறோம்.

தவிர மத்திய சர்க்காருடைய உணவு மந்திரியின் தலைமையில் டில்லியில் ஒரு மீட்டிங் நடந்தது. அதில் என்ன சொல்லி இருக்கிறார்கள் என்றால்

"At the Agricultural Ministers' Conference it was stated that 'it showed utter lack of co-ordination and co-operation among the Central Ministers on the vital problem of food production.' The Third Plan makes provision for 625 crores of rupees for Agriculture, 400 crores was earmarked for Community Development and National Development Works, 600 crores for major medium irrigation projects. It was also stated that there was no co-ordination between one department and another. Here also is the same thing."

அதைப்போல் நம்முடைய ராஜ்யத்தை எடுத்துக் கொண்டாலும் கோவாபரேஷனும் கோஆர்டினேஷனும் இல்லாமல் ஒவ்வொரு டிபார்டுமென்டுக்கும் பேப்பர் சுற்றிக் கொண்டே தான் இருக்கிறது. ஒரு டிபார்டுமென்டைக் கேட்டால் மற்றொரு டிபார்டுமென்டில் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆகவே ஒவ்வொரு டிபார்டுமென்டிலும் கோஆர்டினேஷனோ அல்லது கோவாபரேஷனோ கிடையாது. அதன் காரணமாகத் தான் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக உணவு இலாகாவை எடுத்துக் கொள்ளுவோம். சுமார் இருபது வருஷங்களுக்கு முன்னதாக அது அமைக்கப்பட்டது. சுமார் இருபது வருஷ காலமாக அந்த இலாகா நல்ல வேலைகளைச் செய்து வருகிறது. பி.ட்ப்ள்யூ.டி. இலாகாவில் தேவையில்லாத

ஆபீசர்களை அந்த இலாகாவிற்குத் தள்ளுகிறார்கள். அதன் காரணமாக சமீப காலத்தில் அது நன்றாக வேலை செய்யவில்லை. கல் நாட்டு விழா, திறப்பு விழா அவர்களுக்குத் தெரியாது. குளங்களை அவர்கள் மராமத்து செய்கிறார்கள். நீர்ப்பாசன வசதியெல்லாம் அவர்கள் செய்து கொடுக்கிறார்கள். அப்படி இருந்தும் பி.ட்ப்ள்யூ.டி.க்கும் உணவு உற்பத்தி இலாகாவுக்கும் கோஆர்டினேஷன் கிடையாது. அதன் காரணமாக ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். அதை ஏன் தனி டிபார்ட்மெண்டாக ஏற்படுத்தக் கூடாது என்று கேட்கிறேன். சிறிய நீர்ப்பாசன வசதிகளைச் செய்து கொடுக்க கூடிய வேலைகளை அவர்களுக்குக் கொடுக்கலாம். அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்துக் குளங்களை மராமத்து செய்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். அதற்கு வேண்டிய திட்டங்களை உடனடியாகப் போட வேண்டும். இதைப்பற்றி அநேகம் அங்கத்தினர்கள் பல தடவை பேசியிருக்கிறார்கள். நாளது வரையில் ஒன்றும் நடந்ததாக இல்லை. தவிர அவர்களை யெல்லாம் அடிக்கடி மாற்றுவதன் காரணமாக அவர்களிடத்தில் பெரிய அருவருப்பு ஏற்பட்டிருக்கிறது. அதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் நன்றாகப் பரிசீலனை செய்ய வேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நீர்ப்பாசன வசதிக்காக மத்திய சர்க்காரிடமிருந்து இரண்டு கோடி ரூபாய் வாங்குவதாகப் ப்ளான் போட்டிருக்கிறார்கள். ஆனால் நாம் எவ்வளவு தொகை செலவழிக்கிறோமோ அவ்வளவு தொகையையும் வாங்குவதற்குக் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். நமக்கு அவர்கள் கொடுக்கும் தொகையையும் எவ்வளவு சீக்கிரத்தில் செலவு செய்து திட்டங்களை முடிக்க வேண்டுமோ அவ்வளவு சீக்கிரத்தில் முடிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். அப்படி எடுத்துக் கொண்டு இன்னும் அதிகமாக வாங்கிக் கொள்வதற்கு கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். அதிகமாகச் செலவு செய்வதற்கு வசதி செய்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதே மாதிரி தான் செய்யார், பாலார், அப்பர் பெரியார் திட்டங்கள். இம்மாதிரியான திட்டங்களையெல்லாம் உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும், என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். ஹைவேஸ் டிபார்ட்மென்டை நேஷனல் ஹைவேஸ் என்று போட்டு அதை மத்திய சர்க்காரிடம் கொடுத்திருக்கிறார்கள். அதே மாதிரி நம்முடைய நாஷனல் வாட்டர் வேஸையும், இன்டர் ஸ்டேட் வாட்டர்ஸ் என்று சொல்லக் கூடியதை மத்திய சர்க்காருக்குக் கொடுத்துவிடலாம். அவர்கள் அதையெல்லாம் எடுத்துக் கொண்டு வேண்டிய நீர்ப்பாசன வசதிகளை எல்லாம் செய்வதற்குப் பரிசீலனை செய்ய வேண்டும், அப்படிச் செய்யவும் முடியும். இதன் முன்னால் ஸர். சி. பி. ராமசாமி அய்யர் காலத்திலிருந்து கங்கையையும் காவிரியையும் சேர்க்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதன்படி நாஷனல் வாட்டர் வேஸை மத்திய சர்க்காருக்கு விட்டு விட்டு இந்த மாகாண நீர்ப்பாசன வசதியை மத்திய சர்க்காரை விட்டு செய்யச் சொல்ல வேண்டும். அதற்கு வேண்டிய பரிசீலனையைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொழுது பரம்பிக்குளம் திட்டத்தை ஒருவிதமாக முடித்துக் கொண்டிருக்கிறோம். அவர்களுக்கு நாம் மூன்றில் ஒரு பங்கோ அல்லது நாலில் ஒரு பங்கோ ஜலம் கொடுத்தாலும்—அவர்களுக்கு நாம் ஏதோ அதிகமாக விட்டுக் கொடுத்துவிட்டதாகக் கேள்வி—நமது மலைப் பிராந்தியத்தில் ஜலம் ஆரம்பித்து வருவதை விட்டுக்கொடுத்து விட்டதாக ஒரு பிரச்னை எங்கு பார்த்தாலும் இருக்கிறது—அது எப்படி இருந்தாலும் அந்தத் திட்டத்தை சீக்கிரத்தில் ஆரம்பித்து அதை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொழுது ஒரு விதத்தில் அந்தத் திட்டத்தை உருவாக்கியதற்கு கனம் அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். நாஷனல் வாட்டர் வேஸை மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு வந்தால் இப்படி மாகாணங்களுக்கு இடையே ஏற்படக்கூடிய சச்சரவுகள் எல்லாம் இல்லாமல் தீர்ந்து போய் விடும். ஆகவே இதைப்பற்றி யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நேற்று திரு. கலியாணசுந்தரம் அவர்கள் பேசும்போது சுமார் 156 கோடி ரூபாய் ரயில்வே போக்குவரத்துக்கு ஒதுக்கி இருக்கிறார்கள் என்றும் ஆனால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நம்முடைய மாகாணத்திற்கு 92 லட்சம் ரூபாய் ஒதுக்கிருக்கிறார்கள் என்றும், அதில்



சென்னைக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று பார்த்தால் ஒன்றுமே இல்லை என்றும் அதாவது ஒரு நயா பைசா கூட இல்லை என்றும் குறிப்பிட்டார். அதைப் பார்த்தால் அது பரிதாபகரமாகத் தான் இருக்கிறது. ஆனால் மத்திய சர்க்காரில் என்ன சொல்லுகிறார்கள் என்றால் மதராஸைப் பற்றி ப்ராப்ளம் இல்லை என்று சொல்லுகிறார்கள். நாம் பேசாமல் இருக்கிறோம், சண்டை போட்டு வாங்கவில்லை அதனால் ப்ராப்ளம் இல்லை" என்று சொல்லுகிறார்களா என்பது தெரியவில்லை. அதைப்பற்றி சந்தேகமாக இருக்கிறது. திரு. அண்ணாதுரை அவர்கள் பேசும்போது நாம் அவர்களிடம் சண்டை போட்டு வாங்கி வரவேண்டும் என்று சொன்னார். ஆகவே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நமக்குக் கிடைப்பதை வற்புறுத்திக் கேட்டு வாங்கிகொள்வதோடு கூட இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நாம் வாங்காமல் விட்டுப்போன தொகையையும் சேர்த்து வாங்குவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி வாங்கி வந்து எவ்வளவு தூரம் நம்முடைய போக்குவரத்தை முன்னேற்றம் செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். அந்த முறையில் தாம்பரம் விழுப்புரம் பகுதியில் இரட்டை மின்சாரப் பாதையை உடனடியாக அமைக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டாக வேண்டும். மேலும் தூத்துக்குடி சேது சமுத்திரம் முதலிய மைனர் போர்டுகளை விருத்தி செய்வதற்கு எவ்வளவு தொகையை வேண்டுமானாலும் செலவு செய்து விருத்தி செய்யவேண்டும். இவைகளையெல்லாம் பெறாத பட்சத்தில் நமக்கு இருக்கிற அநேக விதமான கஷ்டங்கள் எல்லாம் தீராது. பொருளாதாரத்தில் முன்னேற்றமடைய முடியாது.

தவிர, காடு வளர்ப்புத் திட்டம் சரிவர நடைபெறவில்லை என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அநேக காடுகள் எல்லாம் இன்னும் சரிவர பராமரிக்கப்படவில்லை. முந்திரிச் செடிகளை வைப்பதில் முக்கியமாகக் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறார்களே தவிர விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க முன்வர வில்லை. விவசாயிகளுக்கு நன்மைகளைச் செய்வதற்கு ஏதாவது திட்டங்களைப் போட்டிருக்கிறோமோ? தவிர சில பிராந்தியங்களில் கால்நடை பண்ணைகள் வைத்தாக வேண்டும். நமக்கு இப்பொழுது பால் பற்றாக்குறை இருக்கிறது. நாடு பூராவும் இருக்கிறது. சென்னையைப் பொறுத்த வரைக்கும் வேண்டிய பால் கிடையாது. கல்கத்தா, பம்பாய் போன்ற இடங்களில் இரண்டு கோடி ரூபாய் செலவில் திட்டம் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். பால் உற்பத்திக்கு என்று நமக்கு ஐந்து அல்லது பத்து லட்சம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மூன்றாவது திட்டத்தில் சில கோடி. ரூபாயை ஒதுக்கி பண்ணைகளை ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொல்கிறார்கள், ஆகவே பால் பண்ணையை ஆரம்பிப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து அதை செங்கற்பட்டிலோ அல்லது சென்னைக்கு அருகாமையிலோ அமைக்க வேண்டும். இரண்டு கோடி ரூபாய்க்கு குறையாமல் ஒதுக்க வேண்டும். அப்படி ஒதுக்கி அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக மருத்துவசாலைகளை சில இடங்களில் ஏற்படுத்த வேண்டும். பல பிராந்தியங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே பல பிரதேசங்களில் மருத்துவசாலைகளை அமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். அதில் அதிகப்படியான கவனம் செலுத்த வேண்டும். கிராம ரஸ்தாக்கள் எல்லாம் ரொம்பவும் மோசமான நிலைமையில் இருக்கின்றன. அதனால் விவசாயிகள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். உணவுப் பொருள்களை வெளியே கொண்டு போவதற்கு வசதி இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தவிர நில வரியை அரை சத வீதம் உயர்த்தப்போவதாகக் கேள்விப்படுகிறோம். அப்படி உயர்த்தினால் விவசாயிகள் ரொம்பவும் கஷ்டப்படுவார்கள். அதைப்பற்றி நன்றாக யோசனை செய்து பார்க்க வேண்டும். புது வரியை எந்தக் காரணத்தைக் கொண்டும் போடக் கூடாது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதைப்பற்றிய மத்திய

சர்க்காருடைய பைனான்சிங் கமிஷனுடன் தீவிரமாக யோசிக்க வேண்டும் நோட்டை அச்சடித்துக் கொண்டே போனால் அதனால் கஷ்டம்தான் ஏற்படுகிறது. அதைக் கை விட வேண்டும். முக்கியமாக ப்ரைஸ் லெவலை கண்ட்ரோல் பண்ண வேண்டும். உற்பத்தியாளர்களுக்கும் அதை உபயோகிக்கிறவர்களுக்கும் நியாயமாக இருக்கக்கூடிய அளவில் விலையைக் கட்டுப்படுத்த வேண்டும். விலைவாசிகள் விஷம் போல் ஏறுவதால் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அப்படி உயர்வதைத் தடை செய்ய திட்டம் வகுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். 2,500 கோடி ரூபாய் அந்நிய செலாவணி மூலமாக வாங்கி இருப்பதாகச் சொன்னார்கள். இந்த 2,500 கோடி ரூபாயில் நமக்கு எவ்வளவு வரும். அதைப்பற்றி என்ன திட்டம் போட்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

முக்கியமாக நம்முடைய மாகாணத்தில் இருந்து எவ்வளவு கேட்கிறார்கள், நாம் எவ்வளவு கொடுக்கப் போகிறோம் என்பதை எல்லாம் அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முக்கியமாக இம்மாதிரி இருப்பது காரணமாக இந்தத் திட்டத்தை வாபஸ் பெறவேண்டும். மக்களுக்கு உடை, உணவு, குடியிருப்பு இடம் ஆகிய மிக அடிப்படையான வாழ்க்கை வசதிகளைக் கொடுக்கக்கூடிய வகையில் திட்டத்தை அமைக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM** : கனம் சபாநாயகர் அவர்களே இந்த விவாதத்தில் கலந்துகொண்டு நல்ல உரை வழங்கிய எல்லோருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய வைதிக கோலத்தைப்பற்றி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் இத் திட்டத்திற்கு எல்லோருடைய ஆதரவும் வேண்டுமென்று நினைப்பது போல புதுப் பிரயாணத்திற்கும் எல்லோருடைய ஆதரவும், நம்பிக்கையும் வேண்டுமென்று விரும்புகிறவன் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்த வரையில் வெவ்வேறு கருத்துடைய மக்களும்கூட இத் திட்டங்களை நிறைவேற்றுவதிலே ஒத்துழைப்புக் கொடுக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது சர்க்காருடைய கொள்கை. அந்தக் கொள்கை ஓரளவுக்கு வெற்றிபெற்றிருக்கிறது என்பதை இங்கு நடந்த விவாதம் காட்டியிருக்கிறது. அத்தகைய ஒத்துழைப்பு எல்லாத் துறைகளில் இருந்தும் கிடைக்கும் என்கிற நம்பிக்கையூட்டுகின்ற முறையில் இந்த விவாதம் அமைந்திருக்கிறது.

இதிலே இரண்டு கருத்துக்கள் இப்போது நம் முன்னால் இருக்கிறது. ஒரு கருத்து இந்தத் திட்டம் வேண்டவே வேண்டாம் என்று சொல்லக் கூடியது. இதை அனுசரித்துத்தான் எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய, ஐ.என்.டி.சி. கட்சித் தலைவரும், உப தலைவரும் பேசினார்கள். இரண்டாவது கருத்து திட்டம் வேண்டும் என்று சொல்லக்கூடியவர்கள். திட்டத்தின் மூலமாகத்தான் நாம் முன்னேற்றம் அடையக்கூடும் என்று சொல்லக் கூடியவர்கள். ஆகையால்தான் முதலிலே திட்டம் வேண்டியதே இல்லை என்று சொல்லக்கூடியவர்களுக்குச் சுருக்கமாகப் பதில் சொல்லவேண்டும் என்று நான் நினைக்கிறேன். இதுபற்றி முன்பே நிறையச் சொல்லியாகி விட்டது. இருந்தாலும்கூட மறுபடியும் அந்தக் கருத்தை வலியுறுத்திய காரணத்தினால் அதுவும் முக்கியமாக திரு. சசிவர்ண தேவர் அவர்கள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைந்தவுடன் இரண்டு வருஷங்கள் பொறுத்திருந்து பார்த்து—அந்தத் திட்டத்தினுடைய பலன்களைக் கணக்குப் போட்டுப் பார்த்து அதற்குப் பிற்பாடு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஆரம்பித்தால் என்ன என்ற கருத்தைச் சொன்னார்கள், அதற்கும் பிற்பாடு திட்டம் போடுவதற்கு அவர்கள் ஒத்துக்





கொள்வார்களோ என்னமோ எனக்குத் தெரியாது. (ஸ்ரீ டி. எல். சசிவர்ண தேவர் :—ஒத்துக்கொள்வேன்) சந்தோஷம். கணக்குப் பார்த்த பிற்பாடு இந்த திட்டம் கூடாது என்று சொல்லக்கூடியவர்களும் இருக்கிறார்கள். அவருடைய தலைவர் கருத்து என்னவோ தெரியாது (ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம் :—வெளியில் உள்ளவர்கள் பேசுவதைப்பற்றி என்ன ? இங்கே உள்ளவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றுதான் பார்க்க வேண்டும்.) இங்கேயுள்ளவர்கள் சொன்ன கருத்தையும் கொண்டு சொல்கிறேன். இரண்டு வருஷங்களுக்குத் திட்டங்களை ஒத்திப் போட்டுவிட்டு சாங்கோபாங்கமாக அதைப் பரிசீலனைசெய்து அதற்குப் பிற்பாடு செய்வது என்று சொன்னால் அதற்குள் நிலைமை எப்படி ஆகும் என்றும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்போதுள்ள நிலைமை போலவே இரண்டாண்டு கழித்தும் இருக்கும் என்றால் அப்படிச் செய்வதில் ஆட்சேபணை இல்லை. நான் முன்பு குறிப்பிட்டது போல மக்களுடைய எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகிறது. அவர்களுடைய வாழ்க்கைத் தரம் சீரழிந்துவிடாமல் இருக்க ஒவ்வொரு நாளும் முயன்றுகொண்டே இருக்கவேண்டியிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் பெருகிக்கொண்டே போகிற 2 சத விகித ஜனத் தொகை அளவுக்காவது நாம் திட்டத்தைப் போட்டாக வேண்டும். இரண்டு ஆண்டுகள் சும்மா இருந்துவிடுவது என்றால் இந்த இரண்டாண்டுக்குள்ளேயே நாம் மூழ்கிப்போய்விடுவோம். மற்ற நிகழ்ச்சிகள் நிச்சயமாக நம்மை மூழ்க அடித்துவிடும். அதில் சந்தேகம் இடையாது. ஆகையால்தான் திட்டம் போடுவதோடு மட்டும் அல்ல. நம்மோடு போட்டிபோடுகிற சிக்கல்களை, பிரச்னைகளை சமாளித்து முன்னேறுவதற்கு மிகவும் தீவிரமாகச் செயல்பட வேண்டியிருக்கிறது. நம்முடைய கஷ்டங்களை, துன்பங்களை சமாளித்துக்கொள்ள வேண்டும் என்றால் தடைபடாமல் உற்பத்தி சீராகப் பெருகிக்கொண்டே இருக்கும் படியாகச் செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே தொடர்ந்து திட்டம் போட்டுச் செயல்பட்டுக்கொண்டேதான் இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். திட்டம் வேண்டும் என்பதைப்பற்றி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களும் பேசுகின்றபோது திட்டம் வேண்டாம் என்கிற கருத்து மடிந்து போன ஒன்று. பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டின் கருத்து என்று திட்டவட்டமாகச் சொன்னார்கள். அதேமாதிரி திரு. கல்யாணசுந்தரம் அவர்களும் ஒப்புக்கொண்டு பேசியிருக்கிறார்கள். ஆகையால் நான் மறுபடியும் அந்த வாதத்தை விரிவாக்கவேண்டியது அவசியம் இல்லை என்று கருதுகிறேன். திட்டம் வேண்டும் என்று சொன்னால் சரியான திட்டமாகப் போடவேண்டும், இரண்டாவது அதை நல்லமுறையில் நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லப்பட்ட கருத்துக்களை நான் முழுக்க முழுக்க ஒப்புக்கொள்கிறேன். அந்தத் திட்டம் நல்லமுறையில் எப்படிப் போட வேண்டுமென்பதைப்பற்றியும், நமக்கு முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆகிய இரண்டிலும் ஏற்பட்டுள்ள அநுபவத்தை வைத்துக்கொண்டு இந்தத் திட்டத்தை இன்னும் எப்படி அதிகத் திறமையாக நிறைவேற்றுவது என்பதைப்பற்றியும் தீர்மானிக்க வேண்டும். இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களையும் குறைவு இல்லாமல் நிறைவேற்றிவிட்டோம் என்று சொல்வதற்கில்லை. நிறைவேற்றிய குறைந்த திட்டங்களையும் மிக நல்ல முறையில் நிறைவேற்றிவிட்டோம் என்றும் நான் சொல்வதற்குத் தயாராய் இல்லை. குறைபாடுகள் இருக்கலாம். ஒரு திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று முயற்சிக்கிறபோது நம்மையும் மீறிச் சில காரியங்கள் நடைபெற்றுவிடுகின்றன. அப்படி நமக்கு ஏற்படுகிற சிக்கல்களை எல்லாம் நம்முடைய அறிவுத் திறனைக் கொண்டு, அநுபவத்தை வைத்துக்கொண்டு குறைகளையும் சிக்கல்களையும் நீக்குவதற்கு முழு முயற்சி செய்கிறபோதுதான் வாழ்க்கையே சுவையுடையதாக இருக்கிறது. அப்படிப் போராடுவதுதான் வாழ்க்கை நியதி. ஆகவே சில குறைபாடுகள் இருக்கின்றன என்பதை ஒப்புக்கொள்ளத்தான்வேண்டும். குறைகள் இருக்கட்டும். முதல் திட்டம் பூர்த்தியாகி விட்டது. இரண்டாவது திட்டம் பூர்த்தியாகிவிட்டது. இவற்றினால் மக்களுக்கு ஏதாவது நன்மை ஏற்பட்டிருக்கிறதா என்கிற முறையிலும் பரிசீலனை செய்ய வேண்டும். அப்படிப் பார்க்கிறபோது ஒரு சிலர் கையில் பணம் குவிந்துவிட்டது என்கிற கருத்து வலியுறுத்தப்பட்டது. அதைக்

[Sri C. Subramaniam] [8th September 1960

கொஞ்சம் நன்ருகப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். கடந்த பத்தாண்டுகளில் எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கிருேம் என்பது ஒருபுறம் இருக்கட்டும்.

இன்று உணவுத் துறையை எடுத்துக்கொள்ளுங்கள். அத் துறையில் முன்பு இருந்ததை விட, எவ்வளவு கம்மியாக கணக்கு போட்டாலும்கூட, முன்புள்ளதை விட இப்பொழுது உற்பத்தி அதிகமாக பெருகியிருக்கிறது என்று கூறும்போது அதை யாராலும் மறுத்துக் கூற முடியாது. உற்பத்தி பெருகியிருக்கிறது என்று சொன்ஞல் அது ஏதோ ஒரு சில பண்ணைகளில் மட்டுமல்ல. எல்லாப் பண்ணைகளிலும் ஓரளவு உற்பத்தி பெருகியிருப்பதால் மொத்தளவில் விவசாய உற்பத்தி பெருகியிருக்கிறது என்று நான் இன்று சொல்ல முடிகிறது. அந்த உற்பத்தியின் பயனை விவசாயத்தில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்களும், சிறு நிலச்சுவான்தாரர்களும், விவசாயிகளும், கூலி வேலை செய்பவர்கள் ஒரு புறமிருக்கட்டும், எல்லோரும் உற்பத்தியின் பலனைப் பெற்றிருக்கிருர்கள். இன்று உற்பத்தி பெருகியிருக்கிறது என்று கூறும்போது அது யாருக்காக அல்லது அதை யார் பயன்படுத்துகிருர்கள் என்று பார்க்கலாம். பணம் என்ருல் அதை சேமித்து வைத்து இரும்புப் பெட்டியில் பூட்டி வைக்க முடியும். அப்படி பெட்டியில் பூட்டி வைத்துக்கொண்டிருக்கலாம். ஆனல் உணவு தான்யங்கள் எதுவாகயிருந்தாலும் சரி அவற்றை மக்கள் உண்டுதான் தீர்க்க வேண்டியிருக்கிறது. அப்படி, உண்டு தீர்க்க வேண்டுமென்று சொல்லும்போது பணக்காரர்கள் முன்பு சாப்பிட்டதைவிட இப்பொழுது அதிகமாக சாப்பிடுகிருர்கள் என்று சொல்ல முடியாது. இன்று உணவு உற்பத்தி பெருகியிருக்கும்போது, இது வரை அதிகமாக சாப்பிடாதவர்கள் தான் அதிகமாக சாப்பிட முடியுமே தவிர முன்பு வயிருர சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள் இப்பொழுது அதைவிட அதிகமாக சாப்பிட்டால் அஜீர்ணம் ஏற்பட்டு சாப்பாடு குறையத்தான் சாப்பிட நேரிடும். ஆக, முன்பு அதிகம் சாப்பிட முடியாதிருந்தவர்களுக்கும், சமுதாயத்தில் உள்ள அனைவருக்கும் தான், உணவு, உற்பத்தி செய்பவர்களுக்குத்தான் இந்த உணவு உற்பத்தி அதிகாமகியிருப்பதின் பலன் ஏற்படுகிறது. இதை யாராலும் மறுக்க முடியாது. பணத்தை வைத்துக் கணக்கு பார்க்கக் கூடாது. உற்பத்திச் செய்யப்படுகிற உணவுப் பொருள்கள் மக்களுக்கு போய் சேருகிறதா என்றுதான் பார்க்க வேண்டும். அதைத்தான் அடிப்படையாக பார்க்க வேண்டும். பின்னர், துணியை எடுத்துக்கொள்ளுங்கள். முன்பு உற்பத்தியாகிக் கொண்டிருந்ததைவிட, இப்பொழுது துணியில் உற்பத்தி அதிமாகியிருக்கிறது. நான் உயர்ந்த ரக வில்கையோ அல்லது வூலனையோ சொல்லவில்லை, சாதாரண துணியைச் சொல்கிறேன். துணி உற்பத்தி அதிகமாகும்போது அதை மக்கள் உபயோகப்படுத்தாமல் அதை வேறு விதமான உபயோகப்படுத்த முடியாது. உற்பத்தியாகும் துணி தேங்கிப் போயிருந்தால் அந்தத் தொழிலே ஸ்தம்பித்துப் போயிருக்கும். இன்று துணி உற்பத்தித் தொழில் மேலும் மேலும் வளர்ச்சியடைந்துகொண்டுதான் தான் போகிறது. ஆகவே, மேலும் மேலும் உற்பத்தியாகும் துணியை மக்கள்தான் வாங்கி உபயோகிக்கிருர்கள். ஆகவே, அதிகப்படியான உற்பத்தியாகும் துணி மக்களிடம் போய் சேரவில்லை என்று சொல்ல முடியாது. கல்வித்துறையை எடுத்துக்கொள்ளுங்கள். முன்பு ஒரு சில பள்ளிக்கூடங்கள், ஒரு சில கல்லூரிகள்தான் இருந்தன. அப்பொழுது யாருக்கு படிக்க அக்கரையிருந்தது, யாருக்கு வாய்ப்பு இருந்தது என்பதெல்லாம் நமக்கு நன்கு தெரியும். இன்று கிராமங்களில் பல பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன, பெரிய கிராமங்களில் உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. முன்பு பத்து கல்லூரிகள் இருந்ததுபோக இப்பொழுது 58 கல்லூரிகள் இருக்கின்றன. பொது மக்களின் நன்மைக்காகத்தான் இவை பயன்படுகின்றனவா இல்லையா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். இது, பணக்காரர்களுக்காக மட்டும் இருப்பதாகக் கூற முடியாது. பின்னர், வைத்திய வசதியை எடுத்துக் கொள்ளுங்கள். முன்பு எவ்வளவு ஆஸ்பத்திரிகள் இருந்தன? எவ்வளவு டாக்டர் இருந்தார்கள்? அப்பொழுது எந்தளவு வசதி இருந்தது? முன்பு வசதி பெற்றிருந்தவர்களுக்கு இப்பொழுது புது வசதி வேண்டியதில்லை. வைத்திய வசதி எவ்வளவோ பெருகியிருக்கிறது, இப்பொழுது. ஆகவே, இப்பொழுது



8th September 1960] [Sri C. Subramaniam]

வைத்திய வசதி விரிவடைந்திருக்கிறது என்ருல், முன்பு வைத்திய வசதி பெருதவர்கள், பெற முடியாதவர்கள்தான் இப்பொழுது அந்த வசதிகளைப் பெறுகிருர்கள். அடுத்தபடியாக, சைக்கிள்களை எடுத்துக்கொள்ளலாம். இங்கு மட்டும் 3 லட்சம் சைக்கிள் உற்பத்தியாகிறது, டி.ஐ. சைக்கிள்ஸில் அகிலயிந்தியாவை எடுத்துக்கொண்டால் 10 லட்சம், 12 லட்சம் சைக்கிள்கள் உற்பத்தியாகின்றன. ஆக, உற்பத்தியாகும் இந்த 12 லட்சம் சைக்கில்களை மக்கள் வாங்கும்படியான சக்தி மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறதென்ருல் உற்பத்தியின் பலன் மக்களிடம் பரவியிருக்கிறதா இல்லையா என்று பார்க்க வேண்டும். மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறதா, மக்களின் வாழ்க்கை வசதிகள் பெருகியிருக்கிறதா என்று பொதுப்படையாக கேட்காமல் ஒவ்வொரு துறையையும் எடுத்து அலசிப் பார்த்தால் இந்த பத்து ஆண்டு காலத்தில் நாம் திருப்திப்படாவிட்டாலும்கூட, நம்பிக்கை அளிக்கக் கூடிய முறையிலாவது நாம் முன்னேறிக் கொண்டிருக்கிருேம். அந்தளவு நம் வாழ்க்கை வசதி பெருகியிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

போக்கு வரத்தை எடுத்துக்கொள்ளலாம். பஸ் போக்கு வரத்து யார் கையில் இருக்கிறது என்பது ஒரு புறமிருக்கட்டும். அது பணக்காரர்களுக்கா? ஏழைகளுக்குத்தான் அதஞல் புது வசதிகள் ஏற்படுகின்றன. அவர்கள் அதை அனுபவிக்கிருர்கள், இல்லையேல் பஸ் ஓடாது. ஆக, ஒவ்வொரு துறையாக எடுத்துப் பார்க்கும்போது, மக்களின் வாழ்க்கை வசதிகள் ஓரளவாவது அதிகப்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். வாழ்க்கைத் தரம் இந்த அளவு உயர்ந்தால் போதாது, இன்னும் உயர வேண்டுமென்று சொன்ஞல், அது வேறு விஷயம். அதற்கு என்னென்ன செய்ய வேண்டுமென்று பார்க்கச் சொன்ஞல், அதை ஒப்புக்கொள்கிறேன். ஆனல், திட்டத்தில் எந்த வித பலனும் ஏற்படவில்லை என்று சொன்ஞல் அது ஒப்புக்கொள்ளக் கூடிய வாதம் அல்ல. இவ்வளவு நன்மைகள் ஏற்பட்டிருப்பினும் திட்டத்தை நிறைவேற்றுவதில், நிறைவேற்றும்போது, சில குறைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை முன்பே ஒப்புக்கொண்டேன். லோயர் பவானித் திட்டத்தைப் பார்த்தவர்களுக்கு ஒரு உண்மை விளங்கியிருக்கும். இரண்டு லட்சம் ஏக்கர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. அங்குள்ள ஒரு பெரிய வாய்க்காலில் கசிவுத் தண்ணீர் போவதைப் பார்த்தால், இவ்வளவு தண்ணீர் வீணுகப் போகிறதே என்று நினைக்க வேண்டியிருக்கும். அதன் பிறகும், 2 லட்சத்திற்கு தண்ணீர் பாய்ந்து வெள்ளாமை எடுத்திருக்கிருேம். கசிவுத் தண்ணீரைப் பார்த்துவிட்டு, இந்தத் திட்டத்திஞல் ஒரு பலனும் இல்லை என்று சொல்வார்களேயாஞல், அவர்கள் உண்மையைத் தெரிந்தவர்கள் ஆக மாட்டார்கள். அந்தக் கசிவுத் தண்ணீரைப் போல், திட்டத்தில் ஆங்காங்கு ஒரு சில குற்றங் குறைகள் ஏற்பட்டிருப்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆஞல் குற்றம் குறைகளை மட்டும் வைத்துக்கொண்டு திட்டமே சரியாக நடக்கவில்லை என்ருல் அது சரியான முடிவாக இராது. ஆகவே, இன்று திட்டம் போடுவதில் சில சிக்கல்கள் ஏற்பட்டு, சரியான முறையில் போடமலிருந்தாலும் கூட, நிறைவேற்றுவதில் பல குறைகள் இருந்தாலும் கூட, திட்டம் போட்டு அதன் அடிப்படையில் தான் நாம் முன்னேற முடியும் என்ற கருத்தை திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களும் வலியுறுத்தியதை நான் வரவேற்கிறேன், இந்த வாதம்தான் இன்னென்றுக்கும் பொருந்தும் என்ற காரணத்தால்.

(Deputy Speaker in the Chair.)

இன்று, ஒன்றுபட்ட இந்தியாவாக இருப்பதால் பல சங்கடங்கள் தோன்றுவதைப் பார்க்கிருேம். ஆஞல், அந்த சங்கடங்களை அகற்றி, திட்டங்களில் எப்படி குற்றங்கள், குறைகள் இருந்தால் அதை அகற்றிவிட்டு, அவைகளை நன்கு நடத்த முடியுமோ, அப்படியே இந்த சங்கடங்களையும் அகற்றி, நன்ருக நடத்த முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஒன்றுபட்ட இந்தியாவாக, அதில் சில சங்கடங்கள், சில சிக்கல்கள் இருந்தாலும் அவைகளை நீக்கிவிட்டு, ஒன்றுபட்ட இந்தியாவாக இருப்பது சரியா அல்லது

பிரித்துக்கொண்டுவருவது சரியா என்று ஆராயக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்றைய சூழ்நிலையில், இன்றுள்ள தொழில் நுணுக்க அடிப்படையில், இதை ஆராய்ந்து பார்ப்பது மிகவும் அவசியம். முன்பேற்ற அல்லது இன்றிருப்பது. முன்பு ஒரு சிறு நாட்டில் தொழில் நுணுக்கம் ஏற்பட்டதைப் பார்க்கிறோம். அப்படி தொழில் நுணுக்க வளர்ச்சி ஏற்பட்டு, உற்பத்தியைப் பெருக்கினார்கள். அப்படி உற்பத்தி பெருகியபோது நம்மைப் போன்ற பல நாடுகளை, அவர்கள் உற்பத்தி செய்கிற பொருள்களை விற்கும் சந்தைகளாக வைத்துக்கொண்டு, அதற்காகப் பல நாடுகள் தயாரிக்கப்பட்டு வந்தன என்றுதான் சொல்ல வேண்டும். அங்கு உற்பத்தியாகும் பொருள்களை அன்னிய நாடுகளில் விற்பனை செய்வதற்குப் போதுமான சந்தைகள் இருந்தன. ஆரம்ப காலத்தில், தொழில் நுணுக்க வளர்ச்சி ஏற்பட்ட காலத்தில் இது போல் பெருவாரியான அடிப்படையில் இயந்திர அமைப்புகள் ஏற்படவில்லை. முன்பு எடுத்துக்கொண்டால், அமெரிக்காவில் போர்ட் எவ்வளவு கார்கள் தயார் செய்தார்களோ, அது இன்றுள்ளதற்கு நூற்றில் ஒரு பங்குதான் இருக்கும். அவைகளை அமெரிக்காவிலேயே பூராவையும் விற்றுவிடவில்லை. அவைகளை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து விற்பதற்கு வாய்ப்பு இருந்தது. அப்போது அந்த அளவுக்குப் போதுமானதாக இருந்தது. இன்றைக்கு நூறு மடங்குத் தேவை அதிகரித்து இருக்கிறது. இன்றைக்கு வெளி நாடுகளில் இருக்கின்ற நிலைமையை எடுத்துக்கொண்டால், ஒரு குடும்பத்திற்கு இரண்டு மூன்று கார்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு அவர்களுக்கு உள் நாட்டிலேயே மார்க்கெட் (இன்டர்னல் மார்க்கெட்) இருக்கிறது. அந்த அளவுக்கு அவர்களுக்கு மார்க்கெட் இருப்பதால், அவர்களுடைய உற்பத்தி பொருட்கள் வெளி நாடுகளுக்குப் போனாலும் சரி, போகவில்லையானாலும் சரி, அவர்களுக்கு உள் நாட்டிலேயே போதிய அளவு அவர்களுடைய பொருட்களை விற்க முடியும் என்ற உறுதி இருக்கிறது. ஆகையினால் அவர்களைப் போன்று நாமும் தொழில்களை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்வதற்கில்லை. ∴போர்டு ஸ்தாபனத்தை எடுத்துக்கொண்டால், அவர்கள் ஆரம்பித்த போது ஏதோ 1,000 அல்லது 2,000 மோட்டார்களை தயாரித்துக்கொண்டிருந்தார்கள். அதே நிலைமையில் இப்போது அவர்களுக்கு இருந்துகொண்டிருக்க முடியாது. நாமும் அதே முறையில் பழைய நிலையிலேயே தொழில்களை பழைய இயந்திரங்களைக் கொண்டே ஆரம்பிக்க முடியாது. புதிய இயந்திரங்களை உபயோகித்துத்தான், தொழில் நுணுக்க வளர்ச்சியின் காரணமாக ஏற்பட்டு இருக்கின்ற முன்னேற்றத்தை வைத்துக்கொண்டுதான் தொழில்களை நாம் ஆரம்பிக்க முடியும். பழைய பாணியிலேயே இருக்கின்ற இயந்திரங்களை வைத்துக்கொண்டு நாம் தொழில்களை ஏற்படுத்த முடியாது என்பதையும் நாம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆகவே, இன்றைக்கு பெரிய தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லுகின்றபொழுது, அதிலும் தமிழ் நாட்டுக்கு மட்டும், அதிலும் குறிப்பாக திராவிட நாட்டுக்கு மட்டும் என்று சொல்லப்படுகிறதே, அந்த அளவுக்கு மட்டும் ஒரு மோட்டார் தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்று எடுத்துக்கொண்டால், குறைந்தது பதினாயிரம் கார்களையாவது தயாரித்தால்தான் சாதாரணமாக இந்தத் தொழிலை நாம் நடத்திக்கொண்டிருக்க முடியும். அதே சமயத்தில் இந்த பத்தாயிரம் கார்களும் நம் நாட்டிற்குள்ளேயே விற்க முடியுமா என்பதையும் வெளி நாடுகளுக்கு அனுப்ப முடியுமா என்பதையும், அதிலும் நாம் பிரிந்து போக வேண்டும் என்று சொல்லுகிற இந்த நேரத்தில், எந்த அளவுக்கு நம்முடைய உற்பத்திப் பொருட்களை செலவு செய்ய முடியும் என்பதைப் பார்த்துத்தான் இப்படிப்பட்ட தொழிலை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டியதாய் இருக்கிறது. இதிலும் நம்மைப் போன்ற பிற்போக்கு அடைந்திருக்கின்ற சிறிய சிறிய நாடுகள் எல்லாம் தொழில் வளர்ச்சியில் முன்னுக்கு வர வேண்டுமென்று முயற்சித்துக் கொண்டு வருகிறது. ஆகவே, 50 வருஷங்களுக்கு அல்லது 100 வருஷங்களுக்கு முன்னால் நம்மைப் போன்று இருந்த நாடுகள் இப்போது எப்படி இருக்கிறது என்பதை வைத்துக்கொண்டு நாம் கணக்குப் போட முடியாது. அதிலும் எல்லா நாடுகளும் தங்கள் நாட்டிலேயே எல்லா சாமான்களையும் உற்பத்தி செய்து முன்னுக்கு வரவேண்டுமென்ற எண்ணத்துடன்



தொழில்களை எல்லாம் பெருக்கிக்கொண்டு வருகின்ற பொழுது தாங்கள் உள் நாட்டிலேயே உற்பத்தி செய்கின்ற பொருட்களை வாங்குவதற்குரிய சக்தி தங்கள் நாட்டிலேயே இருக்கிறதா என்று பார்க்கின்ற அடிப்படையில் தான் இன்றைக்குப் பெரும் தொழில்களை ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது. இன்றைக்கு நாம் "ஸ்டாண்டர்ட்" மோட்டார் தொழிற்சாலையை ஆரம்பித்திருக்கிறோம். இன்னொரு மோட்டார் தொழிற்சாலையையும் ஏற்படுத்தி இருக்கிறோம். இரண்டு தொழிற்சாலைகளிலிருந்தும் உற்பத்தி செய்யக்கூடிய கார்களை நம் நாட்டிலேயே விற்க முடியும் என்ற அடிப்படையில்தான் இந்த இரண்டு தொழிற்சாலைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதே மாதிரிதான் மோட்டார் தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, லாரி தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, நமது நாட்டில் இருக்கின்ற தேவைகளை உணர்ந்துதான் இப்போது தொழிற்சாலைகளை அமைக்க முடியும். இன்றைக்கு அசோக் லே லண்ட் கம்பெனியையும் அந்த முறையில்தான் அமைத்திருக்கிறோம். இந்தியா முழுவதிற்கும் எவ்வளவு விற்க முடியும் என்பதைப் பார்த்துத்தான் இதில் நாம் உற்பத்தி செய்ய முடிகிறது. சைக்கிள் தொழிற்சாலையை எடுத்துக்கொண்டாலும், இன்றைக்கு மூன்று லட்சம் சைக்கிள்களை இப்போது இருக்கக்கூடிய சைக்கிள் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்கின்றன. இதிலும், நமது தேவையைப் பொறுத்துத்தான் உற்பத்தி செய்ய முடிகிறது. ஆகவே, இன்றைக்கு மற்ற காரியங்கள் எல்லாம் எவ்விதம் இருந்தபோதிலும் ஒரு பெரும் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்றால், நான் முன்னால் சொல்லியவற்றை எல்லாம் அடிப்படையாக வைத்துக்கொண்டுதான் நாம் திட்டங்களைப் போட வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். அதிலும் நம்மைப் போன்று பிற்போக்கான நிலையிலிருந்து இப்போது முன்னேறிக்கொண்டிருக்கும் நாடுகள் எல்லாம் உள் நாட்டு மார்க்கெட்டை நம்பித்தான் தொழில்களைப் பெரும்பாலும் ஆரம்பிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றன. அதிலும் பிற்போக்கான பகுதிகளுக்கு வலியுறுத்தக்கூடிய அம்சமாக பல நிபுணர்களும் ஆராய்ந்து சொல்லியிருப்பது, பிற்போக்கான நாடாக இருந்து, அதன் பின்னால் எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறதோ, அந்த அளவுக்குத்தான் உற்பத்தியை அந்த நாடு பெருக்க முடியுமே தவிர, பெரிய அளவுக்குப் பெருக்க முடியாது என்று சொல்லுகிறார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில் மற்ற பகுதிகள் எல்லாம் வெளி நாடுகளில் எல்லாம் ஏற்படக் கூடிய முன்னேற்றத்திற்குத் தகுந்தவாறு போட்டி போடக்கூடிய வகையில் நம் நாட்டில் தொழில்களை அமைக்கலாம் என்று சொன்னால், இன்றைக்கு நமக்கு அந்த வசதி கிடையாது. ஒரு வேளை 30, 40 வருஷங்களுக்குப் பின்னால் அவர்களையும் மீறக் கூடிய வகையில் அவர்களுடைய தொழில் நுணுக்கங்களுக்கெல்லாம் மேலாக போட்டி போடக் கூடிய வகையில் தொழில்களை ஏற்படுத்த முடியுமோ என்னவோ தெரியவில்லை. ஆனால், இப்போதுள்ள நிலைமையில் அது முடியாத காரியம்.

**Sri C. N. ANNADURAI** : உள் நாட்டு மார்க்கெட்டு இருந்தால் ஒழிய சிறிய நாடுகள் தனித்து வாழ முடியாது என்ற வாதத்தை அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன். இத்தாலிய நாடு சிறிய நாடுதான், அது உள் நாட்டு மார்க்கெட்டை மட்டும் நம்பியிருக்கவில்லை. செக்கோஸ்லேவியா நாட்டை எடுத்துக்கொண்டால் அவர்களும் அதே நிலையில்தான் இருந்துகொண்டிருக்கிறார்கள். அந்த நாட்டிலுள்ள மெஷின்களெல்லாம் நம் நாட்டுக்கு வருகின்றன. அதே போன்று நாமும் உற்பத்திப் பொருட்களை அதிகரித்த பின்னால் வேண்டிய அளவுக்கு எக்ஸ்போர்ட் மார்க்கெட்டுகளைத் தேடிக்கொள்ளலாம்.

**THE HON. SRI C. SUBRAMANIAM** : அவ்வித எக்ஸ்போர்ட் மார்க்கெட்டுகளை நாம் எவ்விதம் கண்டுபிடிப்பது? ஒன்று நாம் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களை அவர்கள் உற்பத்தி செய்யாமல் இருக்க வேண்டும், அல்லது நாம் உற்பத்தி செய்கின்ற பொருட்கள் தரம் உயர்ந்ததாக இருக்க வேண்டும். ஆகவே, எக்ஸ்போர்ட் மார்க்கெட் கிடைப்பது [illegible] எப்போதும் ஒரே மாதிரியாக இராது. அதிலும் மற்ற நாடுகள்

[illegible] போன்றே முன்னேறிக்கொண்டிருக்கின்ற சமயத்தில் [illegible] நாடுகளுக்கு அனுப்ப முடியும்? இன்றைய நிலையில் நமது [illegible] ஜெர்மனிக்கு அனுப்ப முடியுமா? முடியாது. இன்றைக்கு நம் அண்டையிலுள்ள சில நாடுகளுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறோம் என்றால் அதே பொருட்களை அவர்களும் உற்பத்தி செய்ய ஆரம்பித்து விட்டால் அந்த நாடுகளுக்கும் அனுப்ப முடியாது. நம் நாட்டைப் பொறுத்தவரையில் பல பொருட்களை வெளி நாடுகளிலிருந்து வாங்கி யாக வேண்டும். ஆகவேதான் இன்றைக்கு பிற்போக்காக இருக்கக்கூடிய நாடுகளில் எல்லாம் வாங்கக்கூடிய சக்தி உள் நாட்டில் குறைவாக இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், நூறு வருடங்களுக்குப் பின்னால், இன்றைக்கு முன்னேறியிருக்கக்கூடிய நாடுகளில் எல்லாம் வாங்கக்கூடிய சக்தி பெருகி அதற்கேற்ப தொழிற்சாலைகளையும் அமைக்கக் கூடிய ஆற்றல் ஏற்பட்டிருக்கிறது. அது வேறு விஷயம். இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில், இத்தாலி, சுவச்சர்லாண்ட் போன்ற நாடுகள் எந்த அளவில் ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையை அடைந்திருக்கிறது என்பதையும் நாம் பார்க்கவேண்டும்.

**Sri C. N. ANNADURAI** : இந்த நாட்டிலிருந்து உற்பத்தியாகக்கூடிய பொருட்களை வெளி நாடுகளுக்கு அனுப்புவதற்கு 50 வருடங்கள், 60 வருடங்கள் பொறுத்திருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. பத்து ஆண்டுகளுக்குள்ளாகவே நமது உற்பத்தியை அதிகரித்து வெளி நாடுகளுக்கு அனுப்பலாம். நாம் தயார் செய்கின்ற மோட்டார்களை அனுப்பலாம், இரும்புத் தொழிற்சாலைகளை எல்லாம் பெருக்கிய பிறகு எஃகுகளை வெளிநாட்டுக்கு அனுப்பலாம், சர்க்கரைத் தொழிலைப் பெருக்கி சர்க்கரையை அனுப்பலாம். இப்போது கூட நெய்து தொழிலுக்கு வேண்டிய பொருட்கள் நம் நாட்டிலிருந்து வெளி நாடுகளுக்குப் போய்க்கொண்டு இருக்கிறது.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : ஆனால் அவைகள் எந்த அளவு போகிறது என்பதையும் நாம் பார்க்க வேண்டும். நாம் உற்பத்தி செய்வதில் ஒரு சதமானம், அல்லது இரண்டு சதமானம் தான் பக்கத்திலுள்ள நாடுகளுக்குப் போகின்றன. அவர்களும் நம்மைப் போன்று இந்தப் பொருட்களை எல்லாம் பெருக்குவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஜெர்மனி, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு நாம் உற்பத்தி செய்கின்ற பொருட்களை அனுப்ப முடியாது. வேண்டுமென்றால் கைத்தறித் துணிகள் அவர்களுக்குப் புதிதாக இருக்கலாம். இப்படிப்பட்ட நூதனப் பொருட்களை அனுப்பலாமேத் தவிர, நம்முடைய ஸ்டாண்டர்ட் கார்களை அனுப்பினால் அவர்கள் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டார்கள். நம்முடைய காரைப் பார்த்து சிகரேட் கேஸ் மாதிரி தான் இருக்கிறது என்று சொல்லுவார்கள். ஆகவேதான், இதையெல்லாம் அடிப்படையாக வைத்துக்கொண்டுப் பார்க்க வேண்டுமே தவிர, ஒரு சில சாமான்கள் அனுப்புவதை பார்க்கக் கூடாது. அப்படி பார்ப்போமேயானால் மிகவும் குறைந்த அளவுதான் வெளி நாடுகளுக்குப் போய்க்கொண்டிருக்கிறது. அதே சமயத்தில் அண்டையில் நம்மைப்போன்ற பிற்போக்கான நிலையிலிருந்த நாடுகளும் உற்பத்தியை பெருக்குவதில் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அது வெற்றி பெறும் என்பதிலும் சந்தேகமில்லை.

இரண்டாவது அம்சமாக நாம் பார்க்க வேண்டியது இன்றைக்கு, நான் முன்பு குறிப்பிட்டது போல் வெளிநாட்டாருடைய உதவியை அல்லது இன்னொரு நாட்டினுடைய உதவியை பெற்றுத்தான் நம்முடைய தொழில்களை அமைக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை. அதில்லாமல் 50, 60 வருடங்கள் கழிந்து மற்றவர்களைப் போல் தலை முறையாக பாடுபட்டு முன்னேறினால் போதும் என்றால் இது தேவையில்லை. ஆனால் உடனடியாக பத்து ஆண்டுகளுக்குள்ளில் அல்லது 20 ஆண்டுகளுக்குள்ளில் நாம் பெரிய அளவில் முன்னேற வேண்டும் என்றால் நாம் நமக்கு வேண்டிய இயந்திரங்களை எல்லாம் நாமே உற்பத்தி செய்ய [illegible]





முடியாதகாரியம். ஆகவேதான் தொழிற்துறையாக இருந்தாலும் சரி, மற்ற துறைகளாக இருந்தாலும் சரி, அன்னிய நாட்டு உதவி நமக்கு அவசியம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடியும். ஆனால் இவைகளை எங்கே இருந்து வாங்குவது என்கின்ற விஷயத்தில், சில அபிப்பிராயங்கள் இருக்கலாம், திரு. கல்யாண சுந்தரம் அவர்கள் வேண்டுமானால் சோவியத் ரஷ்யாவிலிருந்து வாங்கலாம் என்று சொல்லுவார்கள், இன்னொருவர் அமெரிக்காவிலிருந்து வாங்கலாம் என்று சொல்லுவார்...............

(ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம் : அமெரிக்காவிடமிருந்து வாங்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லையே, இல்லாதவனுக்கு யார் கொடுத்தால் என்ன?) ஆம், இல்லாதவனுக்கு எப்போது யார் கொடுப்பார்கள் என்பதையும் நாம் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அப்படிப் பார்க்கும் போது இன்றைக்கு அந்நிய நாட்டு உதவிபெற வேண்டுமென்று சொன்னால் அதற்குப் பெரிய நாடாக இருந்தால்தான் அந்நிய நாட்டு உதவி கிடைக்குமே தவிர, சிறு சிறு நாடுகளாகப் பிரிந்து போய்விட்டால் சுலபமாக அந்நிய நாட்டு உதவி கிடைக்காது. சிறு நாடாகப் பிரிந்துவிட்டால் அதற்குப் பொருளாதார பலம் இல்லை; மனித பலம் இல்லை; வேறு பலமும் இல்லை. இன்றைக்கு நாம் பெரிய நாடாக இருக்கின்ற காரணத்தினால்தான் அந்நிய நாட்டு இயந்திரங்கள் நெய்வேலியில் குவிந்து கிடக்கின்றன. இன்றைக்கு குந்தாவில் மின்சார உற்பத்தி நிலையத்தை இந்த அளவுக்கு ஏற்படுத்த முடிகிறது. நாம் அந்நிய நாட்டு உதவியைப் பெற அடிப்படையாக இருப்பது 40 கோடி மக்களைக் கொண்ட ஒரு மாபெரும் சமுதாயமாக இருக்கும் காரணத்தினால்தான் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இன்றைக்குச் சைனாவுக்கும் ரஷ்யாவுக்கும் போட்டி ஏற்படும்போது, எவ்வளவுதான் ரஷ்யா முன்னணியில் இருந்த போதிலும் கூட சைனா 60 கோடி மக்களைக் கொண்டுள்ள காரணத்தால் அதுதான் பெரிய பலம் பொருந்திய நாடாகக் கருதப்படுகிறது. அதே போல் நம்மிடம் 40 கோடி மக்களின் மனித பலம் இருப்பதால் உலகத்தின் வெவ்வேறு பகுதிகளில் இருந்தும் உதவிகள் கிடைக்கின்றன. ஆகவேதான் இன்றைக்கு நான் திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்—எப்படித் திட்டத்தில் தப்பு ஏற்பட்டால் தப்பைத் திருத்திக் கொள்ள வேண்டுமென்ற வாதத்தை அவர்கள் சொன்னார்களோ, அதே போல் இன்றைக்கு ஒன்றாக இயங்குவதில் தவறுகள் இருந்தால், தடங்கல்கள் இருந்தால் நீக்கிக் கொள்ள முயற்சி செய்ய வேண்டுமேயொழிய அதற்காகப் பிரிந்து போய் விடவேண்டுமென்று சொல்வது சரியல்ல. திட்டத்தில் தப்பு இருப்பதால் திட்டமே வேண்டாமென்று சொல்வது எப்படி சரியில்லையோ அதே போல் இப்படி ஒன்றாக இருப்பதால் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் கூட இந்தச் சங்கடங்களை நிவர்த்தி செய்து கொள்ள முடியும் என்ற நம்பிக்கை இருக்குமானால் மற்றவர்களுக்கு வக்காலத்து வாங்கி . . . . .

**Sri C. N. ANNADURAI** : ஏற்படக்கூடிய சங்கடங்களைத் தீர்த்துக் கொள்ள முடியும், சங்கடங்கள் ஏற்பட்டால் சமாளித்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை இருப்பதால்தான் திராவிட நாடு தனியாக வேண்டும் என்று நாங்கள் சொல்கிறோம்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : நம்பிக்கை இருந்தால் இருப்பதை ஏன் வீணாகப் பிரிக்க வேண்டும்? (ஆரவாரம்) புதிதாக அப்படிப் பிரித்து அமைக்க வேண்டுமென்று சொன்னால் அதற்குக் காரணம் என்ன? இந்தச் சட்டசபையை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சொல்வதாக வைத்துக்கொண்டால், அவ்வாறு பிரிப்பதற்கான காரணத்தைச் சொல்ல வேண்டும். இதுதான் எனக்கு இஷ்டமாக இருக்கிறது என்று சொன்னால் அதை யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். சங்கடங்களைத் தீர்த்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை இருக்குமானால் . . . .

**Sri C. N. ANNADURAI** : அப்படியானால் ஒன்றுபட்டிருக்கவும் காரணமும் இல்லை. காரணமில்லாமல் ஒன்றுபடுத்தி இருப்பதால் தனியாகப் போகவேண்டுமென்று சொல்கிறோம்.

[8th September 1960

THE HON. SRI C. SUBRAMANIAM : காரணம் முன்னால் பிரிந்திருந்த [illegible]தால் அடிமைப்பட்டோம். ஒன்றுபட்டதினால் நாம் சுதந்திரம் அடைந்தோம் என்பதில் சந்தேகம் கிடையாது. (ஆரவாரம்) மறுபடியும் பிரிந்து போய் அடிமைப்பட வேண்டுமென்றால் அந்தப் பரீட்சையைச் செய்து பார்க்கலாம். அதற்கு உண்மையில் மக்கள் ஒத்துக் கொள்வார்களா ? சங்கடங்கள் என்று சொல்லும்போது அவை நிவர்த்திக்கக் கூடிய சங்கடங்கள்தான். " நீங்கள் ஒத்துக் கொள்ளவில்லையென்றால் நாங்கள் பிரிந்து போய்விடுவோம் " என்று கூற வேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படிச் சொன்னால் எப்போது மதிப்பு இருக்கும் ? கணவனும் மனைவியும் இல்லற வாழ்க்கை நடத்துகிறார்கள். ஒன்றாக இருக்கும்போது ஏதோ காரணத்தினால் "உன்னை விட்டுப் பிரிந்து போய் விடுவேன் " என்று சொன்னால் அதில் அர்த்தமிருக்கிறது. " டைவர்ஸ் " கோர்ட்டில் போய்ப் " பெட்டிஷன் " போட்ட பிறகு " உன்னைவிட்டுப் பிரிந்து போய் விடுவேன் " என்று சொன்னால் என்ன அர்த்தம் ? ஆகையால் இன்றைக்கு பிரிந்து போய்விடுவோம் என்ற மிரட்டலுக்கு மதிப்பு இருக்க வேண்டுமென்றால் நீங்கள் பிரிவினைக் கொள்கையைக் கை விட்டால் தான் மதிப்பு இருக்குமே யொழிய, அதைக் கொள்கையாக வைத்துக் கொண்டிருக்கும் வரையில் அதற்கு மதிப்பு இருக்காது. ஆகவே, அதற்குப் புதிய பலம் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், இந்தப் பிரிவினைக் கொள்கையை விட்டால் தான் நீங்கள் புதிய சக்தியைக் கொடுத்தவர்களாவீர்கள். அதை வைத்துக் கொண்டிருக்கும் வரையில் பலஹீனத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்களே தவிர, பலத்தை கொடுக்கவில்லை.

SRI C. N. ANNADURAI : அமைச்சர் அவர்களுடைய வாதம் மிகத் தவறான வாதமாக இருக்கிறது. பிரிவினைக் கொள்கையை விட்டு விட்டு பிரிவினை உணர்ச்சியைத் தெரிவிப்பது எந்த வகையான வாதம், அது எந்த வகையிலே பொருந்தும் என்று விளங்கவில்லை. அதை அமைச்சர் அவர்கள் விளக்குவாரா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்கு மேல் விளங்க வைக்கக்கூடிய சக்தி எனக்கு இல்லை. சில பேராவது இதைப் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். ஆகையினால்தான் இன்றைக்கு நாம் இதை யோசித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்னொன்றையும் நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இன்றைக்கு நாட்டிலே, மொழி அடிப்படையில் இருந்தாலும் சரி, பிரிவினை அடிப்படையிலே இருந்தாலும் சரி, வேறு முரண்பட்ட அடிப்படையிலே இருந்தாலும் சரி, கிளர்ச்சி, குழப்பம் அடிப்படையிலே இருக்குமானால் இன்றைக்கு நாம் எவ்வளவுதான் திட்டங்களைப் போட்டாலும் அதை நிறைவேற்றுவது என்பது முடியாத காரியம். இன்றைக்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நாம் இவ்வளவு நல்ல முறையில் நிறைவேற்ற முடிந்தது என்று சொன்னால் அதற்குக் காரணம் மக்கள் அமைதியான முறையில் இருந்து ஒத்துழைத்தார்கள் என்பதுதான். அதற்குப் பதிலாக நாட்டிலே எதற்கெடுத்தாலும் கிளர்ச்சி, பெயர் மாற்றக் கிளர்ச்சி, பிரிவினைக் கிளர்ச்சி, மொழி பற்றிய கிளர்ச்சி என்று ஏற்பட்டுக் கொண்டிருந்தால் கிளர்ச்சிக்கு முதலிடம் கொடுத்து விட்டு இதையெல்லாம் தள்ளிப் போட வேண்டியதாக ஏற்பட்டு விடும். இதன் காரணமாகத்தான் ஒன்று பட்ட இந்தியாவாக இருக்க வேணடும் ; அந்த ஒன்றுபட்ட இந்தியாவில் போடப்படுகின்ற திட்டங்களிலே உள்ள குறைகளை, சங்கடங்களைப் போக்கிக் கொள்ளக்கூடிய சக்தி, தன்னம்பிக்கை இருக்கிறது. அதனால் நம்முடைய உரிமைகள் எதுவும் பாதிக்கப்பட மாட்டாது ; ஒன்றாக இருக்கிற காரணத்தால் அவர்கள் சொன்னதையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்க வேண்டுமென்ற அடிப்படையில் அல்ல என்பதை நான் வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு விஷயத்தையும் நாம் மனதிலே கொள்ள வே[illegible] இன்றைக்கு வெகு சுலபமாக ரஷ்யாவில் இருப்பதை எடுத்துச் சொல்[illegible]கிறார்கள். அமெரிக்காவிலே இருப்பதை எடுத்துச் சொல்கிறார்கள் [illegible] [illegible] இன்றைக்கும் பொருளாதாரத் துறையிலே முன்னேற்றமடை[illegible]



8th September 1960] [Sri C. Subramaniam]

துள்ள நாடுகள். அப்படியிருந்தும் கூட அங்கு ஜனத்தொகை எப்படியிருக்கிறது என்றால்—சோவியத் ரஷ்யாவின் பரப்பளவு 84.73 லட்சம் சதுர மைல்கள். அதன் ஜனத் தொகை 21 கோடி 45 லட்சம். சதுர மைலுக்கு எவ்வளவு பேர் என்று கணக்குப் பார்த்தால் 25 பேர்தான் வருகிறது.

SRI M. KALYANASUNDARAMff A good part of it is Siberia

. . . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : which is rich in minerals. It is the greatest asset to Russia.

யு. எஸ். ஏ.-வை எடுத்துக் கொண்டால் பரப்பளவு 30.22 லட்சம் சதுர மைல். ஜனத் தொகை 16 கோடி 43 லட்சம். சராசரியாக சதுர மைலுக்கு 50 பேர் வருகிறது. ஆகையால் நில வளம், இயற்கை வளம் நம்முடைய நாட்டில் இருக்கும் அளவுதான் அங்கேயும் இருக்கிறது. ஆனால் இங்கே ஜனத் தொகை அதிகம். இந்தியாவில் சராசரி சதுர மைலுக்கு 304 பேர்கள் இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் 600 பேர், கேரளாவில் 1,200 பேர். ஆகையினால் இன்றைக்கு நமக்கு மக்கள் பளுவும் சாதகமாக இருப்பதற்குப் பதிலாக, பிற்போக்கான சமுதாயமாக இருக்கின்ற காரணத்தால் பாரமாக இருக்கிறது என்பதைக் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகையினால் ரஷ்யாவைப் பார்த்தோ, அமெரிக்காவைப் பார்த்தோ திட்டங்களை நம் நாட்டில் நிறைவேற்ற முடியாது. நம்முடைய நாட்டில். இருக்கக் கூடிய பல்வேறு பிரச்னைகளையும், பல்வேறு சூழ்நிலைகளையும் மனதிலே வைத்துக் கொண்டுதான் திட்டங்களை வகுக்க வேண்டியிருக்கிறது. இன்றைக்குத் திட்டம் போட்டு வேலை செய்ய வேண்டுமென்று சொல்லும்போது இது வரை திட்டம் போட்டு முன்னேற்றம் எங்கு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது கம்யூனிஸ்ட் நாடுகளிலேதான். மற்றவர்களுக்கெல்லாம் அவகாசம் இருந்தது. பத்துப் பதினைந்து தலை முறைகளாகப் பாடுபட்டு முன்னுக்கு வந்தார்கள். நாம் இன்றைக்கு பெரும் அளவு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கலாம். இதற்காக பத்துப் பதினைந்து தலைமுறைக்குக் காத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று சொல்ல முடியாது. 12-3 p.m.

அது அறிவு பரவலாக இல்லாத காலத்தில், தலை விதியே என்று ஒப்புக்கொண்டிருந்த காலத்தில் பத்துத் தலைமுறைகள் வேண்டுமென்றாலும் பொறுத்திருக்கலாம் என்று சொல்லலாம். ஆனால் இன்று அதுமாதிரி இல்லை. ஆகவே, வேகமாகச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அந்த அனுபவத்தை வைத்துக் கொண்டு, கம்யூனிஸ்டு நாடுகளில் இருக்கும் அனுபவத்தை வைத்துக் கொண்டு, நாம் ஜனநாயக அடிப்படையில். திட்டம் வகுக்கவேண்டியதாக இருக்கிறது. ஜனநாயக அடிப்படையில் நாம் இதை நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகையால் தான், இந்த அடிப்படைக்கு ஒரு புதிய தத்துவம் வேண்டுமென்று சொன்னோம். அதற்காகத்தான் சொன்னேன். கனம் அங்கத்தினர் திரு. கல்யாணசுந்தரம் அவர்களுக்கு—கம்யூனிஸ்டுக் கட்சிகாரர்களுக்கு—கம்யூனிஸ்டுத் தத்துவம் ஒன்றுதான் தத்துவமே தவிர, மற்றவை தத்துவமே அல்ல ; மற்றவைகளெல்லாம் தத்துவம் என்று சொன்னாலே, "போலிகள் அவைகளைப் போய் தத்துவம் என்று காட்டிக்கொண்டிருக்கிறார்களே" என்று சொல்லக்கூடிய அவ்வளவு ஆழ்ந்த நம்பிக்கை உள்ளவர்கள் கம்யூனிஸ்டு தத்துவத்திலே, மார்க்சீய தத்துவத்திலே.

மத வெறியின் காரணமாக தங்களுடைய மதம்தான் உண்மையான மதம், மற்றவைகளெல்லாம் ஆண்டவனிடத்திலே எடுத்துச் செல்வது அல்ல, வேறு எங்கோ சைத்தானிடத்திலே எடுத்துச் செல்லக்கூடியவை என்று சொல்கிற மாதிரி கம்யூனிஸ்டுகளுக்கு இந்த லட்சிய வெறியானது எப்படி ஏறியிருக்கிறது என்றால், தங்களுடைய தத்துவம்தான், தங்களுடைய லட்சியம் தான் உண்மையான தத்துவமாகவும், உண்மையின் லட்சியமாகவும் இருக்குமே தவிர, மற்றவைகள், " தத்துவமே [illegible]

அல்ல, லட்சியங்களோ அல்ல, மக்களைப் பாழ்படுத்தக்கூடியவை, மக்களை அடிமைப்படுத்தக்கூடியவை" என்று சொல்லக்கூடிய அளவுக்கு இருக்கிறது. உண்மையான மத வெறி பிடித்தவர்களைப் போல கம்யூனிஸ்டுகளும், அவர்களுடைய தத்துவத்திற்குமேல் வேறு ஒன்றுமே இல்லை என்ற வகையில் கூறுகிறார்கள். ஆனால், அந்த உண்மையை ஏற்றுக் கொள்ள முடியுமா, என்ன ? அதைப்போல், ஏதாவது தத்துவ ரீதியாக வகுத்துச் செய்வதைப் பார்த்து, "தத்துவப்படிக் கொண்டுவருவதாக இதை எப்படிச் சொல்லலாம் ? காரணம், ஒரு எழுத்து இருக்கிறதா இதைப் பற்றி எங்களுடைய மார்க்ஸீய தத்துவத்திலே ? மார்க்ஸீயத்திலே இல்லையென்றால் அது தத்துவமாக இருக்க முடியாது" என்ற வகையில் புது விஷயத்தைச் சொல்லி இதற்குத் தத்துவ ரீதியாக உருக் கொடுக்கப்பார்க்கின்றார். "இது எப்படி வர முடியும் ? எங்கள் வேதத்திற்கு ஒத்துவரவில்லையே" என்று நினைப்பது இயற்கைதான்.

இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள், அந்தத் திராவிட நாட்டுக் கொள்கையைக் கூட ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு, 'இந்தக் கொள்கை சரியா என்று யோசித்துப் பார்க்க வேண்டியது' என்றுதான் ஒப்புக் கொண்டாரே தவிர,......

SRI C. N. ANNADURAI : இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM : சம்பந்தம் இல்லாவிட்டால் போகிறது. இன்றைக்கு ஜனநாயக அடிப்படையிலே திட்டத்தை வகுத்து, ஜனநாயக அடிப்படையிலே நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லும்போது, அதற்கான புது சூழ்நிலை, புது அமைப்புக்களை நாம் வகுத்துக் கொள்ளக் கடமைபட்டிருக்கிறோம். அவ்வாறு வகுத்துக் கொள்ளவில்லை யென்றால் திட்டத்தை நிறைவேற்ற முடியாது. அதற்கான புதிய அறிவு, புதிய அனுபவம், புதிய ஆற்றல் இவையெல்லாம் வேண்டியதாக இருக்கிறது. அதற்காக ஒருவர் சொல்வதை, திட்டமாக அல்லது கொள்கையாக, அல்லது வேதமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது அல்ல. இதைப்போன்று விவாதிப்பதன் மூலமாக பல்வேறு கருத்துக் கொண்டவர்கள், பல்வேறு நோக்குக் கொண்டவர்கள், அவரவர்கள் சொல்லக் கூடியதையெல்லாம் வகுத்து, இணைத்து ஒரு புதிய பாதையை அமைப்பதற்கு நாம் முயற்சி செய்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்றைக்கு திராவிட நாட்டுக் கொள்கையை வலியுறுத்துகிறவர்கள் எப்படி நாம் திராவிட நாடு இல்லாமலேயே லட்சியங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்று யோசிக்க, சிந்தனையைத் தூண்ட அதுவும் கூட உதவுகிறது. இன்றைக்கு ஒரு எதிர்க் கொள்கை கூடாது என்று சொல்லவில்லை. ஆனால், அதையே விடாப்பிடியாக, எத்தனை வருஷங்களானாலும், இதுதான் எங்களுடைய கொள்கை என்று வகுத்துக் கொள்ளக் கூடாது என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். நான் முன்பே அவரைக் கேட்டுக் கொண்டேன், 'பத்து வருஷங்களுக்கு ஒத்திப் போடுங்கள்' என்று. ஆனால் இன்றைக்கு நான் கேட்டுக் கொள்வது 'திராவிட நாடு வேண்டும் என்று இன்னும் பத்து வருஷங்கள் பேசிக் கொண்டிருந்துவிட்டு, அதற்குப் பிறகு பேசுவதை விட்டுவிடுவோம்' என்று வாய்தா போட்டுவிடுங்கள் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதற்கடுத்தபடியாக, தொழிற் துறை முன்னேற்றத்திலே இன்றைக்கு தனியார் துறை, பொதுத் துறை என்பதைப்பற்றி முன்பு கனம் திரு. அண்ணாதுரை அவர்கள் வெகு அழகாகச் சொன்னார்கள். அர்த்தனாரீஸ்வரக் கொள்கையை இந்தச் சமயத்திலும் எதிர்த்துப் பேசினார்கள். இதற்கு முன்பு சொன்ன பதிலையே இப்பொழுதும் சொல்வதாக இல்லை. இன்றைக்கு நாம் யோசித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. அதற்காகத் தான் நான் மத்தியிலே குறுக்கிட்டுச் சொன்னேன். தொழில்களே இல்லாமல் போவதைவிட, தொழில் ஏற்பட்டால் பொதுத் துறையில்தான் ஏற்பட வேண்டும் என்று பார்த்துக் கொண்டிருக்காமல் தனியார் துறையில் ஏற்பட்டாலும் பரவாயில்லை, என்று ஏற்றுக் கொள்வதாகச் சொன்னேன்.



எல்லாத் தொழில்களையும் சர்க்காரே எடுத்து நடத்தக்கூடிய அமைப்பு இன்றைக்கு இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். ரஷ்யாவைப்போல் ஒரு பெரிய புரட்சி நடந்து, அம்மாதிரி ஏற்படவேண்டுமென்றால் அது வேறு விஷயம். இன்றைக்கு இருக்கும் ஜனநாயக அடிப்படையில், இந்த நிர்வாக அமைப்பை போதிய அளவு, உடனடியாக வளர்த்துக்கொள்ள, விரிவாக்கிக் கொள்ள முடியுமா என்று யோசித்துப் பார்க்கும்போது, அதில் ஓரளவுக்கு தான் செய்ய முடியும் என்ற முடிவுக்கு வருகிறோம். அப்படி ஓரளவுக்குச் செய்ய வேண்டுமென்றால், ஓரளவுக்கு இருக்கும் திறமையை எதற்காகப் பயன்படுத்துவது என்று பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அப்படிப் பார்க்கும்போது, அடிப்படையாக இருக்கும் தொழில்கள் தனியார் கையில் மாட்டிக் கொள்ளாமல், அவை பொதுத் துறையில், இருக்க வேண்டுமென்ற முறையில், சர்க்கார்த் துறையில் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று முடிவு செய்து, அந்தப் பாதையிலே நாம் போய்க்கொண்டிருக்கும் போது, அதற்கு நிர்வாக இயந்திரம் போதுமானதாக இல்லை.

ஆகையால் அடிப்படையாக இருக்கும் தொழில்களைப் பொறுத்தவரைக்கும், இருக்கிற அளவுக்குச் செய்தால் போதும், திட்டமிட்ட அளவு போக வேண்டாம் என்று நிறுத்திவிடாமல், தனியார் துறை வளரும்போது, அவர்களும் சில தொழில்களை எடுத்து நடத்த முன்வந்தால், அவர்களையும் அனுமதிக்கிறோம். அம்மாதிரி நிலைமை ஏற்பட்டால் அனுமதிக்கவேண்டியதுதான். ஆனால், அந்த நிலைமையை வேண்டுமென்றே கொண்டு வந்து, தனியார் துறைக்குக் கொடுத்தால் அது வேறு விஷயம். அந்த நிலைமை ஏற்படாது. என்னைப் பொறுத்தவரையில் சொல்வேன்—'முடிந்தாலும் முடியாவிட்டாலும் பொதுத் துறையில்தான் தொழில்கள் வர வேண்டும், தொழில்கள் வராவிட்டாலும் கூட பரவாயில்லை, தனியார்த் துறைக்கு விடக்கூடாது' என்ற வாதத்தை நான் ஒப்புக்கொள்ளத் தயாராயில்லை. அவ்வாறு பார்க்கும்போதுதான், எந்த அளவு நாம் பொதுத் துறையிலே காரியங்களை எடுத்துக்கொள்ள முடியுமோ அந்த அளவு எடுத்துக்கொள்வதோடு, தனியார்த் துறையிலும் அவரவர்கள் கொஞ்சம் பார்க்கட்டும் என்று சொல்லக்கூடிய அளவுக்குக் காரியங்களைச் செய்கின்றோம்.

பஸ் விஷயத்தில் பார்த்தால், திரும்பத் திரும்ப அதன் பேரில் ஒரே நோட்டமாக இருக்கிறது சிலருக்கு. அது எல்லாவற்றையும் சர்க்காரே எடுத்து நடத்தவேண்டுமானால், நமக்கு ஏற்பட்டிருக்கும் அனுபவத்தை வைத்துக் கொண்டு பார்க்கவேண்டும். சென்னை நகரத்தில் பஸ் ட்ரான்ஸ்போர்ட்டை நடத்திக்கொண்டு வருகிறோம். இதில் கிடைத்திருக்கும் அனுபவத்தை வைத்துக்கொண்டு எல்லாப் பக்கத்திலும் எடுத்து நடத்த முடியுமா என்று கொஞ்சம் பொறுப்பு உள்ளவர்கள் யோசித்துப் பார்த்து அதை எடுக்கவேண்டியதாக இருக்கிறது. சென்னை பஸ் ட்ரான்ஸ்போர்ட்டுக்கு வேண்டிய வண்டிகளைக் கட்ட தொழிற்சாலையை அமைத்திருக்கிறோம். அதில் எத்தனை சங்கடங்கள் சென்ற வருஷம் ஏற்பட்டன என்று பார்க்கவேண்டும். பொதுத் துறை என்று வந்தவுடனே சர்க்காரிலே இருக்கும் லாபம் முழுவதும், சர்க்காரிலே இருக்கும் நிதி வசதி முழுவதும், தொழிலாளர்கள் தங்களுடைய வசதிகளுக்காக வேண்டுமென்று கருதுகிறார்கள். அதில் ஆச்சரியப்பட முடியாது. கஷ்டப்பட்டவர்கள் இன்னும் கொஞ்சம் வேண்டுமென்று நினைக்கும்போது இதிலே எத்தனை சங்கடங்கள் ஏற்படுகின்றன என்பதைப் பார்க்கவேண்டும்.

பஸ் ட்ரான்ஸ்போர்ட் நடத்தும்போது, ஒரே இடத்தில் இருந்து பார்க்கக் கூடிய தொழில் அல்ல, அது. ஸ்டீல் ப்ளாண்ட் ஒன்று நிறுவுகிறோம் என்றால், அதை ஒரே இடத்திலிருந்து பார்க்க முடியும். ஆனால், பஸ் மூலை முடுக்குகளில் ஓடவேண்டியது. ஒரு பக்கத்தில் பஸ் ஓடவில்லை, கண்டக்டர் சரியாக நடக்கவில்லை என்றால், "பார்த்தீர்களா, சர்க்கார் பஸ் ஓடுகிற லட்சணத்தை ; இவர்களுக்குத் தான் வோட்டுப் போட்டோம்" என்று தேர்தல் மேடையிலே பேசக்கூடியவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, எந்த அளவு எடுத்துக் கொள்ள முடியும் என்று நம்முடைய சக்தியை

ஆராயக் கடமைப்பட்டிருக்கிறோம். ஒருவேளை அவர்கள் இந்தப் பக்கம் வந்து உட்கார்ந்தவுடனே அந்தச் சக்தி வளர்ந்துவிடும் என்றால், கனம் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் இந்த இடத்தில் வருகிற காலத்திலே அவர்கள் பரிசீலனை செய்யவேண்டிய விஷயம். கனம் அங்கத்தினர்கள் கவனிக்கவேண்டியது இதுதான். உடனடியாக எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளும் அளவு நிர்வாகத் திறன் இல்லை, இதைவிட முக்கியமான காரியங்கள் காத்துக் கொண்டிருக்கின்றன, அவைகளுக்கு முதலிடம் கொடுக்கவேண்டியதாக இருக்கிறது என்ற காரணத்தால்தான் இன்றைக்கு பொதுத் துறை, தனியார் துறை என்று பார்க்கும்போது, கொள்கை அளவில் மட்டுமல்ல, காரியங்கள் நடைபெற வேண்டும் என்பதை மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். இன்றைக்கிருக்கும் சூழ்நிலையில் எந்த அளவு இரண்டு துறைகளும் பணியாற்ற முடியும் என்பதை மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். பொதுத் துறையில் இல்லாவிட்டால் ஒரு காரியமும் வேண்டாமென்று இருப்போமானால், அதற்கு வேறொரு அமைப்பு இங்கே வருவதற்கு, கம்யூனிஸ்டு அமைப்பு வருவதற்கு நாம் உதவி செய்த மாதிரி ஆகும். அப்பொழுது நாம் முடிவு செய்துவிடலாம். கம்யூனிஸ்டு நாடாக ஆக்கவேண்டுமென்ற முடிவுக்கு வந்தால், அந்த முடிவு எடுத்து, நாம் பண்ணும் அளவு பண்ணலாம், இல்லாவிட்டால் இல்லை, என்று புரட்சி, பலாத்காரம் வந்து வேறு விதமாக அமைப்பு ஏற்படும். அதிலே நாம் எந்த அளவுக்குப் போகிறோமோ அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம். ஆகையால் தான் இன்றைக்கு இருக்கும் அடிப்படையிலே அதைத் தவிர வேறு முடிவுக்கு வருகிறோம்.

**Sri M. KALYANASUNDARAM** : கம்யூனிஸத்தை ஒழிப்பதுதானே உங்கள் கொள்கை ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : கம்யூனிஸ்டுக் கொள்கை இங்கு வரக்கூடாது என்பதுதான் சர்க்காருடைய கொள்கை. அதைப்பற்றி ஒளிவு மறைவு கிடையாது. அந்தக் கொள்கையில் நம்பிக்கை கிடையாது என்று இங்கு சொல்வது மட்டுமல்ல, எங்கே கேட்டாலும் சொல்வதற்குத் தயாராக இருக்கிறோம். ஒழிப்பது மட்டுமல்ல, கம்யூனிஸ்டு கட்சியை நசுக்கவேண்டுமென்பதும் எங்களுடைய கொள்கை.

**Sri M. KALYANASUNDARAM** : முயற்சி பண்ணிப் பாருங்கள்.

**The Hon. Sri C. SUBRAMANIAM**: முயற்சி பண்ணிப்பார்த்து வெற்றியும் பெற்றிருக்கிறோம். 1952–57-ல் நடந்ததைச் சீர்தூக்கிப் பார்த்தால் அவர்களுக்கே தெரியும், நசுக்கியிருக்கிறோமா இல்லையா என்பது. இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையிலே, இன்றைக்கு இருக்கக்கூடிய அமைப்பில் எந்த அளவுக்கு நாம் முன்னேறிச் செல்லவேண்டுமென்பதை யோசித்துப் பார்த்து, அதற்கான முடிவுகளை நாம் எடுத்திருக்கிறோம்.

**Sri P. S. CHINNADURAI** : ஜனநாயகத்தில் கனம் அமைச்சர் அவர்கள் நசுக்கியதாகச் சொல்லுகிறார்கள். சர்க்கார் நசுக்கவில்லை. மக்கள் நசுக்கியிருக்கிறார்கள்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : நான் ஒப்புக்கொள்ளுகிறேன் திருத்தத்தை. நான் நசுக்கவில்லை. மக்கள் நசுக்கியிருக்கிறார்கள் என்று அவர்களே சொல்லுகிறார்கள். (குறுக்கீடு) ஜனநாயகத்தில் ஐந்து வருஷத்திற்கு ஒரு முறை சந்தர்ப்பம் கொடுக்கிறோம் மக்களுக்கு. நாங்கள் அவர்கள் அதுகூட கொடுக்கவில்லை. (குறுக்கீடு) கூட்டுச் சேரவேண்டுமென்று அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

**Sri M. KALYANASUNDARAM** : நீங்கள் சேர்ந்ததைவிட [illegible] கூட்டு சேர்ந்துவிட மாட்டோம்.





**The Hon. Sri C. SUBRAMANIAM** : இன்றைக்கு இருக்கக்கூடிய அமைப்பில் நிர்வாக இயந்திரத்தை வைத்துக்கொண்டு, அனுபவத்தை வைத்துக்கொண்டு, எந்த அளவுக்கு எந்தக் காரியங்களைச் செய்ய முடியும் என்பதையெல்லாம் பரிசீலனை செய்துதான் நாம் முடிவு எடுக்கவேண்டியிருக்கிறது.

அடுத்தபடியாக, பணவீக்கத்தைப்பற்றி குறிப்பிட்டார்கள். முக்கியமாக இதில் விலை உயர்ந்துவிடுகிறது, அந்த விலை உயர்வை தடுப்பதற்காக திட்டமே இல்லாமல் செய்துவிடலாம் என்பது அவர்களுடைய கொள்கை. நான் அதற்கு இன்னொரு மாற்றுக் கொள்கை தான் சொன்னேன். முக்கியமாக தொழிலாளர்களின் பங்கு குறைந்து விடாமல் எப்படிச் செய்வது என்பதைப்பற்றி நான் சொன்னது கலியாணசுந்தரம் அவர்களுக்கு பிடிக்கவில்லை. இதற்கு என்ன ஒரு தத்துவம் கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஜனநாயக அடிப்படையிலே இன்றைக்கு மக்கள் எல்லோரும் பங்கு எடுத்துக் கொள்ளக்கூடிய முறையிலே திட்டம் வகுக்கும் பொழுது தத்துவ ரீதியிலிருந்தாலும் சரி, அல்லது நடைமுறையில் எடுத்துக் கொள்ளக்கூடிய நடவடிக்கையாக இருந்தாலும் சரி, அதுவும் யோசித்துப் பார்க்கவேண்டிய ஒன்றுதான் என்பதைத் தான் நான் வலியுறுத்தினேன். நான் சொன்ன திட்டத்தை அப்படியே எடுத்துக் கொள்ளவேண்டுமென்பதில்லை. அதையும் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும் என்று தான் சொன்னேன்.

ஆகையினால் இன்றைக்கு பணவீக்கத்தை குறைக்கவேண்டும் என்றால், எப்படி குறைக்க முடியும். அதைத் தான் நான் கலியாணசுந்தரம் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன். அடிப்படையாக இருக்கக்கூடிய பேஸிக் இண்டஸ்டிரீஸ்-க்கு முதல் இடம் கொடுக்கவேண்டுமா, அல்லது கன்ஸ்யூமர் இண்டஸ்டிரீஸ்-க்கு முதல் இடம் கொடுக்கவேண்டுமா ? 'பேஸிக் இண்டஸ்டிரீஸ்'-க்கு முதல் இடம் கொடுக்கவேண்டுமென்று அவர்களால் தான் சொல்ல முடியும். கம்யூனிஸ்டு கட்சிக்காரர்கள் தான் இன்றைக்கு 'பேஸிக் இண்டஸ்ரீஸ்'-க்கு முதல் இடம் கொடுக்க வேண்டும் என்று சொல்ல முடியும். (குறுக்கீடு) அதிலே என்னுடைய வாதத்தைச் சொல்லுகிறேன். பேஸிக் இண்டஸ்டிரீஸ் வேண்டும் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். பேஸிக் இண்டஸ்டிரீஸ்-க்கு நம்முடைய வசதிகளைக் கொண்டு போய் சேர்த்தோமானால், அந்த அளவுக்கு 'கன்ஸ்யூமர் இண்டஸ்டிரீஸ்'-ல் நாம் வசதிகளை போடமுடியாது. ஆகையால் உற்பத்தியாகக் கூடிய பொருள்கள் ஓரளவுக்குத் தான் இருக்கும். அப்படி ஓரளவுக்கு இருக்கக்கூடிய பொருள்களின் விலை உயராமல் இருக்க வேண்டுமென்று சொன்னால் எப்படிச் செய்வது ? அதிகமான சம்பளத்தையும் அவர்களிடத்திலே கொடுத்து, அவர்களுடைய வாங்கும் சக்தியை அதிகப்படுத்தி, இன்னொருபக்கம் 'பேஸிக் இண்டஸ்டிரீஸ்' ஏற்படுத்த வேண்டும் அவர்கள் வாங்கக்கூடிய சாமான்களையும் உடனடியாக உற்பத்தி செய்யக்கூடாது என்ற கொள்கையையும் ஒப்புக்கொண்டுவிட்டால், என்ன செய்வது ? கம்யூனிஸ்டு நாடுகளாய் இருந்தால் அங்கே சொன்னதைத்தான் வாங்கவேண்டும், கொடுத்ததைத்தான் சாப்பிடவேண்டும், அதற்கு மேலே ஒன்றும் செய்யக் கூடாது என்று சொல்லிவிடலாம். ஆனால், நம்முடைய நாட்டில் ஜனநாயக அமைப்பில் அம்மாதிரி செய்ய முடியாது. இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில், கன்ஸ்யூமர் இண்டஸ்ட்ரீ கூடாது, விலையும் ஏறக்கூடாது என்று சொன்னால் அது முடியாத காரியம். அதற்காக தொழிலாளர்கள் பங்கை குறைக்க வேண்டும் என்று நான் சொல்லவரவில்லை. அதற்கு பதிலாக அவர்கள் உடனடியாக உபயோகப்படுத்தக்கூடிய பணத்தை குறைத்து, சேமிப்பை அதிகப்படுத்தி, அந்த சேமிப்பை அவர்களுக்கு பின்னாலே பயன்படக்கூடிய முறையில் முதலீடு செய்யும்படி ஒரு யோசனை சொன்னேன். இதில் என்ன தவறு இருக்கிறது ? கலியாணசுந்தரம் அவர்கள் ஏதோ மூடிமறைப்பதற்காக, தொழிலாளர்கள் பேரில் ஒரு பெரிய பளுவை போடுவதற்கு தத்துவ ரீதியாக நான் முயற்சிப்பதாக சொன்னார்கள். அது எப்படி என்பது எனக்கு விளங்கவில்லை. தொழிலாளர்களுக்கு பங்கு வேண்டாம் என்று சொல்லவில்லை. இதன்மூலம் சரியான பங்கை பெறுவதற்கு

ஒரு சூழ்நிலை ஏற்படுத்தலாம். அதே சமயத்தில் அவர்கள் முதலீடு செய்வதிலிருந்தே அவர்கள் பயன் அடையும்போது அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரும். அப்படி அவர்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொள்ளும் படியான ஒரு யோசனையைத்தான் சொன்னேன். ஏதோ தத்துவ ரீதியில் தொழிலாளர்கள் மீது ஒரு பளுவை சுமத்தப்பார்க்கிறார்கள் என்று சொன்னார்கள். எதற்கு எடுத்தாலும் ஏழைப்பங்காளி, ஏழைகளை பாதுகாக்கக்கூடியவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள், தொழிலாளர்களுக்கு ஒரு நல்ல யோசனையைச் சொன்னாலும், " அது ஒரு பெரிய பூச்சாண்டி, தொழிலாளர்களுக்கு மேலும் பளுவை சுமத்துவதற்கு அப்படிச் சொல்லுகிறார்கள் " என்று சொன்னால், அது நாட்டு நன்மைக்காகச் சொல்லுவதாக இல்லை. கட்சி நன்மைக்காக, கட்சி பலத்தை வளர்ப்பதற்காக, மக்களை ஏமாற்றுவதற்காகத் தான் அப்படிச் சொல்லுகிறார்கள் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. ஆகையினால் தான் இன்றைக்கு நாம் ஒரு முக்கியமான அமைப்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது. தொழிலாளர்களுக்கு பங்கு இல்லை என்று சொல்லக்கூடிய சூழ்நிலை மாறி பங்கு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். நாட்டில் தொழில் வளர்ச்சிக்கு அதனால் பங்கம் ஏற்பட்டு விடாது. நல்ல நிலைமை தான் ஏற்படும். இந்தத் திட்டம் இல்லாவிட்டால் வேறு மாற்றுத் திட்டம் என்ன என்பதை யோசித்து, பரிசீலித்து, அதை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும் என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ரீஜனல் டிஸ்பாரிடியைப் பற்றி வலியுறுத்திப் பேசினார்கள். ரீஜனல் டிஸ்பாரிடியைப் பற்றி நான் வலியுறுத்திப் பேசிய போது கைக்கு பலம் இல்லை என்றால், கையை மட்டும் தனியாக எடுத்து அதற்கு பலம் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலே பேசவில்லை. முழு தேகமும் இருக்கவேண்டும். அதே சமயத்தில் கைக்கும் பலம் வேண்டும், காலுக்கும் பலம் வேண்டும், ஹிருதயத்திற்கும் பலம் வேண்டும். எல்லாப் பகுதிகளுக்கும் பலம் வேண்டும் என்ற முறையில் தான் பேசினேன். கால், கையை வளர்த்துவிட்டு, மூளையை வளர்க்கவில்லை என்றால் பிரயோசனமில்லை. ஹிருதயத்தை மட்டும் வளர்த்தால் பிரயோசனமில்லை. அப்பொழுது மூளையே இருக்காது, ஹிருதயமே இருக்காது. அல்லது மூளையை மட்டும் வளர்த்தால் போதாது, ஹிருதயத்தை மட்டும் வளர்த்தால் போதாது. உறுப்புகள் ஒன்றாக இருந்து, ஒரே தேகமாக இருந்து, எல்லாப் பகுதிகளையும் வளர்க்கவேண்டும். எல்லாப் பகுதிகளையும் வளர்த்துவிட்டு, ஹிருதயம் இல்லாமல் இருந்தால் அல்லது மூளை இல்லாமல் இருந்தால் பிரயோசனம் இல்லை. நாங்கள் சொல்லக்கூடியது பிரிவினை அடிப்படையில் இல்லை. இதைப் பிரிவினை அடிப்படையில் விவாதிக்காமல் . . . .

**Sri C. N. ANNADURAI:** நீங்கள் சொல்லுகிறமாதிரி வைத்தியக்கார முறையில் யார் செய்திருக்கிறார்கள் ? தலையை வளர்த்துவிட்டு, கையை சூம்ப விட்டு விட்டு, அல்லது காலை மட்டும் வளர்த்துவிட்டு செய்த அப்படிப்பட்ட அறிவாளிகள் யார் ? உங்கள் கட்சியை சேர்ந்தவர்கள் அல்லவா ? அப்பொழுது அதை தடுக்காததற்கு காரணம் என்ன ?

**The Hon. Sri C. SUBRAMANIAM:** வாஸ்தவம்தான். எங்கள் கட்சிக்காரர்கள் அப்படிச் செய்ததை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அதற்கு மாற்று யோசனை என்ன என்று கேட்டால், காலை வெட்டி, கையை வெட்டி நாங்கள் தவறு செய்திருந்தாலும், இப்பொழுது எல்லோரும் சேர்ந்து எல்லோரும் பலன் பெறக்கூடிய ஒரு திட்டத்தைச் சொல்லுவது தான் சரியான யோசனை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நாங்கள் முன்பு குற்றம் செய்ததற்காக, அவர்கள் இப்பொழுது காலையும், கையையும் தனியாகப் பிரித்து திட்டம் போட யோசனை சொன்னால், அது சரியான யோசனையாகுமா என்பதைத்தான் ஆலோசித்துப் பார்க்கவேண்டும்.

(திரு. மு. கருணாநிதி : பாகிஸ்தான் பிரிக்கப்படவில்லையா? [illegible] அதனால்தான் இத்தனை தகராறுகளும் இன்னும் தீரவில்லை. அதற்காக [illegible]



இன்னொரு தலை முறைக்கும், நமக்குப் பின்னால் வரக்கூடிய தலைமுறைக்கும் மறுபடியும் இம்மாதிரி பிரச்னையை ஏற்படுத்தி அவர்களை கஷ்டத்திற்கு ஏன் உள்ளாக்கவேண்டும் ? ரீஜனல் டிஸ்பாரிடியை கட்டாயம் போக்கவேண்டுமென்று எதற்காக சொல்லுகிறேன் என்றால், அந்த ஒற்றுமை நிலைப்பதற்காகத் தான். அப்பொழுது தான் உண்மையாகவே நல்ல பலன் இருக்க முடியும். ரீஜனல் டிஸ்பாரிடி இருக்கிற வரையிலே ஒற்றுமை உணர்ச்சி ஓரளவுக்கு பாதிக்கப்படும். ஒற்றுமை உணர்ச்சி பலப்பட வேண்டும் என்ற அடிப்படையில் தான் ரீஜனல் டிஸ்பாரிடி இருக்கக்கூடாது என்று சொல்லுகிறேனே தவிர, பிரிப்பதற்கு அல்ல. எந்த நோக்கத்துடன் இந்தப்பிரச்னை அணுகப்படுகிறது என்பதைப் பார்க்கவேண்டும். அதிலே ஒரு அடிப்படை தத்துவம் இருக்கிறது. " நானும் ரீஜனல் டிஸ்பாரிடி இருக்கக்கூடாது என்று சொல்லுகிறேன். நிதி அமைச்சர் அவர்களும் அதே மாதிரி சொல்லுகிறார்கள். ஆகையினால் அவர் எங்கள் பக்கம் வந்துவிட்டார்கள் " என்று சொல்லுவார்கள். அடிப்படை கருத்து வேற்றுமை இருக்கும்போழுது, ஒன்றுபட்டுவிட்டோம் என்று பெருமைப் பட்டுக்கொள்ளுவதில் பிரயோசனம் இல்லை என்பதைத் தான் அவர்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதெல்லாம் ஒரு புறம் இருக்க, இன்றைக்கு நாம் இந்தச் சபையை பொறுத்தவரையில் நம்முடைய ராஜ்யத்தில் என்ன நடக்கப்போகிறது, நம்முடைய ராஜ்யத்தில் என்ன பலன்கள் ஏற்படப்போகின்றன, நாம் எவ்வளவு தூரம் பணியாற்றி வருகிறோம் என்பதை வைத்துக்கொண்டுதான் பரிசீலனை செய்ய வேண்டும். நாம் பெருமைப் பட்டுக்கொள்ளுவதற்காக அல்ல, நாட்டிற்கு நல்லது ஏற்படும், மக்களுக்கு நல்லது ஏற்படும் என்பதுதான் அடிப்படை கருத்து என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆகையினால் இன்றைக்கு விரிவாக என்னென்ன காரியங்களைச் செய்வதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதை வைத்துக்கொண்டுதான் திட்டம் போட்டிருக்கிறோம். இதிலே போட்டுவிட்டார்கள், நமக்கு வரவேண்டும் என்று சொல்ல முடியாது. ஆராய்ந்து பார்த்து, பரிசீலனை செய்து பார்த்து இந்தத் தொழில்களையெல்லாம் இங்கு ஏற்படுத்துவதற்கு வசதி இருக்கிறது என்று சொல்லவில்லை. மேலாகப் பார்த்த அளவுக்கு இந்தத் தொழில்களை ஏற்படுத்துவதற்கு நமக்கு வசதிகள் இருக்கின்றன. அது நிறைவேற வேண்டுமானால், ஒரு தொழிலை எடுத்து, அதன் நுணுக்கங்களைப் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. இப்பொழுது பார்க்கிறோம், இங்கே 34 ப்ளஸ் 14 ஆக 48 என்று போட்டிருக்கிறோம். ஆனால், இதில் எல்லாம் வந்து விடும் என்பதற்கில்லை. நாளைக்கு 40 தான் வருகிறது என்றால், 8 ஏன் போச்சு என்று கேட்டால், இன்றைக்கு நமக்குத் தெரிந்த நுணுக்கங்களை வைத்துக் கொண்டுதான் செய்ய வேண்டியிருக்கிறது. நாம் இதில் சேர்க்காத தொழில்களும் வரலாம். நேற்றைக்குக்கூட, இரு நிபுணர்கள் வந்து, இரு வேறு தொழில்கள் ஏற்படுத்த முடியும் என்று சொன்னார்கள். அதைப் பரிசீலனை செய்யுங்கள் என்று அந்தத் தொழில்கள் பற்றி தாற்காலிகமாக ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். ஆகவே, இந்த திட்டங்களுக்கு வெளியிலேயும் தொழில்கள் வரத்தக்க ஏதுக்கள் இருக்கின்றன. இது ஒரு வழி காட்டும் முறையிலே தான் அமைந்திருக்கிறது. இதிலே கூறியிருப்பதெல்லாம் சாத்தியம் என்றோ, இதில் இல்லாதது எல்லாம் சாத்தியம் இல்லையென்றோ சொல்லவில்லை. ஆனால், திரு. அண்ணாதுரை சொல்லியபடி, சில தொழில்களைச் செய்துதான் ஆகவேண்டும். அப்பொழுதுதான் பொருளாதார அடிப்படையில் சில முக்கியமான நலன்களை அடைய முடியும். அதில் கருத்து வேற்றுமை ஒன்றும் இல்லை. இப்பொழுது இரும்புத் தொழில் பற்றி, அவர்கள் வலியுறுத்தியது போல், திரும்பத் திரும்ப வலியுறுத்த வேண்டிய ஒரு விஷயம் அது. பல தொழில்களின் வளர்ச்சி அதன் அடிப்படையில் இருக்கிறது. இப்பொழுது நெய்வேலி நிலக்கரி தோண்டி எடுக்கும் காலத்தில், அதை எந்த அளவுக்கு விரைவாகப் பயன்படுத்த முடியுமோ அந்த முறையில் வேறுபல தொழில்கள் அமைக்கப் படவேண்டும். அதற்கான முயற்சிகள் எடுக்கப் படவேண்டும். ஆகவே, இரும்புக் கனியை சேலத்தில் எவ்வளவு உபயோகிக்க முடியுமோ உருக்க முடியுமோ, அந்த அளவுக்கு, மனித முயற்சியால் எவ்வளவு வேகமாக முடியுமோ அந்த அளவுக்குச் செய்யத் தயாராக இருக்கிறோம்;

[Sri C. Subramaniam] [8th September 1960

செய்துகொண்டு இருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உடனடியாக ஏன் செய்யவில்லை, அது எப்படி என்று கேட்டால் கூம் ஜெர்மனிக்காரர்கள் நமக்கு விரோதியல்ல, அவர்களே சொல்லுகிறார்கள், இன்னும் சில பரீட்சைகள் செய்ய வேண்டும், அதன் பேரில் தான் இன்னின்ன இயந்திரங்கள் வேண்டும் என்பதை நிச்சயிக்க முடியும் என்று. அந்த பரீட்சைகள் வெற்றிபெருமல், இயந்திரங்களின் நுணுக்கங்கள் எப்படியிருக்கவேண்டும் என்று நிர்ணயிக்க முடியாது. ஆகவே இயந்திரங்களை அமைப்பதில், அந்தப் பரீட்சைகள் முடிவுபெறுததால்தான் தடங்கல். முன்பே குறிப்பிட்டேன், இந்தத் தொழில் சம்மந்தமாக பூர்வாங்க நடவடிக்கைகள் எல்லாம் முடிந்து விட்டன. இடம், தண்ணீர் வசதி, போக்குவரத்து வசதி, சாலைகள் அமைப்பது போன்றவைகள் உடனடியாக அமைக்க முயற்சிகளெல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கென்று ஒரு தனி "ஸெல்" இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்டில் ஏற்படுத்தப்பட்டு, ஒரு ஸ்பெஷல் அதிகாரியும் போட்டு, ஆவன செய்யப்பட்டு வருகின்றன. மனிதப் பிரயத்தினத்தால் செய்ய வேண்டுவதெல்லாம் நடந்துகொண்டு இருக்கிறது. மற்ற பரீட்சைகளும் நடக்கவேண்டுமானல், நிலக்கரி 1,000 டன் வேண்டும், அப்படி நிலக்கரி கிடைக்கும் போதுதான் அதைச் செய்ய முடியும். (ஸ்ரீ சி. என். அண்ணாதுரை : ஸெல் நெய்வேலி கார்பொரேஷனிலா இருக்கிறது? இல்லை, இல்லை இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்டிலேயே தனியாக இருக்கிறது அந்த ஸ்டீல் ப்ளாண்ட் பெருகவேண்டுமானல், லிக்னைட் தோண்டியெடுக்கும் அளவுக்குத் தான் அது இருக்கும். தர்மல் ப்ளாண்ட் வரப்போகிறது ; பர்ட்டிலைசர் ப்ளாண்ட், ப்ரிகெடிங் ப்ளாண்ட் இவையும் வந்துவிடும். அந்த மூன்றும் வந்தால், அப்பொழுது ஸ்டீலுக்கு நிலக்கரி இல்லாமல் போகும். இன்று எதிர்பார்க்கும் 4.5 மிலியன் டன்கள் போதாது. அதைப் பெரிய அளவுக்கு விரிவு படுத்த வேண்டும். நிபுணர்கள் 6 அல்லது 7 மிலியன் டன்கள் எடுக்கமுடியும் என்று சொல்லுகிறார்கள். இரும்பு தொழிற்சாலை வரும்போது, லிக்னைடில் நல்ல பெருக்கம் இருக்கும். அதற்கு நாங்கள் முதல் இடம் கொடுத்திருக்கிறோம் என்று இந்தச் சபைக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தலைவருக்கும் சொல்லிக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக தூத்துக்குடிக்கு பெரிய முக்கியத்துவம் கொடுத்திருக்கிறோம். அதை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே எடுத்து நடத்திவிட வேண்டும் என்பது நோக்கம். அதில் இன்னொரு சங்கடம் இருக்கிறது. சேது சமுத்திரம் என்னவாகிறது என்பது ஒரு பெரிய பிரச்னை. அதோடு இணைக்கப்பட்ட திட்டமாகச் செய்தால், பிற்பாடு எடுத்துக்கொண்டால், அதற்குள் மூன்றாவது திட்டம் தீர்ந்துபோய்விடும். இன்றைக்கும் கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். அதை விரைவு பண்ணவேண்டுமென்று. சேது சமுத்திரம் வந்தால்தான் இதை எடுக்க வேண்டுமென்ற நிலைமை இல்லை. மீடியம் போர்ட்ஸ் கமிட்டி பரிசீலனைப் படி தூத்துக்குடி சேது சமுத்திர அடிப்படையில் இல்லை. அதைத் தனிப்பட்ட அளவில் செய்தாலும், வரும்படி வரும் என்று தெரிவித்திருக்கிறார்கள். சேது சமுத்திரம் வந்தால் இணைக்கப்பட்ட திட்டமாகச் செய்யலாம். இல்லாவிட்டால், தனிப்பட்ட முறையில் மூன்றாவது திட்டக் காலத்திலேயே ஆரம்பிக்கலாம் என்று வலியுறுத்தி வருகிறேன். ஆகையினால், ஒத்திப் போய்விடும் என்று நினைத்து, அம்மாதிரி விவாதத்திற்கு இடம் கொடுக்கவேண்டாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) தனியாக இருந்தாலும் லாபகரமாக இருக்கும். ரெயில்வே போக்குவரத்து வசதி பற்றிச் சொன்னார்கள். ஒப்புக்கொள்ளுகிறேன் ; ரெயில்வே போதுமான அளவு ஏற்படவில்லை என்பது உண்மைதான். ஆனால், சில பேர்கள் நினைக்கிறார்கள். பழனி போன்று, எங்கெல்லாம் யாத்திரா மார்க்கங்கள் இருக்கின்றனவோ அவைகளை இணைக்க வேண்டும் என்று. அது போல் கன்யாகுமரிக்கும் திருநெல்வேலிக்கும் ரெயில் இணைக்க வேண்டும் என்கிறார்கள். ஆனால், நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புவது என்னவென்றால், எங்கெங்கு தொழில்கள் ஏற்படுகிறதோ, ஏற்பட இருக்கின்றதோ, அந்தத் தொழில்களுக்கு ஏற்ப ரெயில் பாதைகளைப் புதிதாகப் போடவோ, அல்லது இரட்டிப்பு செய்ய ஆர்வம் காட்ட



8th September 1960] [Sri C. Subramaniam]

வேண்டும். அந்த அடிப்படையில் பரிசீலனை செய்யவேண்டும். இன்னும் சிலர் நினைப்பார்கள், இது பிற்போக்கான இடம், ஆகவே இங்கே ரெயில் பாதை அமைக்க வேண்டும் என்று. வாஸ்தவம். வசதி இருந்தால், பண்ணலாம். ஆனால், புதிய, புதிய தொழில்கள் ஏற்படும்போது, அவற்றிற்கு இணையாக பாதைகளை அமைக்கத் திட்டம் போட வேண்டியது அவசியமாகிறது. அதற்கு முதல் இடம் கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையில், புதுப் பாதைகள் அமைக்கவோ, அல்லது இரட்டிப்பு செய்யவோ சிபார்சு செய்தால், அப்படி வலியுறுத்தும்போது, அந்தந்தத் தொழில்களும் சீக்கிரமாக வர ஏதுவாக இருக்கும். ரெயில்வே வர வேண்டும் என்ற நிலைமையும், தொழில் வரவேண்டும் என்ற நிலையும் இணைந்து செல்லும். ஆகவே, இன்றைக்கு ஸ்டீல் ப்ளாண்ட் வரவேண்டும் என்று கூறும்போது, அங்கே ரெயில் வசதிகளும் பெருகவேண்டும் என்பது இரண்டும் இணைக்கப்பட்ட திட்டங்களாக பரிசீலனை செய்ய சௌகரியமாக இருக்கும். தொழில்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டால், கட்டாயம் ரெயில்வேக்களுக்கும் வசதி ஏற்பட்டே தீரும்.

அடுத்தபடியாக வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றிக் குறிப்பிடப்பட்டது ; இன்றைக்கு வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுப்பது என்றால், கதர் நூல் நூற்பதைச் செய்கிறோம் ; அதில் நாள் ஒன்றுக்கு ஆறு அணா அல்லது எட்டு அணா கிடைக்கும். ஆனால் அதெல்லாம் போதுமா என்று பார்க்க வேண்டும். உண்மையான வேலை வாய்ப்புகள் கொடுக்க வேண்டும் என்று சொல்லும்போது, வாழ்க்கை வசதி பெருக, குடும்பத்தை நடத்த சௌகரியமாகச் செய்து கொடுத்தால்தான் உண்மையான வேலையாக அது இருக்க முடியும். அதை எப்படி ஏற்படுத்துவது. 1-00 p.m.
இன்றைக்கு ஒருவருக்கு எப்படி வேலை வாய்ப்பு கொடுப்பது என்பதைப் பற்றி யோசிக்க வேண்டியதாக இருக்கிறது. அதற்கு எந்த அளவு முதலீடு செய்ய வேண்டும் என்றும், அப்படி எந்த அளவு செய்தால் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதையும் யோசிக்க வேண்டியதாக இருக்கிறது. அந்த அடிப்படையில் முதலீடு செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதை நிபுணர்கள் கணக்குப் பார்த்திருக்கிறார்கள். அப்படிக் கணக்குப் பார்த்ததில் சாதாரணமாக வேலை கொடுக்க வேண்டுமானல் குறைந்தது ஏழு ஆயிரம் ரூபாய்க்கு முதலீடு செய்தாக வேண்டும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இது ரொம்பவும் கம்மியாக போட்டிருக்கிறார்கள். மற்ற நாடுகளில் அந்த அளவைப் பார்த்தால் குறைந்தது 8,850 ரூபாய் அளவுக்குப் போட்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். குறைந்தது ஏழாயிரம் ரூபாய் என்று வைத்துக்கொண்டாலும் இன்றைக்கு முதல் திட்டத்தின் மூலமாக ஒரு கோடி பேருக்கு மேல் வேலை கொடுத்திருக்க வேண்டும். அந்த அளவில் திட்டம் போட்டிருந்தோம். அதைப் போலவே இரண்டாவது திட்ட காலத்தில் எழுபது லட்சம் பேர்களுக்கு வேலை இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்தக் கணக்குப்படி பார்த்தால் மூன்றாவது திட்டத்தில் ஒரு கோடி பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அப்படிக் கொடுத்தால்தான் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கமுடியும். இப்படி ஏழாயிரம் ரூபாய் என்று கணக்குப் போட்டதில்தான் ஒரு கோடி எழுபதாயிரம் பேர்கள் என்ற கணக்கு வந்திருக்கிறது. அந்த அடிப்படையில் பார்த்தால் இன்னும் எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டியதாக ஏற்படும் என்பதைப் பார்க்க வேண்டும். இனிமேல் புதியதாக வேறு வரப்போகிறது. அதற்கு வேறு முதலீடு செய்ய வேண்டியதாக இருக்கிறது. இப்பொழுது நாம் மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திற்கு 10,200 கோடி ரூபாய் போட்டிருக்கிறோம். அப்படி போட்டிருப்பது பெரிது இல்லை. வேலையில்லாத் திண்டாட்டத்தை கவனிக்கும்போது உற்பத்தியை வேறு பெருக்க வேண்டியதாக இருக்கிறது, அதை வைத்துக்கொண்டு. அதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். டேக் ஆப் வேறு இருக்கிறது. அப்படி கணக்குப் பார்த்தால் இந்த அளவு போதாது. அதற்கு மேல் இன்னும் அதிகமாக வேறு வேண்டியதாக இருக்கிறது. இப்பொழுது ஒதுக்கியதை வைத்துக்கொண்டு வேலை வாய்ப்பை மட்டும் கொடுப்பது என்பது அல்ல. எல்லோருக்கும் கல்வி வசதி வேறு செய்து கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க

வேண்டியதாக இருக்கிறது. வைத்திய வசதி செய்து கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. இப்படி பல வசதிகளைச் செய்து கொடுப்பதோடு தொழிலில் ஈடுபடுவதற்கும் முதலீடு வேறு செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதற்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த வசதிகளை மக்களுடைய சக்தியிலிருந்தும் சமுதாயத்திலிருந்தும்தான் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. மக்களுடைய சக்தியைத் திரட்டிக் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அதற்கு வரி போட்டோ அல்லது கடன் எழுப்பியோ கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. இப்படி எந்த வகையிலாவது கொடுக்க கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் எதிர்க்கட்சி தலைவர் சொல்லுகிறார் புது வரிகளைப் போடக் கூடாது என்று. அப்படிப் புது வரிகளைப் போடுவதாக இருந்தால் திட்டங்களே வேண்டாம் என்றும் சொல்லுகிறார்கள். வரி போடாமல் திட்டம் வகுக்க வேண்டும் என்று சொல்வது எந்த விதத்திலும் பொருந்தாது. வரி போடும்போது யாருக்கு வரி போட வேண்டும் என்பதைப் பார்த்துத்தான் போடப்படும். எந்த இடத்தில் எந்த அளவு போடவேண்டுமோ அந்த அந்த அளவுதான் போடப்படும் என்பதைப் பற்றி பரிசீலனை செய்து பார்த்துத்தான் போடப்படும். போடுகிற வரி தாங்கக்கூடிய இடத்தில்தான் போடப்படும். அப்படி தாங்கக்கூடிய அளவில் போடுவதற்குதான் முயற்சி செய்யப்படும். எந்த விதத்திலும் மக்களுக்கு பளுவை வைக்க உத்தேசம் இல்லை. அவர்களுக்கு பளுவை வைப்பதில் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. அதிகப்படியாக பளுவை வைத்தால் திட்டங்கள் நிறைவேருமல் போய்விடுமோ என்றுகூட தோன்றுகிறது. அதனால் மக்களுடைய தாங்கும் சக்தியைப் பார்த்துத்தான் வரி போட வேண்டியதாக இருக்கிறது.

இன்னும் பல கருத்துக்கள் சொல்லப்பட்டன. வோட்டு வாங்குவதற்காக இவைகளெல்லாம் செய்யப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். வோட்டு வாங்குவதற்காக இப்படிப்பட்ட விதங்களில் மக்களை திருப்தி செய்து அடுத்த தேர்தலில் வோட்டுகள் வாங்குவதற்கு செய்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். நாங்கள் செய்யக்கூடிய காரியங்கள் மக்களை திருப்தி செய்ய வேண்டும் என்பதுதான். அப்படிச் செய்து விட்டு அவர்கள் அதை வைத்துக்கொண்டு வோட்டுப் போட்டாலும் போடலாம் போடாமல் இருந்தாலும் இருக்கலாம். அதற்காக அவர்களை அதிருப்தி பண்ண வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்குக் கிடையாது. மக்களுக்கு திருப்தி அளித்துவிட்டு வோட்டு வாங்குவதில் எவ்வித குறைபாடும் கிடையாது. எந்த விதத்திலாவது மக்களை திருப்திபண்ண வேண்டியதுதான். நாங்கள் செய்யக்கூடிய காரியங்களில் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும் என்ற எண்ணத்தில்தான் எல்லாக் காரியங்களையும் செய்து வருகிறோம். மக்கள் ஒப்புக்கொள்ளக்கூடிய காரியங்களைத்தான் செய்துகொண்டு வருகிறோம். அவர்களுடைய ஒப்புதல் பெற்றுத்தான் திட்டங்களை நிறைவேற்ற முயற்சி எடுத்துக்கொள்ளுகிறோம்.

**Sri C. N. ANNADURAI :** நல்ல காரியங்களைச் செய்கிறோம் என்று சொல்லிவிட்டு வோட்டு வாங்கிவிட்டு அதன் பிறகு அந்தக் காரியங்களைச் செய்யாமல் சும்மா இருப்பதுதான் கூடாது. அது மக்களை ஏமாற்றுவதாகத்தான் இருக்கும்.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** நாங்கள் செய்யக்கூடிய காரியங்களில் மக்களுக்கு திருப்தி இருப்பதால்தான் தொடர்ந்து எங்களை அனுப்புகிறார்கள். மக்களுக்கு நம்பிக்கை வாக்கூடிய அளவில் காரியங்களைச் செய்து வந்தால்தான் எங்களால் தொடர்ந்து வர முடியும். மக்களுக்கு எங்கள்மீது நம்பிக்கை இல்லை என்று நாங்கள் கருதினால் நாங்களே வெளியேறுவதற்கு தயாராக இருக்கிறோம் என்பதில் சந்தேகம் இல்லை.

**Sri R. KRISHNASWAMI NAIDU :** பொய் பிரசாரம் பண்ணுவது நாட்டிற்கு நல்லதா?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** அப்படி அவரவர்கள் [illegible] [illegible] அவரவர்கள் [illegible] [illegible]



இன்னும் பல யோசனைகள் இங்கே சொல்லப்பட்டன. சில சமயங்களில் நாம் பொதுவாகப் பேசுகிறோம். உதாரணமாக பால் பெருக்குத் திட்டத்தைப்பற்றி எதிர்க் கட்சியில் இருக்கக்கூடிய கனம் வி. கே. ராமசாமி முதலியார் அவர்கள் பேசினார்கள். மற்ற இடங்களில் இரண்டு மூன்று கோடி ரூபாய் செலவு செய்தால் இங்கு பத்து லட்சம் ரூபாய்தான் செலவு செய்திருக்கிறார்கள் என்று சொன்னால், எங்கிருந்து அதைப்பார்த்துச் சொன்னார் என்பது தெரியவில்லை. நாம் ஒரு ஸ்கீமை ஒரு கோடி 76 லட்சம் ரூபாய்க்கு எடுத்திருக்கிறோம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இது வரைக்கும் 108 லட்சம் ரூபாய் செலவழித்திருக்கிறோம். இந்த நிலைமையில் ஒன்றுமே செலவழிக்கவில்லை என்று சொல்வது சரியல்ல. அம்மாதிரி சொல்வது நமக்கும் நல்லது அல்ல, சமுதாயத்திற்கும் நல்லது அல்ல. முதல் ஐந்தாண்டு திட்டத்தில் இருக்கிறதைப் பார்த்தால் பெரிய சாதனையாகச் சொல்லவில்லை. திட்டத்தில் நம்பிக்கை ஏற்படக்கூடிய அளவில் சில காரியங்களைச் சாதித்திருக்கிறோம். மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் எவ்வளவு சாத்தியம், எந்த அளவில் செய்ய முடியும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது வரையில் கிடைத்த அனுபவத்தையும் ஏற்பட்ட குறைகளையும் வைத்துக்கொண்டு அந்த அடிப்படையில் மூன்றாவது திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. பழைய குறைகளை வைத்திருக்காமல் பார்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஏதாவது தடைகள் இருந்தால் அதையும் நிவர்த்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். பழைய குறைகளே இன்னும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளப்படும். பழைய அனுபவத்தை பயன்படுத்திக் கொண்டு பழைய குறைகள் மீண்டும் ஏற்படாதபடி பார்த்துக்கொண்டு இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்காக திட்டமிட்டிருக்கிறோம். அதனால் முன்னேற்றத்திற்கு அறிகுறி இருக்கும் என்று தோன்றுகிறது. பல குறைகளை பல கட்சி அங்கத்தினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்தக் குறைகள் உண்மையான குறையாக இருந்தால் அவைகளை ஏற்றுக்கொள்வதில் ஆட்சேபனை இல்லை. அவைகள் உண்மையாக இருந்தால் அவைகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். புதிய குறைகள் உண்மையான குறைகள் ஏற்பட்டு அதை எடுத்துக்கூறினாலும் அதை ஏற்றுக்கொள்ளவும் தயாராக இருக்கிறோம். அந்த முறையில் இந்தத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. நல்ல முறையில் அதை செயலாற்ற வேண்டும் என்று இருக்கிறோம். இந்தத் திட்டத்திற்கு நல்ல வளம் தேடுவதற்கு இந்த சபையின இந்த விவாதத்தின் மூலமாக நல்ல முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பல யோசனைகளை கூறியிருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை கடைசியில் உருவாக்கி, அதை நிறைவேற்றும் போது இந்த சபையினுடைய முழு ஒத்துழைப்பும் சர்க்காருக்கு இருக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அப்படி ஒத்துழைப்பு இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

அதற்கு முன்பு சில திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த திருத்தங்களில் 9-ஆவது திருத்தம் அதாவது ஸ்ரீ கலியாணசுந்தரத்தின் திருத்தம், அதாவது

The hon. Member Sri M. Kalyanasundaram has given a new amendment. I suggest that the words 'and policies' occurring in the last line of the first paragraph of the amendment and the words 'of Kerala and Andhra' occurring in item (2), may be omitted. With the omission of these words, the Government are prepared to accept his amendment.

இதில் கேரளா, ஆந்திரா என்று போட வேண்டிய அவசியம் இல்லை.

**Sri M. KALYANASUNDARAM :** I accept the suggestion.

[8th September 1960

THE HON. SRI C. SUBRAMANIAM : Regarding Sri V. K. Ramaswami Mudaliyar's amendment, I request him not to press his amendment.

கனம் வி. கே. ராமசாமி முதலியார் அவர்கள் சில திருத்தங்களை கொடுத்திருக்கிறார் ஆகையால் இந்தத் திருத்தத்தைச் சர்க்கார் ஏற்றுக்கொள்கிறார்கள். இன்னும் அநேகம்பேர் சில திருத்தங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவைகளை ஏற்றுக்கொள்ளாததற்குக் காரணம் அதிலே இருக்கிற கருத்து வேற்றுமையினால் அல்ல; அவசியம் இல்லையென்ற காரணத்தினால் தான் அவைகளை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய கவனம் எல்லாம் ஒருமுகப்பட்டு இருக்க வேண்டும் என்பதற்காக அந்த ஒரு திருத்தத்தை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், மற்றவற்றை அவரவர்களே வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : On a point of personal explanation, Sir. கனம் நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற நேரத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியைப் பற்றி . . . . . . நசுக்கிவிடுவோம் என்ற தங்கள் உறுதியைக் காட்டியிருக்கிறார்கள் . . . . . . அதுவும் நண்பர் சின்னதுரை போன்றவர்கள் ஊன்றுகோல் கொடுக்கும்படியாக ஆகிவிட்டதே, ஒழிக்கவேண்டும் என்பதற்கு முன்னாலே இன்னொருவர் தடியை எடுத்துக்கொடுக்கக்கூடிய நிலைமை—அதுவும் அவர் வெளி நாடு கிளம்புகிற சமயத்தில் ஏற்பட்டுவிட்டதே என்று நினைக்கிறேன். அவர் வெளி நாடு கிளம்புகிற சமயத்தில் நான் வேறு ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. கம்யூனிஸ்டுக் கட்சியைத் தாக்கினால் சிலபேர்களுடைய செல்வாக்கு இருக்கும் என்றால் தாக்கிவிட்டுப்போகட்டும். அதற்கான சந்தர்ப்பத்தை எடுத்துக்கொள்ளட்டும். ஆனால் வெளிநாடு செல்கிறவர்..அங்கே கம்யூனிஸ்டு கட்சியை ஒழிக்க என்ன திட்டம் மேற்கொண்டார்கள் என்ன ஆயிற்று என்பதையும் கொஞ்சம் கண்டு வரவேண்டும். அவர் அதைத் தெரிந்து கொண்டு திரும்பி வந்த அப்புறம் மற்றவற்றைப் பேசலாம் என்று இத்துடன் விட்டு விடுகிறேன்.

DEPUTY SPEAKER : Is the hon. Member, Sri S. M. Annamalai pressing his amendments?

SRI S. M. ANNAMALAI : I am not pressing, Sir.

The amendments were, by leave, withdrawn.

DEPUTY SPEAKER : As the hon. Member, Sri K. Anbazhagan is not in his seat, his amendment is deemed to have been withdrawn.

The amendment of Sri A. Govindasamy was put and lost.

DEPUTY SPEAKER : I presume that the hon. Member, Sri M. Kalyanasundaram is not moving his amendment.

SRI M. KALYANASUNDARAM : I have moved an amendment yesterday, Sir. But I am not now pressing it.

The amendment was, by leave, withdrawn.

The amendments of Sri T. L. Sasivarna Thevar and Sri K. Sattanatha Karayalar were put and lost.

The amendment of Sri V. K. Ramaswami Mudaliyar was, by leave, withdrawn.



8th September 1960]

SRI M. KALYANASUNDARAM : I agree to my amendment moved to-day being amended as suggested by the Hon. the Leader of the House. The amended amendment will read as follows :—

*Add* at the end the following :—

" and on such consideration this House recommends that the Government should give special emphasis to the following schemes and projects among others :

(1) Steel plant utilizing Salem iron ore and Neyveli lignite;

(2) Inter-State Irrigation Schemes for the utilization of surplus waters of the rivers flowing in adjoining States for mutual benefit;

(3) Development of Tuticorin into Major port as part of the Sethusamudram Project;

(4) Nuclear Power Station for Madras; and.

(5) Exploration of oil deposits in the Cauvery Basin and location of a refinery."

DEPUTY SPEAKER : The question is—

*Add* at the end the following :—

" and on such consideration this House recommends that the Government should give special emphasis to the following scheme and projects among others;

(1) Steel plant utilising Salem iron ore and Neyveli lignite;

(2) Inter-State Irrigation Schemes for the utilisation of surplus waters of the rivers flowing in adjoining States for mutual benefit;

(3) Developmetn of Tuticorin into major port as part of the Sethusamudram project;

(4) Nuclear Power Station for Madras; and

(5) Exploration of oil deposits in the Cauvery Basin and location of a refinery."

The amendment was put and carried.

DEPUTY SPEAKER : I shall put the main motion, as amended, to the vote of the House. The question is—

" That the draft outline of the Third Five-Year Plan be taken into consideration and on such consideration this House recommends that the Government should give special emphasis to the following schemes and projects among others :

(1) Steel Plant utilising Salem iron ore and Neyveli lignite;

(2) Inter-State Irrigation schemes for the utilisation of surplus waters of the rivers flowing in adjoining States for mutual benefit;

(3) Development of Tuticorin into Major Port as part of the Sethusamudram Project;

(4) Nuclear Power Station for Madras; and

(5) Exploration of oil deposits in the Cavery Basin and location of a refinery."

The motion as amended was put and carried.

The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow, the 9th September 1960.

The House then adjourned.

## VI. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A.—*Statutory Rules and Orders.*—Nil.

B.—***Reports, Notifications and other papers.***

* 71. *Third Five-Year Plan of the Madras State—A Summary (English).*

* 72. *Third Five-Year Plan of the Madras State—A Summary (Tamil).*

* 73. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட வரவு, சென்னை மாநிலம், பொது விவரம் (அறிக்கைகள்).

* 74. சென்னை மாநில மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட வரைவு—பொது விவரம்.

† 75. சென்னை மாநில மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்—நிதி அமைச்சர், கனம் திரு சி. சுப்பிரமணியம் அவர்களின் உரை.

* Placed on the table on the 6th September 1960.

† Placed on the table on the 7th September 1960.



## APPENDIX I.

[Vide answer to starred question No. 532 asked by Sri S. M. Annamalai at the meeting of the Legislative Assembly held on 8th September 1960, on page 409 supra.]

SUBJECT.—*Names of villages selected in the North Arcot district for the implementation of the National Water-supply and Sanitation (Rural) Scheme, where construction of overhead tanks is proposed.*

**Names of villages where construction of overhead tanks is proposed under the National Water-supply and Sanitation (Rural) Scheme.**

| | | |
|---|---|---|
| 1 | Thengal | Wallajah taluk. |
| 2 | Novalock Garden | Wallajah taluk. |
| 3 | Vannivedu | Wallajah taluk. |
| 4 | Kadaperi | Wallajah taluk. |
| 5 | Thiruparkadal | Wallajah taluk. |
| 6 | Esayanur | Wallajah taluk. |
| 7 | Perungalmedu | Wallajah taluk. |
| 8 | Kilambadi | Wallajah taluk. |
| 9 | Poongadu | Wallajah taluk. |
| 10 | Veppur | Wallajah taluk. |
| 11 | Nandiyalam | Wallajah taluk. |
| 12 | Kilminnal | Wallajah taluk. |
| 13 | Arapakkam | Wallajah taluk. |
| 14 | Nariasugapuram | Wallajah taluk. |
| 15 | Seekarajapuram | Wallajah taluk. |
| 16 | Mangadu | Wallajah taluk. |
| 17 | Mupanpatti | Wallajah taluk. |
| 18 | Pudpadi | Wallajah taluk. |
| 19 | Brahmadesam | Wallajah taluk. |
| 20 | Sangilakuppam | Vellore taluk. |
| 21 | Minnur | Vellore taluk. |
| 22 | Somalapuram | Vellore taluk. |
| 23 | Kommeswaram | Vellore taluk. |
| 24 | Vadapudupattu | Vellore taluk. |
| 25 | Kilmurungai | Vellore taluk. |
| 26 | Vengali | Vellore taluk. |
| 27 | Kulidigai | Vellore taluk. |
| 28 | Thottalam | Vellore taluk. |
| 29 | Madanur | Vellore taluk. |
| 30 | Koothampakkam | Vellore taluk. |
| 31 | Kandaneri | Vellore taluk. |
| 32 | Kalanipakkam | Vellore taluk. |
| 33 | Erayangadu | Vellore taluk. |
| 34 | Poigai | Vellore taluk. |
| 35 | Ammandi | Vellore taluk. |
| 36 | Kilmonagur | Vellore taluk. |
| 37 | Melmonagur | Vellore taluk. |
| 38 | Kammugambattur | Vellore taluk. |
| 39 | Sampanginallur | Vellore taluk. |
| 40 | Venkatapuram | Vellore taluk. |
| 41 | Perumugai | Vellore taluk. |

8th September 1960]

Names of villages where construction of overhead tanks is proposed under the National Water-supply and Sanitation (Rural) Scheme.

| No. | Village | |
|---|---|---|
| 42 | Pillur | Villages on the banks of the river Cheyyar. |
| 43 | Mottur, h/o Elathur | |
| 44 | Pathivadi | |
| 45 | Poondy | |
| 46 | Melpudur | |
| 47 | Mandakolathur | |
| 48 | Palankoil | |
| 49 | Thenpallipattu | |
| 50 | Kalasapakkam | |
| 51 | Viruvampattu | |
| 52 | Kuruvimalai | |
| 53 | Kalur | |
| 54 | Iyakulathur | |
| 55 | Arumbalur | |
| 56 | Karapoondi | |
| 57 | Othelavadi | |
| 58 | Anaivadi | |
| 59 | Tennagaram | |
| 60 | Randham | |
| 61 | Mathalambadi | |
| 62 | Koralapakkam | |
| 63 | Vedandavadi | |
| 64 | Tirumalai | |
| 65 | Vadamathimangalam | |
| 66 | Velapakkam | |
| 67 | Sothukanai | |
| 68 | Sennimangalam | |
| 69 | Peranambakkam | |
| 70 | Narasingapuram | |
| 71 | Palampet, h/o Kannanoor | |
| 72 | Appedu | |
| 73 | Modaiyur | |
| 74 | Kottandavadi | |
| 75 | Erumpoondi | |
| 76 | Thuringapuram | |
| 77 | Usumbadi | |
| 78 | Seelapandal | |
| 79 | Nayudumangalam | |
| 80 | Agramsilkandhi | |
| 81 | Uthirampoondi | |
| 82 | Northampoondi | |
| 83 | Sorakolathur | |
| 84 | Mekkalurcheri | |

Names of villages included in the National Water-supply and Sanitation (Rural) Scheme, which have already been provided with overhead tanks.

| No. | Village | |
|---|---|---|
| 1 | Gudimallur | Wallajah taluk. |
| 2 | Pooneri | |
| 3 | Valavanur | |
| 4 | Chakkaramallur | |
| 5 | Virinchipuram | Vellore taluk. |
| 6 | Shembakkam | |



8th September 1960]

APPENDIX II.

[Vide answer to starred question No. 540 asked by Sri S. M. Annamalai at the meeting of the Legislative Assembly held on 8th September 1960, on page 417 supra.]

PART I.

*Tenants Co-operative Farming Societies organized on temple lands and lands belonging to mutts.*

| *Serial number and name of the district.* (1) | | *Name of the society.* (2) | *Location of the society.* (3) |
|---|---|---|---|
| 1 | Thanjavur | Sembannarkoil Sri Swarnapuraeeswarasamy T.F.C.S. | Sembannarkoil village. |
| 2 | Do. | Natiruppu Sri Thiyagarajasamy T.F.C.S. | Nathiruppu village. |
| 3 | Do. | Kallappulliyur T.F.C.S. | Kallappuliyur village. |
| 4 | Do. | Mariammankoil Inam Arumulipettai T.F.C.S. | Arumulipettai village. |
| 5 | Do. | Mangal T.F.C.S. | Mangal village. |
| 6 | Do. | Thillaiyadi T.F.C.S. | Thillaiyadi village. |
| 7 | Do. | Maruvathur T.F.C.S. | Maruvathur village. |
| 8 | Do. | Sikkil Sri Navaneethaswamy T.F.C.S. | Kothamangalam village. |
| 9 | Do. | Tirupugalur T.F.C.S. | Tirupugalur village. |
| 10 | Do. | Pulimangalam T.F.C.S. | Pulimangalam village. |
| 11 | Do. | Tiruvilandur T.F.C.S. | Tiruvalandur village. |
| 12 | Do. | Kadiramangalam T.F.C.S. | Kadiramangalam village. |
| 13 | Do. | Thenoor T.F.C.S. | Thenoor village. |
| 14 | Do. | Tiruchenkattangudi T.F.C.S. | Tiruchenkattangudi village. |
| 15 | Do. | Tirunellikaval Sri Nellivaranathasamy Devasthanam T.F.C.S. | Tirunellikkaval village |
| 16 | Do. | Koilkadambanur Sri Kailasanathasamy T.F.C.S. | Koilkadambanur village. |
| 17 | Do. | Sikkil Sri Navaneeethaeeswarasamy T.F.C.S. | Theetampet village. |
| 18 | Do. | Tirunarayur T.F.C.S. | Tirunarayur village. |
| 19 | Do. | Sri Vedapureeswarasami T.F.C.S. | Kilayur village. |
| 20 | Do. | Ammavarur Perumal Devasthanam T.F.C.S. | Perumal Koil village. |
| 21 | Do. | Tirukkadayur T.F.C.S. | Tirukkadayur village. |
| 22 | Do. | Natchatramalar T.F.C.S. | Manamodu village. |
| 23 | Do. | Pannineermohiyalapuram T.F.C.S. | Puskarani village. |
| 24 | Do. | Vedanayagi T.F.C.S. | Pannineermozhiyalpuram village. |
| 25 | Do. | Sri Hirudayakamalanathaswami T.F.C.S. | Valivalam village. |

| Serial number and name of the district (1) | | Name of the society (2) | Location of the society (3) |
|---|---|---|---|
| 26 | Thanjavur .. | Santhanarasasamy T.F.C.S. | Manickamangalam village. |
| 27 | Do. .. | Vadaranyam T.F.C.S. .. | Vedaranyam village. |
| 28 | Do. .. | Kalukanimuttam T.F.C.S. | Kallukanimuttam village. |
| 29 | Do. .. | Thillaivilagam T.F.C.S. .. | Thillaivilagam village. |
| 30 | Do. .. | Sri Murugan T.F.C.S. .. | Ettigudi village. |
| 31 | Do. .. | Sri Kailasanathasamy Devasthanam T.F.C.S. | Sembianmahadevi village. |
| 32 | Do. .. | Ottagudi T.F.C.S. .. | Ottagudi village. |
| 33 | Do. .. | Nemmeli T.F.C.S. .. | Nemmeli village. |
| 34 | Do. .. | Mayileripuram T.F.C.S. .. | Nemmeli village. |
| 35 | Do. .. | Sri Thiagarayaswamy T.FC.S. | Thiruvamoor village. |
| 36 | Do. .. | Sowrirayaperumal T.F.C.S. | Tirukkannapuram village. |
| 37 | Do. .. | Pamini T.F.C.S. .. .. | Pamini village. |
| 38 | Do. .. | Kannambadi T.F.C.S. .. | Kannambadi village. |
| 39 | Do. .. | Kunnalur T.F.C.S. .. | Kunnalur village. |
| 40 | Do. .. | Andergadu T.F.C.S. .. | Andergadu village. |
| 41 | Do. .. | Kuruvadi T.F.C.S. .. | Sathamkuthamallur village. |
| 42 | Do. .. | Tiruppanandal T.F.C.S. .. | Tiruppanandal village. |
| 43 | Do. .. | Mattiyur T.F.C.S. .. | Mattiyur village. |
| 44 | Do. .. | Kariapattinam T.F.C.S. .. | Kariapattinam village. |
| 45 | Do. .. | Tiruvalputhur T.F.C.S. .. | Tiruvalputhur village. |
| 46 | Do. .. | Sri Brahannayagi Ambal T.F.C.S, | Tiruthiraipoondi village. |
| 47 | Do. .. | Muthupet Sri Sundaraswarasamy T.F.C.S., Puthukottagam. | Keelakadu village. |
| 48 | Do. .. | Poovanur T.F.C.S. .. | Poovanur village. |
| 49 | Do. .. | Saranathasamy T.F.C.S. .. | Tiruchunai village. |
| 50 | Do. .. | Tirumaraikadar T.F.C.S. .. | Maraiganayanallur village. |
| 51 | Do. .. | Sri Damodaranarayanaperumal T.F.C.S. | Tirukkannankudi village. |
| 52 | Do. .. | Kallikudi T.F.C.S. .. | Kallikudi village. |
| 53 | Tirunelveli .. | Tirukkuthalanathaswami T.F.C.S. | Melaharam village. |
| 54 | Do. .. | Puliyorai T.F.C.S. .. | Puliyorai village. |
| 55 | Ramanathapuram | Devadanam T.F.C.S. .. | Devadanam village. |
| 56 | Do. .. | Devadanam Ammayappan T.F.C.S. | Devadanam village. |
| 57 | Chingleput .. | Kovur T.F.C.S. .. .. | Kovur village. |

NOTE.—T.F.C.S. = Tenants Farming Co-operative Society.
Items 3 and 38 have not yet started functioning.



## PART II.

### *Land Colonization Co-operative Society (Tenant Farming type) organized on Government waste lands.*

| Serial number and name of the district (1) | | Name of the society (2) | Location (3) |
|---|---|---|---|
| 1 | Salem .. | Navalur L.C.C.S. .. .. | Navalur village. |
| 2 | Do. .. | Nathakarai L.C.C.S. .. | Nathakarai. |
| 3 | Do. .. | Manmalai Palakadu L.C.C.S. | Manmalai. |
| 4 | Do. .. | Thammampatti L.C.C.S. .. | Thammampatti. |
| 5 | Do. .. | Siruvachiyur Scheme I . | Siruvachiyur. |
| 6 | Do. .. | Siruvachiyur Scheme II .. | Do. |
| 7 | Do. .. | Periyur L.C.C.S. .. .. | Periyur. |
| 8 | Do. .. | Sadasivapuram L.C.C.S. .. | Sadasivapuram. |
| 9 | Do. .. | Chokkanur Agraharam L.C.C.S. | Chokkanur Agraharam. |
| 10 | Do. .. | Manjini L.C.C.S. .. .. | Manjini. |
| 11 | Do. .. | Singipuram L.C.C.S. .. | Singipuram. |
| 12 | Do. .. | Kavakalpatti L.C.C.S .. | Kavakalpatti. |
| 13 | Do. .. | Unnathur L.C.C.S. .. | Unnathur. |
| 14 | Do. | Pythur Scheme I L.C.C.S. | Pythur. |
| 15 | South Arcot .. | Pakkambadi L.C.C.S. .. | Pakkambadi. |
| 16 | Do. .. | Bangaram L.C.C.S. .. | Bangaram. |
| 17 | Do. .. | Elavadi Pandian Kuppam L C C.S. | Elavadi Pandiyankuppam. |
| 18 | Do. .. | Rayarpalayam L.C.C.S. .. | Rayarpalayam. |
| 19 | Do. .. | Thenponparappi L.C.C.S. | Thenponparappi. |
| 20 | Do. .. | Velur L.C.C.S. .. .. | Velur. |
| 21 | Do. .. | Maravanatham L.C.C.S. .. | Maravanatham. |
| 22 | Do. .. | Poosalpadi L.C.C.S. .. | Poosalpadi. |
| 23 | Do. .. | Koohayur L.C.C.S. .. | Koohayur. |
| 24 | Do. .. | Indali L.C.C.S. .. .. | Indali. |
| 25 | Do. .. | Tiruvamur L.C.C.S .. | Tiruvamur. |
| 26 | Do. .. | Pullur L.C.C.S. .. .. | Pullur. |
| 27 | Tiruchirappalli. | Nergunam L.C.C.S. .. | Nergunam. |
| 28 | Do. .. | Sergudi L.C.C.S. .. .. | Sergudi. |
| 29 | Madurai .. | Keesampatti L.C.C.S. .. | Keesampatti. |
| 30 | Do. .. | Poonjuthi L.C.C S. .. | Poonjuthi. |
| 31 | Do. .. | Chinnamanaickenkottai L.C C.S. .. | Chinnamanaickenkottai. |
| 32 | Do. .. | Sandaiyur L.C.C.S. .. | Sandaiyur. |
| 33 | Do. .. | Boothamangalam L.C C.S. | Boothamangalam. |
| 34 | Do. .. | Ambalakaranpatti L.C.C.S. | Ambalakaranpatti. |
| 35 | Ramanathapuram. | Velangulam L.C.C.S. .. | Velangulam. |
| 36 | Do. .. | Thengarai L.C.C.S. .. | Thengarai. |
| 37 | Do. .. | Thavayanandal L.C.C.S. | Tharaganandal. |

NOTE.—L.C.C.S.—Land Colonization Co-operative Society.
None of the societies has started functioning.

## PART III.

### *Co-operative Tenants Farming Societies organized on private lands—Nil.*

## APPENDIX III.

[Vide answer to starred question No. 548 asked by Sri A. Vedarathnam at the meeting of the Legislative Assembly held on 8th September 1960, on page 427 supra.]

# RECOMMENDATIONS OF THE FOURTH HOUSING MINISTERS' CONFERENCE HELD AT HYDERABAD IN NOVEMBER 1959.

## VILLAGE HOUSING PROJECTS SCHEME.

*Quantum of loan.*

The Conference recommends that the maximum amount of loan admissible under the Scheme should be Rs. 2,500 or 50 per cent of the estimated cost of the house, whichever is less.

*Loans for improvement of houses.*

The Conference recommends that the Village Housing Projects Scheme should be modified to provide grant of loan assistance for improvement of houses in the selected villages to such standards as may be specified by the State Government, provided that—

(a) no loan shall be granted for improvement of houses which are likely to be demolished on the basis of the layout drawn up for the village; and that

(b) not more than 15 per cent of the allocation made to the State Government under the Scheme shall be utilized for grant of loans for the improvement of houses.

*Provision of roads and drains.*

The Conference recommends that the Village Housing Projects Scheme be modified to enable the State Governments to utilise a part of their allocation under the Scheme for provision of roads and drains in the selected villages. Fifty per cent of the cost of provision of these two services should be borne by the Centre as an outright subsidy; the State Government and the Village Panchayats should meet the remaining 50 per cent of the cost from their own resources.

*Subsidy for housing of landless agricultural labour.*

Landless agricultural labour who do not get any housing aid from any other source, should be allowed a subsidy of at least 15 per cent of the cost of the house by the Government of India, in the alternative, they should be provided free of cost, with an open developed plot of land on which they can themselves put up a suitable hut. The Village Housing Projects Scheme should be modified accordingly. It should be stipulated, however, that the above concession will not be admissible to persons eligible for similar assistance under any other Government Scheme.





*Continuance of Research-cum-Training Centres.*

The Conference recommends that the Research-*cum*-Training Centres already set up under the Village Housing Projects Scheme be continued during the Third Plan and that they should be strengthened adequately to enable them to continue work on rural housing relating to research, training and extension, on an appropriate scale.

*Assistance for Rural Housing Cells.*

In the case of States with larger rural populations the quantum of Central assistance for State Rural Housing Cells should be raised to Rs. 50,000, so that they can employ adequate staff to cope with the larger number of villages allotted to them.

*Village in Tribal areas.*

When selecting villages under the Scheme, State Governments should select an adequate number of villages in the Scheduled areas provided other conditions laid down in the Scheme are satisfied.

LIBRARY

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Friday, the 9th September 1960.**

The House met in the Assembly Chamber, Fort. St. George, at half past eight of the clock, the Deputy Speaker (SRI M. BHAKTAVATSALU NAIDU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

DEPUTY SPEAKER : I think the Hon. Minister for Home is not here.

THE HON. SRI R. VENKATARAMAN : I would suggest that all questions to be answered by the Hon. Minister for Industries and the Hon. Minister for Public Works be taken up first. All questions to be answered by the Hon. the Home Minister may be taken up later.

DEPUTY SPEAKER : All right.

*Mettur lake*

* 554 Q.—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) the rate of inflow of water in Mettur lake during June and July 1960;

(b) how this compares with the inflow for the same period during the previous three years; and

(c) whether there is fall in the inflow, and if so, the reasons therefor?

THE HON. SRI P. KAKKAN :

(a) June ... 7,400 cusecs.
July ... 27,804 cusecs.

(b) The inflows during June and July 1960 were comparatively low and very poor in June.

(c) Yes, Sir. The reason is due to comparatively poor incidence of rainfall and its distribution in the Cauvery catchment.

*Backward Classes*

* 558 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) the list of Backward Classes for whom scholarships were given by the Central Government, the State list in general and that of the Kanyakumari district in particular;

(*b*) whether the Central Government have intimated to the State Government the list of Backward Classes of the former Travancore-Cochin State comprising the present Kanyakumari district, for whom scholarship was given by the Central Government; and

(*c*) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : (*a*) to (*c*) The Government of India have communicated the lists. A statement containing the lists of "Other Backward Classes" recognized for Government of India scholarships (i) for Madras State excluding Kanyakumari district and Shencottah taluk of Tirunelveli district, and (ii) for Kanyakumari district and Shencottah taluk of Tirunelveli district, is placed on the table of the House.

SRI S. M. ANNAMALAI : மேஜையின்மீது வைக்கப்பட்டிருக்கும் அறிக்கையிலே 93-வது எண்ணிக்கையில் "Male" என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. அப்படியென்றால் ஆண்கள் கூட பிற்பட்ட இனத்தில் சேர்க்கப் பட்டிருக்கிறார்களா ?

THE HON. SRI P. KAKKAN : ஒரு ஜாதியின் பெயர் "Male" என்று இருக்கிறது.

SRI T. S. RAMASWAMI : இதிலே குறிப்பிட்டிருக்கக்கூடிய பாக்வார்ட் க்ளாஸ் மாணவர்கள் எல்லோருக்கும் ஸ்காலர்ஷிப் கொடுப் பதற்கான "பாரமே" அவர்கள் படிக்கும் கல்லூரிக்கு வரவில்லை என்ற புகார் வந்ததா ? தயவு செய்து இதிலே குறிப்பிட்டிருக்கிற பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு எல்லாம் முன்னதாகவே அரசாங்கம் தகவல் அனுப்புவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : பின் தங்கிய வகுப்பினருக்கு முன்னதாகவே கொடுக்கப்படவேண்டுமென்றுதான் எல்லாக் கல்லூரி பிரின்சிபாலுக்கும் இன்ஸ்ட்ரக்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட இடத்தில் கொடுக்கப்படவில்லை என்ற தகவல் கொடுத்தால் அதைப்பற்றி விசாரிக்கப்படும்.

SRI P. G. MANICKAM : சென்னை சர்க்காரிலே மோஸ்ட் பாக் வார்ட் கம்யூனிடி என்பதை இந்திய சர்க்கார் அங்கீகரித்திருக்கிறதா ? இல்லையா ?

THE HON. SRI P. KAKKAN : மத்திய அரசாங்கம் மோஸ்ட் பாக் வார்ட் கம்யூனிடிக்கு அங்கீகாரம் அளித்திருக்கிறார்கள்.

SRI V. SUBBIAH : முன்பெல்லாம் ஸ்காலர்ஷிப்புகள் டைரக்டர் அவர்களே கொடுத்துவந்தார்கள். இப்பொழுது ஜில்லாவிலே கொடுத்து வருகிறார்கள். அதன் விவரம் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : முன்பு டைரக்டர் அவர்களே கொடுத்து வந்தார்கள். காலதாமதம் ஏற்படுகிறது என்று துரிதமாக அவைகளைக் கொடுக்கவேண்டுமென்பதற்காக அந்தந்த ஜில்லாக்களில் உள்ள மாணவர்களுக்கு உடனடியாகக் கொடுக்கப்படவேண்டுமென்பதற்காக அந் தந்த ஜில்லாக்களில் உள்ள ஹரிஜன அதிகாரிகளிடம் கொடுத்து உதவி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

SRI A. VEDARATHNAM : மேஜையின் மீது வைக்கப்பட்டிருக் கும் அறிக்கையைப்பார்த்தால் இதில் கிட்டத்தட்ட 318 ஜாதிகள் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. நம் நாட்டில் இருக்கும் ஜாதிகளில், இப்பொழுது





குறிப்பிட்டிருக்கும் ஜாதிகள் போக பாக்கி கொ[illegible]தான் இருக்கும். ஆகையால் இந்த ஜாப்தாவை நீக்கிவிட்டு எந்த வ[illegible] ஏழையாக இருக் கிறார்களோ அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொ[illegible]தற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : அரசாங்கம் [illegible] பொருளாதாரத்துறையில், சமூகத்துறையில், மிகவும் பிற்போக்காக எந்த ஜாதியிருக்கிறதென்று [illegible] செய்து [illegible] செய்திருக்கிறார்கள். இதைப்பற்றி ஸ்ரீ கோபாலசாமி ரிபோர்ட் [illegible] பரிசீலனை [illegible] இன்னும் பரிசீலனையில் இருக்கிறது.

SRI T. S. RAMASWAMI : இப்பொழுது மத்திய சர்க்காரிட மிருந்து வந்திருக்கும் லிஸ்டில் அதிகமான கம்யூனிடிகள் இருக்கின்றன. கன்யாகுமரி ஜில்லாவிலும், டிரான்ஸ்பர்டு டெரிடரிகளில் உள்ள கல்லூரி களுக்கும் இந்த லிஸ்டை அனுப்புவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : இந்த லிஸ்ட் எல்லாக் கல்லூரி பிரின்சிபால்களுக்கும் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

SRI K. VINAYAKAM : இன்றைய அரசியல் சட்டப்படி ஒரு விதியடிப்படையில் பிரசிடெண்ட் அவர்கள் பாக்வேர்ட் க்ளாஸஸ் கமிஷன் ஒன்றை நியமிக்கவேண்டுமென்று சொல்லி அதன்படி பாக்வேர்ட் க்ளாஸஸ் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டு அது இரண்டு ஆண்டுகள் நாடு முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்து அவர்கள் தயாரித்த ரிப்போர்ட்டை, காக்கா சாகேப் காலேல்கர் அவர்கள் தலைமையில் அமைந்த பாக்வேர்ட் க்ளாஸஸ் கமிஷன் அறிக்கையை இன்னும் மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கக் காரணம் என்ன ? நமது ராஜ்ய பிற்பட்ட இனத்த வர்கள் சார்பில் அவர்கள் நலனுக்காக அதை ஏற்றுக்கொள்ளவேண்டு மென்று நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துமா ?

THE HON. SRI P. KAKKAN : பாக்வேர்ட் க்ளாஸஸ் கமிஷன் ரிப்போர்ட்டை அங்கீகரிப்பதும், அங்கீகரிக்காதிருப்பதும் பார்லிமெண்டைப் பொறுத்தது. அவர்கள்தான் செய்ய வேண்டும். அங்கத்தினர் அவர்கள் பார்லிமெண்ட் அங்கத்தினர் யாரையாவது கொண்டு கேள்வி போடச் சொன்னால் அங்கு அதற்கு பதில் சொல்லப்படும்.

SRI S. RANGANATHA MUDALIAR : Does not the perpetuation of these distinctions militate against the policy of the Government in regard to the abolition of castes and casteism?

THE HON. SRI P. KAKKAN : No, Sir. The Government have to look after the welfare of the poor and Backward Communities in the State.

SRI K. R. VISWANATHAN : இந்த நாட்டில் ஜாதி வேறுபாட்டை அகற்றுவதற்காகவே பொருளாதாரத் துறையிலும், கல்வித்துறையிலும் பின்தங்கிய வகுப்பு மக்களுக்காக இந்த உதவி செய்யப்படுகிறது என்பது உண்மையா ? இப்பொழுது கொடுக்கப் பட்டிருக்கிற பட்டியலில் இரண்டாவது லிஸ்டில், 66-ல் குறிப்பாக நாயுடு என்ற இனம் பிற்பட்ட வகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அது கன்னியாகுமரி, செங்கோட்டைப் பகுதிகளில் உள்ள நாயுடு என்ற பகுதி யினரை என்று நினைக்கிறேன். இப்பொழுது கன்னியாகுமரி, செங் கோட்டைப் பகுதிகள் சென்னையோடு சேர்க்கப்பட்டுவிட்ட காரணத்தால் நாயுடு என்று சொல்கிறவர்கள் சென்னையில் இருந்தாலும் அவர்களையும் பிற்பட்ட இனத்தில் சேர்க்கவேண்டுமென்று விண்ணப்பம் வரும்போது அதை எப்படி சர்க்கார் அனுமதிக்கிறார்கள் என அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : அங்கத்தினர் அவர்கள் சொல்லி யபடி, பின்தங்கிய மக்களின் குழந்தைகளுடைய படிப்பிற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கேரள மாநிலத்திலிருந்து வந்திருக்கிற பகுதிகளில் எவ்வாறு அவர்களை அங்கு பாக்வேர்ட்

[9th September 1960

[illegible]டி என்று குறிப்பிட்டார்களோ அதை அங்கீகரித்து சர்க்கார் அதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இங்கிருப்பவர்களையும் அங்குள்ளவர்களோடு சேர்க்க வேண்டுமென்பதல்ல.

SRI A. A. RASHEED : In the list placed on the table of the House, under item 93, we find " Male ". May I know whether all males are considered as Backward Classes? (Laughter.)

(No answer.)

SRI A. R. MARIMUTHU : பின் தங்கிய வகுப்பினருக்கு ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்கு ஜில்லா கலெக்டர்களுக்கு அதிகாரம் கொடுத்திருப்பதாகக் கூறினார்கள். ஜில்லாக் கலெக்டர்கள் அந்தந்த ஜில்லாவைச் சேர்ந்த மாணவர்களின் மனுக்களைப் பரிசீலனை செய்ய அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதா அல்லது அந்த ஜில்லாவிலுள்ள கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களின் மனுக்களை பரிசீலனை செய்ய அதிகாரம் உள்ளதா?

THE HON. SRI P. KAKKAN : அந்தந்த ஜில்லாக்களில் உள்ள கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களின் மனுக்களைப் பரிசீலனை செய்யலாம்.

*Tanks (Madurai district)*

*550 Q.—SRI M. R. THIAGARAJAN : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் மதுரை ஜில்லாவில் எத்தனை குளங்கள் மராமத்து செய்ய திட்டமிடப்பட்டது?

(ஆ) அதில் எத்தனை மராமத்து வேலைகள் முடிந்துள்ளன?

(இ) இன்னும் எத்தனை முடியவில்லை?

(ஈ) இவை எப்பொழுது முடியும்?

THE HON. SRI P. KAKKAN : (a) Two hundred and seventy-eight.

(b) One hundred and five.

(c) & (d) One hundred and seventy-three—

| | |
|---|---|
| Before March 1961 ... | 99 |
| 1961-62 ... ... | 14 |
| 1962-63 ... ... | 27 |
| 1963-64 ... ... | 33 |
| | 173 |

DEPUTY SPEAKER : Now that the Hon. Minister for Home has come, we can take up question No. 552.



9th September 1960]

*New Railway lines*

* 552 Q.—SRI S. M. ANNAMALAI :
SRI M. KALYANASUNDARAM :
SRI A. VEDARATHNAM :
} கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) நட்சத்திரக் குறியிடாத கேள்வி எண் 518-க்கு 1960-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30-ந் தேதியில் அளித்த பதிலை ஒட்டி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் துவக்கப்படவிருக்கும் புதிய ரயில்வே பாதைகள் எவை என்பதைக் குறித்து மத்திய சர்க்காரின் முடிவு தெரிந்துவிட்டதா?

(ஆ) அப்படியானால், அதன் விவரம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) Does not arise.

SRI S. M. ANNAMALAI : அவர்கள் ஒத்துக் கொள்ளாததற்குக் காரணங்கள் என்ன? இப்பொழுதாவது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சில ரெயில் பாதைகளைச் சேர்க்கவேண்டுமென்று இந்த சர்க்கார் சிபாரிசு செய்திருக்கிறார்களா? அப்படியாயின் அவைகள் யாவை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவர்கள் ஒத்துக் கொள்ளாததற்குக் காரணம், பணம் இல்லை என்பதுதான். அது பற்றி, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் விவாதிக்கப்படும்போது விவாதிக்கப்படும். சமீபத்தில் நாஷனல் டெவலப்மெண்ட் கௌன்சில் கூட்டம் இருக்கிறது. அங்கும் இந்தப் பிரச்னை விவாதிக்கப்படும்.

SRI S. M. ANNAMALAI : சில நாட்களுக்கு முன்னால் ரெயில்வே துணை அமைச்சர் அவர்கள் இங்கு வந்தபோது நமது அமைச்சர் அவர்கள் அவர்களோடு விவாதித்ததாகத் தெரிகிறது. அப்படியானால், அவர்களோடு விவாதித்ததின் முடிவு என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சென்னையில் ரெயில்வே துணையமைச்சரோடு நான் விவாதித்தது, மின்சார ரெயில் பற்றி. உதவி அமைச்சர் அவர்களை டெல்லியில் சந்தித்துப் பேசியபோது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சில லைன்களையாவது நம் ராஜ்யத்தில் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று பேசிக் கொண்டிருந்தேன்.

SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி நேற்று பேசுகிற நேரத்தில் இண்டஸ்ட்ரியல் கம்மாடிட்டீஸ்க்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதை விட அக்கிரிகல்ச்சரல் கம்மாடிட்டீஸ் அவசியமானதல்லவா? ஆகவே பல வருடங்களுக்கு முன்பாகவே, மன்னார்குடி-திருத்துறைப்பூண்டி, பட்டுக்கோட்டை-தஞ்சாவூர் லைன்கள் பாக்கியிருக்கின்றன. இதற்கு முக்கியத்துவம் கொடுக்க அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தொழில் தேவையா, விவசாயம் தேவையா என்ற போட்டா போட்டி இல்லை. அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகிற லைன்கள், திருத்துறைப்பூண்டி-மன்னார்குடி, பட்டுக்கோட்டை-தஞ்சாவூர் லைன் அவசியம் என்றாலும் அவ்வளவு அவசரம் என்று நான் சொல்வதற்கில்லை. அதை விட அவசரமாகக் கவனிக்க வேண்டிய லைன்கள் தமிழ் நாட்டில் இருக்கின்றன. அதை நாங்கள் வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம்.

[9th September 1960

SRI M. KALYANASUNDARAM : மிக அவசரமான லைன்கள் என்று எவற்றை அரசாங்கம் கருதுகிறது ? அவை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படும் என்கிற நிச்சயமிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மிக அவசரமாகக் கருதப்படுவதில், முதலாவது நாங்கள் இப்பொழுது யோசிப்பது, சேலம்-பங்களூர் லைன். இரண்டாவது, ராமநாதபுரம் ஜில்லாவில் முதுகுளத்தூர் போன்ற இடங்களில் ரெயில்வே இல்லாதயிடங்களில் ரெயில் போடுவது பற்றி. அதில், "செக்யூரிட்டி" காரணமும் இருக்கிறது. மூன்றாவது, வேறு சில லைன்கள். மறுபடியும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி விவாதிக்கும் போது இவற்றை யெல்லாம் வற்புறுத்தலாம் என்று தான் நாங்கள் உத்தேசிக்கிறோம்.

SRI S. M. ANNAMALAI : மின்சார ரெயில் பாதை பற்றி பேசியதாகச் சொன்னார்கள். அப்படியானால் அந்த மின்சார ரெயில்பாதைகள் எவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பின்னால் இது பற்றி கேள்வி வருகிறது, அப்பொழுது சொல்கிறேன்.

SRI R. SRINIVASA IYER : தொழில் துறை அபிவிருத்தியாகும் இடங்களில் புது ரயில்வே லைன் போட ஆரம்பிப்பது அவசியம் என்று சொல்லப்படுகிற நேரத்தில், கடலூரிலிருந்து சேலம் வரையில் நெய்வேலி வழியாக உள்ள இருப்புப் பாதைகளை இரட்டிப்பாக்குவதற்கும், மதராஸ்-விழுப்புரம் ரயில் பாதையை இரட்டிப்பாக்குவதற்கும் வழி ஏற்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதெல்லாம் உத்தேசத்தில் இருக்கிறது. ப்ரயாரிட்டி பிரகாரம் நாம் முடிவு செய்ய வேண்டும்.

SRI M. KALYANASUNDARAM : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் புது ரெயில்வே பாதைகள் போடுவதற்காக இந்தியா பூராவும் 156 கோடி ஒதுக்கியும் நமது தமிழ் நாட்டில் ஓடக் கூடிய ரெயில்வேக்கு ஒரு நயா பைசா கூட செலவழிக்கப் படவில்லை என்ற விவரத்தை மத்திய அரசாங்கத்தினிடம் நம் அரசாங்கம் தெரியப்படுத்தினார்களா ? அப்படித் தெரியப்படுத்தியிருந்தால் என்ன பதில் கிடைத்தது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவர்களிடம் தெரியப்படுத்திக்கொண்டே யிருக்கிறோம். ஸோனல் கௌன்ஸில் கூட்டத்தில் கூட இதுபற்றி குறிப்பிடப்பட்டது. கிடைத்த தொகை குறைவு. இதைக் கொண்டு அவசரமான ரெயில்வேயை எடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட "டிராப்ட் ப்ளானை"ப் பார்த்தால் தென் ராஜ்யங்களில் ஒரு ராஜ்யத்தில் கூட ஒரு லைன் கூட இல்லை. அப்படி ஒவ்வொன்றுக்கும் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம்.

SRI P. S. CHINNADURAI : சத்தியமங்கலம்-சாம் ராஜ நகர் இணைப்புப் பாதையை இந்த மூன்றாவது திட்ட காலத்தில் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று நம் ராஜ்ய அரசாங்கம் மத்திய அரசாங்கத்தினிடம் வற்புறுத்துமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நாங்கள் அளித்த யோசனைகளில் இதுவும் ஒன்று. மறுபடியும் சொல்கிறேன்--ப்ரயாரிட்டி பிரகாரம் முடிவு செய்யவேண்டும்.

SRI K. VINAYAKAM : May I know at what stage the proposal for doubling the railway line from Madras to Jalarpet (via) Arkonam stands? May I also know whether there is any proposal to electrify the entire railway line?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is a proposal to electrify the broad-gauge line. But as to the stage at which the proposal to double the railway line stands, I would like to have notice.



9th September 1960]

SRI T. S. RAMASWAMI : ரயில் பாதையே இல்லாத கன்னியாகுமரி ஜில்லாவில் ரயில் பாதை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன், திருநெல்வேலி முதல் கன்னியாகுமரி வரை ரயில் பாதை போட வேண்டும் என்று தீர்மானித்து அதற்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதலிடம் கொடுத்திருந்ததாகவும், பின்னால் அது ஆறாவது இடத்திற்கு வந்து விட்டதாகவும் சொல்லப்படுகிறதே, அது உண்மையா ? அப்படியானால் அதற்குக் காரணம் என்ன ? அவ்விதம் ஆறாவது இடத்தில் போட்டிருந்தால் அதை மாற்றி முதலிடத்தில் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : புதிய ரயில்வே லைன்கள் போடுவதைப் பற்றி ரயில்வே உதவி மந்திரியுடன் பேசிக் கொண்டிருந்ததைப்பற்றி சற்று முன்பு சொன்னேன். அதில் முதலிடம் சேலம்-பங்களூர் பாதைக்கும், இரண்டாவது இடம் மானாமதுரை-அருப்புக் கோட்டை பாதைக்கும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். அதற்கு மேலாக மூன்றாவது இடத்தைப்பற்றி தகராறு இருக்கவேண்டாம் என்று நினைத்துச் சொல்லவில்லை. மூன்றாவது இடமாக திருநெல்வேலி-கன்னியாகுமரி பாதையை வற்புறுத்துவது என்பது தான் என்னுடைய உத்தேசம்.

*Satyagraha (Socialists)*

• 553 Q.—SRI P. S. CHINNADURAI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விலைவாசிகளைக் கட்டுப்படுத்தக் கோரியும், மற்றும் பல கோரிக்கைகளுக்காகவும் தமிழ் நாட்டின் சோஷலிஸ்டுகள் சர்க்கார் காரியாலயங்களின் முன்பாக சத்தியாக்கிரகம் நடத்தினார்களா ?

(ஆ) அவ்வாறு சத்தியாக்கிரகம் நடத்தியவர்களை சர்க்கார் கைது செய்தார்களா ?

(இ) அப்படியானால், அவர்களின் எண்ணிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Yes, Sir.

(*c*) 367.

SRI P. S. CHINNADURAI : இந்த சத்தியாக்கிரகத்தின்போது கைது செய்யப்பட்ட சோஷலிஸ்டுகள் சிறையில் எந்த முறையில் நடத்தப்பட்டார்கள், அவர்கள் அரசியல் கைதிகள் என்ற முறையில் நடத்தப்பட்டார்களா அல்லது மற்ற சாதாரண கிரிமினல் கைதிகளைப்போல் நடத்தப்பட்டார்களா என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்கு தனிக் கேள்வி வேண்டும்.

*Railways (electrification)*

• 555 Q.—SRI T. SAMPATH : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the stage at which the scheme of electrification of railway line between Tambaram and Villupuram stands;

(*b*) whether the scheme would be implemented before the end of the Second Five-Year Plan; and

(*c*) what power would be used, whether A.C. or D.C.?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) to (*c*) Our information is that the scheme of electrification of railway line between Tambaram and Villupuram has already been started

[9th September 1960

during the Second Five-Year Plan period and that the ancillary Civil Engineering works connected with the scheme have been practically completed. The system of electrification whether A.C. or D.C. to be adopted is under consideration of the Railway Administration.

SRI T. SAMPATH : May I know, whether the scheme will be completed before the end of the Second Plan period?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : We had recently discussions with the Union Deputy Railway Minister, engineers and officers of the Railways. I am not in a position to say that the scheme would be completed. But they are still groping with it and there seems to be no definite decision regarding the point, whether it is to be A.C. and what is to be done and all that.

Unauthorised occupations in lands which are the property of Government are dealt with under the Madras Land Encroachment Act, 1905. This Act provides amongst others for levy of assessment and for the levy of penalty after notice, and empowers the Collector to summarily evict the encroachments and forfeit any crop or other product raised on such land. Before summarily evicting an encroacher, a notice under section 7 has to be served on the encroacher to show cause against proceedings under those sections. This procedure was devised in 1905 and was found adequate to check unauthorised occupation of Government lands in the circumstances then prevailing.

The conditions have now changed considerably. Due to many causes like congestion of population in the cities, towns and other industrial and commercial places, unauthorised occupation of the Government land is on the increase. In some cases, there are organised attempts to occupy Government lands suddenly and in large numbers overnight. The procedure laid down in the Land Encroachment Act is inadequate and wanting in speed to counteract such sudden and organised attempt to occupy and squat on Government lands both in the Municipaliities and Panchayats and in the City of Madras. At present, the occupation of Government lands comes under three categories, viz., (1) unobjectioinable, (2) unobjectionable for the present but may become objectionable in the future and (3) objectionable. The existing provisions of the Act are fairly adequate in dealing with the occupations coming under the categories (1) and (2). But in respect of objectionable cases of encroachment requiring immediate eviction, some measures to quicken the process of eviction is necessary.—Such unauthorised occupations create slums and are a source of danger to public health and sanitation. Immediate eviction of such occupations is necessary not only in the interest of public health but also to prevent the growth of further slums. The Bill introduced in this Assembly, on 16th August 1960 has therefore been prepared with the main object to provide for summary eviction and removal of encroachment on Government lands by construction of huts, bunks, etc., which spring up unauthorisedly and very quickly, and which are detrimental to public health and sanitation.

The Bill is a simple one and I request the House, Sir, to accept the motion.

MR. SPEAKER : Motion moved—

"That the Madras Public Premises (Eviction of Unauthorised Occupants) Bill, 1960 (L.A. Bill No. 24 of 1960), be taken into consideration."

* Published in the Fort St. George Gazette Extraordinary, dated 16th August 1960





SRI M. KALYANASUNDARAM : Sir, I move the following amendment :—

"That the Madras Public Premises (Eviction of Unauthorised Occupants) Bill, 1960 (L.A. Bill No. 24 of 1960), be referred to a Select Committee."

SRI K. SATTANATHA KARAYALAR : I second the amendment, Sir.

MR. SPEAKER : Amendment moved :—

"That the Madras Public Premises (Eviction of Unauthorised Occupants) Bill, 1960 (L.A. Bill No. 24 of 1960), be referred to a Select Committee."

May I know how long the House would require for general discussion and clause-by-clause consideration of this Bill?

SRI P. S. CHINNADURAI : About an hour.

MR. SPEAKER : All right. We shall now proceed. The hon. Member, Sri P. S. Chinnadurai may now speak.

SRI P. S. CHINNADURAI : கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது இந்த சபையின் முன்பாக சமர்ப்பித்திருக்கிற இந்த மசோதா வானது மிகவும் கொடுமையான ஒரு மசோதா என்று நான் சொல்ல விரும்புகிறேன். இப்படிப்பட்ட கொடுமையான மசோதாவுக்கு கனம் முதல் அமைச்சர் அவர்கள் எப்படி சம்மதம் தெரிவித்தார் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. சர்க்காருடைய நிலங்களில் சர்க்காருடைய உத்திரவு அன்னியில் ஆக்கிரமித்துக்கொண்டு வீடு கட்டிக்கொண்டோ அல்லது வேறு வகையில் பயன்படுத்திக்கொண்டோ இருந்தால் அவர்களை வெளி யேற்றுவதற்கு ஏற்கெனவே ஒரு அதிகாரம் சர்க்காருக்கு இருக்கிறது. ரெவின்யூ இலாகா மூலமாக அதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம். அவ்வாறு ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிற அந்த இடமானது உண்மையிலேயே சர்க்காருக்கு தேவையற்றதாக இருந்தால் சர்க்கார் அதனை பல சந்தர்ப்பங்களில் யார் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்களோ அவர் களுக்கே பட்டா செய்து கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுதும் கொடுத்துக் கொண்டுதான் வருகிறார்கள். சர்க்காருக்குத் தேவையான இடங்களாக இருந் தால் அதில் இருக்கக்கூடியவர்களை வெளியேற்றியும் வருகிறார்கள். இது வாடிக்கையாக நடந்து வருகிறது. இது நடைமுறையில் நடந்து கொண்டு தான் வருகிறது. அப்படி வெளியேற்றுவதை தீவிரமாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் இது கொண்டு வரப்பட்டிருக் கிறது. இன்னும் சொல்லப்போனால் இப்பொழுது இருக்கிற அப்பீல் செய்வது போன்ற பல காரியங்களுக்கு இடம் கொடுக்காமல் ஏதோ சர்க்காருக்குத் தேவை—சர்க்கார் என்று சொன்னால் உடனே மந்திரி சபை என்று எடுத்துக் கொள்ளக் கூடாது, அந்தந்த இடங்களில் இருக்கக் கூடிய கணக்குப் பிள்ளைகள் மணியக்காரர்கள், ரெவின்யூ அதிகாரிகள், தாசில்தார்கள் சர்க்காரின் கீழ் இருக்கிற உத்தியோகஸ்தர்களைத் தான் குறிப்பிடுகிறேன்—சர்க்கார் என்று சொன்னால் உடனே மந்திரி சபை என்று எடுத்துக்கொள்ளக் கூடாது— அவர்களுக்குத் தேவைப்படும் என்று நினைத்தால் அந்த இடங்களைக் காலிசெய்ய வேண்டும் என்று டாம் டாம் செய்து அந்த இடத்தைக் காலி பண்ண வேண்டும், எப்படியாவது காலி பண்ணித்தான் ஆக வேண்டும் என்று சொல்லுகிறார்கள். எப்படியாவது அவர்களைக் காலி பண்ணச்சொல்லி நிர்ப்பந்தம் செய்கிறார்கள். அப்படி நிர்ப்பந்தம் செய்வதை அதிகமாக உபயோகப்படுத்துவதற்காகவே இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது. அது மட்டுமல்ல, இந்த சட்டத்தில் இன்னும் மிகப்பெரிய ஒரு குறைபாடு என்ன

என்றால் ஆக்கிரமித்த நிலத்திலிருந்து வெளியேற்றுவதற்கு சர்க்கார் முடிவு எடுத்துக்கொண்டிருக்கும்போது அவர்கள் வெளியேறினால் அவர்கள் எங்கே வெளியேறுவது என்பதைப்பற்றியும், அவர்களுக்கு ஏதாவது மாற்று வழிவகை செய்யப்பட்டிருக்கிறதா என்பதைப்பற்றியும் இந்தச் சட்டத்தில் ஒன்றையும் காணோம். எந்த வகையிலும் மாற்று ஏற்பாடு செய்யப்படவில்லை. சர்க்காருக்கு இடம் வேண்டுமென்றால் உடனே இடத்தை விட்டு விட வேண்டும். வீடு கட்டிக் கொண்டிருந்தாலும் குடிசை போட்டுக் கொண்டிருந்தாலும் சர்க்கார் வேண்டும் என்று சொன்னவுடன் அந்த இடத்தை விட்டு விட வேண்டும் என்று இருக்கிறது. அந்த அளவில் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்டச் சட்டத்தைக் கொண்டுவருவதன் நோக்கம் நகரங்களில் இன்னும் மற்ற சிறிய பஞ்சாயத்து நகரசபைகளில் வாழக் கூடிய பெரும்பாலான குடிசை வாழ் மக்களை பாதிப்பதற்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது என்றுதான் நினைக்கவேண்டியதாக இருக்கிறது. நகரங்களில் மக்கள் ஏன் குடியேறுகிறார்கள்? பெரும்பாலான கிராமங்களிலிருந்து மக்கள் நகரங்களுக்கு பிழைக்க வருகிறார்கள். பல வகைகளில் பிழைப்பைத் தேடிக்கொள்ளலாம் என்று நகரங்களுக்கு வருகிறார்கள். அப்படி நகரங்களுக்கு வந்து வேலை தேடிக் கொண்டு சம்பாதிக்க முற்படுகிறார்கள். அப்பொழுது அவர்களால் வீட்டு வாடகை கொடுக்க முடியாமல் சர்க்கார் இடங்களில் குடிசைகளைக் கட்டிக்கொண்டு தங்களுடைய வாழ்க்கையை நடத்துகிறார்கள். இதை நம்முடைய சென்னை நகரத்தில் எங்கு பார்த்தாலும் பார்க்கலாம். ஏராளமாக அப்படி இருப்பதைக் காணலாம். அவர்களில் பெரும்பான்மையோர் கிராமப்புறங்களிலிருந்து வந்தவர்கள் தான். சர்க்கார் அவர்களுடைய கணக்கை எடுத்துப் பார்த்திருந்தால் அவர்களில் பெரும்பாலோர் கிராமங்களிலிருந்து வந்தவர்களாகத்தான் இருப்பார்கள். அவர்கள் நகரங்களில் வசிக்கக் கூடிய இடம் சுகாதாரமற்ற இடங்களாகத்தான் இருக்கிறது. அவர்களை வெளியேற்றுவதாக இருந்தால் அவர்களுக்கு ஏதாவது மாற்று ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டாமா, அப்படிச் செய்து கொடுத் திருக்கிறார்களா, அதைப் பற்றி சட்டத்தில் என்ன இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். இந்தச் சட்டத்தால் ஏழைகள் பாதிக்கப்படுவார்கள். இப்படிப்பட்ட சட்டம் கொண்டுவருவது முறையல்ல, சரியல்ல என்பதை நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். அதனால் தான் நான் துவக்கத்தில் இது ஒரு கொடுமையான மசோதா என்று சொன்னேன். இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து ஏன் இந்தக் கொடுமையைச் செய்ய வேண்டும்? இந்தச் சட்டத்தை கடுமையாக மந்திரிகளுக்கு அமுல் நடத்த மனம் இல்லாமல் போனாலும் அதை அமுல் நடத்தக்கூடிய உத்தியோகஸ்தர்கள் கொடுமையாகத்தான் அமுல் நடத்துவார்கள். அப்பொழுது பாதிக்கக் கூடிய நிலைமையில்தான் மக்கள் இருப்பார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் கிராமங்களிலிருந்து இங்கு பிழைப்புக்கு வந்தவர்களாகத்தான் இருப்பார்கள். அவர்கள்தான் இப்படிப்பட்ட இடங்களில் குடியேறியவர்களாக இருப்பார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, வீடு இல்லாத குறை அதிகம். ஓரளவுக்கு அதிகமான வசதி படைத்தவர்கள்கூட, வருமானம் உள்ளவர்கள்கூட, சொந்தமாக வீடு கட்டிக்கொள்ள முடியாத நிலைமையில் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு சர்க்காரின் பல்வேறு திட்டங்கள் மூலமாக உதவியை நாடிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வேளையில் வருமானமே இல்லாதவர்கள், மிகக் குறைந்த வருமானம் உள்ள ஏழை, எளிய பாமர மக்கள் முனிசிபல் நகரங்களிலோ, பஞ்சாயத்துப் பகுதிகளிலோ சொந்தமாக நிலம் வாங்கி வீடு கட்டிக்கொள்வது என்பது சாத்தியமே இல்லை என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ஆகையால் சர்க்கார் இந்த வீட்டுக் கஷ்டத்தைப் போக்குகிற வரையில், எல்லோருக்கும் இருக்க வீடு என்கிற நிலைமையை ஏற்படுத்துகிற வரையில் இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வருவதற்கு முயலக்கூடாது என்று நான் சொல்ல விரும்புகிறேன். சேரிகளை ஒழிப்பதற்கு முன்னால் ஏழை எளிய மக்களின் குடிசைகளைப் பிரித்து எறிவதற்கு முன்னால் அவர்களுக்கு எந்த இடத்திலே வீடு கட்டிக்கொடுத்



இருக்கிறோம் என்று சொல்லுங்கள். அப்புறம் இத்தகைய சட்டம் வந்தாலும் பரவாயில்லை. அவர்களுக்கு மாற்று இடமோ, மாற்று குடியிருப்பு வசதியோ செய்துகொடுக்காமல் இன்றையதினம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதானது மிகவும் மோசமானதாகும். அவர்கள் குடிசைகளைப் பிரித்து எறிந்துவிட்டால் அவர்கள் எங்கே குடியேறுவார்கள்? சென்னை நகரத்தைப் பொறுத்தமட்டில் இடமும் இல்லை, வீடும் இல்லை. இந்த நிலைமையில் அமைச்சர் அவர்கள் எப்படி இந்த மசோதாவைக் கொண்டுவரத் துணிந்தார்கள்? இன்னொன்று. ஏற்கனவே வீடு உள்ளவர்களுக்கு, எப்படிக்கொடுப்பது என்றால்—ராமநாதபுரத்தில் பிழைப்புக்கு வழியில்லாதவர்கள் இங்கே வந்திருப்பார்கள். அங்கே ஒரு குடிசை அவர்களுக்கு இருக்கிறது என்பதற்காக இங்கே வீடு இல்லையென்பதும் முறையாக இருக்காது. இனிமேல் வேண்டுமானால் இதுமாதிரியாக ஆரம்பத்திலேயே குடிசைபோட அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றாலும் சரி, 6 மாத காலத்திற்கு முன்பிருந்து போடப்பட்ட குடிசைகள் பிரித்து எறியப்படும் என்றால்—6 மாதம் முன்பாக போடப்பட்ட குடிசைகளையும் கூட ஆறு மாதத்திற்குப் பிறகுதான் போடப்பட்டது என்று பிரிக்கவும் அதிகாரிகள் தயங்கமாட்டார்கள்.

**The Hon. Sri R. VENKATARAMAN**: ஆறு மாதங்களுக்குள் போடப்பட்டவைகளுக்கும் இனிமேல் போடுவது பற்றியும் தான் இந்தச் சட்டமே தவிர பழைய குடிசைகளைப் பொறுத்த வரையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்றால் [illegible] ஆகப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

**Sri P. S. CHINNADURAI**: இந்த மசோதா கொண்டுவரும்போது அமைச்சர் அவர்களுடைய நோக்கம் எதுவாக இருந்தாலும் அதன் விளைவுகள் கொடுமையானதாக இருக்கும். இன்றைக்கு ஏழைகளுக்கு வீடுகள் கட்டித் தந்துவிட்டு இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம் என்றால் ஒருகால் நாங்கள் எங்கள் ஆதரவை இதற்குத் தர முன்வரலாமே தவிர மெஜாரிட்டி பலத்தை வைத்துக்கொண்டு இதை நிறைவேற்றிக்கொள்கிறோம் என்ற நிலையில் இந்த மசோதாவை இன்றையதினம் நிறைவேற்றிக்கொள்வதாக இருந்தால் [illegible] நிறைவேற்றிக்கொள்ளுங்கள். சபையினுடைய சம்மதத்தை [illegible] இந்த மசோதாவுக்கு நீங்கள் எதிர்பார்க்கக்கூடாது என்று சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**Sri S. LAZAR**: கனம் சபாநாயகர் அவர்களே, நமக்கு முன்னால் இருக்கக்கூடிய மசோதாவைப் பொறுத்தமட்டில் [illegible] தேவை இருக்காது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. இந்த மசோதாவில் குறிப்பிட்டிருக்கிறபடி இப்போது இருக்கக்கூடிய முக்கியமான பிரச்னை பொதுவாக அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலமாக இருந்தாலும் சரி, அல்லது ஸ்தல ஸ்தாபனத்திற்குச் சொந்தமான நிலமாக இருந்தாலும் சரி, அல்லது மசோதாவில் குறிப்பிட்டிருக்கிறபடி வீடு இம்ப்ரூவ்மெண்டு போர்டுடைய [illegible] இடங்களாக இருந்தாலும் சரி, இந்த இடங்களில் அநுமதி [illegible] குடிசை போட்டுக்கொண்டு விடுவது, இது என்ன அரசாங்கத்தின் சொத்து தானே என்று நினைத்துச் செய்கிற காரியத்தினால் தான் பொதுவிலே தடைப்படுகிறது என்பது [illegible] தெரிகிறது. [illegible] மென்ற நோக்கத்தோடு அரசாங்கம் இந்த மசோதாவைக் கொண்டு [illegible] போது இதில் உள்ள இரண்டு மூன்று முக்கிய [illegible] கொள்ளவேண்டுமென்று [illegible].

குறிப்பாக நாம் கொண்டு வந்திருக்கிற [illegible] முக்கியமான அம்சம் ஒருவர் ஆக்கிரமித்த [illegible] வெளியேற்றுவது என்பதற்கு [illegible] ஆக்கிரமிக்காமல் தடுப்பது எப்படி. அல்லது [illegible] ஆக்கிரமித்துக்கொண்டவர்களை வெளியேற்றுகிறபோது அவர்களுக்கு [illegible] பது என்கிற பரிகாரம் இதில் இல்லை என்று நான் [illegible].

ஏற்படுகிறது. சாதாரணமாக எந்த ஒரு மனிதனுக்கும் அப்பீல் செய்ய வேண்டுமென்ற நிலைமை ஏற்படுகிறபோது எந்தெந்த சந்தர்ப்பங்களில் ஸ்டே கொடுக்க முடியும் என்ற அதிகாரம் ஏற்கெனவே சாதாரண முறைப்படி சிவில் ப்ரொசீஜர் கோடின்படி வழங்கப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட முறையில் செய்தாலொழிய நிச்சயமாக ஸ்டே கிடைக்க அனுகூலம் ஏற்படாது. நடைமுறையில் பல சிக்கல்கள் ஏற்படும். ஸ்டேக்கு அவசியம் ஏற்பட்டால் தனிப்பட்ட கேஸினுடைய merit and de-merit-க்குத் தக்கவாறு ஸ்டே கொடுக்கலாம் என்ற நிலைமை இருக்க வேண்டுமே தவிர அதிலே வேறொரு நிபந்தனையைப் புகுத்துவது நடைமுறையில் பல சிக்கல்களை உண்டு பண்ணும் என்ற கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இதுபோன்ற ஒரு நிலைமை ஏற்பட்டு பாதிக்கப்பட்ட ஒருவன் அப்பீலில் தோற்று அதற்குப் பிறகு சிவில் கோர்ட்டுக்குச் செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டு தாவா செய்துகொண்டால், ஸ்டே கொடுக்க முடியாது என்று இரண்டாவது பிரிவில் போட்டிருக்கிறோம். இதிலேகூட நான் சொல்ல விரும்புகிறேன், ஒரு பொதுவான கட்டிடம் கட்டி அதை எடுத்து விடுவோம் என்ற முறையிலே உத்தரவு போட்டு எடுத்துவிட்டால் அவர் சிவில் கோர்ட்டுக்குப் போய் அவனுக்குப் பரிகாரம் ஏற்படுகிறது என்ற நிலைமை இருந்தாலும் அவனுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்ய முடியாது. அரசாங்கமோ அதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரியோ அந்தக் கட்டிடத்தை ஏற்கெனவே இந்த மசோதாவில் இருக்கிற முறைப்படி தகர்த்து இடித்து விடுவார்களானால் அதற்குப் பிறகு சிவில் கோர்ட்டுக்குச் சென்று சாதகம் ஏற்படும்போது கட்டிடத்தை எப்படித் திருப்பித் தரமுடியும்? இந்த நிலைமையைப் பரிசீலனை செய்து அதை மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அப்படி மாற்றி அமைத்தால் நடைமுறையில் பல சிக்கல்கள் இருக்கிறது. ஏற்கெனவே சொன்னதுபோல ஆக்கிரமிப்பாளர்களைத் தடுப்பதற்கு வகை செய்யும் இதே சமயத்தில் ஏற்கெனவே பல ஆண்டுகளாக, குறைந்தது 10 ஆண்டுகளுக்கு மேலாக ஒருவனிடம் ஒரு சொத்து இருக்குமானால் அவனுக்கே அதைச் சொந்தமாக்கவேண்டுமென்ற நிலைமையையும் இந்த மசோதாவில் சேர்த்துக்கொண்டு வந்தால், நடைமுறையில் பல சௌகரியங்கள் கிடைக்கும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**SRI M. KALYANASUNDARAM**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவுக்கு என்னுடைய கட்சியின் சார்பில் ஆதரவு கொடுக்காமல் இருப்பதற்கு வருந்துகிறேன். மசோதாவின் முகவுரையில் குறிப்பிட்டிருக்கும் நோக்கங்கள் என்னவோ ரொம்ப நியாயமான நோக்கங்களாகத் தோன்றலாம். ஆனால் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால் அதனுடைய விளைவுகள் என்னவாகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த மசோதாவில் "அன் ஆதரைஸ்ட் ஆகுபேஷன்" என்று குறிபபிடப்பட்டிருக்கிறது. "பிரிமிஸஸ்" என்றால் என்ன என்பதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இரண்டு விளக்கங்களையும் சேர்த்துப் பார்க்கும்போது ஏதோ சர்க்கார் புறம்போக்கு நிலங்களிலோ அல்லது பொது காலி இடங்களிலோ குடிசை போட்டுக்கொண்ட ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்காக மட்டும் ஏற்பட்ட சட்டம் மாதிரித் தோன்றலாம். ஆனால் அப்படி அல்ல. மற்ற சட்டங்களிலே கொண்டுவரப்பட்டிருக்கும் பாதுகாப்பைக்கூட அபகரிக்கக்கூடிய அபாயம் இதில் இருக்கிறதென்பதை கனம் அமைச்சர் அவர்கள் இதுவரையிலும் சிந்திக்காமல் இருந்தால் அதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். "பிரமிஸஸ்" என்பதற்கு வியாக்கியானம் எப்படிச் செய்திருக்கிறார்கள் என்றால் "any premises belonging to, or vested in the City Improvement Board என்று சொல்லப்பட்டிருக்கிறது. சிடி இம்ப்ரூவ்மெண்டுக்குச் சொந்தமாக இருக்கும் காலி நிலங்களைக் குடிசைகள், கட்டிடங்கள் அவற்றையெல்லாம் [illegible]லாம் என்று வந்துவிடும். குறிப்பாகச் சென்னை நகரத்தில்தான் சிடி இம்ப்ரூவ்மெண்ட் டிரஸ்ட் இருக்கிறது. சிடி டெனன்ட் ப்ரொடெக்ஷன் [illegible] பாதுகாப்பில் இருக்கிறது. அதன் மூலம் கொடுக்கப்படும் பாது-



காப்பை அபகரிப்பதற்காக சிடி இம்ப்ரூவ்மெண்ட் டிரஸ்டுக்கு அந்த நிலத்தை விட்டு விடுவார்களானால், சி.ஐ.டிக்குச் சொந்தம் என்ற காரணத்தைக் காட்டி 10 தினங்களுக்குள் கட்டிடத்தைக் காலி செய்வதற்கு நடவடிக்கையை வெகு துரிதமாக எடுக்க முடியும். அப்படி எடுக்கும்போது வேறு சட்டங்களில் கொடுக்கப்பட்டிருக்கும் பாதுகாப்புகளை அபகரிக்காமல் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்களா, அதற்குப் ப்ரொவிஷன் இருக்கிறதா என்று சிந்திக்கக்கூட இல்லை.

அப்படி எடுக்கும்போது வேறு சட்டங்களில் கொடுக்கப்பட்டிருக்கும் பாதுகாப்புகளை அபகரிக்காமல் எங்கேயாவது கொடுக்கப்பட்டிருக்கிறதா? அதற்குப் ப்ரொவிஷன் இருக்கிறதா? நஷ்டயீட்டிற்கு பாதுகாப்பு ஏதாவது இருக்கிறதா? ஸிட்டி டெனன்ட்ஸ் ப்ரொட்டக்ஷன் ஆக்ட்படி ஒரு லாண்ட்லார்ட் அவர் கீழுள்ள டெனன்டை வெளியேற்ற வேண்டுமென்று சொன்னால் அந்தக் கட்டிடத்திற்கான நஷ்ட ஈடு கொடுக்கப்பட வேண்டும், டெனன்ட் ஒத்துக்கொண்டால். அப்படி டெனன்ட் வெளியேற சம்மதிக்காவிட்டால் கிரயம் செய்யப்பட வேண்டும். ஸிட்டி இம்ப்ரூவ்மெண்ட் ட்ரஸ்ட்க்கு விற்று விட்டால் அந்தப் பாதுகாப்பு கிடைக்காது. இந்தப் பகுதிப்படி அது பறிக்கப்படும் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ஆக்கிரமத்திருக்கக்கூடிய பகுதிகளில் இந்தச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னால் ஆக்கிரமித்தவர்களைக்கூட காலி செய்வதற்குள்ள அதிகாரம் எடுத்துக் கொள்ளப்படுகிறது. இந்தச் சட்டம் வந்த பிறகு ஏற்படும் ஆக்கிரமிப்புகள் மட்டுமல்ல, இந்தச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன் ஆறு மாத காலம் வரை போட்டிருக்கக்கூடிய ஆக்கிரமிப்புகள் எல்லாம் அகற்றப்படுமென்று இருக்கிறது. ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்குச் சாதாரண சட்டங்கள் இருக்கின்றன. அவைகள் படி போதுமான அதிகாரம் அதிகாரிகளுக்கு இருக்கிறது. அந்த அதிகாரத்தைச் சரியாக உபயோகப்படுத்தி பொது உபயோகத்திற்குத் தேவையான நிலத்தை எடுப்பதற்கு வசதிகள் இருக்கின்றன. இதற்கு பிரத்தியேகமான சட்டம் கொண்டு வரவேண்டியதில்லை, சேரிகள் ஏற்பட்டு சுகாதாரம் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்குச். சேரிகள் ஏற்படுவதற்குள்ள காரணம் என்ன? இவ்வளவு கேவலமான, சுகாதாரமற்ற இடங்களில் ஜனங்கள் போய்க் குடியிருக்க வேண்டியதின் அவசியமென்ன? இது ஒரு முக்கியமான சமுதாயப் பிரச்னை. ஆக, அவர்கள் குடியிருக்க வசதியான வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது முக்கியம். குடியிருக்க வீடு கிடைக்காத காரணத்தினால்தான் ஏழை, எளிய மக்கள், குறிப்பாக ஹரிஜன மக்கள் எங்கு காலி இடம் கிடைத்தாலும் சரி அதில் குடிசை போட்டுக் கொண்டு அங்கேயே சாப்பாடு, அங்கேயே சமையல், அங்கேயே பிரசவம், அங்கேயே மரணம் எல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. இப்படி ஒரு வாழ்க்கை நடத்த அவர்களுக்கு உற்சாகமா, என்ன? சர்க்காரை எதிர்க்க வேண்டுமென்று அவர்கள் குடிசை போட்டுக்கொண்டு வாழ்கிறார்கள்? இதையெல்லாம் அமைச்சர் அவர்கள் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சட்டம் இயற்றிவிட்டால் போதாது. நோட்டிபிகேஷன் பிரகடனம் செய்து வீட்டில் ஒட்டிய பிறகு கட்டிடமாக இருந்தால் பத்து தினங்களிலும், குடிசையாக இருந்தால் மூன்று தினங்களிலும் என்று சொல்லி அவைகளை இடித்து எறியலாம், அதற்காக, பலாத்காரத்தைக்கூட உபயோகப்படுத்தலாம். நாலாவது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது—"**If any person refused or fails to comply with the order of eviction, the competent authority or any person specially authorized by it in this behalf may evict that person from and take possession of, the public premises and may, for that purpose, use such force as may be necessary.**" என்று பலாத்காரத்தை உபயோகித்து வெளியே தள்ளி, குடிசையைப் பிரித்து எரியலாம், இடித்துத் தள்ளலாம். அதனால் என்ன நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை என்ற நிலையில் இருக்கிறார்கள். இதற்கு முன்பு ஒரு உத்தரவு இருக்கிறது. வீடில்லாத ஹரிஜன மக்கள் பொது இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தால் அவர்களை அப்புறப்படுத்த வேண்டுமென்றால் மாற்று இடம் கொடுத்து . . . . . .

**THE HON. SRI R. VENKATARAMAN**: 1956-க்கு முன்னுல் அவர்கள் இந்த விதமாகப் பொதுவிடங்களில் குடியிருந்தால் அவர்களுக்கு மாற்று இடம் கொடுப்பது என்று நாங்கள் விதி போட்டிருக்கிறோம். அந்த விதி இந்தச் சட்டத்தால் பாதிக்கப்படாது.

**SRI M. KALYANASUNDARAM**: இந்தச் சட்டம் வந்த பின்னுல் பார்த்துக் கொள்ளலாம். சட்டம் வருவது வரையில் போட்டவர்களுக்கு மாற்று இடம் கொடுக்காவிட்டால் என்னவாகும்? ஸிட்டி இம்ப்ரூவ்மெண்ட் டிரஸ்ட்க்கு விற்று விட்ட நிலங்களுக்கு, 1956-க்கு......

**THE HON. SRI R. VENKATARAMAN**: இப்படி, சட்டத்தை விமர்சனம் செய்வது சரியல்ல, என்று தெரியப்படுத்திக் கொள்கிறேன். இந்தச் சட்டத்தில் என்ன சொல்லியிருக்கிறது? ஸிட்டி இம்ப்ரூவ்மெண்ட் டிரஸ்ட்க்குச் சொந்தமான நிலம் அல்லது ஆறு மாதங்களுக்கு முன் சிட்டி இம்ப்ரூவ்மெண்ட் ட்ரஸ்ட்டுக்குச் சொந்தமான நிலத்தில் தவருக குடிசை போட்டிருந்தால் எடுக்க முடியும் என்பதுதான்.

**SRI M. KALYANASUNDARAM**: அமைச்சர் அவர்களின் அபிப்பிராயம் அப்படியிருக்கலாம். இந்த வாசகத்தைப் பார்க்கிறபோது, "ஆத்தரைஸ்டா" அல்லது "அன் ஆத்தரைஸ்டா" என்ற "டிஸ்ப்யூட்", வரும். "அன் ஆத்தரைஸ்ட் ஆக்குபேஷன்" என்று சொல்லிவிடலாம், அப்படிச் சொல்லிக் கேஸ் போடலாம். அப்பொழுது சட்டத்தை உபயோகித்து அவர்களை வெளியேற்றலாம். அப்பீல் செய்வதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிருர்கள். அதற்கு, 90 நாட்கள் வரை கொடுக்கப்பட்டிருக்கிறது. மூன்று நாட்களில் குடிசைகளை பலாத்காரமாகப் பிரித்து எடுத்து விடலாம். பின், அப்பீல் கொடுத்து என்ன பிரயோஜனம்? எப்பொழுது அப்பீல் கொடுக்கலாம். நிலம் சொந்தம் என்று குறிப்பிட்டால் ஸ்டே கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிருர்கள். அப்படி "ஸ்டே" அதிகாரம் கொடுத்திருப்பதால் எந்தவித பிரயோஜனமும் ஏற்படாது. அதிகாரிகளுக்கு, குடிசைகளை பலாத்காரம் உபயோகித்துப் பிரித்து எறிவதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனுல் பல சிக்கல் ஏற்படுமென்று அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டத்தை அமுல் நடத்தி அதனுல் வரும் கெட்ட பெயரை அரசாங்கம் வாங்கிக் கொள்ளத் தயார் என்ருல் அதற்கு நான் ஆட்சேபிக்கவில்லை. இந்தச் சட்டத்தினுல் ஏற்படும் நிகழ்ச்சிகளினுல் போலீஸோடு மோதுதல் ஏற்படும். அரசாங்கம்—ஏழை மக்கள் மோதுதல் ஏற்படும். பிரித்து எரியக்கூடிய குடிசைகளுக்கு, அதனுல் ஏற்படும் சேதத்திற்குள்ள நஷ்ட யீட்டிற்கு உத்தரவாதம் கிடையாது. மாற்று இடத்திற்கு உத்தரவாதம் கிடையாது. திடீர் திடீரென்று குடிசைகள் பிறித்தெறியக்கூடிய நிலை ஏற்படுமோதலால் இதை அனுமதிக்க முடியாது. இது, சென்னை நகரத்திற்கு மட்டுமா? கிராமங்களில் உள்ள நத்தம் புறம்போக்குகளில் ஒரு அணு வசூல் செய்துகொண்டு குடிசை போட அனுமதிக்கலாம் என்று இருக்கிறது. இதனுல் அவைகளையும் "அன் ஆத்தரைஸ்ட் ஆக்குபேஷன்" என்று சொல்லி ரெவின்யூ அதிகாரிகள் அந்தக் குடிசைகளை மூன்று தினங்களில் பிரித்தெறிய அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சில குறிப்பிட்ட நகரங்களில் மட்டும் சேரிகள் ஏற்படுவதைத் தடுக்க வேண்டுமென்ற நோக்கமாயிருந்தால்—"**It extends to the whole of the State of Madras**" என்று இருக்க வேண்டாம். எல்லாப் பகுதிகளுக்கும் இது பொருந்தும். பல கிராமங்களில், நத்தம் புறம்போக்குகளில் குடிசை போடுவதை ஆட்சேபிக்க முடியாது. ஆட்சேபமற்ற புறம்போக்கு என்று "க்ளாஸிபிகேஷன்" இருக்கிறது. "பப்ளிக் ப்ரிமிஸெஸ்" என்று சொல்லி அகற்ற அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிருர்கள். அமைச்சர் அவர்கள் இதைச் சிந்தித்துப் பார்க்காமல் தான் கொடுத்திருக்கிருர்கள் என்று நினைக்கிறேன். இது ஒரு சமுதாயப் பிரச்னை சம்பந்தமானது. சட்டத்தின் மூலம் அதிகாரம் பெற்று, அடக்குமுறை மூலம் இதை அமுல் நடத்த முடியாது என்று அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆகவேதான் சர்க்காரை ஆதரிக்கக்கூடிய திரு லாஸர் அவர்கள் கூட அதிலுள்ள பல



விளைவுகளை, அவர் என்போன்று எதிர்க்க முடியாத காரணத்தினுல், பல விளைவுகளை மட்டும் சுட்டிக் காட்டினுர்கள். நான் திருத்தம் கொடுத்திருப்பது கூட செலக்ட் கமிட்டியிலாவது இதுபற்றி யோசனை செய்வோம் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். இந்தச் சட்டத்தில் இருக்கக்கூடிய கருத்துக்களை, இந்தச் சட்டம் மூலம் சர்க்கார் ஏற்றுக் கொள்ள விரும்பும் அதிகாரங்களுக்கு நான் அனுமதி அளிக்க முடியாது, சம்மதம் தெரிவிக்க முடியாது என்று தெரிவித்துக்கொண்டு இந்த மசோதாவை நான் எதிர்க்கிறேன்.

**SRI K. R. NALLASIVAM**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை, பொறுப்பில் உள்ளவர்கள் சென்னை நகரத்திற்கு மட்டும் இந்தச் சட்டத்தை அமுல் நடத்தவேண்டுமென்ற நோக்கத்தோடு கொண்டு வருவது போல் சொல்கிருர்கள். ஆனுல் அதற்காக இந்த மசோதாவிலோ அல்லது தனி ஒரு மசோதாவாகவோ அதுபோன்ற ஒரு மசோதாவை அதுவும் இங்குள்ள ஏழை எளியவர்களுக்குப் பாதகம் இல்லாமல் கொண்டு வருவதில் எங்களுக்கு எந்தவித ஆட்சேபணையும் கிடையாது. அதே சமயத்தில் இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் இந்த ராஜ்யத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் இது பொருந்துகிற முறையில்தான் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவின் காரண காரிய விளக்கத்தில் குறிப்பிட்டிருப்பது, சுகாதாரத்திற்கு விரோதமாகவும், ஜன நெருக்கம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்ற முறையில் காரண காரிய விளக்கம் கூறப்படுகிறது. படிப்பதற்கு உண்மையில் இது மிகவும் இனிப்பாகத் தான் இருக்கிறது.

ஆனுல் எனக்கு முன்னுல் பேசிய திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டது போல், இதனுல் ஏற்படக்கூடிய பலன் என்னவென்பதைப்பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாட்டிலுள்ள ஏழை எளிய ஜனங்கள் இன்றைக்கு கிராமப் புறங்களில் போய்ப் பார்த்தால் அவர்கள் இருக்கும் இடத்திற்கு வரையறையே கிடையாது. நகரத்தில் வேண்டுமென்ருல் இன்னின்ன இடத்தில் தான் இருக்க முடியும் என்றிருக்கலாம். ஆனுல் கிராமங்களை எடுத்துக் கொண்டால் சுடுகாடாக இருந்தாலும் சரி, இடுகாடாக இருந்தாலும் சரி, எங்கே அரை செண்டு இடம் கிடைக்கிறதோ இந்த இடங்களில் இருக்கின்ருர்கள். அந்த இடத்தில் அவர்கள் விரும்பிப் போய் மனமகிழ்ச்சியோடு இருக்கவில்லை. வேறு வகையில்லாத நிலையில்தான் அந்த இடங்களில் இருந்து கொண்டிருக்கிருர்கள். சர்க்காரைப் பொறுத்த வரையில், இவர்களை எப்படி வெளியேற்றுவது என்பதில் அக்கறை செலுத்துவதை விட இவர்களுக்கு வேறு எப்படி இடம் கொடுப்பது என்பதற்கு ஏதாவது சட்டம் கொண்டு வந்திருந்தால் நன்ருக இருந்திருக்கும். குறைந்தது 3 செண்டாவது, அவர்கள் பெரிய இடம் வேண்டுமென்று கேட்கவில்லை, குறைந்தது அந்த அளவுக்காவது இடம் கொடுப்பதற்குச் சட்டம் செய்து கொண்டு வந்திருந்தால் அவர்களுக்கு அனுகூலமாக இருந்திருக்கும். அதல்லாமல் சென்னை, மதுரை, கோவை போன்ற நகரங்களை மட்டும் வைத்துக் கொண்டு ஒட்டுமொத்தமாக மாகாணம் பூராவுக்கும் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவது முறையானதல்ல. அதோடு நான் குறிப்பிட விரும்புவது, இதில் தவறுகள் ஏதாவது நடந்தால் அதைப் பற்றியுள்ள புகாரை ரெவின்யூ போர்டுக்கு அனுப்பலாம் என்று சொல்லப்பட்டிருப்பதைப் பற்றி கிராமத்திலுள்ள சாதாரண ஜனங்கள் இதைப் பற்றி புகார் செய்வதற்கு தினசரி ஆர். டி. ஓ. ஆபீசுக்கும் கலெக்டர் ஆபீசுக்கும் போய்க் கொண்டிருக்க முடியுமா? முடியவே முடியாது. இங்கு கூட சொல்லப்பட்டது, 56-க்கு முன்னுல் இருந்த அரிஜனங்களைப் பற்றி. அதே போன்று தான் கிராமப்புறங்களில் பலரிடம் அவர்கள் இருக்கின்ற இடங்களுக்கு ஆதாரம் எதுவும் அவர்கள் கையில் இராது. 100-க்கு ஐந்து பேர்கள் அல்லது பத்து பேர்கள் தான் தீர்வை எல்லாம் கொடுத்துச் சரியான ஆதாரத்தை வைத்துக் கொண்டிருப்பார்கள். நூற்றுக்கு 90 பேர்களிடம் ஆதாரமே கிடையாது. அதிலும் நிச்சயமாகப் புறம்போக்குகளில் இருப்பவர்களுக்கு எந்த விதமான ஆதாரமும் கிடையாது. ஆகவே

சட்ட மன்றக் கூட்டத்தில் வைத்துப் பரிசீலனை செய்தால், இந்தச் சட்டம் நல்ல முறையில் அமைக்கப்பட்டதாக இருக்க முடியும்—நன்றாக யோசித்துச் செய்ததாக இருக்க முடியும்—என்று நினைத்து, எனது இந்த யோசனையைச் சொல்லிக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**SRI S. M. ANNAMALAI :** சட்டமன்ற உதவித் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருப்பதைப் பார்த்தால், ஏழைகள் என்றாலேயே அவருக்குப் பிடிக்கவில்லை என்று தோன்றுகிறது. நாட்டுப் புறங்களிலுள்ள ஏழை மக்கள் வேலை கிடைக்காததால், நகர்ப்புறங்களுக்கு வருகிறார்கள். அப்படி நகர்ப்புறங்களுக்கு வந்த பிறகு இருப்பதற்கு வீடு கிடைக்காமல், சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டிக் கொண்டிருக்கிறார்கள். "ஆறு மாதங்களுக்குள் அவர்கள் குடிசை கட்டிக் கொண்டிருந்தால் அவர்களை வெளியேற்றிவிடலாம். அது மட்டுமல்லாமல், ஜங்கம சொத்துக்களைக் கூட ஏலம் போட்டுவிடலாம்—அதாவது 7 நாள் நோட்டீஸ் கொடுத்து ஏலம் போட்டு விடலாம்" என்று இந்த மசோதாவில் இருக்கிறது. இதனால் சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில், ரிக்ஷா இழுப்பவர்கள், கை வண்டி இழுப்பவர்கள் எல்லாம் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். வேலை இல்லாத காரணத்தினால், நகர்ப்புறம் வந்து அங்கேயே குடிசை கட்டிக் கொண்டு, சர்க்கார் கட்டிடங்களில் பகல் பூராவும் கை வண்டி இழுத்து வேலை செய்துவிட்டு, இரவு காலத்தில் தங்குகிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய குடிசைகளைப் பிரித்து எறிந்து விடுவோம், ஜங்கம சொத்துக்கள் ஏலம் போடப்படும், என்று சொல்லுவது அவ்வளவு முறையல்ல. இந்தச் சட்டம் மாநிலம் பூராவுக்கும் அமுலுக்கு வரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சென்னையில் இப்போதே "லாண்ட் எவிக்ஷன் ஆக்ட்" என்று இருக்கிறது. தகாத முறையில் குடிசை கட்டிக் கொண்டு இருந்தால் தாசில்தார் வேண்டுமானால் 6-ம் நம்பர் நோட்டீஸ் கொடுத்து, அதன் மூலம் காலி செய்துவிடலாம் என்று தற்போது சட்டம் அமுலில் இருக்கிறது. அந்தச் சட்டத்தை வேண்டுமானால்—அதிக நாள் ஆகிறது என்று காரணத்திற்காக—திருத்தி அமைக்கலாமே தவிர, தனி மசோதா கொண்டு வந்து, சட்டமன்றத்தில் நிறைவேற்றி, அதன் மூலம் கிராம மக்களுக்கும், நகர்ப்புறங்களில் இருக்கக்கூடிய பாமர மக்களுக்கும் பாதகம் ஏற்படக் கூடிய முறையில் தனி மசோதாவாக இதைக் கொண்டு வந்திருப்பது மிக மிக வேதனைப்படக் கூடிய விஷயம். அமைச்சர் அவர்களுக்குக் கூடத் தெரியும். அமைச்சர் அவர்கள் ஏழைத் தொகுதியிலிருந்து தான் வந்திருக்கிறார்கள். இந்த மசோதாவினால் கிராம மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். இந்த மசோதாவைப் பார்க்கும்போது சிவில் கோர்ட்டுகளில் கூட அவர்கள் சென்று தங்கள் குறைகளைச் சொல்லி வழக்குத் தொடர முடியாது இந்தச் சட்டத்தின் மூலம். சிவில் கோர்ட்டுக்குப் போக்க கூடாது என்று தடுக்கப்படுகிறார்கள். ஆறு மாதங்களுக்குக் குடிசை போட்டுக்கொண்டார்களா அல்லது இரண்டு ஆண்டுகளாகக் குடிசை போட்டுக்கொண்டு இருந்தார்களா என்று நிரூபிப்பது அவர்களால் முடியாத காரியம். அதிகாரி சென்று விசாரித்து, 6 மாதங்களுக்கு முன்பு கட்டிய குடிசையாக இருந்தாலும், பிறகு கட்டிய குடிசை என்று, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே ஏழை மக்கள் குடிசை கட்டிக்கொண்டு இருந்தபோதிலும், 6 மாதங்களுக்குள் கட்டிய குடிசை என்று தாராளமாக அவர்களை வெளியேற்றப்பட்டுவிடலாம். ஆகையால் இந்த மசோதாவைப் பார்க்கும்போது, இதனால் பல ஏழை மக்கள் பாதிக்கப்படுவார்கள்; அதிலும் நகர்ப்புறங்களில் ரிக்ஷா இழுப்பவர்களும், கை வண்டி இழுப்பவர்களும், அந்த நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டுவிட்டால், அவர்களுடைய கதி என்னவாகும்? அவர்களுக்கு வேறு எங்கேயாவது இடம் தேடித் தந்து, குடிசை கட்டிக் கொள்வதற்கு வசதி அளிக்க சர்க்காரிடம் மாற்று யோசனை ஏதாவது இருக்கிறதா என்றால், அது கூடக் கிடையாது. அவர்கள் திடீரென்று வெளியேற்றப்பட்டுவிட்டால், அவர்கள் வேறு எந்த இடத்தில் படுப்பது? எங்கே சென்று குடும்பத்தை நடத்துவது? இதைச் சர்க்கார் சிந்திக்க வேண்டும். ஏதோ நோட்டீஸ் கொடுத்து





டாம்-டாம் போட்டு வெளியேற்றிவிட்டால், அல்லது 7 நாள் நோட்டீஸ் கொடுத்து ஜங்கம சொத்துக்களை ஏலம் போடுவது என்றால், அவர்கள் அதை விட்டு வேறு எந்த இடத்திற்குச் செல்வது? எந்த இடத்திற்குப் போகச் சொல்லுகிறார்கள் என்று திட்டவட்டமாக இருக்க வேண்டும். அவர்கள் வெளியேற வேண்டும், இல்லையென்றால் குடிசை பிரித்து எறியப்படும் என்று சொன்னால் அது நியாயமாகாது. இதை எல்லாம் நன்கு பரிசீலிக்க இந்த மசோதா செலக்ட் கமிட்டிக்குச் செல்வது நல்லது. அமைச்சர் அவர்கள் இந்த மசோதா சிறிய மசோதா என்று சொன்னார்கள். பார்ப்பதற்குச் சிறிய மசோதா தான். சிறிய மசோதாவாக இருந்தாலும் பெருமளவில் பாதிக்கக்கூடிய மசோதா. பாம்பு சிறியதாகத் தான் இருக்கிறது. ஆனால் கடித்தால் அவ்வளவும் விஷம்தான். சிறியதாக இருந்தபோதிலும் பல ஏழை மக்களை பாதிக்கக் கூடியதாக இருப்பதால், இந்த மசோதா பொறுக்குக் குழுவிற்குச் செல்வது நல்லது—பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டும். தீர ஆலோசனை செய்து வேண்டுமானால், மறுபடியும் இந்தச் சட்டமன்றத்தின் முன்பு கொண்டு வரலாம் என்று சொல்லிக் கொண்டு, பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டுமென்று வற்புறுத்தி எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

**SRI N. MARUDACHALAM :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்போது சர்க்கார் கொண்டு வந்திருக்கும் சட்டமானது ஏழை மக்களுக்கு மிகவும் பாதகமான சட்டமாகக் கருதப்படுகிறது. அதாவது இன்றைக்கு வீடில்லாத ஏழை மக்கள் பெரும்பாலும் இந்தப் பகுதியிலே—இந்தியா பூராவிலும் கூட—தாழ்த்தப்பட்ட ஹரிஜன மக்கள்தான். அவர்கள்தான் எந்தவிதமான வசதியும் இல்லாமல் வீடு கட்டிக் கொள்ள சொந்த இடம் கூட இல்லாமல் ஏதோ ஒரு இடத்தில்—புறம்போக்கு நிலங்களில்—குடிசை கட்டிக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் அந்த முறையில் வாழ்ந்து வருவது 6 மாதங்களுக்கு உட்பட்டு இருந்தால், அவர்களுடைய குடிசையைப் பிரித்து விடுவது என்று அதற்கு வீடுகளாக இருந்தால் 10 நாள் வாய்தாவும், குடிசையாக இருந்தால் 3 நாள் வாய்தாவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த மாதிரி ஏழை ஜனங்களை மிகவும் பாதிக்கக் கூடிய முறையில் குடிசைகளைப் பிரித்து விடுவது என்று சட்டத்தில் கூறப்படுவது மிகவும் வருந்தத்தக்க விஷயம். அதோடு கூட அந்த இடங்களை விட்டு அவர்களை அகற்ற வேண்டுமானால் அவர்களுக்கு மாற்று இடம் கொடுத்தாக வேண்டும். மாற்று இடத்தைக் கொடுத்து, பிறகு கூறைகளைப் பிரிக்க சர்க்கார் அனுமதிக்க வேண்டும். அப்படி இல்லையென்றால், திடீரென்று குடிசையைப் பிரித்து விட்டால் உடனே சட்டி பானைகளைத் தூக்கிக்கொண்டு அவர்களால் வேறு இடத்திற்குப் போக முடியாது. வேறு இடங்களுக்குப் போவதற்கு முதலில் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதற்கு சர்க்கார் சட்டம் கொண்டுவர வேண்டும். வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காகச் சர்க்கார் சட்டம் கொண்டு வந்தால் அது நன்றாக இருக்கும். அதை விட்டு, வீடுகளைப் பிரிக்கும் திட்டத்தைச் சர்க்கார் கொண்டுவந்திருப்பது மிகவும் வருந்தத் தக்கது. அது மட்டுமல்லாமல், புறம்போக்கு இடங்களில் இன்றைக்கு வீடு கட்டியிருக்கிறார்கள். ஆறு மாதங்களுக்கு உட்படாமல் இருப்பதை மணியக்காரர், கணக்குப்பிள்ளை எல்லோரும் ஒத்துக் கொண்டாலும், 6 மாதத்திற்கு உட்பட்டது என்று அதிகாரி சொல்லிவிட்டு, அதைப் பிரிப்பதற்கு உத்திரவு போடலாம் என்ற முறையில் இருக்கிறது. இதை எல்லாம் கணக்கெடுத்து, தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கக்கூடிய சேரிகளாக இருந்தாலும், புறம்போக்கு இடமாக இருந்தாலும், மாற்று இடம் தேடிக் கொடுத்த பிறகுதான் குடிசைகளைப் பிரிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமே தவிர, அதற்கு முன்பாகச் செய்யக் கூடாது என்று கேட்டுக் கொண்டு இந்த வீடு பிரிக்கும் சட்டத்தை நான் ஆதரிக்கவில்லை என்று சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**THE HON. SRI M. A. MANICKAVELU :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த நிலத்திலே ஆக்கிரமிப்பு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஏற்கனவே சட்டம் இருக்கிறது. அது 1905-ம் வருஷத்திய

[Sri M. A. Manickavelu] [9th September 1960

" லாண்ட் என்க்ரோச்மெண்ட் ஆக்ட்". அதற்குப் பிறகு 55 வருஷங்கள் ஆகிவிட்டன. ஐம்பத்தைந்து வருஷங்களுக்கு முன்பு ஏற்பட்ட மசோதா வைத்தான் நாம் அமுல் செய்துகொண்டு வருகிறோம். அந்த வருஷத்திற்குப் பிறகு இப்போது பார்த்தால், எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. எல்லா விஷயத்திலும் வேகம். போக்கு வரத்தில் எல்லாம் நிறைய வேகம். ஆகவே இந்த மாதிரி நடவடிக்கைகள் எடுப்பதிலும் கொஞ்சம் வேகம் வேண்டும். இந்த மசோதாவின் முக்கியமான அம்சம் இன்னும் கொஞ்சம் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது தான். இது எல்லாப் பிரிவுக்கும் அல்ல. இந்த மசோதா அமுலில் கொண்டு வருவதற்கு ஆறு மாதத்திற்கு முன்பு ஆக்கிரமிப்பு இதன் கீழ் வராது. அதற்குப் பின்பு உள்ள ஆக்கிரமிப்புத்தான் இதன் கீழ் வரும். ஆறு மாதங்களுக்கு முன்னால் ஏற்பட்ட ஆக்கிரமிப் பெல்லாம் அவசியத்தினால் ஏற்பட்ட ஆக்கிரமிப்பு. அதை இந்த மசோதா பாதிக்கப்போவதில்லை. இந்த ஆக்கிரமிப்பை நாம் கட்டுப்படுத்தாவிட்டால், அரசாங்கம் நிலமிருக்கிறது என்று போய் உட்கார்ந்து கொள்ளலாம். அந்த மாதிரிப் போய் உட்கார்ந்துகொண்டு, " திடீர் நகர் " ஏற்படுத்துகிறார்கள். அதற்குப் பெயரே " திடீர் நகர் " என்று வைக்கிறார்கள். இரவோடு இரவாக 100, 200 குடிசைகளைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து விடுகிறார்கள். 1905-ம் வருஷச் சட்டம் இதைக் கட்டுப்படுத்தாது. " ஸ்டே " வாங்கியே ஐந்தாறு வருஷம் காலட்சேபம் செய்து விடுகிறார்கள். கடைசி முடிவு பிரதிகூலந்தான். " ஸ்டே " முதலில் ஆர். டி. ஓ. விடம் கேட்கிறார்கள். பின்னர் கலெக்டர், போர்டு, அரசாங்கம் என்று வருவதற்குள் ஐந்தாறு ஆண்டுகள் கழிந்து விடுகின்றன.

அதோடு ஒரு விசித்திரமான விஷயத்தை கனம் சின்னதுரை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இடமில்லாமல்தானே வருகிறார்கள், பிழைப்புக்காகத்தானே வருகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் இவ்வாறு வந்திருந்தால் என்ன என்று கேட்டார்கள். " லாண்ட்லெஸ் பீப்பிள் " —நிலமில்லாமல் இருக்கிறவர்கள் லட்சக் கணக்கில் இருக்கிறார்கள். யாராவது ஒரு அங்கத்தினருக்கு 100 ஏக்கர் நிலம் இருந்தால் அதில் நிலம் இல்லாதவர்கள் வந்து உட்கார்ந்து கொண்டால் " ஐயோ பாவம், நிலமில்லாதவர்கள், வந்து உட்கார்ந்து விட்டுப் போகட்டும் " என்று விட்டுவிடுவார்களா ? ஆகவே அதைத் தவிர்க்கத் தான் இந்த மசோதா. அந்த மாதிரி நிலமில்லாதவர்களுக்கு நிலம் கொடுப்பதற்கு வேறு திட்டம் இருக்கிறது. திட்டப் பிரகாரம் வேலை இல்லாதவர்களுக்கு வேலை கொடுக்கப்படுகிறது. அதற்காகத் திட்டம்' ஸ்கீம், எல்லாம் போடப்பட்டு அதைப் பற்றிச் சென்ற இரண்டு நாட்களாக விவாதித்தோம். அதற்குப் பரிகாரம் அங்கே இருக்கிறதே தவிர, அதற்காக அரசாங்க நிலத்தில் வந்து ஆக்கிரமிப்புச் செய்துகொண்டு உட்காருகிறவர்களை வெளியேற்றக் கூடாது என்று சொல்லுவதால் அந்தப் பிரச்னை தீர்ந்துவிடாது. அதை வேறு வழியில் தீர்க்க முடியும்.

சென்னை நகரில் கண் ஆஸ்பத்திரி இருக்கிறது. அங்கே சென்று பார்த்தால் ஆஸ்பத்திரியைச் சுற்றி இந்த மாதிரிக் குடிசை போட்டுக் கொண்டு வசிக்கிறார்கள். ஆஸ்பத்திரி இருக்கும் இடம் சுகாதாரமான சூழ்நிலையில் சுத்தமாக இருக்க வேண்டும். ஆகவே, இந்த மசோதாவிற்குப் பிறகு, இந்த மாதிரி நிலைமை ஏற்படாது. இந்தக் காலத்துக்கு இது மாதிரி வருகிறவர்கள் வேண்டுமென்றே வருகிறார்கள். பழைய சட்டப்படி நோட்டீஸ் கொடுக்க வேண்டும். நோட்டீஸ் அந்த ஆளுக்குக் கொடுக்க வேண்டும். ஆளைத் தேடக் கொஞ்சம் நாள் ஆகும். தேட முடியவில்லையென்றால், " சப்ஸ்டிடுட் " நோட்டீஸ் ஒட்ட வேண்டும். அதனால் அவர்களை சுலபத்தில் அப்புறப்படுத்த முடியவில்லை. இந்த மசோதா பிரகாரம், 10, 15 நாட்களுக்குள் அப்புறப் படுத்திவிடலாம்.

சி.ஐ.டி. பற்றிச் சொன்னார்கள். தொழில் இலாகா அமைச்சர் முன்பே அதைப் பற்றி விளக்கினார். அதில் சட்டப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் நாட்டிலுள்ள ஏழை மக்களைப் பாதிக்



9th September 1960] [Sri M. A. Manickavelu]

கிறது என்று சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இந்தச் சட்டமானது முதல் முதல் அமுலுக்கு வருவது சென்னை நகரத்திலும் மற்றும் முக்கியமான முனிசிபல் ஏரியாக்களிலுந்தான். பிற்பாடு மற்றப் பிராந்தியங்களில் கொண்டு வருவது பற்றி யோசித்துக் கொள்ளலாம். இந்தக் கருத்தோடுதான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதற்கு ஒரு செலக்ட் கமிட்டி அவசியமில்லை. " ஆப்பரேடிவ் " க்ளாஸ் ஒன்று தான். இப்பொழுது நாம் அதைப் பற்றி எல்லாம் விவாதித்தோம். ஆகவே, செலக்ட் கமிட்டிக்கு இதை விட வேண்டிய அவசியம் இல்லை. கனம் லாசர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார். அப்பீல் விஷயத்தில் போர்டுக்கு மாத்திரம் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வெளியிலே இல்லை. வேறு விதமாகக் கலெக்டரே " அப்பலேட் " அத்தாரிடியாக நியமிக்க வேண்டுமென்றால், " இனிஷியேடிவ் " பண்ணுகிறவர்கள் ரெவின்யூ டிபார்ட்மெண்ட். அவர்கள் " அப்பலேட் அத்தாரிடி "யாக இருக்க முடியாது. அமுல் செய்த பிற்பாடு வேறு விதமான ஏற்பாடுகளைச் செய்யலாம். ஆகவே இந்த மசோதாவைக் கனம் அங்கத்தினர்கள் அங்கீகரிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

DEPUTY SPEAKER : Is the hon. Member Sri M. Kalyanasundaram pressing his amendment?

SRI M. KALYANASUNDARAM : Yes, Sir.

DEPUTY SPEAKER : The question is—

" That the Madras Public Premises (Eviction of Unauthorised Occupants) Bill, 1960 (L.A. Bill No. 24 of 1960), be referred to a Select Committee."

The amendment was put and declared lost.

(Mr. Speaker in the Chair.)

A poll was demanded.

MR. SPEAKER : I have asked the Hon. Minister, Sri R. Venkataraman, to take a separate seat by the side of the Speaker. I shall examine the point, whether he is entitled to sit in any vacant seat in the House. There is a vacant seat and he can sit there. He should not take part in the voting. I shall examine the matter.

SRI F. VINAYAKAM : Sir, when Sri C. Rajagopalachariar was the Chief Minister, the then Speaker asked him to take a separate seat.

MR. SPEAKER : One Speaker's ruling is not binding on the other, like the ruling of a Judge of the High Court.

The House divided thus :—

*Ayes.*

1 Sri P. S. Chinnadurai
2 Sri A. R. Marimuthu
3 Sri M. Kalyanasundaram
4 Sri K. Anbazhagan
5 Sri N. K. Palanisami
6 Sri K. R. Nallasivam
7 Sri N. Marudachalam
8 Sri M. Anandan
9 Sri C. Natarajan
10 Sri S. M. Annamalai
11 Sri P. U. Shanmugam
12 Sri K. Sattanatha Karayalar
13 Sri M. Jagannathan
14 Sri A. V. P. Periyavalaguruva Reddi
15 Sri S. Ramasami Thevar
16 Sri P. S. Santhanam

[9th September 1960

*Noes.*

1 Sri B. Bhaktavatsalu Naidu
2 Sri G. Annamalaimuthuraja
3 Sri V. S. Arunachalam
4 Sri V. Arunachala Thevar
5 Sri A. E. Chandrasekara Nayagar
6 Sri R. Chidambara Bharathi
7 Sri V. Chinniah
8 Sri N. P. M. Chinniah Kovunder
9 Sri A. Chinnasami
10 Sri N. V. Chockalingam
11 Sri T. T. Daniel
12 The Hon. Sri M. Bhaktavatsalam
13 The Hon. Sri M. A. Manickavelu
14 The Hon. Sri P. Kakkan
15 Sri P. G. Karuthiruman
16 Sri D. Dasarathan
17 Sri G. Gomathi Sankara Dikshitar
18 Sri V. Govindaswami Naidu
19 Sri R. Kandasami
20 Sri M. Kandasami Padayachi
21 Sri T. Karia Gounder
22 Sri Kolanda Gounder
23 Sri R. Krishnasami Naidu
24 Sri P. Kuppusami
25 Sri S. Lazar
26 Sri P. G. Manickam
27 Sri V. S. Manickasundaram
28 The Hon. Sri V. Ramaiah
29 Srimathi A. S. Ponnammal
30 Sri J. Matha Gowder
31 Sri M. Mayandi Nadar
32 Sri V. A. Muthaiya
33 Sri S. Nagaraja Monigar
34 Sri K. N. Palanisami Gounder
35 Sri K. P. Palaniswami
36 Sri K. Periannan
37 Sri K. Ponnian
38 Sri A. Raja Gounder
39 Sri S. Ramalinga Padayachi
40 Sri A. Chidambaranatha Nadar
41 Srimathi A. Soares
42 Sri K. L. Ramaswami
43 Sri S. Sadasivam
44 Sri S. C. Sadayappa Mudaliar
45 Sri R. C. Samanna Gounder
46 Sri P. Arasan
47 Sri T. Sampath
48 Sri M. S. Selvarajan
49 Sri A. Senapathi Gounder
50 Sri M. K. Somasundaram
51 Sri R. Srinivasa Iyer
52 Sri T. K. Subbiah
53 Sri A. R. Subbiah Mudaliar
54 Sri R. Subramaniam
55 Sri R. Swaminatha Merkondar
56 Sri S. Thangavelu
57 Sri N. R. Thiagarajan
58 Sri P. Urkavalan
59 Sri G. Vagheesam Pillai
60 Sri A. Vedarathnam Pillai
61 Sri V. Vedayyan
62 Sri A. P. C. Veerabahu
63 Sri K. Vinayakam
64 Sri S. Ranganatha Mudaliar
65 Sri R. J. Sundra Singh
66 Sri K. R. Viswanathan
67 Sri S. Pandia Raj
68 Sri M. William
69 Sri M. Kulandasami Gounder
70 Sri P. Vedamanickam

*Neutrals.*

Nil.

Ayes : 16; Noes : 70; Neutral : Nil.

The amendment was lost.

MR. SPEAKER : The question is :

"That the Madras Public Premises (Eviction of Unauthorised Occupants) Bill, 1960 (L.A. Bill No. 24 of 1960) be taken into consideration".

The motion was put and carried and the Bill was taken into consideration.

MR. SPEAKER : We will now have clause-by-clause consideration of the Bill.

*Clause 2.*

MR. SPEAKER : The motion is—

"That Clause 2 do stand part of the Bill."

SRI M. KALYANASUNDARAM : Sir, I move the following amendments :

(i) *Delete* item (iii) in sub-clause (*f*).



9th September 1960] [Sri M. Kalyanasundaram]

(ii) *For* sub-clause (*g*), *substitute* the following :—

"(*g*) 'unauthorised occupation' in relation to any public premises, means the occupation by any person, of the public premises without lawful authority for such occupation, after the date of commencement of this Act."

SRI N. K. PALANISAMI : I second the amendments.

MR. SPEAKER : The Clause and the amendments are before the House for discussion.

SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, நான் ஆரம்பத்தில் எடுத்துக்காட்டியது போல, "**any premises belonging to, or vested in the City Improvement Board**" என்பது இதிலிருந்து விலக்கப்படவேண்டுமென்று நான் கருதுகிறேன். அதனால் இது வரைக்கும் தகராறு ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஸிட்டி இம்ப்ரூவ்மெண்ட் ட்ரஸ்ட்டுக்குச் சொந்தமான நிலம் எப்படி வருகிறதென்றால், விலைக்கு வாங்குவதன் மூலம் வருகிறதே தவிர, சர்க்காருக்குச் சொந்தமான பொது இடம் ஸிட்டி இம்ப்ரூவ்மெண்ட் ட்ரஸ்டுக்கு வருவது கிடையாது. மந்திரி அவர்கள் கொடுத்த சமாதானத்தை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தனிப்பட்டவர்களிடமிருந்து வாங்கிய நிலத்தில், ஏற்கனவே ஸிட்டி இம்ப்ரூவ்மெண்ட் ட்ரஸ்டின் பாதுகாப்பில் இருக்கக் கூடியவர்களை **unauthorised** என்று வெளியேற்றவோ, அல்லது வெளியேறும்படி வழக்குப் போடவோ வசதி அளிக்கிற காரணத்தால் தான் இதை நீக்கிவிட வேண்டுமென்று கோரியிருக்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, தவறான அபிப்பிராயம் இருக்கவேண்டாம் என்பதற்காகச் சொல்கிறேன். ஸிடி டெனண்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்டின்படி 6 மாதத்திற்குள்ளே 'ஆக்குபை' பண்ணுகிறவர்களுக்குத்தான் பாதுகாப்பு கிடையாது. இதுவும் அதுவும் முரண்பட்டதே இல்லை.

SRI M. KALYANASUNDARAM : ஸிடி டெனண்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்ட் இப்போதும் உண்டு. '**unauthorized occupation**' என்றால் இந்தச் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு வந்தவர்களுக்கு வேண்டுமானால் 'அப்ளை' ஆகலாம். 'இந்தச் சட்டம் வருவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பு' என்று அமைச்சர் சொல்கிறார். நான் கொடுத்திருக்கும் திருத்தத்தை ஏற்றுக் கொண்டால், இந்தச் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு போட்டிருக்கும் குடிசைகளைத் தடுக்க முடியும். ஆறு மாத காலத்திற்குள் போட்டிருப்பது மிக அதிகமாக இருக்காது என்று கருதுகிறேன். சட்டத்தை எப்படியும் நிறைவேற்ற வேண்டும் என்றால், சட்டம் அமுலுக்கு வந்த பிறகு குடிசை போடுவதைத் தடை செய்ய அதிகாரம் இருந்தால் போதும். இந்தத் திருத்தங்களை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இரண்டாவது திருத்தப் பிரகாரம் கனம் அங்கத்தினர் அவர்கள் கோருவது என்னவென்றால், இந்தச் சட்டம் அமுலுக்கு வந்த பிற்பாடு சர்க்கார் நிலத்தில் 'அன்ஆதரைஸ்டு 1-00 a.m.
ஆகுபேஷன்' செய்தவர்களுக்குத்தான் இந்தச் சட்டம் அமுலாக்கப்பட வேண்டும் என்பது. நாங்கள் சொல்லியிருப்பது இந்தச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு 6 மாதங்களுக்கு முன்னால் 'அன்ஆதரைஸ்டு ஆகுபேஷன்' செய்தவர்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும் என்பதுதான். அந்த அளவுக்காவது வேண்டியிருக்கிறது. ஒரு உதாரணம் சொல்லுகிறேன். நுங்கம்பாக்கத்தில் சர்க்கார் நிலத்தில் நிறைய குடிசை போட்டிருந்தார்கள். அதை அப்புறப்படுத்த வேண்டுமென்பதற்காக மாலையில் அப்புறப்படுத்தப் பட்டும், மறுபடியும் இரவில் அதே மாதிரி குடிசைகள் வந்துவிட்டன.

[Sri M. A. Manickavelu] [9th September 1960

இம்மாதிரி ஏற்படுவதைத் தடுப்பதற்கு இந்தச் சட்டம் உதவியாக இருக்கும். நாம் முன்பு சொன்னது போல, சாதாரணமாக அவசியம் ஏற்பட்டு நியாயமாக வரக்கூடியவர்களை இந்தச் சட்டம் பாதிக்கவே பாதிக்காது. வேண்டுமென்றே வந்து சர்க்கார் நிலத்தில் உட்கார்ந்து அதற்கு உரிமை வேண்டும் என்று கேட்பவர்களைத்தான் பாதிக்கும். நியாயமான முறையில் அவசியத்தோடு வருபவர்களை இந்தச் சட்டம் ஒன்றும் பாதிக்காது.

MR. SPEAKER : The question is—

(i) *Delete* item (iii) in sub-clause (*f*).

(ii) For sub-clause (*g*) *substitute* the following :—

" (*g*) ' unauthorised occupation ' in relation to any public premises, means the occupation by any person, of the public premises without lawful authority for such occupation, after the date of commencement of this Act ".

The amendments were put and lost.

MR. SPEAKER : The question is—

" That Clause 2 do stand part of the Bill ".

The motion was put to vote.

MR. SPEAKER : I hear the voice of " Noes " only and not " Ayes ". I want to tell the Hon. Minister that even the other day I had remarked that I would go by the voice vote. If I hear only " Noes " I will have to say that " Noes " have it.

THE HON. SRI M. A. MANICKAVELU : There were " Ayes " also, Sir, but not loud enough.

MR. SPEAKER : The Hon. Minister is challenging my statement. He is entitled to call for a poll. So I will again put the motion to the vote of the House.

The question is :—

" That Clause 2 do stand part of the Bill ".

Clause 2 was put and carried.

MR. SPEAKER : I must say again that on a previous occasion I had said that members should be careful while vote is taken. I go by the voice vote. The Hon. Minister should see that his party members support the motion when it is put to vote. It is open to the Hon. Minister to challenge my statement if he is not satisfied.

4

*Clause 3.*

MR. SPEAKER : The motion is—

" That Clause 3 do stand part of the Bill ".



9th September 1960]

SRI M. KALYANASUNDARAM : Sir, I move the following amendment :

In sub-clause (1), in line 12, for the word " ten " *substitute* " ninety " and in line 15, for the word " three " *substitute* the word " thirty ", and *add*, the following provisos to sub-clause (1)—

" (1) Provided that in such an enquiry conducted by a competent authority, adequate opportunities shall be given to any person effected to appear in person or through an agent to show cause why he should not be evicted."

" (2) Provided further the competent authority shall award adequate compensation for enabling the persons effected to shift to some other locality."

The amendment was duly seconded.

MR. SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

SRI M. KALYANASUNDARAM : ஸார், என்னுடைய திருத்தத்தின் நோக்கம் என்னவென்றால், மூன்றாவது பிரிவின்படி அதிகாரிகளுக்கு அதிகமாக அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. விராசணை நடக்கக்கூடிய முறையைப்பற்றி எப்படி இருக்கிறது என்று சொன்னால், ' காம்பிடெண்டு அதாரடி ' என்று எந்த அதிகாரிக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவர் எது உசிதம் என்று கருதுகிறாரோ அந்த அடிப்படையில் தான் விசாரணை நடக்கும் என்று கண்டிருக்கிறது. ஆகவே, பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது, என்ன ஆட்சேபணை இருக்கிறது என்பதைக் கேட்பதற்குக் கூட ஒரு சந்தர்ப்பம் இந்த விசாரணையில் கொடுக்கப்படவில்லை என்று நான் கருதுகிறேன். இவ்வளவு துரிதமாக நடவடிக்கை எடுப்பதற்கு சில அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறபொழுது, விசாரணை விரிவான முறையில் இருப்பதற்கு வசதி செய்து கொடுப்பது அவசியம். அமைச்சர் அவர்கள் ஒரு உதாரணத்தை எடுத்துக் காட்டினார். மாலையில் குடிசைகளை அப்புறப்படுத்தினால், மீண்டும் இரவில் குடிசைகளைப் போட்டு விடுகிறார்கள் என்று சொன்னார். அதற்குக் காரணம் என்ன ? சர்க்கார் உத்தரவை மீறவேண்டும் என்பது நோக்கமல்ல. எப்படியாவது குடி இருப்பதற்கு ஒரு 6 அடி நிலம் இருந்தால் போதும் என்ற ஆர்வத்தில் தான் இம்மாதிரி நிகழ்ச்சிகள் ஏற்படுகின்றன. அதற்குப் பாதுகாப்பு தேட வேண்டி, எந்த முறையில் விசாரணை நடத்தப்படவேண்டும் என்று நிர்ணயிப்பதை அதிகாரியின் சொந்தப் பொறுப்பில் விட்டுவிடக் கூடாது. விசாரணை எந்த முறையில் நடத்தப்பட வேண்டும் என்பதற்கு விதிகள் செய்திருக்க வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். அதனால், விசாரணையைப்பற்றி பாதிக்கப்பட்டவர்கள் நேரிடையாகவோ அல்லது வேறு நபர் மூலமாகவோ ஆஜராகித் தங்களுடைய காரணங்களை எடுத்துரைப்பதற்கும், அதற்கு மேல் அதிகாரிகள் தீர்ப்புக் கூறுவதற்கும் உள்ள வசதி இருக்க வேண்டும். அந்த விசாரணை எப்படி இருக்கவேண்டுமென்பதை விதிகள் இயற்றும் அதிகாரத்தை உபயோகப்படுத்தி, விதிகளின் மூலம் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். ஆகையால், இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதே போன்று வெளியேறுவதற்குக் கொடுத்திருக்கக்கூடிய அவகாசம் வெகு குறைவானது. கட்டிடமாக இருந்தால் 10 தினங்களும், மற்ற இடங்களாக இருந்தால் 6 தினங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வளவு குறுகிய காலத்திற்குள் காலி செய்யவேண்டுமென்று உத்தரவு

[Sri M. Kalyanasundaram] [9th September 1960

பிறப்பிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. காலி செய்வதற்கு இன்னும் போதுமான அவகாசம் இருக்க வேண்டும். அப்பீல் கொடுப்பதினால் உள்ள பலனை அவர்கள் உண்மையில் அனுபவிக்க வேண்டும் என்று சொன்னால், நான் கொடுத்திருக்கக்கூடிய யோசனையின்படி 90 தினங்கள் அவகாசம் இருக்கவேண்டும். கட்டிடமாக இருந்தால் 90 தினங்களும், மற்ற இடங்களாக இருந்தால் 30 தினங்களும் அவகாசம் கொடுக்கப்பட வேண்டும் என்று நான் யோசனை சொல்லியிருக்கிறேன். இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுவதினால் கொஞ்சம் காலதாமதம் வேண்டுமானால் ஆகலாமே தவிர, சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் போதுமான சந்தர்ப்பம் கொடுத்து பிற்பாடு அவர்களை வெளியேற்றுவதற்கு இதுதான் நியாயமாக இருக்கும். பலாத்காரத்தை உபயோகப்படுத்தலாம் என்று 4-வது பிரிவில் இருக்கக்கூடிய காரணத்தினால் இந்த விசாரணைக்குப் போதுமான அவகாசம் கொடுக்க வேண்டியது அவசியம் என்று கருதுகிறேன். ஆகவே, நான் கொடுத்திருக்கும் திருத்தங்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**THE HON. SRI M. A. MANICKAVELU:** ஸார் கனம் அங்கத்தினர் கொடுத்த திருத்தம் கூட இதை அவ்வளவு தெளிவுபடுத்தவில்லை. சாதாரணமாக இம்மாதிரி 'என்கொயரி' செய்வதற்கு 'ரொடீன்' முறை இருக்கிறது. விசாரணை எப்படி எப்படி நடத்தப்படவேண்டுமென்பதெல்லாம் விதிகளில் ஏற்பாடு செய்துகொள்ளலாம். அந்த விதிகள் சபை முன்பு வைக்கப்படும். ஆகையினால், இந்தத் திருத்தத்திற்கு அவசியம் இல்லை.

இன்னொரு திருத்தம் 'காம்பன்சேஷன்' கொடுக்கவேண்டுமென்பது. நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்றால், இந்தச் சட்டத்தையே விட்டுவிடலாம் என்று நினைக்கிறேன். இதற்காக வேண்டி யாராவது சர்க்கார் நிலத்தில் வந்து உட்காருவார்கள். காம்பன்சேஷன் கொடுத்து இம்மாதிரியான நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் இல்லை. ஆகையினால் இந்தத் திருத்தங்களை ஒத்துக்கொள்ளுவதற்கு இல்லை.

**MR. SPEAKER:** The question is—

In sub-clause (1) in line 12, *for* the word "ten" ***substitute*** "ninety" and in line 15, *for* the word "three" ***substitute*** the word "thirty" and *add* the following proviso to sub-clause (1) :—

"Provided that in such an enquiry conducted by a competent authority, adequate opportunities shall be given to any person effected to appear in person or through an agent to show cause why he should not be evicted."

"(2) Provided further the competent authority shall award adequate compensation for enabling the persons effected to shift to some other locality."

The amendment was put and lost.

Clause 3 was put and carried.

**MR. SPEAKER:** Hon. Members would be interested to know what happened in the House of Commons on a similar occasion. When a motion was put to the vote of the House the Deputy Speaker heard the loud voice of "Noes". But the Deputy Speaker said "Ayes have it". His contention was that the Chair declared what it anticipated was the view of the House irrespective of the voices raised and that on a number of occasions he had announced a decision without anybody questioning it even when



9th September 1960] [Mr. Speaker]

no voice of any kind had been raised. Then an Opposition Member raised a point of Order that if members belonging to Government side kept silent and did not record their votes for the "Ayes" it meant that Government desired not to proceed with the clause. The Deputy Speaker pointed out that the Chief Whip had said "Aye" though in a very quiet voice. The Opposition maintained that once a voice vote was taken and the Deputy Speaker having admitted that there were no "Ayes" it meant that "Noes" had won and the matter could not be re-opened. The Deputy Speaker further stated that even if "Aye" had not been said he could say he thought the "Ayes" had it and his opinion could then be challenged. Accordingly the "Noes" challenged the decision, "Ayes" had it and in the division it was found that "Ayes" won.

So what happened in this Assembly is not peculiar to this House only. I think the ruling that I have given is fairly correct, namely, that my decision could be challenged. At best if the Chief Whip had said "Aye", I would have declared that "Ayes have it". Probably the Chief Whip was sleeping at that time. (Laughter.)

## *Clause 4.*

**MR. SPEAKER:** The Motion is—

"That Clause 4 do stand part of the Bill".

இந்தப் பிரிவின் மீது யாராவது கனம் அங்கத்தினர் பேசவேண்டுமென்றால் பேசலாம்.

**SRI M. KALYANASUNDARAM:** நான் திருத்தம் கொடுக்காவிட்டாலும் இந்தப் பிரிவில் பலாத்காரத்தை உபயோகப்படுத்தலாம் என்று சொல்லப்பட்டிருப்பதால் அதுபற்றி பேச விரும்புகிறேன். 4-வது பிரிவு பின்வருமாறு :—

"If any person refuses or fails to comply with the order of eviction, the competent authority or any person specially authorized by it in this behalf may evict that person from, and take possession of, the public premises and may, for that purpose, use such force as may be necessary."

பலாத்காரத்தை உபயோகப்படுத்தலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. பலாத்காரம் என்றால் என்ன? போலீஸுக்கு ஏற்கனவே நிறைய அதிகாரம் இருக்கிறது. 'போர்ஸ்' என்றால் என்ன அர்த்தம்? கட்டிடத்தை இடிக்கலாம். சும்மா இடிக்கலாமா? 'போர்ஸ்' என்றால் பிடித்து தள்ளுகிறதா? 'போர்ஸ்' என்ற வார்த்தை சட்டத்தில் இருக்கலாமா என்று கேட்கிறேன். 'எவிக்ட்' செய்வதற்கு மற்ற 'ப்ரொஸீடிங்ஸ்' வேண்டுமென்றால் எடுத்துக்கொள்ளலாம். இம்மாதிரி 4-வது பிரிவிலே 'போர்ஸ்' என்ற வார்த்தை சட்டப் புத்தகத்திலே ஏறுவதே கொஞ்சம் வெட்கப்படவேண்டிய விஷயம் என்று கருதுகிறேன்.

**THE HON. SRI M. A. MANICKAVELU:** இந்த வார்த்தை ஒன்றும் புதிய வார்த்தை அல்ல. எல்லா சட்டங்களிலும், இம்மாதிரி அவர்கள் தாங்களாகவே வெளியேறாமல் இருந்தால், அவர்களை வெளியேற்றுவதற்கு **use such force as may be necessary** என்று போடப்பட்டிருக்கிறது.

'போர்ஸ்' என்றால் அடிப்பது என்று அர்த்தமல்ல. அவர்களை வெளியேற்றுவதற்கு கொஞ்சம் ஆட்களை வைத்துக்கொண்டு அதற்கு வேண்டிய பந்தோபஸ்தோடு போவது என்று தான் அர்த்தம் (சிரிப்பு). அந்த வார்த்தைக்கு பல வியாக்கியானங்கள் இருக்கின்றன. அதையெல்லாம் இப்பொழுது சொல்ல முடியாது.

Clause 4 was put and carried.

(The Government Whip was heard saying 'Aye.')

Mr. SPEAKER: I am glad that the Government Whip at least has said 'Aye.'

Sri P. G. KARUTHIRUMAN: I thank you, Sir.

Clauses 5 and 6 were put and carried.

*Clause 7.*

Mr. SPEAKER: The motion is—

'That Clause 7 do stand part of the Bill.'

Sri S. M. ANNAMALAI: Sir, I move the following amendment:—

'*Omit* sub-clause (2)'.

Sri C. NATARAJAN: I second the amendment, Sir.

Mr. SPEAKER: Now the clause and the amendment are before the House for discussion.

Sri S. M. ANNAMALAI: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப்பிரிவில் 'No civil court shall grant any permanent or temporary injunction or make any interim order restraining any proceeding taken or about to be taken under this Act.' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ரிவினியு போர்டில் நியாயம் கிடைக்கவில்லையென்றால் அதற்கு மேல் அப்பீல் செய்வதற்கு சிவில் கோர்ட்டுக்குத்தான் போகவேண்டும். நியாயம் கிடைப்பதற்குத்தான் சிவில் கோர்ட்டுகளை அமைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு பாதுகாப்பு நியாயம் கிடைக்காதவர்களுக்கு இருக்கிற நிலைமையில், சிவில் கோர்ட்டுகளுக்குப் போகக்கூடாது என்று இந்த விதியின் மூலமாகச் சொல்வது அவ்வளவு சரியாக இல்லை. அப்பீல் செய்து கொள்வதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதற்குத்தான் சிவில் கோர்ட்டுகள் இருக்கின்றன. இந்த மசோதாவின் மூலமாக அந்த உரிமையைப் பறிப்பது என்பது சரியல்ல. சிவில் மன்றங்களுக்குச் செல்வதற்கு அனுமதிக்கவில்லை என்றால் அது அவர்களுடைய உரிமையைப் பறிப்பதாக ஆகும். ஆகையால் சிவில் கோர்ட்டுகளுக்குச் செல்வதற்குத் தடை இருக்கக் கூடாது. அதற்காகத்தான் இந்த சப்-கிளாஸை நான் ஆட்சேபிக்கிறேன். ஆகையால் கனம் அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி பரிசீலனை செய்து சிவில் கோர்ட்டுக்குப் போகலாம் என்ற அந்த நிலையைக் கொண்டு வரவேண்டும். ஆகவே இந்த சப்-கிளாஸை இந்த மசோதாவிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU: இதில் இந்தமாதிரி ஷரா இல்லாமல் இண்டரிம் ஸ்டே கொடுத்தால் இந்த மசோதாவின் முக்கியமான நோக்கமே போய்விடும். அதனுடைய கருத்தே போய்விடும். சிவில் கோர்ட்டு ஸ்டே கொடுத்துவிட்டால் அதற்கு முடிவு கிடையாது. அது முடிவாவதற்கு மாதக் கணக்கில் வருஷக் கணக்கில் ஆகலாம். மற்ற ப்ரொவிஷனைப்



பார்த்தால் சிவில் கோர்டுக்கு அனுமதித்தால் அவைகளுக்கு இடம் இல்லாமலே போய்விடும். மற்றவைகளை வைத்துக்கொண்டு அவர்கள் நியாயம் தேடிக் கொள்வதற்கு வழி இருக்கிறது. ஆகவே இண்டரிம் ஸ்டே கொடுக்க வசதி செய்வது சரியல்ல. ஆகவே இந்த சப்-கிளாஸ் இருக்க வேண்டியது அவசியம்தான். இந்த சப்-கிளாஸை எடுத்துவிட்டால் இந்த மசோதாவின் அவசியமே இல்லாமல் போய்விடும். சட்டத்திற்குப் பாதகம் ஏற்படும்.

The amendment was put and lost.

Clause 7 was put and carried.

*Clause 8.*

Mr. SPEAKER: The motion is—

"That Clause 8 do stand part of the Bill".

The Hon. Sri M. A. MANICKAVELU: Sir, I move the following amendment:—

In the clause—

(i) In sub-clause (1), omit the words "by notification";

(ii) After sub-clause (2), add the following sub-clauses, namely:—

"(3) (*a*) All rules made under this Act shall be published in the *Fort St. George Gazette* and, unless they are expressed to come into force on a particular day, shall come into force on the day on which they are so published.

(*b*) All notifications issued under this Act shall, unless they are expressed to come into force on a particular day, come into force on the day on which they are published.

(4) Every rule made or notification issued under this Act shall, as soon as possible, after it is made or issued, be placed on the table of both Houses of the Legislature, and if, before the expiry of the session, in which it is so placed or the next session, both Houses agree in making any modification in any such rule or notification or both Houses agree that the rule or notification should not be made or issued, the rule or notification shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be, so however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule or notification."

The amendment speaks for itself and the rules framed would be placed before the House and an opportunity would be given to the Legislature to discuss and complete freedom is given to the House to decide as it likes.

The amendment was put and carried.

Clause 8 as amended was put and carried.

Clauses 9 and 10 were put and carried.

*Clause 1.*

Mr. SPEAKER : The motion is—

'That Clause 1 do stand part of the bill.'

Sri M. KALYANASUNDARAM : Sir, I move the following amendments :—

(i) *For* sub-clause (2), *substitute* the following :—

" (2) It extends only to the cities with a population of five lakhs and more."

(ii) *For* sub-clause (3), *substitute* the following :—

" (3) It shall come into force after five years."

Sri K. ANBAZHAGAN : I second the amendments, Sir.

Mr. SPEAKER : Now the clause and the amendments are before the House for discussion.

Sri M. KALYANASUNDARAM : I shall explain why I gave these amendments. என்னுடைய முதல் திருத்தத்தினுடைய நோக்கம், கிராமங்களிலும் சிறிய நகரங்களிலும் இந்தச் சட்டத்தை அமுல் நடத்தக்கூடாது என்பது தான். இப்பொழுது இருக்கிற அதிகாரத்தின்படி சர்க்காருக்கு நோட்டிபை பண்ணுவதற்கு அதிகாரம் இருக்கிறது. எப்பொழுது வேண்டுமானாலும் நோட்டிபை பண்ணலாம். சென்னை போன்ற பெரிய நகரங்களுக்கு நோட்டிபை பண்ணிவிட்டு அதை மற்ற நகரங்களுக்கும் விஸ்தரிக்கக்கூடிய அதிகாரம் சர்க்காருக்கு இருக்கிறது. ஆனால் அவர் அப்படி பண்ணுவார்களோ பண்ணமாட்டார்களோ அது அவர்களுடைய யோசனையிலிருக்கிறது. அவர்கள் மனதில் என்னயிருக்கிறதோ அது தெரியவில்லை. சட்டப்படி அதிகாரத்தை எடுத்துக்கொண்டு விடுகிறார்கள். எல்லாப் பகுதிகளுக்கும் அதை விஸ்தரிக்கக்கூடிய அதிகாரம் அவர்களுக்கு இருக்கிறது. அதனால் பெரிய நகரங்களுக்கு மட்டும் இருக்க வேண்டும் என்பதற்காக ஐந்து லட்சம் ஜனத்தொகை இருக்கக்கூடிய நகரங்களுக்கு மட்டும் இதை விஸ்தரிக்க வேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதைத்தான் இந்த முதல் திருத்தத்தில் குறிப்பிட்டிருக்கிறேன்.

இரண்டாவது நோக்கம் என்னவென்றால் இப்பொழுது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஆரம்பிக்கப் போகிறார்கள். அந்த சமயத்தில் யாருக்கும் தொந்தரவுகள் கொடுக்க வேண்டாம் என்பதற்காகத்தான் இரண்டாவது திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எத்தனை வீடுகள் கட்டப் போகிறார்கள், இவர்களுக்கு எல்லாம் எந்த எந்த இடங்களில் எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப் போகிறார்கள் என்பதைப் பார்த்துக் கொண்டு அதன் பிறகு அவர்களை வெளியேற்றலாம் என்ற அளவில் ஐந்து வருஷம் கழிந்தது, இந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரலாம் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். இவைகளை கனம் அமைச்சர் ஏற்றுக்கொள்ள மாட்டார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஜனங்களுடைய சௌகரியத்தை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறேன். தவிர இந்தச் சட்டத்தை தக்க முறையில் விளம்பரப்படுத்தவில்லை. எல்லா மக்களுக்கும் இது தெரியாது. எங்கேயாவது ஒரு மூலை முடுக்கில் காம்ராஜ் நகர் என்று போட்டுக்கொண்டு அங்கே ஒரு கதர் கொடியை நட்டுக்கொண்டு மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு இதைப்பற்றி தெரியாமல் இருக்கலாம். அவர்களுக்கு எல்லாம் இடம் கிடைக்காமல் இப்படி நெருக்கடியான இடங்களில் இருக்கிறார்கள். அதனால் நகரங்களில் இட நெருக்கடி வேறு ஏற்பட்டிருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிகப்படியான வீடுகளைக் கட்டி அவர்களுக்குக் கொடுக்கும் வரையில் இந்தச் சட்டம்



அமுலுக்கு வராமல் இருப்பதற்காகத்தான் இரண்டாவது திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். இந்த அதிகாரத்தை எடுத்துக்கொண்டால் அது மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்பது அவசியம் என்ற காரணத்தால் ஐந்து வருஷ காலம் கேட்டிருக்கிறேன் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : முதல் திருத்தம் சம்பந்தப் பட்ட வரையில் நான் ஏற்கனவே பதில் சொல்லிவிட்டேன். ஆரம்ப காலத்திலே சென்னை நகரத்திற்கும், முக்கியமான முனிசிபல் நகரங்களுக்கும் மட்டும்தான் இதை அமுலுக்குக் கொண்டுவரப் போகிறோம். ஆகையால் அந்த முதல் திருத்தத்திற்கு அவசியம் இல்லை.

இரண்டாவது திருத்தத்தில் ஐந்து வருஷங்களுக்கு இதை அமுலுக்குக் கொண்டுவர வேண்டாம் என்று சொல்கிறார்கள். அதை ஒத்துக்கொள்வதென்றால் நான் இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்புவதற்கே ஒத்துக்கொண்டிருப்போம். பொறுக்குக் கமிட்டிக்குக் கொண்டு போகாததற்குக் காரணமே இந்த மசோதாவை சீக்கிரமாகக் கொண்டு வரவேண்டும் என்பதுதான். ஆகவே ஐந்து வருஷத்திற்கு இதை காலம் தாழ்த்திப் போடவேண்டும் என்ற திருத்தத்தை ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறது.

Mr. SPEAKER : The hon. Member Sri M. Kalyanasundaram's second amendment to clause 1 is out of order. If the hon. Member wants, he may explain why I should not disallow it. Because, his amendment has the effect of negative vote. It is against the spirit of the Bill itself. So, I disallow this amendment. I shall, however, put the hon. Member's first amendment to clause 1 to vote. The question is :—

" *For* sub-clause (2), *substitute* the following :—

(2) It extends only to the cities with a population of five lakhs and more."

The amendment was put and lost.

Clause 1 was put and carried.

The Preamble was put and carried.

The Hon. Sri M. A. MANICKAVELU : Sir, I move—

" That the Madras Public Premises (Eviction of Unauthorised Occupants) Bill, 1960, as amended, be passed."

Mr. SPEAKER : Motion moved—

" That the Madras Public Premises (Eviction of Unauthorised Occupants) Bill, 1960, asamended, be passed."

Sri M. KALYANASUNDARAM : பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப அவ்வளவு அவ சர்க்கார் ஒத்துக்கொள்ளாதது மிகவும் வருந்தத் தக்கது. சரமாக இந்த மசோதாவைக் கொண்டுவரவேண்டும் என்பதற்கு இப்போது என்ன அபத்து ஏற்பட்டிருக்கிறது. சமயிருப்பதற்கு மனை கிடைக்காத காரணத்தினால் இன்றைய தினம் ஓரிடத்தில் உள்ள சமனைகளைப் பிரித்து எறிந்தால் இன்னொரு இடத்தில் சமனைகளைப் போட்டுக்கொள்கிறார்கள். அதுவும் இந்த நாட்டில் ஒரு பிரஜையாகப் பிறந்த ஒருவனுக்குக் குடியிருப்பதற்குக்கூட 6 அடி மனைகூட இல்லையென்றால் இது மிகமிக வருந்தத்தக்கதாகும். பொறுக்குக் கமிட்டிக்குக்கூட அனுப்பாமல் இந்த மசோதா

வைக் கொண்டு வருவதற்கு என்ன ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி எந்த விதமான விவரமும் கொடுக்கப்படவில்லை. அப்படி ஏதாவது விவரங்கள் கொடுத்திருந்தாலும் ஓரளவு தெரிந்துகொள்ளலாம். அதோடு குடிசைகளைப் பிரித்து எறிவதற்கு—நான்காவது பிரிவின்படி பலாத்காரம் கூட உபயோகப்படுத்தலாம் என்று இருப்பது மிகவும் ஆபத்தான ஷரத்தாகும். பலாத்காரம் என்றால் என்ன முறை என்று கேட்டதற்கு அமைச்சர் அவர்கள் அது எத்தனையோ வகை, அவற்றையெல்லாம் எப்படிச் சொல்லிக் கொண்டிருப்பது என்றார். அவர் சொல்வதைப் பார்த்தால் இந்த ஏழை எளிய மக்களுடைய குடிசைகளைப் பிரித்து எறிவதற்கு ராக்கெட்டுகளைக் கூட உபயோகப்படுத்துவார்களோ என்னமோ? இப்படிப்பட்ட ஆபத்தான ஷரத்துக்களோடு இந்த மசோதா சட்டப் புத்தகத்தில் ஏறுவது சரியல்ல, மெஜாரிட்டி பலத்தினால் இதைச் சட்டமாக நிறைவேற்றிக்கொள்கிறோம் என்கிற மனோபாவத்தை சர்க்கார் கொண்டிருந்தால் அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. எதிர்கட்சி மெம்பர்களுடைய அபிப்பிராயத்தை இந்த மசோதா பிரதிபலிக்கவில்லையென்று சொல்ல விரும்புகிறேன். நான் சவால் விடவில்லை. ஆனால் இதன் விளைவு ஏழைகளுக்குச் சொல்ல முடியாத துன்பத்தை அளிக்கிறபோது கட்டாயம் எதிர்கட்சிக்காரர்கள் அவர்களுடைய தரப்பில் இருந்து போராடுவார்களே தவிர, அவர்களைப் பார்த்து இந்தக் கஷ்டங்களைப் பொறுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிக்கொண்டிருக்க முடியாது. இந்த மசோதா ஏழைகளுக்கு அநாவசியமான தொல்லைகளை உண்டாக்கப்போகிறது. அதனால் பலவித மோதல்கள் உண்டாக்கப் போகின்றன. ஆகவே பிடிவாதமாக அவசரம் அவசரமாக இந்தச் சட்டத்தை சர்க்கார் நிறைவேற்றினாலும் இதை அமுல் நடத்தக்கூடிய காலத்திலாவது ஜாக்கிரதையாக அமுல் நடத்துங்கள் என்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **Sri K. ANBAZHAGAN**: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, பொது இடங்களையும் வளவுகளையும் பொது மக்கள் தங்கள் விருப்பம்போல கைக்கொண்டு குடியிருப்புகளை அமைத்துக்கொள்ளாமல் இருக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் இன்று கொண்டு வரப்படுகிற இந்தச் சட்டம் முறையாகவே வருகிற சட்டந்தான் என்றாலும் ஒரு அவசரச் சட்டத்தின் தன்மையைப் பெற்றிருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். அவசரச் சட்டத்தின் விளைவுகள் பொதுமக்களை எப்படிப் பாதிக்குமோ அப்படியே இந்தச் சட்டத்தின் விளைவுகளும் பொதுமக்களை, பாமர மக்களை, ஏழை எளிய மக்களை பாதிக்கும் என்பதால் இதனை வருத்தத்தோடு கண்டித்துரைக்க விரும்புகிறேன். இந்தச் சட்டமானது நாட்டில் குறிப்பாக நகரங்களில் சேரிகள் இருக்கக்கூடாது, நாட்டில் உள்ள மக்கள் எல்லாம் சுகாதாரம் மிகுந்த இடங்களில் வாழவேண்டும் என்கிற நோக்கத்தை அடிப்படையாக வைத்தே கொண்டு வரப்படுகிறது என்றாலும்கூட இன்றைய தினம் சேரியில் வாழ்கிற மக்கள், மிகவும் மோசமான தாழ்ந்த இடங்களில் குடிசைகளை அமைத்துக்கொண்டிருக்கிற மக்கள் இந்த நாட்டில் நம்மோடு பிறந்தவர்கள்தான் என்கிற உணர்ச்சி, நமது நாட்டவர்கள் என்ற எண்ணம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்றுதான் சொல்ல விரும்புகிறேன்.

சேரிகள் எண்ணிக்கையில் வளரக்கூடாது என்ற கருத்து சமுதாயத்திற்குத் தேவையான கருத்துதான், என்றாலும் சேரியில் வாழவேண்டுமென்ற நிலைமைக்கு ஆளாக்கப்பட்டுவிட்டவர்கள், அந்த எல்லைக்குத் துரத்தப்பட்டு விட்டவர்கள் இன்றைய தினம் அந்த மோசமான சிறு சிறு குடிசைகளில் இருந்தும் துரத்தப்படுவார்கள், விரட்டியடிக்கப்படுவார்கள் என்றால் இது ஜனநாயகத்தின் பெயரால், நாகரீகத்தின் பெயரால், பண்பாட்டின் பெயரால் ஏற்றுக்கொள்ளத்தக்கது ஆகாது. பொதுவிடங்களில் குடிசைகள் போட்டுக் கொள்வது தவறானது என்றாலும் இந்தச் சட்டத்தை அமுல் நடத்துவதற்கு முன்னால் பொதுவிடங்களில் உள்ள குடிசைகளைப் பிரித்து எறிவதற்கு முன்னால் அவ்விடங்களில் வாழக்கூடிய



வர்களுக்கு மாற்று இடங்கள் கொடுத்துவிட்டுத்தான் இக்காரியத்தைச் செய்ய வேண்டும். மாடமாளிகைகளில் இருப்பவர்களை அப்புறப்படுத்துவது என்பது வேறு, சொந்தக்காரரின் உபயோகத்திற்குத் தேவை என்று ஒரு வீட்டில் இருப்பவர்களைக் காலி செய்ய நோட்டீஸ் கொடுப்பது வேறு என்பதும், ஆனால் வாழ்வதற்கே இடமில்லாமல், இந்தக் குடிசைக்கு வேறு வழியில்லாமல் இருப்பவர்களை இப்போது இருக்கக்கூடிய இடங்களில் இருந்தே விரட்டி அடிப்பது என்பது வேறு.

இந்தக் குடிசைகளில் இருந்து இவர்கள் வெளியேற்றப்படுவார்களானால் இவர்களுக்கு வேறு போக்கிடமோ, புகலிடமோ கிடையாது. குடிசையை விட்டு விரட்டியடிக்கப்படுகிறவர்கள் தெரு ஓரங்களில் சாக்கடைப்படிகளில் குடியேற வேண்டிய அவல நிலைமைதான் ஏற்படும். இன்று இருக்கக்கூடிய இடத்தை விட்டுத் துரத்தப்பட்டவர்கள் நாளை இதைவிட மோசமான இடங்களுக்குத்தான் சென்று குடியேறுவார்கள். உதாரணமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். கூவம் ஆற்றின் படுகையில் குடிசை போட்டு வாழ்ந்த மக்கள் 2-ஆண்டுக்கு முன்னர் அங்கிருந்து அகற்றப்பட்டனர். குடிசைகள் பிய்த்தெறியப்பட்டன. பேசின் ப்ரிட்ஜுக்கு அருகிலே முன்னூறு பேர்களுக்கு மேல் 50 குடிசைகள் போட்டுக் கொண்டு குடியேறினார்கள். அவர்களை கூவத்தில் இருந்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டபோது, அவர்கள் அதைவிட மோசமான இடத்தில் குடியேறினார்கள். மழையினால் வெள்ளம் வந்தபோது ஆபத்து ஏற்பட்டது. வெள்ளத்திற்குக் கூட பாதுகாப்பு இல்லாத இடங்களில் இப்போது வாழ்கிறார்கள். அது மட்டுமன்றி, கூவம் ஆற்றில் முன்பு ஒரு ஆள் குனிந்து போகக்கூடிய அளவுக்குக் குடிசை போட்டுக்கொண்டிருந்தார்கள். அந்தக் குடிசைகள் போலீசார் கண்ணில் பட்டது என்ற காரணத்தினால்தானே அதைப் பிரித்து எறிந்தார்கள் என்று அஞ்சி, கண்ணில் படக்கூடாது என்பதற்காக இன்றைய தினம் ஆள் தரையில்படுத்து நுழைந்து போகக்கூடிய அளவுக்கு குடிசை போட்டுக்கொண்டு திண்டாடுகிறார்கள். இப்படி குடிசை மறைந்து தரையோடு தரையாக பொந்துகள் உண்டாகின்றன. தங்களை நாயினும் கேவலமாக மதித்துக் கொண்டு வாழுகிற அவல நிலைக்கு அவர்கள் ஆளாக்கப்படுகிறார்கள்.

ஒரு காலத்தில் நமது மாநில முதல் அமைச்சராக இருந்த சக்கிரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் குடிசைகள் வளரக்கூடாது என்ற கருத்துடையவராக இருந்தாலும், இப்போது அந்த ஏழை மக்கள் குடிசையில் இருந்து விரட்டப்படுகிற நிலைமையைக்கண்டு எதிர்க் கட்சியில் உள்ள எங்களைப் போலவே அவரும் இரக்கப்பட்டு இந்த முறையைக் கண்டித்துள்ளார். (கனம் ஸ்ரீ ஆர். வெங்கட்ராமன்: அவரும் கூட எதிர்க் கட்சியில்தான் இருக்கிறார்) எதிர்க் கட்சியில் இன்று இருந்தாலும் கூட அவருடைய கருத்தையாவது ஏற்றுக்கொள்கிற மனோபாவம் உடையவராக அமைச்சர் இருப்பார் என்று எண்ணித்தான் சொன்னேன். உண்மையிலேயே இன்றைய தினம் குடிசையில் வாழ்கிறவர்களுக்கு மாற்று இடம் தேடிக் கொடுத்த பிறகு அவர்கள் வாழும் குடிசையில் இருந்து விரட்டுவது என்றால் ஓரளவு நியாயமாக இருக்கும். அப்படிச் செய்யாது குடிசையைப் பிரித்து எறிகிறபோது அவர்கள், அதன்பின் தெரு ஓரங்களில் வாழ்கிற மக்களாகத்தான் ஆக்கப்படுவார்கள். அதுவும் இன்றைக்குச் சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் மிக அதிகமான மக்கள் குடிசையும் இல்லாமல் தெரு ஓரங்களில் வாழ்வதைப் பார்க்கிறோம். ஜார்ஜ் டவுன் வடக்குக் கோடியில் உள்ள பகுதியில் துறைமுகத்தில் இருந்து இராயபுரம் செல்லும் வழியில் பார்த்தால் தெரு ஓரத்தில் இருக்கும் ஒரு சுவருக்கு அடியில் எத்தனை குடும்பங்கள் தங்கிக் கிடக்கின்றன என்பது தெரியும். அதுவும் காரில் போகிற பெரியவர்கள் இரவு நேரத்தில் விளக்கு ஒளி அந்த இடத்தில் படுகிறபோது காணப்படுகிற அவலக் காட்சியைக் கண்டு மனம் நோகாமல் இருக்கமுடியாது. ஆகவே இன்றைய தினம் குடிசைகளைப் பிரித்து எறிவதற்கு முன்னால் குடிசையில் வாழ்கிறவர்களுக்கு மாற்று இடம் அளிக்க முன் வரவேண்டு என்றும் வேண்டுகிறேன்.

[Sri K. Anbazhagan] [9th September 1960

இன்றைய தினம் பெரிய பெரிய பங்களாக்களில் வாழ்கிறவர்களுடைய வீடுகளுக்கு முன்னும் பின்னும் ஏராளமான நிலம் கிடக்கிறது. அந்த இடங்களை எல்லாம் அரசாங்கமே எடுத்துக்கொண்டு அங்கே நிலமில்லாத, குடியிருக்கக்கூட குடிசையில்லாத மக்களைக் குடியேற்றுவதற்கு துணிச்சலாக இந்தச் சர்க்கார் முன் வரவேண்டும். அப்படியில்லாது இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து குடிசையில் வாழ்கிறவர்களை நடுத்தெருவுக்குத் துரத்தினால், அவர்களுக்கு ஏற்படுகிற இன்னல் கண்டு மக்கள் கொதித்தெழுந்தால் அதற்கு எதிர் கட்சிக்காரர்கள் பொறுப்பல்ல. அவசரச் சட்டம்போல இந்த மசோதாவைக் கொண்டு வருவது அத்தகைய தவிர்க்க முடியாத நெருக்கடி நிலையை உண்டாக்கிவிடும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

11-30 a.m. சென்னை நகராண்மைக் கழகத்தின் பொறுப்பேற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சில இடங்களில் குடிசைகளைப் பிரிக்க வேண்டிய அவசியத்திற்கு ஆளாயிருக்கிறார்கள். இருந்தாலும் அவர்களுக்கு வேறு இடம் தர முயற்சிக்கிறபோது, அவர்களால் தர முடியாத நிலை உள்ளது. இந்த நிலைக்கும் சேர்த்து அரசாங்கமே பொறுப்பேற்கவேண்டும். மாற்று வழி காணவேண்டும். இந்தச் சட்டம் வருவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னே போடப்பட்ட குடிசைகளாயிருந்தாலும் அரசாங்கம் பிரிக்கலாம் என்றும், பொது விடத்தில் ஆக்கிரமித்திருந்தால் பிரிக்கலாம் என்றும் இச்சட்டத்தில் இருப்பது ஒரு பெரும் ஆபத்தை உண்டாக்கும். ஏற்கனவே, நாலைந்து ஆண்டுகளுக்கு முனனராகவே குடிசை போட்டுக்கொண்டிருக்கிறவர்களை கூட ஒரு வருடத்திற்குள்ளாகவே அந்தச் சேரி ஏற்பட்டது என்று சொல்லி, அவைகளைப் பிரிக்க முற்பட்டார்கள். எதிர்ப்பு ஏற்பட்டது. அரசாங்கத்தில் இருப்பவர்களும், அதிகாரிகளும் போதுமான அளவு நிலைமையை உணர்ந்து அதற்கேற்ப நடக்கவில்லை. அதனால் துன்பத்திற்கு ஆளாகியவர்கள் அதிகம். ஒன்றிரண்டு வருடங்கள் வரை முதலில் வளர விட்டு விட்டுப் பின்னர் அதைப் பிரிக்கிறார்கள். இப்போது அதனால் தொல்லை பெருகிறது. இந்தச் சட்டம் அமுலாவதற்கு முன்னர் ஆறு மாதங்கள் வரை போடப்பட்டுள்ள குடிசைகளைப் பிரிக்கலாம் என்று சட்டம் கொண்டு வருவது நல்லதல்ல. இனி ஆறு மாதத்திற்குப் பின்னால் யாராவது குடிசை போட்டால் அப்படி போட்டவுடனேயே அவைகளைப் பிரிக்கலாம் என்றோ, முன்னாலேயே அனுமதி பெற்றுத்தான் போடலாம் என்றோ சட்டம் கொண்டு வருவதுதான் முறை. இதற்கு முன் ஆறு மாதங்களுக்குள் போடப்பட்ட குடிசைகள் பிரிக்கப்படும். அவர்களுக்குப் பாதுகாப்பில்லை என்றால், அந்த இடத்தில் இருப்பதால் சில தொழில்களைச் செய்து பிழைக்கின்ற அந்த மக்கள், இப்படிக் குடிசைகளைப் பிரிப்பதால் தங்கள் தொழிலை செய்ய முடியவில்லை என்ற நிலை உண்டாகும்போது அவர்கள் வேறு தொழில்கள் செய்யத்தான் நேரிடும். அது என்னவென்றும், எப்படிப்பட்ட தொழிலில் ஈடுபடுவர் என்பதும். அரசாங்கத்திற்குத் தெரியும். அது வளர்வது நாட்டிற்கு நல்லதல்ல. குறிப்பாகச் சொல்லிக்கொள்வேன், மக்களை கெட்டவர்களாக்காதீர்கள், பொது மக்களை ஒழுக்கம் குறைந்தவர்களாக்கி, திருடர்களாக, கழுத்தணி அறுப்பவர்களாக மாற்றாதீர்கள் என்று. ஆகவே, இந்த மசோதாவை பொறுக்குக் குழுவுக்கு அனுப்பவேண்டும். இல்லையேல் இந்தச் சட்டத்தை அமுல்நடந்துவதை சிறிது காலம் ஒத்திப்போடவேண்டும். எனவே இந்தச் சட்டத்தினால் பாதிக்கக்கூடிய குடிசை வாழ்மக்களுக்கு மாற்றிடம் தர முன்வரும்போது தான் இதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தை மெஜாரிட்டி பலத்தைக் கொண்டு நிறைவேற்றினாலும்கூட இதை நடைமுறையில் கொண்டுவருகிறபோது அமைச்சர் அவர்கள் பொறுப்புணர்ந்து செயலாற்ற வேண்டும். இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏழைகள் பாதிக்கப்படாமல், அவர்கள் கண்ணீரும் கம்பலையுமாக தெருத்தெருவாக அலையாமல் இருப்பதற்கு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கும் அமைச்சர் அவர்கள் 60 வயதிற்கு மேற்பட்டவராகயிருப்பதால், ஏழைமக்களின்ட கஷ்டங்களை உணர்ந்திருப்பார்கள். எனவே எனது வேண்டுகோளைக் கவனிப்பார்கள் என்று நம்பி என் உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.



9th September 1960]

**THE HON. SRI M. A. MANICKAVELU** : கனம் சபாநாயகர் அவர்களே, நான் முன்பே சொன்னதுபோல், இதில் மூன்று வித ஆக்கிரமிப்புகள் இருச்கின்றன. "அன் அப்ஜெக்ஷனபில்" ஆட்சேபமில்லாத நிலம் பற்றி இருக்கிற சட்டப்படி பார்த்துக்கொள்ளலாம். 'unobjectionable but may become objectionable later on அதைப் பற்றிக்கூட கவலையில்லை. பின், 'absolutely objectionable' அப்படி நிலத்தை ஆக்ரமித்து வைத்திருப்பவர்களுக்குத்தான், இந்தச் சட்டம் அமுலுக்கு வரும்.

ஏழைகளின் பேரில் எல்லோருக்கும்தான் இரக்கம் இருக்கிறது. தொத்து நோய்கள், காலரா, வைசூரி இவைகள் வந்தால் அவை முதலில் "ஸ்லம்ஸ்"-ல்தான் ஆரம்பிக்கிறது. நாம் பெருவாரியான மக்களின் நலனையும் கவனிக்க வேண்டும். இப்படி தொத்து நோய் வருகிறபோது, அது 18, 19 லட்சம் மக்களைப் பாதிக்கிறது. அதையும் பார்க்கவேண்டும். ஏழைகள் என்று சொன்னால் நாம் அவர்களுக்கு உதவி செய்கிறோம். நிலம் இல்லாதவர்களுக்கு சுமார் லட்சத்திற்கு மேல் ஏக்கர்கள் "லாண்ட் லெஸ் புவருக்கு" கொடுத்திருக்கிறோம். எந்தெந்த இடத்தில் என்னென்ன உதவிகள் செய்யமுடியுமோ அவைகளைச் செய்கிறோம். ஆனால் ஆட்சேப கரமாக இருக்கும் இடத்தில் வேகமாக நடவடிக்கை எடுத்தால்தான் அவர்களுக்கும் நல்லது. ஏனெனில் அவர்கள் சுகமாக இருந்தால்தான். தினசரி வேலை செய்து பிழைக்க முடியும். அந்த விதத்தில் அநேக இடங்களில் வீடுகள் கட்டி அவர்களை "ரீஹாபிலேட்" செய்ய ஏற்பாடு செய்கிறோம். பல லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து அவர்களை அப்புறப் படுத்தியிருக்கிறோம். ஆக, தப்பாக ஏழைகள்மீது இரக்கம் வைத்தால் அது அவர்களுக்கும் நல்லதல்ல. பெருவாரியான மக்களுக்கும் நல்லதல்ல. ஆகவே, இதை கடமை அடிப்படையில் செய்கிறோமே தவிர, எவருக்கும் பாதகம் ஏற்படவேண்டுமென்ற நோக்கத்தில் அல்ல. என் சகாவும், நானும் இது பற்றி யோசனை செய்து வேறு வழிகள் இருக்கிறதா என்று பார்த்தோம். வேறு வழியில்லை. இப்படி அப்புறப் படுத்தினால்தான் தொத்து நோய் வராது தடுக்க முடியும். அதோடு அவர்களும் உணர்ந்து கொள்வார்கள் இனி இப்படி ஆக்கிரமிப்பு செய்வதில் பிரயோஜனமிலலை என்று. இப்பொழுது அவர்களுக்கு எங்கேயாவது போய் உட்கார்ந்து விட்டால் எல்லாம் சரியாகப் போய்விடும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அடுத்தபடியாக, பலாத்காரம், "போர்ஸ்" என்று சொல்லியிருப்பது பற்றிச் சொன்னார்கள். இந்த வார்த்தை எல்லாச் சட்டத்திலும் இருக்கிறது. "ரீசனபில் லீகல் போர்ஸ்" என்றிருக்கிறது. "போர்ஸ்" என்றால் அடிக்கிறதல்ல. சாமான்களை வெளியே எடுத்து வைப்பதும் "போர்ஸ்" தான். அது பற்றி வியாக்கியானம் செய்யப்பட்டு நீதி ஸ்தல முடிவுகள் இருக்கின்றன. ஆகவே அது பற்றி யாரும் பீதி அடைய வேண்டியதில்லை. எந்த அளவிற்கு வேண்டுமோ அந்த அளவுதான் உபயோகிக்கப்படும். முக்கியமான இடங்களில்தான் இது அமுலுக்கு வரும். அனுபவத்தில் பார்த்து பிற்பாடு என்ன செய்ய வேண்டுமென்று பார்க்கலாம். ஆகவே, பயம், பீதி இல்லாமல் இந்த மசோதாவை எல்லோரும் ஒத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Madras Public Premises (Eviction of Unauthorised Occupants) Bill, 1960, as amended, be passed."

The motion was put and carried and the Bill, as amended, was passed.

[9th September 1960

(2) THE MADRAS STATE HOUSING BOARD BILL, 1960
(L.A. BILL NO. 31 OF 1960).

* THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, I move—

"That the Madras State Housing Board Bill, 1960 * (L.A. Bill No. 31 of 1960) be referred to a Select Committee of the House consisting of the following Members of the Assembly :—

(1) The Hon. Sri M. Bhaktavatsalam.
(2) Sri P. G. Karuthiruman.
(3) Sri K. S. G. Haja Sheriff.
(4) Sri K. Vinayakam.
(5) Sri R. Krishnasami Naidu.
(6) Sri V. Vedayyan.
(7) Sri T. K. Subbiah.
(8) Sri V. Sankaran.
(9) Sri S. Ranganatha Mudaliar.
(10) Sri K. S. Subramania Gounder.
(11) Sri A. V. P. Periavalaguruva Reddi.
(12) Sri N. K. Palanisami.
(13) Sri M. Anandan.
(14) Sri S. T. Subbiah Gounder.
(15) Sri K. R. Nallasivam."

Sir, under the Rules, the Mover of the Bill is also a Member of the Select Committee.

கனம் சபாநாயகர் அவர்களே, இதற்கு முன்னால் விவாதித்த மசோதாவும் நான் இப்பொழுது கொண்டு வந்திருக்கிற மசோதாவும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட மசோதாக்கள். நம் ராஜ்யத்தில் வீட்டு வசதியைப் பெருக்க வேண்டும். வீட்டு வசதிகள் தேவை. சமுதாயம் மாறிக்கொண்டு வருகிறபோது அதிகரித்துக்கொண்டே போகிறது. ஜனத் தொகை அதிகரிப்பினால் மட்டும் வீட்டு வசதித் தேவை அதிகரிக்கிறது என்பதல்ல. பொதுவாக, கூட்டுக் குடும்பம் இருந்த இடத்தில், பத்து பேர்கள் முன்பு ஒரு வீட்டிலே இருந்திருப்பார்கள். இன்று அவரவர்கள் பல இடங்களில் வேலை செய்து தனித்தனிக் குடும்பம் ஆரம்பித்தவுடன் பத்து வீடுகளின் தேவை வருகிறது.

(Deputy Speaker in the Chair.)

ஆகவே, இன்று சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய மாறுதல்கள் காரணமாக வீடுகளுக்கு அதிகமான தேவை, ஜனத்தொகை வளர்ச்சியைவிட அதிகமான தேவை இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. இன்னும் பல நகரங்களில் தொழிற்சாலைகள் அமைகிற காரணத்தால் வேறு இடங் களிலிருந்து குடி புகுகிற ஒரு பிரச்னை வந்து, அதன் மூலமாகவும் வீட்டு நெருக்கடி பல நகரங்களில் தோன்றிக் கொண்டு வருகிறது. இவை எல்லாவற்றையும் கண்காணிப்பதற்கு பலவித நிறுவனங்கள் இருக் கின்றன. கூட்டுறவு சங்கங்கள் மூலம் வீடு கட்டுவது, ஸி.ஐ.டி. மூலம் வீடு கட்டுவது, சில இடங்களில் ஸ்தல ஸ்தாபனம் வீடு கட்டுவது, இன்னும் "ஸ்லம் க்ளியரன்ஸ்" போன்றவை பாதி ஸ்தல ஸ்தாபனங்

* Published in the Fort St. George Gazette Extraordinary, dated 22nd August 1960.



9th September 1960] [Sri R. Venkataraman]

களுக்கும், பாதி ஸி.ஐ.டி.க்கும் பிரித்துக் கொடுத்திருப்பது, சிலவிடங் களில் முனிசிபாலிடிகளுக்கு கொடுத்திருப்பது இப்படி பல ஸ்தாபனங்கள் இருக்கின்றன.

வீடு கட்டுவது என்று சொன்னால், இப்போதுள்ள நிலையில் நீண்ட நாள் ஆகின்றது. காரணம், சிமிண்ட் கிடைக்காததாலோ அல்லது இரும்பு கிடைக்காததாலோ அல்ல. டௌன் பிளானிங் சட்டப்படி லே அவுட் போட வேண்டும். வேறு பல இலாகாக்களை அணுகி அவர்களுடைய சம்மதம் பெற வேண்டும். இன்னும் இது போன்ற எத்தனையோ கஷ்டங்கள் எல்லாம் இருக்கின்றன. இந்த முறையில் காலனியோ அல்லது வீடோ கட்ட வேண்டுமென்றால் பல வருடங்கள் ஆகின்றன. இதைத் தவிர்ப்பதற்காக 1958-வது வருடத்தில் சட்டபூர்வமல்லாத வகையில் ஒரு ஹௌஸிங் போர்ட் ஏற்படுத்தினோம். அதில் டவுன் பிளானிங் டயரக்டர், சீப் என்ஜினியர், ரெஜிஸ்திரார், லேபர் கமிஷனர், இவ்விதம் இது சம்மந்தப்பட்ட எல்லா இலாகா தலைவர்களும் இதில் அங்கத்தினர் களாக இருந்தார்கள். இவ்விதம் ஒரு போர்டை நிறுவி, இது நல்ல முறையில் செயலாற்றுமா என்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்தோம். இம்மாதிரியான ஒரு போர்டு நிறுவப்பட்டதன் காரணமாக பல பிரச்னைகளை சீக்கிரமாகத் தீர்க்க முடிந்தது. உதாரணமாக ஒரு போர்ட் கூட்டத்தில் எல்லா அதிகாரி களும் வந்திருப்பார்கள். அதில் டௌன் பிளானிங் டயரக்டர் அவருடைய ஆட்சேபனைகளைப் பற்றி சொல்லலாம், பப்ளிக் ஹெல்த் டயரக்டர் அவருடைய ஆட்சேபனைகளைப் பற்றி சொல்லலாம், இவ்விதமாக ஒருவருக்கொருவர் தங்களுக்கு இருக்கின்ற கஷ்டங்களை எடுத்துச் சொல்லி விவாதித்து அங்கேயே முடிவு எடுததுக்கொள்வது என்பது மிகவும் வசதியாக இருந்து வருகிறது. இவ்வாறு முடிவு எடுப்பதால் சுலபமாக திட்டங்களை நிறைவேற்ற முடி கிறது. ஆகவேதான் இப்போது நாம் சட்டபூர்வமில்லாத ஒரு போர்டு அமைத்து, அதன் மூலம் கிடைத்த அனுபவத்தை வைத்துக்கொண்டு இந்த போர்டை சட்டபூர்வமான ஒரு போர்டாக அமைக்கவேண்டும் என்ற முடிவுக்கு இப்போது நாம் வந்திருக்கிறோம்.

இரண்டாவது, சட்டபூர்வமாக இயங்கப் போகின்ற இந்த ஹௌஸிங் போர்டுக்கு கடன் வாங்குவது, டிபெஞ்சர்கள் கொடுப்பது முதலியவை களுக்கும் அதிகாரம் கொடுக்கிறோம். வீடுகள் கட்டுவது என்று சொன்னால் பெருவாரியான அளவில் கடன் வசதி செய்து கொடுத்தால் போதும். சில துறைகளில்தான் மான்யங்கள் தேவைப்படுகிறதே தவிர, பெருவாரி யான கடன் கொடுத்தால் வீடு கட்டுவதற்கு எத்தனையோ பேர்கள் தயாராய் இருந்து கொண்டிருக்கிறார்கள். இவ்விதம் கடன் கொடுப்பதை சரியாக வசூல் செய்ய வேண்டும். இதற்கு இந்தச் சட்டபூர்வமான போர்டுக்கு அதிகாரம் கொடுத்துவிடுவோமானால், கடன்களை வசூலிப்பதிலும் சரி, டிபெஞ்சர்கள் வாங்குவதாக இருந்தாலும் சரி, இதற்கெல்லாம் பல ஸ்கீம்களைப் போடுவதற்கு உதவியாக இருக்கும்.

அடுத்தபடியாக, இதில் இருக்கக்கூடிய மாறுதல் என்னவென்று சொன்னால், சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் ஸி.ஐ.டி. என்ற ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தினோம். அதன் மூலமாக சென்னையில் இருக்கின்ற எல்லாவிதமான வீடுகளைக் கட்டுவதற்கும், சேரி அமைப்புத் திட்டத்தை அமுல் நடத்துவதற்கும் பல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. மற்றொரு பகுதியில் கார்ப்பரேஷன் வேறு பல நடவடிக்கைகளை இதற்காக எடுத்துக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கு ராஜ்யம் பூராவும் இந்த போர்டை ஏற்படுத்துகின்ற நேரத்தில் சென்னைக்கு மட்டும் என்று ஏற்படுத்தியிருக்கின்ற சி.ஐ.டி. ஸ்தாபனம் தேவையில்லாமல் போய் விடுகின்றது. அதற்குப் பதிலாக ஸிட்டி யூனிட் என்று ஒன்றை வைத்துக்கொள்ளலாம். அதேபோன்று ஒவ்வொரு ஜில்லாக்களுக்கும் ஒவ்வொரு யூனிட் வைத்துக்கொள்ளலாம். இந்த யூனிட்டுகள் எல்லாம் இந்த போர்டின் கீழ் ஸ்தாபனங்களாக இருக்கும். அதாவது போர்டினு டைய அதிகாரத்தின்கீழ் செய்யப்படுகின்ற வேலைகள் எல்லாம் இந்த யூனிட்டுகள் நிறைவேற்றிக் கொடுக்கும். ஆகவே எல்லாவற்றையும் ஒன்றுக்

[Sri R. Venkataraman] [9th September 1960

கொன்று இணைத்து நல்ல முறையில் வேலை செய்வதற்கு இது வழிவகை
செய்யும். உதாரணமாக நம்முடைய ஹரிஜன இலாகா அமைச்சர் அவர்கள்
இருக்கிறார்கள். அவர்களுடைய இலாகா மூலம் சில இடங்களில் வீடுகள்
கட்டப்படுகின்றன. லேபர் கமிஷனர் மூலமாகவும் தொழிலாளர்கள்
சம்பந்தமாக சில இடங்களில் வீடுகள் கட்டப்படுகின்றன. இது தவிர
கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும் வீடுகள் கட்டப்படுகின்றன. இவ்விதம்
இந்த இலாகாக்கள் எல்லாம் தனித்தனியாக திட்டம் போட்டுக் கொண்டு
போவதால் நடைமுறையில் சில முரண்பாடுகளும் வந்து சேருகின்றன.
இதன் காரணமாக சில திட்டங்களை சரியானபடி அமுலாக்க முடியாமல்
போகின்றது. வி.ஐ.டி. ஸ்தாபனத்தை மதராஸ் ஸிட்டிக்கு என்று
ஒரு யூனிட்டாக வைத்துக்கொண்டு தனியாகச் செயல்பட்டு, அதற்கான
ஸ்கீம்களை நிறைவேற்றிக்கொண்டால் மிக உதவியாக இருக்கும்.
ஆகவே இனிமேல் தேவையில்லாத வி.ஐ.டி.யை கலைத்துவிடுவதற்கும்
இதில் தகுந்த ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

அடுத்ததாக, ஹவுஸிங் போர்டுக்கு எதையெல்லாம் செய்யலாம்
என்றும் அவற்றிற்கு வேண்டிய அதிகாரமும் கொடுத்திருக்கிறோம்.
அவ்வாறு எடுத்துக்கொண்டால், பல திட்டங்களை நாம் மேற்கொண்டிருக்
கிறோம். ஸ்லம் இம்ப்ரூவ்மெண்ட் ஸ்கீம் இருக்கிறது. உதாரணமாக
திரு. அன்பழகன் அவர்கள் இதனால் பல கஷ்டங்கள் ஏற்படு
கின்றன என்பதைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். சர்க்காருக்கும்
இதனால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இன்றைக்கு சில பெரிய இடங்
களை எல்லாம் பணக்காரர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள், அவர்
களிடமிருந்து 20 ஏக்கரோ, 30 ஏக்கரோ, வாங்கிவிடலாமே என்று சொல்லு
கிறோம். அவ்வாறு வாங்கிக் கொடுக்கக் வேண்டுமென்றால், அதை எடுத்துக்
கொள்வதற்கு பல நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டியிருக்கிறது.
என்னுடைய ஒரு அனுபவத்தைச் சொல்லுகிறேன். மேற்கு சென்னையில்
ஒரு சிறிய நகரத்தை ஆரம்பித்தால் ஸ்லம் இம்ப்ரூவ்மெண்ட் ஸ்கீமை
நல்ல முறையில் நடத்தலாம் என்ற எண்ணத்துடன் சுமார் 1,200
ஏக்கர் நிலங்களை எடுக்கவேண்டும் என்று திட்டமிட்டிருந்தோம். இவ்வாறு
முடிவு செய்த கொஞ்ச காலத்திற்குள்ளாகவே எங்கள் நிலத்திற்கு விலக்கு
கொடுத்து விடுங்கள் என்று பல காரணங்களைக் கூறி மனுக்கள் ஏராளம்
வந்து விட்டன. அதில் கூறப்பட்டிருக்கும் காரணங்கள் எல்லாம் நியாய
மான காரணங்கள்தான். இவ்விதம் எல்லா மனுக்களின் பிரகாரம்
விதி விலக்கு கொடுத்துவிட்டு கடைசியில் பார்த்தால் ஒரு ஏக்கர்கூட
மிஞ்சாது. இதற்கெல்லாம் காரணம் என்னவென்றால் போதிய அளவு
நிலம் இல்லை என்பதைத்தான் காட்டுகின்றன. நம் நாட்டில் ஏற்பட்டிருக்
கின்ற ஜன நெருக்கத்தின் காரணமாக போதிய அளவுக்கு இடமில்லை.
மேல் நாடுகளில் செய்வதை எடுத்துக்கொண்டால், லாண்டு டெவலப்மெண்ட்
போர்ட் என்று போடுகிறார்கள், நிலங்கள் ஏராளமாக இருக்
கின்றன. சர்க்காரிடத்தில் உதவியைப் பெற்று, அந்த இடத்தில் நல்ல
ரோடுகள், தண்ணீர் வசதி இவைகளை எல்லாம் செய்து கொடுத்து விடு
கிறார்கள். இவ்விதம்தான் அவர்கள் மேல் நாடுகளில் செய்துகொண்டிருப்
பது. ஆனால் நம் நாட்டிலுள்ள நிலைமையைப் பொறுத்தவரை யாராவது
சொந்தமாக வைத்திருக்கின்ற இடத்தில்தான் லாண்ட் இம்ப்ரூவ்மெண்ட்
செய்ய வேண்டியதாக இருக்கிறது. இவ்விதம் செய்ய முன்வருகின்ற
பொழுது நிர்ப்பந்தமாகத்தான் சொந்தக்காரர்களிடமிருந்து நிலத்தைப்
பெற்றுக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. பல இடங்களிலும்
லாண்ட் அக்விஸிஷன் மூலமாகத்தான் இடங்களை வாங்கவேண்டியவர்
களாக இருக்கிறோம். அதே போன்றுதான் தவறான இடங்களில் குடி
யிருக்கிறவர்களை வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டுமென்றாலும் நிர்ப்
பந்தம் செய்ய வேண்டியிருக்கிறது. இந்த ஏற்பாடுகள் எல்லாம் இனி
மேல் ஹௌஸிங் போர்ட் உத்தரவின் மூலமாக நடைபெறும். 1960
முதல் ஒரு திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று நாம் முடிவு
செய்வோமானால் புதிதாக செய்ய வேண்டிய காரியங்களை எல்லாம் இந்த
ஹௌஸிங் போர்டு செய்யும். இவ்விதம் நாம் போடும் திட்டங்களை எல்லாம்
உடனடியாக நிறைவேற்றுவதற்கு சரியான ஸ்தாபனம் இல்லாவிட்டால்



9th September 1960] [Sri R. Venkataraman]

நாம் போடும் திட்டங்கள், நாம் போடும் சட்டங்கள் எல்லாம் உதவாக்கரை
களாகப் போய்விடும். அதோடு முக்கியமாக இம்மாதிரியான சட்டங்களை
எல்லாம் நிறைவேற்றிவிட்டு, சட்டத்திற்குப் புறம்பாக வீடுகளையும் மற்றவை
களையும் கட்டுகிறவர்களை நாம் விட்டுக்கொண்டே போவோமேயானால், பிற்
காலத்தில் இந்தப் பிரச்னையை நாம் சமாளிக்க முடியாத நிலைமை
வந்துவிடும். ஆகவேதான் இதைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளையும்
இதில் ஏற்படுத்தியிருக்கிறோம். அதே நேரத்தில் பல பகுதிகளிலும்
மக்கள் நல்ல முறையில் வாழக் கூடிய முறையில் வீடுகளைக் கட்டிக்
கொடுப்பதற்கான திட்டங்களை நிறைவேற்றிக் கொடுப்பதை கவனித்துக்
கொள்ளவும், நமது தேவைக்கு வேண்டிய இடங்களைக் கண்டுபிடித்து
அவைகளைச் சர்க்காருக்கு எடுத்துக்கொள்ளவும் இந்த போர்டு வேலை
செய்யும்.

சமீபத்தில் கோடம்பாக்கத்தில் 600 ஏக்கர் நிலத்தை வாங்கி அதில்
சேரியில் இருந்தவர்கள் வந்து தங்குவதற்குக் கொடுத்தோம். அப்போது
அங்குள்ளவர்கள் என்னைத் திட்டினார்கள். திட்டினார்கள் என்று சொல்
வதை விட சபித்தார்கள் என்று சொன்னால்கூட அதில் தவறு இல்லை
என்று நினைக்கிறேன். அப்புறம்—ஒரு மாதத்திற்கு முன்னால்—அங்கே
போனேன். யார் என்னை "இந்தக் காட்டில் கொண்டு வந்து விட்டுவிட்டீர்
களே" என்று சொன்னார்களோ அவர்கள் "நீங்கள் எங்களுக்குக் கொடுத்த
தைப் பற்றி ரொம்பவும் சந்தோஷம், இந்த விதமான வசதிகள் கிடைக்
கும் என்று தெரியாது, இன்னும் எங்களுடைய சொந்தக்காரர்கள் இருக்
கிறார்கள், அவர்களுக்கும் இடம் கொடுங்கள்" என்று கேட்க ஆரம்பித்து
விட்டார்கள். ஆக பொது நன்மைக்காக ஒரு காரியத்தைச் செய்ய முன்
வரும்போது, அதிலும் முக்கியமாக சுகாதார வசதியுடன் நல்ல முறையில்
வாழ்க்கை நடத்த வசதி செய்யும்போது, சில இடையூறுகள், கஷ்டங்கள்,
சில தொந்தரவுகள் இருக்கத்தான் செய்யும். அதை மிகைப்படுத்தக்
கூடாது. இதில் அக்கறை கொண்டவர்களெல்லோரும் ஒத்துழைத்தால்
தான் திட்டம் வெற்றிகரமாக நடக்க முடியும். உதாரணமாக மேல் நாடு
களில் பார்த்தால் தொழிலாளிகள் எந்த இடத்தில் வேலை செய்கிறார்
களோ, அந்த இடத்தில் ஃபேக்டரியில் வேலை முடிந்தவுடன் அந்த
ஃபேக்டரியை கண்ணால் பார்க்கக்கூட மறுத்து விடுகிறார்கள். அங்கு
அவர்களுக்கு வேண்டிய நிலம் கிடைப்பதால் ஃபேக்டரிக்கு அருகாமை
யிலேயே வீடு கட்டிக் கொடுக்கிறோம் என்று சொன்னால் வேண்டாமென்று
சொல்லுகிறார்கள். வேலை செய்யும் இடத்தை மறந்து வேறு இடத்தில்
தோட்டங்கள் வைத்து, செடிகள் வைத்து, 8 மணி நேரம் வேலை செய்யும்
நேரத்தைத் தவிர பாக்கி நேரத்தை ஃபேக்டரியை மறந்து இருக்கத்தான்
விரும்புகிறார்கள். நம் தொழிலாளர்கள் அம்மாதிரி விரும்ப
வில்லை என்பதல்ல. நான் அதை எடுத்துச் சொல்லவில்லை. அந்த மாதிரி
யான கருத்துக்களை எடுத்துச் சொல்லாத காரணத்தினால், எந்தவிதமான
வாழ்க்கையை நடத்த முடியும் என்று எடுத்துச் சொல்லாத காரணத்தினால்
அவர்கள் மனதில் தப்பான அபிப்பிராயம் பரவிக்கொண்டிருக்கிறது.
இருக்கும் இடம் ஃபேக்டரிக்கு அருகாமையிலேயே இருக்கவேண்டும் என்று
நினைப்பதும், அருகாமையிலே என்ன விதமான கஷ்டங்கள் இருந்தாலும்,
அந்த இடத்தில் வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று சொல்வதும்,
பொருத்தமாகாது. ஹௌஸிங் போர்டு மசோதாவில் லாண்ட் டெவலப்
மெண்ட் மிக முக்கியம். லாண்ட் டெவலப்மெண்ட் என்பது அதிக ஏக்கர்
நிலத்தை வாங்கி பல பகுதிகளாக மக்களுக்குப் பிரித்துக் கொடுத்து, ரோடு
கள் போட்டு, தண்ணீர் வசதி செய்து, இன்னும் சாக்கடை வசதிகள் செய்து
அதன் மூலமாக வசதிகள் பெருக வேண்டும் என்று கொண்டு வரப்பட்
டிருக்கிறது.

இதிலே ஒரே ஒரு குறை சொல்லலாம். அதையும் முன்னதாகவே
நான் சொல்லிவிடுகிறேன். அதற்குக் காரணம் என்னவென்றும் சொல்லி
விடுகிறேன். இந்த போர்டின் அமைப்பைப் பார்த்தால் 11 பேர்கள்
உத்தியோகஸ்தர்களாக இருக்கிறார்கள். உத்தியோகப் பற்றற்றவர்களாக
4 பேர்களைப் போட்டிருக்கிறது. அது ஒரு குறை என்று சொல்லலாம்.
இந்த போர்டின் அலுவல்களைப் பார்த்தால் அது அவசியம்தான் என்று

[Sri R. Venkataraman] [9th September 1960

நன்றாகத் தெரியும். இது ஆலோசனை போர்டு அல்ல—நிர்வாக போர்டு. அட்வைஸரி போர்டாக இருந்தால் உத்தியோகப் பற்றற்றவர்கள் அதிகமாக இருக்கலாம். இது நிர்வாக போர்டாக இருப்பதால் யார் யார் நிர்வாகத்தைச் செய்ய முடியுமோ அவர்கள்தான் இதில் போடப்பட்டிருக்கிறார்கள். அப்படிப் பார்க்கும்போது டைரக்டர் ஆப் டவுன் பிளானிங் வேண்டும். அங்கு இருக்ககூடிய பப்ளிக் ஹெல்த் அத்தாரிட்டி வேண்டும். அப்புறம் கார்ப்பொரேஷன் கமிஷனர், லேபர் கமிஷனர், இந்த முறையில் எந்தெந்த அதிகாரிகள் இதில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமோ அவர்களைத் தான் முக்கியமாகப் போட்டிருக்கிறது. மசோதாவின் 4-வது பகுதியைப் பார்த்தால் சீஃப் என்ஜினீயர் (பப்ளிக் வொர்க்ஸ்), ஜாயின்ட் டைரக்டர் ஆஃப் டவுன் பிளானிங், இன்ஸ்பெக்டர் ஆஃப் முனிசிபல் கவுன்சில்ஸ் அண்ட் லோகல் போர்ட்ஸ், கமிஷனர் ஆஃப் லேபர், கார்ப்பொரேஷன் கமிஷனர், ரிஜிஸ்டிரார் ஆஃப் கோவாபரேடிவ் சொஸைடீஸ், டைரக்டர் ஆஃப் ஹரிஜன் வெல்ப்பேர், டைரக்டர் ஆஃப் பப்ளிக் ஹெல்த், செக்ரட்டரி டு கவர்ன்மெண்ட், பைனான்ஸ் டிபார்டுமெண்ட், சூபரின்டென்டிங் என்ஜினீயர், ரூரல் ஹௌஸிங் ஸெல், இன்னும் ஒரு ஆபீஸர் டெவலப்மெண்ட் கமிஷனரால் நாமினேட் செய்யப்படுபவர் இவர்களெல்லாம் இந்த போர்டில் அங்கத்தினர்களாக இருப்பார்களென்று போடப்பட்டிருக்கிறது. இவர்களைத் தவிர உத்தியோகப் பற்றற்றவர்கள் 4 பேர்கள் அங்கத்தினர்களாக இருப்பார்கள் என்றும் போடப்பட்டுள்ளது. அவர்கள் கூறக்கூடிய ஆலோசனையெல்லாம் எந்த இடத்தில் வீடு கட்டும் திட்டம் செய்யலாம் என்பதைப்பற்றி இருக்கலாம். அவர்களுடைய ஆலோசனை அந்த விஷயத்தில் உபயோகமாக இருக்கும். இந்த உத்தியோகப் பற்றற்றவர்கள் 4 பேர்களில் ஒருவர் என்ஜினீயராகவோ அல்லது ஆர்க்கிடெக்டாகவோ இருந்து, வீடு கட்டுவதில் அனுபவமுள்ளவராகவும், சர்க்காரிலோ சர்க்கார் மேற்பார்வை இருக்கக்கூடிய ஸ்தாபனங்களிலோ வேலை செய்யாதவராக இருக்க வேண்டுமென்று போட்டிருக்கிறது. காரணம் என்ன என்றால், சர்க்கார் என்ஜினீயர் ஒன்று சொன்னால் அது சரியா, தவறா என்று பார்த்துச் சொல்ல ஒரு "செகண்ட் ஒப்பினியன்" வேண்டுமென்று, என்ஜினீயர் ஒருவரை—என்ஜினீயரிங் திறமை பெற்றவர் ஒருவரை—சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று போட்டிருக்கிறது. இது நிர்வாக போர்டாக இருப்பதால் நிர்வாகம் செய்யும் உத்தியோகஸ்தர்களைப் போட வேண்டிய அவசியம் இருக்கிறது.

இந்த மசோதாவில் பல ஷரத்துக்கள் இருக்கின்றன. பொதுவாக "வி.ஐ.டி. ஆக்ட்"டில் உள்ள ஷரத்துக்களையும், "பாம்பே ஹவுஸிங் போர்ட் ஆக்ட்"டில் உள்ள ஷரத்துக்களையும் வைத்து இந்த மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது. கமிட்டியிலே பரிசீலனை செய்யும்போது பகுதிவாரியாகப் பார்க்கலாம். ஆகவே இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

DEPUTY SPEAKER: Motion moved—

"That the Madras State Housing Board Bill, 1960 (L.A. Bill No. 31 of 1960) be referred to a Select Committee of the House consisting of the following Members of the Assembly:—

(1) The Hon. Sri M. Bhaktavatsalam.
(2) Sri P. G. Karuthiruman.
(3) Sri K. S. G. Haja Sheriff.
(4) Sri K. Vinayakam.
(5) Sri R. Krishnasami Naidu.
(6) Sri V. Vedayyan.
(7) Sri T. K. Subbiah.
(8) Sri V. Sankaran.
(9) Sri S. Ranganatha Mudaliar.
(10) Sri K. S. Subramania Gounder.



9th September 1960] [Deputy Speaker]

(11) Sri A. V. P. Periavalaguruva Reddi.
(12) Sri N. K. Palanisami.
(13) Sri M. Anandan.
(14) Sri S. T. Subbiah Gounder.
(15) Sri K. R. Nallasivam.
(16) The Hon. Sri R. Venkataraman (Mover of the Bill)."

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Deputy Speaker, Sir, in the place of the hon. Member, Sri K. R. Nallasivam, it is suggested that the name of the hon. Member, Sri S. Pakkirisami Pillai may be substituted.

DEPUTY SPEAKER: Yes, the name of the hon. Member, Sri S. Pakkirisami Pillai, will be substituted for the name of the hon. Member, Sri K. R. Nallasivam.

The Motion is before the House for discussion.

SRI K. SATTANATHA KARAYALAR: உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா ஒரு நல்ல நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டுள்ளது என்பதிலே யாருக்கும் ஆட்சேபணை இருக்க முடியாது. இன்று நாட்டிலே இருக்கக்கூடிய பல்வேறு வீடு கட்டும் திட்டங்களை இணைக்கக் கூடிய முறையிலும், ஒரு இணைந்த வீடு கட்டும் திட்டம் நாட்டிலே அமுலில் இருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடும் இந்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனால் தனிப்பட்ட வீடு கட்டுவதற்குள்ள திட்டம் என்று மாத்திரம் பிரத்தியேகமாகப் பிரித்துப் பார்ப்பது எந்த அளவு பயன் தரும் என்று சொல்ல முடியாது. சட்டமாக இயற்றி விட்டால் மாத்திரம் நாட்டிலே இருக்கக்கூடிய இட நெருக்கடி, வீட்டு நெருக்கடி, குடி மனை நெருக்கடி இவைகளைச் சமாளித்து விடலாம் என்று எண்ண முடியாது. இன்று வீடு என்று வரும்போது, குடியிருப்பு மனை என்று வரும்போது, அவரவர்கள் வேலை செய்யக்கூடிய இடத்திற்கு அருகாமையிலேயே, மருத்துவ வசதி இருக்கக்கூடிய இடத்திற்கு அருகாமையிலேயே, அதுவும் தவிர மற்ற சௌகரியங்கள் இருக்கக்கூடிய முறையில் இருக்கவேண்டும். இதிலே மிகவும் முற்போக்கான, மிகவும் தீவிரமான, பல்வேறு திட்டங்கள் இருக்கவேண்டியது அவசியம். குறிப்பாக நகரங்களைப் பொறுத்தமட்டில் இது போன்ற சட்டங்களை இயற்றி விட்டால் போதாது. சில மாஸ்டர் பிளான்கள் அமைக்கவேண்டும். நாட்டில் இருக்கக்கூடிய தொழில் அபிவிருத்தியையும், தொழில் வளர்ச்சியையும் மனதில் கொண்டு, அந்த முறையில் தொழில் வளர்ச்சி அடிப்படையில், தொழில் வளர்ச்சியினால் இட நெருக்கடி இருக்கக்கூடிய நகரங்களைப் புனரமைக்கக்கூடிய முறையில் சில மாஸ்டர் பிளான்கள் மிக மிக அவசியம். இது ஒரு ஐந்தாண்டு காலத்திலோ அல்லது இரண்டு ஐந்தாண்டு காலத்திலோ நிறைவேறக் கூடியதல்ல. பல ஐந்தாண்டு காலம் பிடிக்கலாம். இன்று நமது மாநிலத்தில் இருக்கக் கூடிய சென்னை, திருச்சி, மதுரை, கோயமுத்தூர், நெய்வேலி, திருநெல்வேலி போன்ற இடங்கள் வருங்காலத்தில்—50 ஆண்டுகளுக்குப் பிறகு—எப்படி உருப்பெறும் என்ற கண்ணோட்டம் இருப்பது அவசியம். டவுன் பிளானிங் திட்டங்கள் போதாது. ஏனென்றால் ஒரு ஆண்டிலே, இரண்டு ஆண்டிலே, 5 ஆண்டிலே என்ன முறையில் சீரமைக்கலாம் என்று பார்க்கிறோமே தவிர நீண்ட நெடுங்காலத் திட்டமாக அமைத்து அவைகளை செயல்படுத்த முற்படவேண்டும். அதற்கானத் திட்டங்களை முதன் முதலாகச் செய்யவேண்டியது மிக மிக அவசியம்.

அப்படிப் பொதுவாக நமது நகரத்தை—சென்னை நகரத்தைப் பொறுத்த 12-00 noon
மட்டில்கூட அப்படித் திட்டமிடப்படுவதில்லை யென்பதுதான் என் போன்றவர்கள் அபிப்பிராயம். மருத்துவ வசதியை எடுத்துக்கொண்டால் நம்

[Sri K. Sattanatha Karayalar] [9th September 1960

சென்னையைப் பொறுத்த மட்டில் ஏற்கனவே இருக்கக்கூடிய ஆஸ்பத்திரிகளைத்தான் நெருக்கடியாகச் செய்து வருகிறார்களே தவிர, ஒரு மாஸ்டர் ப்ளான் போட்டு இனி கட்டுகின்ற ஆஸ்பத்திரிக் கட்டிடங்களை நகரத்திற்கு வெளியே சுகாதார வசதியுள்ள இடத்தில் கட்டுவதற்குத் திட்டமிடப்பட வேண்டும். நகரத்திற்கு 10, 15 மைலுக்கு வெளியே சுகாதார வசதி உள்ள இடங்களில் ஆஸ்பத்திரியைக் கட்டினால் நகரத்தில் இருக்கக்கூடிய நெருக்கடியைக்கூடக் குறைக்க முடியும். ஆகவே நாம் போடக்கூடிய திட்டங்கள் வெறுமனே வீடுகள் கட்டுவதற்கு மட்டும் என்றால் அது போதாது. இதர துறைகளிலும் அபிவிருத்தி அடையும் வகையில் முற்போக்கானத் திட்டங்களை "லாங் ரேஞ்சு வ்யூ"-வை மனதில் வைத்துத் திட்டமிட வேண்டும்.

அடுத்தபடியாக, குறிப்பிட விரும்புவது, இந்தச் சட்டம் அமுலாகக் கூடிய காலத்திலே இது பற்றிப் பொதுவாக நாட்டு மக்களிடையே இருக்கக் கூடிய குறை "வீடு கட்டும் ஹவுஸிங் ஸ்கீமில் விலை மிக மிகக் கூடுதலாகி விடுகிறது" என்பதாகும். இதை நிர்வாகம் செய்யக்கூடிய மெஷினரி செலவு செய்யக்கூடிய எஸ்டாப்ளிஷ்மெண்ட் சார்ஜஸ் அதிகமாக இருக்கிறது என்று மந்திரியவர்கள் கேள்வி நேரத்தில் குறிப்பிட்டார்கள். அதை எந்த அளவுக்குச் சுருக்க முடியும் என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும். இப்படி ஒரு தனி போர்டு என்று ஆக்கிவிட்டு சாதாரணமாகத் தனியார் துறையில் தனிப்பட கட்டுகிற வீட்டுக்குப் பதினாயிரம் ரூபாய் ஆனால், இவர்களால் கட்டுப்படுகிற வீட்டுக்கு இருபதாயிரம் ரூபாய் ஆகிவிடுகிறது. ஆகவே, நிர்வாக இயந்திரத்தை செம்மையாகவும், சீராகவும் செய்ய வேண்டுமென்ற கருத்தைக் கொண்டிருக்க வேண்டுமென்று கோரி நான் இந்த மசோதாவை வரவேற்கிறேன்.

*SRI K. ANBAZHAGAN : சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, மாநில முழுவதற்கும் வீடுகள் கட்டுவதற்கான ஒரு நிர்வாக ஆய்வுக் குழுவினை ஏற்படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மசோதாவின் நோக்கத்தை நான் வரவேற்கிறேன். இந்த நோக்கம் நல்ல வகையிலே நிறைவேற வேண்டுமானால் மற்றும் பல துணைக் கடமைகளையும் நிறைவேற்றியாக வேண்டுமென்பதை நினைவூட்டுகிறேன்.

வீடுகள் கட்டுவது என்ற திட்டமானது, வீடுகளை ஓரளவு எண்ணிக்கையிலே அதிகமான அளவு கட்டி முடித்து விடுவதனாலேயே மட்டும் குடியிருப்பு வசதிப் பிரச்னையை நிறைவேற்றிவிட முடியாது. பொது மக்களுக்கு வீடுகள் மிகுதியாகத் தேவைப்படுகின்றன என்பதும், மக்கள் எண்ணிக்கை நாளடைவில் பெருகி வருவதால் வீடுகள் தேவை பெருகி வருகிறது என்பதும், அமைச்சர் அவர்கள் தெரிவித்தபடி சேர்ந்து வாழும் குடும்பங்கள் பிரிந்து வாழமுற்படுவதால் அதிகமான அளவு வீடுகள் தேவைப்படுகின்றன என்பதுமே வீடுகள் அதிகமான அளவில் கட்டப்பட வேண்டுமென்பதற்குக் காரணங்களாகும்.

ஆனால், மக்களுக்கு வீடுகள் தேவையென்று சொன்னாலும், வீடுகள் மட்டுமே எண்ணிக்கையில் பெருகிவிட்டால் மட்டும் அந்தக் குறை நிவர்த்தியாகி விடுமா என்று பார்க்கும்போது, அந்தக் குறை நீங்கிவிடாது என்பது தெளிவாகத் தெரிகிறது. எனவேதான் இது குறித்துப் பல்வேறு வகையான சூழ்நிலையையும் ஆராய்ந்து ஆலோசனை கூற இந்த நிர்வாகத் துறையில் பல்வேறு துறையில் உள்ள நிபுணர்களும் இடம் பெறவேண்டுமென்று கருதுகிறோம். எனினும் அந்தக் குறையை எந்த விதத்தில் நீக்க வேண்டும், எந்த அளவுக்கு நகர வாழ்க்கையில் உள்ள இட நெருக்கடியைப் போக்க வேண்டுமென்று திட்டம் போட்டாலும்கூட அதை நிவர்த்திக்க இப்போது இருக்கக்கூடிய அதிகாரம் போதுமானதாக இருக்காது என்பது என் எண்ணம்.

10-31 p.m.

இந்தக்குழு எத்தனை வீடுகளைக் கட்டலாம், எவ்வளவு பணத்தை ஒதுக்கலாம், எந்தெந்த வட்டாரத்தில் கட்டவேண்டும் என்பதைத்தான் ஆலோசிக்க முடியுமே தவிர, இன்றைய தினம் இருக்கும் நகர வாழ்க்கையில்,



9th September 1960] [Sri K. Anbazhakan]

மேலும் மேலும் மக்கள் எண்ணிக்கை, மிக வேகமாகப் பெருகி வருவதைத் தடுக்க இந்தக் குழுவிற்கு அதிகாரம் இல்லை. உண்மையிலேயே புதிய வீடுகள் கட்டுவதோடு மட்டுமல்லாமல், நகரத்தில் நாளுக்கு நாள் பெருகி வரும் மக்கள் எண்ணிக்கையைத் தடுக்காவிட்டால், இந்தக் குடியிருப்புக் குறையை நீக்குவது முடியாது போகும். இந்த வகையில் ஆலோசனை கூறவும் அந்தக் குழுவிற்கு அதிகாரம் இருக்கவேண்டும்.

சென்னை நகரை எடுத்துக் கொண்டால் ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு முன்பு 6½ லட்சம் மக்கட்கே உரிய வசதிகள் செய்யப்பட்டுள்ள போதிலும், இன்றையதினம் 18,19 லட்சம் மக்களைத் தாங்கிக்கொண்டிருக்கிறது. வீட்டு வசதிக் குறைவு, சுகாதார வசதிக் குறைவு, முதலான பல துறைகளில் மக்கள் பல இன்னல்களுக்கு ஆளாகிறார்கள். போக்குவரத்தில் கூட எவ்வளவுதான் வசதிகள் செய்து கொடுத்த போதிலும்கூட, நெருக்கடி அதிகமாகத்தான் இருக்கிறது. வீடு கட்டும் திட்டத்தைப் பற்றி ஆலோசிப்பவர்கள் நகரத்தில் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் மக்களின் எண்ணிக்கைப் பெருக்கத்தை மேலும் ஏற்பட விடாமல் தடுப்பதற்கான ஆலோசனைகளையும் செய்யவேண்டும். பெரிய நகரத்தைச் சுற்றிப் பத்து மைல் அளவில் வேலி போட வேண்டும். அந்த வேலி மக்கள் வராமல் போகாமல் செய்யும் வேலி அல்ல. நகரத்தைச் சுற்றி அந்த எல்லை வரையில் புதுத் தொழிற்சாலைகளை உண்டாக்க அனுமதிக்கக் கூடாது.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்—15 மைலுக்கு அப்பால்தான் புதுத் தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறோம்.

SRI K. ANBAZHAGAN : அமைச்சர் அவர்கள் 15 மைல் வரையில் புதுத் தொழில்களை ஆரம்பிக்கக் கூடாது என்று உத்தரவு போட்டிருப்பதாகத் தெரிவிக்கிறார். ஆனால் இன்றைய தினம் சென்னை நகரத்தில் இருந்து 8, 10 மைல் தூரத்தில் உள்ள ஆவடியில் பல தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. நான் புதிய தொழில்கள் உண்டாக வேண்டுமென்பதில் விருப்பம் உடையவன்தான். இருந்தாலும் நகரத்தில் இருந்து 10 மைல்களுக்குள்ளாக இருக்கும் இடங்களில் தொழிற்சாலைகளை ஆரம்பித்தால் நகரத்தில் இருக்கும் வசதியைப் பயன்படுத்திக் கொள்ளும் விருப்பத்தில், நகரத்தில் இருந்து கொண்டே வெளியிலே இருக்கும் தொழிற்சாலைக்குப் போய்வர மக்கள் விரும்புகிறார்கள். அதனால்தான் மக்கள் நெருக்கடியான பகுதிகளில் சாக்கடைக்குப் பக்கத்தில் வசித்தாலும் கூட நகரத்திலேயே தங்க ஆசைப் படுகிறார்கள். எனவே, இனி ஆரம்பிக்கப்படக்கூடிய தொழிற்சாலைகளையேனும் நகரத்திற்கு வெளியே 15 மைல்களுக்கு அப்பால் ஆரம்பிக்க வேண்டும். அப்படி ஆரம்பிக்கப்படுகிற தொழிற்சாலைகளில் சென்னையில் உள்ள சேரிகளில் வாழும் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இந்தச் சேரியில் உள்ள மக்களுக்கு, நிரந்தரமான வேலை 20 மைல்களுக்கு அப்பால் உள்ள இடங்களில் கிடைக்கும் போது, அங்கே குடி போகவும் அவர்கள் தயாராக இருப்பார்கள். அங்கே அவர்களுக்கு வீடு கட்டிக் கொள்ள பணம் கொடுக்காவிட்டாலும், குடியிருப்பு மனைக்கு வேண்டிய நிலமாவது அவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

நகரத்தில் பல பங்களாக்களை சுற்றியுள்ள நிலங்களை அரசினர் கைக்கொள்ளவேண்டுமென்று சொன்னால், அதன் உரிமையாளரான நிலம் படைத்த பலர் சம்மதிப்பது இல்லையென்று அமைச்சர் தெரிவித்தார்கள். நிலச் சொந்தக்காரர்களுக்கு விருப்பம் இல்லையென்பதற்காக அவற்றை விட்டுவிடுவது என்பது, சமுதாயத்தில் சமதர்ம தத்துவத்தை மேற்கொண்டு செயலாற்றுகிறோம் என்ற வாதத்திற்கு மாறானதாகும். நில உச்ச வரம்பு கட்ட முன்வருகிறோம் என்று கூறும்போது கிராமங்களில் இத்தனை ஏக்கர்தான் ஒருவர் வைத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லிவிட்டு, நகரத்தில் சிலரது வீட்டைச் சுற்றி பூங்காவைப் போன்று இருக்கக் கூடிய காலி இடத்தில் ஏன் ஏழை மக்களுக்காக வீடுகள் கட்டிக்கொடுக்கக் கூடாது ? இந்த நிலைமை நீடிக்குமானால் நகரத்தில் உள்ள நடுத்தர மக்களும், ஏழை மக்களும் வீட்டு மனைகூட இன்றி

[Sri K. Anbazhagan] [9th September 1960]

பெரிதும் பாதிக்கப்படுவார்கள். இன்றைய தினம் மனை நிலம் விற்கும் விலையானது நகரத்தில் இருக்கும் நடுத்தர மக்களாலும், ஏழை மக்களா லும் விலைக்கு வாங்க எண்ணிக்கூடப் பார்க்க முடியாத அளவில் இருக் கிறது. அரசாங்கம் அதைக் கவனித்து குறைந்த விலையில் அவர்களுக்கு நிலம் கிடைப்பதற்கு வழி செய்து கொடுக்க வேண்டும்.

சி. ஐ. டி. பணியாற்றும் முறையில் தேவையான முன்னேற்றம் ஏற்படவில்லை. அவர்கள் கட்டியிருக்கின்ற வீடுகளைக் கண்ணாரக் காண்கிறோம். வீடுகள் கட்டப்பட்டிருப்பதால் எந்த அளவுக்கு மகிழ்ச்சி ஏற்பட வேண்டுமோ அந்த மகிழ்ச்சி மக்களுக்கு ஏற்படவில்லை. அவர்கள் மனை நிலத் திற்கு வாங்கும் விலையானது அதிகமாக இருக்கிறதென்று பலரும் வருத்தப் படுகிறார்கள். தனிப்பட்டவர்களிடமிருந்து நிலத்தை வாங்கும்போது அதன் விலை அதிகமாக இருக்கிறதென்று சொன்னால், அரசாங்கம் சட்டதிட்டத்தை மாற்றி குறைந்த விலையில் நிலத்தை வாங்கி நடுத்தர மக்களுக்கும், கடை நிலை மக்களுக்கும் வசதி செய்து கொடுக்க வேண்டும். இதைப்போன்று எத்தனை திட்டங்களைப் போட்டாலும் குடியிருப்பு வசதி தேவைக்கு உண்மை யான பரிகாரம் நகரங்களிலுள்ள மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவது தான். சென்னை நகரில் 20 லட்சம் மக்கள் இருக்கிறார்கள். வேறு சில நகரங்களில் 4, 5 லட்சம் மக்கள் இருக்கிறார்கள். ஐந்து லட்சம் மக்கள் இருக்கக்கூடிய பெரிய நகரங்களில் எல்லாம் புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டுமென்றால் அதன் எல்லையில் இருந்து 10 மைல் தள்ளியும், பொதுவாக நகர எல்லைக்கு வெளியிலேயும் ஆரம்பிக்கச்செய்ய வேண்டும். அப்போதுதான் இந்தப் பிரச்னையை ஓரளவு தீர்க்க முடியும்.

மேலும், தமிழ் மாநிலத்தைப் பொறுத்த வரையில் இப்பொழுது தான் தொழில் வளர்ச்சி சிறிது ஏற்படுகிறது ; ஏற்படுகிற தொழில் வளர்ச்சியை நாம் ஒழுங்குபடுத்துவோமானால் பயன் ஏற்படும். இப்பொழுது ஒரு தொழில்பேட்டை கிண்டியில் இருக்கிறது. இன்னொரு தொழில் பேட்டை ஆவடியில் ஏற்படுத்த இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித் திருக்கிறார்கள். தொழில்பேட்டை அமைப்பதைப் பொறுத்தவரையில் எனக்கு மகிழ்ச்சிதான். ஆனால், தொழில்பேட்டையை ஆவடியைவிட்டுச் சற்று தள்ளி அமைக்க முடியுமா என்று அமைச்சர் அவர்கள் ஆலோசிக்க வேண்டும். ஆவடி என்றால் சென்னையிலிருந்து காலையில் சோற்றுக் காவடி எடுத்துப் புறப்பட்டுப்போய் மாலையில் திரும்பிவிடலாம் என்று பலரும் தீர்மானித்துக் கொள்வதால், திரும்பவும் சென்னையில் மக்கள் தொகை பெருக்கத்தால் நெருக்கடி ஏற்படும். தொழில்பேட்டைகளையும், பெரிய தொழில் நிலையங்களையும் சற்றுத் தொலைவாகவே தொடங்குவ தற்கு ஏதாவது வழிமுறை காணவேண்டும்.

அடுத்து, இந்த ஆய்வுக் குழுவின் திட்டத்தின் மூலமாக வீடு கட்டித் தருவது என்பதில் காட்டப்படும் கவனத்தைவிட முக்கியமாக வீடுகட்டுவதற்கான நிலத்தைத் தேடித் தருவதிலேதான் கவனம் செலுத்த வேண்டும். உண்மையிலேயே, ஏழை குடிசைவாழ் மக்கள் அவர்களாகவே குடிசை போட்டுக் கொள்ளத் தயாராகயிருக்கிறார்கள். அத்தகைய குடிசை கட்டிக்கொள்ளும் ஏழை மக்களுக்குத் தேவையான இட வசதியை உண் டாக்கித் தர வேண்டும். முதலிலே மனைக்கு இடம் தேடித் தருவது, இந்த வீடுகட்டும் திட்டத்தைத் தயாரிப்பதற்கு அமைக்கப்படுகிற நிர்வாகக் குழுவினுடைய முதல் கடமையாக இருக்க வேண்டும்.

இரண்டாவது கடமை, ஏழைகளுக்கு வீடு கட்டித் தருவது. அதை எவ்வளவு சிக்கனமாகக் கட்டித்தர முடியும் என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் இந்தக் குழுவின் மூலமாக ஆலோசிக்க வேண்டும். இன்றைய தினம் கட்டப்படும் பலவகையான வீடுகள் ஏழைகளுக்குத் திருப்தி அளிப்ப தாக இல்லை என்பதை ஏற்கனவே கட்டப்பட்ட திரு வி. க. காலனி, சர்மா காலனி இவைகளைப் பார்த்த காரணத்தால் சொல்கிறேன். ஆதித் திராவிட மக்களுக்கு, ஹரிஜன மக்களுக்குப் பல இடங்களில் கட்டித் தரப் பட்டிருக்கும் குடியிருப்புக்களை—காலனிகளை நான் பார்த்திருக்கிறேன்.



9th September 1960] [Sri K. Anbazhagan]

அங்கே குடிசெல்லும் மக்கள் தரையில் கால் வைக்க முடியவில்லை, சுவரில் கை வைக்க முடியவில்லை. நான் பார்த்தது ஏறத்தாழ ஏழு எட்டு இடங்கள் இருக்கும். தேவக் கோட்டை பக்கத்தில் ஒரு சிற்றூர், பழனி பக்கத்திலே ஒரு ஊர், ஈரோட்டுக்குப் பக்கத்திலே ஒரு இடம்— இப்படிப் பல இடங்களில் குறை நேர்ந்துள்ளது. அப்படி வசதிக் குறை வாகக் கட்டிய பிறகு, மக்கள் குடியிருக்க முடியாத நிலைமை ஏற்படாத வண்ணம், அதே நேரத்தில் சிக்கனத்தோடு, இடையிலுள்ள தரகர்கள் சம்பாதிக்காத வகையில் வீடு கட்டும் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அரசாங்கத்தில் ஏராளமான பணம் இல்லை ; கேட்டாலும் கொடுக்க டில்லி சர்க்காரும் தாராளமாக முன் வரவில்லை. இங்கே நகரத்தில் இடத்திற்குப் பஞ்சம் ; கட்டுவதோ சின்னச் சின்ன வீடு; கட்டுவதிலும் தரகர்கள் சம்பாதிக்கக் கூடிய முறை, இப்படிப்பட்ட ஒரு நிலை நீடிக்குமானால் இது எதற்காகவோ ஆரம்பித்து எங்கோ போய் முடிந்த திட்டமாக முடிந்து விடும். எனவே, இந்த ஆய்வுக் குழு நிச்சயமாக அரசாங்கத்தினுடைய நேரடி மேற்பார்வையில் வீடுகள் கட்டும் அளவுக்கு இந்த முயற்சியிலே ஈடுபடவேண்டும். அதற்கான வீடுகட்டும் யூனிட்டுகள் ஏற்படுத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எந்த இடத்தில் கட்டுவதாக இருந்தாலும் அதன் நிர்வாகத்தில் அரசாங்கம் பொறுப்பு எடுத்து, அதிலே ஏற்படும் தீமைகளைக் களையக் கூடிய முறையில் ஏழைகளுக்குப் பயன்படும் விதத்தில், மாதா மாதம் அவர்கள் செலுத்தும் வாடகை தொகை குறையும் முறையில், சொந்தமாக்குவதாக இருந்தாலும் அதிக வட்டி செலுத்தத் தேவைப்படாத முறையில், இதற்குப் போடப்பட்ட மூலதனத்தைப் பெரிதென கணக்குக் காட்டாத முறையில், கட்டித்தர வேண்டும். அந்த அடிப்படையான நோக்கத்தை நிறைவேற்றும் வழி முறையை எண்ணி அமைச்சர் அவர்கள் இந்தக் குழுவினுடைய நடை முறையை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

இந்த மசோதாவைப் பொறுக்குக் குழுவுக்கு விட்டிருக்கிறார்கள். எனவே, அதிலே பல ஆலோசனைகள், இந்த ஆய்வுக்குழுவினர் எப்படி எப்படி நியமிக்கப்படுவது என்பது பற்றிக் கூறப்படும். நிபுணர்கள் பலர் இதில் இடம் பெறவேண்டும். உத்தியோகச் சார்புடையோர் இருக்க வேண்டும என்பதையும் நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் உத்தியோகப் பற்றில்லாதவர்கள் என்று கூறப்படும் பொது மக்களுடைய பிரதி நிதிகளாக இருப்பவர்கள் எண்ணிக்கையில் சற்று அதிகமாக இருந்தால்தான் இக் குழுவில் பொது மக்களின் கஷ்ட நஷ்டங்களை எடுத்துக் கூறி பிரதிபலிக்கச் செய்ய வாய்ப்பு ஏற்படும். எனவே இதில் சட்ட மன்றத்தின ருக்கு முக்கியமாக இடம் இருக்க வேண்டும். சட்ட மன்றத்தினுடைய எம்.எல்.எ.க்கள் குறைந்தது எட்டு பேர், பத்து பேராவது இருக்கும்படி இந்த நிர்வாகக் குழு திருத்தியமைக்கப்படுமானால் அது வரவேற்கத் தக்க தாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்வதுடன் இதன் நோக்கத்தை வரவேற்கிறேன். மேலும் இதில் ஏற்படக்கூடிய குறைபாட்டைக் களையக் கூடிய வழி முறைகளை ஆலோசித்து இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். வணக்கம்.

**SRIMATHI T. N. ANANDANAYAKI :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஹௌசிங் போர்டு மசோதா இப்பொழுது சென்னை யினுடைய மக்கள் தொகை மிகவும் வேகமாக அதிகரித்துக் கொண்டு போவதினாலே மிக அவசியமாக்கப்பட்டு, கொண்டு வந்திருப்பது வரவேற் கத்தக்கது. இதுவரை ஸிட்டி இம்ப்ரூவ்மெண்ட் ட்ரஸ்ட் இவ்வேலையை ஓரளவு பார்த்து வந்தது. அது போதாது, மாகாணம் பூராவும் இப்படிப் பட்ட அதிகாரம் கொடுத்து போர்டு அமைத்தால் இந்தப் பிரச்னையை ஓரளவு தீர்க்கலாம் என்ற நல்லெண்ணத்தோடு கொண்டுவந்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது.

இதற்கென்று ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள். அதிலே அதிகாரி கள் அதிகமாக இருந்து, நான்கு "நான்-அபிஷியல்" மெம்பர்கள் இடம் பெறுவார்கள். கனம் அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் கொடுக்கும்

[Srimathi T. N. Anandanayaki] [9th September 1960

போது, "இது அட்வைஸரி போர்டு அல்ல; நிர்வாகத் துறையிலே ஈடுபட்டிருப்பதால் ஆபீசர்கள் இருக்கத்தான்வேண்டும். அப்பொழுதுதான் நிர்வாகத்திற்கு வசதியாக இருக்கும்" என்று கூறியிருக்கிறார்கள். அதை நாம் ஓரளவு ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். காரணம், 14 அதிகாரிகளோடு 4 நானஃபிஷியல் மெம்பர்களும் இருப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. அந்த நான்கு நானஃபிஷியல் மெம்பர்களில் ஒருவர் இன்ஜினீயராகவோ, ஆர்க்கிடெக்டாகவோ இருக்கவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக மூன்று ஸ்தானங்கள்தான் நானஃபிஷியல் மெம்பர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. ஆனால், குடியிருப்புப் பிரச்னை என்பது மக்களுடைய அன்றாடப் பிரச்னைகளில் ஒன்றாக இருப்பதால், நானஃபிஷியல் மெம்பர்களின் எண்ணிக்கையைச் சற்று அதிகரித்தால் பரவாயில்லை என்றுதான் நான் எண்ணுகிறேன். பதினான்கு அதிகாரிகளோடு, குறிப்பாக எங்கெங்கு இந்தப் பிரச்னை மிக நெருக்கடியாக இருக்கிறதோ அந்தப் பகுதிகளில் பிரதிநிதித்துவம் வகிக்கும் சட்டசபை அங்கத்தினர்களுக்கும் இந்த போர்டில் இடம் கொடுத்தால் மிக வரவேற்கத்தக்கதாக இருக்கும். நெருக்கடியுள்ள பகுதியிலிருந்து வரும் பிரதிநிதிகளுக்கு இந்த போர்டில் இடம் கொடுப்பது அந்தப் பகுதி மக்களுக்குப் பலன் ஏற்பட வகை செய்யும் என்று நினைக்கிறேன். அந்த முறையிலே இதை ஏற்றுக் கொள்வது மிகவும் வரவேற்கத்தக்கது.

இதிலே ஒரு சின்ன பிரச்னை என்னவென்றால், இப்படி அவர்கள் நிலத்தை வாங்கும்போது விலை அதிகமாக ஏறிவிடுகிறது. அது ஏன் ஏறுகிறது என்று கேட்டால், ஒருவரும் அதற்குக் காரணம் சொல்ல முடியாது. ஸி.ஐ.டி நிலத்தை அக்வையர் பண்ணும் போது க்ரௌண்டு ஒன்றை ஆயிரம் முதல் ஆயிரத்து ஐநூறு ரூபாய் வரையில் விலை கொடுத்து வாங்குகிறார்கள். அதே சமயத்தில் அதை மக்களுக்கு விற்கும் போது கிரௌண்ட் ஒன்றை 3,500 ரூபாய் முதல் 4,000 ரூபாய் வரையில் விலைக்குக் கொடுக்கிறார்கள், சென்னை நகரத்தில். இது ஏன் இரட்டை மடங்கு ஆகி விடுகிறது? நகராண்மைக்கழகம், இப்படி அக்வையர் செய்யப்பட்ட இடங்களில் வசதி தருகிறார்கள். ட்ரெயினேஜ் வசதி, விளக்கு வசதி என்று வசதிகள் செய்து தருவதால் அவர்கள் பெட்டர்மெண்ட் வரி வாங்குகிறார்கள். இதனால் இரட்டை பங்கு விலை வைக்கவேண்டி ஏற்படுகிறது. இந்த இரட்டை பங்கு விலை யார் தலையில் போகிறது என்று பார்த்தால், பண வசதி இல்லாமல் ஆர்வத்தோடு போய் வாங்குகிறார்களே அவர்கள் தலையில்தான் போகிறது. அவர்கள் ஏன் இதற்கு முன் வருகிறார்கள் என்றால், அவர்களுக்கு மொத்தப்பணமும் கொடுத்து வாங்க வசதி கிடையாது; இன்ஸ்டால்மெண்ட்டில் கட்டலாம் என்ற வசதியை ஸி.ஐ.டி. செய்து கொடுக்கிறது. அதனால் அவர்கள் முன்வந்து வாங்குகிறார்கள்; இரட்டைச் செலவையும் தலையில் சுமத்திக் கொள்ளுகிறார்கள். ஆகவே, விலை ஏற்றத்தைப் பொறுத்த வரையில் தவறு எங்கோ இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். ஸி.ஐ.டி. யானது லாண்டு அக்விஸிஷன் செய்கிறார்கள். கார்ப்பரேஷன் எஸ்டிமேட் கொடுக்கும் போது எக்கச்சக்கமாகப் போடுகிறார்களோ, என்னவோ தெரியாது. அதையும் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். இதையெல்லாம் சேர்த்து யார் தலையில் வைக்கிறோம் என்றால், வாங்குகிறவர்கள் தலையில் வைக்கிறோம்.

குறிப்பாக ஒன்று சொல்கிறேன். ஒரு இடத்தில் பாலம் கட்ட வேண்டியிருக்கிறதென்றால், அந்தப் பாலம் கட்டுவதற்கான செலவெல்லாம் நிலத்தை வாங்குகிறவர்கள் தலையில் போகிறது. இப்படியாக நிலத்தின் விலை மிக அதிகமாக ஏறிவிடுகிறது. அதே சமயத்தில், அக்வையர் பண்ணும் இடத்திற்குப் பக்கத்தில் சில நிலங்கள் இருக்கின்றன. அங்கு ஸி.ஐ.டி.காலனியோ, ஹௌஸிங் போர்டு காலனியோ வராமலிருந்தால் அதன் விலை க்ரௌண்டுக்கு ரூ. 200 முதல் ரூ. 300-க்கு மேல் இல்லாமல் இருக்கும். ஆனால், இப்படி அக்வையர் செய்வதால், பக்கத்தில் உள்ள நிலங்களின் விலை அதிகமாகிறது. க்ரௌண்டு ஒன்று ரூ. 5,000-க்கும் விற்க முடிகிறது. காலனிக்கு எல்லா வசதியும் நாம் கொண்டு வந்து



9th September 1960] [Srimathi T. N. Anandanayaki]

விடுகிறோம். காலனிக்குப் பக்கத்தில் இருக்கும் நிலம் எந்தச் செலவும் இல்லாமல் பத்து மடங்கு விலை உயர்ந்துவிடுகிறது. அதுவும் வாங்குகிறவர்கள் தலையில் சுமத்தப்படுகிறது. ஆகவே, இப்படி காலனிகள் ஏற்படுத்தும்போது, அந்தக் காலனியில் உள்ளவர்கள் தலையிலேயே எல்லாச் செலவையும் போடாமல், அதில் ஒரு பகுதியை பக்கத்தில் அபிவிருத்தியாகப்போகும் மற்ற நிலங்களில் உள்ளவர்களும் ஏற்றுக்கொள்ளும்படிச் செய்யவேண்டும். பெட்டர்மெண்ட் வரிப்பளுவை காலனிக்குப் பக்கத்தில் உள்ளவர்களும் ஒருபங்கு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றால், வாங்குகிறவர்களுக்கு ஓரளவு பளு குறைவாக இருக்கும். எப்படியும் பெட்டர்மெண்ட் வரி கட்டித்தானே ஆக வேண்டும்? தனியாக லே-அவுட் போட்டு பெட்டர்மெண்ட் வரி கட்டுகிறார்கள். நம்முடைய காலனிக்குப் பக்கத்தில் இருப்பதால் அவர்களுக்கு இந்த வசதிகள் செலவு இல்லாமலேயே கிடைத்துவிடுகின்றன. ஆகவே, அவர்களிடமிருந்து ஓரளவு சராசரி அளவு பெட்டர்மெண்ட் வரி வாங்கினால், பொதுவாகவே வாங்குகிறவர்களுடைய பளு குறையும் என்று நினைக்கிறேன். ஒருவருக்கு பெட்டர்மெண்ட் ரேட் அதிகமாக இருக்கிறது. ஒருவருக்கு ஒன்றுமே இல்லாமல் லாபம் வருகிறது. கனம் அமைச்சர் அவர்கள் இந்த நிலையை மாற்றியமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இவ்வித காலனிகளுக்கு வசதி நாம் கொண்டு வருவதன் காரணமாக, பக்கத்தில் உள்ளவர்களுக்கு 'ஆடோமாடிக்'காக வசதி கிடைக்கிறது. அந்த வசதி கிடைத்து அவர்கள் நிலத்தின் விலை பத்து மடங்கு ஆகிறது. அதிலே ஒரு மடங்கோ இரண்டு மடங்கோ பெட்டர்மெண்ட் வரியாகக் கொடுக்கச் சொல்வதிலே தவறு இல்லை. அப்படி அவர்களிடமிருந்தும் பெட்டர்மெண்ட் வரியில் ஒரு பங்கு வாங்கப்பட்டால், காலனிகளில் நிலம் வாங்குகிறவர்களுக்கு ஓரளவு பளு குறையும். மிடில்-க்ளாஸ், லோயர் மிடில்-க்ளாஸ் மக்கள் தான் காலனிகளில் குடியேறுகிறார்கள். பணக்காரர்கள் வருவதில்லை. காரணம், அவர்களிடம் பணம் ரொக்கமாக இருக்கும். இதைவிட விலை குறைவாக நிலம் கிடைக்கிறதா என்று சின்ன சின்ன மீன்களையெல்லாம் விட்டுவிட்டு பெரிய மீன் வரும் வரை காத்துக்கொண்டிருந்து கொத்தித்தின்னுவது போல—பார்த்துக்கொண்டிருந்து, பணத்தைக் கொடுத்து, உடனே வாங்கிவிடுவார்கள். ஆனால், சாதாரண ஏழை மக்கள் பணத்தை கையில் வைத்துக் கொண்டு இப்படி செய்ய முடியாது. ஆகையினால், அமைச்சர் அவர்கள் இந்த "ஹௌஸிங் போர்டு ரெகுலேஷன்ஸ்" போடும்போது இதையும் கவனத்தில் வைத்துக்கொண்டு, பக்கத்தில் இருக்கக்கூடிய நிலக்காரர்களுக்கும் கொஞ்சம் இந்தத் தொல்லையில் பங்கு கொடுக்க வேண்டும். அம்மாதிரி செய்தால் ஏழை மக்களுக்கு நலமாக இருக்கும்.

குறிப்பாக ரூ. 12, 15 வாடகை உள்ள வீடுகள் அதிகமாக தேவையாக இருக்கிறது. "லோ இன்கம் குரூப்" என்று சொல்லக்கூடியவர்கள் 70, 80 ரூபாய் வாடகை கொடுக்க முடியாது. "மிடில் இன்கம் குரூப்" மக்களே ரூ. 70 வாடகை கொடுப்பதற்கு திண்டாற வேண்டியிருக்கிறது. "லோ இன்கம் குரூப்" மக்களுக்கு அவ்வளவு வாடகை கொடுப்பதற்கு கட்டிவராது. உண்மையிலேயே "லோ இன்கம் குரூப்" மக்களுக்கு பயன்படவேண்டுமானால் ரூ. 12, 15, 17 வாடகை உள்ள வீடுகளை அதிகமாகக் கட்டவேண்டும். அப்பொழுதுதான் வீட்டு நெருக்கடியை ஓரளவுக்கு சமாளிக்க முடியும். ரூ. 70, 150 வாடகை உள்ள வீடுகளை கட்டினால் அதெல்லாம் ஓரளவுக்கு "அப்பர் மிடில் கிளாஸுக்கும் மிடில் கிளாஸுக்கும்" மத்தியிலே உள்ள மக்களுக்குத்தான் வசதி செய்து கொடுக்கக்கூடியதாக இருக்கும். ஆகவே, லோ இன்கம் குரூப் மக்களுக்கு கட்டாயம் இது மாதிரி குறைந்த வாடகையில் உள்ள வீடுகளை அதிகமாகக் கட்டிக் கொடுத்து வசதி செய்து கொடுக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்தி, இந்தக் குழு இதையெல்லாம் ஆராய்ந்து வீடு கட்டும் பிரச்னையை ஏற்றுக் கொள்வார்களேயானால் மிகவும் வரவேற்கத்தக்கதாக இருக்கும்.

நான் இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். இன்று தெற்கு தான் வளர்கிறது, வடக்கும் மேற்கும் தேய்ந்து கொண்டே போகிறது, சென்னை நகரத்தைப் பொறுத்தவரைக்கும். எதிர்க்கட்சிக்காரர்கள் வடக்கு வாழ்

கிறது, தெற்கு தேய்கிறது என்று சொன்னாலும், இங்கே தெற்கு வாழ்கிறது. வடக்கு தேய்கிறது. இனிமேல் காலனி ஏற்படுத்தினால் வடக்கிலும் மேற்கிலும் ஏற்படுத்தவேண்டும். இனிமேல் வரும் காலனிகளை "வெஸ்டு மதராஸ், நார்த் மதராஸ்"தான் ஏற்படுத்தவேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்கள் தனியாக ஒரு உத்தரவு போடவேண்டுமென்று மிகவும் தாழ்மையோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri S. M. ANNAMALAI** : சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே, இந்த ஹௌஸிங் போர்டு மத்திய சர்க்கார் வற்புறுத்தலின் பேரில்தாள் ஏற்படுத்தப்படுகிறது. இதற்காக தனியாக ஒரு போர்டு நியமிக்க வேண்டும் என்று மத்திய சர்க்கார் வற்புறுத்தியிருக்கிறார்கள். "ஸ்டேட்மெண்டு ஆப் ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீஸன்ஸில்" "ஸ்ட்ரெஸ்டு" என்று சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் வற்புறுத்தியதினாலேதான் இந்த போர்டு ஏற்படுத்தப்படுகிறது. இப்படி , "போர்டு, போர்டு" என்று ஒவ்வொரு இலாகாவையும் தனியாகப் பிரித்துவிட்டால், உண்மையில் சட்ட மன்றத்திற்கு வேண்டிய அதிகாரங்கள் இல்லாமலே போய்விடுகிறது. மின்சார இலாகா முதலில் சர்க்கார் கையில் இருந்தது. இப்பொழுது மின்சார போர்டு ஏற்படுத்தப்பட்டுவிட்டது. அந்த போர்டு நியமிக்கப்பட்ட பிறகு, அதிலே சில தவறுகள் ஏற்பட்டாலும் அதைப்பற்றி கேட்பதற்குக்கூட சட்ட மன்றத்திற்கு உரிமை இல்லாமல் போய் விடுகிறது. முக்கியமான இலாகாக்களுக்கு இப்படி போர்டுகளை நியமித்து, அவைகளை தனியாக பிரித்துவிட்டால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்த இலாகாவைப்பற்றி கேள்வி கேட்பதற்கோ அல்லது அங்கே நடக்கும் தவறுகளை எடுத்துக்கூறி திருத்துவதற்கோ உண்மையிலே சக்தி இல்லாமல், உரிமை இல்லாமல் போய் விடுகிறது. அப்படிப் பார்க்கும்பொழுது, மாநில சர்க்கார்கூட இந்த போர்டை ஏற்படுத்துவதில் காலதாமதம் செய்துகொண்டு வந்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார் வற்புறுத்தலின் பேரில்தான் இந்த போர்டை இப்பொழுது ஏற்படுத்தவேண்டுமென்ற நியதிக்கு வந்திருக்கிறார்கள்.

இந்த மசோதாவை படித்துப் பார்க்கும்பொழுது இதில் சில பிரிவுகள் இயற்றப்பட்டிருக்கின்றன. ரூ. 1,000-க்கு உட்பட்டு சம்பளம் வாங்குகிறவர்களை போர்டு நியமித்துக்கொள்ளலாம், அதுபோல "சேர்மன்" ரூ. 300-க்கு உட்பட்டு சம்பளம் வாங்குகிறவர்களை நியமிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் பார்த்தால் இது ஒரு தனியாக இயங்கக்கூடிய "ஸ்டாசூடரி போர்டாக" இருக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அதுபோலவேதான் சில நகரப்புறங்களிலே வீடுகள கட்டவேண்டுமென்று போர்டு நினைத்தால், ஒரு தெருவையோ அல்லது வீடுகளையோ பஞ்சாயத்து போர்டுக்கு நோட்டீஸ் இல்லாமலே எடுத்துக்கொள்ளலாம் என்று இந்த மசோதாவிலே கண்டிருக்கிறது. அப்படிப்பட்ட முக்கியமான இடங்களை போர்டு எடுத்துக்கொள்ளும்பொழுது, நகராண்மைக் கழகங்களுக்கு முன்கூட்டியே தெரிவித்துவிட்டு "நாங்கள் இந்தத் தெருக்களை எடுத்துக்கொள்ளப் போகிறோம், இந்த வீடுகளை எடுத்துக்கொள்ளப் போகிறோம்" என்று நோட்டீஸ் கொடுத்துவிட்டு, அந்த நகராண்மைக் கழகம் அல்லது ஊராட்சி மன்றத்தின் சம்மதத்தின் பேரில் அந்தத் தெருக்களையோ அல்லது வீடுகளையோ போர்டு எடுத்துக்கொள்ளலாம் என்ற முறையில்தான் இந்த மசோதா அமைய வேண்டும். அவர்கள் சம்மதம் இல்லாமலே போர்டு எடுத்துக்கொள்ளுவதற்கு இந்த மசோதாவில் வகை செய்திருப்பது அவ்வளவு உசிதம் அல்ல. ஆகையினால், இந்த மசோதாவில் சில குறைபாடுகள் உண்மையிலேயே இருக்கின்றன. அவைகளையெல்லாம் பொறுக்குக் கமிட்டி பரிசீலனை செய்து ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**THE HON. SRI R. VENKATARAMAN** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின் அடிப்படை கருத்து "மாஸ்டர் பிளான்" தான். திரு சட்டநாதக் கரையாளர் அவர்கள் சொன்னதுபோல நகரத்திற்கு மாத்திரம் அல்லாமல், ராஜ்யம் பூராவுக்குமே ஒரு மாஸ்டர்



பிளான் போட்டு, அதை ஏகோபித்த முறையில் செய்ய வேண்டும்
என்பதற்குத்தான் இந்த போர்டு நிறுவப்பட்டு, அதற்கு இவ்வளவு
அதிகாரங்கள், அதற்கு வேண்டிய வசதிகள் செய்துகொடுக்கப்படுகின்றன.
மாஸ்டர் பிளான் சுலபமாக எழுதிவிடலாம். பிளான் போடுவது கஷ்ட
மல்ல. ஆனால், அதை நிர்வகிக்கக்கூடியவர்களிடத்தில் அந்தப் பொறுப்
பைக் கொடுத்தால்தான், எந்த அளவுக்கு அவர்களால் செய்ய முடியுமோ
அதற்கு பிளான் போடுவார்கள். ஹௌஸிங் போர்டு மாகாணம் பூரா
வுக்கும் இருக்கிற காரணத்தினாலே, அவர்கள் எந்தவிதமான ஒரு மாஸ்டர்
பிளான் செய்ய முடியும், தயார் பண்ண முடியும் என்பதையெல்லாம்
ஆலோசனை செய்து அந்த முடிவுக்கு உகந்த மாஸ்டர் பிளானை தயாரிக்கும்
படி விடுவார்கள். அதற்கும் இதில் இடம் இருக்கிறது என்பதைத்தான்
தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இரண்டாவதாக, நகரங்களை சுற்றி பாக்டரிகள் வருவதினால் நெருக்கடி
அதிகமாகிறது என்பது சர்க்காருக்கு நன்றாகத் தெரியும். ஆகையினால்
கூடுமான அளவுக்கு சென்னை நகரத்திலிருந்து 15 மைல்களுக்கும்
அப்பாலும், முனிசிபாலிடிகளிலிருந்து 5 மைல்களுக்கு அப்பாலும்
தான் சாதாரணமாக "ஆர்டினரியாக" பாக்டரிகள் வைக்க வேண்டும்
என்று நாங்கள் சிபார்சு செய்திருக்கிறோம். அம்மாதிரி ஒரு விதி
போட்டால் அதிலே என்ன கஷ்டம் என்றால், சில வசதிகள் சில பாக்டரி
களுக்கு அவசியமாக இருக்கும். அதற்காக ஒரு சட்டம் போட்டுவிட்டால்,
அப்பொழுது அந்த இடத்தில் பாக்டரியே வைக்க முடியாத நிலைமை
ஏற்பட்டு, பாக்டரி வராமலே போய்விடலாம். அதற்காகத்தான் சாதாரண
மாக சென்னை நகரத்திற்கு 15 மைல்களுக்கு அப்பாலும், முனிசிபாலிடி
களுக்கு 5 மைல்களுக்கு அப்பாலும் பாக்டரிகள் அமைக்கப்படவேண்டும்
என்று ஒரு சிபார்சு மாதிரி செய்திருக்கிறோம். அம்மாதிரி அமைப்பதற்கு
ஏற்பாடும் செய்துகொண்டிருக்கிறோம். பாக்டரி பிரதம இன்ஸ்பெக்டருடைய
உத்தரவு இல்லாமல் பாக்டரி வைக்க முடியாது. அவரிடத்தில் சென்றால்,
இவ்விதமாக சர்க்கார் அபிப்பிராயம் இருக்கிறது என்பதை அவர் தெளி
வாகச் சொல்லுவார். அதற்கு உகந்தபடி பாக்டரி அமைப்பதற்கு முயற்சி
செய்வார்கள். முடியவில்லை என்று சொன்னால், அதற்காக பாக்டரியே
வைக்கக்கூடாது என்று சொல்லுவது நன்றாக இருக்காது.

அதுபோலவேதான், சாதாரணமாக பாக்டரிக்கும், இண்டஸ்டிரியல்
எஸ்டேட்டுக்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது. இண்டஸ்டிரியல்
எஸ்டேட்டை நாம் வைக்கிறபொழுது, பக்கத்தில் அந்தப் பொருள்களை
உபயோகப்படுத்தக்கூடிய பெரிய தொழில்கள் இருந்தால்தான்,
இண்டஸ்டிரியல் எஸ்டேட் வளர்ச்சி அடையும். பெரிய தொழில்களுக்கு
உதவிகரமாக உள்ள "காம்போனெண்ட் பார்ட்ஸ்" உற்பத்தி செய்வதற்
காகத்தான் இண்டஸ்டிரியல் எஸ்டேட் ஏற்படுத்தப்படுகிறது. பாக்டரி
அந்தப் பகுதியில் இருந்தால்தான் இட நெருக்கடி ஏற்படும். இண்டஸ்
டிரியல் எஸ்டேட் அங்கு அமைப்பதினால் ஜன நெருக்கடி ஏற்பட்டுவிடாது.
ஏனென்றால் அவைகள் சிறு சிறு தொழிற்சாலைகள். குறைவான
எண்ணிக்கை தொழிலாளர்களைத்தான் அவர்கள் வேலைக்கு அமர்த்து
வார்கள். பெரிய பாக்டரிகள் வைப்பதினால்தான் அதிகமான ஜனத்
தொகை நெருக்கடி ஏற்படும். அதற்காகத்தான் சில விதிகளெல்லாம்
ஏற்படுத்தியிருக்கிறோம்.

இன்னொரு பெரிய கஷ்டம் என்னவென்று சொன்னால், இன்றைக்கு
பாக்டரி வைப்பவர்களெல்லாம், பாக்டரி வைப்பதோடுகூட அவர்களுடைய
தொழிலாளிகளுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்பதை ஒத்துக்
கொள்ளுவதில்லை. எவ்வளவு முறை நாம் அதை வற்புறுத்தினாலும்,
அது வற்புறுத்தலோடு நின்றுவிடுகிறது. அதற்காக சட்டம் செய்ய
வேண்டுமா என்ற நிலைமையை இப்பொழுது பரிசீலனை செய்யவேண்டும்.
சென்னை ராஜ்யத்தில் 3 முறை இதற்காக நாங்கள் மகாநாடு நடத்தி,
அதற்கு பாக்டரி துறையிலே இருக்கக்கூடிய அதிபர்களையும் தொழிலாளர்

[Sri R. Venkataraman] [9th September 1960

களையும் கூப்பிட்டு விவாதம் செய்தோம். அவர்களுக்கு சர்க்கார் 25 சத விகிதம் மான்யம் கொடுப்பதைக்கூட எடுத்துச் சொன்னேம். உலகத்திலே எங்கும் கண்டிராத புதுமையாக நமது இந்திய நாட்டிலே கொடுக்கிருேம். தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்தால் முதலாளிக்கு 25 சத விகிதம் மான்யம். வேறு எங்கும் கிடையாது மான்யம் கொடுக்கும் முறை. அப்படிக் கொடுத்தாலும், நம்முடைய ராஜ்யத்தில் போதிய அளவுக்கு முதலாளிகள் தொழிலாளிகளுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு முன்வரவில்லை. அதை எப்படி சமாளிப்பது என் பதை சர்க்கார் இன்றைக்கு யோசனை செய்துகொண்டிருக்கிறது.

நிலம் வாங்கி விற்கிறபொழுது விலை அதிகமாக போய்விடுகிறது என்ற குற்றத்தை திருமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னர்கள். திரு. அன்பழகன் அவர்களும் சொன்னர்கள். இது என் ஏற்படுகிறது என்பதை நான் சற்று விளக்க வேண்டும்.

12-30 p.m. சி.ஐ.டி. ஸ்தாபனத்தில் வீடு கட்ட வேண்டுமென்ற திட்டத்தை எடுத்துக் கொண்டால் அங்கே ரோடு போடுவதற்கு நிலம் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது, பார்க் அமைக்க நிலம் ஒதுக்க வேண்டியதாக இருக்கிறது, பள்ளிக்கூடம் வைக்க நிலம் ஒதுக்க வேண்டியதாக இருக்கிறது, கடைகள் கட்டுவதற்கு நிலம் ஒதுக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே எவ்வளவு நிலம் ஒதுக்கிலும் சற்றேறக்குறைய மூன்றில் இரண்டு பங்கில்தான் வீடுகள் கட்ட முடிகிறது. சாதாரணமாக நாம் 90 எக்கர் நிலம் வாங்கு வதாக இருந்தால் சற்றேறக்குறைய அதில் முப்பது எக்கர் நிலத்தில் பார்க் அமைக்க வேண்டியதாக இருக்கிறது, ரோடு போட வேண்டியதாக இருக்கிறது, பள்ளிக்கூடம் கட்ட வேண்டியதாக இருக்கிறது. இவைகள் எல்லாவற்றிற்கும் செலவு செய்துவிட்டு பாக்கி இருக்கக்கூடிய 60 எக்கர் நிலத்தில் வீடுகள் கட்ட வேண்டியதாக இருக்கிறது. அப்படிக் கட்டும் போது முப்பது எக்கரில் செய்யப்பட்ட செலவுகளை யெல்லாம் இந்த 60 எக்கரில் வீடுகள் கட்டுவதற்கு சேர்க்க வேண்டியதாக இருக்கிறது. அதனல் அந்த நிலத்தின் விலை அதிகமாக ஆகிறது. 90 எக்கர் நிலத்தில் வீடுகள் கட்டக்கூடிய செலவை 60 எக்கர் நிலத்தில் கட்டக்கூடிய வீடுகளின் விலையில் வைக்க வேண்டியதாக இருக்கிறது. மற்றும் தண்ணீர் வசதி, குழாய் வசதி, சாக்கடை வசதி, இவைகளையெல்லாம் செய்ய வேண்டியதாக இருக்கிறது. அவைகளின் செலவும் வந்து சேருகிறது. இவைகளை யெல்லாம் சேர்த்துக் கணக்குப் போட்டால் க்ரௌண்டின் விலை அதிகமாக ஆகிறது. அதனல் வீட்டின் விலையும் அதிகமாக ஆகிறது. இப்படி ஒரு இடத்தில் வீட்டின் விலை அதிகமாகப் போனவுடன் பக்கத்திலுள்ள வீட்டின் விலையும் அதிகமாகப் போய் விடுகிறது. பக்கத்தில் லாண்ட் அக்விசிஷன் பிரகாரம் வாங்கும்போது விலை என்ன ஆகிறது என்ருல் இந்த அடிப்படையில்தான் அங்கும் விலை அதிகமாக ஆகிறது. இந்த அடிப்படையில்தான் அங்கும் விலையை நிர்ணயம் செய்கிருர்கள். கோர்ட் டுக்குச் சென்ருலும் அங்கேயும் பக்கத்திலுள்ள விலையை அனுசரித்துத் தான் விலையை நிர்ணயம் செய்கிருர்கள். பக்கத்தில் மூவாயிரம் ரூபாய்க்கு விற்ருல் அங்கே செய்யப்பட்டிருக்கிற சௌகர்யங்களைப் பார்த்து, அதாவது பார்க் வசதி பள்ளிக்கூட வசதி, சாக்கடை வசதி, குடி தண்ணீர் வசதி இவைகளைப் பார்த்து டெவலெப்மெண்ட் ஆகாத இடத்திற்கும் அதிகப்படி யான விலையை வைக்கிருர்கள். அங்கே மூவாயிரம் என்று சொன்னல் இங்கு ஆருயிரம் ரூபாய் என்று சொல்லுகிருர்கள். ஆகவே இப்படி விலை அதிகமாகப் போய்க்கொண்டிருப்பதைத் தடுக்க ஆலோசனை செய்து கொண்டிருக்கிருர்கள். உண்மையாகவே நிலத்தின் விலை அதிகமாக விற்பதற்குக் காரணம் இன்றைக்கு அவற்றிற்கு காம்பென்சேஷன் கொடுப் பதுதான் காரணம். இப்படி காம்பென்சேஷன் கொடுக்கக்கூடிய கோளாறு தான் இந்த விதத்தில் கொண்டுவிடுகிறது. நிலத்தை எடுத்துக் கொண்டால் அதை எப்படி எடுத்துக்கொள்வது, சட்டப்படி எப்படி எடுத்துக் கொள்வது, அதற்கு என்ன காம்பென்சேஷன் கொடுப்பது, அதற்கு ஏதாவது ஆட்சேபணை இருக்கிறதா என்பதையெல்லாம் பார்க்கவேண்டிய



9th September 1960] [Sri R. Venkataraman]

தாக இருக்கிறது. ஆட்சேபணை இருந்தால் அவற்கு அவகாசம் கொடுத்து அதற்குப் பிறகு எடுத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. இதற் கெல்லாம் காலதாமதம் ஆகிறது. காம்பென்சேஷன் கொடுத்து பெரிய நிலத்தை எடுத்துக்கொள்வதாக இருந்தால் ஏழைகள் விட்டுக் கொடுக்க தயாராக இருக்கிருர்கள். அப்பொழுது சுலபமாகக் கிடைக்கிறது மலிவாகவும் கிடைக்கிறது. வட சென்னையில், வியாசர்பாடியில் ஆயிரம் எக்கர் நிலத்தை வாங்க ஒரு ஸ்கீம் செய்திருக்கிருேம். அங்கே வீடு கட்டும் திட்டம் போட்டிருக்கிருேம். மேற்கு மதருஸிலும் ஆயிரம் எக்க ருக்கு திட்டம் போட்டிருக்கிருேம். இனிமேலாவது தெற்கு வளருகிறது என்று சொல்ல மாட்டார்கள் என்று நினைக்கிறேன். எந்தப் பகுதியில் மலிவாகக் கிடைக்கிறதோ அங்கேயெல்லாம் வாங்கப்படுகிறது. எங்கே யெல்லாம் நெருக்கடி ஏற்படுகிறதோ அங்கே யெல்லாம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அந்த நெருக்கடியை சமாளிக்க ஒரு போர்ட்டு இருந்தால் முடியும், அதுதான் அதைப்பற்றி பரிசீலனைசெய்ய முடியும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மொ.:.பசலை எடுத்துக்கொண்டால் கோயம் பத்தூரில் சென்னையை விட விலை அதிகமாக உயர்ந்து இருக்கிறது. இன்னும் உயர்ந்துகொண்டே போகிறது. அவர்களுக்கு அங்கே வீடுகள் கட்ட வேண்டுமென்ருல் கட்டவே முடியாது. அதே மாதிரி நகரங்களில் வீடுகள் கட்டுவதாக இருந்தால் அது போர்டினுல்தான் முடியும். சில இடங்களில் நிலத்தினுடைய விலை ஒரு எக்கர் லட்ச ரூபாய்க்கு மேல்கூட போயிருக்கிறது. சாதாரணமாக லோ இன்கம் க்ரூப்புக்கு பதினெட்டு வீடுகள் கட்டலாம். இருபது வீடுகள் என்று வைத்தாலும் க்ரௌண்ட் ஐந்தாயிரம் ரூபாய் ஆகும். அம்மாதிரி கட்டுவது நம்மால் ஆகாது. ஆகவே இந்த திட்டங்களையெல்லாம் எங்கே செய்ய முடியும் என்று பரி சீலனை செய்து பார்த்துக்கொண்டிருக்கிருேம். நகரங்களுக்கு வெளியே இருக்கும் இடங்களைப் பார்த்து கட்டிக்கொண்டிருக்கிருேம். குமரன் நகர், திரு. வி. க. நகர் இவைகளைப்பற்றியெல்லாம் சொன்னர்கள். ஆரம்பத்தில் அங்கே இடம் நல்லதாகத்தான் இல்லை. ஆனல் இன்றைக்கு அங்கு போய் பார்த்தால் தெரியும் எவ்வளவோ நல்லதாக இருக்கிறது. இதற்கு முன் அங்கு பயிர் செய்துகொண்டிருந்தார்கள். அது வயலாக இருந்தது. அந்த இடங்கள் இப்பொழுது செட் ஆகி விட்டது. செட் ஆனவுடன் எவ்வளவோ நலமாக இருக்கிறது. அங்கெல்லாம் மண் செட் ஆவதற்கு கொஞ்சம் நாட்களாகிறது. அதனல்தான் முதலில் நன்ருக இல்லை. சிறு இடங்களில் குழாய்கூட உடைந்து போய் விட்டன. மண் செட் ஆனவுடன் அவைகள் எல்லாம்கூட சரியாக இருக்கிறது. இரண்டு மூன்று வருஷங்களுக்குள் எந்தக் குழாய் அமைத்தாலும் அவைகள் உடைந்து போய் விடுகின்றன. அதன் பிறகு எல்லாம் சரியாகிவிடுகின்றன. கொஞ்ச நாட்களுக்கு கஷ்டமாகத்தான் இருக்கும். நாலைந்து ஆண்டுகள் கழிந்து விட்டால் எல்லாம் சரியாகி விடுகிறது. அதன் பிறகு சமாளித்துக் கொள்ளலாம். கவர்ண்மெண்டில் வீடு கட்டுகிருர்கள் என்று சொல்லு கிருர்கள். கவர்ண்மெண்ட் ஹௌஸ் கொடுப்பது இல்லை. சர்க்காரில் வீடுகள் கட்டி கொடுக்கிருர்கள். கவர்ண்மெண்ட் ஹௌஸ் கொடுக்கக்கூடிய அளவுக்கு சர்க்காரில் வீடுகள் கட்டிக் கொடுக்க முடியாது.

கடைசியாக, மத்திய சர்க்காருடைய தூண்டுதலின் பேரில் இந்த போர்டு அமைக்கப்படுகிறது என்று சொல்லுகிருர்கள். அப்படி இல்லை. 1958-ம் வருஷத்திலேயே நாங்கள் ஸ்டாச்சுடரி போர்டை செய்து விட்டோம். அப்பொழுது முதற்கொண்டே அது யோசனையில் இருந்து வந்திருக்கிறது. மத்திய சர்க்கார் சொல்லி விட்டார்கள் என்பதற்காக அதை விட்டு விடுவது என்பதல்ல. அவர்கள் சொல்லி விட்டார்கள் என்பதற்காக அதை வேண் டாம் என்று சொல்வதற்கு இல்லை. நாமே வேண்டுமானல் போர்டே வேண்டாம் என்று சொல்லலாம். மத்திய சர்க்கார் சொன்னதற்காக வேண்டாம் என்று சொல்ல வேண்டாம். போர்டு நல்ல முறையில் வேலை செய்யா விட்டால் வேண்டாம் என்று சொல்லி விடலாம். போர்டு நல்ல முறையில் வேலை செய்தால் எவ்வளவோ உதவியாக இருக்கும். வேலையும் நன்ருக நடைபெறும். அது நமக்கு உதவியாக இருக்கும். இப்படியே நாங்களும் நினைக்கிருேம் மத்திய சர்க்காரும் நினைக்கிருர்கள். மத்திய

சர்க்காரில் ஒருவர் உட்கார்ந்துகொண்டு தீர்மானம் செய்திருக்கிறார்கள் என்று ஸ்ரீ அண்ணாமலை சொன்னார். அப்படியல்ல. ஹௌசிங் மினிஸ்டர்கள் கான்பரன்ஸ் நடந்தது. அதில் நானும் ஒரு மெம்பர்தான். நாங்கள் எல்லோரும் சேர்ந்துதான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம்.

இம்மாதிரி ஒரு போர்டு இருந்தால்தான் ஸ்டாச்சுடரி போர்டு இருந்தால்தான் பணத்தை கடனாக வாங்க முடியும். அப்படி வாங்கி திட்டத்தை நிறைவேற்ற முடியும். சர்க்கார் கொடுக்கக்கூடிய பணத்தை வைத்துக்கொண்டே செய்வதாக இருந்தால் இப்படிப்பட்ட போர்டே வேண்டியதில்லை. சர்க்கார் கொடுக்கக்கூடிய பணமும் போதாது. இப்படிப்பட்ட ஒரு போர்டு இருந்தால்தான் பொது மக்களிடத்திலிருந்தும் பணத்தை கடனாக வாங்கலாம். அப்படி கடனாக வாங்கி திட்டத்தை எல்லா பணத்தையும் வைத்துக்கொண்டு நிறைவேற்றலாம். சர்க்கார் மட்டும் எவ்வளவு பணம் கொடுத்தாலும் போதாது. சர்க்காருடைய பணத்தை வைத்துக்கொண்டு மாத்திரம் திட்டத்தை நிறைவேற்றுவதாக இருந்தால் இந்த போர்டே தேவையில்லை. அந்தந்த இலாகாவே அதைப் பார்த்துக்கொள்ளும். இப்படிப்பட்ட ஒரு போர்டு இருந்தால்தான் நிலங்களை வாங்கி காரியங்களை சீக்கிரத்தில் நிறைவேற்ற முடியும். எல்லா காரியங்களையும் செய்வதற்கு போர்டு சேர்மனுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாக இருக்கக்கூடிய உத்தியோகஸ்தர்களை நியமிக்கக்கூடிய அதிகாரத்தையும் அந்த போர்டுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எல்லா காரியங்களையும் மந்திரியே பார்ப்பது என்றால் அவருக்கு பயித்தியம்தான் பிடித்து விடும். அதிகாரங்களை பிரித்துப் பிரித்துக்கொடுத்து நிர்வாகத்தை நடத்தினால்தான் உண்மையான ஜனநாயகம் வளரும். எல்லா காரியங்களையும் ஒருவர் தலையிலே வைப்பது என்பது சரியல்ல. நிர்வாகத் தலைமையில் இருக்கக்கூடியவர்களுக்கு இனிமேல் அதிகமாக வேலை இருக்காது. அப்படி அதிக வேலையைக் கொடுத்தாலும் வேலையும் நடக்காது. நமக்கு இருக்கக்கூடிய வேலையில் எல்லாவற்றையும் பார்த்துச் செய்ய முடியாது. அதற்காகத்தான் பிரித்துக்கொடுத்திருக்கிறோம். இதில் ஏதாவது குறைபாடுகள் இருந்து அதை பரிசீலனை கமிட்டியில் எடுத்துச் சொன்னால் அதைப்பற்றி ஆராய்ந்து முடிவு செய்யப்படும் என்பதை சொல்லிக்கொண்டு நான் பிரேரேபித்த பிரேரேபணையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri A. R. MARIMUTHU:** பில்டிங் சொஸைட்டி கிராமங்களிலும், சிறிய நகரங்களிலும் இருப்பது இந்த போர்டு நிர்வாகத்தின் கீழ் வந்து விடுமா என்பதை அறிய விரும்புகிறேன்

**The Hon. Sri R. VENKATARAMAN:** ரிஜிஸ்தரார் அப் கோவாபரேடிவ் சொஸைட்டி இந்த போர்டில் எக்ஸ் அபிஷியோ மெம்பராக இருப்பார். திட்டங்கள் போடுவதெல்லாம் அந்த போர்டு. ஆனால் அவற்றை நிறைவேற்றுவது ரிஜிஸ்தரார் அப் கோவாபரேடிவ் சொஸைட்டி. இப்பொழுது நடக்கும் முறையில்தான் எல்லாம் நடக்கும்.

DEPUTY SPEAKER : I think the House gives permission to substitute the name of Sri S. Pakkirisami Pillai in the place of Sri K. R. Nallasivam in the list of names of members to serve on the Select Committee to consider the Madras State Housing Board Bill, 1960.

The question is—

" That the Madras State Housing Board Bill, 1960 (L.A. Bill No. 31 of 1960) be referred to a Select Committee of the House consisting of the following Members :—

(1) The Hon. Sri M. Bhaktavatsalam.
(2) Sri P. G. Karuthiruman.
(3) Sri K. S. G. Haja Sheriff.



(4) Sri K. Vinayakam.
(5) Sri R. Krishnasami Naidu.
(6) Sri V. Vedayyan.
(7) Sri V. Sankaran.
(8) Sri T. K. Subbiah.
(9) Sri S. Ranganatha Mudaliar.
(10) Sri K. S. Subramania Gounder.
(11) Sri A. V. P. Periavalaguruva Reddiar.
(12) Sri N. K. Palanisami.
(13) Sri M. Anandan.
(14) Sri S. T. Subbiah Gounder.
(15) Sri S. Pakkirisami Pillai.
(16) The Hon. Sri R. Venkataraman."

The motion was put and carried.

DEPUTY SPEAKER : Under rule 99 of the Assembly Rules I nominate the Hon. Sri R. Venkataraman to be the Chairman of the Select Committee.

Shall I adjourn the House?

(Some of the hon. Members wanted that the remaining Bills might be taken up the next day.)

**The Hon. Sri R. VENKATARAMAN** : இந்த திருத்த மசோதாவின் மூலம் பல சலுகைகள் கொடுக்க வந்துள்ளோம். இதில் செய்ய இருக்கின்ற மாறுதல்கள் எல்லாம் மக்களுக்கு நன்மையளிக்கிற மாறுதல்கள். இதை ஒத்திப் போடவேண்டுமென்று கனம் அங்கத்தினர்கள் சொல்லமாட்டார்கள் என்று நினைக்கிறேன். நாளைக்கே கவுன்சிலிலும் நிறைவேறவேண்டும். ஆகையால் நாம் செய்ய இருக்கின்ற நன்மைகளை எல்லாம் கொஞ்சம் ஒத்திப்போடவேண்டுமென்று நினைத்தார்களானால் நான் ஒத்திப்போடத் தயாராய் இருக்கிறேன்.

## IV.—ANNOUNCEMENTS.

### (2) THE MADRAS GENERAL SALES TAX (AMENDMENT) BILL, 1960.

DEPUTY SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation for moving the following Government Amendment to the Madras General Sales Tax (Amendment) Bill, 1960 (L.A. Bill No. 25 of 1960).

After clause 13, *add* the following clause :—

" 14. Amendment of the Second Schedule, Madras Act I of 1959.—In the second schedule to the Principal Act, for item 6 and the entries relating thereto, the following item and entries shall be substituted, namely :—

| | | |
|---|---|---|
| 6 (*a*) Oil seeds, other than cardamom and groundnut, that is to say, seeds yielding non-volatile oils used for human consumption or in industry or in the manufacture of varnishes, soaps and the like or in lubrication and volatile oils used chiefly in medicines, perfumes, cosmetics and the like. | Do. | 2 |

| | | | |
|---|---|---|---|
| (b) Cardamom | .. .. .. .. | At the point of first purchase in the State. | 2 |
| (c) Groundnut | .. .. .. .. | Do. | 1" |

III.—GOVERNMENT BILLS—*cont.*

(3) THE MADRAS GENERAL SALES TAX (AMENDMENT) BILL, 1960 (L.A. BILL NO. 25 OF 1960).

*THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I beg to move—

"That the Madras General Sales Tax (Amendment) Bill, 1960 [a] (L.A. Bill No. 25 of 1960) be taken into consideration."

The working of the Madras General Sales Tax Act, 1959, during the past one year and more has given rise to several problems connected with the administration of the Act necessitating amendments to certain provisions in the Act. The present Bill embodies the amendments found necessary. Now, I shall proceed to explain the scope of the several clauses of the Bill.

The High Court, Madras, has held that sales tax cannot be levied on works contracts relating to movable properties with no element of sale in them. The Government have therefore decided to omit the provisions in the Act relating to works contracts on movable property. Clause 2 of the Bill provides for this I hope the House will agree to this.

The intention behind section 3 (3) of the Act was that the manufacture should be inside the State and that such manufacture should be for the purpose of sale irrespective of the fact whether the sale is inside or outside the State. It was not the intention to impose a restriction that the sale of finished products should be completed within the State. To give effect to the intention correctly, it is proposed to amend section 3 (3) of the Act suitably. Clause 3 of the Bill provides for this.

இதை நான் ஆங்கிலத்தில் படிப்பதற்குக் காரணம் இது வரிவிதிப்பு பற்றிய மசோதா. ஆகவே பிழை இல்லாது ஷரத்துக்கள் இருப்பதற்கு ஆங்கிலத்தில் சொல்கிறேன், விளக்கம் தேவைப்படுகிற இடத்தில் தமிழில் சொல்லத் தயார்.

இதிலே என்ன தவறு ஏற்பட்டுவிட்டது என்றால் 'மானுபாக்சர் வித்தின் தி ஸ்டேட்' என்று இருப்பதற்குப் பதிலாக சேல் இன் தி ஸ்டேட் என்று இருப்பதனால் நம் ராஜ்யத்தில் உற்பத்தி செய்கின்ற பண்டங்கள் வெளி ராஜ்யங்களுக்குப் போனாலும் கூட அதிக வரி விகிதம் கூடவேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டது. அதனால்தான் இதை இப்படித் திருத்துகிறோம்.

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 17th August 1960.



It is also proposed to give retrospective effect to this clause from 1st April 1959, that is, the date of commencement of the Madras General Sales Tax Act, 1959. Clause 1 (2) of the Bill provides for this.

Sub-section (1) of section 20 of the Madras General Sales Tax Act, 1959, lays down that every dealer whose total turnover in any year is not less than Rs. 7,500 shall, and any other dealer may get himself registered under that Act. Section 20 (2) of the Act lays down that certain classes of dealers specified in that section should get themselves registered under the Act irrespective of the quantum of the total turnover. The registration under the Act is mandatory. There is no power for the Government to grant any kind of exemption from the operation of the provisions relating to registration under the Act. It has been found necessary to give exemption from registration under the Act in the case of certain dealers who are not liable to pay sales tax by virtue of exemption from sales tax granted by the Government or to enhance the total turnover limit in the case of certain dealers.

அதாவது சென்ற வருஷத்தில் காய்கறிகளுக்கு எல்லாம் ரூபாய் 30 ஆயிரத்துக்கு மேல் வியாபாரம் செய்தால் வரி கொடுத்தால் போதும் என்று சொன்னோம். ஆனாலும் 7,500 ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்யக்கூடியவர்கள் எல்லாம் ரிஜிஸ்டர் பண்ணிக்கொள்ளவேண்டும். அதற்கு விலக்குக் கொடுக்க நமக்கு அதிகாரம் இல்லை. அதைக்கொடுப்பதற்குத்தான் அதிகாரம் இப்போது கோரியிருக்கிறோம்.

It is accordingly proposed to take power for the purpose. Clause 4 of the Bill accordingly provides for the grant of such exemptions or enhancement of the total turnover limit by notification, subject to such restrictions and conditions as may be specified in the notification. The clause also provides for specifying the area in which the concession will apply and for cancellation or variation of the concession. This clause is proposed to be given retrospective effect from 1st April 1959, i.e., the date of commencement of the Madras General Sales Tax Act, 1959.

Clause 1, sub-clause (2) of the Bill provides for this also.

Rule 25 of the Madras General Sales Tax Rules, 1959, provides for the issue of permits to the dealers themselves or to travelling salesmen or representatives of the dealers who sell goods in places other than those mentioned in the certificate of registration of the dealers. The Committee on Subordinate Legislation has pointed out that this rule is beyond the rule-making powers conferred by the Act. As provisions similar to those contained in this rule are necessary to prevent suppression by dealers of transactions effected through travelling salesmen and representatives it is proposed to incorporate the necessary provisions in this regard in the Act itself. New section 21-A proposed to be inserted by clause 5 of the Bill contains the provisions in this regard. It is also proposed to make the failure to take out a permit under the proposed new section 21-A an offence, punishable with a fine up to Rs. 200 as provided in section 45 (1) from certain other forms of offences. Clause 11 contains the provision in this regard.

[Sri R. Venkataraman] [9th September 1960

Under item 6 (a) in the Second Schedule to the Madras General Sales Tax Act, 1959, groundnut is liable to a single point tax of 2 per cent at the point of first sale in the State. The experience gained from 1st April 1959 shows that the levy of tax at the point of first sale in respect of groundnut has caused great difficulties.

ஏதனால் இந்தக் கஷ்டம் என்று சொல்ல விரும்புகிறேன். சட்டசபையிலும் சரி, வெளியிலும் சரி ஒரு முனை வரி வேண்டுமென்று சொல்லி விடுகிறோம். ஒரு முனை வரி என்று சொன்னால் எல்லோருக்கும் நன்மை ஏற்படும் என்ற அபிப்பிராயம் நமக்குள் இருக்கிறது. அப்படிச் சொல்லி, மணிலாப் பயறுக்கும், கடலைக்கும் ஒரு முனை வரி போட்டு விட்டோம். எனக்குத் தெரியும், கனம் அங்கத்தினர் சுப்பையா அவர்கள் இதுபற்றி காரமாகப் பேசப் போகிறார்கள் என்று. ஒரு முனை வரி போட்டதால் விளைவு என்னவென்றால் ஏதோ 20, 30 எக்ஸ்பெல்லரை வைத்துக் கொண்டு வியாபாரம் செய்பவர்களிடம் வாங்கியது போக உற்பத்தி செய்பவர்களிடம் வரி வசூல் செய்யும் நிலை ஏற்பட்டு விட்டது. கூடையில் வைத்து கடைக்கு போய் விற்பதானாலும், சந்தைக்கு கொண்டு போனாலும் சரி உடனடியாக ரெஜிஸ்டர் செய்யவேண்டுமென்று இருக்கிறது. சாதாரணமாக 200 பேர்கள் "எக்ஸ்பெல்லர்கள்" வைத்துக்கொண்டு இருப்பவர்களுக்கு வரி விதிப்பு செய்து கொண்டிருந்தோம். இன்று இரண்டு லட்சம் துண்டு நிலங்கள் வைத்துக்கொண்டு கடலை பயறு உற்பத்தி செய்பவர்கள் எல்லோருக்கும் வரி விதிக்கும் நிலை ஏற்பட்டு விட்டது. அதை மாற்ற வேண்டுமென்று சர்க்கார் முடிவு செய்து வாங்குகிற இடத்தில், அவர்கள் ரிஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டியதில்லை. அவர்கள் விற்பனைவரி கட்டவேண்டியதில்லை, யார் அதை உபயோகப்படுத்த வாங்குகிறார்களோ அவர்கள் 1 சத வீதம் கொடுத்தால் போதும், 2 சத வீதத்துக்கு பதிலாக. எண்ணெயாக்கி விற்கும்போது வழக்கப்படி 3 சத வீதம் கொடுக்க வேண்டும் என்று திருத்தியிருக்கிறோம்.

As the commodity is liable to single point tax at the point of first sale, growers of groundnuts who are in thousands in districts and who generally sell them in the shape of kernels, become liable to tax and registration under the Act regardless of the quantum of their turnover. There is also administrative difficulty, as the issue of registration certificates to several thousands of growers and also checking their accounts in the collection of tax will be a stupendous job. In order to mitigate the hardship to the growers, the Government have decided to change the point of tax on groundnut from the first sale to the first purchase as was the case prior to 1st April 1959. The Government have also decided to reduce the rate of tax on groundnut from 2 per cent to 1 per cent. Under the new system the growers who sell their produce either unshelled or shelled will not be liable to pay tax as only the purchasers who will generally be the oil producers will be liable to tax. To give effect to the proposals, I will be moving an amendment to the Bill at the appropriate stage.

I now request that the Bill be taken into consideration.

DEPUTY SPEAKER: Motion moved—

"That the Madras General Sales Tax (Amendment) Bill, 1960 (L.A. Bill No. 25 of 1960) be taken into consideration."

The motion is before the House for discussion.



9th September 1960]

**Sri K. SATTANATHA KARAYALAR:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த விற்பனை வரி திருத்த மசோதாவின் மீது நான் இரண்டொரு வார்த்தைகள் சொல்ல அவாவுறுகிறேன். இதில், "பாடி பில்டிங்", "சேஸிஸ்", அவர்கள் அவர்களாகவே தனியாக உறுப்புகள் போட்டு கட்டக் கூடியவர்களுக்கு விதிவிலக்கு வேண்டுமென்ற நோக்கத்தோடு செய்யப்பட்டிருப்பதை குறைகூறுவதற்கில்லை. ஏற்கனவே அவர்கள் ஒரு முறை தீர்வை கொடுத்து, பார்ட்ஸ்க்கு தனித் தனியாக கொடுத்திருக்கக்கூடியவர்கள் இரண்டாவது தடவையாக பாடியாக கட்டிய பிறகும் வரி கொடுக்கவேண்டுமென்ற நிலை இருப்பது சரியல்ல. ஆனால் புல்லியனுக்கும், பினிஷ்ட் ஆர்ட்டிகிள்ஸ்க்கும் உள்ள வித்தியாசத்தைப் பற்றி இந்த மசோதா வந்த சமயத்திலேயே இந்த சபையில் கூறியிருக்கிறேன். இரண்டிற்கும், வெவ்வேறு பெர்ஸன்டேஜ் இருப்பது சரியல்ல என்பதுதான் என் கருத்து. இன்றும் கூட நான் ஊன்றிச் சொல்ல விரும்புகிறேன், இதில் கொடுத்திருக்கக் கூடிய திருத்த அடிப்படையில் சர்க்காரின் நோக்கம் வெற்றி பெறும் என்று தோன்றவில்லை. புல்லியன் மீதுள்ள வரியைக் கூட்டினால், அது பிற மாநிலங்களோடு இணைந்ததாதலால், நம் மாநிலத்தில் உள்ள விற்பனை பாதிக்கப்படும் என்று சொல்வார்கள். அதே நேரத்தில் "பினிஷ்ட் ஆர்ட்டிகிள்ஸ்" லக்ஷுவரி குட்ஸ்தானே, ஏன் அதற்கு அதிகம் கொடுக்கக்கூடாது என்றால் தப்புவதற்கு மார்க்கம் இருக்கிறது. நான் சொல்வது, புல்லியனுக்கு உயர்ந்த பெர்ஸன்ட் தீர்வை போடவேண்டும். அது, இதர மாகாணங்களும் நம்மோடு இணைந்த ஒரு விகிதாசாரமாகயிருக்க வேண்டும் என்று நான் முன்பு கூறியுள்ளதுபோல் இன்றும் வற்புறுத்த விரும்புகிறேன். இன்று நகைக் கடைக்குச் சென்று எட்டு சவரன் உள்ள ஒரு நெக்லஸ் வாங்குகிறோம் என்றால், எட்டு சவரன்களை அவர்கள் வாங்கிக் கொண்டு அதற்கு இந்த நெக்லஸ் தயார் செய்ததாக கணக்கு எழுதி மேக்கிங் சார்ஜ் மட்டும் வாங்குகிறார்கள். ஸ்டாக் ரெஜிஸ்டர் என்று வைத்திருக்கிறார்கள். நாம் போய் கேட்டவுடன் ஷோ கேஸில் உள்ளதைப் போல் கொடுத்து விடுகிறார்கள். அதே நேரத்தில் இரண்டு இனமாக பில் போட்டு சவரன் வாங்கிக்கொண்டு அதைக்கொண்டு செய்து கொடுத்தது போல் கொடுத்து விடுகிறார்கள். திரும்ப ஒன்று செய்து, பின் வரும் நபர்களுக்கு ஜாபிதா புத்தகத்தைக் காட்டி இதேபோல் செய்து தருகிறோம் என்று ஆர்டர் வாங்குகிறார்கள். ஆக, தப்புவதற்கு, வரி கொடுப்பதிலிருந்து தப்புவதற்கு வழியிருக்கிறது. நான் என் அனுபவத்தில் சொல்கிறேன், வரியிலிருந்து தப்ப வழிகள் இருக்கின்றன. ஆகவே நான் சொல்வது என்னவென்றால் இரண்டிற்கும் ஒரேவித நிரக்குள்ள ஒரு தீர்வையைக் கொண்டு வரவேண்டும். அது உயர்ந்தபட்சமாக இருக்க வேண்டும். இதை, நாம் மட்டும் செய்தால் போதாது. அண்டை மாகாணங்களும் ஒத்துக்கொள்ளும் முறையில் இணைந்த ஒரு தீர்வை வரவேண்டியது அவசியம். 1-00 p.m.

அடுத்தபடியாக டோண்ட் மில்க்-களுக்கு விதிவிலக்கு கொடுத்திருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அதே நேரத்தில் என் பாலுக்கே பூரா வரியையும் எடுத்துவிட்டால் நன்றாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இனத்தை நாட்டிலிருக்கின்ற தாழ்ந்த இடத்திலுள்ள மக்கள் முதல் உயர்ந்த இடத்திலுள்ள மக்கள் வரையில் உபயோகித்து வருகிறார்கள், அதிலும் குழந்தைகளுக்குத்தான் இது அதிகமாக பயன்படுகிறது. பெரியவர்கள் இதை அதிகமாக உபயோகிப்பதில்லை. ஆகவே குழந்தைகள்பேரில் கருணை காட்டி வரி விதிப்பிலிருந்து பாலுக்கு விதிவிலக்கு கொடுப்பதற்கு அரசாங்கம் யோசனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வெகிக்கில்ஸ்-செக்கிங் செய்கின்ற விஷயத்தில், பல இடங்களில் செக்கிங் லாக்-கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதில் பல தொல்லைகள் இருப்பதாக சொல்லப்படுகின்றது. இதிலும் முக்கியமாக எல்லையில் இருக்கக்கூடியவர்களுக்கு தொல்லைகள் அதிகமாக இருக்கின்றன. ஒரு செக் போஸ்ட் எல்லையிலிருந்து அடுத்த எல்லைக்குள், தங்களுக்குச் சொந்தமான அரிசி, உழுந்து இவைகளை எடுத்துச் செல்லவேண்டு

[Sri K. Sattanatha Karayalar] [9th September 1960

மென்றுலும் லாரிகளில் டிரிப், லாக் ஷீட் இவைகள் எல்லாம் காண்பிக்க வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறார்கள். இதற்கான தஸ்தாவேஜுகள் எல்லாம் வேண்டும் என்று கடுமையாக கேட்டு வருகிறார்கள். ஸமகளங் நடக்கும் என்ற காரணத்தின் பேரில், கடுமையாக இருந்து வருகிறார்கள். இதைத் தவிர்க்கக்கூடிய முறையில் சர்க்கார் சில உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **SRI K. VINAYAKAM** : Sir, while welcoming this amending Bill, General Sales Tax (Amendment) Bill, I wish to thank the Government for having been kind enough to exempt some articles from taxation or reduce the rate of taxation in respect of them. Sir, I believe for some time past some representations have been made and deputations have been waiting on the Hon. Minister to consider the feasibility of exempting articles like glass bangles and glass beads which happen to be cheap ornaments of poor women in our country. These are all perishable articles (laughter) in the sense that they do not stand for a long time. Neighbouring States have been wise enough to reduce the tax if not completely abolish it. But in our State the present rate of taxation on glass bangles is, I think, 6 per cent and it is too much. It is not a luxurious commodity. It is not a thing which is treasured most and it is easily perishable. Poor women in our State go in only for this kind of ornament. Therefore, I do not see any reason why the Hon. Minister should be harsh towards them. But the Hon. Minister in charge of the Bill may plead that he wants finance to execute schemes in our country, and that this is an easy way of making money. As one Minister who preceded him said, this sales tax is more or less a '*kamadhenu*' of this country which yields income easily and I concede this point but why should we be harsh to the most unfortunate section of the population, poor womenfolk who go in for these ornaments. My suggestion is that if it is not possible to exempt them, they should be kind enough at least to reduce the tax to 2 per cent. Other States like Madhya Pradesh, the Punjab and Bombay have reduced the tax in respect of them. To the deputations which waited on the Hon. Minister, the Hon. Minister was kind enough to say that the matter was under consideration. Even to the representations made by some merchants on behalf of the Bangles Association of the Madras State, the reply received was that the matter was under consideration. Even the Women's conference which met at Trivandrum day before yesterday passed a resolution requesting the Madras Government to exempt these bangles from taxation. It was only after a violent agitation and a long struggle in the Madhya Pradesh and Bombay that the tax has been reduced. I do not suggest that we should also take to this agitation in our State. But I hope the Hon. Minister would be kind enough to see his way through to completely abolish the tax in respect of glass bangles and glass beads. In this connection, I may quote an instance to refresh the memory of the Hon. Minister. We were very hoarse in levying tax on vegetables a year ago even though it yielded only about Rs. 3 lakhs every year. We had a very costly experience after levying such kind of taxation. Sir,



9th September 1960] [Sri K. Vinayakam]

why should we estrange the feelings of our womenfolk in our country? After all, the income derived from this source is very little. They are the people who stand by us and by our Government and let us earn their goodwill also. I never envisaged that some articles would be exempted from the tax. Otherwise, I would have given notice of an amendment. Now, I would request the Government to bring forward their own amendment exempting glass bangles and beads from sales tax. I entreat once again with folded hands and bended knees, the Hon. Minister—because I know that when arguments do not convince him, on compassionate grounds the Government may come down to see their way—and appeal to him in the name of womenfolk to exempt glass bangles and glass beads from the levy of sales tax.

**SRIMATHI T. N. ANANDANAYAKI** : கனம் உதவி சபா
நாயகர் அவர்களே, இந்த திருத்த மசோதாவானது, மக்களுக்கு ஏதாவது
கஷ்டங்கள் ஏற்படுமானால் அதை உடனடியாக திருத்துவதற்கும் சர்க்கார்
தயங்காது என்பதை சுட்டிக்காட்டுகின்ற அளவில் அமைந்திருக்கின்றது
என்பதற்காக இதை நான் வரவேற்கிறேன். சமீபத்தில்தான் இந்தச்
சட்டம் கொண்டு வரப்பட்டது என்றிருந்தபோதிலும், இதிலிருக்கின்ற
கஷ்டங்களை உணர்ந்து அதற்கு திருத்தம் கொண்டு வந்ததற்காக கனம்
அமைச்சர் அவர்களை நான் மிகவும் பாராட்டுகிறேன். அதில் இன்னும் சில
மாறுதல்களை செய்திருந்தால், இன்னும் கூடுதலான அளவில் வரவேற்கக்
கூடிய முறையில் அமைந்திருக்கும். முதலில் கோடம்பாக்கம் அங்கத்
தினர் அவர்களுக்கு (Sri K. Vinayakam தியாகராயநகர்......)
தியாகராயநகர் அங்கத்தினர் அவர்களுக்கு, பெண்களின் சார்பாக என்
வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். பெண்களை
விட மிகவும் உருக்கமாக, பெண்கள் அணிகிற வளையல்களுக்கும் மணி
களுக்கும் வரி விலக்கு கொடுக்கவேண்டும் என்று கேட்டார்கள், அவர்
களுக்கு என் நன்றியை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்த
படியாக தங்க நகைகளை எடுத்துக்கொண்டால், தங்கக்கட்டிக்கு அரை சத
மானமும், தங்க நகைகளுக்கு 2 சதமானமும் போட்டிருக்கிறார்கள்.
இதனால் வியாபாரிகள் சர்க்காரை ஏமாற்றுகின்ற வேலைகள்
அதிகமாக நடக்கும். அது ஒரு பக்கம் இருந்தாலும் இதே
நிலை நீடித்துக்கொண்டிருந்தால் நிச்சயமாக கலை உணர்ச்சி மங்கி விடும்.
தங்க நகைகளிலுள்ள கலை இல்லாவிட்டால், இந்தநாட்டின் கலை புக
SRI K. R. VISWANATHAN: தலைவர் அவர்களே, 1959-ம் வருடம் பெப்ரவரி மாதம் 9-ம் தேதியில் நியமிக்கப்பட்ட மானேஜிங் டிரஸ்டி, அதற்கு முன்பு நியமிக்கப்பட்ட மானேஜிங் டிரஸ்டி அந்தக் கோயிலில் சார்ஜ் வாங்குவதற்கு முன்னாலேயே அவசரம் அவசரமாக நியமிக்கப்பட்டாரா? அம்மாதிரி நியமிக்கப்படுவது சட்ட விரோதமல்லவா? அதற்காக சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இந்தச் சட்டப்படி டிரஸ்டிகளை ஏரியா கமிட்டி நியமிக்கிறார்கள். அதில் ஏதாவது தவறு இருந்தால் அப்பீல் செய்யப்படுகிறது. சட்டப்படி அப்பீல் வந்தால் அது கவனிக்கப்பட்டு, என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படவேண்டுமோ அம்மாதிரி நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது. இந்த விஷயத்தில் டிரஸ்டிகளுக்குள்ளே ஒருவருக்கொருவர் கட்சி, ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு கிடையாது. இந்த நிலையிலே அறநிலைய பாதுகாப்பு இலாகாவினர் இதை ஒரு நிர்வாக அதிகாரிக்கு கொஞ்சகாலத்திற்கு விட்டுவிடலாம் என்று உத்தரவு போட்டார்கள். அதை நிறைவேற்றிக்கொண்டு வருகிறார்கள்.



0th September 1960]

SRI K. R. VISWANATHAN: அந்த நிர்வாக அதிகாரி, புதிதாக நியமிக்கப் பட்டிருந்தபோதிலும், அவராலும் இந்த கடைசியாக நியமிக்கப்பட்ட மானேஜிங் டிரஸ்டியிடமிருந்து சார்ஜ் வாங்க முடியவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியானால், அதைச் சரிசெய்ய துரிதமாக என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசம்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அந்த நிர்வாக அதிகாரியாலும் வாங்க முடியவில்லை யென்றால், கோர்ட்டுக்குப் போக வேண்டித்தான் இருக்கும். என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ, அது எல்லாம் எடுக்கப்படும்.

*National Extension Block*

* 593 Q.—SRI P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் ஜில்லா, கோபிச்செட்டிப்பாளையம் தாலுகா, தாளவாடிமலைப் பிரதேசத்தைச் சேர்ந்த கிராமங்களடங்கிய தேசிய அபிவிருத்தித் திட்டம் ஒன்றை அமுலாக்குவதற்காக பரிசீலனை அரசாங்கத்தாரால் கவனிக்கப்பட்டு வருகிறதா?

(ஆ) அப்படியானால் இத்திட்டம் எப்போது அமுலுக்குக் கொண்டு வரப்படும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes, Sir.

(b) This is under correspondence with the Government of India.

*Fertilizers*

* 594 Q.—SRI A. A. RASHEED: } Will the Hon. the Minister
SRI S. LAZAR: }
for Home be pleased to state the steps taken to overcome the shortage of fertilizers in several districts?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: A paper * is placed on the table of the House.

SRI S. LAZAR: May I know the reasons for the sudden shortage of mixtures in the State and my question specifically related to that. May I also know what steps have been taken to have this shortage removed?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The shortage is largely due to increase in demand. Of course, the Government are taking all steps that could be taken in order to increase imports of fertilizers.

SRI R. KRISHNASAMI NAIDU: கலப்பு உரங்கள் தயாரிக்க முன் வருகிறவர்களுக்கு, மேலும் லைசென்ஸ் வழங்குவது நிறுத்தி

* Printed as Appendix II on page 669–670 infra.

[10th September 1960

வைக்கப்பட்டிருக்கிறது. அதிகமாகக் கலப்பு உரங்கள் தயாரிக்க வருபவர்களுக்கு உத்தரவு அளிப்பதில் தாமதமாவதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: மொத்தத்தில், "ஸ்ட்ரெய்ட் பார்டிலைசர்ஸ்" என்று சொல்லக்கூடிய நேரிடை யாக ரசாயன உரங்களை போடுகிறவர்களுக்கு, பற்றுக்குறை இருக்கிறது. கலப்பு உரங்களுக்கு மேலும் மேலும் உத்தரவு கொடுத்துக் கொண்டே இருந்தால், நேரிடை உரம் போடுகிற வர்களுக்கு வசதி குறைந்துவிடும். அதுவும் நிவர்த்திக்கப்பட வேண்டும்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Sir, our Government have been putting up a strong fight with the Government of India and the Government of India every time say that they will try their level best to see that fertilizers are supplied. But we do not get fertilizers in time. Now it is the cultivating season and ryots are disappointed. In this connection, I may also inform the Hon. Minister that some fertilizers are available in black-market and may I know the reasons for it. Also may I know whether ryots can expect fertilizers in time at least before the commencement of the agricultural season?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Whenever there is shortage, consequently there is black-market but on the whole I may say that the situation is not so bad as the hon. Member thinks. I could even say that just for the present it is fairly comfortable but still there is shortage and even the Government of India are doing their very best to increase imports of fertilizers.

SRI N. MARUDACHALAM: ஸார், இந்த அம்மோனியம் சல்பேட் உரத்தில், நாட்டு உப்பையும் கலந்து உபயோகிப் பதைத் தடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா? அதன் மேல் வரும் ரிபோர்ட்டுகளை அரசாங்கம் விசாரிப்பார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: உணவுப் பொருள் களிலேயே கலப்படம் ஏற்படுகிறது. அதிகப்படியான டிமாண்டு இருப்பதால், கலப்படம் செய்கிறார்கள்; அதையெல்லாம் தடுக்க என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ, அவை யெல்லாம் எடுக்கப்படும்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Sir, some of the ryots in the Madurantakam taluk who grow sugarcane came to me yesterday and told me that they could not get even a single bag of sulphate ammonia, with the result production would go down. So, may I know from the Hon. Minister whether there is any proposal to send some telegram or urgent message to the Government of India to allot more fertilizers to this State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The Government have been looking into the matter. Of course, the hon. Member will agree that if there is shortage, priority should be given to cultivation of food crops although sugarcane is also a food crop.



10th September 1960]

But priority is to be given to cultivate paddy and other food crops. Of course, sugarcane also requires a large amount of fertilisers. We are trying to accommodate sugarcane growers. The Union Minister for Food and Agriculture has stated that whatever foreign exchange that we could get by way of export of sugar, would be earmarked for sugarcane growers for getting increased supply of fertilizers.

SRI S. LAZAR: பற்றாக்குறை ஒரு புறம் இருக்க, காலத்தில் கிடைப்பதில்லை என்பது வேறொரு குறை. அதற்குக் காரணம் வெளிநாடுகளிலிருந்து குறிப்பிட்ட காலத்தில் வந்து சேருவது இல்லை என்பது. ஒரு மாதத்தில் வேண்டுமென்றால், ஒரு ஆண்டுக்கு முன்னாலேயே விண்ணப்பிக்கக் கூடாதா? அடுத்த சீசனிலிருந்தாவது, சரியான காலத்தில் கிடைக்க அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுப்பார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதெல்லாந்தான் கவனிக்கப்பட்டு, அவ்வப்பொழுது வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன. உரம் வந்தாலும், ரெயில்வே வாகன்கள் கிடைப்பது அரிதாகி விடுகிறது; ஒரு மாகாணத்திற்கு, ஆந்திராவுக்கு அரிசி வேண்டும் என்றால், அல்லது மற்றொரு மாகாணத்திற்கு அரிசி வேண்டுமென்றால், அதற்கு முதல் ப்ரையாரிடி கொடுக்கிறார்கள். அதிலும், தவிர்க்கக்கூடிய தாமதத்திற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

SRI N. S. RAMALINGAM: ஸார், தஞ்சை ஜில்லாவில் இன்னும் 15, 20 நாட்களில் விவசாய சாகுபடி வேலைகள் முடிந்துவிடும். அமோனியம் பாஸ்பேட்டுக்கு அதிக டிமாண்டு இருக்குமாதலால், கைவசமிருப்பதையாவது உடனடியாக அங்கு விநியோகிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்ய முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இந்த மாத தேவைக்கு, தஞ்சை ஜில்லாவிற்கு வேண்டியது இருக்கிறது.

SRI P. S. SANTHANAM: தஞ்சையைக் காட்டிலும், வட ஆற்காடு சிறந்தது என்று சர்க்காராலேயே கூறப்பட்டிருப் பதால், அத்தகைய வட ஆற்காடு ஜில்லாவிற்கு உரத்தைத் தாராளமாக கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தஞ்சையை விட வட ஆற்காடு சிறந்தது என்று சொல்ல முடியாது, சொல்லவும் இல்லை. ஆனாலும், வட ஆற்காடு மாவட்ட விவசாயிகளை ஊக்குவிக்க, எவ்வளவு ரசாயன உரம் கொடுக்க முடியுமோ, அது கவனிக்கப்பட்டு வருகிறது.

MR. SPEAKER: ஒவ்வொரு அங்கத்தினரும் தனித்தனி ஜில்லாவைப் பற்றிக் கேட்டால், எப்படி அனுமதிக்க முடியும்?

SRI S. M. ANNAMALAI: ஒரு மாவட்டத்திற்கு என்றிருப் பதை, மற்றொரு மாவட்டத்திற்குக் கொண்டு போய்விடுவதும்,

[10th September 1960

அதே போல, ஒரு மாகாணத்திற்கு என்றிருப்பதை மற்ற மாநிலத்திற்குக் கொண்டு போவதும், ரகஸ்யமாகக் கள்ள மார்க்கெட்டில் விநியோகிப்பதும் இருப்பது உண்மையா? அப்படியானால், அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அம்மாதிரிப் புகார்களை நானும் கேள்விப்படுகிறேன். மற்ற ராஜ்ய மந்திரிகளும் அம்மாதிரிக் கேள்விப்படுவதாகச் சொல்கிறார்கள். ஒரிஸாவிற்குக் கொடுத்தது, ஆந்திராவிற்கு போகிறதாகப் புகார் இருக்கிறது; இவர்கள் "உங்களுக்கு வேண்டியதில்லையென்றால், எங்களுக்கு வந்தால் என்ன" என்று கேட்கிறார்கள்; இந்த ராஜ்யத்தைப் பொறுத்த வரை, தஞ்சை ஜில்லாவிற்குக் கொடுத்தால், அது திருச்சி ஜில்லாவிற்குப் போய்விடுகிறது. ஒரு ஜில்லாவிலிருந்து, மற்ற ஜில்லாவிற்குப் போவதையும், ஒரு ராஜ்யத்திலிருந்து மற்ற ராஜ்யத்திற்குப் போவதையும் தடுக்க அரசாங்கத்திற்கு அதிகாரம் வேண்டுமென்று கோருகிறோம். அதைப் பற்றிக் கூட கனம் யூனியன் அரசாங்க விவசாய உணவு மந்திரியவர்கள் பாராளுமன்றத்தில் நேற்று கூறியிருப்பதை அங்கத்தினர் கவனித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

SRI S. RAMAKRISHNA THEVAR: ஸார் . . .

MR. SPEAKER: கனம் அங்கத்தினரும் அவர்களுடைய ஜில்லாவைப் பற்றி கேட்கப் போகிறார்களா ?

SRI S. RAMAKRISHNA THEVAR: குறிப்பாக தஞ்சை ஜில்லாவிற்கு மட்டுமின்றி, இந்த உரம், எல்லா ஜில்லாக்களுக்கும் பகிர்ந்து கொடுக்க முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தீவிர விவசாய உற்பத்தி தஞ்சையில் மேற்கொண்டிருக்கிறார்கள்; அதுவும் 22 ப்ளாக்குகள் தான். மற்றபடி எல்லா ஜில்லாக்களிலும் உற்பத்தியைப் பெருக்க, கவனம் செலுத்தப்படுகிறது.

SRI A. VEDARATHNAM: பேக்கேஜ் டீல் இந்த வருஷம் முதல் அமுலுக்கு வருவதாக அரசாங்கம் குறிப்பிட்டு இருந்தும், தஞ்சை மாவட்டத்திற்கு உரம் வந்திருக்கிறதா? வந்திருப்பதாகத் தெரியவில்லை; அது சம்பந்தமாக அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினரவர்களுக்குத் தெரியவில்லை என்று நினைக்கிறேன். பேக்கேஜ் டீலுக்கு அதிகமாக உரமும், தஞ்சை ஜில்லா தேவையைப் பரிபூரணமாக நிறைவேற்றவும் உரம் நிறைய இருக்கிறது; அங்கு ரசாயன உரத்திற்குக் குறைவில்லை,



10th September 1960]

*Land for Scheduled Castes*

* 595 Q.—SRI A. VEDARATHNAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மத்திய சர்க்காரிடமிருந்து பூதான நிலங்களையும், இதர சர்க்கார் புறம்போக்கு தரிசு நிலங்களையும் ஷெட்யூல்டு வகுப்பினருக்குப் பிரித்துக் கொடுப்பது பற்றி ஏதேனும் உத்திரவு வந்திருக்கிறதா?

(ஆ) அப்படியானால், அதன் விவரமென்ன?

(இ) இதுவரை இம்மாநிலத்தில் பூதானமாகக் கிடைத்த நிலம் எவ்வளவு?

(ஈ) அதில் நிலமில்லாதவர்களுக்குக் கொடுத்தது எவ்வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) to (d) The information is being collected and will be placed on the table of the House as soon as possible.

*Rural Water-supply Works*

* 596 Q.—SRI K. R. VISWANATHAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the number of Rural Water-supply Works sanctioned during 1959–60 and not yet completed in Udaiyarpalayam taluk, Tiruchirappalli district;

(b) the reasons for the delay; and

(c) the names and the present stage of the works that have not yet been completed?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) to (c) A statement [a] is placed on the table of the House.

SRI K. R. VISWANATHAN: இந்த 44 வேலைகளில், இது வரைக்கும் எத்தனை வேலைகள் முடிந்திருக்கின்றன?

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்த ஜாபிதாவில் வேலைகள் எந்தெந்த கட்டத்தில் இருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

SRI M. KULANDAISAMI GOUNDER: ஏர்க்காட்டில் குடி தண்ணீர் திட்டம் ஏதாவது விவகாரத்திற்கு வருமா? அங்குள்ள ஏரி தண்ணீரை குடி தண்ணீருக்குக் கொண்டு வருவதற்கு அவசியமாக இருப்பதால் அதற்கு சர்க்கார் ஏதாவது உதவி செய்யுமா? 9.00 a.m.

MR. SPEAKER: நீங்கள் கேட்கும் கேள்வி மூல கேள்விக்கு சம்பந்தமில்லை.

SRI K. R. VISWANATHAN: 1959–60-க்காக அனுமதிக்கப்பட்ட வேலைகள் இன்னும் முடிக்கப்படவில்லை என்பதாக தெரிய வருகிறது. 1959–60-ல் அனுமதிக்கப்பட்ட வேலைகளை சர்க்கார்

a Printed as Appendix III on pages 670–672 infra.

[10th September 1960

முடிக்க வேண்டும் என்று சொல்லியும் இன்னும் முடிக்காமல் காலதாமதம் ஏற்படுகிறது. அதைத் தவிர்க்க முன் வருவார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இதற்கு பல காரணங்களைச் சொல்ல முடியும். அந்தக் காரணங்கள் எல்லாம் கனம் அங்கத்தினருக்கே நன்றாகத் தெரியும். ஏர்க்காட்டில் எவ்வளவு கஷ்டங்கள் தகராறுகள் ஏற்பட்டன என்பதும் அதை ரொம்ப சிரமத்தோடு எடுத்துச் செய்தார்கள் என்பதும் அவருக்கு நன்றாகத் தெரியும். அவருடைய பிராந்தியத்தில் எப்படிப்பட்ட கஷ்டங்கள் ஏற்படுகின்றன என்பது அவருக்கு நன்றாகத் தெரியும்.

*ouse-sites (Harijans).*

* 597 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு பதிலாக வீட்டு மனைக்கட்டு நிலங்கள் வாங்கிக் கொடுப்பதையே அங்கீகரித்து உதவித் தொகை அனுப்பவேண்டுமாய் மத்திய சர்க்காருக்கு நம் மாகாண சர்க்கார் தெரிவித்திருக்கிறார்களா?

(ஆ) அப்படியானால், விவரங்கள் யாவை?

THE HON. SRI P. KAKKAN: (*a*) Yes, Sir.

(*b*) The basis for working out the scheme of provision of developed house-sites to Harijans is under examination of the Government. The cost of the scheme has therefore not yet been settled.

*Thiruthuraipoondi Block*

* 598 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி பிளாக்கை இரண்டு பிளாக்குகளாகப் பிரிக்கக் கோரிய அந்த பிளாக்கின் தீர்மானத்தின் மேல் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, the matter is under correspondence with the Government of India.

SRI A. VEDARATHNAM: இன்று இந்த மூன்று ரெவின்யூ பிர்க்காக்கள் அதாவது திருத்துறைப்பூண்டி, ஆலத்தம்பாடி, தலைஞாயர் இவைகள் எல்லாம் சேர்ந்து ஒரே ப்ளாக்காக இருக்கிற காரணத்தால் அங்கே வேலை செய்வது கஷ்டமாக இருக்கிறது. அது அன்-வீல்டி யாக இருக்கிறது. ஆகவே அதை இரண்டு ப்ளாக்குகளாக பிரிக்க சர்க்கார் தீவிரமாக விரைவில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?



10th September 1960]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதைத்தான் நான் விடை அளித்த போது குறிப்பிட்டேன். அதை உணர்ந்துதான் இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு பிரிக்க வேண்டும் என்பதைப்பற்றி கூறியிருக்கிறது. அவர்களுடைய அங்கீகாரம் பெற்று அவைகள் பிரிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

*Roads (Repairs)*

* 599 *Q.*—SRI P. G. MANICKAM: }
SRI K. R. NALLASIVAM: } கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) லோயர் பவானி வாய்க்கால், மேட்டூர் வலது கரை வாய்க்கால் ஆகியவைகளின் பாசனத்துக்கு விடப்படும் தண்ணீரானது ரோடுகளின் குறுக்கே செல்வதால் ரோடுகள் பழுதடைந்திருப்பதால் இவைகளைச் செப்பனிடும் வேலைகளைக் கவனித்து வர ஸ்பெஷல் அதிகாரிக்ள் நியமிக்கப்பட்டிருக் கிறார்களா?

(ஆ) ரோடுகளிலே எத்தனை இடங்களிலே பழுது பார்க் கப்பட வேண்டுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது?

(இ) இத்திட்டத்துக்காக எவ்வளவு தொகை தேவைப் படும்?

(ஈ) 1960–61-ம் வருடத்திலே இத்திட்டத்திற்காக எவ்வளவு தொகை செலவிடப்படும்?

THE HON. SRI P. KAKKAN: (*a*) *Lower Bhavani Project Area.*—Yes, Sir.

*Mettur Right Bank Canal Area.*—No, Sir.

(*b*) *Lower Bhavani Project Area.*—The number of crossings to be provided with cross-drainage work is 477.

*Mettur Right Bank Canal Area.*—The roads have been affected at 47 places.

(*c*) *Lower Bhavani Project Area.*—About Rs. 15 lakhs.

*Mettur Right Bank Canal Area.*—About Rs. 1.9 lakhs.

(*d*) *Lower Bhavani Project Area.*—About Rs. 10 lakhs.

*Mettur Right Bank Canal Area.*—No expenditure is proposed to be spent during 1960–61, since the scheme has not been proposed for sanction. However for making temporary arrangements, the Divisional Engineer (Highways), Erode, proposes to spend a sum of Rs. 7,800 from out of the annual maintenance allotment during the current year.

SRI P. G. MANICKAM: திட்டங்கள் அதிகமாக இருக்கிறது. ஆனால் அதற்கு நியமிக்கப்பட்ட அதிகாரிகள் ஆறு மாதங் களுக்குத்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதாக எனக்கு ஞாபகம் இருக்கிறது. திட்டம் பெரிய அளவில் இருப்பதால்

[10th September 1960

ஸ்பெஷல் ஆபீசர்களைப் போட்டு இன்னும் அதிகப்படியான காலத்திற்குப் போட்டு காரியத்தை முடிக்க வேண்டிய நடவடிக்கையை எடுக்க அரசாங்கம் பரிசீலிக்குமா?

THE HON. SRI P. KAKKAN: ஆரம்பத்தில் ஆறு மாதங்களில் வேலைகளை முடித்துவிடலாம் என்று எண்ணி அப்படி நியமித்திருக்கிறார்கள். அதற்குள்ளேயே அதை முடித்து விடுவார்கள். அப்படி முடிக்க வில்லையானால் மேலும் நீடித்துக்கொடுக்க வேண்டிய ஏற்பாடு செய்யப்படும்.

SRI K. R. NALLASIVAM: திட்டம் பெரிய அளவில் இருப்பதால் அதற்கு வேண்டிய ஊழியர்களை நியமிக்க சர்க்கார் உத்தேசித்திருக்கிறார்களா? அதற்கான நடவடிக்கையை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN: திட்டத்திற்கு எவ்வளவு அதிகாரிகள் வேண்டும் என்று பரிசீலனை செய்துதான் போட்டிருக்கிறார்கள். மேலும் தேவை என்று கருதினால், அதைப்பற்றி அங்குள்ள டிவிஷனல் இஞ்சினியர் எழுதினால் அதைப்பற்றி கவனிக்கப்படும்.

MR. SPEAKER: I find hon. Members crossing between the Chair and the hon. Member who is asking a question. Parliamentary convention is that nobody should cross between the questioner and the Speaker. I find the hon. Member who is the Chief Whip of Government is committing that offence. I hope it will not be repeated. (Laughter.)

*Income (Railways)*

*600 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1959-ம் வருடத்தில் ரயில்வே வருமானத்திலிருந்து மத்திய கவர்ன்மெண்டு மூலமாக சென்னை சர்க்காருக்குக் கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) 1960-ம் வருடத்திற்கு எவ்வளவு தொகை கொடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) & (*b*) The net income from Railways will not be distributed among the States. From September 1957, the Government of India are levying a surcharge on passenger fares under the Railway Passenger Fares Act, 1957. The net proceeds under this Act are distributed among the States under the Award of the Finance Commission in the ratio of the route mileages within each State. The share of the Madras State thus allocated is 6.46 per cent. The amounts allotted by the Government of India to the Madras State on this basis are as follow :—

| (Budget estimate). | RS. LAKHS. |
|---|---|
| 1959-60 ... ... ... ... ... | 84 |
| 1960-61 ... ... ... ... ... | 82 |



10th September 1960]

SRI K. VINAYAKAM: Would it be possible for the Hon. Minister to give us an idea of the total income derived from the railways in our State to the Central Government?

THE HON. SRI R. VENKATARAMAN: It is not possible to give the income derived from any particular State. I can give the total income derived on the levy of surcharge on passengar fares for the whole country. For 1959–60 it is Rs. 13.07 crores and for 1960–61 (budget estimate) it is Rs. 12.66 crores.

SRI M. KALYANASUNDARAM: ரூட் மைலேஜில் பிரிப்பதை விட அந்தந்தப் பகுதிகளில் பிரயாணம் செய்தவர்களுடைய பிரயாணத்தின் அடிப்படையில் அதாவது, பிரயாண மைலேஜ் அடிப்படையில் ஒதுக்கினால் இன்னும் அதிகமாக வரும்படிவர அனுகூலமாக இராதா? அதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்?

THE HON. SRI R. VENKATARAMAN: இது பைனான்ஸ் கமிஷன் முடிவு செய்தது. கனம் அங்கத்தினர் சொல்வது சரி என்று அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. ரூட் மைலேஜ்தான் அனுமதிக்க வேண்டும் என்று அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.

SRI R. SRINIVASA IYER: The Deputy Minister for Railways has been saying in platforms that the Southern Railway is working at a loss of Rs. 2 crores (interruption). Platforms do not mean railway platforms. May I ask the Government whether we will be made to share the loss as can be expected by the Deputy Minister for Railways, in 1960 or even in future?

THE HON. SRI R. VENKATARAMAN: There is confusion in various statements. The financial result of working of railways in Madras State may be as the Deputy Minister for Railways has said. But this question relates to the surcharge on passenger fares which can never be a loss. On every passenger who travels there is a surcharge levied and the total amount is collected. 6.46 per cent of that will always come to us. There can be no question of sharing loss here.

SRI K. VINAYAKAM: Apart from the findings of the Finance Commission, will this Government think about the possibility of requesting the Central Government to allot these incomes as per population basis of each State?

THE HON. SRI R. VENKATARAMAN: A Finance Commission for the next five years has been appointed. Government will submit their memorandum to the new Finance Commission. Government will consider what is advantageous for Government to submit to the Finance Commission.

SRI M. KALYANASUNDARAM: கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலில் தெரிவித்தபடி பைனான்ஸ் கமிஷன் முன்பு

வைக்கக்கூடிய யோசனைகளை இந்த சபையின் முன்பு விவாதத்திற்கு வைத்த பிறகு அவர்களுக்கு அனுப்பப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: This question does not arise from the main question.

*Sugarcane (cultivation)*

*601 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் ஜில்லாவிலே 1960-ம் வருடத்திலே எத்தனை ஏக்கராக்களிலே கரும்பு பயிரிடப்பட்டிருக்கிறது?

(ஆ) "Sugarcane Development" திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட உதவிகளின் விவரங்கள் யாவை?

(இ) எத்தனை டன் இரசாயன உரம் விசேஷ சலுகைமீது எந்தெந்த தாலுக்காக்களிலுள்ள விவசாயிகளுக்கு கொடுக்கப் பட்டது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) About 26,340 acres.

(*b*) Under Sugarcane Development Scheme (i) a subsidy at 24 nP. is being paid to the ryots for the transport of cane setts per maund for distances up to six miles and 50 nP. per maund for distance exceeding six miles.

(ii) Premium at the rate of Rs. 10 per 100 maunds over and above the basic price as per local rates is being paid to the nurserymen as an incentive to produce good seed material.

(iii) Manurial demonstration plots are laid out under the supervision of the departmental staff to impress upon the ryots the need for applying optimum dosages of nitrogen and a sum of Rs. 50 is paid as subsidy for each plot.

(iv) Pesticides and Fungicides are sold at half cost to the Sugarcane crops throughout the year.

(*c*) The details of taluk-wise distribution of fertilisers are not available.

SRI P. G. MANICKAM: கோயம்புத்தூர் ஜில்லா கோபிசெட்டிபாளையம் தாலூகாவில் கரும்பு அதிகமாகச் சாகுபடி செய்யப்படுகிறது. ஆகையால் அங்கே ஒரு சர்க்கரை ஆலையை ஏற்படுத்த வேண்டுமென்று சர்க்காரால் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அதையும் இந்த போர்டு மூலம் ஏற்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சர்க்கார் உத்தரவு அனுப்புமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதைப்பற்றி உத்தரவு அனுப்புவதற்கில்லை. இந்தக் கோரிக்கைகள் எல்லாம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.





*Village Officers*

*602 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. ANANDAN): கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 14—4—1960-ல் தோட்டி, தலையாரிகள் சம்பளத்தைப்பற்றி ஏதேனும் விண்ணப்பம் கிடைத்ததா?

(ஆ) அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் பட்டது?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI S. M. ANNAMALAI: சமுதாய நலத் திட்டப் பகுதிகளில் தலையாரி, தோட்டி இவர்களுக்கு இரண்டு மூன்று ரூபாய் அதிகமாகச் சம்பளம் தரப்படும் என்று சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிருர்கள். அது போதுமா? அவர்கள் வாங்கக்கூடிய சம்பளத்தைக்கொண்டு அவர்களால் வாழ்க்கை நடத்த முடியுமா? இதை ஏன் சர்க்கார் பரிசீலனை செய்து கொஞ்சம் உயர்த்துவதற்கு முயற்சிக்கக்கூடாது?

THE HON. SRI M. A. MANICKAVELU: விண்ணப்பம் வந்திருக்கிறதா என்ருர்கள். இல்லையென்றேன். ஏன் உயர்த்தக்கூடாது என்றுதான் இன்னும் அநேகம் துறைகளில் கேட்டு வருகிருர்கள். அந்தமாதிரி இதுவும் ஒன்று.

SRI K. ANBAZHAGAN: கிராமங்களில் பணியாற்றுகிற தோட்டி, தலையாரி முதலியவர்களைக் கூட கௌரவ உத்தியோகஸ்தர்கள் என்று அரசாங்கம் கருதுகிறதா?

THE HON. SRI M. A. MANICKAVELU: அவர்கள் புல் டைம் சர்வெண்ட்ஸ் ஆகத்தான் கருதப்படுகிருர்கள்.

SRI P. G. MANICKAM: தோட்டி, தலையாரி முதலியவர்களை முழு நேர ஊழியர்களாகக் கருதி சம்பளத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இப்பொழுதே அவர்கள் கௌரவ வேலைக்காரர்களாகவே கருதப்படுகிருர்கள் என்று நினைக்கிறேன். கிராமங்களில் இருக்கக்கூடிய நிலைமையை அனுசரித்துத்தான் அவர்களுக்கு சம்பளம் கொடுக்கிருேம். சமீபத்தில்தான் கொஞ்சம் உயர்த்தியிருக்கிருேம்.

SRI N. R. THIAGARAJAN: இந்தத் தலையாரி முதலானவர்களுக்கு சமீபத்தில் உயர்த்தியிருக்கும் சம்பளம் கூட போதாது என்ற முறையில் இன்னும் சற்று உயர்த்திக்கொடுக்க யோசனை செய்வார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU: சில மாதங்களுக்கு முன்போ சில வருஷங்களுக்கு முன்போதான் கிராம சிப்பந்திகளுடைய சம்பளம் உயர்த்தப்பட்டது. இப்போது பே கமிஷன்

[10th September 1960

சிபார்சு வந்து அநேகம் பேர்களுக்கு சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் அமுலுக்கு வந்தபிற்பாடு யோசிக்கலாம்.

SRI K. ANBAZHAGAN: கிராம சிப்பந்திகளை முழு நேர ஊழியர்கள் என்று அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். முழு நேர சர்க்கார் ஊழியர் என்றால் குறைந்தபட்சம் 60 ரூபாய் சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்று பே கமிஷன் சிபார்சு செய்திருக்கிறது. அந்த அடிப்படையில் சம்பளம் உயர்த்திக்கொடுக்கப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: முழு நேர ஊழியர்கள் என்று நான் சொல்வதும் சப்ஜெக்ட்டு கரெக்ஷன்தான். ஞாபகத்தில் இருந்து சொல்கிறேன்.

SRI J. MATHA GOWDER: கிராம ஊழியர்களுக்கு சென்ற சில ஆண்டுகளுக்கு முன் உடுப்பு கொடுக்கப்பட்டது. அப்புறம் கொடுக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. வருடா வருடம் உடுப்புகளையாவது கொடுப்பதற்கு அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: தனியாகக் கேள்வி கேட்டால்தான் பதில் சொல்ல முடியும்.

SRI T. IRUSAPPAN: கிராம தோட்டி, தலையாரி முதலியவர்கள் கௌரவ உத்தியோகஸ்தர்கள் என்று சொல்லப்படுகிறது. முன்காலத்தில் அவர்களுக்கு மானியம் கொடுத்திருந்தார்கள். அதை அனுசரித்து இன்றைக்கு அவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்க பரிசீலனை செய்தால் நலமாக இருக்காதா என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: இது ஒரு பெரிய பிரச்னை. மேலும் பண விஷயம் கலந்திருக்கிறது. கேள்வி மூலமாக இதற்குச் சரியான பதில் கொடுக்க முடியாது.

MR. SPEAKER: கேள்வி 603, 604 ஆகிய இரண்டுக்கும் சேர்த்து பதில் அளிக்கும்படியாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*Buckingham Canal*

* 603 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) பக்கிங்ஹாம் கால்வாயை மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்ப்பதற்கு திட்டத்தை மாற்றி (revised estimate) அனுப்பும்படி மத்திய சர்க்கார் மாநில சர்க்காரைக் கேட்டார்களா?

(ஆ) அப்படியானால் முதலில் போட்ட திட்டச் செலவு எவ்வளவு? மாற்றி அமைக்கப்பட்ட திட்டச் செலவு எவ்வளவு?



10th September 1960]

THE HON. SRI P. KAKKAN: (*a*) Yes, Sir.

(*b*) Estimated cost of the proposals sent by this Government—Rs. 60 lakhs.

Provision proposed to be made by the Government of India in Third Five-Year Plan—Rs. 10 lakhs.

* 604 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) பக்கிங்ஹாம் கால்வாயைப் போக்குவரத்துக்காக அபிவிருத்தி செய்வதற்கான திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா?

(ஆ) அப்படியானால், அதன் விவரங்கள் யாவை?

THE HON. SRI P. KAKKAN: (*a*) Yes, Sir.

(*b*) The details of the works contemplated are—

(1) Purchase of a dredger for carrying out dredging in the Buckingham Canal and the maintenance of a uniform draft depth by drawing up a scheme in consultation with the Government of Andhra Pradesh;

(2) Provision of terminal facilities on Buckingham Canal at Madras;

(3) Improvements to Buckingham Canal and its Low paths; and

(4) Maintenance of the Buckingham Canal in a fit condition for navigation.

SRI S. M. ANNAMALAI: அறுபது லட்சத்திலிருந்து பத்து லட்சமாகக் குறைக்கப்பட்ட காரணத்தினால் விடப்பட்ட திட்டங்கள் யாவை? ஏன் அந்தப் பணம் குறைக்கப்பட்டது?

THE HON. SRI P. KAKKAN: நாம் 60 லட்சம் திட்டம் போட்டோம். மத்திய சர்க்கார் பத்து லட்சத்திற்குத்தான் ஒத்துக்கொண்டார்கள். அது போதாது, மேலும் 30 லட்சம் கொடுக்கவேண்டும் என்று சீப் இன்ஜினியர் சொல்லியிருக்கிறார்கள். அது இந்த அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிறது.

SRI P. G. MANICKAM: நம் அரசாங்கத்தினால் போடப்பட்ட எஸ்டிமேட் தொகை எவ்வளவு? எஸ்டிமேட் போட்டுத்தானே 60 லட்சத்திற்கு மத்திய சர்க்காருக்கு அனுப்பினீர்கள்? அப்படியும் பத்து லட்சமாக ஏன் குறைத்தார்கள்? அதிகப்படியான பாக்கித் தொகையும் வேண்டுமென்று மத்திய சர்க்காருக்கு நம் சர்க்கார் தெரிவித்திருக்கிறார்களா?

THE HON. SRI P. KAKKAN: இன்னும் முப்பது லட்சமாவது வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இது அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிறது.

[10th September 1960

SRI K. VINAYAKAM: சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் இந்த நகரப் பகுதிக்கு உள்ளிட்ட பக்கிங்ஹாம் கால்வாயில்தான் அதிக துர்நாற்றம் அடிக்கிறது. இது நகர மக்களைப் பாதிக்கிறது. இதைப் போக்குவதற்கு இந்தத் திட்டத்தில் வழி இருக்கிறதா? அதுவும் சென்டிரல் ஜெயில் நைட் சாயிலை எல்லாம் இதில் விடுகிறார்கள். ஆஸ்பத்திரி கழிவு நீர் எல்லாம் விடப்படுகிறது. இதனால் துர்நாற்றம் அதிகம் ஏற்படுவதால் இதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்? அதற்கான திட்டம் என்ன?

THE HON. SRI P. KAKKAN: இதற்காகத்தான் ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டு அது பரிசீலனை நடத்தி வருகிறது. நல்ல முறையில் இது கவனிக்கப்படும்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Sir, are the Government aware of the fact that the work done in this Buckingham Canal area is so shabby that there is lot of corruption and further, boats are not able to supply firewood and other articles properly to Madras City. May I know, Sir, whether there is any proposal under the Government to take up the work departmentally so that the work could be done within the amount allotted by the Government of India?

THE HON. SRI P. KAKKAN: I think the hon. Member may put a separate question. However, necessary steps are being taken.

SRI M. MAYANDI NADAR: இந்த பக்கிங்காம் கால்வாய் எங்கிருந்து தொடங்குகிறது? சமுத்திரத்தில் போய் கலக்கிறதா?

THE HON. SRI P. KAKKAN: இந்த பக்கிங்காம் கால்வாய் ஆந்திராவில் வெகுதூரத்திலிருந்து தொடங்கி, சென்னையில் சமுத்திரத்தில் போய் விழுகிறது.

SRI R. SREENIVASA IYER: 10 லட்ச ரூபாய் மத்திய அரசாங்கம் கொடுப்பதாகச் சொல்லும் தொகை மராமத்து இலாகா தொகையா? அல்லது சுகாதாரத்துறையிலே துர்நாற்றத்தைப் போக்குவதற்குக் கொடுக்கப்படும் தொகை பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்டுக்கும் மராமத்து இலாகாவுக்கும் சேர்த்துக் கொடுக்கப்படுமா ? என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN: அவர்கள் இந்த பத்து லட்ச ரூபாய்த் தொகையை குறிப்பிடுவது terminal facilities of Madras and improvements to Buckingham Canal and its low paths என்பதற்காக.

SRI A. VEDARATHNAM: மத்திய அரசாங்கம் வாடர்வேஸ் கமிஷனை நியமித்து அந்த கமிஷன் மூலமாக இதைப்பற்றி என்ன சிபார்சு செய்திருக்கிறது? இந்தக் கால்வாயை நாகப்பட்டினம், வேதாரண்யம் கால்வாயுடன் இணைக்கும் திட்டம் ஏதாவது இருக்கிறதா? அப்படியானால் அதன் விவரம் என்ன?

MR. SPEAKER: தனிக் கேள்வி போடவேண்டும்.



10th September 1960]

*Temporary establishment (Survey Department)*

* 605 Q.—SRI N. R. PALANISAMI (on behalf of SRI V. K. KOTHANDARAMAN): Will the Hon. the Minister for Revenue be pleased to state when the Government propose to revise the scales of pay of the temporary establishments of the Survey Department?

THE HON. SRI M. A. MANICKAVELU: The posts in the temporary establishment of the Survey and Land Records Department are on a fixed pay. The proposal to re-fix their pay is under consideration. Orders will be issued soon after the receipt of the Board's report which has been called for.

SRI R. SRINIVASA IYER: இந்த சர்வே டிபார்ட்மெண்ட் இரண்டு, மூன்று பார்ட்டியில் வேலை செய்கிறது. இதை டெம்பரவரி எஸ்டாபிளிஷ்மெண்ட் என்று தற்காலிகமாகவே 7 வருஷம், 10 வருஷமாக வேலை செய்துகொண்டு வருகிறார்கள். ஐந்து வருஷத்திற்குமேல் அப்படி வேலை செய்கிறவர்களை பர்மனெண்ட் செய்ய உத்தேசம் உண்டா? ஏராளமான பேர்கள் சர்வே செய்யும் வேலையில் ஈடுபட்டிருப்பதனால் இந்த சர்வே எஸ்டாபிளிஷ்மெண்டையே பர்மனெண்ட் செய்வதற்கு உத்தேசம் உண்டா?

THE HON. SRI M. A. MANICKAVELU: சம்பள கமிஷன் பர்மனெண்டாக இருப்பவர்களுக்கு இருக்கும் சம்பள வீதப் படியே டெம்பரவரியாக இருப்பவர்களுக்கும் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறது. டெம்பரவரியாக இருப்பவர்களை பர்மனெண்ட் செய்யவேண்டும் என்ற பிரச்னை எழவேயில்லை.

SRI N. K. PALANISAMI: பத்து வருஷம் சர்வீசில் இருப்பவர்களை அவசியம் பர்மனெண்ட் செய்யவேண்டுமென்று சம்பள கமிஷன் சிபார்சு செய்திருக்கிறதே. இதில் மூன்றில் இரண்டு பங்கு அம்மாதிரி டெம்பரவரியாக இருக்கிறார்கள். உடனடியாக அவர்களைப் பர்மனெண்டு செய்வதற்கு சர்க்கார் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை.

THE HON. SRI M. A. MANICKAVELU: எனக்குத் தெரிந்த வரை சம்பள கமிஷன் சொன்னது பர்மனெண்டாக இருப்பவர்களுக்கு கொடுக்கவேண்டுமென்று இருக்கும் சம்பளத்தை டெம்பரவரியாக இருப்பவர்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறது.

*Adult Schools*

* 606 Q.—SRI P. G. MANICKAM: கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1959-ம் வருடத்திலே நம் இராஜ்யத்தில் எத்தனை முதியோர் பள்ளிகள் இருந்தன?

(ஆ) 1960-ம் வருடத்திலே எத்தனை முதியோர் பள்ளிகள் திறக்கப்பட்டன?

(இ) இப்பள்ளிகளிலே எத்தனை பள்ளிகள் இதுவரைக்கும் மூடப்பட்டன?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) to (c) On 1st April 1959, there were 1,422 adult schools in the State. On 1st August 1959, the number fell to 1,345. The number of schools in existence after that date is not readily available. No new schools were opened in 1960. The entire policy of opening adult schools in Development Blocks is under review and by an order issued in November 1959, Collectors have been informed that till a final decision is taken on the policy question no new adult schools should be opened in the Blocks.

SRI P. G. MANICKAM: முதியோர் வாசகசாலையை ஏற்படுத்துவதன்மூலமாக ஏதாவது அனுகூலம் ஏற்பட்டிருக்கிறதா? இப்பொழுது இருக்கும் நிலைமை என்ன என்பதைப் பற்றி சர்க்கார் ஒரு அறிக்கை வெளியிடுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: முதியோர் கல்வி விஷயத்தில் எதிர்ப்பார்த்த அளவு பலன் காணோம். சில இடங்களில் வாத்தியார் இல்லாமல் பள்ளிகள் இருக்கின்றன. அதற்குக் காரணம் அங்கு படிப்பவர்களும் சரியாக வருவதில்லை, யாராவது ஒரு உபாத்தியாயரை மாற்றினால் அதற்குப் பதிலாக புதிய உபாத்தியாயர் வருவதில்லை.

SRI S. NAGARAJA MONIGAR: முதியோர் கல்வி பாடசாலை பெயரளவில் முதியோர் கல்வி பாடசாலையாக இருக்கிறதே தவிர, எனக்குத் தெரிந்தவரையில் 18 வயதிற்குட்பட்டவர்கள் தான் படிக்கிறார்கள். ஆகவே வயதை உயர்த்தும் விஷயத்தில் சர்க்கார் ஆலோசனை செய்வார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU: வயதுவந்தவர்கள் வந்து படிக்கச் சந்தர்ப்பம் இல்லையென்றால், யாராவது அங்கு படிக்கத்தானே வேண்டும். அப்படி அங்கு யாரும் இல்லை என்றால் வாத்தியார் சும்மா இருக்கவேண்டியிருக்கும்.

SRI N. MARUDACHALAM: 1956–57-ல் முதியோர் பாடசாலைகள் பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இப்பொழுது சில பள்ளிகள் மூடப்பட்டன. மறுபடியும் இந்தப் பள்ளிக்கூடங்களைத் திறந்து நடத்துவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்த மாதிரி பள்ளிக்கூடங்களில் வேலை செய்கிறவர்கள், மற்றப் பள்ளிகளில் வாத்தியாராக இருக்கக்கூடியவர்கள். அவர்கள் மாற்றப்பட்டால் அவர்களுக்குப் பதிலாக வரக்கூடியவர்கள் இந்த வேலையை எடுத்துக்கொள்வதில்லை. அதனால் பள்ளிகள் மூடப்படுகின்றன.



SRI K. VINAYAKAM : Sir, it is commonly believed that the money spent on these adult schools is a criminal waste and is spent on a dying generation. Do the Government agree with this kind of belief? If so, will the Government desist from wasting this money upon this useless endeavour?

MR. SPEAKER : The hon. Member has used a number of superlatives in his supplementary such as 'criminal waste of money', 'money spent on dying generation', 'useless endeavour' etc. I am of the view that such expressions need not be used in the House.

SRI K. VINAYAKAM : These terms are commonly used in the English language, Sir.

MR. SPEAKER : Yes, I know. Even in the English language, the hon. Member could use milder and gentler expressions. I appeal to the Members not to use such 'superlatives' in the House.

THE HON. SRI M. A. MANICKAVELU : I cannot subscribe to the view that it caters to the needs of a dying generation. I may inform the hon. Member that our Health Department is functioning so well that the average span of life has been raised from 27 to 42.

SRI C. NATARAJAN: இந்த முதியோர் கல்வி பாடசாலைகள் வட்டார வளர்ச்சி திட்டம் இல்லாத இடங்களில் இல்லை. இந்தமாதிரி இடங்களில் கொண்டுவருவதற்கு யோசனை இருக்கிறதா? இதில் ஆண்கள் எத்தனை பேர், பெண்கள் எத்தனை பேர் என்று கணக்கு சொல்லமுடியுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: கணக்கு இப்போது என்னிடத்தில் இல்லை. இது வட்டார வளர்ச்சி திட்டத்தின் கீழ்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

*Seepage (Lower Bhavani)*

* 607 *Q.*—SRI K. R. NALLASIVAM: கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) கீழ்ப்பவானி பாசனப் பகுதியில் " கசிவுநீர்ப் பாசனத் திட்டங்கள் " எத்தனை நிறை வேற்றுவதற்குத் திட்டம் முடிவு பெற்றிருக்கின்றன?

(ஆ) பலன் பெறும் நிலங்களின் விஸ்தீரணம் எவ்வளவு?

(இ) முன்பு கீழ் பவானிப் பாசனத்தில் சேராத நிலங்களில் எத்தனை ஏக்கர் இதன்மூலம் பயன் பெறுகின்றது?

(ஈ) தனித்தனியாக ஒவ்வொரு திட்டத்துக்காகும் செலவு தொகை எவ்வளவு?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) to (d) The attention of the Member is invited to the paper[a] placed on the table of the House.

[a] Printed as Appendix IV on pages 672-673 infra.

SRI K. R. NALLASIVAM: இந்த வருஷத்திலே மழையில்லாத காரணத்தால் நீர்க்கசிவு அனேகமாக ஆங்காங்கே நின்றுவிட்டது. இரண்டு மூன்று வருஷங்கள் ஒழுங்காக நடக்கிறதா என்று கணக்கு எடுத்ததின் பின்னுல் இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு யோசிக்குமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: பேப்பரிலே குறிப்பிடப்பட்டிருக்கும் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும்.

SRI V. S. MANIKKASUNDARAM: இப்பொழுது எடுத்துக்கொண்டிருக்கிற திட்டமல்லாமல் வேறு திட்டங்களும் பரிசீலனையில் இருக்கிறதா? எந்தெந்த திட்டங்கள் பரிசீலனையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: மற்ற திட்டங்கள் எடுத்துக்கொள்வதினுல் ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்டிருக்கிற சில திட்டங்கள் பாதிக்கப்படுமா என்று பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

*Co-operation*

* 608 Q.—SRI N. K. PALANISAMY: }
SRI A. VEDARATHNAM: } Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Centre has advised this Government to introduce the study of co-operation in Primary and Secondary Schools; and

(b) if so, the steps taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) Yes, Sir.

(b) The syllabuses framed for study of Tamil and Social Studies in schools in this State contain lessons on the Co-operative movement. The Government of India have been apprised of this position.

SRI A. VEDARATHNAM: இப்பொழுது சர்க்கார் ஹைஸ்கூலிலே பைபர் கேடெட் கோர்ஸ் கூட்டுறவு முறையிலே மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா? அவர்களுக்கு பிராக்டிகல் எக்ஸ்பீரியன்ஸ் உண்டாவதற்கு உயர்நிலைப்பள்ளிகளிலும் ஸ்டூடன்ஸ் கோவாப்ரேடிவ சொசைடி ஏற்படுத்தித் தர அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்த ரிவைஸ்ட் சிலபஸ்லே 1-லிருந்து 7-வரையிலும் இண்டக்ரேடட் எலிமெண்டரி கோர்ஸ்ல் டீச்சிங் ஆப் கோவாப்ரேஷன் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஸ்டாண்டர்ட் மூன்றில் சோஷியல் ஸ்டடீஸ் ஏற்பட்டிருக்கிறது. ஸ்டாண்டர்ட் 4, 5, 6-ல் பாங்கிங், கோவாப்ரேஷன் இதைப்பற்றி சொல்லிக்கொடுக்கப்படுகிறது. ரிவைஸ்ட் முறையிலே இதைப்பற்றி சொல்லிக் கொடுக்கமுடியும்.





MR. SPEAKER: இன்று, கடைசிநாள். இன்னும் 14 கேள்விகள் இருக்கின்றன. அவைகளை, இன்னும் கூடுதல் 15 நிமிடங்கள் உட்கார்ந்து முடித்து விடலாம்.

SRI R. SRINIVASA IYER: Sir, we can extend the Question-Hour by half an hour instead of 15 minutes as there is very little business to transact to-day.

MR. SPEAKER: Suppose questions are finished within fifteen minutes. So. I will extend it in the first instance by 15 minutes. If questions are not finished within that time, then I will extend the time further.

*Headquarters Hospital (Paramakudi)*

* 609 Q.—SRI V. SUBBIAH (on behalf of SRI K. RAMACHANDRAN): Will the Hon. the Minister for Revenue be pleased to state the present stage of the construction of the Headquarters Hospital at Paramakudi in Ramanathapuram district?

THE HON. SRI M. A. MANICKAVELU: Proposals for the acquisition of the lands required for the construction of the new buildings for the hospital have been called for from the Collector of Ramanathapuram.

SRI V. SUBBIAH: இம்மாதிரி ஒவ்வொரு தலைமை ஆஸ்பத்திரிக்கும் புது இடத்திற்கு எஸ்டிமேட் தயாரித்து வேண்டிய கட்டிடங்கள் ஆரம்பிக்காமல் இருக்கிறது. அவை எப்பொழுது ஆரம்பிக்கப்படும்.

THE HON. SRI M. A. MANICKAVELU: இது பரமக்குடி ஆஸ்பத்திரியைப் பற்றிய கேள்வி. இதில் சிறிது தாமதமானதற்குக் காரணம் அங்கு ஜாகை விஷயத்தில் எலெக்ட்ரிஸிட்டி கம்பெனிக்கும், போர்ட்டிற்கும் தகராறு இருந்தது. கடைசியில் அந்த தகராறு இடம் வேண்டாம், வேறு இடத்தில் கட்டலாம் என்று ஏற்பாடாகி இருக்கிறது.

SRI N. R. THIAGARAJAN: ராஜ்யத்திலுள்ள எல்லா தலைமை ஆஸ்பத்திரிகளையும் மாற்றியமைப்பதாக கேள்விப் பட்டேன். பரமக்குடியில் இன்னும் வேலை நடைபெறவில்லை. முதல் அமைச்சர் அவர்கள் தொகுதியாகிய சாத்தூரில்கூட அங்குள்ள தலைமை ஆஸ்பத்திரி பழைய காட்சியே அளிக்கிறது. ஆகவே எல்லாத் தலைமை ஆஸ்பத்திரிகளையும் மாற்றியமைத்து நல்ல கட்டிடங்களில் வைக்க முயற்சி எடுக்கப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இருக்கிற காட்சியை வேறு விதமாக மாற்ற வேண்டும், அதற்கு கொஞ்ச காலம் வேண்டும். தாலுகா தலைமை ஆஸ்பத்திரிகளை, ஏறக்குறைய ஜில்லா தலைநகர ஆஸ்பத்திரியில் எந்தளவு வசதி வேண்டுமோ அப்படிச் செய்ய திட்டம் போட்டு செய்துகொண்டு வருகிறோம். இதையெல்லாம் செய்து முடிக்க கொஞ்ச காலம் ஆகும். சில இடங்களில் இருக்கிற இடத்திலிருந்து மாற்றி வேறு

[10th September 1960

இடத்திற்குக் கொண்டுபோகவேண்டியிருக்கிறது. இட சௌகரியம் இல்லாததால் கொஞ்சகொஞ்சமாக, "பெஸ்ட் ப்ரோக்ராமா" கத்தான் செய்யமுடியும்.

*Cauvery waters*

*610 *Q.*—Sri A. VEDARATHNAM: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) காவிரியில் தண்ணீர் தட்டு ஏற்பட்டதற்கு மைசூர் அரசாங்கத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் நிகழ்ந்த மாறுதல் காரணமா?

(ஆ) கண்ணம்பாடி அணையில் எத்தனை அடிக்கு மேல் தண்ணீர் இருந்தால் அது சென்னை மாநிலத்திற்குக் கிடைக்கும்?

(இ) இப்படி தண்ணீர் தட்டு காவிரியில் ஏற்படும் சமயத்தில் மைசூரிலிருந்து உதவிபெற்று பின் அதை ஈடு செய்ய ஏதேனும் மார்க்கமுண்டா? அப்படியானால் அதன் விவரமென்ன?

The Hon. Sri P. KAKKAN: (*a*) No, Sir. There has been no change or revision in the Madras-Mysore Agreement on Cauvery waters.

(*b*) The question of level in Krishna Raja Sagar has no connection with our rights. The flows due to us are being sent every day.

(*c*) Generally when we have difficulties due to a poor monsoon, Mysore may not also be better off. So there will be no chances of borrowing irrigation supplies from Mysore and returning it afterwards.

Sri A. VEDARATHNAM: இந்த சபையிலேயே இதற்கு முன் பல அங்கத்தினர்களால், காவேரிக்கு வருகிற தண்ணீரை அதன் உபநதிகளை மைசூர் அரசாங்கம் கட்டுப்படுத்தி அந்தத் தண்ணீரை அவர்கள் பயன்படுத்திக்கொள்வதாக . . .

Mr. SPEAKER: கனம் அங்கத்தினர் அவர்கள் ஒன்று ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு வாரத்திற்கு முன் கனம் நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இதர மாகாணங்களைப் பற்றி நாம் பேசும்போது கொஞ்சம் ஜாக்கிரதையாக பேசவேண்டுமென்று. கனம் அங்கத்தினர் அவர்கள் இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்வார்கள் என நினைக்கிறேன். அதனால்தான் ஸ்ரீனிவாஸ ஐயர் அவர்கள் கொடுத்த கேள்விக்குக்கூட அனுமதி கொடுக்கவில்லை. இது சில நாட்களுக்கு முன் கொடுத்த கேள்வி. ஆகவே, உப கேள்வி கேட்கும்போது அதை அனுசரித்து கேட்கவேண்டும். மைசூர் அரசாங்கத்தைப் பற்றி இழிவாகப் பேசினால் அந்தக் கேள்விக்கு சம்மதம் கிடைக்காது.



10th September 1960]

Sri A. VEDARATHNAM: ரொம்ப ஜாக்கிரதையாகப் பேசுகிறேன். சம்பந்தம்...........

Mr. SPEAKER: சம்பந்தம் இருக்கிறதா இல்லையா என்று சபாநாயகர் சொல்லவேண்டும். சம்பந்தமில்லாவிட்டால், "அவுட் ஆப் ஆர்டர்" என்று சொல்லிவிடுவேன்.

Sri A. VEDARATHNAM: சட்டசபை கூட்டம் இன்று முடிவடைவதால், காவேரித் தண்ணிர் நாளுக்குநாள் குறைந்து வருகிற காரணத்தால் முன் குறிப்பிட்டபடி முறை ஸிஸ்டத்தை அமுலுக்கு கொண்டு வர உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா? அப்படியானால் போதிய காலத்தில் அறிவித்தால் விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும். அதுபற்றி தயவுசெய்து கனம் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

The Hon. Sri P. KAKKAN: தஞ்சை மக்களுக்கு தண்ணீர் தட்டு இல்லாமல் கொடுக்கவேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் முக்கிய அவா. செப்டம்பர் வரை இருக்கிறது. பின், தண்ணீர் குறைந்தால், பின்னர் ஏற்பாடு செய்யலாம்.

Sri R. SRINIVASA IYER: அக்ரிமெண்ட்படி நமக்கு தண்ணீர் சரியாக வந்து கொண்டிருக்கிறதா என்று பரிசீலனை செய்யப்பட்டதா? அப்படி பரிசீலனை செய்யும் நோக்கம் சர்க்காருக்கு உண்டா?

The Hon. Sri P. KAKKAN: பரிசீலனை செய்துதான் அப்போதைக்கப்போது இந்த சபையில் பதில் சொல்கிறேன்.

Sri M. KALYANASUNDARAM: காவேரிக்கு நியாயமாக வரவேண்டிய ஜலம் வேறு பகுதிகளுக்கு திருப்பப்படுகிறது என்று ஏதாவது இந்த அரசாங்கத்திற்கு இந்தச் சபை அங்கத்தினர் ஒருவர் மூலம் புகார் வந்ததா ? அதைப் பரிசீலித்துப் பார்த்தார்களா?

The Hon. Sri P. KAKKAN: ஸ்ரீனிவாஸ ஐயர் அவர்கள் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அது, அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிறது.

Sri S. NAGARAJA MONIGAR: கண்ணம்பாடி அணைக்குக் கீழ், அதில் சேரும் உப நதிகளுள்ள பிராந்தியங்களில், மைசூர் ராஜ்யத்தில் மழையில்லாததால் இங்கு தண்ணீர் வரவில்லை என்று சர்க்கார் கருதுகிறதா?

Mr. SPEAKER: The question is out of order.

Sri K. VINAYAKAM: இங்கு காவேரிக்கு வர. வேண்டிய தண்ணீர் எவ்வளவு அல்லது அதில் நமக்கு தர வேண்டிய பங்கை ஒரு வேளை தடை செய்கிறார்களா இல்லையா என்று பார்க்க நம் அரசாங்க என்ஜினியர்கள் அங்கு அடிக்கடி போய்

கணக்கு எடுப்பது வழக்கம். அப்படி இப்பொழுது வழக்கமாக எடுக்கிறார்களா? அந்த லெஜிட்டிமேட் ட்யூட்டியை தடுப்பதற்கு யாராவது ஏதாவது செய்கிறார்களா?

MR. SPEAKER: The hon. Member has put his question very cleverly. (Laughter). It is out of order.

*Land Colonizing Societies*

*611 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

*1959–60-ல் நிலமில்லாத விவசாயிகளுக்கு எந்தெந்த இடங்களில் நிலக்காலனி சொசைடிகள் ஆரம்பிக்கப்பட்டன?*

THE HON. SRI P. KAKKAN: A statement [a] showing the places where the land colonisation societies were organised during 1959-60 is placed on the Table of the House. The question of giving financial assistance to the societies is under the consideration of the Government.

SRI S. M. ANNAMALAI: மேஜை மீது வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் வட ஆற்காடு மாவட்டத்தில் ஒன்று கூட காணோம். காரணம் என்ன? அந்த மாவட்டத்தில் ஏதாவது சொஸைட்டிகள் ஆரம்பிக்கவேண்டுமென்று மனு வந்ததா? அதை பரிசீலித்தார்களா?

THE HON. SRI P. KAKKAN: சொஸைட்டி ஆரம்பிக்கிறதாகயிருந்தால் போதுமான இடங்கள் இருக்க வேண்டும். என்னிடமுள்ள தகவல்படி, இந்த ஜாபிதாவில் உள்ள இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நிலங்கள் இருந்தால் பின்னால் கவனிப்பார்கள்.

*612 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

*(அ) 1960–61-ம் வருடத்தில் ஹரிஜன விவசாயிகளுக்கு எத்தனை நிலக்குடியேற்ற சங்கங்கள் ஏற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது?*

*(ஆ) பதிவு செய்யப்பட்டிருக்கும் நிலக்குடியேற்ற சங்கங்களிலே எத்தனை ஹரிஜன விவசாயிகள் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள்?*

THE HON. SRI P. KAKKAN: (*a*) It is not possible to indicate any definite figure as the Organisation of Land Colonisation Co-operatives depends on various factors like the availability of lands, provision of funds, etc.

(*b*) About 3,094.

[a] Printed as Appendix V on page 674 infra.



SRI P. G. MANICKAM: இதற்கு என்று ஹரிஜன நல இலாகாவில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸ்பெஷல் டெப்டி கலெக்டர் அவர்கள் ஜில்லாக்களில் சுற்றுப்பிரயாணம் செய்து எந்தெந்தவிடங்களில் புது சங்கங்கள் ஏற்படுத்தலாம், எவ்வளவு ஏக்கரில் ஏற்படுத்தமுடியும் என்ற கணக்கு கொடுத்திருப்பின் அந்த விவரங்களை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN: அந்தக் கணக்குதான் மேஜை மீதுள்ள அறிக்கையில் இருக்கிறது. எங்கெல்லாம் விவசாயத்திற்கு சாதகமாக இடம் இருக்கிறதோ அங்கெல்லாம் கூட்டுறவு பண்ணை கொண்டு வர அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டு வருகிறது.

SRI N. MARUDACHALAM: இந்தக் கூட்டுப் பண்ணை சங்கங்களில் யார் யார் அங்கம் வகிப்பார்கள்? எவ்வளவு அங்கத்தினர்கள் இதில் இருப்பார்கள்?

THE HON. SRI P. KAKKAN: கூடுமான வரையில் 50-திலிருந்து 100 ஏக்கர் உள்ள நிலமாகயிருந்தால் பார்த்து கூட்டுப்பண்ணைக்கு சாதகமாகயிருந்தால் அதுபற்றி பரிசீலனை செய்யப்படும்.

*Facilities (Harijans)*

*613 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the Government have received any representation on 10th June 1960 from the people of Erode taluk about the provision of protected water-supply schemes for Harijans, formation of roads leading towards Harijan colonies and assignment of house-sites for Harijans in Erode taluk, Coimbatore district; and

(*b*) if so, the steps taken thereon?

THE HON. SRI P. KAKKAN: (*a*) No representation from the people of Erode taluk was received. But the hon. Member subsequently wrote to the Government detailing the requirements of Harijans in Erode Taluk.

(*b*) The requests are under the consideration of the Government in consultation with the Collector of Coimbatore and the Director of Harijan Welfare.

*Land holding (Ceilings)*

*614 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

*(அ) நில உச்ச வரம்பு சம்பந்தமாய் பரிசீலிக்க மத்திய அரசாங்கத் திட்டக் கமிஷன் நியமித்திருக்கும் கமிட்டியின் முடிவு எவ்வகையிலாவது நம் மாநில உச்ச வரம்பு மசோதாவை பாதிக்குமா?*

*(ஆ) அப்படியானால், அதன் விவரமென்ன?*

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) & (*b*) Sir, no official communication has been received from the Planning Commission in the matter.

SRI A. VEDARATHNAM: அப்படியில்லையானால், இப்போது உச்சவரம்புச்சட்டம் கொண்டு வர கால தாமதம் ஆவதற்கு அதுதான் காரணமோ என்று விவசாயிகள் ஐயுறு கிறார்கள். ஆகவே அது காரணம் இல்லையானால் இப்போது இருக்கின்ற காலதாமதத்தை தவிர்க்கும் வகையில், விவசாயி களுக்கு அனுகூலமாக நிலங்களை விற்பதற்கு போட்டிருக்கின்ற தடையை இச்சட்டம் வருகின்றவரையாவது மாற்றி வைக்க அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இப்போது கால தாமதம் ஒன்றும் ஏற்படவில்லை. பொறுக்குக் கமிட்டி இதைப் பற்றி எல்லாம் பரிசீலனை செய்வதற்காக வருகின்ற 19-ம் தேதி யிலிருந்து சிதம்பரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி போன்ற இடங்களுக்குப் போகின்றது. இதில் வேண்டிய நடவடிக்கைகள் எல்லாம் பிரோகிராம்படிதான் நடந்துகொண்டு வருகிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் இப்போது போட்டிருக்கும் சட்டத்திற்கு ஏதாவது விதிவிலக்கு கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஏற்கனவே இதற்கு வேண்டிய சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டு விட்டது என்று சொல்லிக்கொண்டிருந் தார்கள். ஆகவே இதற்கு என்று ஒரு பில் கொண்டு வந்து பின்னால் இந்த மாதிரி ஒன்றும் செய்ய வேண்டியதில்லை.

*Small-pox*

* 615 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) ஜவ்வாது மலையில் உள்ள கிராமங்களில் பெரியம்மை பரவியிருப்பது உண்மையா?

(ஆ) அப்படியானால் எத்தனை பேர்கள் இறந்தார்கள்?

(இ) அதைப் போக்க சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) Sporadic cases have been reported from one village only.

(*b*) One.

(*c*) Intensive vaccination work has been carried out to arrest the infection.

SRI S. M. ANNAMALAI: அந்த கிராமத்தில் அம்மை பரவி இருக்கிற தகவல் எப்பொழுது தாசில்தாருக்கு தெரியும் என்று சொல்ல முடியுமா? அந்த இடத்தில் ஏதாவது அம்மை போன்ற நோய்கள் வந்தால் கவனிப்பதற்கு காடாம்புலியூர் என்ற இடத்திலுள்ள பிரைமரி ஹெல்த் சென்டர்தான் உபயோகப்பட வேண்டும். அதோடு ஜவ்வாது மலையிலிருந்து மொபைல் யூனிட்டை ஆயங்காலத்திற்கு மாற்றிவிட்டார்கள்.



இதனால் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியவில்லை. ஆகவே ஜவ்வாது மலையில் ஒரு வைத்தியசாலையை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: தகவல் எப்போது அதிகாரிக்கு வந்தது என்கின்ற தகவல் என்னிடம் இல்லை. குறிப் பிட்ட அந்தக் கிராமத்தில் இந்த நோயினால் இரண்டு பேர்கள் பாதிக்கப்பட்டதாகவும், அதில் ஒருவர் இறந்து போய்விட்டார் என்றும், ஒருவர் பிழைத்துக் கொண்டார் என்றும் தகவல் இருக்கிறது. அந்த கிராமமே மிக சிறிய கிராமம். மொத்த ஜனத்தொகையே 250 பேர்கள்தான். இதற்கு பிற்பாடு வேறு எந்த கேஸூம் வந்திருப்பதாக தகவல் இல்லை.

*Harijan Uplift*

* 616 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1959–60-ம் வருஷத்தில் ஹரிஜன நலனுக்காக பட்ஜெட் நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட தொகையில் செலவழிக்கப்படாமல் கவர்மெண்டுக்கே திருப்பி அனுப்பப் பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) எந்தெந்த இனங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் எவ்வளவு தொகை செலவழிக்கப்படவில்லை?

THE HON. SRI P. KAKKAN: (*a*) The overall expenditure on "Harijan Uplift" during the year 1959–60 is in excess of the allotment.

(*b*) There were, however, savings in the following heads of expenditure as detailed below:—

| *Head of account.* | *Final allotment including supplementary grants.* | *Expenditure.* | *Savings.* |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | RS. | RS. | RS. |
| A. Direction (Administration) .. | 2,89,500 | 2,81,041 | 8,459 |
| H. Schemes for the Welfare of Denotified Tribes (i) Aziznagar settlement. | 96,500 | 79,619 | 16,881 |
| J. Schemes for the Welfare of Backward Classes (i) Schemes with full grant. | 2,00,000 | 1,39,330 | 60,670 |

(But the savings were untilized to meet in part the excess expenditure under the other heads of accounts)

SRI P. G. MANICKAM: சர்க்கார் பட்ஜெட்டில் ஒதுக்கிய தொகையைவிட அதிகமாக செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பது வாஸ்தவம்தான். எந்தெந்த ஜில்லாக்களுக்கு எந்தெந்த இனங்களில் ஒதுக்கப்பட்டிருந்த பணம் செலவு செய்யாமல் திருப்பி அனுப்பப்பட்டன என்கின்ற புள்ளி விவரங்களை தெரிவிக்க முடியுமா?

THE HON. SRI P. KAKKAN: கனம் அங்கத்தினர் அவர்கள் ஜில்லாவாரியாக விவரங்கள் கேட்கின்றார்கள். அதற்கு தனிக் கேள்விதான் போட வேண்டும்.

[10th September 1960

*Sugar*

* 617 *Q.*—Sri P. G. MANICKAM: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாகாணத்திலே எத்தனை சர்க்கரை ஆலைகள் " Sugar Factories " இருக்கின்றன ?

(ஆ) 1959–60-ல் எத்தனை டன் சர்க்கரை இந்த ஆலைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டது ?

(இ) எத்தனை டன் சர்க்கரை பற்றுக்குறையாக இருந்தது?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) There are six sugar factories in the Madras State in actual production (five in Private Sector and one in Co-operative Sector). Two more in the Co-operative sector are expected to go into production by the end of this year.

(*b*) 73,873.04 tons.

(*c*) About 46,100 tons.

Sri A. GOVINDASAMI: விழுப்புரம் வட்டம் முண்டியம் பாக்கம் என்ற கிராமத்தில் சர்க்கரை ஆலை ஏற்படுத்த வேண்டும் என்பதைப் பற்றி இந்தச் சர்க்கார் மத்திய சர்க்காரிடத்தில் சிபாரிசு செய்ததா ? அதற்கு என்ன பதில் வந்தது ?

The Hon. Sri R. VENKATARAMAN: இது மட்டுமல்ல, அத்துடன் வேறு சில பாக்டரிகள் பற்றியும் சிபாரிசு செய்யப் பட்டது. இதற்கு இதுவரையிலும் முடிவு எடுக்கப்படவில்லை.

*Physical Education*

* 618 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any proposal to start a college of Physical Education; and

(*b*) if so, when and where?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) No. Sir. There are already three colleges functioning.

(*b*) Does not arise.

Sri N. K. PALANISAMI: சர்க்கார் நடத்தக்கூடிய பிஸிக்கல் ட்ரெயினிங் ஸ்கூல் எத்தனை இருக்கிறது?

The Hon. Sri M. A. MANICKAVELU: இப்பொழுது 3 டிரெயினிங் இடங்கள் நம் நாட்டிலிருக்கின்றன. ஒய்.எம்.ஸி.ஏ. சைதாப்பேட்டை, மாருதி பஸிக்கல் ட்ரெயினிங் காலேஜ் பெரியநாயகன்பாளையம், அழகப்பா செட்டியார் காலேஜ், காரைக்குடி.



10th September 1960]

Sri A. VEDARATHNAM: இப்போது இந்த காலேஜ் களுக்குத் தேவையிருக்கிறதா? இப்போது இந்த மூன்று காலேஜ் மூலம் கிடைக்கின்ற இன்ஸ்ட்ரக்டர்கள் போதாது என்ற பற்றுக்குறை இருக்கிறதா? அப்படியானால் மேலும் புதிய காலேஜ் ஏற்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறதா?

The Hon. Sri M. A. MANICKAVELU: புதிய காலேஜ்க்கு ஒன்றும் தேவையிருப்பதாக தெரியவில்லை. இந்த மூன்று காலேஜ்களிலுமே வேண்டியவர்கள் பயிற்சி பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கின்றது என்று தெரிகிறது.

*Mineral wealth*

* 619 *Q.*—Sri P. G. MANICKAM: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) எந்தெந்த மாவட்டங்களிலே புதிதாக ஆராய்ச்சி செய்யப்பட்ட ( mineral wealth ) கனிவளங்களின் திட்டம் 3-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படும் ?

(ஆ) இத் திட்டங்களைச் சேர்ப்பதற்கு ஆன யோசனையை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டு விட்டதா ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Government decline to disclose the information in public interest.

*High School (Hubbathalai)*

* 620 *Q.*—Sri K. VINAYAKAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that there was no qualified teacher to handle composite mathematics in the District Board High School, Hubbathalai, Aruvankadu, Nilgiris district:

(*b*) whether the students were compelled to take to General Mathematics during the middle of the academic year for want of a qualified teacher; and

(*c*) whether any representation was received by Government on 8th April 1960 to this effect?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) No, Sir. There was a qualified teacher in the school.

(*b*) As the portions to be taught in Composite Mathematics had not been fully covered the students requested that they may be allowed tc take the examination in General Mathematics. This was allowed.

(*c*) Yes, Sir.

Sri K. VINAYAKAM : Were the students permitted to take General Mathematics subiect instead of Composite Mathematics subject for want of qualified Mathematics L.T. in that school? Was not complaint received from one of the parents belonging to that

[10th September 1960

school area? Was it not rectified after the complaint was made to the Government and after considerable agitation was carried on by the students?

THE HON. SRI M. A. MANICKAVELU : There was one qualified teacher but more would be required. Later on they were posted. Meanwhile students themselves requested that they would take General Mathematics. A complaint was received by a parent and it is reported that his son also appeared and failed in the examination.

*Sky-scrapers*

*621 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரில் அடுக்கு மாடிகள் கட்டுவதற்கான திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா ?

(ஆ) அப்படியானல் விவரங்கள் யாவை?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) Details have not been worked out.

*House-sites (Harijans)*

*622 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஹரிஜனங்களுக்கு வீட்டு மனைக்கட்டுக்கான நிலங்கள் வாங்குவதற்கு எவ்வளவு சொகை தேவைப்படும் என்பதைத் தெரியப்படுத்தும் படியாக இந்திய சர்க்கார் சென்னை சர்க்காரை கேட்டார்களா ?

(ஆ) அப்படியாயின் விவரங்கள் யாவை?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The basis for working out the scheme of provision of developed house-sites to Harijans is under examination of the Government. The cost of the scheme has therefore not yet been settled.

SRI P. G. MANICKAM: ஸார், வீட்டுமனைகள் தேவை என்று ஆயிரக்கணக்கான மனுக்கள் ஒவ்வொரு ஜில்லாவிலும் வந்து கொண்டிருக்கின்றன. இம்மாதிரி தேவைப்படும் வீட்டு மனைகளுக்கு எவ்வளவு தொகை தேவைப்படும் என்கிற புள்ளி விவரங்களைச் சேகரித்து இந்திய சர்க்காருக்கு அனுப்ப இந்தச் சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI P. KAKKAN: கனம் அங்கத்தினர் முதலாக கேட்டிருக்கும் கேள்விக்கும் இப்போது கேட்கும் கேள்விக்கும் சம்பந்தமில்லை என்று நினைக்கிறேன். ஏற்கெனவே வீடு கட்டும் திட்டத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்த



10th September 1960]

வேண்டும் என்பதை மத்திய சர்க்கார் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதன்படி ஒவ்வொரு வீட்டுக்கும் எவ்வளவு செலவு செய்ய வேண்டியிருக்கும் என்பதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. இன்னும் அதைப்பற்றி முடிவு செய்யப்படவில்லை.

## UNSTARRED QUESTIONS

*Fertilizers*

37 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the quantity of Ammonium Sulphate, Urea and other chemical fertilizers allotted to Tirunelveli district and Kanyakumari district respectively for 1957-58 and for 1958-59 up to date ;

(*b*) the quantity distributed through co-operative societies and through merchants ;

(*c*) whether there is any control for the selling price of these fertilizers by individual merchants ; and

(*d*) if so, the steps taken so far to enforce this control ?

*A.*—A paper* is placed on the table of the House.

*Housing Scheme for fishermen*

38 *Q.*—SRI R. SRINIVASA IYER : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government are aware of the address presented by the residents of Mallipatnam village, Thanjavur district, to the Hon. the Minister for Local Administration when she visited the place to open the Co-operative Fishermen's Godown ; and

(*b*) if so, the action taken thereon ?

*A.*—(*a*) Yes, Sir.

(*b*) The welcome address, dated 16th September 1958, contained the following requests :—

(1) Supply of nylon yarn for 30 boats at 100 lb. per boat ;

(2) immediate sanction of long-term loan applied for the purchase of nylon yarn ;

(3) improvement to Kattayapadu River canal to facilitate stationing of boats ;

(4) construction of houses for fishermen with Government subsidy ; and

(5) laying of road to connect Mallipattinam village with neighbouring towns and construction of a bridge over the Rajamadam river to facilitate fish transport.

* Printed as Appendix VI on page 674-675 infra.

The action taken on the above requests is indicated below :—

*Item* (1) *above*.—Sanction has been accorded by the Director of Fisheries for the distribution of 50 lb. of Teralyne yarn on 14th February 1959 to the Mallipattinam Fishermen Co-operative Society. Besides, the society has imported nylon yarn to the value of Rs. 13,350 during the period 1st April 1958 to 31st March 1959.

*Item* (2) *above*.—The loan of Rs. 14,000 applied for by the society was sanctioned and it drew the amount on 11th December 1958.

*Item* (3) *above*.—The sand bar at the mouth of the river has to be deepened by more than 5 feet and maintained throughout the year to enable the boats to use the river for safe anchorage. The opening of the river mouth and maintenance of sufficient depth over the bar will be a very costly proposition.

*Item* (4) *above*.—Under the State Housing Scheme for Fishermen, the Director of Fisheries has allotted 20 houses to the Mallipattinam Fishermen Co-operative Society and the work is being taken up during the current year.

*Item* (5) *above*.—The Director of Fisheries has reported that there is no proposal at present to undertake this work.

### *Mineral Survey*

39 *Q*.—Sri P G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கனிப்பொருள் ஆராய்ச்சிக்காக சென்னை மாநில சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இலாகா மூலம் என்னென்ன கனிப்பொருள்கள் ஆராய்ச்சிகள் நடைபெற்றன ?

(ஆ) எந்தெந்த இடங்களிலே என்னென்ன கனிப்பொருள்கள் இடைக்கலாம் என்று ஊர்ஜிதப்படுத்தப்பட்டன ?

(இ) எந்தெந்த இடங்களிலே என்னென்ன கனிப்பொருள்கள் இடைக்கலாம் என்று ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன ?

*A*.—(*a*), (*b*) & (*c*) A statement containing the particulars is given below :—

*Clause* (*a*)—

(1) Limestone in Nanguneri and Srivaikuntam taluks of Tirunelveli district.

(2) Graphite deposits at Kurunjakulam in Tirunelveli district.

(3) Limestone deposits of Madukkarai and Ettimadai areas in Coimbatore district.

(4) Limestone deposits of Samugarangapuram and Valliyoor in Tirunelveli district.

(5) Fire clay deposits of Sivaganga in Ramanathapuram district.

(6) Moonstone (semi-precious stones) at Sennimalai area of Sivayarpalayam, Kangayam taluk in Coimbatore district.

(7) Limestone in Namakkal taluk, Salem district.

(8) Bauxite at Yercaud in Salem district.

(9) Supposed black diamond at Pattiveeranpatti in Madurai district.



(10) Limestone at Ambasamudram and Koilpatti taluks.

(11) Pebbles at Vallam in Thanjavur.

(12) Natural gas at Vallampadugai in South Arcot district.

(13) Bauxite and iron ore in the Nilgiris district.

(14) Oil resources in Cauvery-Coleroon basins (with Sri A. M. N. Ghosh of Oil and Natural Gas Commission to find out the geological data).

(15) China clay deposits in Gudalur (Kolapalli) taluk in the Nilgiris.

(16) Limestone in Devaramalai area in Tiruchirappalli district.

(17) Gypsum at Tiruchirappalli district.

(18) Gold deposits in Rasipuram taluk in Salem district.

(19) "Brass" deposit near Golden Rock in Tiruchirappalli.

(20) Ilmenite ore containing titanium at Kollimalai in the Nilgiris.

(21) Fossil wood near Cuddalore.

*Clause* (*b*)—

(1) Bauxite ore in Yercaud in Salem and around Coonoor and Ootacamund in the Nilgiris.

(2) Graphite in Kurunjakulam in Tirunelveli district.

(3) Limestone deposits in Ettimadai and Madukkarai areas in Coimbatore district, Samugarangupuram, Valliyoor, Koilpatti taluk, Ambasamudram taluk, Sankaranainarkovil taluk and Srivaikuntam taluk, Tirunelveli taluk in Tirunelveli district, Namakkal taluk in Salem district, Devarmalai area in Tiruchirappalli and Madurai districts.

(4) Gypsum deposits in Ariyalur, Perambalur, Lalgudi, Periakurukkai and other places of Tiruchirappalli district and in Kandasamipuram, Kumarasubramaniapuram areas of Koilpatti taluk.

(5) Fire clay deposits in Sivaganga, Ramanathapuram district.

(6) Moonstone (semi-precious stone) in Sennimalai of Sivayarpalayam in Kangayam taluk in Coimbatore district.

(7) Iron ore deposits in Kanjamalai, Thirthamalai areas in Salem district, Kuruduguli and other places in the Nilgiris.

(8) Vallam pebbles near Vallam in Thanjavur district.

(9) Natural gas in Neypathur, Mangamadam and Vallampadugai in Thanjavur district.

(10) Finding out geological data in regard to oil resources in Cauvery-Coleroon basins in Tiruchirappalli and Thanjavur districts.

(11) Fossil wood in Thiruvikarai near Cuddalore in South Arcot district.

(12) China clay deposits in Gudalur taluk in the Nilgiris district.

(13) Gold deposits in Singiliankombai in Rasipuram taluk of Salem district.

(14) Ilmenite ore containing Titanium at Kollimalai Tea Estate in the Nilgiris.

*Clause (c)*—

(1) Fire clay deposits in Sivaganga in Ramanathapuram district.

(2) Bauxite deposits near Kodanad and other places in Coonoor and Ootacamund taluks of the Nilgiris.

(3) Raw materials for asbestos in Thathaiyengarpet in Musiri taluk of Tiruchirappalli district.

(4) Iron ore deposits in the Nilgiris.

(5) Gypsum deposits in Tiruchirappalli district.

(6) China clay deposits in the Nilgiris, Gudalur taluk (Kolapalli area).

### *Fire accidents in Vedaranyam firka*

40 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேதாரண்யம் பிர்க்காவில் கடந்த மூன்று ஆண்டுகளில் எத்தனை தீ விபத்துக்கள் நேர்ந்திருக்கின்றன ?

(ஆ) இவற்றின் சேதத்தின் உத்தேச மதிப்பென்ன ?

(இ) தீயணைக்கும் படை இதில் எத்தனை விபத்தில் பங்கெடுத்துக் கொண்டது ?

(ஈ) அதன் விவரமென்ன ? அதற்கான செலவென்ன ?

(உ) இப்பகுதி மக்களுக்கு தீயணைக்கும் படை ஏற்படுத்த உத்தேசமுண்டா ?

| | 1957–58. | 1958–59. | 1959–60, |
|---|---|---|---|
| *A.*—Clause (அ) .. .. .. | 1 | 5 | 8 |
| Clause (ஆ) .. .. Rs. | 300 | Rs. 800 | Rs. 13,670 |
| Clause (இ) .. .. .. | 1 | Nil. | 2 |

Clause (ஈ) The three fire accidents reported to the Fire Service and attended by the Fire Station at Tiruvarur, are given below :—

(i) Fire accident at Marathoor Thekku Chetti P.O., Thanjavur district, on 3rd May 1957.

(ii) Fire accident at Kasi street, Thopputhurai, Tiruturaipundi taluk, on 20th July 1959.

(iii) Fire accident at Vedaranyam, Tiruturaipundi taluk, on 31st July 1959.

The expenditure incurred by the Fire Service department in respect of the above three fires is Rs. 151·61 nP.

Clause (உ) None, at present.



### *Training Centres for Grama Sevaks*

41—Q.—SRI P. G. MANICKAM : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிராம சேவிகைகள், கிராம சேவக்குகள் பயிற்சிக்கான நிலையங்கள் சென்னை ராஜ்யத்தில் எந்தெந்த இடங்களில் இருக்கின்றன ?

(ஆ) ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் இதுவரைக்கும் எத்தனை கிராம சேவிகைகளுக்கும் கிராம சேவக்குகளுக்கும் பயிற்சி கொடுக்கப் பட்டன ?

(இ) இவர்களுள் ஹரிஜனங்கள் எத்தனை பேர் ?

*A.*—(அ) & (ஆ) Training Centres for Grama Sevaks and Training Centres in Home Science for Grama Sevikas have been established at the following places. The number of trainess so far trained at these centres is indicated against each centre—

| Grama Sevak Training Contres. (1) | Number of trainees so far trained from each centre. (2) |
|---|---|
| Rural Extension Training Centre, S.V. Nagaram .. | 190 |
| Rural Extension Centre, Kovilpatti .. | 440 |
| Rural Extension Centre, Krishnagiri .. | 316 |
| Rural Extension Training Centre, Aduthurai .. | 308 |
| Rural Extension Training Centre, Pattukkottai .. | 384 |
| Rural Extension Training Centre, Bhavanisagar .. | 336 |
| Rural Extension Training Centre, T. Kallupatti .. | 367 |
| Total .. | 2,341 |

A Home Science Wing for training the Grama Sevikas is attached to the following Rural Extension Training Centres and 321 Grama Sevikas have been so for trained as shown below :—

| | |
|---|---|
| Rural Extension Training Centre, Bhavanisagar .. .. | 124 |
| Rural Extension Training Centre, T. Kallupatti .. .. | 123 |
| Rural Extension Training Centre, S.V. Nagaram .. .. | 74 |
| Total .. | 321 |

(இ) Excluding the centres at T. Kallupatti and Krishnagiri, for which information in respect of Harijan Trainees are not available, 49 Harijan Grama Sevak trainees and 4 Harijan Grama Sevika trainees have been trained from the other Rural Extension Training Centres and the Home Science Wings, respectively.

*Loans given by the Khadi and Village Industries Commission*

42 Q.—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960–61-ம் வருடத்திற்கு Khadi and Village Industries Commission மூலமாக சென்னை ராஜ்ஜியத்துக்குக் கிடைத்த கடன்தொகை எவ்வளவு ? மான்யத்தொகை எவ்வளவு ?

(ஆ) இத்தொகை மூலம் என்னென்ன தொழில்களுக்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்படும் ?

A.—(அ) & (ஆ) The particulars are furnished below :—

| Name of industry. | Grant. | Loan. |
|---|---|---|
| | RS. | RS. |
| 1 Village Pottery .. .. .. .. | 35,520 | 67,500 |
| 2 Palm Gur .. .. .. .. | 5,00,257 | 1,87,925 |
| 3 Village Oil .. .. .. .. | 1,28,100 | 1,95,600 |
| 4 Village Leather .. .. .. .. | 53,160 | 1,00,000 |
| 5 Gramodyog Sales Depots .. .. .. | 19,550 | 23,000 |
| 6 Gur and Khandasari .. .. .. | 45,000 | 45,000 |
| 7 Handmade Paper .. .. .. .. | 19,650 | 9,000 |
| Total .. | 8,01,237 | 6,28,025 |

*Small-sized Co-operative Societies*

43 Q.—SRI P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதில் அளிப்பாரா—

(அ) 1960-ம் வருடத்திலே Full Finance Scheme-ல் எந்தெந்த இடங்களிலே கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன ?

(ஆ) இத் திட்டத்தின் கீழ் எத்தனை விவசாயிகளுக்கு உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன ?

(இ) எவ்வளவு ரூபாய் இத் திட்டத்துக்காகச் செலவிடப்படும் ?

A.—(a) A statement showing the places where small-sized societies were organized during 1959–60 under the Full Finance Scheme is given below :—

(b) Information as to the number of agriculturists to whom credit facilities were extended under the scheme is not available, but the amount of loan issued to them during 1959–60 was Rs. 170·32 lakhs ; and

(c) During the current year subsidies amounting to Rs. 76,000 (rupees seventy-six thousand) will be paid by Government to the Co-operative Central Banks towards the cost of the additional supervisors employed for implementing the scheme. Besides this, Government would



also reimburse the losses that the co-operatives might sustain on account of loans that have proved irrecoverable, to the extent of 66·2·3 per cent of the loss in any individual case, subject to an overall limit of ten per cent of the total short and medium-term loans issued by the co-operatives.

*Places where small-sized co-operative societies were newly organized during 1959–60 under the Full Finance Scheme.*

| Name of the block. | Places where societies have been newly organized. |
|---|---|
| 1 Srivilliputhur .. .. .. | (1) Thattankulampatti. |
| 2 Ootacamund .. .. .. | (2) Mattagundy.<br>(3) Kundah-Thuneri.<br>(4) Manikkal.<br>(5) Naduvattam.<br>(6) Kokkudal Co-operative Society at Kadanad. |
| 3 Agastheeswaram .. .. | (7) Devakulam.<br>(8) South Tamaraikulam.<br>(9) North Tamaraikulam.<br>(10) Rajavoor.<br>(11) Swamithoppu.<br>(12) Nallur.<br>(13) Ramanathichampudur. |
| 4 Orthanad .. .. .. | (14) Ambalapattu.<br>(15) Kakkarakottai. |
| 5 Kanai .. .. .. .. | (16) Perumbakkam.<br>(17) Milkaranai.<br>(18) Ariyur.<br>(19) Venmaniyathur.<br>(20) Kangianur.<br>(21) Kozhipattu.<br>(22) Siruvakkoor. |
| 6 Poonamallee .. .. .. | (23) Tirumanam.<br>(24) Vallavedu.<br>(25) Vayalanallur.<br>(26) Kamavarpalayam.<br>(27) Tiruverkadu. |
| 7 Sriperumbudur .. .. | (28) Kaduvancheri. |
| 8 Ottapidaram .. .. .. | (29) Melaveerapandiapuram.<br>(30) Shanmugapuram.<br>(31) Kodaiankulam.<br>(32) Veerapandiapulikulam.<br>(33) Kandasamipuram.<br>(34) Saravanapuram.<br>(35) Sinthalakattai (North).<br>(36) Sinthalakattai (South).<br>(37) Chandragiri (East).<br>(38) Melamarudur.<br>(39) Milagunatham. |

*Places where small-sized co-operative societies were newly organised during 1959–60 under the Full Finance Scheme*—cont.

| Name of the block. | Places where societies have been newly organized. |
|---|---|
| 11 Nagapattinam .. .. | (42) Vadagudi. |
| | (43) Palayoor. |
| | (44) Karuvelangadai. |
| | (45) Vadugacheri. |
| | (46) Veppancheri. |
| | (47) Erayangudy. |
| | (48) Villundamahadevi. |
| | (49) South Poyyur. |
| | (50) North Poyyur. |
| | (51) Sembia Mahadevi. |

*Drinking water wells*

44 *Q.*—Sri P. G. MANICKAM : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) 1959-60-ல் கோயம்புத்தூர் ஜில்லா, பவானி தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் கிராமக் குடிதண்ணீர் கிணறுகள் வெட்டப்பட எத்தனை கிராமப் பஞ்சாயத்துக்கள் விண்ணப்பித்திருக்கின்றன ?

(ஆ) பிற்பட்ட வகுப்பினர்களும் ஹரிஜனங்களும் குடியிருக்கும் எத்தனை கிராமங்களிலே குடிதண்ணீர் கிணறுகள் வெட்டப்படும் ?

(இ) 1959-60-ம் வருடத்தில் எத்தனை குடி-தண்ணீர் கிணறுகள் பவானி தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் வெட்டப்பட்டன ?

*A.*—(அ) Eleven panchayats.

(ஆ) One village.

(இ) Seventeen.

*Artificial Insemination Centres*

45 *Q.*—Sri P. G. MANICKAM : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதில் அளிப்பாரா—

(அ) 1959-60-ல் சென்னை ராஜ்யத்தில் கால்நடைகளுக்காக செயற்கை முறை கருத்தறிப்பு நிலையங்கள் எத்தனை ஏற்படுத்தப்பட்டன ?

(ஆ) எத்தனை கால்நடைகளுக்கு செயற்கை முறையில் கருத்தறிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ?

(இ) செயற்கை முறை கருத்தறிப்பு மூலம் எத்தனை கன்றுகள் பிறந்தன ?

(ஈ) இவைகளுள் எத்தனை கன்றுகள் இறந்துவிட்டன ?

*A.*—(*a*) Four Artificial Insemination Centres were established under the All-India Key Village Scheme in the rural areas of the State and four Artificial Insemination Centres were established in the urban areas ;

(*b*) & (*c*) 209,519 animals were served in all the existing centres in this State in the year 1959–60 ; 44,823 calves were born due to artificial insemination ; and

(*d*) Statistics about the number of calves died are not maintained by the Animal Husbandry department. No deaths of calves due to their being born by artificial insemination have been specially reported



*Medical Institutions in the Coimbatore district*

46 *Q.*—Sri P. G. MANICKAM : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதில் அளிப்பாரா—

கோயம்புத்தூர் ஜில்லாவிலே எத்தனை—

(1) Government hospitals,
(2) Local Fund hospitals,
(3) Private hospitals,

இருக்கின்றன

*A.*—The number of medical institutions in the Coimbatore district as on 31st December 1959 are as follows :—

| | |
|---|---|
| I. (*a*) Government Hospitals .. .. .. .. | 10 |
| (*b*) Railway Hospitals .. .. .. .. | 3 |
| (*c*) Police Hospital .. .. .. .. | 1 |
| (*d*) Government Dispensaries .. .. .. | 5 |
| (*e*) Project Dispensary .. .. .. .. | 1 |
| (*f*) Primary Health Centres .. .. .. | 17 |
| II. (*a*) Local Fund Hospitals .. .. .. .. | Nil. |
| (*b*) Local Fund Dispensaries .. .. .. | 14 |
| (*c*) Municipal Dispensaries .. .. .. .. | 9 |
| (*d*) Panchayat Dispensary .. .. .. .. | 1 |
| III. (*a*) Private Hospitals .. .. .. .. | 5 |
| (*b*) Private Dispensaries .. .. .. .. | 2 |

*Water-supply Schemes*

47 *Q.*—Sri N. R. THIAGARAJAN : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதில் அளிப்பாரா—

1959 ஏப்ரல் 1-ம் தேதி முதல் 1960 மார்ச் 31 முடிய ஒவ்வொரு ஜில்லாவிலும் குடி தண்ணீருக்காக செலவு செய்த பணம் எவ்வளவு ?

*A.*—A statement showing the details asked for is appended below :—

*Statement showing the details of expenditure incurred during the year 1959–60 in each district under the Rural Water-supply Comprehensive Scheme and National Water-supply and Sanitation (Rural) Scheme.*

| *Name of district.* (1) | *Rural Water-supply Comprehensive Scheme.* (2) RS. | *National Water-supply and Sanitation (Rural) Scheme.* (3) RS. |
|---|---|---|
| Chingleput .. .. .. .. | 1,68,099 | Nil. |
| North Arcot .. .. .. .. | 3,95,021 | Nil. |
| South Arcot .. .. .. .. | 3,35,515 | 1,37,023 |
| Tiruchirappalli .. .. .. .. | 10,92,483 | 3,59,093 |
| Thanjavur .. .. .. .. | 2,51,078 | 4,10,372 |
| Ramanathapuram .. .. .. | 5,98,023 | 97,732 |
| Madurai .. .. .. .. | 3,01,438 | Nil. |
| Tirunelveli .. .. .. .. | 5,86,505* | 82,195 |
| Coimbatore .. .. .. .. | 6,17,392 | Nil. |
| Salem .. .. .. .. | 3,19,658 | Nil. |
| The Nilgiris .. .. .. .. | 3,15,974 | Nil. |
| Kanyakumari .. .. .. | 1,45,000 | 17,377 |
| Total expenditure .. | 51,26,186 | 11,03,792 |

* This includes an expenditure of Rs. 3,22,111 for the Kayalpattinam Water-supply Scheme.

*Statement showing the expenditure for the provision of drinking water in each district (urban areas) during 1959–60.*

| Serial number and name of district. | Total outlay incurred during 1959–60. | Grants and loans sanctioned by Government during 1959–60 towards the expenditure shown in column (2). | | |
|---|---|---|---|---|
| | | Grants. | Loans. | Total. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | RS. | RS. | RS. |
| 1 Chingleput .. .. | 707,796 | Nil | 6,65,000 | 6,65,000 |
| 2 South Arcot .. .. | 684,522 | 90,100 | 4,23,500 | 5,13,600 |
| 3 Thanjavur .. .. | 981,287 | Nil | 5,00,000 | 5,00,000 |
| 4 Tiruchirappalli .. .. | 1,168,726 | Nil | 9,08,000 | 9,08,000 |
| 5 Madurai .. .. .. | 2,521,539 | 1,47,600 | 18,51,200 | 19,98,800 |
| 6 Ramanathapuram .. | 2,313,950 | Nil | 17,06,000 | 17,06,000 |
| 7 Tirunelveli .. .. | 900,259 | Nil | 11,73,100 | 11,73,100 |
| 8 Kanyakumari .. .. | 8,269 | Nil | 7,200 | 7,200 |
| 9 North Arcot .. .. | 688,900 | Nil | 5,50,000 | 5,50,000 |
| 10 Salem .. .. .. | 1,142,032 | 13,500 | 18,94,000 | 19,07,500 |
| 11 Coimbatore .. .. | 2,608,850 | 3,00,900 | 26,45,700 | 29,46,600 |
| 12 The Nilgiris .. .. | 494,855 | Nil | 4,47,500 | 4,47,500 |
| Total for all districts .. | 14,220,985 | 5,52,100 | 1,27,71,200 | 1,33,23,300 |

*Punka-pullers*

48 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) கவர்ண்மெண்டு ஆபீஸ்களிலே பங்கா இழுப்பதற்காக (Punka-Pullers) எத்தனை பேர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் ?

(ஆ) இவர்களுக்குச் சம்பளமாக வருடந்தோறும் எவ்வளவு தொகை கொடுக்கப்படுகின்றன ?

*A.*—The information is being collected and will be placed on the table of the House as soon as possible.

*Religious institutions*

49 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) சென்னைக்கும் ஆந்திராவுக்கும் இடையே உள்ள அறநிலையங்களைப் பற்றிய பிரிவினை ஆகிவிட்டதா ?

(ஆ) இல்லையானால் அதற்காக எடுத்துக்கொண்டுள்ள முயற்சி என்ன ?

(இ) அது எப்பொழுது பூர்த்தியாகும் ?

*A.*—(அ) to (இ) The religious institutions which were in the areas that remained in the Madras State continued to remain in the Madras State. There was no separate partitioning of religious institutions between the Madras and Andhra States.



*Government Hospital, Ariyalur*

50 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state for each of the three years from 1957 to 1959—

(*a*) the bed strength of the Government Hospital, Ariyalur ; and

(*b*) the daily average of the out-patients treated in the above hospital ?

*A.*—The particulars required are given below.

*Bed-strength and daily average of out-patients treated in the Government Hospital, Ariyalur, during 1957 to 1959.*

| | 1957. | 1958. | 1959. |
|---|---|---|---|
| (i) Bed-strength of the hospital— | | | |
| Men .. .. .. | 6 | 6 | 6 |
| Women .. .. .. | 14 | 14 | 14 |
| (ii) Daily average number of out-patients treated in hospital— | | | |
| Men .. .. .. | 83 | 95 | 78 |
| Women .. .. .. | 53 | 86 | 56 |
| Children .. .. .. | 42 | 52 | 38 |

*District Board School, Anandavadi*

51 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have received a mahazar, dated 28th July 1960, from the villagers of Anandavadi, Udaiyarpalayam taluk, requesting renovation of the District Board school building in the village ; and

(*b*) if so, the action taken thereon ?

*A.*—(*a*) No, Sir.

(*b*) Does not arise.

*Recruitment of Assistant Engineers*

52 *Q.*—SRI K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the number of vacancies in the cadre of Assistant Engineers in the Public Works and Food Production Departments in 1960 ; and

(*b*) the action taken to fill up these vacancies ?

*A.*—(*a*) The estimate of probable vacancies in the category of Assistant Engineers inclusive of the requirement of the Electricity Board and the Technical Education Departments besides those required for the Food Production Circle is 65.

(*b*) The estimate has been furnished to the Madras Public Service Commission. The Madras Public Service Commission will take action for selecting suitable candidates by recruitment by transfer from among Junior Engineers and Supervisors for filling up the vacancies on a regular basis. Pending selection of the candidates by the Madras Public Service Commission appointments to these posts are made under the emergency provisions of the rules from among Junior Engineers and Supervisors selected provisionally for appointment as Assistant Engineers.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—ADJOURNMENT MOTION *RE* THE CLOSURE OF PUDUKKOTTAI TEXTILES, NAMANASAMUDRAM.

MR. SPEAKER : I have received an Adjournment Motion from Sri M. Kalyanasundaram.

I have repeatedly advised that hon. Members should not bring Adjournment Motions of this type before the House as other means of settlement of the disputes like the one mentioned in the Adjournment Motion are available.

SRI M. KALYANASUNDARAM: கனம் சபாநாயகர் அவர்களே, லேபர் இலாகா தலையிட்டுத் தீர்த்து வைக்க வேண்டிய பிரச்சினை இது. அதைச் செய்யத் தவறியதால் தான் சபையின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டியிருக்கிறது. நமனசமுத்திரத்திலே, புதுக்கோட்டை டெக்ஸ்டைல்ஸ் என்ற மில் ஜூன் மாதத்திலே மூடப்பட்டது. அதைப் பற்றி நான் அப்போதே அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்தினேன். லேபர் இலாகாவுக்குத் தெரியப்படுத்தியதிலே அவர்கள் உண்மையிலேயே மில்லையே மூடபோகிறார்கள், இது ஜெனுயின் க்ளோஷர்; ஆகையால் நாங்கள் தலையிட முடியாது" என்று சொன்னார்கள். நான் அப்போது அது உண்மையல்ல என்று சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவந்தேன். சென்ற ஜூலை மாதம் 19-ம் தேதியன்று மில்லைத் திறந்து கணிசமான தொழிலாளிகளை விட்டுவிட்டு ஒரு சில தொழிலாளிகளை எடுத்துக் கொள்வது என்று மில் முதலாளிகள் ஆரம்பித்தார்கள். அப்போது இதை நான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தேன். திறக்கப்பட்டதும் 31-ம் தேதி லேபர் கமிஷனர் கன்ஸிலியேஷன் போடுகிறார். அதற்கு முதலாளி வரமறுக்கிறார். அதன் பிறகு லேபர் கமிஷனர் கல்கத்தா போய்விட்டார். அதைப் பற்றி தொழில் அமைச்சரைக் கேட்டால், அவர் "நான் என்ன செய்வது, லேபர் கமிஷனர் இல்லையே" என்று சொல்லுகிறார். கால தாமதம் ஆவதால் முதலாளிகளின் கை வலுவடைகிறது. வேண்டுமென்றே தொழிலாளிகளை வேலையிலிருந்து நீக்க முதலாளிகள் எடுக்கக் கூடிய நடவடிக்கை என்று நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். அதை சபையின் கவனத்திற்கும் கொண்டுவரவேண்டிய அவசியம் இருக்கிறது. வேண்டுமென்றே தொழிலாளிகளை வேலையிலிருந்து



நீக்குவதை—தகாத வழியில் நீக்குவதை—தடுக்க அரசாங்கம் மறுக்கிறது என்ற காரணத்திஞல் சபையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டும். நடவடிக்கை எடுக்க எல்லா தொழிலாளிகளையும் வேலைக்கு எடுக்க வழி செய்ய வேண்டும் என்பதற்காகக் கொண்டுவந்திருக்கிறேன். அதிலும் தொழிலாளிகளை வேலைக்கு வைத்துக்கொண்டிருப்பவர்களையும் முந்திய சர்வீசை கணக்கில் எடுத்துக்கொள்ள மாட்டேன் என்று புதிய சர்வீஸாகப் போட்டிருக்கிறார்கள். இதில் சர்க்கார் கால தாமதம் செய்வதால் இதை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

MR. SPEAKER: Does the Hon. Minister want to say anything ?

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் சபாநாயகர் அவர்களே, விதிகளின்படி இந்த ஒத்திவைப்புப் பிரேரணை செல்லாது என்று எடுத்துச் சொல்லிவிட்டீர்கள். இந்த விஷயத்தில் சட்டம் இருக்கிறது. சட்டப்படி நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். கனம் அங்கத்தினர் கல்யாண சுந்தரம் அவர்கள் பேசியதிலிருந்து இந்த விஷயத்தில் துரித மாகக் கூட நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. ஏனென்றால் 31-ம் தேதியே—10 நாட்களுக்குள்—கன்ஸிலியேஷனுக்குக் கூப்பிட்டார்கள் என்றால், துரிதமாகத்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிகிறது. இதிலே ரிப்போர்ட் வர வேண்டியிருக்கிறது. சர்க்காரில் இருக்கக் கூடிய கமிஷனருக்கு பல வேலைகள் இருக் கின்றன. அவசரமாக கல்கத்தாவிற்கு சென்றிருப்பதால் வந்த வுடன் சர்க்காருக்கு ரிப்போர்ட் சமர்ப்பிக்க வேண்டும். ஒவ் வொருவரும் அவரவர்களுடைய காரியத்தை உடனடியாக கவனிக்க வேண்டும் என்று சொல்லுவதென்றால் சர்க்கார் நடவடிக்கை எடுப்பது கஷ்டமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER : I said a few days back that the Assembly was not the forum especially for discussing such motions. There are other means of settlement available for such disputes. Because Sri M. Kalyanasundaram, being a Leader of the Party has brought it, I gave him this concession for bringing in this motion before the House. Hereafter I will not permit him even for bringing in such motions. I will refuse it. I, therefore, rule this motion out of order.

## III—ANNOUNCEMENTS.

### (1) ELECTION TO THE BOARD OF INDUSTRIES.

MR. SPEAKER : The House will remember that according to the programme fixed by me for the election to the Board of Industries, poll, if any, is to be held between 9 a.m. and 1 p.m. on Monday, the 12th September 1960. As the House is to adjourn to-day (10th September 1960), it will not be possible to conduct the poll on the 12th September 1960. I am, therefore, to extend the

last hour and date for the withdrawal of the candidature to 10 a.m. to-day, the 10th September 1960. Poll, if necessary, will be held on a date to be fixed by me in due course.

### (2) ASSOCIATION OF LEGISLATIVE COUNCIL MEMBERS WITH THE COMMITTEE ON ESTIMATES.

MR. SPEAKER : I have to announce that the following five Members have been nominated by the Legislative Council to associate with the Committee on Estimates of the Legislative Assembly for the year 1960-61 :—

(1) Sri T. P. Srinivasavaradan,
(2) Sri N. Nallasenapathi Sarkarai Manradiar,
(3) Sri M. Rajagopal Pillai,
(4) Sri A. Chidambara Mudaliar, and
(5) Sri S. T. Adityan.

## IV.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 41 *RE* REFUSAL TO GRANT EDUCATIONAL CONCESSIONS TO SCHEDULED CLASS PUPILS IN SUCHINDRUM ENGLISH HIGH SCHOOL.

MR. SPEAKER : I have received a notice under Rule 41 of the Assembly Rules from Sri T. S. Ramaswami calling the attention of the Hon. the Minister for Works to a matter of urgent public importance, viz., refusal to grant educational concessions and scholarships to some Scheduled Class pupils of the S.M.S.M. English High School, Suchindrum, in Kanyakumari district and the consequent refusal of the school authorities to admit them in the classes.

The hon. Member, Sri T. S. Ramaswami, will now speak.

SRI T. S. RAMASWAMI : கனம் சபா நாயகர் அவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவிலே வேடர் வகுப்பைச் சேர்ந்த 13 மாணவர்கள் இரண்டு, மூன்று வாரமாக எஸ்.எம்.எஸ்.எம். இங்கிலீஷ் ஹைஸ்கூலிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். காரணம் பட்டியலிலே வேடர்கள் என்று இருக்கிறது. அவர்கள் வேறு பெயர் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே சாதாரணமாக ஒரு பெயரை ஒவ்வொருவர் ஒவ்வொரு மாதிரியாக வைத்துக்கொள்வதைப் போல ஒரே ஜாதியினருக்கே இரண்டு, மூன்று பெயர்களை வைத்துக்கொள்ளுகிறார்கள். பறையர்கள் என்ற பெயரை யாரும் விரும்புவதில்லை. பறையா என்று ஷெட்யூல்ட் காஸ்ட் லிஸ்ட்டில் இருக்கிறது. சாம்பவர்கள் என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதே போல் வேடர்கள் என்பதை வேட்டைக்காரர்கள் என்று வைத்துக்கொள்வதுண்டு. யாரெல்லாம் வேட்டைக்காரர்கள் என்று வைத்துக்கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் சலுகை கொடுக்கவில்லை. வருஷந்தோறும் கலெக்டர் இரண்டும் ஒரே ஜாதிதான் என்று எழுதிக்கொண்டிருக்கிறார்கள். சென்ற பள்ளிக்கூட வருஷத்திலே ஜனவரி மாதத்திலே கலெக்டரிடமிருந்து ஷெட்யூல்ட் காஸ்ட் கமிஷனருக்கு எழுதியனுப்பப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பெயரையும் சேர்க்கவேண்டுமென்று எழுதியும் காலதாமதம் காரணமாக அவர்களுக்கு



தகவல் அனுப்பாததால் 13 மாணவர்களுக்கு ஏறக்குறைய ஒரு மாதத்திற்கு முன்னால் ஒன்று சம்பளம் கட்ட வேண்டும், அல்லது படிப்பை விடவேண்டும் என்ற நிலைமை வந்திருக்கிறது. அண்ணனுக்கு ஸ்காலர்ஷிப் கிடைத்திருக்கிறது, தம்பிக்கு கிடைக்கவில்லை. இம்மாதிரி நிலைமை இருக்கிறது. இந்த முக்கியமான விஷயத்தை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : Mr. Speaker, Sir, " Vetan " community finds a place in the list of Scheduled Castes under the head " Kanyakumari district and Shencottah taluk of Tirunelveli district ". The Collector of Kanyakumari has reported that the communities ' Vetar ', ' Vettar ' and ' Vettaikarar ' are synonymous to ' Vetan ' community. He has therefore recommended that the above communities may be bracketed with " Vetan " community in the list of Scheduled Castes under the head " Kanyakumari district and Shencottah taluk of Tirunelveli district ".

The lists of Scheduled Castes and Scheduled Tribes can be amended only by the Government of India. It is, therefore, proposed to address the Government of India to amend the list of Scheduled Castes as suggested by the Collector of Kanyakumari. Pending amendment of the list the Collector of Kanyakumari has been asked to issue instructions to the educational institutions to treat ' Vetar ', ' Vettar ' and ' Vettaikarar ' communities as synonymous to ' Vetan ' community and to extend to them all the concessions to which the Scheduled Castes are entitled.

## V.—GOVERNMENT BILL.

### THE MADRAS CINEMAS (REGULATION) AMENDMENT BILL, 1960 (L.A. BILL NO. 32 OF 1960).

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move that the Madras Cinemas (Regulation) Amendment Bill, 1960* (L.A. Bill No. 32 of 1960) be taken into consideration.

Sir, I shall briefly explain the main provisions of this simple Bill. Condition 16 of the conditions of licence for the exhibition of cinematograph films under the Madras Cinemas (Regulation) Act, 1955 (Madras Act IX of 1955), provides that the licence shall be subject to cancellation or suspension for the breach of any of the conditions specified in it. As there is no specific provision in the said Act in this behalf it is proposed to amend the Act, so as to empower the licensing authority to revoke or suspend a licence in cases where such licence has been obtained by fraud or misrepresentation or where the licensee has failed to comply with the provisions of the Act or the rules made thereunder or any of the conditions or restrictions upon or subject to which the licence was granted.

Sir, under the existing provisions of the Act any person aggrieved by the decision of the licensing authority refusing to grant a cinematograph licence or refusing to approve any transfer or assign-

* Published in the *Fort St. George Gazette*, dated 23rd August 1960.

[Sri M. Bhaktavatsalam] [10th September 1960

ment thereof under section 5 or refusing to grant permission under section 5-A, has a right of appeal against such decision. There is however no provision in the Act for appeal against the order of the licensing authority granting or approving the transfer of a licence under section 5 or granting permission under section 5-A. The Bill makes provision for appeal in this behalf. The Bill also seeks to empower the appellate authority to stay the orders of the licensing authority pending final orders on the appeal.

These are the simple provisions which are contained in this amending Bill and I commend this for the acceptance of the House.

10-00 a.m. MR. SPEAKER: Motion moved:

"That the Madras Cinemas (Regulation) Amendment Bill 1960 (L.A. Bill No. 32 of 1960) be taken into consideration.

SRI J. MATHA GOWDER: இந்த மசோதா ஒரு சிறிய மசோதாவானாலும் கூட வரவேற்கத்தக்க நல்ல அம்சங்கள் கொண்ட மசோதா. சினிமாக் கொட்டகைகளுக்கு முன்பு கலெக்டர் ஒருவருக்கு லைசன்ஸ் கொடுத்துவிட்டால் லைசன்ஸ் கிடைக்காதவர்கள் அப்பீல் செய்து கொள்ள இடம் இல்லாத நிலைமை இருந்தது. இந்த மசோதாவின் மூலம் அந்த நிலைமை மாறி அப்பீல் செய்து கொள்ளும் முறையிலே இந்தச் சட்டத்தைத் திருத்தியிருப்பது மிகவும் வரவேற்கத்தக்க அம்சமாக இருக்கிறது. ஜில்லா அளவிலே லைசன்ஸ் ஒருவருக்குக் கொடுக்கப்பட்டு விட்டால் மற்றவர்களுக்கு அப்பீல் செய்ய உரிமை இல்லையென்று இருக்கும்போது எல்லாத் தேவைகளுக்கும் அவர்கள் ஹைர்கோர்ட்டிலே "ரிட் பெடிஷன்" போட வேண்டியதாக இருந்தது. இப்போது அப்பீல் செய்ய வழி செய்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்க அம்சம்.

கொட்டகைகளுக்கு லைசென்ஸ் கொடுக்கும்போது சுகாதார வசதியைப் பொறுத்த மட்டில் கலெக்டர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்க்கவேண்டும். இன்றைக்குக் கொட்டகைகளில் ஐந்து அல்லது ஆறு கக்கூஸ்கள்தான் கட்டியிருக்கிறார்கள். இன்றைக்கு சினிமாவுக்கு வரும் கூட்டத்தைப் பார்க்கும் போது, அதுவும் புதுப் படங்களுக்கு வரும் கூட்டத்தைப் பார்க்கும்போது அந்த அளவு கக்கூஸ்கள் போதாது என்பதை உணர வேண்டும். அந்தக் கக்கூஸ்களை சுகாதார வசதிக்கு ஏற்ற முறையில் கட்ட வேண்டும். சென்னையில் கூட அந்த நிலைமை இருக்கிறது என்பதை நான் கூற விரும்புகிறேன். ஒருவர் மூத்திரம் பெய்து விட்டு போன இடத்தின் வழியாகவே மற்றவர்கள் நடந்து செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் ஒருக்கால் சினிமாக் கொட்டகைகளுக்குப் போவதில்லையோ என்னவோ தெரியாது. அங்கு சுகாதார வசதி மிகவும் மோசமாக இருக்கிறது. கொட்டகைகள் அழகாக அமைந்திருக்கின்றன என்று சொல்லி லைசன்ஸ் வழங்கிவிடக் கூடாது. சுகாதார வசதிகள் சரியான முறையில் செய்திருக்கிறார்களா என்று பார்த்துத்தான் லைசன்ஸ் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மசோதாவை வரவேற்று என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.



10th September 1960]

SRI S. LAZAR: கனம் தலைவர் அவர்களே, இங்கு மசோதா ரூபத்தில் வந்திருக்கும் திருத்த மசோதாவை வரவேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன். இப்போது இருக்கக் கூடிய சட்டத்திலே முக்கியமாக ஒரு திருத்தம் செய்ய வேண்டுமென்று இந்த மசோதா இங்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

முதலாவது திருத்தம், இப்போது லைசென்சிங் அத்தாரிடி, ஒருவர் போடக்கூடிய மனுவை நிராகரித்துவிட்டால் பாதிக்கப் பட்டவர்கள் அதன் மீது அப்பீல் செய்து கொள்ள முடியாத நிலையை மாற்றி இப்போது போர்டு ஆப் ரெவின்யூவிற்கு அப்பீல் செய்து கொள்ளலாம் என்பது. அனுமதிக்கப் பட்டாலும், நிராகரிக்கப்பட்டாலும் பாதிக்கப்பட்டவர்கள் அப்பீல் செய்து கொள்ளலாம் என்று இருப்பது வரவேற்கத்தக்க அம்சம். நடைமுறையில் பார்க்கும்போது ஒருசில சந்தர்ப்பங் களில் போர்டு ஆப் ரெவின்யூ, அனுமதி கொடுக்கப்பட்டிருக்கும் கேஸ்களில் கூட பாதிக்கப்பட்டவர்கள் அப்பீல் செய்த போது ஏற்றுக் கொண்டார்கள். ஒருசில கேஸ்களில் ஏற்றுக் கொள்ள வில்லை. இதன் பலனாக அடிக்கடி ஹைக்கோர்ட்டுக்கு "ரிட்" தாக்கல் செய்யப்பட்டு அதில் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தொந்தரவு ஏற்பட்டு வந்தது. அந்தச் சிக்கலை மாற்றி அனுமதி கொடுக்கப்பட்டாலும் சரி, மறுக்கப்பட்டாலும் சரி, பாதிக்கப் பட்டவர்கள் அப்பீல் செய்து கொள்ளலாம் என்று மாற்றி யமைத்திருப்பது வரவேற்கக்கூடியது. அதோடுகூட அப்பீல் போர்டு ஆப் ரெவின்யூவிற்கு என்று சொல்லும் போது அவர்கள் "ஸ்டே" செய்யலாம் என்று மாற்றியமைக்கிறோம். ஏற்கனவே, "ஸ்டே" செய்து வந்தார்கள். அதிலே "ஸ்டே" பற்றிய சில சங்கடங்கள் ஏற்பட்டன. சட்டத்திலேயே "ஸ்டே" செய்யலாம் என்று திருத்தி இருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது.

மேற்கொண்டு சில திருத்தங்களும் இருக்கின்றன. அவற்றைப் பற்றி சொல்லுவதற்கு முன்னால் இப்போது இருக்கக் கூடிய சட்டத்தில் நடைமுறையில் இருக்கக்கூடிய சிக்கல்களை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அவைகளையும் அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்ற கருத்தை தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்போது ஒருவர் சினிமா கொட்டகைக்கு லைசென்ஸ் வேண்டு மென்று மனு கொடுப்பாரானால், இப்போது இருக்கக் கூடிய சட்டப்படி அதற்குள்ள அதிகாரி மாவட்டக் கலெக்டர் ஆவார். அவர் லைசென்ஸ் கொடுப்பதற்கு முன்னால் இரண்டு வித சர்டிபிகேட்டை அவர்கள் கொடுக்க வேண்டியிருக்கிறது. "நோ அப்ஜக்ஷன் சர்டிபிகேட்" கொடுக்க வேண்டும். நோ அப்ஜக்ஷன் சர்டிபிகேட்" கொடுப்பதற்கு முன்னால் இதிலே இருக்கக்கூடிய விதிகளின்படி எந்த இடத்தில் சினிமா கொட்டகை அமைக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். கலெக்டர்களுக்கு இருக்கும் பல அலுவல்களின் காரணமாக அவர்களால் இதையெல்லாம் நேரடியாகப் பரிசீலிக்க முடிய வில்லை. அவர்கள் அதைக் கீழே உள்ள அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கிறார்கள். சாதாரணமாக இப்போது நடைமுறையில்

[Sri S. Lazar] [10th September 1960

இருப்பது, தாசில்தார் அந்த இடத்திற்குச் சென்று பரிசீலனை செய்கிறார்கள். பரிசீலனைக்குப் பிறகு தாசில்தார் ஒரு "கொஸ்டினரை" பூர்த்தி செய்கிறார்கள். அதிலே கடைசியாக அவருடைய (தாசில்தாருடைய) அபிப்பிராயம் என்ன என்று கேட்கப்படுகிறது. அது தவறான முறை என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் கடைசியாக எழுதுகிறார்—

'I recommend that licence may be issued'.

'I recommend that licence may not be issued to a particular applicant'.

ஒவ்வொரு சட்டத்திலும் ஸ்டாச்சுடரி அதாரிடி என்று ஒருவரை ஏற்படுத்துகிறோம். இந்தச் சட்டத்தின்படி ஸ்டாச்சுடரி அதாரிடி கலெக்டர். கலெக்டர் "இன்டிபெண்டெண்ட்" ஆக முடிவு எடுக்க வேண்டுமென்றிருக்கும்போது அவருடைய எண்ணத்தை மாற்றியமைக்க வழி இல்லாமல் சம்மந்தப்பட்ட விஷயங்கள் மட்டும் அவர் கவனத்திற்குக் கொண்டு வரப்படவேண்டுமே தவிர, இன்னாருக்குக் கொடுக்கலாம் என்று ஒருவர் சொல்வது தவறு. இந்தச் சட்டத்திலே மட்டுமல்ல, மற்றைய சட்டங்களிலும் இந்த மாதிரி நிலை இருக்கிறது. "இன்டிபெண்டண்ட் ஜட்ஜ்மெண்ட்" வருவதற்கு வாய்ப்பு இருக்கவேண்டுமே தவிர, அவர்களுடைய எண்ணத்தை மாற்றும் வகையில் இன்னொருவர் அபிப்பிராயம் தெரிவிக்கும் நிலை இருப்பது சரியல்ல. உயர்நீதி மன்றங்களில் கூட இதைப் பற்றிக் குறை சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.

ஆகையால், இது போன்ற மனுக்கள் தாசில்தார்களுக்குச் செல்லும் போது, அவர்கள் அதில் இருக்கும் facst என்ன என்பதைப் பற்றி தெரிவிக்கவேண்டுமே தவிர, "கடைசியாகத் தன்னுடைய கருத்து என்ன" என்பதைப்பற்றித் தெரிவிப்ப தானது, பொதுவாக மனுச் செய்துகொள்ளுகிறவர்களுக்குப் பாதகம் ஏற்படும். அத்துடன், அந்தந்த தாசில்தார்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் ஒரு வேளை தவறான போக்கில் போகக்கூடியவர்களாக இருந்தால், துஷ்பிரயோகம் செய்யக் கூடிய நிலைமை ஏற்பட்டு, அவர்கள் சம்பந்தப்பட்ட ஆலோசனைகளைக் காண்பித்து, "பார்த்தீர்களா, உங்களுக்குச் சிபாரிசு செய்திருக்கிறோம்" என்று தவறான முறையில் நடந்து கொள்வதற்கு இடம் கொடுப்பதாக அமையும். ஆகையால், அந்த முறையை மாற்றியமைக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சாதாரணமாக, ஒருவர் மனுச் செய்துகொண்டால், அதன் மீது ஒரு தவறு ஏற்படுமானால், லைசென்ஸை ஸஸ்பெண்டு செய்யலாம் என்று அதிகாரம் கொடுப்பதாக இப்பொழுது நாம் சொல்கிறோம். ஆனால், நடைமுறை விதிகளிலே இருக்கிறது. அதைச் சட்ட பூர்வமாகக் கொண்டுவர வேண்டுமென்று ஸபார்டினேட் லெஜிஸ்லேஷன் கமிட்டி இதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறது. அதன் மீது அரசாங்கம் திருத்தம் கொண்டு வந்திருப்பதை நாங்கள் வரவேற்கிறோம்.



10th September 1960] [Sri S. Lazar]

ஆனால், இதுபோன்று ஸஸ்பென்ஷனை ரிவோக் பண்ணி அவர்கள் உத்தரவு போடும்போது நடைமுறையில் தர்ம சங்கடமான நிலைமை ஏற்படுகிறது. ஏதாவது தவறுதல் ஏற்பட்டு, 10—9—1960 அன்று முதல் கொட்டகை எடுக்கப்பட வேண்டும் என்றால், அன்றைய தினம் காலையில் தான் "லைசென்ஸ் லைசென்ஸ்தாரருக்குக் கிடைத்திருக்கிறது. அந்த உத்தரவு கிடைக்கும்போது, அதன் மீது அப்பீல் செய்து கொண்டு மாற்றி யமைப்பதற்கே வசதி ஏற்படாத முறையில் அது உடனடியாக அமுல் நடத்தப்படுகிறது. ஆனால், எல்லோருக்கும் தெரிந்த விஷயம், சினிமாத் துறையிலே இருக்கும் கஷ்டம் என்ன வென்றால், அவர்கள் ஒரு வாரத்திற்கு முன்னால் சம்பந்தப்பட்ட படங்களை அட்வான்ஸாக புக் செய்துகொள்ளுகிறார்கள். இன்னும் சுவரொட்டிகள் போன்ற விளம்பரச் சாதனங்களையும் முன்னாலேயே செய்து வைத்துக்கொள்ளுகிறார்கள். அப்படிச் செய்துகொண்டிருக்கும்போது, திடீரென்று "லைசென்ஸ் நிறுத் தப்பட்டது" என்று உத்தரவு போட்டால் நடைமுறையில் சங்கடங்களுக்கு அவர்கள் உள்ளாவார்கள். குறைந்த பட்சம் நான்கு நாட்கள் முதல் ஒரு வாரமாவது காலவரை வைத்து அதற்குப் பிறகு உத்தரவு அமுலுக்கு வரவேண்டுமென்ற நிலைமையிலே உத்தரவு பிறப்பிக்கப்படவேண்டும். நடைமுறை யில் அப்பீல் இருக்கவேண்டுமென்று வகைசெய்கின்றோம். அப்பீலுக்கு வகைசெய்யும்போது "ஸ்டே" கொடுப்பதற்குக் கூட அதிகாரம் வழங்குகிறோம். அப்படி அதிகாரம் வழங்கினால், அதை நடைமுறையில் அமுல் நடத்த முடியாத நிலைமையில் என்றையதினம் கொட்டகை நிறுத்த வேண்டுமோ, அன்றைக்கே நிறுத்த உத்தரவு கிடைக்கும் முறையில் செய்வது அங்கே நடைமுறையில் பெரிய கஷ்டமாக இருக்கிறது. அதை யும் மாற்றியமைக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. விதிகளின் ரூபமாகவே செய்துவிடலாம். சட்டம் இருக்கவேண்டிய அவசியம் இல்லை. விதிகளை மாற்றி இதுபோன்று "ஸஸ்பென் ஷன் அண்டு ரிவொகேஷன்" செய்யும்போது, குறைந்தது ஒரு வார காலம் கொடுக்கவேண்டுமென்ற கருத்தினை நான் சொல்லிக் கொள்கிறேன்.

இந்த மசோதாவிலே இருக்கும் முக்கியமான திருத்தம் இதுதான். லைசென்ஸிங் அதாரிடிக்கு—கலெக்டருக்கு—ஒரு லைசென்ஸை ரிவோக் செய்யவோ அல்லது ஸஸ்பெண்டு செய்யவோ அதிகாரம் விதிகளில் வழங்கியிருக்கிறோம். அதைச் சட்ட ரூபமாக இப்பொழுது கொண்டுவருகிறோம். அதற்கு இரண்டு வகையான காரணங்கள் இப்பொழுது குறிப்பிடப் பட்டிருக்கின்றன. முதலாவது காரணம், "Misrepresentation of fact or fraudulent representation". இதுபோன்ற நிலைமை ஏற்பட்டு, அதன் காரணத்தால் ஒரு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருந்தால், அதை ரிவோக் செய்வதில் எந்த விதமான ஆட்சேபணையும் இருக்க முடியாது. அதை வரவேற்கிறேன். ஆனால், ஏதாவது விதிகளுக்குப் புறம்பாக

நடந்து கொண்டார் என்ற காரணத்திற்காக ரிவோக் செய்வதோ அல்லது ஸஸ்பெண்டு செய்வதோ மிகப் பெரிய பாதகத்தை உண்டு பண்ணக்கூடியதாக இருக்கும்.

MR. SPEAKER : I tthink the hon. Member is speaking on clause 4. I would like to remind the hon. Member that we are now having only general discussion.

SRI S. LAZAR : I have to make a general reference to it.

MR. SPEAKER : I have no objection if the hon. Member makes only a general reference. But, I find the hon. Member is going into the details of clause 4. I do not object to it. But, he should not claim a second speech when clause 4 is taken up for consideration.

SRI S. LAZAR : The object in making a reference to this during the general discussion is to enable the Government to bring forward suitable amendments to the clause if found necessary.

MR. SPEAKER : A passing reference to the provisions contained in clause 4 will be quite all right and I do not object to it also. But, when the hon. Member goes into the details, it will be considered objectionable at this stage. That is what I want to impress on the hon. Member. I am not objecting to the hon. Member making a general reference.

SRI S. LAZAR: அதுபோன்ற ஒரு அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுக்கும்போது, ஏற்கனவே விதிகளில் ஏதாவது ஒரு தவறுதல் நடக்குமானால் விதிகளின் 7-வது பிரிவின்படி ப்ராஸிக்யூட் செய்யலாம் என்று அதிகாரம் கொடுத்திருக்கிறோம். ப்ராஸிக்யூட் செய்து அபராதமோ, வேறு தண்டனையோ விதிக்க வாய்ப்பு இருக்கும்போது, இதுபோன்று ரிவோக் செய்வதற்கோ, ஸஸ்பெண்டு செய்வதற்கோ அதிகாரம் இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன்.

சினிமாவுக்கு லைசென்ஸ் கொடுக்கும் முறையில் பல காம்ப்ளிகேடெட் ப்ரொஸீஜர் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. இவைகளை இன்னும் சுருங்கச்செய்து கொண்டுவருவோமானால் நடைமுறையில் மிகவும் சுலபமாக இருக்கும். பல கஷ்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன. ப்ரொஸிஜர் அதிகமாக காம்ப்ளிகேடெட் ஆக இருக்கும் காரணத்தால்தான் அடிக்கடி உயர்நீதி மன்றத்தில் "ரிட்" தாக்கல் செய்யப்படுகிறது. இவைகளையெல்லாம் கவனித்து தக்கவாறு இந்த மசோதாவை மாற்றியமைத்தால் நன்றாக இருக்கும் என்ற கருத்தை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

* SRI R. SRINIVASA IYER : Sir, while supporting this legislation and endorsing all the views expressed by the hon. Member representing the Lalgudi Constituency, I would submit that by this legislation, we propose to vest the executive authority with extraordinary powers. This business of exhibiting cinemas is no doubt a costly business in which large amounts have got to be





invested. At the same time, it is a good source of revenue to the State. Also, those who have got superflous money—whether it be labourers or other officers—want to spend some time in seeing these cinemas.

Sir, as the law stands at present, under section 9 (1) we have the power to revoke licence only on conviction under the Central Act XXXVII of 1952 and under section 8 of the Madras Act. Now, Sir, we are vesting this power of revocation also in the executive authority. As the section stands at present, for misrepresentation or fraud in getting the licence, we give the executive authority, that is, the licensing authority itself, power to revoke the licence. For breach of rules and conditions governing the grant of licence, we give the same power of revocation. That is no doubt in addition to another penalty that may be prescribed under the Act, that is, conviction; one through the judiciary and the other not through the judiciary. The licencing authority, that is, the District Collector generally acts upon the report of the Tahsildar or Deputy Tahsildar as the case may be. This is a weapon which is likely to be used prejudicially and I would even say, is likely to be misused. Because, as it is, for getting the 'No Objection Certificate', one has to come up to the Government level and in some cases, matters have to be taken to the High Court through Writ Petitions. On all these, they have to spend large amounts. If for the breach of rules or the breach of conditions of licence, the power of revocation is given to the licensing authority and also the power for suspension, I would submit that the proprietor of the cinema will practically be ruined. He would have entered into previous contracts with other Film Producers or distributors. If all on a sudden the licence is suspended, the cinema proprietor will be put to great difficulty and he would be charged by the producers for breach of contract and he might have to pay very heavy damages to the producers. I am suggesting that this should be exercised with great caution and care. If the power of revocation and suspension is vested with the licencing authority in addition to the power that is already vested in him, I feel that it is an extraordinary power.

Of course, it is a welcome amendment as an appeal is provided. But I would suggest that in such an important and vital matter like this, the appellate authority is defined in the Act itself. New section 9-A says—

'*Appeal against revocation or suspension of licence.*—(1) Any person aggrieved by the decision of the licensing authority revoking or suspending a licence under sub-section (2) of section 9 may, within such time as may be prescribed, appeal to such authority as the Government may specify in this behalf and such authority may make such order in the case as it may think fit'.

Sir, the Collector is the licensing authority. He acts upon the report of his subordinate. I would suggest that the appellate authority should be a Member of the Board of Revenue (Commercial Taxes) and it should be specified in the Act itself. In the

[Sri R. Srinivasa Iyer] [10th September 1960

Subordinate Legislation Committee, under similar circumstances, we have suggested that these are provisions which should be in the Act itself so that the Legislature may know what authority the Government propose to appoint as the appellate authority. Once a licence is suspended, consequences are too many and very large. Therefore, a very high authority, I would even suggest a Judge of the High Court—should be the appellate authority in such cases. No doubt, there is power for suspension of the order of suspension or revocation of licence. I must state that even for getting a copy and filing an appeal and coming to Madras, it will take time by which time mischief would have been done. In these circumstances, as suggested by the hon. Member, Sri Lazar, I would also suggest that this punishment of revocation or suspension should be split. In the case of a person who has not obtained a licence by misrepresentation of fraud but who has failed to comply with any of the provisions of this Bill, a mere fine will be more reasonable and I appeal to the Government to accept the amendment of the hon. Member, Sri Lazar.

Also, the following new clause is sought to be provided in section 10 of the Act :—

'(k) the time within which and the conditions subject to which the appeal under section 9-A may be preferred and the fees to be paid in respect of such appeal '.

Even the power of the appellate authority to extend the time for appeal for getting copies should be properly defined in the Act itself. Of course, it will be in the interest of the party concerned to file the appeal as quickly as possible. Even if section 9 (2) is enacted, I would submit that section 9 (1) is not necessary. Once a licence is revoked, the appellate authority may say that the licence should be revoked or not revoked. Section 9 (1) and section 9 (2) do not seem to agree with each other. So, I would suggest that section 9 (1) need not be there or may be suitably amended, or may be made subject to section 9 (2).

SRI M. R. KANDASWAMI MUDALIYAR: கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது சபை முன்பு வந்திருக்கக்கூடிய சினிமா திருத்த மசோதாவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது லைசென்ஸ் கொடுக்கக்கூடிய முறையிலே லைசென்ஸ் காலாவதி ஆகி ரென்யூவல் செய்யக்கூடிய காலத்தில் மூன்று வகையான லைசென்ஸ்கள் பெறவேண்டியிருக்கின்றன. அதிலே இரண்டு கமர் ஷியல் டாக்ஸ் டிபார்ட்மெண்டிலிருந்து பெறவேண்டியிருக் கின்றன. சர்க்காரிலிருந்து ரெவின்யூ அதாரிடி வந்தவுடன் தான் கலெக்டர் மறுபடியும் ரென்யூவல் செய்துகொடுக்கிறார் கள். அப்படி காலதாமதம் ஆகக்கூடிய காலத்தில் ஒரு நாள், இரண்டு நாட்கள் சினிமாவையே நிறுத்தி வைக்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகிறது. சமீபத்தில் நான் வரும்பொழுது இரண்டு சினிமாக்காரர்கள் லைசென்ஸ் ரென்யூவல் வருவதற்கு இரண்டு நாட்கள் டிலே ஆகிவிட்டதால் சினிமாவை நிறுத்த வேண்டி வந்து, பல நூற்றுக்கணக்கான ரூபாய்கள் நஷ்டம்



10th September 1960] [Sri M. R. Kandaswami Mudaliyar]

ஏற்படக்கூடிய அளவிலே நிலைமை இருக்கிறது என்று குறை சொன்னார்கள். இந்தக் குறையை நிவர்த்திக்கக்கூடிய முறை யிலே லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரத்தை கலெக்டருக்கு கொடுக்கவேண்டும். ரென்யூவலில் எந்தவிதமான தவறோ, மோசடியோ அல்லது தப்போ இருப்பதற்கில்லை. லைசென்ஸில் எதுவரையிலும் லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற தேதி இருக்கிறது. ரென்யூவல் விண்ணப்பம் செய்துகொண்ட பிறகு, அதற்கு பெர்மிஷன் கொடுப்பது சர்க்காரிட மிருந்து வருவதற்கு டிலே ஆகிறதே தவிர, சினிமாக் காரர்கள் தரப்பில் தவறு ஒன்றும் இல்லை. லைசென்ஸை ரென்யூவல் செய்வதற்கு விண்ணப்பம் போடும்பொழுது, மறு படியும் திருப்பி லைசென்ஸ் கொடுப்பதற்கு காலதாமதம் ஆகிறது. ரென்யூவல் அப்ளிகேஷன் போட்டுவிட்டால், அவர்கள் தொடர்ச்சியாக சினிமாக்களை நடத்தக்கூடிய முறையிலே அவர் களுக்கு ஒரு பெர்மிஷன் கொடுக்கும் அளவுக்கு ஒரு உத்தரவை பிறப்பிப்பார்களேயானால், அது நலமாக இருக்கும். சினிமாக் காரர்கள் படம் வருவதற்கு 2 நாட்கள், 4 நாட்கள் முன்ன தாகவே இன்ன படம் இன்ன தேதியிலிருந்து வெளிவரும் என்று விளம்பரப்படுத்திவிடுகிறார்கள். படத்துக்கும் அட்வான்ஸ் பேசி கொடுத்து விடுகிறார்கள். லைசென்ஸ் ரென்யூவல் வருவதற்கு காலதாமதம் ஆனால், குறிப்பிட்ட தேதியில் நடத்த முடியாமல் சினிமாவை இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் நிறுத்தவேண்டிவந்தால், அதனால் அரசாங்கத்திற்கு வருகிற வரியும் நஷ்டம் ஆகிறது. படத்திற்கு அட்வான்ஸ் கொடுத் ததும் நஷ்டமாகிறது. இரண்டு தரப்பினருக்கும் நஷ்டம் ஏற்படுகிறதே தவிர, யாருக்கும் அனுகூலம் இல்லை. ரென்யூவல் வருவதற்கு காலதாமதம் ஆனால், அந்தத் தேதியிலிருந்து டாக்ஸ் வசூல் செய்யும்படியான ஐடெம் இருப்பதால், ரென்யூவல் பெடி ஷன் வந்தவுடனே ஒரு உத்தரவு போட வேண்டும். என்ன வென்றால், ரென்யூவல் பெடிஷன் அனுப்பினால் போதும், தொடர்ச்சியாக சினிமாவை நடத்தலாம் என்று பெர்மிஷன் கொடுக்க கலெக்டருக்கு அதிகாரம் கொடுப்பது மிகவும் நல்ல தாக இருக்கும் என்று தெரிவித்துக்கொண்டு, முடித்துக் கொள்ளுகிறேன்.

SRI K. SATTANATHA KARAYALAR: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சினிமா லைசென்ஸ் வழங்கும் திருத்த மசோ தாவிலே இருக்கக்கூடிய ஷரத்துக்களை பரிசீலனை செய்யும் பொழுது, சினிமா நடத்துபவர்களைப்பற்றி பொதுப்படையாக இருக்கக்கூடிய ஒரு எண்ணத்தைத்தான் அவைகள் பிரதிபலிக் கின்றன என்று தோன்றுகிறது. சினிமா நடத்தக் கூடியவர்கள் பெருவாரியாக பணம் சம்பாதிக்கக்கூடியவர்கள் என்றும், அவர் கள் லைசென்ஸ் பெறக்கூடிய முறையை இன்னும் நாம் கூடுதலாக கட்டுப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தைத் தான் இந்த ஷரத்துக்கள் பிரதிபலிப்பதாகத் தெரிகிறது. சினிமா லைசென்ஸ் எடுப்பதில் இருக்கக்கூடிய சிக்கல்களை குறைக்க வேண்டும், அதை எளிய முறையிலே ஆக்கவேண்டும் என்று

[Sri K. Sattanatha Karayalar] [10th September 1960

எனக்கு முன்பு பேசிய நண்பர்கள் குறிப்பிட்டார்கள். அதை நான் வரவேற்கிறேன். லைசென்ஸ் பெறக்கூடிய முறை ஒரு குறிப்பிட்ட நிர்ணயிக்கப்பட்ட ஷரத்துக்குள்ளே இருக்க வேண்டும். அதிலே இன்று இருக்கக்கூடிய "காம்ப்ளிகேஷன்ஸ்" இல்லாத முறையிலே, எவ்வளவு எளிய முறையிலே இருக்க முடியுமோ அவ்வளவு எளிய முறையிலே இருப்பது அவசியம். இந்த மசோதா மூலம் எக்ஸிகியூடிவ் அதாரிடி கொடுத்த லைசென்ஸை அவர்களே ரத்து செய்வதற்குள்ள அதிகாரத்தை பெறுகிறார்கள். இந்த மசோதாவில் இது தான் முக்கியம். இது அவசியம்தானா என்பதை பார்க்க வேண்டும். தப்பாகச் சொல்லி, தப்பு அபிப்பிராயம் மூலம் லைசென்ஸ் பெற்றுவிட்டால் அதை ரத்து செய்வதற்குள்ள அதிகாரம் இன்று எக்ஸிகியூடிவ் அதாரிடிக்கு இல்லை. அதைப் பெறுவதற்காகவே இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது அவசியமா, தேவையா என்பதைப்பற்றி பரிசீலனை செய்யவேண்டும். தவறாகச் சொல்லி லைசென்ஸ் பெற்றுவிட்டால் அதற்கு ரூ. 1,000 அபராதம் விதிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. லைசென்ஸை ரத்து செய்யும் பொழுது, அந்த லைசென்ஸை பெறுவதற்கு குறிப்பிட்ட விஷயங்களிலே "எஸென்ஷியல் பாக்ட்-ல்" வித்தியாசம் இருந்தால் என்று இருக்கிறது. "எஸென்ஷியல் பாக்ட்" என்றால் என்ன? உதாரணமாக சினிமா தியேட்டர்களில் நாம் தீயணைக்கக்கூடிய வாளிகளைப் பார்க்கிறோம், மணல் நிறப்பிய தொட்டிகளும் இருக்கின்றன. தண்ணீர் தொட்டிகளும் இருக்கின்றன. "பையர் எக்ஸ்டிங்குவிஷர்கள்" இருக்கின்றன. "எஸென்ஷியல் பாக்ட்" என்று சொல்லும்பொழுது, ஒரு குறிப்பிட்ட உத்தியோகஸ்தர் இரண்டு வாளிகளில் போதுமான தண்ணீர் இருக்கவில்லை என்று சொல்லலாம். அல்லது மணல் தொட்டியில் போதுமான மணல் இல்லை என்று சொல்லலாம். அதுவும் "எஸென்ஷியல் பாக்ட்" என்று சொல்லலாம். "பையர் எக்ஸ்டிங்குவிஷர்" இருக்கவேண்டுமென்று சொல்லும்போது வெளியில் மூடி மாத்திரம் எண்ணிக்கைக்கு இருந்துவிட்டால் சில பேர்கள் திருப்தி அடைந்துவிடுவது உண்டு. அதிலே உள்ளே தீயணைக்கக் கூடிய காஸ்டிக் சோடா திணிக்கப்பட்டிருக்கிறதா, "லோட்" செய்யப்பட்டிருக்கிறதா என்று எல்லோரும் பரிசீலனை செய்வதாகத் தோன்றவில்லை. இன்றைக்கு எதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்று பரிசீலனை செய்யும் பொழுது, "எஸென்ஷியல் பாக்ட்" எது என்று நிர்ணயம் செய்யும்பொழுது, உத்தியோகஸ்தர் மனது வைத்தால் வேண்டுமென்றால் லைசென்ஸ் கொடுக்கலாம், வேண்டாம் என்று அபிப்பிராயம் இருந்தால் லைசென்ஸை கொடுக்காமல் ரத்து செய்யக்கூடிய சர்வ அதிகாரமும் அந்த உத்தியோகஸ்தருக்கு இந்த மசோதாவின் மூலம் கொடுக்கப்படுகிறதா என்பதை நாம் பரிசீலனை செய்யவேண்டும்.

ஆதலால், "ரிவோக் ஆர் ஸஸ்பெண்ட்" என்று போட

0-30 m. வேண்டியது அவசியமில்லை என்பது என் அபிப்பிராயம். வேண்டுமானால் [illegible] க நடவடிக்கை எடுக்கக்



10th September 1960] [Sri K. Sattanatha Karayalar]

கோரினால், அப்படிச் செய்யலாம். ஆனால், எக்ஸிக்யூடிவ் அதாரிடிக்கு இவ்வளவு பரிபூரணமான அதிகாரம் கொடுப்பது நல்லதல்ல.

அதற்குப் பிறகு, அப்பீல் ப்ரொவிஷனை வரவேற்கிறேன். ஆனால், முதலில் சட்ட பூர்வமாக இவ்வளவு அதிகாரம் கொடுப்பது ஸினிமாக்காரர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். சினிமாக் கொட்டகை வைத்திருப்பவர்கள், கொட்டகையை காண்டிராக்ட் பேஸிஸில் பேசுகிறார்கள் ; லைசென்ஸை ரத்து செய்தால் அவர்களுக்கு அதிகமான நஷ்டம் ஏற்படும். வழங்கியிருக்கும் லைஸென்ஸை ரத்து செய்ய இவ்வளவு அதிகாரம் எக்ஸிக்யூடிவ் அதாரிடியிடம் கொடுப்பது ஆபத்தாக இருக்கும். ஆகவே, கனம் லால்குடி அங்கத்தினர் கொடுத்திருக்கும் திருத்தத்தையாவது சர்க்கார் ஒத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI: மிஸ்டர் ஸ்பீக்கர், இந்த திருத்த மசோதாவை முழுமனதோடு ஆதரிக்க வேண்டும் என்பதை, சில ஜட்ஜ்மெண்டுகளைப் பார்த்திருந்தால், எதிர்க் கட்சி அங்கத்தினர் அவசியம் புரிந்துக் கொண்டிருப்பார்கள். ஸினிமாப் போடுகிறவர்கள், கலெக்டருக்கு அப்ளை செய்கிறார் கள் ; லோகல் அதாரிடியும் ரெகமண்டேஷன் செய்ய வேண்டும் ; போலீஸ் அதாரிடிகளும், ட்ராபிக் பாயிண்ட் ஆப் வ்யூ, சம்பந்தமாக ஒன்றும் தவறில்லை என்று சொல்ல வேண்டும். அதன் பிறகு நோ அப்ஜக்ஷன் சர்ட்டிபிகேட் கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கும்போது, நாலு பர்லாங்குக்குள்ளே இரண்டு ஸினிமாக்கள் ஓடக்கூடாது என்பது செக்ஷன் 14 (2)-ல் இருக்கிறது. இரண்டு இருந்தால், ஆன் கம்பேரிடிவ் மெரிட்ஸ் எது சிறந்தது என்று பார்த்து முடிவு செய்து கலெக்டர் உத்தரவு போடவேண்டும். உத்தரவு போட்ட பிறகும், அப்பீலுக்கு யார் வரலாம் என்று குறிப்பிட்டிருக்கிறது அக்கார்டிங் டு செக்ஷன் 5 (7) ஆப் தி ஆக்ட். இங்கே போர்ட் ஆப் ரெவின்யூவிற்கு அப்பீலுக்கு வருகிறார்கள். நாலு பர்லாங் குக்குள்ளே ஸினிமா வைக்க கடைசியாக கேட்போரையும் ரெஸ்பாண்டெண்டாகச் சேர்த்தே தீரவேண்டும். நாலு பர்லாங்குக்குள்ளே அடுத்தவருக்கு வழங்கக் கூடாது என்கிறார் அப்பீல் போடுபவர். ஆனால், பழைய சட்டப்படி, அண்டர் செக்ஷன் 5 (7), யு கேன் அப்பீல் எக்ன்ஸ்ட் ரெப்யூசல் டு கிராண்ட் அப்பீல் செய்யும் போது கொடுத்தவரைப் பற்றிச் சொல்லக் கூடாது. ஆகவே, அது சம்பந்தமாக நீதி மன்றங் களிலே ரிட் பெடிஷன்கள் 1045 ஆப் 1959, ரிட் அப்பில் 102 ஆப் 60 . . . (குறுக்கீடு),

The number is very correct. The Legal Department is here. The hon. Member can verify.

டூரிங் சினிமா சம்பந்தப்பட்ட மட்டில், கொட்டகையை லீசுக்கு எடுக்கிறார்கள்; பிறகு எக்விப்மெண்டுகள் வாங்குகிறார்கள்; ஒரு மெஷின் ரூ. 25,000 ஆகிறது. பிறகு எலெக்ட்ரிசிடி சர்ட்டிபி கேட், அந்த சர்ட்டிபிகேட், இந்த சர்ட்டிபிகேட் என்று வாங்க

ஆயிரம் ரூபாய்வரை செலவழிக்கிறார்கள். இதன் நடுவில், நாலு பர்லாங்குக்குள் இன்னும் நாலுபேர் அப்ளை செய்கிறார்கள். கலெக்டர் இஷ்டம் போல் லைசென்ஸ் கொடுக்கலாம். அபலேட் அதிகாரிக்கு அதை விசாரிக்க அதிகாரம் இல்லை. கலெக்டர்கள் கொடுப்பது சில சமயங்களில் நியாயமாக இருக்கிறது, சில சமயங்களில் நியாயத்திற்கு புறம்பாக இருக்கிறது. ஆகவே இது ஒரு சைகில் போல் சுற்றி சுற்றி வருகிறது. அவர், செக்ஷன் 11 படி எக்சம்ஷன் வாங்க அரசாங்கத்திற்கு எழுதுகிறார். இதன் மத்தியில், கோர்டில், ரிட் அப்ளிகேஷன் வருகிறது. "உனக்குக் கொடுக்கவில்லையென்றால் கேள். அவனுக்குக் கொடுத்தது தவறு என்று சொல்ல உனக்கு அதிகாரம் இல்லை" என்று சொல்லி விடுகிறார்கள். "எங்களுக்கு அது நாலு பர்லாங்கா இரண்டு பர்லாங்கா என்பது பற்றியெல்லாம் கவலையில்லை" என்கிறார்கள். சட்டபடி, There can be appeal only against refusal to grant a licence. Grant made by the Collector cannot be questioned by Appellate Authority.

ஆகையினால், என்.ஓ.சி. வாங்குவதற்கு முன், கலெக்டரிடம் போய், பார்ம் ஸி கொடுப்பதற்கு முன்பு கேட்கிறார்கள். அதற்குள் அரசாங்கத்திற்கு எழுதியிருப்பதாக அவர் சொல்கிறார். இந்த நடவடிக்கைகள் நடந்துதீர, 3 வருஷம் ஆகிறது. ஆனால் சைட் ஒரு வருஷத்திற்குத்தான் லீஸ் எடுத்திருப்பார். ஆகவே, பப்ளிக்குக்கு இன்கன்வினியன்ஸ் ஏற்படுகிறது. நஷ்டம் ஏற்படுகிறது. ரூ. 40,000, 50,000 போட்டுவிட்டு, அப்பீலுக்கு இடம் இல்லாமல், வக்கீல்களுக்கும் செலவழித்துக்கொண்டு கஷ்டப்படுகிறார்கள். சினிமாவில் ஏதோ லாபம் இருக்கிறது என்று இப்பொழுதெல்லாம் அதில் ஈடுபடுபவர்கள் ஜாஸ்தியாக இருக்கிறது. சாதாரண கிராமத்தில் கூட நல்ல வரும்படி வருகிறது. (குறுக்கீடு) வக்கீலும்தான் பிழைக்க வேண்டும். அந்த நிலையில் சொல்லுவதானால், வக்கீல்களும் பிழைக்க வேண்டும். அந்த முறையில் பேசுவதனால், வக்கீல்கள் சண்டை போடுங்கள் என்று சொல்லுவேன். ஆனால், வக்கீல் என்று நான் இங்கே பேசவில்லை. எம்.எல்.ஏ. என்ற முறையில், ஜனங்களுக்கு இருக்கும் கஷ்டங்களைப் பார்த்து திருத்துங்கள் என்று கோருகிறேன்.

ப்ரீச் ஆப் கண்டிஷனுக்காக 3 மாதம், 6 மாதத்திற்கு கலெக்டர் ஸஸ்பெண்ட் பண்ணலாம். அதற்கு அப்பீல் கிடையாது, ரிட்டுக்கும் இடம் கிடையாது. மூன்று மாதம், 6 மாதம் மூடிவிட்டால் அவர்களுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படும் என்று யோசித்துப் பார்க்க வேண்டும். அவர்களும் இர்ரெகுலாரிடிகள் கமிட் பண்ணியிருக்கலாம். ஆனாலும், அவ்வளவு பணத்தையும் இன்வெஸ்ட் பண்ணிவிட்டு, படமுதலாளிகளுக்கும், டிஸ்டிர்ப்யூட்டர்களுக்கும் பணம் கொடுத்து, மெஷின்கள் வாங்கி, அப்பீலுக்கும் சான்ஸ் கிடையாது என்றால் எவ்வளவு கஷ்டம் என்று பார்க்க வேண்டும். அம்மாதிரி இருக்கும் குறைகளைத் தீர்க்கத்தான் அரசாங்கம் இருக்கிறது.



ஆகவே, அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கும் திருத்தம் ரொம்பப் பொருத்தமானது, பொது மக்களுக்கு நன்மை பயக்கும் என்ற முறையில் அதை வரவேற்க வேண்டும்.

இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். கனம் அமைச்சரவர்கள் அதையும் கவனிக்க வேண்டும். கலெக்டருக்குக் கொடுக்கப்படும் அப்ளிகேஷன்களை ஒரு குறிப்பிட்ட டையத்திற்குள் டிஸ்போஸல் செய்ய வேண்டும். நவம்பரில் அப்ளிகேஷன் போட்டால், டிசம்பர், ஜனவரி மாதத்திற்குள் கலெக்டர் அவற்றிற்குப் பதில் கொடுக்க வேண்டும். அதில்லாமல், பல மாதங்கள் கழித்து அந்த அப்ளிகேஷனை எடுத்து, பிறகு "சைட் சூடபிளா" என்று ரெவின்யூ அதிகாரிகளை விட்டு இன்ஸ்பெக்ட் பண்ணச் சொல்லி, அதன் பிறகும் பல மாதங்களுக்கு ஆர்டர் வருவதில்லை. அவற்றிற்கு வேண்டிய முக்கியத்துவம் அவர்கள் கொடுப்பதில்லை. அதனால் பொது மக்களும், பணம் போட்டவர்களும் அவதியுறுகிறார்கள். பிறகு இரண்டு வருஷங்கள் கழித்து, Your application for 'No Objection Certificate' is rejected. என்று உத்தரவு வருகிறது. இன்னொரு தொந்தரவு என்னவென்றால், அப்ளிகேஷனை டிஸ்போஸ் பண்ண இரண்டு வருஷங்கள் ஆவதினால், அதற்குள், நாலு பர்லாங்குகளுக்குள்ளே, இன்னும் சிலர் இடம் பிடித்து அப்ளிகேஷன்கள், போட்டு விடுகிறார்கள். அப்பொழுது, டேட் ஆப் ப்ரையாரிட்டி, யாருக்கு முதலில் கொடுப்பது என்ற தொந்தரவுகளெல்லாம் வருகின்றன. ஆகையினால், 30 நாட்களுக்குள் பஞ்சாயத்துக்கள் சர்ட்டிபிகேட்டுகள் கொடுக்கா விட்டால், "டீம்ட் டு பி சாங்ஷன்ட்" என்று இருப்பது போல், ஒரு ப்ரிஸ்க்ரைப்ட் டைம் லிமிட்டில் கொடுக்க வேண்டும், வருஷக் கணக்காக வைத்துக் கொண்டிருக்கக் கூடாது, இவ்வளவு நாளில் கொடுக்கா விட்டால், அது கொடுக்கப்பட்டதாக இருக்கவேண்டும். அப்படித் திருத்தமுடியுமா என்று கனம் அமைச்சரவர்கள் பரிசீலனை செய்து, ஆவன செய்தால் நல்லதாக இருக்கும்.

ஆகவே செக்ஷன் ஐந்து கடைசி ப்ரோவிசோவில் என்ன சொல்லி இருக்கிறது என்றால்—

That the application must be disposed of within the prescribed time-limit என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்னொரு யோசனையையும் கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த மசோதாவை செலெக்ட் கமிட்டிக்கு அனுப்பி வைத்து இதற்குள்ள ரூல்கள், செக்ஷன் இவைகளையெல்லாம் நன்றாக பரிசீலனை செய்து முடிவுக்கு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படிச் செய்தால்தான் நலமாக இருக்கும் என்று தோன்றுகிறது. இந்த மசோதா வரவேற்கக் கூடியதாகத்

[Srimathi T. N. Anandanayaki] [10th September 1960

தான் இருக்கிறது. இருந்தாலும் இன்னும் நல்ல முறையில் ஆலோசனை செய்து முடிவு செய்தால் எவ்வளவோ நலமாக இருக்கும் என்று தோன்றுகிறது. கவுன்சிலுக்கு போக வேண்டியதாக இருக்கும் என்று நினைக்கலாம். இன்றைக்கு கவுன்சில் இருக்கிறதோ இல்லையோ தெரியாது. இல்லையானால் இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி, கவுன்சில் கூடுவதற்குள் முடிவு செய்து இதைப் பாஸ் செய்து விட்டு அங்கு அனுப்பலாம் என்று தோன்றுகிறது. எந்தக் காரியத்தை எடுத்துக் கொண்டாலும் நமது உள்நாட்டு அமைச்சர் அவர்கள் எல்லாவற்றை ஆர அமர தீர ஆலோசனை செய்து ஆழ்ந்து யோசனை செய்துதான் முடிவுக்கு வரக்கூடியவர். ஆகையால் அவர் அப்படியே நடந்து கொள்வார் என்று நினைக்கிறேன். ஆகவே, அப்படி ஆலோசனை செய்து நல்ல திருத்தங்களைச் செய்து நிறைவேற்றினால் ரொம்பவும் வரவேற்கக் கூடியதாக இருக்கும். இதன் மூலமாக அதிகப்படியான வருமானம் வரக் கூடியதாக இருக்கிறது. நாம் இப்பொழுது பஞ்சாயத்துக்களை நியமிக்கப்போகிறோம். பஞ்சாயத்துக்களுக்கு இந்த சினிமாக்கள் மூலமாகத்தான் அதிகப்படியாக வருமானம் வரப் போகிறது. 6,000, 7,000 ரூபாய் வரையில் வரலாம். கலெக்ஷனை பஞ்சாயத்து எடுத்துக்கொள்ளப்போகிறது. எண்டர்டெயின் மெண்ட் டாக்ஸை சர்க்கார் எடுத்துக்கொள்ளப் போகிறார்கள். உண்மையிலேயே பஞ்சாயத்து ராஜ்யம் நிறுவப்போகும் போது இது எவ்வளவோ சௌகரியமாக இருக்கும். இது காமதேனு மாதிரி இருக்கிறது. ஆகவே எந்த விதமான கஷ்டங்களும் இல்லாமல் இதை நிறைவேற்ற வேண்டியதாக இருக்கிறது. இதை நல்ல முறையில் திருத்தி அமைத்து நிறைவேற்றினால் நல்ல முறையில் வரவேற்கக் கூடியதாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே கனம் அமைச்சர் அவர்கள்—அவர் ஜன நாயக பண்பு படைத்தவர்—இதைப் பற்றி நன்றாக தீர ஆலோசனை செய்து நல்ல விதத்தில் இதைக் கொண்டுவருவார் என்று நினைக்கிறேன். ஆகவே இதை பொறுக்குக் கமிட்டிக்கு விடவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி பொறுக்குக் கமிட்டிக்கு விட்டு நல்ல முறையில் சட்டத்தை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : Is the hon. Member moving a motion for referring the Bill to a Select Committee? When the motion of the hon. Member came up for referring the Bill to a Select Committee, the hon. Member was not present in the House. The House cannot wait for the hon. Member's convenience. The hon. Member, Srimathi Anandanayaki must wait for the convenience of the House. The hon. Member, if she now wants to move for referring the Bill to a Select Committee, must get the approval of the House and then only she can move the motion. At this stage the Hon. Minister himself cannot accept the moving of a motion for referring the Bill to a Select Committee. It can be moved only with the permission of the House.



10th September 1960]

SRIMATHI T. N. ANANDANAYAKI : My motion for referring the Bill to a Select Committee could not be taken up since I was not present in the House at that time. I am sorry for that. I am now suggesting to the Hon. Minister that the Government themselves can move an amendment like that.

MR. SPEAKER : If the House gives permission, the hon. Member can move the motion for referring the Bill to a Select Committee.

(The House gave permission for the hon. Member, Srimathi T. N. Anandanayaki to move her amendment.)

SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, I now move :

'that the Madras Cinemas (Regulation) Amendment Bill, 1960 (L.A. Bill No. 32 of 1960) be referred to a Select Committee'.

The amendment was duly seconded.

MR. SPEAKER : Amendment moved :

'that the Madras Cinemas (Regulation) Amendment Bill, 1960 (L.A. Bill No. 32 of 1960) be referred to a Select Committee'.

* SRI V. K. RAMASWAMY MUDALIAR : Mr. Speaker, Sir, even though this Cinematograph Act was amended recently, still there has been so much of discontentment among the licensees because there has been so much delay with regard to the issue of licences. There is a lot of corruption and delay. These are due to two important things. If a touring cinema operator applies for a licence, it takes nearly one year or one and a half years for him to get the licence. He has to approach so many authorities right from the Panchayat Board level. These authorities in their own way raise all sorts of objections with the result it takes one and a half years for the operator to obtain his licence. Again the touring cinema operators have to approach the Municipal authorities, the Health Department, the Police, the Magistracy and at last the Electricity Department. Nobody takes any interest in expediting the grant of licence to the licensees.

Another thing is, that on account of this extraordinary delay, the Government stand to lose much of revenue by way of the Entertainment Tax. I, therefore, request the Hon. Minister to see that a time-limit is fixed for each of the concerned authorities for dealing with the grant of cinema licences, so that the licensees may be in a position to get their licences within a reasonable time. It is alleged that the Collector's office staff are minting money in granting these licences. It is also said that the staff in charge of the grant of licences are purposely delaying them and ultimately the issue of licences is delayed very long to the inconvenience of the parties concerned. This is the present state of affairs. Therefore, I request the Hon. Minister to see that a time-limit is fixed for the various authorities for granting the licences. There should be co-ordination and co-operation between all the Departments. I would also like to suggest that instead of asking the

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [10th September 1960

licensees to approach so many authorities, except perhaps, the Health Department, they may be asked to approach only one authority, who should be in a position to go into the question and issue the licences as early as possible. That is why I would request the Hon. Minister to bring in an amendment to this effect. Licences should be issued within a specified period. This is all my submission, Sir.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் சபா நாயகர் அவர்களே, நான் ஏற்கெனவே விளக்கியபடி இந்தச் சட்டத்தில் சில குறைபாடுகள் இருக்கின்றன. அவைகளை நிவர்த்திக்க இந்த திருத்த மசோதா கொண்டுவரப்பட்டிருக் கிறது என்று குறிப்பிட்டேன். ஒன்று, லைசென்சு கண்டிஷன் படியுள்ள ஷரத்துக்கள் சட்டத்தில் இல்லை, அது ஒரு குறைபாடு என்று சபார்டினேட் லேஜிஸ்லேஷன் கமிட்டியில் தெரிவித் தார்கள். அந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்குத்தான் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. மற்றொன்று, லைசென்சிங் அதாரிட்டியின் உத்தரவுக்கு மேல் அப்பீலுக்கு இடம் இல்லாமல் இருந்தது. அதற்கு இப்பொழுது வசதி அளிக்கப்பட்டிருக் கிறது. அப்பீல், ஸ்டே, இவைகளுக்கு எல்லாம் இப்பொழுது வசதி செய்யப்பட்டிருக்கிறது. இதுதான் இந்த திருத்த மசோதாவின் நோக்கம். இதற்காக ஒரு பொறுக்குக் கமிட்டிக்கும் அனுப்பி பரிசீலனை செய்ய வேண்டும் என்பது இல்லை. அது அவசியமும் இல்லை என்று கனம் அங்கத்தினர் திருமதி அனந்தநாயகி அம்மாளுக்கு தெரிவித்துக் கொள்ளு கிறேன். ஆகவே செலெக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்று அவர் கொண்டுவந்த திருத்தத்தை வற்புறுத்த வேண்டாம் என்று அவரை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சினிமா பார்ப்பது என்பது எல்லோருக்கும் இருக்கிறது. கிராமங்களிலும் நகரங்களிலும் கடுமையாக உழைத்த பிறகு கொஞ்சம் பொழுது போக்காக இருப்பதற்கு சினிமா பார்க் கிறார்கள். அதற்காக பட முதலாளிகள் பணம் போட்டு படங்களை எடுத்தும், தியேட்டர்களைக் கட்டி படத்தைக் காட்டியும் பொது மக்களுக்கு சேவை செய்து வருகிறார்கள். அங்கு பொது மக்கள் சென்று படங்களை பார்க்கிறார்கள். அங்கே போய் படம் பார்க்கிறவர்களுக்கு ஒருவித இன்னல் களும் ஏற்படக் கூடாது என்ற காரணத்தால் சில விதிகளை அமைக்க வேண்டியதாக இருக்கின்றன. இந்த விவாதத்தை முதலில் ஆரம்பித்த ஸ்ரீ மாதா கௌடர் அவர்கள் குறிப் பிட்டார், சுகாதார வசதிகள் தியேட்டர்களில் செய்யப்பட வில்லை என்று. சுகாதார வசதிகள் செய்யப்பட்டுதான் வருகின்றன. அவைகளை அதிகாரிகள் கவனித்து கொண்டுதான் வருகிறார்கள். நான் போய் பார்த்தேனா பார்க்கவில்லையோ என்று குறிப்பிட்டார். நான் ஏதோ ஒரு முறை எப்பொழுதோ பார்த்தேன் என்றாலும், இப்பொழுது சுகாதார வசதி எப்படி இருக்கிறது என்று பார்க்கப்போவதற்கு எனக்கு அவகாசம் கிடையாது. அதை எதிர் பார்க்கவும் முடியாது. இது சம்பந்தமாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.



10th September 1960] [Sri M. Bhaktavatsalam]

அவர்களைக் கொண்டு அதை கவனிக்கச் சொல்லப்படுகிறது. அவர்களும் அதில் கவனம் செலுத்தி வருகிறார்கள், வேண்டிய நடவடிக்கைகளும் எடுத்துக் கொண்டு வருகிறார்கள். அவைகளை யெல்லாம் சரிவரச் செய்வதற்குத்தான் இந்தச் சட்டம், விதி எல்லாம் இருக்கிறது. ஏதோ ஒரு இடத்தில் தண்ணீர் தொட்டியில் இல்லை, அதற்காக லைசென்ஸ் ரத்து செய்துவிட வேண்டுமா, நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமா என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். தொட்டியில் தண்ணீர் வைப்பது எதற்காக என்றால் பயர் சர்வீஸ் பாதுகாப்புக்காக வைக்கப்படுகிறது. தண்ணீர் என்று சொன்னவுடன் சாதாரண தண்ணீர் என்று நினைத்துவிடக் கூடாது. பயர் சர்வீசுக்காக வைக்கப்படக் கூடிய தண்ணீர் அது. அது இல்லாமல் இருந்தால் அதனால் எவ்வளவு ஆபத்து ஏற்படும் என்பதைக் கவனிக்க வேண்டும். அது முக்கியமான விஷயம். ஒரு முறை அல்ல இரண்டு முறையல்ல அப்படி வைக்காமல் இருந்தால் விட்டு விடலாம். பிடிவாதமாக அப்படி வைக்கவே இல்லை என்றால் அதை எப்படி விடுவது என்பதுதான் தெரியவில்லை. அறிவித்த பிறகும் கூட வைக்கவில்லையானால் அது பெரிய குற்றமாகத்தான் கருதப்படும். பொது மக்களுடைய பாதுகாப்பு அவசியம். இதில் கவனக் குறைவு இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது. அதற்கு வேண்டிய அதிகாரம் லைசென்சிங் அதாரிட்டிக்கு இருக்க வேண்டும். அதற்காகத்தான் அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக் கிறது. இப்படிப்பட்ட அதிகாரம் இல்லையென்றால் அதற்கு வேண்டிய பரிகாரம் தேட முடியாது. பொது மக்களுடைய நன்மையைக் கருதியும் தியேட்டருக்கு வருகிறவர்களுடைய நன்மையைக் கருதியும் தான் இப்படிப்பட்ட நிர்ப்பந்தம் வைக்கப் பட்டிருக்கிறது. இந்த விதிகளெல்லாம் செய்யப்பட்டிருக் கின்றன. இவைகள் எல்லாம், சரிவர நடைபெறுவதற்கு அவர்களுடைய கடமையை சரிவர நடத்துவதற்கும் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கும் அவர்களுக்கு இப்படிப்பட்ட அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டத்தில் லைசென்சை ரத்து செய்வதற்கு அதிகாரம் இருப்பதைப் பற்றி குறிப்பிட்டார்கள். இது புதிது அல்ல. இப்படிப்பட்டது லைசென்சு கண்டிஷனில் ஏற்கனவே இருக்கிறது புதிதாக கொண்டு வரவில்லை. லைசென்சு கண்டிஷன் சட்டத்தில் இல்லையே என்ற குறைபாடு இருப்பதால்தான் அந்தக் குறைபாட்டை நீக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதை ஏற்படுத்தி இருக்கிறோம். இப்படி லைசென்சை ரத்து செய்யக் கூடிய அதிகாரம் கலெக்டருக்கும் இருக்கும்போது அவர் நேரில் பார்க்காமல் தாசில்தாருடைய சிபாரிசை வைத்துக்கொண்டு ரத்து செய்கிறார் என்று திரு. லாஸர் குறிப்பிட்டார். கலெக்டருக்கும் ரத்து செய்யக்கூடிய அதிகாரத்தை கொடுத்திருந்தாலும் அவர் நேரில் போய் பார்ப்பது இல்லை. அவருக்குக் கீழே தாசில்தார் இருக்கிறார். தாசில்தார் போய் பார்த்து அவர் எழுதி அனுப்புகிறார். கலெக்டருக்கு அதிகாரம் கொடுத்தாலும் அவருக்கு கீழ்

[Sri M. Bhaktavatsalam] [10th September 1960

இருக்கக்கூடிய அதிகாரிகளைக்கொண்டுதான் எழுதச் சொல்லுவார்கள். அவர்கள் எழுதியதை வைத்துக் கொண்டுதான் உத்தரவு போடுவார்கள். அந்தப் பொறுப்பை கலெக்டர் தான் எடுத்துக் கொள்ளுகிறார். தாசில்தார் சிபாரிசு பண்ணினாலும் பொறுப்பை கலெக்டர் தான் எடுத்துக் கொள்கிறார். அவரே நேராகச் சென்று பரிசீலனை செய்து பார்ப்பது என்பது முடியாது. அது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எழுதி அனுப்புவதை வைத்துக் கொண்டுதான் பொறுப்பு எடுத்துக் கொள்ளுவார். கீழே இருக்கக் கூடிய அதிகாரிகளுடைய சிபாரிசுகளை வைத்துக் கொண்டு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்கள். வேறு விதமாகச் செய்ய மாட்டார்கள். இதில் அபராதம் போடுவதற்கு ஏன் அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். நீதி மன்றம்தான் விசாரணை செய்து இந்த மாதிரி தண்டனை விதிக்க வேண்டும். கலெக்டர் கொடுப்பது தண்டனை அல்ல. அவர் தவறுகள் தொடர்ந்து நடந்தால் உடனே அதைத் தடுக்க நடவடிக்கைதான் எடுத்துக் கொள்ள வழி செய்ய வேண்டும். இது தண்டனை என்ற வகையில் அல்ல. உடனடியாக லைசென்ஸை ரத்து செய்வது, நிறுத்தி வைப்பது போன்ற நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளத் தான் இங்கே வகை செய்யப்பட்டிருக்கிறது. சட்டபூர்வமாக அந்த அதிகாரம் வழங்கப்படுகிறது. கூடியவரையில் கலெக்டர்கள் இந்த அதிகாரத்தைக்கூட உபயோகப்படுத்த மாட்டார்கள். நீதி மன்றத்திற்கே விடுவார்கள். எங்காவது ஜனங்களுடைய சௌகரியத்தை உத்தேசித்து. உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் நேரிட்டால் அதற்கு அனுசரணையாக இருக்கவேண்டும் என்று சட்டபூர்வமாக நாம் இப்போது வழி செய்கிறோம். எதிர்கட்சித் தலைவர் அவர்கள் அதாரிடி பற்றி சொன்னார்கள். இதில் உள்ள சிக்கல்களை கூடிய வரையில் குறைக்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம். கிராமங்களில் உள்ள டூரிங் டாக்கீசுக்குக் கூட கடைசி ஆட்டத்திற்கு ஏராளமான பேர்கள் வருகிறார்கள். ஆகவே அங்கே வருகிற ஜனங்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றே இந்த விதிகள் கொண்டு வரப்படுகின்றன. ஆனால் கனம் எதிர்கட்சித் தலைவர், அனந்த நாயகி அம்மாள் ஆகியவர்கள் லைசென்ஸ் கொடுப்பதில் கால தாமதம் ஆவதனால் ஒரு காலவரம்பு வைக்க வேண்டும் என்று சொன்னார்கள். இப்பொழுது உள்ள விதியிலேயே பிரிவு 42–1 இருக்கிறது.

'the licensing authority shall issue to the applicant within two weeks from the date of its receipt a licence in Form 'C' for the period covered by the Chief Electrical Inspector's certificate, or refuse to issue such a licence.'

இதே மாதிரி 106 விதி இருக்கிறது.

"On receipt of the application made under rule 100, the licensing authority shall grant a no-objection certificate in Form 'B' or may refuse to grant the same. He shall also issue an



10th September 1960] [Sri M. Bhaktavatsalam]

order approving or not approving the plan of the building to be constructed in the approved site within two weeks after the date of receipt of the application from the applicant."

ஆகவே இது போன்றவை இருப்பதனால் மேலும் விதிகள் வேண்டுமென்று அவசியம் இல்லை. ஆகவே இந்தத் திருத்த மசோதாவை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

The amendment of Srimathi T. N. Anandanayaki was, by leave, withdrawn.

MR. SPEAKER: The question is:

'That the Madras Cinemas (Regulation) Amendment Bill, 1960 (L.A. Bill No. 32 of 1960) be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 5 were put and carried.

*Clause 6.*

MR. SPEAKER: The motion is:

'that clause 6 do stand part of the Bill.'

SRI S. LAZAR: Sir, I move the following amendment:—

"After sub-clause (*k*), *add* the following:—

(1) the review of orders passed by the licensing authority the conditions and reasons for which the review may be permitted."

Sir, I have given this amendment solely for the purpose of enabling the licensing authority to review his own orders in certain exigencies. It is the experience of everybody that in all courts or before all authorities where the Civil Procedure Code is applicable, this difficulty does not arise. If there are mistakes, *prima facie* it is open to the authorities concerned to review their own order as per the provisions of the Civil Procedure Code. But, so far as the Cinemas (Regulation) Act is concerned, we have not provided any such regulation. So, it has been the experience of many that whenever any small mistake is being committed by the licensing authority or there is some misunderstanding on the part of the licensing authority, there is no remedy for taking immediate action for rectifying the mistake or defect. In many cases, the licensing authority had necessarily to refer to the Board of Revenue, the appellate authority. I may be permitted to say that there has been abvious abuse of power. Though the licensing authority had the power to decide the matter itself, usually references were made to the appellate authority. If there is any difficulty, it has been provided that the Government should be addressed and they must give the necessary guidance. But, whenever any difficulty is experienced by the licensing authority, he always makes it a point to refer the matter to the Board of Revenue. When the matter was referred to the Board of Revenue, they said

[Sri S. Lazar] [10th September 1960

that the licensing authority had no power to review the application for review of his order. To avoid all these practical difficulties, I have suggested in my amendment that the licensing authority should also have the power in cases where he has committed mistakes, to review his own order. If it was possible, he should be enabled to rectify the mistakes which were patent. I can understand that in cases where the matter had been taken on appeal, this cannot be done. But there are other cases where the mistakes could be very easily rectified by the licensing authority. This power is necessary. There may be cases where the licensing authority might choose to reject the application for licence. It is not as though that a particular rule is infringed or any such thing. For instance, the rule says that there should not be a shed or any building within a distance of four furlongs. Now, persons who are interested in seeing that a particular cinema proprietor did not get the licence may put up a shed, out of spite, within a distance of four furlongs from the site proposed for the cinema theatre. In such cases, the Tahsildar makes it a point to refer the matter to the Collector who simply rejects the application. Subsequently when the applicant brings to the notice of the authorities concerned that the shed has been put up, only for the purpose of effectively preventing the issue of licence to him and the shed has since been removed and there is no shed there within four furlongs and that land is vacant, the Collector says that he has no authority and the party may take the matter on appeal.

11-00 a.m.

This is a practical difficulty which we are experiencing in the day-to-day administration. After all, this amendment does not involve any complication. What is now provided in the Civil Procedure Code is sought to be vested in the form of a rule. Therefore, I suggest that the Government may accept my amendment.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் சபா நாயகர் அவர்களே, கலெக்டருக்குத் தன்னுடைய உத்தரவை புனர் பரிசீலனை செய்வதற்கு அதிகாரம் இருக்க வேண்டும் என்பதுதான் கனம் அங்கத்தினர் அவர்கள் கொண்டு வந்த திருத்தமாகும். அப்பிலிலே கோர்ட்டுக்குப் போகலாம். அப்பீலில் கோர்ட் முடிவு பண்ணலாம். கலெக்டர் தான் போட்ட உத்தரவில் தவறுதல் இருக்கிறதென்று தானே மாற்றக் கூடாதா என்பதுதான் கனம் அங்கத்தினர் கேட்பது. தானே மாற்றுவதில்லை. யாராவது ஒருவர் பாதிக்கப்பட்டால் அவர் கலெக்டரிடத்திலே பெடிஷன் போடவேண்டும், அதற்குப் பிறகு கலெக்டர் முடிவு செய்ய வேண்டும். கலெக்டர் முடிவு செய்ததை மாற்ற வேண்டும் என்று மூன்று நான்கு மனுதாரர்கள் கேட்கலாம். அவர்கள் இன்னொரு ரெவியூ பெடிஷன் போடலாம் என்று இருந்தால் முடிவே இருக்காது. ஆகையால் ஒரு முறை உத்தரவு போட்டுவிட்டால் அதற்குமேல் உடனடியாக அப்பீல் செய்து முடிவு செய்வதுதான் நல்லது என்று நம்புகிறேன். ஆகையால் இந்தத் திருத்தத்தை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



10th September 1960]

The amendment of the hon. Member, Sri S. Lazar, was by leave, withdrawn.

Clause 6 was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Speaker, Sir, I move—

'That the Madras Cinemas (Regulation) Amendment Bill, 1960 be passed.'

MR. SPEAKER: The question is—

'That the Madras Cinemas (Regulation) Amendment Bill, 1960 be passed.'

The motion was put and carried and the Bill was passed.

### III. ANNOUNCEMENTS—*cont.*

(1) ELECTION TO THE BOARD OF INDUSTRIES—*cont.*

MR. SPEAKER: I have to announce to the House that I have received two nominations for election to the Board of Industries. As the number of candidates duly nominated is equal to the number of vacancies to be filled, viz. Two, I declare the following two candidates to have been duly elected to the Board of Industries:—

(1) Sri P. Ramachandran.

(2) Sri K. R. Viswanathan.

Now I adjourn the House *sine die*.

The House then adjourned *sine die*.

## Appendix I.

[*Vide* answer to starred question No. 590 asked by Sri N. R. Thiagarajan at the meeting of the Legislative Assembly held on the 10th September 1960, on page 602 *supra*.]

[SUBJECT.—*Rural Water-Supply—Madurai district—Second Five-Year Plan—Number of drinking water-wells proposed and the number completed, etc.—Information.*]

*Clause* (1).—Number of well works programmed :

| | |
|---|---|
| (i) Rural Water-Supply Scheme .. .. .. .. | 500 |
| (ii) Local Development Works Programme .. .. | 219 |

*Clause* (2).—Number of wells programmed to be deepened :

| | |
|---|---|
| (i) Rural Water-Supply Scheme .. .. .. .. | Nil |
| (ii) Local Development Works Programme .. .. | 13 |

*Clause* (3).—Number of overhead tanks proposed to be constructed :

| | |
|---|---|
| (i) Rural Water Supply Scheme .. .. .. | 20 |
| (ii) Local Development Works Programme .. .. | 77 |

*Clause* (4).—Number of works taken up among them :

Construction of new wells and deepening of the old wells have been undertaken throughout the district. Four hundred and sixteen well works were completed under the Rural Water-Supply Comprehensive Scheme and 184 under Local Development Works programme up to the end of fourth year (1959-60) of the Second Plan period.

Overhead tanks have been constructed at the following places :—

1. Under Rural Water-Supply Comprehensive Scheme—

| Name of place. | Number of tanks. |
|---|---|
| Nilakottai .. .. .. .. .. | 1 |

2. Under Local Development Works Programme—

| Name of place. | Number of tanks. |
|---|---|
| Allinagaram .. .. .. .. | 5 |
| Bhuthipuram .. .. .. .. | 2 |
| Devadanapatty .. .. .. .. | 1 |
| Jayamangalam .. .. .. .. | 1 |
| Govinda Nagaram .. .. .. .. | 2 |
| Koduvilarpatty .. .. .. .. | 1 |
| Lakshimipuram .. .. .. .. | 1 |
| Rayappanpatti .. .. .. .. .. | 1 |
| Silamalai .. .. .. .. .. | 1 |



2. Under Local Development Works Programme—*cont.*

| Name of place. | Number of tanks. |
|---|---|
| Pudunagar (Tirumangalam) .. .. | 1 |
| Virapandy .. .. .. .. .. | 1 |
| Andypatty .. .. .. .. .. | 2 |
| Kukkampatty .. .. .. .. | 1 |
| Kondamanayakanpatty .. .. .. | 1 |
| Azhagapuri .. .. .. .. | 1 |
| Usilampatti .. .. .. .. | 1 |
| Ambasamudram .. .. .. .. | 1 |
| Kochadai .. .. .. .. .. | 1 |
| Ramanathapuram (Reserve) .. .. | 1 |
| Police Colony .. .. .. .. | 1 |
| Veerattipattu .. .. .. .. | 1 |
| Kattiyargundu .. .. .. .. | 1 |
| Total .. | 29 |

*Clause* (5).—Number of works proposed for 1960-61 :

| | Overhead tank. | Well works. |
|---|---|---|
| | | 84 |
| Rural Water-Supply Scheme | 19 .. .. .. | .. |
| Local Development Works | 49 .. .. .. | |

*Clause* (6).—The Government have approved the proposal to provide water-supply for the Srirangapuram village under the Rural Water-Supply Comprehensive Programme by taking over the existing tube well. The Collector of Madurai has reported that the work will be started as soon as the requisite contribution is forthcoming and that in the other places works are proposed to be started and completed during this year.

## Appendix II.

[*Vide* answer to starred question No. 594 asked by Sri A. A. Rasheed and Sri S. Lazar at the meeting of the Legislative Assembly held on 10th September 1960, on page 605 *supra*.]

The Government of India are responsible to arrange for the procurement and supply of nitrogenous fertilizers to the States under the Central Pool Scheme. Fertilizers are in short supply in the country at present, owing to the fact that the indigenous production is far less than the demand and imports to meet the deficit are limited by the foreign exchange position.

Against the requirements of this State for the first quarter of the current year (April to June 1960), the Government of India supplied only about 31 per cent of the demand in terms of Ammonium Sulphate. As the supply was inadequate to meet the

[10th September 1960

